
மணவை முஸ்தபா
அறிவியல்
தொழில்நுட்ப
கலைச்சொல்
களஞ்சிய
அகராதி

# அறிவியல் தொழில்நுட்ப கலைச்சொல் களஞ்சிய அகராதி

வளர்தமிழ்ச் செல்வர்
**மணவை முஸ்தபா**

விலை ரூ. 215/-

வெளியீடு :
மணவை பப்ளிகேஷன்
AE-5 (103) அண்ணா நகர்,
சென்னை - 600 040.

# Arivial Thozhilnutpak Kalaichol Kalangiya Agarathi

Valar Tamil Selvar
**MANAVAI MUSTAFA**

**Price Rs. 215/-**

Published by
**MANAVAI PUBLICATION**
AE-5(103) Anna Nagar,
Chennai - 600 040.

தொகுப்புத் துணைவர் :

**இரா. நடராசன்,** எம்.ஏ., பி.ஏ.எல்.,

வரைபடங்கள் :

**எஸ். இராஜாராம்**

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Arivial Thozhilnutpak Kalaichol Kalangiya Agarathi** |
| Author | : | **Manavai Mustafa** |
| Copyright holder | : | Author |
| First Edition | : | 1995 |
| Re-edition | : | 2002 |
| Paper used | : | 16kg White Cream Wove |
| Size of the Book | : | Demy Octovo |
| Printing Points used | : | 10 points |
| No. of Pages | : | 686 Pages |
| Price | : | Rs. 215/- |
| Printer | : | **Karis Offset Printers**<br>60, Nelson Manickam Road,<br>Aminijikarai,<br>Chennai - 600 029. |
| Publishing Place | : | **Manavai Publication**<br>AE-5 (103), Anna Nagar,<br>Chennai - 600 040. |

# முன்னுரை

நம் அன்றாட வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் அறிவியல் அழுத்தம் பெற்று வருகிறது. அறிவியல், தொழில்நுட்ப, மருத்துவத்துறைகளின் துணையின்றி அறவே இயங்க முடியா நிலை. அதற்கேற்றாற்போல் நம் மக்களிடையே அறிவியல் அறிவு வளர்ச்சியும் உணர்வும் கண்ணோட்டமும் பெருகியுள்ளதா என்றால் போதிய அளவு இல்லை என்றே கூறவே வேண்டியுள்ளது. அதிலும் படிக்காதவர்களிடையேயும் படிப்பை பள்ளியில் பாதியில் விட்டவர்களிடையேயும் இந்நிலை இரங்கத்தக்க அளவிலேயே உள்ளது. என்பது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும். அதிலும் அறிவியல் தொழில் நுட்பத்தைப் பொறுத்தவரையில் தமிழ் பயிற்சி மொழியாக உயர் கல்வியாய மையாத காரணத்தால் தாய்மொழி மூலம் அறிவியல், தொழில் நுட்ப,மருத்துவக்கல்வி பெறுவது இயலாததொன்றாகஉள்ளது. இத்தகு போக்கால் தமிழில் இத்துறை தொடர்பான நூல்களும் போதிய அளவில் எழுதப்படவில்லை. எழுத முனைவோருக்கும் கலைச்சொல் சிக்கல். எனவே, ஓரளவு தமிழறிவு உள்ளவர்களுக்கும் தமிழில் அறிவியல் தொடர்பான நூல் எழுத விழைவோருக்கும் உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதே இக் கலைச்சொல் களஞ்சிய அகராதி நூல்.

இந்நூல் வேறு சில நோக்கங்களையும் உட்கொண்டே தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது.

சாதாரண கலைச்சொல் அகராதியிலின்றும் இஃது சற்று வேறுபட்டது. ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்க்கலைச் சொற்களைக் கொடுப்பதை விட அச்சொல்லின் செயற்பாட்டு வினை சற்று விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அகராதித் தன்மையும் கலைக் களஞ்சியப் போக்கும் ஒருருக்கொண்ட ஒரு புது வகை நூலாகும். இதன் மூலம் படிப்போர் எளிதில் சொற் பொருள் விளக்கம் பெற முடிகின்றது. இதனால் இதனினும் சுருங்கிய வடிவிலான சொற்செட்டும் பொருட் செறிவுமுடைய நயமிக்கக் கலைச் சொற்களை ஆர்வமுடையவர்கள் நாளை உருவாக்க வழியேற்படலாம்.

அது மட்டுமின்றி, ஒவ்வொரு கலைச் சொல்லின் வாயிலாக அறிவியல் தகவல்களைத் துணுக்குச் செய்திகளாக வாசகர்களுக்கு வழங்க வேண்டும் என்பது எனது நோக்கமாகும். ஏனெனில், இன்றையச் சூழ்நிலையில் விரிவான அறிவியல், தொழில்நுட்ப, மருத்துவச் செய்திகளைக் கட்டுரைகள் வாயிலாகப் படித்தறியும் பொறுமையும் நேரமும் மிகக் குறைவாகவே உள்ளது. அவற்றை ஒரு சில வரிகளில் செய்தித் துணுக்குகளாகத் தரும்போது ஒரு சில விநாடிகளில் படித்தறிய மனம் அவாவுவது இயல்பு. அவ்வகையில் அறிவியல் செய்திகளை வாசகர்கட்கு வழங்கவே இந்நூல் கலைக் களஞ்சிய வடி

வில் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் **தமிழில் வெளிவரும் முதல் கலைச் சொற் களஞ்சிய அகராதி நூல் இதுவே யாகும்.**

இந்நூலின் மற்றொரு சிறப்பு ஏராளமான படங்களோடு வெளிவருவதாகும். அறிவியல் நுணுக்கச் செய்திகளை பட விளக்கமின்றிக் கூறுவது ஏற்புடையதன்று என்பது எனது கருத்து. அறிவியல் செய்திகளைப் படங்களுடன் தரும்போதே வாசகர்கள் அச்செய்திகளை மிகத் தெளிவாகவும் விரைந்தும் படித்துணர முடியும். அறிவியல் முதலாக நோயியல் ஈறாக 68 அறிவியல் பிரிவுகட்கான செய்திகளையும் படங்களையும் உள்ளடக்கியது இந்நூல்.

இதற்கு முன் 52 அறிவியல் பிரிவுகட்கான சொற்பொருள் விளக்க நூலாக இரு தொகுதிகளை உருவாக்கி வெளியிட்ட பட்டறிவின் அடிப்படையில் இந்நூலை ஆங்கில நூல்களுக்கு இணையாக கண்கவர் வடிவில் அச்சிட்டு வெளியிட்டுள்ளேன்.

அறிவியல் தமிழ் வளர்ச்சியில் நாட்டமுள்ள தமிழ் ஆர்லர்கள், படைப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வாசகர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினர்கட்கும் அறிவு விருந்தாக இந்நூல் அமைய வேண்டும் என்பது என் வேணவா. தொழில் நுட்பக் கல்வி பெறும் மாணவர்கட்கும் படிப்பை பாதியில் நிறுத்திய படிப்பார்வமிக்கவர்கட்கும் அறிவியல் அறிவை அள்ளித்தரும் அட்சய பாத்திரமாக இந்நூல் விளங்க முடியும் என்பது என் நம்பிக்கை.

அறிவியல், தொழில்நுட்ப, மருத்துவத்துறைகள் தொடர்பான தமிழ் நூல் எழுத விரும்புவோர் கலைச் சொல் சிக்கலின்றி நூல் எழுத இந்நூல் பெருந்துணையாயமையும் என்பது திண்ணம்.

இந்நூலை உருவாக்குவதில் எனக்குப் பெருந்துணையாயமைந்தவர் என் கெழுதகை நண்பர் திரு. இரா. நடராசன், எம்.ஏ;பி.ஏ.எல். அவர்களாவார். கல்லூரிக் கல்வியின்போது என் வகுப்புத் தோழராயமைந்த நண்பர் அன்று முதல் இன்று வரை என் அறிவியல் தமிழ் வளர்ச்சி முயற்சிகளுக்குத் தோள் கொடுத்து உறுதுணையாயமைந்து வருபவர். இந்நூல் தொடர்பில் அவர் பங்கு கணிசமானது. அறிவியல் தமிழ் வளர்ச்சியில் உள்ளார்ந்த ஆர்வமும் உழைப்பும் நாட்டமுமுள்ள அவர்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் மிகுந்த நன்றிப் பெருக்குடன் இச்சமயத்தில் நினைவுகூர்கிறேன். இந்நூலுள் இடம் பெற்றுள்ள வரைபடங்களை வரைந்த இளம் ஓவியக் கலைஞர் திரு. இராஜாராம் அவர்கட்கும் அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த திருமதி. சித்தை சௌதா அவர்கட்டும் மீரா அச்சக ஊழியர்கட்டும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். தமிழுலகம் இந்நூலையும் ஏற்று என் முயற்சிகளுக்குப் பேராதரவு அளிக்கும் என நம்புகிறேன்.

*20—12—1994* **மணவை முஸ்தபா**

சென்னை-40 ஆசிரியன்

# சுருக்க வடிவங்கள்

## (Tamil Abbreviations)

| | | |
|---|---|---|
| அச்சு. | அச்சுக் கலை | Printing |
| அறு. | அறுவையியல் | Surgery |
| இயற். | இயற்பியல் | Physics |
| எந். | எந்திரவியல் | Machinery |
| உட. | உடலியல் | Physiology |
| உயி. | உயிரியல் | Biology |
| உள். | உள்ளமைப்பியல் | Anatomy |
| உள. | உளவியல் | Psychology |
| உலோ. | உலோகவியல் | Metallury |
| உலோ.வே. | உலோகவேலை | Metal work |
| எல். | எல்லை அளவை | Survey |
| எலு. | எலும்பியல் | Orthopaedics |
| ஒ.க. | ஒளிப்படக் கலை | Photography |
| க.க. | கட்டிடக் கலை | Architecture |
| கப். | கப்பலியல் | Nautical |
| கனி. | கனிமவியல் | Mineralogy |
| கண். | கண் இயல் | Optholmology |
| கணி. | கணிதவியல் | Mathematics |
| கம். | கம்மியம் | Plumbing |
| குளி.பத. | குளிர்பதனம் | Air conditioning |
| குளி. | குளிருட்டி | Refrigerator |
| குழை. | குழைமவியல் | Plastics |
| சாய. | சாயந்தோய்த்தல் | Dyeing |
| சுரங். | சுரங்கவியல் | Mining |
| செது. | செதுக்குருவக் கலை | Sculpture |
| தாவ. | தாவரவியல் | Botany |
| தானி. | தானியங்கி | Automotive |
| தானி.எந். | தானியங்கி எந்திரவியல் | Automobile Mechanics |
| தானி. பொறி. | தானியங்கிப் பொறியியல் | Automobile Engineering |


| | | |
|---|---|---|
| தானி. மின். | தானியங்கி மின்னியல் | Automobile Engineering |
| நுண்.உயி. | நுண் உயிரியல் | Microbiology |
| நுண்.க. | நுண்கலை | Fine Arts |
| தொல். | தொல் பொருளியல் | Archaeology |
| தொலை.கா. | தொலைக் காட்சி | Talevision |
| நில. | நிலவியல் | Geography |
| நூ.க. | நூல்கட்டு | Binding |
| நோயி. | நோயியல் | Pathology |
| படை. | படையியல் | Military |
| பற். | பற்றவைப்பு | Welding |
| பல். | பல்லிணை | Gearing |
| பட். | பட்டறைப் பணி | Shopwork |
| பூச். | பூச்சியியல் | Entomology |
| பொறி. | பொறியியல் | Engineering |
| மண். | மண்ணியல் | Geology |
| மரு. | மருத்துவம் | Medical |
| மருந். | மருந்தியல் | Pharmacology |
| மர.வே. | மரவேலை | Woodwork |
| மின். | மின்சாரவியல் | Electricity |
| மின்னி. | மின்னியல் | Electronics |
| வடி. | வடிவியல் | Geometry |
| வண். | வண்ணவியல் | Colour |
| வண். அர. | வண்ணம் மற்றும் அரக்குச் சாயம் | Paint and Lacquer |
| வரைவி. | வரைவியல் | drafts |
| வரை. | வரைகலை | Graphics |
| வான். | வான் இயல் | Astronomy |
| வார். | வார்ப்படவியல் | Foundry |
| வானூ. | வானூர்தியியல் | Aeronautics |
| வானிலை. | வானிலையியல் | Meteorology |
| விசை. | விசையியக்கவியல் | Dinamics |
| விண். | விண்வெளியியல் | Aerospace |
| வில. | விலங்கியல் | Zoology |
| வேதி. | வேதியியல் | Chemistry |
| வேதி. குழை. | வேதியியற் குழைமவியல் | Chemical **plastics** |

# A

**a-battery** ; *(மின்.)* **சேமிப்பு மின் கலத் தொகுதி :** மின்கலத் தொகுதியால் இயங்கும் வானொலியில் உருகாது ஒளிவிடும் மின்குமிழ் இழைக்கு மின்விசை வழங்கும் ஆதாரம்.

**ablation :** *(வானூ.)* **வெப்ப நீக்க உருகல் :** ஒரு விண்வெளிக்கலம் மீண்டும் வாயுமண்டலத்திற்குள் நுழையும்போது, அதன் வெப்பக் கேடயத்திலுள்ள தனிவகை வெப்பச் சிதறல் பொருள்கள் உருகுதல்.

**abomasum :** *(விலங்.)* **நான்காம் இரைப்பை :** பசு போன்ற புல்லுண்ணி விலங்குகளுக்கு உள்ள நான்காம் இரைப்பை. இவற்றின் சீரணம் முக்கியமாக இதில் தான் நடைபெறுகிறது.



நான்காம் இரைப்பை

**abortion :** *(உயி.)* **கருச்சிதைவு:** முதிரா உருவமைந்த கரு, சூல் கொண்ட மூன்று மாதங்களுக்குள் சிதைதல்.

**abrasion :** **உராய்வு :** பொருள்களைக் கருவி கொண்டு வெட்டுவதற்குப் பதிலாக, உராய்பொருள் கொண்டு தேய்த்துக் குறைத்தல்.


**abrasive :** **உராய்பொருள் :** தேய்ப்பதற்கு அல்லது மெருகேற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் மணற்கல், குருந்தக்கல், தோகைக் கல் போன்ற பொருள்கள். வைரம், குருந்தக்கல், குருந்தம், மணல், செம்மணிக்கல் தூள், படிகக்கல், தேய்ப்புக்கல், மெருகுமாக்கல் போன்றவை இயற்கை உராய் பொருள்கள். சிலிக்கன் கார்பைடு, அலுமினியம் ஆக்சைடு ஆகியவை செயற்கை உராய்பொருள்கள்.

**abrasive paper :** *(உப்புத்தாள்.)* **உராய்தாள் :** சக்கிமுக்கிக்கல், செம்மணிக்கல், குருந்தக்கல், குருந்தம் போன்ற உராய்பொருள்கள் கோந்தினால் அல்லது வேறு ஒட்டுப்பசையினால் ஒட்டப்பட்டுள்ள காகிதம் அல்லது துணி.

**abreaction :** *(உள.)* **அக எதிரியக்கம் :** மனநோயைக் குணப்படுத்துவதில் ஒரு செயல்முறை. இதில், மனநோயாளி தான் மறக்க முயலும் கசப்பான நினைவுகளை நினைவு கூர்ந்து அவற்றை நேரடியாக எதிர்நோக்கி அவற்றைத் துடைத்தழிக்கும்படி செய்கிறார்கள்.

**abscess :** *(உட.)* **கழலை :** உடலில் தோலுக்குக் கீழே பாக்டீரியா-வால் உண்டாகும் சீழ்க்கட்டி.

**abscissa :** *(கணி.)* **மட்டாயம் (கிடையச்சுத் தூரம்) :** ஒரு புள்ளியிலிருந்து நிலையச்சுக்குச் செங்குத்துக் கோணத்திலுள்ள நேர் தொலைவு.



மட்டாயம்

**absolute altitude:** *(வானூ.)* **முழுக் குத்து உயரம்:** பூமிக்குமேலே ஒரு விமானத்தின் செங்குத்து உயரம்.

**absolute motion :** *(இயற்.)* **முழு இயக்கம் :** விண்வெளியில், நிலையானதொரு புள்ளியிலிருந்து

அடுத்தடுத்து ஏற்படும் நிலை மாறுதல்கள்.

**absolute unit :** *(மின்.)* **முதல் அலகு :** மின்னோட்டம், மின்னழுத்தம் போன்ற மின்னியல் அலகு. இது சென்டிமீட்டர் - கிராம்-வினாடி முறை அடிப்படையில் அமைந்தது. நடைமுறை அலகு என்பது இந்த முதல் அலகின் மடங்கு.

**absolute zero :** *(இயற்.)* **உறை வெப்பநிலை :** ஒரு சென்டிகிரேடு வெப்பமானியில் 0°C என்பது நீர் உறையும் வெப்பநிலையாகும். ஆனால், பனிக்கட்டியில் சிறிது வெப்பம் இருக்கும்; அதாவது, நீரைவிடப் பனிக்கட்டி சற்று வெப்பமுடையதாக இருக்கும்.

மூலக்கூறுகளின் இயக்கத்தால் வெப்பம் உண்டாகிறது. மூலக்கூறுகளின் இயக்கம் ஒரு வெப்ப நிலையில் அடியோடு நின்றுவிடும். அந்த வெப்பநிலை -273.13°C என்று மதிப்பிடப்பட்டுள்ளது இந்த வெப்பநிலையே யாகும்.

**absorbent :** *(குளி.)* **ஈர்க்கும் பொருள் :** திரவத்தை அல்லது ஆவியை ஈர்த்துக்கொண்டு இயற்பியல் முறையிலோ வேதியியல் முறையிலோ உருமாறுதலடையும் ஒரு கூட்டுப் பொருள் அல்லது ஒரு பொருள்.


**absorptien dynamometer :** *(மின்.)* **ஈர்ப்புத் திருக்கை மானி :** இது ஒருவகைத் திருக்கை மானி. இதில் அளவு ஆற்றலை உராய்வுத் தடை ஈர்த்துக் கொண்டு, வழக்கமான பணிகளைச் செய்வதற்கு மற்றப் பொறிகளுக்கு அனுப்பாமல் விட்டு விடுகிறது.

**absorption system :** *(குளி.)* **ஈர்ப்புச் சாதனம் :** ஒரு குளிர்பதன அமைப்பிலுள்ள ஈர்ப்புச் சாதனம். இதில் ஆவியாக்கியிலிருந்து குளிர்பதன மூட்டும் பொருள் ஈர்த்துக்கொள்ளப்பட்டு, வெப்பம் அளிக்கப்படும்போது மின்னாக்கியில் வெளியிடப்படுகிறது.

**absorption wavemeter:** *(மின்.)* **ஈர்ப்பு அலை மானி:** ஓர் ஒத்திசைவுச் சுற்று வழியை அதன் சுற்று வழியிலிருந்து உச்ச அளவு ஆற்றல் ஈர்த்துக் கொள்ளப்படும் வரையில் இசைவிப்புச் செய்வதன் மூலம் அலைவெண்ணையும் அலை நீளத்தையும் அளவிடுவதற்குப் பயன்படும் ஒரு மின் கருவி.

**abstract design :** *(கணி.)* **அருவ வடிவமைப்பு:** வடிவ கணிதக்கோடுகள், உருவங்கள் அடிப்படையிலான வடிவமைப்பு.

**abutment :** *(க.க; பொறி.)* **உதைவுக்கால்:** ஒரு வில்வளைவு, தூலம், அல்லது பாலத்தைத் தாங்கி நிற்பதற்கு 'அண்டைக் கொடுத்து அமைக்கப் பட்டுள்ள உதைவுக்கால்.



உதைவுக் கால்

**acacine gum : வேலம்பிசின் :** கருவேல மரப் பாலிலிருந்து கிடைக்கும் பிசின்.

**accelerated motion :** *(எந்.)* **முடுக்கு இயக்கம் :** விரைவு வீதம் ஒரே அளவாக இல்லாதிருக்கிற இயக்கம். ஏறுமுக அல்லது இறங்குமுக விரைவு வீதத்தை இது குறிக்கிறது. இறங்குமுக விரைவு வீதத்தை 'எதிர் முடுக்கு இயக்கம்' என்றும் கூறுவர்.

**accelerating electrode :** *(மின்.)* **முடுக்கு மின்முனை :** ஓர் எதிர்முனைக் கதிர்க்குழலிலுள்ள ஒரு மின்முனை, ஒளிக்கற்றையின் விரைவு வேகத்தை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இதனை 'முடுக்கு மின்முனை' என்கின்றனர்.

**accelerating jet :** *(தானி. எந்.)* **முடுக்கத் தாரை :** உட்புகும் காற்று விசையினுள் முடுக்க விசையினை உட்செலுத்துவதற்கு வாயிலாகப் பயன்படும் எரி-வளி கலப்பித் தாரை (carburetor jet).

**accelerating pump :** *(தானி. எந்.)* **முடுக்க இறைப்பி :** கலவையின் செறிவினை அதிகரித்து, பளு வேற்றிய ஊர்தியினை விரைவாகக் கிளப்புவதற்கு (pickup) உதவும் நோக்கத்திற்காக எரி-வளி கலப்பியுடன் இணைக்கப்பட்டுள்ளதும் பாய்ந்திடும் வகையைச் சேர்ந்தது மான இறைப்பி (pump).

**accelerating - pump piston :** *(தானி. எந்.)* **முடுக்க இறைப்பி உந்து தண்டு :** முடுக்க இறைப்பி முசலகம் முடுக்க இறைப்பியிலுள்ள நீள் உருளையிலிருக்கும் (cylinder) தோலினாலான சிறிய கிண்ணம் போன்ற வளையம் (washer) அல்லது புழையுள்ள உள்ளீடற்ற பித்தளை உந்து தண்டு.

**acceleration :** *(எந்.)* **முடுக்கம் ; ஊக்குவிசை :** ஓர் இயங்கும் பொருளின் வேக வளர்ச்சி வீதம்.

**accelerator :** *(தானி. எந்.)* **முடுக்கி:** (1) வழக்கமாகக் காலால் இயக்கப்படும் எந்திரத்தினுள்-பொறியினுள் (engine) செலுத்தப்படும் வாயுக் கலவையின் அளவினை முறைப்படுத்துவதற்கான ஓர் எந்திரவியல் சாதனம்.

(2) குழைமவியலில் (plastic) குறிப்பாகப் பிசின் (resin) உறைவதை விரைவுபடுத்தும் வினையினைத் துரிதமாக்கும் ஒரு வேதியியற் பொருள். 'ஊக்கி' என்றும் அழைக்கப்பெறும்.

**accelerator - pump system :** *(தானி.)* **முடுக்கி இறைப்பு முறை :** உள்வெப்பாலையில் எரிபொருளாவியோடு காற்றைக் கலக்கச் செய்யும் அமைவில் (carburetor) உள்ள ஓர் இறைப்பி. இது காற்று எரிபொருள் கலவையை எந்திரத்தினுள் செலுத்தி ஒரு விரைவான வேகம் பெறச் செய்கிறது.

**accelerometer:** *(வானூ.)* **முடுக்கமானி; முடுக்களவி :** முடுக்கங்களைப் பதிவு செய்வதற்கான, அளவிடுவதற்கான அல்லது சுட்டிக் காட்டுவதற்கான (indicator) ஒரு கருவி.

**accelerometer:** *(மின்னி.)* **முடுக்கமானி :** முடுக்கத்தை அளவிடுவதற்குப் பயன்படும் ஒரு கருவி.

**accent :** *(கணி.)* **மின் அழுத்தக் குறியீடு:** பகா எண்ணைக் (prime) குறிக்கும் 'a' போன்ற, ஒரே மாதிரியான குறியீடுகளின் வரிசையினை (order) அல்லது மதிப்பினை (value) வேறுபடுத்திக் காட்டுவதற்கான குறியீடு அல்லது குறியீடுகள்.

**acceptor circuit :** *(மின்.)* **ஏற்புச் சுற்றுவழி :** ஒரு மின் சுற்றுவழியில் (குறிப்பாக வானொலியில்) ஒரு கொண்மியும், ஒரு மின்கம்பிச் சுருளும் இருக்கும். இந்த மின் சுற்றுவழியில் மின்விசை பாயத் தொடங்கியதும், அது மின்சுற்றுவழியைச் சுற்றி முன்னும் பின்னுமாகப் பாயும். கொண்மி, கம்பிச் சுருள் இரண்டின்வடிவளவுகளைப் பொறுத்து, இந்த ஊசலாட்டத்தின் அலைவெண் அமையும். இது சுற்றுவழியின் அலைவெண்ணை இயல்பான அளவுக்கு வைத்திருக்கும். ஆதார அலைவெண் சுற்றுவழியின் இயல்பான அலைவெண்களுக்குச் சமமாக இருப்பின் பெருமளவு மின்னோட்டம் பாய்கிறது. அந்தக் குறிப்பிட்ட அலைவெண்களுக்கு அந்தச் சுற்றுவழி ஏற்புச் சுற்றுவழியாக அமைகிறது. நாம் வானொலியைத் திருப்பும்போது, அதனை ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கான அலைவெண்ணுக்குரிய ஏற்

புச் சுற்றுவழியாக மாற்று கிறோம்.

**acceptor impurity :** *(மின்.)* **ஏற்பு மாசு :** மின்னோட்ட ஊர்திகளுக் காகத் துவாரங்களை உண்டாக்கு கிற, தாழ்ந்த வெப்ப நிலையிலும், தூயநிலையிலும் மின்கடத்தாத திண்மப் பொருளுடன் சேர்க்கப் படும் மாசுப் பொருள்.

**acceptor :** *(மின்னி.)* **ஏற்பான் காப்புறுதி :** ஒரு கணிப்பொறியின் நினைவாற்றல் பகுதியிலிருந்து ஒரு சொல்லைப் பெறுவதற்குத் தேவைப்படும் நேரம்.

**accessibility :** *(எந்.)* **சரியமைவுத் திறன்; அணுகு திறன் :** எளிதான சரியமைவு, பழுதுபார்த்தல், ஒருங்கிணைத்தல், உறுப்புக்களைப் பிரித்தெடுத்தல் போன்றவற்றுக்கு இடமளிக்கும் வகையில் உறுப்புகளை வசதியாக ஒருங்கமைக்கும் திறனளவு.


**accessory :** *(எந்.)* **துணைக்கருவி; துணைச் சாதனம்; துணையுறுப்பு; உதவிப் பொறி :** ஓர் எந்திரத்தைப் பயன்படுத்துவதற்கு இன்றியமையாத ஓர் உறுப்பாக இல்லாமல், ஆனால் அதன் பணி வீச்செல்லையை விரிவாக்குவதற்கு அல்லது மேம்பட்ட செயல்திறனுக்கு (performance) துணைபுரியக்கூடிய ஓர் எந்திர உறுப்பு அல்லது இணைப்புக் கருவி.

**access time :** *(மின்னி.)* **அணுகு நேரம் :** ஒரு கணிப்பொறியின் நினைவுச் சேமப்பகுதியிலிருந்து ஒரு சொல்லைப் பெறுவதற்கு தேவைப்படும் நேரம்.

**accordion:** *(க.க.)* **துருத்திக் கதவம்; அக்கார்டியன்:** 'அக்கார்டியன்' என்னும் இசைக் கருவியிலுள்ள விரிந்து சுருங்கும் காற்றுத் துருத்தி இயங்குவது போன்று மடிக்கவும், திறக்கவும், மூடவும் ஏற்ற வகையில் அமைந்த ஒரு வகைக் கதவு அல்லது இடைத் தடுப்பு.

**accumulator:** *(குளி.)* **சேமக் கலம்:** ஒரு கீழ்நிலைத் திரவ உறை குளிரூட்டியைத் தொகுத்து வைப்பதற்குரிய ஒரு கருவி.

**accumulator:** *(மின்னி.)* **மின்சேமக் கலம்:** ஒரு கணிப்பொறியின் ஒரு பகுதி. இதில் உள்ளீட்டு முனைகளுடன் மாற்றமைவு செய்த ஈரிலக்க எண் காட்டி அமைந்திருக்கும். இந்த உள்ளீட்டு முனைகளில் எண் காட்டியில் ஓர் அதிர்வு அலையினைப் பயன்படுத்தும் ஒவ்வொரு தடவையும் சேமிப்புக் கணிப்பு ஒரு புதிய கூட்டுத் தொகைக்கு அதிகரிக்கும்.



மின் சேமக்கலம்

**accumulator:** *(எந்.)* **சேமிப்புத் தேக்கு கலன்: தேக்கி:** *(1)* பல்வேறு வகை நீரியல் எந்திரங்களில் (hydraulic machines) உந்துவிசையினை (motive power) அளிப்பதற்காக நீர் செலுத்தப்படும் ஒரு நீள் உருளை (cylinder).

*(2) (மின்னியல்)* மின்சேமக் கலம்

*(3) (வேதியியல்)* சேமக் கலம்.

**accurate: துல்லியமான: செம்மையான :** தவறில்லாத; சரிநுட்பமான; வழுவற்ற; சீர்மைவாய்ந்த; செம்மையான தரத் திட்ட அளவுக்கு இயைந்த.

**acetate callulose :** *(குழை.)* **அசிட்டேட் செல்லுலோஸ் :** காந்த

விசையுள்ள ஒலிப்பதிவு நாடா தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் ஒரு பிளாஸ்டிக் ஆதாரப் பொருள்.

**acetone :** *(வேதி.)* **உயிரியக்கப் படிக நீர்மம் :** சிலவகை மரம், புளிங்காடிகள், பல்வேறு கரிமக் கூட்டுப் பொருள்கள் (organic compounds) ஆகியவற்றைச் சிதைத்து வாலை வடித்தல் வாயிலாகப் பெறப்படுவதும், எளிதில் தீப் பற்றக்கூடியதுமான ஒரு திரவம் ($CH_3COCH_3$); இது கசப்புச் சுவையுடையதாகும்.

**acetylene cylinder ;** *(பற்.)* **அசிட்டிலின் நீள் உருளை :** அசிட்டிலினைச் சேமித்து வைக்கவும், கொண்டு செல்லவும் i.c.c. தரத் திட்டங்களுக்கிணங்கச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட கொள்கலம். இதனைச் "சேமிப்புக் கலம்" அல்லது "புட்டி" என்றும் அழைப்பர்.

**acetylene gas :** *(உலோ.)* **அசிட்டிலின் வாயு :** கால்சியம் கார்பைட் நீருடன் கலப்பதன் மூலம் தயாரிக்கப்படும் ஒருவகை ஒளிரும் வாயு. இதனை ஆக்ஸி அசிட்டிலின் வார்ப்படப் பணிகளில் பயன்படுத்துகின்றனர்.

**acetylene gas :** *(வேதி.)* ஒள் வளிமமும், சுண்ணக் கரியகையும், உண்டாக்கும் ஒளியுடை வளிமம் நீரும் சேர்ந்து கரியகையை உண்டாக்கும் ஒளியுடை வளிமம் ($C_2H_2$) உயிரக ஒள்வளிப் பற்றவைப்பிலும் பயன்படுகிறது.

**acetylene generator :** *(பற்.)* **ஒள் வளிம ஆக்கி ;** சுண்ணக் கரியகையில் நீர் வினைபுரிவதால் உண்டாகும் ஒளிர்வளிமத்தை ஒரே சீரான அழுத்தத்துடன் அளிப்பதற்குப் பயன்படும் ஒரு கொள்கலம்.

**acetylene regulator:** *(பற்.)* **அசிட்டிலின் ஒழுங்கியக்கி :** அசிட்டிலின் நீர் உருளையின் அழுத்தங்களை மின் விளக்கின் அழுத்தங்களின் அளவுக்குக் குறைப்பதற்கும் அழுத்தத்தை நிலையாக வைத்திருப்பதற்கும் பயன்படும் ஒரு தானியங்கி ஓரதர்.

**acetylite :** *(வேதி.)* **அசிட்டிலைட் :** சுண்ணக் கரியகையைச் சர்க்கரையுடன் (glucose) சேர்த்துப் பயன்படுத்துவதன் வாயிலாகக் கிடைப்பது. இதைப் பயன்படுத்துவதால். அவ்விதம் பதப்படுத்தாத சுண்ணக் கரியகையிலிருந்து கிடைப்பதைவிட மெதுவாகவும், ஒரே சீராகவும் ஒளிர் வளிமத்தை உற்பத்தி செய்ய முடியும்.

**achromatic (lens) நிறமற்ற ஆடி :** நிறம்காட்டாத ஆடி. எல்லா வண்ணங்களின் ஒளியையும் சமமாகக் கோட்டமுறச் செய்வது நிறமற்ற ஆடி ஆகும்.

**acetic acid :** *(வேதி.)* **புளிங்காடி; அசெட்டிக் அமிலம் :** நிறமற்ற கார நெடியுடைய திரவம் ($CH_3COOH$); வழக்கமாக, மரத்தைச் சிதைத்து வாலை வடித்தல் (destructive distillation) வாயிலாகவோ, சாராயத்தை (alcohol) நொதிமங்களுடன் (ferments) சேர்த்து உயிரக இணைவுறுத்தல் (oxidation) வாயிலாகவோ இது பெறப்படுகிறது. கொடி முந்திரிக்காடி (vinegar) என்பது தூய்மை செய்யப்படாத ஒரு புளிங்காடியாகும்.

**acid:** **அமிலம்:** (1) நீரில் கரையும் போது ஹைட்ரஜன் அயனிகளை உண்டாக்குகிற ஒரு பொருள்.

(2) அமிலம் என்பது ஒரு ஹைட்ரஜன் கூட்டுப் பொருள். இந்தக் கூட்டுப் பொருளின் நீர் கலந்த கரைசலில் ஹைட்ரஜன் அயனிகள் மட்டுமே அடங்கியிருக்கின்றன; வேறெந்த நேர்மின் அயனிகளும் அடங்கியிருக்கவில்லை.

**acid bath :** *(உலோ.)* **அமில முழுக்கு :** மின் முலாம் பூசுதலுக்கு

ஆயத்தம் செய்யுங்கால் உலோகப் பொருள்களைத் தூய்மைப்படுத்துவதற்காகப் பயன்படும் அமில ஊறல்.

**acid blast etching :** (அச்சு.) **அமில ஊதுலைச் செதுக்கு வேலை :** ஒளிச்செதுக்குத் தகடுகளில் எந்திர முறையில் செதுக்கு வேலை செய்வதற்கான ஒரு செய்முறை.

**acid colour :** (சாய.) **அமில வண்ணம்; அமிலச் சாயம் :** செயற்கையான கரிமச்சாயப்பொருள். சாயந்தோய்க்கப்படும் இழைக்கும் இந்தச் சாயப் பொருளுக்கும் இணைப்பு ஏற்படுத்துவதாக அமிலம் பயன்படுத்தப்படுவதால் இந்தப் பெயர் பெறறது. 75% கம்பள இழைகளுக்கு இதைப் பயன்படுத்தியே சாயநதோய்க்கப்படுகிறது.

**acid cure :** (தானி.) **அமிலப் பதனம் :** வெப்பமின்றித் துரிதமாகக் கந்தக வலிவூட்டம் செய்வதன் வாயிலாக டயர்களைப் பழுது பார்ப்பதற்காகக் கந்தகக் குளோரைடைப் பயன்படுத்துதல்.


**acidproof paint :** (மின்.) **அமில எதிர்ப்பு வண்ணச் சாயம் :** அமிலம் வினைபுரிவதை எதிர்க்கிற ஒரு வகை வண்ணச் சாயம்.

**acidulated water:** (மின்.) **அமிலமாக்கிய நீர் :** நீர் கலந்து திட்பம் குறைக்கப்பட்ட அமிலக் கரைசல்.

**acieral :** (உலோ.) **இரும்பு மூலாம்:** எடை குறைந்த ஓர் உலோகக் கலவை. 6.4% செப்பு, 0.4% துத்தநாகம், 0.9% நிக்கல், 0.1% இரும்பு 0.4% சிலிக்கன் மீதம் அலுமினியம் அடங்கியது. இது முன்னர் உந்து வண்டிகளின் உறுப்புகள் செய்வதற்குப் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது.

**aclinic line :** (மின்.) **சரிவற்ற கோடு :** பூமியைச் சுற்றியுள்ள ஒரு கற்பனைக் கோடு. இது ஏறத்தாழ பூமத்திய ரேகையில் உள்ளது. இதில் எல்லாப் புள்ளிகளும் ஒரு பூஜ்யக் காந்தச் சரிவினை உடையனவாக இருக்கும்.

**acme thread :** (எந்.) **முடித்திருகிழை :** ஒருவகைத் திருகு இழை. இதன் திருகு இழையின் பகுதி, சதுர இழைக்கும், V-இழைக்கும்



முடித்திருகிழை

இடைப்பட்டதாக இருக்கும். ஊட்டுத் திருகுகளுக்குப் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது. இதில் இடைக்கோணம் 29° தேசியத் திருகிழை அல்லது அமெரிக்கத் திருகிழை எனப்படும் திருகிழையில் இடைக்கோணம் 60° ஆகும்.

**aconit:** (மருந்.) **அக்கோனிட்** 'மங்க்ஷுட்' எனப்படும் தாவரத்திலிருந்து பெறப்படும் ஒரு நச்சு மருந்து. இதுமிகவும்நஞ்சுத்தன்மைவாய்ந்த வெடியக் கலப்புடைய வேதியியல் மூலப்பொருள். இதனைத் தோலில் வலியைக் குறைக்கப் பயன்படுத்துகிறார்கள்.

**acorn tube :** (மின்.) **கருவாலிக் கொட்டை வடிவக் குழாய் :** கருவாலிக் கொட்டை வடிவிலுள்ள ஒரு சிறிய எலெக்ட்ரான் குழாய். இதில் அடித்தளம் இல்லை. தனிமங்களுடனான இணைப்புகள் குழாயிலிருந்து ஆரைகளைப் போல் நீண்டிருக்கும் ஊசிகள் வழியாகச் செய்யப்படுகின்றன. இது உயர் அதிர்வலைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

**acoustics :** (இயற்.) **ஒலியமைப்பியல்; ஒலி ஆய்வியல்:** ஒலி தொடர்பான அறிவியல். செவிப்புலனின் ஒலியின் தாக்குறவுகளை ஆராயும் அறிவியல். ஓர் அறையில் இருப்ப

வர்களுக்கு ஒலி தெளிவாகக் கேட்பதைப் பொறுத்து அந்த அறையின் ஒலி அமைப்பு நன்றாகவோ, மோசமாகவோ இருப்பதாகக் கூறப்படுகிறது.

**acquired character:** *(உயி.)* **ஈட்டுப் பண்பு :** விலங்கின் அல்லது தாவரத்தின் ஆயுட்காலத்தின் போது, அதன் உடலில் நோய் அல்லது உணவின் காரணமாகப் பரம்பரையாக ஏற்படும் மாறுதல்.

**acre : ஏக்கர் :** ஒரு நில அளவுக் கூறு. 160 சதுர முழம் அல்லது 4840 சதுரகெஜம் அல்லது 43,560 சதுர அடி அல்லது 4425.696 சதுரமீட்டர் கொண்ட நில அளவு.

**acriflavine** : *(மருந்.)* **அக்ரிஃபிளேவின்:** கரிஎண்ணெயில்(கீல்)இருந்து தயாரிக்கப்படும் மஞ்சள் நிறமான நச்சுக் கொல்லி மருந்து. இது மிகவும் ஆற்றல் வாய்ந்தது. குருதி நிணநீர் மூலம் இதன் செயல் வலிவடைகிறது.

**acrobatics**: *(வானூ.)* **விமானக் கரண வித்தை**: விமானம் வானத்தில் குட்டிக்கரணங்கள் போட்டு கரண வித்தைகள் செய்து காட்டுதல்.

**acromegaly**: *(நோயி.)* **கபச் சுரப்பி நோய்**: கபச்சுரப்பியில் (pitujtary gland) ஏற்படும் ஒரு நோய். இதனால் தலை, கைகள், பாதங்கள் அளவுக்குமீறி பருத்து விடுகின்றன.

**acromion process**: *(நோயி.)* **தோள் திருகு நோய்**: தோள்பட்டை எலும்பின் ஒரு பகுதி சற்றே பின்புறமாகத் திருகி இருத்தல்.

**acroteria**: *(க.க.)* **உச்சிநிலை மேடை**: அடித்தளமோ அடிப்பீடமோ இல்லாத வரிமுக்கோண முகப்பு முகட்டின் உச்சியிலும் இறுதி முனைகளிலும் வைக்கப்பட்டுள்ள சிறிய நிலைமேடை.

**acrylic resins**: *(வேதி. குழை.)* **கண்ணாடிப் பிசின்**: மெதில்-மெத்தாக்கிரிலேட் பிசின் என்றும் இதற்குப் பெயர். பிளெக்சிகிளாஸ், லூசைட் போன்ற கண்ணாடிப் பிசின்வகையைச் சேர்ந்தது. இந்தப் பிசின்களில் கண்ணாடியைவிட அதிக அளவில் ஊடுருவக் கூடியது. விண் பயணவாகன கவிகை முடிகளிலும், ஒளிச் சிதறிகளிலும்தனி வகைப் பலகணிகளிலும், காட்சிப் பெட்டகங்களிலும் இப்பிசின்கள் பயன்படுகின்றன. செயற்கருவிகளிலும், வழியொட்டுக்கண்ணாடிகளிலும் இது பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பிசின் மூலைக் கோணங்களிலும் ஒளியைப் பாய்ச்சுகிறது. (பார்க்க: குழைமவியல்).

**actinic rays**: **வேதியியல் விளைவு ஒளிக்கதிர்கள்**: ஒளிப்படப் பால்மங்களின்மீது வினைபுரியக்கூடிய ஒளிக்கதிர்கள்.

**actinic**: *(விண்.)* **ஒளிக்கதிர் விளைவுடைய**: வேதியியல் விளைவு தரும் ஒளிக்கதிர்களை ஒட்டியது. வேதியியல் ஒளிக்கதிர் விளைவுகளை உண்டாக்கக்கூடிய மின்காந்தக் கதிரியக்கத்துடன் தொடர்புடையது.

**actinium : ஆக்டினியம்** : கதிரியக்கமுடைய உலோகப் பொருள்களில் ஒன்று. இது அணு எண் 89 கொண்ட ஒரு தனிமம்.

**actinomyces** : *(தாவ.)* **நட்சத்திரக் காளான்** : நட்சத்திர வடிவிலுள்ள ஒரு வகைக் காளான். இது தரையடி அறைகளிலும், மழைக்குப் பிறகு பூமியிலும் ஈரநெடியை உண்டாக்குகிறது.

**actinomycosis**: *(நோயி.)* **மரநாக்கு நோய்** :நட்சத்திரக்காளான்கள் அல்லதுஅவை போன்ற உயிரிகள் கார

ணமாக உண்டாகும் ஒருவகை நோய். இது கால்நடைகளின் நாக்கில் கெட்டியான வீக்கத்தை ஏற்படுத்துகிறது.

**activated alumina :** *(குளி.)* **செயலூக்கிய அலுமினிய உயிரகை :** இது ஓர் அலுமினியம் ஆக்சைடு. இது ஈர்க்கும் பொருளாகப் பயன்படுகிறது.

**active conductor:** *(மின்.)* **செயல் முனைப்பு மின் ஊடு கடத்தி :** மின்னோட்டம் பாய்ந்து செல்லக்கூடிய ஊடுகடத்தி.

**active current :** *(மின்.)* **செயல் முனைப்பு மின்னோட்டம் :** மாறு மின்னோட்டத்தில் மின்னழுத்த நிலையிலுள்ள ஒரு பகுதி; அல்லது வாட் இல்லாத அல்லது பயனில்லாத ஆற்றலிலிருந்து விளைவுறு ஆற்றலை வேறுபடுத்திக் காட்டக்கூடியது.

**active immunization: தீவிரத் தொற்றுத் தடை காப்பு:** இறந்து போன அல்லது வலிமை குன்றிய பாக்டீரியாக்களை தீங்கற்றவையாக்கி, அதே சமயம் அவை குருதியில் பாதுகாப்பாகச் செயற்படும்படி செய்து, தொற்றுநோய்களுக்கு எதிரான தடைகாப்பாக ஊசிமூலம் உடலில் செலுத்துதல். எடுத்துக்காட்டு: அம்மை குத்துதல்.

**active material :** *(மின்.)* **செயல் முனைப்பு மூலப்பொருள் :** ஒரு சேமக் கலத்தில், மின்கலத்தின் நேர்மின் தகட்டில் (வலை) உள்ள பச்சைக் குழம்பு என அழைக்கப்படுவது.

**active pressure :** *(மின்.)* **செயல் முனைப்பு அழுத்தம் :** மாறு மின்னோட்டத்தில் ஒரு மின்னோட்டத்தை உண்டாக்கும் விளைவுறு மின்னழுத்தம். ஒரு மின் சுற்றின் செறிவூட்ட மின்னழுத்தத்திலிருந்து வேறுபட்டது.


**actuate : தூண்டு இயக்கு :** இயக்குதல், இயங்கும்படி செய்தல். தானியங்கி எந்திரங்களின் ஓரதர்கள், இயக்குத் தண்டின் இயக்கத்தின் காரணமாக இயங்குவதற்குத் தூண்டப்படுகின்றது.

**acute angle :** *(கணி.)* **குறுங் கோணம் :** ஒரு செங்கோணத்திற்கு அதாவது, $90^{\circ}$ கோணத்திற்குக் குறைந்த கோணம்.

**ad :** *(அச்சு.)* **விளம்பரம் :** விளம்பரத்தைக் குறிக்க ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் சுருக்கக் குறியீடு.

**adam : 'ஆடம்' அறைகலன் :** ஆடம் சகோதரர்கள் (1728-1792) புகுத்திய ஒருவகை ஆங்கிலேய அறைகலன் அலங்கார முறை. பொதுவாகப் பண்டைய ரோமானிய அணிகலன்களுடன் சேர்த்து அலங்கரிக்கப்படுவது.

**adam's apple :** *(உட.)* **குரல் வளை :** மனிதரின் தொண்டைப் பகுதியின் முன்புறம் இருக்கும் ஒரு சிறிய எடுப்பான திரட்சி. இதுவே குரல் உண்டாக்கும் உறுப்பு.



குரல்வளை

**adaptability: (இயற்.) நெகிழ்வுத் திறன் :** தறுவாய்க்கேற்ப இயைவு கொள்ளும் திறன்; தற்போதுள்ள சூழ்நிலைக்கு உகந்தவாறு எளிதில் பொருந்தக்கூடிய திறன் அளவு.

**adapter : மாற்றமைவுப் பொறி :** வெவ்வேறு வடிவளவுகளிலுள்ள கருவிகளை ஒன்றுக்கொன்று மாற்றிப் பயன்படுத்திக் கொள்வதற்கு உதவும் துணைப்பொறி.

**adapter plate :** *(குழை.)* **மாற்றமைவுப் பொறித் தகடு:** உட்செலுத்து வார்ப்படப் பணியில், உரு அழுத்துப் பொறியுடன் அல்லது

அச்சுத்தாள் அழுத்துத் தகட்டுப் பாளத்துடன் இணைந்திருக்கிற தகட்டுப் பிடி வார்ப்படம்.

**addendum :** *(பல்.)* **புறம் :** ஒரு பல்லிணைச் சக்கரத்தில், பற்சக்கர வட்டத்திற்கு வெளியேயுள்ள பல்லின் முனை அல்லது பகுதி.

**addendum:** *(உலோ.)* **புற இணைப்பு:** ஒரு பல்லிணையில் பல் இடைவெளிக் கோட்டிலிருந்து புற விட்டம் வரையுள்ள தூரம்.

**addendum circle:** *(பல்.)* **புற வட்டம் :** ஒரு பல்லிணைச் சக்கரத்தின் புறச் சுற்றளவு.

**adder:** *(மின்னி.)* **கூட்டல் பொறி:** மின்னணுவியல் கணிப்பொறியிலுள்ள மின்சுற்றுவழியில், இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட இலக்கங்களின் கூட்டுத் தொகையைப் பதிவு செய்வதற்கான சாதனம்.

**addision's disease :** *(நோயி.)* **தோல் கருமை நோய் :** வரவரத் தளர்ச்சியூட்டும் குருதிச் சோர்வுடன் மேனியில் ஊதா நிறம் படர்விக்கும் ஒருவகை நோய். இது குண்டிக்காய்ச் சுரப்பியில் ஏற்படும் நோயினால் உண்டாகிறது.

**addition polymerization:** *(குழை.)* **சேர்மான மீச்சேர்ம இணைவு:** இடைவிளைவுப் பொருள் எதனையும் பிளந்திடாதவாறு, பூரிதமடையாத குழுமங்களின் எதிரெதிர் வினையின் வாயிலாக மூலக்கூறுகள் ஒருங்கிணைகின்ற ஒரு வேதியியல் வினை.

**additive compound :** *(வேதி.)* **சேர்மானக் கூட்டுப்பொருள் :** இரு பொருள்கள் ஒன்று சேர்வதால் உண்டாகும் கூட்டுப் பொருள். எடுத்துக்காட்டாக, எத்திலீன் குளோரின், எத்தில்ன் குளோரைடு ஆகிய இருபொருள்கள் இணைவதால் ஒரு கூட்டுப்பொருள் உண்டாகிறது.

**additive method of colour photography:** **வண்ணம் ஒளிப்படச் சேர்மான முறை:** ஒளிப்படங்கள் சிவப்பான பகுதிகள் அனைத்தும் மிக நுண்ணிய புள்ளிகளைக் கொண்டிருக்கும். அதேபோன்று, நீலம், பச்சை வண்ணப் பகுதிகளிலும் இருக்கும். மற்ற வண்ணப் பகுதிகளில் சிவப்பு, நீலம், பச்சை நிறப்புள்ளிகள் கலந்திருக்கும் (எ-டு : கருஞ்சிவப்பில், சிவப்பு, நீலப்புள்ளிகள்) வண்ணத் தொலைக்காட்சிகளிலும் இதனைக் காணலாம்.

**additives :** **சேர்மானப் பொருள்கள் :** எண்ணெயின் பிசுபிசுப்புத் தன்மையைக் குறைப்பதற்காகவும் உணவுக்கு வண்ண மூட்டுவதற்காகவும் எண்ணெயுடன் சேர்க்கப்படும் பொருள்கள்.

**additives :** *(தானி.)* **சேர்மானப் பொருள்கள் :** மசகு எண்ணெய்களில், தேவையான பண்புகளைக் கொண்டு வருவதற்காகச் சேர்க்கப்படும் வேதியியல் பொருள்கள்.

**adductor muscle:** *(உட.)* **முன்னிழுப்புத் தசை:** முன்னிழுக்கும் இயல்புடைய தசைநார். கையை உடலை நோக்கிக் கொண்டு வருவது இந்தத் தசைதான்.

**adhesive:** *(க.க.)* **ஒட்டுப்பசை:** இரண்டு பொருள்களை ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளும்படி செய்யும் சாந்து, பசை அல்லது வேறு பொருள்.

**adiabatic:** *(குளி.)* **மாறா வெப்பநிலை சார்ந்த:** வெப்பநிலை மாறாமல், கன அளவில் அல்லது அழுத்த நிலையில் ஏற்படும் ஒரு மாறுதல்.

**adiabatic process:** *(குளி.)* **மாறா வெப்பநிலை நிகழ்ச்சி:** வெப்பநிலை குறையாமல் அல்லது கன அளவில்

ஒரு மாறுதலை உண்டாக்கும் ஒரு நிகழ்ச்சி.

**adherence: ஒட்டுதல்:** *மாறுபட்ட துகள்கள் ஒன்றையொன்று பற்றிக்கொண்டிருக்கிற அல்லது ஒட்டிக் கொண்டிருக்கிற தன்மை.*

**adhesion or adhesive power:** *(எந்.)* **அயற்பரப்பொட்டு அல்லது ஒட்டுந்திறன்:** *(1) எந்திரத்தின் பிற உறுப்புகளை இயங்க வைக்கும். அது தொட்டுக் கொண்டிருக்கும் பரப்புக்குமிடையில் இருந்து வருகிற உராய்வு.*

*(2) ஒரு பொருளின் பரப்பிலுள்ள அணுக்களுடன் பிறிதொரு பொருளின் பரப்பிலுள்ள அணுக்கள் மிகுதியாக ஒட்டிக்கொள்ளும் தன்மை.*

*(3) குழைமவியலில், இரு முகப்புகள், ஒரு கரைசலினால் மெருகூட்டப் பெற்றபின்பு, ஒரு குழைமத்தினால் இணைக்கப்பட்டிருக்கும் நிலை.*

**adjacent: angle:** *(வரை.)* **அண்டைக்கோணம்:** *வடிவ கணிதத்தில், இரு கோணங்களுக்கு ஒரு பக்கம் பொதுவாக இருக்குமானால், அந்த இரு கோணங்களும் அண்டைக் கோணங்கள் எனப்படும்.*

**adjacent-channel interference** *(மின்.)* **அண்டை அலை வரிசை இடையீடு:** *தொலைக்காட்சி போன்றவற்றில் உள்ள அதிகாரம் பெற்ற அண்டை அலை வரிசையிலிருந்து எழுகிற ஒரு சைகையினால் உண்டாகும் இடையீடு.*

**adjust: சீரமைவு செய்:** *தொடர்பு நிலை, இருப்பு நிலை, பொருத்த நிலை போன்றவற்றுக்குத் தக்கவாறு உறுப்புகளைப் பொறுத்தமாக அமைத்துக் கொள்ளுதல்.*

**adjustable boring tool:** *(எந்.)* **சீரமைவு செய்யத்தக்க துணைக் கருவி:** *வெட்டுக் கருவியையும், கைப்பிடியையும் மாற்றாமலே வெவ்வேறு பணிக்கேற்ப வெட்டுக் கருவியைப் பொருத்தக்கூடிய கருவி.*

**adjustable condenser:** *(மின்.)* **சீரமைவு செய்யத்தக்க மின் விசையேற்றி:** *இயங்கக்கூடிய தகடுகளின் வாயிலாக, மாறுபட்ட தேவைகளுக்கேற்ப விசையேற்றும் திறனை மாற்றியமைக்கக்கூடிய ஒரு மின் விசையேற்றி.*

**adjustable parallels:** *(எந்.)* **சீரமைவு செய்யத்தக்க இணைக்கம்பிகள்:** *ஆப்பு வடிவ இரும்பு இணைக்கம்பிகள். இதில் ஒரு கம்பியின் மெல்லிய முனை மற்றொன்றின் தடித்த முனையுடன் பொருத்தப் பட்டிருக்கும். மேல் கம்பியின்*



இணைக்கம்பிகள்

*முகப்பும், கீழ்க்கம்பியின் அடிமுகப்பும் இணையொத்ததாக அமைந்திருக்கும். எனினும், இரு முகப்புகளுக்குமிடையிலான தூரத்தைக் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். இவ்விரு கம்பிகளும் விலகி விடாமல் தடுப்பதற்காக, இரண்டும் ஒரு திருகாணி வாயிலாகப் பூட்டப்பட்டிருக்கும்.*

**adjustable pitch propeller:** *(வானூ.)* **சீரமைவு செய்யத்தக்க உந்து சுழல் விசிறி:** *இந்தச் சுழல் விசிறியின் குடத்தில், இயங்காத நிலையில், தேவையான எந்த உந்துதலுக்கும் ஏற்ப. அலகுகளை இணைத்துக் கொள்ளலாம்.*

**adjustable reamer:** *(எந்.)* **சீரமைவு செய்யத்தக்க துணைச் சீர்மி:** *ஒரு மைய மரையாணி அல்லது திருகாணி வாயிலாக வடிவளவினைப்*

பெரிதாக்கக்கூடிய துளைச் சீர்மி. மரையாணியை அல்லது திருகாணியை முடுக்குவதன் மூலம் துளைச் சீர்மி விரிவடைகிறது.

**adjustable resistance :** *(மின்.)* **சீரமைவு செய்யத்தக்க மின் தடை :** இதனை மாறுபடும் மின் தடை என்றும் அழைப்பர். உயர்வை அல்லது குறைவை அனுமதிக்கக்கூடிய மின் தடை.

**adjustable speed motor** *(மின்.)* **சீரமைவு செய்யத்தக்க வேக மின்னோடி :** மிகுதியான அளவுக்கு வேகத்தை மாற்றியமைக்கக் கூடிய மின்னோடி. இதில் வேகத்தை ஒரு முறை சீரமைவு செய்துவிட்டால், பாரம் எத்துணை அளவு இருப்பினும், வேகம் ஒரே சீராக இருந்து வரும்.

**adjustable tap:** *((எந்.)* **சீரமைவு செய்யத்தக்க வடிகுழாய் ;** ஆரப் போக்கில் மாற்றியமைக்கக் கூடிய வாறு அலகுகள் அல்லது செதுக்குக் கருவிகள் பொருத்தப்பட்ட வடி குழாய்.

**adjustable wrench : சீரமைவுத் திருகுக் குறடு :** தக்கவாறு அமைத்துக் கொள்ளக் கூடியதாகத் திறந்த வாயினைக் கொண்ட ஒரு திருகுக் குறடு.

**adjusting screw:** *(எந்.)* **சீரமைவு செய்யத்தக்க திருகாணி :** ஒருவகை ரம்பப் பற்சாய்வுத் திருகாணி. இதனைப் பயன்படுத்தி, எந்திரங்களின் உறுப்புகளைப் பரிமாணங்களுக்குச் சரியமைவு செய்வதைவிட அதிகத் துல்லியமாகச் சீரமைவு செய்யவோ ஒழுங்கமைவு செய்யவோ முடியும்.

**adjustment :** *(எந்.)* **சீரமைவு :** ஒரு பொறியின் அல்லது எந்திரத்தின் உறுப்புகளைப் பொருத்தமான நிலைகளில் சீராகப் பொருத்தி அமைத்தல்.

**adjustment strips :** *(எந்.)* **சீரமைவு உலோக வார்ப்பட்டைகள் :** இந்த ஆப்பு வடிவ உலோக வார்ப்பட்டைகள் வாயிலாக, நழுவுமேற்பரப்புகளின் சரியான, தாங்கியினைச் சீரமைவு செய்யலாம். ரம்பப் பற்சாய்வுத் திருகாணிகளை அல்லது சீரமைவு செய்யத்தக்க திருகாணிகளைக் கொண்டு துல்லியமான இணைப்பினை ஏற்படுத்த முடியும்.

**adman :** *(அச்சு.)* **விளம்பரக்காரர்:** விளம்பரச்சாதனங்களைத் தயாரிப்பவர்.

**admittance :** *(மின்.)* **விடுப்பு விடை :** மறிப்புக்கு நேர் எதிரானது. மாறு மின்னோட்டச் சுற்றுப் பாதைகளில் பயன்படும் ஓர் அலகு. இது ஓம்களில் அளவிடப்படுகிறது.

**adobe construction :** *(க.க.)* **உணக்கிய செங்கல் கட்டுமானம் :** வெயிலில் காய்ந்த பச்சைச் செங்கல்லால் கட்டப்பட்ட புறச்சுவர்களைக் கொண்ட கட்டிடம். இந்தச் செங்கற்கள், மண்ணும் வைக்கோலும் கலந்த கலவையால் செய்யப்பட்டு வெயிலில் உணக்கியவையாகும்.

**adrenal glands : (உட.) குண்டிக் காய்ச் சுரப்பி :** இவை சிறுநீரகத்தை அடுத்துள்ள சுரப்பிகள். இந்தச் சுரப்பியின் உட்பகுதியான உட்கருவிலிருந்து ஊறும் "அட்ரினலீன்" எனப்படும் சுரப்பு நீர் இரத்தத்தில் பாய்ந்து, திடீர் அச்சம் அல்லது கோபத்தின்போது விரைவான இதயத் துடிப்பு, வெளுத்த முகம் போன்ற விளைவுகளை உண்டாக்குகிறது. இந்தச் சுரப்பியின் புறப்பகுதி உள்ளுறுப்பு மாறுதல்களை உண்டாக்குகிறது. பறவைகளிலும், மீன்களிலுமுள்ள இந்தச் சுரப்பிகள் முற்றிலும் வேறானவை.

**adulteration :கலப்படம்:** மட்டமான அமைப்பான்களையோ

அயற் பொருள்களையோ கலந்து தூய்மையைக் கெடுத்தல்.

**advance**: *(தானி;மின்.)* **முன்னீடு:** உந்து தண்டு நிலையின் உச்சிநிலை மையத்தின் நேரத்தைப்பொறுத்து மின்பொறி உண்டாகும் நோத்தைச் சீரமைவு செய்தல்.

(2) மின்னியற் கருவி வேலைக்குப் பயன்படுத்தப்படும் செம்பும் நிக்கலும் கலந்த ஓர் உலோகக் கலவை (உலோகவியல்).

**advertising**: **விளம்பரம் செய்தல்:** பொது அறிவிப்புகளைத் தயாரித்துப் பொது மக்களிடையே பரப்பும் செயல்.


**adz**: **செங்கோண வெட்டுக் கருவி:** கைப்பிடிக்குச் செங்கோணத்தில்



செங்கோண வெட்டுக் கருவி

வெட்டுக் கத்தி அமைந்துள்ள ஒரு வகை வெட்டுக் கருவி.

**adz-eye hammer** :*(மர.வே.)* **செங்கோண முகப்புச் சம்மட்டி** : ஆணி பற்றி இழுக்கும் அமைவுடைய வார்சுத்தியல். இதில் முகப்பு, மற்ற சுத்தியல்களைவிடக் கூடுதலாக நீண்டு கைப்பிடிவரை அமைந்திருக்கும்.



சம்மட்டி

**aerated water** : *(வேதி.)* **காற்றூட்டிய நீர்** : காற்றினைச் செலுத்தித் தூய்மையாக்கப்பட்ட நீர்.

**aeration** : *(வேதி.)* **காற்றூட்டல்**: (1) நீரினை அல்லது வேறு திரவத்தைத் தூய்மைப்படுத்துவதற்காக அதனுள்ளே காற்றினைச் செலுத்துதல்; காற்றின் வேதியியல் வினைக்கு உட்படுத்துதல்.

(2) சாக்கடையை அகற்றும் சாதனத்தில், தொட்டியின் அடிமட்டத்திலிருந்து, ஓர் எந்திர சாதனத்தின் மூலம் கழிவு நீரின் மட்டத்தை உயர்த்தி, நீரை வெளியேற்றுவதற்குப் பயன்படும் ஒரு துணை நிலைத் தொட்டி.

**aerial**:**வான்கம்பி**:*(மின்.)* கம்பியில்லாத் தந்தியில் பயன்படும் ஒரு சொல். இதில் தனியொன்றான அல்லது தொகுதியான மின்ஊடு கடத்திகள் அமைந்திருக்கும். சைகைகளைத் தாங்கி வரும் மின்காந்த அலைகளை விண்வெளியிலிருந்து ஏற்றிணைத்துக் கொள்வதற்கு அல்லது விண்வெளியில் அவற்றைப் பரப்புவதற்காக, கட்டிடங்கள், கோபுரங்கள், உயர்ந்த கம்பங்கள் ஆகியவற்றின் உச்சியில் இரு முனைகளுக்கிடையே தொங்கவிடப்பட்டிருக்கும். 'வானலைக் கொடி' (antenna) என்றும் இதனை அழைப்பர்.

**aerial metal** : *(உலோ.)* **வான்கம்பி உலோகம்**: அலுமினியமும் லிதியமும் கலந்த மிக வலுவான உலோகக்கலவை. ஆனால் இதன் கனம் மிகக் குறைவு.

**aeroballistic missile**: *(விண்.)* **விண்வழி ஏவுகணை**: பூமியின் வாயு மண்டலத்திற்குள் ஒலியினும் விஞ்சிய வேகத்தில் பறப்பதற்கான உந்து விசையினையும் தொடர்ச்சியான சுழற்சி உத்தியினையும் கொண்ட ஓர் இறகற்ற விண்கலம்.

**aerodynamic balanced surface** : *(வானூ.)* **வளியியக்கச் சமநிலைப் பரப்பு** : கீல் அச்சினை அல்லது சுழல் முனையைச் சுற்றி இணைவாக்க விளைவு நெம்பு திறனை மிகச் சிறிய அளவில் ஏற்படுத்துகிற அல்லது இல்லாமலே செய்கிற வகையில் அந்தக் கீல் அச்சின் சுழல் முனையின் இருபக்கங்களிலும் நீண்டிருக்கிற அல்லது அதனுடன் துணைச் சாதனங்களை அல்லது விரிவாக்கங்களை

கொண்டிருக்கிற ஒரு கட்டுப்பாட்டும் பரப்பு.

**aeration**: *(குளி.)* **காற்றூட்டல்:** காற்றோட்டம் மூலமாகக் குளிர்விக்கும் கலவை செய்யும் செய்முறை.

**aerodynamic center, wing section**: *(வானூ.)* **வளியியக்க மையம், சிறகுப் பகுதி:** நிரல் கோட்டின் நாண் மீது அல்லது அதனருகே அமைந்துள்ள ஒரு மையம். இது, விமானச் சிறகின் முன்விளிம்பிற்குப் பின்னருள்ள நாணின் நீளத்தில் ஏறத்தாழ கால் பகுதி இருக்கும். இந்த மையத்தைச் சுற்றி, நெம்பு திறன் குணகம் நடைமுறையில் மாறாமலே இருக்கும்.

**aerodynamics**: *(வானூ.)* **வளியியக்கவியல்:** இயங்கும் வளிமங்கள் அவற்றின் எந்திரவியல் விளைவுகள் ஆகியவை பற்றிய அறிவியல் பிரிவு.

**aerodynamic volume**: *(வானூ.)* **வளியியக்கக் கன அளவு:** ஒரு வான் கூண்டின் பிதுக்கப் பகுதிகள் உட்பட அதன் மொத்தக் கன அளவு.

**aerodyne**: *(வானூ.)* **காற்றினும் எடைமிக்க வான் கலம்:** பறக்கும் போது முக்கியமாக வளியியக்க விசைகளிலிருந்து பறக்கும் ஆற்றலைப் பெறும் வானூர்தியைக் குறிக்கும் ஒரு பொதுவான சொல்.

**aeroelasticity**: *(விண்.)* **மிகுவிசை வான்கல அதிர்வியக்கம்:** நெகிழ் திறன் வாய்ந்த பொருள்களின் மீது வளியியக்க இயற்பியல் விசைகளின் விளைவு.

**aerogroph:** வண்ணப்பூச்சு தூரிகைக்குப் பதிலாக வண்ணத்தைப் பீச்சியடிக்கும் கருவி.



**aerolite**: *(உலோ.)* **விண் வீழ்கல்; ஏரோலைட்:** 96% அலுமினியம் அடங்கிய ஓர் அலுமினிய உலோகக் கலவை.வீதஎடைமானம் 2.74. வானூர்தியும் தானியங்கிகளின் உறுப்புகளும் தயாரிக்கப் பயன்படுகிறது.

**aeronautics**: **வானூர்தியியல்** : வானூர்தி பறத்தல் தொடர்பான அறிவியல்.

**aerosol**: *(குளி.)* **தூசிப்படலம்** : காற்றில் மிதக்கும் சிறு சிறு துகள்கள். எடுத்துக்காட்டு: தூசி; மூடுபனி; புகை.

**aerospace**: *(விண்.)* **விண்வெளி:** பூமியின் மேற்பரப்புக்குப் புறத்தேயுள்ள அகன்று விரிந்த பிரம்மாண்டமான ஊடகம்.

**aeroforces**: *(விண்.)* **விண்வெளி விசைகள்**: இராணுவ நோக்கங்களுக்காக விண்வெளியில் செயற்படுகிற ஊர்திகள் அனைத்தையும், பொருத்தமான இடங்களில் ஆயுதங்களையும், அவற்றைக் கையாளும் இயக்குநர்களையும் இது உள்ளடக்கும்.

**aerospace vehicle**: *(விண்.)* **வான் வெளிக் கலம்:** வாயு மண்டலத்திலும் விண்வெளி மண்டலத்திலும் இயங்கக்கூடிய ஒரு கலம். வான் வெளிச் சூழ்நிலையில் தானாகவோ மனிதர் இயக்கியோ இயங்குகிற ஊர்தியையும் குறிக்கும்.

**aetiology, etiology** : *(நோயி.)* **நோய்முதல் ஆய்வியல்** : நோய்க்கான காரணம் பற்றி ஆராயும் துறை.

**afferent nerve**: *(உட.)* **உணர்ச்சி நரம்பு** : மூளைக்கும், தண்டுவடத்திற்கும் உணர்ச்சிகளைக் கொண்டு சேர்க்கிற நரம்பு.

**aerostat**: *(வானூ.)* **வான்கூண்டு:** வான் கலம் அல்லது பலூன்

போன்ற காற்றினும் எடை குறைந்த வானூர்தியைக் குறிக்கும் ஒரு சொல்.

**aerostatics**: *(வானூ.)* **வளிச்சூழல் சமநிலையியல்**: வளிமப் பாய்மங்கள், அவற்றில் அமிழ்ந்திருக்கும் பொருள்கள் ஆகியவற்றின் சம நிலை பற்றிய அறிவியல்.

**aerostation**: *(வானூ.)* **வான் கூண்டு செலுத்துதல்**: வான்கூண்டுகளைச் செலுத்துங் கலை.

**african mahogany** : *(மர.வே.)* **ஆஃப்ரிக்கச் சீமை நூக்கு** : சீமை நூக்குக் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் அரிய மரவகை. முக்கியமாக ஆஃப்ரிக்காவில் காணப்படுவது. மிகுந்த உயரமும் அகலமும் உடைய இந்த மரம் நல்ல மெருகேற்றும் கட்டு மான மரவகை. நுட்பமான அறை கலன்கள் செய்யப் பயன்படுகிறது.

**after-birth** : *(உட.)* **பேறுகால இளங்கொடி** : பிறக்காத குழந்தை தாயிடமிருந்து உணவும், ஆக்சிஜனும் பெறுவதற்கு உதவும் உறுப்பு. குழந்தை பிறந்த பின்பு இது தாயிடமிருந்து வெளியே வந்துவிடும். இதனுடன் குழந்தை உருவாகும் கருப்பையின் உள்படலமும் வெளி வரும். இவை இரண்டும் சேர்ந்து பேறுகால இளங்கொடி எனப் படும்.

**after-damp**: *(வேதி.)* **சுரங்க நச்சு வளி** : ஒரு சுரங்கத்தில் சுரங்க வெடி விபத்துக்குப் பின்னால் உண்டாகும் கார்பன் டை யாக்சைடு என்னும் நச்சு வளி.

**after-image** : *(வண்.)* **பின்தோற்றம்** : ஒரு பொருளைப் பார்த்த பிறகு மனதில் சிறிது நேரம் பதிந்திருக்கும் உருவம்.

**agar-agar** : **கடற்கோரைக் கூழ்** : கடற்கோரை வகைகளிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு வகைக் கூழ். ஆய்வுக்கூடத்தில் இவற்றில் பாக்டீரியாவை வளர்க்கின்றனர்.

**agaric** : *(தாவ.)* **நிலக்குடை**: நச்சுத் தன்மையுள்ள காளான் போன்ற நாய்க்குடைவகை.



நிலக்குடை

**agate** :*(கனி.)* **படிகக் கல்**: (1) ஒரு வகைப் பலவண்ணப் படிகக் கல். இதில் வண்ணங்கள் பொதுவாகப் பட்டைக் கோடுகளாக இருக்கும்.

(2) நவமணிகளில் ஒன்று.

(3) (அச்சுக்கலை) சுமார் 5½ அலகுகள் வடிவளவுள்ள ஓர் அச்செழுத்துரு.

**agfacolour**: *(வண்.)* **அக்ஃபா வண்ணம்**: இது ஒருவகை வண்ண ஒளிப் படக் கலை வகை. இதில் மூன்று ஒளியுணர் சுருள்கள், ஒரே செல்லுலாய்டு ஆதாரத்தில் பொருத்தப் பட்டிருக்கும். இந்தச் சுருள்கள், நீல ஒளியுணர்வு, பச்சை ஒளியுணர்வு, சிவப்பு ஒளியுணர்வு கொண்டவை.ஒளிப்பட உருவிளக்கப் பொருளுடன் இணைந்து சுருளில் பொருத்தமான வண்ண உருக்காட்சியை உண்டாக்கக் கூடிய பொருள்கள் இச்சுருள்களில் அடங்கியுள்ளன.

**agglutination** : *(உட.)* **குருதியணு ஒட்டுத்திரள்** : குருதியிலுள்ள அணு உயிர் ஒட்டுத்திரள். இது குருதியில் இருக்கும்போது அதிலுள்ள நச்சுப் பொருள்களை உட்கொள்கிறது. ஆரோக்கியமான மனிதரிடமிருந்து நோயுற்ற மனிதருக்குக் குருதியைப் பாதுகாப்பாகச் செலுத்த முடியுமா என்பதைச் சோதித்துப் பார்க்க இது உதவுகிறது.

**aggregate** : **ஓரினத் தொகை; கலவைப் பொருள்** ; ஒரே இயல்புள்ள அணுத் துகள்களின் திரட்சி.

**aging** : *(உலோ.)* **முதிர்ச்சி:** இயற்கை வெப்பம், குளிர்ச்சி காரணமாகச் சில உலோகங்களில் அல்லது உலோகக் கலவைகளில் காலப் போக்கில் ஏற்படும் மாறுபாடு.

**aging of incandescent lamp** : *(மின்.)* **வெண்சுடர் விளக்குத் தளர்ச்சி** : வெண்சுடர் விளக்கிலுள்ள இழையும் விளக்குக்குமிழின் உட்புறமுள்ள பூச்சும் உயிரக இணைவு காரணமாகப் படிப்படியாக ஒளி குன்றுதல்.

**aging of magnet** ; *(மின்.)* **காந்தத் தளர்ச்சி:** ஒரு காந்தத்தினுடைய காந்த நிலைப்பாட்டுத் திறனை மிகுதியாக்கும் செய்முறைக்கு அந்தக் காந்தத்தை உட்படுத்துதல்.

**agitator** : *(எந்.)* **கலக்குக் கருவி** : பெரிய அண்டாக்களில் அல்லது பெருந்தொட்டிகளிலுள்ள அமைப்பான்களை ஒன்றாகக் கலப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஓர் எந்திரக் கலக்குச் சாதனம்.

**agonic line** : *(மின்.)* **கோணம் படாத கோடு** : பூமியின் மேற்பரப்பினைச் சுற்றி வடக்கு-தெற்குத் திசையிலுள்ள ஒரு கற்பனைக் கோடு. இதில் எல்லாப் புள்ளிகளும் பூஜ்யச் சரிவினையே கொண்டிருக்கும்.

**agricultural bolt** : *(பட்.)* **வேளாண்மை மரையாணி** : உருட்டுச் செய் முறை மூலம் அமைந்த திருகு. சுருள் பட்டைகளை உடற்பகுதியில் கொண்டுள்ள ஒரு மரையாணி.



மரையாணி

**agravic** : *(விண்.)* **புவிஈர்ப்பு இன்மை** : புவிஈர்ப்பு விசை இல்லாத ஒரு நிலை; எடையின்மை நிலை.

**agriculture** : **வேளாண்மை; உழவு:** பயிர்களைச் சாகுபடி செய்து விளை பொருள்களை விளைவித்தல், கால்நடையைப் பேணி வளர்த்தல் ஆகியன தொடர்பான அறிவியல்.

**aileron**: *(வானூ.)* **வானூர்திச் சிறகின் ஓரமடக்கு** : ஒரு வானூர்திச் சிறகின் இழுவை முனையுடன் கீல் அச்சு அல்லது சுழல் முனை மூலம் இணைக்கப் பட்டுள்ள ஒரு துணைப் பரப்பு. வானூர்தியின் மீது உருள்கிற சுழற்சியை ஏற்படுத்துவது இதன் முக்கிய பணியாகும்.



ஓரமடக்கு

**ailerol angla** : *(வானூ.)* **வானூர்திச் சிறகின் ஓர மடக்குக் கோணம்:** வானூர்திச் சிறகின் ஓர மடக்கு, அதன் நடுவு நிலையிலிருந்து கோண இடப்பெயர்ச்சி பெறுதல், வானூர்திச் சிறகின் ஓர மடக்கினுடைய இழுவை முனையானது நடுவு நிலைக்குக் கீழிருந்தால், அது நேர்படியானது எனப்படும்.

**aileron roll** : *(வானூ.)* **வானூர்திச் சிறகின் ஓர மடக்கு உருளை** : வானூர்திச் சிறகின் ஓர மடக்கு இடபெயர்ச்சியினால் உண்டாகும் விசைகளினால் இயக்கம் பேணப்படுகின்ற ஓர் உருளை,

**ainico** : *(மின்.)* **ஐனிக்கோ :** சிறிய தான நிரந்தரக் காந்தங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படும் ஒரு தனிவகை உலோகக் கலவை.

**air** : **காற்று மண்டலம்** : 'வளிமண்டலம்', 'காற்று மண்டலம்' என்பது பொதுவாக வளிமண்டலத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியைக் குறிக்கப் பயன்பட்ட போதிலும், பூமியின் புறணியை மேலோட்டமாகச் சூழ்ந்திருக்கும் வளிமங்களின் கலவையை இது குறிப்பாகக் குறிக்கிறது.

**air-acetylene welding :** **காற்று ஒளிர்வளிம வார்ப்படம் :** ஒரு வகை வளிம வார்ப்பட முறை. இதில் காற்றும் ஒளிர்வளிமமும் எரிவதன் மூலமாக வார்ப்பட வெப்பம் பெறப்படுகிறது.

**air blast :** *(குளி.)* **காற்றுத் துருத்தி :** வலிந்து ஊட்டும் காற்று விசை.

**air blast transformer:** *(மின்.)* **காற்று வெடிப்பு மின்மாற்றி :** இந்த வகை மின்மாற்றியில் அதன் சுருணைகளைச் சுற்றி வலிந்த சுற்றோட்டத்தின் வாயிலாக மிகுதியாக வெப்பமடைதல் தடுக்கப்படுகிறது.

**air bleed :** *(தானி; எந்.)* **காற்றுக் கசிவு :** எரிபொருள் கலவையிலுள்ள காற்றின் அளவினை மாற்றியமைக்கும் வகையால் சீரமைவு செய்யத்தக்க ஒரு சிறிய காற்று ஓரதர்.

**air bound:** **காற்று வரம்பு :** *(வானூ.)* காற்றழுத்தக் குறைவினாலோ காற்றின் கீழோட்டத்தினாலோ வானூர்தி சட்டென்று இறங்கும் "காற்று வெறுமை" (air pocket) காரணமாக, வானூர்தியின் உறுப்புகளில் எதுவும் இயங்குவதைத் தடை செய்யும் வரம்பு.

**air brake :** *(தானி; எந்.)* **காற்றுத் தடுப்பி :** அழுத்தம் பெற்ற காற்றினால் இயக்கப்படும் முட்டுக் கட்டை அல்லது வேகத் தடைக் கருவி.

**air breakup:** *(விண்.)* **காற்று மண்டலத் தகர்வு :** ஒரு பொருள் விண்வெளியிலிருந்து பூமியின் காற்று மண்டலத்திற்குள் மீண்டும் நுழைந்ததும் உடைந்து சிதைந்து போதல்.

**air breather :** *(விண்.)* **காற்று வாங்கி :** வாயு மண்டலத்திலிருந்து உள்ளிழுக்கப்படுவதன் வாயிலாக ஆக்சிஜனுடன் இணைவுற்ற எரிபொருள் வாயிலாக முன்னோக்கிச் செலுத்தப்படும் ஏவுகணை அல்லது விண்கலம்.

**air brush lettering :** *(ஓவியம்.)* **காற்றுத் தூரிகை எழுத்துரு :** அழுத்தப்பட்ட காற்றின் வாயிலாக மையினையும் வண்ணங்களையும் தெளிப்பதற்குப் பயன்படும் காற்றுத் தூரிகை என்ற கருவியைக் கொண்டு எழுத்துருக்களைத் தீட்டுதல் அல்லது எழுத்துருக்களுக்கு நிழற்படி வண்ணம் தீட்டுதல்.

**air capacitor :** *(மின்.)* **காற்று மின்னியல் உறைக்கலம்:** மின்அழுத்தத்தைத் தாங்கக்கூடிய பொருளாகப் பயன்படுத்துகிற ஒரு மின்னியல் உறைகலம்.

**air cell :** *(மின்.)* **காற்று மின் கலம்:** மின்காந்த முனைப்பியக்கம் அகற்றப்பட்ட வகையைச் சேர்ந்த ஓர் அடிப்படை மின்கலம். இதில் ஒரு தனிவகை கரிம மின் முனையானது மின்காந்த முனைப்பியக்க அகற்றியாகப் பயன்படுத்தப்படுகிறது. அது, காற்றிலிருந்து ஆக்சிஜனைப் பிரித்தெடுக்கிறது.

**air chamber :** *(பொறி.)* **காற்றறை :** நீர் விசைப் பொறிகளின் சம அழுத்தத்திற்குரிய காற்றறை. இறைக்கப்படும் திரவத்தின் அதிர்வுறு வெளியேற்றத்தை இயன்ற அளவு குறைப்பதற்காக உந்து இறைப்பிகளின் மீது அமைக்கப்பட்டுள்ள ஒரு கலம். இந்த அறையில், அழுத்தப்பட்ட நிலையில் காற்று இருக்கும். இதன் அடிப்பகுதியில் ஒரு வடிகுழாய் பொருத்தப்பட்டிருக்கும். உந்துதண்டினை அடித்து இயக்குவதன் மூலம், இறைப்பியிலிருந்து சிறிதளவு திரவம் இந்த வடிகுழாய் வழியாக வலிந்து செலுத்தப்படுகிறது. உந்து தண்டின் உறிஞ்சு அடிக்கும்

வெளிப்பாட்டு அடிக்குமிடையில் திரவம் பாய்வதில் ஏற்படும் ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்கான ஒரு மெல்லணையாக இதில் காற்று செயற்படுகிறது.

**air clamp** : *(எந்.)* **காற்றுப் பிடிப்பான்** : *காற்றழுத்தத்தின் வாயிலாக இயக்கப்படும் பற்றுக் கருவி*

**air cleaner** : *(தானி; எந்.)* **காற்றுத் தூய்மையாக்கி** : *தூசு மற்றும் பிற அயற்பொருள்கள் காற்று மண்டலத்தில் புகுவதற்கு முன்பு அவற்றைத் தனியே பிரித்தெடுக்கும் ஒரு சாதனம்.*

**air compressor** : *(தானி.)* **காற்றழுத்தி** : *டயர்களில் காற்றடைப்பதற்கும், பல்வேறு தொழில் துறைப்பயன்பாடுகளுக்கும் அழுத்திய காற்றினை வழங்கும் பொறி.*

**air condenser** : *(மின்.)* **காற்று மின்விசையேற்றி**: *வட்டத்தகடுகளிடையிலான காற்று இடைவெளிகளிலுள்ள ஒரு வகை மின்விசையேற்றி. மின்னேற்றங்களிடையே ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மின் பாயாமல் காப்பிடுவதற்கு இது பயன்படுகிறது.*

**air conditioning** : **காற்றுப் பதனாக்கம்** : *காற்றுத் தூய்மையாக்கம், ஈரநயப்பு நீக்குதல் ஆகிய மூன்று வெவ்வேறு செயல் முறைகளைக் குறிப்பது.*

**air control** : *(வானூ.)* **காற்றுக் கட்டுப்பாடு** : *வானூர்தியின் கட்டுப்பாட்டு பரப்புகளை இயக்குவதற்குப் பயன்படும் சாதனம்.*

**aircooled engine**: *(தானி; எந்.)* **காற்றில் ஆறிய பொறி**: *எந்திரத்தின் முன்புள்ள ஓர் ஊர்தியானது, நீள் உருளைகளுக்கு மேலாக, அடைப்புள்ள இடைவெளிக்குள் காற்றினை உட்செலுத்துகிறது. அதிலிருந்து அந்தக் காற்று, நீள் உருளைகளையும், மற்ற உறுப்புகளையும் கடந்து அடியிற்செலுத்தப்படுகிறது. நீள் உருளைகள் தனித்தனியாக அமைக்கப்பட்டிருக்கும். மிகப் பெரும்பாலும் கதிர் வீச்சுப் பரப்பினை ஏற்படுத்தும் வகையில் பரிதியைச் சுற்றி செதிலமைப்புத் தொடர்களுடன் அமைக்கப்பட்டிருக்கும்.*

**air-cooled transformer**:*(மின்.)* **காற்றில் ஆறிய மின்மாற்றி**: *இந்த வகை மின்மாற்றியில், சுருள்களின் சூடாக்கமானது, ஒரு காற்றோட்டச் சுழற்சியை ஏற்படுத்துகிறது.*

**air-core inductor**: *(மின்.)* **காற்று மைய மின்னோட்டத் தூண்டு கருவி**: *ஓர் உலோக மையமாக இல்லாத ஒரு மின்காப்பு அமைவில் சுற்றப்பட்டுள்ள ஒரு மின்னோட்டத் தூண்டுகருவி; ஒரு மையத்தைக் கொண்டிராமல் தன் ஆதாரத்தைக் கொண்ட ஒரு தூண்டுச் சுருள்.*

**air-core solenoid**: *(மின்.)* **காற்று உள்ளீட்டுக் கம்பிச்சுருள்**: *திட உள்ளீடு இல்லாமல், உட்புழையைக் கொண்டுள்ள ஒரு கம்பிச்சுருள்.*

**aircraft**: *(வானூ.)* **வானூர்தி/விமானம்**: *காற்றில் எழும் திறன் அல்லது இயக்கவினைகாரணமாக, காற்றின் ஆதாரத்துடன் பறக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட, சுமையேற்றிச் செல்லும் சாதனம்.*

**aircraft carrier**: *(வானூ.)* **வானூர்தி தாங்கிக் கப்பல்/விமானந் தாங்கிக் கப்பல்**: *வானூர்திகளை ஏற்றிச் செல்லவும், வானூர்திகள் வந்திறங்கவும், புறப்பட்டுச்செல்லவும் ஏற்றவகையில் மேல்தளம்வடிவமைக்கப்பட்ட ஒரு கப்பல். (விமானதளக் கப்பல்).*

**air cushion**: **காற்று மெத்தை**: *அதிர்ச்சி தாங்கியாகஅல்லது இயக்கத்தை முறைப்படுத்தும் அல்லது*

தடுக்கும் சாதனமாகச் செயற்படும் வகையில் அமைக்கப்பட்ட காற்றடைக்கப்பட்ட ஓர் உருளை.

**air-dried:** **காற்றில் உலர்ந்த:** சூட்டடுப்பிலிட்டு உலர்த்துவதற்கு மாற்றாக காற்றில்உலரவிடுவதன் மூலம் வெட்டு மரங்களைப் பக்குவப்படுத்துதல்.

**air drill:** (எந்.) **காற்றுத் துரப்பணம்:** அழுத்தப்பட்ட காற்றின் வாயிலாக இயக்கப்படும் ஒரு துரப்பணம்.

**air duct:** (வானூ.) **காற்றுக்குழாய்:** காற்றைவிடப் பளு குறைந்த வான் கூண்டின் (வான் கலம்) காற்றடைத்த உறுப்புகளில் காற்றை நிரப்புவதற்கு அல்லது அவற்றில் காற்றழுத்தத்தைப் பேணுவதற்குக் காற்றினை வழங்குகிற ஒரு குழாய். இது பெரும்பாலும் கூடிணைப்புப் பொருளாக இருக்கும்.

**air flow:** (தானி.எந்.) **காற்றுப் பாய்வு:** காற்று உராய்வு மிகக் குறைந்த அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள சிலவகைத் தானியங்கிகளின்மீது காற்றுப் பாய்ந்து செல்வதைக் குறிக்கிறது.

**airfoil:** (வானூ.) **காற்றுத்துருத்தி:** பயனுள்ள இயக்க எதிர்வினையை உண்டாக்கும் வகையில் காற்றில் துருத்திக்கொண்டிருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ள மேற்பரப்பு.

**airfoil profile:** (வானூ.) **காற்றுத் துருத்தி வடிவம்:** ஒரு காற்றுத் துருத்திப் பகுதியின் பக்கத்தோற்ற உருவரைப் படிவம்.

**airfoil section:** (வானூ.) **காற்றுத் துருத்திப் பகுதி:** குறித்துரைக்கப்பட்ட ஒரு சமதளத்திற்கு நேரிணையாக ஒரு வானூர்தியால் ஏற்படுத்தப்பட்ட காற்றுத் துருத்தியின் குறுக்கு வெட்டுத் தோற்றம். இந்தச் சமதளத்திற்குச் செங்குத்தாக உள்ள ஒரு கோடு காற்றுத் துருத்தி அச்சு எனப்படும்.

**airframe:** (விண்.) **காற்றுச் சட்டகம்:** ஒரு விமானத்தின் அல்லது ஏவுகணையின் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டுமான மற்றும் வளியியக்கம்சார்ந்த அமைப்பான்கள். இவை அந்த விமானத்துடன் அல்லது ஏவுகணையுடன் இணைந்த பல்வேறு அமைப்புகளுக்கும் ஆதாரமாக இருக்கின்றன.

**air-fuel ratio:** (தானி.) **காற்று எரிபொருள் விகிதம்:** உள்ளெரி எஞ்சினுக்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள் கலவையில் பெட்ரோலும், காற்றும் எந்த அளவுகளில் கலந்திருக்க வேண்டுமோ அந்த அளவுகளின் விகிதம். (அவற்றின் எடையின் அளவுகளில்).

எடை விகிதம் —15 : 1
கன அளவு விகிதம் —9600 : 1

**air furnace:** (வார்.) **காற்று உலை:** நெகிழ்வு இரும்பு வார்ப்படங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படக்கூடிய ஒரு வகை உலை.

**air glow:** **காற்றுப் பிறங்கொளி:** மேல்வாயுமண்டலத்தில் ஏற்படும் இயற்பியல்-வேதியியல் வினைகள் காரணமாக எழும் காற்றுத் தூசியிலிருந்து வெளிப்படும் மங்கலான ஒளி.

**air gap:** (மின்.) **காற்று இடைவெளி:** முற்றிலும் காற்று நிறைந்துள்ள ஒருசுற்றோட்டத்தில் உள்ள ஓர் இடைவெளி. ஒரு மின்விசைப் பொறியிலுள்ள ஒரு காற்று இடைவெளியைப் போன்றது.

**air gap:** (மின்.) **காற்று இடைவெளி நெறி:** உந்து பொறி-உள் வெப்பாலைகளில் அனற் பொறியூட்டும் அமைவுகளிடையிலான காற்று இடைவெளி;மின்பேராற்றலைக் கட்டுப்படுத்தும் துணையாற்

றல் அமைவின் மின்னகத்திற் கும் மின் சுருளுக்குமிடையிலான இடைவெளி.

**air gun:** *(க.க.)* **காற்றழுத்தத் துப்பாக்கி:** அழுத்தம் பெற்ற காற்றின் உந்து விசையால் இயக்கப்படும் துப்பாக்கி. இது மேற்பரப்பில் பசைப் பொருள்களை ஒட்டச் செய்யப் பயன்படுகிறது.

**air hammer:** *(எந்.)* **காற்றுச் சுத்தியல்:** அழுத்தப்பட்ட காற்றின் வாயிலாகச் சுத்தியலின் தலை முனை இயக்கப்படும் ஒரு கருவி. இந்தக் கருவியினுள் ஒரு நெளிவு குழாய் வழியாகக் காற்று செலுத்தப்படுகிறது. இச்சுத்தியலுக்குள் காற்றைச் செலுத்தவும் நிறுத்தவும் ஒரு விசை வில் உண்டு.

**air hardening:** *(எந்.)* **காற்றுவழிக் கடினமாக்கல்:** மிக விரைவு எஃகினைக் காற்றூதி மூலமாகக் கடினமாக்குதல்.

**air hoist:** *(எந்.)* **காற்று உயர்த்தி:** அழுத்தப்பட்ட காற்றின் மூலம் இயக்கப்படும் ஓர் உயர் சாதனம்

**air horn:** *(எந்.)* **காற்று நுழைமுனை:** உள் வெப்பாலையில் எரி பொருளாவியோடு காற்றினைக் கலக்கச் செய்யும் அமைவில் காற்று நுழைவதற்குரிய முனை.

**air inductor:** *(மின்.)* **காற்று மின்னோட்டத் தூண்டுகருவி:** ஒரு காந்த மையம் இல்லாத மின்னோட்டத் தூண்டுகருவி.

**air line:** *(வானூ.)* **வானூர்திப் போக்குவரத்து:** (1) வானூர்திப் போக்குவரத்திற்காக நிறுவப்பட்ட ஒரு நிறுவனம், அதன் சாதனங்கள் அல்லது வானூர்திப் போக்குவரத்தினை உடைமை கொண்டிருக்கின்ற அல்லது இயக்குகின்ற நிறுமம்.

(2) இரு முனைகளுக்கிடையிலான பெரும் வட்டப் பாதை.

**air lock:** *(தானி.)* **காற்றுத் தடை:** நீர் அல்லது வாயு செல்லும் குழாயில் ஏதோவோரிடத்தில் காற்றுக் குமிழ் தேங்குவதால் உண்டாகும் தடை.

**air log:** *(வானூ.)* **காற்று அளவு மானி:** காற்றை எதிர்த்துப் பயணம் செய்யும் ஒரு வானூர்தியின் நீள் பயணத்தை அளவிடும் கருவி.

**airometer:** **காற்றுமானி:** காற்று வீச்சின் விகிதத்தை அளவிடுவதற்கான கருவி.

**air plane:** *(வானூ.)* **வானூர்தி:** காற்றைவிடக் கனமான ஒரு வானூர்தி. இதற்கு நிலையான இறகுகளும், எரியாற்றலால் இயங்கும் செலுத்தியும் பொருத்தப்பட்டிருக்கும்.

**airplane dope:** *(வானூர்.)* **வானூர்தி வண்ண மெருகு:** வானூர்திகளில் கட்டுமான மேற்பரப்புகளில் பூசப்படும் ஒருவகைத் திரவப் பொருள். இப்பொருளால் மேற்பரப்பின் வலிமை அதிகரிக்கிறது; சுருங்குதல் மூலமாக விறைப்பினை உண்டாக்குகிறது; காற்றிறுக்கத்தை நிலைப்படுத்தும் ஒரு நிரப்பியாகவும் செயற்படுகிறது.

**airplane tail:** *(வானூ.)* **வானூர்தி வால்:** ஒரு வானூர்தியின் பிற்பகுதி சாதாரணமாக நிலைப்படுத்தக்கூடிய நிமிர் நேர் விளிம்புடைய தகடுகளைக் கொண்டு, இதனுடன் உயர்த்திகள், சுக்கான்கள் போன்ற கட்டுப்பாட்டுப் பரப்புகள் இணைக்கப்பட்டுள்ளன.

**air pocket:** *(வானூ.)* **காற்று வெற்றிடம்:** காற்றழுத்தக் குறைவினாலோ காற்றின் கீழோட்டத்தினாலே வானூர்தி சட்டென்று இறங்க நேரிடும் காற்று வெறுமை.


**airport beacon:** *(வானூ.)* **வானூர்தி நிலையத்து வழிகாட்டி ஒளிவிளக்கு:** வானூர்தி நிலையத்

தின் பொதுவான அல்லது திட்ட வட்டமான அமைவிடத்தைக் குறித்துக் காட்டும் நோக்கத்திற்காக வானூர்தி நிலையத்திலோ, அதன் அருகிலோ அமைக்கப்பட்டுள்ள மிகுந்த விளக்கொளி வாய்ந்த ஒரு வழிகாட்டி ஒளி விளக்கு.

**air resistance**: *(தானி.)* **காற்றுத் தடை :** ஓர் ஊர்தி காற்றை ஊடுருவிச் செல்வதைத் தடுக்கும் விசை,

**air scoop** : *(வானூ.)* **காற்று வாரி :** வானூர்தியிலுள்ள காற்றறைப் பை; உள்ளெரி எஞ்சின்கள், பலகணிகள் ஆகியவற்றில் காற்றழுத்தத்தை நிலைப்படுத்துவதற்காகவும், காற்றினைப் பிடித்து வைத்துக் கொள்வதற்காகவும் அமைந்துள்ள காற்றுவாரி அல்லது கவிகை.

**airship :** *(வானூ.)* **விண்வெளிக் கலம் ;** வானூர்தியைவிட எடை குறைந்த ஒரு விண்வெளிக் கலம். இதில் இயக்குப் பொறியும்,கட்டுப்பாட்டு அமைப்பும் அமைக்கப்பட்டிருக்கும். இதன் இயக்குப் பொறி இயங்காதபோது அது ஒரு சுதந்திரமான பலூன் போன்று செயற்படுகிறது.



**விண்கலம்**

**airship station** : *(வானூ.)* **விண்வெளிக்கல நிலையம் :** (1) விண்வெளிக்கலங்களை இயக்குவதற்கும் அவற்றின் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கும் தேவையான சாதனங்களையும், கூடாரங்கள், பாய்மரங்கள், வாயுப்பொறிகள், பட்டறைகள், தரையிறங்கும் களங்கள் ஆகியவற்றையும் உடைய ஒரு நிலையம்.

**air shower** : *(விண்.)* **காற்றுத் தாரை :** வாயுமண்டலத்தில் காணப்படும் மின்காந்த நுண்ணலைத் துகள்களின் ஒரு தொகுதி.

**air slaked lime** : *(வேதி.)* **காற்றில் நீற்றிய சுண்ண நீர்க்கலவை :** காற்றில் திறந்து வைத்து ஹைட்ராக்சைடாகவும், கார்பனேட்டாகவும் மாற்றப்பட்ட சுண்ண நீர்க் கலவை. நீரில் நீற்றிய சுண்ண நீர்க் கலவை பயன்படுத்தப்படும் பல காரியங்களுக்கு இது பெரிதும் பயன்படக் கூடியது.

**air space** : *(மின்.)* **காற்று இடைவெளி :** ஒரு நேர் மின்னாக்கியில் (டைனமோ) அல்லது மின்னோடியில் (மோட்டார்) உள்ள, காந்தப் புலத்தின் முனை முகங்களுக்கிடையிலான திறந்த இடைவெளி.

**air speed** : *(வானூ.)* **காற்று வேகம் :** காற்றை எதிர்த்து வானூர்தி செல்லும் வேகம்.

**air speed head** : *(வானூ.)* **காற்று வேகத் தலைமுனை மானி :** காற்றினை எதிர்த்துச் செல்லும் வானூர்தியின் வேகத்தை அளவிடுவதற்கு ஓர் அளவியுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படும் ஒரு கருவி.

**air-speed indicator** : *(வானூ.)* **காற்று வேகம் காட்டும் கருவி:** காற்றினை எதிர்த்துச் செல்லும் வார்னூதியின் வேகத்தைச் சுட்டிக் காட்டும் ஒரு கருவி.

**air spring** : *(தானி; எந்.)* **காற்று வில்சுருள் :** மிகுந்த திறன் வாய்ந்த அதிர்ச்சி தாங்கிக்கு மற்றொரு பெயர். எண்ணெயும் காற்றும் அடங்கியுள்ள ஒரு நீள் உருளையில் ஒரு குண்டலம் இயங்குகிறது.

**airtight : காற்று இறுக்கம்:** காற்று உட்புகவோ வெளியேறவோ இயலாதபடி இறுக்கமாக அமைக்கப்பட்டது அல்லது அடைப்பிடப்பட்டது.

**air tunnel :** *(குளி.)* **காற்றுப் புழை வழி :** வலிந்து காற்றோட்டம் ஏற்படுத்தப்பட்ட ஒரு குளிர் பதனாக்கப் புழைவழி. இதன் வழியாகப் பொருள்களைச் செலுத்தும் பொழுது பொருள்கள் விரைவாகக் குளிர்ச்சியடைந்து உறைந்து விடுகின்றன.

**air washer: காற்று அலம்பி:** காற்றைத் தூய்மைப்படுத்தவும், ஈரப்பதமாக்கவும் பயன்படும் நீர் தெளிக்கும் அமைவு.

**airway :** *(வானூ.)* **வானூர்தித் தடம் :** ்ட்'ப்படி நிலை நாட்டப்பட்ட வானூர்தி வழித்தடம்.

**airway beacon :** *(வானூ.)* **வானூர்தித் தட வழிகாட்டி ; ஒளி விளக்கு :** வானூர்தித் தடத்தின் அமைவிடத்தைக் குறித்துக் காட்டும் நோக்கத்திற்காக ஒரு வானூர்தித் தடத்தில் அல்லது அதன் அருகில் அமைக்கப்பட்டுள்ள மிகுந்த விளக்கொளி வாய்ந்த வழிகாட்டி ஒளிவிளக்கு. இது வானூர்தி நிலையத்து வழிகாட்டி ஒளிவிளக்கிலிருந்து வேறுபட்டது.

**air worthiness :** *(வானூ.)* **வானில் பறக்கும் தகைமை :** வழக்கமான பறக்கும் நிலைமைகளில் வானில் இயங்குவதற்கு ஒரு வானூர்தியின்பொருத்தமுடைமையினையும் பாதுகாப்புடைமையினையும் குறித்துக்காட்டும் இயல்பு.

**aisle :** *(க.க.)* **இடைக்கழி:** தேவாலயத்தில் அல்லது கூட்டம் நடைபெறும் அறையில் சூழிருக்கைகளுக்கு அல்லது இருக்கைகளுக்கு இடையில் உள்ளது செல்லும் ஊடுவழி.

**alabaster:** *(கனி.)* **நிலாக் காந்தக் கல் அல்லது வெண் சலவைக் கல் :** வெண்ணிறமான அல்லது வழவழப்பாக மெருகேற்றிய கனிமக் கல் மணி.

**albany sand :** *(உலோ.)* **வெண் மணல் :** வார்ப்பட வேலைக்குப் பயன்படும் ஒருவகை மணல்.

**albedo:***(விண்.)* **ஒளி திருப்புந்திறன்:** கோளங்களின்மீது படும் ஒளியின் அளவுக்கும் மின்காந்தக் கதிர்வீச்சு மூலம் அது திருப்பியனுப்பும் ஒளியின் அளவுக்குமுள்ள விகிதம்.

**albertite :** *(கனி.)* **ஆல்பெர்ட்டைட்:** பளபளப்பான மையின் கருநிறமுடைய, உடையத்தக்க, இயற்கைப் புகைக் கீல் (கருங்காரை).

**albino : பாண்டு நோய் :** தனது உடலில் வழக்கமான கருநிறமூட்டும் பொருளைக் கொண்டிராத மனிதர். இவருடைய முடி வெண்மையாக இருக்கும். கண்கள் கருஞ்சிவப்பாகும். இவர்களுக்கு ஒளிரும் வெளிச்சத்தைப் பார்த்தால் கண் கூசும், விலங்குகளுக்கும் இந்நோய் பீடிப்பதுண்டு.

**album :** **சேகர ஏடு :** ஒளிப்படங்கள், கையெழுத்துள்ள மேற்கோள்கள், அஞ்சல் தலைகள் முதலியவற்றைச் சேர்த்து வைப்பதற்குரிய செருகேடு.

**albumen plate: வெண்கருந் தகடு:** கல்லச்சுக்கலையில் பயன்படுத்தப்படும் இரு குருமிகையேற்றிய முட்டைக் கரைசலினால் ஒளியுணர்வூட்டப்பட்ட ஒரு தகடு.

**albuminoids : ஊன்புரதம் :** கருப்புரதம் போன்ற, ஆனால் கரையாத பொருள்; தலைமுடி, நகங்கள் போன்றவை இதனாலானவை. சிறுநீரில் கருப்புரதம் இருந்தால், சிறுநீரக நோய் இருப்பதற்கு அறிகுறியாகும்.

**alchemy :** *(வேதி.)* **இரசவாதம் :** மத்திய காலத்தில் புழக்கத்திலிருந்த ஒருவகை வேதியியல் முறை. மட்ட உலோகங்களை பொன்னாக மாற்றுவதும், நோய்களைக் குணப்படுத்துவதும் இந்த வேதியியலின் நோக்கம்.

**alcohol**: *(வேதி.)* **வெறியம்; சாராயம்; ஆல்கஹால்** : $C_2H_5OH$. இது தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் மெதில் ஹைட்ராக்சைடு அல்லது மெத்தனால் என்பதிலிலிருந்து வேறுபட்டது.

**alcove**: *(க.க.)* **கவிகை மாடம்** : ஒரு பெரிய அறையின் ஒதுக்குப்புறம். இது பொதுவாக ஒரு வில் வளைவு மூலம் பிரிக்கப்பட்டிருக்கும்.

**aldehyde** : *(வேதி.)* **ஆல்டிஹைடு**: $CH_3CHO$. இது ஓர் அடிப்படைச் சாராயத்தின் முதலாவது உயிரக இணைவுப் பொருள்.

**algae** : **கடற்பாசிகள்** : மலர்களோ வேர்களோ இல்லாத தாவர வகை. எனினும், கடற்கோரை போன்ற சில தாவரங்களில் பாறையைப் பற்றிக் கொள்வதற்கு உறுப்புகள் உண்டு. இவற்றில், தாவரங்கள் கார்பன்டையாக்சைடிலிருந்தும் நீரிலிருந்தும் சர்க்கரையைத் தயாரித்துக் கொள்ள உதவும் பச்சையம் உள்ளது. ஈரணு நுண்பாசி போன்றவை மிகச்சிறியவை; கடல் தாவரங்கள் போன்றவை மிகப்பெரியவை. தேங்கிய நீர் நிலைகளில் மிதந்து செல்லும் மிக நுண்ணிய பாசி வகைகளில் பச்சையம் உண்டு.

**algebraic symbols** : *(கணி.)* **இயற்கணிதக் குறியீடுகள்** : கணிதத்தில் சில செயற்முறைகளையும், கணக்கீடுகளையும் குறிப்பதற்குப் பயன்படும் மரபுக் குறியீடுகள். எழுத்துகள், அடைப்புக் குறிகள் முதலியன.

**alginates** : **ஆல்ஜினேட்** : ஒரு வகைக் கடற்கோரையிலிருந்து தயாரிக்கப்படும் பொருள். இது குளிர்பாலேடு, முகக்குழம்பு, தீப்பிடிக்காத பொருள்கள், செயற்கைப்பட்டு போன்றவை தயாரிக்கப் பயன்படுகிறது.

**align** : *(தானி.)* **வரிசைப்படுத்து**: உருளைகளை ஒன்றோடொன்று பொருந்துமாறு வரிசைப்படுத்துதல்.

**alignment** : *(எந்.)* **வரிசைப்படுத்துதல்** : கடைசல் எந்திரத்தின் மையங்கள் நீண்டவாக்கில் துல்லியமாகவும், ஒரு சீராகவும் ஒருங்கிணைவாகவும் அமையுமாறு வரிசைப்படுத்துதல். எந்திரச் சுழல் தண்டின் மற்றும் சுழல் தண்டு தாங்கிகளின் ஊடச்சுத் தொடர்ச்சிக்கும் பொருந்தும். இரண்டு அல்லது மூன்று முனைகளின் வழியாக ஒரே நேர்கோட்டில் சரியமைவு செய்தல்.

**alignment** : **ஒருநிலைப்படுத்துதல்** : எந்திரங்களில் உறுப்புகளை ஒரே வரிசையில் ஒரு நிலைப்படுத்துதல்.

**alignment** : *(வரை.)* **சரியமைவு**: பல்வேறு வடிவளவுள்ள எழுத்துருக்களை அவற்றின் முகப்புகள் ஒரே வரிசையில் அமையுமாறு சரியமைவு செய்தல்.

**alignment tool**: *(மின்.)* **சரியமைவுச் சாதனம்** : ஒத்தியைவுறுத்தப்பட்ட சுற்றுவழிகளைச் சரியமைவு செய்யும் போது மையச் சலாகைகளையும் மின்னியல் உறைகலன்களையும் சரியமைவு செய்வதற்கான, மின்கடத்தாத, திருகுவகையிலான ஒரு சாதனம்.

**alive** : *(மின்.)* **இயக்கமுள்ள**
(1) மின்சாரம் பாயும் சுற்றோட்டத்தை அல்லது வெவ்வேறு அளவு ஆற்றலுள்ள, அண்டையிலுள்ள இரண்டு தொடர்புகளைக் குறிக்கும் சொல்.
(2) கலைக்கப்படாமல் வைத்திருக்கப்பட வேண்டிய அச்சுக்கோத்த பொருட்கூறு.

**alizarin** : *(வேதி.)* **செஞ்சாயப் பொருள்** : பருத்தி, கம்பளி, பட்டு

முதலியவற்றுக்குச் சாயமிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் பளிங்கு போன்ற வண்ணக் கூட்டுப் பொருள். இது மஞ்சள் முதல் ஆரஞ்சு வரையிலான வண்ணத்தில் இருக்கும்.

**alkali** : *(வேதி.)* **காரப்பொருள்** : இது ஒரு வலுவான உப்பு மூலம். ஒரு உப்பு மூலம், நீரில் கரையும் போது ஹைட்ராக்சில் என்ற மின்மியத் துகள்களை (அயனிகள்) உண்டாக்குகிறது.

**alkaline battery:** *(மின்.)* **கார மின்கலம்:** இதனை 'எடிசன் மின்கலம்' என்றும் கூறுவர். இதில் சோடியம் அல்லது பொட்டாசியம் ஹைட்ராக்சைடு மின்பகுப்புக்கு உதவும் நீர்மப்பொருளாகப் பயன்படுகிறது. வினைத்திட்பம்வாய்ந்த நிக்கல் ஆக்சைடு துணுக்குகளும், இரும்புத்தூளுங்கூட இதில் பயன்படுகின்றன.

**alkaloids: வெடியக் கலப்புப் பொருள்:** தாவரங்களிலிருந்து பெறப்படும் கரிம ஆதாரமுடைய பொருள்களின் வகை. புகையிலிருந்து கிடைக்கும் நிக்கோட்டின், ஊமத்தையிலிருந்து பெறப்படும் ஹயோசின், கோக்கைன், கொய்னா, அபினி, எட்டிச்சத்து போன்றவை இந்த வகையைச் சேர்ந்தவை. இவை மனித உடலில் முக்கிய விளைவுகளை உண்டாக்குகின்றன. இவற்றால் தாவரத்திற்கு என்ன பயன் என்பது சரியாகத் தெரியவில்லை.

**alkanet:** *(வேதி.)* **செஞ்சாயச் செடி:** இது செஞ்சாயம் தரும் வேரையுடைய செடி வகை. மத்திய தரைக் கடற்பகுதியிலும், ஹங்கேரியிலும், மேற்கு ஆசியாவிலும் பயிராகும் இந்தத் தாவரம், ஒருவகைச் சிவப்பு வண்ணப் பொருளை விளைவிக்கிறது.

**alkyd resins:** *(வேதி.குழை.)* **ஆல்கிட் ரோசணம்:** அரக்குச்சாயம், வண்ணங்கள், உலோக மெருகெண்ணெய்கள் ஆகியவற்றில் இந்த வகை ரோசணம் பயன்படுகிறது.

**allagation:** *(கணி.)* **கலவை மதிப்புக் கூற்றுக் கணிப்பு** : ஒரு கலவையில் அடங்கியுள்ள அமைப்பான்களின் விலைகள், அவற்றின் விகிதங்கள், கலவையின் விலை ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினைக் கண்டறிவதற்கான முறை அல்லது விதி

**allen screws:** *(எந்.)* **ஆலன் திருகு:** தலைமுனையில் அறுகோணமுடைய குதை குழிகளைக் கொண்ட தலைமுகட்டுத் திருகுகளும், செங்கோண முக்கோண திருகுகளும்.

**allen wrench:** *(தானி.)* **ஆலன் திருகுக் குறடு:** தலைப்பகுதியில் புழையிட்ட அறுகோண வடிவத் துவாரத்துடன் தொடர் திருகுகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு தனி வகைத் திருகுக் குறடு.

**allergy: ஒவ்வாமை:** உடலில் அயற்பொருள் நுழைவின் எதிர்விளைவாக வீக்கம், இழைம அழிவு ஆகியவை உண்டாதல். சிலருக்குப் பூச்சிகடிகள் ஒத்துக்கொள்வதில்லை. சிலருக்கு குதிரை மயிர் ஒத்துவராது.

**all-geared drive** : *(எந்.)* **அனைத்துப் பல்லிணை இயக்கி** : வார்ப்பட்டைகளுக்கும் கப்பிகளுக்கும் பதிலாக முற்றிலும் பல்லிணைகளைக் கொண்டே ஓர் எந்திரத்தில் ஊட்டத்திற்கும் வேகத்திற்கும் ஆற்றலை அனுப்புதல்.

**alligator clip : முதலைத் தாடைப் பிடி ஊக்கு** : தற்காலிக மின்கம்பி இணைப்புகளைக் கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் முதலைத் தாடை போன்றிருக்கும், விற்சுருளால் இயங்கும் பிடிப்பு ஊக்கு.

**alligator wrench :முதலைத் தாடைத் திருகுக் குறடு** : முதலைத் தாடை போன்று V-வடிவத் தாடை கொண்ட திருகுக் குறடு.

**alligatoring :** *(வண்ணம் மற்றும் அரக்குச் சாயம்)* **கீறல் வெடிப்பு :** மேற்பரப்பு அடுக்கில் மட்டுமுள்ள கீறல் வெடிப்புகள். வெப்பநிலையில் திடீரென ஏற்படும் மாறுதல் காரணமாக உண்டாகும் சுருக்கம். பிணிப்பு இன்மை, ஒரு படலத்திற்கும் இன்னொரு படலத்திற்குமிடையில் உலர்வதற்குப் போதிய நேரம் இல்லாமை, போதிய அளவில் ஊடுருவாமை, மென்மையான படலத்தின் மீது கடினமான படலத்தைப் பூசுதல் போன்றவை காரணமாக இந்தக் கீறல் வெடிப்புகள் மேன்மேலும் விரிவடைகின்றன.

**allotropic :** *(உலோ.)* **அணுத் திரிபுள்ள :** பொருண்மை மாறாமல் அணு அமைப்பு மட்டும் மாறும் மறுவடிவம்; ஒரு தனிமம் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட வெவ்வேறு வடிவங்களில் இருக்கும் நிலை.

**allotropic** : *(வேதி.)* **அணுத் திரிபுள்ள** : ஒரே பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட அணுக்களையுடையனவாக இருத்தல். எடுத்துக்காட்டு: கரிமத்தின் வடிவங்களான வைரம் மற்றும் நிலக்கரி.

**allover pattern :** *(கலை.)* **முழுமயப்பாங்கம்:** ஒரு மேற்பரப்பு முழுவதிலும் ஒரே பாங்கம் திரும்பத் திரும்ப வருமாறு அமைத்தல்.

**allowance :** *(எந்.)* **கழிவிடையீடு:** கரட்டுத்தள உருளைகளிடையே வேண்டுமென்றே விடப்படும் குறும இடைவெளி அல்லது பெரும இடையீடு.

**allowance** : *(உலோ.)* **இசைவளவு** : இணையும் உறுப்புகளினிடையிலான பரிணாமங்களில் வேண்டுமென்றே அமைந்த வேறுபாட்டளவு.

**alloy:** *(உலோ.)* **உலோகக் கலவை:** (1) வெள்ளை உலோகம். உராய்வு தடுப்பு உலோகக் கலவை.

(2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உலோகங்களின் ஒரு சீரான கலவை. பொதுவாக ஓர் உயர்ந்த உலோகத்துடன் ஒரு மட்ட உலோகத்தைக் கலத்தல்.

(3) செயற்கை ரோசணங்களின் கலவை (குழைமவியல்).

**alloy steel :** *(உலோ. வே.)* **கலவை எஃகு**: மாங்கனீஸ், நிக்கல், டங்ஸ்டன், மாலிப்டினம், வனேடியம், குரோமியம் போன்ற உலோகங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உலோகங்களுடன் எஃகைக் கலந்து தயாரிக்கப்படும் எஃகுக் கலவை. இந்தக் கலவை எஃகு, வலுவாகவும் கடினமாகவும் இருக்கும்.

**all - rowlock wall** : *(க.க.)* **அனைத்து உலகமிண்டுச் சுவர்:** இரு புறமும் சுவர் முகப்பு நீளவாட்டுக்கிடைச் செங்கற்களால் கட்டப்பட்டுள்ள ஒரு சுவர். இதில் முனை மாற்றி மாற்றிச் சுவரின் முன் பகுதிக்குச் செங்கோணத்தில் கல் அல்லது செங்கல் பொருத்தப்பட்டிருக்கும்.

**alluviul : வண்டல் மண் :** ஆறுகளில் படியும் வண்டல்மண்.

**almandite :** *(கனி.)* **செம்மணிக் கல்:** செந்நிற ஒண் மணிக்கல். கனிமத்தில் ஒருவகை. காகிதத்திலும் துணியிலும் தேய்த்து மெருகேற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுவது.

**alnic** : *(உலோ.)* **அல்னிக் :** அலுமினியம் நிக்கல், கோபால்ட் ஆகியவற்றின் கூட்டிணைவினால் உண்டான ஓர் உலோகக் கலவை. சிறிய நிரந்தரக் காந்தங்கள் செய்யப்

பயன்படுகிறது. இந்தக் கூட்டிணைவு இந்த உலோகக் கலவைக்கு மிக அதிகமான தேக்கி வைப்பாற்றலை அளிக்கிறது.

**alnico:** (மின்.) **அல்னிக்கோ:** சிறிய நிரந்தரக் காந்தங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படும் ஒரு தனிவகை உலோகக் கலவை.

**alpaca: அல்பாகா:** (விலங்.) ஒட்டக இனத்தைச் சேர்ந்த தென் அமெரிக்க விலங்கு வகை. இதற்கு நீண்ட பட்டுப் போன்ற முடி உண்டு.



அல்பாகா

**alpha: ஆல்ஃபா:** (1) கிரேக்க நெடுங்கணக்கில் முதலெழுத்து.

(2) இணைந்துருவாகிய ஒரு வடிவம் (வேதியியல்), ஒரே எடையுடன் ஒரே வகைத் தனிமங்களை ஒரே சீரான வீதங்களில் ஆனால் வெவ்வேறு தொகுப்புகளாகக் கொண்டுள்ள சமநிலைக் கூட்டிணைவுகள் அல்லது மாற்றமைவுகளிலிருந்து மாறுபட்டது.

**alpha particle: ஆல்ஃபா துகள்:** கதிரியக்கப் பொருள்களிலிருந்து வெளியேற்றப்படும் அணு நுண்மம். ரேடியம், யுரேனியம், புளுட்டோனியம் போன்ற கதிரியக்கப் பொருள்கள் இத்தகைய அணுத் துகள்களை வெளியிடுகின்றன. ஆல்ஃபா துகள் என்பது, ஹீலியம் அணுவின் கருமையம் போன்றது.

**alpha particle:** (மின்.) **ஆல்ஃபா துகள்:** கதிரியக்கச் சிதைவின் போது கதிரியக்கப் பொருள்களிலிருந்து வெளியேற்றப்படும் இரண்டு புரோட்டான்களும், இரண்டு நியூட்ரான்களும் கொண்ட அணுத் துகள்.

**alpha particle:** (வேதி; இயற்.) **அணு நுண்மம்:** கதிரியக்கப் பொருள்களிலிருந்து வெளியேற்றப்படுவது. இதில் இரு நியூட்ரான்களும், இரு புரோட்டான்களும் அடங்கியிருக்கும்.

**alpha rays:** (வேதி; இயற்.) **ஆல்ஃபா கதிர்கள்:** கதிரியக்கப் பொருள்களிலிருந்து வெளிவரும் அணு நுண்ம வரிசைகள். கதிரியக்கப் பொருள்கள் வெளிப்படுத்தும் மூன்று வகைக் கதிர்களில் இதுவும் ஒன்று.

**altar:** (க.க.) **பலி பீடம்:** இக்காலத்தில், தேவாலயங்களிலுள்ள வழிபாட்டுத் திருவினைக்குரிய இடம். பண்டைக் காலத்தில் தெய்வங்களுக்குப் பலியிடுவதற்கும் காணிக்கைகளைப் படைப்பதற்கும் பயன்பட்ட பீடம்.

**alternating current or a.c.** (மின்.) **மாற்று மின்னோட்டம்:** விரைவாகவும், ஒழுங்கான இடைவெளிகளிலும் மின்னோட்டத் திசையை மாற்றிக்கொண்டு மாறி மாறிப் பாய்கிற மின்னோட்டம். பொதுவாக வினாடிக்கு 120 தடவைகள் இந்த மாற்றம் நடைபெறும்.

**alternating-current arc:** (மின்.) **மாற்று மின்னோட்டச் சுடர்:** மாற்று மின்னோட்டத்தினால் உண்டாகும் ஒரு சுடர். இந்தச் சுடரில் கார்பன்கள், மொத்தமாக எரியாமல், மெழுகுதிரியின் இழையைப் போல் எரிகின்றன. இது ஒளி, கிடைமட்டத்தில் பரவ அனுமதிக்கிறது.

**alternating current arc welding:** **மாற்று மின்னோட்டச் சுடர்ப் பற்றவைப்பு:** மாற்று மின்னோட்டம் மூலம் உண்டாகும் சுடரில் பற்ற வைக்கும் முறை.

**alternating current motor:** (மின்.) **மாற்று மின்னோட்ட மின்**

**னோடி** : தனிநிலை அல்லது பன்னிலை வகையைச் சேர்ந்ததும், மாற்று மின்னோட்டத்தினால் இயக்கப்படுவதுமான ஒரு வகை மின்னோடி.

**alternating current transformer** : (மின்.) **மாற்று மின்னோட்ட மின்மாற்றி** : மாற்று மின்சுற்றின் மின்னழுத்தத்தினை கூட்டவும் குறைக்கவும் பயன்படும் ஒரு சாதனம்; இதில் ஒரு அடிப்படைச் சுருணையையும், ஒரு துணை நிலைச் சுருணையையும் உடைய ஒரு தூண்டு சுருள் இருக்கும். அது ஓர் இரும்பு உட்புழையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும்.

**alternating current transmission**: (மின்.)**மாற்று மின்னோட்டச் செலுத்தீடு:** மாற்று மின்னோட்டத்தைப் பயன்படுத்தி மின் விசையை செலுத்தீடு செய்தல்.

**alternation**: (மின்.) **மாறி மாறித் தொடர்தல்**:மாற்று மின்னோட்டத்தினால் உண்டாகும் மாறுதல்கள். இதில், மின்னழுத்தம், மிகக் குறைந்த அளவிலிருந்து மிக அதிகமான நேர்முனை அழுத்தத்திற்கு உயரும்; பின்னர் பூச்சியத்திற்கு இறங்கும்; மறுபடியும் மிக அதிகமான எதிர்முனை அழுத்தத்திற்கு உயரும். இவ்விதம், இருமுறை முழுமையாக மாறுவதே ஒரு சுழற்சி அலைவு எனப்படும்.

**alternator** : (மின்.) **மாற்று மின்னாக்கி** : மாற்று மின்னோட்டத்தை உண்டாக்கும் ஒரு மின்னாக்கி.

**altimeter** : (விண்.) **உயரமானி** : வாயுமண்டல அழுத்தத்தின் மூலம் உயரத்தைக் காட்டும் உயரமானி.

**altigraph** : (வானூ,) **உயர வரையமைவு** : பதிவு செய்யும் பொறியமைவினையுடைய ஓர் உயரமானி. இப்போதுள்ள சாதனங்கள் அனிராய்டு வகையின. இதில், கடிகார இயக்கத்தின்மூலம் பதிவாகும் வரைபடம். அடி அல்லது மீட்டர் கணக்கில் பகுக்கப்பட்டிருக்கும். இது உயரங்களைக் கணக்கிடுவதற்குரிய ஓர் அழுத்த வரைவியாகும்.

**altitude** : **குத்துயரம்** : செவ்வுயர அளவு, மிக உயர்ந்த சிகரம்.

**alum** : (வேதி.) **படிக்காரம்** : ஒரு கடுத்தமான கனிய உப்பு. அலுமினியம், பொட்டாசியம் ஆகியவற்றின் சல்பேட்டு அடங்கிய இரட்டைச் சல்பேட்டு.

**alumen** : (உலோ.) **அலெமென்** : வலுவான அலுமினிய உலோகக் கலவை. இதனை காய்ச்சி உருக்கி, வடிவங்கள் உருவாக்கலாம். எந்திரத்தினால் இயக்கலாம். இது, 88% அலுமினியமும், 10% செம்பும் கொண்டது. இது அலுமினியத்தைவிடக் கனமானது.

**aluminium oxide; அலுமினியம் ஆக்சைடு** : அலுமினியத் தாதுவாகிய பாக்சைட்டை உயர்ந்த வெப்ப நிலையில் உருக்குவதன் மூலம் கிடைக்கும் கடினமானதும் கூர்மையானதுமான உராய்பொருள்.

**alumina, or oxide of aluminium** : (வேதி.) **அலுமினிய உயிரகை அல்லது அலுமினியம் ஆக்சைடு** : தூய்மையற்ற அலுமினியக் கனிமக் கலவை மண் வகையில் ஒரு முக்கியமான அமைப்பான். இது, செங்கற்சூளை, உலைப் பூச்சுகள் ஆகியவற்றின் தகுதிறத்தை நிருணயிக்கக்கூடியது. ''அரக்கு வண்ணம்'' எனப்படும் வண்ணப் பொருள் செய்யவும் பயன்படுகிறது. சாயவேலைகளிலும், காலிக்கோ அச்சு வேலைகளிலுங்கூடப் பயன்படுகிறது. உராய் பொருளாகவும் பெரிதும் பயனாகிறது. மிக அதிக விறைப்பாற்றல் வாய்ந்த உலோகங்கள், உலோகக் கலவைகளை வெட்டுவதற்கும், அவற்

றுக்கு மெருகூட்டுவதற்கும் பயன் படுகிறது.

**aluminium:** *(கனி.)* **அலுமினியம் :** மிக இலேசான, வெண்மையான உலோகம். இது தனியாகவும், செம்புடன் கலந்த உலோகக் கலவையாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**aluminium alloys : அலுமினியம் உலோகக் கலவைகள் :** அலுமினியமும், செம்பு, நிக்கல், டங்ஸ்டன் முதலிய உலோகங்களும் இணைந்த கலவைகள். வலிமையுடன் கனமின்மையும் தேவைப்படும் வார்ப்புருவங்களையும், தகடுகளையும் தயாரிக்கப் பயன்படுபவை. இந்த உலோகக் கலவைகள், தூய அலுமினியத்தை விட மதிப்புடையவை.

**aluminium bronze : அலுமினிய வெண்கலம் :** செம்பை அலுமினியத்துடன் பல்வேறு வீத அளவுகளில் கலந்து தயாரிக்கப்படும் ஓர் உலோகக் கலவை.

**aluminium bronze powder:** *(வண்.)* **அலுமினிய வெண்கலத் தூள் :** கனிம உலோகங்களை நொறுக்கித் தூளாக்கும் ஆலையில் தயாரிக்கப்படும் நுண்ணிய அலுமினியத் தூள். வண்ண மெருகெண்ணெய் அல்லது நேந்திர எண்ணெயுடன் கலந்து, உலோகச் சாயமாகப் பயன்படுத்தப்படுகிறது.

**aluminium hydroxide :** *(வேதி.)* **அலுமினியம் ஹைட்ராக்சைடு :** $Al(OH)_3$ ஊன் பசை போன்ற வெண்மையான திடப்பொருள் நீரைப் பயன்படுத்துவதற்கும், சாயந்தோய்ப்பதில் சாயத்தைக் கெட்டிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

**aluminium stearate :** *(வண்; அரக்கு. வண்)* **அலுமினியம் ஸ்டீயரேட் :** வழவழப்பான சமதளத்தை உண்டாக்குவதற்காக அரக்குச் சாயங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**alum leather : படிகாரத் தோல் :** படிகாரத்தைப் பயன்படுத்திப் பதனிடப்பட்ட தோல்.

**amalgam:** *(கனி.)* **இரசக் கலவை:** பாதரசமும் மற்றொரு உலோகமும் சேர்ந்த கலவை.

**amalgamation :** *(மின்.)* **கூட்டுக் கலவை :** வேதி மின்கலத்திலுள்ள துத்தநாகத் தகட்டுக்குப் பாதரசம் முலாம் பூசி, துத்தநாகத்திலுள்ள அசுத்தங்களிலிருந்து உண்டாகும் வினைகளைத் தடுக்கக்கூடிய ஓர் உலோகக் கலவையை உருவாக்குதல்.

**amber :** *(மின்.)* **அம்பர் :** மஞ்சள் நிறமான அல்லது செம்பழுப்பு நிறமான, ஒளி ஊடுருவக்கூடிய ஒரு பிசின். இது மற்றொரு பொருளுடன் உராயும்போது உராய்வினால் மின்னேற்றம் பெறுகிறது.

**ambo :** *(க.க.)* **சொற்பொழிவு மேடை :** தொடக்கக் காலக் கிறித்தவக் கோயில்களில் காணப்படும் சொற்பொழிவு மேடை. இதிலிருந்து வழிபாடுகளும், வழிபாட்டுப் பாடல்கள் பாடுவதும் நடைபெறும்.

**amboina : அம்போய்னா :** கிழக்கு இந்தியாவில் காணப்படும் ஒரு மரம். இதிலிருந்து அழகிய வண்ண மரக்கட்டைகளும், பலகைகளும் தயாரிக்கப்படுகின்றன.

**ambroin : அம்பிராய்ன் ;** ஒருவகை மின் கடத்தாப் பொருள், குங்கிலியத்திலிருந்தும், சிலிக்கேட்டுகளிலிருந்தும் தயாரிக்கப்படுகிறது. இது வலிமையானது; வெப்பத்தைக் கடத்தாதது; ஈரத்தை உறிஞ்சாதது; இது வார்ப்பு மின்காப்புகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

இது வன் கந்தகத்தைவிட மலிவா னது.

**ambry** : *(க.க.)* **திருக்கலமாடம்** : கிறித்தவக் கோயிற்சுவர்களில் வழி பாட்டுக் கலங்களை வைப்பதற் காக அமைந்துள்ள மாடம்.

**American bond** : *(க.க.)* **அமெ ரிக்கக் கவிகைப் பிணைப்பு** : சாதா ரணக் கவிகைப் பிணைப்புப் போன்றதே இதுவும். இதனை விரைவாக அமைக்கலாம். இந்த வகைக் கட்டிடச் செங்கல் அல்லது கல்லின் பற்றுமானக் கவிகை மற்ற வகைக் கவிகைப் பிணைப்புகளை போலவே வலுவானது. ஒவ்வொரு ஐந்து அல்லது ஆறாவது வரிசை யிலும் சுவரின் முன்பகுதிக்குச் செங்கோணத்தில் கல் அல்லது செங்கல் பொருத்தப்பட்டிருக்கும். மற்ற வரிசைகளில் சுவர் முகப்பு நீளவாட்டுக் கிடைச் செங்கல் அமைக்கப்பட்டிருக்கும்.

**American screw gauge** : *(உலோ.)* **அமெரிக்கத் திருகுக் கடி கை**: மரத்திருகுகள், எந்திரத் திருகு கள் ஆகியவற்றின் விட்டத்தைக் கணக்கிடுவதற்கான ஒரு அளவுத் திட்டக் கடிகை.

**American Standard Pipe Threads** : **அமெரிக்கச் செந்திறக் குழாய்த் திருகிழை** : (முன்னர் பிரிக்ஸ் குழாய்த் திருகிழைச் செந் திறம் என அழைக்கப்பட்டது.) தேனிரும்பு அல்லது எஃகு, நீராவி, வாயு, நீர்க்குழாய்களில் இந்தத் திருகிழை பயன்படுத்தப்படுகிறது.

**American wire gauge**: *(உலோ.)* **அமெரிக்கன் கம்பி அளவி** : செப்புக் கம்பி, பித்தளைக் கம்பி, ஜெர்மன் வெள்ளிக்கம்பி ஆகியவற்றின் வடி வளவை அளவிடுவதற்கும், இந்தப் பொருள்களினாலான தகடுகளின் கனத்தை அளவிடுவதற்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு திட்ட அளவு கருவி.

**amethyst** : *(கனி.)* **செவ்வந்திக் கல்** : தெளிவான ஊதா அல்லது செங்கருநீல நிறப்படிகக் கல். நவ ரத்தினங்களில் ஒன்று.

**amino** : *(குழை.)* **அமினோ** : அம் மோனியாவிலிருந்து பெறப்பட்ட $NH_2$ குழுமம் இருப்பதைக் குறிக் கும் வேதியியல் கூட்டுப் பொரு ளின் கூட்டிணைவு வடிவம்.

**amino plast** : *(வேதி. குழை.)* **அமினோ பிளாஸ்ட்** : அமினோ அல்லது அமினோ கூட்டுப் பொருள்களிலிருந்து கிடைக்கும் செயற்கைப் பிசின் வகையைக் குறிக்கும் சொல். யூரியா-பார் மால்டிஹைடு இவ்வகைப் பிசினுக் குச் சிறந்த எடுத்துக்காட்டு.

**ammeter** : *(மின்.)* **மின்னாற்றல் மானி** : ஒரு மின் சுற்றில் பாயும் மின்னோட்டத்தின் அழுத்தத் தினை அளவிடப் பயன்படுத்தப் படும் ஒரு சாதனம்.

**ammonia**: *(வேதி.)* **அம்மோனியா; நவச்சார ஆவி** : நிறமற்ற, நெடி மிகுந்த, மூச்சைத் திணறடிக்கும் ஒரு வாயு ($NH_3$). நிலக்கரி போன்ற நைட்ரஜன் பொருள்களை உலர் வாலை வடித்தல் மூலம் இதுபெறப் படுகிறது, நைட்ரஜனையும், ஹைட்ரஜனையும் இரும்புடன் சேர்த்து உயர் அழுத்தத்திலும் வெப்பநிலையிலும் இணைப்பதன் மூலம் அம்மோனியா பெரும் பாலும் தயாரிக்கப்படுகிறது.

**ammonites** : **அம்மோனைட்** : மர பிறந்து போன கடல் புதை படிவ நத்தை வகையின் தோடு.





அம்மோனைட்


**ammonium chloride**: *(வேதி.)* **அம் மோனியம் குளோ ரைடு**: சாதாரணமாக நவச்சாரம் என அழைக்கப்படுகிறது. இது நீரில் கரைக்கப்பட்டு, சில அடிப்

படை மின்கலங்களில் மின்பகுப்பானாகப் பயன்படுத்தப்படுகிறது.

**amnesia : மறதிநோய் :** மூளையில் காயம் படுவதனாலோ, தீவிர உணர்ச்சிப் பெருக்கத்தினாலோ ஏற்படும் நினைவிழக்கும் நோய்.

**amnion : கருச்சவ்வு :** குழந்தை பிறப்பதற்கு முன்பு கருவை அடுத்துள்ள இரு சவ்வுகளின் உட்பகுதி.

**amoeba: அமீபா:** ஒரே உயிரணுவுடைய நீர்வாழ் உயிரினம். இது 1/100'' குறுக்களவுடையது. இது தன் உடலின் ஒரு பகுதி வெளியேதள்ளி நகர்கிறது. இது தன்னைத் தானே பிளவு செய்து இனப்பெருக்கம் செய்கிறது.



அமீபா

**amorphous: வடிவமற்ற:** (1) திட்டவட்டமான வடிவம் இல்லாதது; ஒழுங்கற்றது.
(2) (வேதியியல் குழைமவியல்), மணி உறுப்பெறா நிலை.

**ampere:** *(மின்.)* **ஆம்பியர்:** மின்னோட்ட அலகு. ஒரு மின்னகம் ஓர் 'ஓம்' மூலமாகச் செலுத்தக்கூடிய மின்னோட்டம்.

**Ampere,Andre Marie : ஆம்பியர், ஆண்ட்ரே மாரி:** ஃபிரெஞ்சு இயற்பியலறிஞர்: அறிவியல் எழுத்தாளர் (1775—1836). மின்னோட்டத்தின் வலிமையை அளவிடுவதற்கான அலகுக்கு இவருடைய பெயர் (ஆம்பியர்) சூட்டப்பட்டுள்ளது.


**ampere hour:** *(மின்.)* **ஆம்பியர் மணி:** சேமக் கலங்களின் திறன் வீதத்தைக் கணக்கிடப் பயன்படுத்தப்படுகிறது. ஒருமணி நேரத்தில் ஓர் ஆம்பியர் மின்னோட்டம் பாய்வதை இது குறிக்கிறது.

**ampere-hour capacity:** *(தானி.)* **மணித் திறம்பாடு:** ஒரு சேமக் கலத்தின் கொள்திறனைக் குறிக்கப் பயன்படும் சொற்றொடர். 100 ஆம்பியர் மணித் திறம்பாடுடைய ஒரு சேமக்கலம். ஒருமணி நேரத்தில் 100 ஆம்பியர் மின்னோட்டம் வழங்கக்கூடியதாக இருக்கும்.

**ampere meter:** *(மின்.)* **ஆம்பியர் மானி:** மின்னாற்றல் மானி (ammeter) போன்ற ஒரு சாதனம். பாயும் மின்னோட்டத்தின் அடர்த்தியைப் பதிவு செய்வதற்குப் பயன்படுகிறது.

**ampere turn: ஆம்பியர் சுற்று:** ஒரு மின் காந்தத்தின் வலிமையை அளவிடும் அலகு. காந்தத்தைச் சுற்றியுள்ள கம்பிச் சுற்றுகளின் எண்ணிக்கையை, அதன் வழியேபாயும் ஆம்பியர்களின் எண்ணிக்கையால் பெருக்கினால் இந்த அளவு கிடைக்கும்.

**amphibia: நிலநீர் வாழுயிர்:** தவளைகள், தேரைகள், சலாமண்டர் போன்று நிலத்திலும் நீரிலும் வாழும் இயல்புடைய உயிரினங்கள்.




நிலநீர் வாழுயிர்

**amphibian :** (வானூ.) **நிலம், நீர் ஊர்தி:** நிலம், நீர் இரண்டிலும் இயங்கவல்ல போர்க்கலம். நிலத்திலிருந்து அல்லது நீரிலிருந்து உயரே எழுந்து பறக்கும் வகையில் அமைக்கப்பட்டவானூர்தி.

**amplidyne: மின்திறன் பெருக்கி:** ஒரு மாற்று மின்னோட்டப் பணிப்பு மின்னோடியை இயக்குவதற்கு, ஒரு நேர் மின்னாக்கியின் கள மின்னோட்டத்தில் ஒரு சிறு மாறுதல் ஏற்பட்டாலும் மின் உற்பத்தி அளவில் பெரும் மாறுதலை ஏற்படுத்தக்கூடிய வகையில்

அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அமைவு. இது பெருமளவு பாரத்தைப் போதிய அளவு முறுக்கத்துடன் நகர்த்துவதற்குப் பயன்படுகிறது.

**amplification factor: மிகைப்புக் கரணி:** ஒரு மின்னழுத்தத்தை அதிகமாக்குகிற ஒருவெற்றிடக் குழலின் தன்மை.



மிகைப்புக் கரணி

**amplifier:** *(மின்.)* **மிகைப்பி:** வலுக்குறைந்த ஒலி அல்லது மின்னோட்டத்தின் ஆற்றலை அதிகப்படுத்தும் கருவி.

**amplitude:** *(கணி.)* **வீச்சு:** (1) சில கணிதச் சமன்பாடுகளின் மதிப்பினை மாற்றக்கூடிய ஒரு கோணம்.

(2) (இயற்பியல்) ஒரு துகள் ஒரு முழு அதிர்வை முடிப்பதற்குச் செல்லும் தூரத்தின் அளவு.

**amplitude modulation:** *(மின்.)* **வீச்சின் ஏற்ற இறக்கம்:** மின்விசைச் செலுத்தியில் மின்தாக்குதலின் ஆற்றலை அதிகரிக்கவோ குறைக்கவோ செய்தல்.

**ampoule : மருந்துச்சிமிழ் :** தோலினுள் செலுத்தப்படும் ஊசி மருந்தினையுடைய சிறிய கண்ணாடிக் குப்பி.



மருந்துச் சிமிழ்

**anacoustic zone: விண். ஒலியிலாமண்டலம்:** 162 கி.மீ. உயரத்திற்கு மேலே விண்வெளியில் ஒலியில்லாமல் இருக்கும் அமைதி மண்டலம்.

**anaemia : குருதிச்சோகை;** இரத்தத்தில் சிவந்த நுண்மங்கள் குறைபடுவதால் உண்டாகும் இரத்த சோகை நோய். இந்த நோய் கண்டவர்கள் வெளிறிய தோற்றமுடன் நலிந்தும், சோர்ந்தும், தளர்ந்தும் காணப்படுவார்கள்

**anaesthesia : உணர்ச்சியின்மை :** உடலில் அறுவைச் சிகிச்சை செய்யும்போது உணர்ச்சி மயக்கமூட்டுதல் அல்லது உடலின் ஒரு பகுதியில் வலியை உணராதவாறு உணர்விழக்கச் செய்தல். மயக்கமடைவதற்குக் குளோரோஃபார்ம் போன்ற மயக்க மருந்துகளும், உடல் உறுப்பை உணர்விழக்கச் செய்ய கோக்கைன் போன்ற உணர்வின்மை ஊட்டும் பொருள்களும் பயன்படுகின்றன.

**anaesthetics : மயக்க மருந்து :** உணர்விழக்கச் செய்திடும் மருந்து. குளோரோஃபார்ம் போன்றவை இவ்வகையைச் சேர்ந்தவை. உடலின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் உணர்விழக்கச் செய்யும் மருந்தும் உண்டு. இதனை உறுப்பெல்லை உணர்வு நீக்கி என்பர். எடுத்துக் காட்டாக, ஒரு பல்லைப் பிடுங்க வேண்டுமானால், அந்தப் பல் இருக்கும் பகுதியை மட்டும் உணர் விழக்கச் செய்ய இந்த மருந்து கொடுக்கப்படும். பொது மயக்க மருந்து கொடுத்தால், நோயாளி மயக்கமடைந்துவிடுவார்.

**analogous colours : ஒப்புடை வண்ணங்கள் :** ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடைய வண்ணங்கள். எடுத்துக்காட்டு: சிவப்பு, செம்மஞ்சள் நிறம், மஞ்சள், செம்மை நிறம் முதலியன.

**analog signal : ஒத்திசைவுச் சைகை :** கணக்கிடுவதிலும், கட்டுப்பாடுகளிலும் பயன்படுத்தப்படும் ஒருவகைச் சைகை. இந்தச் சைகை காலத்தில் நுண்ணியதாகவும் அது குறித்திடும் மாறியல் மதிப்புருவின் விகிதாசாரத்திலும் அமைந்திருக்கும்.

**analogy :** *(மின்.)* **ஒத்திசைவு :** பழகிப் போன நடைமுறையை அல்

லது செய்முறையைத்தெளிவு கருதி ஒப்பிட்டுப் பார்த்தல்.

**analysis** : *(வேதி.)* **பகுப்பாய்வு** : *(1)* ஒரு கூட்டுப் பொருளை அதன் தனித்தனிப் பகுதிகளாக அல்லது தனிமங்களாகப் பிரித்தல்.

*(2)* விவர அறிக்கையை அட்டவணைப்படுத்துதல்; ஒரு கணக்கை அதன் முதல் தொகைக்குக் கூறு படுத்தித் தீர்த்தல்.

**analytical geometry** : *(கணி.)* **பகுப்பாய்வு வடிவ கணிதம்** : வடிவ கணித உருவங்களை இயற்கணித முறையில் பகுப்பாய்வு செய்யும் முறை.

**analyzer** : *(தானி. )* **பகுப்பாய்வு கருவி** : *(1)* உந்து ஊர்தியின் மின் சுற்று வழிகள், எஞ்சின், சுடரூட்டும் கருவி போன்றவற்றில் ஏற்படும் கோளாறுகளைக் கண்டு பிடிக்க உதவும் தானியங்கிச் சோதனைக் கருவிகளின் தொகுதி.

*(2)* மின்னணுவியல் சாதனங்களுடன் பொருத்தி பல்வேறு பணிகளைச் செய்யக்கூடிய பல அடிப்படைக் கருவிகளைக் கொண்ட சோதனைக் கருவிகளின் தொகுதி. இது தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டது.

**anatomy**: *(உட.)* **உடற் கூறியல்**: உடலின் எலும்புகள், தசைகள், நரம்புகள் போன்ற உள்ளுறுப்புகளைப் பகுத்தாராய்தல்.

**anchor** : *(க.க.)* **நங்கூரம் (தொல் பொருளியல்)** : *(1)* நங்கூரத்தின் அல்லது அம்புகளின் இடையே வார்ப்படத்தாலான முட்டை வடிவப் பொருள்களை ஒன்றையடுத்து ஒன்றாகப் பதித்தமைத்த கூர்மையான அணிவகை.

*(2)* நங்கூரம் தாங்கியுடன் இணைந்திருக்கிற வலிமைமிக்க குறுங்கணை அல்லது கொளுவி மாட்டுகிற சாதனம்.

*(3)* ஓர் இரும்புச் சலாகையினை ஓரிடத்தில் பற்றி வைத்துக்கொள்வதற்கான ஓர் உலோக ஆதாரம்.

**anchor** : *(மின்.)* **பற்றுக்கோடு** : தரையில் முளையிட்டு அடிக்கப் பட்ட ஒரு கோல் அல்லது மர முளை. இதில் ஒரு கோபுரத்திற்கான ஆதாரக் கம்பிகள் பிணைக்கப்படும்.


**anchor bolt** : *(க.க.)* **நங்கூர மரையாணி**: ஒரு முனை கான்கிரீட்டில் பதிக்கப்பட்டுள்ள ஒரு மரையாணி. இது, மரம், எஃகு உறுப்புகளை கான்கிரீட்டுடன் இணைப்பதற்குப் பயன்படுகிறது.

**anchorage** : **நங்கூரத் தளை** : கட்டமைப்பு முழுவதற்கும் அதிக உறுதிப்பாட்டினை ஏற்படுத்துவதற்காக, ஒரு கட்டமைப்பின் அடித்தள அங்கங்கள் இணைக்கப் படலாகும் ஒரு நிரந்தரக் கட்டமைப்பு.

**and circuit**:*(மின்.)* **மற்றும் மின்சுற்று வழி** : இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட உட்பாடுகளைக் கொண்ட ஒரு மின்சுற்று வழி. இதில் ஒரு வெளிப்பாட்டுச் சைகையினை உண்டுபண்ண உட்பாடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து இருக்க வேண்டும்.

**andiron** : **அடுப்பணைக்கோல் அல்லது விறகு தாங்கி**; அடுப்பில் விறகுகளை ஏந்திவைப்பதற்குரிய ஓர் உலோகச் சட்டம். சில சமயங்களில் இது ''அடுப்புக் கட்டை'' ''விறகு அணைக்கோல்'' என்றும் அழைக்கப்படும்.

**anemometer** : **காற்று வேகமானி**:



காற்று வேகமானி

ஒரு காற்றோட்டத்தின் வேகத்தை அளவிடுவதற்குரிய ஒரு கருவி.

**aneroid altimeter** : *(வானூ.)* **நீர்மம் வழங்கா உயரமானி** : அழுத்த வேறுபாடுகளைத் துல்லியமாகக் காட்டும் ஒரு மூலகத்தின் கோட்டத்தின் வாயிலாக உயரத்தை அளந்து காட்டும் உயரமானி.

**aneroid barometer** : **நீர்மம் வழங்கா பாரமானி** : காற்று நீக்கப் பட்ட ஓர் உலோகப் பெட்டியின் நெகிழ் திறம்வாய்ந்த உச்சிமுனையின் அல்லது இடையீட்டுத் திரையின் அசைவுகளின் வாயிலாக வாயு மண்டலத்தின் அழுத்தத்தினைக் காட்டக் கூடிய சாதனம். கடல் மட்டத்திற்குமேல் உயரங்களைக் கண்டறிவதற்கும், வானிலை மாற்றங்களை முன்னறிவதற்கும் பயன் படும் கருவி.

**aneurism** : *(நோயி.)* **குருதிநாள அழற்சி** : குருதிநாளத்தின் சுவர் வலுவிழந்து விடுவதால் குருதி நாளத்தில் ஏற்படும் அளவுக்கு மீறிய வீக்கம்.

**angina** : *(நோயி.)* **தொண்டை வீக்கம்**: தொண்டையை நெறிப்பது போல் ஏற்படும் மூச்சுத் திணறல்.

**angina pectoris**: *(நோயி.)* **இடது மார்பு வலி**: இதயத்திற்கு இரத்தம் வழங்கும் குருதி நாளம் குறுகலாவதன் காரணமாக இடது மார்பு வேதனை தரும் கடும் இதயவலி.

**angioma**: *(நோயி.)* **குருதிக்கட்டி**: இரத்த நாளங்களில் ஏற்படும் இரத்தக்கட்டு.

**angio spermae** : *(தாவர.)* **மூடு விதைச் செடி**: பெரும்பாலான பூக்குந் தாவரங்களைப் போன்று ஒரு விதைக் கூட்டினுள் விதைகள் முதிர்ச்சியடையும் தாவரங்கள்.


**angle**: *(கணி.)* **கோணம்**: இரு நேர்கோடுகளின் திசையிலுள்ள வேறுபாடு: ஒன்றையொன்று சந்திக்கும் இரு நேர்கோடுகளுக்கிடையிலான இடைவெளி. சுற்றுவட்ட இயக்கத்தை அல்லது சுழற்சியை அளவிடுவதற்குக் கோணங்கள் பயன்படுகிறது.

**angle bead**: *(க.க.)* **கோணமணி**: இரண்டு சுவர்கள் செங்கோணங்களில் சந்திக்கும்போது ஏற்படும் ஒரு கோணத்தில் பயன்படுத்தப் படும் ஒரு வார்ப்படப் பட்டை.

**angle brace**: *(க.க.)* **கோணக் குறடு**: ஒரு சட்டத்தின் மூலையில் துளையிடும் போது பயன்படுத் தப்படும் இடுக்கித் திருப்புளி.

**angle bracket**: *(க.க.)* **கோண ஏந்தற் பலகை**: ஒன்றுக்கொன்று செங்கோணங்களிலுள்ள, இரு முகங்களைக் கொண்ட ஒருவகை வளைவு தாங்கி. இதில் ஒரு வலையினைச் சேர்க்க, வலிமை மிகுதிப் படும்.

**angle dividers** : *(மர;வே.)* **கோணக் கவராயம்** : கோணங்களை ஒத்த இரு பகுதிகளாகப் பிரிப்பதற்குப் பயன் படும் ஒரு கருவி. சில சமயம் மூலமட்டப் பலகையாகவும் பயன் படுத்தப்படுகிறது.



கோணக் கவராயம்

**angle of attack**: *(வானூ.)* **தாக்கு கோணம்**: விமான தளத்தின் காற்றழுத்தத் தளத்தின் நாணுக்கும் அதன் இயக்கத்திசைக்குமிடையிலான கூர்ங்கோணம்.

**angle of compensation**: *(மின்.)* **சரியீட்டுக் கோணம்**: வட்டாரக் காந்த ஆற்றலை ஈடுசெய்வதற்காக ஒரு திசையறி கருவியின் அளவீட்டில் பயன்படுத்தப்படும் ஒரு திருத்த கோணம்.

**angle of compensation**: **சரியீட்டுக் கோணம்**: ஒரு திசைகாட்டியில் உட்காந்த விளைவுகளைச் சரி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு திருத்த கோணம்.

**angle of deadrise** : *(வானூ.)* **நிலை எழுச்சிக்கோணம்** : உடற்பகுதியின் அடித்தளத்தினை முதுகுத் தண்டுடன் இணைக்கும் ஒரு குறுக்கு வெட்டுக் கோட்டினால் கிடைமட்டத்துடன் உண்டாகும் கோணம்.

**angle of declination** : *(மின்.)* **பிறழ்ச்சிக் கோணம்** : மாறுபாட்டுக் கோணம். ஓர் இடத்தின் பூகோள நெடுக்கு வரைக்கும் காந்தவியல் நெடுக்கு வரைக்குமிடையிலான கோணம்.

**angle of dip** : *(மின்.)* **இறக்கக் கோணம்** : செங்குத்தான மட்டத் தளத்தில் திரும்புகிறபோது ஒரு காந்த ஊசி காந்தவியல் நெடு வரைக்கு நேரிணையாக வருகிற போது தொடுவானத்துடன் அந்தக் காந்தஊசி ஏற்படுத்துகிற கோணம்.

**angle of heel** : *(வானூ.)* **சாய்நிலைக்கோணம்** : ஒரு கிடைமட்டத் தளத்திற்கும் நீரில் கடல் மட்டத் தளத்தின் பக்க அச்சுக்கு மிடையிலான கோணம்.

**angle of incidence** : *(வானூ.)* **படுகோணம்** : வீழ்தடத்தில் பரப்பின் செங்கோட்டுடன் தொடு கோடு கொள்ளும் கோணத் தொலைவு.

**angle of inclination** : *(எந்.)* **சாய்வு கோணம்** : ஒரு திருகு புரி அதன் அச்சுடன் கொள்ளும் கோணத் தொலைவு.

**angle iron**: *(எந்.)* **கோண இரும்பு**: ஒரு கட்டுமான இரும்புப் பட்டை. இதன் ஒரு பகுதி ஒரு செங்கோண வடிவில் அமைந்திருக்கும்.

**angle of lag** : *(மின்.)* **பின்னடைவுக் கோணம்** : மாற்று மின்னோட்டச் சுற்றில் செயல்திற அமைப்பானின் இயக்கப் படிநிலை. மொத்த மின்னோட்டத்தைவிட எந்த அளவுக்குக் குறைகிறது என்பதைக் காட்டும் கோணம்.

**angle of lead** : *(மின்.)* **முந்து கோணம்** : திசைமாற்றித் தொடுவிகள், தீப்பொறியைத் தவிர்ப்பதற்காக இயல்பான தளத்திலிருந்து எந்தக் கோணத்தில் திருப்பப்படுகின்றனவோ அந்தக் கோணம்.

**angle of mandible** : *(உட.)* **கீழ்த்தாடைக் கோணம்**.

**angle of pitch** : *(வானூ.)* **சாய்வீழ்வுக் கோணம்** : இரு சமதளங்களுக்கிடையிலான கூர்ங்கோணம். ஒரு தளம் விமானத்தின் பக்க அச்சினையும் காற்றின் திசையினையும் உள்ளடக்கியிருக்கும்; இன்னொரு தளம், பக்க அச்சினையும், நீள் கோட்டு அச்சினையும் உள்ளடக்கியிருக்கும். விமானம் இயல்பாகப் பறக்கும்போது, சாய் வீழ்வுக் கோணம் என்பது, நீள்கோட்டு அச்சுக்கும் காற்றின் திசைக்குமிடையிலான கோணம் ஆகும்.

**angle of reflection** : *(மின்.)* **பட்டெறி கோணம்; பிரதிபலிப்புக் கோணம்; உருத்தெரி கோணம்** : முட்டி மீண்ட கதிர்ப்பரப்பின்செங்குத்துக் கோட்டுடன் இயங்கும் கோணம்.

பட்டெறி கோணமும் படுகோணமும் சமமானவையாகும்.

**angle of refraction** : **ஒளி விலகு கோணம்** : ஒளிக்கதிர் ஓர் ஊடகத்திலிருந்து அடர்த்தி வேறுபட்ட வேறொரு ஊடகத்திற்குள் நுழையும்போது சற்றே கோட்டமடைகிறது. இவ்வாறு கோட்ட மடையும் ஒளிக்கதிருக்கும், தளப்பரப்பிற்கும் செங்குத்தாகவுள்ள இயல்பான கோட்டிற்குமிடையிலான

கோணம் ஒளிவிலகு கோணம் எனப்படும்.

**angle of repose, or angle of friction :** *(எந்.)* **குவிநிலைக் கோணம் அல்லது உராய்வுக் கோணம் :** ஒரு சமதள மேற்பரப்பு தொடுவானுடன் கொண்டுள்ள கோணம். இந்தக் கோணத்தில், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஒரு பொருள் சரியத் தொடங்கும். அந்தத் தொடர்பில் வைக்கப்பட்டுள்ள பொருள்களின் தன்மைக்கேற்ப இந்தக் கோணம் மாறுபடுகிறது.

**angle post :** **நடுத்தூண் :** சுழற்படிக்கட்டின் நடுத்தூண்.

**angle post :** *(க.க.)* **கோண ஆதாரக்கோல் :** ஒரு படிக்கட்டின் கோணத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு சுழற்படிக்கட்டு ஆதாரக்கால்.

**angle of roll :** *(வானூ.)* **சுழற்சிக் கோணம் :** ஒரு விமானத்தின் பக்க அச்சினை அதன் கிடைமட்டத் தளமாகக் கொண்டு வருவதற்கு அதன் நீள்கோட்டு அச்சினைச் சுற்றிச் சுழற்றப்பட வேண்டிய கூர்ங் கோணம். இது, 'ஒருபுறச் சாய்வுக் கோணம்' என்று அழைக்கப்படும்.


**angle of stabilizer setting :** *(வானூ.)* **விமானச் சமநிலையமைவுக் கோணம் ;** ஒரு விமானத்தின் உந்துவிசைக் கோட்டிற்கும் சமநிலையமைவு நாண் வரைக்குமிடையிலான கூர்ங்கோணம்.

**angle of thread :** *(எந்.)* **திருகிழைக் கோணம் :** ஓர் ஊடச்சு சமதளத்தில் அளவிடப்படும் திருகிழையின் பக்கங்களுக்கிடையிலான கோணம்.

**angle of wing setting:** *(வானூ.)* **இறகு அமைப்புக் கோணம் :** இறகு நாண் வரையின் சமதளத்திற்கும், உந்துவிசைக் கோட்டிற்குமிடையிலான கூர்ங்கோணம். ஒவ்வொரு இறகிற்கும் இந்தக் கோணம் வேறுபடலாம்.

**angle of yaw :** *(வானூ.)* **விமான வழி விலகீட்டுக் கோணம் :** காற்று வீசும் திசைக்கும், விமானத்தின் செவ்வொழுங்குச் சமதளத்திற்குமிடையிலான கூர்ங்கோணம். விமானம் வலப்புறம் திரும்பியிருக்கும்போது இக்கோணம் நேர் எண்ணாக இருக்கும்.

**angle plate :** *(எந்.)* **கோணத் தகடு :** பொதுவாக எந்திரங்களை



கோணத் தகடு

அமைக்கும் பணிக்குப் பயன்படுவது ; வார்ப்பிரும்பினாலானது ; ஒன்றுக்கொன்று நேர் கோணங்களில் அமைந்த இரு உலோகத் தகடுகளினால் அமைந்து, மறையாணிகளுக்காகத் துளைகளைக் கொண்டிருப்பது.

**angstrom unit:** *(இயற்.)* **ஆங்ஸ்டிராம்அலகு:** ஒளி அலைகளின் நீளத்தை அளந்து மதிப்பிடுவதற்குரிய நுண்ணளவைக் கூறு. ஒரு கோடி ஆங்ஸ்டிராம் என்பது ஒரு மீட்டருக்குச் சமம்

**angular cutter :** *(எந்.)* **கோண வடிவு வெட்டுக்கருவி :** துளைவெட்டுங் கருவி. இதில் வெட்டு முகம், வெட்டுக் கருவியின் அச்சிலிருந்து ஒரு கோணத்தில் இருக்கும்.

**angular diameter :** **கோண விட்டம் :** ஒரு வட்டமான பொருளின் வடிவளவு, (1) அதன் உள்ளபடியான விட்டம், (2) கண்ணிலி

ருந்து அதன் தொலைவு ஆகிய இரண்டையும் பொறுத்ததாகும்.



கோணவிட்டம்

ஒரு பொருள் எந்தக் கோணத்தில் கண்ணில்படுகிறதோ அந்தக் கோணத்தின் விட்டம் ஆகும். கண்ணிலிருந்து ஓரடி தூரத்திலுள்ள ஒரு வட்டத்தின் கோணவிட்டம் 5° மட்டுமே. நிலவின் கோண விட்டம் ½°.

**angular gears** : *(எந்.)* **கோண வடிவப்பல்லிணைகள் :** நேர் கோணம் அல்லாத வேறு கோணங்களில் இயங்குவதற்கென வடிவமைக்கப்பட்ட சரிவுப் பல்லிணைகள்.

**angular momentum** : **கோண இயக்கு விசை :** திரும்புகிற ஒரு பொருளின் இயக்குவிசை. இரண்டு பொருள்கள் ஒரே சமயத்தில் சம ஆற்றல்களின் மூலம் நிலைக்குக் கொண்டு வரப்படுமானால் அவை சமமான கோண இயக்குவிசை உடையவையாகும்.

**angular phase** : *(மின்.)* **கோணப் படிநிலை :** ஓர் ஆதாரக் கோட்டினைப் பொறுத்து ஒரு சுழல் நேறியம் அமைந்திருக்கும் நிலை.

**angular velocity** : *(மின்.)* **கோண வேக வீதம் :** ஒரு வினாடியில் ஒரு சுழல் நேறியத்தின் வேகம். இது ரேடியன்களில் குறிக்கப்படும்.

**angular velocity** : *(எந்.)* **கோண வடிவ வேக வீதம் :** ஒரு மையத்தை ஆதாரமாகக் கொண்டு சுழலும் ஒரு பொருளினால் அல்லது புள்ளியினால் ஒரு வினாடி நேரத்தில் வரையப்படும் வளைவரைக்கும் ஆரத்திற்குமிடையிலான விகிதம்.

**anhidrotics** : *(உட.)* **வியர்வைத் தணிப்பிகள்**

**anhydride** : *(வேதி.)* **நீர் நீக்கிய காடி :** ஒரு கூட்டுப்பொருளிலிருந்து நீரை அகற்றி விடும்போது எஞ்சி நிற்கும் பொருள்.
$H_2SO_4 - H_2O = SO_3$

**anhydrous** : *(வேதி.)* **நீரில்லாத :** நீர் நீக்கப்பட்ட; உலர்ந்தது; வற்றி வதங்கியது.

**anhydrous ammonia** : *(வேதி.)* **நீரற்ற அம்மோனியா/நவச்சார ஆவி:** குளிராலும், அழுத்தமூட்டுதலாலும் திரவமாக்கப்பட்டுத் தூய்மைப்படுத்தப்பட்ட அம்மோனியா வாயு (நவச்சார ஆவி).

**aniline** : *(வேதி.)* **அனிலைன் :** நிறமற்ற, எண்ணெய்ப் பிசுக்கான கூட்டுப்பொருள் ($C_6H_5NH_2$) பல்வேறு கீல் எண்ணெய்ச் சாயப் பொருட்கள் இதனை ஆதாரமாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. ரப்பர் தொழிலுக்கு இது பயன்படுகிறது.

**anion** : *(மின்.)* **எதிர்மின்மம்:** மின் பகுப்பாய்வில், நேர் மின்முனையை நோக்கி நகர்கிற ஓர் எதிர் இயனி (மின்மயத்தூள்)

**aniridia** : *(உட.)* விழிச் சுருக்குத் தசையின்மை.

**anischuria** : *(உட.)* சிறுநீரை அடக்க இயலாவண்ணம் கட்டற்ற முறையில் ஒழுகிக் கொண்டிருப்பது.

**anisotropic** : *(மின்.)* **திசை மாறுபாட்டுப் பண்பு:** ஒரு பொருள் வெவ்வேறு திசைகளில் வெவ்வேறு இயல்புகளைக் கொண்டிருத்தல். எடுத்துக்காட்டாக, திசை மாறுபாட்டுப் பண்புடைய ஒரு படிகம், செங்குத்துக் கோணத் திசையை விட இன்னொரு திசையில் மின் விசை பாய்வதை அதிக அளவில் தடையுடையதாக இருக்கும்.


**ankylourethria** : *(உட.)* சிறுநீர் வடிகுழாய் அடைப்பு அல்லது சிறு நீர் வடிகுழாய் குறுகியிருப்பது.

**anneal** : *(உலோ.)* **கடும்பதமாக்கல்** : கண்ணாடி, உலோகங்கள் முதலியவற்றைக் கட்டுப்படுத்தி ஆறவைத்தல் மூலமோ நன்கு சூடாக்கி மெல்ல ஆறவிடுவதன் மூலமோ கடும்பதப்படுத்துதல்.

**annealed tubing** : *(உலோ.)* **பதப்படுத்திய குழாய் அமைப்பு** : உலோகக் குழாய்கள், பகுதி பதப்படுத்தியும் வாணிக முறையில் வழங்கப்படுகின்றன. இந்தக் குழாய்களை வளைக்க வேண்டியிருக்கும்போது, முற்றிலும் பதப்படுத்திய குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**annealing** : *(உலோ.)* **பதனாற்றல்** : கண்ணாடி, உலோகங்கள் முதலியவற்றைக் கட்டுப்படுத்தி ஆற வைப்பதன் மூலமாகவோ, மென்மையாக்கி உடையாதபடி பதப்படுத்துதல்.

**annual ring** : *(தாவர.)* **ஆண்டு வளைய வரை** : வெட்டு மரத்தில் மரத்தின் ஆண்டு வளர்ச்சியைக் குறிக்கும் வளைய வரை.



வளைய வரை

**annelida** : *(உயி.)* **வளையக்கணு உடலி** : மண்புழுக்கள் போன்று, வளையங்களாலான உடல்களைக் கொண்ட பிராணிகள்.

**annular ball bearing** : *(எந்.)* **வளையக் குண்டு வாங்கி** : ஒரு வளையம் போன்ற பிடிப்பானில் குண்டுகளைத் தாங்கியுள்ள ஒரு தாங்கி.

**annulareclipse** : *(இயற்.)* **வளையக் கிரகணம்** : சூரியனைச் சந்திரன் முழுவதுமாக மறைக்காமல் சந்திரனைச் சுற்றி ஓர் ஒளிவளையம் மட்டுமே தெரியும் கிரகணம்.


**annular vault** : *(க.க.)* **வளையக் கவிகை மாடம்** : உருளை வடிவக் கவிகை மாடம் போன்று இணையான இரு சுவர்களை ஆதாரமாகக் கொண்டு எழுகின்ற ஒரு கவிகை மாடம்.

**annular wheel** : *(பல்.)* **வளையச் சக்கரம்** : இது ஒரு வளையப் பல்லிணை, இதன் பற்கள் அதன் உட்புறப் பரிதியுடன் பிணைக்கப்பட்டிருக்கும். இதனை உட்புறப் பல்லிணை என்றும் கூறுவர்.

**annulated columns** : *(க.க.)* **வளையமிட்ட தூண்கள்** : வளையங்களால் அல்லது இணைப்புத் தகடுகளால் ஒன்றாகப் பிணைக்கப்பட்ட தூண் வரிசைக் கட்டமைவு.

**annulet** : *(க.க.)* **குறுவளையம்** : மற்றவற்றைப் பிரிப்பதற்குப் பயன்படும் ஒரு சதுரவடிவ வார்ப்படம்.

**annulus**: *(உயி.)* **வளை வடிவ அமைப்பு**: குறிமறையினத் தாவரத்தில் சிதல் உறைவிரிய உதவும் வளைய வடிவமான உயிர்மத் தொகுதி; ஒரே மையத்தைக் கொண்ட இரு வளையங்களுக்கிடையேயான இடைவெளி.



வளைவடிவு

**annunciator**: *(மின்.)* **ஏவல் மணிப்பொறி** : ஒளி, ஒலி வாயிலாகப் பணிநாடிய இடம் சுட்டிக்காட்டுவதற்கான ஏவல் மணியின் பொறி அமைப்பு.

**annuuciator wire**: *(மின்.)* **ஏவல் மணிப்பொறிக் கம்பி** : மென்மையான செப்புக் கம்பி. இதில் இரு அடுக்குப் பஞ்சு நூல் எதிர்த்திசைகளில் சுற்றப்பட்டு, மென்மெழுகு பூசப்பட்டிருக்கும்.

**anode** : *(மின்.)* **நேர் மின்வாய்** : எதிர்மின் வாய்க்கு எதிரானது.

காற்று நீக்கப்பட்ட வெற்றுக் குழாயில் மின்னோட்டம் புகும் நேர்மின்னோடி.

**anodise** : *(உலோ.)* **முலாம்பூசு தல்** : மின்பகுப்பாய்வு மூலம் அலுமினியத்திற்கு அலுமினியம் ஆக்சைடு முலாம் பூசுதல். இதில் குரோமிக் அமிலம் அல்லது கந்தக அமிலம் திரவமாகப் பயன்படுத்தப்படுகிறது. இத்திரவத்திலிருந்து ஆக்சிஜனை மின்னோட்டம் விடுவித்து, அலுமினியம் ஆக்சைடு ஒரு படலமாக உலோகத்தின்மீது படிகிறது. இந்தப் படலம் உலோகத்தைப் பாதுகாக்கிறது. இந்தப் படலத்திற்குப் பல்வேறு வண்ணங்களில் சாயமேற்றலாம்.

**anopheles** : *(நோயி.)* **மலேரியாக் கொசு** : மலேரியாக் காய்ச்சலை உண்டாக்கும் ஒருவகைக் கொசு.

**anorexia** : **பசியின்மை** : உணவு உண்பதில் அவா இல்லாமலிருத்தல்.

**anoxia** : *(உட.)* **ஆக்சிஜன் குறைபாடு** : இரத்தத்தில் அல்லது திசுக்களில் ஆக்சிஜன் போதிய அளவு இல்லாதிருத்தல்.

**anta** : *(க.க.)* **சுவர்ப்பட்டிகைக் கல்** : வாயிலருகே அல்லது மூலை ஓரமாகச் சுவரில் குறுக்காகப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் பட்டிகைக்கல்.

**ante fix** : *(க.க.)* **முன்னிலைக் கட்டு** : அடித்தள எழுதகங்களின் மூலைகளில் பொருத்தப்பட்டுள்ள நிலைக் குத்தான அலங்கார வேலைப்பாடு.

**antenna** *(மின்.)* **வானலை வாங்கி** : கம்பியில்லாத் தந்தியில் வானலைகளை வாங்கவும் பரப்பவும் பயன்படுத்தப்படும் அமைவு.

**antenna efficiency** : *(மின்.)* **விண்ணித் திறன்** : ஒரு கிலோவாட் ஆற்றலுள்ள ஒரு விண்ணியினால் தரைவழியே 1.6 கி.மீ. நீளத்திற்கு உண்டாக்கப்படும் கள வலிமை. இது ஒரு தரத்திட்ட விண்ணியின் கள வலிமையிலிருந்து வேறுபட்டது.

**antenna**: *(வானொலி, தொலைக் காட்சி.)* **வானலை வாங்கி/விண்ணி/ வானலைக் கொடி**: கம்பியில்லாத் தந்தியில் வானலையினை வாங்கவும் பரப்பவும் பயன்படுத்தப்படும் அமைவு.

**antenna gain**: *(மின்.)* **விண்ணிப் பெருக்கம்** : விண்ணி மின்னோட்டின் வர்க்கத்தினால் பெருக்கப்பட்ட விண்ணித் தடை.

**antennas** : *(மின்.)* **விண்ணிகள்** : ஓர் உத்தரத்தின் நெடுகிலும் கிடைமட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு, அல்லது அவற்றுக்கு மேற்பட்ட கம்பிகளினாலான விண்ணி. கதிர்வீசியாக இல்லாத கம்பிகள் பிரதிபலிப்பான்களும் இயக்கிகளும் ஆகும். இந்த விண்ணி, திசை காட்டுந்தன்மையது; இதில் சுழல்வதற்கான ஓர் அமைவு உள்ளது.

**anthemion** : *(க.க.)* **சித்திரப் படிவம்** : பழங்கலையில் பயன்படுத்தப்பட்ட தளிர்க்கொடி வகைகளில் பனையோலைப் பாணியிலமைந்த கிரேக்க அலங்கார வடிவமைப்பு.

**anthracene** : *(வேதி.)* **ஆந்திரசீன்** : கீலிலிருந்து வடித்தெடுக்கப்படும் சாய மூலப்பொருள்; சாயப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**anthracite** : *(கனி.)* **மட்கரி** : நிலக்கீல் சத்தில்லாத நிலக்கரி படிக வடிவ உலோகத் தனிமம். இதனைக் 'கடின நிலக்கரி' என்றும் கூறுவர். இதன் குறியீடு Sb. வெள்ளீயத்துடன் அல்லது ஈயத்துடன்

கலந்திடும்போது கடினத் தன்மை யளிக்கிறது.

**anthrax** : *(நோயி.)* **நச்சுப்பரு** : கால்நடைகளுக்கு உண்டாகும் ஆபத்தான சீக்கட்டு. இது கால்நடைகளின் தோலில் கரும்புள்ளி களை உண்டாக்கும்.



நச்சுப்பரு

**antibiotic**: *(வேதி.)* **உயிர் எதிரி**: பெரும்பாலும் உயர் வகை உயிரினங்களுக்குத் தீங்கு செய்யாமல், மற்ற உயிரிகளைக் கொல்கிற அல்லது அவற்றின் வளர்ச்சியைக் குன்றச்செய்கிற அல் லது முழுமையாகத் தடை செய்கிற பூசணம் அல்லது பூஞ்சைக்கா ளான் 'உயிர் எதிரி' எனப்படு கிறது. இந்தப் பொருளை வேதியி யல் முறையில் செயற்கையாக அல் லது ஒரு நுண்ணுயிரியிலிருந்து தயாரிக்கலாம்.

**antibody** : *(நோயி.)* **நோய் எதிர்ப் பொருள்** : தீங்குதரும் அயற் பொரு ளுக்கு எதிராக உயிரினத்தின் உட லில் உண்டாகும் பொருள்.

**anticathode** : *(மின்.)* **எதிர்மின் கதிர்க் குவியம்** : ஊடுகதிருக்குரிய (எக்ஸ்-ரே) வெற்றுக் குழாய்களின் மின்னோட்ட இலக்கு.

**antidote**: *(மருந்.)* **மாற்று மருந்து**: நச்சுப் பொருளை முறிப்பதற்குக் கொடுக்கப்படும் மாற்று மருந்து. எடுத்துக்காட்டாக, அமில நஞ் சினை முறிக்க சோடியம் பைக் கார்பனேட் போன்ற காரப் பொருள்களைக் கொடுத்தல்.

**antidrag wire** : *(வானூ.)* **முன் னேற்றத்தடை எதிர்ப்புக் கம்பி** : ஒரு விமானத்தின் இறகினுடைய நாண் வரைக்கு இணையாகவும், அது பறந்து செல்லும் அதே திசையிலும் செயற்படுகிற விசைகளை எதிர்ப்ப தற்கு அடிப்படையாக வடிவமைக் கப்பட்ட ஒரு கம்பி. இது பொது வாக இறகில் அடைத்து வைக்கப் பட்டிருக்கும்.

**antifebrin** : *(மருந்.)* **காய்ச்சல் எதிர்ப்பு மருந்து** : காய்ச்சலைக் குணப்படுத்திக் கொடுக்கப்படும் அசிட்டானிலைடு என்ற மருந்து. இது அசிட்டிக் அமிலம், அனிலின் இரண்டும் கலந்து பெறப்படு கிறது.

**antifreeze** : *(தானி.)* **உறை எதிர்ப்புக் கரைசல்** : குளிர்விக்கும் சாதனத்தில் உறை வெப்ப நிலை யைக் குறைக்க நீருடன் சேர்க்கப் படும் கரைசல்.

**antifreeze mixture**: *(தானி; எந்.)* **உறைதல் தடுப்புக் கலவை** : உறைவதைத் தடுப்பதற்கான குளி ருட்டும் அமைப்பிலுள்ள நீருடன் கலந்த ஆல்கஹால், கிளிசரின், அல்லது ஏதேனும் வேதியியல் தயாரிப்பு.

**antifriction metal** : *(உலோ.)* **உராய்வுத் தடுப்பு உலோகம்** : தண் டுகள், இருசுகள் ஆகியவற்றின் அடிப்படிவுகள், தாங்கிகள் போன்ற சுழலும் உறுப்புகளுக்கும் உள்வரிப் பூச்சுக்காகப் பயன்படுத் தப்படும் மென்மையான உலோகக் கலவை. இது உராய்வைத் தடுக் கும் மசகுப் பொருளாகப் பயன் படுகிறது. தகரம், செம்பு, அஞ்ச னம் முதலியவற்றின் கலவை. விலை மலிவானது; திறன் வாய்ந் தது.

**antigen** : *(நோயி.)* **காப்பு மூலம்** : அயற்பொருளிலிருந்து உயிரினைக் காக்கும் உயிர்த் தற்காப்புப் பொருளை உண்டு பண்ணும் பொருள்மூலம். இது இரத்தத்தில் உற்பத்தியாகும் நோய் எதிர் பொருளை உண்டாக்குகிறது.

**antigravity** : *(விண்.)* **புவிஈர்ப்பு எதிர்விசை** : ராக்கெட் கலங்கள், மனிதவுடல்கள் போன்ற பொருண்

மைகள் மீதான விளைவு. இந்த விளைவினால் (இன்னும் கண்டு பிடிக்கப்பட வேண்டிய) சில ஆற்றல் புலங்கள் பூமியின் ஈர்ப்புவிசையினை நீத்தறவு செய்துவிடும் அல்லது குறைத்துவிடும்.

**antihunt device**: *(மின்.)* **நடுக்கத் தடைச் சாதனம்**: நடுக்கத்தைத் தடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு சாதனம் அல்லது மின்சுற்று வழி.

**antiknock** : [redacted] **தடுப்புப் பொ**[redacted] யில் வெடிப்ப[redacted] சிக் கலவைய[redacted] வாக்கம் செ[redacted]

**antiknock** [redacted] **மோதல் எதி**[redacted] எரிபொருள்[redacted] இயங்குவதற்குரிய அவற்றின் திறனுக்கேற்ப தரம் பிரித்தல்: கல்லெண்ணெயின் (பெட்ரோல்) ஆக்டேன் (தர அளவீட்டு எண்).

**antilogarithm** : *(கணி.)* **எதிர் அடுக்கு மூலம்**: ஒரு குறிப்பிட்ட அடுக்கு மூலத்திற்கு இணையான எண்.

**antimissile missile**: *(விண்.)* **ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணை**: பறந்துவரும் மற்ற ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கக் கூடிய ஒரு தற்காப்பு ஏவுகணை.

**antimonial lead**: *(உலோ.)* **ஆன்டிமணி ஈயம்**: 90%—96% ஈயமும், 4%—10% ஆன்டிமணியும் அடங்கிய ஓர் உலோகக் கலவை. இது சேம மின்கலத் தகடுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

**antimony**: *(உலோ.)* **ஆன்டிமணி: (Sb)**: நீலச்சாயல் வாய்ந்த வெண்ணிறப் படிக உலோகத் தனிமம். இது எளிதில் உடையும் தன்மையுடையது. வெள்ளீயத்துடன் அல்லது ஈயத்துடன் கலக்கும்போது கடினத் தன்மை பெறுகிறது. இது பெரும்பாலும் உலோகக் கலவையாகப் பயன்படுத்தப்படுகிறது.

**antimony** : *(வரைக.)* **அஞ்சனக் கல்**: எளிதில் உடையும் இயல்புடைய நிலச்சாயல் வாய்ந்த வெண்ணிறத் தனிமம். இது குளிர்விக்கும்போது சுருங்குவதில்லை. எனவே இது எழுத்துருக்களுக்கு வலிமையூட்டப் பயன்படுத்தப்படுகிறது.

**antinode** : *(மின்.)* **நள்ளிடைக் கணு**; மின்னோட்டத்தின் அல்லது மின்னழுத்தத்தின் உச்ச அளவு அலைப்புடைய மையப்பகுதி.

**antipercolator**: *(தானி.)*: **கசிவுத் தடுப்பான்**: ஓர் எரி—வளி கலப்பியின் உயர்வேக மின்சுற்று வழியில், அளவுக்கு மீறிய வெப்பம் காரணமாக உண்டாகும் ஆவி அழுத்தத்தினைத் தளர்த்துவதற்குரிய ஒரு சிறிய இடைவெளி.

**antique** : **தொன்மைக் காகிதம்/திண்மை அச்சுரு**: (1) முட்டையின் வெண்தோடு போன்ற மெருகிடப்படாத முரட்டு ரகக் காகிதத் தயாரிப்பு.
(2) முனைப்பான முகமுடைய திண்வரை அச்சுரு வகை (அச்சுக் கலை) பொதுமுறை அச்சுரு வகை, சாய்ந்த அச்சுருவகை இரண்டிலும் திண்மையானமுகமுடைய அச்சுரு.

**antisatellite missile** : *(விண்.)* **செயற்கைக்கோள் எதிர்ப்பு ஏவுகணை**: வட்டப்பாதையில் சுற்றி வரும் ஒரு செயற்கைக் கோளை அழிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஓர் ஏவுகணை.


**antiseptic**: *(நோயி.)* **நோய் நுண்மத் தடை**: காயங்கள் முதலியவற்றில் நோய் நுண்மங்கள் உருவாவதைத் தடுக்கப் பயன்படும்

பொருள். அயோடின், கார்பாலிக் அமிலம், அக்ரோஃப்ளேவின் முதலியவை நோய் நுண்மத் தடைப் பொருள்கள் ஆகும்.

**antisiphon** : *(கம்.)* **உந்து தடுப்பு வடிகுழாய் :** ஒருவகை நீர்காப்புப் பொறியமைப்பு. இதில் முத்திரையை உடைக்கக்கூடிய வடிகுழாய் இயக்கத்தைத் தடுப்பதற்குப் போதிய கனஅளவு திரவத்தை உள்ளடக்குவதற்கான வடிகாலின் விட்டம் அதிகரிக்கப்படுகிறது.


**antitoxin** : *(நோயி.)* **எதிர் நச்சு :** உடலில் பாக்டீரியாவினால் உண்டாகும் நச்சுப் பொருளுடன் கலந்து அதனைத் தீங்கற்றதாக்குவதற்கு உடல் உற்பத்தி செய்யும் பொருள்.

**antrum :** *(உட.)* **தாடைக் குழிவு:** மேல் தாடை உள் வளைவு. இது பற்களுக்கு மேலே, நெற்றிக்குள்ளே, கண்களுக்குச் சற்று மேலே காதின் பின்புறமுள்ள எலும்பில் அமைந்திருக்கும்.




தாடைக் குழிவு

**anvil** : *(உலோ.)* **பட்டடைக்கல்/அடைகல் :** ஓர் எஃகு அல்லது இரும்புப் பாளம் இதன் மீது உலோகங்களைக் காய்ச்சி அடித்து உருவாக்குதல் நடைபெறுகிறது.




அடைகல்


**anvil block**: *(உலோ.)* **பட்டடைக் கல் பாளம் / அடைகல் பாளம் :** ஒரு மிகப் பெரிய வார்ப்பிரும்புப் பாளம். இது நீராவிப் பட்டடைக் கல், மற்றக் கனமான சம்மட்டிகள் ஆகியவற்றுக்கு அடியில் வைக்கப் பட்டிருக்கும். இது அடிப்பதால் உண்டாகும் அதிர்வினைத் தாங்கிக் கொள்ளும். இது பெரும்பாலும் காரை அல்லது கான்கிரீட்டில் பதிக்கப் பெற்றிருக்கும்.

**anvil vise** : **பட்டடைக்கல் குறடு :** நிலையான கிடுக்கியின் மீது ஒரு பட்டடைக் கல்லினைக் கொண்ட ஒரு குறடு.

**aorta** : *(உட.)* **பெருந்தமனி :** இதயத்தின் இடது ஏற்றறையிலிருந்து புறப்படும் பெரிய இரத்தக் குழாய்.



**aperture**: *(இயற்.)* **ஒளி புகு இடைவெளி :** *(1)* ஒளியியல் கருவிகளில் ஒளிக்கதிர் ஊடுறுத்துச் செல்லும் இடை யிடம். *1/6* ஒளிபுகு இடைவெளி கொண்ட ஆடியுள்ள ஒளிப்படக் கருவியின் ஆடியின் விட்டம் அதன் குவிமையத் தூரத்தின் *1/6* பகுதியாகும்.



ஒளிபுகு இடைவெளி

*(2)* கட்டிடத்தில், ஒரு சுவரில் கதவுக்காக அல்லது சன்னலுக்காக விடப்படும் இடைவெளி.

**aperture mask**: *(மின்.)* **இடையிட மூடி :** ஒரு மூவண்ணப் படக் குழாயின் பார்வைத் திரைக்கு நேராகப் பின்புறத்தில் வைக்கப்பட்டுள்ள துளையிட்ட ஒரு மெல்லிய தகடு.

**apex:** *(கணி.)* **மேல் நுனி / மேல்**

**உச்சி:** முக்கோணம், வட்டக்கூம்பு ஆகியவற்றின் முகடு.

**aphelion;** *(விண்.)* **ஞாயிற்றின் சேண்:** சூரியனின் நெடுஞ்சேய்மையில் அமைந்த கோளின் இடம் (பூமியின் சேண், சூரியனிலிருந்து சுமார்15,20,50,500 கி.மீ.தொலைவில் உள்ளது).

**aphtha:** *(நோயி.)* **கொப்புளம்:** வாயின் உட்பகுதியை மூடியிருக்கும் சளிச்சவ்வு வழியாக, சில நஞ்சுடைய அல்லது எரிச்சலூட்டும் பொருளிலிருந்து வெளிப்படும் கழிவுப் பொருளினால் வாயில் உண்டாகும் கொப்புளம்.

**apnoea:** *(உட.)* **மூச்சு நிற்றல்:** மூச்சு விடுவதைத் தூண்டிவிடுவதற்குத் தேவையான கார்பன்டையாக்சைடு இரத்தத்தில் மிகவும் குறைந்துபோவதால் மூச்சு நின்று போதல்.

**apogee:** *(வானூ. விண்.)* **புவிச் சேணிலை/பூமி உச்சநிலை:** ஞாயிறும், திங்களும், கோள்களும் நிலவுலகுக்கு உறுநெடுந் தொலைவாயிருக்கும் நிலை.

**apomorphine:** *(மருந்.)* **அப்போமார்ஃபின்:** வாந்தி உண்டாகும்படி செய்வதற்குப் பயன்படும் மருந்து. இருமலைக் குறைப்பதற்கும் இதனைச் சிறிதளவு கொடுப்பதுண்டு.

**apparent e.m.f.** *(மின்.)* **வெளிப்படை மின்னியக்கு விசை:** தடையின் வழியாக மின்னோட்டம்பாய்வதன் வாயிலாக ஏற்படும் மின் அழுத்தக் குறைவினால் சுட்டிக் காட்டப்படும் மின்னழுத்த அலகு எண்ணிக்கை அளவு.

**apparent power:** *(மின்.)* **வெளிப்படைத் திறன்:** ஒரு தூண்டு மாறு மின்னோட்டச்சுற்று வழியில் ஆம்பியரையும் மின்னழுத்த அலகு எண்ணிக்கை அளவினையும் (ஓல்ட்) பெருக்குவதால் கிடைக்கும் பெருக்குத்தொகை திறனளவி காட்டும் உண்மைத் திறனிலிருந்து இது வேறுபட்டது.


**apparent watts** : *(மின்.)* **வெளிப்படை மின்னாற்றல் விசை:** ஒரு மாறு மின்னோட்டச் சுற்று வழியில் மின்னழுத்த அலகு எண்ணிக்கையினை ஆம்பியர்கள் எண்ணிக்கையினையும் பெருக்குவதால் கிடைக்கும் பெருக்குத் தொகை.

**appendage:** **துணையுறுப்பு:** முதன்மையான அல்லது பெரியதான ஒரு பொருளுடன் இணைக்கப்பட்டுள்ள அல்லது சேர்ந்திருக்கிற, ஆனால் அதற்கு இன்றியமையாதிருக்கிற ஒரு பொருள்.

**appendicitis:** *(நோயி.)* **குடல் முளை அழற்சி:** குடல் முளையில் ஏற்படும் வீக்கம்.

**appendix :** *(அச்சு.)* **பிற்சேர்க்கை:** ஒரு அச்சிட்ட நூலுக்குக் கூடுதலாக அல்லது துணையாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதி இது. பெரும்பாலும் கடைசி அத்தியாயத்திற்குப் பின்னர் இணைக்கப்பட்டிருக்கும்.

**appendix:** *(உட.)* **குடல் முளை:** குடலின்மேற்புறத்தினின்றும் தோன்றும் சிறு முளை.



**aperture:** *(மின்.)* **இடைவெளி:** துளை இடையிடம்.

**appliances :** *(மின்.)* **துணைக் கருவிகள்:** வீடுகளில் உழைப்பினை மிச்சப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகிற வாட்டு மின்கலம், கலவைச் சாதனம், துப்புரவுக் கருவி

போன்ற சாதனங்களைப் பொது வாகக் குறிப்பிடும் சொல்.

**application : பயன்படுத்துகை :** ஒரு விதியினைப் பயன்படுத்துதல்; நடைமுறையில் பொருந்தச் செய்தல்; நடைமுறைச் செயல் விளக்கம் செய்து காட்டுதல்.

**applied design:** *(நுண்.க.)* **செயல் முறை வடிவமைப்பு :** பயனுள்ள பொருள்களை மேலும் எழிலுடன் தோன்றும்படி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் வடிவமைப்பு.

**applied mechanics:** *(இயற்.)* **செயல்முறை எந்திரவியல்:** எந்திர வியலின் விதிமுறைகளை பயனுள்ள கைவினைகளில் பயன்படுத்துதல்.

**applied moulding:செயல் முறை வார்ப்படம்:** 17ஆம் நூற்றாண்டு முதலாம் ஜேம்ஸ் அரசர் காலத்திய அணிகலன்களிலுள்ள பொட்டிப்பு விளைவினை அளிப்பதற்காக செய்யப்படும் வார்ப்படம்.

**apprentice: தொழில் பழகுநர்:** ஒரு தொழிலைக் கற்றுக்கொள்பவர். பொதுவாக, ஓர் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை வாயிலாக, அந்த உடன்படிக்கைக் காலத்தின் போது, ஒ[redacted]
படைகளைக்[redacted]
வர்.

**apprenticesh[redacted]**
**சிக் காலம்:** [redacted]
வேலை பெ[redacted]
தொழில் பயி[redacted]
கொள்ளப்பட்[redacted]
தக் கால அள[redacted]
தருநர் தமது[redacted]
படைகளை மே[redacted]
கற்பிக்க உறு[redacted]
ரிக்காவில் இது பொதுவாக மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் ஆகும்; பல அயல் நாடுகளில் இது ஐந்தாண்டுகள் அல்லது அவற்றுக்கு மேற்பட்ட கால அளவு.

**approach light:** *(வானூ.)* **அணுகு விளக்கு:** பொதுவாக ஒரு பச்சை விளக்கு, இது விமானங்கள் தரையிறங்குவதற்கு சாதகமான திசையினைச் சுட்டிக் காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டது.

**approximately :** *(எந்.)* **தோராயமாக :** ஏறத்தாழ ஒத்திருக்கிற; மிக நெருங்கிய அளவினதான,

ஒரு கணக்குக்கு முழுதும் சரியாய் இராவிட்டாலும் குறிப்பிட்ட ஒரு காரியத்துக்குப் போதுமான அளவிற்கு ஏறத்தாழச் சரியாக இருக்கிற,

எந்திரங்களின் திறம்பாடுகளையும், அவற்றின் அளவீடுகளையும், கப்பல்களின் தோராய எடைகளையும் குறிப்பிடப் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

**apron :** *(உலோ.)* **காப்புத்தளம் :** ஒரு கடைசல் பொறியின் (கடைவான்) சகடத்தின் அடிப்பகுதி. இதில் உள்ளிடுவதைக் கட்டுப்படுத்துவதற்கான பல்லிணைகளும் பூட்டுப் பொறியமைப்புகளும் அடங்கியிருக்கும்.

**apron :** *(வானூ.)* **முன்புறக் கடுந்தரைப் பரப்பு :** (1) வண்டிகள், விமானங்கள் முதலியவை தங்கிடத்தின் நுழைவாயிலில் உள்ள கடுந்தரைப் பரப்பு. தெளிவான தட்ப வெப்ப நிலையில் விமானத்தைக் கையாள்வதை அல்லது பழுது பார்ப்பதை இது எளிதாக்குகிறது.

(2) அரங்கமேடைகளில் முதல் திரைக்கு முன்புள்ள பகுதி.


(3) மேசையின் மேற்புறத்திற்கு அடுத்துக் கீழுள்ள பலகை. இது மேசையின் கால்களைப்பிணைத்து மேற்புறத்திற்கு வலிமையூட்டுகிறது. மேசையின் தோற்றத்திற்குப் பொலிவூட்டுகிறது.

(4) ஒரு திருகுவெட்டுக் கடைசல்

பொறியின் சகடத்தின் முன்பகுதி யிலுள்ள செங்குத்தான தகடு.

**apse :** *(க.க.)* **பலி பீடக் கவிகை :** திருக்கோவில் கவிகைக் கூரையுள்ள அரைவட்ட ஒதுக்கிடம்.

**apseline :** *(இயற்.)* **சூரியச் சேணி லைக் கோடு:** சூரியனின் நெடுஞ் சேய்மையில் அல்லது மிக அண்மை



சூரியச் சேணிலைக் கோடு

யில் அந்தக்கிரகத்தின் இடத்தைக் குறிக்கும் கோடு.

**aqua ammonia :** *(வேதி.)* **நீர்ம அம்மோனியா :** $NH_4OH$ கரைசல். அம்மோனியம் ஹைடிராக்சைடு பொதுவாக அம்மோனியா நீர் என அழைக்கப்படுகிறது. வீடுகளில் துப்புரவுப் பொருளாகப் பயன் படுத்தப்படுகிறது.

**aqua dag:** *(வேதி.)* **நீரியல் மிதவை:** நீரிலுள்ள காரீயகத்தின் கரை நிலையுடைய மிதவைப் பொருள்.

**aquamarine :** *(வண்.)* **கடல் வண் ணம் :** வெளிர் ஊதா நிறம் முதல் வெளிர்ப்பச்சை நிறம்வரை.

**aqueduct : கட்டுக் கால்வாய் :** உயர்தளத்தின் ஊடாகச் செல்லும் நீர்க்குழாய்.

**aqueous : நீர்த்த.**

**arabesque :** *(க.க.)* **அராபிய வண் ணச் சித்திர வேலை :** முன்படைப் பியலில் தாவரங்கள், துணிகள், மனி



தர்-விலங்கு உருவங் கள் போன்ற விசித் திர வேலைப்பாடு களைக் கொண்ட ஒரு செதுக்கு அலங்கா ரம்.


அராபிய முறையில் செய்யப் பட்ட வண்ணச் சித்திர வேலைப் பாடு.

**Arabic numbers :** *(கணி.)* **அரபு எண்மானம் :** தற்காலத்தில் பயன் படுத்தப்பட்டுவரும் 1,2,3,4,5,6,7, 8,9,0 என்ற இலக்கமுறை. இது I,II,III,IV என்ற ரோமானிய இலக்கமுறைக்கு மாறுபட்டது.

**arbor :** *(க.க.)* **பொறி முதன்மை ஆதாரம் :** (1) தொடர்பற்ற மின் னல் வேலை; நங்கூரம்; மூலைப் பகுதி.

(2) சக்கரம் சுழலும் இருசு அல் லது கதிர்.

**arbor press :** *(எந்.)* **பொறி முதன் மை ஆதார அழுத்தக் கருவி;** பொறி



முதன்மை ஆதாரத் தை அல்லது தண்டி னை ஒரு பொருளின் துளையில் அல்லது துவாரத்தில் வைத்து அழுத்து வதற்குப் பயன்படும் சாதனம். இது அந்தப் பொருளைக் கடைசல் கருவியில் பொருத்தவும் பணிமுடிந் தபின் எடுக்கவும் உதவும்.

**arc :** *(மின்.)* **சுடர் :** (1) தனித்தனி யான இரண்டு கரிய துருவங்களுக் [redacted] ஒளிவட்டப்

[redacted] பரிதியின் ஒரு

[redacted] பேழை : அரிய

[redacted] மித்து வைப்ப

[redacted]

[redacted] ல்வளைவு விதா

[redacted] ல் உள்ள மேல்

[redacted] ளைவுத் தொ

[redacted]. வில்வளைவு

[redacted] ானம் அமைந்த



நடைவானப் பந் தல்.

**arcback :** *(மின்.)* **பின்னோக்கிப் பாயும் சுடர் :** ஓர் இரு முனையத்


தில் தகடு மிக உயர்ந்த எதிர் மின்னழுத்தம் கொண்டிருக்கும்போது, எதிர்த்திசையில் பாயும் மின்னோட்டம்.

**arc blow :** *(பற்.)* **சுடர் ஊதல் :** சுடர் வார்ப்படத்தின்போது ஒரு சுடர் அதன் வழக்கமான போக்கிலிருந்து திரிபுறுகிற அல்லது வெட்டி வீசுகிற போக்கு.

**arc brazing :** **சுடர்ப் பித்தளை முலாமிடுதல் :** ஓர் அடிப்படை உலோகத்திற்கும் ஒரு மின்முனைக்குமிடையே அல்லது இரு மின் முனைகளுக்கிடையே அமைந்த ஒரு மின் சுடரிலிருந்து வெப்பத்தினைப் பெறுவதற்கான மின்முறைப் பித்தளை முலாமிடும் முறை.

**arc cutting :** *(பற்.)* **சுடர் வெட்டல் :** பொதுவாக கார்பன் மின்முனைகளைப் பயன்படுத்தி ஒரு மின் சுடர் மூலமாக உலோகங்களை வெட்டுதல்.

**archimedean drill :** **ஆர்க்கிமீடியத் துரப்பணம் :** ஒரு சுருள் திருகியின் முனையில் பொருத்தப்



துர [redacted]

பட்டுள்ள [redacted]
வெட்டுமுனை [redacted]
பொருத்தப்ப [redacted]
குமிழை மே [redacted]
இந்த வெட்டு [redacted]
ஒரு திசையி [redacted]
திசையிலும் [redacted]

**arcing :** *(மின்* [redacted]
விசையில் அல் [redacted]
லது மின்னாக் [redacted]
தொடர்புகளின் [redacted]
சுடரினை அமைத்தல்.

**arc furnace:** *(மின்.)* **சுடர் உலை:** ஒரு மின்சுடர் வாயிலாக வெப்பம் உண்டாக்கப்படும் ஓர் ஊதுலை.

**arc jet engine :** *(விண்.)* **ஒளிவில் தாரை எஞ்சின் :** இது ஒருவகை ராக்கெட் எஞ்சின். இதில் ஒளிவில்லைச் செலுத்துவதன் மூலம் செலுத்துவாயு சூடாக்கப்படுகிறது.

**arc voltage :** *(பற்.)* **ஒளிவில் மின்னழுத்தம் :** ஒளிவில்லினூடே செல்லும் மின் விசையின் அழுத்தம்.

**arch:** *(க.க.)* **வில்வளைவு கவான்:** பாலம், தளம் முதலியவற்றைத் தாங்கும் வில்வளைவு போன்ற வடிவமுள்ள கட்டுக் கோப்பு.



கவான்

**arch bar:** *(க.க.)* **கவான் தண்டு:** ஒரு தட்டையான கவானைத் தாங்கும் ஆதாரமாகப் பயன்படுத்தப்படும் ஒரு தட்டையான இரும்புத் தண்டு அல்லது பாளம்.

**arch buttress:** *(க.க.)* **கவான் செங்கல்:** ஒரு கவானின் ஆரத்திற்குப் பொருந்துகிற வகையில் தயாரிக்கப்பட்ட ஆப்பு வடிவச் செங்கற்கள்.

**archimedean principle:: ஆர்க்கிமிடீஸ் தத்துவம்:** ஒரு பாய்மத்தில் முழுமையாக அல்லது பகுதியாக மூழ்கியிருக்கும் ஒரு பொருள். அதனால் வெளியேற்றப்படும் பாய்மத்தின் எடைக்குச் சமமான ஒரு விசையின் மூலம் மிதக்கச் செய்யப்படுகிறது.

**architect:** *(க.க.)* **கட்டிடக் கலைஞர்:** கட்டிடங்களைத் திட்டமிட்டு, வடிவமைத்து, கட்டுமானம் செய்யும் உத்திகளில் தேர்ச்சி பெற்ற வல்லுநர். கட்டிடத்தைக் கட்டுவதை மேற்பார்வையிடுவதிலும் தேர்ச்சி பெற்ற நிபுணர்.

**architecture: கட்டிடக்கலை:** கட்டிடம் தொடர்பான கலையும் அறிவியலும்.

**architrave:** *(க.க.)* **தூலம்:** தூணின் உச்சியிலுள்ள பரற்கட்டையின்மீது தங்கியிருக்கும் முதன்மையான தூலம்: வாயிற்படி சன்னலைச் சுற்றியுள்ள பகுதியும் ஆகும்.

**architrave cornice:** *(க.க.)* **தூல எழுதகம்:** ஒரு காலம், ஓர் எழுதகம் என்ற இரு உறுப்புகளை மட்டுமே கொண்ட ஒரு தூண் தலைப்பு அமைவு. இதில் ஒப்பனைப் பட்டை விட்டுவிடப்பட்டிருக்கும்.

**archives: ஆவணக் காப்பகம்:** தொன்மை ஆவணங்களை அல்லது பழஞ்சுவடிகளைப் பாதுகாப்பாகப் பேணிக்காக்கும் ஒரு களஞ்சியம்.

**archivolt:** *(க.க.)* **கவான் உள் வளைவு:** கவானின் உள்வளைவினை அழகு செய்யும் அச்சுருக்கள்.

**archway:** *(க.க.)* **கவான் வழி:** வில்வளைவான விதானம் கவிந்துள்ள வழி.

**arcing:** *(மின்.)* **சுடர் அமைப்பு:** ஒரு நேர்மின்னாக்கியில் அல்லது ஒரு துண்டிக்கப்பட்ட சுற்று வழியிலுள்ள தொடுவிகளைப்போன்ற ஒரு சுடரினை அமைத்தல்.

**arc-lamp carbon:** *(மின்.)* **சுடர் விளக்குக் கார்பன்:** ஒரு சுடர் விளக்கில் இரு கார்பன் தண்டுகளில் ஒன்று. இவ்விரு கார்பன் தண்டுகளுக்கிடையில் சுடர் தோன்றுகிறது.

**arc of contact:** *(எந்.)* **பற்றிணைப்புச் சுடர்:** பல்லிணையில், தனியொரு இணைச் சக்கரப் பற்கள் தொடங்கி, முடிகிற இரு புள்ளிகளுக்கிடையில் அமைந்த இடைவெளி.

**arc-jet engine:** *(விண்.)* **சுடர் தாரை எஞ்சின்:** இது ஒரு ராக்கெட் எஞ்சின். இதில் செலுத்தும் வாயு, ஒரு மின்சுடர் வழியாகச் செலுத்தப்பட்டு சூடாக்கப்படுகிறது.

**arc voltage:** *(பற்ற.)* **சுடர் மின்னழுத்தம்:** மின்சுடரின் குறுக்கேயுள்ள மின்னாற்றல் (அழுத்தம் அல்லது விசை.)

**arc welding: சுடர் பற்றவைப்பு:** எந்தத் துண்டினைப் பற்றவைக்க வேண்டுமோ அந்தத் துண்டு நேர் மின் முனையாக்கப்படுகிறது. நேர் மின்னோட்டம் பயன்படுத்தப்படுகிறது. பற்றவைப்புத் தண்டு எதிர் மின் முனையாகிறது. அந்தத் துண்டினால் தொட்டுத் தொட்டு எடுக்கும்போது சுடர் உண்டாகிறது.

**arc welding :** *(உலோ.)* **சுடர் பற்றவைப்பு :** ஒரு மின்முனை, ஒரு மின்னோட்டம் மூலமாகப் பற்றவைத்தல். பற்றவைக்க வேண்டிய பொருளை மின்முனையால் தொடுவதன் மூலமும், பின்னர் மின்முனைக்கும் அந்தப் பொருளுக்கும் இடையிலான வாயு ஊடகத்தின் வழியாக மின்னோட்டம் தொடர்ந்து பாயும் வகையில் ஒரு தூரத்திற்குப் பிரித்தெடுப்பதன் மூலமாகவும் மின்சுடர் உண்டாக்கப்படுகிறது. மின்சுடரில் மின்னாற்றல் வெப்பமாக மாற்றப்பட்டு ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்குள் ஒருமுகப்படுத்தப்படுகிறது.

**area :** *(க.க.)* **பரப்பிடம் :** ஒரு திறந்தவெளி அல்லது களம்; மூடப்படாத இடைவெளி.

ஒரு மேற்பரப்பின் அளவிடப்பட்டபரப்பு (கணிதம்).

**area drain :** *(கம்.)* **பரப்பிட வடிகால் :** வேறுவகையில் நீரை வெளியேற்ற முடியாதிருக்கிற ஒரு நில

வரையின் நுழைவாயிலில், அல்லது சிமென்ட் பூசிய ஓடுபாதையில் அமைக்கப்பட்டுள்ள வடிகால். இத்தகைய வடிகால் பொதுவாக 4" அல்லது அதற்கு அதிகமான வார்ப்பிரும்புக் குழாயினால் அமைக்கப்பட்டிருக்கும். இது ஒரு வடிநீர்க் காலுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

**arena :** *(க.க.)* **வட்டரங்கு :** ரோமில் இருந்தது போன்று, திறந்தவெளியான நடுவிடத்தைச் சுற்றி ஒன்றன்பின் ஒன்றாக எழும் இருக்கைகளைக் கொண்ட வட்டமான அல்லது நீள்வட்டமான கட்டிடம். இங்கு பெரும்பாலும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

**argon :** *(வேதி.)* **மடியம் :** வளிமண்டலத்தின் அணுஎடை எண் 18 உடைய இயக்கத் திறனற்ற வாயு. இது நிறமற்றது; நைட்ரஜனை ஒத்திருப்பது; சாதாரணக் காற்றில் 0.9% அளவுக்குக் கலந்திருக்கிறது. திரவக் காற்றினை வடித்துப் பிரித்தல் மூலம் பெறப்படுகிறது. வெண்சுடர் மின் விளக்குகளில் நிரப்புவதற்காக இந்த வாயு பயன்படுகிறது.

**armature :** *(மின்.)* **மின்னகம் :** ஒரு மின் ஆக்கப் பொறியின் கருப்பகுதி.

**armature coil :** *(மின்.)* **மின்னகச் சுருள் :** ஒரு திசைமாற்றுப் பகுதியிலிருந்து இன்னொரு திசைமாற்றுப் பகுதிக்குச் செல்லும் சுருணையின் பகுதி; அல்லது, மின்னகத்தின் மைய உட்புரியின் காடிகளுக்குள் பொருந்துமாறு செய்வதற்குத் தேவையான துல்லியமான வடிவில் தயாரிக்கப்பட்ட மின்னகச் சுருணையின் ஒரு பகுதி.

**armature core :** *(மின்.)* **மின்னக மைய உட்புரி :** கம்பி போன்ற ஒரு சூழ்ந்த உலோகத்தின் மைய உட்புரி. இது ஒரு காந்தத்தின் துருவங்களின் அருகே சுழன்று கொண்டிருக்கும்.

**armature current :** *(மின்.)* **மின்னக மின்னோட்டம் :** பார்க்க: (Current) மின்னோட்டம்.

**armature disks :** *(மின்.)* **மின்னக வட்டத் தகடு:** பார்க்க: (Laminated core) மென் தகட்டு மைய உட்புரி.

**armature of a magnet :** *(மின்.)* **காந்த மின்னகம் :** காந்தத் தன்மையைப் பாதுகாப்பதற்காக ஒரு குதிரை லாட வடிவக் காந்தத்தின் துருவங்களுக்கிடையே வைக்கப்பட்ட இரும்பு அல்லது எஃகுத் துண்டு; அல்லது ஒரு மணியின் மின்னகத்தைப் போன்று, ஒரு மின் காந்தத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஓர் அசையும் இரும்பு அல்லது எஃகுத் துண்டு.

**armature reaction :** *(மின்.)* **மின்னக எதிர்வினை :** ஒரு மின்னாக்கியின் காந்தச் சுற்றுக்கு எதிரான ஒருவகை எதிர்வினை. இது மின்னகத்தைச் சுழற்றுவதன் மூலம் ஏற்படுத்தப்படுகிறது.

**armature shaft :** *(மின்.)* **மின்னகத் தண்டு:** ஓர் இயக்கியின் அல்லது மின்னாக்கியின் மைய உறுப்புகளின் அமைப்புப் பகுதிகள் இந்தத் தண்டினைச் சுற்றி ஒருங்கிணைக்கப்படுகின்றன.

**armature slots :** *(மின்.)* **மின்னகக் காடிகள் :** மின்னகத்தின் சூழகங்கள் அல்லது உட்புழைகள். இவை ஒரு சுருளினைச் சுற்றுவதற்கு இடமளிக்கிறது.

**armature spider :** *(மின்.)* **மின்னக எண்காலி :** ஆரைக்கதிர்க் கைகளமைந்த சட்டகம். இது ஓர் இயக்கியை அல்லது மின்னாக்கியை அதன் தண்டில் தாங்கி நிற்கிறது.

**armature varnish**: *(மின்.)* **மின்னக வண்ண மெருகு:** ஈரம் பதிப்பதற்கு எதிரான ஒரு பாதுகாப்பாக மின்னகச் சுருணைகளுக்குப் பூச்சு இடுவதற்காகப் பயன்படுத்தப் பட்ட ஒரு மின்காப்பு வண்ண மெருகு.

**armature winding**: *(மின்.)* **மின்னகச் சுருணை:** பார்க்க: (coil) சுருள்.

**armored cable:** *(மின்.)* **கவசக் கம்பிவடம்:** நெகிழ் திறனுடைய உலோக உறையினுள் அமைந்த மின் காப்பிடப்பட்ட கம்பி.

**Armstrong Edwin Howard: ஆம்ஸ்டிராங், எட்வின் ஹோவர்ட் (1890-1954)**: வானொலித் துறையில் புகழ்பெற்ற அமெரிக்கப் புத்தமைப்பாளர். கேளா மிகு உயர் விசை அலை வானொலி, எஃப். எம். வானொலி போன்ற ஒலியுணர்வை மேம்படுத்தும் பின்னூட்ட அலைப்பு மின்சுற்றுவழிகளைக் கண்டுபிடித்துப் புகழ் பெற்றவர்.

**aromatic**: **நறுமண மருந்துப் பொருள்:** நறுமணமும், இன்சுவையுமுள்ள மருந்துப் பொருள். இவை வேதியியல் கூட்டுப் பொருள்கள். இவற்றின் மூலக்கூறுகளில் கார்பன் அணுக்கள்சிலசமயம்வேறு அணுக்கள் வளைய வடிவில் அமைந்திருக்கும். சாம்பிராணி எண்ணெய் (பென்சீன்) இந்த வகையில் மிக எளிமையான கூட்டுப் பொருள்.

**arras**: **ஓவியத்திரை:** அலங்காரச் சுவர் மறைப்புச் சீலை.

**arrester**: *(எந்.)* **தடுப்புப் பொருள்/ தடுப்பான்:** இயக்கத்தை நிறுத்துவதற்கு அல்லது மெதுவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் எந்திரவியல் சாதனம்.

**arresting gear**: *(வானூ.)* **தடுப்புப் பல்லிணை:** விமானம் ஒரு குறிப்பிட்ட இடப்பகுதிக்குள் தரையிறங்குவதற்கு இயல்விப்பதற்காக விமானத்திலும், தரையிறங்கும் பகுதியிலும் இணைக்கப்பட்டுள்ள பல்லிணை.

**arresting hook**: *(வானூ.)* **தடுப்புக் கொக்கி:** விமானம் தரையிறங்கும்போது தடுப்புப் பல்லிணையில் மாட்டிக்கொள்ளும் வகையில் விமானத்தில் அமைக்கப்பட்டுள்ள கொக்கி.

**arris**: *(வானூ.)* **இணை விளிம்பு வரை:** ஒரு வட்டவடிவத் தூணின் இரு இடை வழிகளிடையிலான மேல்வரை. ஒரு புறக்கோணம், விளிம்பு அல்லது மேல்வரை.


**arrow heads**: **அம்புத் தலை:** பரிமாணக்கோடுகளின் இறுதி முனைகளின் கூர்நுனிகள். இவை, அளவீடு குறிக்கின்ற இடத்தைத் துல்லியமாகச் சுட்டிக்காட்டுவன.

**arsenal process:** *(உலோ.)* **படைக்கொட்டில் செய்முறை:** இது ஈயப்பூச்சுக்குரிய ஒரு செய்முறை. இதில் ஈயம் பூசவேண்டிய எஃகுத் தகடு, முதலில் கந்தக அமிலமும், நீரும் கலந்த ஒரு கலவையில் ஊற வைக்கப்படுகிறது; பின்னர் துப்புரவாக்கப்படுகிறது. அடுத்து, துத்தநாகமும், ஹைடிரோகுளோரிக் அமிலமும் கலந்த ஒரு கலவைப் பொருளில் தோய்க்கப்படுகிறது. அதன்பின் 80% ஈயமும், 20% வெள்ளீயமும் கலந்த உருகிய கலவையில் நன்கு முலாம் பூச்சு உண்டாக்கும் வரையில் தோய்க்கப்படுகிறது.

**arsenic**: *(வேதி.)* **உள்ளியம்:** வெள்ளி போன்ற நிறமுடைய, படிக வடிவிலான உலோகத்தின் தோற்ற வடிவுடைய பொருள். இது சில சமயம் இயற்கையில் கிடைக்கிறது. வதங்கிய உள்ளியத்

தாதுக்களைக் காய்ச்சி வடித்து இது பெறப்படுகிறது. மருந்துகள், பூச்சிக்கொல்லிகள், உள்ளிய உப்புகள், உலோகக் கலவை ஆகியவற்றுக்குப் பயன்படுகிறது.

**artefact : கை வேலைப்பாடு :** இயற்கையாக அல்லாமல் மனிதன் கருவி கொண்டு செய்த கலைத் தொழில் கை வேலைப் பாட்டுப் பொருள்.



**செயற்கைத் திசு:** நுண்ணோக்காடியால் பார்க்கும்போது ஒரு திசுவில் காணப்படும் இயற்கையாக அல்லாமல் செயற்கையாக அமைக்கப்பட்டுள்ள ஒரு பொருள்.

**arterioles :** (உட.) **குருதிநாடி:** தமனிகளிலிருந்து குருதிநாளங்களுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் சிறிய இரத்த நாடிகள். பின்னர் சிரைகள் மூலம் இரத்தம் இதயத்திற்குச் செல்லும்.

**artesian well : ஆழ்குழாய்க் கிணறு :** பூமிக்குள் தண்ணீர் ஊற்றெழுந்து மேலெழுந்துவரும்வரை ஆழமாகக் குழாய்களை இறக்கி, அமைக்கப்படும் குழாய்க் கிணறு. இதில் நீர் தன் சொந்த அழுத்தம் காரணமாக நீர் மேலெழுந்து வருகிறது.

**arthropoda :** (உயி.) **தோட்டு உடலிகள் :** நண்டுகள், சிலந்திகள், தேள்கள் போன்ற ஒட்டுத்தோடுடைய இணைப்புடலி உயிரினங்கள்.

**articulated-type connecting rod:** (தானி.) **மூட்டு வகை இணைப்புத்தண்டு:** V.Y.X அல்லது ஆரை எஞ்சின்களில் பயன்படுத்தப்படும் ஒரு வகைத் தண்டு. இதில் தண்டுகளின் திருகுமுனை, ஒரு பிரதானத் தண்டுடன் இணைக்கப்படுகிறது.

**artificer: கைவினைஞர்:** புதியன புனையும் ஆற்றலுள்ள ஒரு பொறிவலர்; கருவிகளைக் கையாள்வதில் தேர்ந்தவர்.

**artificial: செயற்கையானது:** பொய்யானது அல்லது இயற்கையல்லாதது; போலியானது.

**artificial horizon:** (வானூ.) **செயற்கைத் தொடுவானம்:** (1) உண்மையான அடிவானத்தைப் பொறுத்து ஒரு விமானம் எவ்வளவு உயரததில் பறக்கிறது என்பதை குறிக்கும் ஒரு சாதனம்.

(2) ஒரு நீர்வழிச்செலுத்து கருவியில், ஒரு திரவ மட்டம் போன்ற ஓர் இயற்கையான தொடுவானத்திற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் சாதனம்.

**artificial magnet:** (மின்.) **செயற்கைக் காந்தம்:** இயற்கையான காந்தத்திலிருந்து மாறுபட்டு, காந்தத் தன்மை ஏற்றப்பட்ட ஒரு காந்தம்.

**artificial stone: செயற்கைக் கல்:** கல் போன்று தோன்றும் வகையில் செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட ஓர் உற்பத்திப் பொருள். கல்லைத் தூளாக்கி சிமெண்டுடன் கலந்து தயாரிக்கும் கல். சாதாரணமாகத் தயாரிக்கப்படும் ஒருவகைச் செயற்கைக் கல்.

**artillery-type wheel:**(தானி.எந்.) **பீரங்கி வகைச் சக்கரம் :** உலோகக் குடத்துடனும். புறவட்டப் பகுதியுடனும் இணைக்கப்பட்ட மர ஆரைகள் பொருத்தப்பட்ட சக்கரம்.

**artisan : கம்மியர் :** கைவினைஞர் கைகளைப் பயன்படுத்தி உலோகங்கள்,மரம் முதலியவற்றில் பொருள்களைத் தயாரிக்கும் தொழிலாளி.

**art metal: கலை உலோகம்:** கலையழகுமிக்க வடிவங்களாக வடிவமைக்கப்பட்ட உலோகம்.


**asafoetida**: *(மருந்.)* **பெருங்காயம்**: சதகுப்பைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு செடியிலிருந்து கிடைக்கும் பிசின். இது மிகவும் காரமணம் கொண்டது. இது நரம்புக் கோளாறுகளுக்கான மருந்து தயாரிக்கப் பயன்படுகிறது.

**asbestine** : *(வண்.)* **கல்நார் இயல்புடைய**: வர்ணங்கள் தயாரிப்பதில் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் ஒருவகை மக்னீசியம் சிலிக்கேட்டு கரைசலில் வண்ண நிறமியை நிலை நிறுத்தி வைத்துக் கொள்ளவும், வண்ணப்படலங்களைக் கட்டுறுத்தி வைத்துக் கொள்ளவும் இது உதவுகிறது. "ஃபிரெஞ்சுச் சுண்ணம்", "டால்க்" என்ற பெயர்களிலும் இது விற்பனையாகிறது.

**asbestos** : **கல்நார்** : இழை வகையைச் சேர்ந்த தகட்டியல் கனிப் பொருள் வகை. இது மிக அதிக வெப்பத்தையும் தாங்கக் கூடியது. அதனால் தீக்கிரையாகாதது. அமிலங்களாலும் இது பாதிக்கப்படுவதில்லை. இதனைக் கொண்டு தீக்கிரையாகாத ஆடைகள் தயாரிக்கிறார்கள். வாணிக முறையில் கிடைக்கும் கல்நாரில் பெரும்பகுதி கனடா நாட்டிலிருந்து கிடைக்கிறது. தீப்பிடிக்காத ஆடைகள், நாடக அரங்குகளின் திரைகள், கட்டுமானப் பொருள்கள், தடைகள் உள்வரிப் பூச்சு முதலியவற்றுக்கு இது பயன்படுகிறது.

**asbestos shingles** : *(க.க.)* **கல்நார் மரப்பாவோடு** : மரப்பாவோடுகளின் வடிவத்தில் தயாரிக்கப் பட்ட தீப்பிடிக்காத கூரை ஓடு. இதில் கல்நார் முதன்மையான பகுதியாக அமைந்திருக்கும்.

**ascaris** : *(உட.)* **சிறுகுடற்புழு** : குடலிலுள்ள வளையப் புழுக்கள் போன்றபுழுக்கள்.




**ascender** : *(அச்சு.)* **ஏறுமுகம்** : அச்சுத் துறையில் ஆங்கில நெடுங் கணக்கில் b, d, h போன்ற சிற்றெழுத்து வடிவங்களில் எழுத்தின் உடற்பகுதியிலிருந்து மேல்நோக்கி நீண்டிருக்கும் எழுத்தின் பகுதி.

**ash** : **சாம்பல்** : *(1)* நிலக்கரியிலுள்ள எரியத்தக்க தாதுப்பொருள்களில் எரிந்தவை போக எஞ்சியிருக்கும் பகுதி. இது நிலக்கரியிலுள்ள கரிமப் பொருளாகும். இதற்கு வெப்ப ஆற்றல் எதுவுமில்லை.

*(2)* **அசோக மரம்**: **(fraxinus)** தேவதாரு இனத்தைச் சார்ந்த கட்டுமானத்திற்குச் சிறந்த மர வகை இது. இளவண்ணமுடையது. சொர சொரப்பானது. சக்கரங்களின் ஆரைக் கால்களுக்கும் குடங்களுக்கும், சம்மட்டிக் கைபிடிகளுக்கும், பொதுவாக நெகிழ்திறனும் வலிமையும் வாய்ந்த மரப் பொருள்களைத் தயாரிப்பதற்கும் பயன்படுகிறது.

**ashing** : *(குழை.)* **மெருகேற்றல்** : இது மெருகேற்றுவதற்கான ஒரு முறை. ஒரு சொரசொரப்பான உராய்வுப் பொருள் பூசிய மெருகேற்றும் சக்கரத்தின் உதவியால் இது செய்யப்படுகிறது.

**ashlar** : *(தச்சு.)* **மேவுகல்** : செங்கல் போலச் சதுக்கமாகச் செதுக்கப் பட்ட கட்டுமானக் கல்.



**aspect ratio**
**பார்க்கும் கோணவிகிதம்** : விமானத்தின் காற்றழுத்தத் தளத்தின் நடுநிலை நாண் வரையில் இடையகல அளவின் விகிதம். அதாவது விமானத்தின் காற்றழுத்தத் தளத்தின் மொத்தப் பரப்பளவில், பெரும் இடையகல அளவின் வர்க்கத்தின் விகிதம்.

**aspen**: *(மர.)* **காட்டரசு**: இது ஒரு மரவகை. இதனை பாப்புலஸ் டிரிமுலாய்டெஸ்(**populus tremuloides**) அல்லது பாப்புலஸ் கிராண்டிடன் அட்டா (**populus grandiden tatac**) எனும் அறிவியல் பெயரில் அழைப்பர். இது அமெரிக்காவில் பெரும் பகுதிகளில் காணப்படும். ஒரு மரம். இது ஊசியிலை மரம் 'ஹெம்லாக்' என்ற தாவரம் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக காகிதக்கூழ் தயாரிப்பதற்குப் பயன்படுகிறது. மற்றவகையில் இதற்கு வாணிக மதிப்பு எதுவுமில்லை. இந்த மரம் 12-15 மீட்டர் உயரம் வளரும். இது எளிதில் முறியக்கூடியது. ஒருகன அடி மரத்தின் எடை 11-3 கிலோ அளவு இருக்கும்.

**asphalt**: *(கனி.)* **புகைக்கீல்**: இது ஒரு கனிம நிலக்கீல்; இது நிலக்கீலார்ந்த தன்மையுடையது. இதனை தளத்திற்கும், கூரைக்கும் பயன்படுத்துகிறார்கள்.

**asphalt oil**: *(வேதி.)* **புகைக்கீல் எண்ணெய்**: புகைக்கீல் அல்லது ஒரு புகைக்கீல் ஆதாரப்பொருள் அடங்கிய ஒருவகை எண்ணெய். இது கன்மெழுகை ஆதாரப்பொருளாகக் கொண்ட எண்ணெயிலிருந்து வேறுபட்டது.

**asphaltum**: *(கனி.)* **ஆஸ்பால்ட்டம்**: இது ஒரு நிலக்கீல். இது எளிதில் தீப்பற்றக்கூடிய கனிமப் பொருள். இது கருப்பு அல்லது பழுப்பு நிறத்தில் இருக்கும்; எளிதில் உடையக் கூடியது; பளபளப்பானது; ஆஸ்பால்ட், ஆஸ்பால்ட்டம் ஆகிய இரண்டு சொற்களும் ஒன்றுக்கொன்று மாற்றாகப்பயன்படுத்தப்படுகின்றன. இது முக்கியமாக டிரினிடாடிலும், வெனிசூலாவிலும் கிடைக்கிறது. நிலக்கரி போல் தோற்றமளிக்கும் ஒருவகை ஆஸ்பால்ட்டம் ஊட்டாவில் கிடைக்கிறது. இது ''கில்சோனைட்'' என அழைக்கப்படுகிறது.

**alphaltum varnish**: **ஆஸ்பால்ட்டம் வண்ண மெருகெண்ணெய்**: இதில் மிகச் சிறந்த தரம் வாய்ந்தது ''கில்சோனைட்'' எனப்படும். இது கருப்பு நிறமுடையது; விலை சற்று அதிகம். இது விரைவாகக் காய வேண்டியதாக இருக்கும் நேர்வுகளில் பயன்படுத்தப்படுகிறது. இதுஒரு ஜப்பானிய மெருகு போன்ற விளைவினைக் கொடுக்கும். சாதாரண ஆஸ்பால்ட்டம் வண்ண மெருகெண்ணெய் முக்கியமாக வெப்பத்தையும் அமிலத் தன்மையையும் எதிர்க்கும் இயல்புக்காகப் பயன்படுத்தப்படுகிறது. மரம் போன்ற ஈர்க்கும் பொருள் மீது இதனைப் பூசினால் இதன் நிறம் கருப்பாகும். ஆனால், உலோகப் பரப்பின் மீது பூசும் போது அதன் நிறம் பழுப்பாக இருக்கும். மின்கலங்கள் தயாரிப்பதற்கு இது முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது.

**asphyxia**: *(நோ.)* **மூச்சுத்தடை**: இரத்தத்தில் போதிய அளவு ஆக்சிஜன் இல்லாததால் ஏற்படும் மூச்சுத் திணறல்.

**assay**: **கலவை அளவு மதிப்பீடு**: தாதுப்பொருளில் விலையுயர்ந்த உலோகம் எந்த அளவு அடங்கியிருக்கிறது என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகத் தாதுப் பொருள்களைப் பகுப்பாய்வு செய்தல்.

**assemble**: *(பட்.)* **(ஒன்றிணைத்தல்)**: ஓர் எந்திரத்தின் உறுப்புகளை அல்லது வேறு உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் பகுதிகளை அதனதன் இடத்தில் ஒருங்கிணைத்து வைத்தல்.

**assembled car**: *(தானி.)* **ஒன்றிணைத்த உந்து**: எஞ்சின்கள், அச்சுகள், இயக்குபிடிப் பல்லிணை, உடல் போன்ற பல்வேறு உறுப்புகளை தனித்தனித் தயாரிப்பாளர்

களிடமிருந்து விலைக்கு வாங்கி, ஒரு தொழிற்சாலையில் ஒருங் கிணைக்கப்பட்ட உந்து.

**assembling: ஒன்றிணைத்தல்:** ஓர் எந்திரவியலில் அடங்கிய உறுப்புகளை அந்தந்த இடத்தில் சரியாகப் பொருத்தி ஒன்றிணைத் தல்.

**assembly line: ஒருங்கிணைப்புப் பிரிவு:** பகுதி பகுதியாக உறுப்பு களைத் தயாரித்துப் பின்னர் ஒருங் கிணைத்து உந்துகளைத் தயாரிக் கும் முறை முதன்முதலில் உந்து தயாரிப்புத் தொழிலில் புகுத்தப் பட்டது. இன்று இந்த முறை ஏரா ளமான தொழில்களில் பயன்படுத் தப்படுகிறது. பொதுவாக இந்தப் பிரிவு இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கும். அது இயங்கும் போதே தொழிலாளர்கள் உறுப்பு களை இணைத்து விடுவார்கள்.

**assets: சொத்துடைமை:** கடன் கள் முதலியவற்றை அடைப்பதற் குக் கிடைப்பனவாகவுள்ள பணத் தொகை அல்லது மாற்றத்தக்க சொத்து.

**assimilation:** (உட.) **செறிமானம்:** உணவை உட்கொள்வதும், அதனை உடல் சத்துகளாக்கி எடுத் துக் கொள்வதும் செறிமானம் எனப்படும்.

**assume : புனைந்துகொள் :** ஆரா யாது ஊகஞ் செய்து கொள்ளுதல்.

**A-stage rasins:** (குழை.) **நிலை நிறுத்துப் பிசின்கள் :** சூட்டால் நிலையாக இறுகிவிடும் தன்மை யுடைய பிசின்கள். இவை கரையக் கூடியனவாகவும், எளிதில் உருகி இளகக் கூடியனவாகவும் இருக்கும். தொடக்க நிலையில் மட்டுமே வினை புரியக்கூடியவை. செறி வுறுத்துவதற்காகப் பயன்படுத்தப் படும் ஒரு பிசினின் இயல்பான நிலை இதுவாகும்.

**astatic galvanometer :** (மின்.) **நிலையற்ற மின்னோட்ட மானி :** நிலையற்ற ஊசிகளைப் பயன் படுத்தி பூமியின் காந்தத் தன்மை யின் விளைவினை மட்டுப்படுத்தக் கூடியதும் மிக நுண்ணிய மாறு பாடுகளையும் காட்டக் கூடியது மான ஒரு மின்னோட்ட மானி.

**asteroid:** (விண்.) **விண்கற்கள்:** செவ்வாய்க்கும், வியாழனுக்கு மிடையே கோள்களுடன் உட னொத்துக் கதிரவனைச் சுற்றிச் சுற்றிச் செல்லும் நுண்கோள்கள்.

**asthma:** (நோயி.) **மூச்சு இழைப்பு நோய் (ஆஸ்த்மா);** நுரையீரல் களுக்குச் செல்லும் குழாய்கள் திடீ ரெனச் சுருங்குவதால் ஏற்படும் மூச்சுத் தடையுடன் கூடிய இருமல் நோய்.

**astigmatism :** (நோயி.) **உருட்சிப் பிழை ;** கண்பார்வையின் முனைப் பமைதிக் கேடு.

**astragal :** (க.க.) **கண்ணறைத் தாங்கி :** ஒரு சிறிய அரைவட்ட வடிவ வார்ப்படம். இது அலங் கார வேலைப்பாடுகளுடனோ இல் லாமலோ இருக்கும். பெரும்பாலும் கதவுகளுக்கிடையிலான இணைப்பு களைத் தாங்குவதற்குப் பயன் படுத்தப்படுகிறது.

**astrobiology : வான்கோள் உயிரி யல் :** வான்கோளங்களிலுள்ள உயிர்களைக் கண்டுபிடித்து, அவற் றின் உயிர்வாழ்க்கை பற்றி ஆராய்ந்தறியும் அறிவியல் துறை.

**astrogation: விண்வெளி மீகாமம்:** விண்வெளியில் விண்வெளிக் கலங் களை அவற்றுக்குரிய திசைகளில் செலுத்துதல்.


**astronaut; விண்வெளி வீரர்:** விண் வெளியில் பயணம் செய்யும் வீரர். இவர் 'அண்டவெளி வீரர்' என் றும் அழைக்கப்படுவார்.

**astronics**: *(விண்.)* **விண்வெளி மின்னணுவியல்**: விண்வெளிப் பயணங்களின் தேவைகளுக்கேற்ப மின்னணுவியலை மாற்றியமைக்கும் அறிவியல்.

**astrophysics** *(இயற்.)* **வான்கோளவியல்**; வான்கோளங்களின் இயற்பியல், வேதியியல் பண்புகளை ஆராயும் அறிவியல். விண்மீன்களின் இயல்பு, அவற்றின் வேதியியல் தனிமங்கள், வெப்பநிலை, ஒளியாற்றல் முதலியவற்றை ஆராய்தல்.

**asymmetrical** : *(மின்.)* **பன்மடி அதிர்ப்பி**: ஏற்றத்தாழ்வான மின்கடத்திக் கால அளவுகள் காரணமாக ஒவ்வொரு குழலிலிருந்தும் சமமில்லாத அலைகளை உண்டாக்கும் பன்மடி அதிர்ப்பி.

**asymptote**: *(கணி.)* **தொடர் வரை**: வளைகோட்டுடன் இணையாது அணுகிக் கொண்டே செல்லும் நேர்க்கோடு.



தொடர் வரை

**asynchronous** : *(மின்.)* **கால இசைவின்மை** : ஒரே அலைவெண் கொண்டிராமல், இசைவு ஒவ்வாக் காலப் பண்பளவுடைய நிகழ்வு.

**atheroma** : *(நோயி.)* **தமனி வீக்கம்**: தமனிகளின் உட்படலம் தடித்தும் வீங்கியும் இருத்தல்.

**athlete's foot** : *(நோயி.)* **பாதத் தடிப்பு நோய்**: ஒரு வகைப் பூஞ்சணத்தினால் விளையாட்டு வீரர்களின் பாதத் தோலில் முரட்டுத்தனமும் எரிச்சலும் உண்டாக்கும் நோய்.

**atlas bone** : *(உட.)* **கழுத்தெலும்பு**: மண்டை ஓட்டைத் தாங்கும் கழுத்தெலும்புப் பூட்டு.

**atmosphere** : *(இயற்.)* **காற்று மண்டலம்** : பூமியையும், வேறு சில கோளங்களை சூழ்ந்திருக்கும் வாயுக்கள் சூழ்ந்த மண்டலம்.

**atmospherics** : *(மின்.)* **இடையோசைகள்** : வானொலி, தொலைபேசி போன்றவற்றில் ஏற்புகளைத் தடைப்படுத்தும் இடையோசைகள்.

**atmospheric pressure** : *(இயற்.)* **வாயு மண்டல அழுத்தம்** : பூமிக்கு மேலே உள்ள காற்றின் எடையினால் ஏற்படும் அழுத்தம். இந்த அழுத்தம் கடல் மட்டத்தில் ஒரு சதுர அங்குலத்திற்கு 14.7 இராத்தல் என்ற விகிதத்தில் இருக்கும். 14.7 இராத்தல் வாயுமண்டல அழுத்தமானது 29.92" உயரத்தில் பாதரசப் பத்தியைத் தாங்கி நிற்கும்.

**atom** : **அணு** : ஒரு வேதியியல் மாற்றத்தில் பங்கு கொள்கிற ஒரு தனிமத்தின் மிகச் சிறிய துகள் என ஓர் அணுவைக் கருதலாம். இது 'புரோட்டான்' எனப்படும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நேர் மின்னாற்றல் கொண்ட ஒரு கரு மையத்தைக் கொண்டிருக்கும் இந்த புரோட்டான்களைச் சுற்றி "எலெக்டிரான்கள்" எனப்படும் எதிர்மின்னாற்றல் கொண்ட உள்ளணுத் துகள்கள் சுழன்று கொண்டிருக்கும். ஓர் அணு, சமநிலை மின்னாற்றல் உடையதாக அமைந்திருக்கும்.

**atomic arc welding** : *(பற்.)* **அணுச்சுடர் பற்ற வைப்பு**: ஒரு வகைச்சுடர் பற்ற வைப்பு முறை. இதில், மின்சுடர் வழியாக ஹைட்ரஜன் செல்லும் போது அணு ஹைட்ரஜனாக மாறி, மறுபடியும் மூலக்கூற்று ஹைட்ரஜனாக மாறுவதால் பற்ற வைப்பதற்கான வெப்பம் உண்டாகிறது.

**atomic bomb** : **அணு குண்டு:** இது ஒரு வெடிக்கும் சாதனம். யுரேனியம் 235 அல்லது புளுட்டோனியத்தின் அணுக்களின் மையக்கரு சிதைவுறுவதன் மூலம் அந்தப் பொருள் எரியாற்றலாக மாறுகிறது. இது முதன்முதலில் 1945இல் நியூ மெக்சிக்கோவில் பயன்படுத்தப்பட்டது.

**atomic clock** : *(மின்.)* **அணு இயக்கக் கடிகாரம்** : இது மிகத் துல்லியமாக நேரம் காட்டும் கடிகாரம். இது ஒரு மின்னியல் அலைப்பி மூலம் இயக்கப்படுகிறது. ஓர் அணுவியல் அமைப்பின் இயற்கையான அதிர்வு அலைவெண் மூலம் முறைப்படுத்தப்படுகிறது.

**atomic energy** : **அணு ஆற்றல்** : பார்க்க: அணுவியல் ஆற்றல்.

**atomic hydrogen welding** : *(பற்.)* **அணு ஹைட்ரஜன் பற்ற வைப்பு** : இது ஒரு மாற்று மின்னோட்ட மின் சுடர் பற்ற வைப்பு முறை. இதில் ஒரு ஹைட்ரஜன் சூழலிலுள்ள இரு மின் முனைகளுக்கிடையிலுள்ள ஒரு மின் சுடரிலிருந்து வெப்பம் பெறப்படுகிறது.

**atomic number** : *(வேதி.)* **அணு எண்** : ஓர் அணுவில் உள்ள கோளக எலெக்ட்ரான்களின் எண்ணிக்கை.

**atomic theory** : *(வேதி.)* **அணுக் கொள்கை** : அனைத்துப் பொருள்களும் நுண்ணிய அணுக்கள் என்னும் உள்ளணுத் துகள்களாலானவை என்னும் கொள்கை.

**atomic weight** : *(வேதி.)* **அணு எடை** : மற்றொரு தனிமத்தைத் தர அளவுத் திட்டமாகக் கொண்டு ஒப்பிடும்போது ஒரு தனிமத்திலுள்ள அணுவின் எடை. பொதுவாக அந்த மற்றொரு தனிமம், ஹைட்ரஜனாக இருக்கும்; அதன் அணு எடை 1.

**atomization** : *(தானி.)* **அணுவாக்குதல்** : நீர்மங்களை நுண் திவலைகளாக மாற்றுதல்.

**atomize** : *(குளி.)* **அணுக்களாகக் குறை** : நீர்மம் எதனையும் புகை அல்லது தூசு போன்று தோன்றுமாறு நுண் திவலைகளாக்குதல்.

**atomizer** : **அணுவாக்கக் கருவி** : நீர்மங்களை நுண் திவலைகளாக்கும் ஒரு கருவி.

**atrium** : *(க.க.)* **வாயில் முகப்பு** : திருக்கோயில் மேடிட்ட வாயில் முகப்பு.

**attachment** : *(எந்.)* **இணைப்புக் கருவி** : ஓர் எந்திரத்தின் செயல் திறனை அல்லது செயல் தரத்தை மேம்படுத்துவதற்கு அதனுடன் இணைத்துக் கொள்ளத்தக்க ஒரு சாதனம்.

**attachment plug** : *(மின்.)* **இணைப்பு முளை** : நெகிழ் திறமுடைய ஒரு கட்டிழையின் நுனியில் இணைக்கப்பட்டுள்ள ஒரு சிறிய முளை. இதனைக் குதை குழியில்ஆதாரப் பலகையில் பொருத்தி ஒரு சாதனத்தில் மின்னோட்டம் பாயுமாறு செய்யலாம்.



இணைப்புமுளை

**attenuation** : *(மின்.)* **செறிவுக் குறைவு** : செறிவு வீச்சு குறைதல்.

**attenuator** : *(மின்.)* **செறிவுக் குறைப்பான்** : மின்அழுத்தம், மின் விசை அளவு, மின்னோட்டம் ஆகியவற்றின் செறிவினை வேண்டிய அளவுக்குக் குறைப்பதற்குப் பயன்படும் தடைகளின் தொகுதி.

**attic** : *(க.க.)* **மேன்மாடச் சிற்றறை**: இக்காலத்துக் கட்டுமானங்

களில் மேல் மாடத்தின் கூரைக்கும் முகட்டுக்கும் இடையிலுள்ள இடைவெளி. பண்டையக் கட்டுமானங்களில், கட்டிட உச்சியின் சிற்ப வேலைப்பாடு அமைந்த பிதுக்கத்திற்கு மேல் நீட்டிக் கொண்டிருக்கும் பகுதி.

**attic fan** : *(குளி.)* **புறம் போக்கி விசிறி** : கட்டிடத்திலிருந்து சூடான காற்றை வெளியேற்றி அக்கட்டிடத்தைக் குளிர்விப்பதற்கு கட்டிடத்தின் மேற் பகுதியில் உள்ள புறம் போக்கி விசிறி.

**attitude** : *(வானூ.)* **ஏற்றக் கோணம்** : ஒரு விமானம் தனது ஊடச்சின் சார்வு மட்டத்திலிருந்து அடிவானத்திற்கு மேலெழும் கோணத்தின் அளவு.

**attitude indicator** : *(வானூ.)* **ஏற்றகோணங்காட்டி**: அடிவானத்திற்கு மேலே விமானத்தின் நிலையை விமானிக்குக் காட்டக்கூடிய ஒரு சுழல்மானிக் கருவி. இதனை உயரங்காட்டி என்றும் அழைப்பர்.

**attraction** : *(மின்.)* **கவர்ச்சி** : மாறுபட்ட இரு காந்தத் துருவங்களுக்கு (வடதுருவம், தென்துருவம்) இடையே, அல்லது மாறுபட்ட இரு நிலையான மின்னேற்றங்களுக்கு (+, —) இடையே செயற்படும் இழுப்புவிசை அல்லது விசை.

**audio** *(i hear)* : **கேட்பொலி** : கேட்கும் ஒலியினைக் குறிப்பது. ஒலித்தகவல்களைக் கொண்டு செல்லும் மின்தூண்டு விசை.

**audio - frequency** : *(மின்.)* **கேட்பொலி அலைவெண்** : மனிதரின் காதுக்குக் கேட்கக்கூடிய அளவுக்கு மின்சுற்றுகளில் ஏற்றப்படும் மின்னேற்ற ஓட்டத்தின் விகிதம். இது வினாடிக்கு 16 முதல் 16,000 வரையிலான அதிர்வுகளைக் கொண்டிருக்கும்.

**audiometer** : *(மின்.)* **ஒலிமானி** : ஒலி அலைகளின் செறிவினை அளவிடுவதற்குப் பயன்படும் கருவி.

**audion** : *(மின்.)* **ஆடியோன்** : டாக்டர் லீ டிஃபாரஸ்ட் கண்டுபிடித்த முதலாவது மூன்று மின் முனைக் குழல்.

**auger**: *(க.வே.)* **துரப்பணம்**: மரத்தைத் துளைக்கக்கூடிய ஒருபெரிய கருவி. இதில், கருவிக்கும் செங்கோணத்தில் கைப்பிடி அமைந்திருக்கும். வெவ்வேறு நோக்கங்களுக்காக பல்வேறு வகை துரப்பணங்கள் செய்யப்படுகின்றன.



துரப்பணம்

**auger bit**: **தமரூசி** ; கைப்பிடியில்லாத ஒரு துளைக்குங் கருவி. இது இடுக்கி திருப்புளியில் பயன்படுத்தப்படுகிறது.



தமரூசி

**aural transmitter**: *(மின்.)* **காற்று மின்செலுத்தி** : தொலைக்காட்சி நிலையத்திலுள்ள ஒலிச் செய்திகளை ஒளிபரப்புவதற்கான செலுத்தி.

**auricle** : *(உட.)* *(1)* **காது மடல்** உயிரினங்களின் அடிக் காது மடல். *(2)* **இதய மேலறை**: இதயத்தின் மேலறைகள் இரண்டனுள் ஒன்று. இரண்டு கீழ



றைகளும் இறைப்பான்கள் போன்று செயற்படுகின்றன.

**auriferous : பொன் தருகிற; பொன் விளைகிற :** தங்கம் தருகிற அல்லது தங்கத்தை உட்கொண்டிருக்கிற ஒரு பொருள்.

**aurora :** *(விண்.)* **துருவ மின்னொளி:** இதனை வடதுருவ, விண்ணொளி (aurora borealis) என்றும், தென்துருவ விண்ணொளி (aurora australis) என்றும் கூறுவர். பூமியின் காந்தப்புலத்திலுள்ள புரோட்டான்கள் போன்ற மின்னேற்றிய துகள்கள், பூமியின் வாயு மண்டலத்துடன் வினைபுரிவதன் மூலம் மிக உயரத்தில் உண்டாகும் மின்னொளி.

**austenite :** *(உலோ.)* **ஆஸ்டினைட் :** பியர்லைட் உலோகம் வெப்பப் பெருக்கத் தாழ்நிலைக்கு மேல் உருமாறியிருக்கும் நிலை.

**austenitic alloy steels :** *(உலோ.)* **ஆஸ்டினைடிக் உலோகக் கலவை :** எஃகு படிக வகையினைச் சேர்ந்த இரும்பிலுள்ள கார்பனின் ஒரு திடக்கரைசலாகிய ஆஸ்டினைடிக் என்ற உலோகக் கலவையை முழுவதுமாகவோ, பெருமளவிலோ கொண்ட எஃகு. இத்தகைய எஃகு குறைந்த அளவு விறைப்பு விசையுடையது; மென்மையானது; எளிதில் வளைந்து கொடுக்கும் தன்மையுள்ளது; காந்தத் தன்மையற்றது. புகழ்பெற்ற பிரிட்டிஷ் உலோகவியல் வல்லுநரான சர் ராபர்ட்ஸ்ஆஸ்டின்என்பவரின் பெயரால் இது அழைக்கப்படுகிறது.

**autodyne receiver :** *(மின்.)* **தன் விசையழுத்த வானொலி :** மின்னலைத் தடங்காண் கருவியையும். மின் அலைப்பியையும் பயன்படுத்தும் வானொலி அலைவாங்கி மின் சுற்றுவழி.

**autogenous welding :** *(பட்.)* **தன் முனைப்புப் பற்றவைப்பு :** அழுத்தமூட்டுதலோ சம்மட்டியால் அடித்தலோ இல்லாமலும், எளிதில் உருகுவதற்காக உலோகத்துடன் சேர்க்கப்படும் கலவைப் பொருள் இல்லாமலும் கடும் வெப்பத்தினால் உருக்கி இளக்குவதன் மூலமாகவே உலோகங்களை ஒருங்கிணைப்பதற்கான ஒரு வகைப் பற்றவைப்பு முறை. எளிதில் உருகுவ்தற்காகச் சேர்க்கப்படும் கலவைப் பொருளும் பற்றவைப்புக் கோலும் பயன்படுத்தப்படுகின்ற வாயுப் பற்றவைப்பு முறைக்கும் இச்சொல்லமைப்புப் பொருந்தும்,

**autogiro :** *(வானூ.)* **சுழல் விமானம் :** இது ஒரு வகைச் சுழல் விமானம். இதில் ஏறத்தாழ ஒரு செங்குத்தான அச்சில் காற்றியக்க விசைகளின் மூலமாகச் சுழல்கின்ற காற்றழுத்தத் தளங்களிலிருந்து விமானத்திற்கு பறக்கும் போது ஆதாரம் கிடைக்கிறது. அத்துடன் சமச்சீரான எதிர்ப்புறங்களிலுள்ள மேல்நோக்கிய தூக்காற்றல்.

**auto-intoxication :** *(உட.)* **தன் னஞ்சூட்டல் :** உடலில் உற்பத்தியாகும் பொருள்களினாலேயே உடலில் ஏற்படும் நச்சுத் தன்மை.

**autolysis :** *(உட.)* **உயிரணு அழிவு :** உடலிலுள்ள உயிரணுக்கள் உடலினின்றும் வடியும் ஊன் நீரால் அழிதல்.

**automatic : தானியங்கி :** இயக்க விசை இணைப்புகளை எந்திரம் தானாகவே இயக்கிக் கொள்ளும் முறை. கையினால் இயக்கப்படாமல் ஓர் எந்திரம் தானாகவே இயங்கும்போது அது தானியங்கி எனக் கூறப்படுகிறது.

**automatic center punch :** *(எந்.)* **தானியங்கி மைய அழுத்து பொறி :** இதில், கைப்பிடிக்குள் அமைந்

துள்ள விற்சுருளால் கட்டுப்படுத்தப்படும் சம்மட்டியானது அழுத்தப்படும்போது போதிய விசையுடன் விடுபட்டு, உலோகத்தில் குறிப்பிட்ட இடத்தில் தாக்கி அதன் முத்திரையைப் பதிக்கும்.

**automatic choke** : *(தானி.எந்.)* **தானியங்கி அடைப்பு** : உந்தினைக் கிளப்பும்போது தானாகவே அடைப்பு இயங்கக்கூடிய மின் விசையால் கட்டுப்படுத்தப்படும் ஒரு சாதனம்.

**automatic circuit breaker** : *(மின்.)* **தானியங்கி மின் முறிப்பான்**: மின்னோட்டத்தின் வலிமையானது, முன்னரே தீர்மானிக்கப்பட்ட தகவான வரம்பினைத் தாண்டும் போது மின் சுற்றினை முறித்திடக்கூடிய ஒரு தானியங்கிச் சாதனம்.

**automatic clutch** : *(தானி.எந்.)* **தானியங்கி இறுக்கி** : இயங்குறுப்புகளை வெற்றிடம் வாயிலாக ஓடவும் நிறுத்தவும் செய்யும் பொறியமைவு.

**automatic cognition** : *(தானி.)* **தன்னுணர் திறன்** : ஓர் எந்திரம் உற்பத்தி செய்யும் பொருளைப் பாதிக்கும் மாறியல் மதிப்புருக்களை உணர்ந்து கொள்ள அந்த எந்திரத்திற்குள்ள திறன்.

**automoticity** : *(தானி.)* **தானியங்கு திறன்** : மனித ஆற்றலும் மூளையின் கட்டுப்பாடும் தேவைப்படும் கையால் இயங்கும் கருவிகள் போன்றவை தானாக இயங்குவதற்கு தேவையான குறைந்த அளவு திறன்.

**automatic cutout** : *(மின்.)* **தானியங்கி வெட்டுவாய்** : ஒரு மின் சுற்றிலிருந்து தக்க தருணத்தில் மின்னியல் உறுப்பு அல்லது இணைப்பு எதனையும் அகற்றுவதற்கான ஒரு மின்னியல் அமைவு.

**automatic pilot** : *(வானூ.)* **தானியங்கி வழிகாட்டி** : ஒரு விமானம் பறப்பதைத் தானாகவே கட்டுப்படுத்தக்கூடிய ஓர் அமைப்பு முறை. இது முன்விசையும் எந்திர நுட்பமும் ஒருங்கிணைந்து இயங்கக் கூடியது.

**automatic propeller** : *(வானூ.)* **தானியங்கி விமான உந்து விசிறி** : பறப்பதற்குரிய பல்வேறு சூழ்நிலைகளில், ஒரு விமானத்தின் உந்து விசிறியின் அலகுகளை மிகவும் உகந்த அளவு விசையுடன் தானாகவே சுழலும்படி செய்வதற்குரிய ஓர் எந்திர அமைவுடன் அலகுகள் இணைக்கப்பட்டுள்ள உந்து விசிறி.

**Automatic screw machine** : **தானியங்குத் திருகுப் பொறி** : மரையாணிகள், திருகாணிகள், செருகு வகைக் கப்பிகள் போன்ற சிறு உறுப்புகளை விரைவாகவும் துல்லியமாகவும் செய்வதற்கான ஒரு பொறியமைவு. இதில், உலோகச் சலாகை, தேவையான எந்திரத்திற்கு ஏற்றவாறு எந்திரத்திற்குள் செலுத்தப்படுகிறது. அவ்வாறு செலுத்தியபின் எந்திர இயக்கம் தானாகவே நடைபெறுகிறது.

**automatic shift** : *(தானி. எந்.)* **தானியங்கி திசை திருப்பி** : பல்லிணைப்புகளை ஒரு வேகத்திலிருந்து மற்றொரு வேகத்திற்கு மாற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள, செலுத்துப் பல்லிணைப்புக் கட்டுப்பாட்டு அமைவு. இது பெரும்பாலும் இறுக்கி மிதி கட்டையினை அமுக்குவதன் மூலம் செய்யப்படுகிறது.

**automatic spark control** : *(தானி; எந்.)* **தானியங்கி பொறி வினைக் கட்டுப்பாடு** : மின்விசை அல்லது எந்திர விசையிலான வெற்றிடம் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு விசை அமைவு. இதன்

வாயிலாக ஒவ்வொரு நீள் உரு ளைக்கும் நேரம் சீராக அமைக்கப் படுகிறது.

**automatic stability :** *(வானூ.)* **தானியங்கி உறுதிநிலை :** *தானாக இயக்கப்படும் இயக்கக் கட்டுப் பாடு மேற்பரப்புகளைப் பொறுத்த தாக இருக்கும் உறுதிநிலை.*

**automatic switch :** *(மின்.)* **தானியங்கி இணைப்பு விசை :** தேவையான நேரங்களில் தானா கவே திறந்து மூடுகிற ஓர் இணைப்பு விசை.

**automatic telephone :** *(மின்.)* **தானியங்கித் தொலைபேசி :** ஓர் இயக்குபவரின் துணையின்றித் தானாகவே இயங்கும் இணைப்பு விசைகள் மூலம் ஒரு தொடர்பினை முழுமையாக்க அனுமதிக்கின்ற ஒரு வகைத் தொலைபேசி.

**automatic welding:** *(பற்.)* **தானி யங்கிப் பற்றவைப்பு :** பற்றவைக்க வேண்டிய உறுப்புகளையும், ஒளிச் சுடரையும் தானாக இயங்கச் செய் யும் பற்றவைப்புச் சாதனம்.

**automation : தானியக்கம் :** செய் பொருளாக்கத்தின் எல்லாப் படி களையும் தானே இயங்கும் எந்தி ரத்தின் மூலம் கட்டுப்படுத்தும் முறைமை. இது மனித முயற்சியை மிச்சப்படுத்தும் அமைவு ஆகும்.

**automation: தானியங்கும் பொறி:** வாழும் உயிரினங்களின் செயல் களைத் தானாகவே, போலச் செய் யும் ஒரு சாதனம் அல்லது எந்திர முறை.

**auto mechanics : உந்தூர்தி எந் திரவியல்:** உந்தூர்திகளைப் பழுது பார்க்கவும் பராமரிக்கவும் பயனா கும் நடைமுறை அறிவியல்.

**automobile : உந்தூர்தி :** நீராவி, பெட்ரோல் அல்லது மின்விசை மூலமாகச் செலுத்தப்படும் ஓர் ஊர்தி. இந்தச் சொல் களிப்பு உந்துகள், வாணிக உந்துகள், வழங்குஉந்துகள், சரக்கு உந்துகள் ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

**automobile battery :** *(தானி; மின்.)* **ஊர்திச் சேமக்கலம் :** உந்து ஊர்தியின் இயக்கத்தையும், விளக்கு அமைவுகளையும் இயக்கக் கூடிய சேம மின்கலத் தொகுதி. மின்னியல் முறையில் இயங்கும் ஊர்திகளுக்கான மின்னோட்டத் தை வழங்கும் சேம மின்கலத் தொகுதி.

**automotive engineer : உந்தூர் திப் பொறியாளர் :** உந்தூர்திகளை வடிவமைப்பதிலும், உருவாக்குவதி லும், மேம்படுத்துவதிலும் தேர்ச்சி பெற்ற பொறியாளர். பொதுவாக எந்திர விசையால் இயங்கும் அனைத்து உந்தூர்திகளின் பொறி யாளரையும் இது குறிக்கும்.

**autonomic : தன்னியக்க உறுப்பு கள் :** மூச்சு மண்டலம், ஜீரண மண்டலம், இதய மண்டலம் போன்ற தன்னைத்தானே கட்டுப் படுத்திக் கொண்டும் இயங்கும் உடலுறுப்புகள்.

**autoplate :** *(அச்சு.)* **தானியல் அச்சுபாளத் தகடு :** உருவ அச்சில் அடித்த பகுதியைப் பாளமாக அட்டை முதலிய படிவுப் பொருள் களில் எடுத்து மறு அச்சிற்குப் பயன்படுத்தப்படும் வளைவான தகடுகளை வார்ப்படம் செய்து இழைத்து செவ்வொழுங்கு செய்து பயன்படுத்துவதற்கு ஆயத்தமாகத் தரக்கூடிய ஒரு பொறி அமைவு.

**auto pulse magnetic fuel pump:** *(தானி; எந்.)* **தானியியங்கிஅதிர்வுக் காந்தஎரிபொருள் இறைப்பி :** உந் தூர்தியிலுள்ள எரி-வளி கலப் பியில் எரிபொருள் அளவினைப் பராமரிப்பதற்காக மின்விசையி னால் இயக்கப்படும் ஒரு சாதனம்.

**auto-suggestion : உள்தூண்டுதல்** : ஒருவரின் உள்ளத்தில் உண்டாகும் தற்றூண்டல். ஒருவர் தான் நோயுற்றிருப்பதாகவும், நோயுறப் போவதாகவும் கருதுதல்.

**auto transformer :** *(மின்.)* **ஒற்றைச் சுருணை மின்விசை மாற்றி :** இது மாற்றிக் கொள்ளத்தக்க ஓர் ஈடுகட்டுச் சாதனம். இதில் மின்னோட்ட வேகத்தைத் தடுத்தாலும் திருகு கம்பிச் சுருள் ஒன்று மாறுமின்னோட்டச் சுற்றுகளில் செலுத்தப்பட்டு, அதன் மூலம் அதன் சுருணைகளில் வெவ்வேறு முனைகளில் வேறுபட்ட மின்னோட்டங்கள் பெறப்படுகின்றன. ஒரு கம்பிச் சுருள் மின்விசைமாற்றியிலிருந்து முதல் நிலை மாற்றும் துணை நிலை மின்னோட்டம் பெறலாம்.

**anxiliary : துணைவினை :** பொதுவாக, சார் நிலையான அல்லது துணை நிலையான உதவியை அல்லது ஆதரவினை அளிக்கும் செயல் இழுததிடும்போது துணைமையான செயல்.

**auxiliary air intake :** *(தானி.)* **துணை காற்று உள்வாய் :** உந்தூர்தி அதிவேகத்தில் இயங்கும் போது எரி-வளி கலப்பிக்குள் கூடுதலான காற்று செல்வதை அனுமதிக்கும் ஒரு திறப்பு வாய்.

**anxiliary airport beacon:** *(வானூ.)* **விமான நிலையத் துணை வழிகாட்டி ஒளி :** இது விமான நிலையங்களிலுள்ள பிரதான வழிகாட்டி ஒளிவிளக்குகளை விடக் குறைவான ஒளியாற்றல் கொண்ட ஒரு விமான வழிகாட்டி ஒளி விளக்கு. இது விமான நிலைய மனையில் விமான நிலையத்தின் குறிப்பிட்ட இருப்பிடத்தைக்குறித்துக்காட்டுவதற்காக விமான நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும். இது தொலைதூரத்திலிருந்து பார்க்கும் போது விமானநிலைய இருப்பிடத்தைக் காட்டுவதற்காக வைக்கப்பட்டிருக்கும் பிரதான வழிகாட்டி ஒளிவிளக்கிலிருந்து வேறுபட்டது.

**auxiliary air-valve carburetor:** *(தானி. எந்.)* **துணை நிலைக்காற்று ஓரதர் எரி-வளி கலப்பி :** எரிபொருள் கலவையின் திண்மையினைக் கட்டுப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட, ஒரு காற்று ஓரதர் கொண்ட எரி-வளி கலப்பி.

**auxiliary airway beacon :** *(வானூ.)* **வான்வழித் துணை வழிகாட்டி ஒளி :** இது வான் வழியிலுள்ள முதன்மையான வழிகாட்டி ஒளிவிளக்கு. இது வான் வழியிலுள்ள நிலப்பகுதியின் சிறப்பு அம்சங்களைக் குறித்துக் காட்டுகிற, அல்லது முதன்மை வழிகாட்டி ஒளிவிளக்குக்குத் துணையாக இருப்பது.

**average : சராசரி நிரலளவு:** இது இடைநிலையான ஒரு தொகை : தர அளவு, பல எண்களுக்குச் சரிசமமான இடைநிலையிலுள்ள நிகர அளவு.

**aviation :** *(வானூ.)* **வான்பயணக் கலை :** விமானங்களை இயக்குவதற்கான கலை அல்லது அறிவியல்.


**aviator :** *(வானூ.)* **வானூர்தியாளர் / வானோடி :** காற்றைவிடக் கனமான வானூர்தியின் வலவர்.

**avodire :** *(மர.)* **ஆவோடைர் மரம் :** பெட்டிகள் செய்வதற்கேற்ற நேர்த்தியான மரம். இதன் தாயகம் ஆஃப்ரிக்க மேற்குக் கடலோரம். இது 1925இல் அமெரிக்காவில் புகுத்தப்பட்டது. இதன் வண்ணம் மங்கலான வெண்மையிலிருந்து பொன் மஞ்சள் நிறம் வரை இருக்கும். இதற்கு அமெரிக்காவில் மிகுந்த கிராக்கி இருந்து வருகிறது.

**avionics :** *(மின்னி.)* **வான்பயண மின்னணுவியல் :** வான்பயண மின்னணுவியலைக் குறிக்கும் சொல்.

**A. w. G. (American wire gauge) :** அமெரிக்கக் கம்பி அளவி : மின்னியல் நோக்கங்களுக்காகப்பயன்படுத்தப்படும் கம்பிகளின் வடிவளவினைக் கணக்கிடுவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒரு தர அளவு.

**awl : தமருசி :** ஆணிகளிலும் திருகாணிகளிலும், இழையாகப் பயன்



தமருசி

படும். தோலிலும் துளையிடுவதற்கான ஒரு சிறிய கூர்நுனியுடைய கருவி,

**awl haft : தமருசிக் கைப்பிடி.**

**axial force :** *(பொறி.)* **ஊடச்சு விசை :** பட்டக வடிவிலான ஒரு பொருளின் பகுதியின் மீது ஒரே சீராகச் செயற்படுகிற ஒரு விசை. இதனால், அதன் இணைவாக்கு விளைவு, அந்தப் பொருளின் ஊடச்சுக்கு ஒருங்கிணைவாக இருக்கிறது.

**axial leads :** *(மின்.)* **ஊடச்சு முனைகள் :** ஓர் உள்ளுறுப்பின் ஊடச்சுடன் இணைக்கப்பட்டுள்ள முனைகள்.

**axial pitch :** *(எந்.)* **ஊடச்சு இடை வெளியளவு :** இதனைப் பொதுவாக 'இடை வெளியளவு' என்று அழைப்பர். ஒரு சுற்றுக்கு முன்னேறும் தூரத்தின் அளவு.

**axial - type engine :** *(வானூ.)* **ஊடச்சு வகைப் பொறி :** பிரதான சுழல். தண்டுக்கு இணையாகவும், அதிலிருந்து சமதூரத்திலும் உள்ள நீள் உருளைகளைக் கொண்ட ஒரு பொறி. இதில் ஒரு அரைவட்டத் தகடு, அல்லது சுழல் பல்வெட்டுத் தகடு அல்லது பல் லிணைப்புகள் வாயிலாக சுழல் தண்டுக்கு விசை மாற்றப்படுகிறது.

**axiom :** *(கணி.)* **வெளிப்படை உண்மை :** உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் உண்மைத் தத்துவம்.


**axis :** *(கணி.)* **செங்கோடு :** சில வடிவ கணித அல்லது எந்திரவியல் தொடர்புகளுக்கு இணையாகக் கருதப்படும் ஒரு நடுக்கோடு. ஒரு பொருள் எந்தப் புள்ளியைச் சுற்றி அல்லது எந்தக் கோட்டின் மீது சுழல்கிறதோ அந்தப் புள்ளி அல்லது கோடு.

**axis of symmetry :** *(வடி.)* **செவ்வொழுங்கு அச்சு :** இது ஒரு கற்பனையான மையக்கோடு. இதனைச் சுற்றி செவ்வொழுங்கான வடிவ உருவம் உருவாக்கப்பட்டு, அதில் புவியீர்ப்பு மையம் குறிக்கப்படுகிறது.

**axis of a weld :** *(பற்.)* **பற்றாசு ஊடச்சு :** பற்றவைப்பு உலோகத்தின் புவியீர்ப்பு மையத்திற்கு நெடுகிலும், பற்றவைப்பு உலோகத்தின் குறுக்கு வெட்டுப் பகுதிக்குச் செங்குத்தாகவுள்ள ஒரு கற்பனைக் கோடு.

**axle :** **இருசு :** உந்தூர்தி, பாரவண்டி. தள்ளுவண்டி முதலியவை போன்ற ஊர்திகளின் சக்கரங்களை தாங்கியுள்ள சுழல் தண்டு அல்லது சாதனம்.

**axon :** *(உட.)* **நரம்பணு வால் :** ஓர் உறுப்பில் நரம்பு முடிவடையும் இடத்திலுள்ள அல்லது மற்றொரு நரம்புடன் அது இணையும் இடத்திலுள்ள நரம்பு உயிரணுவுக்குச் செல்லும் நரம்பு இழை.



**ayrton galvenometer shunt :** *(மின்.)* **அயர்ட்டன் மின்னோட்ட மானி இடைக் கடத்தி :** சுருணைகளின் பெருக்க விசை எப்போதும் ஒரே அளவில் இருக்குமாறு சுருணைகள் அமைக்கப்பட்ட ஓர் இடைக் கடத்தி.

**azimuth of a line : கோட்டு முகட்டு வட்டை :** வானுச்சியிலிருந்து அடிவானம் வரையிலுள்ள செங்கோண வளைவு.

**azusa :** *(விண்.)* **சுழல் நெறித் தொடர் அமைவு :** ஒரு குறுகியவீச்சு சுழல் நெறித் தொடர் அமைப்பு. இது, பின் தொடரப்படும் ஒரு பொருளின் நிலையினையும் விரைவு வேகத்தையும் காட்டுகிறது.

# B

**b.x.** : *(மின்.)* **பி. எக்ஸ்.** : நெகிழ் திறமுடைய ஒரு கவச வடத்தின் வாணிகப் பெயர்.

**babbitt** : *(தானி.)* **பாபிட்** : வெள்ளீயம், ஆன்டிமணி, செம்பு, ஈயம் ஆகியவை அடங்கிய ஓர் உலோகக் கலவை. தாங்கிப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**babbitts metal** : *(உலோ.)* **மென் உலோகக் கலவை** : உராய்வினைத் தடுக்கும் மசகுப் பொருளாகப் பயன்படும் மென்மையான உலோகக் கலவை. இது, 50 பங்கு வெள்ளீயம், 2 பங்கு செம்பு, 4 பங்கு அஞ்சனம் கலந்து தயாரிக்கப்படுகிறது. மிகுந்த உராய்வுக்கு உள்ளாகும் எந்திரங்களிலும், பொறிகளிலும் தாங்கிகளுக்கு மசகு ஊட்டுவதற்கு இது பயன்படுத்தப்படுகிறது.

**back** : **முதுகுப் பகுதி** : (1) ஏடு முதலியவற்றின் மூட்டுப் பகுதி. (2) விலங்கினத்தின் மேற்பகுதி.

**backband** : *(க.க.)* **பின்கட்டுத் தளை** : ஒரு கட்டுமானச் சுவருக்கும் ஒரு சன்னலின் அல்லது கதவுக் கவிகையின் புறமுகப்புக்கும் இடையிலான இணைப்பை மூடியிருக்கும் வார்ப்படம் அல்லது மறைப்பு.

**backed up** : *(அச்சு.)* **பின்னிடைவுத் தாள்** : இருபுறங்களிலும் சீராக அச்சிடப்பட்ட தாள்கள் "தவறான பின்னிடைவு" எனக் குறிப்பிடுவது தவறாக அச்சிட்டிருப்பதைக் குறிக்கும்.

**back electromotive force** : *(மின்.)* **எதிர்மின்னியக்கு விசை** : அழுத்தப்பட்ட மின்னோட்டத்திற்கு எதிர்மாறான திசையில் ஒரு மின்னோட்டத்தைப் பாய்ச்ச முனைகிற அல்லது பாய்வதை எதிர்க்கிற மின்னியக்க விசையினை இது குறிக்கிறது.

**back filling** : *(க.க.)* : **பின்னடைத் தூர்ப்பு (தொல் பொருளியல்)** : வடிகால் அமைப்பதற்காக ஓர் அடித்தளத்திற்கு அல்லது நிலவறைக்கு வெளியேயுள்ள உடைந்து போன கல்லின் அல்லது மற்ற கரடுமுரடான பொருளின் இடைவெளியை இட்டு நிரப்புதல்.

**back fire** : *(தானி; எந்.)* **தவறித் தீப்பற்றுதல்** : உள்வெப்பாலை முதலியவற்றில் குறைபாடுடைய ஓரதர்கள், காலத் தாமதம், எரிபொருள் கலவையிலுள்ள குறைபாடு ஆகியவை காரணமாகக் காலஇடந்தவறித் தீப்பற்றுதல், பல்புழைவாய் எந்திர அறையில் உண்டாகும் வெற்றிடம், பின்னோக்கிய பயணத்திற்காகத் தீப்பற்றச் செய்கிறது.

**backfire** : *(பற்.)* **எதிர் அனல் பொறி** : உள்வெப்பாலை முதலியவற்றில் தூலம், இடந்தவறித் தீப்பற்றுதல்,

**back flow** : *(கம்.)* **பின்னோட்டம்** நீர் அல்லது சாக்கடை நீர் அதன் வழக்கமான போக்கிலிருந்து மாறி நேர் எதிர்த் திசையில் பாய்தல்.

**backflow valve** : *(கம்.)* **பின்னோட்ட ஓரதர்** : சாக்கடை நீர் பின்னோக்கிப் பாய்ந்துவிடாமல் தடுப்பதற்காக வீடுகளின் அல்லது பிறகட்டிடங்களின் வடிகால்களில் பொருத்தப்பட்டுள்ள ஒரு சாதனம். வடிகாலில் சாக்கடை நீர்ப்

பெருக்கம் ஏற்படும்போது அந்த நீர் பின்னோக்கிப் பாய்ந்து வீட்டுக்குள் புகுந்துவிடாமல் காப்பதும் வடிகாலுக்குச் சேதம் ஏற்படாமல் காப்பதும் தடுப்பதும் இதன் முக்கிய வேலை.

**back gear** : *(எந்.)* **பின்பல்லிணை**: இது பல்லிணைச் சக்கரங்களின் ஓர் அமைப்பு முறை. ஒரு கடைசல் எந்திரத்தின் தலைப்பாகில் உள்ளது போன்ற இயக்கும் வார்ப்பட்டையின் விசையை இதன் மூலம் அதிகரிக்கலாம்.

**backhand welding**: *(பற்.)* **பின்புறப் பற்றவைப்பு**: வாயுச்சுடர் எட்டும் திசைக்கு எதிர்த்திசையில் பற்றவைத்தல்.

**backing** : *(அச்சு.)* **பின்னிடைவு** *(1)* நூலின் பின்பகுதியை அதன் உறையினுள் பொருந்த அமையுமாறு வலுப்படுத்தி வடிவாக்கம் செய்தல்.

*(2)* மின் அச்சு முறையில், செப்புக் கலத்தைத் திண்மையாக்குவதற்காக அதில் உலோகத்தை இட்டு நிரப்புதல்.

**backing brick** : *(க.க.)* **பின்னிடைவுச் செங்கல்** : ஒரு செங்கற் சுவரின் உட்பகுதி. இது பெரும்பாலும் சுவரின் முகப்புப் பகுதிக்காகப் பயன்படுத்தப்படும் செங்கல்லை விட மலிவானதாகவும், செம்மையற்றதாகவும் உள்ளது.

**backing lamp** : *(தானி; எந்.)* **பின்னிடைவு விளக்கு** : பொதுவாக மின் விளக்கும், தடுப்பு விளக்கும் ஒருங்கிணைந்துள்ள ஒரு வகை விளக்கு. இது சீருந்து பின்னோக்கிச் செல்லும்போது மட்டுமே எரியும்.

**backing of a joist or rafter**: *(மர; வேலை.)* **துலாக்கட்டை அல்லது இறைவாரக் கைமர ஆதாரம்** : துலாக்கட்டைகளின் அகலம் மாறுபடுவதால் சம மட்டமுள்ள தளங்களை அல்லது முகடுகளை அமைப்பதற்காக, மேல் மட்டங்கள் அனைத்தும் ஒரே மட்டத்திற்கு வரும் வரையில் குறுகலான கட்டைகளைச் சம சதுக்கக் கட்டைகளாக்குதல்.

**backing of a wall** : **சுவரின் பின்னிடைவு** : ஒரு சுவரின் கரடுமுரடான உள்முகப்புகாரை உடைந்து படாமற் காக்கும் அணை சுவருக்குப் பின்னால் படுக்கையமைப்பாக இடப்படும் நிரப்புப் பொருள்.

**backing off** : *(பட்.)* **பின்னிடைவு நீக்கம்** : வெட்டும்போது ஏற்படும் உராய்வினைக் குறைப்பதற்காக, வெட்டு முனையின் பின்புறமுள்ள உலோகத்தை அகற்றி விடுதல். குழாய்களில் அல்லது உலோகத் துளைப்பான்களில் இதனைக் காணலாம்.

**backing out** : *(உலோ; வே.)* **பின்னிடைவு நீட்டம்** : ஒரு குழாயில் அல்லது வார்ப்புருப்படிவக் கட்டையில் ஒரு புரியை வெட்டி எடுத்தபிறகு எஞ்சியிருக்கும் பகுதி.

**backing plate** : *(குழை.)* **பின்னிடைவு தகடு** : உட்புகுத்திப் பள்ளம் நிரப்பிச் செய்யப்படும் வார்ப்படத்தில், உட்புழையுள்ள அச்சுக்கட்டைகள் இயக்கு முளை, இருசு உருளைகள் முதலியவற்றுக்கு ஆதாரமாக இருக்கும் ஒரு தகடு.

**backing-up** : *(க.க)* *(1)* **பின்னிடைவு ஆதாரம்** : ஒரு சுவரின் உள்முகப்புக்கு குறைந்த தரமுடைய செங்கற் கற்களைப் பயன்படுத்தி ஆதாரம் அமைத்தல்,

*(2)* **பின்புற அச்சு : (அச்சுக்கலை)** ஒரு காகிதத்தில் இரண்டாம் பக்கத்தில் அச்சடித்தல்.

**backlash :** *(தானி;எந்.)* **பின்னு தைப்பு:** இயக்கும் அழுத்தம் மாறு படும் பொழுது பல்லிணைகளின் ஓர் இணை அல்லது ஒரு தொடர் பின்னோக்கி நகருதல். இது பற்களுக்கு இடையில் விடப்படும் இடைவெளியின் அளவுக்குச் சமமானதாக இருக்கும்.

**back light:** **பின்புற ஒளி:** ஒரு பொருளுக்கு அதன் பின்புலமுள்ள ஓரிடத்திலிருந்து ஒளியூட்டுதல்.


**backout :** *(விண்,)* **எதிர்முகக் கணிப்பு:** ஏற்கெனவே செய்து முடித்த செயல்களை எதிர்முகமாகச் செய்தல்.

**back pressure :** *(தானி; எந்.)* **எதிர் அழுத்த விசை :** (1) எந்திரவியல்) ஓர் எஞ்சினில் தவறான காலத்திட்ட அமைப்பு, கரிமம் படிதல், அழுக்கடைந்த ஓசை மடக்கத் திண்டு ஆகியவை காரணமாக அந்த எஞ்சின் அதன் முழு ஆற்றலுடன் இயங்கத் தடை ஏற்படுகிறது. இதனால், எஞ்சினுடைய நீள் உருளைகளில் எதிர்முகமான விசை உண்டாகிறது. இதுவே எதிர் அழுத்த விசையாகும்.
(2) குழாய்களிலுள்ள காற்றழுத்தம் வாயு மண்டல அழுத்தத்தை விட அதிகமாக இருத்தல்.

**back - rake :** *(உலோ.)* **பின்சரிவு வறண்டி :** நுனியிலிருந்து பின்னோக்கிச் சரிந்து செல்லும் சாய்வினைக் கொண்ட வெட்டுகருவி.

**backrest :** *(எந்.)* **பின்னடை ஆதாரம் :** கடைசல் செய்தல் அல்லது பட்டையிடுதல் போன்ற வேலைகளின்போது நுட்பமான பொருள்களுக்கு அமைக்கப்படும் ஆதாரம்.

**backsaw :** *(மர.வே.)* **தடித்த புறமுடை ரம்பம் :** கத்திக்கு வலுவேற்றுவதற்கு முதுகுப்பகுதியில் விளிம்புடைய உலோக ரம்பம். இது மரத்தைக் குறிப்பிட்ட கோணத்தில் அறுப்பதற்கு ரம்பத்திற்குத் துணை செய்யும் ஓர் அமைவு ஆகும். இதனைப் பொருத்து முனை ரம்பம் அல்லது இசைப்புக் கூர் ரம்பம் என்றும் கூறுவர்.



ரம்பம்

**back siphonage .** *(கம்.)* **எதிர் தூம்புக்குழாய் இயக்கம்:** தூம்புக் குழாய்களில் அழுத்தம், வாயு மண்டல அழுத்தத்திற்குக் குறைவாக எதிர்மறை அழுத்தமாக இருத்தல்.

**backup :** *(அச்சு.)* **பின்புற அச்சு:** ஏற்கெனவே ஒரு புறம் அச்சிடப்பட்ட தாளின் மறுபுறத்தில் அச்சிடுதல்.

**backup side :** *(அச்சு.)* **பின்புற அச்சுப் பக்கம் :** ஏற்கெனவே ஒரு புறம் அச்சிடப்பட்ட தாளின் எதிர்ப்புறம்.

**back wave :** *(மின்.)* **எதிர் அலை:** தவறாகச் சமனமாக்கப்பட்ட மின்பெருக்கச் சுற்று வழிகள் காரணமாகத் தொடர்பற்ற நிலையில் ஒரு தொடர் அலை செலுத்தி முறையின்றி அலைகளை வெளிப்படுத்துதல்.

**bacteriology :** *(உயி.)* **பாக்டீரியா வியல்:** பாக்டீரியா என்ற நுண்மங்கள் பற்றி ஆராயும் உயிரியல்.

**bacteriolysion:** *(உயி.)* **நுண்ம அழிப்புப் பொருள்:** நுண்மங்களை அழிக்கும் உயிரின் தற்காப்புப் பொருள்.

**bacteiolysis:** *(உயி.)* **நுண்ம அழிவு:** உயிரின் தற்காப்புப் பொருளால் தோன்றும் நுண்ம அழிவு.

**bacteriosis:** *(நோயி.)* **நுண்ம நோய்:** நுண்மங்களால் ஏற்படும் செடியின் நோய்.

**bacteriostasis:** (நோயி.) **நுண்ணுயிர் அடக்கி/நுண்மம வளர்ச்சித்தடை:** பாக்டீரியா போன்ற நுண்மங்கள் உடலில் வளர்வதைத் தடுத்தல்.

**bacteriostatic:** (நோயி.) **நுண்மம வளர்ச்சித் தடைப்பொருள்:** பாக்டீரியா போன்ற நுண்மங்கள் வளர்வதைத் தடுக்கும் பொட்டாசியம் குளோரேட் போன்ற பொருள்கள்.

**bacterium:** (உயி.) **பாக்டீரியம்:** மிக நுண்ணிய உயிரி. இவை பெரும்பாலும் ஓரணுவால்ஆனது. இவற்றுள் சில நகர்ந்து செல்லக் கூடியவை. இவை தாவர இனங்களில் உண்டாகும் பூஞ்சணத்தை ஒத்த உயிர் வடிவங்கள். இவற்றுள் சில சிதைவினையும், நோய்களையும்உண்டாக்குகின்றன.எனினும், பெரும்பாலானவை பயனுடையவை. சில பாக்டீரியாக்கள் மண்ணில் வீழும் இறந்த உயிர்களை மட்கச் செய்து மண்ணோடு கலந்துவிடச் செய்கின்றன. வேறு சில பாக்டீரியாக்கள் காற்றிலிருந்து நைட்ரஜனை நிலைப்படுத்தித் தாவரங்கள் பயன்படுத்திக் கொள்ள உதவுகின்றன. பாக்டீரியா பற்றி ஆராய்வது பாக்டீரியாவியல் எனப்படும்.

**bad colour:** (அச்சு.) **தவறான வண்ணம்:** அச்சிட்ட தாளில் அளவுக்கு அதிகமாக அல்லது குறைவாக மை படிந்து உண்டாகும் தோற்றம்.

**bad copy:** (அச்சு.) **சீர்கேடான எழுத்துப்படி:** எளிதில் படிக்க முடியாத அளவுக்குச் சீர்கேடாகவுள்ள எழுத்துப்படி.

**badger:** (1) **கரடி மயிர்த் தூரிகை:** கரடியின் மயிராலான ஓவியத் தூரிகை.

(2) **அகல்தளப்பரப்பு:** சாய்வான வாயை உடைய அகன்ற மூலைப் பொருத்துவாய் கொண்ட தளப் பரப்பு.

**baffle plate:** (தானி.) **தடுக்குத் தகடு:** நீர், காற்று, வாயு, ஒலி போன்றவற்றின் போக்கினைத் தடுக்கிற அல்லது ஒழுங்குபடுத்துகிற தகடு.

**baffle plate:** **போக்கு மாற்றத் தகடு:** நீர்த்தன்மையுள்ள பொருளின் அல்லது வாயுவின் போக்கினைத தடுக்கும் அல்லது ஒழுங்கு படுத்தும் தகடு.

**bagasse:** (குழை.) **கரும்புச்சக்கை:** கரும்பிலிருந்து சர்க்கரை தயாரிக்கும்போது கிடைக்கும் கழிவுப் பொருள். இது காகித அட்டைகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**bag moulding:** (குழை.) **புடைப்பு வார்ப்படம்:** இருபுறமும் வழவழப்புடைய முப்பரிமாணமுள்ள செயற்கையான பிசின் வகை. மெருகேற்றிய தாள்படலங்களை வாணிக முறையில் தயாரிக்கும் ஒரு முறை. இதில் நெகிழ்வுடைய ரப்பர் அல்லது பிசின் பை வார்ப்படத்திற்குள் இறக்கப்பட்டு, பொருத்தப்பட்டு, காற்றழுத்தம் அல்லது வெற்றிடம் மூலமாகக் கட்டுறுதி வாய்ந்த வார்ப்படத்தில் அழுத்தப்பட்டு, வார்ப்பு வடிவம் தயாரிக்கப்படுகிறது.

**bail:** **அரை வளையம்:** வண்டி குடை சாய்வதைத் தடுக்கக்கூடிய குதிரை லாட வடிவிலான ஓர் அரை வளையம்.

**bail out:** (வானூ.) **வெளியிறங்குதல்:** வானூர்தியிலிருந்து குடைமிதவை மூலமாகக் கீழே இறங்குதல்.

**bakelite:** (குழை.) **பேக்கலைட்:** சூட்டால் நிலையாக இறுகிவிடுந் தன்மையுடைய குழைமைப் பொருள்களின் ஒரு தொகுதியைச்

சேர்ந்த ஏதேனும் பொருளுக்கான வாணிகப் பெயர். இது கடின மான ரப்பருக்கு அல்லது செல்லு லாய்டுக்குப் பதிலாகப் பயன்படுத் தப்படும் ஒரு செயற்கைப் பிசின்.

**baker - nunn camera :** *(விண்.)* **செயற்கைக்கோள் தடக்கண் காணிப்பு ஒளிப்படக்கருவி** : செயற் கைக் கோள்களின் தடத்தைப் பின் தொடர்ந்து கண்காணிப்பதற்குப் பயன்படும் ஒரு பெரிய ஒளிப்படக் கருவி.

**balance** : *(வானூ.)* **சமநிலை:** (1) வான் (பயணவியல்) வானூர்தி சீராக வானில் பறக்கும்போது இணைவாக்க விசைத் திறனும், நெம்புதிறனும் பூஜ்ஜியமாக இருக் கின்ற ஒருநிலை.

(2) *(கலை.)* கண்ணுக்கு மிகவும் கவர்ச்சியாக அமையும் வகையில் ஒரு கலைப்படைப்பின் உறுப்பு கள் அமையுமாறு செய்தல்.

(3) *(அச்சுக்கலை,)* அச்செழுத்துக் கோப்பு பல்வேறு பகுதிகளைக் கொண்டிருக்கும் போது, அவை பொருண்மையில் சமநிலையில் இருக்குமாறு அமைத்தல்.

(4) *(எந்திரவியல்)* எடைகளை நுண்ணியதாக நிறுத்திடக்கூடிய துலாக்கோல்.

**balanced amplifier** : *(மின்.)* **சமநிலை மின்பெருக்கி :** தள்ளுவிசை இழுப்பு விசை மின்பெருக்கியாக அல்லது தள்ளுவிசை, தள்ளுவிசை-மின்பெருக்கியாக இரு குழல்களை பயன்படுத்தும் மின்பெருக்கி.

**balanced backflow valve :** *(கம்.)* **சமநிலை பின்னோக்கப் பாய்வு ஓரதர்** : பின்னோக்கிப் பாய் வதற்கான வாயில் உள்ள ஓரதர்.

**balanced circuit** : *(மின்.)* **சமநிலைச் சுற்றுவழி:** : ஒன்றுக்கொன் றான தூண்டலின் விளைவினைத் தவிர்ப்பதற்காக அருகிலுள்ள மின் னோட்டச்சுற்று வழிகளுக்கிணங்க சரியமைவு செய்யப்பட்ட ஒரு மின்னோட்டச் சுற்றுவழி. ஒரு நிலைக் கம்பியின் ஒவ்வொரு பக் கத்திலும் ஒரே அளவு மின்விசை யைக்கொண்ட ஒரு முக்கம்பி அமைப்பு.

**balanced core** : *(வார்.)* **சமநிலை உள்ளகம்:** ஒரு முனையில் மட்டுமே ஆதாரமுடைய ஓர் உள்ளகம்.

**balanced modulator** : *(மின்.)* **சமநிலை அலைமாற்றி:** தள்ளுவிசை இழுப்பு விசையில் அல்லது தள்ளு விசை-தள்ளுவிசையில் இரு குழல் களைப் பயன்படுத்தும் அலை மாற்றி. இதில் ஊர்தி அலைவெண் நீக்கம் செய்யப்படுகிறது. ஊர்தி கள், ஒலி அலைமாற்றிச் சைகை ஆகியவற்றின் அலைவெண்களின் கூட்டுத் தொகையினையும் வேறு பாட்டினையும் மட்டுமே வெளிப் பாடு கொண்டிருக்கும்.

**balanced pulley: சமநிலைக் கப்பி:** தாங்கிகளின் மீது அளவுக்கு மீறி தளர்ச்சி ஏற்படுவதைத் தடுப் பதற்காக, செயலின்மையின் போ தும் இயங்கும்போதும் சம நிலை யில் இருக்குமாறு அமைக்கப்பட்ட ஒரு கப்பி.

**balanced surface**: *(வானூ.)* **சம நிலை மேற்பரப்பு:** சுழல் முனையின் இரு பக்கங்களிலும் நீட்டிக்கொண் டிருக்கும் ஒரு கட்டுப்பாட்டு மேற் பரப்பு. சுழல் முனையைச் சுற்றிக் காற்றின் இயக்கத்தைக் குறைக்கும் வகையில் இது அமைக்கப்பட்டி ருக்கும்.

**balance dynamic or running**: *(பட்.)* **சமநிலை விசையியக்க அல் லது ஓட்டமுறை:** சுழல்தண்டுகளை அல்லது கப்பிகள் அதிர்வு இல் லாத முறையில் ஓடுவதற்கு ஏற்ற வகையில் எடையினை உரியவாறு பகிர்ந்து வைத்தல்.

**balance, static or standing**: (பட்.) **சமநிலை,அசைவற்ற அல்லது நிலைபெற்ற**: கப்பிகளை அல்லது சுழல் தண்டுகளை கத்தி முனை களில் வைக்கும்போது, அவை எந்த நிலையிலும் நின்று கொள்ளும் வகையில் அவற்றின் எடை களைப் பகிர்ந்து வைத்தல். சம நிலை இல்லாவிடில், கனமான பகுதி, அடிமட்டத்திற்கு உருண்டு சென்றுவிடும்.

**balance weight** : **சமநிலை பேணும் எடைமானம்** : முழுமை யான சமநிலை கிடைக்கும் வகை யில் ஒரு சக்கரத்தின் உள் விளிம் பில் வைக்கப்படும் எடை. இந்த எடைமானம், ஒரு நெம்புகோலின் முனையின்மீது சறுக்கிச் செல்லும். இயங்கும் பகுதி ஒன்றின் சரிசம எதிர் எடையாக அதனுடன் இது இணைக்கப்பட்டிருக்கும்.

**balance wheel** : **எந்திர இயக்குச் சக்கரம்** : இது எந்திரத்தின் விசை யைச் சீராக இயங்கும்படி கட்டுப் படுத்தும் ஓர் அமைவு ஆகும்.

**balancing machine** : **சமன்செய் பொறி** : ஒரு சுழலும் தண்டு, சம நிலை பிறழ்ந்து இயங்கும்போது அது எந்த அளவுக்குச் சமநிலை பிறழ்ந்துள்ளது என்பதைக் கணக் கிட்டுக் காட்டி, அதனை எந்த அளவுக்குச் சீர்படுத்தவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும் ஒரு பொறியமைப்பு.

**balancing way** : (பட்.) **சமன் செய் தடம்** : சுழல் தண்டுகள் அல் லது கப்பிகள் நிலைபெற்ற சம நிலையில் இருக்கின்றனவா என் பதைச்சோதிப்பதற்காக அமைந்த தளமட்ட வார்ப்பட்டை அல்லது கூரிய முனைத் தகடு. இந்தத் தகடு பொதுவாகக் குண்டு தாங்கிகளில் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும்.

**balcony** : **மாடி முகப்பு** : ஒரு மாடிக் கட்டிடத்தின் சுவரிலிருந்து நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு மேடை அல்லது மாடம், இதனைச் சிறுதூண் வரிசைத் தொகுதி அல் லது கைப்பிடிச் சுவர் சூழ்ந்திருக் கும்.

**balk** : (மர. வே.) **தூல விட்டம்** : ஒரு சதுர உத்தரம் அல்லது மரத் தூலம்.

**balk ring**: (தானி; எந்.) **தூல வரி வளையம்**: பல்லிணைப்புகள் சீராக இயங்குவதற்கு உராய்வினை முறைபடுத்தக்கூடிய அடைகோல் அல்லது குண்டலம்.

**ball and claw foot**: **பந்து மற்றும் வளைநகக் கால்** : ஒரு வளை நகத் தால் பற்றிக் கொள்ளப்பட்ட ஒரு பந்தினைப் போன்று செதுக்கப் பட்ட கால்.

**ball and socket joint** : (உட.) **பந்துக் கிண்ண மூட்டு** : எலும்பு களுக்கிடையிலான மூட்டு. இதில் ஓர் உறுப் பின்முனை உருண் டையாகவும், இன் னொரு உறுப்பின் முனை கிண்ணம் போன்றும் அமை ந்து, உருண்டை முனை கிண்ணத் திற்குள் பொருந்திக் கொள்வதாக இருக்கும். இதனால் மூட்டுகளைச் சுதந்திரமாக அசைக்க முடிகிறது.



பந்து கிண்ண மூட்டு

**ballast** : **சரளைக் கல்** : சாலை— இருப்புப் பாதையின் உடைகல்லா லான அடிபரப்பு.

**ball bearing** : (தானி; எந்.) **குண்டு தாங்கி** : உராய்வு படாமல் தடுக்க உதவும் எஃகினாலான நுண்ணிய உருள் குண்டுகள்.

**ball check valve** : **குண்டுத் தடுப்பு ஓரதர்** : இத்தகைய ஓரதர் இயங்கும் பகுதி ஓர் இருக்கையில்

பொருந்தியுள்ளஒரு குண்டு ஆகும். அழுத்தம் ஏற்படும்போது இந்தக் குண்டு அதன் இருக்கையினின்றும் எழுந்து ஒரு திசையில் பாய்வதற்கு வழிவிடும். அழுத்தம் நீங்கியதும் அல்லது அழுத்தம் எதிர்த்திசைக்கு மாறும்போது இந்தக் குண்டு தன் இருக்கையில் மீண்டும் பொருந்தி அடைப்பினை உண்டாக்கும்.

**ball clay** : **உருண்டைக் களிமண்** மண்பாண்டம் செய்பவர் தமது சுழல் சகடத்தின் மையத்தில் உருண்டையாகத் திரட்டி வைக்கும் களிமண். இந்தத் திரள் களிமண்ணிலிருந்து அவர் பல்வேறு வடிவங்களில் மண்பாண்டங்களைச் செய்கிறார்.

**ball cock** : *(கம்.)* **குண்டு அடைப்பான்** : நீரின் மேற்பரப்பில் ஒரு குண்டு விழுவதால் அல்லது எழுவதால் திறக்கப்படுகிற அல்லது மூடப்படுகிற ஒரு திறப்படைப்பக் குழாய்.

**balling** : *(உலோ)* **பந்துருவாக்குதல்** : எஃகுக் குழம்பில் குமிழி போக்கும் எந்திரக் கருவியினுள் செலுத்துவதற்காக, ஊதுலையில் மெல்லிரும்பினை உருண்டைகளாக மாற்றுதல்.

**ballistics** : **ஏவுகணைகள்** : சுடுகருவிகளிலிருந்து அல்லது பீரங்கிகளிலிருந்து செலுத்தப்படும் உந்துவிசைப்படைக்கலங்கள்; அல்லது விமானத்திலிருந்து வீசப்படும் குண்டுகள்.

**ballistic missile early warning system** : *(மின்னி.)* **ஏவுகணை முன்னெச்சரிக்கைக் கருவி** : எதிரிகள் கண்டம் விட்டுக்கண்டம்செல்லும் ஏவுகணைகளைச் செலுத்தி தாக்குதல் நடத்த விருப்பதைக் கண்டுபிடித்து முன்னதாக எச்சரிக்கை விடுக்கும் ஒரு மின்னணுவியல் சாதனம்.

**ballistic missile interceptor**: *(மின்.)* **ஏவுகணை இடைத்தடுப்பான்**: பறந்துவரும் ஏவுகணையை இடைமறித்து அழிக்க கூடிய வெடிக்கவல்ல ராக்கெட் ஏவுகணை.

**ball mill**: **கோளகை அரைவை எந்திரம்**: காய்ந்த பொருளை பெரும்பாலும்பீங்கானைத்தூளாக்குவதற்கான அல்லது கலவை செய்வதற்காகப் பயன்படும் நீள் உருளை வடிவான ஓர் அரைவை எந்திரம். இதில் பெரும்பாலும் அறைப்பதற்காகக் கடினமான கூழாங்கற்கள் பயன்படுத்தப்படும். எனவே, இதனைக் கூழாங்கல்,அரைவை எந்திரம் என்றும் கூறுவர்.

**ballonet**: *(வானூ.)* **காற்றறைப் பை**: புகைக்கூண்டு அல்லது விண்கலத்திலுள்ள அறைபோன்ற ஒரு பகுதி. இதில் காற்றை அடைத்தும், இதிலிருந்து காற்றை வெளியேற்றியும் வாயுவின் அழுத்தத்தினை நிலைப்படுத்தி வரலாம்.

**baloon**. *(வானூ.)* **ஆவிக்கூண்டு**: இது காற்றைவிடப் பளு குறைந்த வான்கலம். இதில் செலுத்தும் பொறியமைவு இராது


**ballon framing**: *(க.க.)* **கூண்டுக் கட்டுமானம்**: அடித்தளத்திலிருந்து கூரை வரையில் கண்டமாகக் கட்டப்படும் குமிழ் முகப்பு.

துலாக்கட்டைகள், சாரப்படி மரப்பலகையின் ஆதாரத்துடனுங் கூடி குமிழ் முகப்புடன் தளர்வாக இணைக்கப்பட்டிருக்கும்.

**ballon tire**: *(தானி;எந்.)* **கூண்டுச் சூழ்பொதி**: குறைந்த காற்றழுத்தங்களுக்காக வடிவமைக்கப்பட்ட பெரிய, நெகிழ் திறனுடைய கவரும், குறைந்த அழுத்தமும் இருப்பதால் எளிதில் சவாரி செய்ய முடிகிறது.

**balbpeen hammer**: **குண்டு நுனிச் சுத்தி**: எந்திர இயக்கவல்லுநர்கள்

பொதுவாகப் பயன்படுத்தும் ஒரு





வகைச் சுத்தி. இதன் தலைப்பகுதியின் ஒரு முனை வட்டவடிவத்தின் அல்லது குண்டு வடிவத்தில் ஆணியால் பிணைப்பதற்கு ஏற்ற வகையில் அமைந்திருக்கும். மறு முனையின் பரப்புத் தட்டையாக இருக்கும்.

**ball race**: *(எந்.)* **ஓட்டப்பாட்டை:** குண்டு தாங்கியில் குண்டு ஓடுவதற்காக உள்ள வரித்தடம்.

**ball reamer**: *(எந்.)* **குண்டுத் துளைச் சீர்மி**: ஒரு குண்டு இணைப்பிற்காக உட்புழை அமைப்பதற்காக பயன்படுத்தப்படும் அரைக் கோள வடிவிலான புழை முக முடைய சீர்மி.

**ball stake** : **கூண்டு வடிவ முளை**:



கூண்டு முனை

வளைவான பொருள்களை வடிவமைப்பதற்கும், அவற்றில் வேலை செய்வதற்கும் பயன்படும் காளான் வடிவிலான முளை.

**ball tool** : *(தோல்.)* **குண்டு முனைக் கருவி** : குண்டு முனையை உடைய ஒரு சிறியநீளமான கருவி. தோல் பொருள்களில் புடைப்பு வடிவமைப்புகளை உண்டாக்குவதற்கு இது பயன்படுகிறது.

**balsa** : *(மர.)* **தக்கைமரம்** : மேற்கிந்தியத் தீவுகளிலும், மத்திய அமெரிக்காவிலும் வளரும் ஒரு வகை மரம், இதன் கட்டமைப்பு ஓரளவுக்கு எலுமிச்சை மரத்தையும் நெட்டிலிங்க மரத்தையும் ஒத்திருக்கும். இது மிகவும் இலேசானது; அதேசமயம் வன்மை வாய்ந்தது. எனவே, இது விமானங்கள் செய்வதற்கு உகந்த மரமாகப் பயன்படுகிறது.

**balsam fir** : *(மர.)* **குங்கிலிய ஊசியிலை மரம்** : இது நடுத்தர வடிவளவுடையது; என்றும் பசுமையாக இருப்பது;12-15 மீட்டர் உயரம் வளரக் கூடியது. இதன் மரம் எளிதில் முறியக்கூடியது; இது நெடு நாள் நீடித்திருக்காது. இது கிறிஸ்துமஸ் மரமாக மட்டுமே பெருமளவில் விற்பனையாகிறது. இதற்கு வாணிக மதிப்பு ஏதுமில்லை.

**balsams** : *(வேதி; குழை.)* **பொன் மெழுகு** : விரைந்து ஆவியாகிற எண்ணெய்ப் பொருளுடன் கலந்து கிடைக்கும் பிசின்கள் அடங்கிய இயற்கையான பொன் மெழுகின் இயற்பியல் பண்புகளைக் கொண்ட பொருள்களையும் இது குறிக்கும்.

**baluster** : *(க.க.)* **கைப்பிடிச் சுவர்த் தூண்** : ஒரு திறப்பான மாடிப்படியில் கைப்பிடிச் சுவரினைத் தாங்கும் மரத்தினாலான சிறுதூண் அல்லது கம்பம்; சிறு தூண் வரிசைத் தொகுதியின் ஓர் அலகு, கைப்பிடிச் சுவர்த் தூணின் புறக் கோட்டச் சாய்வு.

**balustrade** : *(க.க.)* **தூண் வரிசை** மாடிக் கைப்பிடிச் சுவர் அல்லது மதிலின் சாய்வான மேல் முகடு ஏறி நிற்கின்ற சிறிய தூண்களின் அல்லது சதுரத் தூண்களின் வரிசைத் தொகுதி.

**bamboo** : **மூங்கில்** : வெப்ப மண்டலங்களில் வளரும் மரம் போன்ற புல்வகை. . அரைகலன்கள், பிரம்புகள், தூண்டிற் கோல்கள் முதலியவை செய்ய இது பயன்படுகிறது.

**banana oil** : *(மர. வே.)* **வாழை எண்ணெய்** : இது ''அமில் அசிட்டேட்'' என்ற நச்சுப்பொருளாகும். இது வேதியியல் வடிவில் சிறிதளவு கிடைக்கிறது. இதன் மணம் காரணமாக இப்பெயர் பெற்றது. இது மரம், உலோகம் முதலியவற்

றுக்கு மெருகூட்டுவதற்குப் பயன் படுகிறது.

**bancatin : பங்க்கா வெள்ளீயம்:** இதுஓர் உயர்தரமான வெள்ளீயம். இது மலாக்காவிலும் பங்க்காவி லும் கிடைக்கிறது.

**band :** *(க.க.)* **வண்ணக்கரைப் பட்டை :** (1) ஒரு கட்டிடத்தின் கோபுரத்தை அல்லது பிற பகுதி களைச் சுற்றியுள்ள தளமட்ட மான அகன்ற பட்டையுள்ள சிற் பம் அல்லது சிற்பத் தொகுதி. இதன் மேற்பகுதியிலும், கீழ் விளிம்புகளிலும் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டி ருக்கும்.

(2) அறைகலன்களின் மேற்பரப் புக்கு மெருகூட்டுவதற்கு வண்ணத் தில், அல்லது அரிமணிகளில் பட் டையாக அமைக்கப்படும் சுற்று வரிப் பட்டை.

(3) புத்தகக் கட்டுமானத்தில், புத்தகத்தின் முதுகுப் பகுதியி லுள்ள மூட்டு வார்.

**banding :** *(க.க.) (அச்சு.) (மர. வே.)* **வண்ணக்கரைப் பட்டையிடு தல்:** வண்ணக்கரைப் பட்டை அல் லது சுற்று வரிப்பட்டை மூலம் அலங்காரம் செய்தல்.

**band iron : சிப்பத்தகடு:** கப்பலில் கொண்டு செல்லும் சிப்பங்களைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப் படும் மெல்லிய இரும்புத் தகடு.

**band saw : வட்டப்பல் வாள் :** வாள் போன்று அறுப்பதற்குரிய பற்களிணைந்த வட்டச் சங்கிலி. இது கப்பித் தொகுதிகளின் மேல் ஓடி மரங்களை வெட்டும்.

**band switching :** *(மின்.)* **பட்டை மின் இணைப்பு விசை :** வானொ லிப் பெட்டியின் ஏற்பு அலை வெண் வீச்சினை மாற்றிக் கொள் ளக் கூடிய மின் இணைப்புவிசை.

**band twisting :** *(பட்.)* **பட்டைத் திருக்கு :** வட்டப்பல் வாளினைச் சுருட்டி மடக்குவதற்காக அமைக் கப்பட்டுள்ள நூதனத் திருக்கு மறுக்கம்.

**bandwidth : பட்டை அகலம் :** தொலைக்காட்சியில் கண் அல்லது செவிப்புலன் சைகைகளை அனுப்பு வதற்குத் தேவைப்படும் அதிர்வுப் பட்டையில் ஒரு வினாடியில் சுழ ற்சிகளின் எண்ணிக்கை. தற்போது தொலைக்காட்சியில் ஆறு மெகா சைக்கிள் அகலமுள்ள அலை வரிசைகளில் ஒளி—ஒலிச் சைகை கள் அனுப்பப்படுகின்றன.

**bandy leg : வளைகால் :** அறை கலன்களில் வளைகாலுள்ள அல் லது கோணற்காலுள்ள அறை கலன் தட்டுமுட்டுப் பொருள் களின் வளைகால் பாணி.

**banister : கைப்பிடி :** படிக்கட்டுக் கைப்பிடிக் கம்பித் தொகுதி.

**banister back : கைப்பிடி மேற் புறம் :** கைப்பிடிபோல் அமைக்கப் பட்டுள்ள, நாற்காலியின் சாய் பகுதி போன்ற மேற்பகுதி.

**bank:** *(வானூ.)* **ஒரு புறச்சாய்வு:** (1) விமானத்தைத் திருப்புவதற் காக அல்லது அதன் திசையை மாற்றுவதற்காக அதனைப் பக்க வாட்டில் ஒருபுறமாகச் சாய்த்தல். வலப்புறச் சாய்வுக்கு விமானத்தின் வலது இறகு கீழே இறக்கப்படும்.

**banker : அடைகல் :** மணிக்கற் களில் வேலைப்பாடுகள் செய்வதற் குப் பொற்கொல்லர்கள் பயன் படுத்தும் அடைகல்.

**banking transformers :** *(மின்.)* **மின்மாற்றித் தொகுதி :** மின்மாற்றி களை ஒரு தொகுதிகளாக ஒருங்கு சேர்த்து வைத்தல்.

**bank of lamps:** *(மின்.)* **விளக்குத் தொகுதி :** ஒரே அடித்தளத்தின்

மீது பொருத்தப்பட்டுள்ள பல மின் விளக்குகளின் தொகுதி. ஒரு சுற்றில் இணைக்கப்படவிருக்கும் ஒரு மின்னாக்கி. மின் மின்னழுத்த அளவினைக் குறிக்க இது பயன்படுகிறது.

**bar** : **சலாகை** : *(உலோ.)* *(1)* அகலத்தைவிட நீளம் அதிகமாகவுள்ள ஓர் உலோகத் துண்டு.

*(2)* அச்சுக்கலையில், அச்செழுத்துகளை பிணைத்துப் பிடிக்கும் இரும்புச் சட்டத்தின் குறுக்கே அது பரவிவிடாதவாறு தடுப்பதற்கு மையத்தில் வைக்கப்படும் உலோகத் துண்டு.

**bare faced tenon** : *(மர. வே.)* **மூடியில்லாப் பொருத்து முளை**: பிரம்புகள், தூண்டிற் கோல்கள் முதலியவை செய்ய இது பயன்படுகிறது.

**bar folder** : *(உலோ.)* **சலாகை மடிப்பான்** : உலோகத் தகடுகளில் வேண்டிய கோணங்களில் மடிப்பதற்குப் பயன்படும் ஒரு சாதனம்.

**barge board** : *(க.க.)* **அலங்கார மறைப்பு** : மஞ்சடைப்புத் தூலங்களுக்கான அலங்கார மறைப்பு. 19ஆம் நூற்றாண்டின் கடைசி 25 ஆண்டுகளில் இத்தகைய மறைப்பு பெரும்பாலும் அலங்காரத்திற்காகவே அமைக்கப்பட்டன.

**bar iron** : *(பட்.)* **சலாகை இரும்பு**: அடித்து வடிப்பதிலும் பட்டறைகளிலும் பயன்படுத்தப்படும் தட்டையான செவ்வக வடிவமான இரும்புத் துண்டு.

**barite** : *(வேதி.)* **பாரைட்டு** : *($Ba\ SO_4$)* : வெண்படிகங்களாகக் கிடைக்கும் ஒருவகைக் கனிமம். இது நுண்மணிகள் வடிவிலும் கிடைக்கிறது. இதன் கெட்டியான வடிவம் பளிங்குக் கல் போன்றிருக்கும்.

**barium** : *(வேதி.)* **பேரியம்** : **(Ba)**; இது வெண்மையான உலோகத் தனிமம். இது சற்றே ஒளிரக் கூடியது; இது ஓரளவுக்கு வளைந்து கொடுக்கக் கூடியது. பேரியம் உப்புகளிலும், உலோகக் கலவைகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

**barium titanate**: *(மின்.)* **பேரியம் டைட்டானேட்** : மின் பாய்வு இயல் மாற்றியில் பயன்படுத்தப்படும் ஒரு கூட்டுப் பொருள்.

**bark tannage**: *(தோல்.)* **மரப்பட்டைத்தோல் பதனிடுதல்** : கருவாலி போன்ற மரவகைகளின் பட்டையைப் பயன்படுத்தித் தோலினைப் பதனிடுதல்.

**bark**: *(தாவர.)* **மரப்பட்டை**: மரத்திற்குக் காப்பாக இயற்கையாக அமைந்துள்ள பட்டை.

**barley twist** : **சுருள் வட்டத் திருக்கு**: சுருள் வட்டமான சுழற்சி.

**bar magnet** : *(மின்.)* **சலாகைக் காந்தம்** : *(1)* வளையாத நிரந்தரக் காந்தம்.

*(2)* சலாகை வடிவில் செய்யப்பட்ட ஒரு நிரந்தரக் காந்தம்.

**barograph** : *(வானூ.)* **அழுத்த வரைவி** : காற்றழுத்தத்தைத் தானாகவே பதிவு செய்யக்கூடிய ஒரு காற்றழுத்த மானி.

**barometer** : **காற்றழுத்த மானி** : வாயுமண்டலத்தில் காற்றழுத்தத்தினைக் குறித்துக் காட்டுவதற்கான ஒரு கருவி. வானிலை முன்னறிவதற்கும், கடல் மட்டத்தின் மேல் உயரங்களைக் கண்டறிவதற்கும் இக்கருவி பயன்படுகிறது.

**baroque** : **விசித்திர பாணி** : *17, 18* ஆகிய நூற்றாண்டுகளில் கட்டடக் கலையில் மனம்போன போக்கில் கையாளப்பட்ட விசித்திரமான கலைப் பாணி.


**barrel vault :** *(க.க.)* **பீப்பாய் வடிவக் கவிகை மாடம்** *: உட்குழி வான நீள் வடிவமுடைய கவான் கள் கொண்ட வில் வளைவான முகடு.*

**bar stock :** *(உலோ.)* **உலோகச் சலாகை :** *ஒழுங்கான வடிவளவு களிலும் நீளங்களிலும் உள்ள, செய்து உருவாக்கிய உலோகச் சலாகைகள்.*

**basal metabolism:** *(உயி.)* **அடிப் படை உயிரியல் மாறுபாடு** *: உயிர் களின் உடலினுள்ளே இயற்பொரு ளான உணவுச் சத்து, உயிர்ச் சத்தாகவும், உயிர்ச்சத்து மீண்டும் இயற்பொருளாகவும் மாறுபடும் அடிப்படையான உயிர்ப் பொருள் மாறுபாடு. ஒருவர் குறிப்பிட்ட வெப்ப நிலையிலும் சூழ்நிலைகளி லும் முழு ஓய்வில் இருக்கும்போது அவரது உடலில் ஆக்சிஜன் பயன் படுத்தப்படும் அளவு, கார்பன்டை யாக்சைடு உற்பத்தியாகும் அளவு ஆகியவற்றைக் கொண்டு அவரு டைய அடிப்படை உயிரியல் மாறு பாட்டு வீதம் கணக்கிடப்படு கிறது.*

**basalt** *: (மண்.)* **தீக்கல்** *: எரி மலைப் பாறையினாலான, திண் ணிய பசுமை நிறமுடைய ஒரு வகைப் பாறை. இது சாலைப் படுக்கைகள், சாலை—இருப்புப் பாதையின் உடைகல்லான அடிப் பரப்புகள் முதலியவற்றுக்குப் பயன்படுத்தப்படுகிறது.*

**bascule bridge :** **இயங்கு பாலம் :** *எடைக் கட்டியினால் உயர்த்த*



இயங்கு பாலம்

*வும் தாழத்தவும் படுகிற ஒரு வகைப் பாலம்.*

**base :** *(வேதி.)* **உப்பு மூலம் :** *(1) நீரில் கரையும்போது ஹைட்ரஜன் அயனிகளை உண்டாக்கும் ஒரு பொருள்.*

*(2) வேறெந்த எதிர்மின் அயனி களையும் கொண்டிராமல், (OH) அயனிகளை மட்டுமே கொண்டி டிருக்கும் நீர்க் கரைசல் உண் டாக்க உதவும் ஒரு பொருள்.*

*(3) அமிலங்களுடன் இணைந்து அவற்றின் அமிலத் தன்மைகளை இழந்திடச் செய்யும் திறனுள்ள ஒரு கூட்டுப் பொருள்.*

*(4)* **அடித்தளம்:** *அறைகலன் வகை யில் அவற்றின் அடிப்பகுதி.*

*(5)* **பீட அடிக்கட்டை** *: இறைச்சிக் கொட்டிலில் பீடமாகப் பயன் படும் மர அடிக்கட்டை.*

*(6)* **விதானத் தொங்கல்** *: ஒரு படுக் கையின் கீழ்ப்பகுதியிலுள்ள இருக்கை தட்டுமுட்டுப் பொதிவுப் பட்டாடை.*

**base board:** *(க.க.)* **அடிப்பலகை:** *சாந்து பூசிய சுவர் தரையைத் தொடுமிடத்தை மறைக்கும் ஓரப் பலகை.*

**base circle** *: (பல்.)* **அடித்தள வட்டம்:** *பல்லிணைப்பு இழுத்தலில் உள்முகமாகத் திரும்பிய பல்லா னது எந்த வட்டத்தின் மீது அமைந்துள்ளதோ அந்த வட்டம்.*

**base course :** *(க.க.)* **அடித்தள வரிசை** *: கட்டிடத்தின் பிற பகுதி களைத் தாங்கி நிற்கக்கூடிய முதல் தள வரிசை அல்லது அடித்தள வரிசை.*

**base line :** *(க.க.)* **அடிமூலவரை :** *நில அளவை வகையில் முக்கோண நில அளவைக்கு அடிப்படையான அடிமூலவரை.*

**basement :** *(க.க.)* **நிலவறை:** *ஒரு கட்டிடத்தின் பிரதான தளத்திற்கு அடியில் அமைந்துள்ள அடித்தளப் பகுதி.*

**basemetal :** *(உலோ.)* **இழிந்த உலோகங்கள் :** விலை மதிப்புக் குறைந்த உலோகங்கள், செம்பு, ஈயம், துத்தநாகம் போன்ற உலோகங்கள் காற்றில் சூடாக்கப் படும்போது எளிதில் நிறம் மாறி விடும். இவை இழிந்த உலோகங் கள். தங்கம், வெள்ளி போன்றவை உயர்ந்த உலோகங்கள்.

**base molding: அடித்தளச் சித்திர வேலைப்பாடு :** சுவர், தூண் அல் லது அடிப்பீடத்தின் அடித்தளத் திற்கு அடுத்து மேலுள்ள சித்திர வேலைப்பாடு.

**base of a column :** *(க.க.)* **தூணின் அடிக்கட்டு :** தூணின் முனை முகட்டுக்கும் அடிப்பீடத் திற்கும் இடையிலுள்ள பகுதி.

**base plate or bed plate :** *(எந்.)* **அடியடுக்குத் தகடு :** ஓர் எந்திரத் திற்கான அடித்தளத் தகடு அல்லது ஆதாரம்.

**base trim :** *(க.க.)* **அடிபீடம் :** அடிப்பலகையில் இருப்பதுபோல், ஒரு வேலையைச் செய்வதற்கான அடிக்கட்டையாகப் பயன்படக் கூடிய ஒரு பலகை அல்லது பீடம்.

**basic load :** *(வானூ.)* **அடிப் படைப் பளு :** விமானம் நிலையில் நிற்கும்போது அதிலுள்ள பளு. இந்த அடிப்படைப் பளு, தகை வினைப் பகுப்பாய்வு செய்வதற் குத் தேவை.

**basic slag :** *(உலோ.)* **காரச் சிட்டம் :** எஃகு தயாரிக்கும்போது ஊதுலைகளில்படியும் சுண்ணாம்பு, பாஸ்வரம் கலந்தகூட்டுப்பொருள். இது பயிர் வளர்ச்சியை மேம் படுத்த உரமாகப் பயன்படுகிறது.

**basic steel :** *(உலோ.)* **அடிப் படை எஃகு :** இது பெஸ்ஸமர் முறைப்படி செய்யப்பட்ட எஃகு, காய்ச்சி உருகு நிலையிலுள்ள கட்டிரும்பூடகக் காற்றோட்டக் கீற்றுகளைப் பிரியவிட்டு அதி லுள்ள கரி-கன்மம் ஆகியவற்றை நீக்கும் முறை இதுவாகும். இத னைத் ''திறந்த உலை முறை'' என்னும் ஆழமற்ற மூட்டு அனல் உலை முறை மூலமும் செய்யலாம். கடந்த 20 ஆண்டுகளில் பெஸ்ஸ மர் முறைக்குப் பதிலாகத் திறந்த உலை முறையே பயன்படுத்தப் பட்டு வருகிறது.

**basic weight :** *(அச்சு.)* **அடிப் படை எடை :** குறிப்பிட்ட வடிவள வுள்ள குறிப்பிட்ட தாள் எதற் காகவுமான குறிப்பிட்ட தர அளவு எடை. இது ஒரு ரீமுக்கு இத்தனை கிலோ கிராம் என்று குறிப்பிடப்படும்.

**basil :** *(எந்.)* **சாய்கோண முனை:** துரப்பணத்தின் அல்லது உளியின் சாய்கோண முனை.

**basket :** *(வானூ.)* **கூண்டு:** ஆவிக் கூண்டின் அடியில் பயணிகளையும் அடிச்சுமையினையும் ஏற்றிச் செல்வதற்காகத் தொங்கவிடப் பட்டுள்ள ஊர்தி.

**bas-relief : புடைப்புச் செதுக் கோவியம் :** பின்னணி அரை அகழ் வான புடைப்புருச் செதுக்கோவி யம்.

**bass boost :** *(மின்.)* **உகைப்பு மின் சுற்றுவழி :** குறைந்த அலை வெண் ஒலியை செறிவுறுத்தி அதிகரிப்பதற்குப் பயன்படும் ஒலி மின்சுற்றுவழி.

**bass compensation :** *(மின்.)* **ஒலிச் சரியீடு:** தாழ்ந்த அலைவெண் ஒலியைக் குறைந்த தொனியிலும் உயர்ந்த அலைவெண் ஒலியினை அதே தொனியிலும் கேட்பதற்கு மனிதரின் காது இயலாதிருப் பதைச் சரியீடு செய்வதற்கான ஒரு மின்னணுவியல் மின் சுற்றுவழி.

**basset table**: **சீட்டாட்ட மேசை**: ஆன் அரசி காலத்திய சீட்டாட்டத்திற்குரிய ஒருவகை மேசை.

**bassi-net**: **பிரம்புத் தள்ளுவண்டி**: கூடைவடிவில் அமைந்த குழந்தைகளுக்கான மூடாக்கமைந்த சிறு பிரம்புத் தொட்டில்.

**bass reflex** : *(மின்.)* **ஒலிபெருக்கி அடைப்பான்** : தாழ்ந்த அலை வெண் ஒலிகளை மீண்டும் உண்டாக்கி ஒலியின் விளைவினை அதிகரிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள ஓர் ஒலி பெருக்கி அடைப்பான்.

**bass response**: *(மின்.)* **ஒலி மின் பெருக்குத்திறன்**: தாழ்ந்த அலை வெண் ஒலிவீச்சினைப் பெருக்குவதற்கு ஓர் ஒலி மின் பெருக்கிச் சாதனத்திற்குள்ள திறன்.

**basswood**: **எலுமிச்சை மரம்**: **(tilia americana)** 18-2 மீட்டர் உயரம் வரை வளரும் ஒரு பெரிய எலுமிச்சை இன மரவகை. இதன் மரம் நுண்துளைகளையுடையது; ஒளியைச் சிதற வைக்கத் தக்கது. இதன் நிறம் இலேசான பழுப்பு முதல் முழு வெண்மை நிறம் வரையில் இருக்கும். இதன் எடை ஒரு கன அடிக்கு 14 கிலோ. இதில் நுண்ணிய வேலைப்பாடுகள் செய்வது எளிது. இது காகிதக் கூழ், அறைகலன்கள், ஓரளவுக்கு விமானங்கள் செய்யப் பயன்படுகிறது.

**bast**: *(பட்.)* **உள்மரப் பட்டை**: எலுமிச்சைஇன மரத்தின் நாரியல் வாய்ந்த உள்மரப்பட்டை. இது கயிறுகள், கப்பல் வடங்கள், பாய்கள் செய்யப் பயன்படுகிறது. இதன் வெட்டுமரம் உயர்ந்த தரம் வாய்ந்தது.

**bastard-sawed**: *(உலோ.)* **வெட்டு அரம்**: சொர சொரப்பான பகுதிகளைவெட்டுவதற்கான ஓர் அரம்.

**bat**: *(க.க.)* **செங்கல்துண்டு**: செங்கல் உடைந்த ஒரு துண்டு.

**batch**: **தொகுதி**: வார்ப்புருக்களின் ஒரு தொகுதி போன்று முழுமையானதெனக் கருதப்படும் ஏதேனும் ஒன்றின் அளவு. கற்காரைத் தொகுதி போன்றது; ஒரு கலவையின் அளவு.

**batter** : **பாத்திக் முறைத் துணி அச்சு** : துணியில் சாயம் போட வேண்டியிராத பாகங்களுக்கு மெழுகு பூசி எஞ்சிய பாகங்களில் வண்ணப்படங்களை அச்சிடும் கீழை நாட்டு முறை.

**battery clip**: *(மின்.)* **மின் இணைப்பு ஊக்கு**: ஒரு சேம மின் கலத் தொகுதியின் முனைகளுக்குத் தற்காலிக இணைப்புகள் கொடுப்பதற்கான பெரிய விற்சுருள் பிடிப்பு ஊக்கு.

**battery resistance**: *(மின்.)* **மின் கலத்தடை**: ஒரு மின்கலத் தொகுதியில் உள்ள தகடுகளுக்கும் மின் பகுப்புக் கரைசலுக்குமிடையிலான உள்முகத் தடை.

**battery** : **தளம் பாவு பலகை** : (1) தளம் பாவுதற்குப் பயன்படும் மரப்பலகை,

(2) கப்பலில் உராய்தலைத் தடுப்பதற்குத் தூலத்தின் மேல் ஆணியடித்துப் பொருத்தப்படும் மரத் துண்டு. கப்பல் பாய்மரத்திலுள்ள ஆப்பு முனையும் இப்பெயரால் அழைக்கப்படும்.

(3) பட்டுத்தறியில் ஊடு நூலைச் செறிவாகத் தள்ளும் இயங்கு சட்டம்.

**batten door**: *(க.க.)* **அள்ளுகதவு** வரிக் கண்டங்களைக் குறுக்காக வைத்து ஆணி அடித்து மடக்கி இறுக்கிய மேற்கவசமிட்ட ஒரு கதவு.

**batten down** : **அள்ளுகள் அமைத்தல்**: கரும் கித்தான், வரிக்கண்டங்

கள் அல்லது அள்ளுகள் கொண்டு வலுவாகப் பொருத்துதல்.

**battening** : *(குழை.)* **அள்ளு வேலைப்பாடு** : சுவர் அல்லது சட்டத்தின் பேரில் அள்ளுகள் அமைந்த மர வேலைப்பாடு.

**batter** : *(க. க.)* **உள்பக்கச் சாய்வு** (1) ஒரு சுவரின் முகப்பு குத்துக் கோட்டிலிருந்து உள்பக்கமாகச் சாய்ந்திருத்தல்; ஒரு சுவர் நிலத் தளத்திலிருந்து மேல்நோக்கிப் பாய்ந்திருத்தல்.

(2) அச்சுக்கலையில் ஓர் எழுத்துரு முழுமையாக அச்சாகாமலிருப்பதற்காக அதன் முகத்தினை அடித்து நசுக்கிப் பள்ளமாக்கி விடுதல்.

**battery** : *(மின்.)* **மின்கலத் தொகுதி** : அடிப்படை அல்லது சேம மின்கலங்கள், மின் விசை யேற்றிகள் அல்லது நேர்மின்னாக்கிகள் பலவற்றை மின்விசை உற்பத்திக்கான ஒரே ஆதாரமாக, ஒரே தொகுதியாக அடுக்கி வைத்தல்.

தனியொருமின்கலத்தையும் இதே பெயரால் தவறாக அழைக்கின்றோம்.

**battery acid** : *(மின்.)* **மின்கலம் அமிலம்** : ஒரு சேம மின்கலத் தொகுதியில் மின்பகுப்பானாகப் பயன்படும் அமிலம். இது பெரும் பாலும் கந்தக அமிலமாக இருக்கும்.

**battery capacity** : *(மின்.)* **மின் கலத்திறன்** : ஒரு சேம மின்கலத் தொகுதியிலிருந்து கிடைக்கும்மின்னோட்டத்தின் அளவு. இது ஆம்பியர் மணி அளவாகக் கணக்கிடப்படும்.

**battery charger** : *(மின்.)* **மின் கலத் தொகுதி மின் செறிவூட்டி** : ஒரு மின்கலத் தொகுதியில் மின் விசைச் செறிவூட்டுவதற்கான ஒரு மின்னியல் சாதனம். இது பெரும பாலும் மாறு மின்னோட்டத்தை நேர்மின்னோட்டமாக மாற்றுகிறது.

**battery container or battery case** : *(மின்.)* **மின்கலக் கொள் கலம்** : தனிமங்களும் மின் பகுப்பான்களும் வைக்கப்படும் கனமான ரப்பர் அல்லது பிளாஸ்டிக் பொதியுறை.

**battery ignition system** : *(தானி; எந்.)* **மின்கலச் சுடர் மூட்டும் முறை** : மின்கலத்தொகுதி மூலமாகத் தொடக்க நிலையில் மின்னோட்டம் செலுத்திச் சுடர் மூட்டும் முறை.

**battery voltage** : *(தானி; எந்.)* **மின்கலத் தொகுதி மின்னழுத்தம்** : ஒரு மின்கலத் தொகுதியின் முனைகளின் ஊடே உள்ள மின்விசை அழுத்தம்.

**battlement** : *(க.க.)* **கொத்தளம்** : (1) படைகள் மறைந்து சுடுவதற்கு பீரங்கி வாய்களுக்கான வெட்டுத் தடங்கள் கொண்ட கைப்பிடிச் சுவர். இது இரண்டு அரண்புழைச் சாய்வுகளுக்கிடையேயுள்ள கைப் பிடிச்சுவரின் பகுதியுமாகும்.

(2) அறைகலன்களில் இத்தகைய வடிவமைப்பு அலங்காரத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**baume scale** : **'பாமே' அளவி** : திரவங்களில் குறிப்பாகப் பெட்ரோலியப் பொருள்களின் வீத எடைமானத்தினை அளவிடுவதற்கான ஒரு சாதனம். இந்தச் சாதனத்திற்குப் பதில் இப்பொழுது அமெரிக்கப் பெட்ரோலிய நிறுவனத்தின் அளவி பெரும்பாலும் பயனுக்கு வந்துவிட்டது.

**bauxite** : *(கனி.)* **பாக்சைட்** : இது அலுமினியம் கலந்துள்ள அலுமினியம் ஹைட்ராக்சைடு என்னும் தாதுப் பொருளாகும். இது வெள்

ளை முதல் சிவப்பு வண்ணத்தில் மண்ணிலிருந்து தோண்டியெடுக் கப்படுகிறது. அலுமினிய உலோ கத்திற்கு இதுவே முதன்மையான ஆதாரம். இது அலுமினியம், அலு மினா தயாரிக்கவும், அதி வெப்பத் திற்குச் சூடாக்கப்படும் ஊதுலை களின் உள் பூச்சுக்காகவும் பயன் படுகிறது.

**bay** : *(வானூ.)* **இடைவெளி :** (1) விமானத்தின் கட்டுமானச் சட்டத்தின் ஆதாரக் கட்டுமானத் தின் முகப்புப்பகுதியின் ஒரு பகுதி. இது அண்டை அறைத் தடுப்பு களுக்கு அல்லது அண்டை விட்டக் காழ்வுகளுக்கு இடையில் இருக்கும்.
(2) கட்டிடக் கலையில் இரு தூண் களுக்கு அல்லது மதில்களுக்கு இடையிலான இடைவெளி.

**bayonet socket** : *(மின்.)* **ஈட்டி வடிவக் குதைகுழி :** பக்கங்களில் நீள வாக்கில் இரு வடிவளவுத் தடங் கள் அடியில் செங்கோணத் திருப்ப முடையனவாக இருக்கும். இத னால், இரு செருகிகள் கொண்ட ஒரு விளக்கினை இந்தத் தடங் களுக்குள் செலுத்தி அதற்குச் சற் றுத் திருப்பத்தைக் கொடுக்கலாம்.

**baywood** : **புன்னைமரம்** : சீமை நூக்கு போன்ற, ஆனால் அதை விட மிகவும் இலேசான ஒரு மென் மரம். இது புனை வடிவங்கள் செய்யப் பயன்படுகிறது. இதனை 'பிலிப்பைன் நூக்கு' என்றும் அழைப்பர்.

**bazooka** : **உந்துகலம்** : ராக் கெட்டுகளை விண்வெளியில் உந் தித் தள்ளுவதற்கான ஒரு துப் பாக்கி. இது இரு முனைகளிலும் திறந்திருக்கும். தோளில் வைத்துக் கொண்டு இதனைப் பயன்படுத்து வர்.

**beaching gear**: *(வானூ.)* **உருள் பல்லிணை** : ஒரு கடலூர்தியின் உடற்பகுதியுடன் இணைந்த சக் கரங்களின் அமைவு. இது அந்த ஊர்தியைக் கரையிலிருத்துவதற்கு அனுமதிக்கும்.

**beacon** : *(க.க.)* **கலங்கரை விளக் கம்** : கப்பல் அல்லது விமானங்க ளுக்கு வழிகாட்டுவதற்கான ஒளி விளக்கு அல்லது ஒளிவிளக்குகளின் தொகுதி அல்லது வேறு வழி காட்டு சாதனம்.

**bead** : *(க.க.)* **குமிழ் மணி** : (1) கட்டிடக் கலையில் குமிழ் மணி வரிசை உருவ அழகு வேலைப் பாடு.
(2) சக்கரப் புறத்தோட்டின் குமிழ் புடைப்பு.

**beading** : *(உலோ.)* **மணியுரு அமைவு** : அலங்கார வேலைப்பாட் டிற்காக மணியுரு அமைத்தல்.


**beading machine**: *(உலோ.)* **மணியுரு அமைப்புப் பொறி**: உலோ கத் தகடுகளில் பல்வேறு வடிவங் களிலும் வடிவளவுகளிலும் மணி யுரு அமைப்பதற்கு உதவும் பொறி யமைவு. இது பாத்திரங்களில் அலங்கார வேலைப்பாடுகள் செய் வதற்கும் அவற்றை வலுப்படுத்து வதற்கும் பயன்படுகிறது.

**bead plane** : *(மர. வே.)* **மணியு ருதளம்**: மணியுருக்களை அமைப் பதற்குப் பயன்படும் தனிவகைத் தளம்.

**beaker**: *(வேதி.)* **மூக்குக் குவளை**: ஆய்வுக் கூடங்களில் பயன்படுத் தப்படும் மூக்குடைய ஊற்று கலம். இது பெரும்பாலும் கண்ணாடியா லானது.

**beakhead** : *(க.க.)* **கொடு மூக்கு முகடு**: கட்டிட உச்சியின் சிற்ப வேலைப்பாடு அமைந்த பிதுக்க மாகிய எழுதகத்தின் மிகத்தாழ்ந்த உறுப்பில் பயன்படுத்தப்படும் சித்திர வேலைப்பாடமைந்த விளிம்பு.

**beakhorn stake :** *(உலோ.)* **கொடுமுக்குக் கொம்பு வடிவமுளை:** ஒரு முனை உருண்டையான நுனி நோக்கிச் சிறுத்துச் செல்வதாகவும் மறு நுனி நீளமாகவும், செவ்வக வடிவிலும் அமைந்ததாகவும் உள்ள ஒரு முளை. இதனைச் சதுரமானதும், கூம்பு வடிவுடையதுமான பொருள்களை வளைத்து வடிவுருக்கள் உண்டாக்கப் பயன்படுகிறது.


கொம்பு முனை

**beam** : *(வானூ.) (1)* **வானொலித் திசைகாட்டி** : விமான மீகாமத்தில் திசைகாட்டிச் செல்லக்கூடிய ஒரு வானொலிச் சாதனம்.

*(2)* ஓர் இறகின் பிரதான குத்துக் கோல்.


*(3)* ஒரு விமானத்தின் பக்கத்தின் உருவரைத் தோற்றம்.

*(4)* உத்தரம்/தூலம்.

**beam anchor** : *(க.க.)* **தூல ஆதாரம் :** தளத் தூலங்களைச் சுவர்களுடன் பிணைப்பதற்குப் பயன்படும் ஓர் ஆதாரம்.

**beam ceiling** : *(க.க.)* **தூல முகடு** : இதில் தூலங்கள் அவை போலியாயினும் உண்மையானவையாயினும், வழக்கமாகக் கிடைமட்டத்தில் பார்வைக்குப் புலப்படுமாறு அமைக்கப்பட்டிருக்கும்.

**beam compass** : *(பட்.)* **தூலத் திசைகாட்டி :** முனைகளைத் தக்கவாறு அமைத்துக் கொள்ளக்கூடிய வகையில் அமைந்த ஒரு பெரிய திசைகாட்டி. இது ஒரு நூலகத்துடன் அல்லது ஒரு மர அல்லது உலோகச் சலாகையுடன் இணைக்கப்பட்டிருக்கும். பெரிய வட்டங்களை அல்லது வளைவுகளை வரைந்து காட்டுவதற்கான அறைகளிலும், பட்டறைகளிலும் இது பயன்படுத்தப்படுகிறது.



**beam drill :** *(எந்.)* **தூலத் துரப்பணம்** : இது ஆரைக்கால் துரப்பணம் போன்றது. இதில் இரு முனைகளிலுமுள்ள புயங்கள், இழைப்புப் புளியின் குறுக்குக் கைப்பிடி போன்று ஆதாரம் கொண்டிருக்கும்.

**beam pattern** : *(தானி; எந்;)* **தூலத் தோரணி** : முகப்பு விளக்குகளின் ஒளி படரும் பரப்பின் வடிவளவு அல்லது பரப்பளவு.

**beam power tube** : *(மின்.)* **மின் கதிர்க் குழல் :** எதிர்மின் முனையிலிருந்து செறிவுறுத்திய மின்கதிர்க் கற்றையாகப் பாயும் எலெக்ட்ரான்கள் மின்கம்பி வலை வழியாகத் தகட்டுக்குச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ஒரு குழல்.

**bearer** : *(அச்சு.)* **தாங்கு தகடு** : ஒரு தகட்டின் அச்சிடும் பரப்புக்குள்ளே அல்லது அதனைச் சுற்றி உள்ள மிகை உலோகம்; கையினால் மை தடவி, அச்சுப் பார்வைப் படி எடுக்கும்போது ஒரு தகட்டின் பக்கததில் வைக்கப்படும் ஓர் உலோகத் தகடு.

**bearing :** *(க.க.)* **தாங்குத் தளம் :** *(1)* ஆதாரங்களின் மீது நிற்கும் தூலம், தாங்கணைவு முதலியவற்றின் பகுதி.

*(2)* எந்திரவியலில் சுழலும் தண்டுக்கான ஆதாரக் கட்டு அல்லது ஊர்தி.

**bearing cap** : *(எந்.)* **தாங்கு தலை :** ஒரு சுழலோட்டத் தாங்கியின் மேற்பாதி.



தாங்கு தலை

**bearing metal :** *(உலோ.)* **உராய்வு தாங்கு உலோகம் :** சுழலோட்டத் தாங்கிகளைச் செய்வதற்கு அல்லது அதில் உள்வரிப் பூச்சுக்குப் பயன்படக்கூடிய, உராய்தலைத் தாங்கக் கூடிய வெண்மையான உலோகங்கள் மற்றும் பித்தளை, வெண்கலம் போன்ற பல் வேறு உலோகக் கலவைகள்.

**bearing partition:** *(க க.)* **தாங்கு நிலைத் தடுப்புச் சுவர் :** சுவருக்குச் சுவராக இடும் தளக் குறுக்குக் கட்டைகளையும் அவற்றின் மேலுள்ள மற்றத் தடுப்புச் சுவர்களையும் தாங்கி நிற்கும் ஒரு ஒரு தடுப்புச் சுவர்.


**bearing plate** : *(பொறி.)* **தாங்கு தகடு** : ஒரு சுவரின் மேல் நிற்கும் ஒரு தூலத்தின் தட்டையான விளிம்பின் கீழுள்ள ஒரு தகட்டினைப் போன்று, ஒரு குறிப்பிட்ட பளுவினைப் பிரித்துப் பரப்புவதற்குத் தேவையான அளவு கனமும் பரப்பளவும் கொண்ட ஒரு தகடு. இந்தத் தகடு 5 செ.மீ. கனத்திற்கு மேற்பட்டதாக இருந்தால் அதனைப் பாளம் என்பர்.

**bearing projector :** *(வானூ.)* **தாங்கு நிலை ஒளி எறிவு கருவி:** நில எல்லைக் குறிகாட்டும் விளக்குகளுடன் இணைந்து பயன்படுத்தப் படும் ஒரு நிலையான திசையில் அமைந்துள்ள ஒளி எறிவு கருவி. இதன் ஒளிக்கற்றையின் திசையினைக் கொண்டு விமானம் தரையிறங்கும் நிலப்பகுதியின் திசையினைக் கண்டு கொள்ளலாம்.

**bearing surface:** *(பொறி.)* **தாங்கு நிலை மேற்பரப்பு :** பளு பிரித்துப் பரப்பப்படும் ஒரு மேற்பரப்பு.

**bearing wall :** *(க.க.)* **தாங்கு சுவர் :** ஒரு பாரத்தைத் தாங்குகின்ற சுவர்.

**beat frequency :** *(மின்.)* **ஒலி அலைவெண் :** ஒழுங்கான இடைவெளிகளில் எழும் இரு சைகைகளின் செறிவினைக் கூட்டவும் குறைக்கவும் செய்வதன் மூலம் உண்டாகும் அலைவெண். இரு சைகைகளை ஒன்றாக இணைப்பதன் வாயிலாகக் கூட்டு விளைவு அலைவெண் பெறப்படுகிறது.



ஒலி அலைவெண்

**beat frequency oscillator :** *(மின்.)* **ஒலி அலைவெண் அலைப்பி:** ஒலி அலைவெண் உண்டாக்குவதற்குத் தொடர்ச்சியான ஒலி அலையை உண்டாக்கும் ஓர் அலைப்பி.

**beat note** : *(மின்.)* **ஒலிச் சுரம் :** இரண்டு வேறுபட்ட அலைவெண்கள் ஒன்றாக ஒலிக்கும்போது கிடைக்கும் மாறுபட்ட அலைவெண்.

**bed:** *(எந்.)* **படுகை:** *(1)* ஒரு கடைசல் பொறியில் தலைமுனை தாங்கி, வால்முனை தாங்கி, ஊர்தி ஆகியவற்றைத் தாங்கி நிற்கும் பகுதி.
*(2)* கட்டுமானத்தில் சுவரின் செங்கற்களை அல்லது கற்களை அவற்றின் வரிசைமுறைப்படி வைப்பதற்கான கிடைமட்ட மேற்பரப்புகள்.

**bed charge** : *(வார்.)* **படுகைச் செறிமானம் :** இரும்பு வார்ப்படத் தொழிற்சாலை அடுப்பின் அடிப் பரப்பில் உள்ள கல்கரி அடுக்கு. முதல் அடுக்குச் செறிமானத்தை அச்சுருச் செறிமானம் என்றும் அழைப்பர்.

**bedding** : *(வார்.)* **அடையடுக்கு :** இழுவைக் குடுவையில் மண்

அடைத்து, தோரணியான நிலையில் நிறுத்துவதற்கான ஒரு வார்ப்படச் செய்முறை. இதில் தோரணியைச் சுற்றி மணல் உறுதியாகத் திணிந்து, இறுகிக் கொள்ளும்.

**bedford limestone** : **பெட்ஃபோர்டு சுண்ணாம்புக்கல்** : அமெரிக்காவில் கிடைக்கும் மிக நேர்த்தியான சுண்ணாம்புக்கல் வகை. இந்தியானா மாநிலத்திலுள்ள பெட்ஃபோர்டு என்னுமிடத்திலிருந்து இது மிகுதியாகக் கப்பலேற்றப்படுவதால் இந்தப் பெயர் பெற்றது.

**bed moulding** : *(க.க.)* **அடையடுக்கு வார்ப்படம்** : புறந்துருத்தி மேலே நீட்டிக்கொண்டிருக்கிற பகுதியின் அடியில் இறுதி நிலையாகப் பயன்படுத்தப்படும் வார்ப்படம். அதாவது, இறவாரங்களின் இணைப்பிலும், சுவருக்கு வெளிப்புறத்திலும் பயன்படுத்தப்படும் வார்ப்படம்.

**bed plate** : *(க.க.)* **படுகைத் தகடு** *(1)* ஏதேனும் கட்டுமானப்பகுதிக்கு ஆதாரமாகப் பயன்படுத்தப்படும் ஓர் உலோகத் தகடு.

*(2)* ஓர் எந்திரத்தின் அடித்தளமாக பயன்படுத்தப்படும் ஓர் உலோகத் தகடு.

**bedrock** : *(க. க.)* **அடிநிலப் பாறை** : பூமியின் மேற்பரப்புக்கு அடியிலுள்ள கெட்டியான பாறை

**beech** *(மர.) (fagus)*: **புங்கமரம்** இது ஒரு பெரிய மரம். இது சில சமயம் 30மீட்டர் உயரம்வரை வளரும். இதன் குறுக்கு விட்டம் 60செமீ முதல் 90செ.மீ. வரை இருக்கும். இதன் மரம் கடினமானது; வலுவானது; முரடானது; ஆனால், நீடித்து உழைக்கக்கூடியதன்று. விறகுக்கு ஏற்றது. இதற்கு வாணிகப் பயன்பாடு ஏதுமில்லை.

**bees wax** : **தேன்மெழுகு** : தேன் கூட்டிலிருந்து எடுக்கப்படும் ஒரு வகை மெழுகு. இதுகலை வேலைப்பாடுகளில் பல வகைகளில் பயன்படுகிறது. உலோகத் தோரணி மணலிலிருந்து விடுவிப்பதற்கான உள்பூச்சாகவும் பயன்படுகிறது.

**beige** : *(வண்.)* **கம்பளித் துணி** : சலவை செய்யப்படாமலும், சாயமிடப்படாமலும் உள்ள கம்பளித் துணி.

**belfry** : *(க.க.)* **மணிக் கூண்டு** : திருக்கோயில் கோபுரத்தில் மணிகளைத் தொங்கவிடுவதற்கான இடம்.

**bell** : *(மின்.)* **மின் மணி**: மின்காந்தம், மணியின் நா, சேமக்கலம் ஆகியவற்றைப் பயன்படுத்தி இயக்கப்படும் ஒரு மின் சைகைச் சாதனம்.


**Beliminator** : *(மின்.)* **'B' மின்னழுத்தக் கருவி** : மின்கல வானொலிப்பெட்டி இயங்குவதற்காக 'B' மின்கலத்திற்குப் பதிலாக தேவையான 'B' மின்னழுத்தம் உண்டாக்கக்கூடிய ஒரு சாதனம்.

**Bell, Alexander Graham** : **பெல், அலக்சாண்டர் கிரகாம்** (1847—1922) : தொலைபேசியைக் கண்டுபிடித்த அமெரிக்க விஞ்ஞானி. இவர், "குரலைக் கம்பிகள் மூலம் கொண்டு செல்லலாம்" என்ற உண்மையைக் கண்டுபிடித்தவர். இவர் ஸ்மித்சோனிய ஆய்வுக் கூடத்தின் ஆட்சியாளராகவும், தேசியப் புவியியல் கழகத்தின் தலைவராகவும் இருந்தவர்.

**bell-and-spigot joint** : *(கம்.)* **மணி - மற்றும் - ஆப்பு இணைப்பு** : வார்ப்பிரும்புக் குழாயின் ஒவ்வொரு பகுதியும் ஒரு முனை பெரிய அல்லது மணிவாய் வடிவிலும், இன்னொரு முனை ஆப்பு வடிவிலும் அமைந்திருக்கும். ஒரு பகுதியின் ஆப்பு முனை, அடுத்தப்

பகுதியின் மணிவாய் முனையுடன் பொருந்த இணைந்து கொள்ளும்.

**bell crank : மணி வளைவு :** *90° கோணத்தில் சந்திக்கும் இரு புயங்களைக் கொண்ட ஒரு நெம்புகோல் அல்லது வளைவு.*



மணி வளைவு


**bell-glass: மணிக் கவிகை:** *செடிகளை மூடிவைப்பதற்கான மணி வடிவக் கண்ணாடிக்கலம்.*

**bell metal : வெண்கலம் :** செம்பும் வெள்ளீயமும் கலந்த மணி செய்வதற்கான கடினமான ஆனால் எளிதில் உடையக்கூடிய ஓர் உலோகக் கலவை.

**bell mouthed : மணிவாய் :** *ஒரு முனையில்மணியின் வாய் போன்ற திறப்புடையது.*

**bell or hub : (கம்.) மணி அல்லது குடம் :** ஒரு குழாயின் முனையை அதே விட்டமுடைய மற்றொரு குழாயுடன் இணைத்துப் பொருத்துவதற்கு, போதிய அளவுக்குக் குடம் போல் பெரிதாகவுள்ள பகுதி.

**bellows:** *(வார்.)* **உலைத் துருத்தி:** *(1) காற்றையும் நெகிழ் திறனுள்ள பக்கங்களையும் உடைய*



உலைத் துருத்தி

*ஒரு சாதனம். இது காற்றோட்டத்தை உண்டாக்குவதற்குப் பயன்படுகிறது.*

*(2) வார்ப்படத்தில் தோரணிகள் முதலியவற்றின் முகப்புகளிலிருந்து மணலை ஊதி அப்புறப்படுத்துவதற்குப் பயன்படும் கையினால் இயக்கப்படும் சிறு உலைத்துருத்தி.*

**bells palsy:** *(நோயி.)* **முக முடக்கு வாதம் :** *முகத்தின் ஒரு பக்கத்துத் தசை செயலற்றுப் போதல்.*

**bell-ringing transformer:** *(மின்.)* **மணியடிப்பு - மின்மாற்றி :** *சாதாரண வீட்டு மின்சுற்றில் மணியடிப்பதற்காக மின்னழுத்தத்தைக் குறைக்கின்ற ஒரு சிறிய மின்மாற்றி.*

**bell switch :** *(மின்.)* **மணி மின் விசை:** *ஒரு மின்சுற்றிலிருந்து மணியைத் துண்டிப்பதற்கும் அல்லது அதில் மணியை இணைப்பதற்கும் பயன்படும் ஒரு மின்விசை.*

**belly : புடைப்பு :** *(1) வார் பூட்டிக் கட்டுதல், கயிறு கட்டி இழுத்தல் மூலம் விளைவிக்கப்பட்ட புடைப்பான ஒரு பரப்பு.*

*(2) அச்சுருவின் ஒரு வரியின் மையத்தில் படிப்படியாக அமைந்த பள்ளம்.*

**belt :** *(க.க.)* **தளவரிசை :** *(1) தளத்திலிருந்து தளம் மீது படிவிக்கப்படும் ஒரு எறிவுப் படிவத்தின் இணைப்புக் கட்டு அல்லது வெவ்வேறு வகைச் செங்கலினால் கட்டப்பட்ட ஒரு தளவரிசை.*

(2) **வார்ப்பட்டை :** *எந்திர உறுப்புகளை இணைத்தியக்கும் தோல் பட்டை வார்.*

**belt clamp :** *(எந்.)* **வார்ப்பட்டைப் பற்றுக்கட்டை :** *ஒரு வார்ப்பட்டையின் இருமுனைகளையும் பிணைக்கும்போது இருமுனைகளையும் பிடித்துக் கொள்வதற்கான ஒரு சாதனம்.*

**belt conveyor : வார்ப்பட்டை ஊர்தி :** தொழிலகத்தில் தொழிற்படும் பொருள்களைக் கொண்டு செல்லப் பயன்படும் அகலமான வார்ப்பட்டை.

**belt dressing : வார்ப்பட்டை மெருகு :** எந்திர வார்ப்பட்டையில் பிடி சறுக்கி விடாமல் தடுப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறு கூட்டுப் பொருள்களில் ஒன்று.

**belt hook :** (பட்.) **வார்ப்பட்டைக் கொக்கி :** வார்ப்பட்டைகளைக் கையால் இயக்கி இடம் பெயரச் செய்வதற்கான ஒரு சாதனம். இது ஒருநீளமான கொக்கியுடன் நீண்ட கோலினை அல்லது கழியினைக் கொண்டிருக்கும்.

**belt laeing :** (எந்.) **வார்ப்பட்டை இழைவார் :** ஒரு வார்ப்பட்டையின் முனைகளைக் கோத்திறுக்குவதற்குப் பயன்படும் ஒரு குறுகலான தோல் வார்ப்பட்டை. கம்பிக் கொக்கிகள் போன்ற வேறுவகைக் கட்டுவார்களும் தவறாக வார்ப்பட்டை இழைவார் என அழைக்கப்படுகின்றன.

**belt sandar :** (மர.வே.) **வார்ப்பட்டை மெருகேற்றி :** மரத்தில் மெருகு வேலைப்பாடு செய்வதற்காக ஒரு பட்டைச் சீலை வார்ப்பட்டையினையுடைய, மின்னோடியால் இயங்கக்கூடிய ஒரு பொறியமைவு.

**belt shifter :** (பட்.) **வார்ப்பட்டைப் பெயர்ப்புக் கருவி :** பெயர்ப்பு விரல்கள் அல்லது புயங்கள் இணைக்கப்பட்டுள்ள120செமீ அல்லது 5 அடி நீளமுடைய ஒரு தட்டையான மரத்துண்டு. இறுக்கமான கப்பிகளிலிருந்து தளர்வான கப்பிகளுக்கு ஒரு வார்ப்பட்டையினை மாற்றுவதற்குப் பயன்படுகிறது.

**bench :** (பட்.) **விசிப் பலகை :** தச்சர் முதலியோர் வேலை செய்வதற்காக பட்டறைப் பிடிப்புக் குறடு போன்ற கருவிகள் பொருத்தப்பட்ட மரத்தினாலான வலுவான ஒரு நீண்ட பலகை.

**bench assembly :** (பட்.) **விசிப் பலகை இணைப்பு :** ஒரு விசிப்பலகையின் மீது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்புகளை வைத்து ஒன்றாகப் பொருத்தி இணைக்கும் முறை. இவ்வாறு இணைக்கும் பணியில், அராவுதல், மெருகிடுதல், துளையிடுதல், பற்ற வைத்தல், துரப்பணமிடுதல், திருகாணிகள் முதலியவற்றால் பிணைத்தல் ஆகியவை அடங்கும்.

**bench dog :** (பட்.) **விசிப்பலகை வளையிருப்பாணி :** ஒரு விசிப் பலகையின் விளிம்பு அருகேயுள்ள தடத்தில் அல்லது துளையில் செருகப்பட்டுள்ள மரத்தாலான அல்லது உலோகத்தாலான ஒருமுளை. இது பிடி நழுவி விடாமல் தடுப்பதற்குப் பயன்படுகிறது. இது விசிப் பலகை நிறுத்தியிலிருந்து வேறுபட்டது.

**bench hook :** (மர. வே.) **விசிப் பலகைக் கொக்கி :** விசிப்பலகையில் சில வேலைகளைச் செய்யும் போது, விசிப்பலகையின் மேற்பகுதிக்குச் சேதமேற்படாத வகையில் இரு முனைகளிலும் பொருத்தப் பட்டுள்ள முனைகளுடன் கூடிய ஒரு தட்டையான மரத் துண்டு.

**bench lathe:** (எந்.) **விசிப்பலகை கடைவான் :** இலேசான வேலைகளைச் செய்வதற்காக ஒரு விசிப் பலகையின் மேல் பொருத்தப்பட்டுள்ள ஒரு சிறிய கடைவான்.

**bench plane : விசிப் பலகை இழைப்புழி :** சமதளப் பரப்புகளை இழைத்து வழவழப்பாக்குவதற்காக ஒரு விசிப்பலகையின் மீது பொருத்தப்பட்டுள்ள இழைப்புழி.

**benzene ring : சாம்பிராணி எண்ணெய் வளையம் :** நிலக்கரிக் கீலிலிருந்து எடுக்கப்படும் நறுமண

நீர்க்கரிமப் பொருளாகிய சாம்பிராணி எண்ணெயின் (பென்சீன்) மூலக்கூற்றில் 6 கார்பன் அணுக்கள் கொண்ட ஒரு வளையம் அடங்கியிருக்கும். அந்த 6 கார்பன் அணுக்களுடனும் ஒரு ஹைட்ரஜன் அணு இணைந்திருக்கும்.

**bench stop** : *(மர.வே.)* : **விசிப் பலகை நிறுத்தி** : ஒரு விசிப்பலகையின் மேற்பகுதியில் அதன் விளிம்பின் அருகே பொருத்தப்பட்டுள்ள வெட்டுத் தடங்கொண்ட, தக்கவாறு அமைத்துக் கொள்ளக் கூடிய ஓர் உலோகச் சாதனம். ஒரு பொருளை இதில் சார்த்தி இழைத்து வழவழப்பாக்குவர்.



விசைப் பலகை நிறுத்தி

**bench vise** : *(எந்.)* **விசிப்பலகைக் குறடு** : எந்திரங்களை இயக்பவர்கள் பயன்படுத்தும் சாதாரணப் பட்டறைப் பிடிப்புக் குறடு. இது சமதளமாகவோ, சுழல் மூட்டாகத் திருகுடையதாகவோ இருக்கும்.

**bench work** : *(மர.வே.)* **விசிப் பலகை வேலை** : இது விசிப்பலகையில் பிடிப்புக் குறட்டால் பிடித்து நிறுத்திச் செய்யப்படும் வேலை. இது எந்திரத்தால் செய்யப்படும் வேலையிலிருந்து வேறுபட்டது.

**bend** : **பதனத்தோல்** : மிகச்சிறந்த தரமுடைய காலடித் தோலினைக் கொண்ட விலங்குத் தோலின் பிற்பகுதி அல்லது பதனிட்ட தோல்.

**Ben Day Process** : *(அச்சு.)* **பென் டே செய்முறை** : பென் டே என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு செய்முறை. இதனை ஒளிச் செதுக்கு வேலைப்பாடு செய்பவர்கள் பயன்படுத்துகின்றனர். இந்த முறையில் பசைப் படலங்களிலிலிருந்து உலோகத் தகடுகளுக்கு வடிவமைப்பை மாற்றி, அதன் பின் செதுக்குவேலை செய்யப்படுகிறது.

**bending moment** : *(பொறி.)* **வளைவு நெம்புதிறன்** : இது பளு ஏற்றிய ஒரு தூலத்தின் ஒரு பகுதியின் வளைவு. நெம்புதிறன் என்பது தூலத்தின் எடை உட்பட அதில் ஏற்றப்பட்டுள்ள பாரங்கள் அனைத்தின் கூட்டுத்தொகையும், அந்தப் பகுதியின் எந்த ஒரு புள்ளியையும் பொறுத்து அப்பகுதியின் இடப்புறத்தில் அல்லது வலப்புறத்தில் எதிர்வினைகளும் ஆகும்.

**bending pin or iron** : *(கம்.)* **வளைக்கும் ஊசி அல்லது இரும்பு** : ஈயக் குழாய்களை நிமிர்த்துவதற்கு அல்லது விரிவாக்குவதற்குப் பயன்படும் ஒரு கருவி.

**bend test** : *(பொறி.)* **வளைவுச் சோதனை** : ஓர் உலோகத் தண்டினை 90° வரை வளைத்து அல்லது ஒரு வளைவு ஊசியில் வளைத்து அது எந்த அளவுக்கு முறியக்கூடியது என்பதைச் சோதனை செய்தல்.

**bent** : *(பொறி.)* **வளைவு** : ஓர் எஃகுச் சட்டகக் கட்டிடத்தின் ஒரு பகுதி. ஒரு சாரக்கட்டின் ஒரு தூண் வரிசைகளின் மீது நிற்கும் தூலம் அல்லது தூலக்கட்டை.

**bent gouge** : *(மர. வே.)* **வளைவு அலகு உளி** : தச்சு வேலையிலும் அறுவை மருத்துவத்திலும் பயன்படுத்தப்படும் உட்குழிவான அலகுடைய நகவுளி.

**bent lever** : *(தானி; பொறி.)* **வளைவு நெம்புகோல்** : உள்ளேயே உட்சாய்வுடைய ஒரு நெம்புகோல்.

**benzene** : *(வேதி.)* **சாம்பிராணி எண்ணெய்** : நிலக்கரிக் கீலிலிருந்து பெறப்படும் நறுமண நீர்க் கரிமப் பொருள். இது கார்பாலிக் அமி

லம், அனிலின் சாயங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது. இது 'பென்சைன்' எனப்படும் கரிநீர்மக் கலவையிலிருந்து வேறுபட்டது.

**benzine** : *(வேதி.)* **கரி நீர்மக் கலவை பென்சைன்** : நில எண்ணெயிலிருந்து பெறப்படுவதும் கொழுப்புக் கறையை நீக்குவதற்குப் பயன்படுவதுமான கரிநீர்மக் கலவை. இது கரைப்பானாகப் பயன்படுகிறது.

**benzol** : *(வேதி.)* **பென்சால்** : ($C_6H_6$) விசை வண்டி எண்ணெயாகப் பயன்படும் செப்பமற்ற சாம்பிராணி எண்ணெய் வகை. இது நிறமற்ற கரைப்பான். இது வண்ணங்களை நீக்குவதற்குப் பயன்படுகிறது.

**beri beri** : *(நோயி.)* **தவிட்டான் நோய்** : ஊட்டச்சத்துக் குறைவு காரணமாக, மூளை உட்பட உடலின் அனைத்து உறுப்புகளிலுமுள்ள நரம்புகளை வீங்கச் செய்யும் ஒருவகை நோய். அரிசியைத் தீட்டுவதால் அதிலுள்ள 'பி' வைட்டமின் நீங்கி விடுகிறது. அவ்வாறு 'பி' வைட்டமின் நீங்கிய அரிசியை உண்பதால் போதிய 'பி' வைட்டமின் இல்லாமல் இந்நோய் உண்டாகிறது.

**beryllium** : *(உலோ.)* **பெரிலியம்** : இது மிகவும் இலேசான, ஆனால் மிகக் கடினமான உலோகங்களில் ஒன்று. இது கெட்டியான வெள்ளை உலோகத் தனிம வகை. இது அலுமினியத்துடன் எளிதாகக் கலந்து உலோகக் கலவையாகக் கூடியது.

**Bessemer steel** : *(உலோ)* **பெஸ்ஸமர் எஃகு** : பெஸ்ஸமர் முறைப்படி செய்யப்பட்ட எஃகு. இது பெஸ்ஸமர் மாற்றுக் கலத்தில் தேனிரும்பிலிருந்து நேரடியாகத் தயாரிக்கப்படுகிறது.

**Bessemer process** : *(உலோ.)* **பெஸ்ஸமர் முறை** : சர் ஹென்றி பெஸ்ஸமர் என்பவர் எஃகு செய்வதற்குக் கண்டுபிடித்த செய்முறை. இதில், காய்ச்சி உருகு நிலையிலுள்ள கட்டிரும்பின் ஊடாகக் காற்றோட்ட கீற்றுகளைப் பாய விட்டு, அதிலுள்ள மாசுப்பொருள்களை நீக்கி எஃகு தயாரிக்கப்படுகிறது.

**beta** : *(மின்.)* **பீட்டா** : கிரேக்க நெடுங்கணக்கின் இரண்டாவது எழுத்து. இது ஒரு மின்மப் பெருக்கியுடன் (டிரான்சிஸ்டர்) இணைந்துள்ள ஒரு பொது உமிழ்வியின் மின்னோட்ட ஈட்டத்தினைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**beta rays** : *(இயற்.)* **பீட்டாக் கதிர்கள்** : கதிரியக்கப் பொருள்களால் உமிழப்படும் விரை செலவுடைய எதிர் மின்மங்களின் வரிசை,

**beta particle** : *(வேதி.)* **கதிரியக்கத் துகள்**: பல கதிரியக்கப் பொருள்களினால் வெளிப்படுத்தப்படும் நேர் மின்னாற்றலோ, எதிர் மின்னாற்றலோ உடைய ஓர் எலெக்ட்ரான்.

**beta ray** : *(வேதி.)* **கதிரியக்கப் பொருள்** : கதிரியக்கப் பொருள்களால் உமிழப்படும் விரை செலவுடைய எதிர்மின்மங்களின் மூன்று வகைகளில் ஒன்று.

**beta-tron** : *(மின்.)* **எதிர் மின்ம ஆக்கக் கருவி** : விசைவேக எதிர் மின்மங்களின் கதிரலையை நிலையான மண்டல நெறியில் இயக்கி அதன்மூலம் மிகையாற்றலுடைய அணுக்களைப் பெற வைக்கும் கருவி.

**beta-transformation** : **பீட்டா-உருநிலைமாற்றம்** : ஒரு தனிமத்தை ஓர் அணு உலையில் இட்டு அதனுடன் ஒரு நியூட்ரானைச் சேர்த்தால், அந்தத் தனிமம் கதிரியக்கம்


உடையதாக மாறுகிறது. அது பின்னர் பீட்டாத் துகள்களை அனுப்பி அடுத்த உயர்ந்த அணு எண்ணுடைய தனிமமாக மாறுகிறது. எடுத்துக்காட்டாக, யுரேனியம், இதே முறையில், யுரேனியத்தை விட அதிக அணு எடையுள்ள தனிமமாக மாறுகிறது.

**beton :** *(அச்சு.)* **பீட்டான் :** ஜெர்மனியில் முதன்முதலில் தயாரிக்கப்பட்ட ஒருவகை அச்செழுத்துருவின் பெயர்.

**bevatron :** *(மின்.)* **எலெக்ட்ரான் மின்னழுத்தப் பெருக்கி :** அணு மின்மங்களுக்கு நூறு கோடிக்கணக்கான மடங்கு ஆற்றல் பெருக்கும் அணு ஆற்றல் விசைவியக்க அமைவு.

**bevel : சாய்தளம் :** (1) ஒரு பரப்பின் பிற பகுதியுடன் செங்கோணத்தில் இல்லாத ஒரு பரப்பு சாய்வு 45° இருக்கும்போது உள்ள சாய்தளம். அது 'மிட்டர்' (Miter) எனப்படும்.

(2) **கோண அளவு கருவி :** சாய்தளத்தின் கோணத்தை அளக்கும்



கோண அளவு
கருவி

கருவி. பாகை அளவுகளுடன் இணைந்திருக்கும்போது "சாய்தளக் கோணமானி" என அழைக்கப்படுகிறது.

**beveled rule :** *(அச்சு.)* **சாய்கோண வரித்தகடு :** அச்சுக்கலையில் முகப்பு ஒரு சாய்கோணப் பரப்பிலுள்ள ஒரு வரித்தகடு.

**beveled sticks :** *(அச்சு.)* **சாய்கோண அச்சுக்கோப்புக் கட்டை :** அச்செழுத்துகளை அடுக்கும் நீண்ட தட்டில் அச்சுருக்களைப் பாதுகாப்பாக வைப்பதற்குப் பயன்படும் அச்சுருப் பற்றாப்புகள் அல்லது செருகு தண்டுகள் கொண்ட மரத்தாலான அல்லது உலோகத்தாலான கட்டை.

**bevel gears :** *(பொறி.)* **சாய்வுப் பல்லிணை:** பற்கள் மட்டும் சாய்வாக இணைந்து ஒன்றை ஒன்று இயங்கும்படி அமைக்கப்பட்ட வேறு வேறு தளத்தில் சுழலும் சக்கர அமைவு.

**beveling in welding : சாய்வாக்கம் :** பற்ற வைப்பதில், பற்ற வைக்கும் உறுப்புகளின் முனைகளைத் தட்டையாக்குதல் அல்லது, தேய்த்துக் கூர்மையாக்குதல்.

**bevel protractor ; சாய்தளக் கோணமானி :** கோணங்களை அளவிடுவதற்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ளக்கூடிய ஒரு கருவி.

**bevel washer : சாய்தள வளையம்:** புரியுள்ள ஒரு தண்டினை ஒரு தூலத்தின் வழியாகச் செலுத்தப்படும்போது திருகாணிக்கு ஒரு தட்டையான தோற்றத்தைக் கொடுப்பதற்குக் கட்டுமானப் பணியில் பயன்படுத்தப்படும் ஒரு வளையம்.

**Bezel :** (1) **முகப்பு வளையம் :** ஒரு கடிகாரத்தின் முகப்புக் கண்ணாடியைச் சுற்றியுள்ள ஓர் உலோக வளையம்.

(2) **சாய்பக்கம் :** பட்டை தீட்டிய மணிக்கற்களின் சாய்பக்கம்.

(3) **தவாளிப்பு** உளியின் வாயிலுள்ள தவாளிப்பு.

**bias volt :** *(மின்.)* **சார்பு மின்னழுத்தம் :** ஓர் எலக்ட்ரான் குழலின் உட்பாட்டு மின்கம்பி வலைக்குள்

செலுத்தப்படும் நேர் மின்னோட்டம்.

**bib** : *(கம்.)* **திறப்புக் குழாய்:** *மீடாவின் திறப்படைப்புக் குழாய்.*

**bible paper** : *(தாள்.)* **திருமறைத் தாள் :** மெல்லியதான, ஒளி ஊடுருவிச் செல்லவிடாத, வலுவான ஒருவகைப் புத்தகத் தாள்.

**bichloride of mercury** : *(வேதி.)* **பாதரச இருபாசகை :** $(H_gCl_2)$ இதனை "இரசப்பாசிதை" என்றும் அழைப்பர். இது காயங்களைக் கழுவுவதற்கும், அறுவைச் சிகிச்சையிலும் நோய் நுண்மத் தடைப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. இது இரசங்கலந்த உறைப்பான கொடிய நஞ்சு. இதற்கு மாற்று மருந்து முட்டையின் வெண் கருவாகும்

**bichromate of potassium** : *(வேதி.)* **பொட்டாசியப் பைக்ரோமேட்:** $(K_2Cr_2O_7)$ *ஒளிப்படக்கலை, நிலத்தில் வெண்கோடாக உருவப் படிவமுறும் ஒளிப்பட அச்சுமுறை ஆகியவற்றில் பயன்படும் செம்மஞ்சள் நிறப் படிகங்கள். பகுப்பாய்வு வேதியியலில் இது ஆக்சிகரணியாகப் பயன்படுகிறது.*

**biennially** : **ஈரட்டையான :** *இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை நிகழ்கிற,*

**bifilar coil** : *(மின்.)* **ஈரிழைச் சுருள் :** ஒரு மின்கம்பிச் சுருளை ஓர் இரட்டைக் கம்பி கொண்டு சுருணை செய்யும் முறை. இதில் மின்னோட்டம் ஒரு திருப்பத்தில் 180° அளவில் இருக்கும். அடுத்த திருப்பத்தில் மின்னோட்ட நிலை இருக்காது. இதனால், மின் தூண்டல் நீங்கி விடுகிறது.

**bilateral tolerance** : **இருபுறப் பொறுதி ;** அடிப்படை பரிணாமத்திற்கு உயர்வாக அல்லது தாழ்வாக உள்ள நுண் மட்டமைதி (உ-ம்) 5.250 ±.002 அங்.

**billet** : *(குழை.)* **உருளைப் பாளம்:** *(1) ஒரு நீரழுத்த உந்து எந்திரத்தின் அழுத்தும் அறையில் வைக்கப்பட்டுள்ள நீள் உருளை வடிவான ஒரு பெரிய பாளம்.*

*(2) எஃகு உருட்டு ஆலையின் இறுதியாக்கம் செய்த இரும்பின் சிறு சிறு துண்டுகளைத் தயாரிப்பதற்குப் பயன்படும் செவ்வக இரும்புச் சலாகை அல்லது துண்டு.*

**billhead** : *(அச்சு.)* **முகப்புப்பட்டி:** பெயர் முகவரி உடைய வாணிகக் குறிப்பு முகப்பு.

**billion** : *(1)* **இலட்சங்கோடி** : *ஆங்கில நாட்டு வழக்கில் இலட்சங் கோடி.*

*(2)* **நூறுகோடி** : *அமெரிக்க, ஃபிரெஞ்சு நாடுகளின் வழக்கில் நூறுகோடி.*

**bill of meterial** : **பொருட்பட்டி** : *சில இயக்கு முறைக்கு அல்லது எந்திரத்திற்குத் தேவைப்படும் உறுப்புகளையும், அளவுகளையும் கொண்ட ஒரு பட்டி.*

**bimetalic element** : *(குளி.)* **இருமாழைக் கருவி** : *இரு மாறுபட்ட வெப்ப விரிவாக்கக் குணகங்களைக் கொண்ட, இரு உலோகங்களைக் கொண்ட வெப்பக்கட்டுப் பாட்டுச் சாதனம்.*

**bimetal - thermostat** : *(தானி.)* **இருமாழை வெப்பச் சீர்நிலைக் கருவி:** *இரு மாறுபட்ட உலோகத் துண்டுகளை ஒன்றாகப் பற்ற வைத்து உருவாக்கிய சாதனம். சூடாக்கும்போது ஏற்றத் தாழ்வான விரிவாக்கம் ஏற்படுவதால் இச்சாதனம் வளைகிறது.*

**binary** : *(மின்.)* **ஈரிணை** : *0, 1,* என்ற இரு குறியீடுகளை மட்டுமே பயன்படுத்துகிற '2' ஆதாரத்தைக் கொண்ட ஓர் எண்மான முறை.

**binary theory:** **இருமூலகக் கோட்பாடு :** *எல்லா வேதியியல் பொருள்களும் எதிரெதிர்ப் பண்புகளுடைய இரு மூலப்பொருள்களால் ஆனவை என்னும் கொள்கை.*

**binary alloys:** *(உலோ.)* **ஈரிணை உலோகக் கலவைகள் :** *இரண்டு உலோகங்களை மட்டுமே கொண்ட உலோகக் கலவை.*

**binary digits :** *(கணி.)* **ஈரிலக்க எண்கள் :** *எண் கணிமிகளில் பயன் படுத்தப்படும் முழு எண்கள்.*

**binaural :** **இருசெவிக்கருவி :** *இரு செவிகளையும் சார்ந்த கருவி. மருத்துவர்கள் பயன்படுத்தும் இதயத் துடிப்பு மானியில் ஒவ்வொரு செவியாலும் கேட்பதற்கான இரு குழல்கள் உள்ளன.*

**binder:** *(வார்.)* **கடுங்கட்டு:** *உள்மையப்பகுதிக்கு வலுவூட்டுவதற்காக உள்மைய மணலைக் கட்டிறுக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பொருள். இதில் ஆளி விதை எண்ணெய், கருப்பஞ்சாறு, மற்றும் பல வாணிகத் தயாரிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.*

**binders board:** **நூல் கட்டுமான அட்டை:** *கலவைக் காகிதங்களாலான கனமான அட்டை. புத்தகங்களைக் கட்டுமானம் செய்து அட்டையாக இணைக்கப் பயன்படுகிறது.*

**bindery:** **நூல் கட்டுமானச் சாலை:** *புத்தகங்கள், மடக்கு அறிக்கைகள், துண்டு வெளியீடுகள் போன்றவற்றை ஒருங்கிணைத்துக் கட்டுமானம் செய்யும் இடம்.*

**binding post :** **கட்டுமான முளை:** *(1) காகிதத்தில் துளைகள் வழியாகச் செலுத்தி தனித்தனித் தாள்களை கட்டிணைக்கப் பயன்படும் உலோகத்திலான முளை.*

*(2) மின்கம்பியைப் பிணைப்பதற்கு ஒரு திருகுடன் கூடிய ஓர் உலோக முளை.*

**binoculars :** **இரட்டைத் தொலை நோக்காடி :** *இரு கண்களாலும் நோக்குவதற்கேற்ற இரட்டைத் தொலை நோக்காடி.*

**bio chemistry :** **உயிர் வேதியியல் :** *உயிரினங்களின் உடலில் ஏற்படும் வேதியியல் இயக்கங்களையும் அவற்றின் விளைவுகளையும் பற்றி ஆராயும் துறை.*

**bioastronautics :** *(விண்.)* **உயிர் விண்வெளியியல் :** *விண்வெளிப் பயணத்தின்போது விலங்குகள் அல்லது தாவரங்கள் மீது ஏற்படும் விளைவுகள் பற்றி ஆராயும் அறிவியல்.*

**biological control :** *(உயி.)* **உயிரியல் கட்டுப்பாடு :** *தீங்கிழைக்கும் நுண்மங்களின் எதிர் நுண்மங்களைப் பெருக்குவதன் மூலம் இயற்கைக் கோளாறுகளைக் கட்டுப்படுத்தும்முறை. எடுத்துக்காட்டு : களைகளைக் கட்டுப்படுத்த பூச்சிகளைப் பயன்படுத்துதல்.*

**biological shield :** *(உயி.)* **உயிரியல் காப்பு :** *அணு உலை போன்ற அணுவியல் எந்திரங்களில் பணியாற்றும் ஆட்களை அணுக்கதிர் ஆதாரமுடைய ஒரு வட்டப் பாதுகாப்புச் சுவரை அமைத்தல்.*

**biological shield :** **உயிரியல் காப்பு:** *அணு உலை போன்ற அணுவியல் எந்திரங்களில் பணியாற்றும் ஆட்களை அணுக்கதிர் ஆதாரமுடைய ஒரு வட்டப் பாதுகாப்புச் சுவரை அமைத்தல்.*

**biological warfore:** *(உயி.)* **உயிரியல் போர்முறை :** *நோய்களை உண்டாக்கும் நுண்மங்களைப் பயன்படுத்தும் போர்முறை.*

**bionics :** *(விண்.)* **ஒப்பு உயிரியல் :** *உயிர் மண்டலங்களைப் போன்று*

செயற்படுகிற அமைப்பு முறை களை ஆராய்தல்.

(2) உயிர் மின்னியல்.

**bionomics** : *(உயி.)* **சூழல் உயிரி யல் :** சூழல் தொடர்பான பழக்க வழக்கங்களை ஆராயும் அறிவி யல்.

**biophysics : உயிர் இயற்பியல் :** இயற்பியல் விதிமுறை சார்ந்த உயிரியல் ஆய்வு.

**biopsy** : *(உயி.)* **உயிர்ப் பொருள் ஆய்வு :** உயிருள்ள உடலிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட நோயுற்ற வளர்ச்சி போன்ற பொருளை அறி வியல் முறையில் ஆராய்தல்.

**biotaxy** : *(உயி,)* **இயற்கை இன வகுப்பு :** இயற்கை உருவ அமைப் புக்கேற்ப இனங்களை வகைப் படுத்தல்.

**biotic:** *(உயி.)* **உயிர்சார் பொருள் :** பெனிசிலின் போன்ற நோய் நுண்ம எதிர்ப்புப் பொருள்கள். இவை, ஓர் உயிர்ப் பொருளை மற்ற உயிர்ப் பொருள்களிட மிருந்து பாதுகாக்கிறது. மருத்து வத்தில் பாக்டீரியாக்களை அழிக் கப் பயன்படுகிறது.

**biotin ; பயோட்டின் :** ஊட்டச் சத்து B-2 கலவைக் கூட்டில் அடங்கியுள்ள 'எச்' (H) என்ற ஊட்டச்சத்து. இது நொதியின் (ஈஸ்ட்) நொதிப்பு நடவடிக்கை க்கு இன்றியமையாதது. சிலவகைப் பாக்டீரியாக்களுக்கும், மனித உடல் நலத்திற்கும் இது தேவை. இது இல்லை எனில் தேரல் நோய் கள் உண்டாகின்றன. முட்டை யின் சமைக்கப்படாத வெண்கரு இதனை அழிக்கிறது.

**bipack** : **நிறப்பகுப்பு முறை :** வண் ணத் திரைப்படங்கள் எடுப்பதற் குப் படச்சுருள்களை ஒளிப்படக் கருவியில் முறைப்படுத்தி வைக்கும் முறை. நீலச் சுருளும், சிவப்புச் சுரு ளும் அவற்றின் ஒளியுணர் பரப்பு களைத் தொட்டுக் கொண்டிருக்கு மாறு ஒன்றாக இணைக்கப்பட் டிருக்கும். நீலச்சுருள் முன்புறத்தில் ஒரு சிவப்புப்படலத்துடன் அமைக் கப்பட்டிருக்கும். இதனால் சிவப்பு ஒளி மட்டுமே சிவப்புச் சுருளை அடையும். பச்சைச் சுருள் தனி யாக இருக்கும். ஆடியிலிருந்து வரும் ஒளியானது நீலம்-சிவப்பு-பச்சைச் சுருள்கள் மூன்றிலும் விழும்படியாகப் பகுக்கப்படு கிறது.


**biplane :** *(வானூ.)* **இருதள விமா னம் :** ஒன்றன் மேல் ஒன்றாக இரு முதன்மையான ஆதாரத் தளங் களையுடைய விமானம்.

**bipolar** : *(மின்.)* **இருமுனை யுடைய :** நேர் எதிரான துருவ முனைப்புகளைக் கொண்ட இரு காந்தத் துருவங்களையுடையது.

**bipolar receiver :** *(மின்.)* **இரு முனை தொலைபேசி ஒலிவாங்கி :** இரு துருவத் தொலைபேசி ஒலி வாங்கி. இதில் இரு துருவங்களும் இடையீட்டுத் தகட்டின் மீது செயற்படுகின்றன.

**bird's-eye maple** : *(மர.)* **எழில் வண்ணக் காட்சி:** அழகுடைய நிழல் தரும் 'மாப்பிள்' என்ற மரவகை யின் கரணையிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட பலகைகள் அல்லது மேலடைகள் மூலம் கிடைக்கும் மிக அழகிய வண்ணக் காட்சி.

**bird's mouth :** *(தச்சு.)* **புள் வாய்:** இறைவாரக் கை மரத்தின் அடிப் பகுதியில் கவர்த் தகட்டில் பொருந் தி நிற்பதற்கேற்ப வெட்டப் படும் இறைவாரக்கை மரத்தில் எழுதகத் திற்காக வால் முனை விரிவாக்கம்



புள்வாய்

அமைக்கும்போது இது பயன் படுத்தப்படுகிறது.

**birmingham or stubs wire gauge** : *(எந்.)* **பர்மிங்காம் அல்லது அடிக்கட்டைக் கம்பி அளவி** : மெல்லிய கம்பிகளின் அடிக்கட்டைகளை வடிவமைக்கும் கருவி. இரும்புக் கம்பி, சூடான மற்றும் குளிர்ந்த உருட்டுத் தகட்டு எஃகினை அளவிடுவதற்குப் பயன்படுகிறது. இது அடிக்கட்டை எஃகுக் கம்பி அளவியிலிருந்து வேறுபட்டது.

**biscuit** : **பீங்கான் துண்டு** : முதல் சூடாக்கத்திற்குப் பிறகு மெருகு வராத நிலையிலுள்ள பீங்கான் துண்டு.

**bisect** : **இரு சமவெட்டு** : ஒத்த இரு சம கூறுகளாகப் பிரித்தல் அல்லது வெட்டுதல்.

**bismuth** : *(வேதி.)* **நிமிளை** : இது ஓர் உலோகத் தனிமம். குறைந்த உருகு நிலையுடைய உலோகக் கலவைகள் தயாரிக்கப் பயன்படுகிறது. நீராவிக் கொதிகலன்கள், மின் உருகிகள், தானியங்கித் தெளிப்பான்கள், தீ எச்சரிக்கைக் கருவிகள் முதலியவற்றில் காப்பு முனைகளாகப் பயன்படுகிறது. தீயின் வெப்பநிலை மாறும் போது, கருவியிலுள்ள உலோகக் கலவை உருகி, நீர்த் தெளிப்பானை இயங்கச் செய்கிறது.

**bismuth meal** : *(மரு.)* **நிமிளை உணவு**: சீரண உறுப்புகளின் ஊடுகதிர் (எக்ஸ்-ரே) படங்களை எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் உணவுடன் கலந்த நிமிளை உப்பு.

**bistoury** : **ஒடுங்கு கத்தி** : மருத்து



ஒடுங்கு கத்தி

வத்தில் பயன்படும் ஒடுங்கிய அறுவைக் கத்தி.

**bit** : *(மின்.)* : **துணுக்கு** : ஒரு கணிப் பொறியின் சேமிப்புத் திறனின் ஓர் அலகாகிய ஈரிலக்க எண். இருவகை எழுத்துகளை மட்டுமே பயன்படுத்தும் ஒரு மொழியின் தனியொரு எழுத்து.

**bit brace** : **துண்டு பற்றிறுக்கி** : துண்டு துணுக்குகளை இறுகப்



துண்டு பற்றிறுக்கி

பற்றிக்கொள்ளும் ஒரு சாதனம். நெம்பித் திருப்புவதற்கு ஏற்றவாறு இது அமைக்கப்பட்டிருக்கும்.

**bite** : **அரிமான வேலை** : உலோகத் தகட்டில் அரிமானம் மூலம் செய்யப்படும் செதுக்கு வேலை.

**bit file** : **துரப்பண அரம்** : துரப்பணத்தின் கடிவாயினைக் கூர்மையாக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஓர் அரம்.

**bit gauge** : **துரப்பண அளவி** : "துரப்பணத் தடை" எனப் பொதுவாக அழைக்கப்படும் சாதனத்தின் சரியான பெயர்.

**bit stop** : **துரப்பணத் தடை** : தேவையான ஆழத்திற்குத் துரப்பணம் செய்வதை அல்லது தோண்டுவதைக் கட்டுப்படுத்துவதற்காகத் துரப்பணத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு சாதனம்.

**bitumen** : **நிலக்கீல்** : எளிதில் தீப்பற்றக் கூடிய கனிப்பொருள்களில் ஒன்று.

**bituminous coal** : **நிலக்கீலார்ந்த நிலக்கரி** : சாதாரணமான மென்மையான நிலக்கரி.

**black annealing** : *(உலோ.)* **கருமைப் பதனாக்கும்** : உலோகத் தகடு

கள் சிம்புகளின்றியும், நிறம் மாறாமலும் இருக்க வேண்டிய அவசியமில்லாதபோது, அவற்றைச் செய்வதற்கான ஒரு முறை.

**black bean** : (மர.) **கருந்தேக்கு**: தேக்கு மரத்தைப் போன்றே வெட்டு மரம் தரக்கூடிய ஓர் ஆஸ்திரேலிய மரவகை. நேர்த்தியான உட்புற அலங்காரத்திற்கு இது பெருமளவில் பயன்படுகிறது.

**black birch** : **கரும் பூர்ச்ச மரம்** : இது 15-18 மீ. வரை வளரக் கூடியது. இதன் விட்டம் 30-90 செ.மீ. இருக்கும். இதன் வெட்டுமரம் கடினமானது; வலுவானது. சீமை நூக்கு மரத்திற்குப் பதிலாக உட்பகுதி அலங்காரத்திற்கும் அறை கலன்கள் தயாரிப்புக்கும் பயன்படுகிறது.

**black body** : **கரும்பொருள்** : தன் மீது விழும் வெப்பக்கதிர்கள், ஒளிக்கதிர்கள் அனைத்தையும் ஈர்த்துக் கொள்ளும் ஒரு பொருள். இதனைச் சூடாக்கும் போது இது அந்த வெப்ப நிலையில் மிக அதிக அளவிலான வெப்பத்தை வெளியிடுகிறது.

**black box** : (வானூ.) **கருப்புப் பெட்டி** : விமானத்தின் இயக்கம் தொடர்பான சமிக்கைகளையும் உரையாடல்களையும் பதிவு செய்து கொள்ளும் ஓர் அடையாளப் பெட்டி.

**black copper** : **கருஞ்செம்பு**: 75% செம்பு அடங்கியுள்ள ஒருவகை உலோகம். தரங்குறைந்த செம்பினை மீண்டும் உருக்கி இதனைப் பெறலாம்.

**blackdamp** : (வேதி.) **கரும் நச்சாவி** : சுரங்கங்களில் காணப்படும் கார்பன்டையாக்சைடு என்ற நச்சாவியின் பெயர் (பார்க்க: சுரங்க நச்சாவி அல்லது சுரங்க நச்சு வாயு.)

**black gum** : (மர.) **கரும்பிசின் மரம்** : இதனைப் புளிப்புப் பிசின் மரம் என்றும் கூறுவர். இது நடுத்தர வடிவளவுடைய மரம். இதன் வெட்டுமரம் கடினமானதன்று; ஆனால், சொர சொரப்பானதாகவும், எளிதில் பிளக்க முடியாததாகவும் இருக்கும். சமையலறைப் பொருட்கள் மரச்சீவல் கூடைகள், அழிப்பெட்டிகள் போன்றவை தயாரிக்கப் பயன்படுகிறது.

**blacking** : **கருமெருகிடுதல்** : ஒரு வார்ப்படத்தின் . மேற்பரப்பில் தூவப்படும் மரக்கரி அல்லது நிலக்கரி அல்லது கல்கரியின் தூள். இது மணல் தீய்ந்துவிடாமல் தடுக்கிறது.

**black lead** : **கருவங்கம்** : வார்ப்பிரும்புக் குளிர்பதன வார்ப்படமுகப்புகளிலும், வண்ணப் பூச்சுத் தோரணிகளிலும் பயன்படுகிறது.

**black letter** : (அச்சு.) **கரும் அச்செழுத்துரு** : ஜெர்மன் எழுத்துப் போன்ற பழைய ஆங்கில அச்சு எழுத்து வடிவம்.

**blacker than black** (மின்.) **கருமையினும் கருமை** : தொலைக்காட்சியில் உரிய கருமை அளவுக்கு மேல் படம் கருமையாகத் தோன்றுதல். இந்தப் பகுதியில் ஒளிக்கற்றை பின்வாங்கிச் செல்கிறது.

**black level**: (மின்.) **கருமை அளவு**: தொலைக்காட்சியில் கருமைப் பகுதியைக் குறிக்கும் கூட்டுத் தொலைக்காட்சி சமிக்கை.

**black light**: (மின்.) **கருமை ஒளி**: புற ஊதா ஆற்றலை உமிழும் ஒளி.

**bladder worm** : (உயி.) **சவ்வுப் புழு** : நாடாப்புழுவின் முட்டைப் வடிவம்.

**blade**: **அலகு**: ஒரு கத்தியின் வெட்டுவாய். விமானச் சுழல்

விசிறியின் அலகு போன்ற ஒரு கருவியின் அல்லது சாதனத்தின் தட்டையான தீவிர இயக்கப் பகுதி.

**blade angle:** *(வானூ.)* **அலகு முதுகு:** ஒரு முற்செலுத்தும் சுழல் விசிறியின் பக்கப்பகுதி. இது விமானத்தின் காற்றழுத்தத் தளத்தின் மேற்பரப்பிற்கு நேரிணையாக இருக்கும்.

**blade back:** *(வானூ.)* **அலகுக் கோணம்:** முற்செலுத்தும் சுழல் விசிறியின் அல்லது சுழல் இறகு அமைப்பின் ஆரத்திற்கும், சுழல் அச்சுக்குச் செங்குத்தான ஒரு சம தளத்திற்குமிடையிலான கூர்ங் கோணம்.

**blade face:** *(வானூ.)* **அலகு முகப்பு:** விமானத்தின் காற்றழுத்தத் தளத்தின் கீழ்ப்பரப்பிற்கு நேரிணையாக இருக்கும் முற்செலுத்துச் சுழல் விசிறி அலகின் மேற்பரப்பு. இதனை 'அழுத்த முகப்பு' அல்லது 'இயக்க முகப்பு' என்றும் அழைப்பர்.

**blacksmith: கருமான்; கொல்லன்:** உலோகங்களைக் காய்ச்சி அடித்து உருவாக்கும் கைவினைஞர்.

**blacksmith drill: கருமான் துரப்பணம்:** 1.27 செ.மீ. விட்டமுடைய, சாய்வுத்திருகுக்கான ஒரு சமதளத்தைக் கொண்டு ஓர் எந்திரத் தண்டின் மூலம் செய்யப்படும் துரப்பணம்.

**black spruce:** *(மர.)* **கரும் ஊசியிலை மரம்:** இது எடை குறைந்தது; சிவப்பு வண்ணம் உடையது; இதன் இழை கடினமானதாயினும் வேலைப்பாடு செய்ய எளிமையானது. இது அமெரிக்காவின் வடமாநிலங்களிலும், கனடாவிலும் காணப்படுகிறது.

**black varnish: கரும் அவலரக்கு:** புகைக்கரியிலிருந்து செய்யப்படும் கருவண்ணம் சேர்க்கப்பட்ட சாதாரண அவலரக்கு. இது தோரணிகள் செய்பவர்களுக்குப் பயன்படுகிறது.

**black walnut:** *(மர.)* **கருவாதுமை மரம்:** இது கனமானது; கடினமானது. நுண்துளைகளுடையது; பழுப்பு நிறம் வாய்ந்தது. சிறு மரப்பெட்டிகள், துப்பாக்கிச் சட்டங்கள் செய்யவும், உட்பகுதி அலங்கார வேலைப்பாடுகளுக்கும் பயன்படுகிறது.

**blade-width ratio:** *(வானூ.)* **அலகு-அகல விகிதம்:** எந்த ஒரு புள்ளியிலும் முற்செலுத்துச் சுழல் விசிறியின் அலகின் முழு அகலத்திற்கும், அந்தச் சுழல் விசிறியின் அச்சிலிருந்து அந்தப் புள்ளிக்கு உள்ள தூரத்தை ஆரமாகக் கொண்ட ஒருவட்டத்தின் சுற்றளவுக்கும் இடையிலான விகிதம்.

**blanc fixe: வெண்காடி:** இது பேரியம் சல்ஃபேட்டு ஆகும். இது வண்ணங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது. பாரைட்ஸ் என்ற தாதுப் பொருளை நுண்ணிய தூளாக்கி இது தயாரிக்கப்படுகிறது. இது செயற்கையாகத் தயாரிக்கப்படும் போது இதன் நிறமி மிக நேர்த்தியாக இருக்கும். இதுவே 'வெண் காடி' என அழைக்கப்படுகிறது.

**blanch:** *(குளி.)* **வெண்மையாக்கம்:** புட்டியிலடைக்கப்படும் சில வகைக் காய்கறிகளைச் சூடான நீரில் அமிழ்த்திக் கிருமி நீக்கம் செய்தல்.

**bland fluids: பானத்திரவம்:** வயிற்றுக்கு எரிச்சலுண்டாக்காத பால், பார்லி நீர் போன்ற பானங்கள்.

**blank : தட்டைத் தகடு :** தட்டை உலோகத் தகட்டிலிருந்து வெட்டி எடுக்கப்படும் துண்டு எந்த ஒரு வடிவத்தையும் அமைப்பதற்கு

முன்பு இவ்வாறு எடுக்கப்படுகிறது.

**blank and center-punch die** : *(உலோ.)* **வெற்றிட மைய அழுத்த வார்ப்புப் படிவம்** : துளையிடப்பட வேண்டிய துளைகளின் நிலைகளை ஒரே செயல் முறையில் துளையிட்டு மைய அழுத்தம் செய்கிற ஒரு வார்ப்புப் படிவம்.

**blankand pierce die**: *(உலோ.)* **வெற்றிடத்துளை வார்ப்புப் படிவம்** : ஒரே செயல்முறையில் ஒரு வெற்றிடத்தையும், ஒன்றுக்கு மேற்பட்ட துளைகளையும் வெட்டுகிற ஒரு கூட்டிணைவான வார்ப்புப் படிவம்.

**blank book** : **வெற்றுப் புத்தகம்** : முழுவதுமாகவோ பகுதியாகவோ எழுதப்படாமல் அல்லது அச்சிடப்படாமல் இருக்கும் ஒரு புத்தகம்.

**blank case** : *(அச்சு.)* **வெற்று அச்செழுத்துத் தட்டு**: பகுதிப் பிரிவுகள் இல்லாத ஓர் அச்செழுத்துத் தட்டு.

**blank cut** : *(அச்சு.)* **எழுதாப் பக்கம்** : ஒரு அத்தியாயத்தின் கடைசியில் உள்ள எழுத்து அச்சிடப்படாத பக்கம்.

**blanket** : *(வரை.)* **மூடு திரை** : துணியுடன் சேர்த்து வலுவாக்கிய ரப்பர் பாளம். இது மாற்று அச்சடிப்பு உருளையைச் சுற்றிப் பிணைக்கப்படுகிறது. இது தகட்டிலிருந்து தாளுக்கு மையை மாற்றுகிறது.

**blanking die** : *(பட்.)* **துளையிடு வார்ப்புப் படிவம்** : அழுத்துவதற்குரிய சாதனங்கள் அனைத்திலும் பெருமளவில் பயன்படுத்தக்கூடிய கருவி. உலோகத் தகட்டுத் துண்டினை ஒரு பிரித்தெடுப்பானில் செலுத்தித் துளையிடலாம். ஒரே துளையில் பல் அழுத்தங்களைக் கொடுத்து ஒரே சமயத்தில் பல துண்டுகளைச் செய்யும் போது, அது "பலமுனைத் துளையிடு கருவிகள்" என அழைக்கப்படும்.

**blank-out**: **ஒளித்தடை**: தொலைக்காட்சியில் படம் வருவதற்காக ஒளி வாங்கியைச் சரி செய்யும் போது, எதிர்மின் கதிர்க்கொடியைத் திருப்பி ஒளியியக்கத் திரை மீது விழச்செய்ய உதவும் அமைவில் படம் "அழிந்து போவதை" அல்லது "தடைபடுவதை" இந்தச் சொல் குறிக்கிறது.

**blast**: *(வார்.)* **வார்ப்பு வெடியுலை**: வெப்பக் காற்றூட்டப்பட்ட உலையில் செலுத்தப்படும் காற்றின் கன அளவு. இது வெடிப்பினைத் துரிதப்படுத்தும்.

**blast furnace** : *(வார்.)* **ஊதுலை**: இரும்புத் தாதுக்களிலிருந்து இரும்பினை உருக்கியெடுக்கப் பயன்படும் உலை.

**blast gate** *(supercharger)* : *(வானூ.)* **மீவிசைக் காற்றடைப்பான்** : உந்துகலம், விமானம் முதலியவற்றின் வகையில் மீவிசைக் காற்றடைப்புக் குழாய்.

**blast heater** : *(குளி.)* **காற்றுச் சூடேற்றி** : சூடாக்கப்பட்ட கம்பிச்சுருள்கள் வழியே செலுத்தப்படும் அனல் காற்றினைப் பயன்படுத்தும் சூடேற்று கருவி.

**blasting** : **வெடிவைத்துத் தகர்த்தல்** : கற்சுரங்கம் போன்ற சுரங்கங்களில் சுரங்கமிட்டு வெடிபொருள் வைத்து வெடிக்கச் செய்து தகர்த்தல்.

**blasting powder** : **வெடிமருந்து**: *(பார்க்க:சுரங்கவெடி)*

**blaugas**: *(வேதி.)* **அனல்வாயு**: இது ஓர் எண்ணெய் வாயு. இது பெட்ரோலியத்தைச் சிதைத்து வடித்தல் மூலம் பெறப்படுகிறது. இது விளக்

கேற்றுவதற்கும், சூடாக்குவதற்கும், எஃகினை வெட்டுவதற்கும் பயன்படுகிறது.

**bleaching** : *(மர. வே.)* **நிறமகற்றுதல்** : ஆக்சாலிக் அமிலம் போன்ற வேதியியல் பொருள்களின் துணையால் வண்ணம் போக்குதல் அல்லது வெண்மையாக்குதல்.

**bleaching powder** : **வெளுப்புக் காரம்** : குளோரின், சுண்ணம், கால்சியம் குளோரைடு ($CaOCl_2$) ஆகியவற்றினாலான பொருள். இதனை சுண்ணக் குளோரைடு என்றும் கூறுவர். இது துணிகளை வெளுக்கப் பயன்படுகிறது.

**bleed** : *(தானி.)* **கசிவமைப்பு** : நீரியல் தடுப்பு அமைப்பிலிருந்து திரவத்தை வடித்தெடுப்பதற்கான அமைப்பு.

**bleeder** : **கசிவு வடிப்பான்** : இது ஒரு சிறிய வடிகுழாய். ஒரு பக்க வழி ஓரதரையும் இவ்விதம் கூறுவர்.

**bleeding** : *(மர. வே.)* **கசிவு மெருகு** : சீமை நூக்கு போன்றவற்றில் அவலரக்கு போன்ற விரைவாக உறையும் பொருள்களைக் கரைத்து மெருகேற்றும் பொருள்.

**blemish** : **கறை** : ஒரு மேற்பரப்பினை களங்கப்படுத்துகிற ஒரு கறை அல்லது களங்கம்.

**blending** : *(குழை.)* **கலப்பு** : ஒரு வார்ப்பட அமைப்புப் பொருளில் எல்லாத் துகள்களும் ஒரு சீராகப் பகிர்ந்தமையுமாறு பல்வேறு அமைப்பான்களை எந்திர முறையில் கலவை செய்தல். நிலைமைகளைப் பொறுத்து உலர்கலப்பு அல்லது ஈரக்கலப்பு என அழைக்கப்படும்.

**blimp** : *(வானூ.)* *(1)* **சிறு வேவு விமானம்.** *(2)* **ஓசைத்தடை** : பேசும்படத்தில் ஒலிப்பதிவுக் கருவிக்குரிய ஓசைத் தடைக் காப்புடைய சாதனம்.

**blind** : **மறைதிரை** : ஒளியை அல்லது பார்வையை மறைக்கிற ஒரு திரை அல்லது தடுப்பான்.

**blind coal** : **அழலில் நிலக்கரி** : அழல் இல்லாமல் எரியும் நிலக்கரி வகை.

**blind forces**: **இயற்கையாற்றல்கள்**

**blind flying** : **நிலங்காணாது பறத்தல்** : நிலங்காணாது அல்லது சமிக்கைக் குறிகள் கேளாது பறத்தல்.

**blindgut**: *(உயி.)* **குடல்வால்** : குடல் முனை.

**blind hole** : **முட்டுத் துவாரம்** : முழுவதுமாக ஊடுருவிச் செல்ல முடியாதபடி ஒரு பக்கம் மூடியுள்ள துவாரம். இது இருபுறமும் திறப்புடைய துவாரத்திலிருந்து வேறுபட்டது.

**blind mortise and tenon** : *(மர. வே.)* **முட்டுத்துளைச் சட்டம் மற்றும் பொருத்துமுளை** : ஒரு துளைச் சட்டத்துடன் பொருத்தப்பட்டுள்ள ஒரு குறுகிய பொருத்து முளை. இது துளையினுள் முழுமையாகச் செல்லாது. அதனால் அதன் மறுமுனை வெளியில் தெரியாது.

**blind tooling** : **மழுங்கு கருவி** : புத்தக மேலட்டைகளில் மெருகிடாமல் அல்லது வண்ணமிடாமல் அழுத்தம் செய்து அலங்கார வேலை செய்தல்.

**blinker light** : *(வானூ.)* **வெள்ளொளி விளக்கு** : நிமிடத்திற்கு 20 முறை வெள்ளொளி காட்டும் விளக்கு.

**blip**: *(விண்.)* **சேணியக்கச் சைகை** : சேணியக்க மானியின் திரையில் காணப்படும் பொருளின் வடிவம்.

**blister**: *(வானூ.)* **கொப்புளிப்பு**: (1) ஒரு மிதவையின் அல்லது கப்பலின் உடற்பகுதியின் தாக்கத்தினால் கொப்புளித்து எழும் நீர்.

(2) சாந்து பூசிய மேற்பரப்பில் கொப்புளம் போல் புடைத்த ஒரு காற்றுக் குமிழ் அல்லது புடைப்பு.

(3) பிளாஸ்டிக் பரப்பில் மனிதரின் தோலில் உள்ள கொப்புளம் போல்தோற்றமளிக்கும் புடைப்பு. இந்தப் புடைப்பினைக் குத்தி விட்டுச் சமதளமாக்கலாம்.

**blister steel**: *(உலோ.)* **காய்ப் புடைய தகட்டிரும்பு**: கடும்பதப் படுத்துதல் மூலம் தயாரிக்கப்பட்ட கச்சா எஃகுச் சலாகைகள்,

**block (engine)**: *(தானி; எந்.)* **அடி முட்டுப்பாளம்**: பன்முக நீர் உருளை வாயு எஞ்சினின் நீர் உருளை வார்ப்புரு. இதில் நீர் உருளைத் துளைகளும், குளிர்விப்பதற்கான அமைவும் இருக்கும். இது நீர் உறைகளாகவோ குளிர் விக்கும் தடுப்புகளாகவோ அமைந்திருக்கும்.

**block**: **வார்ப்புப் பாளம்**: மூலத் தோரணியிலிருந்து செய்யப்பட்ட ஒரு வார்ப்புப் பாளம்.

**block and tackle**: **நிறுத்துகப்பி கலன்**: ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கப்பிப் பள்ளங்கள் அல்லது கப்பித் தொகுதிகள் மற்றும் அதற்கு இணைவாகப் பயன் படுத்தப்படும் கயிறு, சங்கிலி அல்லது வடம்.

**blocking capacitor**: *(மின்.)* **தடைக்கொண்மி**: நேர்மின் அழுத்தத்தைத் தடுப்பதற்குப் பயன்படும் ஒரு கொண்மி.

**block chain**: *(எந்.)* **தொடர் சங்கிலி**: மிதிவண்டியினது போன்று கண்ணியும் பொருத்தமாகத் தொடர்ந்த வளையம்.

**blocking condenser**: **தடையுறுத்து விசையேற்றி**: வானொலியின் சுற்றில், குறுக்கு வெட்டாக மின்விசை பாய்வதைத் தடுப்பதற்காக நேர் எதிரான இரு நேர் மின்னோட்ட முனைகளுக்கிடையில் பயன்படுத்தப்படும் ஒரு விசையேற்றி.

**blocking course**: *(க.க.)* **புறந் தடுப்பு அடுக்கு**: கட்டிடச் சுவர்களின் உச்சியிலுள்ள எழுதகத்தின் முகட்டில் பொருத்தப்படும் அடுக்குக் கற்கள்.

**blocking out**: **ஒளித் தடையுறுத்தம்**: ஒளியை ஊடுருவிச் செல்ல விடாதபடி ஒளிப்பட மறி நிலைப் படிவத்திலிருந்து பின்னணி வண்ணத்தை அல்லது வகை நுணுக்கங்களை நீக்கி விடுதல்.

**blockhouse**: *(விண்.)* **தடுப்புக் கட்டுமானம்**: ராக்கெட் செலுத்தும்போது வெடிப்பு, வெப்பம், காற்றுவீச்சு இவற்றிலிருந்து ஆட்களைப் பாதுகாப்பதற்கான கான்கிரீட் தடுப்புக் கட்டுமானம்.

**block letter**: *(அச்சு.)* **முதலுரு எழுத்து வடிவம்**: தடித்த தனிததனி அச்சுருப் போன்ற முதலுரு எழுத்து வடிவம்.

பார்க்க: பழம்படிவ அச்சுரு.

**block plane**: *(மர. வே.)* **புறந் தடுப்புத் தளம்**: 5''-7'' நீளமுள்ள ஒரு சிறிய சமதளப் பரப்பு விளிம்பு அடுக்கு வரிகளை அமைக்க முக்கியமாகப் பயன்படுகிறது. இது மற்றத் தளத்திலிருந்து வேறுபட்டது. இதில் முகட்டு இரும்பு இல்லை. வெட்டும் சாய்தளம் கீழே இருப்பதற்குப் பதிலாக மேலே அமைந்திருக்கும்.

**block tin**: *(கம்.)* **வெள்ளீயம்**: தூய வெள்ளீயம். (தகரம்).

**blood groups**: **குருதிப் பகுப்பினங்கள்**: மனித இரத்தத்தின் நான்கு வகைப் பகுப்பினங்கள். ஒவ்வொரு

வருடைய இரத்தமும் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்ததாக இருக்கும். நோயுற்றவருக்கு தவறான இன இரத்தத்தைச் செலுத்தினால், அவரது உடல்நிலை மோசமடையும். ஏனெனில், ஓர் இனத்தைச் சேர்ந்த இரத்தமானது இன்னொரு இன இரத்தத்தின் உயிரணுக்களுடன் ஒட்டிக் கொண்டு, பின்னர் கரைந்து விடும்.

**bloom** : *(உலோ.)* **புடமிடுதல்** : *(1)* தேனிரும்புத் தயாரிப்பில் இரும்புக் குழம்பு, ஒரு பிழிவு எந்திரத்தினுள் செலுத்தப்பட்டு அல்லது ஒரு நீராவிச் சம்மட்டியால் அடிக்கப்பட்டு, அதில் படிந்திருக்கும் கசடுகள் நீக்கப்படுகின்றன. இதனைப் ''புடமிடுதல்'' என்பர்.

*(2)* கட்டுமானத்தில், ஒரு செங்கற் சுவரின் மேற்பரப்பின் மீதுள்ள பொலிவமைப்பு.

*(3)* தொலைக்காட்சியில், படநுட்பங்களை மறைத்திடும் வகையில் படக் குழலில் தோன்றும் ஒளிப் பிரகாசம். இது ஒரு வெண்பகுதி துள்ளுகின்றபோது நிகழ்கின்றது.

**blower** : *(எந்.)* **காற்றோட்டமியக்கும் பொறி** : இழுக்கப்படும் சுமையினை அதிகரிக்கப் பயன்படும் ஒரு சாதனம். இது காற்றோட்டம் ஏற்படுத்துவதற்காக அல்லது கடுங் காற்று உண்டாக்குவதற்காகப் பயன்படுகிறது.

**blow hole** : *(வார்.)* **உலோகக் குமிழி** : வார்ப்படத்தில் காற்று அல்லது வாயு இருப்பதன் காரணமாக வார்ப்படத்தில் உண்டாகும் ஓர் உட்குழிவு.

**blow horn stake** : *(உலோ.)* **ஊது கொம்பு ஆதாரக் கம்பம்** : உலோகத் தொழிலாளர்கள் பயன்படுத்தும் ஒரு கம்பம், இதில் ஒரு செங்குத்தான கம்பத்தின் நுனியில் இருபுறமும் நீட்டிக் கொண்டிருக்கும் புயங்கள் அமைந்திருக்கும். இந்தப் புயங்களில் ஒன்று நீளமாகவும், நுனி நோக்கிச் சிறுத்ததாகவும், மற்றொன்று குறுகலாகவும் பட்டையாகவும் இருக்கும்.



**blowing** : *(மின்.)* **ஒளிமங்கல்** : சமிக்கைச் செறிவு அதிகமாவதன் காரணமாக தொலைக்காட்சியில் படம் முனைப்பழிந்து படலமாகத் தெரிதல்.

**blowing** : **ஊதிவெடித்தல்** : மிக விரைவாகச் சூடாக்குவதில் நீராவி உண்டாவதால் செய்கலம் வெடித்துச் சிதறிவிடுதல்.

**blow molding** : *(குழை.)* **ஊது வார்ப்படம்**: பிளாஸ்டிக் புட்டிகள், புழையுள்ள செய்கலன்கள் செய்வதற்கான ஒருமுறை. இதில், புறந்துருத்திய பிளாஸ்டிக் குழலினை அல்லது குமிழினைக் காற்றறை ஊதி ஓர் உலோக வார்ப்புப் படிவத்தின் குளிர்ச்சியான பரப்பில் பதியும்படி செய்து வார்ப்புப் படிவம் உருவாக்கப்படுகிறது.

**blown fuse** : *(தானி. எந்.)* **அவிந்த மின்காப்பு எரியிழை** : எரிந்து போன மின்காப்பு எரியிழை.

**blowoff**: *(பொறி )* **ஊது உறிஞ்சி**: ஒரு நீராவி அல்லது கொதிநீர் கொதிகலத்தில் இணைக்கப்பட்டுள்ள ஓர் ஓரதர் அல்லது வடிகால். இது கலத்தில் சேர்ந்துள்ள எண்ணெய், மசகு, கசடு ஆகியவற்றுடன் சேர்த்து நீரையும் நீராவியையும் உறிஞ்சி வெளியே இழுப்பதற்குப் பயன்படுகிறது.

**blowout** : *(எந்.)* **வெடிப்பு** : ஒரு சக்கரத்தின் டயரிலிருந்து காற்றினை உடனடியாக வெளியேற்றும் வகையில் டயரின் உட்குழாயி

லும், வெளிப் பொதியுறையிலும் ஏற்படும் வெடிப்பு.

**blowout coils :** *(மின்.)* **வெடிப் புச் சுருள்கள் :** *ஒரு காந்த விசை யின் வரிசைச் சுற்றிலுள்ள மின் காந்தச் சுருள்கள். இந்த விசை யினால் இணைப்பினை ஏற்படுத் தும்போது, தொடர்புகளுக்கிடை யிலான சுடரினை அணைக்கும் விதத்தில் காந்த அழுத்தம் உண் டாகிறது.*

**blowout patch :** *(தானி.)* **புடைப்பு ஒட்டுப்பட்டை :** *ஒரு டய ரின் பலவீனமான பகுதியை வலுப் படுத்துவதற்காக அந்தப் பகுதியில் கித்தான் அல்லது ரப்பர்த் துண்டி னைச் செருகிக் காற்றடைத்துப் புடைக்கச் செய்தல்.*

**blowpipe : ஊதுகுழல் :** *சூடாக்கு தல், உருக்குதல் காய்ச்சுதல் ஆகிய வற்றுக்கான தீப்பிழம்பினை ஊதி விடுவதற்காக காற்று அல்லது வாயுவைச் செலுத்துவதற்கான ஒரு குழல்.*

**blowtorch :** *(பட்.)* **ஊது பந்தம் :** *குறிப்பிட்ட இடத்தில் தீவிரமாக வெப்பம் உண்டாக்குவதற்குரிய கையடக்கமான சாதனம். இத னைக் குழாய்—தொட்டி வேலை செய்வோரும், வண்ணம் பூசுவோ ரும் பயன்படுத்துகின்றனர்.*

**blow up :** *(அச்சு.)* **அச்சுப்பட விரிவாக்கம் :** *அச்சுப் படங்களைப் பெரிதாக்குதல்.*

**blub :** *(குழை.)* **புடைப்பு :** *பிதுக் கம் அல்லது புடைப்பு.*

**blue : நீலம் :** *மண்பாண்டங் களுக்கு மிகவும் உகந்த வண்ணம்: பச்சைக்கும் செங்கரு நீலத்திற்கும் இடைப்பட்ட ஓர் அடிப்படை வண்ணம்.*

**blue annealing :** *(உலோ.)* **நீலப் பதனாக்கம் :** *கண்ணாடி, உலோகங் கள் முதலியவற்றைக் கட்டுப் படுத்தி ஆறவைத்தல் மூலமோ, நன்கு சூடாக்கி மெல்ல ஆறவிடுவ தன் மூலமோ கடும் பதப்படுத்து தல்.*

**blueprint : முதனிலைப் படிவம் :** *நீலத்தில் வெண்கோட்டாக உருப்படி வமுறும் ஒளிப்பட அச்சுப்படிவம். இந்த முறையை "முதனிலைப் படிவ அச்சடிப்பு" என்பர்.*

**blue stain : நீலப் பூஞ்சணம் :** *பக்குவப்படுத்தப்படாத வெட்டு மரத்தில் ஒரு வகைக் காளானால் உண்டாகும் பூஞ்சணம். இதன் தோற்றம் அருவருக்கத் தக்கதாக இருப்பினும், வெட்டு மரத்தின் வலுவை இது பாதிப்பதில்லை.*

**blue stone, blue vitriol, or copper sulphate :** *(வேதி.)* **மயில் துத்தம்/ நீலக் கந்தகத் திராவகம் / செப்புக் கந்தகி:** *இது நீல நிறமுடை யது; படிக வடிவிலுள்ளது; நச்சுத் தன்மையுடையது; திறந்த வெளிக் காற்றுப்பட பொடிப் பொடியாகக் கூடியது; நீர்த்த கந்தக அமிலத்தை தாமிர ஆக்சைடு மீது வினைபுரியச் செய்வதன் மூலம் தயாரிக்கப்படு கிறது. பஞ்சாலைத் தொழில், மின் கலங்கள் ஆகியவற்றில் பயன் படுத்தப்படுகிறது. பூச்சிக் கொல்லி யாகவும் காளான் கொல்லியாக வும் பயன்படுகிறது.*

**blunging machine : மண்பிசை யும் பொறி :** *மண்பாண்டத் தொழி லுக்காகக் களிமண்ணையும் கற் பொடியையும் சக்கரப் பொறியில் சுழற்றி நீரில் பிசையும் எந்திரம்.*

**blushing:** *(வண். அர.)* **கன்றுதல்:** *வெப்பமான, ஈரப்பதன் மிகுந்த நாட்களில் படச்சுருளின் மீதும் வெண்மையான அல்லது பழுப்பு மேகம் போல் படியும் ஒருவகை மேற்படிமானம். இது கரைப்பான் கள் துரிதமாக ஆவியாவதால் ஏற் படுகிறது.*

**board : பலகை அட்டை :** மெல்லிய மரத்தகடு. இது மென் தகடுகள் அல்லது கட்டை வார்த்துணுக்குகளிலிருந்துவேறுபட்டது. மீ.க்குக் குறைவான கனமும், 10செ. அகலமும் கொண்ட நீண்ட துண்டுகள், பலகைகள் எனப்படுகின்றன.

அட்டைப் பெட்டிகள் தயாரிக்கப் பயன்படும் கனத்த அட்டைப் பலகைகள்.

**board foot : பலகை அளவை :** பலகை அளக்கும் மூல அளவு. 30 செ.மீ. சதுரமும், 2.5 செ.மீ. அல்லது அதற்குக் குறைவான கனமும் கொண்ட அளவு.

**board measure :** *(மர. வே.)* **பலகை அளவீடு :** கவட்டு மரங்களை வடிவுறுத்தி விலைகளை அறுதியிடப் பயன்படும் அளவீடு.

**board rule :** *(மர. வே.)* **பலகை அளவு கோல் :** வெட்டுமரத் தரத்தைச் சோதனை செய்வதற்கான அளவுக் கூறுகள் (குறிக்கப்பெற்ற அளவுகோல்.

**boasting : செதுக்குருவாக்கம் :** திருத்தமின்றி வெட்டிச் செதுக்கி உருவாக்கம் செய்தல்.

**boat tail :** *(விண்.)* **படகு வால் :** ஏவுகணையின் நீள் உருளைப் பகுதி, வாலை நோக்கி விட்டத்தில் குறுகிச் செல்லுதல். இதனால் வளி இயக்க இழுவை விசை குறைகிறது.

**bobbin :** *(குழை.)* **கம்பி இழை புருளை :** ஒரு காந்தத்தின் கம்பிச் சுருள் சுற்றப்பட்டிருக்கிற மைய உட்புரி.

**bodkin :** *(அச்சு.)* **அச்சு இடுக்கி:** திருத்துவதற்காக அச்சுருவைப் பற்றி எடுக்கும் ஒரு நீண்ட கூர்மையான இடுக்கி.

**bodoni :** *(அச்சு.)* **போடோனி அச்சுரு :** போடோனி என்பவர் உருவாக்கிய முதலாவது நவீனப் பொதுமுறை அச்சுரு மாதிரி.

**body :** *(வானூ.)* (1) **விமானக் கட்டுமானச் சட்டம் :** எந்திரத்தின் மேல் மூடியும் கவசமும் கொண்ட விமானத்தின் கட்டுமானச் சட்டம். (2) **மட்கலம் :** மெருகிடப் படாத அல்லது அலங்கார வேலை எதுவும் செய்யப்படாத வெறும் மட்கலம்.

(3) தோரணி வார்ப்படம்.

(4) **திட்ப ஆற்றல் :** பிளாஸ்டிக் தொழிலில், பிசைவுப் பொருளின் திட்ப ஆற்றலைக் குறிக்கும் சொல். இதைப் பொறுத்து அந்தப் பொருளை "மென் பொருள்" அல்லது 'திண்மப் பொருள்' என்பர்.

**bodying in : திண்மையாக்கம்** வெட்டுமரத்தின் உள்ளணுத் துகளினை நிரப்பி மெருகேற்றுதல்.

**body matter :** *(அச்சு.)* **அச்செழுத்து வாசகம் :** விளம்பரத்தில், காட்சியமைவு செய்யாமல் அடுக்கப்பட்ட அச்செழுத்து வாசகப் பகுதி.

**body type :** *(அச்சு.)* **வாசக அச்செழுத்து:** நூல்கள் முதலியவற்றில் படிப்பதற்குரிய வாசகங்களுக்குப் பயன்படுத்தப்படும் அச்செழுத்து.

**bog ore : சதுப்புத் தாது :** சதுப்பு நிலங்களில் காணப்படும் மென்மையான இரும்புத் தாது.

**boiled oil :** *(வண்.)* **கொதிநிலை எண்ணெய் :** ஆளிவிதை எண்ணெய் 400° முதல் 500° பா. வரை கொதிக்க வைக்கப்பட்டு அதனுடன் காரீய அல்லது மாங்கனீஸ் டையாக்சைடு சிறிதளவு சேர்க்கப் படுகிறது. இந்த எண்ணெய் வண்ணங்களை விரைவாக உலரச் செய்வதற்குப் பயன்படுகிறது. பழம் பொருள்களுக்கு இது மிகச் சிறந்த மெருகு எண்ணெயாகும்.

**boiler** : **கொதிகலன்** : (1) தொழிற் சாலைகள், கப்பல்கள், வீடுகள் முதலியவற்றுக்கான வெப்பத்தை அல்லது விசையை உண்டாக்கு வதற்காக நீராவியை உற்பத்தி செய்யும் ஓர் ஊதுலையின் பகுதி. (2) வீடுகளில் வெந்நீர் போடு வதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு கொள்கலம். திறந்த கலங்கள் அல்லது கொள்கலங்களிலிருந்து வேறுபட்டது.

(3) பயன்பாடு, கட்டுமானம் ஆகி யவற்றையொட்டி வெப்ப மூட்டு வதற்கும் திறனூட்டுவதற்கு மான கொதிகலங்கள் நான்குவகை யாக வகைப்படுத்தப்பட்டுள்ளன: (1) வார்ப்பிரும்புப் பகுதிக் கொதி கலம்; (2) எஃகு நெருப்புக் குழாய் கொதிகலம்; (3) எஃகு நீர்க்குழாய் கொதிகலம்; (4) சிறப்பு வகைக் கொதிகலம்.

(பார்க்க : வார்ப்பிரும்புக் கொதி கலம்; கிடைநிலை மீள் வரவுக் குழாய்க் கொதிகலன்; நெருப்புக் குழாய்க் கொதிகலம்; எஃகுக் கொதிகலம் முதலியன)

**boiler horse power** : (பொறி.) **கொதிகலக் குதிரைத்திறன்** : ஒரு கொதிகலத்தில், 212° பா. வெப்ப நிலையில் ஒரு மணிநேரத்தில் 15 கிலோ நீர் ஆவியாகும் திறன், ஒரு மணி நேரத்தில் 33, 471.9 B. T. W. அளவுக்குச் சமமான தாகும்.

**boiler plate** : (உலோ.) **கொதி கலத் தகடு**: தொட்டிகள் அல்லது கொதிகலங்கள் செய்வதற்குப் பயன்படும் எஃகுப் பாளங்கள் அல்லது தகடுகள்.

**boiler room** : (பொறி.) **கொதிகல அறை** : வெப்ப மூட்டுவதற்கும் விசையூட்டுவதற்கும் கொதிகல மும் அதன் துணைக் கருவிகளும் வைக்கப்பட்டுள்ள தொழிற்சாலை யின் அல்லது வேறு கட்டிடத்தின் ஒரு பகுதி.

**boiler scale**: **கொதிகலப் படலம்** : ஒரு கொதிகலத்தினுள் உள்ள கார்பனேட்டு வண்டல், கால்சியம் மக்னீசியப் சல்பேட்டுகள், மற்ற மிதக்கும் பொருட்களின் படலம்.

**boiling point** : **கொதிநிலை** : ஒரு திரவம் கொதித்து ஆவியாகக் கூடிய உச்ச வெப்ப நிலை. இது வாயுமண்டலக் காற்றின் அழுத் தத்திற்கேற்ப மாறுபடுகிறது. ஒரு மலையின் உச்சியில் நீர், கடல் மட்டத்தை விடக் குறைந்த வெப்ப நிலையில் ஆவியாகிறது. ஒரு குறிப்பிட்ட வாயு மண்டலக் காற்றழுத்தத்தில் (பாரமானியில் பாதரசம் 76 செ.மீ. அளவு) ஒரு திரவம் ஆவியாவதைப் பொறுத்து அதன் கொதிநிலை நிருணயிக்கப் படுகிறது.

**bold** : (அச்சு.) **திண்மை அச் செழுத்து** : கனத்த முகப்புடைய அச்செழுத்து. முனைப்பான தோற்றமுடைய எதுவும்.

**bold face** : (அச்சு.) **திண்மை முகப்பு** : வாசக எழுத்துக்களை விடத் தடித்த தோற்றமுடைய அச் செழுத்து. தலைப்புகளை முனைப் பாகக் காட்டுவதற்கு இந்த வகை அச்செழுத்துக்கள் பயன்படுத்தப் படுகின்றன.

**bole** : **செங்களிமண்** : எளிதில் சுடத்தக்க செந்நிறக் களிமண் வகை. இது மஞ்சள், பழுப்பு, கருமை நிறங்களிலும் கிடைக் கிறது. முன்னர் சாயப் பொரு ளாகப் பயன்படுத்தப்பட்டது.

**bolection** : **வார்ப்படப் புடைப்பு** : சுவர், கதவு முதலியவற்றின் பரப்பி லுள்ள தனி முகப்புக் கூறுகளின் விளிம்பைச் சுற்றியுள்ள ஒரு வார்ப்படம்.

**bollard** : **கட்டுத்தறி**: கப்பலிலோ துறையிலோ கயிறுகள் கட்டுவதற்

குரிய வார்ப்பிரும்பினாலான அல்லது மரத்தினாலான கட்டுத்தறி.

**bolometer** : *(மின்.)* **வட்டலை மியக்க மானி** : இது ஓர் அனல் துலாக்கோல். மின்விசைத் தடை மாறுபாடுகளால் ஏற்படும் வெப்ப ஆற்றலின் மிக நுண்ணிய அளவுகளை அளவிடக் கூடிய ஒரு நுட்ப மான கருவி.

**bolster** : *(க.க.)* **தாங்குமுட்டு** : பண்டைக் காலக் கிரேக்கக் கட்டிடக்கலையில் தூண் தலைப்பின் இருபுறச்சுருள் அணி அமைப்பின் திருகுசுருள் வடிவ முகட்டின் பக்கக் கிளைப் பகுதி. ஒரு கவானின் மையத்தில் உத்தரத்திலிருந்து மறு உத்தரம் வரை ஓடும் குறுக்குச் சட்டம். ஓர் அலைவாய்க் குறட்டின் மீதுள்ள ஒரு தாங்கணைவுப் பாலத்தின் அண்டைக் கொடுத்துத் தாங்கும் இடம். ஒரு தூலத்தின் தாங்கணைவை நீட்டிப்பதற்கு ஒரு கம்பத்திலுள்ள முகடு அல்லது மேல் விளிம்பு.

"அச்சு வார்ப்புக் கட்டை" என அழைக்கப்படும் பட அச்சுக் கட்டை. இதில் வார்ப்புருவத் தாய்ப்படிவம் அழுத்தும் பொறி வைக்கப்பட்டிருக்கும். இது தலைப்புடன் இருமுனைகளிலும் மரையாணிகளால் இணைக்கப் பட்டிருக்கும்.

**bolster** : **முட்டுக்கொடு** : அண்டைக் கொடுத்துத் தாங்குவதற்கு முட்டுக் கொடுத்தல். பொதுவாக இது ஓர் அடிக்கட்டையாக அல்லது ஆதாரக்கட்டையாக அமைந்திருக்கும். இது திண்டுக் கட்டை நெடுகிலுங் கூட அமைந்திருக்கும்.

**bolt** : *(எந் )* **தாழ்ப்பாள்** : பூட்டுவதற்கான ஒரு தாழ். பொதுவாக இது ஓர் உச்சித்தலையும், திருகிழையுடைய உடற்பகுதியும் கொண்ட ஓர் உலோகத் துண்டாக அமைந்திருக்கும்.

நீள் சதுர மரச் சில்லேடு போன்று, துண்டு துண்டுகளாக வெட்டப்பட்ட வெட்டுமரத் துண்டு.

**bolt cutter or bolt shear** : **மறையாணி வெட்டி அல்லது மறை யாணி கத்திரி** : மரையாணிகள், சங்கிலிக் கண்ணிகள் முதலியவற்றை வெட்டுவதற்குக் கையினால் இயக்கப்படும் கத்திரிப்பான்.

**bomarc** : *(விண்.)* **போமார்க்** : தரையிலிருந்து வானத்திற்கு ஏவக் கூடிய ஓர் ஏவுகணை. இதனை 320-640 கி.மீ. உயரம் வரைச் செலுத்தலாம்.

**bombardment** : *(மின்.)* **அணுத் தகர்ப்பு** : அதிவேக எலெக்ட்ரான்கள், அயனிகள் போன்ற விசைத் துகள்களின் ஒழுக்கால் அணுவைத் தகர்த்துத் தாக்குதல். இதனால், பல வண்ணப் பகட்டொளி வீசுகிறது.

**bombe** : *(க.க.)* **புடைப்புக் கூம்பு** : புடைப்பாக, வட்டமாக அல்லது புறங்குவிந்த கூம்பு வடிவம்.

**bond** : **பிணைப்பு** : கட்டிடச் செங்கல் அல்லது கல்லின் பற்றுமானக் கவிகைப் பிணைப்பு.

சாணை உருளையில் உராய் பொருளின் துகள்களை ஒன்றாகப் பிணைப்பதற்குப் பயன்படும் பிணைப்புப் பொருள்.

**bonded lining** : *(தானி; எந்.)* **பிணைப்பு உள்வரிப் பூச்சு** : தரையாணிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகத் தடுப்புக் கட்டைகளில் அல்லது கட்டுக் கம்பிகளில் பூசப்பட்டுள்ள உள்வரிப் பூச்சு.

**bond paper** : **ஆவணக் காகிதம்** : பத்திரங்கள், பங்குச் சான்றிதழ்கள் முதலியவற்றை எழுதுவதற்குப் பயன்படும் உயர்தன்மைத்

தாள். இது கந்தல்கள், விலங்குத் தோல்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. கடிதத் தாள்களுக்கும் இது பயன்படுகிறது.

**bond stone** : **ஊடுகல்** : சுவரின் ஊடே நீண்டு செல்லும் கல்.

**bone black** : *(வேதி.)* **எலும்புக் கரி எச்சம்**: மூடிய கலத்தில் வெப்பூட்டிக் கருக்கப்பட்ட எலும்பின் கரி எச்சம். வண்ணம் போக்கவும், சர்க்கரைக்கு மெருகேற்றவும், வண்ண நிறமியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**bonet** : *(கம்.)* **மேல்மூடி** : ஓர் ஓரதர் நூற்புக் கதிரின் வால் முனையை மூடி வைப்பதற்குப் பயன்படுகிறது.

**book binder's wire** : *(அச்சு.)* **புத்தகம் கட்டுவோர் கம்பி** : திறந்த உலையில் தயாரிக்கப்பட்டு ஈயம் பூசிய எஃகினாலான கம்பி. 18 முதல் 30 கடிகை அளவுகளில் உருண்டை வடிவிலும் 18X20 முதல் 25X32 கடிகை அளவுகளில் தட்டையான வடிவிலும் தயாரிக்கப்படுகிறது. 10 செ.மீ. கண்டுகளில் அல்லது காகிதக் கூம்புகளில் விற்கப்படுகிறது.

**book binding** : **புத்தகக் கட்டுமானம்** : நூலின் பகுதிகளை ஒருங்கிணைத்து, அதன் மேல் உறையிட்டுக் கட்டுதல்.

**book paper** : **புத்தகக் காகிதம்** : புத்தகங்களை அச்சிடுவதற்குப் பயன்படும் மெருகேற்றிய அல்லது மெருகேற்றாத காகிதம். இது அட்டை உறைகளுக்குப் பயன்படும் முரட்டுக் காகிதத்திலிருந்து வேறுபட்டது.

**boom** : **குறுக்கு விட்டம்** : பாரங்களைத் தூக்கி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் வைப்பதற்குப் பயன்படும் பாரந்தூக்கியின் நகரும் புயம்.

**boost** : *(வானூ.)* **மேலேற்றி**: விமானத்தில் கடல் மட்டத்தில் எஞ்சினுள் சாதாரணமாகச் செலுத்தப்படும் காற்றின் அல்லது கலவையின் அளவைவிட அதிக அளவு உட்செலுத்தி மேலே ஏற்றுதல்.

**boost control automatic** : *(வானூ.)* **தானியங்கி மேலேற்றுக் கட்டுப்பாடு** : மேலே ஏற்றும் அழுத்தத்தைத் தானாகவே முறைப்படுத்தும் அமைவு.

**booster** : *(மின்.)* **நிரவி** : மின்னியக்கும் செறிவுறுத்துவதற்கான ஒரு மின்னாக்கி. பொதுவாக ஒரு சேமக்கலம் ஒரு பகுதியாகவுள்ள ஓர் இணைப்பு முறையில் இது பயன்படுத்தப்படுகிறது. ஒரு மின் கலத்திற்கு மீண்டும் மின்னூட்டம் வேண்டியிருக்கும் ஒரு நிலையில் இந்த நிரவி பயன்படுத்தப்படுகிறது.

**booster brake** : *(தானி; எந்.)* **நிரவித் தடை** : தடைக் கால்மிதியுடன் இணைக்கப்பட்டுள்ள, உட்கொள் பெருங்குழல் வெற்றிடத்திலிருந்து செயற்படும் ஒரு துணையான காற்று அறை. இது குறைவான கால் மிதி அழுத்தத்துடன் அதிகத் தடை விளைவினை உண்டாக்க உதவுகிறது.

**booster coil**: *(மின்.)* **நிரவிச் சுருள்**: விமானம் புறப்படும்போது அதன் எஞ்சினின் சுடர்ச் செருகிக்கு நேரடியாக மின் விசையூட்டுவதற்குப் பயன்படும் ஒரு தூண்டு சுருள்.

**booster-glide vehicle** : *(விண்.)* **மின்னியக்கச் சறுக்கு ஊர்தி**: ராக்கெட்டினால் உந்து செலுத்தப்படும் இறகுடைய ஊர்தி. இது வளியியக்கக் கட்டுப்பாட்டின்கீழ் வாயு மண்டலத்தை விட்டுச் சென்று மீண்டும் வாயுமண்டலத்திற்குள் திரும்பி வரக்கூடியது.

**booster magneto** : *(வானூ.)* **நிரவி நிலைக் காந்தப் புலம்** : கிளம்புவதற்குப் பயன்படுத்தப் படும் ஒரு நிலைக் காந்தப் புலம்.

**booster pump :** *(தானி.)* **நிரவி இறைப்பான்** : எரிபொருள் இறைப் பானுடன் ஒருங்கிணைவாக அமைக்கப்பட்டுள்ள ஒரு துணை இறைப்பான். உட்கொள் பெருங் குழல் வெற்றிடம் செயற்படா திருக்கும் போது, காற்றுக் கவசம் போன்ற சாதனங்கள் தொடர்ந்து இயங்குவதற்கு இது வெற்றிடத் தை அளிக்கிறது.

**booster rocket** : *(வானூ.)* **நிரவி ஏவுகணை**: ஓர் ஏவுகணையின் அல்லது பிற விண்வெளிக் கலத் தின் உந்துவிசையினை ஊக்கு விக்க உதவும் ஓர் ஏவுகணை உந்து.

**boost voltage**: *(மின்.)* **உந்து மின் னழுத்தம் :** தொலைக்காட்சிப் பெட்டியில், ஒடுக்க மின்சுற்றுவழி யில் உண்டாகும் கூடுதலான மின் னழுத்தம். இது உந்து கொண்மி யில் சராசரி மின்னேற்றத்தைக் குறிக்கிறது.

**boot**: **புதையரணம்:** தூசுக்கும் பருவ நிலைக்கும் எதிரான பாது காப்பாகப் பயன்படும் ஒரு புதை யுறை,

**borax:** *(வேதி.)* **பொரிகம்/போ ரக்ஸ்:** $Na_2B_4O_7$ நீருடைய உவர் உப்புவகை. வெண்படிகக் கூட்டுப் பொருள். இயற்கையாகக் கிடைக் கிறது. நோய் நுண்மக் கொல்லி யாகவும், இரும்பு-எஃகுக் கலவை பற்றவைப்புகளிலும் வெண்கலம், செம்பு உலோகங்களுக்குப் பித்த ளை வண்ணமூட்டுவதற்கும் நீரை மென்மைப்படுத்துவதற்கும் இது பயன்படுகிறது.

**Borcher's metal**: *(உலோ.)* **போர் ஷர் உலோகம்**: அமிலம் அரிக்காத, அரிமானமாகாத ஒரு பயனுள்ள உலோகக் கலவை. இதில் முதன் மையாகக் கலந்திருக்கும் அமைப் பான் குரோமியம்.

**border**: **அருகு**: ஒருங்கிணைக்கப் பட்ட மேற்பூச்சுத் தோரணிகளின் புற விளிம்பு வடிவமைப்பு.

அச்சுக் கலையில், அச்செழுத் துக்களை உள்ளடக்கியுள்ள வரம் புக் கோடு அல்லது அலங்கார வேலைப்பாடு.

**bore**: **துளை:** ஒரு குழாயின் நீள் உருளையின் அல்லது தண்டின் துவாரத்தின் உட்புழையின் குறுக் களவு. துளையிடுதல்மூலம் துவா ரம் ஏற்படுத்த வேண்டும் என்ப தை இது குறிக்கிறது.

**bore**: *(தானி.)* **நீள்துளை**: ஓர் எஞ் சின் நீள் உருளையின் விட்டம்.

**boric acid**: *(வேதி.)* **போரிக் அமி லம்**: பொறிகத்தை ஓர் அமிலத் துடன் வினைபுரிய வைத்துத் தயா ரிக்கப்படும் ஓர் வேதியியற் கல வைப் பொருள் ($H_3BO_3$). இது நிறமற்ற படிக வடிவமுடையது. மருந்துகளில் பயன்படுத்தப்படு கிறது. மண்பாண்டத் தொழில், கண்ணாடித் தொழில்களில் பயன் படுகிறது.

**boring**: *(எந்.)* **துளையிடுதல்**: மரம் அல்லது உலோகத்தில் வட்ட வடிவத் துளைகளையிடுதல்.

**boring bar**: *(எந்.)* **அகழ்வுத் தண்டு**: வெட்டு முனையையுடைய ஒரு நீள் உருளைத் தண்டு. இது கடைசல் எந்திரங்களிலும் துரப் பண எந்திரங்களிலும், மற்றத் துளையிடும் சாதனங்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

**boring machine:** *(எந்.)* **அகழ்வு எந்திரம்**: நீள் உருளைகள், புடைப் புகள், படுகை வளையங்கள் போன்றவற்றைக் குடைவதற்குப் பயன்படும் எந்திரம்.

**boring mill**: *(எந்.)* **அகழ்வு பொறி:** சுழலும் மேடையுடைய ஒரு செங்குத்தான சாதனம். பல வேலைகளை ஒரு கடைசல் எந்திரத்தைவிட அதிக எளிதாக இதில் செய்து முடிக்கலாம்.

**boring tool**: **அகழ்வுச் சாதனம்:** மரவேலைகளுக்கான ஒரு சாதனம் உலோகங்களுக்கான வெட்டு எந்திரங்களும் இதில் அடங்கும்.

**boron** : *(வேதி.)* **போரோன் :** உலோகச் சார்பற்ற கருந் தவிட்டு நிறத் தனிப்பொருள் வகை. இது மின்பகுப்பு முறை மூலம் பெறப்படுகிறது. இது சிலிக்கன் தனிமத்தை ஒத்திருக்கும். எஃகினை வலுப்படுத்துவதற்கும், கலவைப் பொருள்களில் உருக்கும் பொருளாகவும், ஆக்சைடு நீக்கும் பொருளாகவும் பயன்படுகிறது.

**boron carbide** : *(வேதி.)* **போரோன் கார்பைடு** : நொய்மையான, கருமை நிறப் படிகத் தூள். கடினத்தில் வைரத்திற்கு நிகரானது. உராய்வுப் பொருளாகப் பயன்படுகிறது.

**bort** : **வைரத்துண்டு** : உராய்வுப் பொருளாகப் பயன்படுத்தும் வைரத்துண்டு.

**boss** : *(க.க.)* **குமிழ்** : (1) அலங்காரக் கவிகை மாட மையக் குமிழ். (2) ஒரு சக்கரத்தின் மையக் குடம். (3) ஓர் எத்திரத்தின் உறுப்புடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு வட்ட வடிவத் தகடு.

**Boston hip roof** : *(க.க.)* **இரட்டை மோட்டு இணைப்பு வாரி முகடு** : மோட்டு இணைப்பு வாரி நெடுகிலும் சில்லோடுகளை அல்லது பலகைக் கற்களை நீளவாக்கில் இரட்டை வரிசையில் அமைத்தல். நீர் புகாதவாறு இணைப்புகள் இறுக்கமாக அமைக்கப்பட வேண்டும்.

**botany**: **தாவரவியல் :** செடியினங்களின் வாழ்க்கை முறை பற்றி ஆராயும் அறிவியல்.

**botch** : **கரணை** : அரைகுறையாகவும், மோசமாகவும் செய்யப்படும் வேலைப்பாடு.

**bottled** : *(அச்சு.)* **புட்டி வடிவ அச்செழுத்து** : குறைபாடான வார்ப்படம் காரணமாக அடியில் அகன்றும் உச்சியில் குறுகியும் புட்டி வடிவில் அமைந்திருக்கும் அச்செழுத்து.

**bottom anchored core**: *(வார்.)* **அடிநங்கூர உட்புரி** : ஒரு வார்ப்படத்தில் வார்ப்படப் பொருளை ஊற்றும்போது, அது மிதக்காமல் தடுப்பதற்காக, வார்ப்படத்தின் அடியில் நங்கூரமிட்ட உட்புரி. இதனை இயன்ற அளவுக்குப் பயன்படுத்தாமல் தவிர்க்க வேண்டும்.

**bottom board** : *(வார்.)* **அடித் தகடு**: இழுவையின் நுனியில் வைக்கப்பட்டு, உருட்டுவதற்கு முன்னர் கட்டிப் பிணைக்கப்படும் பலகை அல்லது தகடு. இது எஞ்சிய வார்ப்பட மற்றும் வார்ப்புரு வேலைகளின் போது வார்ப்படத்தின் அடிப்பகுதியாகச் செயற்படும்.

**bottom clearance** : *(பல்.)* **அடித் தட்டு இடைவெளி** : அக இணைப்புக்கும் பல் இணைப்புக்குமிடையிலான வேறுபாடு இதுவாகும். இது பற்சக்கரச் கொளுவிணைப்பில் பல்லிணையின் நுனிக்கும் அடிக்குமிடையில் இடைவெளியை உண்டாக்கும்.

**bottom rail** : *(க.க.)* **அடிநிலை அழிக்கம்பி** : ஒரு பலகணிச் சட்டத்தின் கதவிலுள்ள அடிமட்டக் கிடைநிலைக் கம்பி.

**bottom stake**: *(உலோ; வே.)* **அடிநிலை ஆதாரக் கம்பம்:** ஒரு செங்குத்தான ஆதாரக்கழி; இதன்

மேல் முனை செயல் விளிம்பு உடையதாக இருக்கும்.

**bott stick:** *(வார்.)* **உலோகத் தடுப்புக்கோல்:** ஒரு முனையில் ஒரு சீர்மையற்ற விரிவாக்கத்தைக் கொண்டுள்ள 23அல்லது 12செமீநீள முள்ள இலேசானதொரு இரும்புக் கோல். இரும்பு வார்ப்படத் தொழிற்சாலை அடுப்பிலிருந்து வழியும் உலோகத்தை நிறுத்து வதற்காக இதில் ஒரு களிமண் உருண்டை வைக்கப்பட்டிருக்கும்.

**boundary:** **வரம்புக்கோடு:** வரை யறை செய்கிற அல்லது பிரிவினை செய்கிற ஒரு கோடு.

**boundary light:** *(வானூ.)* **எல்லை விளக்கு:** ஒரு விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கும் பரப்பள வின் எல்லைகளைக் குறிப்பதற்கு அமைக்கப்பட்ட விளக்குகளில் ஒன்று.

**boundary marker:** *(வானூ.)* **எல் லை வட்டம்:** விமான நிலையத்தில் விமானம் தரையிறங்குவதற்குரிய பரப்பளவின் எல்லைகளைக் குறிப் பதற்காகப் பயன்படும் வண்ணம் பூசிய ஒரு கூம்பு, ஒரு திண்மை யான வட்டம், வட்டத்தகடு அல் லது வேறு சாதனம்.

**Bourdon tube:** *(தானி. எந்.)* **அளவீட்டுக் குழாய்:** மிக விரைந்து ஆவியாக்கக் கூடிய ஒரு வாயு அடங்கிய முத்திரை மாட்டப்பட்ட குழாய். இதில் வாயு விரிவடையும் போது, அளவு குறிக்கப்பட்ட ஒரு சுழல் வட்டின் மீது இயங்கும் ஒரு முள் அளவினைக் குறித்துக் காட் டும்.

**bourgeois:** *(அச்சு.)* **நடுத்தர அச்சு எழுத்துருப் படிவம்:** ஏறத் தாழ 9 புள்ளி வடிவளவுள்ள ஓர் அச்சு எழுத்துருவுக்குரிய பழைய பெயர்.

**bow:** *(க.க.)* **வில் வளைவு:** ஒரு கட்டிடத்தில் ஒரு வளை வரைவு. அல்லது ஒரு பலகோணக் கட்ட வடிவம் அமையும் வகையில் முன் பிதுங்கியுள்ள பகுதி.

**bow compass:** **வில் வளைவுத் திசைகாட்டி:** இது வில்வளைவு அமைப்பு மீது சுழலும் ஒரு சிறிய கவராயம், இதனை உருவரைப் பட வரைவாளர்கள் பயன்படுத்து கிறார்கள். இதில் இருகால்களை யும் இணைக்கும் ஒரு திருகின் மூலம் ஆக்க முறையான சரி யமைவு செய்யப்படுகிறது.

**bow - heavy:** *(வானூ.)* **கீழ்நோக் கிப் பாய்வு:** ஒரு விண்கலம் வானில் அசையாத காற்றில் இயங்காம லிருக்கும்போது, கீழ்நோக்கிப் பாயும் அதன் அச்சுடன் சீரமை வாக இருக்கும் நிலை.

**bow pen:** **வில் வளைவுப் பேனா:** சிறிய வில்வளைவுகளை அல்லது வட்டங்களை மையால் வரைவதற் காகப் பயன்படும் ஒரு கவராயம். மற்ற வில்வளைவுக் கருவிகளில் உள்ளது போலவே இதிலும் கால் களை இணைக்கும் ஒரு திருகின் மூலம் சரியமைவுகள் செய்யப்படு கின்றன,

**bow pencil:** **வில்வளைவு வரை கோல்:** சிறிய வில்வளைவுகளை அல்லது வட்டங்களைப் பென்சி லால் வரைவதற்குப் பயன்படும் ஒரு வரைமானக் கருவி.

**bow saw:** *(மர.வே.)* **வில் வாள்:** வில் போன்ற சட்டத்தில் உள்ள நாண்போல் ஏற்றப்பட்ட ஒடுங் கிய அறுப்பு வாள்.

**box an-nealing:** *(உலோ.)* **பெட் டியில் பதப்படுத்துதல்:** மூடிய உலோகப் பெட்டியில் எஃகினைக் கட்டுப்படுத்தி ஆற வைத்தல் மூல மோ, நன்கு சூடாக்கி மெல்ல ஆற விடுவதன் மூலமோ கடும் பதப் படுத்தும் முறை.

**boxboard :** **பெட்டி அட்டை :** அட்டைப் பெட்டிகள் செய்வதற்குப் பயன்படும் மடங்கும் தன்மையுடைய கனத்த காகித அட்டை.

**box column :** *(க.க.)* **பெட்டித் தூபி :** புகுமுக மண்டபக் கட்டுமானத்தில் பயன்படும் சதுரப்பகுதியில் அமைக்கப்படும் உட்புழைவான தூபி.

**ox connector :** *(மின்.)* **பெட்டி இணைப்பான்:** கம்பிவடத்தின் நுனிகளை ஒரு பெட்டியுடன் இணைப்பதற்குப் பயன்படும் மரையுடன் கூடிய உட்குடைவான ஒருவகைக் கோல்.


**box frame :** *(க.க.)* **பெட்டி வரிச் சட்டம் :** பலகணிச் சட்டத்தின் பாரங்களுக்காகப் பெட்டிகளையுடைய ஒரு பலகணிச் சட்டம்.

**box girder :** *(பொறி.)* **பெட்டித் தூலம்:** இணையான இரு உத்தரங்களைக் கொண்டு கட்டப்பட்ட ஒரு தூலம். இந்த உத்தரங்களில் உச்சியிலும் அடியிலும் தகடுகள் இணைக்கப்பட்டிருக்கும்.

**boxwood :** *(மர.வே.)* **பெட்டி மரம்:** இளமஞ்சள் நிறமுள்ள கடினமான, கரடுமுரடான, மேற்கரண் பரப்புடைய மரம். வரையுருளை, அளவுகோல் போன்ற சிறிய சாதனங்களையும், கருவிகளின் கைபிடிகளையும் தயாரிக்கப் பயன்படுகிறது. இது பயன்படுத்தப்படுவதற்கு முன்பு பல ஆண்டுகள் பதப்படுத்தப்பட வேண்டும். பூக்கக்கூடிய செம்மரமும் பெட்டிமரம் எனப்படும்.

**Boyle's law :** *(இயற்.)* **பாயில் விதி:** "வெப்பநிலை மாறாமலிருக்கும்போது ஒரு வாயுவின் கன அளவு, அதன் அழுத்தத்திற்கு நேர்மாறாக மாறுதலடையும்" என்பது இந்த விதியாகும்.

**brace :** *(மர.வே.)* **பற்றிறுக்கி :** ஆதாரமாக அல்லது இறுக்கிக்




கெட்டிப்படுத்தும் சாதனமாகப் பயன்படுத்தப்படும் ஒரு சாய்தளமான வெட்டு மரத்துண்டு.

**brace bit :** *(மர.வே.)* **பற்றிறுக்கித் துண்டு :** மரத்தில் துளையிடுவதற்குப் பயன்படும் சாதாரணத் துண்டு. இதில் ஒரு சாதாரணப் பற்றிறுக்கியின் குதை குழியில் பொருத்துவதற்குச் சதுரமான நுனிநோக்கிச் சிறுத்துச் செல்கிற காம்பினைக் கொண்டிருக்கும்.

**brace frame :** *(க.க.)* **ஆதாரச் சட்டம் :** இது ஒரு கட்டிடத்தின் வரைச் சட்டம். இதில் மூலைக் கம்பங்கள், பலகணிப்படிக் கற்களாலும், தகடுகளாலும் வலுவூட்டப்பட்டிருக்கும்.

**brace jaws :** *(மர.வே.)* **பற்றிறுக்கி அலகுகள் :** ஒரு மரத்துண்டின் நுனிநோக்கிச் செல்கிற காம்பினைச் சுற்றி இறுகப் பற்றிக் கொள்கிற ஒரு துண்டுப் பற்றிறுக்கியின் குறடுகள், (அலகுகள்)

**bracing :** *(க.க.)* **வலிமையூட்டுதல்:** ஒரு கட்டுமானத்திற்கு வலுவூட்டுவதற்காகக் கோல்களாலும் கட்டைகளாலும் தாங்கு ஆதாரம் அமைத்தல்.

**bracket :** **தண்டயம் :** ஒரு சுவர் மாடத் தண்டயப் பலகைக்கு அல்லது அலங்காரப் பேழைக்கு ஆதாரமாகப் பயன்படுத்தப்படும் ஒரு ஏந்தற் பலகை.


**bracket cornice :** **தண்டய எழுதகம்:** வெளியே தெரியும்படி அடுச்

குத் தண்டயங்களின் ஆதாரத்தில் நிற்கும் ஓர் எழுதகம்.

**bracketing** : **முட்டுக்கொடுத்தல்** : மரச்சட்டத் துண்டுகளால் ஏந்துவளை கொண்டு தாங்கி நிறுத்துதல். இதனுடன் ஓர் எழுதகத்தின் மேற்பரப்பாக அமையும் அரைசாந்தும், மென்மரப் பட்டிகையும் இணைக்கப்பட்டிருக்கும்.

**brad** : (மர.வே.) **குறுந்தலை ஆணி** : சிறுபக்கத் திருப்பமுடைய தட்டையான சிறு தலையுடைய ஆணி.

**bradawl** : (மர.வே.) **துளைக் கருவி** : திருகு சுருளற்ற சிறிய துளையிடு கருவி.



**Bragg's law** : **பிராக் விதி** : ஒரு படிகம் எந்தச் சூழ்நிலைகளில் ஊடுகதிர்களை (எக்ஸ்-ரே) மிக வலுவாகப் பிரதிபலிக்கும் என்பதைக் கூறும் விதி: "படிகத்தின் தளங்கள் (படுகைகள்) இடையிலான தூரம்......ஆகவும், ஊடுகதிர்களின் அலை நீளம்......ஆகவும் இருக்குமானால், அதன் மிகச் சிறந்த கோணம்......ஆகும்."

**Bragg's method** : **பிராக் முறை** : ஒரு படிகததின் கட்டமைப்பை ஊடு கதிர்கள் மூலம் ஆராய்ந்தறியும் முறை.

**braided wire** : (மின்.) **பின்னல் கம்பி** : பல சிறிய கம்பிகளை ஒன்றாகச் சேர்த்துப் பின்னிய மின் கம்பி.

**brain** : (விண்.) **விண்வெளிக்கல மூளை** : விண்வெளிக் கலங்களிலுள்ள மின்னணுவியல் செய்திப் பகுப்பாய்வுச் சாதனம்.

**brake band** : (தானி.எந்.) **தடைக் கட்டுக் கம்பி** : நெகிழ் திறமுள்ள உலோகக் கட்டுக்கம்பி. இதனுடன் தடை உள்வரி இணைக்கப்பட்டிருக்கும்.

**brake drum** : (தானி.எந்.) **தடை வட்டுருளை** : இது சாதாரணமாக 25 முதல் 45 செ.மீ. விட்டமும், 5 முதல் 7 செ.மீ.அகலமும் உடைய எஃகுக் கால்மிதியாகும். இது காரின் சக்கரங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும். இது தடையுறுத்தத்தை ஏற்றுக் கொள்ளும்.

**brake fluid** : (தானி.) **தடைப் பாய்மம்** : பல்வேறு பருவ நிலைகளில் அபரிமிதமான வெப்பத்தைத் தாங்கிக் கொள்ளும் வகையில் தடையமைப்பில் முறையான பாய்மத் தன்மையை நிலை நிறுத்தும் வகையில் அமைந்த கிளிசரின், எண்ணெய்கள், சேர்மானப் பொருள்கள் ஆகியவற்றின் ஒரு கலவை.

**brake horse-power** : (தானி.) **தடைக் குதிரைத்திறன்** : ஒரு பொறியுடன் இணைந்த ஒரு தடையமைவிலிருந்து எடுக்கப்பட்டு, ஒரு திறன் மானியால் பதிவு செய்யப்படும் பொறியமைவின் குதிரைத் திறன்.

**brake lever** : (தானி.எந்.) **தடை நெம்புகோல்** : ஓர் எந்திரத் தடையமைப்பில் தடைக்கோல்கள் இணைக்கப்பட்டுள்ள ஒரு நெம்புகோல்.

**brake lining** : (தானி.எந்.) **தடை உள்வரி** : தடைக்கட்டுக் கம்பிகளுடன் பொருத்தப்பட்டுள்ள பஞ்சு, கல்நார், மெல்லிய செம்புக்கம்பி போன்ற பின்னற்பொருள்.

**brake ratchet** : (தானி.எந்.) **தடைக் கால்மிதி** : தடையமைவினைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படும் கால்மிதியமைவு.

**brake rod** : (தானி.) **ஒரு வழிப் பற்சக்கரத் தடையமைவு** : சலாகை

மீது அமைந்த பற்களின் இயக்கத்துடன் ஒருவழி அசைந்து மறுவழித் தடுக்கும்தடைக்கோலமைவு.

**brake shoe:** *(தானி.எந்.)* **தடைக் கோல் :** எந்திரத் தடையமைவில் பிணைப்பின் ஒரு பகுதியாக அமைந்துள்ள புழை வாயிலில் அல்லது கயிறு கப்பி இணைப்பதற்காக விட்டத்தில் பொருத்தப் பட்டுள்ள இருப்பு வளை கம்பியால் முடிவுறும் ஒரு கோல்.

**brake shoe** *: (எந்.)* **தடை உராய்வு** தடைப்பொறியின் உராய்வுக்குரிய பகுதி. உலோக வார்ப்படத்தில் அமைந்த இது சக்கரத்தின் வளைவுடன் பொருத்தப்பட்டிருக்கும்.

**braking ellipses:** *(விண்.)* **கோள அணுகுவழிகள் :** தரையிறங்குவதற்கு ஆயத்தமாக ராக்கெட்டின் வேகக்தைக் குறைக்கும் நோக்குடன் பூமியின் அல்லது வேறேதேனும் கோளத்தின் வாயுமண்டலத்திற்குள்ள பல கோளப் பாதை அணுகுவழிகள்.

**braking surface** *: (தானி.)* **தடையுறுத்தப் பரப்பு** : ஒரு சக்கரத்தின் வளைவுடன் பொருத்தப்பட்டுள்ள பரப்பு. இது சக்கரத்தில் அழுத்தப் பட்டு தடையுறுத்தப்படும்.

**braking tin** *: (உலோ.வே.)* **தடையுறுத்தத் தகரம் :** ஒரு பொறியின் மீதுள்ள தகரத் தகடுகளின் விளிம்பின் திருப்பம் அல்லது வளைவு. இது தடை என அழைக்கப்படுகிறது.

**braking with compreseion** *(தானி. எந்.)* **அழுத்தத் தடையுறுத்தம் :** காரினை முதலாவது அல்லது இரண்டாவது இயக்க இணைப்பில் வைத்துவிட்டுக் கால்மிதியை முடுக்கிப் பொறியிலிருந்து எடுத்துவிட்டால், பொறியமைவின் அழுத்தும் விளைவினால் காரின் வேகம் குறையும். வேகத்தைத் திடீரெனக் குறைப்பதற்காக மட்டுமே இதனை பயன்படுத்த வேண்டும்.

**branch** *: (கம்.)* **கிளைக்குழாய் :** குழாய் அமைப்பில் கவர்விட்டுப் பிரிந்து செல்லுமாறு அமைக்கப் பட்டுள்ள உட்செல் அல்லது வெளிச் செல் குழாய்.


**branch circuit :** *(மின்.)* **கிளைச் சுற்று வழி** : மின் சுற்று வழியைப் பாதுகாக்கிற இறுதி அதி மின்னோட்டச் சாதனத்திற்கு அல்லது உறுகிகளுக்கு அப்பால் நீண்டிருக்கும் ஒரு கம்பியிட்ட அமைப்பின் பகுதி.

**branch cutout** *: (மின்.)* **கிளை மின்விசை வழி :** முதன்மையான மின் வழங்குச் சுற்றுவழியிலிருந்து கிளையாகப் பிரிந்து பல்வேறு மின் சுமைச் சாதனங்களுக்கு மின்விசையைப் பிரித்து வழங்குதல்.

**branch ell** *: (கம்.)* **கிளை வளைவு** தொடர்பு அடுக்கின் வடிகால்களில் ஒன்றுக்கு இணைவாகப் பின் புற வடிகால் ஒன்றினைக் கொண்டிருக்கிற ஒரு வளைவு. இதனைக் "குதிகால் வடிகால் வளைவு" என்றும் கூறுவர்.

**branch pipe** *: (கம்.)* **கிளைக் குழாய்** : ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டுள்ள வார்க்கப்பட்ட அல்லது அடித்து உருவாக்கிய ஒரு குழாய்க்குப் பொதுவான பெயர்.

**branch splice** *: (மின்.)* **கிளைப் புரியிணைவு** : ஒரு கம்பி அல்லது கடத்தியிலிருந்து மற்றொரு கம்பி அல்லது கடத்தி இணைப்பிணை அமைத்தல்.



கிளைப் புரியிணைவு

**branch wire** : *(மின்.)* **கிளைக் கம்பி** : *முதன்மையான ஒரு கடத்தியிலிருந்து செல்லும் ஒரு சார்பு நிலைக்கம்பி.*

**brass** : **பித்தளை** : *செம்பும், செம்புடன் துத்தநாகமோ, வெள்ளீயமோ கலந்த ஓர் உலோகக் கலவை.*

**brass foil** : **பித்தளைத் தகடு** : *இது டச்சு உலோகத்தைப் போன்றது. செம்பும் துத்தநாகமும் கலந்த எளிதில் தகடாக்கக் கூடிய ஓர் உலோகக் கலவை. இது மென்மை தகடுகளாக விற்கப்படுகிறது. இது புத்தகக் கட்டுமானத்தில் பெருமளவில் பயன்படுகிறது.*

**brass rule** : *(அச்சு.)* **பித்தளை இடைவரித் தகடு** : *அச்சில் வாசக இடைவெட்டு வரிக்கோடாகப் பயன்படும் ஒரு பித்தளைத் தகடு.*

**brayer**: *(அச்சு.)* **அச்சு மை பரப்பு கருவி** : *அச்சு வேலையில் அச்சுக்குரிய மையை பரப்புகிற கையால் உருட்டப்படும் ஒரு சிறிய உருளை.*

**braze welding** : *(பற்.)* **பற்றாசுப் பற்றவைப்பு** : *பித்தளையும் துத்தநாகமும் சேர்ந்த கலவையைப் பற்றாசுவைத்துப் பற்றவைத்தல்.*

**brazed joint** : *(உலோ.)* **பொடி வைத்திணைத்த பிணைப்பு** : *பித்தளையும், துத்தநாகமும் சேர்ந்த கலவையைப் பற்றாசு வைத்து இணைத்த பிணைப்பு.*

**brazing** : *(உலோ.)* **உலோக இணைப்பு**: *ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உலோகத் துண்டுகளை ஓர் உலோகக் கலவையுடன் இணைத்தல். இதில் இணைப்புகள் தூய்மை செய்யப்பட்டு, கம்பியால் கட்டப்பட்டு, அதில் பொரிகம் தூவப்பட்டு, உலோகக் கலவை உருகும் வரையில் சூடாக்கப்படும்.*

**brazing clamps**: *(பட்.)* **இணைப்புப் பிடிப்பான்** : *வாள் போன்று அறுப்பதற்குரிய பற்களிணைந்த வட்டச் சங்கிலியின் முனைகளைப் பிடித்துக் கொள்வதற்கான பற்றிரும்புகள்.*

**brazing metal** : **ஒட்டவைப்பு உலோகம்** : *இரு பகுதி வெள்ளீயமும், 98 பகுதி செம்பும் கலந்த ஓர் உலோகக் கலவை.*

**brazing solder** : *(உலோ.)* **இணைப்புப் பற்றாசு** : *உலோகங்களைப் பற்றவைத்து இணைக்கப் பயன்படும் சிறுதிற உலோகம். இது 50 - 52% செம்பு, 0.55% ஈயம், 0.10% இரும்பு, எஞ்சியது துத்தநாகம் கலந்தது. இதன் உருகுநிலை 1560° பா. முதல் 1600° பா. வரை.*

**breadboard** : *(மின்.)* **மின்னணுவியல் பலகை** : *மின்னணுவியல் உறுப்புகளையும், மின் சுற்று வழிகளையும் ஒரு பலகையில் வைத்துப் பொருத்தியமைத்தல்.*

**break** : *(க.க.)* **புறப்பிதுக்கம்** : *ஒரு சுவரின் அல்லது கட்டிடத்தின் பொதுப் பரப்பிலிருந்து துருத்திக் கொண்டிருக்கும் பிதுக்கம் எதனையும் இது குறிக்கும்.*

**breakdown** : *(மின்.)* **மின் தடை**: *நிலைமின்னியல் அழுத்தம் காரணமாக மின்காப்பு செயலற்றுப் போவதன் காரணமாக மின்னோட்டம் திடீரெனத் தடைபடுதல்.*

**brake pedal** : *(தானி.)* **தடுப்பு மிதிகட்டை**: *தடுப்புகளைக் கட்டுப்படுத்துகிற மிதிகட்டை.*

**breaker** : *(தானி, மின்.)* *இது ஓர் அசையும் கரமும், ஒரு நிலைக்காலும் உடைய ஓர் எந்திர சாதனம்.*

**breaker arm** : *(தானி.)* **இடைவெட்டுப் புயம்** : *இது வார்த்தெடுக்கப்பட்ட ஒரு தட்டையான உலோகச்*

சலாகை. இதன் ஒரு முனையில் டங்க்ஸ்டனாலான தொடர்பு முனையும், மற்றொரு முனையில் இழை, பேக்கலைட், அல்லது இவைபோன்ற கடத்தாப் பொருள் கொண்டு பூசிய உருண்டையான திறப்பும் இருக்கும். இதில் ஓர் உலோக முனையிலிருந்து புயம் ஊசலாடுகிறது.

**breaker points** : *(தானி.)* **முறிப்பு முனைகள்** : மின் முறிப்பானில் உள்ள உலோக இணைப்புத் தொடர்புகள்.

**breaker strip** : *(எந்.)* **இடையீட்டுப் பட்டை** : ஒரு டயர் உறையின் பக்கச் சுவரிலுள்ள ஒரு கித்தான் பட்டை. இது தேய்மானப் பண்புகளை அதிகரிக்கிறது.

**breaking joints** : **இடையீட்டு மூட்டிணைப்புகள்** : மூட்டிணைப்புகளை ஊசலாடும்படி செய்தல், இது அவற்றை ஒரு நேர்க்கோட்டில் வருவதைத் தவிர்க்கும்.

**break iron** : **இடையீட்டு இரும்பு** : ஒரு சமதள விசிப் பலகையின் மேற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ள ஓர் இரும்பு. இது விசிப் பலகையினைத் திருக்கவும், பிளவுறுத்தவும் உதவுகிறது.

**break line** : **இடையீட்டுக் கோடு** : அச்சுக்கலையில், ஒரு பத்தியின் கடைசி வரி.

**breaks**: **இடையீடுகள்**: ஊசலாட்ட மூட்டிணைப்புகளுடன் கூடிய பட்டிகை அமைப்பு. இதில் எல்லா மூட்டிணைகளும் ஒன்றன் மேல் ஒன்றாக ஒரு செங்குத்துக் கோட்டில் அமைந்திருப்பதில்லை.

**breast drill** : *(பட்.)* **வேட்டுத் துரப்பணம்** : உலோகத்தில் கையினால் துளைகளியிடுவதற்குப் பயன்படும் ஒருசிறு எந்திரவியல் முறை. இதில் கையினால் திருப்பப்படும் ஒரு திருகு விட்டத்தின் குவட்டுத் துரப்பணத்திலிருந்து, சாய்வு இயக்கப் பல்லிணைப்புகள் வழியாகத் துரப்பண எந்திரத்திற்கு விசை செலுத்தப்படுகிறது.

**breast of a window**: **சன்னல் சாய் குவடு**: உள்மாடத்தின் பின்புறமாகவும், பலகணி அடிக்கட்டையின் கைப்பிடிச் சுவராகவும் அமைந்த கட்டுமானம்.

**breast summer** : *(க.க.)* **உத்தரக் கட்டை** : கட்டிட முகப்புத் தாங்கும் உத்தரக் கட்டை.

**breeder reactor** : **தொடர் வரிசை அணு உலை** : ஒரே சமயத்தில் பிளவு படக்கூடிய பொருள்களைப் பயன்படுத்திக் கொண்டு பிளவு படாத பொருள்களை (யுரேனியம் தோரியம்) பிளவு படக்கூடிய பொருள்களாக மாற்றுகிற ஓர் அணு உலை. இதன்மூலம் பிளவு படக்கூடிய பொருள் அதிகமாகக் கிடைக்கிறது.

**Breguet spring** : **பிரகுவட் விற்சுருள்** : ஒரு தனிவகையான கடிகாரச் சுருள்வில். இதில் புறச்சுருள் வளைந்து மற்றச் சுருள்களின் குறுக்கே மையத்திற் கொண்டு செல்லப் படுகிறது. சுருள் வில்லை முடுக்குவதன் மூலம் கடிகாரத்தை விரைவாகவோ தாமதமாகவோ ஓடச் செய்ய முடிகிறது.


விற்சுருள்

**bre-vier** : **அச்சுருப்படிவ அளவு** : இது 8-புள்ளி அளவு என அழைக்கப்படும் அச்செழுத்து.

**brick** : **செங்கல்** : களிமண்ணால் செவ்வக வடிவில் வார்க்கப்பட்டு, சூளையில் எரித்துக் கடினமாக்கப்பட்ட பாளம். இது கட்டுமானத் திற்கும் தளம் பாவுவதற்கும் பயன் படுகிறது.

**brick facing :** *(க.க.)* **செங்கல் மறைப்பு** : பார்க்க: செங்கல் மேலொட்டுமானம்.

**brick pier** : *(க.க.)* **செங்கல் தாங்கு தூண்**: ஆதாரமாகப் பயன்படக்கூடியதின் கட்டுமானம்.

**brick trowel : செங்கற் சட்டுவம்**: சாந்துக் கலவையை எடுத்து சுவரில் பூசுவதற்குப் பயன்படக்கூடிய தட்டையான முக்கோண வடிவச் சட்டுவக்கரண்டி. இது சாந்துச் சட்டுவத்தைவிடச் சற்றுப் பெரிதாக இருக்கும்.

**brick veneer** : *(க.க.)* **செங்கல் மேலொட்டுமானம் :** ஒரு சட்டகத்தை அல்லது வேறு கட்டமைப்பினை மறைப்பதற்கான பகட்டு மேலாடை மென் பூச்சுமானம்.

**bridge circuit**: *(மின்.)* **இணைப்பு மின்சுற்றுவழி** : ஒரு பொதுவான இணைப்பின் மூலம் இணைக்கப்பட்டுள்ள உறுப்புகளின் இணையான தொகுதி வரிசையினைக் கொண்ட ஒரு மின்சுற்றுவழி. அளவிடு கருவிகளில் இந்த இணைப்பு பெரும்பாலும் அளவு மானியாக இருக்கும்.

**bridge rectifier** : *(மின்.)* **இணைப்பு மின்மாற்றி** : ஓர் இணைப்புத் தொகுதியில் நான்கு மின்மாற்றிகளைப் பயன்படுத்துகிற ஒரு முழு அலை மின்மாற்றி.

**bridge or structural engineer: பாலம் அல்லது கட்டுமானப் பொறியாளர்** : பாலங்களையும், பெரிய கட்டிடங்களின் எஃகுப் பணிமாணங்களையும் வடிவமைப்பதிலும், கட்டுமானம் செய்வதிலும், நிறுவுவதிலும் முக்கியமாக ஈடுபடுகிற பொறியாளர்.

**bridging :** *(க.க.)* குறுகலான பட்டைகளை அல்லது சட்டங்களைப் பயன்படுத்தித் துலாக் கட்டைகளுக்கு அல்லது குமிழ் முகப்புகளுக்கு வலிவூட்டும் ஒருமுறை.

**bridging :** *(மின்.)* **இணை மின் இணைப்பு** : ஒரு மின்சுற்று வழியை இன்னொரு மின்சுற்று வழியுடன் இணையாக இணைத்தல்.

**bright annealing :** *(உலோ.)* **ஒளிர்வுப் பதனாக்கம் :** கண்ணாடி உலோகங்கள் முதலியவற்றைக் கட்டுப்படுத்தி ஆறவைத்தல் மூலமாகவோ, நன்கு சூடாக்கி மெல்ல ஆறவிடுவதன் மூலமாகவோ கடுமையாகப் பதப்படுத்துதல். இதன் மூலம் ஆக்சிகரணமாவதும், வண்ணம் மங்குவதும் தடுக்கப்படுகிறது.

**bright dipping** : *(உலோ.)* **ஒளிர்வுத் தோய்வு :** உலோகத்திற்கு ஒளிர்வான மெருகினைக் கொடுப்பதற்காக அந்த உலோகத்தை ஒரு வேதியியல் கரைசலில் தோய்த்தெடுத்தல்.

**Bright's disease :** *(நோயி.)* **பிரைட் நோய் :** சிறுநீரகத்தில் ஏற்படும் வீக்கநோய்.

**brightness** : **ஒளிர்வுத் திறன் :** அலைபரப்புகளை ஒளியாக மாற்றுவதற்குரிய ஒளிப்படக் குழலின் ஒளிர்வுத் திறனளவு.

**brightness control** : **ஒளிர்வுக் கட்டுப்பாட்டு அமைவு** : அலைபரப்புகளை ஒளியாக மாற்றுவதற்குரிய ஒளிப்படக் குழலில் படத்தின் மொத்த ஒளிர்வினைக் கட்டுப்படுத்துவதற்கான ஓர் அமைவு.

**brilliance :** *(மின்.)* **ஒளிர்வுத் திறன் :** தொலைக்காட்சியில் உருவாகும் படம் தெளிவாகவும், ஒளிர்வுடனும் இருக்கும் அளவு.

**brine** : *(குளி.)* **உவர்நீர்** : குளிர்பதனத்தில் வெப்பத்தை நிலை மாறுபாடு இல்லாமல் செலுத்

துவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு திரவம்.

**brine : உவர்நீர் :** உப்பு பூரிதமான அல்லது உப்பு மிகுதியாகக் கலந்த நீர்.

**brinnel hardness :** (உலோ.) **திண்மைச் சோதனை :** 10 மி.மீ. விட்டமுள்ள ஓர் எஃகுக் குண்டு 3,000 கி.கிராம் பளுவின் கீழ் 10 வினாடி நேரம் இருக்கும்போது ஊடுருவும் திறன் அடிப்படையில் உலோகங்களின் கடினத் தன்மையை அளவிடும் சோதனை.

**Brinell test :** (பொறி.) **பிரைனல் சோதனை :** சோதனை செய்யப்பட வேண்டிய உலோகத்தினுள் குறிப்பிட்ட அழுத்தத்தில், ஒரு கடினமான எஃகு உருண்டையை, வைத்து அழுத்தப்படுகிறது. உலோகத்தில் படியும் படிவத்தின் விட்டத்தினை அளவிட்டு, ஓர் அட்டவணையுடன் ஒப்பிட்டுப் பார்த்து, கடினத்தன்மை கணக்கிடப்படுகிறது.

**briquette : கட்டிக்கரி :** நிலக்கரித் தூளினாலான செங்கல் வடிவான சிறு கட்டி அல்லது பள்ளம்.

**bristle : முள் மயிர்:** விலங்கினத்தின் தடித்த குட்டையான முள் மயிர். இது தூரிகை, தீட்டுக்கோல் தயாரிக்கப்படுகிறது.

**Bristol glaze: பிரிஸ்டன் மெருகு:** மட்பாண்டங்களுக்கு வண்ண மெருகிடுவதற்குப் பயன்படும், ஒளியை ஊடுருவிச் செல்ல விடாத ஒரு மெருகுப் பொருள்.

**Bristol board : அட்டைப் பலகை:** படம் வரையப் படும் அட்டைப் பலகை. இது வெண்மையிலும், வண்ணங்களிலும் கிடைக்கும்.

**Britannia metal:** (உலோ.) **பிரிட்டானியா உலோகம் :** இது வெள்ளி போன்ற வெள்ளீய நிமிளைக் கலவை உலோகம். இது நீல நிறத்தில் இருக்கும். இது பாத்திரங்கள் செய்யப் பயன்படும். இது மெருகு குலையாமல் இருக்கும்.

**Britannia splice:** (மின்.) **பிரிட்டானியாப் புரியிணைவு:** புரியிணைவு முடிச்சின்றிப் புரிகளை இணைத்தே கடத்து கம்பிகளை இணைத்தல். இந்த முறை இப்போது அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது.

**British thermal unit :** (பொறி.) **பிரிட்டிஷ் அனல் அலகு (B.T.U.) :** ஒரு பவுண்டு தூய நீரின் வெப்பநிலையை 1° பா. அளவுக்கு உயர்த்துவதற்குத் தேவையான வெப்பத்தின் அளவு.

**brittle :** (இயற்.) **நொய்மை :** எளிதில் உடையக்கூடிய அல்லது நொறுங்கக்கூடிய தன்மை.

**Broca's area : புரோக்கா மண்டலம்:** மூளையின் இடப்புறமுள்ள பேசுவதைக் கட்டுப்படுத்தக்கூடிய பகுதி.

**broach :** (எந்.) **துளைக் கருவி :** உலோகத்தில் தேவையான வடிவத்தில் துளையிடுவதற்காக, அல்லது துளையினைப் பெரிதாக்குவதற்காகப் பயன்படும் இரம்பப் பல் விளிம்புடைய ஒரு நீண்ட கருவி.

**broaching :** (எந்.) **துளையிடுதல்:** உலோகத்தில் வட்ட வடிவம் அல்லாமல் தேவையான வேறு வடிவத்தில் துளையிடுவதற்கு அல்லது துளையினைப் பெரிதாக்குவதற்குரிய முறை.

**broach spire :** (க.க.) **கூம்புக் கோபுரம் :** கோபுரத்திற்கு மேலே கைப்பிடிச் சுவரின்றி, எழும் எண் கோண வடிவச் சிகரம். இதனை ஆதிகால ஆங்கிலேய தேவாலயங்களில் காணலாம்.

**broadcast : ஒலிபரப்புதல் :** (1) வானொலி நிகழ்ச்சிகளை ஒலி பரப்புதல்.


(2) வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரித்தல்

**broadfold : அகல் மடிப்பு:** நார் வரியானது குறுகிய பரிமாணங்களில் ஓடுகிற காகிதத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல்.

**broad side:** *(அச்சு.)* **ஒருபுறம் அச்சிட்ட தாள்:** ஒரு புறத்தில் மட்டுமே அச்சடிக்கப்பட்ட அகன்ற தாள் வெளியீடு.

**brochure: துண்டு வெளியீடு:** ஒரு சிற்றேடு அல்லது சிறிய புத்தகம்.

**bronchi:** *(உட.)* **காற்றுக் குழாய்கள்:** நுரையீரல்களுக்குச் செல்லும் காற்றுக் குழாயின் இரு பிரிவுகள்.



காற்றுக் குழாய

**broad tuned:** *(மின்.)* **விரிவு இசைவிப்பு:** அலைவெண்களின் விரிவான அலைவரிசையிலும் சம அளவில் மாறக் கூடிய வகையில் இசைவிப்பு செய்யப்பட்ட ஒரு மின் சுற்றுவழி.

**bronze :** *(உலோ.)* **வெண்கலம்** செம்பும் வெள்ளீயமும் கலந்த உலோகக் கலவை. நாணயம் தயாரித்தல், மணிகள், சிலைகள் செய்தல் ஆகியவற்றுக்குப் பயன்படுகிறது. பார்க்க: கருங்கலம்.

**bronse gauze : வெண்கல அளவி:** திரவங்களைப் பிழிந்தெடுப்பதற்குப் பயன்படும் நுண்ணிய கம்பி வலைச் சல்லடை.

**bronzing :** *(அச்சு.)* **வெண்கலநிறமிடல்:** அச்சிட்ட பரப்புக்கு வெண்கலப் பொடியினை வெண்கல வண்ணமாக்குதல். இது தங்கத்தில் அச்சிடப்பட்டது போன்ற தோற்றத்தைக் கொடுக்கும்.

**Brown and Sharpe taper:** *(எந்)* **பழுப்பு வண்ணத் திரி :** அரைவைப் பொறிக் கதிர்களில் பயன் படுத்தப்படும் திரி.

**Brown and Sharpe wire gauge:** *(எந்.)* **பழுப்புவண்ணக்கம்பி அளவி:** இதனை அமெரிக்க அளவி என்றும் கூறுவர். பித்தளை, செம்பு. அலுமினியம் போன்ற இரும்பு அல்லாத உலோகத் தகடுகளையும் கம்பிகளையும் அளவிடுவதற்குப் பயன்படும் கருவி.

**brownstone:** *(க.க.)* **பழுப்பு மணற்கல்:** கட்டிடங்கள் கட்டுவதில் பயன்படுத்தப்படும் பழுப்பு நிற மணற்கல்.

**brush:** *(மின்.)* **இடைமின்னூடு:** மின்னிணைக்கவும் துண்டிக்கவும் இயக்கப்படவல்ல மின்பொறிக் கற்றை. இது பெரும்பாலும் கார்பனிலும், சில சமயம் செம்பிலும் அமைந்திருக்கும்.

**brushability:** *(வண்.)* **வண்ணப் பூச்சுத்திறன்:** ஒரு வண்ணத்தை எளிதாகப் பூசுவதற்குரிய திறன்.

**brush effect:** *(மின்.)* **தொடு விளைவு:** உயர் மின்னழுத்த மின்னோட்டத்தைக் கொண்டு செல்லும் மின்சுற்று வழிகளில் கூர் முனைகளிலிருந்து கசியும் நீலநிறப் பொருள்.

**bubble harbour:** **குமிழ் காப்புத் துறைமுகம்:** நீருக்கடியில் அமைந்த குழாய்களிலிருந்து தடையின்றிக் காற்றுக் குமிழ்களை வரச் செய்து அலைகளைச் சிதறடித்துத் துறைமுகத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு முறை.

**brush holders :** *(மின்.)* **மின் பொறிக்கற்றைப் பிடிப்பான் :** மின்னிணைக்கவும் துண்டிக்கவும் இயக்கப்படவல்ல தூரிகை போன்ற உருவுடைய மின்பொறிக் கற்றை.

**brush loss :** *(மின்.)* **இடை மின்னூட்டு இழப்பு :** இயங்குகிற இரு பரப்புகளை மின்சாரத்தின் மூலம் இணைக்கும் பொறிக் கற்றையின்

தடையினால் மின்னாற்றல் விசையில் இழப்பு ஏற்படுதல்.

**brush roeker :** (மின்.) **மின் பொறிக் கற்றை ஊசல் :** ஒரு மின்னாக்கியின் அல்லது மின்னோடியின் மின்பொறிக்கற்றைப் பிடிப்பான்கள் பொருத்தப்பட்டுள்ள ஒரு சுழலும் ஊசல். இதன்மூலம் ஒரு திசைமாற்றியின் மின் பொறிக் கற்றைகளை வேண்டியவாறு பொருத்திக் கொள்ளலாம்.

**brush spring:** (தானி. மின்.) **மின் பொறிக் கற்றை விற்சுருள் :** இது தட்டையான அல்லது சுருளான ஓர் அழுத்துவிசை விற்சுருள். ஒரு மின்னாக்கியின் அல்லது தொடக்க மின்னோடியின் மின்னகத்தின், அல்லது ஒரு வழங்கீட்டுச் சுழலியின் சுழலும் பகுதியுடன் இணைந்துள்ள ஒரு கார்பன் கலவை. மின் பொறிக்கற்றையைப் பற்றிக் கொள்ளும் வகையில், இது வடிவமைக்கப்பட்டிருக்கும்.

**brush wire:** (மின்.) **மின்பொறிக் கற்றைக் கம்பி :** பெரும்பாலும் விறைப்பாக்கம் செய்யப்பட்ட உயர்ந்த அல்லது தாழ்ந்த கார்பன் எஃகுக் கம்பி. இதில் மென்மையானவை .0805செமீமுதல் .0190செ.மீ.அளவு உருண்டையாக இருக்கும். தட்டையானவை .381 × .045 செ.மீ.முதல்.096 × .033 செ.மீ. வரை அளவுடையனவாக இருக்கும்.

**B-stage resins :** (குழை.) **B, -நிலைப் பிசின்கள் :** சூட்டினால் நிலையாக உருகிவிடும் தன்மையுடைய பிசின்கள் திரவமாக இருக்கும்போது மென்மையாக இருக்கும் ஒரு நிலையில் இவை வினை புரியும். ஆனால், முழுமையாக உருகிவிடவோ கரைந்துவிடவோ செய்யாது. வார்ப்படப் பொருள்களுக்கு இது பயன்படுகிறது.

**bubble :** (குழை.) **குமிழ் :** புடைபெயரும் அல்லது ஒளி ஊடுருவும் குழைமத்தில் சிக்கியுள்ள ஒரு கோள வடிவ வெற்றிடம் அல்லது ஒரு காற்று உருணடை அல்லது வாயு உருண்டை.

**bu-binga :** (மர. வே.) **பூ பிங்கா :** பூமத்தியரேகை ஆஃப்ரிக்காவில் வாழும் ஒரு பெரிய மரம். இதன் வெட்டு மரம் கடினமானது; கனமானது; இளம் ஊதாப் பின்னணியில் கருஞ் சிவப்பு நிறக் கோடுகளைக் கொண்டது. தளவாடங்களிலும், அறை கலன்களிலும் விசித்திரமான செக்கர் நிறவிளைவை உண்டாக்கப் பயன்படுகிறது.

**bubonic blague:** (நோயி.) **அரையாப்பு வீக்கம் :** அக்குள்கட்டு அல்லது அரையாப்பில் ஏற்படும் நெறிக்கட்டு அல்லது வீக்கம். இது எலி உண்ணிகளினால் பரவுகிறது. நிணநீர்ச் சுரப்பிகள் வீங்குவதால் இந்நோயினால் பெரும்பாலும் மரணம் விளைகிறது.

**bubonocele:** (நோயி.) **இடுப்பு வாதநோய்:** வயிறும் இடுப்பும் சேருமிடத்தில் அண்டவாதம் ஏற்படுதல்.

**bucket trap :** **வாளிமூடி :** வெப்ப மூட்டிகளிலிருந்தும் குழாய்களிலிருந்தும், நீராவி புகாதவாறு செறிவாக்கத்தையும் காற்றையும் அப்புறப்படுததும் ஒரு வகை ஓரதர். இந்த ஓரதருடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு வாளி, ஒரு வெளியேற்று குழாயை இயக்குகிறது.

**buck eye :** (மர.வே.) **மான் விழி மரம் :** வழவழப்பான பழுப்பு வண்ணமுடைய கொட்டையுடைய அமெரிக்க நாட்டு மரம். இதனைக் 'குதிரைக்கால் படைப்பு' மரம் என்றும் கூறுவர். இந்த மரம் மென்மையானது. வெண்மை அல்லது இளம் மஞ்சள் நிறமுடையது. காகிதக் கூழ் மரச் சாமான்

கள் செயற்கை உறுப்புகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**bucking bar : வளை தண்டு :** தரையாணியைப் பொருத்தும் போது அதன் தலைக்கு எதிராக வைத்துப் பிடித்துக் கொள்ளப் படும் ஒரு தண்டு.

**buckled: வளைவுடைய:** மடக்கிச் சுருக்கிய; வளைக்கப்பட்ட அல்லது உருக்கோணலாக்கிய.

**buckle plate :** *(பொறி.)* **திரிபுத் தகடு :** அதிக வலிவும், விறைப்பும் அளிப்பதற்காக உட்குழிவாக்கிய அல்லது வளைத்து நெளிவாக்கிய ஒரு தகடு.

**buckling :** *(வண்.அர.)* **வண்ண முறுக்கம்:** எண்ணெயை ஓர் அடிப் படையாகக் கொண்ட ஓர் அடிப் பூச்சு வண்ணம் காய்வதற்கு முழு அவகாசம் அளிக்காதபோது, அதன் மீதான பிராக்கிலின் மெருகு சுருங்குவதால் உண்டாகும் விளைவு.

**buckling coil :** *(மின்.)* **கூன் கம்பிச்சுருள் :** ஒலி பெருக்கியில் முதன்மைக்கம்பிச் சுருளின் காந்தப் புலங்களுக்கு எதிரான காந்தப் புலங்களை உண்டாக்கக்கூடிய ஒரு வகைக் கம்பிச் சுருள்.

**buckram : முரட்டுத் துணி :** கஞ்சி அல்லது பசை ஊட்டப்பட்ட விறைப்பான முரட்டுத் துணி. இது புத்தகங்களைக் கட்டுமானம் செய்யப் பயன்படுகிறது.

**buckskin : மான் தோல் :** மான் வகையின் தோல். இது மென்மையானது; பழுப்பு மஞ்சள் நிறமுடையது.

**buff:***(எந்.)* **தோல் சக்கரம்:** தோல் போர்த்த ஒரு சக்கரம். உலோகப் பரப்புகளுக்கு மெருகேற்றுவதற்குப் பயன்படும் ஒரு சாணைக் கருவி. இதன் சாணைச் சக்கரத்தில் பல மென்தோல் வட்டத்தகடுகள் இணைக்கப்பட்டிருக்கும்.

**buffer :** *(மின்.)* **உதைதாங்கு மின்காப்பு :** பெருக்கம் செய்யப்பட்ட ஒரு மின் காப்பு. இதில் அடுக்கு வரிசைகளிடையே எதிரெதிர் வினை ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஓர் எலெக்ட்ரான் குழல் வரிசை அமைக்கப்பட்டிருக்கும்.

**buffet : சிற்றுண்டிப் பலகை :** இது ஒரு ஃபிரெஞ்சுச் சொல். இது சிற்றுண்டிகளை வைப்பதற்குப் பயன்படும் நிலையறைப் பெட்டியை அல்லது பக்கப் பலகையைக் குறிக்கிறது.

**buffeting :** *(வானூ.)* **அலை மோதல் :** சீரற்ற ஒழுகியக்கம், காற்றுவீச்சு காரணமாக விமானத்தின் கட்டுமானத்தில் அல்லது மேற்பரப்பில் ஏற்படும் அலைக் கழிப்பு. கொந்தளிப்பான காற்று வீச்சினால் ஏற்படும் விமானத்தின் ஒழுங்கற்ற அசைவையும் ஊசலாட்டத்தையும் குறிக்கும்.

**buffing : முரட்டுத்தோல் :** இது பதனிட்ட மெத்தென்ற முரட்டு வெண் தோலினைக் குறிக்கும். உலோக எந்திரங்களை இவ்வகைத் தோலினால் தேய்த்து மெருகிடுவதையும் குறிக்கும்.

**buffing leather: உள்வரித் தோல்:** உரித்த தோலைவிட வலுவாக இருக்கக்கூடிய மென்மையான தோல். இது பெரிய பொருள்களுக்கு உள்வரியிடுவதற்குப் பயன்படுகிறது.

**buffing wheels:** *(பட்.)* **சாணைச் சக்கரம் :** மெருகேற்றுவதற்குப் பயன்படும் சாணைச் சக்கரம். இது பஞ்சு அல்லது கம்பளித் துணியாலான பல வட்டத் தகடுகளைக் கொண்டிருக்கும். இதில் சாணைப் பொடிகள், உராய்பொருள்கள் இருக்கும்.

**bug** : *(மின்.)* **விரைவுச் செய்திச் சாதனம்** : குறியீட்டு முறையில் செய்திகளை அனுப்புவதற்காகப் பயன்படுத்தப்படும் ஓர் அதிவேகப் பகுதித் தானியங்கிச் சாதனம்.

**buhl work** : **ஆமையோட்டில் வேலைப்பாடு** : ஆமையோட்டில் பல் வண்ணப் பொன், வெள்ளி, தந்த உலோக வேலைப்பாட்டுடன் கூடிய உட்செதுக்கிய வேலைப் பாடு.

**buhrstone** : **படிகக்கல்** : திரிகை யாகப் பயன்படும் ஒருவகைப் படிகக்கல். சொரசொரப்பான இந்தப் படிகக்கல் மணிகளைத் தேய்த்துப் பொடியாக்குவதற்குப் பயன்படுகிறது. இது எந்திரக் கல் போன்றது.

**builders tape** : **அளவை நாடா** : நெகிழ்வுடைய உலோகம் அல்லது துணிப்பட்டையிலான அளக்கும் நாடா. இது வட்டவடிவ உறை யில் சுருட்டி வைக்கப்பட்டிருக்கும். இது பொதுவாக 127 முதல் 254 செ.மீ. நீளமுடையதாகஇருக்கும். இதனைக்கட்டிடக் கலைஞர்கள் பயன் படுத்துவார்கள்.

**building** : **கட்டிடக்கலை** : கட்டு மானப் பொருள்களைக் கொண்டு ஒரு கட்டிடத்தை எழுப்பும் கலை.

**building line** : **கட்டிட வரம்புக் கோடு** : ஒரு கட்டிடச் சுவரின் புற முகப்பு எல்லைக் கோடு. சட்டப் படி எந்த வரம்புக்கு அப்பால், கட் டிடம் நீட்டிக் கொண்டிருக்கலாகா தெனத் தடைசெய்யப்பட்டிருக் கிறதோ அந்த வரம்புக்கோடு.

**building materials** : *(க.க.)* **கட்டுமானப் பொருள்கள்** : கட்டி டம் கட்டுவதற்குப் பயன்படும் பொருள்கள் அனைத்தையும் குறிக்கும்.

**building paper** : *(க.க.)* **கட்டிடக் காப்புக் காகிதம்** : பருவ நிலையின் பாதிப்பிலிருந்து சுவர்களையும் மேல் முகடுகளையும் பாதுகாப் பதற்கு மேற்கவசமிடுவதற்குப் பயன்படும் கனமான காகிதம்.

**building stone** : *(க.க.)* **கட்டு மானக் கல்** : கட்டிடங்கள் கட்டு வதற்குப் பயன்படும் எல்லா வகை கற்களையும் குறிக்கும். பளிங்குக் கல், கருங்கல், மாக்கல், சுண் ணாம்புக்கல் முதலியவை இதில் அடங்கும்.

**building up** : *(மின்.)* **மின்னழுத் தப்பெருக்கம்** : மின்னகத்தின் தற் கிளர்ச்சி காரணமாகத் தொடக்க நிலையிலிருந்து இறுதி மின்னழுத் தம் வரையில் ஒரு மின்னாக்கியில் உண்டாகும் தீவிர மின்னழுத்த ஆக்கம். முதல் நிலை மின்னழுத்த தம், எஞ்சிய காந்த ஆற்றலால் உண்டாகிறது. இந்த மின்னழுத் தம் காந்தப் புலங்களுக்குப் பரவும் போது, அந்தப் புலங்கள் வலு வடைந்து முழுமையான மின் னழுத்தம் உண்டாக உதவு கின்றன.

**built up member** : *(பொறி.)* **கட்டுமானத் தொகுதி** : சிறிது சிறி தாகக் கட்டியமைத்த கட்டுமானத் தொகுதி. இந்தக் கட்டுமான முறையை டச்சுக்காரர்கள் புகுத்தி னர்.

**bulbar** : **பின்மூளைக் குமிழ்முனை** : பின் மூளையின் புடைத்த பகுதி. மூளையின் கீழ்ப் பகுதியான இது முதுகந்தண்டுவடத்துடன் இணைந்திருக்கும்.

**bulk** : **பருமன்** : சாதாரணமாகக் காகிதத்தின் கனத்தைக் குறிக்கும் சொல். ஒரு பொருளின் எடைக் கேற்ப அதன் கனத்தைக் குறிக்க வும் இது பயன்படுகிறது.

**bulk factor** : *(குழை.)* **பருமக் காரணி** : அடர்த்தியற்ற வார்ப் படத் தூளின் கன அளவுக்கும் இறுதியாக உருவாகும் பொருளின்

கன அளவுக்குமிடையிலான விகிதம்.

**bulk head** : **தடுப்பறை** : சுரங்கத்தில் அல்லது குடைவு வழியில் அல்லது நீரோடையில் மண்ணைத் தடுப்பதற்குரிய கல்லாலான அல்லது மரத்தாலான ஒரு தடுப்பு. ஒரு கப்பலிலுள்ள எஃகினாலான அல்லது மரத்தாலான அறைத் தடுப்பையும் குறிக்கும்.

**bull block**: *(பட்.)* **இலக்கு மையப் பாளம்** ; கம்பி அல்லது சலாகைகளின் வடிவளவைக் குறைப்பதற்காக உட்செலுத்தி எடுக்கப் பயன்படும் ஒரு பாளம்.

**bulldozer** : *(எந்.)* **சமன்பொறி** : இரும்பையும் எஃகையும் வளைத்துச் சமன் செய்வதற்காகப் பயன்படும் ஒரு கனமான வடிவமைப்புப் பொறியமைவு.

**bull gear** : *(எந்.)* **இயக்கப் பல்லிணை** : உலோகத்தைச் சமன் படுத்தும் பொறியிலுள்ள மேசைக்கு இயக்கத்தைக் கொடுக்கும் ஒரு பெரிய பல்லிணை.

**bull header** : *(க.க.)* **உருண்டை முனைச் செங்கல்** : ஒரு பக்கம் உருண்டை முனையுடைய ஒரு வகைச் செங்கல். இதன் குறுகிய முகப்பு வெளியில் தெரியும்படி வைக்கப்படும். சன்னல் சட்டங்களுக்கும், கதவு நிலைகளுக்கும் இது பயன்படுத்தப்படுகிறது.

**bullion** : *(வேதி.)* **பொன் - வெள்ளிக் கட்டி** : (1) தங்கம் அல்லது வெள்ளிக் கட்டிகள் அல்லது சலாகைகள்.

(2) வெள்ளி பிளாட்டினம் அல்லது வேறு விலையுயர்ந்த உலோகங்களுடன் தங்கம் கலந்த ஓர் உலோகக் கலவை.

(3) தங்க, வெள்ளி நாணயங்களையும் இது குறிக்கும்.

**bull ladle** : *(வார்.)* **பெருஞ் சட்டுவம்** : உருகிய உலோகத்தை எடுத்துச் செல்வதற்குப் பயன்படும் இருவர் எடுத்துச் செல்லக்கூடிய பெரிய அகப்பை.

**bull pine** : *(மர.வே.)* **எருத்துத் தேவதாரு** : அமெரிக்காவின் மேற்குப் பகுதியிலுள்ள ஒருவகை மரம். இது 46-76 மீட்டர் வரை உயரமாக வளரும். இதன் அகலம் 1.5-3 மீட்டர் இருக்கும். இதன் வெட்டுமரம் நடுத்தரமான வலுவுடையது; அதிகப் பிசின் தன்மை கொண்டது. கட்டிடங்கள் கட்டுவதில் உள்முக மற்றும் வெளிப்புற அலங்கார வேலைப்பாடுகள் செய்யப் பயன்படுகிறது. இதனைக் கலிபோர்னியா வெண் தேவதாரு என்றும் அழைப்பர்.

**bull's-eye**: *(க.க.)* **சாளரம்** : முழு வட்ட வடிவில் அமைந்திருக்கும் வட்டமான திறப்பு.

**bull's-nose** : *(க.க.)* (1) **எருத்து மூக்கு** : புறநிலை விரிந்த அல்லது உருள் வடிவக் கோணம்.

(2) *(மர.வே.)* நீட்டிக் கொண்டிருக்கும் பகுதிகளுக்கு நெருக்கமாக உள்ளவற்றைச் சமன்படுத்துவதற்கான ஒரு சிறு சாய்தளம்.

**bull stretcher** : *(க.க.)* **நீள் முனைச் செங்கல்** : நீண்ட முனை வெளியே தெரியும்படி வைக்கப்படும் ஒரு வகைச் செங்கல்.

**bull wheel** : *(எந்.)* **பளுதூக்கிச் சக்கரம்** : உலோகத்தைச் சமன் படுத்தும் பொறியமைவிலுள்ள ஒரு பெரிய பல்லிணை. இது மேசையை இயக்குகிறது. இந்தச் சக்கரத்தைச் சுற்றி ஒரு கயிறு சுற்றப்பட்டிருக்கும். இதனைக் கொண்டு கனமான பொருள்களைத் தூக்கலாம்

**bump**: *(வானூ.)* **திடீர்க் குலுக்கம்**: வாயுமண்டலத்தில் ஏற்படும் திடீர்

யாறுதல் காரணமாக விமானத்தில் ஏற்படும் திடீர் உந்தல் அல்லது குலுக்கம்.

**bumper** : *(தானி; எந்.)* **முட்டுத் தாங்கி** : உந்து வண்டிகளின் முன்னும் பின்னும் மோதலைத் தாங்குவதற்கு அமைக்கப்பட்டுள்ள முட்டுத் தாங்கி.

**bumper bag** : *(வானூ.)* **முட்டுத் தாங்குந் திண்டு** : விமானம் தரையிறங்கும்போது அதன் அடிப் பகுதிக்குச் சேதம் ஏற்படாதவாறு தடுக்கக்கூடிய ஒருவகைத் திண்டு.

**bumper blocks** : *(தானி. எந்.)* **முட்டுத்தாங்கு பாளங்கள்** : கடும் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்வதற்காக உந்து வண்டியின் அச்சுகளுக்கும் சட்டகத்திற்குமிடையே வைக்கப்பட்டுள்ள ரப்பர்ப் பாளங்கள்.

**bumping hammer** : *(உலோ.)* **முட்டுச் சம்மட்டி** : கழிவுப்பொருள் கொள்கலன்கள் போன்ற பெரிய கலன்களில் மூட்டுவாய்களை மூடுவதற்குப் பயன்படும் ஒருவகைச் சம்மட்டி.

**bunching** : *(மின்.)* **விரைவு வேக மாற்றம்**: ஓர் எலெக்ட்ரான் கதிர்க் கற்றையின் விரைவு வேக ஏற்றத் தாழ்வு காரணமாக எலெட்ரான் அனுப்புகை நேரத்தில் உண்டாகும் வேறுபாட்டினால் ஒரு மாற்று மின்னோட்டக் கூறு உண்டாதல்.

**bundling machine** : *(அச்சு.)* **முடுக்குக் கருவி** : அச்சு முழுமடித் தாள் வரிசை, கைப்பிடி நிலை மாட்டி முதலியவற்றை நெருக்கி அழுத்தி முடுக்குவதற்குப் பயன்படும் ஒரு பற்றுக் கருவி.


**bun foot** : **குட்டை வட்டக்கால்** : குட்டையாகவும் வட்டமாகவும் அமைந்த தட்டையான பந்து வடிவக் கால்.

**bung** : **அடைப்பான்** : செங்கற் சூளையிலுள்ள சுடுசெங்கல் களிமண் பெட்டிகள்.

**bungalow** : *(க.க.)* **ஒற்றைமாடி இல்லம்**: சுற்றுத் தாழ்வாரத்தோடு கூடிய ஒரடுக்கு வீடு.

**bunker** : *(பொறி.)* **எரிபொருள் அறை** : எரிபொருள், பெரும்பாலும் நிலக்கரி சேமித்து வைக்கப் பட்டிருக்கும் அறை.

**Bunsen burner** : **புன்சென் வாயு அடுப்பு** : ஆய்வுக் கூடங்களில் பயன்படுத்தப்படும். ஒரு வகை வாயு அடுப்பு. இதில் வாயுவும், காற்றும் கலந்த ஒரு கலவை எரி பொருளாகப் பயன்படுகிறது.



பன்சென் வாயு அடுப்பு

**buoyancy**: **மிதப்பாற்றல்**: நீர்மத்துள் அழுத்துவதால் எடை குறைவாகக் காணும் இயல்பு. பொருளின் எடையால் வெளியேற்றப்படும் காற்றின் எடைக்குச்சமமானதாக மேலமுந்தும் விசை அமைந்திருக்கும்.

**burette** : *(வேதி.)* **வடியளவைக் குழாய்** : சிறுநிற நீர்மம் அளக்கும் கண்ணாடி அளவைக் குழாய். இதன்மூலம் ஒரே சமயத்தில் ஒரு கரைசலில் மிகச் சிறிய அளவைக் கூட எடுக்கலாம்.

**burl** : *(மர. வே.)* **மரக்கரணை** : (1) ஒரு மரத்தின் தூர்ப்பகுதியில் அளவுக்கு மீறிய காரணமாக உண்டாகியிருக்கும் கரணை.

(2) அலங்காரத் 'திரைச் சீலை'களிலுள்ள அழகிய நூல் வேலைப்பாடு.

**burlap** : **பருக்கன் துணி** : சணலில் நெய்யப்பெற்ற கரடுமுரடான துணி. இது திரைச்சீலைகள், சிப்பங்கட்டும் துணிகள் முதலியன தயாரிக்கப் பயன்படுகிறது.

**burling** : **சிக்கு வாருதல்** : கம்பளித் துணியிலுள்ள முடிச்சுகளையும் சிக்குகளையும் அகற்றும் ஒரு முறை.

**burn**: **நிலையுருக்காட்சி**: பொருளிலிருந்து ஒளிப்படக் கருவியை வேறு பக்கம் திருப்பிய பின்னரும், சூழலில் நிலைத்து நிற்கும் ஓர் உருக்காட்சி.

**burned bearing** : (தானி. எந்.) **தீய்வுத் தாங்கி** : ஒரு தாங்கியின் கரடுமுரடான மேற்பரப்பு. இது பெரும்பாலும் மோசமான உயவிடல் காரணமாக ஏற்படுகிறது.

**burned metal** : (பற்.) **எரி உலோகம்** : ஓர் உலோகத்தில் சிறிதளவு கார்பன் எரிந்து கார்பன்டையாக்சைடும், சிறிதளவு அயம் எரிந்து இரும்பு ஆக்சைடும் உண்டாதல்.

**burnet's process** : (மர. வே.) **பர்னட் மரக்காப்பு முறை** : மரங்களைப் பாதுகாக்க சர் வில்லியம் பர்னட் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட நீர்ம மருந்தைப் பூசி வெட்டு மரங்களைப் பாதுகாக்கும் முறை. இதில் துத்தநாகக் குளோரைடு காப்புப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

**burning** : (வேதி.) **எரியழிவு** : வெப்பமும், ஒளியும் வெளிப்படும் வகையில் மிக விரைவாக ஆக்சிகரணம் நடைபெறும் நிகழ்வு.

**burnout** : (விண்.) **எரிபொருள்: தீர்வு** : விண்வெளிக் கலத்தில் எரிபொருள் தீர்ந்து போதல் அல்லது எரிபொருள் பாய்தல் நின்று போதல்.

**burnish** : (எந்.) **மெருகிடுதல்** : ஓர் உலோகப் பரப்பில் மற்றோர் உலோகப் பரப்பினை உராயச் செய்து பளபளப்பாக்கி மெருகேற்றும் முறை.


மரச்செதுக்கு வேலைகளுக்கு மெருகிடும் முறை.

**burnisher** : (பட்.) **மெருகிடு கருவி**: உலோகங்களுக்கு, உராயச் செய்து மெருகேற்றுவதற்குப் பயன்படும் ஓர் எஃகுச் சாதனம்.

**burr** : (பட்.) **சாணை விளிம்பு** : ஓர் உலோகத் துண்டின் கரடுமுரடான விளிம்பு. இது வெட்டுவதற்கும், துளையிடுவதற்கும் பயன்படுகிறது. அச்சுக் கலையில் மங்கலான மைக்கறை உண்டாக்கும் வகையில் வரி உருக்கச்சுப் பொறியிலுள்ள வரிப்பாளத்துடன் ஒட்டியிருக்கும் மழுங்கிய உலோகம்.

**burring machine** : (உலோ.) **சாணைப் பொறி**: உலோக உருளைகளின் அல்லது வட்டத்தகடுகளின் விளிம்புகளின் முரமுரப்பான வெட்டுவாயைச் சாணை பிடிக்கப் பயன்படும் பொறியமைவு.

**burring reamer** : **சாணைத்**



சாணைத் துளைப்பான்

**துளைப்பான்** : குழாய்களை வெட்டும்போது ஏற்படும் கரடுமுரடான விளிம்புகளை அகற்றுவதற்குப் பயன்படும் கருவி.

**bursting strenth** : **தாங்கு வலிமை**: அழுத்தத்தைத் தாங்குவதற்குக் காகிதத்திற்குள்ள ஆற்றல். இதனை முல்லன் சோதனைக் கருவியில் ஒரு சதுர செ.மீ.க்கு இத்தனை கி. கிராம் என்ற வீதத்தில் கணக்கிடப்படுகிறது.

**bus bar** : (மின்.) **மின்வாய்க் கட்டை** : பல மின்சுற்றுகளோடு இணைந்துள்ள செப்பு மின்னேகி.

**bush** : (தானி; எந்.) **இருசு உருளை** : இருசு பதிந்து சுழல்வ

தற்குரிய உருளை வடிவ உலோகக் கட்டை. இது தாங்கிபோல் பயன் படும்.

(1) பொதுவாக, உள்வரி விட்டத்தைக் குறைப்பதற்காகப் பயன் படுத்தப்படும் உலோகத் துண்டு.

**busheled iron** : *(உலோ.)* **கலவை உலோகம்:** கூட்டுக் கலவை செய்யும் ஊதுலையில் இரும்புத் துண்டுகளிலிருந்து தயாரிக்கும் வகை இரும்பு.

**bushing** : *(எந்.)* **செருகு குழல்** : துல்லியமான சரியமைவுக்கும் பழுது பார்த்தலுக்கும் ஒரு தாங்கி இடமளிப்பதற்குப் பயன்படும் கம்பியுருளை அகஞ் செருகப்பட்ட குழல்.

**butt** : *(மர;வே.)* **மூட்டு வாய்** : பொதுவாக, கதவின் மூட்டுவாய்; இது வார்க்கட்டை மூட்டு வாயைக் குறிக்காது.

**butterfly table**: **சிறகு வடிவ மேசை** : வண்ணத்துப் பூச்சியின் சிறகுகளைப் போல் இரு புறமும் மடித்திடக்கூடிய வகையில் அமைந்த மேசை.

**butterfly valve** : *(தானி;எந்.)* **சிறகு வடிவ ஓரதர்** : நடுவிலுள்ள ஓர் ஆதாரத்தில் இருபுறமும் மடிந்து விரிந்திடக்கூடிய வகையில் அமைந்த ஓரதர்.

**buttering** : *(க.க.)* **சாந்துக் கலவை பூசுதல்** : கட்டுமானத்திற்குச் செங்கல்லை அதன் நிலையில் வைப்பதற்கு முன்னர் அதன் விளிம்புகளில் சாந்துக் கலவையினைப் பூசுதல்.


**buttering trowel**: *(க.க.)* **சாந்து சட்டுவக் கரண்டி** : சாந்து பூசுவதற்குப் பயன்படும் சட்டுவக் கரண்டி.

**butternut** : *(மர.வே.)* **வெண்மரம்** : இது எண்ணெய்ப் பசையுடைய கொட்டை தரும் ஒரு வகை மரம். இது அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் காணப்படுகிறது. நடுத்தர வடிவளவுடையது. இதன் வெட்டுமரம் மென்மையானது; மென்சாயல் நிறமுடையது; நுண்துவாரங்கள் கொண்டது; அறைகலன்கள் செய்யவும், உள்முக அலங்கார வேலைப்பாடுகளுக்கும் பயன்படுகிறது.

**butt hinge** : *(மர.வே.)* **மூட்டுவாய்க் கீல்** : ஒரு கதவின் விளிம்புடன் பொருத்தப்பட்ட ஒரு கீல். இதில் குடியிருக்கும்போது கதவின் பக்க நிலைக்கதவின் விளிம்புடன் பொருந்தியிருக்கும். இது வார்க்கட்டைக்கீலிருந்து வேறுபட்டது.

**butting or butt ramming** : *(வார்.)* **இடித்து இறுக்குதல் அல்லது திமிசு அடித்து இறுக்குதல்** : ஒரு திமிசுக் கட்டையின் உருண்ட முனையின் தட்டையான மேற்பரப்பை இடித்து அல்லது திமிசு அடித்து இறுக்குதல்.

**butt joint** : *(க.க; மரவே.)*



முளை மூட்டு

**முளை மூட்டு** : இரு வெட்டு மரத் துண்டுகள் ஒன்றன் மேல் ஒன்று மேவாதவாறு விளிம்புகளை இணைத்தல்.

**button machine** ; **குமிழ்ப் பொறியமைவு** : ஒரு சிறிய, கையால் இயக்கக்கூடிய சாதனம். பொத்தான்களைப் பொருத்துவதற்கும் கொளுவிகளையும் கயிற்றுத் துளைகளையும் இணைப்பதற்கும் பயன்படுகிறது.

**button-wood** : **பொத்தான் மரம்**: *பார்க்க : அத்திமரம்.*

**butt ramming** : *(வார்.)* **திமிசு அடித்து இறுக்குதல்** : *(வார்.) திமிசுக் கட்டையின் பெரிய உருண்டையான முனையினால் அடித்து இறுக்குதல்.*

**buttress flying** : *(க.க.)* **உதை கால் வளைவு** : *உயர் கட்டுமானங்களுக்குச் சுவர் மேற்பகுதியிலிருந்து ஆதாரம் கொண்டு செல்லும் அடிவளைவுடன் கூடிய உதை கட்டுமானம்.*

**buttess thread** : *(எந்.)* **மூட்டுத் திருகிழை** : *குறுக்கு வெட்டு முக்கோண வடிவத்திலுள்ள ஒரு திருகிழை. இதன் ஒரு முகப்பு திருகின் அச்சுக்குச் செங்கோணத்தில் அமைந்திருக்கும். இரண்டாம் முகப்பு சாய்வாக இருக்கும். பீரங்கி போன்ற அவற்றில் அளவுக்கு மீறிய அதிர்ச்சியைத் தாங்குவதற்கு இது பயன்படுத்தப்படுகிறது.*

**butt welding** : *(பட்.)* **முட்டுப் பற்றவைப்பு** : *இரு துண்டுகள் ஒன்றன் மேல் ஒன்று மேவாதவாறு, இரு முனைகளும் நேரடியாகப் பொருந்தியிருக்கும்படி பற்றவைக்கும் முறை. மின்னியல் முறையில் பற்ற வைப்பதற்காகப் பொதுவாகப் பயன்படும் முறை.*

**buzzer** : *(மின்.)* **மின் ஒலிக்கருவி** : *வண்டு போன்று முரலும் ஒலி எழுப்பும் மின்சார அறிவிப்புக் கருவி.*

**buzz saw** : *(மர.வே.)* **வட்ட இயக்கம்** : *ஒரு வட்ட வடிமவான ரம்பம்.*

**by pass**: *(கம்.)* **இடைகடப்பு வழி**: *நீரோட்ட மின்னோட்டங்களில் இடைத்துரடு கடக்கும் சுற்று வழி.*

# C

**C-battery:** *(மின்.)* **'C' மின்கலம்:** வெற்றிடக் குழலில் முறையான வலைக் கசிவினை ஏற்படுத்தி, அதன் மூலம் ஒரு மின்சுற்றில் சரியான அளவுக்கு 'B' மின்னோட்டம் பாயும்படி செய்வதற்காகப் பயன்படும் மின்கலம். இது திரிபு ஏற்படாதபடி தடுக்கிறது. 'B' மின்கலங்கள் சிக்கனமாகப் பயன்படுத்தத் தக்கன.

**C-Clamp:** *(எந்.)* **'C' வடிவ பிடிப்பான்:** இது 'C' என்ற எழுத்து வடிவில் அமைந்தஒரு வகை இறுக்கிப் பிடிக்கும் கருவி. இதில் இறுகப் பற்றுவதற்கான அழுத்தம் கட்டை விரல் திருகாணி மூலம் பெறப்படுகிறது.



பிடிப்பான்

**C.P.:** *(வேதி.)* **வேதியியல் தூய்மை** வேதியியல் கோட்பாடுகளுக்குத் தக்கவாறு தூய்மையாக இருத்தல்.

**C-scroll:** **'C' வடிவச் சுருள்:** 'C' செதுக்குருவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு. இதனை ஃபிரெஞ்சுக் காரர்கள் புகுத்தினர்.

**C-stage resins:** *(குழை.)* **'C' நிலைப் பிசின்கள்:** குழைம வகையில் வெப்பமூட்டப்பட்ட நிலையில் உருக்கொடுப்பதற்கான இறுதி நிலையிலுள்ள பிசின்கள். இந்தப் பிசின்கள், உருக்க முடியாதவாறும் கரைக்க இயலாதபடியும் இருக்கும்.

**C-supply:** *(மின்.)* **C-மின் வழங்கீடு:** வலைச் சார்பு எலெக்ட்ரான் குழல்களுக்கு வழங்கப்படும் மின்னழுத்தங்கள், பொதுவாக இவை எதிர் மின்னழுத்தங்களாக இருக்கும்.

**C-washer:** *(எந்.)* **'C' வடிவ வளையம்:** ஒரு பக்கம் திறப்புடன் 'C' எழுத்தின் வடிவத்தில் அமைந்திருக்கும். இதனை சுரியாணியை முற்றிலுமாக வெளி எடுக்காமல் அந்த ஆணியின் மரைக்குக் கீழை நுழைக்கலாம்; அல்லது அதிலிருந்து எடுக்கலாம். இதனைக் காடி வளையம் அல்லது திறந்த வளையம் என்று கூறுவர்.

**cabane:** *(வானூ.)* **ஆதாரக்கட்டு:** விமானக் கட்டுமானச் சட்டத்தில் இறகுகளைத் தாங்குவதற்கான ஒரு கட்டமைப்பு. ஓர் இறகில் புறந்துருத்திக் கொண்டிருப்பவற்றுக்கு ஆதாரமாகப் பயன்படும் தாங்கணைவும் இவ்வாறு அமைக்கப்படுகிறது.

**cabbaging press:** *(எந்.)* **அரிமான அழுத்தப் பொறி:** உதிரியான தகட்டு உலோகத் துண்டுகளை நெருக்கிச் செறிவாக்குவதற்கான ஓர் அழுத்தப் பொறி. இதன் மூலம் அந்த உலோகத் துண்டுகளைக் கையாள்வதற்கும் மறுபடி உருக்குவதற்கும் ஏற்ற வடிவத்தில் உருவாக்கலாம்.

**cabinet:** *(மர.வே.)* **நிலைப் பெட்டி:** இழுப்பறைகளும், நிலையடுக்குத் தட்டுகளும் கொண்டு கதவுகளால் மூடப்பட்ட ஓர் இழுப்பறைப் பெட்டி பல்வேறு பொருள்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு இது பயன்படுகிறது.

**cabinet burnisher:** *(மர.வே.)* **நிலை பெட்டிக் கைப்பிடி:** 10 முதல் 15 செ.மீ வரைநீளமுள்ளகடினமான எஃகுத் துண்டு, இது நீள்வட்ட வடிவில் அமைந்திருக்கும். இது

ஒரு மரக் கைப்பிடியில் செருகப் பட்டிருக்கும். இதுசெதுக்குக் கருவி யின் விளிம்பினைத் திருப்புவதற் குப் பயன்படும்.

**cabinet latch** : **நிலைப் பெட்டித் தாழ்ப்பாள்** : பயன்பாட்டுக்குத் தக்கபடி அமைக்கப்பட்டுள்ள பல் வேறு வகைத் தாழ்ப்பாள்களுக் குள்ள பெயர். ஒரு குளிர்பதனச் சாதனக் கதவு முதல் சமையலறை நிலைப் பெட்டிகளிலுள்ள கிடை நிலைக் கைப்பிடிப் பூட்டுகள் வரைப் பல்வேறு தாழ்ப்பாள்கள் இதில் அடங்கும்.

**cabinet projection** : **ஒளிநிழல் எரிவுரு** : ஒருவகைப் படம் வரை யும் முறை. இதில் வரையப்படும் பொருள் நோக்குவோருக்கு இணையாக வரையப்படுகிறது. அதற்குச் செங்குத்தாக இருக்கும் முகப்புகள் 45° சாய்கோணத்தில் வரையப்பட்டிருக்கும்.

**cabinet scraper** : *(மர.வே.)* **நிலைபெட்டி செதுக்குக் கருவி**: ஒரு தட்டையான எஃகுத் துண்டு. இதன் ஒரு விளிம்பு கரடுமுரடான மரப்பரப்பில் வைத்து இழைக்கும் போது இழைப்புழி போன்று கரடு முரடுகளை நீக்கி வழவழப்புண் டாக்கும்.

**cabinet work**: *(மர.வே.)* **நிலைப் பெட்டி வேலைப்பாடு**: நேர்த்தியான மரவேலைப்பாடுகளைச் செய்யப் பயன்படும் முறை.

**cabin hook** : **நிலைப் பெட்டிக் கொக்கி** : நிலைப்பெட்டி வேலை யில் கதவுகளில் பயன்படுத்தப் படும் ஒரு சிறிய கொக்கியும் புழை யும்.

**cable** : *(மின்.)* **கம்பிவடம்** : (1) நீர்புகாமல் பாதுகாப்புச் செய்யப் பட்ட, மின் காப்பிடப்பட்ட மின் கடத்தி அல்லது கடத்திகளின் தொகுதி. (2) பொறியியல் நோக்கங்களுக் காகப் பயன்படுத்தப்படும் வடக் கயிறு அல்லது நங்கூரச் சங்கிலி.

**cable box** : *(மின்.)* **கம்பிவடப் பெட்டி** : கம்பி வடங்களுக்கிடை யிலான புரியிணைவுகள் அல்லது இணைப்புகள் வைக்கப்பட்டிருக் கும் ஒரு பெட்டி.

**cable entrance** : *(மின்.)* **நுழை வுக் கம்பிவடம்** : முதன்மை மின் வழியிலிருந்து ஒரு கட்டிடத்திற்கு மின்னியல் தொடர்புகள் ஏற்படுத் துவதற்குப் பயன்படுத்தப்படும் கனமான மின் கம்பிவடம்.

**cable-laid rope** : *(பொறி.)* **வலம் புரி வடக்கயிறு** : வலம்புரி முறை யில் கம்பி வடப்புரி முறுக்கிய வடக்கயிறு.

**cable length**: **கம்பிவட நீள அளவு** கப்பல் துறை நாழிகை நீளத்தில் பத்தில் ஒரு பகுதி. இது அமெரிக் காவில் கையாளப்படும் ஓர் அளவு முறையாகும். இது 220 மீட்டர் அல்லது 120 கடலியலளவுக்குச் சமம்.

**cable non metallic** : *(மின்.)* **அலோக மின்கம்பிவடம்** : நெகிழ் திறனுடைய துணி உறைகளில் பொதியப்பட்டுள்ள இரண்டு அல் லது அதற்கு மேற்பட்ட மின் காப் பிடப்பட்ட மின்கம்பிகள். இது வீடுகளில் உட்புறம் மின்கம்பியிடு வதற்குப் பயன்படுகிறது.

**cable rack** : *(மின்.)* **கம்பிவடச் சட்டம்** : மின்கம்பி வடங்களைச் சுற்றி வைக்கப்படும் ஒரு சட்ட அமைப்பு.

**cable, shielded** : *(மின்.)* **காப் பிட்ட மின்கம்பி வடம்** : மின்காந்தக் காப்பு போன்று செயற்படும் ஓர் உலோக உறையினுள் பொதியப் பட்டுள்ள மின் கடத்திகள்.

**cable turning**: **கம்பிவடத் திருக்கு**: திண்மையான உருவமைவில் சுருட்

டப்பட்ட கயிற்றுச் சுருள்களைப் போன்றிருக்கும் ஒரு திருக்கு வடிவம்.

**cabling :** *(க.க.)* **மணிவட வார்ப்புரு :** தூண் முதலியவற்றில் செதுக்கப்படும் செங்குத்தான வரிப் பள்ளம்.

தூணின் செவ்வுயரக் குழுவினைக் கம்பி வார்ப்புருவால் நிரப்பும் அணி அமைப்பு.

**cabochon : உருள்மட்டை வடிவு :** முகடு உருண்டையாகவும் அடி தட்டையாகவும் இருக்குமாறு ஒரு பணிக்கல்லின் தோற்றத்துடன் செதுக்கு வேலைப்பாடு செய்யப்பட்ட ஒரு வட்டவடிவப் பரப்பு.

**cabriole :** *(மர.வே.)* **வளைகால் :** தட்டுமுட்டுப் பொருள்களில், முழங்கால் பகுதி குழிவாகவும் கணுக்கால் பகுதி உட்குழிவாகவும் அமைக்கப்படும் ஒருவகை வளைகால் பாணி.

**cadmium :** *(வேதி.)* **காட்மியம் :** தகரம் போன்ற வெண்ணீல உலோகத் தனிமம் (Cd). துத்தநாகக் கனிமங்களில் சிறிதளவு கிடைக்கிறது. அதிலிருந்து வடித்துப் பிரித்தல் மூலம் பிரித்தெடுக்கப்படுகிறது. உருக்கி உலோகக் கலவைகள் செய்யப் பயன்படுகிறது.

**cadmium lithopone :** *(வண்.)* **காட்மியம் வண்ணப் பாளம் :** மஞ்சளும் சிவப்பும் வரிசையாக அமைந்த காட்மிய உலோகப் பாளம். இது ஒளியால் சேதமடையாது; காரங்களை எதிர்க்கக் கூடியது.

**cadmium plating :** *(உலோ.)* **காட்மிய முலாமிடல் :** இரும்புப் பொருள்களுக்கும், மற்றப் பகுதிகளுக்கும் அரிமானத்திலிருந்து பாதுகாப்பதற்காக மின்பகுப்பு முறை மூலமாக காட்மிய முலாமிடுதல்.

**cadmium silver :** *(தானி.எந்.)* **காட்மிய வெள்ளி :** தாங்கிகள் தயாரிப்பதற்குப் பயன்படும் ஓர் உலோகக் கலவை. தகரம்-செம்பு-அஞ்சனம் கலந்த பப்பிட் உலோகம் என்னும் உலோகக் கலவையை விட இது அதிகப் பளு அழுத்தத்திலும் அதிவெப்ப நிலையிலும் எளிதாகக் செயற்படவல்லது.

**caduceus : கட்டியக் கோல் :** கிரேக்கத் தெய்வங்களின் தூதரான ஹெர்மிசின் கையிலுள்ள கட்டியக் கோல். இது பாம்புபோல் நெளிந்திருக்கும். இதில் இறகும் இருக்கும். இது அலங்காரப் பொருளாகப் பயன்படுகிறது.

**caecum :** *(உட.)* **பெருங்குடல் வாய்:** பெருங்குடலின் முற்பகுதி இங்குதான் சிறுகுடல் இதனுள் நுழைகிறது. பெருங்குடல் வாயின் பக்கத்திலிருந்து குடல் முளை வெளியே வருகிறது.



பெருங்குடல்

**cage-type valve :** *(தானி.எந்.)* **கூண்டு வகை ஓரதர் :** முகப்பு உந்துகளில் பயன்படுத்தப்பட்ட ஒரு வகை ஓரதர். இதில் தலைக் கொண்டை வடிவமுள்ள ஓர் ஓரதர், ஒரு நீள் உருளைத்தண்டுடன் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு சிறிய உருளையினுள் அல்லது கூண்டினுள் இயங்கிக் கொண்டிருக்கும். இந்த ஓரதரையும் கூண்டையும் தனி அலகாக அகற்றிவிடலாம்.

**cairo :** *(அச்சு.)* **கெய்ரோ அச்செழுத்து :** வரி உருக்கச்சுப் பொறியிலிருந்து கிடைக்கும் ஒருவகை அச்செழுத்து முகப்பு.

**caisson : நீர்புகாப் பெரும் பேழை :** நீரின் கீழ் அடித்தளம் அமைக்க உதவும் நீர்புகாத பெரும் பேழை. நீருக்கடியில் பாலங்களுக்கு அடித்தளங்கள் அமைக்க இது பயன்படுகிறது.

**caisson disease :** *(நோயி.)* **காற்றழுத்த நோய் :** *மிகுந்த அழுத்தமுடைய காற்றினூடாக உழைப்பவர்களுக்கு வரும் நோய். மிகுந்த காற்றழுத்தத்தில் இரத்தத்தில் நைட்ரஜன் கரைந்து விடுகிறது. காற்றழுத்தம் குறையும்போது, நைட்ரஜன் குமிழ்களாக வெளி வரும். அப்போது மிகுந்த வலி உண்டாகும்; சிலசமயம் மரணமும் விளையும்.*

**caking coal; பசை நிலக்கரி :** *சூட்டால் பசை கட்டியாகிற நிலக்கரி வகை.*

**calamine :** *(வேதி.)* **துத்தநாகக் கரிகை :** $Zn(OH)_2$ $ZnSiO_3$ *துத்தநாகம் கலந்த சுரங்கக் கனிப் பொருள் வகை. துத்தநாகம் கிடைக்கும் ஒரு கனிமம்.*

**calcimine : நீற்றுச் சுண்ணகம் :** *நீற்றுச் சுண்ணக நீராக்கிச் சுவர்களில் வெள்ளையடிப்பதற்குப் பயன்படும் சுண்ணகம்.*

**calcine :** *(வேதி.)* **புடமிடுதல் :** *நெருப்பில் சுட்டுப் புடமிட்டு மாறாச் சுண்ணமாக்குதல்.*

**calcined bone : புடமிட்ட எலும்பு:** *உலர் வெப்பமூட்டுதல் மூலமாகத் தயாரிக்கப்பட்ட, எளிதில் தகர்ந்து விடக்கூடிய தூளாக மாற்றப் பட்ட எலும்பு.*

**calcined kaolin : புடமிட்ட பீங் கான் :** *இது பீங்கான் செய்யும் மென்மையான வெண்ணிறக் களி மண் வகை. இது அலுமினியம் சிலிக்கேட் எனப்படும். புடமிட்ட பீங்கான் செய்யப் பயன்படுகிறது.*

**calcining : புடமிடுதல் :** *உலோகக் கனிமங்களைப் புடமிட்டு அதிலிருந்து தீங்கான அன்னியப் பொருள்களை நீக்குவதற்குச் சூடாக்குதல்.*

**calcite : சுண்ணகக் கரியகை :** *தேனிரும்பு, எஃகு ஆகியவற்றைத் தயாரிப்பதில் உருக்கும் பொருளாகப் பயன்படுத்தப்படும் சுண்ணாம்புக்கல். அமெரிக்காவில் பென்சில்வேனியா, மிச்சிகன், மேற்கு வர்ஜினியா, இலினாய்ஸ் ஆகிய மாநிலங்களில் மிகுதியாகக் கிடைக்கிறது.*

**calcium:** *(வேதி.)***கால்சியம்** (Ca)**:** *சுண்ணகம்-சுண்ணக்கல் - களிக்கல் ஆகியவற்றிலுள்ள ஒரு மூல உலோகம். வெள்ளி போன்ற வெண்மை நிறமுடையது. மென்மையான உலோகம். புதிதாக எடுக்கும் போது ஒளிர்வுடையதாக இருக்கும். காற்றுப் பட்டதும் ஆக்சிகரணத்தின் மூலம் விரைவாக மங்கி விடும். உலோகக் கலவைகள் தயாரிப்பதிலும், பள்ளி ஆய்வுக் கூடங்களில் நீரிலிருந்து ஹைட்ரஜன் வாயு தயாரிப்பதற்கும் பயன் படுகிறது.*

**calcium chloride :** *(க.க.)* **கால்சியம் குளோரைடு :** *ஈரத்தை உறிஞ்சுவதற்குப் பயன்படும் ஒரு வேதியியல் பொருள்.*

**calcium corbide :** *(வேதி.)* **கால்சியம் கார்பைடு :** ($CaC_2$) *சுண்ணாம்புக்கல்லும் சுட்ட கரியும் கலந்த ஒரு கலவையை மின் ஊது லையில் சூடாக்கி இது பெறப்படுகிறது. நீருடன் கலந்து, அசிட்டிலின் வாயு தயாரிக்கப் பயன்படுகிறது.*

**calcium corbonate : கால்சியம் கார்போனேட் :** *சுண்ணாம்புக்கல் வகை. சுண்ணாம்புக் கல்லாக மிகுதியாகக் கிடைக்கிறது. பளிங்கு ஒரு தூய்மையான சுண்ணாம்புக் கல், சுண்ண ஓடுகள், பவளம் போன்றவை முக்கியமாக கால்சியம் கார்பனேட்டுகளாம்.*

**calcium oxide : கால்சியம் ஆக்சைடு :** *சுண்ணாம்பு தூய்மையான கால்சியம் ஆக்சைடு ஆகும்.*

**calculagraph : கணிப்பு வரைவான்:** *கடிகாரமும், நேர முத்திரை*

யும் உடைய ஒரு சாதனம். இது விலைச் சீட்டு முதலியவற்றுக்குப் பணம் செலுத்தப்படும் நேரத்தைத் துல்லியமாக முத்திரையிடப் பயன் படுகிறது.

**calculus :** (நோயி.) **கல்லடைப்பு:** சிறுநீரகம், சவ்வுப்பை போன்ற உடலின் உள்ளுறுப்புகளில் உண்டாகும் கல் போன்ற தடிப்பு

**calculus :** (கணி.) **கலன கணிதம் :** ஐசக் நியூட்டனும், லைப்னிட்சும் தனித்தனியே ஆராய்ந்து இந்தக் கணித முறையைக் கண்டு பிடித்தனர். இந்த முறை மூலம் கணித ஆராய்ச்சியில் ஒரு புதிய ஆராய்ச்சித் துறையே உருவாகியது.

**caldron : கால்ட்ரான்:** ஒரு பெரிய உலோகக் கொதிகெண்டி அல்லது கொதிகலன்.

**calender : மெருகேற்றும் உருளை :** துணி, காகிதம் முதலியவை படிந்து உருவாக்கும்படி உருளை எந்திரத்தில் அழுத்தி மெருகேற்றுவதற்குப் பயன்படும் உருளை.

**calendered: மெருகேற்றிய:** மெருகேற்றி வடிவாக்கம் செய்யப்பட்ட காகிதத்தைக் குறிக்கிறது.

**calendering :** (குழை.) **மெருகேற்றுதல் :** துணி, காகிதம், பிளாஸ்டிக் தகடுகள் முதலியவற்றுக்கு படிந்து உருவாக்கும்படி உருளை எந்திரத்தில் அழுத்தி மெருகேற்றுதல்.

**caliber : குழல்விட்டம் :** ஒரு குழலின் உள்விட்டம்.


**calibration : திருத்தளவுக் கணக்கீடு :** அறிவியல் கருவிகளில் குறுக்களவுக் கூடுதல் குறைவுகளைத் துல்லியமாகக் கணக்கிடுதல்.

**calico : காலி கோதுணி :** சொரசொரப்புள்ள பஞ்சுத்துணி. கள்ளிக்கோட்டையிலிருந்து முதலில் கொண்டு வரப்பட்டதால் இப் பெயர் பெற்றது.

**california job case :** (அச்சு.) **கலிபோர்னியா அச்செழுத்து அறைப் பெட்டி :** கையினால் அடுக்கப்படும் அச்செழுததுகளை வைப்பதற்கான ஓர் அறைப்பெட்டி.

**calin : கேலைன் :** ஈயமும் வெள்ளீயமும் கலந்த ஓர் உலோகக் கலவை. கொள்கலன்களுக்கான உள்வரிப்பூச்சு போன்றவற்றுக்கான மெல்லிய தகடுகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**caliper :** (பட்.) **விட்டமானி :** வட்டமான பொருள்களில் அகப்புற விட்டங்களை அளக்கும் வகையில் அளவு கருவிக் கோலில் இழையும் அளவுக் காய்களையுடைய விட்டமானி.




விட்டமானி

இதன்மூலம் சென்டி மீட்டர் கனமுள்ள காகிதத்தின் கனத்தையும் துல்லியமாக அளவிடலாம்.

**caliper rule : விட்டமானி அளவு கோல் :** அகப்புற விட்டங்களை அளவிடுவதற்குப் பயன்படும் அளவுகோல். இதில் அளவுகள் பகுத்துக் குறிக்கப்பட்டிருக்கும். இதன் நிலையான தலை பூச்சிய வரையீடுகளையுடைய ஒரு வரிப் பள்ளத்தின் வழியே நகர்ந்து செல்லும்.

**caliper square :** (எந்.) **விட்டமானி அளவு கருவி :** பிழம்புகளின் அகப்புற விட்டங்களை அளக்கும் முறையில் அளவுகோலின் மீது இழையும் அளவு காய்களை உடைய அளவுக் கருவி.



விட்டமானி அளவு கருவி

**calking** : **நீர்க்காப்பு:** நார்க் கயிறு உருகிய நிலக்கீல் போன்றவற்றைக் கொண்டு பலகைகளின் சந்திப்பு இடைவெளியை அடைத்து நீர் உட்புகாமல் செய்தல். மரக் கலங்களில் பலகை மூட்டுக்களை நீர்க் காப்புடையதாகச் செய்ய இது பயன்படுகிறது.

**calking tool** : **நீர்க்காப்புக் கருவி:** சந்துகளை அடைத்து நீர் உட்புகாமல் செய்வதற்குப் பயன்படும் கருவி.


**calorie :** *(வேதி; பொறி; எந்; இயற்.)* **கலோரி/கனலி** : வெப்ப அளவைக்கூறு; கனலி. ஒரு கிராம் நீரின் வெப்ப நிலையை ஒரு சென்டிகிரேடு அளவுக்கு உயர்த்துவதற்குப் பயன்படும் வெப்பத்தின் அளவு.

**calorific value** : *(தானி.)* **வெப்ப அளவு :** உணவு அல்லது எரிபொருள் தரும் வெப்பத்தின் அளவு.

**calorimeter:** **கனல்மானி :** சூட்டின் அளவு காட்டும் கருவி. ஒரு மின்கடத்தியிலுள்ள மின்னோட்டத்தினால் உண்டாகும் வெப்பத்தை அளவிடுவதற்கான கருவி. உராய்வு, உள்ளெரிதல், வேதியியல் மாற்றம் போன்றவற்றால் உண்டாகும் வெப்பத்தை அளவிடும் கருவி.

**calorizing:** *(உலோ.)* **கனல் முலாமிடல்:** இரும்பு, எஃகு போன்றவற்றிற்கு அலுமினியம் அல்லது அலுமினிய-இரும்பு உலோகக் கலவைகளால் முலாமிடும் முறை.

**cam:** *(எந்.)* **எந்திர முனைப்பு :** இயக்கும் சக்கரத்தின் சுற்று வட்டம். கடந்த முனைப்புச் சாதனம். இது சுழல் இயக்கத்தை மாற்று, எதிர்மாற்று அல்லது முன்பின் இயக்கமாக மாற்றக்கூடிய ஒரு சுழல் தண்டில் பொருத்தப்பட்



எந்திர முனைப்பு

டிருக்கும்.

**cam and lever steering gear:** *(தானி;எந்.)* **முனைப்பு நெம்புகோல் செலுத்தும் பல்லிணை:** இதில் ஒரு குறுக்குச் சுழல் தண்டுடன் ஒரு வகை விரல் சக்கரம் இணைக்கப்பட்டிருக்கும். இது செலுத்துப் பல்லிணைச் சுழல் தண்டின் கீழ் முனையிலுள்ள மாறுபடும் இடைகொண்ட புரியுடைய திருகில் பொருந்திக் கொள்கிறது. திருகின் புரியானது மையத்தில் குறுகலாகவும் முனைகளில் அகன்றும் இருப்பதால், மிகக் குறைந்த அளவு அதிர்ச்சியுடனும் மிக விரைவாக சுற்றி இடமளிக்கிறது.

**camber** : *(வானூ.)* **கோட்டம்** : விமானத்தின் காற்றழுத்தத் தளத்தின் ஒரு பகுதியின் வளைவு. அதன் நாணிலிருந்து வளைவின் மேல்வாட்டமாக உயர்ந்து செல்லும் கோட்டம். இது வழக்கமாக, நாணிலிருந்து வளைவின் விலகலுக்கும், நாணின் நீளத்திற்கு மிடையிலான விகிதமாகக் குறிப்பிடப்படுகிறது. மேல்கோட்டமானது, விமானக் காற்றழுத்தத் தளத்தின் மேற்பரப்புடன் தொடர்புடையது. கீழ்க்கோட்டமானது, இவ்விரண்டின் சராசரி அளவாகும்.

கட்டிடக்கலையில், மேல்வளைவுள்ள உத்திரத்தின் அல்லது காலத்தின் மேல் வட்டமான வளைவின் அளவு.

உந்துவண்டிகளில்அடிப்புறத்தில் முன் சக்கரங்களை நெருக்கமாகக் கொணர்ந்து உந்துவண்டியை எளிதாகச் செலுத்துவதற்கு உதவும் அமைப்பு

**cambium layer: கேம்பியம் அடுக்கு:** மரங்களில் மரத்திற்கும், பட்டைக்குமிடையிலான உயிரணு மண்டலம். இந்த அடுக்கிலிருந்து வளர்ச்சி ஏற்படுகிறது. எலுமிச்சை மர இனத்தில் இதனைக் காணலாம்.

**cambric: அலங்காரத் துணி :** நயமான வெண்ணிற இழைத் துணி வகை அறைகலன்களின் அலங்காரத்துணியாகப் பயன்படுகிறது. வெண்துணி மெத்தைத் திண்டுகளுக்கு உறையாகவும், கறுப்புத் துணி திண்டுகளுள்ள அறைகலன் உட்புற ஒட்டிணைப்பாகவும் பயன்படுகிறது.

**cam drive: முனைப்பியக்கம்:** முனைப்புச் சக்கரங்கள் மூலமாகப் பெறப்படும் ஒருவகை இயக்கம். இதில் ஒரு வகை இயக்கத்தை, உந்துவண்டியில் உள்ள சுழல் தண்டில் உள்ளது போன்று, துல்லியமான நேரத்தில் அல்லது வேறொரு இயக்கத்துடன் தொடர்புடையதாக நிகழுமாறு செய்யலாம்.

**cam engine: முனைப்பு எஞ்சின்:** ஒரு முனைப்பு மற்றும் சுழல் இயக்கம் மூலமாக உந்து தண்டுகள் மாறிமாறி எதிரெதிர் இயங்கக்கூடிய ஒரு பகை எஞ்சின்.

**cameo. புடைசெதுக்கு மணி:** உள்வண்ணம் வேற்றுப் பின்னணி வண்ணமாக அமையுமாறு புடைப்புருவாகச் செதுக்கப்பட்ட மணி. பதினெட்டாம் நூற்றாண்டுப் பாணியிலமைந்த நாற்காலிகளில் இதனைக் காணலாம்.


**camera boom: ஒளிப்பட இயக்கி:** ஒளிப்படக் கருவிக்கு இயக்கத்திறனை அளிக்கும் ஒரு சாதனம். இதன்மூலம் ஒளிப்படக்கருவியைக் கீழே இறக்கலாம்; மேலே உயர்த்தலாம்; இடப்பக்கம், வலப்பக்கம் நகர்த்தலாம். ஒரு சக்கர அடித்தளத்தின் மீது இதனை இயக்கலாம். இதனை பளுதூக்கி என்றும் கூறுவர்.

**camera tube: ஒளிப்படக் குழல்:** தொலைக்காட்சி ஒளிப்படக் கருவிகளில் ஒளியும் நிழலுமான ஒரு காட்சியை மின்னியல் தூண்டு விசைகளாக மாற்றுவதற்குப் பயன்படும் மின்னணுவியல் குழல்.

**campenile: மணிக்கூண்டு:** தூய திருக்கோயிலினின்றும் பிரிந்துள்ள மணிக்கூண்டு.

**camphor: கற்பூரம்/சூடம்:** ஒளியுருவான, விரைந்து ஆவியாகக்கூடிய வெண்ணிறப் பிசின், வெடிபொருள்கள், செல்லுலாய்டு, தொற்றுத் தடைமருந்துகள் தயாரிக்கப்படுகிறது.

**camshaft:** (தானி. எந்.) **முனைப்புச் சுழல் தண்டு:** வரிசையான முனைப்புச் சக்கரங்கள் கொண்ட ஒரு சுழல் தண்டு. இதிலுள்ள முனைப்புச் சக்கரங்கள் உந்துவண்டி எஞ்சின் ஓரதர்களின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் இடைவெளிகளில் அமைந்திருக்கும்.



சுழல் தண்டு


**cam vise:** (எந்). **முனைப்புக்குறடு:** இயக்கத்தின் சக்கரத்தின் சுற்று வட்டம் கடந்த முனைப்பு இயக்கத்தின் மூலம் திறக்கவும் மூடவும் கூடிய ஒருவகைப் பற்றுக் குறடு.

**can:** (விண்.) **ஏவுகணைக்கலம்:** ஏவுகணையை வைப்பதற்குரிய ஒரு காப்பு அல்லது கலம். இதன்

மூலம் அதன் சுற்றுச் சூழலைக் கட்டுப்படுத்தலாம்.

**canard airplane**: *(வானூ.)* **கேனார்டு விமானம்**: இது ஒருவகை விமானம். இது கிடைநிலை உறுதிப்பாடு உடையது. பிரதான ஆதார மேற்பரப்புகளுக்கு முன்னதாகவுள்ள மேற்பரப்புகளைக் கட்டுப்படுத்துகிறது.

**cancer**: *(நோயி.)* **புற்றுநோய்**: உடலின் உயிரணுக்களில் ஏற்படும் தாறுமாறான வளர்ச்சி.



புற்று நோய்

**candelabrum**: **கொத்து விளக்குத் தண்டு**: அழகிய மெழுகு வர்த்திக் கொத்து.

**candle foot**: *(மின்.)* **ஒளிர்வுத் திறன்**: ஒளிர்வுத் திறனின் ஓர் அலகு. ஒரு பிரிட்டிஷ் திட்ட அளவு மெழுகுவர்த்தி, ஓர் அடி தூரத்திலிருந்து அளிக்கும் ஒளியின் அளவு.

**candle mold stake**: *(உலோ.)* **மெழுகுதிரி முனை முளை**: ஒடுங்கிய கொம்புகளுடைய ஒரு அடைகல். இது தகட்டு உலோகத்தில்வளைவுகள் உண்டாக்கப் பயன்படுகிறது.

**candle power**: **திரி திறன்**: ஒளிரும் பொருள்களின் ஒளிரும் திறனை அளவிடுவதற்குப் பயன்படும் ஒளி அலகுக் கூறு.

**cane**: *(மர.வே.)* **பிரம்பு**: இருக்கைகளின் இருக்கைப் பகுதிகளுக்கும், முதுகுப்பகுதிகளுக்கும் பயன்படும் நெகிழ் திறமுடைய மெல்லிய பிரம்பு வகை. இது 18ஆம் நூற்றாண்டிலிருந்து பயன்படுத்தப்படுகிறது.

**cannel coal**: **எரிமூட்டு நிலக்கரி**, நிலக்கீலார்ந்த ஒருவகை நிலக்கரி. இது விறகுபோல் எரியக்கூடியது; இது சிறுசிறு கட்டிகளாக விற்பனை செய்யப்படுகிறது.

**cannon-bone**: *(உயி.)* **பாலுண்ணிப் பாத எலும்பு**: குதிரைக் காலின் அடிப்பாகத்தில் உள்ள நீண்ட உருண்டையான எலும்பு. இது மனிதனின் கை அல்லது காலின் மத்திய நீண்ட எலும்பை ஒத்ததாகும்.



பாலுண்ணி பாத எலும்பு

**canopy**: *(க.க.)* **விதானம்**: உருவச்சிலை, கல்லறை பலிமேடை, சாவடி ஆகியவற்றின் மேற்கட்டுமானம்.


**canopy switch**: *(மின்.)* **விதான விசை**: ஒரு மின்சார இணைப்பின் விதானத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு சிறிய விசை.

**cant**: *(மர.வே.)* **சாய்தளக் கட்டை**: சாய்தளமாக அமைக்கப்பட்ட ஒரு கட்டை. சாய்தளங்களையும், வளைவுகளின்றி கோணங்களையும் கொண்ட ஒரு வார்ப்படத்தையும் குறிக்கும்.

**canteen**: *(மர.வே.)* **உணவுக் கலப் பேழை**: சிற்றுண்டிச் சாலைகளில் உணவுக் கலங்களை வைப்பதற்குரிய அறைகளுடைய பேழை அல்லது பெட்டி.

வெட்டுக் கருவிகளை வைப்பதற்குரிய ஒரு பெட்டியையும் இது குறிக்கும்.


**cant hook**: **இரும்புக் கொக்கி**: வெட்டு மரங்களை உருட்ட உதவும் நீண்ட கைக்கோலின் நுனியிலுள்ள இரும்புக் கொக்கி. தொலைபேசிக் கம்பங்களை உருட்டுவதற்கு இது பயன்படுகிறது.



கொக்கி

**cantilever**: **பிடிமானம்**: சுவர்

களிலிருந்து கைபோல் நீண்டு பாரத்தினைத் தாங்கும் வகை.


பிடிமானம்

**cantilever spring** *(தானி;எந்.)* **பிடிமான விற்சுருள்** : ஒரு முனை அச்சுடன் பொருத்தப்பட்டு மறு முனை சட்டகத்துடன் பொருத்தப் பட்டுள்ள ஒரு விற்சுருள்.

**canting strip**: *(க.க.)* **சாய்வுப் பாட்டை**: கட்டிடத்திலிருந்து நீரை வெளியேற்றுவதற்கு உள்ள சுவர்த் தளவரி போன்ற ஓர் அமைப்பு.

**cap** : *(க.க.)***முகடு** : ஒரு சுவரின் முகட்டுக் கவிகை; கட்டிட உச்சி யின் சிற்ப வேலைப்பாடு அமைந்த பிதுக்கம்; வாயில் பலகணி ஆகிய வற்றின் மேற்கட்டை திருகாணி அல்லது மறையாணிகளின் அடிப் பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள சுழல் தண்டு தாங்கிகளின் மேற் கூம்பு.

அச்சுக்கலையில் பெரிய தலைப் பெழுத்தைக் குறிக்கும் சொல்.

**capacitance** : *(மின்.)* **கொண்மம்**: மின் தகையாற்றலுக்கும் அழுத்தத் திற்கும் உள்ள வீத அளவு.

**capacitive reactance** : *(மின்.)* **கொண்ம எதிர் வினைப்பு** : ஒரு கொண்மியின் வழியாகச் செல் லும் மாற்று மின்னோட்டத்திற் கும் தடைக்கும் உள்ள வீத அளவு.

**capacity** : *(மின்.)* **கொண்மைத் திறன்** : மின் ஏற்றம் மின் அழுத் தம்ஆகியவற்றின் விகிதம். இதனை "நிலை மின்னியல் கொண்மைத் திறன்" என்றும் கூறுவர்.

**capacitor** : *(மின்னி.)* **கொண்மி** : மின்னியல் உறைகலம். இது கொண்மம் உடையது; ஓர் எளிய கொண்மியில், மின் காப்பினால் பிரிக்கப்படும் இரு உலோகத் தகடு கள் அடங்கியிருக்கும்.

**capacitor input filter** : *(மின்.)* **கொண்மி உட்பாட்டு வடிப்பான்**: தனது உட்பாட்டுச்கு ஒரு கொண் மியைப் பயன் படுத்தும் ஒரு வடிப்பான்.

**capacitor motor** : *(மின்.)* **கொண்மி மின்னோடி**: பிளவு நிலை மின்னோடியின் ஒரு திருத்தப் பட்ட வடிவம். இதில் ஒருதொடர் கொண்மிகள் பயன்படுத்தப்படு கின்றன.

**capacity load** : **மின்னோட்ட அளவு** : மின்விசை ஆக்கப் பொறி யால் குறித்த காலத்தில் பாதுகாப் பாக வெளியேற்றப்படும் மின் னோட்டத்தின் அளவு.

**cape chisel** : *(உலோ.வே.)* **சிற் றுளி** : வரிப் பள்ளங்கள் அல்லது சாவிழிகள் வெட்டுவதற்குப் பயன் படும் குறுகிய அலகுள்ள சிற்றுளி.

**cape kennedy** : *(விண்.)* **கென் னடி முனை** : அமெரிக்காவில் ஃப்ளோரிடா மாநிலத்தின் கிழக் குக் கடற்கரையிலுள்ள முனை. இங்கு ஏவுகணைகளையும் விண் வெளிக்கலங்களையும் செலுத்துவ தற்கான விமானப் படைச் சோதனை மையம் உள்ளது. இதன் முந்தையப் பெயர் கேனவ ரால்முனை. முன்னாள் குடியரசுத் தலைவர் கென்னடியின் நினை வாகக் கென்னடி முனை என்று பெயர் சூட்டப்பட்டது.

**capillarity** : *(குளி.)* **நுண்புழை ஈர்ப்பாற்றல்** : மயிரிழை போன்ற நுண்துளையின் ஈர்ப்பொறிவாற் றல்.

**capillary attraction** : *(குளி.)* **நுண்துளை ஈர்ப்பாற்றல்.**

**capillary repulsion** : *(குளி.)* **நுண்துளை எறிவாற்றல்.**

**capillary action**: *(வேதி.)* **நுண் துளை வினை** : மயிரிழை போன்ற நுண்ணிய குழாய்களின் வழியே

திரவங்கள் செல்லும்போது ஏற்ற இறக்கத்தை உண்டாக்குகிற ஒட்டிணைப்பு மேற்பரப்பு விறைப்புக் கூட்டு வினைவாக்கம்.

**capillary tube**: (குளி.) **நுண்புழைக் குழல்**: குளிரால் உறைபதனம் ஊட்டும் பொருள் பாய்வதைக் கட்டுப் படுத்தப் பயன்படும் சிறிய விட்டமுடைய குழல்.

**capital** : (க.க.) **தூண் தலைப்பு** : அலைமேடை, சதுரத் தூண் அல்லது தூபியின் உச்சிப் பகுதி.

**capping** : (மர.வே.) **மூடுகை** : வேலைப்பாடமைந்த மரத்தின் மொந்தைப் பகுதியில் மூடியிடல் அல்லது தொப்பியிடல்.

**cap screw** : **தலையணித் திருகாணி** : ஒரு சுரையுடனோ சுரையின்றியோ பயன்படுத்தப்படும் முடிவாக்கம் செய்யப்பட்ட எந்திர மரையாணி.

**capstan** : (மின்.) **தோல் பட்டை இயக்கி** : தோல் பட்டையை இயக்கப் பயன்படும் ஒரு சக்கரம் அல்லது பீப்பாய்.

**cap stone** : (க.க.) **தலையணிக் கல்** : ஒரு கட்டுமானத்திற்கு தலையணியாக அல்லது மணிமுடியாகப் பயன்படுத்தப்படும் கல்.

**cap strip** : (வானூ.) **தலையணி சிம்பு** : ஓர் இறகின் ஆதாரப் பட்டிகையின் புறவிளிம்பிலுள்ள தொடர்ச்சியான உறுப்பு.

**capsule** : (விண்.) **விண்வெளிக் கூண்டு** : விண்வெளியில் சுற்றி வருவதற்குச் செலுத்தப்படும் கலத்தில் மனிதர் அல்லது விலங்கு இருப்பதற்கு ஏற்ற சூழலுடன் அமைக்கப்பட்டிருக்கும் கூண்டு வடிவக் கொள்கலம்.

**caption** : (அச்சு.) **தலைப்பு** : ஓர் அத்தியாயத்தின் அல்லது கட்டுரையின் மேலுள்ள தலைப்பு.

**captive balloon** : (வானூ.) **கட்டப்பட்ட ஆவிக்கூண்டு** : கட்டுப்பாடில்லாமல் பறந்துவிடாதபடி பூமியுடன் ஒரு வடத்தினால் பிணைக்கப்பட்ட ஓர் ஆவிக் கூண்டு.

**captive firing**: (விண்.) **சோதனை வெடிப்பு** : ஒரு முழு ஏவுகணையைச் சோதனை முறையில் வெடித்துப் பார்த்தல். 'இந்தச் சோதனை வெடிப்பின்போது உந்து விசையமைப்பு முழுமையாக இயங்குகிறதா எனச் சோதித்துப்பார்க்கப்படுகிறது.

**carat** : **மாற்று** : ஏறத்தாழ 3.2 குன்றிமணி நிறையுள்ள மணிக்கல் எடை.

**carbide tools** : **கார்பைடு கருவிகள்** : ஆதாரத்திற்காக எஃகுத் தண்டினுள் செருகப்பட்ட கார்பைடு முனைகளைக் கொண்ட கருவிகள். இவை உலோகவேலைப் பாடுகளுக்குப் பயன்படுபவை.

**carbohydrate** : (வேதி.) **கார்போஹைட்ரேட்** : கார்பன் ஹைட்ரஜன், ஆக்சிஜன் அடங்கிய ஒரு கூட்டுப்பொருள். இதில் ஹைட்ரஜனும் ஆக்சிஜனும் 2:1 என்ற விகிதத்தில் அடங்கியிருக்கும். முக்கியமான கார்போஹைட்ரேட்டுகளில் கார்பனின் அணுக்கள் அல்லது அணுக்களின் மடங்குகள் அடங்கியிருக்கும்.

**carbolic acid** : (வேதி.) **கார்பாலிக் அமிலம்** : இதனை ஃபினால் என்றும் அழைப்பர். கீலெண்ணெய் வடிப்பினின்று எடுக்கப்படும் இந்த நச்சுப் பொருள் தொற்றொழிப்புப் பொருளாகப் பயன்படுகிறது.

**carbon**: (வேதி.) **கார்பன் (கரியம்)** (1) கரிமப் பொருள்கள் அனைத்திலும் காணப்படும் உலோகத் தனிமம் (C).

(2) விளக்கு என்னும் மின்விளக்கில் பயன்படும் சரிமுனைக்கோல்.

(3) கனற்சியில் திடத் தனிம மாக இருக்கும் தனிமம்.

**carbon arc** : *(மின்.)* **கார்பன் சுடர்** : சுடர் விளக்குச் செயல் முறையில் உள்ளது போன்று இரு கார்பன் துருவங்களுக்கிடையில் தோன்றும் ஒளிவட்டப் பகுதி. இதில் ஒரு கார்பன் மின்முனை அல்லது காரீயக மின்முனை நிரப்பு உலோகத்துடனோ இல்லாமலோ பயன்படுத்தப்படுகிறது.

**carbon black** : **கார்பன் மை** : இயற்கை வாயுப் பிழம்பிலிருந்து படியும் அடர் கறுப்பு மை.

**carbon brush** : *(மின்.)* **கார்பன் தூரிகை** : பார்க்க தூரிகை.

**carbon button** : *(மின்.)* **கார்பன் பொத்தான்** : கார்பனால் செய்யப்படும் ஒரு பொத்தான். சிலவகைத் தொலைபேசிச் செலுத்திகளிலும், சிலவகைத் தடை மாற்றிகளிலும் தடை ஊடகமாகப் பயன்படுத்தப் படுகிறது.

**carbon contact** : *(மின்.)* **கார்பன் தொடு முனைகள்** : பார்க்க தொடு முனைகள்.

**carbon deposit** : *(தானி.)* **கார்பன் படிவு** : உந்து வண்டிகளில் உள்ளெரி அறையிலும், சில சமயம் ஓரதர்களையும், உந்து தண்டு வளையங்களையும் சுற்றிப் படியும் கார்பன். இது தரக் குறைவான பெட்ரோல், உராய்வு எண்ணெய் ஆகியவற்றினால் உண்டாகிறது.

**carbon di-oxide** : *(வேதி.)* **கார்பன்டையாக்சைடு** : ($CO_2$) கார்பன் எரிபொருள்கள் முழுமையாக உள்ளெரிவதால்உண்டாகும் பொருள். இது திரவ வடிவில் எஃகு நீள் உருளைகளில் கொண்டு செல்லப் படுகிறது. தீயணைப்புக்கு வாயு வடிவிலும், உலர் பனிக்கட்டி என்ற வகையில் திடவடிவிலும் பயன்படுகிறது.

**carbon disulphide** : *(வேதி.)* **கார்பன் டைசல்பைடு** : ($CS_2$) தூய்மையாக இருக்கும்போது இது நிறமற்ற திரவம்; விரைவில் ஆவியாகக்கூடியது; வெள்ளைப்பூண்டு போன்றகாரநெடியுடையது. கந்தகம், பாஸ்வரம், அயோடின், சோரிகை. கோந்து, பிசின், மெழுகு, கொழுப்பு முதலியவற்றைக் கரைப்பதற்கான கரைப்பானாகப் பயன்படுகிறது. கார்பன் பைசல்பைடு போன்றது.

**carbon filament** : *(மின்.)* **கார்பன் இழை** : வெண்சுடர் வீசி எரி கிற விளக்கின் இழை. இது கார்பனாக்கப்பட்ட ஒரு சரடு அல்லது இழையிலானது.

**carbon holder** : *(மின்.)* **கார்பன் பிடிப்பான்** : ஒரு சுடர் விளக்கில் கார்பன்களைப்பிடித்துக்கொண்டு ஊட்டுவதற்கான ஒரு சாதனம்.

**carbonization** : **கார்பனாக்கம்** : தரங்குறைந்த கார்பன் எஃகினை வெப்பப் பதனாக்குவதற்காக ஆக்கமைவு செய்தல். இதில், மரக்கரி, அல்லது இதற்கெனத் தயாரிக்கப்பட்ட ஒரு வாணிகப் பொருள் போன்ற கார்பனாக்கப் பொருளுடன் ஒரு கொள்கலத்தில் தரங் குறைந்த கார்பன் எஃகினைப் பொதிந்து வைத்து அதனைப் பல மணி நேரம் வரை 2000° ஃபா. வரைச் சூடாக்கி, பின்னர் அதனை மிக மெதுவாகக் குளிர வைக்கப் படுகிறது.

**carbonizing** : *(மின். பொறி.)* **கார்பனாக்குதல்** : ஒரு பொருளை ஒரு மூடிய கலத்தினுள் இட்டுத் தீவிரமாகச் சூடாக்குதல் மூலம் அதனை கார்பனாக ஆக்குதல்.

**carbon monoxide** : *(வேதி.)* **கார்பன் மோனாக்சைடு**: இது நிறமற்ற,

மணமற்ற, சுவையற்ற ஒரு வாயு; கொடிய நச்சுத் தன்மை வாய்ந்தது. கார்பன் எரிபொருள்களின் முழுமையற்ற உள்ளெரிவால் இந்த வாயு உண்டாகிறது.

**carbon paper**: **படிவுத் தாள்**: மெழுகையும் கார்பனையும் சேர்த்து கலவை பூசப்பட்ட, படியெடுக்க உதவும் மெல்லிய தாள்.

**carbon piles** : *(மின்.)* **கார்பன் மின் நிரைகள்** : மின்னோட்டம் விளைவிப்பதற்கான வகை மாறி அடுக்கி வைக்கப்படும் கார்பனாலான தகடுகளின் நிரை. இவை மிக அதிக மின்னிறக்கச்சோதனை தொகுதியில் தடை அலகுகளாகப் பயன்படுகிறது.

**Carbon remover** : *(தானி.)* **கார்பன் அகற்றி** : கையினால் பயன்படுத்துவதற்கு அல்லது பொறியமைவில் பயன்படுத்துவதற்குப் பயன்படும் உரசித் தேய்த்து அகற்றும் ஒரு கருவி; கார்பன் படிவுகளை அகற்றுவதற்கு பெட்ரோலுடன் கலந்து பயன்படுத்தப்படும் ஒரு திரவம்.

**Carbon rheostat** : *(மின்.)* **கார்பன் தடைமாற்றி** : தடையாகச் செயற்படும் கார்பன் தகடுகளைப் பயன்படுத்தும் ஒரு தடைமாற்றி.


**Carbon steel** : **கார்பன் எஃகு** : அதிவேக எஃகு அல்லது உலோகக் கலவை. எஃகு அல்லாத பிற கருவி எஃகுகளைக் குறிக்கும் சொல். 50 புள்ளி கார்பனுக்குக் கீழ்ப்பட்ட இது கடினப்படவில்லை என்றால், அது குறைந்த கார்பன் எஃகு என்று அழைக்கப்படும். 75 புள்ளி கார்பனால் கடினமாக்க முடியும். எனினும், சிறந்த கார்பன் எஃகில் சுமார் 100 புள்ளி கார்பன் அடங்கியிருக்கும்.

**Carbon tetrachloride**: *(வேதி.)* **கார்பன் டெட்ராகுளோரைடு**: இது எளிதில் தீப்பற்றாத ஒரு திரவம். துப்புரவு செய்யும் பணிகளில் எண்ணெய், பிசுக்கு போன்றவற்றைக் கரைப்பதற்கு ஒரு கரைப்பானாகப் பயன்படுத்தப்படுகிறது. பல வகைத்தீயணைப்புக் கருவிகளிலும் தீயணைப்புப் பொருளாகவும் பயன்படுகிறது.

**Carborundum** : **தோசைக் கல்** : சிலிக்கன் கார்பைடு போன்ற உராய்வுப் பொருள்களைக் குறிக்குல் ஒரு வாணிகப் பொருள்.

**Carboy** : *(வேதி.)* **கண்ணாடிப் புட்டி** : மூங்கிற்கூடை அணைப்புடைய பெரிய உருண்டைக் கண்ணாடிப் புட்டி. இது அமிலங்களின் கொள்கலமாகப் பயன்படுகிறது. இதனை ஒரு மரப்பெட்டிக்குள் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள்.

**Carburetor** : *(தானி; எந்.)* **எரி-வளி கலப்பி**: உள் வெப்பாலையில் எரிபொருளாவியோடு காற்றைக் கலக்கச் செய்யும் அமைவு.



எரி-வளி கலப்பி

**carburetor barrel**:*(தானி எந்.)* **எரி-வளி கலப்பி உருளை**: எரி-வளி கலப்பியில் உறிஞ்சும் காற்றறையைச் சுற்றியிருக்கும் உலோகப் பகுதி. அடைப்பானிலிருந்து விளிம்புப் பட்டைக்குச் செல்லும்பாதை முழுவதற்கும் ஒரு சுவராக அல்லது உருளையாக அமைந்திருக்கும்.

**Carburetor bowl** : *(தானி.எந்.)* **எரி-வளி கலப்பிக் கலம்** : எரி-வளி கலப்பியில் திரவ பெட்ரோலை அல்லது எரிபொருளைத் தேக்கி வைத்திருக்கும் கொள்கலப்பகுதி.

**Carburetor float** : (தானி. எந்.;) **எரி-வளி கலப்பி மிதவை** : இது காற்றுப் புகாத ஒரு உலோகக் கொள்கலம். இது எரி-வளி கலப்பிக் கலத்தில் எரிபொருளின் மீது மிதந்து கொண்டிருக்கும். இது பிரதான எரிபொருள் குழாயிலிருந்து பெட்ரோல் பாய்வதைக் கட்டுப்படுத்துகிறது.

**Carburizing** : **எரி-வளி கலப்பி** : இரும்பை ஆதாரமாகக் கொண்ட உலோகக் கலவைகளை, கார்பன் போன்ற பொருள்களுடன் இணைத்து உருகுநிலைக்குக் கீழே சூடாக்குவதன் மூலம் கார்பனுடன் இணைத்தல்.

**Carburizing flame** : **எரி-வளி கலப்புப் பிழம்பு** : வாயுப் பற்ற வைப்புப் பிழம்பு. இதில் நடுநிலைப் பிழம்பினை உண்டாக்குவதற்குத் தேவைப்படுவதைவிட அதிகமான கரிய எரி வாயு அடங்கியிருக்கும்.

**Car card** : **கார் விளம்பரம்** : கார்கள், பேருந்துகள் முதலியவற்றில் பயன்படுத்தப்படும் விளம்பரங்கள்.

**carcase** : **கார் சட்டம்** : வீடு கப்பல் முதலியவற்றின் கூண்டுச் சட்டம்.

**carcinogen** : (நோயி.) **புற்றுத் தூண்டு பொருள்** : புற்று நோய் வளரத் தூண்டுதல் செய்யும் பொருள்.

**Carcinoma** : (நோயி.) **எலும்புத் தசைப் புற்று** : எலும்புத்தசை, உயிரணுக்கள், உள்ளுறுப்புகள் ஆகியவற்றில் உண்டாகும் புற்று நோய். இதில் சுற்றுப்புறத் திசுக்களைப் புறத்தே தள்ளிவிட்டு, அதில் புற்று தானே வளர்கிறது. இதனால் தாறுமாறான தசை வளர்ச்சி உண்டாகிறது.

**cardboard** : (அச்சு.) **தாள் அட்டை** : தரங்குறைந்த கனத்த தாள் முதல் சீட்டுகள் வெட்டி எடுப்பதற்கான கெட்டித் தாள் வரைப் பல்வேறு கனத்த விறைப்பான காகித அட்டைகளைக் குறிக்கும் சொல்.

**card compass** : (வானூ.) **முகப்புத் திசைகாட்டி** : ஒருவகை காந்தத் திசைகாட்டி. இதில், சுழல் முனை மீது திருகி இயங்கும் அட்டையுடன் இணைந்த ஒரு காந்தத் திசைகாட்டி. இந்த அட்டைகளில் திசைகள் குறிக்கப்பட்டிருக்கும்.

**card-cut**: **முகப்புச் சித்திரைவேலை**: சீன பாணியிலான ஒருவகை பின்னல்வேலைப்பாட்டமைப்பு.


**carding** : **சிக்கெடுப்பு** : சணல் கம்பளி இழைகளை நூற்பதற்கு முன்னர் அவற்றிலுள்ள சிக்கினை எடுத்து ஆயத்தம் செய்தல்

**cardioid** : (மின்.) **நெஞ்சுப்பை வளைவு** : நெஞ்சுப்பை வடிவான விளைவு.

**Carnot's cycle**: **கார்னாட் சுழற்சி**: துல்லியமான பொறிச் சுழற்சி அல்லது தொடர் வெப்ப மாறுதல். இந்த முறையினை கார்னாட் என்ற ஃபிரெஞ்சு விஞ்ஞானி கண்டுபிடித்தார்.

**Carnot's principle** : (இயற்.) **கார்னாட் தத்துவம்** : ஓர் அனல் பொறியினால் செய்யப்பட்ட வேலையின் அளவு, அதன் வெப்ப அளவை மட்டுமே பொறுத்தது. இது பயன்படுத்தப்படும் இடைக்காரகியின் சார்பற்றது.

**Carotid artery** : (உட.) **தலைத் தமனி** : தலைக்குக் குருதியைக் கொண்டு செல்லும் இருபெரும் தமனிகளில் ஒன்று.




**Carpentry** : **தச்சு வேலை** : கட்டிடங்கள், படகுகள்

முதலியவற்றில் பயன்படுத்தப்படுவது போன்ற வெட்டு மரங்களை வெட்டி ஒருங்கிணைக்கும்வேலைப்பாடு.

**Carpet strip** : *(க.க.)* **தளப் பட்டை** : கதவுக்கு அடியில் தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு நீள்வரிப்பட்டை.

**carriage** : *(க.க.)* **தாங்கு சட்டம்:** மரப் படிக்கட்டின் படிகளைத் தாங்கி நிற்கும் மரச்சட்டம் அல்லது எஃகுத் துலாக் கட்டை. கடைவானிலுள்ள ஏந்தி என்ற பகுதி. இது பொறியின் சுழலும் பகுதிகளிலுள்ள உராய்வு தாங்கி உருளைகளின் தொகுதிக்கும், இறுதித் தொகுதிக்குமிடையே நகர்கிறது. இதனைக் குறுக்காகவும் நெடுக்காகவும் நகருமாறு கட்டுப் படுத்தலாம்.

**Carriage bolt**: **தாங்கு சட்ட மரையாணி**: நீள் உருளை வடிவுடைய அல்லது பொத்தான் போன்ற தலையுடைய கறுப்பு மரையாணி. இதன் கழுத்து சதுரமாக இருக்கும். இதனால் மரையாணியை முடுக்கும்போது அது திரும்பிவிடாமல் தடுக்கப்படுகிறது.


மரையாணி

**Carrier wave** : **ஊர்தி அலை வரிசை** : தொலைக்காட்சி தூண்டு விசைகளை அனுப்புவதற்கான வானொலிஅலைவரிசை. தொலைக்காட்சியில், ஒளிக்காகவும், ஒலிக்காகவுமாக இரண்டு அலைவரிசைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**Carron oil** : *(வேதி.)* **கலப்பு எண்ணெய்** : ஆளிவிதையும் சுண்ண நீரும் கலந்த ஒரு கலவைத் தைலம். இது தீப்புண்களை ஆற்றக் கூடியது.

**Carrying capacity** : **ஏற்பளவு** : ஒரு மின் கடத்தி மூலம் பாதுகாப்பாக மின்னோட்டத்தைச் செலுத்தக்கூடிய மிக அதிக அளவு. இதனை 'ஆம்பியர்' என்ற மின்னோட்ட அலகில் குறிப்பர். பல்வேறு வடிவளவுகளிலுள்ள கம்பிகளின் ஏற்பளவுத் திறன் தேசிய மின்னியல் அட்டவணையில் தொகுக்கப்பட்டுள்ளது.

**carter process** : *(வேதி.)* **கார்ட்டர் செய்முறை** : அணுவாக்கச் செய்முறை ஒன்றின் மூலம் வெள்ளீயம் தயாரிக்கும் முறை. இது பழைய டச்சுச் செய்முறைப்படி தயாரித்த வெள்ளீயத்தின் வேதியியல் பண்புகளையே கொண்டிருக்கும்.

**cartoon** : *(அச்சு.)* **வரைபடம்** : வண்ணப்படம் எழுதுதற்கு மாதிரியாகத் தடித்த தாளில் எழுதப் படும் வரைபடம்.

**car-touche** : *(க.க.)* **சுருள்வளையம்** : அரசர் பெயர்களையும் தெய்வப் பெயர்களையும் கொண்டுள்ள நீள்வட்ட வளையம்.

**cartridge fuse** : *(மின்.)* **வெடியுறை உருகி** : உருகி வெடிக்கும் போது சுடரைக் கட்டுப்படுத்துதற்காக ஒரு காப்புக் குழலில் அடைத்து வைக்கப்படும் ஓர் உருகி.

**carving** : **செதுக்கு வேலைப்பாடு** : மரத்தில் அல்லது தந்தத்தில் இழைக்கப்படும் செதுக்குச் சித்திர வேலைப்பாடு.

**case**: **புத்தக மேலட்டை**: *(1)* புத்தகத்தை அச்சிட்டுத் தைத்த பிறகு அதற்குப் போடப்படும் மேலட்டைப்பகுதி.

*(2)* அச்சுக்கலையில் அச்சுப் பொறுக்குத் தட்டு.

*(3)* ஒரு வார்ப்படத்தின் அரைச் சாந்துத் தோரணை.

**case hardening** : *(நோயி.)* **கரிய கக் கடும்பதப்படுத்தல்** : பரப்பில் கரியக மூட்டுவதன் மூலம் இரும் பைக் கடும்பதப்படுத்துதல்.

**casein** : *(வேதி.)* **பால் புரதம்** : உறைபாற் கட்டியின் அடிப் படைக் கூறாக அமைந்துள்ள பால் புரதம். காலிக்கோ அச்சிடும் முறையில் பயன்படுகிறது. நீர் வண்ணங்கள், வண்ண மெரு கெண்ணெய்கள், தோல் பதனிடல் முதலியவற்றில் ஒட்டுப் பசையா கப் பயன்படுகிறது.

**casein plastics** : *(வேதி.)* **பால் புரதக் குழைமங்கள்** : பால் புரதத் திலும் மற்றப் புரதங்களிலும் உள்ள அடிப்படையான மூலப் பொருள். இது தகடுகளாகவும், சலாகைகளாகவும், குழாய்களாக வும் வட்டுருளைகளாகவும் தயா ரிக்கப்படுகிறது. இது பொத்தான் கள், பால் காம்புகள் புதுமைப் பொருள்கள், அணிமணிகள், முத லியன தயாரிக்கப் பயன்படுகிறது.

**casement window** : *(க.க.)* **வடக்குப் பலகணி** : உட்புறமாக அல்லது வெளிப்புறமாகத் திறக் கும் வகையில் அமைந்த மடக்குப் பலகணி வெளிப்புறமாகக் காற்று, மழை, வெப்பக் காப்புடையதாக இருக்கும்.

**case rack** : *(அச்சு.)* **அச்சுத்தட்டு அடுக்குச் சட்டம்**: அச்சகப் பொறுக் குத் தட்டு வைப்பதற்குப் பயன் படும் ஓர் அடுக்குச் சட்டம்.

**Casing**: *(க.க.)* **கவிகை** : ஒரு சன்னலை அல்லது கதவினைச் சுற்றியுள்ள கவிகை அமைப்பு.

**casket** : **பேழை** : விலையுயர்ந்த பொருள்களை வைப்பதற்குரிய சிறிய பெட்டி அல்லது பெட்டகம்.

**caslon** : *(அச்சு.)* **காஸ்லான் அச் சுருப்படிவம்** : வில்லியம் காஸ்லான் என்பவர் உருவாக்கிய அச்சுருப் படிவம்.

**cassiterite** : *(உலோ.)* **காசிட்ட ரைட்** : வெள்ளீயம் எடுக்கப்படும் கனிமப் பொருள்.

**cast** : *(அச்சு.)* **வார்ப்பட அச்சு** : வார்த்து உருவாக்கப்பட்ட அச்சு உருவம்.

**cast brass** : *(உலோ.)* **வார்ப்புருப் பித்தளை** : இது ஓர் உலோகக் கலவை. இதில் 65% செம்பும், 35% துத்தநாகமும் கலந்திருக்கும். கடினத்தன்மையை அதிகரிப்பதற் காக இது சிறிதளவு சேர்க்கப்படு கிறது.

**cas'tellated** : *(பொறி.)* **அரண் மாடம் போன்ற** : அரண்மாளிகை போன்று கோட்டை கொத்தளக் கூட கோபுரங்களையுடைய கட்ட மைப்பு.

அரண்மாடம் போன்ற அமைப் புடைய ஒரு மரையாணி. இதன் நீளத்தில் ஒரு பகுதி, கடையாணி களை ஏற்பதற்கு ஏற்றவாறு வளைக்கப்பட்டு, துளை விளிம்பும் அமைக்கப்பட்டிருக்கும்.

**caster** : *(தானி:எந்.)* **சாய்வுப் பொறிப்பு** : இருசின் இணைப்புக் கொண்டியின் தலைப்பக்கம் கீழ் முனையின் பின்புறமாக இருக்கு மாறு அமைத்து, நூற்புக்கதிரின் உடற்பகுதிக்கு 2°-3° சாய்வாக இருக்குமாறு இருசினை அமைக் கும் விளைவினை இது குறிக்கிறது. இந்த விளைவின் மூலம் முன் சக்க ரங்கள். கார் செல்லும் திசை யிலேயே ஒருங்கிசைவதற்கு வழி உண்டாகிறது.

**caster cup** : **சாய்வுப் பொறிப்புக் குவளை** : ஒரு சாய்வுப் பொறிப் பின் கீழ் வைக்கப்பட்டுள்ள கண் ணாடி அல்லது மரக் குவளை. இது தளத்தைப் பாழ்படுத்தி விடாமல் தவிர்ப்பதற்காக ஒரு விரிந்த பரப்

பளவில் ஒரு அறைகலன் நிற்கு மாறு அதன் பளுவைப் பரவலாக்கு வதற்கு உதவுகிறது.

**casting** : (வேதி.) **வார்ப்பு** : களி மண்ணிலிருந்து வார்ப்படங்களில் மட்பாண்டங்கள் செய்யும் முறை. உலோகக் கலையில் திரவ நிலை யிலுள்ள உலோகத்தை வார்ப்படத் தில் ஊற்றி உலோகப் பகுதிகளை உருவாக்குதல். இயைபியக்கத்திற்கு உள்ளாக்கப்பட்ட பிசினைத் திரவ வடிவில் வார்ப்படத்தில் ஊற்றிக் கெட்டியாக்குதல்.

**casting copper** : (உலோ.) **வார்ப்புச் செம்பு:** இது மின்பகுப்புச் செம்பையும், ஏரிப் படுகையில் கிடைக்கும் செம்பையும் விடத் தரத்தில் குறைந்தது. இது பல் வேறு செம்புக் கனிமங்களிலிருந் தும், பித்தளை வார்ப்படத் தொழிற் சாலைகளில் துணைப் பொருளாகவும் பெறப்படுகிறது.

**casting off** : (அச்சு.) **வார்ப்புப் பகுப்பீடு**: பக்கங்களாகப் பகுப்பீடு செய்வதை அளவீடு செய்வதற் கான அளவீட்டுமுறை.

**casting strains** : (உலோ.) **வார்ப்பு இழுவிசை** : வார்ப்படத் தில் குளிர்விக்கும் போது ஏற்படும் சுருக்கத்தால் உண்டாகும் விளைவு.

**casting up** : (அச்சு.) **வார்ப்புக் கணிப்பு** : அச்சுக்கோப்புக்கான செலவினைத் தீர்மானிப்பதற்காக அச்சுக்கோப்பின் அளவை அள விடுதல்.

**cast iron** : **வார்ப்பிரும்பு** : கரிமம், பசைமம் முதலிய கரிய வகைகளை எஃகில் சேர்ப்பதிலும் மிகுதியாகச் சேர்ப்பதால் மீண்டும் வேலைப் பாட்டுக்கு உதவாத நிலையுடைய வார்ப்பட இரும்புக் கலவை.

**cast iron boiler** : **வார்ப்பிரும்புக் கொதிகலன்** : வார்ப்பிரும்பினால் கிடைமட்டத்திலோ செங்குத்தா கவோ உருவாக்கப்படும் கொள் கலம். குறைந்த அழுத்த நீராவி அல்லது வெந்நீர் தயாரிக்க இது பயன்படுகிறது. சிறிய வடிவளவி லான கொதிகலன்கள் வட்ட வடி வளவிலான நெருப்பு வைக்கும் கணப்புத் தட்டுடனும், இணைப் புத் தட்டுகளுடனும் இணைக்கப் பட்ட கிடைமட்டப் பகுதியுடனும் தள்ளு காப்புகளுடனும் அமைந் திருக்கும். பெரிய வடிவளவிலான வை பெரும்பாலும் செவ்வக வடி வில் செங்குத்தாக அமைந்திருக் கும். இந்தப் பகுதிகளை நீராவி அல்லது நீர் செல்வதற்கான தள்ளு காம்புகளுடன் உட்புறமாக இணைத்திருப்பார்கள்.

**cast phenolic resins** : (வேதி.) (குழை.) **வார்ப்புக் கரியப் பிசின்** : கரியகக்காடி, ஃபார்மால்டிஹைடு ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப் படும் ஒரு வகைப் பிசின். இது எளிதில் தீப்பற்றுவதில்லை. இது எந்திரத்தின் உதவியால் எளிதில் வினையாற்றக் கூடியது. இது, சேண அணை துணிகள், அலங் காரப் பொருள்கள், ஒளிரும் வண் ணங்கள் முதலியவை தயாரிக்கப் பயன்படுகிறது.

**cast resinoids** : (குழை.) **வார்ப் புப் பிசின் பொருள்கள்** : வார்ப்பட முறை மூலமாக உருவாக்கப்படும் பிளாஸ்டிக் பொருள்கள்.

**cast steel**: (எந்.) **வார்ப்பு உருக்கு**: வார்ப்பட முறை மூலமாக தேவை யான வடிவத்தில் உருவாக்கப் படும் எஃகு.

**Cat** : **கோக்காலி** : இரு முக்காலி. இணைந்த ஒரு கோக்காலி. இதில் நெருப்பில் சூடாக்குவதற்காகப் பண்டம் பாத்திரங்களைத் தாங் கும் ஒரு முக்காலி மேற்பகுதியில் அமைந்திருக்கும்.

**Catalpa** : *(மர.வே.)* **காட்டால்பா மரம்** : நெஞ்சுப்பைபோன்ற இலைகளையும், ஊது கொம்பு போன்ற மலர்களையும் உடைய ஒருவகை மரம். இதனை அவரை என்றும், சுருட்டுமரம் என்றும் அழைப்பர். இதன் வெட்டுமரம் மென்மையானது; சொரசொரப் பானது. ஆயினும், மண்ணுடன் இணைந்திருக்கும் போது நெடு நாட்களுக்கு உழைக்கக்கூடியது. இதனை, கம்பங்கள், ஆதாரக்கட்டைகள் தயாரிக்கப் பயன்படுத்து கிறார்கள்.

**cataract** : *(நோயி.)* **கண்புரை நோய்** : முதுமை காரணமாகக் கண்ணின் விழித் திரையில் வெண் படலம் ஏற்படுவதால் பார்வை மங்குதல்.

**catalyst**: *(வேதி.)* **வினையூக்கி**: தான் எவ்வித மாறுதலோ மாற்றமோ அடையாமல் ஒரு வேதியியல் மாற்றத்தை உண்டாக்குவதற்குத் துணை செய்கிற ஒரு பொருள்.

பிளாஸ்டிக்கில் வேதியியல் வினையைத் தூண்டிவிடுகிற ஒரு திரவப் பிசினுடன் அல்லது பிசின் கூட்டுப் பொருளுடன் சேர்க்கப் படும் ஒரு வேதியியல் பொருள். இது மூலக்கூறுகளை ஒருங்கிணைத்து ஒரு சங்கிலி போல் பிணைக்கும். வினை முடிந்ததும் பிசின் கெட்டியாகிவிடும்.

**catapult**: *(வானூ.)* **எறிவிசைப் பொறி**: கப்பல் தளத்திலிருந்து ஆகாய விமானத்தைப் பறக்கச் செய்வதற்கான பொறியமைப்பு.

**catch basin**: **நீர்தேக்கக் குழி**: சாக்கடையில் கசடு பிரித்து நிறுத்தும் குழியமைவு.

**catch line**: *(அச்சு.)* **கொளுவரி**: ஒரு விளம்பரத்தில் பிரதான வரிகளைக் கட்டிப் பிணைப்பதற்குத் தேவையான ஒரு வரி. எனினும் இதில் தேவையற்ற சொற்களும் அடங்கியிருக்கும்.

**catenary**: *(கணி.)* **சங்கிலி வளைவு**: செங்குத்துக் கோட்டில் அமையாத இரண்டு குற்றுக்களிலிருந்து தளர்த்தியாகத் தொங்கும் ஒரு சீரான சங்கிலியினால் ஏற்படும் நெளிவு.

**cathead** ; *(எந்.)* **கேட்ஹெட்** : ஒரு சுழல் தண்டுடன் பொருத்தப்பட்டுள்ள ஒருவளையம். குதிகால் இல்லாத அடுக்குத் திருகுகள்மூலம் இந்த வளையம் இணைக்கப்பட்டிருக்கும். இது ஒரு நிலையான ஆதாரத்தினால் வேலைப்பாட்டில் குறி எதுவும் ஏற்படாமல் தடுக்கிறது.

**cathode follower** *(மின்.)* **எதிர் முனைப் பின்னோடி** : ஒரு சுற்று வழியல்லாத எதிர்முனை தடுப்பானின் குறுக்காக மின்விசையை எடுத்துச் செல்லும் மின்பெருக்கி.

**cathode rays** : *(மின்.)* **எதிர்மின் கதிர்கள்** : மின்வெடி நிகழும் காற்றொழி குழலின் எதிர்மின் வாயிலிருந்து செல்லும் எதிர்மின் ஆற்றல் செறிவற்ற துகள்களின் மின்னோட்டம்.

**cathode-ray screen** : **எதிர்மின் கதிர்த் திரை** : எதிர்மின் கதிர்க் கொடியைத் திருப்பி ஒளியியக்கத் திரை மீது விழச்செய்ய உதவும் அமைவு.

**cathod-ray tube** : *(மின்னி.)* **எதிர்மின் முனைக் கதிர்க்குழல்** : எதிர்மின் கதிர்க் கொடியைத் திரும்பி ஒளியியக்கத் திரைமீது விழச்செய்யும் ஒரு மின்னணுவியல் குழல்.

**cation**: *(மின்.)* **எதிர்க்குறையணு**: ஒரு மின்கலத்தில் எதிர்மின் முனையில் தோன்றும் தனிமம் அல்லது நேர்மின் அயனி.

**catwalk :** (வானூ.) **ஒடுங்கு பாதை :** கட்டிறுக்கமான விண் கலத்தின் அடிக்கட்டை நெடுகி லும் உள்ள ஒடுங்கிய நடை பாதை.

**cat-whisker :** (மின்.) **இழைத் தந்தி :** கம்பியில்லா உருமணி ஒலி வாங்கிக் கருவியில் வேண்டியவாறு அமைத்துக் கொள்ளக் கூடிய இழைத் தந்தி.

**caul :** (பட்.) **வளைதண்டு :** ஒரு வளைவு மேற்பரப்பு வடிவில் மேலோட்டுப் பலகையாக அமைக் கப் பயன்படும் ஒரு கருவி.

**caulicuius :** (க.க.) **தூண் தண்டு :** கொரிந்திய பாணியிலுள்ள தூண் தலைப்பில் முதன்மையான தண்டு களில் ஒன்று.

**caulking : நீர்காப்புச் செய்தல் :** பலகை மூட்டுக்களை நீர்க்காப் புடையதாகச் செய்தல்.

நார்க்கயிறு - உருகிய நிலக்கீல் ஆகியவற்றைக் கொண்டு பலகை களின் சந்திப்பு இடைவெளியை அடைத்து நீர் புகாதவாறு செய் தல்.

**caustic soda :** (வேதி.) **கடுங் காரத் தீயதை :** (NaOH) சோடி யம் ஹைடிராக்சைடு — பஞ்சாலை களில் தூய்மைப்படுத்துவதற்கும் ஆடைகளைத் தூய்மை செய்வதற் கும் பயன்படும் பொருள்.

**cavetto :** (க.க.) **குழிவார்ப்பு :** கால் வட்ட வடிவமான உட்குழி வான வார்ப்படம்.

**cavil : குழிவுச் சம்மட்டி :** ஒரு முனை மங்கலாகவும் ஒரு முனை உட்குழிவாகவும் உள்ள ஒரு வகைக் கனமான சம்மட்டி, வடி சுரங்கங்களில் கற்களை வடி வமைப்பதற்குப் பயன்படுகிறது.

**cavitation:** (விண்.) **நீர்மக்குமிழ்:** மிகக் குறைந்த அழுத்த நிலையில் ஒரு பாயும் திரவத்தில் காற்றுக் குமிழிகள் உண்டாதல்.

**cavity :** (குழை.) **உட்குழி :** எந் திரத்தைப் பயன்படுத்தி அல்லது பல்வெட்டுச் சக்கரத்தின் மூலம் வார்ப்படத்தில் செய்யப்படும் குழிவுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, "ஒரே உட்குழிவு அல் லது பல உட்குழிவுகள்" கொண்ட வார்ப்படங்கள் தயாரிக்கப்படுகின் றன.

**cavity resonator :** (மின்.) **புழை ஒலியதிர்வி :** ஒரு குறிப்பிட்ட அலை வெண்ணில் இசைவிப்பு செய்யப்பட்ட மின் சுற்றுவழி யாகச் செயற்படும் ஓர் உலோக உட்புழை.

**cedar chest : தேவதாரு பேழை :** வீடுகளில் பயன்படுத்தப்படும் பல் வேறு வடிவளவுகளிலுள்ள ஒரு வகைப் பேழை. இதில் கம்பளி ஆடைகளைப் பல மாதங்கள் கெடாமல் பாதுகாப்பாக வைக்க லாம்.

**cedilla :** (அச்சு.) **ஒலிக் குறியீடு:** 'சி' (C) என்ற எழுத்தின் கீழ் இடப்படும் ஒலி வேறுபாட்டுக் குறியீடு.

**ceiling :** (வானூ.) **விமான மேல் வரம்பு :** விமானம் பறக்கக் கூடிய உயரத்தின் எல்லை.

**ceiling balloon :** (வானூ.) **மேல் வரம்பு ஆவிக்கூண்டு :** சுதந்திர மாக மேலேறிச் செல்லும் ஒரு சிறிய ஆவிக்கூண்டு. இது மேலே றிச் செல்லும் வேகத்தை அறிந்து கொள்ளலாம். விமானம் பறக்கக் கூடிய உயரத்தின் மேல் எல்லை யை இதன் மூலம் அறுதியிடலாம்.

**ceiling - height indicator:** (வானூ.) **மேல் வரம்பு உயரங் காட் டுங் கருவி :** மேல் முகட்டின் மீது ஒளி நிழல் வடிவங்களைப் படிய

வைக்கும் கருவியினால் உண்டாக்கப்பட்ட ஒளிரும் திட்டினை ஒரு குறிப்பிட்ட நிலையிலிருந்து பார்க்கும்போது கிடை நிலையிலிருந்து அந்தத் திட்டின் உயரத்தை அளவிடக்கூடிய ஒரு சாதனம்.

**ceiling joist** : (க.க.) **முகட்டுத் தூலக் கட்டை :** முகட்டில் தாங்கி நிற்கும் மரத்தினாலான குறுக்குக் கட்டை. இது வரிச்சல், சாந்துக் கலவை போன்றவற்றின் மூலம் முகட்டுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

**ceiling projector :** (வானூ.) **மேல் வரம்பு ஒளியுருப்படிவக் கருவி:** ஒரு மேகக் கூட்டத்தின் அடியிலுள்ள ஒளிரும் மண்டலம் ஒன்றை உண்டாக்கும் ஓர் ஒளியுருப்படிவக் கருவிக்கு மேலே மேகக் கூட்டத்தின் அந்தப் பகுதியின் உயரத்தை நிருணயிப்பதற்கு இது பயன்படுகிறது.

**celestial guidance** : (விண்.) **விண்வெளி வழிகாட்டி** : விண்ணகப் பொருள்களைப் பொறுத்து ஏவுகணையை அல்லது வேறு கலத்தை வழிகாட்டிச் செலுத்தும் அமைவு.

**celestial mechanics** (விண்.) **விண்ணக எந்திரவியல் :** ஈர்ப்புப் புலங்களின் பாதிப்பின் கீழ் விண்ணகப் பொருள்களின் இயக்கங்களை ஆராய்தல்.

**cell** : (மின்.) **மின்கலம்** : மின் ஆற்றல் உண்டாகும் மின்கல அடுக்கில் அல்லது வேதியியற் செயற்பாட்டினை நேர்மாறாகத் தாக்கக்கூடிய மின்கல அடுக்கின் ஒற்றை அலகு.

**cellar** : (க.க.) **நிலவறை :** ஒரு கட்டிடத்தின் முக்கியப் பகுதிக்கு அடித்தளத்திலுள்ள அறை அல்லது அறைகள். இதில் வெப்பமூட்டும் சாதனமும் அதன் துணைக் கருவிகளும் வைக்கப்பட்டிருக்கும். பொதுவாகத் தரைமட்டத்திலிருந்து தாழ்ந்த மட்டத்தில் முழுவதுமாக அல்லது பகுதியாக நிலவறை தாழ்ந்திருக்கும்.

**cellaret** : **புட்டிப் பெட்டி** : புட்டிகள் வைப்பதற்கான ஒரு இழுப்பறைப் பெட்டி.

**cellophane** : (வேதி.) **செலோஃபேன்** : மரப்பசைச் சத்தினின்றும் செய்யப்படும் பளிங்கு நிறத் தாள் போன்ற பொதிபொருளின் வாணிக உரிமைப் பெயர்.

**cellule :** (வேதி.) **கண்ணறை அல்லது சிற்றறை** : ஒரு விமானத்தில், இறகுகளின் கட்டமைப்பு முழுவதும் உடற்பகுதியின் ஒரு புறமுள்ள இறகின் தாங்கணைவும் அமைந்துள்ள பகுதி.

**cellulith** : **மரக்கூற்றுப் பொருள்** : மரக்கூழை ஒரு சீரான பிண்டமாகத் திரட்டி, பின்னர் அதனை உலரவைப்பதன் மூலம் இது தயாரிக்கப்படுகிறது. இதில் மரத்தில் செய்வது போன்று வேலைப்பாடுகள் செய்யலாம். இது வன்கந்தகத்திற்கு மாற்றுப் பொருளாகப் பயன் படுத்தப்படுகிறது.

**celluloid :** (வேதி.) **செல்லுலாய்டு/நெகிழ்பொருள்** : கற்பூரத்தையும் பருத்தி இழைமத்தையும் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு கலவை நெகிழ்பொருள். மிக எளிதில் தீப்பற்றக் கூடியது.

உள் இழைப்பு வேலைப்பாடுகளில் தந்தத்திற்குப் பதிலாகப் பயன்படும் தந்தம் போன்றநெகிழ்பொருள்.

**cellulose** : (வேதி.) **செல்லுலோஸ்** செடியினங்களின் மரக்கட்டைகளுக்கும், பருத்தி போன்ற இழைமங்களுக்கும், உயிர்மங்களின் புறத்தோட்டுக்கும் மூலமான பொருள்.

**celulose acetate:** (வேதி;குழை) **செல்லுலோஸ் அசிட்டேட்:** இது சூட்டால் நிலையாக இறுகிவிடும் தன்மையுடைய ஒரு பிளாஸ்டிக் பொருள். வலிமையும், உரப்பும் இதன் சிறப்பியல்புகள். பல்வேறு வண்ணங்களில் இது கிடைக்கிறது. உந்துகலத்தின் இயக்குச் சக்கரங்கள், அலங்காரப் பொருள்கள், ஊற்றுப் பேனாக்கள், மின் கருவிகள் முதலியன தயாரிக்கப் பயன்படுகிறது. இது மென்மையான உலோகங்களைப் போலவே செயற்படுகிறது.

**cellulose acetate butyrate:** (வேதி;குழை) **செல்லுலோஸ் அசிட்டேட் பூட்டைரேட்டு:** செல்லுலோஸ் அசிட்டேட் தயாரிக்கும் அதே செய்முறைப்படி பூட்டைரிக் அமிலத்தையும், அசிட்டிக் அமிலத்தையும், நீர் நீக்கப்பட்ட காடிகளுடன் கலந்து தயாரிக்கப்படுகிறது. இந்த வகைப் பிளாஸ்டிக்கிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் ஈரத்தைக் குறைவாக ஈர்க்கிறது; செல்லுலோஸ் அசிட்டேட்டால் செய்த பொருள்களைவிட அதிகமாக வெப்பத்தைத் தாங்கும் திறன் வாய்ந்தவை. கைப்பிடிகள், பெட்டிகள் முதலியன செய்வதற்கான வார்ப்படக் கலவைப் பொருளாகப் பயன்படுகிறது.

**cellulose nitrate:** (வேதி;குழை.) **செல்லுலோஸ் நைட்ரேட்:** மிகப் பழமையான பிளாஸ்டிக்குகளில் ஒன்று. செல்லுலாயிடு, பைரலின், அமரித் போன்ற பல பெயர்களில் இது அழைக்கப்படுகிறது. மெருகெண்ணெய்கள்; பசைக் குழம்புகள், சலாகைகள், குழாய்கள், தகடுகள் வடிவில் கிடைக்கும். இது பல்வேறு வண்ணங்களில் பயன்படுகிறது.

**cellulosic:** (குழை.) **மரக்கூற்றுத் தன்மையுடையது:** இது வெப்பத்தால் இளகிக் குளிரில் இறுகும் இயல்புடைய பிளாஸ்டிக் குடும்பத்தைக் குறிக்கிறது. செல்லுலோஸ் அசிட்டேட் போன்ற பழக்கமான பிளாஸ்டிக்குகள் இந்த வகையைச் சேர்ந்தவை. சிப்பங்கள் கட்டும் பொருளாகப் பெருமளவில் பயன்படுகிறது. தோல் சிப்பங்கட்டுதல், கைவினைக் காகித மேலுறைகள். வார்ப்படக் கொள்கலங்கள் முதலியன தயாரிக்கப் பெருமளவில் பயன்படுகிறது.

**cell vent:** (மின்.) **மின்கலப்புழை:** மின்கலத்திலுள்ள ஒரு புழைவாய். இது மின்கலத்தில் உண்டாகும் வாயுக்கள் வெளிச் செல்வதற்கு இடமளிக்கிறது.

**celotex:** **செலோடெக்ஸ்:** கரும்புச் சக்கையிலிருந்து தயாரிக்கப்படும் ஒருவகை இழைம அட்டையின் வாணிகப்பெயர். சுவர் மறைப்பு, மின் காப்பு முதலியவற்றுக்குப் பயன்படுகிறது.

**celsius scale:** **செல்சியஸ் அளவை:** இது சென்டிகிரேடு அளவையாகும். நூற்றளவையாகப் பகுக்கப்பட்ட நூற்றியல் வெப்பமானியைக் கண்டுபிடித்த ஆண்டர்ஸ் செல்சியஸ் (1701-44) என்பவரின் பெயரில் அழைக்கப்படுகிறது.

**cement:** **சிமெண்ட்:** பொருள்களை ஒட்டவைப்பதற்காக மென்பதமாகப் பயன்படுத்தப்படும் சாந்துப் பொருள். தமிழ் வழக்காகச் 'சிமிட்டி' எனவும் அழைக்கப்படுகிறது.

**cementation steel:** (உலோ.) **படிக எஃகு:** படிக உலையில் தயாரிக்கப்படும் ஒரு வகை எஃகு. வெட்டுக் கருவிகள் தயாரிக்கப் பயன்படுகிறது. இதைத் தயாரிக்கச் செலவு அதிகம் பிடிப்பதால் இது மிகக் குறைந்த அளவிலயே பயன்படுத்தப்படுகிறது.

**cemented carbide tools** (எந்.) **ஒட்டு கார்பைடுக் கருவிகள்:**

தூளாக்கிய கார்பைடுகளைக் கடினமான முனையுடன் பற்ற வைத்துத் தயாரிக்கப்படும் கருவிகள். உலோகங்களை விரைவாக வெட்டுவதற்குப் பயன்படுகின்றன.


**cementing trowel** : **சாந்துப் பூச்சுச் சட்டுவம்** : கொத்தனார்கள் பயன்படுத்தும் சட்டுவக் கரண்டி போன்ற கருவி. இது அதைவிடக் கனமானது.

**cementite**: *(பொறி.)* **சிமென்ட்டைட்**: கார்பனுடன் இணைந்திருக்கும் இரும்பு. இது கடினமாவதற்கு முன்பு எஃகில் இருக்கும் இரும்பு போன்றது.

**Center** : **மையப்புள்ளி** : ஒரு வட்டத்தின் ஆரம் அல்லது ஒரு வட்டரையின் ஆரம் எந்தப் புள்ளியின் வழியாக நகர்ந்து செல்கிறதோ அந்த நிலையான புள்ளி.

**Center distance** : **மையத் தொலைவு**:(1)ஒருபொறியின் பகுதியிலுள்ள துளைகளின் மையங்களுக்கும், (2) ஒரு சுழல் தண்டினைத் தாங்கும் தாங்கிகளுக்கும், (3) ஓர் ஓவியத்தின் மையக் கோடுகளுக்கும் இடையிலான தொலைவு.

**Center drill** *(எந்.)* **மையத் துரப்பணம்** : ஒரு குறுகலான துரப்



துரப்பணக் கருவி

பணம். கடைசல் எந்திரங்களில் மையத்துளையிடும் பணிக்குப் பயன்படுகிறது. மையத் துரப்பணம் ஒரு திருகாணித் தலைப்புடன் சேர்த்துச் செய்யப்படுகிறது. இது ஒரே கருவி மூலம் இரண்டு வேலைகளைச் செய்ய உதவுகிறது.

**Centered**: *(அச்சு.)* **மையம் வைத்தல்**: அச்சுக்கோத்த ஒரு வரியினை இருபுறமும் சம அளவு இடைவெளி இருக்குமாறு மையத்தில் வைத்து அமைத்தல்.

**center frequency** : *(மின்னி.)* **மைய அலைவெண்** : அலைவெண் மாற்ற ஒலிபரப்பு நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அலைவெண், அலைவெண் மாற்றத்தில் மாறாத ஊர்தியின் அலைவெண்.

**center gauge: மைய அளவு கருவி**: ஒரு தட்டையான அளவு கருவி, இது 'V' வடிவ திருகிழைகளை வெட்டுவதற்கும் ஒரு கருவியை அமைப்பதற்கும் பயன்படுகிறது.

**Center head** : *(எந்.)* **மையக் கொண்டை** : ஏதேனும் உருண்டையான பொருளின் மையத்தைக் கண்டுபிடிப்பதற்காக ஓர் அளவு கோலுடன் அல்லது ஓர் அலகுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு சாதனம்.

**Centering** : *(க.க)* **பொருத்துச் சட்டம்** : மேல் வளைவு அல்லது கவிகையோடு கட்டும்போது பயன் படுத்தப்படும் தற்காலிகமான பொருத்துச் சட்டம்.

**Centering work** : *(எந்.)* **மையக் குறியீடு**: கடைசல் கருவியில் கடைசல் பணி செய்வதற்காக ஒரு பொருளின் மையப் புள்ளியைத் துல்லியமாகக் கண்டுபிடித்தல். உருளைகளின் மையப் புள்ளியைக் கண்டுபிடிக்க முரண் விட்ட மானியைப் பயன்படுத்தலாம்.

**centerless grinding** : *(எந்.)* **மைய மிலாச் சாணை** : அதிவேகமாக இயங்கும் ஒரு சாணைச் சக்கரம், எதிர்மாறான திசையில் மெதுவாக நகர்கின்ற அமைப்பினையுடைய ஒரு பொறியினால் இது நடைபெறுகிறது. இரு சக்கரங்களுக்குமிடையிலான இடுக்கமான பகுதியில், இந்த வேலைப் பாட்டுக்கான ஆதாரம் அமைந்திருக்கிறது.

**Center line :** *(வரை.)* **மையக் கோடு :** ஒரு பொருளின் மையத்தைக் குறிக்கின்ற புள்ளிகளும், சிறு சிறு கோடுகளும் கொண்ட ஒரு கோடு.

**center of altraction : கவர்ச்சி மையம்**

**Center of buoyancy :** *(வானூ.)* **ஈர்ப்பு மையம் :** மிதக்கும் பொருளால் இடப்பெயர்ச்சி செய்யப்பட்ட நீர்மத்தின் ஈர்ப்பு மையம்.

**center of gravity : புவியீர்ப்பு மையம் :** ஒரு பொருளை ஒத்த ஒரு நிலையிலும் சம நிலையிலும்வைக்கக் கூடிய புள்ளி.

**center of inertia / centre of mass : பொருண்மை மையம்.**


**center of percussion : தாங்குதள மையம்.**

**center of pressure :** *(வானூ.)* **அழுத்த மையக் குணகம் :** விமானச் சிறகின் முன் விளிம்பிலிருந்து அழுத்த மையத்தின் தொலைவுக்கும் நாண் நீளத்திற்குமிடையிலான விகிதம்.

**center of pressure of an air foil section :** *(வானூ.)* **விமானக் காற்றழுத்தத் தளத்தின் அழுத்த மையம் :** விமானத்தின் காற்றழுத்தத் தளப்பகுதியின் நாணில் உள்ள ஒரு பகுதி. இந்தப் பகுதி தேவையானால் நீட்டப்பட்டிருக்கும். இந்தப் புள்ளி, நாணும், காற்றுச் சக்தி பின்கூட்டு விளைவாக்கத்தின் செயலியக்கக்கோடும் சந்திக்கும் இடத்தில் அமைந்திருக்கும்.

**center piece :** *(க.க)* **மைய அணி யொப்பனை :** மாடியின் மைய அணி ஒப்பனை உறுப்ப

**center punch :** *(உலோ. வே.)*



மையத் தமருசி

**மையத் தமருசி :** இது ஓர் எஃகுத் தமருசி. இது தோல்-உலோகம்-தாள் முதலியவற்றில் துளையிட உதவுகிறது.

**center reamer :** *(பட்.)* **உலோக மையத் தமருசி :** சுழல் தண்டுகள் போன்ற உலோகப் பொருள்களின் மையத்தில் துளையிடுவதற்குப் பயன்படும் உலோகத் தமருசி அல்லது திருகாணி. இது சாதாரணமாக 60° சாய்வாக இருக்கும். துரப்பண வேலைகளுக்கு இது பெருமளவில் பயன்படுகிறது.



தமருசி

**center rest:** *(எந்.)* **மைய ஆதாரம்:** கடைசல் வேலைப்பாடுகளுக்கான ஓர் ஆதாரம். நீண்ட சுழல் தண்டுகள், கதிர்களுக்குத் துளையிடுதல் போன்ற பணிகளில் பயன்படுத்தப்படுகிறது.

**centers :** *(எந்.)* **ஊடச்சுகள் :** கடைசல் எந்திரங்களிலுள்ள கூம்பு வடிவ முனைகளையுடைய அச்சுகள். இதில் கடைசல் வேலைப்பாடு செய்ய வேண்டிய பொருள்களை தாங்கி நிறுத்தி வைத்துக் கொள்ளலாம்.

**center section:** *(வானூ.)* **மையப் பகுதி :** தொடர்ச்சியான இறகினைக் கொண்டிருக்கும் விமானத்தில், சிறகின் மைய ஆயம்; மைய ஆயம் இல்லையெனில் ஏதேனும் இறகு, மையப் பகுதியின் வரம்புகள், இணைப்புப் புள்ளிகள், உடற்பகுதியிலிருந்து உள்ள தூரத்தைப் பொறுத்து நிருணயிக்கப்படுகிறது.

**centering control : குவிமையக் கட்டுப்பாடு :** தொலைக்காட்சியில் செங்குத்தாக அல்லது கிடைமட்டத்தில் படத்தை குவிமையத்தில் வைக்கும் கட்டுப்பாடு.

**center square :** *(உலோ. வே.)* **மைய அளவி :** ஒரு வட்டத்தின்

மையத்தை அல்லது ஒரு வட்டத்தின் வில்லின் மையத்தைக் கண்டு பிடிக்கப் பயன்படும் ஒரு கருவி. கடைசல் செய்யப்பட வேண்டிய ஒரு சுழல் தண்டின் அல்லது நீள் உருளையின் முனையின் மையப் புள்ளியைக் கண்டுபிடிக்கப் பயன் படுகிறது.

**centre of suspension**: **தொங்கல் மையம்.**

**center table** : *(மர.வே.)* **மைய மேசை**: ஓர் அறையின் மையத்தில் வைப்பதற்கு ஏற்ற வகையில் எல் லாப் பக்கங்களிலும் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்ட ஒரு மேசை.

**centigrade scale** : **சென்டிகிரேட் அளவை** : நீர் உறைநிலை 0 பாகை யாகவும், கொதிநிலை 100 பாகை யாகவும் வகுக்கப்பட்டுள்ள வெப்ப மானி. அமெரிக்காவில் முக்கிய மாக அறிவியல் பணிகளுக்காகப் பயன்படுகிறது.

**centimeter** : **சென்டிமீட்டர்** : மெட்ரிக் முறையில் குறைந்த நீள அலகு. ஃபிரெஞ்சு நாட்டின் நீட்டல் அளவையில் நூற்றில் ஒரு கூறு. 0.3937 அங்குல நீளம்.

**central station** : *(மின்.)* **மைய மின் நிலையம்** : மின்னொளி வழங் கப்படும் ஒரு மின்னாக்க நிலையம். இங்கிருந்து நுகர்வோருக்கு மின் னொளியும், மின்விசையும் வழங் கப்படுகிறது.

**centrifugal** : *(பட்.)* **மையம் விட் டோடும் விசை** : மையமொன்றைச் சுற்றிச் சுழலும் பொருள்களில் மையத்துக்கு எதிர்திசையில் செயற் படும் விசையாற்றல்.

**centrifugal flow engine** : *(வானூ.)* **விரி மையப் பாய்வு எஞ்சின்** : மையம் விட்டோடும் அழுத்துப் பொறியையுடைய ... காற்று விசை உட்பொறி எஞ்சின்.

**centrifugal spark advance** : **விரி மையச் சுடர்ப்பொறி வளர்ச்சி** : உந்துவண்டியில் எஞ்சின் வேகம் மாறுபடுகிறபோது சுடர்ப்பொறி ஏற்றம் பெறுகிற அல்லது குறை கிற அமைவுடைய காலக் கணிப் பான், பகிர்ப்பான், வேகங்காக்கும் விசையமைவு.

**centrifugal switch** : *(மின்.)* **மையம் விலகு இணைப்பு விசை** : ஒற்றை நிலைப்பிளவு நிலை மின் னோடியில் பயன்படுத்தப்படும் ஒருவகை இணைப்பு விசை. மின் னோடி இணக்க வேகத்தை எட் டிய பிறகு தொடக்கச் சுருணை யை இயக்கி வைக்க இது பயன்படு கிறது.

**centrifugal type super charger**: **மையம் விலகு வகை மீவிசைக் காற் றடைப்பான்** : விமானத்திலுள்ள மீவிசைக் காற்றடைப்புக் குழாய். இதிலுள்ள ஒன்று அதற்கு மேற் பட்ட அலகுள்ள தூண்டு தட்டங் கள், மையம் விட்டோடும் செயல் மூலமாக, ஒரு தூண்டு கருவியில் காற்றினை அல்லது கலவையை அழுத்திச் செறிவாக்குகிறது.

**century** : *(அச்சு.)* **நூற்று முகப்பு அச்செழுத்து** : புத்தக வேலையில் பயன்படுத்தப்படும் அச்செழுத்தின் முகப்பு.

**ceramics** : **மட்பாண்டத் தொழில் வேட்கோவர் கலை** : சுட்ட களி மண்ணிலிருந்து பாண்டங்கள் செய்யும் கலை. அவ்வாறு தயாரிக் கப்படும் பொருட்களையும் இது குறிக்கிறது.

**cerasin** : *(வேதி.)* **மரப்பிசின்** : மர வகைப் பிசினின் கரையாமலிருக் கும் ஒரு பொருள். இது மஞ்சள் அல்லது வெண்ணிறத்தில் மெழுகு போல் இருக்கும். மெழுகுத் திரி- மின்காப்பு ஆகியவைகளில் பயன் படும் புதைபடிவ அரக்குப்

பொருளைத் தூய்மைப்படுத்துவதன் மூலம் இது பெறப்படுகிறது. இது தேன்மெழுகுக்கு மாற்றாகப் பயன்படுகிறது.

**cerebellum** : (உட.) **சிறுமூளை** : தலையின் பின்பக்கத்தில் உள்ள சிறுமூளை.

**cerebrum** : (உட.) **பெரு மூளை** : தலையின் முன்பக்கத்திலுள்ள பெரு மூளை.



தணடு வடம்

**cerebro - spinal fluid** : (உட.) **மூளை - முதுகந்தண்டுத் திரவம்**: மூளையைச் சுற்றிலும் முதுகந் தண்டிற்குள்ளேயும் உள்ள திரவம்.

**cerium** : **சீரியம்** : (இயற்.) அணு எண் 58 உள்ள உலோகத் தனிமம்.

**cerium** : (வேதி.) **சீரியம்** : இது ஓர் உலோகத் தனிமம். அணு எண் 58 உடையது. இதன் வீத எடைமானம் 6.92. இது நிறத்திலும் பளபளப்பிலும் இரும்பை ஒத்தது. ஆனால் மென்மையானது; எளிதில் வளைந்து கொடுக்கக் கூடியது; கம்பியாக இழுத்து நீட்டக் கூடியது. இதனாலான பொருள்கள், சாய வேலையிலும், வாயு ஒளித்திரை வலைகள் செய்வதிலும் சிகரெட்டுப் பற்றப் வைப்பான்கள், எரிவாயுப் பற்றவைப்பான்கள் செய்வதிலும் பயன்படுத்தப்படுகின்றன.

**Certificate**: **சான்றிதழ்**: சில சாதனைகளில் மெய்ம்மைக்கு அளிக்கப்படும் ஒரு நற்சான்று ஆவணம் அல்லது எழுத்துச் சான்று.

நற்சான்று ஆவணம் அல்லது நற்சான்றிதழ் வழங்குதல்.

**cerussite**: **செருசைட்**: ($PbCO_3$) ஓர் ஈயக் கனிம வகை. நிறமற்றதாக அல்லது வெண்மை அல்லது மஞ்சள் நிறத்தில் ஒளி ஊடுருவக் கூடிய படிகங்களாகக் கிடைக்கிறது.

**cesium**: (வேதி.) **சீசியம்**: வெள்ளி போல் வெண்மையான உலோகத் தனிமம். ஒளி மின்கலங்களில் பயன்படும் செயலூக்கம் மிகுந்த ஒரு பொருள்.

**cesspool**: (கம்.) **வடிகுட்டை**: மலக்கழிவின் வண்டல் பிரித்து நீர் உள்வாங்கும் பள்ளம்.

**cetane rating**: **சீட்டேன் வீத அறுதி எண்**: டீசல் எந்திர எரிபொருளின் எரிபண்பளவைக் கூற்றெண் 30-50 வீத அறுதி எண்ணுடைய எரிபொருள்கள் வழவழப்பற்ற (உராய்வுடைய) டீசல் எரிபொருள்கள் என்றும், 50-80 வீத அறுதி எண்ணுடையவை வழவழப்பான (உராய்வற்ற) டீசல் எரிபொருள்கள் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**Chafe**: **உரசித் தேய்த்தல்**: உரசித் தேய்த்துத் தேய்மானம் செய்தல்.

**Chain drive**: (தானி;எந்.) **சங்கிலி ஆற்றல் தொடுப்பு**: சங்கிலி மூலமான ஆற்றல் தொடுப்பு. இதில் சங்கிலித்தொடர் போன்ற வார்ப்பட்டை மூலம் மின்விசை அனுப்பப்படுகிறது. உந்துவண்டிகளில் மின்சக்கரங்களை இயக்குவதற்கும் இது பயன்படுகிறது.

**Chain hoist**: (பொறி.) **சங்கிலி உயர்த்தி**: கயிற்றுக்குப் பதிலாகச் சங்கிலியைப் பயன்படுத்தி பாரத்தை மேலே தூக்குவதற்குப் பயன்படும் எந்திரம்.



**Chain pipe vise**: **சங்கிலிக் குழாய்க் குறடு**: எந்திரத்தின் குறடுபோல் பற்றிக்கொள்ளும் அலகில் ஒரு கனமான சங்கிலியைப் பயன்படுத்திக் குழாயைப்

பிணைப்பதற்குரிய இடம் விட்டு இடம் செல்லக்கூடிய ஒரு வகைக் குறடு.

**Chain pulley**: *(எந்.)* **சங்கிலிக் கப்பி**: *கப்பியில் கயிறு ஓடுவதற்கான பள்ளம் உடைய ஒரு சக்கரம் அல்லது கப்பி. இதில் ஒரு சங்கிலியின் கண்ணிகள் நுழைத்துக் கொள்வதற்கான பள்ளங்கள் இருக்கும்.*

**Chain riveting**: *(பொறி.)* **சங்கிலிப் பிணைப்பு**: *இரட்டை அல்லது பல வரிசைகளில் ஆணிகளைக் கொண்டு இணைத்தல், அல்லது பிணைத்தல். இதில் குடையாணிகள் ஒன்றுக்கொன்று நேர் எதிராக இருக்குமாறு அமைக்கப்பட்டிருக்கும்.*

**Chain tongs**: *(கம்.)* **சங்கிலிப் பற்றுக் குறடுகள்**: *குழாய் திரும்பி விடாமல் பிடித்துக்கொள்வதற்கு அல்லது குழாயைத் திருப்புவதற்குப் பயன்படும் ஒரு வகைக் குறடு. இது கனமான இரும்புத்தண்டினாலானது. இதன் ஒரு முனையில் கூர்மையான பற்கள் அமைந்திருக்கும். இந்தப் பற்கள் குழாயை இறுகப்பற்றிக் கொள்ளும்.*

**Chain transmission**: *(எந்.)* **தொடர் விசையியக்கம்**: *விசையை அனுப்புவதற்குப் பயன்படும் ஒரு முறை. எந்திர உறுப்புகளிடையே விசையுறுப்பின் விசைஏற்று இயங்குறுப்பினை தொடர்ச்சியாக இயங்கச் செய்வதற்குப் பயன்படுகிறது.*

**Chair glide : நாற்காலிக் கவிகை:** *இதனை ஒலியற்ற கவிகை என்றும் அழைப்பர். இது அறைகலன்களின் காலடியில் மேலுறையாக இறுகலாகச் செருகப்பட்டிருக்கும். இதனால் அறைகலன்களை சத்தமின்றி தரையிலும் விரிப்புகளின் மேலும் நகர்த்தலாம்.*

**Chair rail**: *(க.க.)* **சாய்வுக் கம்பியழி**: *சுவரின் சாந்துக்குச் சேதம் ஏற்படாதவாறு காப்பதற்காக நாற்காலியின் பின்புற உச்சியின் அளவுக்குசுவரில் இணைக்கப்பட்டுள்ள மரத்தாலான பட்டை அல்லது வார்ப்பட வார்ப்பட்டை.*

**Chaise longue : சாய்விருக்கை** *ஒரு புறச்சாய்வு வசதியுள்ள நீளச் சாய்விருக்கை. இது ஃபிரெஞ்சுப் பாணியிலமைந்த நீள் சாய்விருக்கை. 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் முதன் முதலாக இது தயாரிக்கப்பட்டது. அப்போது இது இரு கை நாற்காலிகளையும், ஒரு புக் காலியைக் கொண்ட மூன்று பகுதிகளைக் கொண்டிருந்தது.*

**chalcedony : வெண்மணிக்கல் :** *நீலச்சாயலுடைய வெண்ணிற மணிக்கல் வகை.*

**Chalcocite**: *(உலோ.)* **சால்கோசைட்**: *($Cu_2S$) இது செப்புக்கனிமம். இது ஒருவகை செப்புச் சல்பைடு.*

**Chalcopyrite**: *(உலோ.)* **சால்கோபைரைட்**: *($CuFeS_2$) இது ஒரு செம்புக் கலவை வகை. செம்பும் இரும்பும் கலந்த ஒரு மஞ்சள் நிறச் சல்பைடு.*

**Chalk**: *(கனி.)* **சீமைச் சுண்ணாம்பு**: *நுண்ணிய கடல் உயிரிகளின் நுண் துளைகளைக் கொண்ட சிப்பிகளினாலான மென்மையான வெண் சுதைப் பாறை.*

**Chalking**: *(குழை.)* **வெண்சுதையாக்கம் :** *பிளாஸ்டிக் மேற்பரப்புக்களை வெண்சுதை போன்று தோன்றுமாறு செய்தல்.*

**Chalk line : நொடிப்புக் கோட்டு இழை :** *சுழல் தண்டு, எந்திரம் முதலியவற்றை தரையில் பொருத்துவதற்காகத் தரையில் ஒரு நேர் கோடு போடுவதற்காகப் பயன்படும் வெண்சுதை பூசப்பட்ட ஒரு*

கம்பித்துண்டு. இதனைத் தரையில் இரு முனைகளுக்கிடையே விறைப்பாகப் பிடித்துக் கொண்டு இந்தக் கோடு போடப்படுகிறது. இந்தக் கம்பியை நடுவில் பிடித்து ஒரு நொடிப்பு நொடித்துத் தரையில் படிய வைத்தால் தரையில் ஒரு கோடு படியும்.

**chalk over-lay** : **அச்சுப் படிவம்** : அச்சுப்படியெடுப்பதற்காக அச்சுத் தகடுகளையும், அச்செழுத்துகளையும் ஒரு வழவழப்பான பரப்பில் படிய வைப்பதற்கான ஓர் எந்திரவியல் செய்முறை.

**Chalk plate** : **சுண்ணத்தகடு** : செய்தியிதழ் பணியில் பயன்படுத்துவதற்காகப் பவளத் தகட்டு அச்சிடுவோரால் வார்த்தெடுக்கப்படும் ஒருவகைத் தகடு.

**Chamber** : **உட்புழை** : உட்புழையுள்ள ஒரு தோரணி அல்லது வார்ப்படம். ஒரு நீண்ட உள்ளிடம்.

**Chamber** : **கண்ணறை** : மேல் வளைவுடைய கண்ணறை.

**chamois leather** : **மான் தோல்** : ஆட்டின் இயல்புடைய ஐரோப்பிய வரைமானின் மென்பதமுடைய தோல்வகை.

**Chandelle** : **திடீர்த் திருப்ப ஏற்றம்**: விமானம் திடீரெனத் திரும்பி உயரத்தில் ஏறுதல். ஒரே சமயத்தில் திசை திருப்பி உயரத்தில் ஏறுவதற்கு இந்த நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.


**Change gears** : **நிலைமாற்றுப் பல்லிணைகள்** : உந்து வண்டியிலுள்ள விசை ஊடிணைப்புச் சாதனம். கடைசல் எந்திரத்தில் திருகின் இழைகளை வெட்டுவதற்காக அமைக்கப்பட்டுள்ள பல்லிணைகளின் அமைப்பு. பல்வேறு அளவுப் புரிகள் வெட்டும் வகையில் பல்லிணைகள் அமைக்கப்படுகின்றன.

**Change over cues** : **நிலை மாற்றுக் கோல்** : திரைப்படச் சுருள் தொடர்ந்து ஓடுமாறு செய்வதற்காக ஒரு திரைப்பட ஒளியுருப் படிவுக் கருவியிலிருந்து மற்றொரு கருவிக்குக் கையினால் மாற்றுவதற்கு உதவியாக இருக்கும் திரைப்படச் சுருளிலுள்ள தடக் குறிகள்.

**Channel** :(1) **கால்வரி** : மேற்பரப்பில் பதிக்கப்பட்டுள்ள கால் வரிக்கோடு. வார்ப்படங்களிலும், அறைகலன்களிலும் அலங்கார வேலைப்பாடாகப் பயன்படுத்தப்படுகிறது.

(2) **அலைவரிசை** : வானொலி-தொலைக்காட்சி அலை அடையாளக் குறியீடுகளை இடையீடின்றி அனுப்பத்தகும் அலை இடைவெளிப் பகுதி.

**Channel iron** : **கால்வரி இரும்பு** : தகட்டுப் பாளங்கள், இதில் ஒரு சுழல்விசிறி அலகும், இரு தட்டையான விளிம்புகளும் அடங்கியிருக்கும். இது ஒரு பக்கம் விட்டுவிடப்பட்ட உட்புழையான சதுரமாக இருக்கும்.



கால்வரி இரும்பு

**Chapel** : **அச்சு அலுவலகம்** : நாளச்சுத் தொழிலாளர்கள் கூட்டம்.

**Chaplet** : **அடி தாங்கி** : குழாயின் உலோக இடிதாங்கி.

**Chapter head** : **அத்தியாயத் தலைப்பு** : ஓர் அத்தியாயத்தின் தொடக்கத்திலுள்ள தலைப்பு.

**Chaptrel**: (க.க.) **தூண் தலைப்பு**: கட்டிடக் கலையில் வளைவினைத்

தாங்குப் தூணின் தலைப்புப் பகுதி.

**Characteristic**: *(எந்.)* **மடக்கைக் கூறு** : ஒரு மடக்கையின் கூறு.

**Characteristic curve of dynamo** : *(மின்.)* **மின்னாக்கப் பொறியின் தனிப்பண்பு வளைவு :** ஒரு மின்னாக்கப் பொறியில், மின் வலி அலகுகளும், மின்னோட்ட அலகுகளும் வேகத்திற்கும் வெளியேற்றப்படும் மின்னோட்ட அளவுக்கும் எந்த விகிதத்தில் இருக்கின்றன என்னும் தொடர்பு முறை.

ஓர் இயக்கு பொறியில் அதன் வேகத்திற்கும் அதில் ஏற்றப்பட்டுள்ள மின்னோட்ட அளவுக்குமிடையிலான விகிதத் தொடர்பு ஒரு சோதனை மூலமாக இந்த வளைவு வரையப்பட்டால் இந்த மதிப்புகளைக் கண்டறியலாம்.

**charcoal** : **மரக்கரி** : தீய்ந்து கரியான மரக்கட்டை.

**Charcoal iron** : *(உலோ. வே.)* **மரக்கரி இரும்பு** : மிக உயர்தரமான இரும்பு. இது மரக்கரியை எரிபொருளாகப் பயன்படுத்தி உருக்கி எடுக்கப்படுகிறது. இதில் கந்தகம் கலக்காமல் இருப்பதால் இதன் தரம் மிகுதியானதாகும்.

**Charge :** *(மின்.)* **நிலை மின்னியல் :** முறைப்படி மின்னேற்றம் செய்யப்பட்ட ஒரு பொருளில் ஏறியிருக்கிற மின் விசையின் அளவு.

**Charged cell** : *(மின்.)* **மின்னேற்றிய மின்கலம்** : இது ஒரு சேமக் கலம். இதில், வேதியியல் முறையில் $PbSO_4$-லிருந்து $PbSO_2$ ஆகவும், எதிர்மின் தகடு $PbSO_4$-லிருந்து Pb ஆகவும் மாறுகிற வரையில் இதில் நேர்மின்னோட்டம் பாய்ந்து கொண்டிருக்கும்.

**Charging** : *(மின்.)* **மின்விசைச் செறிவூட்டுதல்** : ஒரு மின் சேமக் கலத்தில் மின் தகடுகளையும் மின் பகுப்பானையும் வேதியியல் முறையில் மாற்றுகிற செய்முறை.

**Charging current :** *(மின்.)* **செறிவூட்டு மின்னோட்டம் :** மின்கலத்திற்கு மின்விசைச் செறிவூட்டுவதற்கான வேதியியல் வினையை உண்டாக்குவதற்கு ஒரு மின்சேமக் கலத்தில் செலுத்தப்படும் நேர் மின்னோட்டம்.

**Charging rate** : *(மின்.)* **மின் செறிவூட்ட வீதம்** : ஒரு மின் சேமக் கலத்திற்கு மின்விசைச் செறிவூட்டும்போது அந்தக் கலத்தின் வழியாகப் பாயும் மின்னோட்டத்தின் வீதம். இது ஆம்பியர்களில் கணக்கிடப்படும்.

**Charles law** : **சார்லஸ் விதி :** 'கன அளவு ஒரே அளவினதாக இருக்கும்போது, அழுத்தக் குணகம் எல்லா வாயுக்களிலும் ஒரே அளவினதாகவே இருக்கும்'' என்னும் விதி.

$$\frac{1}{273} = 0.00366C^{\circ}.$$

**Charring** : *(பட்.)* **தீய்த்தல்** : ஒரு மேற்பரப்பினை எரித்தல் அல்லது கரியாக்குதல்.

**Chase** : *(எந்.)* *(1)* **இணைப்புச் சட்டம்** *(2)* **இழைவெட்டுதல்**: மழை திருகாணியின் இழைகளை வெட்டுதல்.

*(3)* வார்ப்படப் பள்ளத்தில் உறுப்புகளை உரிய இடத்தில் பொருத்தி வைப்பதற்கும் சக்கரப் பல் வெட்டுவதில் விரிவடைவதை அல்லது திரிபடைவதைத் தடுப்பதற்கும் ஒரு வார்ப்படப் பள்ளத்தில் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட உறுப்புகளை ஒருங்கிணைப்பதற்கும் பயன்படுத்தப்படும் ஓர் இணைப்புச் சட்டம்.

*(4)* **இரும்புச் சட்டம் :** அச்சுக் கலையில் அச்செழுத்துக்களைப்

பிணைத்துப் பிடிக்கும் இரும்புச் சட்டம்.

**chaser :** *(உலோ.)* **செதுக்குக் கருவி:** வெட்டுக்கருவிகளில் இழைகளைச் செதுக்குவதற்குப் பயன்படும் கருவி.

**chasing: செதுக்கு வேலைப்பாடு :** உலோகத்தில் ஓரம் வெட்டுதல் போன்ற அலங்காரச் செதுக்கு வேலைப்பாடுகளைச் செய்தல்.

**chasing threads:** *(எந்.)* **செதுக்கு இழைகள் :** செதுக்குக் கருவி மூலம் இழைகளை வெட்டுதல். தேவையான இடைவெளித் தொலையளவுகள் கொண்ட பல்வேறு பற்களையுடைய ஒரு தட்டையான கருவியாக இது அமைந்திருக்கும்.

**chassis:** *(தானி;எந்.)* **அடிச்சட்டம்:** உந்துவண்டியின் உடற் பகுதி தவிர, அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கியிருக்கும் அடிச் சட்டம்.

**chatter:** *(உலோ.வே.)* **நறநறப்பு:** ஒரு பொறியில் வெட்டும் கருவிகளில் அல்லது பொறியின் உறுப்புகளில் போதிய கட்டிறுக்கம் இல்லாமையால் உண்டாகும் நறநற வெனும் ஒலி.

**check: சதுரவரைச் சட்டம் :** குறுக்கும் நெடுக்குமாகக் கட்டங்கட்டவுமான அமைவுடைய சதுரவரைச் சட்டம்.

**checker : ஆய்வாளர் :** இவர் மிகவும் கவனமாக இருந்து வரைபடங்களைப் பிழையில்லாது கண்காணித்து, அவை குறிப்பிட்ட அளவுகளில் அமைந்திருக்கின்றனவா என்பதைச் சரிபார்த்தல் வேண்டும். இவர் கவனக் குறைவால் செய்யும் சிறு பிழைகூட பேரிழப்பை ஏற்படுத்தி விடும்.

**checking of wood :** *(பட்.)* **மரப் பிளவு :** சீராயிராத பதப்பாடு காரணமாக வெட்டு மரத்தில் உண்டாகும் விரிசல்கள் அல்லது வெடிப்புகள்.

**check nut :** *(எந்.)* **தடுப்பு மரை :** மரை கழன்று போகாதவாறு அதன் மேல் இறுக்கமாகத் திருகப்படும் மற்றோர் அமைவு. இதனைப் பூட்டுமரை என்றும் கூறுவர்.

**check valve :** *(கம்.)* **அமைப்பு ஓரதர் :** குழாயில் நீர் பின்னோக்கிப் பாயாதவாறு தானாகவே அடைத்துக் கொள்கிற ஒரு வகை ஓரதர்.,

**cheek:** *(வார்.)* **நிலையலகு:** மூன்று பகுதிகளைக் கொண்ட ஒரு குடுவையின் நடுப்பகுதி.

**cheltenham :** *(அச்சு.)* **செல்டன் ஹாம் அச்செழுத்து :** பல்வேறு முகப்புகளிலுள்ள ஒரு வகை அச்செழுத்துகளின் பெயர்.

**chemical :** *(வேதி.)* **வேதியியல் பொருள் :** ஒரு வேதியியல் செய்முறை மூலம் பெறப்பட்ட பொருள்.

**chemical action : வேதியியல் வினை :** இது ஒரு வகை வேதியியல் மாற்றம் அல்லது செயல்முறை. இந்த வினையினால் இருக்கும் பொருள் அல்லது பொருள்கள் புதிய பொருளாக அல்லது வேறு பொருள்களாக மாறிவிடும்.

**chemical change :** *(வேதி.)* **வேதியியல் மாற்றம் :** ஒரு பொருளின் நற்பண்பினை அடியோடு மாற்றிவிடக்கூடிய ஒரு மாற்றம். எடுத்துக்காட்டு மரக்கரித் துண்டை எரிப்பதால் அது சாம்பலாக மாறிவிடுகிறது.

**chemical dip brazing : வேதியியல் அமிழ்வு ஒட்டவைப்பு :** இதில் குறை நிரப்பு உலோகம் மூட்டிணைப்பில் சேர்க்கப்பட்டு,

குழம்பு வேதியியல் பொருளில் அமிழ்த்தி எடுக்கப்படுகிறது.

**chemical engineer** : **வேதியியல் பொறியாளர்** : இவர் ஒரு வேதியியல் தொழிற்சாலைகளை வடிவமைத்து நிறுவுவதும், தொழில் துறை வேதியியலில் ஆராய்ச்சியினையும், பொதுப்பணிகளையும் செய்வதும் இவரது பணிகளாகும்.

**chemical fuel** : *(விண்.)* **வேதியியல் எரிபொருள்** : உள்ளெரிதலுக்காக ஓர் ஆக்சிகரணியை நம்பியிருக்கும் ஓர் எரிபொருள். திரவ அல்லது திட ராக்கெட் எரிபொருள், தாரை எரிபொருள், உள்ளெரி எஞ்சின் எரிபொருள் இவ்வகையைச் சேர்ந்தவை.

**chemical metallurgy** : *(உலோ.)* **வேதியியல் உலோகவியல்** : உலோகங்களை உருக்குவதிலும், சுத்திகரிப்பதிலும் உலோகக் கலவை தயாரிப்பதிலும் ஏற்படும் வேதியியல் வினைகள் பற்றி ஆராய்தல்.

**chemically pure** : *(இயற்.)* **வேதியியல் செயல்முறையில் தூய்மையான** : வேதியியல் செயல்முறைப் பொருள்கள் எதுவும் சிறிதும் இல்லாத முற்றிலும் தூய்மையான பொருள். ஆனால், நடைமுறையில் இது இயல்வதன்று. எனவே, பொதுவாக மிகக் குறைந்த அளவு வேதியியல் மாசுபாடுகள் இருப்பதையே வேதியியல் செயல்முறையில் தூய்மையானது என்கிறோம்.

**chemical pulp** : *(உலோ.)* **வேதியியல் மரக்கூழ்** : மரக்கூழைக் குறிக்கும் சொல். அகன்ற இலை மரங்களின் வெட்டு மரங்களிலிருந்து உவர்க்காரச் செய்முறை மூலம் இந்தக்கூழ் தயாரிக்கப்படுகிறது.

**chemistry**: **வேதியியல்** : பொருள்களின் இயைபினையும், அமைப்பு முறையினையும், புதிய பொருள்கள் உண்டாக்கும் பொருள்களில் ஏற்படும் மாறுதல்களையும் ஆராயும் அறிவியல்.

**chemosphere** : *(விண்.)* **வேதியியல் மண்டலம்** : மேல் வாயு மண்டலத்தில் ஒளி வேதியியல் வினைகள் நடைபெறும் மண்டலம்.

**chemotheraphy** : *(நோயி.)* **வேதியியல் நோய்ச் சிகிச்சை** : நோய் உண்டாக்கும் நுண்மங்களை அழிக்கும் திறனுள்ள வேதியியல் சேர்மத்தைக் கொண்டு நோயைக் குணப்படுத்தும் முறை.

**chemurgy**: **ஆக்கப் பொருள் வேதியியல்**: வேதியியல் கழிவுப்பொருள்களையும், உழவுத் தொழில் மூலப் பொருள்களையும் தொழிலுக்குப் பயன்படும் புதிய ஆக்கப் பொருள்களாக மாற்றுவதற்குரிய செயல் முறை வேதியியல் பிரிவு.

**chenille** : **மென்பட்டிழைக் கச்சை**: ஆடைகளின் ஓரக் கரை புனையணியாகப் பயன்படும் மென்பட்டிழைக் கச்சை வகை. அறைகலன் அலங்காரத் துணியாக இது பயன்படுகிறது.

**chequer** : **பல வண்ணச் சதுரம்**: சதுரங்கப் பலகையில் உள்ளது போல் நிறங்கள் மாறி மாறி வரும் சதுரங்களின் அமைப்பு.

**cherry** : *(உலோ.)* **செர்ரி** :(1) ஒரு வகை அமைப்பு வெட்டுக்கருவி. கருவிகள் செய்வதற்கான படிவ அச்சின் அல்லது அது போன்ற கருவியின் உள்முகத்திற்கு மெருகூட்டுவதற்கு இது பயன்படுகிறது. (2) சிறு கொட்டையுடைய சிவந்த கனி தரும் மரவகை.

**chestnut** : *(மர.)* **செம்புங்கமரம்** : செந் தவிட்டு நிறமான கொட்டையுடைய மரம். இது நடுத்தரமான கடினத் தன்மையுடையது. இதன் வெட்டுமரம் சொரசொரப்பாக இருக்கும். மலிவான அறைகலன்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**chestnut oak** : *(மர.)* **செம்புங்கக் கருவாலி** : நடுத்தர வடிவள வுடைய மரம். இதன் வெட்டுமரம் கரும்பழுப்பு நிறமுடையதாக வழு வழுப்பாக இருக்கும். நெருக்கமான கரண்களைக் கொண்டிருக்கும். வெண் கருவாலி பயன்படுத்தப் படும் அதே நோக்கங்களுக்கு இது வும் பயன்படுத்தப்படுகிறது. தோல் பதனிடுவதற்கு இதன் பட்டை பயனாகின்றது.

**chevron** : *(க.க.)* **உத்திரம்/கைம் மரம்** : (1) இடம் வலமாக அல்லது மேலுங் கீழுமாக வளைந்து செல் லும் அமைப்புடையது. இது ரோ மானிய வழிப் பாணிக் கட்டிடக் கலையில் பயன்படுத்தப்பட்டது.

(2) வீட்டின் இரண்டு கைம் மரங்கள் உச்சியில் ஒன்று கூடுவ தாக காட்டும் அமைவு.

**chewed** : *(அச்சு.)* **அரிமானம்** : அச்சுத் தகட்டில் வரிகளில் ஏற் பட்டுள்ள தாறுமாறான விளிம்பு விளைவினைக் குறிக்கும் சொல். இந்த விளைவு, போதிய பாதுகாப் பின்றி அமிலத்தைப் பயன்படுத்து வதால் உண்டாகிறது.

**chief chemical engineer** : **தலைமை வேதியியல் பொறியாளர்** : வேதியியல் செயல்முறை நுட்பங் களிலும் நிருவாகத்திலும் வல்லுந ராகவுள்ள முக்கியமான அலுவலா ளர்.

**chief drafts' man** : **தலைமை வரைவாளர்**: வரைவுப் பணியறைக் கும் நிருவாகத்திற்குமிடையில் ஒரு தொடர்பாளராக விளங்குபவர். வரைவுப் பணியறை திறம்பட இயங்குமாறு பார்த்துக் கொள் வது இவரது பொறுப்பு. இவரது துறையிலுள்ள அனைத்து ஊழி யர்களும் இவருடைய நேரடிக கண் காணிப்பின் கீழ் இருப்பார்கள்.

**chicken pox** : *(நோயி.)* **சின் னம்மை**: குழந்தைகளுக்கு ஏற்படும் ஒருவகைத் தொற்றுநோய். இத னால் உடலில் புள்ளிகள் ஏற்படும். இதனைத் தட்டம்மை, பயற் றம்மை என்றும் கூறுவர்.

**chief engineer** : **தலைமைப் பொறியாளர்** : ஒரு தொழிற்சாலை யில், ஒரு தலைமைப் பொறியா ளரை கண்காணிப்பாளர் அல்லது பணிமேலாளர் என்று அழைப்பர். தொழிற்சாலையின் கொள்கைகள் சரிவரச் செயற்படுத்தப்படுகின் றனவா என்பதைக் கண்காணித்து வருவது இவரது பொறுப்பு. மற்ற பொறியாளர்களின் பணிகளைத் திறமையாக இயக்குவதற்கு இவர் போதிய திறமையும் அனுபவமும் உடையவராக இருத்தல் வேண் டும்.

**chief of party** : **குழுத் தலைவர்**: களப்பணியில் ஈடுபட்டுள்ள குழு வினருக்குப் பொறுப்பாக உள்ள ஒரு பொதுப் பணிப்பொறியா ளருக்குப் பொறுப்பானவராக இருப்பார்.

**chiffonier**: *(மர.வே.)* **சிங்கார நிலைப் பெட்டி** : கண்ணறைகளும், இழுப்பறைகளும் உள்ள ஓர் அலங் காரப் பெட்டி. வண்ண வேலை அடுக்கு மேடை.

**chill** : **அச்சுருப்படிவம்** : இது ஒரு உலோக அச்சுருப்படிவம். இதில் உருகிய இரும்புக் குழம்பினை ஊற்றிக் கடினமான வார்ப்புருக் கள் செய்யப்படுகின்றன.

**chilled casting**: *(எந்.)* **அச்சுருப் படிவ வார்ப்படம்** : இரும்பு அல்லது எஃகு முகப்புடைய வார்ப்படத் தில் செய்யப்பட்ட வார்ப்பு. இந்த வார்ப்படத்தில் மிக விரைவாகக் குளிருட்டப்படுவதால், வார்ப் படத்தின் கடினத் தன்மை அதி கரிக்கிறது.

**chimera** : **கதம்ப உருவம்** : பழம் புராணக் கதைகளுக்குரிய சிங்கத்

தின் தலையும், வெள்ளாட்டின் உடலும், பாம்பின் வாலும் உடைய கதம்ப உருவங் கொண்ட வேதாள விலங்கு.

**chimney** : (க.க; பொறி.) **புகை போக்கி** : அடுப்பிலிருந்து எழும் புகையினை வெளியேற்றுவதற்கு மோட்டின் மேலுள்ள மேற்கூடு.

**chimney breast** : (க.க.) **புகை போக்கிச் சாய்குவடு** : ஒரு புகை போக்கி அறையினுள் நுழையும் இடத்தில் நீட்டிக்கொண்டிருக்கும் சுவரின் பரப்பு. இந்தச் சாய்குவடு பெரும்பாலும் புகைபோக்கியை விட அகல முடையதாக இருக்கும். இந்த அகலம் அடுப்பங்கறைத் தண்டயப் பலகையை வைப்பதற்கு இடமளிப்பதாக அல்லது அறையின் தோற்றத்திற்கு அழகூட்டுவதாக அமைந்திருக்கும்.

**chimney lining** : (க.க.) **புகை போக்கிக் குழல்** : புகைபோக்கியினுள் புகை வெளிச் செல்வதற்காக உள்ள குழல்

**china**: **பீங்கான் கலம்** : பீங்கான் கலங்களைக் குறிக்கும் சொல்.

**china clay** : **பீங்கான் களிமண்** : மங்கு செய்வதற்கு உதவும் ஒரு வகைக் களிமண். இது மிக நயமான தூள் வடிவில் தூயவெண்ணிறத்தில் இருக்கும். காகிதத்தில் நிரப்புவதற்கும், பூச்சுக் கலவைகள் செய்வதற்கும் இது பயன்படுகிறது.

**chinoi serie** : **சீன வேலைப்பாடு** : சீன பாணியிலான அலங்கார வேலைப்பாடுகள்.

**chip** : (பட்.) **சிம்பு செதுக்கு** : சுத்தியல், உளி கொண்டு சிம்புகள் செதுக்குதல்.

கடைசல் எந்திரம் போன்றவற்றிலிருந்து அகற்றப்படும் சிம்புகளையும் இது குறிக்கும்.

**chip board** : **ஒட்டு மரக்கட்டை** : மரத்தூள், சிம்பு செத்தைகளுடன் மெழுகிணைத்து ஆக்கப்படும் கட்டை. மடிப்புப் பெட்டிகள் போன்ற கொள்கலன்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**chip breaker** : (எந்.) **சிம்பு உடைப்பான்** : ஒரு வெட்டுங் கருவியில் சிம்புகள் சுருண்டு உடைவதற்கு அமைக்கப்பட்டுள்ள ஒரு வரிப்பள்ளம்.

**chip carving** : **செதுக்கு வேலைப்பாடு** : இடையிடையே சிம்பு செதுக்குவதன் மூலம் இயற்றப்படும் செதுக்கு வேலைப்பாடு.

**chippendale** : **சித்திர வேலை அறைகலன்** : 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தச்சு விற்பன்னர் சிப்பென்டேல் (1718-1779) என்பவர் வகுத்தமைத்த உயர்தர சித்திர வேலைப்பாடுடைய மரத்தாலான தட்டுமுட்டு அறைகலன் வகை.

**chipping**: (பட்.) **கொத்துவேலை**: சுத்தியல், கொத்துளி கொண்டு உலோகத்தை வெட்டி எடுக்கும் வேலை.

**chip space** : **சிம்பு இடைவெளி** : பிடிப்புச் சாதனங்கள், வெட்டுக் கருவிகள் போன்றவற்றில், கருவியின் இயக்கத்திற்கு இடையூறு ஏற்படாதவாறு அமைக்கப்பட்டுள்ள இடைவெளி.

**chisel** : (பட்.) **உளி/சிற்றுளி/கொத்துளி** : செதுக்கு இழைப்பதற்கும், செதுக்கி உருவாக்குவதற்கும் பயன்படும் பல்வேறு வெட்டு விளிம்புகள் உள்ள உளிகளின் வகை.



கொத்துளி

**chisel cape**: (பட்.) **நுண் சிற்றுளி**: குறுகிய அலகுள்ள ஒரு சிற்றுளி. இது திறவுகோல் துளைகள்

வெட்டுதல் போன்ற உலோக வேலைப்பாடுகளுக்குப் பயன்படுகிறது.

**chisel cold :** *(பட்.)* **வல்லுளி :** அனலிடாமலே உலோகங்களை வெட்டுவதற்குப் பயன்படும் வல்லுளி வகை.

**chisel diamond or lozenge:** *(பட்.)* **வைரச் சிற்றுளி :** வைர வடிவில் சாய்சதுர உருவமுடைய ஒரு சிற்றுளி. இது நுண் சிற்றுளியைப் போன்றது. கூர்மையான ஆடிப்பள்ளங்களை வெட்டுவதற்கு இது பயன்படுகிறது.

**chisel round :** *(பட்.)* **வட்டுருளைச் சிற்றுளி :** ஒரு முனை வட்டுருளை வடிவமான ஒரு சிற்றுளி. இதில் வெட்டு அலகு ஒரு கோணத்தில் அமைந்திரும். மென்தகடுகளில் வரிப்பள்ளங்கள் வெட்டுவதற்குப் பயன்படுகிறது.

**chloride :** *(வேதி.)* **குளோரைடு/ பாசிகை :** மற்றொரு தனிமத்துடன் அல்லது மூலகத்துடன் குளோரின் கலந்த ஒரு கூட்டுப் பொருள். இது ஹைட்ரோ குளோரிக் அமிலத்தின் ஓர் உப்பு அல்லது கூட்டுப் பொருள்.

**chloride of lime :** *(வேதி.)* **வண்ணகக் காரம் :** ($CaOCL_2$) கால்சியம், குளோரின், ஆக்சிஜன் மூன்றும் கலந்த ஒரு கூட்டுப் பொருள். இதனை வெளுப்புக் காரம் என்றும் கூறுவர். சலவைக்கும், நச்சுத் தடைக் காப்புப் பொருளாகவும் பயன்படுகிறது.

**chlorinate :** *(குழை.)* **பாசிகச் செயற்படுத்து :** நீரின் நுண்ம அழிப்புவகையிலும், கனிமவிளைவிலிருந்து தங்கம் பிரிப்பதிலும் குளோரினைப் (பாசிகம்) ஈடுபடுத்துதல்.

**chlorinated wool :** **பாசிகச் செயற்படுத்திய கம்பளி :** மெருகும் ஒளிர்வும் அளிப்பதற்காக வெளுப்புக் காரத்துடனும் பிற பொருள்களுடனும் சேர்ந்துப் பதப்படுத்திய கம்பளி. இதனால் சில சாயங்களைப் பற்றிக் கொள்ளும் கம்பளியின் திறன் அதிகமாகிறது; மற்றும் அதன் பசை இயல்பும் நீக்கப்படுகிறது.

**chlorine :** *(வேதி.)* **குளோரின் பாசிகம் :** ($Cl_2$) இது பசுமஞ்சள் நிறமுடையஒரு நச்சுவாயு, நிற நீக்கம், நுண்மத் தடைக் காப்பு. போருக்கான நச்சு ஆயுதங்கள் ஆகியவற்றில் பயன்படும் நெஞ்சைத் திணறடிக்கும் கார மணமுடைய வாயுத் தனிமம். சோடியம் குளோரைடுக் கரைசலை மின்னால் பகுப்பதன் மூலம் இது பெறப்படுகிறது. துணிகளைச் சலவை செய்வதற்கும், நீரினைத் தூய்மையாக்குவதற்கும், நச்சு வாயுவாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**chloro-form :** *(வேதி.)* **குளோரோஃபார்ம் :** ($CHCl_3$) இது ஒரு மயக்க மருந்து. எளிதில் ஆவியாகும். இனிமை கலந்த சுவையுடைய நிறமற்ற உணர்ச்சியகற்றும் நீர்மம்.

**chlorophyill :** *(தாவர.)* **பச்சையம்:** தாவரங்களின் இலை, தழை, தண்டுகளில் பசுமையூட்டும் பொருள். இது சூரிய ஒளியில், கார்பன் - டை - யாக்சைடிலிருந்தும், நீரிலிருந்தும் ஒளிச்சேர்க்கை மூலம் சர்க்கரை தயாரித்துக் கொள்ள தாவரத்திற்கு உதவுகிறது.

**chock :** **முட்டுக்கட்டை :** நிற்கும் ஊர்திகள் நகர்ந்துவிடாமல் தடுப்பதற்காக சக்கரங்களில் அடியில் போடப்படும் அடைப்புக் கட்டை.

**choke :** *(தானி.)* **அடைப்பான் :** உந்து வண்டியின் எரி-வளி கலப்பியில் காற்றைக் குறைத்து வாயுக்

கலவையின் செழுமையை அதி கரிப்பதற்காகப் பயன்படுத்தப் படும் ஒரு நிலையான அல்லது மாறக்கூடிய சாதனம்.

**choke coil :** (மின்.) **தூண்டு சுருள் :** மின்னோட்ட வேகத்தைத் தடுத்தாளும் திருகு கம்பிச் சுருள் அமைப்பு.

**choke damp :** (வேதி.) **சுரங்க நச்சு ஆவி :** சுரங்கங்களில் உள்ள கார்பன்டையாக்சைடு என்னும் நச்சுத் தன்மையுடைய ஆவி.

**cholera :** (நோயி.) **வாந்தி பேதி :** வெப்ப நாடுகளில் உணவாலும், நீரா லும் பரப்பப்படும் பாக்டீரியா மூலம் உண்டாகும் நோய்.



வாந்திபேதி

இதனால், தொடர்ச் சியாக வாந்தியும் பேதியும் ஏற் பட்டு, உடலில் நீர் வற்றிப் போய் மரணம் உண்டாகிறது.

**cholesterol :** (உட.) **கொழுப் பினி :** உடலின் அனைத்து உயிர ணுக்களிலும், குறிப்பாக நரம்பு உயிரணுக்களிலும், காணப்படும் ஒரு பொருள். பித்தப்பையில் விளையும் கல் போன்ற கடும் பொருளில் மற்றப் பொருள்களு டன் கொலஸ்டிராலாகிய கொழுப் பினி அடங்கியுள்ளது. கொழுப்புப் பொருளைக் கொண்டு செல்வதற் கும், தோலிலும் முடியிலும் எண் ணெய்ப்பசை ஏற்படுவதற்கும் கொழுப்பினி உதவுகிறது. உட லைக் கட்டுப்படுத்தும் இயக்குநீர் கள் (ஹார்மோன்கள்) உண்டா வதற்கு இது பயன்படுகிறது.

**chopper :** (மின்.) **மின்னோட்டத் தறிப்பான் :** ஒரு மின்சுற்று வழி யைத் தானாகவே முறிப்பதற்கான ஒரு சாதனம். ஒரு நேர் மின் னோட்டச் சுற்றுவழியில் இது நேர் மின்னோட்டத்தை ஒரு துடி நேர் மின்னோட்டமாக மாற்று கிறது.

**chord :** (வானூ.) **நாண்வரை :** விமானத்தின் காற்றழுத்தத் தளத் தின் ஆயத் தொலைவுகளையும் கோணங்களையும் கணக்கிடுவதற் குரிய விருப்பப்படியான ஒரு தொடக்கக் கோடு.

கணிதத்தில் வில் வளைவின் வரை.

எந்திரத்தில் உச்சியிலோ அடி யிலோ உள்ள ஆதாரக் கட்டின் முதன்மையான பகுதி.

**chordal pitch :** **நாண்வரை இடை வெளி :** ஒரு பல்லிணையின் ஒரு பல்லிலுள்ள நேரிணையான புள்ளி யின் தூரம். இது இடைவெளி வட்டத்தின் ஒரு நாணாக அள விடப்படுகிறது.

**chord length :** (வானூ.) **நாண் வரை நீளம் :** விமானத்தின் காற் றழுத்தத் தளத்தின் புறம் நீட்டிய நீளம்.

**chroma :** **வண்ணச் சாயல் :** இது ஒரு வண்ணத்தின் ஒளிர்வு, வலிமை, அல்லது தன்மையைக் குறிக்கிறது. வண்ணத்தை மட்டுப்படுத்துதல் அல்லது மங்கலாக்குதல் மூலம் வண்ணச் சாயலைக் குறைக்கலாம்.

**chromaluminium :** (உலோ.) **குரோமா அலுமினியம் :** மிகவும் வலுவான அலுமினிய உலோகக் கலவை.

**chromate :** (வேதி.) **குரோமேட் :** குரோமிக் அமிலத்தின் உப்பு.

**chromaticity :** (மின்.) **வண்ண முனைப்புத் திறன் :** ஒளியின் நிற முனைப்புத் திறன்.

**chrome nickel steel :** (உலோ.) **குரோம் நிக்கல் எஃகு :** இது விலை மதிப்புடைய ஓர் எஃகுக் கவசம். இது எந்திரங்களை வெப்பத்தி லிருந்து பாதுகாப்பதற்கான கவச

மாகப் பயன்படுகிறது. பெரும்பாலான நேர்வுகளில், குரோம வனேடியம் எஃகு அல்லது நிக்கல். எஃகு குறைந்த செலவில் இதே நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**chrome tannage : குருமத்தோல் பதனீடு** : *குரோமிக் அமிலம் எனப்படும் குரும உப்புகளின் உதவியால் தோல் பதனீடு செய்வதற்கான ஒரு முறை.*

**chrome vanadium steel: குரோம் வனேடியம் எஃகு** : *இது ஒரு வகை வலுவான எஃகு. இதில் 0.87% குரோமியம் 0.18% வனேடியம் கலந்திருக்கும். வெப்பமூட்டிப்பதப் படுத்திய பிறகு, இதன் வலிமையில் ஒரு சதுர அங்குலத்திற்கு 9080 கிலோ என்ற அளவில் இருக்கும் வரம்பில் இந்த அளவு ஒரு சதுர அங்குலத்திற்கு 86941 கிலோ என்ற அளவில் இருக்கும்.*

**chrominance** : *(மின்.)* **நிறக் கலவைத் திறன்** : *வண்ணத்தின் பூரித மற்றும் நிறக்கலவைத் திறன்.*

**chromium** : *(உலோ.)* **குரோமியம் குருமம்** : *(Cr) இது அழகிய வண்ணங்கள் வாய்ந்த சேர்மானங்களையுடைய ஓர் உலோக வகை. இது பழுப்பு வெள்ளை நிறத்திலுள்ள ஒரு தனிமம். இதன் வீத எடைமானம் 6.50; உருகுநிலை 2939°ஃபா. எஃகு உலோகக்கலவைகளிலும் முலாமிடுவதிலும் பயன்படுகிறது.*

**chromium oxide : குரோமியம் ஆக்சைடு** : *பச்சை நிறமுள்ள வண்ண மூட்டும் ஒரு காரகி.*

**chromium plated tools** : *(உலோ.)* **குரோமியம் முலாமிட்ட கருவிகள்** : *கருவிகளிலும் கணிப்புக் கருவிகளிலும் குரோமியம் முலாமிடுவதன் மூலம் பளபளப்பாக இருக்கும்படி செய்யப்படுகிறது.*

**chromium plating : குரோமியம் முலாமிடுதல்** : *சாதகமில்லாத பருவ நிலைகளுக்கு உட்படும் உந்து வண்டிகளின் உறுப்புகள் சேதமடைந்துவிடாமல் தடுத்து, பளபளப்பாக இருக்கும்படி செய்வதற்காகக் குரோமியம் முலாமிடுதல் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. நிக்கல் முகாமிடுதலுக்குப் பதிலாகக் கையாளப்படுகிறது.*

**chromium steel** : *(உலோ.)* **குரோமியம் எஃகு** : *1%-2% வரை குரோமியம் அடங்கியுள்ள எஃகு. இது மிகக் கடினமானது; வலுவானது. இது உந்து வண்டி உறுப்புகள் தயாரிப்பதற்கான உலோகக் கலவையாகப் பயன்படுத்தப்படுகிறது. ஏவுகணைகள் தயாரிக்கவும் கவச தகடுகளாகவும் பயன்படுகிறது.*

**chromodizing** : *(உலோ.)* **குரோமியப் படலமேற்றுதல்** : *அலுமினிய உலோகக் கலவைகளில் கடினமான மேற்படலம் ஏற்படும்படி செய்வதற்கான ஒரு வெப்ப அமிழ்வுச் செயல் முறை.*

**chronometer : நுண் காலக் கணிப்பான்** : *நுட்பமாகவும் துல்லியமாகவும் காலத்தைக் கணிக்கக் கூடிய ஒரு கருவி.*

**chrysotile : இழைம மணிக்கல்** : *பாம்புத் தோல் போன்ற புள்ளிகள் வாய்ந்த இழைம இயல்புடைய பச்சை மணிக்கல் வகை.*

**chuck** : *(பட்.)* **சுழல்வார்** : *பணிக்குரிய பொருள்களை ஏந்தி வாகாகச் சுற்ற வல்ல எந்திரப்பணி ஏந்தமைவுத் தோல்வார். இது பல்வேறு நோக்கங்களுக்காகவே பல்வேறு வகைகளில் உள்ளது.*

**chucking** : *(எந்.)* **சுழல்வார் பணியாக்கம்** : *கடைசல் எந்திரத்தில் சுழல் வாரில் பணிக்குரிய பொருள்*

களை ஏற்றிக் கடைசல் வேலைப் பாடுகள் செய்தல்.

**chucking reamer** : *(பட்.)* **சுழல் துளைப்பான்** : செங்குத்தான வரிப் பள்ளங்களுடைய திருகுச்சுருளாகச் செல்கிற சுழல் துளைப்பான்கள். இதில் மூன்று மற்றும் நான்கு வரிப்பள்ளங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இதன் வழியாகத் துளைப்பான் ஊர்ந்து செல்லும். இது எஃகில் செயற்படுவதற்கு ஏற்ற தழுவையாக அமையும். சொர சொரப்பான துளைகளைச் செப்பம் செய்வதற்கு மற்றொரு கூர் முனைக்கோல் பயன்படுகிறது.

**chuffing**: *(விண்.)* **திரிபு எரிதல்**: சிலவகை ராக்கெட்டுகள் இடையிடையே நின்று, சிக்கென்ற ஒழுங்கற்ற ஊதல் ஒலியுடன் எரிகின்ற பண்பு.

**churning**: *(வார்.)* **கடைதல்**: ஒரு வார்ப்படத்திலுள்ள திரவ உலோகத்தை சூடாக்கிய ஒரு சிறு இரும்புக்கோல் கொண்டு மேலும் கீழுமாகக் கடைந்து வார்ப்புப்படிவம் திண்மையாக அமையும்படி செய்தல்.

**churn moulding**: **கடைசல் வார்ப்படம்**: நார்மன் கட்டிடக் கலையில் காணப்படும் வளைவு நெளிவுடைய வார்ப்படம்.

**chute**: **சாய்வுக் குழாய்**: குப்பை கழிபொருள்களைத் தொலைவுக்குக் கொண்டு செல்வதற்குப் பயன்படும் சாய்சரிவுடைய குழாய்.

**cincture** : **சுற்று வளையம்** : சுழல் தண்டினை அதன் ஆதாரத்திலிருந்தும் அடித்தளத்திலிருந்தும் பகுப்பதற்காகப் பயன்படும் பத்தியின் உச்சியிலும் அடியிலும் உள்ள ஒரு வளையம்.

**cinder bed** : *(வார்.)* **கனல் படுகை** : ஒரு வார்ப்படத்தின் அடியிலுள்ள ஒரு கனல் படுகை. இது வாயு வெளியேறுவதற்கு உதவும்.

**cinder notch** : *(உலோ)* **கனல் துளை** : ஊதுலையின் பக்க வாட்டில், உருகிய உலோகத்தை அப்புறப்படுத்துவதற்காக உள்ள ஒரு துளை.

**cine-camera** : **திரை ஒளிப்படக் கருவி** : திரைப்படத்திற்குரிய ஒளிப்படக் கருவி.

**cinna-bar** : *(உலோ.)* **இரசக் கந்தகை** : இது ஒரு சிவப்பு நிறமான பாதரசக் கணிப்பொருள் வகை. இது சாயவேலைகளில் வண்ணப் பொருளாகவும் (நிறமி) அணுகலன்கள் தயாரிப்பதிலும் பயன்படுகிறது.

**cinque foil** : *(க.க.)* **ஐயிதழ் அணி**: ஐந்து இதழ்களையுடைய மலர் முகப்பு உருவம்.

**cir-cassian walnut** : **சர்கேசிய வாதுமை மரம்** : இது இளமஞ்சள் நிறமான வாதுமை மரம். இதில் கருநிறக் கோடுகளும் இருக்கும். இதன் வெட்டு மரம் 1900 முதல் முதல் உலகப் போரின் தொடக்கம் (1914) வரையில் அறைகலன்கள் தயாரிப்பதற்குப் பெருமளவு பயன்படுத்தப்பட்டது.

**circle** : *(கணி.)* **வட்டம்**: ஒரு மையப் புள்ளியிலிருந்து சுற்று வரையிலுள்ள ஒவ்வொரு புள்ளியும் சம தூரத்தில் இருக்குமாறு அமைந்த ஒரு வட்டமான சுற்று வரை. ஒரு வட்டத்தின் பரிதி 360 பாகங்களாகப் பகுக்கப்படுகிறது. இதன் ஒரு பாகம், பாகை எனப்படும்.

**circle marker** : *(வானூ)* **வட்ட மையக் குறியீடுகள்** : (விமான) நிலையத்தில் தரையிறங்கும் பரப்பிடத்தின் மையத்தை அல்லது பிரதானத் தரையிறங்கு தளங்களின்

குறுக்கு வெட்டினை ஏறத்தாழக் குறித்திடும் ஒரு வட்ட வடிவமான கட்டுக் கம்பி.

**cicircle shear** : *(உலோ.)* **வட்டக் கத்திரிப்பான்** : உலோகத் தகடுகளிலிருந்து வட்டங்களை வெட்டி எடுப்பதற்கான ஓர் எந்திரம். இதனைத் தேவையான விட்டத்திற்கு அமைத்துக் கொள்ளலாம்.

**circle trowel** : *(குழை.)* **வட்டச் சட்டுவம்** : சாந்து பூசுபவர்கள் (கொத்தனார்கள்) பயன்படுத்தும் உட்குழிவான அல்லது புடைப்பான அலகுடைய ஒரு சட்டுவக் கரண்டி. இது வளைவான மேற்பரப்புகளில் பூச்சு வேலைகள் செய்வதற்குப் பயன்படுகிறது.

**circuit** *(மின்.)* **மின் சுற்றுவழி** : ஒரு மின்னோட்டம் அதன் ஆதாரத்திலிருந்து அடுத்தடுத்து மின் கடத்திகள் வழியாகச் சென்று, மீண்டும் அது தொடங்கிய இடத்திற்கே திரும்பும் நெறிவழி.

**circuit breaker** : *(மின்.)* **மின்னோட்ட முறிப்பான்** : மின்னோட்டத்தைத் தடுக்கும் பொறி அமைப்பு. இது பொதுவாகத் தானியங்கும் விசைப் பொறியாக இருக்கும். இந்த விசை திறந்து, மின்னோட்டம் பாய்வதைத் தடுத்துவிடும்.

**circuit, etched**: *(மின்.)* **செதுக்கு மின்சுற்று வழி** : அமில அரிமானம் மூலம் உலோகத்தில் செதுக்கு வேலைப்பாடுகள் செய்வதற்குரிய மின் சுற்றுவழி.

**circuitry** : *(விண்.)* **மின்சுற்றுவழி அமைவு** : ஓர் ஏவுகணை அமைப்பில் பயன்படுத்தப்படும் மின்னியல் அல்லது மின்னணுவியல் சுற்று வழிகளின் நெறியமைவு.

**circular and angular measure**: **ஆரவட்ட மற்றும் கோண அளவை**:

60 வினாடி (″) = 1 நிமிடம் (′)
60 நிமிடம் = 1 பாகை (1°)
90 பாகை = 1 குவாட்ரண்ட் (வட்டகோணப் பகுதி)
4 குவாட்ரண்ட் = 1 வட்டம் (பரிதி)

**circular function** : *(கணி.)* **வட்டச் சார்பலன்** : கணிதத்தில் வட்டச் சார்பு செங்கோண முக்கோணப் பக்கத் தகவு.

**circular loom** : *(மின்.)* **வட்ட மின்காப்பு** : கூடுதலான மின்காப்புச் செய்வதற்கான அலோகக் குழாய். இந்தக் குழாய் அலோகப் பொருளால் செய்யப்பட்டது; தீப்பிடிக்காதது. இந்தக் குழாயினுள் மின் கம்பிகள் செலுத்தப் பட்டிருக்கும்.

**circular measure** : *(கணி.)* **ஆரவட்ட அளவை** : வட்டத்தில் ஆர அளவான நாண் வரையுடைய வில் வளைவுக் கோண அளவை.

**circular mill**: *(மின்.)* **விட்ட அலகு** : கம்பி முதலியவற்றின் விட்டத்தை அளப்பதற்கான அங்குலத்தில் ஆயிரத்தொரு பங்குடைய அலகு.

**circular milling machine** : *(எந்.)* **வட்டத் திருவு கருவி** : உலோகத் தகடுகளில் பள்ளங்களை வெட்டுவதற்கான கருவி.

**circular pitch** : *(பல்.)* **வட்ட இடைவெளி** : பல்லிணையில் ஒரு பல்லின் மையத்திலிருந்து அடுத்த பல்லின் மையத்திற்கு உள்ள தொலைவு.

**circular saw** : **வட்ட ரம்பம்** : ஒரு மைய அச்சினைச் சுற்றியுள்ள ஒரு வட்டத் தகட்டின் விளிம்பினைச் சுற்றி பற்கள் அமைந்துள்ள ஒரு வகை ரம்பம்.



ரம்பம்

**circulating current** : *(மின்.)*

**சுழல் மின்னோட்டம்** : ஓர் இணை மின் சுற்றுவழியில் பாயும் தூண்டு மற்றும் கொண்ம மின்னோட்டங் கள்.

**circumference** : **பரிதி-சுற்றளவு**: ஒரு வட்டத்தின் சுற்றளவு.

**circumlunar**: (விண்.) **நிலவு வலம்** : ஒரு விண்வெளிக்கலம் நில வை வலம் வந்து பூமிக்குத் திரும் பும் பயணம்.

**circumscribe** : **சுற்றி வட்டமிடு தல்** : வெட்டாத் தொடு வரை யாகச் சுற்றுவட்டமிடுதல். சுற்று வட்ட எல்லைக்குட்படுத்துதல்.

**ciseleur** : (உலோ.) **செதுக்கு ஒப்பனையாளர்** : உலோக வேலை யில் செதுக்கி ஒப்பனை செய்பவர்.


**cislunar** : (விண்.) **நிலவிடை வெளி** : பூமிக்கும் நிலவின் சுற்று வழிக்குமிடையிலான இடை வெளிப்பரப்பு.

**citizens band** ; (மின்.) **குடி அலை வரிசை** : தனிப்பட்ட குடி மக்கள் இயக்கும் இருவழி வானொ லிச் செய்தித் தொடர்புகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அலைவெண் அலைவரிசை. இதனை இயக்கு பவர்கள் தொழில்நுட்ப ஆய்வு களைத் தெரிவித்தல் ஆகாது.

**citric acid**: (வேதி.) **சைட்ரிக் அமிலம்** : நாரத்தை வகையைச் சேர்ந்த எலுமிச்சம்பழம், நாரத் தங்காய் போன்றவற்றிலிருந்து வடித்திறக்கிய ஒரு வகை அமிலம். இது காடிப் பொருள்கள் வகை யில் பதனீடு செய்யதக்க மூன்று நீரக அணுக்களையுடையது. இது புளிப்புச் சுவையுடையது. இது மருந்துகளிலும் நறுமணப் பொருள்களிலும், ரொட்டித் தொழிலிலும் பயன்படுகிறது.

**civil engineer** : **பொதுப்பணிப் பொறியாளர்** : கட்டிடங்கள், நெடுஞ் சாலைகள், இருப்புப் பாதைகள், எஃகுக் கட்டுமானங் கள் போன்ற பொதுப்பணிகளை வடிவமைத்து கட்டுமானம் செய்து பேணிக் காக்கும் பணியைச் செய் யும் பொறியாளர்.

**clamp** : (எந்.) **பற்றுக் கருவி** : வேலைப்பாடு செய் வதற்குரிய பொருள் களின் பகுதியைப் பற்றிக் கொள்வதற் கான ஒரு கருவி. இது இரும்பிலும், மரத்தி லும் அமைந்திருக் கும்.



பற்றுக் கருவி

**clamp coupling** : (எந்.) **பற்று இணைப் பிகள்** : இரண்டு அல் லது அவற்றுக்குமேற் பட்ட பகுதிகளை கொண்ட ஒரு சுழல் தண்டு இணைப்பி. இது குறுக்காயமைந்த மரையாணிகள் மூலமாக இறுகப் பற்றும்படி செய் யப்படுகிறது.

**clamp dog** : (எந்.) **பற்று வளை இருப்பாணி** : கடைசல் வேலை செய்ய வேண்டிய பொருள்களைப் பற்றி இணைத்துப் பிடித்துக் கொள்ளும் பகர வடிவ வளை இருப்பாணி. இதில் இரு குறட்டு அலகுகளும் இருமரையாணிகளும் பற்றிக் கொள்வதற்காக அமைந் திருக்கும்.

**clamping bars** : (வார்.) **பற்றுச் சலாகைகள்** : வார்ப்படத்தில் வாயுக்களின் விரிவாக்கத்தினால் விரிசல் ஏற்படாதவாறு தடுதது வார்ப்படத்தின் பகுதிகளை ஒருங் கிணைத்துப் பற்றிக் கொள்வதற் காகப் பயன் படுத்தப்படும் சலா கைகள். இந்தச் சலாகைகளைத் தக்கவாறு அமைத்து கொள்ள லாம்; அல்லது திண்மையாக வைத்துக் கொள்ளலாம்.

**clamping screw** : **பற்றுத் திருகு**: வேலைப்பாடு செய்ய வேண்டிய

பொருள்களை நெருக்கிப் பிடித்துக் கொள்கிற அல்லது ஒருங்கிணைத்துப் பற்றிக் கொள்கிற ஒரு வகைத் திருகி. இறுகப் பற்றிக் கொள்கிற ஒரு திருகினையும் இது குறிக்கும்.

**clap board** : (க.க.) **சாரல் தடுக்கு** : மழைச் சாரல் அடிக்காத படி கதவின் மீது சாய்வாகப் பொருத்தப்படும் பலகை.

**clapper box** : (எந்.) **இழைப்புப் பெட்டி**: ஒரு வார்ப்புப் பொறியில் உள்ள கருவியைப் பற்றிக்கொள்ளும் சாதனத்தின் ஊசலாடும் உறுப்பு. இது வேலைப்பாடு செய்ய வேண்டிய பொருளின் மீது திரும்பும் இழைப்பின் போது சரளமாகச் சாதனங்கள் செல்வதற்கு இடமளிக்கிறது.

**clap post** : **மூடு நிலைக்கால்** : ஒரு நிலையடுக்கின் கதவு மோதி மூடிக் கொள்வதற்காக அமைக்கப்பட்டடுள்ள செங்குத்தான நிலைக்கால்.


**classical** : (க.க.) **செவ்வியல்** : பண்டைய கிரேக்க, ரோமானியக் கட்டிடக் கலையினைக் குறிக்கும் சொல்.

**classic moulding** :(க.க) **செவ்வியல் வார்ப்படம்** : பண்டைய கிரேக்க, ரோமானியச் செவ்வியல் பாணிக் கட்டிடக் கலையில் பயன்படுத்தப்பட்டது போன்ற வார்ப்படம்.

**classification** : **வகைப்படுத்துதல்**: எளிதாக அடையாளங் கண்டு கொள்வதற்காக வகையியல்புகள் அல்லது பண்பியல்புகள் வாரியாக வகைப்படுத்துதல்.

**clavi chord** : **இசைக் கருவி** : இக்காலப் பியானோவுக்குமுன்னோடியாக விளங்கிய ஆதி இசைக் கருவி.

**claw coupling** : (எந்.) **வளைநக இணைப்பி** : சுழல் தண்டுகளை உடனடியாக இணைக்க வேண்டி



வளைநக இணைப்பி

யிருக்கும் நேர்வுகளில் பயன்படுத்தப்படும் ஒரு வகைத் தளர்வான இணைப்பி. இதில் வளைந்த நகம் போன்ற உகிருகள் அமைந்திருக்கும்.

**claw hammer** : (மர.) **வார்சுத்தியல்** : ஆணி பற்றி இழுக்கும் அமைவுடைய சுத்தியல். தச்சு வேலை செய்பவர் இதனை முக்கியமாகப் பயன்படுத்துகின்றனர்.

**clay** : (க.க.) **களிமண்** : இது சாதாரண மண் வகையைச் சேர்ந்தது. இது காய்ந்தால் இறுகலாக இருக்கும்; ஆனால் எளிதில் உடைந்துவிடும். ஈரமாக இருக்கும்போது குழைமத் தன்மையுடையது. செங்கல் தயாரிக்க இது உதவுகிறது.

**clay wash** : (வார்.) **களிமண் வண்டல்** : நீரில் கரைந்த களிமண் வண்டல். வாயடைப்பான்கள்; குடுவைகள் போன்றவற்றில் மேற்படலப் பூச்சுக்குப் பயன்படுத்தப் படுகிறது.

**clean**: (அச்சு.) **துப்புரவான பணி**: நன்கு அச்சிடப்பட்ட காகிதம்; அச்சுப் பணி; கறைபடியாமல் தூய்மையாக முத்திரையிடப் பட்ட மேலுறை .

**clean cut**: **மாசு மருவற்ற வேலைப்பாடு** : எந்திரத்தில் மாசு மருவற்றிருக்கும் மேற்பரப்பு.

மாசு மருவின்றிச் செய்யப்படும் வேலைப்பாடு.

**clean proof** : (அச்சு.) **மாசற்ற பார்வைப்படி** : திருத்தங்கள் அதி

கம் இல்லாத தெளிவான பார்வைப்படி.

இது திருத்தங்கள் மிகுந்த தெளிவற்ற பார்வைப்படிகளுக்கு நேர் மாறானது.

**clean thread** : *(எந்.)* **மாசற்ற இழை** : திருகில் கூர்மையாகவும், வழுவழுப்பாகவும், மாசு மருவின்றியும் இருக்கும் இழை.

**clearance** : *(எந்.)* **இடைவெளி** : (1) கடைசல் எந்திரத்தில் வெட்டு முனைக்கும், கடைசல் செய்ய வேண்டிய பொருளின் செங்குத்து நிலைக்கும் இடையிலான கோணம் 3° அளவுக்குக் குறையாமலும் 10° அளவுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.


(2) அண்மைப் பக்கங்களுக்கு இடையிலான திறந்த இடைவெளி அளவு.

**cleat** : **ஆப்பு** : ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் பிணைக்கும் நோக்கத்திற்காக அதனுடன் பிணைக்கப்படும் அல்லது சுவரில் ஆணியால் அறைந்து இறுக்கப்படும் மரத்தினாலான அல்லது உலோகத்திலான ஒரு துண்டு.

**cleavage**: **பிளவு**: பிளத்தல், பிரித்தல் அல்லது பிளவுறுத்தல். ஒரு பாறையில் ஒரு குறிப்பிட்ட முறையில் பிளவு ஏற்படும் போக்கு.

**cleft** : *(எந்.)* **வெடிப்பு** : இதுவும் ஒருவகைப் பிளவுதான். இது ரம்பத்தால் அறுத்த அல்லது வெட்டிய பிளவைவிட வலுவானது. இது மரக் கைப்பிடிகள் திருகுகள் முதலியவற்றில் பயன்படுத்தப்படுகிறது.

**clevis** : *(எந்.)* **வளைகம்பி** : கயிறு கம்பி இணைப்பதற்காக விட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள இருப்பு வளை கம்பி.



வளை கம்பி

**climp cut** : *(எந்.)* **ஏற்ற முறை வெட்டுதல்** : வெட்டு எந்திரத்தில் உலோகத்தை வெட்டுவதற்கான ஒரு முறை. இதில் வெட்டுங் கருவியின் சுழற்சித் திசையில் மேசை நகர்ந்து செல்கிறது.

**clinch** : *(பட்.)* **மடக்கி இறுக்குதல்**: ஆணியை அடித்து மடக்கி இறுக்குதல்.

**clinker rim**: *(தானி.)* **கட்டிறுக்கு வட்ட விளிம்பு** : இது ஒரு சக்கரத்தின் வட்ட விளிம்பு. இதன் இரு பக்கங்களிலும் விளிம்பு அல்லது வரிப்பள்ளம் அமைந்திருக்கும். அதில் டயரின் தட்டையான விளிம்பு பொருந்திக் கொள்ளும். காற்றடைக்கும்போது டயர் இந்த விளிம்பில் இறுக்கமாக அழுந்திக் கொள்ளும்.

**clinker** ; **சாம்பறகட்டி** : கொல்லுலைச் சாம்பற்கட்டி.

**clip angles** : *(பொறி.)* **பிடிப்புக் கோணங்கள்** : இரு உறுப்புகளை இணைப்பதற்குப் பயன்படும் சிறு சிறு தூண்களின் கோணங்கள்.

**clipper**: **அதிர்வுப் பிரிவு**: வீடியோ படத் தகவலிலிருந்து ஒரே கால நிகழ்வு அதிர்வுகளைப் பிரிப்பதற்குப் பயன்படும் ஒரு முறை.

**clipping** : **கத்தரித்தல்** : சில வகைத் துணிகளில் மேற்பரப்பு இழைகளை சமநீளத்திற்கு வெட்டிச் செம்மைப் படுத்துதல்.

**clock wise** : **வலஞ்சுழித்த** : கடிகார முள்செல்லும் திசையில் வலஞ்சுழித்து இடமிருந்து வலம்செல்லுதல்.

**clog** : **தடுப்பு** : முட்டுக் கட்டையிடுதல்; பளுவினால் இயக்கம் தடித்தல்; அந்நியப் பொருளால் இயக்கம் தடைபடுதல்.

**close**: (க.க.) **சுற்றெல்லை**: தலைமைத் திருக்கோயிலின் சுற்றெல்லை.

**closed circuit** : (மின்.) **முடிப்புச் சுற்றுவழி**: (1) மின் விசை ஆதாரத்திலிருந்து ஒரு புறச் சுற்றுவழியாகச் சென்று மீண்டும் ஆதாரத்திற்குத் திரும்பி வருகிற முழுமையான சுற்றுவழி. இது ஒரு கட்டுப்பாட்டு விசையினை அமைத்து நிகழ்த்தப்படுகிறது.

(2) வரையறுக்கப்பட்ட பார்வையாளர்களுக்கு மட்டும் உரிய தொலைக்காட்சி முறை.

**closed lock joint** : (உலோ.வே.) **முடிப்பூட்டிய இணைப்பு**: இருமுனைகளைக் கொக்கியால் பிணைத்து ஏற்படுத்தப்படும் ஒரு வகைப் பிணைப்பு. இந்தப் பிணைப்பில் ஒட்டவைப்பு செய்யப்படுவதில்லை.

**close fit** : **அணுக்கத் திருகிழை** : மிக நெருக்கமாவுள்ள இந்தத் திருகிழை மிகத்துல்லியம் தேவைப்படும் விமான உறுப்புகளில் பயன்படுத்தப்படுகிறது.

**close nipple** : (கம்.) **குறுகிய இழை** : சாதாரணக் குழாய் இழையினைவிட இரண்டு மடங்கு நீளமுள்ள இழை. இதில், இரு தொகுதி இழைகளுக்கிடையே தோள்மூட்டு எதுவும் இருக்காது.

**closure** : (க.க) **அடைப்பு** : ஒரு வழியின் முடிவிடத்தை அடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு செங்கலின் பகுதி.

**cloth of estate** : **அலங்காரத் திரைச் சீலை** : அரியணை மீது அல்லது சிம்மாசனத்தின் மீது அலங்காரமாகத் தொங்கவிடப்படும் திரைச் சீலை.

**cluster** : (மின்.) **சரவிளக்கு** : இரண்டுக்கு மேற்பட்ட விளக்குகளையுடைய விளக்குச் சரம். இந்த விளக்குகள் நெருக்கமான இடைவெளிகளில் அமைந்திருக்கும்.

**clustered**: (க.க.) **கொத்துச்சரம்**: திரண்ட கொத்தாகச் சேர்க்கப்பட்டுள்ள சரம்.

**clutch**: (தானி; எந்.) **ஊடிணைப்பி**: உந்து வண்டிகளில் இயங்குறுப்புகளை ஓடவும் நிறுத்தவும் செய்யும் பொறியமைப்பு. இதிலுள்ள மிதிகட்டையை அழுத்த உந்துவண்டி சக்கரம் நிற்கும்; மிதி கட்டையை விடுவிக்கும்போது சக்கரம் ஓடும்.

சுழல் தண்டுகளுக்கிடையே தற்காலிக இணைப்பை ஏற்படுத்தும் சாதனம்.

**clutch pedal** : (தானி; எந்.) **ஊடிணைப்பி மிதிகட்டை**: ஊடிணைப்பியை இணைக்கவும், துண்டிக்கவும் கூடிய இடதுகால் மிதிகட்டை.

**clutch pressure plate** : (தானி; எந்.) **ஊடிணைப்பி அழுத்தக் தகடு** : ஊடிணைப்பியின் ஒருங்கிணைப்பில், நெம்புகோல்களின் மீது ஏற்றப்பட்ட ஓர் உலோக வளையத்தின் பகுதி. திருகு சுழலான விற்சுருள்கள் இந்த ஊடிணைப்பித் தகட்டின் மீது அழுத்தம் உண்டாக்கி தேவையான உராய்வினை ஏற்படுத்தி விசையினை எஞ்சினிலிருந்து விசை ஊடிணைப்புக்கு அனுப்புகிறது.

**coal** : **நிலக்கரி** : பூமியிலிருந்து தோண்டியெடுக்கப்படும் பழுப்பு நிறமான அல்லது கருநிறமான கனிமப் பொருள். இது எளிதில் தீப்பற்றக் கூடியது. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய தாவரப்படிவு

களால் இது உண்டாகிறது. சுரங்கங்களிலிருந்து தோண்டியெடுக்கப்படும் இது முக்கியமாக எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. இதிலிருந்து பல முக்கிய வேதியியல் துணைப் பொருள்களும் கிடைக்கின்றன.

**coal gas** : **நிலக்கரி வாயு** : நிலக்கீலார்ந்த நிலக்கரியைச் சிதைத்து வடித்தல் மூலம் பெறப்படும் வாயு. இது விளக்கு எரிப்பதற்கும் வெப்பம் உண்டாக்குவதற்கும் பயன்படுகிறது.

**coal sizes** : **நிலக்கரி வடிவளவுகள்** : விற்பனை செய்யப்படும் நிலக் கீலற்ற நிலக்கரியின் வடிவளவுகள். இவை நிலக்கரி உட்செல்லக் கூடிய அல்லது மேற்செல்லக் கூடிய ஒரு துவாரத்தின் விட்டத்தின் அளவுகளில் அமைந்திருக்கும்.

| | உட் செல்வது | மேற் செல்வது |
|---|---|---|
| உடைந்தது | $4\frac{1}{2}$" | $3\frac{1}{4}$" |
| முட்டை வடிவம் | $3\frac{1}{4}$" | $2\frac{5}{16}$" |
| கணப்பகுப்பு | $2\frac{5}{16}$" | $1\frac{5}{8}$° |
| செஸ்ட்நட் | $1\frac{5}{8}$" | $\frac{7}{8}$" |
| பட்டாணி | $\frac{7}{8}$" | $1\frac{9}{9}$" |
| கோதுமை எண். 1 | $\frac{9}{16}$" | $\frac{9}{16}$" |

**coal tar**: **கீல் கரி எண்ணெய்** : கருநிற நிலக்கீல். இது நிலக்கரி வாயு உற்பத்தியில் உறைவிக்கப்பட்ட நிலக்கீலார்ந்த நிலக்கரியிலிருந்து வாலை வடித்தல் மூலம் வடித்திறக்கப்பட்டது. இது கலைத் துறையில் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது,

**coat** : **வண்ணப்பூச்சு** : வண்ணம், அரைச்சாந்து போன்ற பொருள்களை ஒரே சமயத்தில் மேற் படலமாகப் பூசுதல்.

**coated lens** : **மேற்படல ஆடிகள்** : சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சூடாக்குவதன் மூலம் உண்டாகும் மிக மெல்லிய மேற்படலம். இதன் மூலம் திறம்பாடு அதிகரிக்கிறது.

**coated paper** : **மேற்படலமிட்ட காகிதம்**: மிகவும் பளபளப்பாக்கப்பட்ட காகிதம். மிக உயர்ந்த ரக நுண்பதிவுப் பட வேலைப்பாடுகளுக்குத் தேவையான வழுவழுப்புடன் அல்லது மங்கலான மெருகுடன் இது தயாரிக்கப்படுகிறது.

**coaxial** : (கணி.) **பொது ஊடச்சுடைய** : நீள் வட்டம் அல்லது நிமிர் மாலை வட்டம் போன்ற ஒருங்கிணைகிற அச்சுக்களையுடைய எதுவும்.

**coaxial cable** : **பொது இருசுத் தந்திவடம்** : தந்தி, தொலைப்பேசி அறிகுறியீடுகளுடன் தொலை நோக்கிக் குறியீடுகளையும் ஒருங்கே அனுப்பும்படி பொருந்திய தந்தி வட அமைவு.

**cobalt** : (கனி.) **கோபால்ட்** : இது வெண்ணிறமான உலோகம். இது இரும்பு வகையைச் சேர்ந்தது. கடினமானது. இது அணு எண் 27 உடைய ஒரு தனிமம். உலோக வகையிலிருந்து நீல வண்ணப் பொருள் தயாரிக்க மிகவும் பயன்படுகிறது.

**cobalt blue** : **கோபால்ட் நீலம்** : வெண்ணிற உலோக வகையிலிருந்து உருவாக்கப்படும் நீல வண்ணப் பொருள்.

**cobaltcrom steel** : **கோபால்ட் குரோம் எஃகு** : இது ஓர் எஃகு உலோகக் கலவை. இதில் 1.5% கார்பனும் 12.5% குரோமியமும் 3.5% கோபால்ட்டும் கலந்திருக்கும். இது வெட்டுக் கருவிகள் தயாரிக்க ஏற்றது.

**cocaine** : (மருந்.) **கோக்கைன்** : தென் அமெரிக்காவைச் சேர்ந்த கோக்காச் செடி வகையிலிருந்து

எடுக்கப்படும், உடற்பகுதியை உணர்ச்சியிழக்கச் செய்யும் மருந்துச் சரக்கு. அறுவைச் சிகிச்சையின் போது வலி தெரியாமலிருக்க இது பயன்படுத்தப்படுகிறது.

**coccus** : (உயி.) **மூட்டுப்பூச்சி** : மூட்டுப் பூச்சித் தொடர்புடைய பூச்சி இனம்.

**cochineal** : (வேதி.) **செஞ்சாயம்**: இந்திர கோபம் எனப்படும் செந்நிறப் பூச்சி வகையிலிருந்து எடுக்கப்படும் செஞ்சாயப் பொருள்.

**cock** : **அடைப்பு முளை**: அடைப்பு முளை வடிவிலுள்ள ஒருவகை ஓரதர். இதில் திரவங்கள் அல்லது வாயுக்கள் செல்வதற்கான திறப்பு இருக்கும். இதனைக் கால் பகுதியளவு திருப்புவதன் மூலம் ஓரதர் திறக்கப்படுகிறது அல்லது மூடப்படுகிறது.

**cockle** : **மடிப்பு**: புத்தகத்தில் அளவுக்கு அதிகமாக ஈரம் ஊடுருவிப் படிந்துவிடும்போது காகிதத்தில் ஏற்படும் மடிப்பு, தாறுமாறான வடிவாக்கத்தையும் இது குறிக்கும்.

**cockling** : **சுருள்வித்தல்** : தாறுமாறாக உலர்த்துவதால் காகிதத்தில் உண்டாகும் அலை போன்ற ஓர விளிம்புகள்.

துணிகளின் மேற்பரப்பில் தாறுமாறாகச் சுருக்கம் உண்டாதல்

**cockpit**: (வானூ.)**விமானி அறை**: விமானத்தின் உடற்பகுதியில் விமானம் ஓட்டிகளுக்கு உரிய இருக்கைகள் அமைந்துள்ளஅறை. இந்த இருக்கைகள் முழுவதுமாகக் கொண்ட அறையைச் சிற்றறை என்பர்.

**cockpit cowling**: (வானூ.) **விமானி அறை மேல் மூடி**: விமானி அறையைச் சுற்றியுள்ள உலோகத்தாலான அல்லது ஒட்டுப் பலகையாலான மேல் மூடி.

**cocobolo** : (மர.) **கோக்கோபோலோ** : மத்திய அமெரிக்காவிலுள்ள செம்மரம் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவகை மரம். இதன் வெட்டுமரம் செந்நிறமாக கரும் பட்டைகளுடன் இருக்கும். இது மிகவும் கடினமானது; எண்ணெய்ப் பிசுக்குடையது. இது சுழற்சியாட்டப் பந்துகள் செய்ய கத்தி கைப்பிடிகள் செய்யவும் பயன்படுகிறது.

**coconut oil** : (வேதி.) **தேங்காய் எண்ணெய்** : தேங்காயிலிருந்து பெறப்படும் எண்ணெய். இது கடின நீர் சோப்புகள் செய்யப் பயன்படுகிறது.

**code** : **விதிமுறை** : வேலைப்பாடுகளிலும், பயிற்சி முறைகளிலும் முறையான தரநிலையைப் பேணுவதற்காக வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் தொகுப்பு. எடுத்துக்காட்டு: கட்டிட விதிமுறை.

**code beacon**: (வானூ.) **வழிகாட்டி ஒளி** : குறிப்பிட்ட அடையாளக் குறிகளுடன் கூடிய விமானத்திற்கு வழிகாட்டுவதற்கான வழிகாட்டும் ஒளி விளக்குகள்.

**coefficient** : (கணி.) **குணகம்** : கணிதத்தில் பெருக்கும் எண்ணாக பயன்படும் ஒரு முன்னடை எண்.

இயற்பியலில் ஒரு பொருளின் தரநிலையைக் குறிக்கும் எண்.

**coefficient of expansion** : (பொறி.) **விரிவாக்கக் குணகம்** : ஒரு பொருள் ஒரு பாகை வெப்பத்திற்கு எவ்வளவு நீளத்திற்கு விரிவடைகிறதோ அந்த அளவைக் குறிக்கும் காரணி.

**coefficient of friction** : **உராய்வுக் குணகம்** : ஒரு பொருளை ஒரு பரப்பிலிருந்து மற்றொரு பரப்பிற்கு நகர்த்துவதற்குக் கிடைநிலையில் பயன்படுத்தப்படவேண்டிய விசைக்குப் அந்தப் பொரு

வின் எடைக்குமிடையிலான விகிதம்.

**coeliac disease** : *(நோயி.)* **வயிற்று நோய்:** சிறு குழந்தைகள் சில வகை உணவுகளைச் செரிக்க முடியாமல் ஏற்படும் வயிற்று நோய். இது ஒரு பரம்பரை நோய் என்பர்.

**coercive force** : *(மின்.)* **வல்லந்த விசை** : எஞ்சிய காந்த சக்தியை பூச்சியத்திற்குக் குறைப்பதற்குத் தேவைப்படும் காந்த விசை.

**coffer** : *(க.க.)* **உட்கண்ணறை:** தளமுகட்டின் உட்குழிவான கண்ணறை.

**coffer dam** : **காப்பணை** : நீருக்கடியில் கடைகால் போட உதவும் நீர் புகாத கூண்டு அமைவு.

**cog** : *(எந்.)* **சக்கரப்பல்** : இயக்க விசை படர்விக்கும் எந்திரச் சக்கரத்தின் பல். சில சமயம் பல்லிணைகளைத் தவறாகப் பற்சக்கரம் என்கிறார்கள்.

**cogging** : *(உலோ.)* **உலோகக் கட்டியாக்குதல்** : உலோக வார்ப்புக் கட்டிகளை உருட்டுதல் அல்லது காய்ச்சி அடித்தல் மூலம் முழுதும் உருவாகாத உலோகக் கட்டிகளாக உருவாக்குதல்.

**cohesion** : *(இயற்.)* **அணுத் திரள் கவர்ச்சி** : ஒரே வகையான மூலகங்களிடையில் உள்ள கவர்ச்சி.

**coil** : *(மின்.)* **திருகு சுருள்** : வட்டத்திற்குள் வட்டமான வளைய அமைப்புடைய மின் இயக்கக் கம்பிச்சுருள். இதில் மின்னோட்டம் பாயும்போது ஒரு மின்காந்தப் புலம் உண்டாகிறது.

**coinage bronze** : *(உலோ.)* **நாணய வெண்கலம்** : நாணயம் அடிப்பதற்குப் பயன்படும் ஓர் உலோகக் கலவை. இதில் 95% செம்பும், 2.5% வெள்ளீயமும், 2.5% துத்தநாகமும் கலந்திருக்கும்.

**coincidental starter** : *(தானி; எந்.)* **ஒருங்கியங்கு தொடக்கி:** இது எந்திர இயக்கத்தைத் தொடங்கி வைக்கிற ஒரு வகை அமைவு. இதில் கால்மிதி முடுக்குக் கட்டையின் மூலம் தொடக்க இயக்க விசையும், பெட்ரோல் பாய்வும் ஒரே சமயத்தில் கட்டுப்படுத்தப் படுகிறது.

**coining** : *(உலோ.)* **நாணயமடித்தல்** : உலோகங்களில் முத்திரையிட்டு நாணயம் உண்டாக்குதல்.

**coir** : **நார்** : கயிறு செய்யப் பயன்படும் தென்னை நார், கயிறு, கால்மிதி, வடம், தரைவிரிப்பு முதலியன செய்யப் பயன்படுகிறது.

**coke** : **கல்கரி** : நிலக்கீலார்ந்த நிலக்கரியை அடைக்கப்பட்ட அடுப்புகளில் இட்டு சூடாக்குவதன் மூலம் வாயுக்களையும், மற்றத் தனிமங்களையும் எரித்து அகற்றிய பின் எஞ்சி நிற்கும் சுட்ட நிலக்கரி. ஒரு டன் நிலக்கரியிலிருந்து மூன்றில் இரண்டு டன் கல்கரி தயாரிக்கலாம். இதில் 90% கார்பன் கலந்திருக்கும். இது எரிபொருளாகப் பயன்படுகிறது.

**cold chisel** : *(உலோ. வே.)* **வல்லுளி** : அனலிலிடாமலேயே உலோகங்களை வெட்டும் ஒருவகை வல்லுளி. இது உலோகச் சிம்புகள் வெட்டுவதற்குப் பயன்படுகிறது.

**cold drawn** : *(உலோ.)* **தண் நீட்டல்** : அனலிலிடாமலே உலோகங்களைத் துளைப் பொறியிலிட்டு இழுத்து நீட்டுதல்.

**cold flow** : *(குழை.)* **உருமாற்றம்:** நெகிழ்திற வரம்புக்கு அதிகமான ஒரு விசையை இடைவிடாது பயன்படுத்துவதன் மூலம் உண்டா

கும் பரிணாம மாற்றம் அல்லது உருத்திரிபு.

**cold forming:** (உலோ.) **உலோக உருவாக்கம் :** உலோகத்தை வெட்டாமல் அதனைத் தேவையான வடிவத்தில் உருவாக்குதல். உலோகத்தை நிலைகுலைத்தல், புறம் உந்தித் தள்ளுதல், பதிவச்சு செய்தல், சம்மட்டியால் அடித்தல், உருட்டுதல், வளைத்தல், இழுத்தல், சுழற்றுதல் ஆகியவற்றின் மூலம் உருவாக்கம் செய்யலாம்.

**cold moulding :** (குழை.) **தண் வார்ப்படம் :** சாதாரண வெப்ப நிலைகளில் வடிவங்களை உருவாக்கி, பின்னர் சூடாக்குவதன் மூலம் கடினமாக்குகிற ஒரு செய்முறை.

**cold moulding compounds :** (குழை.) **தண்வார்ப்படக் கூட்டுப் பொருள் :** சாதாரண அறை வெப்பநிலையில் வடிவங்களை உருவாக்கி, பின்னர் சூளைகளில் சூடாக்கி கடினமாக்கப்படும் வார்ப்படங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படும் கூட்டுப் பொருள்கள்.

**cold rolled steel :** (உலோ.) **தண் உருட்டு எஃகு :** இதனை ஆழமற்ற மூட்டு அனல் உலையில் எஃகு செய்யும் முறையிலோ (திறந்த உலை), காய்ச்சி உருகு நிலையிலுள்ள கட்டிரும்பூடாகக் காற்றோட்டக் கீற்றுக்களைப் பாயவிட்டு அதிலுள்ள கரி-கன்மம் ஆகியவற்றை நீக்கும் பெஸ்ஸமர் முறையிலோ தயாரிக்கலாம். இதில் கார்பன் 0.2% முதல் 0.20% வரைக் கலந்திருக்கும். வெண்மையான பளபளப்பான பரப்புடையதாக இந்த எஃகு விற்பனை செய்யப்படுகிறது. எந்திர உதவியில்லாமலே இதனை வேண்டிய வடிவங்களில் அமைக்கலாம். இது கடினமானதாயினும் உறுதியான தன்று.

**cold rolling : தண் உருட்டல்:** எஃகினைத் தண் உருட்டல் செய்வதன் மூலம் அதற்கு மிக அதிகமான விறைப்புத் திறனை அளிக்கலாம். ஆனால், அப்போது அதன் உரப்பும், ஒசிவுத் திறனும் போய் விடும். தண் உருட்டல் எஃகு, வெப்ப உருட்டல் எஃகை விட அதிக வளவளப்புடையதாக இருக்கும்.

**cold saws: : தண் ரம்பங்கள் :** உலோகங்களை சுழல் ரம்பங்களால் அறுப்பதற்கான விசைப் பொறி.

**cold storage :** (குளி.) **குளிர் சேமிப்பு:** காய்கறிகள், பழங்கள், இறைச்சி, மீன் போன்ற அழுகும் பொருள்கள் பெருமளவுக் குளிர் பதன முறை மூலம் பாதுகாப்பாகச் சேமித்து வைத்தல்.


**collapsing tap :** (எந்.) **மடங்கு இழைப்புக் கருவி :** எந்திர முறையில் புரியாணி உள்வரி இழைப்பதற்குப் பயன்படும் ஒரு வகைக் கருவி. தானே திறந்திடும் வார்ப்புப் படிவங்களில் உள்ளது போன்ற அதே தத்துவமே இதிலும் பயன்படுகிறது. ஆனால் இதில் வினைகள் எதிர்மாறாக நடைபெறும். இழைக்குச் சேதமின்றி அதிக விரைவாக உள்வரி இழைப்பதற்கு இக்கருவி பயன்படுகிறது.

**collar beam :** (க.க.) **சாய்வு உத்தரம் :** சாய்வான இரண்டு உத்தரக் கைகளை இணைக்கும் விட்டம்.

**collar oiling :** (எந்.) **வளைய எண்ணெய்ப் பூச்சு :** அதிவேக எந்திரங்களில் இது பயன்படுத்தப்படுகிறது. தாங்கிகளிலுள்ள எண்ணெய்க் கலத்தில் செல்லும் ஒரு வளையம் இருசுக் கட்டையின் மீது கவிழ்க்கப்படுகிறது அல்லது அதனுடன் இணைக்கப்படுகிறது. வளையத்திலிருந்து எண்ணெயை

வழித்து, இருசுக் கட்டையின் மீது பரவலாகப் பூசுவதற்காகத் தாங்கியின் மேற்பகுதியில் துடைப்பான்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**collar screw :** *(பட்.)* **வளையத் திருகு:** இதுவழக்கமான கொண்டைத் திருகுபோலவே பயன்படுத்தப்படுகிறது.



வளைத் திருகு

**collar stud :** *(எந்.)* **வளையக் குமிழ் :** இந்த வளையக் குமிழ் ஒரு முனையில் குமிழையும், மறுமுனையில் ஒரு சுழல் தண்டினை அல்லது கதிரினையும் கொண்டிருக்கும். இவ்விரண்டினை குமிழின் உள்உறுப்பாகிய ஒரு வளையம் பிரிக்கிறது. இது பல்லிணைகளையும், தாங்கிகளையும் தாங்கிச் செல்ல உதவுகிறது.



வவளயக் குமிழ்

**collector : ஒப்பாய்வாளர் :** ஏடுகள், நூல்களின் பக்க ஒழுங்கு முதலியவற்றை ஆராய்ந்து ஒப்பிட்டுப் பார்ப்பவர்.

**collector ring :** *(மின்.)* **திரட்டு வளையம் :** இது ஒரு வட்ட வடிவமான செப்புத்துண்டு. ஒரு நிலையான உறுப்பிலிருந்து ஓர் இயங்கும் உறுப்புக்கு மின்னோட்டத்தைக் கொண்டு செல்வதற்காக ஒரு தூரிகை இந்த வளையத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும்.

**collet :** *(எந்.)* **வளையம் :** இது பற்றிக் கொள்வதற்கான ஒரு வளையம் அல்லது ஒரு பற்றுக் கருவி. கடைகளில் இதனைக் குதை குழிவுகளைக் குறிக்கப் பயன்படுத்துகின்றனர்.

**collodion : கோலோடியோன் :** ஒளிப்படத் தொழிலிலும், அறுவை மருத்துவத்திலும் பயன்படும் வெடியகக் கரைசல். இதில் ஆல்கஹாலும், ஈதரும் கலந்த ஒரு கலவையில் செல்லுலோசின் தரங் குறைந்த நைட்ரேட் கலந்திருக்கும். ஒரு பரப்பின் மீது ஒரு படலம் ஏற்படுத்துவதற்கு இது பயன்படுகிறது.

**colloid :** *(வேதி)* **கரை தக்கை :** கரைந்த நிலையிலும், சவ்வூடு செல்லுமளவு கலவாப் பொருளாகவும் உள்ள ஒரு கூழ் நிலைப் பொருள். 5—100 மில்லி மைக்ரோன் வடிவளவுள்ள துகள்கள் சிதறச் செய்யப்படும்போது கரை தக்கை நிலையடைகின்றன. பல்வேறு செயற்கைப் பிசின்கள் இந்த வகையைச் சேர்ந்தவை.

**collotype :** *(அச்சு.)* **அச்சுமென் தகடு :** புத்தகப் படங்கள், விளம்பரங்கள் முதலியவற்றை அச்சிடுவதற்காகக் கதிர்வேதி முறையில் உருவாக்கப்பட்ட மென்தகடு.

**colonial :** *(க.க.)* **குடியேற்றஞ் சார்ந்த :** அமெரிக்காவில் ஆதிக்கக் குடியேற்றக் காலத்திலிருந்து ஐக்கிய அமெரிக்க அரசு அமைக்கப்படும் வரையிலான காலத்தின் போது கையாளப்பட்டு வந்த கட்டிடக் கலைப்பாணி.

அமெரிக்கப் புரட்சிக்கு முந்திய காத்திய பாணி அறைகலன்களையும் இது குறிக்கும்.

**colonnade :** *(க.க.)* **தூண் வரிசை :** சம இடைவெளிகளில் நிறுத்தப்பட்ட தூண் வரிசை,

**colophon :** *(அச்சு.)* **அணியுரை :** ஏடு குறித்த தகவல்களைக் கொண்டிருக்கிற பழங்காலப் புற அணியுரை.

**colour : வண்ணம், நிறம் :** ஒரு மாலையின் அல்லது வண்ணக் கரைசலின் நிறக் கலவைகளில் ஏதேனும் ஒன்று, சில வண்ணங்களை ஈர்த்துக் கொள்ளவும், வேறு

சிலவற்றை இடமாற்றி அனுப்ப வும் இது பயன்படுத்தப்படுகிறது.

**colour filter** : **வண்ணத் திரைத் தகடு** : வேண்டிய சில ஒளிக்கதிர் களை மட்டும் ஊடுருவி விட வல்ல திரைத்தகடு.

**colour picture tube**; *(மின்.)* **வண்ணப்படக் குழல்**: தொலைக் காட்சியில், எதிர்மின் கதிர்க் கொடியைத் திருப்பி ஒளியியக்கத் திரைமீது வண்ணப்படமாக விழச்செய்யும் அமைவு.

**colour signal**: *(மின்.)* **வண்ணச் சமிக்கை**: வண்ணத் தொலைக் காட்சிப் படத்தில் வண்ண முனைப்புத் திறனைக் கட்டுப் படுத்துவதற்குப் பயன்படுத்தப் படும் சமிக்கை முறை.

**colour for tempering**: **பதமாக் கும் வண்ணம்**: எஃகு வகையினை அடுத்தடுத்து வெப்பமூட்டிக் குளி ரச் செய்வதன் மூலம் சரியான உறுதியும் நீட்டிப்பு ஆற்றலும் உடைய நிலைக்குப் பதப்படுத்துங் கால், வெண்மை, இளம்பழுப்பு, அடர் நீலம், கருஞ்சிவப்பு ஆகிய நிறங்கள் தோன்றுகின்றன. தேவையான கடினத் தன்மையைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட நிறம் தோன்றும்போது எஃகின் பத னாக்கம் கண்டறியப்படுகிறது.

**colour form**: *(அச்சு.)* **வண்ண உருப்படிவம்**: அச்சுப் பணியில் இரண்டாம் வண்ணஅச்சுப்பதிப்பு உருப்படிவம்.

**colour-harden**: *(உலோ.)* **வண் ணச் செறிவூட்டுதல்**: பரப்பில் கரி யக மூட்டுவதன் மூலம் இரும்பைக் கடும் பதப்படுத்துவதன் வாயிலாக ஒரு கவர்ச்சியான வண்ணத்தை உண்டாக்குதல்.

**colour proof**: *(அச்சு.)* **வண்ணப் பார்வைப் படிகள்**: அச்சுருப் பதிவு செய்யப்பட்ட வண்ண அச்சுப் பதிவுத் தகடுகளிலிருந்து எடுக்கப் பட்ட பார்வைப் படிகள்.

**colour proofs - progressive**: *(அச்சு.)* **படிப்படியான வண்ணப் பார்வைப் படிகள்**: ஒவ்வொரு வண் ணத்திற்கும் தனித்தனி அச்சுப்பதி வுத் தகடுகளை எடுத்து, ஒரு வரி சை முறையில் அடுத்தடுத்து வண் ணங்களை அச்சிட்டு ஒருங்கிணை வாக எடுக்கப்பட்ட தனிப் பார் வைப் படிகள்.

**colour scheme**: **நிற அமைப்புத் திட்டம்**: ஓர் அச்சுப் பணிக்காக வண்ணங்களைப் பொதுவாகக் கலந்து அமைப்பதற்கான திட்டம்.

**colour work**: *(அச்சு.)* **வண்ண வேலைப்பாடு**: பொதுவாக இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட வண்ணங்களில் அச்சிடு வதற்கான வண்ண அச்சுப் பதி வுத் தகடுகளைக் குறிக்கும் சொற் றொடர்.

**colt's armory press**: *(அச்சு.)* **கோல்ட் கட்டி அச்சு எந்திரம்**: அச்சு தாள் அழுத்தும் தகட்டுப் பாள முறையில் அச்சிடக்கூடிய ஒரு வகைக் கனரக அச்சு எந்திரம்.

**column**: *(க.க.)* **(1) தூண்**: நீள் வாக்கு அச்சின் திசையில் அழுத் தத்தைத் தாங்கக்கூடிய நிமிர் நிலையான தூண்.

**(2) பத்தி**: பத்திரிகைகளில் பக்கத் தின் அகலக் கூறான பத்தி நிரல்.

**combination**: *(வேதி.)* **தனி இணைப்பு**: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமங்களின் இணைப்பு.

**combination chuck**: *(எந்.)* **இணைப்புக் கவ்வி**: பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒரு பற்று கருவி. இது தற்சார்பான தடைச் செயல் முறையினையும் கொண் டிருக்கும்.

**combination die:** (எந்.) **இணைப்பு வார்ப்புப் படிவம்:** ஒரு பாளத்தில் கோட்டுக் குறிவெட்டுவதற்கும், அந்தப் பாளத்தில் தேவையான வடிவங்களை வரைவதற்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்ட வார்ப்புப் படிவம்.


**combination drill counter sink : இணைப்பு துரப்பணம் மற்றும் பள்ளம் :** ஒரு கடைசல் எந்திரத்தின் மையங்களிடையே பிடித்துக்கொண்டு மையக் குறியிடுவதற்குப் பயன்படுகிறது.

பார்க்க மையத் துரப்பணம்.

**combination halftone:** (அச்சு.) **இணைப்பு நுண்பதிவுப் படம் :** இரு மறி நிலைத் தகடுகள் தேவைப்படுகிற நுண்பதிவுப் படமும் வரித் தகவுகளும் கொண்ட ஒரு செதுக்குருவம்.


**combination plate :** (அச்சு.) **இணைப்பு அச்சுத் தகடு :** நுண்பதிவுப் படமும், கோட்டு வரியும் ஒருங்கிணைவாக ஒரே தகட்டில் செதுக்கப்பட்டுள்ள ஒரு தகடு.

**combination pliers : இணைப்புச் சாமணம் :** ஒரு நகரும் இணைப்பு மூலமாக வேண்டிய வடிவளவுக்கு வாய்திறக்கச்செய்யும் வகையில் தக்கவாறு அமைத்துக் கொள்ளக்கூடிய ஒருவகைக் குறடு இதன் புற அலகில் அளவுகள் குறிக்கப்பட்டிருக்கும். உள் அலகு உருண்ட பொருள்களைப் பற்றக் கூடிய வகையில் தடங்கொண்டதாக இருக்கும்.



இணைப்புச் சாமணம்

**combination square:** (பட்.)



இணைப்புச் சதுரச்சட்டம்

**இணைப்புச் சதுரச் சட்டம்:** நகரக் கூடிய ஒரு சதுரக் கொண்டையுடன், சரியான காப்பு மட்டமும், மையக் கொண்டையும் உடைய ஒரு சதுரச் சட்டம்.

**combination switch :** (மின்.) **இணைப்பு விசை :** அழல் மூட்டுவதையும், ஒளியையும் கட்டுப்படுத்துவதற்காக உந்து வண்டிகளில் பயன்படுத்தப்படுவது போன்ற ஒரு விசை.

**combustion :** (வேதி.) **கனற்சி:** எளிதில் தீப்பற்றும் தன்மையுடைய ஒரு பொருள். ஆக்சிஜனுடன் வேதியியல் முறையில் ஒருங்கிணைந்து வெப்பம் உண்டாக்கும் விளைவு.

**combustion chamber :** (தானி., எந்.) **கனற்சிக் கலம் :** நீள் உருளையில் உந்து தண்டிற்கு நேர் மேலே நீள் உருளையின் கொண்டையில் உள்ள இடைவெளி.

**commericial efficiency of dynamo : நேர்மின்னாக்கி வாணிகத் திறம்பாடு :** இது உட்பாட்டினை வெளிப்பாட்டினால் வகுப்பதன் மூலம் அறுதியிடப்படுகிறது. இது சதவீதத்தில் குறிப்பிடப்படும்.

$$\text{திறம்பாடு} = \frac{\text{வெளிப்பாடு}}{\text{உட்பாடு}}$$

**commercial efficiency of motor:** (மின்.) **மின்னோடியின் வாணிகத் திறம்பாடு :** விசை தடுப்புக்கு திரைத் திறனை மின்விசைக் குதிரை திறனால் வகுப்பதால் கிடைக்கும் ஈவு; அல்லது வெளிப்பாட்டினை உட்பாட்டினால் வகுத்துச் சதவீதத்தில் குறிக்கும் அளவு.

**commercial flux : வாணிக இளக்கி :** ஒரு வாணிகப் பெயரில் விற்பனை செய்யப்படும் ஓர் இளக்கும் பொருள். இது ஒட்டவைப்பு. பொடி வைத்திணைத்தல், பற்ற

வைத்தல் ஆகியவற்றில் பயன்படுத் தப்படுகிறது.

**comminute : நுண்துகளாக்குதல்:** திடப்பொருள்களை அரைத்தல் அல்லது தூளாக்குதல் மூலம் நுண் துகள்களாகச் செய்தல்.

**common brick : பொது ஆதாரச் செங்கல்:** கரடுமுரடான வேலைக்கு அல்லது பள்ளம் நிரப்புவதற்கு அல்லது சாய்வு அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் செங்கல்,

**common base :** *(மின்.)* **பொது ஆதாரம்:** ஒரு மின்மப்பெருக்கி (டிரான்சிஸ்டர்) மின்சுற்று வழி. இதில் உட்பாட்டு, வெளிப்பாட்டு மின்சுற்றுவழிகள் பொதுவான ஆதாரத்தைக் கொண்டிருக்கும்.

**common collector :** *(மின்.)* **பொதுத் தொகுப்பான் :** உட் பாட்டு, வெளிப்பாட்டு மின்சுற்று வழிகளுக்குத் தொகுப்பான் பொது வாக அமைந்துள்ள ஒரு மின் பெருக்கிச் சுற்று வழி.

**command :** *(கணிப்.)* **ஆணைச் சமிக்கை :** (1) ஒரு நிகழ்வை அல் லது செயல் முறையைத் தொடக்கி வைக்கிற ஆணைச் சமிக்கை.

(2) கணிப்பொறியில், ஓர் அறி வுறுத்தத்தின் விளைவாக நிகழ்கிற பல சமிக்கைகளின் ஒரு தொகுதி.

**common emitter :** *(மின்.)* **பொது உமிழ்வான் :** உட்பாட்டு, வெளிப்பாட்டு மின்சுற்று வழிக ளுக்கு உமிழ்வான் பொதுவாக அமைந்துள்ள ஒரு மின்பெருக்கிச் சுற்றுவழி.

**common rafter :** *(க.க.)* **பொதுக் கைமரம்:** ஒரு கூரையின் எந்தப் பகுதிக்கும் பொதுவான இறைவரக் கைமரம்.

**commutating flux :** *(மின்.)* **திசைமாற்றுப் பெருக்கு:** தன் தூண் டல் மின்னியக்க விசையைச் சமனப்படுத்துவதற்கான மின் னியக்க விசையை உண்டாக்கு வதற்குத் தேவையான மின் பெருக்கு.

**commutating pole :** *(மின்.)* **திசைமாற்று முனை :** மின்னக மின் னோட்டங்களின் குறுக்குக் காந்த மூட்டுதலை ஒரு நேர் மின்னாக்கி யின் இரு முனைகளுக்குமிடையில் செருகப்படும் ஒரு மின்காந்தச் சலாகை.

**commutation :** *(மின்.)* **திசை மாற்றம் / நுதல் :** பார்க்க : திசை மாற்றி.

**commutator :** *(மின்)* **மின் னோட்டத் திசைமாற்றி :** மின் னோட்ட அலைகளைத் திசை மாற்றித் திருப்பி விடும் கருவி.

**compact car :** *(தானி.)* **கச்சித மான கட்டமைவான உந்து வண்டி :** எளிதாக நிறுத்தி வைப்பதற்கும், குறைந்த செலவில் பேணுவதற்கும் குறைந்த அளவு எரிபொருளில் அதிகதூரம் செல்வதற்கும் ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்ட கச் சிதமான உடலமைப்புக் கொண்ட ஓர் உந்துவண்டி.

**comparator :** *(பட்.)* **ஒப்பீட்டு அளவி :** இது ஜேம்ஸ் ஹார்ட்னஸ் என்பவரால் வடிவமைக்கப்பட்ட பொறியமைவு. திருகிழைகளையும் அவை போன்ற உறுப்புகளை யும் அளவிடுவதற்கு இது பயன்படு கிறது. திருகிழையை விரும்பிய அளவுடன் ஒப்பிடுவதற்கு ஒரு வரைபடத்தில் விழும் விரிவான நிழலை விழவைத்து இந்த அளவீடு செய்யப்படுகிறது.

**compass : திசைகாட்டி :** வட்ட மான மேற்பரப்பில் அளவுகள் குறிக்கப்பட்டு வட்டமாகச் சுழ லும் முள்ளினைக் கொண்ட ஒரு கருவி. முள்ளின் முனையைக் கொண்டு திசையை அறியலாம்.

மின்னியலில், மையுதைதுல சம நிலையிலுள்ள ஒரு நிரந்தரமான

காந்தமுள். பூமியின் மேற்பரப்பின் திசைகளை அறிவதற்காக இந்த முள் ஒரு வரைபடத்திற்கு மேலே அமைக்கப்பட்டிருக்கும்.

**compass plane** : **இழைப்புளி** : வளைந்த மரத்தை மழமழப்பாக்கும் ஒரு கருவி.

**compass saw** : *(மர.வே.)* **வளைவு ரம்பம்**: வளைவாக வெட்டும் ரம்பம். சிறுசிறு வட்டங்களை வெட்ட இது உதவுகிறது.

**compatibility**: *(மின்.)* **ஒத்தியல்பு**: தொலைக்காட்சியில் நிறமிலி அமைவு ஒளிநிழல் வண்ணம் மட்டும் ஏற்கும் நிலை.

**compendium** : **செறிவடக்க ஏடு** : ஒரு பெரிய ஏட்டின் சிறு சுருக்கப் பதிப்பு. இதில் ஏட்டின் நுதல் பொருள் விரிவாக இல்லாமல் சுருக்கமாக அமைக்கப்பட்டிருக்கும்.

**compensated wattmeter** : *(மின்.)* **ஈடுசெய் மின்விசை மானி** : உள்நிலை மின் இயக்கக் கம்பிச் சுருளுடன் ஒரு தொடர் வரிசையில் இணைக்கப்பட்டுள்ள ஓர் ஈடு செய் மின் கம்பிச் சுருளையுடைய ஒரு மின் விசைமானி. உள்நிலை மின் இயக்கக் கம்பிச் சுருளில் எந்திர இயக்கம் காரணமாக உண்டாகும் விசை உறிஞ்சலினால் ஏற்படும் பிழையைத் திருத்துவதற்கு உதவுகிறது.

**compensating coil** : *(மின்.)* **ஈடுசெய் மின்கம்பிச் சுருள்** : ஒரு மின் மானியிலுள்ள மின்கம்பிச் சுருளில் ஏற்படும் எந்திர உராய்வினை ஈடுசெய்வதற்கு உதவும் ஒரு மின் கம்பிச் சுருள்.

**compansator** : *(மின்.)* **ஈடுசெய் கருவி** : பெரிய மாற்று மின்னோட்டத் தூண்டு மின்னோடிகளை இயக்குவதற்கான ஒரு விசை அமைப்பினைக் கொண்ட ஒரு தானியங்கி மின்மாற்றி.

**compensator** : *(மின்.)* **ஈடுகட்டு மின் மாற்றி** : பெரிய மாற்று மின்னோட்டத் தூண்டு மின்னோடிகளின் இயக்கத்தைத் தொடங்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு தானியங்கி மின்மாற்றி.

**complementary angles**: *(கணி.)* **நிரப்புக் கோணம்** : செங்கோண அளவாகிய 90° கோணத்தில் குறைபடும் கோணத்தின் அளவு.

*(உ-ம்: 90° கோணத்தின் நிரப்புக் கோணம் 30° (90-60 = 30).*

**complementary colour** : **குறைநிரப்பு வண்ணம்**: ஒருங்கிணைக்கப்படும்போது வெண்மையான அல்லது ஏறத்தாழ வெண்மையான ஒளியை உண்டாக்குகிற இரு வண்ணங்களில் ஒரு வண்ணம்.

**completed circuit** : *(மின்.)* **நிறைவுறு மின் சுற்றுவழி** : மின்னோட்டத் தொடர்பு முற்றுவிக்கப்பட்ட ஒரு மின் சுற்றுவழி. இதனை முடிப்பு மின் சுற்றுவழி என்றும் கூறுவர்.

**complex** : **பல்திறக் கூட்டொருமை** : பல்வேறு உறுப்புகளின் சிக்கலான பல்கூட்டுத் தொகுதி.

**complex steel**: *(உலோ.)* **கலவை எஃகு** : இரண்டுக்கு மேற்பட்ட உலோகக் கலவைத் தனிமங்களை கொண்ட எஃகு.

**complicate** : **சிக்கலாக்கு** : கையாள்வதற்கு கடினமாக இருக்குமாறு குளறுபடியான சிக்கலாக்குதல்.

**compo board** : **காரை அட்டை** : சுவரை அழகு செய்யப் பயன்படும் சிமிட்டி கலந்த காரை கொண்ட பசைக் கலவப் பொருள்.

**component**: **அமைப்பான்**: இணைவாக்க விளைவினை உண்டாக்கு

வதற்கு ஒருங்கிணைகிற பல்வேறு விசைகளுள் ஒன்று.

**composing machines** : *(அச்சு.)* **அச்சுக்கோப்பு எந்திரம்** : எந்திர முறையில் அச்சுக் கோப்பதற்கான எந்திரங்கள். தனித்தனி அச்சுரு வங்களை வார்த்து அமைக்கும் எழுத்துருக்கு அச்சுப்பொறி. அச்சுருக்கோப்பு இல்லாமலே எழுத்துருக்களை விரிப்பள்ளங்களாக உருக்கி வார்த்து அமைக்கும் வரி உருக்கு அச்சுப்பொறி போன்றவை இந்த வகையைச் சேர்ந்தவை.

**composing room** : *(அச்சு.)* **அச்சுக்கோப்பு அறை** : அச்சிடுவதற்காக அச்சுக்கோப்பு, செய்தலும், அவற்றைப் பக்கப் படிவங்களாக உருவாக்குதலும் நடைபெறும் அறை.

**composing rule** : *(அச்சு.)* **அச்சுக்கோப்பு இடைவரித்தகடு** : இது பித்தளையால் அல்லது எஃகினாலான ஒரு தகடு. இது சாதாரணமாக இரு புள்ளி கனமுடையதாக இருக்கும். இதில் அச்செழுத்துகளை அடுக்கி அச்சுக்கோப்புச் செய்வார்கள்.

**composing stick** : *(அச்சு.)* **அச்சுக்கட்டை** : பெட்டி போன்ற அச்சுக்கோப்புக் கருவி. இதில் அச்செழுத்துகளை வரிவரியாக அடுக்குவர்.

**composite order** : *(க.க.)* **பல்வகைப்பாணி** : கட்டிடக் கலையில் பல்வகைப் பாணிகள் மிடைந்து மிளிர்கிற கலவை.

**composite signal** : *(மின்.)* **கூட்டுச் சமிக்கை** : படத்தகவல், வெறுமையாக்கம், ஒருமித்த நிகழ்வுச் சமிக்கைகள் உட்பட தொலைக் காட்சிச் சமிக்கைகள்.

**composition** : **இணைப்பாக்கம்** : பல உறுப்புகளை ஒருங்கிணைத்து ஒரு முழு உருவத்தை உருவாக்குதல்.

நுண் கலையில் கலைப் படைப்பின் பொதுவான அமைப்பு முறை.

அச்சுக்கலையில் அச்சுக்கோப்பு, அச்சுப்பக்கம் ஆக்குதல் முதலிய பணிகளின் ஒருங்கிணைப்பு.

**composition of forces** : *(எந்.)* **விசைகளின் இணைப்பாக்கம்** : பல்திற விசைகள் ஒரு முகமாகச் செயற்படுமாறு செய்வதற்கான தனியொரு விசையினைக் கண்டறியும் முறை.

**compositor** : *(அச்சு.)* **அச்சுக் கோப்பவர்** : அச்செழுத்துக்களை கையினால் அச்சுக் கோப்பவர்.

**compound** : *(வேதி.)* **கூட்டுப் பொருள்** : இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட தனிமங்கள் குறிப்பிட்ட விகிதத்தில் ஒருங்கிணைந்து தம் இயல்புமீறிய புதுப் பண்புகளுடன் புதுப்பொருளாகும் நிலையுடைய கலவை.

**compound arch** : *(க.க.)* **கூட்டுக் கவான்** : பொது மையமுள்ள பல கவான்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுத்தடுத்து அமைத்து அமைக்கப்பட்ட ஒருவகை கவான்.

**compound circuit** : *(மின்.)* **கூட்டு மின் சுற்று வழி** : வரிசைத் தொடரில் இணையாக இணைக்கப்பட்ட தடையமைவுகளைக் கொண்ட, மின் சுற்று வழிகள்.

**compound generator** : *(மின்.)* **கூட்டு மின்னாக்கி** : பார்க்க: கூட்டுச் சுருணை.

**compound motor** : *(மின்.)* ரம்: **கூட்டு மின்னோடி** : பார்க்க : கூட்டுச் சுருணை.

**compound rest** : *(எந்.)* **கூட்டு ஆதாரம்** : கடைசல் எந்திரத்தில் இரண்டாம் நிலைச் சறுக்குத்தளக் கருவி ஆதாரமும், குறுக்குச் சறுக்

குத் தளத்தின் மேல் ஏற்றப்பட்டுள்ள சுழல் தகடும் ஆகும். இதன் மூலம் கடைசல் எந்திரத்தின் ஊட்டத்தினைச் சார்ந்திராமல் கையினால் ஊட்டுவதற்கு முடிகிறது. இது தேவையான கோணத்திற்குத் திரும்புவதற்கு இது உதவும்.

**compound sliding table**: *(எந்.)* **கூட்டுச் சறுக்குத் தளப் பலகை**: வேலைப்பாடு செய்ய வேண்டிய பொருளை மரையாணியால் பிணைத்து வைத்துக்கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ள எந்திர சாதனத்தின் பலகை. இதில் நீளவாக்கிலும் குறுக்குவாக்கிலும் நகர்வதற்கான இரு அமைப்புகள் அமைக்கப்பட்டிருக்கும்.

**compound wound**: *(எந்.)* மின்வாய் முனைகள் ஒவ்வொன்றிலும் உள்ள இணைப்புலச் சுருணையின் ஒரு பகுதியின் உச்சியில் ஒரு தொடர்புலச் சுருணையின் ஒரு பகுதி சுற்றி வைக்கப்பட்டுள்ள ஒரு மின்னாக்கி அல்லது மின்னோடி.

**compound wound continuous current dynamo**: *(மின்.)* **கூட்டுச் சுருணை தொடர் மின்னோட்ட நேர் மின்னாக்கி**: இது நேர் மின்னோட்டத்தை உண்டாக்கும் ஒரு மின்னாக்கி. இதில் அதன் இணைப்புலத்திற்கும் தொடர் புலத்திற்கும் இடையில் ஒரு திரள் இணைப்பு பயன்படுத்தப்படுகிறது. இதனால் புலத்தின் வலிமை அதிகரிக்கிறது. மின்னோட்ட அளவும் அதிகரிக்கிறது; சேர் முனையில் மின்னழுத்தம் இயல்பாகக் குறையும் போக்குத் தடுக்கப்படுகிறது.

**compressed air**: **அழுத்தியகாற்று**; காற்றழுத்தத்தால் இயங்கும் கருவிகளுக்கு விசையளிக்கும் ஆதாரமாக இருக்கும் அளவுக்கு அழுத்த மூட்டிய காற்று.

**compressibility**: *(இயற்.)* **அழுத்தத் திறன்**: இது பருப்பொருள்களின் ஒரு பண்பு. அழுத்தத்தினால் பரும அளவு குறையும் தன்மை.

**compressing**: **அழுத்திச் செறிவாக்கம்**; ஒரு புத்தகத்திற்கு உறையிட்டவுடன் அதனை ஒரு பெரிய அழுத்து கருவியில் வைத்து இறுக்கமாக அழுத்தி அது காயும் வரை வைத்திருப்பார்கள். இதனை 'அழுத்திச் செறிவாக்கம்' என்பர்.

**compression**: **அழுத்தம்**: அழுத்தம் கொடுத்து அடர்த்திச் செறிவாக்குதல். இது இழுப்பு விசைக்கு நேர்மாறானது.

**compression braking**: *(தானி; எந்.)* **அழுத்தத்தடை**: உந்துவண்டி ஒரு குன்றிலிருந்து இறங்கும் போது தடைவிசை ஏற்படுத்துவதற்காக எஞ்சினின் அழுத்தத்தைப் பொறுத்து, எஞ்சினுக்குச் செல்லும் வாயுவின் அளவைக் குறைத்துத் தடையுண்டாகுமாறு செய்தல்.

**compression coupling**: *(எந்.)* நுனிநோக்கிச் சிறுத்துச் செல்லும் பிணைப்பு உறுப்பு. இணைத் தண்டுக்கு இணையாகப் பல மரையாணிகள் வரிசையாக அடிக்கப்படும்போது இது இணைத் தண்டினை இறுகப் பற்றிக் கொள்கிறது.

**compression gauge**: *(தானி; எந்.)* **அழுத்த அளவி**: கனற்சி அறையிலுள்ள வாயுக்களின் மீதான அழுத்தத்தினை ஒரு சதுர அங்குலத்திற்கு இத்தனைபவுண்டு என்ற அளவில் பதிவுசெய்யக் கூடிய ஓர் அளவுமானி.

**compression ignition engine**: *(வானூ.)* **அழுத்த சுடர் மூட்டு எந்திரம்**: இந்த வகை எந்திரத்தில் எரிபொருள் நீள் உருளையில்

தெளிக்கப்பட்டு, காற்றினை அழுத்துவதால் உண்டாகும் வெப்பத்தின் மூலம் சுடர் மூட்டப்படுகிறது.

**compression moulding:** (குழை.) **அழுத்த வார்ப்படம்:** இது பிளாஸ்டிக்கில் வார்ப்படஞ் செய்வதற்கான ஒரு முறை. இது சூட்டால் நிலையாக இறுகுந் தன்மையுடைய பிளாஸ்டிக் கூட்டுப் பொருள்களை ஆக்கப் பொருளாக வடிவாக்கம் செய்வதற்குப் பயன்படுகிறது. இந்த முறையில் முன்னரே சூடாக்கப்பட்ட வார்ப்படக் கூட்டுப் பொருள் ஒரு திறந்த வார்ப்படத்தில் ஊற்றப்பட்டு, வார்ப்படம் மூடப்படுகிறது. கீழ்நோக்கி இயங்கும் ஓர் அழுத்தக் கருவி மூலமாக வெப்பமும் அழுத்தமும் செலுத்தப்படுகிறது. இதனால் வார்ப்படக் கூட்டுப் பொருள் மென்மையடைந்து, பள்ளங்களில் அழுந்திப் பதிந்து வேதியியல் மாற்றத்திற்குள்ளாகி இறுக்கமடைகிறது.

**compression ratio:** (தானி. எந்.) **அழுத்த விகிதம்:** உந்து வண்டியில் சுழல்தண்டு கீல்நிலை வீச்சின் இறுதியில் இருக்கும்போது உள்ள வாயுமண்டல அழுத்தத்திற்கும், அழுத்த வீச்சின் உச்சநிலையில் சுழல் தண்டு இருக்கும்போது உள்ள அழுத்தத்திற்குமிடையிலான விகிதம். இது அழுத்த அளவுகளில் கணக்கிடப்படுகிறது.

**compression ring:** (தானி.எந்.) **அழுத்த வளையம்:** இது சுழல் தண்டுக்கான ஒருவகை வளையம். இது அழுத்த இழப்பீட்டினைக் குறைப்பதற்கும் எண்ணெய் முத்திரையை நிலைப்படுத்தி வைப்பதற்கும் பயன்படுகிறது. சுழல் தண்டில் உச்சியிலும் இரண்டாவதாகவும் உள்ள வளையங்கள் இந்த வகையினதாக இருக்கும்.

**compression spring:** (எந்.) **அழுத்த விற்சுருள்:** இது திருகு சுழலான ஒருவகை விற்சுருள். இது அழுத்தத்தின் கீழ் செயற்படும்போது குறுகலாகும் தன்மையுடையது.



விற்சுருள்

**compression stroke:** (தானி. எந்.) **அழுத்த வீச்சு:** ஒரு நான்கு சுழற்சி எந்திரத்தில் உள்ள சுழல் தண்டின் இரண்டாவது வீச்சு. உள்ளிழுப்பு ஓரதர், வெளியேற்று ஓரதர் இரண்டும் மூடியிருக்கும் போது இந்த வீச்சு உண்டாகிறது.

**compressor:** (குளி.) **அழுத்தி:** ஒரு குளிர்பதனச் சாதனத்தில் அழுத்தப்பட்ட சூடான வாயு குளிர்பொருளைத் திரவ நிலைக்கு மாற்றுவதற்காக வடிகலத்திற்குள் செலுத்துவதற்கான இறைப்பான்.

**compressive strength:** (பொறி.) **அழுத்த வலிமை:** குறுகலாக்குவதற்கு அல்லது நெருக்குவதற்கு அழுத்த முனையும் விசைகளுக்கான தடை.

**computer:** (கணி.) **கணிப்பொறி:** சிக்கலான கணிதவியல் கணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்குரிய தகவல்களை உட்புறத்தில் சேமித்து வைத்திருக்கும் ஒரு பொறியமைவு. எண்மானக் கணிப்பொறிகள் எண்மான வடிவில் தகவல்களைக் கணிக்கின்றன. இவை ஒத்திசைவுக் கணிப்பொறிகளை விடத் துல்லியமாகக் கணிக்கக் கூடியவை.

எழுத்தடுக்குப் பணிமுதலாக அனைத்துத் துறை பணிகளுக்கும் உதவும் உந்து சக்தியாக கணிப்பொறியின் பணி விரிந்துள்ளது.

**concave:** **உட்குழிவான / உட்குழிவாக்கு:** உட்குழிவாக்கப்பட்டது; மேல் வளைவு; கிண்ணம் போன்ற வடிவுடையது: பள்ளமானது.

**concealea wiring** : *(மின்.)* **மறை வடக்கக் கம்பியிணைப்பு** : *சுவரில் அல்லது தரையில் மின்கம்பி இணைப்புக் கொடுக்கும்போது, கம்பி வெளியே தெரியாதவாறு மறைவடக்கமாக அமைத்தல்.*

**concentrated** : *(வேதி.)* **செறிவாக்கிய** : *கரைசலில் கரைபொருளின் அணுத்திரள் மிகு வீதத்தில் இருக்குமாறு செறிவாக்கம் செய்யப் பட்டது.*

**concentrated load** : *(க.க.)* **ஒரு முகப்படுத்திய பாரம்** : *உத்தரத்தில் இரும்புத் தூலத்தில் அல்லது கட்டுமானத்தில் பாரம் ஓரிடத்தில் ஒரு முகமாகப் படியுமாறு அமைத்தல்.*

**cencentric** : **பொது மையம் கொண்டுள்ள** : *ஒரு பொதுவான மையத்தைக் கொண்டிருப்பது.*

**cencentric jaw chuck** : *(எந்.)* **பொதுமையத் தாடைக் கவ்வி** : *தாடைகள் அனைத்தும் ஒரு பொதுவான செயல்முறை மூலம் மையத்தை நோக்கி அல்லது மையத்திலிருந்தும் சம அளவில் நகரும் வகையில் அமைப்புடைய ஒரு பற்றுக் கருவி.*

**conception**: **புனை திட்டம்**: *மனத்தில் கருத்துருவாக உருவாகியுள்ள ஒரு திட்டம் அல்லது கருத்துப் படிவம்.*

**concrete** : **திண்காரை/கான்கிரீட்**: *சிமென்ட், மணல், சரளை ஆகியன வேண்டிய வீத அளவுகளில் கலந்து தயாரிக்கப்படும் கட்டுமானக் காரை.*

**concrete blocks** : *(க.க.)* **திண்காரைப் பாளங்கள்** : *குறுகிய இடைவெளிகளில் திண்காரையை இட்டு வார்த்தெடுக்கப்பட்ட பாளங்கள் சுவர்கள் கட்டுவதற்குப் பயன்படுகின்றன.*

**concurrent forces**: *(எந்.)* **ஒருங்கிணைவு விசைகள்** : *ஒரு பொதுவான புள்ளியிலிருந்து புறப்படுகிற அல்லது ஒரு பொதுவான புள்ளியில் சென்று கூடுகிற விசைகள்.*

**condensation pump** : **உறைமான இறைப்பி** : *நீராவி மீள்வரவிலிருந்து திரவ உறைமானத்தை அகற்றுவதற்கான ஒரு சாதனம்.*

**condensation resins** : *(குழை.)* **உறைமான பிசின்கள்** : *ஆக்சிஜன் ஊட்டப்படுவதால் இரு நீரக அணுக்கள் குறைவுபட்ட வெறியமாகிய ஆல்டிஹைடு வகையில் ஒன்று. ஃபீனோலால்டிஹைடு பிசின்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. இறுதியான ஆக்கப் பொருள் உறைமான மீச்சேர்மங்கள் எனப்படும்.*

**condensation trail** : **செறிவுப் புகைத்தடம்** : *சில சூழ்நிலைகளில் பறக்கும் ஏவுகணை அல்லது வேறு கலம் பின்புறமாக உமிழ்ந்து செல்லும் மேகம் போன்ற வெண் புகைத்தடம். இது நீர்த்துளிகளால் அல்லது சிலசமயம் பனிக்கட்டிப் படிவங்களால் உண்டாகிறது.*

**condensed** : *(அச்சு.)* **குறுக்கப் பட்ட** : *அச்சுக் கலையில் அச்செழுத்துக்களைக் குறுகிய முகப் புடையனவாகச் செய்திருப்பது. குறுகிய முகப்புடைய அச்செழுத்து என்பது அதன் உயரத்துக்குக் குறைந்த விகிதத்தில் கனம் உடைய அச்செழுத்தாகும்.*

**condenser** : *(மின்.)* **மின்விசையேற்றி வடிகலம்** : *(1) மின் ஆற்றலின் வீறு பெருக்குவதற்கான அமைவு.*

*(2) நீராவிப் பொறியில் ஆவியை நீர்ப்பொருளாக மாற்றுவதற்கான அமைவு.*

**condenser** : *(குளி.பர.)* **வடிவாலை** : *குளிர்பதனச் சாதனத்தில் ஆவியாகிய குளிரூட்டும்பொருளை*

வெப்பத்தை நீக்குவதன்மூலம் திரவமாக்குவதற்கான குழாய் களின் அமைவு.

**condenser antenna: விசையேற்ற உணர்கொம்பு:** கம்பியில்லாத தந்தியில் வானலையை வாங்கவும் பரப்பவும் பயன்படுத்தப்படும் குறுகிய உணர்கொம்பின் அலை நீளத்தை அதிகரிப்பதற்குப் பயன்படும் ஒரு குறுகிய மின்சுற்று வழி.

**condenser capacity** : *(மின்.)* **மின் விசையேற்றத் திறன்:** பார்க்க: கொள்திறன்.

**condenser dielectric** : *(மின்.)* **மின்விசையேற்றக் காப்பு** : மின் விசையேற்றத் தகடுகளுக்கிடையிலான மின்காப்பாகப் பயன்படுத்தப்படும் பொருள்.

**condenser electrolyte** : *(மின்.)* **மின்விசையேற்றப் பகுப்பான் :** திரவ வகையான மின்விசையேற்றியில் பயன்படுத்தப்படும் கரைசல்.

**condenser plate** : *(மின்.)* **மின் விசையேற்றுத் தகடு :** பார்க்க : தகட்டு மின்விசையேற்றி.

**conductance** : *(மின்.)* **மின்கடத்துத் திறன்:** மின்னூடு கடத்தியின் மின்கடத்தும் ஆற்றல். இது மின் தடைத் திறனுக்கு நேர் எதிரானது.

**conduction:** *(மின்.)* **மின்கடத்தல்:** செம்புக் கம்பி போன்ற மின்கடத்தும் பொருளின் வழியாக மின்னோட்டம் செல்லும் அளவு.

**conduction band** : *(மின்.)* **கடப்புத் திறன்** : ஓர் அணுவின் புற ஆற்றல் திறன்.

**conductivity** : *(மின்.)* **ஊடு கடத்தும் ஆற்றல் :** மின்னோட்டத்தைக் கொண்டு செல்லுவதற்கு ஒரு பொருளுக்குள்ள திறன்.

**conductor** : *(மின்.)* **மின்கடத்தி:** மின்னிசையை எளிதாகக் கடத்தக் கூடிய ஒரு பொருள்.

**conductor or leader** : *(பட்.)* **நீர் நெறி அல்லது முன்னோடி:** மழை நீரைக் கொண்டு செல்வதற்கான ஒரு குழாய்.

**conductor stake** : *(பட்.)* **ஊடு முளை :** வெவ்வேறு விட்டங்களுள்ள நீண்ட நீள் உருளையான முனைகளையுடைய ஒரு முனை. இது வட்டமான உலோகத் தகடுகளையும், குழாய்களையும் வளைப்பதற்குப் பயன்படுகிறது.

**conduit** : **காப்புக் குழாய் :** மின் கம்பிகளின் காப்புக் குழாய். இந்தக் குழாய் நெகிழ்வுடையதாகவோ, விறைப்பானதாகவோ இருக்கும்.

**conduit box** : *(மின்.)* **காப்புக் குழாய்ப் பெட்டி :** இது ஓர் எஃகுப் பெட்டி. இதன் முனைகளில் ஒரு காப்புக் குழாய் இணைக்கப்பட்டிருக்கும். இது ஒரு வெளியேற்றுச் சந்திப்பாக அல்லது இழுப்புப் பெட்டியாக பயன்படுத்தப்படுகிறது.

**conduit bushing:** *(மின்.)* **காப்புக் குழாய் செருகி:** ஒரு காப்புக் குழாய் வரியின் முனையுடன் இணைக்கப்பட்டுள்ள இழையுள்ள மூடி. இது ஊடுசெல்லும் கடத்திகள் மாறுவதைத் தடுக்கிறது.

**conduit coupling** : *(மின்.)* **காப்புக் குழாய் இணைப்பு** : காப்புக் குழாயின் இழையுள்ள முனைகளை இணைப்பதை ஏற்பதற்கு உள்முக இழைகள் உள்ள ஒரு குறுகிய உலோகச் செருகு குழல்.

**conduit wiring** : *(மின்.)* **காப்புக் குழாய் ; கம்பியிணைப்பு** : காப்புக் குழாயினுள் மின்கம்பி இணைப்புகளை அமைத்தல்.

**condulet:** *(மின்.)* **காப்புக் குழாய்க் கருவி :** காப்புக் குழாய் இணைப்புக் கருவிகளின் வாணிகப் பெயர்.

**cone** : **கூம்பு** : *ஒரு வட்டமான அடித்தளத்திலிருந்து ஒரு சீராக நுனிநோக்கிச் சிறுத்துச் செல்கிற ஒரு திட வடிவம். இதன் புறங் குவிந்த மேற்பரப்பின் பரப்பளவு = அடித்தளத்தின் சுற்றளவு × ½ × சாய்வு உயரம்; முழுப்பரப்புளவு = புறங்குவிந்த மேற்பரப்பின் பரப் பளவு + அடித்தளத்தின் பரப்பளவு. இதன் கன அளவு = அடித்தளத்தின் பரப்பளவு × ⅓ × செங்குத்து உயரம்.*

*மட்பாண்டக் கலையில் சூளை யின் குவி முகடு.*

**cone of silence**: *(மின்.)* **மோனக் கூம்பு** : *ஒரு வானலை வாங்கியின் மேலுள்ள கூம்பு வடிவப்பகுதி. இதில் கதிரியக்கப் புல வலிமை மிகக் குறைவாக இருக்கும்.*

**cone clutch** : *(எந்.)* **கூம்பு ஊடிணைப்பி** : *இது ஒரு வகை உராய்வு ஊடிணைப்பி. இதில் தோலாலான கடைசல் செய்த கூம்பு வடிவ மேற் பரப்புள்ள வழுவழுப்பான உராய்வு மூலமாக இயக்குவதற்குத் தேவையான விசை உண்டாக்கப் படுகிறது.*

**conelrad** : **கூம்பு ஒளிக்கதிர் வீச்சு**: *இது விமானத் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்கான ஒரு வகை வானொலி எச்சரிக்கைச் சாதன மாகும். இதனை 1951ஆம் ஆண் டில் அமெரிக்க அரசு நிறுவியது. இது மின்காந்த ஒளிக் கதிர்வீச்சுக் கட்டுப்பாடு மூலம் இயங்கக் கூடி யது.*

**cone mandrel** : *(எந்.)* **கூம்புக் குறுகு தண்டு** : *இது ஒருவகைக் குறுகு தண்டு. இதில் இரு கூம்பு களின் இறுகப் பற்றும் வினையின் மூலம் வேலைப்பாடு செய்ய வேண் டிய பொருள் மையமிடப்படு கிறது. இந்தக் குறுகு தண்டில் ஒரு கூம்பு நழுவிச் செல்லாதபடி தடுப் பதற்கு ஒரு குறுக்குப் பட்டை இருக்கும் இதில் இரண்டாவது கூம்பினை இறுகப் பற்றிக் கொள் வதற்கான இழைகளும் இருக்கும்.*

**cone pulley** : **கூம்புக் கப்பி** : *இது ஒரு படியிட்ட கப்பித் தொகுதி. இதில் இரண்டு அல்லது அவற் றுக்கு மேற்பட்ட வெவ்வேறு விட்டமுடைய முகப்புகள் இருக் கும். இது இரண்டு கொண்ட இணையாகப் பயன்படுத்தப்படு கிறது. பெரிய முனைக் கப்பிக்கு நேர் எதிராக சிறிய முனைக்கப்பி அமைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் வேகத்தை அதிகரிக்க முடி கிறது.*

**cone pulley lathe** *(எந்.)* **கூம்புக் கப்பிக் கடைசல் எந்திரம்** : *கூம்புக் கப்பிகளைக் கடைசல் செய்வதற் கான ஒரு தனிவகைக் கடைசல் எந்திரம்.*

**cone speaker** : *(மின்.)* **கூம்புத் தொடர்புக் குழல்** : *இதில் நகரும் கம்பிச் சுருள் ஒரு விறைப்பான காகிதக் கூம்பின் மேல் நுனியுடன் நிரந்தரமாக இணைக்கப்பட்டிருக் கும்.*

**conic section** : *(கணி.)* **கூம்பு வளைவு** : *ஒரு நேர்வட்டக் கூம் பினை ஒரு சமதளம் குறுக்காக வெட்டுவதால் உண்டாகும் ஒரு வளை வடிவம்.*

**coniferous** : **குவிந்த காய் காய்ப் பவை** : *குவிந்த காய் காய்க்கிற மர வகையைச் சேர்ந்தவை.*

**coning angle** : *(வானூ.)* **கூம்ட கோணம்**: *விமானத்தின் சுழல் இற கின் ஓர் அலகின் சுழல் அச்சுக்குப் அந்தச் சுழல் அச்சுக்குச் செங்கு தாகவுள்ள ஒரு சமதளத்திற் மிடையிலான சராசரி கோணம்*

**conjugate axis** : **இணை அச்சு** *ஒரு நீள்வட்டத்தின் மிகக்குறைந் விட்டம்.*

**conjugate diameters :** **இணை விட்டங்கள் :** கூம்பு வெட்டில் ஒன்று மற்றொன்றின் கோடியியிலுள்ள தொடுவரைக்கு ஒரு போகு ஆக அமையும்படி உள்ள இரண்டு விட்டங்கள்.

**conjugate foci :** **இணை குவியங்கள் :** ஒன்றிலிருந்து புறப்படும் கதிர்களுக்கு மற்றது குவியமாக மாறிமாறி அமையும் இரு குவியப் புள்ளிகள்.

**conjugate mirrors :** **இணை ஆடிகள் :** ஒன்றன் குவியத்திலிருந்து வெளிப்படும் கதிர்கள் மற்றொன்றின் குவியத்துக்கு மீளும்படி அமைக்கப்பட்ட கண்ணாடிகள்.

**connecting rod :** (தானி.) **இணைப்புத் தண்டு :** இரு முனைகளிலும் தாங்கிகளுள்ள ஒரு தண்டு, அல்லது ஆயம். இது வணரி அச்சுத் தண்டுக்கும் சுழல் தண்டுக்குமிடையில் இணைப்பு ஏற்படுத்துகிறது.

**connecting rod bearing :** (தானி.) **இணைப்புத்தண்டு தாங்கி:** இணைப்புத் தண்டின் பெரிய முனையிலுள்ள தாங்கி. இதுபெரும்பாலும் உலோகத்தாலானது. சிறிய முனையிலுள்ள தாங்கி, உலோக உள்வரி வகையைச் சேர்ந்தது.

**connection :** (மின்.) **இணைப்பு :** ஒரு மின்சுற்றுவழியின் பகுதிகளை இணைக்கிற மின் கடத்தி.

**connector:** (மின்.) **இணைப்பான்:** மின் தொடர்பில் மின் கடத்தும் கம்பிகளைப் பற்றிக் கொள்வதற்கான ஒரு சாதனம். மின் கடத்தும் கம்பிகளைத் தேவையானபோது துண்டித்துக் கொள்ளும் வகையில் இந்த இணைப்பானை பிடித்துக் கொண்டிருக்கும்.

**conoid:** **கூம்புவடிவமுள்ள:** ஏறத்தாழக் கூம்பு வடிவமைந்த பொருள்.

**conservation of energy :** **ஆற்றல் நிலைப்பாடு :** தனிப்பட்ட அமைப்பில் உள்ள முழு ஆற்றலும் நிலைபெயராத் தன்மையுடையது என்னும் கொள்கை.

**conservatory :** (க.க.) **இசைப் பள்ளி/கண்ணாடி வீடு:** (1) இசைச் சொற்பொழிவு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கும் பொதுப் பள்ளிக் கூடம்.

(2) அருமையான செடி கொடிகளை வளர்க்கும் கண்ணாடி வீடு.

**consistency :** (இயற்.) **அடர்த்தி அளவு :** நெருக்கத்தின் அளவு.

**console :** (க.க.) **சுவரொட்டு :** நெஞ்சளவுச் சிலை, மலர்க் குவளை, சிற்ப உருவம் போன்ற அலங்காரப் பொருள்களைத் தாங்கும் மூல இணைப்பு.

**console :** (விண்.) **தளகட்டுப்பாடு :** ஏவுகணைகளின் குறிப்பிட்ட செயற்பணிகளைக் கட்டுப்படுத்துவதற்காகத் தரையிலுள்ள மின்னியல் அல்லது எந்திரவியல் சாதனங்கள்.

**console model :** **சுவரொட்டு வானொலிப் பெட்டி மாதிரி வடிவம் :** நான்கு கால்களில் நிற்கும் ஒரு பெட்டியினுள் உள்ள ஒரு பெரிய வானொலிப் பெட்டி. இதில் ஒளிக் கருவி முதலிய அனைத்துக் கட்டுப்பாட்டுச் சாதனங்களும் உள்ளடங்கி இருக்கும்.

**constant :** (கணி.) **நிலை எண் :** கணிதத்தில் மாறா மதிப்பளவு. இது கணிப்புக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகிறது.

**constant current :** (மின்.) **மாறா மின்னோட்டம் :** மின்னோட்ட அலகுமாறாமலிருக்கும் ஒரு மின்னோட்டம்.

**constant-mesh transmission** : *(தானி.)* **இடையறா வலைப் பின்னல் இயக்கம்** : முதன்மைச் சுழல் தண்டிலும் எதிர்சுழல் தண்டிலும் பல்லிணைகள் எப்போதும் வலைப் பின்னல் அமைப்பில் அமைந்துள்ள இயக்கம்.

**constant potential** : *(மின்.)* **மாறா மின்னழுத்த நிலை** : ஒரு மின் விசை மற்றும் ஒளிச்சுற்று வழியில் பாயும் நிலையான மின்னழுத்த அல்லது மின்னூட்ட அளவு.

**constant pressure** : *(தானி;எந்.)* **நிலை அழுத்தம்** : மாறாத எதிர்ப் பழுத்த வீதம் அல்லது இயலாற்றல் அளவு.

**constant speed motor**: *(மின்.)* **நிலைவேக மின்னோடி** : மின்னழுத்தம் அதிகமாகும் போது வேகம் குறையாதிருக்கிற ஒரு மின்னோடி.

**constant vacuum carburetor** : *(தானி.)* **நிலை வெற்றிட எரி-வளி கலப்பி** : இதில் ஒரு கனமான ஒரதர் அடங்கியிருக்கும். அது உள்ளிழுப்பு அறையின் வெற்றிடத்தின் இழுவை மூலமாக இயங்குகிறது. இந்த இழுவை விசை, காற்றுக்கு எரிபொருளின் அளவின் விகிதத்தில் அமைந்திருக்கும்.

**constant voltage or potential** : *(மின்.)* **மாறா மின்னழுத்தம்** : மின் சுமை அளவு மாறும் போது மாறாத மின்னழுத்தத்தைப் பராமரிக்கிற ஓர் ஆதாரம்.

**constellations** : *(விண்.)* **விண்மீன் குழுமம்** : நிலையான விண்மீன்களின் தொகுதியுடன் சுற்றி விண்மீன் குழுமங்களில் ஒன்று. இது போன்ற 90 குழுமங்கள் இருப்பதாக இதுவரைக் கண்டறியப்பட்டுள்ளது.

**constituent** : *(வேதி.)* **அமைப்பான்** : ஒரு பொருளில் அமைந்திருக்கும் தனிமங்களின் அல்லது கூட்டுப்பொருள்களின் ஒரு கூறு.

**construction** : **கட்டுமானம்**: கட்டிடங்களைக் கட்டியெழுப்புதல். மரம், இரும்பு அல்லது எஃகு பயன்படுத்திக் கட்டப்படும் கட்டிடங்களின் பாணியையும் இது குறிக்கும்.

**consulting engineer** ; **ஆலோசனைப் பொறியாளர்** : பொறியியல் தொடர்பான பொருட்பாடுகளில் ஆலோசனைகள் கூறுவதற்கு ஏற்ற அனுபவமும் தொழில் நிபுணத்துவமும் வாய்ந்த ஒரு பொறியியல் வல்லுநர்.

**contact** : *(மின்.)* **மின் தொடர்பு**: இரண்டு அல்லது அவற்றுக்குமேற்பட்ட மின்கடத்திகளை ஒரு முழுமையான மின்சுற்று வழி உண்டாகும் வகையில் தனிமுறையில் அடுக்கி வைத்தல்.

**contact breaker** : *(மின்.)* **தொடுமுனை முறிப்பான்** : ஒரு மின் சுற்று வழியை விரைவாகவும் தானாகவும் முறிப்பதற்குரிய ஒரு சாதனம்.

**contact flight** : **காட்சி இயக்கம்**: நிலப்பரப்பின் காட்சியறிவின் மூலம் விமானத்தை இயக்குதல்.

**contact forms**: *(மின்.)* **தொடர்பு விசை** : மின் உணர்த்தியில் உள்ள மின்தொடர்பு விசைகளின்வரிசை.

**contact-lens** : **விழியொட்டுக் கண்ணாடி** : கண் பார்வைக் கோளாறு திருத்தக் கண்விழியோடு ஒட்டி அணியப்படும் குழைமக் கண்ணாடி வில்லை.

**contact potential** : *(மின்.)* **தொடர்பு மின்னோட்ட வேறுபாடு** : பல்வேறு எலெக்ட்ரான் தொடர்புடைய உலோகப் பரப்புகள் ஒன்றோடொன்று தொடர்பு கொள்ளும்போது அல்லது அவற்றைப்

புறச் சுற்றுவழி மூலம் இணைக்கும் போது, அவற்றுக்கிடையே ஏற்படும் உச்சநிலை மின்னோட்ட வேறுபாடு.

**contactors :** (*மின்.*) **தொடர் பான்கள் :** மின்காந்த முறையில் அல்லது கையால் இயக்கப்படும் மின் தொடர்புகள்.

**contact point pressure:** (*தானி; மின்.*) **தொடர்பு முனை அழுத்தம்:** தொடர்பு முனைகளை மூடிய நிலையில் வைத்திருக்கும் விற்சுருள் அழுத்தம்.

**contact points :** (*தானி;மின்.*) **தொடர்பு முனைகள் :** குறைந்த அழுத்த மின்சுற்று வழியை உண்டாக்குவதற்கும் முறிப்பதற்கும் பயன்படும் இரிடியம், பிளாட்டினம் அல்லது உலோகக் கலவை எஃகினாலான சிறிய உலோகத் தகடுகள் அல்லது முனைகள்.

**contact print : தொடர்பு ஒளிப் படப் பதிப்பு :** ஒளிப்படக் கலையில் எதிர்ப்படச் சுருளையும், படப் பதிவுக் காகிதத்தையும் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு செய்து எடுக்கப்படும் ஒளிப்படப் பதிவுப் படம்.

**continental code:** (*மின்.*) **பெருங்கண்டக் குறியீடு :** வானொலிச் செய்திகளை அனுப்புவதற்கு பயன்படும் புள்ளிகளும், கோடுகளும் அமைந்த தந்திக் குறியீடு.

**continuous beam :** (*க.க.*) **தொடர் நிலை உத்தரம் :** இரண்டுக்கு மேற்பட்ட ஆதாரங்களைத் தாங்குவதற்கான ஓர் உத்தரம்.

**continuous current :** (*மின்.*) **தொடர் மின்னோட்டம் :** துடிப்புகள் இல்லாத நேர்மின்னோட்டம்.

**continuous duty:** (*மின்.*) **இடைவிடா மின்னோட்டம் :** இடைவிடாமல் மின்னோட்டம் பாயுமாறு இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள மின்னோட்ட அமைப்பு.

**continuous wave :** (*மின்.*) **இடையறா மின்னலை :** விண்வெளியில் இடையறாது வீசப்படும் மின்னலை. இந்த அலை அனைத்தும் சம வீச்சளவிலும், கால அச்சு நெடுகிலும் சம இடைவெளியிலும் அமைந்திருக்கும்.

**contour : வடிவ விளிம்பு வரை :** வார்ப்படத்தின் மேடுபள்ள மட்ட நிலை அடுக்கு.

**contour line : வடிவ விளிம்பு வரைக்கோடு :** தள எல்லை வேறுபாடு குறித்த நிலப்படத்தில் மேடு பள்ளங் காட்டும் கோடுகள்.

**contraction :** (*வார்.*) **இறுக்கம் :** குளிர்விக்கும்போது கன அளவு சுருங்கி இறுக்கம் ஏற்படுதல்.

**contractor :** (*க.க.*) **ஒப்பந்தக் காரர் :** குறிப்பிட்ட வீதத்தின்படி வேலை செய்து அல்லது சரக்குகளைத் தருவித்துக் கொடுக்க ஒப்பந்தம் செய்து கொள்பவர்:

**contra-rotating propellers :** (*வான.*) **எதிர் சுழல் விசிறிகள் :** விமானத்தில் ஒன்று மற்றொன்றுக்கு எதிர் திசையில் சுழலும் விசிறிகள். இவை ஒன்றன்பின் ஒன்றாரு அமைந்திருக்கும்.

**contrast : வேறுபாட்டு முனைப்பு:** இது தொலைக்காட்சிப் படங்களில் இருள் பகுதிக்கும் ஒளிப்பகுதிக்குமிடையிலான விகிதத்தைக் குறிக்கிறது. மிக அதிகமான வேறுபாட்டு முனைப்புடைய படம் மிக அடர்ந்த கருமையினையும், பிரகாசமான வெண்மையினையும் கொண்டிருக்கும். குறைந்த வேறுபாட்டு முனைப்புடைய படங்கள் ஒட்டு மொத்தப் பழுப்பு நிறத் தோற்றமுடையதாக இருக்கும்.

**contrast control : வேறுபாட்டு முனைப்புக் கட்டுப்பாடு**: தொலைக் காட்சியில், ஒரு படத்தின் இருள் பகுதிக்கும், ஒளிப்பகுதிக்குமிடையிலான விகிதத்தை மாற்றி, தொலைகாட்சிக் சைகை வலிமையினை முறைப்படுத்துவதற்காக ஒளி வாங்கிப் பெட்டியிலுள்ள ஒரு கட்டுப்பாட்டு அமைவு.

**control cable** : *(வானூ )* **கட்டுப்பாட்டுக் கம்பி வடம்** : கட்டுப்பாட்டு நெம்புக்கோல்களிலிருந்து கட்டுப்பாட்டு மேற்பரப்புகளுக்கு செல்கிற அல்லது அவற்றை இணைக்கிற கம்பி அல்லது புரி யிழை வடம்.

**control column** : *(வானூ.)* **கட்டுப்பாட்டுத் தூண்** : ஒரு விமானத்தில் நீளப் பாங்கானதும், பக்க நிலைப் பாங்கானதுமான கட்டுப் பாட்டு மேற்பரப்புகளை இயக்குவதற்காக அதன் மேல் முனையில் ஒரு சுழலும் சக்கரத்தைக் கொண்டுள்ள ஒரு நெம்புகோல். இதனைச் சக்கர நெம்புகோல் என்று கூறுவர்.

**control grid** : *(மின்.)* **கட்டுப்பாட்டு மின்கம்பி வலை** : ஒரு வெற்றிடக் குழாயில் எதிர்மின் வாய்க்கு அருகிலுள்ள மின்கம்பி வலை. இதன் வழியாக வெற்றிடக் குழாய்க்கு உட்பாட்டுச்சைகைகள் செலுத்தப்படுகின்றன.

**controllability**:*(வானூ.)* **கட்டுப் படுத்துத் திறன்** : விமானம் பறக்கும் உயரத்தை எளிதர்கவும், மிகக் குறைந்த விசையைப் பயன்படுத்தியும் மாற்றுவதற்கு விமானியை இயல்விக்கக் கூடிய விமானத்தின் தன்மை.

**controllable propeller**:*(வானூ.)* **கட்டுப்படுத்தத்தக்க முற்செலுத்தி** : விமானத்தை முற்செலுத்தும் சுழல் விசிறி சுழலும்போது அதன் உந்து அளவினை மாற்றக் கூடிய வகையில் அலகுகள் பொருத்தப் பட்டிருக்கிற ஒரு முற்செலுத்தி அல்லது சுழல் விசிறி.

**controller** : *(மின்.)* **கட்டுப்பாட்டுப் பொறி** : ஒரு மின்னோட்டத்தை தானாகவே முறைப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் அமைந்துள்ள ஒரு காந்தக் கருவி.

**controller resistance** : *(மின்.)* **கட்டுப்பாட்டு மின்தடை** : இது ஒரு மின்னோடியில் ஒரு குறிப்பிட்ட வேகத்தை அடையும்வரையில் மின் வழி மின்னோட்டத்தைக் கட்டுப்படுத்திவைக்கிற ஒரு மின்னோடி தொடக்கியின் மின் தடையினை இது குறிக்கிறது. இந்த மின்தடை, ஒரு மின்னோடியின் வேகத்தை மாற்றுவதற்குப் பயன்படுகிறது.

**control panel** : *(தானி.)* **கட்டுப்பாட்டுச் சட்டம்** : தானியங்கியில் பயன்படும் பல்வேறு மின்விசைச் சாதனங்களையும் எந்திரங்களையும் கட்டுப்படுத்துகிற ஒரு தொகுதி.

**control rod** : *(மின்.)* **கட்டுப்பாட்டுச் சலாகை** : ஓர் அணு உலையின் மின்னாற்றலைக் கட்டுப்படுத்தப் பயன்படும் ஒரு சலாகை. இந்தச் சலாகை நியூட்ரான்களை ஈர்த்துக்கொள்வதால் அணு உலையின் மின்விசை வெளிப்பாட்டு அளவு குறைகிறது.

**control stick** : *(வானூ.)* **கட்டுப்பாட்டுக் கோல்** : விமானத்தில் நீளவாக்கிலும், பக்கவாட்டிலும் உள்ள கட்டுப்பாடுகளை இயக்குவதற்குரிய செங்குத்தான நெம்புகோல், இந்தக் கோல் ஒரு பக்கத்திலிருந்து சென்று நகர்வதன் மூலம் ஏற்படும் விசையினால் முன் உந்து அளவினைக் கட்டுப்படுத்த முடிகிறது.

**control surface** : (வானூ.) **கட்டுப்பாட்டு மேற்பரப்பு** : விமானத்தில், பறக்கும் உயரத்தை மாற்றுவதற்காக விமானியால் நிலை மாற்றம் செய்யக்கூடிய ஒரு நகரும் விமானக் காற்றழுத்தத் தளம்.

**controls** : (வானூ.) **கட்டுப்படுத்துக் கருவி** : விமானத்தின் விசையையும், வேகத்தையும், பறக்கும் உயரத்தையும் கட்டுப்படுத்துவதற்காக அமைந்துள்ள கருவி.

**control system** : (தானி.) **கட்டுப்பாட்டு அமைப்பு** : உந்து வண்டியில் அமைந்துள்ள இயக்கு பிடி, எரிபொருள் கட்டுப்பாட்டுக் கருவி சுடர்ப்பொறிக் கட்டுப்பாடு, தடை நெம்புகோல், பல்லிணை மாற்று நெம்புகோல், கால்மிதி கட்டைகள் தடை அமைப்பு ஆகியவற்றை இது உள்ளடக்கும்.

**convection** : (மின்.) **உகைப்பியக்கம்** : கூர்மையான மின்கடத்திகளிலிருந்து வெப்ப மின்னாற்றல்கள் தம்மால் இயக்கப்படும் அணுக்களின் இயக்கத்தினால் பரவுதல்.

ஒரு திரவத்தின் அல்லது வாயுவின் வழியாக அதன் துகள்களின் இயக்கம் காரணமாக வெப்பம் பரவுதல்.

**convector**: (எந்.பொறி.) **உகைப்பான்** : உகைப்பியக்கத்தால் வெப்பமூட்டும் கருவி.

**convector** : (குளி.பத.) **உகைப்பியக்கி** : வெப்ப மின்னாற்றல்கள் தம்மால் இயக்கப்படும் அணுக்களின் உகைப்பினால் பரவி வெப்பமூட்டும் கருவி.

**convenience outlet** : (மின்.) **தகவுப் புறவழி**: மின்கம்பி இணைப்பில், சலவைப் பெட்டி, வாட்டு கரண்டி முதலிய கையடக்கச் சாதனங்களுக்கு மின்னோட்டம் எடுக்கப்படும் இடம்.

**converter** : (மின்.) **மின்மறி** : இதனை மின்மாற்றி என்றும் அழைப்பர். இது மின்னோட்டத்தை ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்திற்கு மாற்றியமைக்கும் ஒரு பொறியமைவு.

**conversion hysteria**: (உள.) **நிலைமாற்ற மனக்கோளாறு**: எதிர் மாறான வேட்கைகளுக்கிடையிலான முரண்பாடு காரணமாக ஏற்படும் ஒருவகை மனக்கோளாறு. இதில் ஒரு வகை மனக்கோளாறு, ஒரு வகை உடற்கோளாறு மூலம் வெளிப்படுகிறது. அதாவது, மனக்கோளாறு, ஒருவகை உடற்கோளாறாக மாறுகிறது.

**converter tube**: (மின்.) **ஒரு போக்கிக் குழாய்**: ஒரு பல உறுப்பு வெற்றிடக் குழாயில் அல்லது டிரான்சிஸ்டரில் ஒரு சைகைகள் ஒன்றாகக் கலக்கப்பட்டு அல்லது ஒரு போக்கியாக்கப்பட்டு ஓர் இடைநிலை அலைவெண் உண்டாக்கப்படுகிறது. இதனை ஒரு போக்கிக் குழாய் என்பர்.

**convertible**: (தானி. எந்.) **மாற்றிக்கொள்ளக்கூடிய உந்து**: இது பயணிகள் செல்லும் வகையைச் சேர்ந்த ஒரு உந்துவண்டி. இதன் மேல்மூடியை வேண்டும்போது முழுவதுமாக அகற்றிவிடலாம்; அல்லது கையினாலோ மின் விசையிலோ இயங்கக்கூடிய நீரியல் அமைப்பு மூலமாக மேல்மூடியை மேலே ஏற்றவோ, கீழே இறக்கவோ செய்யலாம்.

**convex**: **புறங்குவிந்த**: ஒரு கோளத்தின் மேற்பரப்பினைப் போன்று புற வளைவுடைய.

**convey**: **அறிவி/அனுப்பு**: செய்தியை அறிவித்தல்; கொண்டு செல்லுதல்.

**conveyors**: **செல் ஊர்தி**: தொழிலகத்தில் தொழிற்படும் பொருள்களை வார்ப்பட்டைகள் வாயி

லாக இடம்விட்டு இடம் கொண்டு செல்லும் கருவி.

**convolute: சுருண்ட:** ஒன்றன் மேல் ஒன்றாக ஒன்று சேர்த்து சுருட்டிய அல்லது மடித்துச் சுருட்டிய.

**convulsion therapy:** *(மருத்.)* **அதிர்ச்சி மருத்துவம்:** *மன நோயாளிகளுக்கு மருந்து அல்லது மின் விசைமூலம் திடீரென உணர்வற்ற நிலையை உண்டாக்கி மனநோய் களுக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவ முறை. முக்கியமாகப் பித்து நிலைச் சோர்வு, முரண்மூளை நோய் போன்ற மனக்கோளாறு களைக் குணப்படுத்த இந்த முறை பயன்படுகிறது.*

**coolant: வெப்பாற்றி:** *வெட்டுப் பொருள்களின் விளிம்பில் உராய்வு, வெப்புத் தணிப்பதற்குரிய திரவம், சோடா நீர், கொழுப்பு எண்ணெய், மண்ணெண்ணெய், கர்ப்பூரத் தைலம் ஆகியவை அல்லது இவற்றின் கலவைகள் பெரும்பாலும் வெப்பாற்றிகளாகப் பயன் படுத்தப்படுகின்றன.*

**cooling fixture;** *(குழை.)* **குளிர் காலம்:** *வார்ப்படம் செய்த வடிவினை நிலை நிறுத்தி வைத்துக் கொள்ளக்கூடிய உலோகத்தாலான அல்லது மரத்தாலான ஓர் அச்சுக் கட்டை. ஒரு வார்ப்படத்தை வார்ப்பிலிருந்து அகற்றிய பிறகு, அது மேலும் உருத்திரிபு கொள்ளாமல் தனது வடிவை நிலை நிறுத்தி வைத்துக் கொள் கிற வரையிலும் உரிய வடிவில் அல்லது துல்லியமான பரிமாணத்தில் அதனை வைத்திருக்க இது பயன்படுகிறது.*

**cooling system:** *(தானி.)* **குளிர்விப்பு அமைப்பு:** *எஞ்சினில் கனற்சியினால் உண்டாவதை விரைவாக வெளியேற்றுவதன் மூலம் எஞ்சினில் அளவுக்கு அதிகமாக வெப்பம் உண்டாகாமல் தடுக்கும் சாதனங்கள், கதிர்வீசிகள், விசிறிகள், இறைப்பிகள், நீர் காப்பு மேலுறைகள் முதலியவை இந்தச் சாதனங்களாகும்.*

**coordinate:** *(கணி.)* **ஆயத் தொலைவு:** *கட்டநிலை அளவையின் ஒரு கூற்றளவை.*

**Cooper-Hewitt lamp: கூப்பர் ஹெவிட் விளக்கு:** *110 மின்னழுத்த நேரடி மின்னோட்டச் சுற்றில் இயங்கும் ஒரு திறன் வாய்ந்த விளக்கு. இதில் குறைந்த ஆவி அடர்த்தியுள்ள பாதரச ஆவியைக் கொண்ட பல அடி நீளமுடைய ஒரு கண்ணாடிக் குழாய் இதில் அமைந்திருக்கும்.*

**copal varnish: குங்கிலிய வண்ண மெருகெண்ணெய்:** *வெப்பமண்டல மரவகைகளின் பிசினிலிருந்தும், புதைபடிவமாகவும் கிடைக்கும் கடினமான ஒளி ஊடுருவக்கூடிய குங்கிலியத்திலிருந்து தயாரிக்கப் படும் வண்ண மெருகெண்ணெய்.*

**cope: மேற்கட்டி:** *களிமண் வார்ப் படத்தின் மேற்பகுதி அல்லது பசு மணல் வார்ப்படத்தின் மேலுறை.*

**coped joint:** *(க.க.)* **முகட்டு இணைப்பு:** *வார்ப்படம் செய்து இணைக்கப்பட்ட பகுதிகளிடையே ஓர் உறுப்பின் வார்ப்புப் பகுதியை ஏற்றுக்கொள்ளும் வகையில் மற்றொரு உறுப்பின் பகுதியைச் செதுக்கி அமைக்கப்பட்ட ஓர் இணைப்பு.*

**copper clad:** *(மின்.)* **செப்புப் பொதிவு:** *மின் கடத்து திறனை அதிகரிப்பதற்காக எஃகுக் கம்பியை செம்புப்படலத்தால் பொதிவு செய்தல்.*

**copper engraving:** *(வரை.)* **செப்புச் செதுக்கு வேலைப்பாடு:** *செப்புத் தகடுகளில் செதுக்கு வேலை மூலம் கலை வேலைப்பாடு களைச் செய்தல்.*

**coppered joint** : *(வார்.)* **செம்பு பொதி இணைப்பு** : உருள் தொட்டிகளில் உள்ளது போன்று அமைக்கப்பட்ட இணைப்பு. இது வளைவான பகுதிகளில் பயன்படுத்தப் படுகிறது.


**copper losses** : *(மின்.)* **செப்பு இழப்பீடு** : மின்னோடிகள், மின்னாக்கிகள், மின்மாற்றிகள் ஆகியவற்றில் கம்பித்தடை காரணமாக வெப்ப இழப்பு ஏற்படுதல்.

**coping** : *(க.க.)* **சாய்முகடு** : மதிலின் சாய்வான மேல் முகடு.

**coping machine** : *(பட்.)* **சமன எந்திரம்** : உத்தரங்களின் விளிம்புகளையும் முனைகளையும் செதுக்கிச் சமனப்படுத்தவும், முனைகளை வளைக்கவும் பயன்படும் எந்திரம்.

**coping out** : *(வார்.)* **சமனச் செதுக்கல்** : வார்ப்படத்தை முறையான பிரிக்கும் கோட்டிற்குக் கொண்டு வருவதற்காக அதன் இழுவைப் பகுதியின் மணல் முகப்பினைச் செதுக்கிவிடுதல், இவ்வாறு செய்யப்படும் பள்ளத்திற்கு நேரிணையான மணற் பிதுக்கம். மேற்கட்டியின் முகப்பிலிருந்து அமைந்திருக்கும்.

**coping saw** : *(மர; வே.)* **சமன**



சமன ரம்பம

**ரம்பம்** : இது 3செ.மீ. அகலமும் 16.5 நீளமும் உடைய ஒரு குறுகிய அலகினைக் கொண்டிருக்கும். இது வில் போன்ற எஃகுச் சட்டத்தில் பொருத்தப்பட்டிருக்கும். இது வளைவுகளை வெட்டவும் வார்ப்படங்களைச் செதுக்கிச் சமனப் படுத்தவும் பயன்படுகிறது

**copolymer** : *(குழை.)* **கூட்டு மீச்சேர்மம்** : இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட பொருள்களின் ஒரே சமயத்து மீச்சேர்ம இணைவு மூலமாக உண்டாகும் பொருள். இது தனித்தனி மீச்சேர்மங்களின் கலவை அன்று. மாறாக, ஒரே வகைப்பட்ட சேர்மங்களின் அணுத்திரள்கள் இணைந்து வேதியியல் முறையில் மாறாமலே அணுத்திரள் எடைமானமும் இயற்பியல் பண்பும் மட்டும் மாறுபட்ட பிறிதுருச் சேர்மம்.

**copoly - merization** : *(வேதி. குழை.)* **கூட்டு மீச்சேர்ம இணைவு** : இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட எண்முகச் சேர்மங்கள் வேதியியல் வினைபுரிந்து அவற்றின் மூலக்கூறுகளை ஒருங்கிணைத்து பெரிய மூலக்கூறுகளாக உருவாதல். (பார்க்க: மீச்சேர்ம இணைவு)

**copper** : *(உலோ.)* **செம்பு/தாமிரம்** : இது மென்மையான எளிதில் கம்பியாக நீட்டக்கூடிய, தகடாக்கத்தக்க ஓர் உலோகம். இது கடினமானது. ஆனால் வலுவானது அன்று; உலோகக் கலவைகள் தயாரிப்பதற்கு மிகவும் பயன்படுகிறது. இது கலை வேலைப்பாடுகளில் பயன்படுகிறது.

**copper bit** : *(கம்.)* **பற்றாசுக் கோல்** : பற்றவைப்பதற்குப் பயன்படும் ஒரு கருவி.

**copper gasket** : *(தானி.மின்.)* **செப்பு முத்திரை** : ஒன்றாக இணைக்கப்படும் இரு உலோக முகப்புகளுக்கு முத்திரையிட்டு மூடுவதற்காகப் பயன்படும் செம்பினாலான அல்லது செம்பும் கல்நாரும் கலந்த கலவையினாலான அல்லது ஒரு வளையும் தகடு.

**copper lead** : *(உலோ.)* **செப்பு ஈயம்** : இது ஓர் உலோகக் கலவை. இது அதிக அழுத்தத்தையும் அதிக

வெப்பத்தையும் தாங்குவதில் தகரம்-செம்பு-அஞ்சனம் கலந்த 'பாபிட்' உலோகக் கலவையைவிட மிகச் சிறந்தது.

**copper pipe** : *(கம்.)* **செப்புக் குழாய்** : இதன் உட்புற அல்லது வெளிப்புற விட்டங்களைக் கொண்டு இதன் வடிவளவு தீர்மானிக்கப்படுகிறது. இதன் கவரின் கனம், பிதுக்கக் கம்பி அளவி மூலம் அளவிடப்படுகிறது. ஈயக் கம்மிய வேலைகளிலும் இது பயன்படுகிறது.

**copper plate** : *(அச்சு.)* **செப்புத் தகடு:** பட்டயம் செதுக்குவதற்குரிய மெருகிட்ட செப்புத் தகடு. இந்தத் தகடு செப்பம் செய்யப்பட்டு இதில் எழுத்துக்கள் செதுக்கப்படுகின்றன.

**copper plating** : **செப்பு முலாமிடுதல்** : மற்றொரு உலோகத்தில் செப்பு முலாமிடுவதற்கான முறை. இதில் பொட்டாயசிம் சையனைடு முக்கியமாகப் பயன்படுகிறது. அமிழ்த்துதல், மின் முலாமிடுதல் ஆகிய இருமுறைகளிலும் இந்த முலாமிடுதல் செய்யப்படுகிறது. (பார்க்க : மின்முலாமிடுதல்)

**copper steel** : **செப்பு எஃகு** : குறைந்த அளவு கார்பன் கொண்டுள்ள ஒருவகை எஃகு. இதில் 0. 25% செம்பு கலந்திருக்கும். அரிமானத்தைத் தடுக்கும் காப்பு தேவைப்படும் கட்டுமானப் பணிகளில் இதில் பயன்படுத்தப்படுகிறது.

**copper sulphate** : *(வேதி.)* **மயில் துத்தம்; காப்பர் சல்பேட்**: பார்க்க: மயில் துத்தம்.

**copraloy** : *(உலோ.)* **செப்பு உலோகக் கலவை**: பார்க்க; செப்பு எஃகு.

**copy** : **சார் படிவம், எழுத்துப் படிவம்** : வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த அறைகலன்களின் ஒத்த வடிவங்களை உருவாக்குதல்.

அச்சுக் கலையில் அச்சுக்கான எழுத்துப்படி.

**copy holder** : *(அச்சு.)* **படி வாசிப்பவர்** : அச்சுத் திருத்துபவருக்கு உடனிருந்து வாசித்து உதவுபவர்.

**coquina** : *(வேதி.)* **கோக்கினா** : கடலிலுள்ள ஓடுகள் ஒட்டிக் கொள்ளும் தன்மையினால் உண்டாகும் ஒருவகைப் பாறை. இது கால்சியம் கார்போனேட் மூலம் உண்டாகிறது.

**coral** : *(வேதி.)* **பவழம்** : கடலுயிர் வகையின் தோட்டின் செறிவடுக்கால் வளரும் பாறை. இது கால்சியம் கார்போனேட் மூலம் உண்டாகிறது.

**carbel**: *(க.க.)* **தண்டையக் கட்டு**: பொருள்களை வைப்பதற்காக அல்லது பளு தாங்குவதற்காகச் சுவரில் ஏந்தலாக வைத்திணைக்கப்பட்ட கல் அல்லது கட்டை.

**cord** : *(மர.வே.)* **வெட்டு மர அளவை** :1-21மீ.நீளம்,1.21மீ. உயரம், 2.42மீ. நீளம்(3.63க.மீ.) உடைய வெட்டு மர அளவை.

**cordierite** : *(மின்.)* **கார்டியரைட்**: மக்னீசியம், அலுமினியம் சிலிக்கேட்டுகளினாலான மின்காப்புப் பொருள்.

**core** : **மைய உட்புரி** : வார்ப்படத்தின் உருச்செறிவுக்குரிய உள்ளிடப் பொள்ளல்.

பிளாஸ்டிக்கில் வார்ப்பட உட்பொள்ளலிடத்தில் வார்த்து உருவாக்கப்பட்ட பகுதி.

**core box** : *(வார்.)* **மைய உட்புரிப் பெட்டி** : இது பொதுவாக மரத்தினாலானது. இதில் மைய உட்புரி இறுக்கிப் பொருத்தப்பட்டிருக்கும்.

**core-box plane** : **மைய உட்புரி பெட்டி / இழைப்புளி** : மைய உட்

புரிப் பெட்டிகள் செய்வதற்கான ஓர் இழைப்புளி. இழைப்புளியின் செங்கோணப் பக்கங்கள் வெட்டு விளிம்புகளில் படிந்திருக்கும்போது இழைப்புளியின் நுனி வட்டத்தின் சுற்றளவின் மீது வெட்டிச் செல்லும்.

**cored carbon :** (மின்.) **உள்ளீடகற்றிய கார்பன் :** நீள்வாக்கில் மென்மையான உட்புரி கொண்ட ஒரு கார்பன். இது மாறு மின்னோட்டத்தில் மின்சுடரின் திறமையான செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**cored hole :** (வார்.) **உட்புரித் துவாரம் :** வார்ப்பட முறையில் நேரடியாக அமைக்கப்பட்ட உட்புரித் துவாரம். வார்ப்படத்தில் துளையிடுதல் அல்லது துரப்பணமிடுதல் இல்லாமல் அமைக்கப்படும் துவாரம் எதனையும் இது குறிக்கிறது.

**core disks:** (மின்.) **உட்புரித் தகடுகள் :** மென் தகட்டு மின்னக உட்புரிகள் அமைப்பதற்கெனப் பயன்படுத்தப்படும் இரும்புத் தகட்டினாலான மெல்லிய வட்ட வடிவத் தகடுகள்.

**core drier:** (வார்.) **உட்புரி உணக்கும் பொறி :** சுடுகின்றபோது உட்புரியின் வடிவத்தை அப்படியே இறுத்தி வைத்துக் கொள்ளும் பொறியமைவு.

**core drill :** (உலோ.வே.) **உட்புரித் துரப்பணம் :** இது உட்குழியுள்ள ஒரு துரப்பணம். இது உலோகத்தைச் சிம்பு சிம்பாக அல்லாமல் துண்டு துண்டாக வெட்டக் கூடியது. ஒரு வார்ப்படத்திலிருந்து சோதனைக்கான மாதிரிகளை எடுப்பதற்கு இது பயன்படுகிறது.

**core iron :** (மின்.) **தேனிரும்புச் சலாகை :** மின்காந்த விசைச் சுருளின் மையத்திலுள்ள தேனிரும்புச் சலாகை.

**core loss:** (மின்.) **உட்புரி இழப்பு:** ஒரு மின்னகத்தின் அல்லது மின்மாற்றியில் சுழல் மின்னோட்டங்கள், காந்தத்தியக்கங்கள் போன்ற விளைவுகள் காரணமாக உட்புரியில் ஏற்படும் மின்விசை இழப்பு.

**core machine :** (வார்.) **உட்புரிப் பொறி :** ஒரு பெய் குடுவையினைக் கொண்டுள்ள கையினால் அல்லது விசையினால் இயக்கக்கூடிய ஓர் எந்திரம். இது வட்டமான மற்றும் சதுரமான அடிமுனை உட்புரிகள் அமைப்பதற்குப் பயன்படுகிறது.

**core oils :** (வார்.) **உட்புரி எண்ணெய்கள் :** வார்ப்பட வேலைப்பாடுகளில் உட்புரிகள் செய்வதற்குப் பயன்படும் எண்ணெய்கள், ஆளிவிதை எண்ணெய் அல்லது மலிவான பிற எண்ணெய்களுடன் கலந்த ஆளிவிதை எண்ணெய் இதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**core oven :** (வார்.) **உட்புரி அடுப்பு :** உட்புரிகளைச் சூடாக்கி வார்ப்பதற்குப் பயன்படும் அடுப்பு.

**core pin:** (குழை.) **உட்புரி முளை :** வார்ப்படம் செய்த பொருளில் ஒரு துவாரத்தை அல்லது துளையை உண்டாக்கப் பயன்படும் முளை.

**core prim :** (வார்.) **உட்புரி வடிவம் :** வார்ப்படப் பொருளை ஊற்றுகின்றபோது, மணற்கட்டி வார்ப்புச்சுருளில் ஒரு வடிவத்தைப் பதித்து அதன் உட்புரியை உரிய இடத்தில் நிலையாகப் பிடித்து வைத்துக் கொள்கிற ஒரு வடிவப் புடைப்பு.

**core sand :** (வார்.) **உட்புரி மணற் கட்டி வார்ப்பு:** வார்ப்புக்குப் பயன்படுத்தப்படும் மணற்கட்டி வார்ப்புரு.

**core saturation** : *(மின்.)* **உள்ளீட்டுச் செறிவு** : *ஓர் இரும்பு உள்ளீட்டில் நேரடியாக மின்னோட்டம் காரணமாக மூலக்கூறுகள் ஒரே திசையில் ஒருமுகமாகும் போக்கு.*

**core wash** : *(வார்.)* **உட்புரிப் பூச்சு** : *உட்புரிகளின் வண்ணம் பூசுவதற்குப் பயன்படும் ஒரு கலவை.*

**coring out**: *(வார்.)* **உள்ளீடகற்றுதல்** : *வார்ப்படங்களில் உட்புரிகள் மூலம் உட்பகுதிகளை அமைத்தல்.*

**coring up**: **உட்புரியாக்கம்**: *வார்ப்பட வேலையில்; வார்ப்புக்கு ஆயத்தமாகவுள்ள வார்ப்படத்தில் உட்புரிகளை அதனதன் இடத்தில் அமைத்தல்.*

**corinthian order** : *(க.க.)* **கோரிந்து பாணி** : *கிரீஸ் நாட்டிலுள்ள கோரிந்து நகரத்தைச் சார்ந்த கட்டிடக் கலைப்பாணி. இதில் தூண் தலைப்புகளை அலங்காரம் செய்வதற்கு முள்ளிலை வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.*


**corner bead** : *(க.க.)* **மூலைக் குமிழ்மணி** : *சாந்து பூசிய மூலைப் பகுதிகளில் பதிக்கப்படும் ஒரு உலோகக் குமிழ்மணி. சாந்துப் பூச்சு உடைந்து விழாமல் தடுக்க இது பயன்பட்டது.*

**corner bit brace**': *(மர. வே.)* **மூலைத் திருப்புளி** : *வழக்கமான திருப்புளியினை வைத்துச் செயற்பட முடியாத கடினமான நிலைகளில் பயன்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு திருப்புளி.*

**corner clamp** : *(மர.வே.)* **மூலைப் பற்றுக் கட்டை** : *பசையிட்டு ஒட்டுதல் அல்லது ஆணியடித்தல் போன்றவற்றுக்கு செங்கோண இணைப்புகளை உரிய இடத்தில் பிடித்துக் கொள்வதற்கான ஒரு பற்றுக்கட்டை.*

**corner rounding cutter** : *(எந்.)* **மூலை உருளை வெட்டி** : *உருளை வடிவான முனைகளை வெட்டுவதற்கு உலோகத் தகட்டில் பள்ளங்கள் வெட்டுவதற்கான எந்திரத்தில் பயன்படும் சாதனம்.*

**corner trowel** : *(குழை.)* **மூலைச் சட்டுவக் கரண்டி** : *மூலைகளில் பயன்படுத்துவதற்காக V - வடிவ அலகுடைய சாந்து பூசும் சட்டுவக் கரண்டி. இதில் உட்புறமும் வெளிப்புறமும் தோரணிகள் அமைந்திருக்கும்.*


மூலைச் சட்டுவக் கரணடி

**cornice** : *(க.க.)* **எழுதகம்** : *கட்டிட உச்சியின் சிற்ப வேலைப்பாடு அமைந்த பிதுக்கம்.*

**cornice brake** : **எழுதகத் தடைக் கருவி**: *திறப்புடைய குறுக்கு அடிக் கட்டையும், அலகுகளும் உடைய ஒரு தரைத் தடைக் கருவி. இதில், ஒரு கட்டுத் தளையினை அல்லது ஒரு மடிப்புச் சலாகையினைச் சார்ந்து ஓர் உறுதியான நிலையில் உலோகத் தகடு அமைந்திருக்கும். அதனைக் கொண்டு உலோகத்தை வளைக்கவோ மடிக்கவோ செய்யலாம்.*

**cornucopia** : **வளமார் கொம்பு** : *மலர்-கனி-பயிர் வளம் பொங்கி வழிவதாக வளமார் கொம்பு வடிவாகப் புனையப்பட்ட அழகுக் கலம்.*

**corollary** : **துணை முடிபு** : *தெளியப்பட்ட முடிபிலிருந்து எளிதில் உய்த்தறியப்படும் ஒரு துணை முடிபு.*

**corona** : *(க.க.)* **ஒளிவட்டம்** : *(1) தூணின் அகல் நெடுந் தலைப்பு.*
*(2) ஓர் உந்து ஊர்தியின் மூட்ட அமைப்பின் துணை மின்சுற்று*

வழியிலிருந்து உயர் அழுத்த மின்னோட்டம் கசிதல்.

**corona :** *(விண்.)* **ஒளி வட்டம்** *:* சூரியனை அல்லது சந்திரனைச் சுற்றியுள்ள செல் விளிம்புடைய ஒளி வட்டம்.

**coronary arteries :** *(உட.)* **நெஞ்சுப்பைக் குருதி நாடி:** நெஞ்சுப்பைத்தசைக்குக் குருதி வழங்கும் நாடி.




குருதி நாடி

**coronary circulation:** *(உட.)* **நெஞ்சுப்பைக் குருதியோட்டம்:** நெஞ்சுப்பை சுற்றிய குருதியோட்டம்.

**corridor :** *(க.க.)* **நடைக்கூடம்** *:* இரண்டு அறைகளுக்கு இடையேயுள்ள இடைவழி நடைக்கூடம்.

**corosion :** **அரிமானம்** *:* ஈரப்பதமான சூழலில் உலோகங்களுடன் ஆக்சிஜன் கலந்து உலோகங்களின் மீது துருப்பிடித்தல் அல்லது ஆக்சிகரணமாதல்.

**Corrosion resistant alloys : துருப்பிடிக்காத உலோகக் கலவைகள்** *:* இரும்பு, நிக்கல், கோபால்ட், செம்பு, சில சமயம் மாலிப்டினம். டங்ஸ்டன் இந்த வகையின் பாற்படும். இந்த உலோகக் கலவைகள் பல குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வாணிகப் பெயர்களுடன் விற்பனை செய்யப்படுகின்றன.

**corrugated board :** *(தாள்.)* **மடிப்பு அட்டை** *:* அட்டைத் தாளாகப் பயன்படும்படி மடிப்புச் சுருக்கம் செய்யப்பட்ட வைக்கோல் அட்டைத் தாள்.

**corrugated iron : நெளிவு இரும்புத் தகடு:** வலிவு மிகும் பொருட்டு நெளி நெளியாக வளைக்கப்பட்ட இரும்புத் தகடு.


**corrundum :** *(எந்;பட்.)* **கோர்ரண்டம்** *:* இது மிகக் கடினமான அலுமினியம் ஆக்சைடு ஆகும் போது ஓர் உராய்வுப் பொருளாகப் பயன்படுகிறது.

**cosine :** *(கணி.)* **கோணக் கிடக்கை** *:* செங்கோண சாய்வரை மீது கோணமடுத்த அடிவரை கொள்ளும் சார்பளவு.

**cosmic rays:** *(இயற்.)* **மின் காந்த நுண்ணலைகள்** *:* புறவெளியிலிருந்து வாயு மண்டலத்திற்கு உயர் ஆற்றல் ஊடுருவும் துகள்கள் அல்லது நுண்ணலைகள்.

**cotter:** *(எந்.)* **கவர்முள் கொளுவி:** எந்திரப் பகுதிகளை இறுக்கும் முள் கொளுவி.

**cotter pin** *: (எந்.)* **கடையாணி :**



கடையாணி

சுரையாணி கழன்று விடாமல் தடுப்பதற்கு ஒரு மரையாணியின் முனைகளின் அருகேயுள்ள ஒரு துவாரத்தினுள் செருகப்படும் ஒரு வகை ஆணி.

**cotton gin : பஞ்சு கடையும் பொறி** *:* பஞ்சு வேறு கொட்டை வேறாக்கும் ஒரு வகை எந்திரம். இதனை 1793 இல் இலி விட்னி கண்டுபிடித்தார். இது பஞ்சாலைத் தொழில் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தது.

**cotton waste : கழிவுப் பஞ்சு :** பஞ்சாலைகளிலிருந்து வெளியே தள்ளப்படும் கழிவுப்பஞ்சு. எந்திரங்களைத் துடைக்க இது பயன்படுகிறது.

**cotton wood : பஞ்சு மரம் :** இது மென்மையான மரம்.இது15—23மீ. வரை வளரும். 1.8மீ. வரை விட்டமுடையதாக இருக்கும். இது காகிதக்கூழ், பெட்டிகள் முதலியன செய்யப் பயன்படுகிறது.

**coulomb**: *(மின்.)* **கூலம் :** ஒரு நொடியில் மின் அலகால் ஈர்க்கப் படும் மின் ஆற்றல் அலகு.

**coumarone-indene resin : கூம ரோன் இண்டெண் பிசின் :** மற்றப் பிசின் பொருள்களின் அல்லது அவற்றின் அடிப்படையிலான கூட்டுப் பொருள்களின் இயல்பு களை மாற்றமைவு செய்வதற்கு இது முக்கியமாகப் பயன்படுத்தப் படுகிறது. இது பிசின் தன்மை யுள்ள திரவமாகவும் உருகக் கூடிய திடப்பொருளாகவும் இளமஞ்சள் நிறம் முதல் கருமை நிறம் வரைப் பல்வேறு வண்ணங்களில் கிடைக் கிறது. மஞ்சள் நிறத் தள ஓடுகள், காப்புப் பூச்சுகள், ஆவணங்களை படியெடுத்தல் ஆகியவற்றில் பயன் படுத்தப்படுகிறது.

**counter: கணக்கிடு பொறி:** ஓரிரு எந்திரத்தில் எத்தனை உறுப்புகள் செய்யப்பட்டுள்ளன என்னும் எண்ணிக்கையினைப் பதிவு செய் யும் ஒரு சாதனம்.

**counter balance** : *(எந்.)* **சரி சம எதிர் எடை :** ஒரு சக்கரத்தை அல் லது திருவிட்டத்தைச் சமநிலை யில் வைப்பதற்காகச் சேர்க்கப் படும் கூடுதல் எடை

**count down** : *(விண்.)* **இறங்கு முகக் கணிப்பு :** குறித்த நேரச் செயல் நடைமுறையில் செயல் நேரம் இன்மை எண் (0) ஆக வர வரக் குறையும்படி இடைநேரம் அமைத்தல்.

**counter bore**: *(எந்.)* **எதிரிடைத் துளை:** ஒரு துளையை அதன் ஒரு நீளப்பகுதியில் துளையிட்டு விரி வாக்கம் செய்தல்.

வெட்டும் சாதனத்தில் சில சமயம் வெட்டு முனைகளைச் செலுத்துவதற்கும், மையக் குறியி டுவதற்கும் ஒரு தலைப்பான் அல் லது முனைப்பான் பொருத்தப்பட் டிருக்கும். எடுத்துக்காட்டாக ஒரு திருகாணியின் தலை, உலோகப் பரப்பில் விசையுடன் பாயும் வகை யில் துரப்பணம் செய்த ஒரு துவா ரத்தின் தொடக்கத்தை விரிவாக்கு தல்.

**counter bracing or cross bracing** : *(க.க.)* **குறுக்கு இணைக் கவிகை :** உத்திரத்திற்குக் கூடுதல் முட்டுக் கொடுத்து, குறுக்கு பார விசையினைத் தளர்த்துவதற்காக ஓர் ஆதாரக் கட்டில் அல்லது தூலத்தில் பயன்படுத்தப்படும் மூலைவிட்ட இணைக் கவிகை.

**counter clockwise** : *(தானி.)* **இடஞ்சுழித்த / இடஞ்சுழியாக :** ஒரு கடிகாரத்தின் முட்கள் சுற்று கிற திசைக்கு எதிர்த்திசையில் சுற் றுகிறது.

**counter E.M.F.** *(மின்.)* **எதிரிடை மின்னியக்க விசை :** ஒரு மின் சுற் றுவழியில் மின்னோட்டத்தை எதிர்க்கிற எதிரிடை மின்னியக்க விசை.

**counters** : *(பொறி.)* **துணை முகப்புகள் :** ஓர் ஆதாரக் கட்டில் பாரவிசையின் புறமாற்றிப்பினை ஏற்பதற்காக உள்ள துணையான மூலை விட்ட உறுப்புகள்.

**counterflow** : *(குழை; பத.)* **எதிர்பாய்வு :** இரு திரவங்களிடை யில், பாய்வுத் திசைக்கு எதிர்த் திசையில் வெப்பப் பரிமாற்றம் நடைபெறுதல்.

**counter photo electric**: *(மின்.)* **ஒளிமின் எதிர்விசை :** ஓர் ஒளிக் கற்றையை இடையீடு செய்வதன் மூலம் ஊக்குவிக்கப்படும் எதிர் விசை.

**counter shaft** : *((எந்.)* **இடைச் சுழல் அச்சு :** எந்திரத்தில் தலை மையான சுழல் அச்சினால் ஓட் டப்படும் இடைச்சுழல் அச்சு.

**counter sink** : *(எந்.)* **சரிவுப் பள் ளம் செய்தல் / சரிவுப்பள்ளம் செய்**

கருவி : (1) திருகாணித் தலைப் புப் பதியும்படி துளையின் விளிம்பினைச் சுற்றிச் சரிவாகப் பள்ளம் செய்தல்.

(2) அவ்வாறு பள்ளம் செய்வதற்கான கருவி.

**counter weight : சரி எதிரெடை:** சமநிலை ஏற்படுத்துவதற்காக இணைக்கப்படும் ஓர் விளிம்புடன் பொருத்தப்படும் ஓர் எடை. இதற்கு எடுத்துக்காட்டு.

**count of cloth நூலிழைத் தரக் குறிப்பெண் :** ஒரு சதுர அங்குலத் துணியில் உள்ள பாவுநூல், நிரப்பு இழை ஆகியவற்றின் எண்ணிக்கை.

**country beam :** (தானி. எந்.) **நாட்டுப்புற ஒளிக்கதிர் :** உந்து வண்டிகள் நெடுஞ்சாலைகளில் செல்லும் போது, ஓட்டுநருக்கு நேராக ஒளிக்கதிர் பாயுமாறு வடிவமைக்கப்பட்ட மேல் நிலை ஒளிக்கதிர். இது நாட்டுப்புறப் பகுதிகளில் செல்லும் போது, எதிரில் ஊர்திகள் வராத போது பயன்படுத்தப்படுகிறது.

**coupe :** (தானி.) **தனியறைப் பெட்டி வண்டி:** இரு பயணிகளுக்கு மட்டும் இடவசதியுள்ள ஒரு தனியறைப் பெட்டி வண்டி. இதன் பின்புறத்தில் சாமான்கள் அறையொன்று இருக்கும்.

**couple :** (எந்.) **ஈரெதிர் விசை :** ஒரே பொருளில் எதிரெதிராய் இயங்கும் சமமான இரண்டு ஆற்றல்களின் இணைவு.

**coupled inductance :** (மின்.) **இணைவு மின்தூண்டல் :** ஒரு மின் சுற்று வழியில், ஓர் இரண்டாம் மின் சுற்று வழியில் மின்னோட்ட மாறுதல்கள் வாயிலாகத் தூண்டப்பட்ட மின்விசை அழுத்த அளவு.

**coupler :** (மின்.) **இணைப்பான் :** ஒன்றுக்கொன்று இணைந்து இயக்கும் இசைப்பொறியமைப்பு.

**coupling :** (கம்.) **இணைப்புக் கொக்கி :** இரு குழாய்த் துண்டுகளை இணைப்பதற்குப் பயன்படும் இணைப்புக் கொக்கி. இதில் உட்புறத்தில் புரியிழைகள் அமைக்கப் பட்டிருக்கும்.

**course: அடுக்கு வரிசை :** அடுக்கு வரிசையாக அல்லது தளவரிசையாக அமைத்தல். ஒரு சுவரில் அடுக்கப்படும் ஒரு செங்கல் வரிசை ஓர் அடுக்கு வரிசை எனப்படும்.

**course light:** (வானூ.) **ஓடுபாதை விளக்கு :** விமான நிலையத்தில் ஓடுபாதை நன்கு புலனாகுமாறு அமைக்கப்பட்டுள்ள ஒளி விளக்கு.

**court :** (க.க.) **சதுக்கக் கூடம்:** நாற்புறமும் கட்டிடங்கள் சூழ்ந்த அல்லது ஓரிரு பக்கங்களில் மட்டும் கட்டிடங்கள் சூழ்ந்த சதுக்கக் கூடம்.

**court cupboard : காட்சிக் கூட அடுக்குப் பலகை :** இது ஒரு குட்டையான அடுக்குப் பலகை. முதலில் இது ஒரு பக்கமேசையாக அமைக்கப்பட்டது. பின்னர் தனி அடுக்காக அமைக்கப்பட்டது.

**cove : வளைவிடம் :** ஒரு பெரிய உட்குடைவான எழுதகம், ஒரு சுவர் மாடத்தினையும் குறிக்கும்.

**cove ceiling :** (க.க.) **வளைவு விதானம் :** சுவர்களிலிருந்து எழுந்து வளைவாக உள்ள ஒரு விதானம்.

**cove mouding :** (க.க.) **வளைவு மேல் தளம் :** உட்குழிவான மேல் தளம்.

**cover mould:** (குழை.) **பொதி வார்ப்படம் :** ஓர் உட்செலுத்து வார்ப்படத்தில் நிலையிருப்பாக உள்ள ஒரு பாதி.

**cover papers** : (அச்சு.) **அட்டைத் தாள்கள்** : துண்டு வெளியீடுகளுக்கு அட்டைகளாகப் பயன்படுத்துவதற்கான கனத்த தாள்கள் அஞ்சலில் அனுப்புவதற்குத் தேவைப்படும் வலுவான தாளாக பயன் படுத்தப்படுகிறது.

**cover plate** : (பொறி.) **கவசத் தகடு** : ஒரு தூணின் அல்லது தூலத்தின் பக்கப் பகுதியில், வளைவினைத் தாங்குவதற்காகச் சேர்க்கப்பட்டுள்ள ஒரு தகடு.

**cowl** : (தானி.எந்.) **கவிகைமூடி** : உந்துவண்டியில் பிடருக் கவிகைக்கும், கருவியறைக்குமிடையில் கவிகைபோல் அமைந்திருக்கும் பகுதி.

**cowling** : (வானூ.) **விமான எந்திரக் கவிகை மூடி** : விமான எந்திரத்தின் மேல்மூடி. இதனை அகற்றவும் மீண்டும் நீட்டிக் கொள்ளவும் செய்யும் வகையில் இது அமைந்திருக்கும்.

**cracking**: (வேதி.) **பிளப்பு முறை**: மண்ணெண்ணெய், எரியெண்ணெய் போன்றவற்றில் வெப்ப மூட்டி, அழுத்தத்தை அதிகரிப்பதன் மூலம் கச்சா எண்ணெயிலிருந்து பெட்ரோல் எடுக்கும் அளவினை அதிகரிப்பதற்குரிய ஒரு செய்முறை. இதில் பெட்ரோலியம் தனி மூலக் கூறுகளாகப் பிரிக்கப்படுகிறது.

**crackle** : **பீங்கான் அழகு வேலைபாடு**. அழகுக்காக வேண்டுமென்றே வெடிப்புடையதாகச் செய்யப்படும் சீனப் பீங்கான் கலத்திலுள்ள நுட்ப வேலைப்பாடுகள்.

**craft** : **கைவினை** : கைவேலைப் பாடுகளை நுட்பமாகச் செய்திடும் தேர்ச்சித் திறன். கைத்திறனுள்ள தொழில்; செய்தொழில்.

**crafts man** : **கைவினைஞர்**: தேர்ச்சித் திறன் வாய்ந்த ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்.

**crampiron** : (வார்.) **இரும்புப் பற்றிணைப்பு** : பகர வடிவான வளைவுடைய இரும்பாலான பற்றிணைப்பு.இது வார்ப்படத் தொழிலில் பயன்படுகிறது.

**crane** : **பாரந் தூக்கிப் பொறி**: பற்சக்கரங்கள், கம்பி வடங்கள் பீப்பாய் வடங்கள் முதலியவற்றின் மூலமாக பெரும் பாரங்களைத் தூக்குவதற்குப் பயன்படுகிற, கையினால், மின்விசையினால் இயக்கப்படுகிற ஒரு பொறியமைவு.

**crane ladle**:**பாரந்தூக்கி அகப்பை**: உருக்கிய உலோகததை எடுத்துச் செல்வதற்குரிய பெரிய அளவு அகப்பை. இது மிகப் பெரியதாக இருப்பதால் இதனை ஒரு பாரந் தூக்கியினால் மட்டுமே தூக்க முடியும்.

**crank** : (எந்.) **திருகு விட்டம்** : ஒரு சுழல் தண்டின் அச்சினைச் சுற்றி சுழல்கிற ஒரு நெம்புகோல்.

**crankcase** : (தானி.) **உராய் பொருட்கலம்** : ஓர் உந்துவண்டியின் அடிப்பகுதி. இது உராய்வு எண்ணெய் வழங்குவதற்கான ஒரு சேமிப்புக் கலமாகச் செயற்படுகிறது.

**crank case ventilator** : (தானி.) **உராய் பொருட்கலப் பலகணி** : உராய் பொருட்கலத்தில் உண்டாகும் ஆவிகளை உறிஞ்சி வெளியேற்றுவதற்கான சாதனம். இவ்வாறு வெளியேற்றாவிட்டால், நீராவியாலும், பெட்ரோலியம் ஆவியாலும் எண்ணெய்நீர்த்துப் போய் விடும்

**crank shaft** : (எந்.பொறி.) **திருகு வட்ட சுழல்தண்டு** : ஓர் எஞ்சினின் பிரதான சுழல் தண்டு. இதனுடன் இணைப்புச் சலாகைகள் பொருத்தப்படிருக்கும். இது உந்து தண்டுகளின் விரைசுழல் இயக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

**crank shaper**: *(எந்.)* **திருகு விட்ட கரைசற் பொறி** : ஒரு திருகு விட்ட இயக்கத்தினால் செயற்படும் திமிசு உடைய ஒரு கடைசல் பொறி.

**crater of an arc** : *(மின்.)* **சுடர் விளக்கு வளைவுக் குழி** : ஒரு சுடர் விளக்கில் நேர்மின்வாய்க் கார்பனில் மின்னோட்டச் செயலினால் உண்டாகும் உட்புழையான நுனி.

**crazing** : **வெடிப்பு** : (1) மட்பாண்டத்தில் ஏற்றத் தாழ்வான சுரிப்பு காரணமாக உண்டாகும் நுண்ணிய வெடிப்புத் தடங்கள். இது முறையின்றிச் சூடாக்குவதாலும் உண்டாகிறது.

(2) அதிக வண்ணமேற்றிய பூச்சு வண்ணம் அல்லது இனாமல் இன்னும் அதிக நெகிழ்வுடைய மேற்பரப்பில் பூசப்படும்போது ஏற்படும் மயிரிழை போன்ற வெடிப்பு. இது பின்னர் ஆழமான பிளவாக ஆகக் கூடும்.

(3) பிளாஸ்டிக் பொருள்களின் மேற்பரப்பில் அல்லது உட்பகுதியில் உண்டாகும் நுண்ணிய வெடிப்புகள்.

**creasing** ; *(அச்சு.)* **மடிப்பு வரையிடுதல்** : கனமான அட்டையினை அல்லது மேலட்டையினை உடைந்துவிடாமல் மடித்து வரையிடுதல்.

**credence** ; **குறுமேசை** : திருக்கோயிலில் முந்திரித் தேறலும், ரொட்டியும் வைக்கப்படும் பலி பீடத்திற்கு முன்னுள்ள சிறு மேசை.

**creep** : *(உலோ.)* **உருத்திரிபு** : உயர்ந்த அளவு வெப்ப நிலையில், நிலையான பாரத்தில் எஃகு மெல்ல மெல்ல உருத்திரிபு கொள்ளுதல்.

**creeper** : *(தானி. எந்.)* **தாழ் மேடை** : உந்து வண்டியைப் பழுது பார்ப்பவர். உந்து வண்டியில் அடியில் வேலை செய்யும்போது படுத்துக் கொள்வதற்குப் பயன் படும் ஒரு தாழ்வான மேடை.

**creo-sote** : *(வேதி.)* **கீலெண்ணெய்** : கீலிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் வடிவான ஆற்றல் வாய்ந்த நச்சரி. இது தொற்று நீக்கியாகவும் மரக்காப்புப் பொருளாகவும் பயன்படுகிறது.

**creo-soting** ; **கீலெண்ணெய்ப் பக்குவம்** : மரக்கீலிலிருந்து வடித் திறக்கப்படும் நெகிழ்ச்சிப் பொருள் கொண்டு வெட்டு மரத்தினைப் பக்குவம் செய்தல். இதன் மூலம் வெட்டுமரத்தின் உழைப்புக் காலம் அதிகரிக்கிறது.

**creo·soting cylinder** : **கீலெண்ணெய்ப் பக்குவ நீள் உருளை** : இது வலுவான தேனிரும்பு நீள் உருளையாகும். இதில் ரயில் தண்டவாளங்களில் ஈரம் வெளியேற்றப் பட்டு, அழுத்தத்தின் கீழ் கீலெண்ணெய் நிரப்பப்படுகிறது.

**crepe grain** : **கரண்பரப்பு** : மெல்லிய சுருக்கமுடைய மேற்பரப்பு.

**cresting** : *(க.க.)* **முகடு** : ஒரு கட்டிடத்தின் சுவரில் அல்லது மோட்டுவரையில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார வேலைப்பாடு.

**crest of screw thread** : *(எந்.)* **திருகிழை முகடு** : ஓர் இழையின் இரு பக்கங்களையும் இணைக்கும் உச்சப் பரப்பு.

**cretonne**: **முரட்டுத்துணி**: சலவையற்ற முரட்டு அச்சடித்த துணி.

**crewel work** : **திரைச் சித்திர வேலைப்பாடு**: முறுக்கப்பட்ட மெல்லிய கம்பிளி நூலைக் கொண்டு துணி மீது செய்யப்படும் சித்திர வேலை.

**crimping** : *(பட்.)* **சுருள்வித்தல்**: விரும்பிய வடிவில் சுருட்டி வளைத்து மடித்தல்.

**crimping machine : சுருள் விப்புக் கருவி** : குஞ்சங்களின் மேல் மடிப்புகள் அல்லது சுருள்கள் உண்டாக்குவதற்கான எந்திரம்.

**cripple rafter** : *(க.க.)* **சார இறைவாரக் கைமரம்** : கட்டிடத்தின் பக்கத்துக்கு இடப்படும் மூட்டு.

**criterion : அளவைக் கட்டளை** : ஒப்பீடு செய்வதற்குரிய ஒரு கட்டளை விதி.

**critical altitude :** *(வானூ.)* **மாறுநிலை உயரம் :** ஓர் எஞ்சினின் உள்ளிழுப்பு பல்வாயிற் குழாயில், மதிப்பீடு செய்த விசை அளவுடனும், கடல் மட்ட வேகத்திலும் சாதாரணமாக இயங்கும் அளவுக்குச் சமமான ஓர் அழுத்தத்தை நிலைநாட்டும் வகையில் ஓர் அதிவேகப் போர் விமானம் பறக்கும் உச்ச அளவு உயரம்.

**critical angle** : *(வானூ.)* **மாறு நிலைக் கோணம்** : ஒளிக்கதிர் கோடு நிலையிலிருந்து திரிநிலைக்கு மாறும் கோணம்.

**critical speed** : *(வானூ.)* **மாறு நிலை வேகம்** : கட்டுப்பாட்டைப் பேணுவதற்கு இயல்விக்கும் வகையில் ஒரு விமானம் பறக்கின்ற மிகக் குறைந்த வேகம்.

**critical temperature**:*(எந்.)* **முட்டு பதன்** : அழுத்தத்தால் மட்டும் நீர்மமாக்க முடியாத நிலையுடைய வாயுவின் தட்பவெப்ப நிலையளவு.

**critical angle** : **மாறுநிலைக் கோணம்** : ஒளிக்கதிர்க் கோடு, நிலையிலிருந்து திரி நிலைக்கு மாறும் கோணம்.

**crockery** : **மட்பாண்டம்** : சுட்ட களிமண் கலங்களின் தொகுதியைக் குறிக்கும் சொல்.

**crocking** : **சாயத்தேய்ப்பு** : சாயம் தோய்த்த பொருளிலிருந்து திருத்தமாக இல்லாத சாயத்தைத் தேய்த்து அப்புறப்படுத்துதல்.

**crocus cloth** : **மெருகுத் துணி** : தூளாக்கி இரும்பு ஆக்சைடு ஒட்டப்பட்டுள்ள துணி. இது மெருகேற்றுவதற்குப் பயன்படுகிறது.

**crookes tube**; *(மின்.)* **ஒளிக்கதிர்க் கோட்டக் குழாய்**: ஒளிக்கதிர் உயர் கோட்ட நிலையை எடுத்துக்காட்டுவதற்கான காற்றில்லாக் கண்ணாடிக் குழல்.

**crookes's vacuum**:**முனைப்பு வளி நீக்க இடைவெளி.**

**crookes rays**: **எதிர்மின் வாய்க் கதிர்கள்.**

**crop**: *(தோல்.)* **பதனிட்ட மாட்டுத் தோல்**: *(1)* செருப்பு முதலானவற்றின் காலடித் தோலுக்காகத் தயாரிக்கப்படும் பதனிட்ட முழு மாட்டுத் தோல்.

*(2)* **விளிம்புவெட்டு** : அச்சுமறு படி எடுப்பதற்காக ஓர் அச்சுத் தகட்டினை தேவையான வடிவளவுடன் வெட்டி எடுத்தல்.

**cropper** : *(எந்.)* **கத்தரிப்பான்** : சலாகைகள் முதலியவற்றை வெட்டுவதற்குப் பயன்படும் ஒரு வகைக் கத்தரிப்பான்.

**cropping**: **கத்தரித்தல்**: துணியின் மேற்பரப்பினைக் கத்தரித்தல்.

**cross** : *(கம்.)* **குறுக்கு வெட்டுக் குழாய்** : இரு இணைக் குழாய்களை அவற்றின் செங் கோணங்களில் இருக்குமாறு நான்கு கிளைகளாகக் குறுக்கு வெட்டாகப் பொருத்துதல்.

**cross belt**:*(எந்.)* **குறுக்குப்பட்டை**: ஒரு கப்பியின் மேற்பகுதிக்கு மாறி திசையை எதிர் மாறாக்கும் வகையில் ஓடுகிற பட்டை.

**crosscut saw** : *(மர.வே.)* **குறுக்குவெட்டு ரம்பம்** : உத்தரங்களைக் குறுக்காக வெட்டுவதற்கான பெரிய ரம்பம்.

**cross feed**: *(எந்.)* **குறுக்கு ஊட்டம்** : ஒரு கடைசல் எந்திரத்தில் குறுக்காக ஊட்டுதல். இந்தக் கடைசல் எந்திரம், வேலைப்பாடு செய்யப்படும் பொருளின் அச்சுக்குச் செங்கோணத்தில் இயங்கும்.

**cross grain** : **நுண்இழைவரி** : நுண் இழைவரிக்கெதிரான நுண் இழைவரி.

**crosshatch generator** : *(மின்.)* **வலைக்கோட்டு மின்னாக்கி** : தொலைக் காட்சியைப் பழுது பார்ப்பதில் பயன்படுத்தப்படும் ஒரு சோதனைக் கருவி. இது படக்குழாயில் வலைக்கோட்டு பின்னல் தோரணியை உண்டாக்குகிறது. வண்ணத் தொலைக்காட்சியில் மூன்று எலெக்ட்ரான் ஒளிப் பாய்ச்சு கருவிகளிலிருந்து வரும் ஒளிக்கற்றைகள் ஒரு முகப்படுவதைச் சீராக அமைப்பதற்குப் பயன்படுகிறது.

**cross hatching**: **வளைக்கோட்டுப் பின்னல்** : வலைக் கோடுகளிட்டு நிழற்சாயல் காட்டும் வலைக் கோட்டுப் பின்னல்.

**cross head** : *(பொறி.)* **விட்டக் கோல்** : நீராவிப் பொறி போன்றவற்றில் முகட்டுக் குறுக்கு விட்டக் கோல்.

**crossing file**:*(கணி.)* **கூம்பு அரம்**: தட்டையான பக்கங்கள் பின்புறமாக ஒட்டியுள்ள இரு அரை வட்டங்கள் போல் அமைந்த பகுதியைக் கொண்ட ஒரு கூம்பு அரம்.

**cross lab** : *(மர.வே.)* **குறுக்கு வட்டத் தகடு** : இரு துண்டுகள் ஓரிடத்தில் இணையும்போது ஒரே சமதளத்தில் படிந்திருக்குமாறு இரு துண்டுகளும் பாதிபாதியாகப் பொருத்துகிற குறுக்கு இணைப்பு.

**cross member** : **குறுக்கு உறுப்பு**: ஓர் உந்துவண்டிச் சட்டகத்தின் ஒரு கட்டமைவுப் பகுதி. இது பக்கக் கம்பிகளை, செங்கோணங்களை இணைக்கும்.

**cross modulation** : *(மின்.)* **முரண் அலை மாற்றம்** : வானொலி அலைவெண் மிகைப்பின் உட்பாட்டின் சைகை காரணமாக ஏற்படும் திரிபாக்கம்.

**crossover** ; *(கம்.)* **மேற்கவி குழாய்**: 'U' என்ற எழுத்தின் வடிவில் வளைந்து பொருத்தப்பட்டிருக்கும் குழாய் அமைப்பு. குழாய்கள் ஒரே சமதளத்தில் இருக்கும் போது ஒரு குழாய் மற்றொரு குழாயைக் கடந்து செல்வதற்கு இது பயன்படுகிறது.

**cross section** : **குறுக்கு வெட்டு** : வேலைப்பாடு செய்யப்படும் பொருளின் நீளவாக்கு அச்சுக்குச் செங்கோணங்களில் உள்ள ஒரு குறுக்கு வெட்டுப் பகுதி.


**cross slide** : *(எந்.)* **குறுக்கு சறுக்கிழைவு** : கிடைமட்டமான சறுக்கிழைவுத் தடம் அல்லது இணைப்பான். இது ஓர் உருவரை எந்திரத்தில் கருவிப் பெட்டியைத் தாங்கிச் செல்கிறது. ஒரு கடைசல் எந்திர ஊர்தியின் சேணத்தின் மீது இந்தச் சறுக்கிழைவுத் தடம் இயங்கி குறுக்கீட்டு ஊட்டத்தை அளிக்கிறது. இது கூட்டு ஆதாரத்தையும் தாங்கி நிற்கிறது.

**cross-stitch** : **குறுக்குத் தையல்** : பின்னல் போல் அமையும் இரட்டைத் தையல்,

**cross talk** : *(மின்.)* **குறுக்கு உரையாடல்** : தொலைபேசி உரையாடலில் குறுக்கீடு ஏற்படுதல்.

**cross tap** : *(மின்.)* **குறுக்கு இணைப்பு**: ஒரு குறுக்கு இனணப்பு

போன்ற ஓர் இணைப்பு, இதில் தனியொரு கம்பிக்குப் பதிலாக இரு கம்பிகள் பிரதானக் கடத்தியில் நுழைக்கப் பட்டிருக்கும்.


குறுக்கு இணைப்பு

**crosstying springs** : **ஆதாரக் கட்டு சுருள்வில்** : கரடுமுரடான திரைச்சீலைகளில் தொய்வு ஏற்படாமல் தடுப்பதற்காக அமைக்கப்படும்சுருள்வில் அமைப்புமுறை. இது திண்டுமெத்தை அமைப்புக்கு உறுதிப்பாட்டினை அளிக்கிறது.

**cross valve** : (எந்.) **குறுக்கு ஓரதர்** : ஒரு குறுக்குக் குழாயில் பொருத்தப்பட்டுள்ள ஓரதர். இணையாக உள்ள இரு குழாய்களுக்கிடையில் வேண்டுகிறபோது தொடர்பு ஏற்படுத்துவதற்கு இது பயன்படுகிறது. எண்ணெய் மற்றும் நீர் இறைப்பு நடவடிக்கைகளில் மிகுதியாகப்பயன்படுகிறது.

**cross-wind force**: (வானூ.) **குறுக்குக் காற்று விசை** : விமானத்தின் மீது அல்லது அதன் ஏதேனும் பகுதி மீது தாக்கும் மொத்தக் காற்று விசையின் உயர்த்து விசைக்கும் இழுவை விசைக்கும் செங்குத்தாகச் செயற்படும் அமைப்பான்.

**crotch vaneer** : (மர.வே.) **கவட்டு மேலொட்டுமானம்** : மரக் கவட்டிலிருந்து அல்லது ஒன்றாக இணையும் நூதனமானகரண்பரப்பினைக் காட்டும் இரட்டை மரங்களிலிருந்து வெட்டப்பட்ட மேலோட்டுமானப் பலகை.

**crowbar** : **கடப்பாரை** : நெம்புகோலாகப் பயன்படும் இறுதி வளைந்த இரும்புக் கம்பி.

**crown** : **மேற்குவடு**. (1) தளமட்டத்தின் உயர்ந்த பகுதி. சாலைமையம் என்றும் கூறப்படும்.

(2) கட்டிடக் கலையில் எழுதகத்தின் உச்சி உறுப்பு.

(3) குழாய் அமைப்பு வேலையில், குழாயில் நீர்பாயும் திசையினை மேல்நோக்கி பாயச் செய்யும் பொறியமைப்பின் பகுதி.

(4) மட்பாண்டக் கலையில், சூளையின் மேற்கவிந்த கூரை.

**crown molding**: (க.க.) **இரட்டை முகப்பு வளைவு** : வளைவான இரட்டை முகப்புடைய ஒரு வளைவு. இதில் அடைப்புடைய எழுதகத்தில் மேல் உறுப்பு, மேற்கூறையை அடுத்துக் கீழே அமைந்திருக்கும்.

**crown pulley**:(எந்.) **மையக் கப்பி**: முகப்பின் விளிம்புகளைக் காட்டிலும் மையத்தில் அதிக விட்டமுடைய ஒரு கப்பி. இந்த மையம், வார்ப்பட்டை கப்பியிலிருந்து நழுவிச் செல்லாமல் தடுக்கிறது.

**crow's foot** : (வானூ.) **காகக் காற்குறி** : தனியொரு வடத்தியுள்ள பாரத்தைப் பரவலாகப் பகிர்ந்தளிப்பதற்காகப் பல குறுகிய வடங்களை அமைக்கும் முறை.

**crucible** : (வேதி.) **புடக்குகை** : உலோகங்களை உருக வைக்கும் மட்கலம்.

**crucible furnace** : (உலோ.) **புடக்குகை உலை** : அலுமினியம், வெண்கலம், செம்பு போன்ற அறமல்லாத உலோகங்களை உருக்குவதற்குப் பயன்படும் வாயுவினால் எரியூட்டப்படும் உலை.

**crucible steel** : **மூசை எஃகு** : ஒரு புடக்குகையில் (மூசை) மெல்லிரும்பினைத் கட்டு, அதனுடன் கட்டைக்கரியினை அல்லதுதேனிரும்பு அல்லது கார்பன் நிறைந்த வேறு பொருளைச் சேர்த்து உருக்கித்

தயாரிக்கப்படும் உயர்ந்த ரக எஃகு. இவ்வாறு தயாரிக்கப்படும் எஃகில் 0.75% முதல் 1.50% வரை கார்பன் கலந்திருக்கும். இந்த எஃகு வெட்டுக் கருவிகள், வார்ப்படங்கள் முதலியன தயாரிக்கப் பயன்படுகிறது.

**crude oil : கச்சா எண்ணெய் :** பூமியிலிருந்து இயற்கை நிலையில் எடுக்கப்படும் பெட்ரோலியம். இது பக்குவப்படுத்தப்படாமல் இருக்கும்.

**crushing strain: நொறுங்குவிசையழுத்தம் :** ஒரு பொருள் அழுத்தப்படும்போது அதனை நொறுங்கச் செய்யும் விசையழுத்தம்.

**cryogenic propellamt :** *(விண்.)* **உறைகலவை முற்செலுத்தி :** மிகத் தாழ்ந்த வெப்ப நிலையில் மட்டுமே திரவ நிலையில் இருக்கும் ஒரு ராக்கெட் எரிபொருள்.

**cryogenics :** *(மின்.)* **தாழ்வெப்ப இயற்பியல் :** மிகவும் தாழ்ந்த வெப்ப நிலையில் அதிகத் திறம்பாட்டினைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள மின்னணுவியல் சுற்று வழிகள்.

**cryohydrate :** *(குளி. பத.)* **கிரையோஹைட்ரேட் :** உப்பும் நீரும் கலந்த ஓர் உறை கலவை.

**cryometer : தாழ் வெப்பமானி :** தாழ்நிலைத் தட்பவெப்பமானி.

**cryolite: பனிக்கல்:** *(கனி.)* கிரீன்லாந்தில் எடுக்கப்படும், தொழில் துறைக்குப் பெரிதும் பயன்படும் பயனுடைய படிகக் கல்வகை. இது அலுமினியம், கண்ணாடி தயாரிக்கப் பயன்படுகிறது.

**crystal :** *(வேதி.)* **படிகக் கல் :** மறைவெளிக்காட்சி காணப் பயன்படும் படிகக் கற்பாறைக் கோளம்.

**crystal control :** *(மின்னி.)* **படிகக் கட்டுப்பாடு :** அழுக்க மின்னியல் படிகத்தைப் பயன்படுத்தி ஓர் அலைப்பியின் அலைவெண்ணைக் கட்டுப்படுத்துதல்.

**crystal diode :** *(மின்.)* **படிக இருமுனையம் :** நுண்ணலை நிகழ்வுகளில் திருத்தியமைக்கும் கருவியாகப் பயன்படுகிறது.

**crystal filter :** *(மின்.)* **படிக வடிகட்டி :** படிகக்கல் படிகங்களைப் பயன்படுத்தி மின்சுற்று வழியினை மிகத் துல்லியமாக ஒத்தியைவு செய்தல்.

**crystal lattice :** *(மின்.)* **படிகப் பின்னல் :** புறக்கோடி எலெக்ட்ரான்கள் இணை மின்மப் பிணைப்புகள் மூலம் பிணைக்கப்பட்டிருக்கும் ஒரு பொருளின் கட்டமைப்பு.

**crystallization :** *(வேதி.)* **படிக உருவாக்கம் :** உருகிய அல்லது கரைந்த நிலையிலுள்ள ஒரு வேதியியற் பொருளைப் படிக வடிவில் தனியாகப் பிரித்தெடுத்தல்.

**crystallization of iron : இரும்புப் படிக உருவாக்கம்:** முறையற்ற குளிர்விப்பு அல்லது சம்மட்டியடி காரணமாக இரும்பு உடையும் இயல்புடையதாதல்.

**c-stage resins: சி-நிலைப் பிசின்கள் :** வெப்பமூட்டிய நிலையில் உருக்கொடுத்த பிசின்கள், எதிர்விளைவுகளின் இறுதிக்கட்டத்தை எட்டுதல். இந்த நிலையில், உருக்க முடியாததாகவும், கரைக்க இயலாததாகவும் இருக்கும்.

**cuban mahogany : கியூபா சீமை நூக்கு :** வாணிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வகைச் சீமை நூக்கு மரம். இதன் வெட்டு மரம் மிகக் கடினமானதாயும், அடர்கரிய நிறமுடனும் இருக்கும். அறைகலன்கள் தயாரிக்க மிகுதியும் பயன்படுகிறது.

**cube** : **கனசதுரம்** : *(1)* ஆறு சம சதுர முகங்களையுடைய திண்ம உரு. இதில் எல்லாக் கோணங் களும் செங்கோணங்களாக இருக் கும்.

*(2)* **மும்மடிப் பெருக்கம்** : கணிதத் தில் ஓர் எண்ணின் மும்மடிப் பெருக்கமாகிய எண்.

**cube root** : **மும்மடிப் பெருக்க மூலம்** : மூன்று காரணிகளாகக் கொண்டு பெருக்கிய ஓர் எண். இந்த மூன்று காரணிகளின் பெருக் கல் எண் மும்முடி எனப்படும்.

**cubical content** : **கனசதுரக் கொள்ளளவு**: ஒரு கலம் உட்கொள் ளும் கன அளவு, கட்டிடங்களின் கட்டுமானச் செலவினைக் கணக் கிடுவதற்கு அடிப்படையாகவும் இது பயன்படுத்தப்படுகிறது.

**cubic measure** : **கன அளவு** :
1728 கன அங்குலம் = 1 கன அடி
27 கன அடி = 1 கன கஜம்.
231 கன அங்குலம் = 1 காலன்
128 கன அடி = 1 கார்ட்

**cubic meter** : **கனமீட்டர்** : மெட் ரிக் அளவை முறையில் கன அள வின் அலகு. இது $m^3$ எனக் குறிக் கப்படும்.

**cueing** : *(மின்.)* **ஒருவழித் தொலைபேசி** : செயல் திட்டங் களைக் கட்டுப்படுத்தவும், தொழில்நுட்ப அலுவலர்களுக்கு அறிவுறுத்தவும் பயன்படும் ஒரு வழித் தொலைபேசித் தொடர்பு.

**culm** : **நிலக்கரித் தூள்** : நிலக்கரிச் சுரங்கத்தில் நிலக்கரியிலிருந்து எடுக்கப்படும் தூசு மற்றும் அயல் பொருள்கள்.

**cultivator** : **சாகுபடிக் கருவி** : நிலத்தைக் கிளறிக் களையகற்றும் வேளாண்மைக் கருவி.

**culvert** : **பாலம்** ; ஒரு சாலையின் கீழ் தண்ணீர் செல்வதற்காக அமைந்த மூடிய கால்வாய்.

**cumar** : **கூமர்** : கீல் எண்ணெய் வடிபொருளிலிருந்து கிடைக்கும் செயற்கைப் பிசின். இது மின்காப் பியாகவும், வண்ணப் பொருள்களி லும், அச்சு மையிலும் பயன்படுத் தப்படுகிறது.

**cumulative** : **அடுக்குத் திரள்** : அடுக்கடுக்காகச் சேர்த்துப் படிப் படியாகத் திரண்டு வளர்கிற.

**cup center** : *(எந்.)* **கிண்ண மையம்** : மரக்கடைசல் எந்திரத் தில் கடை முளையில் பயன்படுத் தப்படும் மையம். இதனை இறுதி மையம் என்றும் கூறுவர்.



கிண்ண மையம

**cup chuck**: **கிண்ண ஏந்தமைவு**: முனை நுண்கடைசல் வேலையில் பயன்படுத்தப்படும் ஆழமான உட் புழைவுடைய, கடைசற் பொறி யின் ஏந்தமைவு.

**cup grease** : **கிண்ண மசகு** : ஓர் உராய் பொருளாகப் பயன்படும் கனத்த உடலுடைய, ஓரளவுத் திடமான மசகுப் பொருள்.

**cup joint** : **கிண்ண மூட்டு** : அண் டைக் குழாயின் கூர்நுனியைப் பொருத்துவதற்கு ஏற்ற அளவுக்கு வாய் அகன்று இருக்கிற குழாயில் ஒரு குழாயினை இணைத்தல்.

**cupola** : *(க.க.)* **தூபிமாடம்** : *(1)* ஒரு கட்டிடத்தின் கூரைக்கும் மேலுள்ள ஒரு சிறிய தூபி.

*(2)* **வார்ப்பட அடுப்பு** : இரும்பு வார்ப்படத் தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும் அடுப்பு.

**cup leather**: *(எந்.)* **உறைத்தோல்**: நீரியல் எந்திரங்களின் உந்து தண்டு களுக்குப் பயன்படுத்தப்படும் தோலுறை.

**cuprite : செம்புக் கனிமம்:** ($Cu_2O$) சிவந்த செம்பு உலோகக் கனிமம். இது அரிசோனாவிலும், பல தென் அமெரிக்க நாடுகளிலும் கிடைக்கிறது.

**cupro-nickel: செம்பு நிக்கல்;** செம்பும் நிக்கலும் சேர்ந்த கலவை. இது எளிதில் கம்பியாக நீட்டக் கூடியது. தகடாக்கக் கூடியது, இதில் 10%-க்கு மேல் நிக்கல் கலந்திருந்தால் அரிமானத்தைத் தடுக்கும்.

**cup shake :** (தச்சு.) **வெட்டுமரப் பிளவு:** வெட்டுமரத்தில் இரு வளையங்களிடையே காணப்படும் பிளவு.

**cup wheel : கிண்ணச் சக்கரம் :** விளிம்பினால் வெட்டுமாறு ஒரு கிண்ண வடிவில் வடிவமைக்கப்பட்ட ஓர் அரைவைச் சக்கரம்.

**curb box :** (கம்.) **விளிம்புக் குழாய்ப் பெட்டி :** ஒரு விளிம்புக் குழாய் மீது வைக்கப்பட்டுள்ள குழாய் வடிவிலான அல்லது குழல் போன்ற நீண்ட பெட்டி வடிவிலான ஒரு சாதனம். இதனுள் ஒரு சாவியை நுழைத்து விளிம்புக் குழாயைத் திருப்பலாம்.

**curb cock : விளிம்புக் குழாய்:** ஒரு குழாயின் விளிம்பின் அருகில் பொருத்தப்பட்டுள்ள ஓர் ஓரதர்.

**curb roof :** (க.க.) **சரிவு மோடு :** இரு பக்கச் சரிவுகளிலும் மேற்பகுதிச் சாய்வைவிடக் கீழ்ப்பகுதிச் சாய்வு கீழ்நோக்கிச் செங்குத்தாகச் சரிந்திருக்கும்படி அமைக்கப்பட்ட மோடு.
பார்க்க: இரு சரிவு மோடு.

**curdling : கெட்டியாக்கம் :** அரக்குச் சாய இனாமல் பொருளில் விரைவில் உலர்ந்துவிடக்கூடிய மிகக் குறைந்த தரமுடைய, வலுக் குறைந்த கரைமத்தைச் சேர்த்தல்.

**cure :** (குழை.) **பதனமுறை :** ஒரு பிசினுடன் ஒரு கிரியா ஊக்கியைச் சேர்ப்பதன் மூலம், அல்லது வெப்பத்தையும் அழுத்தத்தையும் அதிகரிப்பதன் மூலம் சில சமயம் அழுத்தம் இல்லாமல், வேதியியல் வினைகளை உண்டாக்கி, அந்தப் பிசினின் இயற்பியல் வடிவத்தையும் வேதியியல் குணங்களையும் மாற்றுதல். மாறுதல்களின் சுழற்சியின் இறுதியில் விளிம்பில் உண்டாகும் பொருள்.

**cure time:**(குழை.) **பதனக் காலம்:** பிளாஸ்டிக் உற்பத்தியில் வார்ப்படப் பொருளை மூடுவதற்கும், அழுத்தத்தை விடுவிப்பதற்குமிடையிலான இடைவெளிக் காலம். பிளாஸ்டிக்குகளை மென்தகடுகளாக்கும்போது, கிரியா ஊக்கியைச் சேர்ப்பதற்கும், கெட்டிப்படுவதற்குமிடையிலான இடைவெளிக்காலம்.

**curie point :** (மின்.) **காந்த மறைவு நிலை :** ஓர் அயக்காந்தப் பொருளில் எஞ்சியிருக்கும் காந்தத் தன்மை மறைந்துபோகிற வெப்ப நிலை.

**curing :** (குழை.) **பதனஞ் செய்தல் :** ஒரு கெட்டிப்படுத்தும் பொருளை, வேதியியல் வினை மூலமாக கரையக்கூடிய அல்லது உருகக் கூடிய நிலையிலிருந்து கணிசமான அளவுக்குக் கரையாத அல்லது உருகாத வடிவத்திற்கு மாற்றுதல். இந்த வினை ரப்பரைக் கந்தகம் கலந்து வலிவூட்டுவதற்கு ஒப்பானது.

**curl : சுருள்வு :** வெட்டுமரத்தின் சுரண் பரப்பில் காணப்படும் உள் வரி.

**curled hair: சுருள் முடி:** குதிரை வால்மயிர், பிடரிமயிர், கால்நடைகளின் வால்மயிர், பன்றி வால் மயிர் போன்றவற்றிலிருந்து கிடைக்கும் சுருண்ட முடி. இதனைப் பல செய்முறைகள் மூலம்

சுருள் சுருளாக்கி, மெத்தை திண்டு வேலைகளில் பயன்படுத்துகிறார் கள். குதிரை வால்முடி இந்த வேலைக்கு மிகவும் ஏற்றது.

**curling die** : *(எந்.)* **சுருள் வார்ப்புரு** : உலோகத் தகட்டிலிருந்து தயாரிக்கப்படும் கிண்ணத்தின் மேற்பகுதியில் சுருள் முனை அமைப்பதற்குப் பயன்படும் வார்ப்புரு.

**current** : *(மின்.)* **மின்னோட்டம்** : வெவ்வேறு ஆற்றல்திறனுள்ள இரு முனைகளில் மேல் முனையிலிருந்து கீழ் முனைக்கு ஒரு கடத்தியின் வழியாகப் பாயும் மின்னாற்றல்.

**current density** : *(மின்.)* **மின்னோட்ட அடர்த்தி** : மின்கடத்தியின் குறுக்கு வெட்டுப் பகுதியின் ஓர் அலகுக்கான ஆம்பியர் அளவு.

**current limit thermostat**; **மின்னோட்ட வரம்பு வெப்ப நிலைப்பி**: மிகையாக மின்னோட்டம் பாய்வதன் காரணமாகச் சேதம் ஏற்படுவதை தடுப்பதற்கு, ஓர் உருக்கிக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் ஒரு மின் விசைச் சாதனம். இது வெப்பத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

**current node** : *(மின்.)* **மின்னோட்ட மையமுனை** : நிலையான அலைகளையுடைய மின்செலுத்துக் கம்பியில் பூஜ்ய மின்னோட்டம் உண்டாகும் புள்ளி.

**current regulator** : *(தானி. எந்.)* **மின்னோட்டச் சீர்தூக்கி**: இது காந்தத்தினால் கட்டுப்படுத்தப்படும் ஓர் உணர்த்தி. இதன்மூலம் மின்னாக்கியிலிருந்து மாறாத மின்னோட்ட அளவினைப் பெறுவதற்கு மின்னாக்கியின் புலமின் சுற்றுவழி உண்டாக்கப்பட்டு முறிக்கப்படுகிறது.

**current strength** : **மின்னோட்ட வலிமை** : பாயும் மின்னோட்டத்தின் அளவு. இது ஆம்பியர்களில் அளவிடப்படுகிறது.

**current transformer** : *(மின்.)* **மின்னோட்ட மாற்றி** : பார்க்க : மாற்றி.

**current - voltage regulator** : *(மின்.)* **மின்னோட்ட அழுத்த ஒழுங்கியக்கி**: ஒரு மின்னாக்கியின் களச் சுருணையின் தடையை ஒழுங்குபடுத்துகிற, அதிர்வு வகையான உணர்த்தி. இது மாறுபட்ட மின்னோட்ட அளவுகளில் ஒரு சீரான மின்னழுத்த வெளிப்பாட்டை உண்டாக்குகிறது.

**currying**: **தோல் மெருகிடல்**: பதனிட்ட தோலுக்குப் பயன்படுத்துவதற்கேற்ப மெருகூட்டுதல்.

**curtain wall**: *(க.க.)* **இட நிரப்புச் சுவர்**: கட்டிடத்திலிருந்து கட்டுமான எஃகு அல்லது கான்கிரீட்டு மூலம் ஆதாரம் பெறும் சுவரைச் சார்ந்திராத கீழுள்ள ஒரு மெல்லிய சுவர்.

**curve**: **வளைகோடு**: தொடர்ந்து திசைமாற்றிச் செல்லும் ஒரு கோடு.

**curved plate**: **வளைவு அச்சுத் தகடு**: ஒரு சுழல் அச்சு எந்திரத்தின் நீள் உருளையில் பொருத்தும் வகையில் அமைந்து முதுகு வளைந்த அச்சுத் தகடு.

**curvilinear**: **வரைகோடு வரம்புடைய**: வளைகோடுகளை வரம்புகளாகக் கொண்ட.

**cushioned frieze**: **திண்டுக் கம்பளித் துணி**: மறுமலர்ச்சிக் கால மேற்குவிந்த திண்டுக் கம்பளித் துணி.

**cushioning**: **திண்டுறையிணைத்தல்**: அதிகமான அழுத்தத்தை அல்லது தாக்கத்தைத் தாங்கக் கூடிய வகையில் விற்சுருள் திண்டு

களை அல்லது வேறேதேனும் அதிர்ச்சி தாங்கிகளை அமைத்தல்.

**cusp: சாய்முகடு:** *மத்திய காலத்து கல்சித்திர வேலைப்பாடுகளி லுள்ள ஒரு கவடு அல்லது முனை.*

**cut:** *(அச்சு.)* **செதுக்குச் சித்திரப் பாளம்:** *(1) செதுக்குப் பாளத்தி லிருந்து உருவாக்கிய பாளம் அல் லது தகடு.*

*(2) மரத்தில் அல்லது உலோகத் தில் வேலை செய்வதற்குரிய எந் திரங்களில் வெட்டப்பட்ட துண்டு களிலிருந்து சிம்புகளைச் சீவி எடுத்தல்.*

**cut cards:** *(அச்சு.)* **வெட்டிய அட்டைகள்:** *வேண்டிய வடிவளவு களில் வெட்டப்பட்ட அட்டைகள்.*

**cut flush: செப்பமாக்குதல்:** *துண்டு வெளியீடுகளின் அட்டை விளிம்பு களைச் சீராக வெட்டிச் செப்ப மாக்குதல்.*

**cut gears: வெட்டுப் பல்லிணை கள்:** *எந்திரத்தினால் வெட்டப் பட்ட பற்களைக் கொண்ட பல் லிணை. இது வார்ப்புப் பல் லிணைகளிலிருந்து வேறுபட்டது.*

**cut-in note or side note:** *(அச்சு.)* **ஓரக்குறிப்பு:** *அச்சடித்த பக்கத்தின் ஓரத்தில் சிறிய எழுத் தில் அச்சிடப்படும் குறிப்பு. பொது வாகப் பாடநூல்களை அச்சிடு வதில் இது கையாளப்படுகிறது.*

**cutlery: வெட்டுக் கருவிகள்:** *வெட்டுக் கருவிகளின் தொகுதியை இது குறிக்கிறது. எனினும், பொது வாக வீடுகளில் பயன்படுத்தப் படும் கருவிகளையே இது குறிக் கும்.*

**cut nails:** *(தச்சு.)* **வெட்டு ஆணி கள்:** *எந்திரத்தினால் வெட்டப் பட்ட இரும்பு ஆணிகள். இது இப் போது பெரும்பாலும் பயன்படுத் தப்படும் கம்பி ஆணிகளிலிருந்து வேறுபட்டது.*

**cut of file: அரத்தின் வெட்டு முறை:** *ஓர் அரத்தின் முகப்பு வெட்டப்படும் முறை. இதனைக் கொண்டு ஓர் அரம், சமதள அரம், உராய்வு அரம் போன்ற பெயர் களைப் பெறுகிறது.*

**cut off: இணைவுக் கோடு:** *ஒரு வார்ப்படத்தின் இரு பகுதிகளும் ஒன்றாக இணையும் கோடு. இத னைக் கூடல் கூர்வரை அல்லது கூடல் சால்வரி என்றும் கூறுவர்.*

**cut off rule:** *(அச்சு.)* **இடைவரித் தகடு:** *செய்தி இதழ்களில் அல்லது பருவ இதழ்களில் விளம்பரங் களைத் தனியே பிரித்துக்காட்டப் பயன்படும் இடைவரித் தகடு.*

**cutout:** *(மின்.)* **வெட்டுவாய்:** *ஒரு மின்சுற்று வழியில் மின் னோட்டம் பாதுகாப்பு வரம்புக்கு மேல் உயரும்போது அந்தச் சுற்று வழியினைத் திறப்பதற்கான ஒரு சாதனம். இது இரு வகைப்படும்:*

*(1) மின்காந்தம். இது முறிப்பான் என்றும் அழைக்கப்படும்: (2) வெப்பத் தடை. இது பல்வேறு வகை உருகிகளில் ஒன்று.*

**cutout box:** *(மின்.)* **வெட்டுவாய்ப் பெட்டி:** *உருகித் தொகுதிகளைக் கொண்டிருக்கிற ஒரு பெட்டி.*

**cutout relay:** *(தானி. எந்.)* **வெட்டுவாய் உணர்த்தி:** *ஒரு மின் னாக்கியுடன் இணைக்கப்பட் டுள்ள தானியங்கும் காந்த விசை. மின்கலத்தில் அளவுக்கு அதிகமாக மின்னேற்றம் ஏற்படுவதைத் தடுப் பதற்காக மின்னாக்கி மின்சுற்று வழியின் இணைப்பைத் துண்டிக்க இது பயன்படுகிறது.*

**cutter:** *(எந்.)* **வெட்டுக் கருவி:** *மரத்தை அல்லது உலோகத்தைத் தானாகவே வெட்டுவதற்காக, ஓர் எந்திரத்துடன் அல்லது பிடிப் பானுடன் பொருத்தப்பட்டுள்ள ஏதேனும் வெட்டுக்கருவி.*

**cutting angle :** *(எந்.)* **வெட்டுக் கோணம் :** *ஒரு கருவியின் வெட்டு முகத்திற்கும், அந்தக் கருவி எந்தப் பொருளின் மேல் இயங்குகிறதோ அந்தப் பொருளின் மேற்பரப்புக்கு மிடையிலான கோணம்.*

**cutting compound :** *(எப்.)* **வெப்பாற்றுக் கூட்டுப் பொருள் :** *வெட்டுப் பொருள்களின் விளிம்பில் உராய்வு வெப்பத் தணிப்பதற்குப் பயன்படும் பன்றிக் கொழுப்பு எண்ணெய், சோடா நீர் போன்ற பல்வேறு வகை வெப்பாற்றிப் பொருள்களில் ஒன்று.*

**cutting face :** *(எந்.)* **வெட்டு முகப்பு :** *வெட்டப்படும் பொருள் எந்த வெட்டுக்கருவிக்கு எதிராக நகர்த்தப்படுகிறதோ அந்த வெட்டுக் கருவியின் முகப்பு.*

**cutting gauge ; வெட்டு அளவி :** *ஒரு வெட்டுக் கருவியில் ஒரு குறியீடு கருவிக்குப் பதிலாகப் பொருத்தப்பட்டுள்ள ஓர் அளவு கருவி.*

**cutting nippers : வெட்டுப்பற்றுக் குறடு :** *பல்லால் பற்றிக் கொள்ளும் அமைப்புடைய ஒருவகைச் சாமணம்.*

**cutting oils :** *(எந்.)* **வெப்பாற்று எண்ணெய்கள் :** *வெட்டுப் பொருள்களின் விளிம்பில் உராய்வு வெப்பத் தணிப்பிற்குப் பயன்படும் கனமான எண்ணெய்கள் அல்லது எண்ணெய்களின் கலவைகள். வெப்பாற்றுப் பொருள்களாக பயன்படும் நீர்கரைசல்கள் இதில் உள்ளடங்காது.*

**cutting out :** *(தானி.எந்.)* **மின் சுற்று முறிப்பு :** *(1) ஒரு மின்சுற்று வழியில், முன்னரே தீர்மானிக்கப் பட்ட மின்னழுத்தம் அல்லது மின்னோட்டம் எட்டியது. சுற்றுவழியினை முறிக்கிற உணர்த்துச் செயல்.*

*(2) அழுத்தத்தை அல்லது தொடர்பினை மையவிலக்கு ஊடிணைப்பி விடுவிக்கிற முனை.*

**cutting pliers : வெட்டுச் சாமணங்கள் :** *குறடுபோல் பற்றிக் கொள்வதற்கான தட்டையான தாடைளுடன், கம்பிகளை வெட்டுவதற்கான வெட்டு அலகுகளையும் கொண்ட சாமணங்கள்.*



வெட்டுச் சாமணம

**cutting rule :** *(அச்சு.)* **வெட்டுப் பட்டை :** *தாள், அட்டைகள் முதலியவற்றை வெட்டுவதற்கும், அச்சுப் பக்கங்களைத் தயாரிப்பதற்கும் பயன்படும் எஃகினாலான பட்டைகள்.*

**cutting tools : வெட்டுச் சாதனங்கள் :** *எந்திரங்களில் பயன்படும் கூர் விளிம்புகளுள்ள சாதனங்களை முக்கியமாகக் குறிக்கும்.*

**cutting up :** *(எந்.)* **குறுகத் தரித்தல் :** *அறுக்கும் எந்திரததில் அறுக்கப்படும் பொருளின் குறுக்காக வெட்டுக் கருவி கீழிருந்து மேலாகச் சென்று குறுக்காகத் தரித்தல்.*

**cyanide :** *(வேதி.)* **சயனைடு ;** *பொதுவாகப் பொட்டாசியம் சயனைடு என்னும் வேதியியற் பொருளைக் குறிக்கும். மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்தது. வெள்ளைத் தூளாக அல்லது துண்டுகளாகக்கிடைக்கும். தாதுப் பொருள்களிலிருந்து தங்கத்தையும் வெள்ளியையும் பிரித்தெடுக்கவும், மின்முலாம் பூசுவதிலும், எஃகினை வெப்பத்தால் பக்குவப்படுத்துவதிலும் பயன்படுகிறது.*

**cyaniding : பரப்புக் கடினமாக்கல் :** *ஓர் உலோகக் கலவையின் மேற்பரப்பினை ஓர் இரும்பு ஆதாரப் பொருளுடன் சேர்த்து கடினமாக்கும் செய்முறை. இதில் உலோகக் கலவை, சயனைடு உப்புடன் சேர்த்து பொருத்தமான வெப்ப*

நிலையில் சூடுபடுத்தப்பட்டு, பின்னர் குளிர்விக்கப்படுகிறது.

**cybernetics** : (மின்.) **சைபர்னெட்டிக்ஸ்** : சிக்கலான கணிப்பொறி அமைப்புகள் குறித்தும், மனித மூளையுடன் அவற்றின் தொடர்பு பற்றியும் ஆராய்தல்.

**cycle** : (மின்; எந்.) **சுழற்சி** : (1) ஒரு முடிவுற்ற வட்டமாக அமைகிற முழு நிலைத் தொடர் வரிசை. இதில் இரண்டு அல்லது நான்கு சுழற்சி இயக்கியில் இருப்பது போன்று, ஒரு வரிசை முடிகிறபோது மற்றொரு வரிசை தொடங்கும். ஒவ்வொரு நேர்விலும் ஒரு தொடரினை முழுமையாக்குவதற்குத் தேவைப்படும் உந்து தண்டின் வீச்சுகளின் எண்ணிக்கையினைப் பொறுத்து இரு சுழற்சி அல்லது நான்கு சுழற்சி என்று அழைக்கப்படுகிறது.

(2) பிளாஸ்டிக் வேலையில், ஒரு செய்முறையின் ஒரு கட்டத்திலிருந்து அடுத்த நடவடிக்கையின் அதே கட்ட வரையிலான முழுமையான நிகழ்ச்சி.


**cyclogiro** : (வானூ.) **நிமிர் விமானம்** : தலைக்கு மேலே விரைவாகச் சுற்றும் காற்றாடிப் பொறிகளின் இயக்கத்தால் செங்குத்தாக மேலெழுந்து உயர்ந்து செல்லும் விமானம்.

**cycloid** : **வட்டப்புள்ளி நெறி வளைவு** : வட்டத்தின் மீதோ, எல்லையிலோ, உள்ளோ உள்ள புள்ளி வட்டம் நேர்வரைமீது உருளும் போது செல்லும் நெறிவட்டம்.

**cyclothymiz**: (உள.) **சைக்ளோத்திமிஸ்**: மிகுந்த மனக்கிளர்ச்சியையும் பின்னர் மிகுந்த மனச்சோர்வையும் மாறி மாறி உண்டாக்கும் மனக்கோளாறு.

**cyclo-tron** : (மின்.) **சைக்ளோட்ரான்** : அணுப்பிளப்பிலும் செயற்கைக் கதிரியக்க ஆக்கத்திலும் பயன்படுத்தப்படும் மின் காந்த விரைவூக்கக் கருவி.

**cylinder** : **நீள் உருளை** : இரு கோடிகளும் இடைவெட்டும் பரப்புகளும் வட்டமாகவோ ஒழுங்குடையபிற வளைவாகவோ அமையும் நீள் தடி உருளை.


நீள் உருளை

**cylinder block** : (தானி.) **நீள் உருளை உறை** : (1) உந்துதண்டுகளை ஏற்பதற்குத் துளையிடப்பட்ட எஞ்சினின் பிரதான உடற்பகுதி. நீள் உருளைக் கட்டையும், வணரிப்பெட்டி ஆகியவை ஒரே தொகுதி நீள் உருளைத் துளையாக வார்க்கப்படுகின்றன.

(2) ஓர் எஞ்சின் நீள் உருளையின் உட்புற விட்டம்.

**cylinder bore**: (தானி.) **நீள் உருளைத் துளை**: எஞ்சின் நீள் உருளையின் விட்டம்.

**cylinder head**: **நீள் உருளை மேல் மூடி**: உள்வெப்பாலை நீள்உருளையின் மேல்மூடிப் பகுதி.

**cylinder oil** : **நீள் உருளை எண்ணெய்**: 5%—15% விலங்கு அல்லது தாவர எண்ணெய்கள் கொண்ட கனிம எண்ணெய்களின் கலவை.

**cylinder press** : (அச்சு.) **நீள் உருளை அச்சு எந்திரம்** : நீள் உருளை, தட்டையான படுகை, தானே மைபூசும் சாதனம் ஆகியவற்றைக் கொண்ட ஓர் அச்சு எந்திரம்.

**cylindrical gauge** : (எந்.) **நீள் உருளை அளவி** : இரு உறுப்புகளைக் கொண்ட ஓர் அளவி. இதில் ஒரு கைபிடியுள்ள ஓர்

அடைப்பு அளவியும், அந்த அடைப்பு அளவியைப் பொருத்தி வைக்கக்கூடிய ஒரு குளிர்ப்பி அளவியும் அமைந்திருக்கும். துளையிட்டு, கடைசல் செய்யப்பட்ட உறுப்புகள் ஒன்றோடொன்று பொருந்துகின்றனவா எனச் சோதிக்க இந்த அளவிகள் பயன்படுகின்றன.

**cylindroid** : (வேதி.) **நீள் உருளை உரு**; நீள் உருளை போன்ற வட்டுரு.

**cyma** : (க.க.) **பாம்பு முகப்பு** : பாம்பு வளைவுடைய முகட்டுச் சிற்ப உறுப்பு. இதில் உள்வளை பாம்பு முகப்பு புறவளை பாம்பு முகப்பு என இருவகை உண்டு. உள்வளை பாம்பு முகப்பில், உள்வளைவில் மேலே தொடங்கும் பாம்பு வளைவுடைய முகட்டுச் சிற்ப உறுப்பு அமைந்திருக்கும். புறவளை பாம்பு முகப்பில், புறவளைவில் மேலே தொடங்கும் பாம்பு வளைவுடைய முகட்டுச் சிற்ப உறுப்பு அமைந்திருக்கும்.

**cymatium** : (க.க.) **புறவளை முகடு** : ஒரு புறவளை வளைவினையுடைய ஓர் எழுதகத்தின் பகுதி.

**cypress** : **சைப்ரஸ் மரம்** : கெட்டியான கட்டையும் திண்பச்சை இலைகளுமுள்ள குவிந்த காய் மரம். இது தென் அமெரிக்காவில் வளர்கிறது. நெடுங்காலம் உழைக்கும் வெட்டுமரம் உடையது. கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுகிறது.

# D

**dado** : *(க.க)* **பீட இடைக்கட்டு** : *(1)* ஒரு பீடத்தின் அடிப்பகுதிக்கும் எழுதகத்திற்கும் இடையேயுள்ள இடைக்கட்டுப் பகுதி.

*(2)* ஒரு பீடத்தின் முகப்புகளில் ஒன்று.

*(3)* மூலைப் பொருத்துவாய் விளிம்பில் இசைப்பு வாய் வெட்டு.

**dado and rabbet** : *(மர.வே.)* **இடைக்கட்டு மூலைப் பொருத்து வாய்** : ஒரு பீட இடைக்கட்டுப் பகுதியுடன் பொருந்துமாறு விளிம்பில் இசைப்புவாய் வெட்டப்பட்ட ஓர் இணைப்பு.

**dado saws** : *(மர.வே.)* **கொத்து ரம்பம்** : பீடத்தின் இடைக்கட்டுப் பகுதிகளை வெட்டுவதற்குப் பயன்படும் ரம்பங்களும் கொத்துக்கருவிகளும் இணைந்த ஒரு வெட்டுக் கருவி. இதனை குறிப்பிட்ட அளவு கனத்திற்கு ஒருங்கிணைத்துக் கொள்ளலாம்.

**daguerreo-type** : *(ஒ.க)* **பாதரச ஆவி ஒளிப்படம்** : பாதரச ஆவி மூலம் ஒளிப்படம் எடுக்கும் முறை. இந்த முறையைக் கண்டுபிடித்த ஃபிரெஞ்சுப் புத்தமைப்பாளர் டாகர் என்பாரின் பெயரினைக் கொண்டது.

**dais** : *(க.க.)* **மேடையரங்கம்** : அமரும் இடமும் மேற்கட்டியுமுள்ள தரைமட்டத்திலிருந்து சற்று உயர்வாகவுள்ள மேட்டிருக்கை.

**dama-scening**: **இழைப்பு வேலைப்பாடு** : எஃகு மீது செதுக்கு வேலைப்பாட்டுடன் உள்ளீடாகத் தங்கம் அல்லது வெள்ளி பதித்து இழைத்திடும் வேலைப்பாடு.

**dammar**: *(வண்;அர.)* **சாயப் பிசின்**: ஊசியிலை மரங்களினின்று எடுக்கப்பட்டு உருவாக்கப்பட்டு சாயஎண்ணெய் உருவாக்கப்பயன்படும் கெட்டிப்பிசின். இது ஆஸ்திரேலியாவிலும், தென் அமெரிக்காவிலும் உள்ள மரங்களிலிருந்து கிடைக்கிறது. இது சூடான ஆல்கஹால், பென்சீன், குளோரோபார்ம், ஈதர் ஆகியவற்றில் கரையும் தன்மையுடையது. இது வண்ணச் சாயங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**damper** : **காற்றுத் தடுப்பான்** : காற்று வீச்சினை முறைப்படுத்துவதற்குரிய ஒரு தகடு, காலதர், மூடி அல்லது வேறு சாதனம்.

**damping** : *(மின்.)* **ஒடுக்கல்**: மின்னியல் ஒலிப்பதிவு இசைக் கருவிகளில் ஒலியை இடுக்கி அல்லது திண்டு போன்ற பொருள் கொண்டு அடக்குதல்.

**damping coil** : *(மின்.)* **ஒடுக்கு கம்பிச் சுருள்**: ஒடுக்கு விளைவினை உண்டாக்குவதற்காக ஒரு மின்னோட்ட மானிக்கு அருகே பொருத்தி வைக்கப்படும் ஒரு கம்பிச் சுருள். இது, ஊசிமுனை பிறழ்வுற்ற பின்பு ஊசியை ஒரு நிலைப் புள்ளிக்குக் கொண்டுவர உதவுகிறது.

**damping control** : **ஒடுகக் கட்டுப்பாடு**: தொலைக்காட்சித் திரையில் இடதுபுறம் காணப்படும் கிடை மட்டத் திரிபினை அல்லது புடைப்பினை அகற்றுவதற்கு உதவுகிற ஒரு கட்டுப்பாட்டு அமைவு.

**damp proofing** : **ஓதத் தடுப்பு** : சுவற்றில் ஈரம் புகாதவாறு அல்

லது ஈரங்கசியாதவாறு தடுப்பதற்கான அமைவு.

**dandelion metal** : (உலோ.) **டேண்டிலியான் உலோகம்** : இது கடினமான உலோகக் கலவைகளில் ஒன்று. இதில் 72% ஈயம், 18% அஞ்சனக்கல், 10% வெள்ளீயம் அடங்கியுள்ளன.

**dandy mark** : **காகித நீர்க்குறி** : தாள் செய்யும் தொழில் நீரெழுத்துப் பதிவு செய்யும் உருளை மூலமாகக் காகிதத்தில் பதிக்கப்படும் நீர்க்குறி.

**dandy roll** : **நீரெழுத்துப் பதிவு உருளை** : தாள் செய்யும் தொழிலில் நீரெழுத்துப் பதியச் செய்யும் உருளை.

**daniell cell** : (மின்.) **டேனியல் மின்கலம்** : அடிப்படை மின்கலத்தின் ஒரு முடிப்புச் சுற்றுவழி வகை.

**dardelet thread**: (எந்.) **கோணத் திருகிழை** : ஃபிரெஞ்சு வடிவமைப்பைக் கொண்ட ஒருவகைத் திருகிழை. இது 29° கோணமுடையது. இது நுனி நோக்கிச் சிறுத்துச் செல்லும் தொடு நிலையினைக் கொண்டது. இது இதனைத் தானே பூட்டிக் கொள்ள உதவுகிறது.

**dark current** : (மின்.) **இருள் மின்னோட்டம்** : ஒளிக்குழாயினுள் அல்லது மின்கடத்தாத் திண்மப் பொருளிலுள்ள ஒளியின்றிச் செல்லும் மின்னோட்டம். தொலைக்காட்சி ஒளிப்படக் கருவியில் முழுமையாக ஒளியின்றி சைகை வெளிப்பாடு ஏற்படுகிறது.

**D Arsonval galvanometer**: **டி ஆர்சோன்வால் மின்னோட்ட மானி**: இது மிகுந்த உணர்திறனுடைய, சுழற்சியோட்டமுள்ள அல்லது திரக்களைப்புடைய ஒரு மின்னோட்டமானி. இதில் குறியீட்டுக் கம்பிச்சுருள், ஆற்றல் வாய்ந்த குதிரைலாடக் காந்தப் புலத்தில் தொங்க விடப்பட்டிருக்கும்.

**darwinian theory** : (உயி.) **டார்வினியக் கோட்பாடு**: "அனைத்துப் பிராணிகளின் வழித்தோன்றல்களும் தங்கள் பெற்றோர்களிலிருந்து சற்றே வேறுபட்டிருக்கும்" என்று சார்லஸ் டார்வின் (1809-1882) வகுத்த உயிர் மலர்ச்சிக் கோட்பாடு. அவ்வாறு மாறுபட்ட வழித் தோன்றல்களில் தங்கள் சூழல்களுக்கேற்பத் தங்களைத் தகவமைத்து கொள்ளும் திறனுடையவை உயிர் வாழ்கின்றன; மற்றவை இறந்து விடுகின்றன.

**darwin's tubercle** : (உயி.) **டார்வின் எலும்புப் புடைப்பு**: காதின் மேலுள்ள எலும்புப் புடைப்பு. இது மனிதரிடம்சிறிதாகவும், குரங்குகளிடம் பெரிதாகவும் இருக்கும்.



எலும்புப் புடைப்பு

**dash** : (தானி.) **தகர்வுத் தடுப்பான்** : ஓட்டுநரின் பகுதியிலிருந்து எஞ்சினின் பகுதியினைத் தனித்துப் பிரிக்கும் ஒரு பிரிவினை.

(2) **இடைக்கோடு** : அச்சுக் கலையில் எழுத்துருப் பொருளுக்கிடையிலான ஒரு சாதாரண அல்லது அலங்கார வரி. இதனை நிறுத்தற் குறியீடாகவும் பயன்படுத்துவர்.

**dashboard instruments** : **கருவித் தட்டுச் சாதனங்கள்** : ஓர் உந்து வண்டியில் கருவிகளுக்கான பகுதியில் ஏற்றப்பட்டுள்ள மின்னோட்டமானி, எண்ணெய் அளவி, வேகமானி, பெட்ரோல் அளவி, வெப்பமானி போன்ற சாதனங்கள்.

**dashpot** : (தானி.) **உந்து கட்டை**: நீர் கொண்ட பெருங்குழாய் அலம்புறாமல் தடுக்கும் உந்து கட்டை அமைவு.

**data :** *(தானி.)* **செய்திக் குறிப்பு:** *எந்திரத்தின் இயக்கத்தைக் கணித முறையில் அல்லது அளவையியல் முறையில் உய்த்துணரப் பயன்படும் மூலகாரணத் தகவல்கள்.*

**datamation :** *(தானி.)* **தகவல் இயக்கப்பொறி :** *கணிப்பொறிகள் அலுவலக தானியங்கியியல் பொறிகள் உட்படத் தகவல்களைத் தானாகக் கையாள உதவும் தானியங்கிப் பொறியமைவு.*

**data processing :** *(தானி.)* **தகவல் பகுப்பாய்வு:** *தகவல்களைத் தேவையான நோக்கத்திற்குப் பயன்படும் வகையில் பகுப்பாய்வு செய்தல்.*

**data reduction :** *(விண்.)* **செய்திக் குறைப்பு :** *செய்திக் குறிப்புகளைப் பயன்படுத்தக் கூடிய அளவுக்குக் குறைத்தல்.*

**date datum :** **ஆதாரச் செய்தி :** *ஒரு பணியாற்றிய அட்டவணைப் படுத்திய புள்ளி விவரத் தகவல்களைக் குறிப்பவை.*

**date line :** **தேதி எல்லைக் கோடு:** *உலக ஒப்பந்தப்படி ஏறத்தாழ 180° நிரை கோட்டினூடே செல்கிற நாள் கணிப்புத் தொடக்கக் கோடு. இதன்படி, உலகைச் சுற்றிக் கிழக்கு நோக்கிச் செல்பவர் நேரம் கூடுவதாகக் காண்பார். மேற்கு நோக்கிச் செல்பவர் நேரம் குறைவதாகக் காண்பார். கிரீன் விச்சிவிருந்து ஏறத்தாழ 180° நிரை கோட்டில் உள்ள இந்தக் கோட்டிலிருந்து கிழக்கே செல்பவர் ஒரே தேதியில் இரண்டு நாட்கள் பெறுகிறார். மேற்கே செல்பவர் ஒரு நாளை இழக்கிறார்.*

**datum :** **குறிப்புச் செய்தி :** *செய்திக் குறிப்புகளின் தொகுதி.*

**datum line :** **ஆதாரக் கோடு :** *பரிமானங்கள் எடுக்கப்படுகிற அல்லது விளக்கவுரைக் கணிப்புகள் செய்யப்படுகிற ஆதார அல்லது அடிப்படைக் கோடு.*

**daubing :** *(வார்.)* **அரவை வண்ணப் பூச்சு :** *இரும்பு வார்ப்படத் தொழிற்சாலை அடுப்பில் சூடாக்கிய பிறகு, உள் மையப் பகுதியிலுள்ள வெடிப்பு வண்ணம் பூசி அடைத்தல்.*

**Davis apparatus :** **டேவிஸ் சாதனம்:** *நீரில் ஆழத்திலிருந்து வெளியே வருபவருக்குக் காற்று அளிப்பதற்குப் பயன்படும் கருவி. கடலில் ஆழத்தில் மூழ்கிய நீர்மூழ்கிக் கப்பல்களிலிருந்து வெளி வருபவர்களுக்குக் காற்று வழங்க இது பயன்படுகிறது.*



டேவிஸ் சாதனம்

**Davy safety lamp :** **டேவி காப்பு விளக்கு :** *நிலக்கரிச் சுரங்கத்தினுள் வேலை செய்பவர்களுக்குரிய கம்பி வலையுள்ள காப்பு விளக்கு.*

**D-C :** *(மின்.)* **நேர் மின்னோட்டம்:** *இதனைப் பொதுவாக டி. சி. எனக் குறிப்பிடுவர்.*

**Dc generator:** *(மின்.)* **மின்னாக்கி:** *பொறி விசையை மின் விசையாக்கி மின்னாற்றல் உண்டாக்கும் பொறி. இதில் உண்டாகும் மின் விசை நேர் மின்னோட்டமாகும்.*

**Dcwv:** *(மின்.)* **நேர் மின்னோட்டச் செயல் மின்னழுத்தம் :** *இது ஒரு கொண்மியின் தனிக் குறிப்பீடு ஆகும்.*

**D. D. T :** *(மருந்.)* **டி. டி. ட்டி :** *டைகுளோரோ - டைஃபினைல் டிரைகிரோத்தோன் என்ற பூச்சி கொல்லி மருந்தின் சுருக்கப்பெயர். இதனை டைக்கோஃபோன் என்றும் அழைப்பர். இது பூச்சிகளின்*

நரம்பு மண்டலத்தைத் தாக்கி அழிக்கிறது. மிகவும் ஆற்றல் வாய்ந்த பூச்சி கொல்லி மருந்து.

**dead axle** : *(தானி.)* **நிலை இருசு** சுழலாமல் நிலையாக இருக்கும் இருசு.

**deadbeat** : *(மின்.)* **தீரக்களைத்த** கருவிகளில் குறியீட்டு முள்கள் ஓய்வுநிலைக்கு வரும் நிலை.

**dead center** : *(எந்; மர. வே.)* **அடைப்பு மையம்** : ஒரு கடைசல் எந்திரத்தின் வால்முனையுடன் சுழல முடியாதபடி பொருத்தப்பட்டுள்ள மையப்பகுதி

**dead end**: *(கம்.)* **ஒருமுக அடைப்பு வழி** : ஒரு முனை அடைக்கப்பட்டு விட்ட குழாய்.

**deadening** : *(க.க.)* **ஓதக்காப்பு** : காப்புப் பொருட்களைப் பயன்படுத்தி தரைத்தளங்களிலும் சுவர்களிலும் ஓதக்காப்புச் செய்தல்.

**dead level** : **பாழ்மட்டம்** : மேடு பள்ளமின்றி வேறுபாடற்ற நெடு மட்டநிலை.

**dead line** : *(1)* **கடைசிக் கோடு** : ஒரு நீள் உருளை அச்சுப்பொறியில் அச்சுப் படிவங்களை வைப்பதற்கு வழிகாட்டுவதற்காகக் குறிக்கப்பட்டகோடு.

*(2)* **இறுதிநேரம்** : செய்தியிதழ்களில் கடைசிச் செய்திகளைக் கொடுக்கவேண்டிய கடைசிநேரம்.

**dead load** : *(பொறி.)* **நிலைச் சுமை** , அழுத்தம் சீராகவும், நிலையாகவும் இருக்கும் ஒரு சுமை.

**dead matter** : *(அச்சு.)* **பயனற்ற செய்தி மூலம்** : பயன்படுத்தப்படாதிருக்கிற அல்லது பகிர்ந்தளிக்கப்படவிருக்கிற அச்செழுத்துத் தொகுதி.

**dead rear axle** : *(தானி.)* **நிலைப் பின்னணி இருசு** : திருப்பிட முடியாத ஒரு நிலையான பின்னணி இருசு. இது இரட்டைச் சங்கிலியால் ஓடும் உந்துகளிலும், உள்முகப் பல்லிணைகளால் இயங்கும் பார உந்துகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

**dead rise** : *(வானூ.)* **நிலையேற்றம்** : ஒரு மிதவையின் அல்லது பறக்கும் படகின் உடற்பகுதியின் குறுக்குவெட்டுப் பகுதியில் இரும்பு அடிக்கட்டையின் உயரத்திலிருந்து எந்திரத்தின் உயரம் வேறுபடுகிற அளவு.

**dead smooth file** : *(எந்.)* **உராய்வற்ற நிலை அரம்** : மிக நேர்த்தியாக வெட்டும் அரம்.

**dead spot**: **செயலறவுக் குறியிடம்**: சில அலைவரிசைகளில் வானொலி அலைகளைப் பெறுவதைத் தடுக்கிற இயற்கை நிகழ்வுகள் உள்ள ஏதேனும் இடம்.

**dead weight**:*(பொறி.)***பாழும்பளு** ஓர் ஊர்தி அல்லது பார ஊர்தி ஏற்றிச் செல்லும் சுமையிலிருந்து வேறுபட்ட அதன் சொந்த எடை.

**deal** : *(தச்சு.)* **மரப்பலகை** : பலகை அல்லது பலகை இணைப்பு செய்ய பயன்படும் ஒரு மரப் பலகை அல்லது பலகைப் பாளம்.

**decade resistance box** : *(மின்.)* **பதின்மானத் தடைமாற்றிப் பெட்டி**: இது ஒரு எளிமையான தடைப் பொறியமைவு. இதில் ஒவ்வொன்றும் பத்துக் கம்பிச் சுருள்களைக் கொண்ட இரு தொகுதிகள் அமைந்திருக்கும். ஒரு தொகுதி ஒவ்வொன்றும் ஒரு 'ஓம்' தடைத் திறனுடையது. மற்றொரு தொகுதி ஒவ்வொன்றும் "10" ஓம், தடைத் திறன் கொண்டது.

**decalage** : **சிறகத் தளக்கோணம்**: இரு தளத்தின் அல்லது பன்முகத் தளத்தின் சிறக நாண்களுக்கிடையிலான கூர்ங்கோணம்.

**decalcomania** : **ஒளிப்படமாற்று** : கண்ணாடி, பளிங்கு, மரம், போன்ற ஏதேனும் வழவழப்பான பரப்புக்கு ஒளிப்படங்களை மாற்றுவதற்கான ஒரு செய்முறை.

**decalin** : **டிகாலின்** : இது ஒரு வகை கற்பூரத் தைலப் பொருள். கொழுப்புப் பிசின்கள், எண்ணெய்கள் ஆகியவற்றைக் கரைப்பதற்குப் பயன்படுகிறது. வேதியியலில் இது டெக்காஹைடிரோனப்தாலீன் என்று அழைக்கப்படும்.

**decalescence point** : *(உலோ.)* **வெப்பத் தாழ்வுநிலை** : எஃகின் கட்டமைப்பில் ஒரு மாறுதலை உண்டாக்குகின்ற தாழ்ந்த வெப்ப நிலை.

**decantation** : *(வேதி.)* **வடித் திருத்தல்**: நீர்மத்தில் மேலுமில்லாமல் கீழுமில்லாமல் இடைமிதவலாக உள்ளவற்றை நீக்கி, தெளிய வைத்த திரவத்தை ஒரு கலத்தினின்றும் மற்றொரு கலத்தில் வடித் திருத்தல்.

**decarburization**: **கரியமகற்றுதல்**: உலோகங்களுடன் இணைத்துள்ள கார்பனை அகற்றுதல். தகடாக்கக் கூடிய இரும்பு தயாரிக்கும் செய்முறையில் இது பயன்படுத்தப்படுகிறது.

**decastyle** : *(க.க.)* **மூடு முன்றில்**: பத்துத் தூண்களைக் கொண்ட ஒரு புகுமுக மூடு முன்றில்.

**decay** *(மர.வே.)* **பதனழிவு** : மரத்தைப் பதனழியச் செய்யக்கூடிய காளானின் செயலினால் மரத்தின் சாரம் சிதைந்து போதல். இதனை 'மட்குதல் மற்றும் அழுகுதல்' என்றும் கூறுவர்.

**decay** : *(மின்.)* **மின் பதனழிவு** : மின்னோட்டம், மின்னழுத்தம் ஆகியவற்றின் மதிப்பளவுகள் படிப்படியாகக் குறைவதைக் குறிக்கும் சொல்.

**decay time**: *(மின்.)* **மின்பதனழிவு நேரம்**: ஒரு மின் கொண்மியானது, தனது மூல மின்னேற்றத்தில் ஒரு குறிப்பிட்ட வீத அளவை வெளியேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம்.

**deceleration** : *(விண்.)* **வேகத் தணிப்பு** : வேகம் குறைந்து கொண்டு வருதல். இது வேக முடுக்கத்திற்கு எதிர்மாறானது.

**decelerometer**: *(தானி.)* **வேகத் தணிப்பு மானி**: ஓடும் காரின் வேகத் தணிப்பு வீதத்தைப் பதிவு செய்வதற்கும், வேகத்தடைகளின் நிறுத்தும் திறனைக் குறித்துக் காட்டுவதற்குமான ஒரு சாதனம்.

**decibel**: **ஒலியலகு**: **(டெசிபெல்)** ஒலியின் முனைப்புத் திறனை அளவிடுவதற்கான ஓர் அலகு. அலெக்சாண்டர் கிரகாம்பெல் என்பாரின் நினைவாக இந்தப் பெயர் சூட்டப்பட்டது. ஒலி அல்லது ஓசை உண்டானதும் அது ஆற்றலை வெளிப்படுத்துகிறது. அந்த ஆற்றல் 'டெசிபெல்' அளவுகளில் அளவிடப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு விமானத்தின் எஞ்சின் உண்டாக்கும் ஓசை 120 டெசிபல் அளவுடையது.

**deciduous**: **இலையுதிர்க்கக் கூடிய**: ஆண்டுதோறும் குறிப்பிட்ட பருவத்தில் இலைகளை உதிர்க்கக்கூடிய மரங்கள் தொடர்பானவை.

**decimal**: **தசம / பதின்மானம்**: பின்னப்பகுதிகளைப் பத்தின் பகுதி, நூறின் பகுதி முதலிய பத்தடுக்கு வரிசை முறையில் குறிப்பிடும் முறை.

**decimal code**: *(கணி.)* **தசமக் குறியீடு**: எண்மான முறையில் பதின்கூற்று அடுக்குக் குறியீடு.

**decimal equivalent**: **தசமச் சம மதிப்பு**: தசம மதிப்பில் குறிப்பிடப்படும் பின்னத்தின் மதிப்பு.

**decimal fraction:** *(கணி.)* **தசமப் பின்னம்:** பதின்கூற்றுப் பின்னம்.

**decimal notation:** *(கணி.)* **தசம இலக்கம்:** பதின்மான இலக்கம்.

**decimal system:** *(கணி.)* **தசம முறை:** பதின்மான முறை.

**decking:** *(க.க.)* **அழகொப்பனை:** ஒரு படகின் தளம், சமதளக்கூரை, புகுமுக மண்டபம் போன்ற சமதள மேற்பரப்பு எதனையும் தட்பவெப்ப மாறுதல்களிலிருந்து பாதுகாப்பதற்கான பொருள். இந்த அழகொப்பனைக்கான பொருள், மரம், கித்தான் அல்லது கூரைப் பொருட்களாக இருக்கலாம்.

**deckle:** **திருந்தா ஓரம்:** கையினால் தாள் செய்யும் தொழிலில் தாளின் செப்பமற்ற ஓரம். இது எந்திரத்தின் மூலம் தாள் செய்வதில் தாளின் அகலத்தை உறுதி செய்வதற்காக உதவும் அமைப்பும் ஆகும்.

**deckle edge:** **திருந்தா தாள் விளிம்பு:** கையினால் செய்த தாளில் வெட்டப்படாத செப்பமற்ற தாள் விளிம்பு. எந்திரத்தில் செய்ய சில தாள்களிலும் திருநதா விளிம்பு உண்டு.

**declination:** *(மின்.)* **கீழ்நோக்கிச் சரிவு:** உண்மையான வடக்குக்கும் காந்த வடக்குக்கும் இடையிலான கீழ்நோக்கிய பிறழ்ச்சிக் கோண அளவு.

**decomposition:** **பகுத்துச் சிதைத்தல்:** இயற்கையாக அழுகுதல் மூலமாக அல்லது வேதியியல் வினை மூலமாக கூட்டுப்பொருட்களை ஆக்கக் கூறுகளாகச் சிதைத்தல்.

**decompression:** **அழுத்தத் தளர்வு:** விமானத்தில் உயரே செல்லும் போதும், மிகுந்த ஆழத்திலிருந்து மேலே வரும்போதும் உடலின் அழுத்தத்தை மெல்ல மெல்லக் குறைத்தல்.

**decompression sickness:** *(விண்.)* **அழுத்தத் தளர்வு நோய்:** ஆழ்கடலில் மூழ்கியவர்களுக்கும், மீகாமர்களுக்கும் அழுத்தக் குறைவினால் உண்டாகும் ஒருவகை நோய்.

**decoration:** **ஒப்பனை செய்தல்:** சித்திரம் செதுக்குதல் ஓவியந் தீட்டுதல், உள்ளிழைத்தல் போன்ற வேலைப்பாடுகளைச் செய்து அறைகலன்களில் அலங்கார அணி வேலைப்பாடுகளைச் செய்தல்.

**decouple:** *(மின்.)* **பிணைய விழ்ப்பு:** ஒரு மின்சுற்றுவழி இன்னொரு மின்சுற்றுவழியைப் பாதிப்பதைத் தடுப்பதற்காக இரு மின்னோட்டங்களை இடைத் தடுத்திணைப்பதன் மூலம் கிளைவழியில் திருப்பி விடுதல்.

**decrement:** *(மின்.)* **குறைமானம்:** குறைவதன் மூலம் ஏற்படும் இழப்பு.

**dedendum:** **அகம் (பல்லிணை):** சக்கரப் பற்களின் இடைத்தொலைவுக்கும் ஆதாரக் கோடுகளுக்குமிடையிலுள்ள ஒரு பல்லிணைப் பல்லின் பகுதி.

**de-energize:** *(மின்.)* **மின்னிறக்கம்:** ஒரு மின்சுற்று வழியிலிருந்து மின் விசையை அகற்றிவிடுதல்.

**deeping:** **குறைபாடு:** உருக்குறைவாகவுள்ளது அல்லது முழுமை நிலை குன்றியதாகவுள்ளது.

**defacement:** *(மர.வே.)* **உரு வழித்தல்:** ஒரு மேற்பரப்பினை அல்லது ஒரு தோரணியின் பகுதியை துடைத்தழித்தல் அல்லது தோற்றங் கொடுத்தல்.

**defect:** **ஆழத்திலிடுதல்:** சுற்றுப் பரப்பிலிருந்து மிகுந்த ஆழத்தில் இடுதல்.

**deficiency disease:** *(நோயி.)* **பற்றாக்குறை நோய்:** தேவையான

சத்துப் பொருட்கள் உணவில் இல்லாமையால் உண்டாகும் நோய். மாலுமிகளுக்கு ஏற்படும் எகிர்வீக்க நோய் (ஸ்கர்வி), குழந்தைக் கணை (ரிக்கெட்ஸ்), தவிட்டான் (பெரிபெரி) போன்றவை இவ்வகை நோய்கள்.

**definition**: **தெளிவுத் திறன்**: தொலைக்காட்சிப் படம் தெளிவாகத் தெரியும் அளவு.

**deflection**: **கோட்டம்**: *(1) அழுத்தும் பாரம் காரணமாக ஒரு தூலம் அல்லது கட்டமைப்பு கோட்டமடைதல்.*

(2) தொலைக்காட்சியில் நிலை மின்னியல் அல்லது காந்தப் புலன்களின் வாயிலாகப் பட அல்லது ஒளிப்படக் குழாயின் எலெக்ட்ரான் கற்றை கோட்டமுறுதல்.

**deflection** : *(மின்.)* **கோட்டம்** : ஒரு மானியில் முள் நேர்வழியிலிருந்து விலகிச் செல்லுதல். ஓர் எலெக்ட்ரான் கற்றை நகர்ந்து அல்லது வளைந்து செல்லுதல்.

**deflection factor** : *(மின்.)* **கோட்டக்காரணி** : ஓர் எதிர்முனைக் கதிர்க் குழலிலுள்ள கோட்டத் தகடுகள், ஒரு குறிப்பிட்ட முடுக்க மின்னழுத்தத்தில் திரையில் ஓர் அங்குலம் மின்கதிர்க் கோட்டத்தை உண்டாக்குகிற நேர் மின்னோட்ட மின்னழுத்தம்.

**deflection sensitivity** : *(மின்.)* **கோட்டமின் தூண்டு திறன்** : ஓர் எதிர் முனைக் கதிர்க் குழலில், கோட்டத்தகடுகளில் செலுத்தப்படும் ஒரு வால்ட் மின்னழுத்தத்திற்கு எலெக்ட்ரான் கதிர்க்கற்றையில் ஏற்படும் கோட்டத்தின் அளவு.

**deformation** : **உருத்திரிபு** : ஒரு பாரம் அழுத்தும்போது ஒரு கட்டமைப்பின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம்.

**deformed bars** : *(பொறி.)* **உருத்திரிபுச் சலாகை** : சலாகைகளுக்கும் கான்கிரீட்டுக்குமிடையில் மேலும் வலுவான பிணைப்பு உண்டாக்குவதற்காக ஒழுங்கற்ற வடிவுகளில் செய்யப்படும் வலுவூட்டும் சலாகைகள்.

**defrosting cycle** : *(குளி.பத.)* **உறைவுத் தடுப்புச் சுழற்சி** : குளிர்பதனச் சாதனத்தில், அது வேலை செய்யாதிருக்கும்போது உறையாமலிருப்பதற்கான செயல் முறை.

**degeneration** : *(உயி.)* **இனச் சிதைவு** : உயிர்கள் இனப்பண்பு அழிந்து கீழ்நோக்கி மடங்கிச் செல்லுதல். இது மேல் நோக்கிய உருமலர்ச்சிக்கு எதிர் மாறானது.

**degradation** : *(குழை.)* **தரங் குறைத்தல்** : சிக்கலான பொருளைச் சிதைத்து எளிய பொருளாக மாற்றுதல். எடுத்துக்காட்டாக, பிளாஸ்டிக் கொதி நிலையை அடையும்போது அதன் நீண்ட மூலக் கூற்றுச் சங்கிலிகள் சிதைவுற்று சங்கிலித் தொடராக இல்லாத பல எளிய மூலக்கூறுகளாக மாறுகிறது.

**degras** : **கம்பளப்பசை** : கம்பளத்தைத் தேய்ப்பதால் கிடைக்கும் பசையுள்ள எண்ணெய்ப் பொருள். இது உராய் பொருள்களின் குழைமத் திட்ப ஆற்றலை அதிகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**degree** : **பாகை** : ஒரு வட்டச் சுற்றில் 360இல் ஒரு பங்கு.

**dehumidifying** : **ஈரநப்பு நீக்குதல்**: காற்றிலுள்ள ஈரப்பதனளவைக் குறைத்தல். சில தொழிற்சாலைகளில் சில உற்பத்திச் செய்முறைகளில் ஈரப்பதனற்ற காற்று தேவைப்படும்.

**dehydrator** : *(தானி.)* **ஈரமகற்று சாதனம்** : காற்றிலிருந்து ஈரத்தை அகற்றும் ஒரு சாதனம் அல்லது உறை குளிரூட்டி.

**deicer :** *(வானூ.)* **பனித்தடுப்புச் சாதனம் :** பனிக்கட்டிகள் விமானச் சிறகுகளில் உருவாகாமல் தடுக்கப் பயன்படுத்தப்படும் சாதனம.

**deionzation potential :** *(மின்.)* **அயனி நீக்கத் திறன் :** ஒரு வாயு நிரப்பிய குழலில் அயனி நீக்கம் நிகழ்ந்து, மின்கடத்தல் நின்று போகிற மின்னழுத்த நிலை.

**delaminate :** *(குழை.)* **அடுக்குப் பகுப்பு :** மென் தகடுகளாக்கிய பிளாஸ்டிக் பொருளை அதன் அடுக்குகளிலிருந்துபிரித்தெடுத்தல்.

**delete : நீக்கல்/நீக்கல் குறி :** அச்சுப் பார்வைப் படியில் எழுத்தை அல்லது எழுத்துக்களை நீக்கி விடும்படி பிழைதிருத்துபவர் இடும் குறி.

**delineate : வரைவு :** உருவப் படம் எழுதுதல் அல்லது சித்திரம் வரைதல்.

**deliquescence : ஈரக் கசிவு :** காற்று வெளியில் ஈரம் உறிஞ்சி உப்புப் போலக் கசிவுறுதல். எடுத்துக்காட்டு:கால்சியம் குளோரைடு.

**delta : டெல்ட்டா :** கிரேக்க நெடுங்கணக்கில் முக்கோண வடிவுடைய ($\Delta$) நான்காவது எழுத்து.

**delta connection :** *(மின்.)* **முக்கோண இணைப்பு :** கிரேக்கஎழுத்து டெல்ட்டா போன்று முக்கோண வடிவிலுள்ள சேர்முனைகளை இணைத்து அமைத்த மின் சுற்று வழிகள்.

**delta metal :** *(உலோ.)* **டெல்ட்டா உலோகம் :** இது ஓர் உலோகக் கலவை. இதில் செம்பும், துத்தநாகமும், சிறிதளவு இரும்பும் கலந்திருக்கும்.

**deluxe : நேர்த்திப் பதிப்பு :** ஒரு நூலின் நேர்த்தியான அல்லது அலங்கார வேலைப்பாடுடைய பதிப்பு.

**demagnetization :** *(மின்.)* **காந்தம் நீக்குதல் :** காந்தமாக்கப்பட்ட பொருளிலிருந்து காந்தத் தன்மையை நீக்கும் முறை.

**demand factor :** *(மின்.)* **கோரிக்கைக் காரணி :** ஒரு மின் வழங்கீட்டு முறையில் பெரும் அளவுக் கோரிக்கைக்கும், அந்த முறையின் மொத்த இணைப்புப் பளுத் திறனுக்கு மிடையிலான விகிதம்.

**demarcation line : எல்லைக் கோடு :** எல்லைப் பிரிவினையாகக் குறிக்கப்பட்ட வரம்பு அல்லது கோடு.

**demodulation :** *(மின்.)* **அலைய திர்வு மாற்ற நீக்கம் :** வானொலிப் யில் ஊர்தி அலையிலிருந்து அலையகல அதிர்வு மாற்றச் சைகைத் திறனை அகற்றிவிடும் முறை.

**demodulator :** *(மின்.)* **மின்னலை உணர் கருவி :** வானொலியில் மின்னலைகளைத் தடங்கண்டு காட்டும் கருவி.

**demountable rim :** *(தானி.)* **இறக்கிடும் சக்கர வளையம் :** டயரிலிருந்து காற்றை வெளியேற்றாமல் அப்புறப்படுத்தத்தக்க சக்கர வளையம்.

**demurrage: சுணக்கக் கட்டணம்:** கப்பலிலோ புகை வண்டியிலோ லாரியிலோ சரக்கேற்றத்தில் அல்லது இறக்கத்தில் ஏற்படும் காலத் தாழ்வுக்குரிய கட்டண விகிதம்.

**demy: அச்சுத்தாள் :** (1)38செ.மீ.-க்கு 51செ.மீ.அளவுடைய படம் வரையும் தாள்.
(2)41செ.மீ.க்கு53செ.மீ.அளவுடைய அச்சுத்தாள். இவ்வகைத்தாள் இப்போது இந்தியாவில் பயன் படுத்தப்படவில்லை.


**denaturants :** *(வேதி.)* **இயல்பு மாற்றுப் பொருள் :** பொருளின் இயல்பை மாற்றி விளைவற்றதாக்

கப் பயன்படுத்தப்படும் பிறிதொரு பொருள். மதுபானங்களில் பயன் படுத்தப்படும் ஆல்ககாலின் இயல்பை மாற்றுவதற்காகப் பயன் படுத்தப்படும் பைரிடின், பென்சீன், மண்ணெண்ணெய் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**denatured alcohol : இயல்பு திரிந்த ஆல்ககால் :** தொழில்களில் பயன்படுத்துவதற்காக பைரிடின், மெத்தைல் ஆல்ககால் போன்ற இயல்பு மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்தி இயல்பு மாற்றப் பட்ட ஆல்ககால். உறையாத கரைசல்கள் தயாரிக்க இது பயன்படுகிறது.

**denim: வண்ணச் சாய்வரித் துணி:** முழு மேலங்கி தைக்கப் பயன்படும் சாய்வரி வண்ணப் பருத்தித் துணி வகை. இது திரைகளுக்கும் அறை கலன் அலங்காரத் துணியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**dengue :** (நோயி.) **'டெங்கு' காய்ச்சல்:** தலைவலியும், கண் சிவப்பாதலும், முதுகிலும் மூட்டுகளிலும் கடுமையான வலியும் உண்டாக்கும் கொள்ளைக் காய்ச்சல் வகை. இந்நோய் ஒவ்வொரு முறை தாக்கும்போது 3-6 நாட்கள் நீடிக்கிறது. ஒருவகைக் கொசுவினால் இது பரவுகிறது. இதே கொசு மஞ்சள் காய்ச்சலையும் உண்டாக்குகிறது.



'டெங்கு' காய்ச்சல் கொசு

**density : அடர்த்தி :** நெருக்கம்; செறிமானம். பரும அளவுடன் எடைமானத்திற்குள்ள விகிதம்.

**density altitude :** (வானூ.) **அடர்த்தி உயரம்:** ஒரு தர அளவு வாயு அழுத்தத்தில் குறிப்பிட்ட அடர்த்திக்கு நேரிணையான குத்துயரம்.

**density, gasoline:** (தானி.) **கேசோலின் அடர்த்தி :** 60°(F) ஃபா. வெப்ப நிலையில் கன அளவு கேசோலின் எடைக்கும் 39° (F) ஃபா. வெப்பநிலையில் அதே கன அளவு கேசோலின் எடைக்குமிடையிலான விகிதம் அல்லது வீத எடைமானம்.

**dentil :** (க.க.) **செவ்வகப் பாளம்:**


செவ்வகப் பாளம்

தூண் முகட்டு மேல்தட்டின் சூழ்வரையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள செவ்வகப் பாளம்.

**dentine :** (உள.) **பல் திசு:** பற்களில் உண்டாக்கப்பட்டிருக்கும் எலும்பு போன்ற பல் திசு.

**depolarization :** (மின்.) **முனைப்பாடு அகற்றுதல்:** ஒரு மின்னமுத்த மின் கலத்தின் மின் காந்த முனைப்பியக்கம் அகல்வதைத் தடுத்து அதன் வினைத் திறனைப் பாதுகாக்கும் செய்முறை.

**depolarizer :** (மின்.) **முனைப்பாடு அகற்றி :** அடிப்படை மின் கலத்தில் துத்தநாகத்தினால் அமிலம் பகுத்துச் சிதைவதால் உண்டாகும் ஹைட்ரஜனை நிலைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப் படும் ஆக்சிகரணப் பொருள்.

**deposit :** (தானி.) **படிவுப் பொருள்:** (1) பணி முடித்த மேற்பரப்புகளில் படியும் உள்ளெரிபொருள். (2) பல்வேறு தகடாக்கும் செய்முறைகளின்போது ஓர் உலோகத்தின் முகப்பில் திரளும் திடப் பொருள். கொதிகலன் முதலியவற்

றில் திரளும் கருகிய பொருளை யும் குறிக்கும்.

**depression :** *(இயற்.)* **காற்றழுத்தத் தாழ்வு :** வாயு மண்டலத்தில் காற்றழுத்தம் தாழ்வாக இருக்கும் பகுதி, பூமியின் வடபகுதி காற்றழுத்தத் தாழ்வு ஏற்படும்போது, காற்று ஒரு வட்டத்தில் சுழல்கிறது. காற்றழுத்தத் தாழ்வு காரணமாக மோசமான பருவ நிலை உண்டாகும்.


**depression:** *(உள.)* **மனச்சோர்வு:** நம்பிக்கையிழந்து, சோகம் குடிகொண்டு சோர்வு உண்டாகும். உணர்வு மிகுந்த மனக்கிளர்ச்சிக்கும் ஓர் முழு விரக்திக்குமிடையிலான பல்வேறு மனமாறுதல்களை உண்டாக்கும் மனக்கோளாறு.

**deposit :** *(தானி.)* **படிவு :** (1) சுண்ணக் கரியகை படிந்த மேற்பரப்புகளில் படியும் உள்ளெரி பொருள். (2) முலாமிடும் செய்முறையில் உலோக மேற்பரப்பில் படியும் திடப்பொருள்.

**deposition : படியவிடல் :** படிய விடுதல் அல்லது ஒரு பரப்பின் மீதும் ஒரு படலம் படியச்செய்தல்.

**depreciation : தேய்மானம் :** காலக் கழிவினாலும், தேய்மானத்தினாலும் எந்திரங்களின்மதிப்பில் ஏற்படும் குறைவு.

**depth gauge :** *(எந்.)* **ஆழ அளவி:** துவாரங்களின் ஆழத்தையும் உள்



ஆழ அளவி

ளிடப் பகுதிகளின் ஆழத்தையும் உலோக மற்றும் மரவேலை நிபுணர்கள் பயன்படுத்தும் அளவி.

**depth micrometer :** *(எந்.)* **ஆழ நுண்ணளவை மானி:** நுண்பொருள்கள், தொலைவுகள், கோணங்கள் ஆகியவற்றை அளந்து காட்டும் கருவி.

**derrick :** *(பட். வே.)* **பாரந்தூக்கும் பொறி :** பளு நகர்த்துவதற்கும், ஏற்றி, இறக்குவதற்கும் உரிய வாய்ப்பு வன்மைகளைக் கொண்ட அமைவு.

**descaling :** *(உலோ.)* **செதிள் நீக்கம் :** உலோகங்கள் மிக உயர்ந்த வெப்ப நிலைகளில் ஆக்சிகரணமாகும் சூழல்களுக்கு உள்ளாகும் போது உலோகங்களில் படியும் செதில்களை நீக்குதல்.

**descender :** *(அச்சு.)* **கீழ்நோக்கிய எழுத்து :** அச்சுத் துறையில் நெடுங் கணக்கின் சிற்றெழுத்து வடிவுகளில், எழுத்தின் உடலிலிருந்து கீழ்நோக்கி செல்கின்ற p,y,j போன்ற எழுத்துக்கள்.

**describe : வரை :** வரைந்து காட்டு ; வரை வடிவம் கொடு; விரித்துரை; குறித்துரை.

**description வருணனை:** பொருள் எதனையும் சொல்லால் அல்லது எழுத்தால் விரித்துரைத்தல்.

**desiccate : உலர்த்து :** ஈரம் நீங்க உலர்த்துதல்; உலர்பதனஞ் செய்தல்; காய்ந்து போகச் செய்தல்.

**desiccant :** *(குளிர்.பத.)* **உலர்த்து பொருள் :** ஈரப்பதனை அகற்றி உலர்த்துவதற்குப் பயன்படும் துணைப் பொருள்.

**design : வடிவமைப்பு :** கட்டிடம் கட்டுவதற்கு அல்லது எந்திரம் தயாரிப்பதற்கு முன்மாதிரியாக வகுக்கப்படும் உருவரைப்படம்.

எந்திரவியலில் எந்திர இயக்க முறைகளை உருவரைப்படமாகத் தீட்டுதல்.

**designer or layout man : வடிவமைப்பாளர் :** தமது நிறுவனம் தயாரிக்கும் பொருட்களின் வகை பற்றிய வடிவமைப்புகளைத் தயாரிக்கத் தகுதி வாய்ந்த வடிவமைப்பாளர்.

**designing engineer : வடிவமைப்புப் பொறியாளர் :** ஒரு குறிப்பிட்ட பணிக்குரிய பொறியியல் மற்றும் உருவமைப்பு நுட்பங்களைக் கவனிக்கும் வல்லுநர். தம்மிடம் அளிக்கப்படும்வடிவமைப்புகளைச் சிக்கனமாகவும், திறம்படவும் தயாரிக்க வழிவகுத்துக் கொடுக்கும் பொறுப்பும் இவருடையது.

**destructive distillation:** (வேதி.) **சிதைத்து வாலைவடித்தல் :** ஒரு பொருளைக் காற்றுடன் கலக்காமல் சூடாக்கிச் சிதையுமாறு செய்து, புதிய பயனுள்ள பொருள்களை ஆக்குதல். இது சாதாரண வாலை வடித்தலிலிருந்து வேறுபட்டது. இதில் வேதியியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனால். சாதாரண வாலை வடித்தலில் இயற்பியல் மாற்றங்கள் மட்டுமே நிகழும்.

**detach : தொடர்பறு :** பட்டறை நடவடிக்கைகளில் மற்ற செயற்பாடுகளுக்கு மாற்றுவதற்காகத் தொடர்பறுத்தல் அல்லது இணைப் பகற்றுதல்.

**detail : தனிக்கூறு :** அமைப்பான் பகுதிகளின் ஒரு தனிக்கூறு. ஏதொன்றிலும் அமைந்துள்ள சிறிய ஆனால் இன்றியமையாத ஓர் அமைப்புக்கூறு.

**detail drawing : வகை நுணுக்க வரைபடம் :** ஓர் எந்திரத்தின் அல்லது வேறு பொருட்களின் வகை நுட்பங்கள், பரிமாணங்கள், பயன்படும் பொருட்கள், உறுப்புகளின் எண்ணிக்கை, செயற்பாடுகள் ஆகிய விவரங்கள் அடங்கிய வரைபடம்.

**detailer : வரைவாளர் :** வகை நுட்ப வரைபடம் வரைபவர்.

**detector :** (மின்.) **ஒலியலை மாற்றி :** கேட்க முடியாத ஒலியலை அதிர்வுச் சைகைகளைக் கேட்கக் கூடிய ஒலியலை அதிர்வுச் சைகைகளாக மாற்றுவதற்கான ஒரு சாதனம்.

**detergent : சலவைப் பொருள் :** அழுக்கு,எண்ணெய்ப் பசை முதலியவற்றைக் கரைத்துத துப்புரவு செய்யும் திறமுடைய பொருள்.

**detergent oi's :** (தானி.) **சலவை எண்ணெய்கள்:** துப்புரவுத் திறனை அதிகரிக்கும் நோக்குடன் சலவைப் பொருள்களுடன் சேர்க்கப்படும் எண்ணெய்கள்.

**deterioration : அழிகேடு :** அழிகேடாக்குகிற அல்லது படிப்படியாக தரக்குறைவு உண்டாக்குகிற நிலை.

**determine: அறுதியிடல் :** துல்லியமான அளவீடுகள் மூலம் கணித முறையில் மதிப்புக்களைக் கணக்கிடுதல்.

**detonate :** (தானி.) **வெடிக்கச் செய்:** வெப்பமூட்டி அல்லது தீமூட்டி அழுத்தத்திலுள்ள வாயுக்களை விரைவாக விரிவடையச் செய்தல்'

**detonation :** (தானி.) **வெடிப்பு :** உள் வெப்பாலை எந்திரங்களில் சுத்தி ஓசை போன்ற அதிர்வுடன் வெடிப்பு உண்டாதல்.

**detonator : வெடிப்புப் பொருள்** வெடிகுண்டுகளில் பெருத்த விசையுடன் வெடிப்பைத் தூண்டிவிடும் வெடிப்புப் பொருள்.

**deuterium :** (வேதி.) **டியூட்டெரியம்:** இரண்டு புரோட்டான்களும், எலெக்ட்ரான்களும் அடங்கியுள்ள கனமான ஹைட்ரஜன் அணுக்கள்.

சாதாரண ஹைட்ரஜன் அணுக்களில் ஒரு புரோட்டானும், எலெக்ட்ரானும் மட்டுமே இருக்கும்.

**deuterium** : *(மின்.)* **டியூட்டெரியம்** : ஹைட்ரஜனின் இருமடித்திரிபெடைப் பொருள்; கன ஹைட்ரஜன். இரு புரோட்டான்களும் எலெக்ட்ரான்களும் இந்த ஹைட்ரஜன் அணுக்களில் அடங்கியிருக்கும்.

**deuteron**: *(மின்.)* **டியூட்டெரான்**: ஒரு புரோட்டானும், ஒரு நியூட்ரானும் அடங்கிய வெளிப்படுதுகள்.

**develop** : **மேம்படுத்து** : படிப்படியாக உயர்நிலையடைவித்தல்.

**வெளிக்கொணர்**: உள்ளார்ந்த பண்புகளை வெளிக்கொணர்.

**உரு விளக்கம் செய்** : ஒளிப்படக் கலையில் உருவிளக்கம் செய்தல்.

**development** : **உருவிளக்கப் படம்** : ஒரு தோரணியை அல்லது அமைப்பு முறையை விளக்கிக் காட்டும் உருவிளக்கப்படம்.

**development engineer** : **விரிவாக்கப் பொறியாளர்** : இவர் பரிசோதனைகள் செய்யும் ஒரு பொறியாளர். இவர் தமது துறையில் எல்லா நுட்பங்களையும் நன்கறிந்தவராக இருப்பார். இவர் தமது நிறுவனத்தின் உற்பத்திப் பொருளில் செய்ய வேண்டிய மாற்றங்கள் குறித்து ஆலோசனைகள் கூறுவார்.

**deviation** : **திசை திரும்புதல்** : திசையறி கருவியின் ஊசி ஒரு புறமாகத் திரும்புதல், பிழைபாடு; மாறுபாடு.

**deviation ratio**: *(மின்.)* **கோட்ட விகிதம்** : அலை சேர்த்தியில் மிக உயர்ந்த அளவு அலைவெண் கோட்டத்திற்கும் மிக உயர்ந்த அளவு அலைமாற்ற அலைவெண்ணுக்குமிடையிலான விகிதம்.

**deviation sensitivity** : *(மின்.)* **கோட்டப் பதிவுத்திறன்**: பண்பலை வானொலியில் மிகக் குறைந்த அளவு அலைவெண் கோட்டத்தினால், ஒரு குறிப்பிட்ட வெளிப்பாட்டு விசை உண்டாதல்.

**device** : **சாதனம்** : ஒரு பணியை மேலும் சிறந்த முறையில் செய்வதற்கு உதவக்கூடிய ஓர் எந்திர சாதனம் அல்லது கருவி.

**dextrin** : *(மர வே.)* **டெக்ஸ்டிரின்**: இது ஒரு செயற்கைப் பசை வகை. இது தாவரங்களிலிருந்து இயற்கையாகக் கிடைக்கும் நிறமற்ற கூட்டுப் பொருள்; நீரில் கரையக் கூடியது. இது கோந்துக்குப் பதிலாகப் பயன்படுக்கப்படுகிறது.

**diagnosis** : *(நோயி.)* **நோய் நாடல்** : நோயாளியின் புறக் குறிகளின் உதவியால் அவர் எந்த நோயினால் அவதியுறுகிறார் என்பதை அறுதியிடுதல்.

**diagonal** : *(கணி.)* **மூலை விட்டம்** : ஒரு செவ்வகத்தில் எதிரெதிர் மூலைகளை இணைக்கும் நேர் கோடு.

**diagonal bond**: *(க.க.)* **மூலை விட்டக் கட்டுமானம்** : ஒரு சுவரில் மூலைச் சாய்வாகச் செங்கற்களை அடுக்கிக் கட்டுதல்.

**diagonal parting** : *(மர. வே.)* **மூலைவிட்டப் பிரிவினை** : ஒரு செவ்வகக் குறுக்கு வெட்டுத் தோரணியை அதன் மூலை விட்டவாக்கில் பிரிவினை செய்தல்.

**diagram** : **விளக்க வரைபடம்** : ஒரு புனையா ஓவியம் அல்லது சித்திர வரையுரு.

**dial** : **வட்ட முகப்பு** : அளவை மதிப்புகள் குறிக்கப்பட்டுள்ள

வட்ட வடிவமான அல்லது நீள் வட்ட வடிவமுடைய ஒரு முனைப் புத் தகடு.

**dial bridge** : *(மின்.)* **முகப்புடை இணைப்பு**: சுருள் கம்பிகள் முகப்பு வடிவில் அமைக்கப்பட்டுள்ள ஒரு தடை இணைப்பு. இதில் செருகி களை நுழைப்பதற்குப் பதிலாக ஒரு நகரும் புயத்தின் மூலமாகத் தொடர்புகள் ஏற்படுத்தப்படுகின் றன.

**dial gauge : முகப்புடை அளவி** : இது ஒரு வளைந்த விற் சுருளி னால் இயக்கப்படும் குறியீட்டு முள் கொண்ட ஒரு வட்டமுகப்பு ஆகும். இது அழுத்தத்தின் அளவை அல்லது வெற்றிடத்தின் அளவைக் குறித்துக் காட்டுகிறது. இந்த அளவிகள் அனைத்தும் போர்டான் விற்சுருள் தத்துவத் தின் அடிப்படையில் அமைக்கப் படுகின்றன.

**dialysis : கலவைப் பிரிப்பு** : கரைந்த பொருளிலிருந்து இடைச் சவ்வூடாகப் பரவச் செய்து கூழ்ப் பொருள்களைப் பிரித்தல்.

**diamagnetic** : *(மின்.)* **குறுக்குக் காந்த விசை** : காந்த அச்சுக்குக் குறுக்காகக் கிழக்கு மேற்குத் திசை யில் இயங்கும் இயல்புடைய காந்த ஆற்றல்.

**diameter : விட்டம்** ; வட்டத்தின் குறுக்களவு. ஒரு வட்டத்தின் மையப் புள்ளி வழியாகச் சென்று வட்டத்தின் பரிதியில் முனைகள் முடியும் ஒரு நேர்கோடு விட்டம் ஆகும். கணிதத்தில், விட்டம்= பரிதி×0.3183.

**diametral pitch** : *(பல்லி.)* **விட்ட இடைத் தொலையளவு** : ஒரு பல் லிணையில் பற்களின் எண்ணிக் கைக்கும், அதன் இடைத்தொலை யளவு விட்டத்திற்குமிடையிலான தொடர்பளவு அல்லது விகிதம். 40 பற்களைக் கொண்ட ஒரு பல் லிணையில் இடைத்தொலையளவு விட்டம் 10 என்றால், விட்ட இடைத் தொலையளவு 4 ஆகும்.

**diamond** : *(வேதி.)* **வைரம்** : கார்பனின் படிக வடிவம். கனிப் பொருள்களிலேயே மிகவும் உறுதி வாய்ந்தது.

ஆங்கில அச்செழுத்தில் 4½ புள்ளிக் குறிப் பருமனுள்ள சிறு எழுத்து வகை.

**diamond-point chisel** : *(எந்.)* **வைரமுனைச் சிற்றுளி**: இது கொண் டைச் சிற்றுளி போன்றதேயாகும். இதில் வெட்டுமுனை வைரவடிவில் அமைந்திருக்கும். இது கூரிய அடிப்பக்கமுடைய வரிப்பள்ளங் களை வெட்டுவதற்கு ஏற்றது.

**diamond point tool** : *(மர.வே.)* **வைர முனைக் கருவி** : இரு வெட்டு முனைகள் கொண்ட ஒரு கருவி; இந்த முனைகள் ஒன்றுக்கொன்று சாய்வாக அமைந்து ஒரு கூர்ங் கோணத்தில் சந்திக்கும். இக்கருவி யின் ஒருமுகப்பு தட்டையாகவும். இன்னொரு முனை சாய் கோணத் திலும் இருக்கும்.

**diamond wheel dresser**: *(பட்.)* **வைரச் சக்கர செதுக்குளி** : அரைப் புச் சக்கரத்தை இயைவுறுத்து வதற்குப் பயன்படும் தொழில் வைரம்.


**diaper : சித்திர வேலைப்பாடு** : கலை வேலைப்பாடுகளிலும் கட் டிடக் கலையிலும் மேற்பரப்பினை அழகுபடுத்துவதற்காகப் பயன் படுத்தப்படும் வடிவகணித வடி வமைப்புகளுடைய சித்திரச் சிற்ப வேலைப்பாடு.

**diaper work : செதுக்குச் சித்திர வேலை**: அறைதலன்களில் செய்யப் படும் செதுக்குச் சித்திரச் சிற்ப வேலைப்பாடு.

ஆங்கில அச்செழுத்தில் 4½ புள்ளிக் குறிப் பருமனுள்ள சிறு எழுத்து வகையுடைய உலோகத் தகடு. இது ஒளிப்படக் கருவியில் பயன் படுத்தப்படுகிறது.

**diathermy** : *(மின்.)* **உள் வெப்ப மூட்டுதல் :** மின்னோட்ட இயக்கத் தினால் பொருள்களின் உட்பகுதி களுக்கு வெப்ப மூட்டுதல்.

**die** : *(உலோ.)* **வார்ப்புருப் படிவம்:** உலோகங் களை வடி வமைக்கவும், வார்க்கவும், முத்திரையி டவும் வெட் டவும் பயன்படும் கருவி.



வார்ப்புருப் படிவம்

**die casting**: *(எந்.)* **அச்சு வார்ப்பு:** உருகிய உலோகத்தை அல்லது உலோகக் கலவையை அழுத்த நிலையில் ஒரு வார்ப்பினுள் ஊற்றித் தயாரிக்கப்பட்ட மிகத் துல்லியமானதும் வழவழப்புடை யதுமான ஒரு வார்ப்பு.

**die-casting metal** : *(உலோ.)* **அச்சு வார்ப்பு உலோகம்** : அச்சு வார்ப்பு தயாரிப்பதற்குப் பயன் படும் உலோகக் கலவை. இதில் அலுமினியம், ஈயம், துத்தநாகம், செம்பு போன்ற உலோகங்களில் ஏதேனும் ஒன்று ஆதாரமாக அமைந்திருக்கும். உந்து வண்டி களுக்கான கருவிகளுக்கு 90% நிக்கலும் 2% சிலிக்கனும் கலந்த உலோகக் கலவை பயன்படுத்தப் படுகிறது.

**die-chaser**: *(எந்.)* **அச்சு வார்ப்புப் பொதி தகடு** : ஒரு திருகு வெட்டு அச்சு வார்ப்பிலுள்ள பொதி தகடு.

**die clearance : அச்சு வார்ப்பு இடைவெளி :** வேலைப்பாடு செய் யப்பட வேண்டிய உலோகத்தின் கனத்திற்கு இடமளிப்பதற்காக வார்ப்புருவத் தாய்ப் படிவ அழுத் தும் பொறிக்கும் அச்சு வார்ப்புக்கு மிடையிலுள்ள இடைவெளி.

**die forging** : **அடித்துருவாக்குதல்:** அச்சு வார்ப்புகளில் உலோகங் களை உருக்கிக் காய்ச்சி அடித்து உருவாக்குதல். குறைந்த செலவில் தரமான வேலைப்பாடுகளுக்கு இது உதவுகிறது.

**diehead** : *(எந்.)* **அச்சு வார்ப்புத் தலை:** ஒரு திருகு வெட்டு எந்திரத் தில் இழைகளைத் தாங்கியுள்ள சாதனம்.

**dielectric** : *(மின்.)* **மின்னழுத்தத் தாங்கு பொருள்** : மின்விசையைக் கடத்தாமல் மின்விசை விளைவு களை மட்டும் கடத்துகிற பொருள்.

**dielectric constant** : *(மின்.)* **மின்னழுத்தத் தாங்கு பொருள் நிலை யெண்** : ஒரு விசையின் நிலைமின் னியல் தொடருக்கான மின்னழுத் தத் தாங்கு பொருளின் கடத்தும் ஆற்றலுக்கும் காற்றழுத்தத்திற்கு மிடையிலான விகிதம்.

**dielectric strength** : *(மின்.)* **மின்னழுத்தத் தாங்கு பொருள் வலிமை**: இரு மின்வாய்களுக்கிடை யில் ஒரு பொருளை வைக்கும் போது உண்டாகும் மின்னழுத்த அளவுக்கும் அதன் மின்னூட்ட அளவு வேறுபாட்டுக்குமிடை யிலான மின்னழுத்த மாறுபாட் டளவு.

**diesel engine** : **டீசல் பொறி** : வெப்பமூட்டிய அழுத்த மிக்க காற் றில் எண்ணெய்க் காற்று கலந்து செலுத்தப் பெற்று எரியூட்டப் பெறும் பொறிவகை. இதனை டாக்டர் ஆர். டீசல் என்பார் கண்டுபிடித்தார். அவர் பெயரி லேயே இப்பொறி அழைக்கப்படு கிறது.

**die stamping** : *(உலோ. வே.)* **அச்சு வார்ப்பு முத்திரை** : *(1)* ஓர்

அச்சு வார்ப்பில் வெட்டப்பட்ட ஓர் உலோகத் துண்டு.

(2) வண்ணத்துடன் அல்லது வண்ணமின்றி எழுத்துகள் புடைப்பாக இருக்குமாறு அச்சிடும் முறை.

**die stock** : (*எந்.*) **அச்சு வார்ப்புக் குறடு** : இழையூட்டு அச்சு வார்ப்புகளைக் கையால் இயக்கும்போது பயன்படுத்தப்படும் நெம்புகோல் அல்லது திருக்குக் குறடு.

**dietatics** : **பத்திய உணவியல்**; பத்திய உணவு பற்றிய உடல்நல இயல்.

**differential** (*எந். பொறி.*) **வேறுபாட்டு நுட்பம்** : இயக்கும் இரு விசைகளின் வேறுபாட்டுக்கு ஒப்பான இயக்கமுடைய அமைவு. இந்த அமைவு உந்துவண்டிகளில் உள்ளது.

**differential block** : **வேறுபட்ட இணைப்புத் தொகுதி** : ஒரே இயக்கத்தை இருவேறு இயக்கமாகப் பிரித்தியக்குவிக்கும் இயக்க இணைப்புத் தொகுதி அமைவு.

**differential calculus** : (*கணி.*) **வகையீட்டுக் கலனம்** : இது கலன கணிதத்தின் ஒரு பகுதி. இதில் ஒரு சார்பலன் கொடுக்கப்பட்டிருக்கும். அதிலிருந்து அதன் வகையீடு கண்டுபிடிக்கப்படுகிறது. இந்தக் கணித முறை, காலம், வீத அளவு, முடுக்கம், உச்ச நீச முதலியவை பற்றிய கணக்குகளில் பயன்படுத்தப்படுகிறது.

**differential gearing** : (*தானி. எந்.*) **வகையீட்டுப் பல்லிணைப்பு** : இது பல்லிணைப்பு ஏற்படுத்தும் ஒரு வகை முறை. இது ஓர் உந்து வண்டியில் ஒரு பின் சக்கரம் மற்றதன் சார்பின்றி தனியாக நகர்வதற்கு அனுமதிக்கிறது. இதனால் டயர் அதிக அளவில் தேய்வது தடுக்கப் படுகிறது. எந்திரப் பகுதிகளின் மீதும் இதனால் அழுத்தம் குறைகிறது.

**differential heating** : (*உலோ.*) **வகையீட்டு வெப்பமூட்டல்** : ஒரு பொருளின் பல்வேறு பகுதிகளும் வெவ்வேறு அளவுகளில் சூடாகுமாறு அதற்கு வெப்பமூட்டுதல், இதனால், அந்தப் பொருளைக் குளிர்விக்கும் பொழுது வெவ்வேறு குண இயல்புகள் உண்டாகின்றன.

**differential indexing** : (*எந்.*) **வகையீட்டுக் குறியீடு** : துளையிடு எந்திரத்தில் வகையீடு செய்யும் போது, குறியீட்டுத் தகடு, வேலைப்பாடு செய்யப்படவேண்டிய பொருள் ஏற்றப்பட்டுள்ள கதிருடன் மாற்றுப் பல்லிணைகள் மூலமாக இணைக்கப்படுகிறது. இதனால், தகடும் பல்லிணைகளும் சுழன்று முறையாகக் குறியீடு செய்வதற்கு முடிகிறது.

**differential motor** : (*மின்.*) **வகையீட்டு மின்னோடி** : இந்த வகை மின்னோடியில், கூட்டுச் சுருணை மின்னோடி அமைந்திருக்கும். இதில் தொடர் வரிசைகளும், இணைச் சுருள்களும் ஒன்றுக்கொன்று எதிர்மறையாக அமைந்திருக்கும்.

**differential compounding** : (*மின்.*) **எதிர்மறைக் கூட்டு**: வரிசையான சுருணைகள் இணைக்கப்பட்ட ஒரு கூட்டு மின்னோடி. இதில் காந்தப் புலங்கள், இணைச் சுருணைகளின் புலங்களுக்கு எதிராக இருக்கும்.

**differentiate** : **வகைப்படுத்து/ வேறுபடுத்து** : வகை வேறு பாடு காணுதல்; வகைப்படுத்திக் கூறுதல்.

**diffraction** : (*மின்.*) **ஒளிக்கதிர்ச் சிதைவு** : ஒளிக்கதிர் நிறச்சிதைவு உண்டுபண்ணுதல்.

**diffuse:** **ஊடு பரவச்செய் :** பரந்து விரிவுறச் செய்தல்: சிதறலுறச் செய்தல்; விரவிப் பரவச் செய்தல்.

**diffusion** : *(மின்.)* **சிதறிப் பரவு தல் :** ஒரு திரவத்தில் செறிவில் லாத ஒரு பொருள் சிதறிப் பரவு தல், எடுத்துக்காட்டாக, நீரில் மையும், காற்றில் வாயுவும் விர விப் பரவுகிறது.

**digest** : *(உட.)* **செரிமானம்:** உண வின் சாரத்தை வயிற்றினுள் ஈர வெப்ப நிலைகளில், தக்கவாறு பக்குவம் செய்து செரிமானம் செய்தல்.

**digest** : (குழை ) **பக்குவமாக்கு :** ஒரு பொருளைச் சூடாக்குதல், ஈர மாக்குதல், அழுத்தத்திற்குட்படுத் துதல் மூலம் மென்மையாக்குதல். தாவரப் பொருள்களை அகற்று வதற்கு இது பயன்படுகிறது.

**digester** : **செரிமானக்கலம்** : மரத் துண்டுகளை அழுத்தத்தின் கீழ்வே தியியற் பொருட்களுடன் சேர்த் துச் சூடாக்கிச் செரிமானம் செய்து நுண்ணிழைகளாக மாற்றுவதற் குரிய ஒரு கொள்கலம்.

**digit** : *(கணி.)* **இலக்கம்:** 0 முதல் 9 வரையுள்ள எண்களில் ஒன்று. இந்த எண்கள், தனியாகவும் இணைவாகவும் எண்களைக் குறிக் கப் பயன்படுத்தப்படுகின்றன.

**digital computer** : *(விண்.)* **எண்மானக் கணிப்பொறி :** அளவு கள் இலக்கங்களில் குறிப்பிடப் படும் கணிப்பொறி. இது ஏவு கனை பறக்கும் பாதை தொடர் பான சிக்கலான கணக்குகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுகிறது.

**digital signal** : *(தானி.)* **எண் மானச் சைகை** : கணிப்பதற்கும் கட்டுப்பாடுகள் செய்வதற்கும் பயன்படும் சைகை.

**dihedral angle:** *(வானூ.)* **இரு சமதள முக்கோணம்:** இரு சமதள முகங்களிடைப்பட்ட கூர்ங்கோ ணம். விமானத்தில் ஓர் இறகுக்கும் கிடைமட்டத்திற்கு மிடையிலான கோணம். இந்தக் கோணம், குறுக் காகக் காற்று வீசும்போது, கிடை மட்ட உறுதிப் பாட்டினை அதி கரிக்கிறது.

**dilate:** **விரிவாக்கு:** பெரிதாக்கு தல்; விரிவாக்குதல்; அகலமாக்கு தல்.

**diluent :** *(மர.வே.)* **நீர்ப்புப் பொருள் :** கலவையின் செறிவைத் தளர்த்தும் பொருள். சாயங்களில் வண்ண முனைப்புக் குறையச் செய் வதற்கு இது பயன்படுகிறது. வண்ணச் சாயங்களில் ஆளிவிதை எண்ணெயும், கற்பூரத் தைலமும், அவலரக்கில் ஆல்ககாலும், வண் ணங்களில் கற்பூரத்தைலமும் நீர்ப் புப் பொருளாகப் பயன்படுத்தப் கின்றன.

**dilute** : *(வேதி.)* **நீர்த்தல் செய் :** கலவையில் நீர்கலந்து செறிவு குன் றச் செய்தல்.

**dimension** : **பரிமாணம் :** நீளம், அகலம், உயரம் அல்லது கனம் ஆகிய அளவுத் தொகுதிகளைக் காட்டும் உருவளவைக் கூறு.

**dimensional stability:** *(குழை.)* **பரிமாண உறுதிப்பாடு:** ஒரு பிளாஸ் டிக் பொருள், குறிப்பிட்ட சூழ் நிலைகளில் குறிப்பிட்டகால அள வுக்குத் தனது துல்லியமான வடி வளவைப் பேணிக் காத்துக் கொள்ளும் திறன்:

**dimensioning** : **உருவளவைப் படுத்துதல் :** உருவ வரைபடங் களில் பல்வேறு பகுதிகளின் வடி வளவுகளைக் குறிப்பிடுதல்.

**dimension line** : **பரிமாணக் கோடு :** பரிமாணம் எந்தப் பகு தியை அல்லது கோட்டினை அடிப் படையாகக் கொண்டிருக்கிறது

என்பதை ஒரு வரைபடத்தில் காட்டும் கோடு.

**dimension shingles** : *(க.க.)* **பரிமாண மரப்பாவோடு** : ஒரு சீரான வடிவுள்ள மரப்பாவோடு களிலிருந்து வேறுபட்டது.


**dimmer** : *(தானி.)* **ஒளி குறைப்பான்:** உந்து வண்டிகளின் வெளிச்ச மிக்க முகப்பு விளக்குகளில் கண் கூச வைக்கும் ஒளியைக் குறைப்ப தற்கான ஒரு சாதனம். இது காலடியிலுள்ள விசையின் மூலம் முகப்பு ஒளிக்கற்றையினை உயர்த் தித் தாழ்த்துவதன் மூலம் செய்யப் படுகிறது.

மின்னியலில் மின் விளக்கின் ஒளியைக் கட்டுப்படுத்துவதற்காக வரிசையில் வைக்கப்பட்டுள்ள ஒரு தடைமாற்றி.

**dimming resistor** : *(மின்.)* **மங்கு தடுப்பான்** : முகப்பு விளக்குகளில் ஒளியின் செறிவினைக் குறைப்ப தற்காக விளக்கின் சுற்றுவழியில் செருகப்பட்டுள்ள ஒரு சாதனம்.

**dimpling** : **குழிகுடைதல்** : ஒரு குடையாணி தலை பொருந்தும் வகையில் ஒரு மெல்லிய உலோகத் தில் ஒரு குழி உண்டாக்கும் முறை.

**dinging hammer** : *(உலோ.)* **நெளிவெடுக்கும் சுத்தி** : உலோகத் தகட்டிலுள்ள பள் ளங்களையும், நெளி வுகளையும் அகற்று வதற்குப் பயன்படுத் தப்படும் ஒரு கைச் சுத்தியல்.



நெளிவெடுக்கும்

**dinking die** : *(பட்.)* **துளையிடு கருவி** : துணி, தோல், காகிதம் முதலியவற்றில் துவாரமிடுவதற் குப் பயன்படுத்தப்படும் ஒரு சிறிய துளையிடுங்கருவி அல்லது தமரூசி. இதனை ஓர் எந்திரத்திலோ, சுத்தி யலால் அடித்துக் கைத்தமரூசியி னாலோ இயக்கலாம்.

**diode**: **இரு முனையம்** : ஒரு வெற் றிடக் குழாய்.

இரு மின் முனையங்கள் கொண்ட மாற்று மின்னோட் டத்தை நேர்மின்னோட்டமாக மாற்றுங்கருவி.

**diode detector** : *(மின்.)* **இரு முனையக் கண்டறி கருவி** : இரு முனையத்தின் ஒரு முகக் கடத்துந் தன்மையைப் பயன்படுத்தும் கண் டறி மின் சுற்றுவழி.

**dip** : *(மின்.)* **காந்த ஊசி இறக்கம்**: அடிவான் வரை கடந்த காந்த ஊசியின் கீழ்நோக்கிய இறக்கக் கோணம்.

**dip angle**: **இறக்கக்கோணம்:** மேட் டுக் காட்சியில் புறத்தோற்றத்திற் காணப்படும் தொடுவான் இறக்கக் கோணம்.

**dip brazing**: *(பற்.)* **தோய்வுப் பற்ற வைப்பு** : இரு பகுதிகளைப் பற்ற வைப்பதற்கு, இருபகுதிகளையும் ஒன்றாக இணையும் வரையில் போதிய அளவு சூடாக்கி உருக் கிய துத்தநாகத்தில் தோய்த்து வைக்கும் முறை.

**diphthong**: **இணையுயிர்** : ஓரசை யாக ஒலிக்கப்படும் இரண்டு உயி ரெழுத்தொலிகள். Phoenix என் னும் சொல்லில் 'oe' என்பது ஒரே உயிரொலியுடைய ஈரெழுத்து இணையுயிர் ஆகும்.

**dipole antenna** : **இரு கம்ப விண்ணி**: ஒரே நேர்கோட்டில் சம நீளமுள்ள இரு மின் கடத்திகளைக் கொண்ட விண்ணி. இது உள் முனைகளில் இணைக்கப்பட்டுள்ள இரு ஈயக்கம்பிகளைக் கொண்டி ருக்கும். இது ஈரிணை அல்லது இருகம்ப விண்ணி என்றும் அழைக் கப்படும். சிற்றலைகளுக்கு தானே தாங்கிக் கொள்ளும் உலோகச் சலாகைகள் அல்லது குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**direct action** : *(எந்.)* **நேரடி இயக்கம்** : எந்திரவியல் இயக்கத்தில் இடையீட்டுப் பொருள் இல்லாமல் நேரடியான இயக்கம்.

**direct current** : *(மின்.)* **நேர் மின்னோட்டம்** : ஒரு திசைப் போக்குடைய மின்னோட்டம். ஒரு மின்னாக்கப் பொறியில் உற்பத்தியாகும் மின்னோட்டம் மாறுமின்னோட்டமாக அமைகிறது. ஆயினும், அதனைத் திசைமாற்றியின் உதவியால் நேர் மின்னோட்டமாக மாற்றலாம்.

**direct current arc welding** : **நேர்மின்னோட்டச் சுடர் பற்றவைப்பு**: சுடரில் உண்டாகும் மின்விசை நேர் மின்னோட்டமாக இருக்கும் வகையில் செய்யப்படும் ஒரு சுடர் பற்றவைப்பு முறை.

**direct drive** : **நேரடி இயக்கி** : சுழல் தண்டுகளையும் வார்ப்பட்டைகளையும் பயன்படுத்துவதைத் தவிர்த்து, முதன்மை இயக்கியுடன் நேரடியாக இணைப்பதன் மூலம் ஒரு மின்னாக்கப் பொறியினை இயக்கும் அமைவு.

**direct dyes** : **நேரடிச் சாயங்கள்** : நிறம் கெட்டியாக்கும் பொருள் எதனையும் பயன்படுத்தாமலேயே கெட்டியாக உள்ள சாயங்கள்,

**direct indexing** : *(எந்.)* **நேர் பகுப்பு** : துளையிடு எந்திரத்தில் இந்த நேர்பகுப்பு செய்யப்படுகிறது. கதிரும் அதில் ஏற்றப்பட்டுள்ள வேலைப்பாட்டுக்குரிய பொருளும் பகு தகட்டுடன் ஒத்த கோணங்களில் சுழல்வதன் மூலம் இவ்வாறு செய்யப்படுகிறது.

**direction** : **திசை** : ஒரு முனையிலிருந்து இன்னொரு முனை உள்ள நிலை.

**directional gyro** : *(வானூ.)* **திசை காட்டும் சுழலாழி** : திசையினைக் காட்டக்கூடிய ஒரு சுழலாழிக் கருவி. இதில், சுழல் பொருள்களின் இயக்க விளக்கும் ஒரு தங்கு தடையற்ற சுழலாழிக் கருவியும் அமைந்திருக்கும். இது வானுச்சியிலிருந்து அடிவானம் வரையிலுள்ள செங்கோண வளைவு நிலையிலே இருக்கும். இதன் கோணம் பிறழ்வினைக் காட்டுகிறது.

**directional radio** : **திசைநோக்கு வானொலி** : விண்ணியிலிருந்து வானொலி ஆற்றலை முன்னரே நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட திசையில் அனுப்பும் வானொலி ஒலிபரப்பு.

**directional stability** : *(வானூ.)* **திசை நோக்கிய உறுதிப்பாடு** : வழக்கமான அச்சில் சுழலும் உறுதிப்பாடு. ஒரு விமானம் இத்தகைய உறுதிப்பாட்டினை பக்கம் நோக்கிய நிலையில் எளிய வடிவில் உடையதாகும்.

**direction of force** : *(இயற்.)* **விசையின் திசை** : ஒரு பொருளின் மீது செயற்படும் விசை நகர்ந்து செல்லும் அல்லது நகர்ந்து செல்ல முனையும் திசை.

**direction of magnetic flux** : *(மின்.)* **காந்தப் பெருக்கத் திசை** : ஒரு காந்தப்புலத்தில் இந்தத் திசை எப்போதும் வடக்கிலிருந்து தென் துருவத்தை நோக்கியதாக இருக்கும்.

**direction signal** : *(தானி.)* **திசைச் சைகை** : உந்துவண்டிகள் திரும்பவிருக்கும் திசையினை ஓட்டுநர் குறித்துக் காட்ட உதவும் ஒரு மின் விசைச் சாதனம்.

**direct rediation** : *(இயற்.)* **நேரடிக் கதிர்வீச்சு** : ஓர் அறையை நீராவியால் அல்லது அறையிலுள்ள வென்னீர்க்கதிர்வீசிகளால் சூடாக்கும் முறை நேரடிக் கதிர்வீச்சு எனப்படும்,

**direct polarity** : *(பற்.)* **நேர்துருவ முனைப்பு** : நேர் முனையிலிருந்து (அடிப்படை உலோகம்) எதிர் முனைக்கு (மின்முனை) மின்னோட்டம் நேரடியாகப் பாய்தல். மின்முனை எதிர்முனையாகவும், அடிப்படை உலோகம் நேர் முனையாகவும் செயற்படுகிறது.

**dirigible**: *(வானூ.)* **பறவைக் கப்பல்**: வானில் வழிப்படுத்திச் செலுத்தப்படக்கூடிய ஒரு வகைக் கூண்டு.

**discharge header** : *(வானூ.)* **வெளியேற்று குழாய்** : உந்துகலம், விமானம் முதலியவற்றின் மீவிசைக் காற்றடைப்புக் குழாயிலிருந்து எஞ்சினுக்குக் காற்று கொண்டு செல்லப்படும் குழாய் வழி.

**dirty proof** : *(அச்சு.)* **மட்டமான பார்வைப் படி** : பல பிழைகளைக் கொண்ட திருத்தத்திற்கான அச்சுப் பார்வைப் படி.

**discriminator** : *(மின்.)* **பிரித்துணர் கருவி** : ஒருவகைப் பண்பலை உணர்கருவி.

**discharging or relieving arch** : **வெளியேற்று அல்லது தளர்த்து கவான்** : வாயில்-பலகணி ஆகியவற்றின் மேற்கட்டையின் பாரத்தைத் தளர்த்துவதற்காக ஒரு கதவில் அல்லது பலகணியிலுள்ள திறப்புக்கு மேல் அமைக்கப்படும் கவான்.

**discoloration** : *(குழை.)* **நிறம் வேறாக்குதல்** : பிளாஸ்டிக் பொருள் முதலில் கொண்டிருக்கும் நிறத்தை மாற்றுதல்.

**disconnect** : **இணைப்பு நீக்கு** : இணைப்பைப் பிரித்துவிடுதல்; கழற்றிவிடுதல்; பிரித்து வேறாக்குதல்.

**disengaging clutch** : *(எந்.)* **விடுவிப்பு ஊடிணைப்பி** : சக்கரங்களை பல்லிணையின் தொடர்பிலிருந்து விடுவிக்கக் கூடிய ஓர் ஊடிணைப்பி.

**dished** : **உட்குழிவு** : சீட்டாட்ட மேசைகளின் மேற்பரப்பில் பணம் போட்டு வைப்பதற்காக உட்குழிவாக அமைக்கப்படும் பள்ளம்.

**dished wheel**: *(தானி; எந்.)* **உட்குழிவுச் சக்கரம்** : உட்குழிவாக அல்லது குவியாக அமைக்கப்படும் ஒரு சக்கரம்.

**disinfectant** : *(வேதி.)* **தொற்றுத் தடை மருந்து** : நச்சுத்தடைக் காப்புப் பொருளாகப் பயன்படும் வாயு திரவம் அல்லது திடப் பொருள்.

**disinfection** : *(வேதி.)* **தொற்றுத் தடைக்காப்பு** : தொற்றுத் தடைப் பொருட்களாகிய வாயு அல்லது திரவத்தைப் பயன்படுத்தித் தொற்று நோய்களுக்கு எதிராகத் தடைக்காப்புச் செய்தல்.

**disintegration** : **சிதைவுறுதல்** : பாறைகள் முதலியவை சிதைவுற்று ஆக்கக் கூறுகளாகப் பிரிதல்.

**disk** : *(பட்.)* **வட்டத் தகட்டு** : ஒரு பட்டறையிலுள்ள வட்டத் தகடு. இது ஓர் எந்திரத்தின் அல்லது வேலைப்பாட்டின் ஒரு பகுதியாக இல்லாதிருக்கலாம்.

**disk clutch** : *(தானி; எந்.)* **வட்டத் தகட்டு ஊடிணைப்பி** : இது ஒற்றையாகவும், பல்லுறுப்புகளாகவும் அமைந்திருக்கும். இதில் ஒரு வட்டத்தகடு ஒரு தகட்டுப்பாளத்திற்கு நேராக விற்சுருள் மூலம் மடித்து வைக்கப்படுகிறது. இதனால் ஊடிணைப்பி மூலம் விசையை அனுப்பும்போது, உறிஞ்சப்படுவதில்லை. ஊடிணைப்பிக் கால்மிதிகள் மூலம் ஊடிணைப்பிகளை இணைக்கலாம் அல்லது பிரிக்கலாம்.

**disk ruling machine** : *(அச்சு.)* **வட்டத்தகட்டுக் கோடுவரை கருவி**: எஃகுப் பேனாக்களுக்குப் பதிலாக வட்டத்தகடுகள் கொண்டு கோடுகள் வரையும் ஒரு பொறியமைவு.

**disk wheel** : *(தானி.)* **வட்டத் தகட்டுச் சக்கரம்** : இது எஃகுப் பொறிப்பீடுகளாகச் செய்யப்பட்டிருக்கும். சிலவற்றில் பிரித்தெடுக்கக்கூடிய வெளிவளையங்கள் இருக்கும். மற்றவற்றில் சக்கரமும் வெளிவளையமும் ஒரே அலகாக அமைந்திருக்கும். டயரை மாற்றும் போது சக்கரத்தையும் மாற்றி விடுவது வழக்கம்.

**dismantle** : **உறுப்புகளைக் கழற்றுதல்**: துணையுறுப்புகளைப் பிரித்தெடுத்தல்; பூட்டுப் பொருத்துக் கழற்றி.

**dispersion** : *(குழை.)* **சவ்வூடு செல்லாக் கரைசல் நிலை**: பிளாஸ்டிக்கில் சீரான பரப்பீடாகவுள்ள மற்றொரு நேர்த்தியான பொருளின் மிதவல். இது பிசின் துகள் ஊடே கிடக்கும் பால்மம் போன்றது.

**displacement current** : *(மின்.)* **பெயர்ச்சி மின்னோட்டம்** : மின் அழுத்தத்தைத் தாங்கக்கூடிய ஒரு பொருளில் எலெக்ட்ரான்களின் பெயர்ச்சி நேர் மின்னேற்றத்தை நோக்கி நடைபெறுதல்.

**display** : *(தானி.)* **காட்சி** : எண் வட்டுகள், வரைபடங்கள், எண் மானக் குறியீடுகள் மூலமாக எந்திர இயக்கு பொறியில் காட்சியாகக் கிடைக்கும் தகவல்கள்.

**display type**: *(அச்சு.)* **அலங்கார அச்செழுத்து** : அச்சிடப்படும் சில வாசகங்களை முனைப்பாகக் காட்டக்கூடிய அச்செழுத்து வகை.

**dissect** : **அறுவைப் பகுப்பாய்வு** : தாவரத்தின் அல்லது விலங்கின் உடல் உறுப்புகளைக் கூறுகளாக அறுத்துப் பகுப்பாய்வு செய்தல்.

**dissipate** : **சிதறடி** : நச்சு வாயுக்களைச் செலவழிப்பதற்காகச் சிதறடித்தல், கலைத்தல் அல்லது குலைத்தல்.

**dissipation of energy** : *(எந்.)* **ஆற்றல் அழிவு** : சக்தியைப் படிப்படியாக இழத்தல்.

**dissociation**: *(வேதி.)* **சேர்மானச் சிதைவு** : வெப்பத்தின் மூலமாக வேதியியல் வினையை எதிர் மாறாக்குதல். எடுத்துக்காட்டாக அம்மோனியம் குளோரைடைச் சூடாக்கும்போது, அது ஹைட்ரஜன் குளோரைடாகவும் அம்மோனியாவாகவும் சிதைந்து, அந்தக் கூட்டுப் பொருட்கள் ஒருங்கிணைந்து அம்மோனியம் குளோரைடு உண்டாகிறது.

**dissolve** : **கரையச்செய்** : ஒரு பொருளுடன் வேறொரு பொருளைச் சேர்த்து, அதனைத் திட நிலையிலிருந்து திரவ நிலையடையச் செய்தல்.

தொலைக்காட்சியில் ஒலியை அல்லது படத்தைத் தேய்ந்து மறையச் செய்தல்.

**distemper** : **பற்றோவியம்** : உட்சுவர்களில் சுண்ணப் பரப்பின் மீதும் நீற்றுப் பரப்பின் மீதும் முட்டைக் கருவுடன் கஞ்சிப்பசை கலந்து தீட்டப்படும் வண்ண ஓவியமுறை.

**distend** : **விரிவாக்கு**: விரிவாக்குதல்; நீட்டுதல்; பரப்பி விரிவுறச் செய்தல்.

**distillation** : *(வேதி.)* **வாலை வடித்தல்** : சூடேறி ஆவியாகும் இயல்புடைய கலவைக் கூற்றினை ஆவியாகப் போகவிடுதல். இதன் மூலம் அதிக அளவில் ஆவியாகும் பொருளைக் குறைந்த அளவில்

ஆவியாகும் பொருளிலிருந்து பிரித்தெடுக்கலாம்.

**distilled water : வாலை வடித்த நீர்:** வாலை வடித்தல் மூலம் மாசுகள் அனைத்தும் நீக்கப்பட்ட நீர்.

**distortion: உருத்திரிபு:** வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் அலைக்கோட்டங்களால் ஏற்படும் திரிபுகள்.

**distortion :** *(மின்.)* **ஒலித்திரிபு:** வானொலியிலும் தந்தியில்லாக் கம்பியிலும் அலைக்கோட்டங்களால் ஏற்படும் ஒலிக்கோளாறு.

**distribute :** *(அச்சு.)* **சிதைத்துப் பிரித்திடு :** அச்சில் எழுத்துருக்களைச் சிதைத்துத் தனித்தனி அறைகளில் பிரித்திடுதல்.

**distributed load : பரவலாக்கிய பாரம் :** ஒரு மேற்பரப்பில் பாரம் முழுவதும் ஒரே சீராகப் பரவி அழுந்துமாறு செய்தல்.

**distribution :** *(அச்சு.)* **சிதைத்துப் பிரித்திடுதல் :** அச்சில் எழுத்துருக்களைச் சிதைத்து அதனதன் தனித்தனி அறைகளில் பிரித்திடுதல்.

**distribution box :** *(மின்.)* **பங்கீட்டுப் பெட்டி ;** மின்விசைப் பங்கீட்டு மையத்தில் குழாய் அமைப்பாகப் பயன்படுத்தப்படும் ஒரு பெரிய உலோகப் பெட்டி.

**distribution line :** *(மின்.)* **பங்கீட்டுக் கம்பி :** மின்விசையை பங்கீடு செய்யக் கொண்டு செல்லும் மின் கம்பி.

**distribution panel :** *(மின்.)* **பங்கீட்டு விசைப் பலகை:** பிரதான மின்விசை வழங்கீட்டுக் கம்பிகளுடன் இணைக்கப்பட்டுள்ள மின் விசைப் பலகை.

**distributor ;** *(தானி.)* **விசைப் பங்கீட்டுப் பொறி :** உயர் அழுத்த மின்னோட்டத்தைச் சுடர்ப் பொறிச் செருகிகளுக்குக் கொண்டு செல்லும் ஒரு சாதனம்.

**distributor:** *(குளி.பத.)* **பகுப்பான்:** குளிர்பதனப்பெட்டியில் ஆவியாக்கியில் ஒரு போகு பாதைகளுக்கிடையில் திரவம் பாய்வதைப் பகுத்தளிப்பதற்கான ஒரு சாதனம்.

**distributor gear:** *(தானி.)* **பங்கீட்டுப் பல்லிணை;** பங்கீட்டுச்சுழல் தண்டின் கீழ்முனையிலுள்ள ஒரு பல்லிணை. இது பங்கீட்டுச் சுழல் தண்டினை இயக்குகிறது.

**dive:** *(வானூ.)* **தலைகுப்புறப் பாய்தல்:** விமானம் தலைகுப்புறப் பாய்ந்திறங்குதல். இது விசையுடனோ விசையின்றியோ நடைபெறலாம்.

**divergence:** *(வானூ.)* **திசை திரும்புதல்:** விமானத்தில் சமநிலையிலிருந்து பிறழ்ந்து உடல் வேறு திசையில் திரும்புதல்.

**diversity reception :** *(மின்.)* **பன் முக ஏற்பு :** சைகை மங்கல் விளைவினைத் தவிர்ப்பதற்காகப் பல்வேறு ஒலிவாங்கிகளையும், வானலைக் கொடிகளையும் பயன்படுத்துகிறவானொலி ஏற்பமைவு.


**diverter :** *(மின்.)* **திசை திருப்பி :** ஒரு மின்னாக்கியின் களச்சுருள் வரிசைகளுக்குக் குறுக்கே இணைக்கப்பட்டுள்ள மாறுபாடு இணைத் தடை அமைப்பு.

**divide : பகு :** கூறுபடுத்துதல்; இரண்டு அல்லது அவற்றிக்கு மேற்பட்ட பகுதிகளாகப் பகுத்தல்

**dividend :** *(கணி.)* **வகுபடு எண்:** சரிசமமான பகுதிகளாகப் பகுக்கப்பட்ட ஓர் எண் அல்லது அளவு.

**dividers : கவராயம் :** நீளங்களை

அளவிடுவதற்குப் பயன்படும் கவை முள் கருவி.



**dividing head:** *(எந்.)* **பகுப்புச் சாதனம்** *:* ஒரு பொருளின் சுற்றளவை சரிசமமான பாகங்களாகப் பகுப்பதற்குப் பயன்படும் ஓர் எந்திர சாதனம்.

**divisor** *: (கணி.)* **வகுக்கும் எண்:** வகுக்கப்படும் எண்ணில் மீதமின்றி வகுக்கும் எண்.

**D layer** *:* **'D' அடுக்கு** *:* பூமியின் மேற்பரப்பிலிருந்து 30—40 கி.மீ. உயரத்தில் உள்ள குறைந்த அயனியாக்கம் உடைய வாயுமண்டல அடுக்கு.

**doctor** *: (பட்.)* **சீர்படுத்து கருவி** *:* எந்திரக் கருவிகளைச் சீர்படுத்துவதற்கான கருவி. செய்தொழிற் கோளாறுகளை அகற்றும் அமைவு முறை.

**dodger** *: (அச்சு.)* **துண்டு வெளியீடு** *:* வீட்டுக்கு வீடு வழங்குவதற்குரிய சிறிய அச்சிட்ட சுற்றறிக்கை அல்லது துண்டு வெளியீடு.

**doeskin** *:* **மான் தோல்** *:* பக்குவப் படுத்தப்பட்ட பெண்மானின் தோல்.

**dog** *: (எந்.)* **வளையிருப்பாணி** *:* வெட்டு மரங்களை இணைத்துப் பிடிக்கும் பகர வடிவ வளையிருப் பாணி.



**dogtooth:** *(க.க.)* **சித்திர வேலை:** சதுரமோட்டுருவ நுட்பவேலைப்பாடுள்ள நார்மன் கட்டிடக் கலையைச் சார்ந்த சித்திர வேலைப்பாடு.

**dolly** *: (எந்.)* **திருகுப்பிடி** *:* திருகுப் பிடிக்கருவி.

**dolomite:** *(கணி.)* **டோலோமைட்:** சுண்ண வெளிமக் கரியகிகளின் கலப்புடைய பாறை வகை, இதில் மக்னீசியம் அதிக அளவில் அடங்கியிருக்கும். எஃகுத் தொழிலில் இது பயன்படுகிறது.

**domain theory** *: (மின்.)* **ஆள் வரைக் கோட்பாடு** *:* காந்த விசை தொடர்பான ஒரு கோட்பாடு. கோள் நிலை எலெக்ட்ரான்களின் இயக்கத்தினால் மையக் கருவைச் சுற்றி உண்டாகும் அணுவியல் காந்தங்கள், ஒருங்கிணைந்து குழுமங்களாக உருவாகும் வலுவான போக்கு உடையவை என்ற அனுமானத்தின் அடிப்படையில் அமைந்தது இந்தக் கோட்பாடு. இந்தக் குழுமங்கள் "ஆள்வரைகள்" எனப்படும்.

**dome** *: (க.க.)* **கவிகை மாடம்**, கவிகை மாடத் தூபி.

**domed** *: (குழை.)* **கவிகை வடிவான** *:* பிளாஸ்டிக் பொருளின் தட்டையான பகுதியை கவிகையுருவுடையதாகவும் தோன்றச் செய்யும் ஒரு சீரான உருத்திரிபு.

**domestic architecture** *: (க.க.)* **குடியிருப்புக் கட்டிடக்கலை** *:* வீடுகள், தனியார் கட்டிடங்கள் தொடர்பான வடிவமைப்பு திட்டமிடுதல், கட்டுமானம் பற்றிய கலை.

**dominant colour** *: (விண்.)* **முனைப்பு வண்ணம்** *:* முனைப்பாக விஞ்சி நிற்கும் வண்ணம்.

**dongola** *:* **டோங்கோலா** *:* கனிமப் பொருட்களையும் தாவரப் பொருட்களையும் பயன்படுத்திப் பக்குவம் செய்து ஒரு சிறுமரத் தொட்டி போன்ற வடிவில் அமைக்கப்பட்ட கன்றின் தோல், வெள்ளாட்டின் தோல் அல்லது செம்மறியாட்டின் தோல்.

**donkey** *:* **உள் இழைப்பு எந்திரம்:**

உள் இழைப்பு வேலை செய்வதற்கான ஓர் எந்திரம்.

**donkey engine** : *(பொறி.)* **பாரம் இழுப்பு எந்திரம்** : *கப்பலின் மேல் தட்டில் பாரம் இழுப்பதற்கும் ஏற்றுவதற்கும் பயன்படுத்தப் படும் நீராவி எந்திரம்.*

**doorbell**: *(மின்.)* **வாயில்மணி:** *வெளிப்புறம் கைப்பிடி அல்லது விசைக் குமிழின் மூலம் வீட்டிற் குள் அடிக்கக்கூடிய மணி.*

**door check**: *(க.க.)* **கதவுத்தடை:** *கதவு வேகமாகச் சார்த்திக் கொள் வதைத் தடுத்து மெதுவாகச் சார்த் திக் கொள்ளுமாறு செய்யும் அமைவு.*

**door frame**: *(க.க.)* **கதவு நிலை:** *கதவினைத் திறக்கவும் மூடவும் அதனைச் சுற்றி அமைந்துள்ள நிலை.*

**door head**: *(க.க.)* **கதவு நிலை மேல் முகடு:** *கதவு நிலையின் மேற் பகுதி.*

**dope**: *(கம்.)* **வண்ண மெருகு:** *புரி யிழையுடைய குழாய் இணைப்பு களுக்கு மசகிடுவதற்குப் பயன் படும் ஒரு கூட்டுப் பொருள்.*

**dope**: *(வானூ.)* **விமான வண்ண மெருகு:** *விமானப் பூச்சுக்குரிய ஒரு திரவப் பொருள்.*

**doppler**: *(விண்.)* **டோப்ளர், கிறிஸ் டியன் (1803-1853);** *ஆஸ்திரிய இயற்பியலறிஞர்.*

**doppler effect**: *(இயற்.)* **டோப் ளர் விளைவு:** *ஒலி, ஒளி, ராடார் போன்றவற்றின் அலை அதிர்வில் ஏற்படும் மாற்றம். ஆதாரமும், நோக்குபவரும் ஒருவருக்கொருவர் நெருங்கி நகரும்போது இந்த மாற் றம் ஏற்படுகிறது. நோக்குபவரை ஆதாரம் நெருங்கி வரும்போது இந்த அலை அதிர்வு அதிகமா கிறது; விலகிச் செல்லுங்கால் குறைகிறது. இந்தத் தத்துவம். தடம் பற்றிச் செல்வதிலும், மீகா மத்திலும் பயன்படுகிறது.*

**doric frieze**: *(க.க.)* **கிரேக்க ஒப் பனைப் பட்டை:** *கட்டிடத்தில் தூணுக்கு மேலுள்ள தளமட்ட மான அகன்ற பட்டையுள்ள சிற்பம்.*

**doric order**: *(க.க.)* **கிரேக்க கட்டிடபாணி:** *பண்டைய கிரேக்கக் கட்டிடக்கலைப்பாணி.*

**dormer window**: *(க.க.)* **பல கணி:** *சாய் கூரையில் செங்குத்தாக உந்திக் கொண்டிருக்கும் பலகணி.*

**dormitory**: *(க.க.)* **துயிற்கூடம்:** *பல படுக்கைகள் கொண்ட பெரிய துயிற்கூடம். உறங்குவதற்குரிய ஒரு தனிக் கட்டிடத்தையும் குறிக் கும்.*

**dosimeter**: *(இயற்.)* **கதிரியக்க அளவுமானி:** *ஒருவர் பெற்றுள்ள கதிரியக்கத்தின் அளவினை அள விடுவதற்கான ஒரு கருவி.*

**dote**: *(மர.)* **இற்றுப்போதல்:** *பார்க்க: மட்குறு.*

**dot generator** : *(மின்.)* **வெண் புள்ளியாக்கி** : *தொலைக்காட்சித் திசையில் வரிசையான வெண் புள்ளிகளை உண்டாக்கும் ஒரு தொலைக்காட்சி பழுது பார்க்கும் கருவி. வண்ணத் தொலைக்காட்சி யில் குவியத்தைச் சரிசெய்வதற்கு இது பயன்படுகிறது.*

**dot-sequential system** : *(மின்.)* **புள்ளித் தொடர் விளைவு முறை** : *தொலைக்காட்சிப் பட ஒளி-ஒலிக் கூறுகளை ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாகத் தனித்தனியாகப் பிரித்தெடுத்துத் தொலைக்கனுப் பும் முறை.*

**double acting hinge:** *(தச்சு.)* **இருதிசைக்கீல் :** இரு திசைகளில் இயங்குவதற்கான கீல். ஊசலாட்டக் கதவுகளில் இது பயன்படுத்தப் படுகிறது.

**double action press :** *(எந்.)* **இருதிசை இயக்க அச்சு எந்திரம் :** ஒவ்வொரு சுழற்சியின் போதும் இருவகைச் செயற்பாடுகளைச் செய்யக்கூடிய வகையில் அமைந்த அச்சு எந்திரம்.

**double belting : இரட்டை வார்ப் பட்டை :** தோலின் மிகுதியான கனத்துடன் அல்லது இருமடங்கு கனத்துடன் அமைந்த வார்ப் பட்டை.

**double bond:** *(வேதி.)* **இரட்டைப் பிணைப்பு :** எத்திலீன் $H_2C=CH_2$ கரிம வேதியியலில் ஒரே தனிமத்தின் இரு அணுக்களிடையிலான இரட்டைப் பிணைப்பில், ஒரு பிணைப்பு மற்றதைவிட அதிக வலுவுடையதாக இருக்கும்.

**double break switch :** *(மின்.)* **இரட்டை முறிப்பு விசை :** ஒரே சமயத்தில் இரு கம்பிகளில் மின் சுற்றினை உண்டாக்கவும் முறிக்கவும் வல்ல ஒரு விசை.

**double contact lamp :** *(மின்.)* **இரட்டைத் தொடர்பு விளக்கு :** இரு அடிச்சேர் முனைகள் உடைய ஒரு விளக்கு. இதனைக் குதை குழியில் செருகியதும் மின்தொடர்பு ஏற்படும்.

**double cut :** *(பட்.)* **இரட்டை வெட்டு அரம் :** ஒன்றுக்கொன்று 45°—60° கோணத்தில் குறுக்காக வெட்டுகிற இரு பல் வரிசைகளைக் கொண்ட அரம்.

**double demy : இரட்டை வரைபடக் காகிதம்:** *50×76செ.மீ.*அளவுடைய வரைபடத்திற்கான காகிதம்.

**double end bolt :** *(எந்.)* **இரு முனை மரையாணி:** இரு முனைகளிலும் சுரைகளுக்கான வரிப்பள்ளம் உடைய திடமான தலையில்லாத மரையாணி. இதனைத் தண்டு மரையாணி என்றும் கூறுவர்.

**double filament lamp :** *(மின்.)* **ஈரிழை விளக்கு :** இரண்டு இழைகள் உள்ள விளக்கு. ஒரு சமயத்தில் ஒரே இழைமட்டுமே எரியும். இந்த இழைகள் ஒரே அளவுத் தடைகளை உடையனவாக இருக்கலாம்.

**double geared:** *(எந்.)* **இரட்டைப் பல்லிணையுள்ள:** சாதாரணமாகப் பின்புறப் பல்லிணையுள்ள ஒரு கடைசல் எந்திரத்தின் அல்லது துரப்பண எந்திரத்தின் பல்லிணை அமைப்பு.

**douple hung window :** *(க.க.)* **இரட்டைப் பலகணி:** மேலும் கீழும் சறுக்குக் கண்ணாடிச் சட்டப் பலகையுள்ள ஒரு பலகணி.

**double ionization :** *(மின்.)* **இரட்டை அயனியாக்கம் :** வாயு நிரப்பிய இருமுனையத்தில் ஒவ்வொரு வாயு மூலக்கூற்றிலிருந்தும் இரண்டு எலெக்ட்ரான்கள் வெளியேற்றப்பட்டுள்ள நிலை.

**double pitch skylight : இருகவர் மோட்டுப் பலகணி:** இரு திசைகளில் சாய்வாக உள்ள ஒரு மேல்தளச் சாளரம்.


**double point push button :** *(மின்.)* **இரட்டை முனை அழுத்து பொத்தான் :** ஒரே இயக்கத்தில் இரு தனித்தனி மின்சுற்றுகளைச் கட்டுப்படுத்த வல்ல அழுத்து பொத்தான். இதில் ஒரு கொண்டையும் இரு அடித்தொடு நிலைகளும் இருக்கும்.

**double pole :** *(மின்.)* **இரட்டை முனை :** இரட்டை முனை விசை

போன்று இரு தொடர்புகளை அல்லது இணைப்புகளைக் கொண்டிருத்தல்.

**double roll:** *(அச்சு.)* **இரட்டை அச்சுருளை:** ஒவ்வொரு அச்சுப்பதிவினையும் இருமுறை மையொற்றி அழுத்தும் உருளை.

**double riveting:** **இரட்டைக்குடையாணி:** தண்டவாளம் - கம்பம் முதலியவற்றில் இரு விளிம்புகளையும் பருமனில் பாதியாக்கி இணைத்துப் பொருத்தும் முறையில் இரு வரிகள் அல்லது முனைகளைப் பொருத்தும் முறையில் நான்கு வரிகள் இரட்டைக் குடையாணி இணைப்பானது, இரு இணையான குடையாணி வரிசைகள் மூலம் ஏற்படுத்தப்படுகிறது.



இரட்டைக் குடையாணி

**double row radial engine:** *(வானூ.)* **இரட்டை ஆரை எஞ்சின்:** ஒரு பொதுவான திருகு சுழல் தண்டினைச் சுற்றி ஆரைகளைப்போல் அமைக்கப்பட்டுள்ள இருவரிசை நீள் உருளைகளைக் கொண்ட ஓர் எஞ்சின் முன்னும் பின்னுமாக உள்ள நேரிணை நீர் உருளைகள் வரியிணைக் கொண்டிருக்கவோ, கொண்டிராமலோ இருக்கலாம்.

**double seaming machine:** **இரட்டை வெட்டுவாய் இணைப்பு எந்திரம்:** கப்பலின் உடலில் வெட்டு வாய் இணைக்கப்பட்ட பின்பு எஞ்சியிருக்கும் விளிம்புகளைச் சமனப்படுத்துவதற்கான எந்திரம்.

**double threaded screw:** *(எந்.)* **ஈரிழைத் திருகு:** இரு தனித்தனி திருகு சுழல்களுடைய ஒரு திருகு. இந்தத் திருகு சுழல்கள் உடற்பகுதியைச் சுற்றி ஒன்றுக்கொன்று இணையாகச் சுழன்றிருக்கும். இது செலுத்து வேகத்தை அதிகரிக்க உதவுகிறது.

**double throw switch:** *(மின்.)* **இருவழி விசை:** இருவேறு திசைகளில் திருப்பக்கூடிய ஒரு மின் விசை. இது ஒரு மின்சுற்றினை இருவேறு மின்சுற்றுகளுடன் வெவ்வேறு சமயத்தில் இணைக்கிறது.

**douse:** **திரவத் தோய்வு:** உலோகத்தைக் கெட்டியாக்கும் போது சூடாக்கிய உலோகத் துண்டினைக் குளிர்விப்பது போன்று ஒரு திரவத்தில் நன்கு தோய்த்தல்.

**douzieme:** **டூசியெம்:** கடிகாரம் தயாரிப்பவர்கள் பயன்படுத்தும் ஓர் அளவீட்டு அலகு. இதன் அளவு. .0188செ.மீ.

**dovetail:** *(மர.வே.)* **பொருத்திணைப்பு:** ஒன்றை ஒன்றுடன் பொருத்தி இறுக்கிப் பிணைக்கும் இணைப்பு. இதில் புறாவின் வால் போன்று வடிவுடைய ஒரு பொருத்து முளை அதேபோன்று வடிவுடைய துளைப் பொருத்துச் சட்டத்துடன் பொருந்தி இணைகிறது.

**dovetail cutter:** *(மர.வே.)* **பொருத்திணைப்பு வெட்டு கருவி:** பொருத்திணைப்பின் உள்முகங்களையும், வெளிமுகங்களையும் வெட்டுவதற்குப்பயன்படும் கருவி. இதன் உதவியால் விளிம்புகளை வசதியாகச் சமனப்படுத்தலாம்.

**dovetail dado:** *(மர.வே.)* **பொருத்திணைப்புச் சால்வரி:** திறப்பு முகத்தைவிட அடிப்புறம் அகலமாக இருக்குமாறு அட்டையின் குறுக்கே வெட்டப்படும் வரிப்பள்ளம். இந்த வடிவமைப்பு, அட்டையின் முகத்திற்குச் செங்குத்

தாக இழுப்பு விசை ஏற்படு வதைத் தடுக்கிறது.

**dovetail halved joint:** *(மர.வே.)* **அரைப் பொருத்திணைப்பு** இந்த அரைப் பொருத்திணைப்பில் இரு வெட்டுவாய்களும் புறாவின் வால் போன்று பாதத்தில் குறுகியிருக்கும்.

**dovetailing: பொருத்திணைத்தல்:** (1) பொருத்திணைப்புகள் மூலம் இறுக்கிப் பிணைத்தல்.

(2) அச்சுக் கலையில் ஈய அச்சு வரிக்கட்டைகளை இரட்டிப்பாக்குதல். இதில் பிளவு இணைப்புகள் ஒன்றின் மேல் ஒன்று பொருந்துமாறு அமைக்கப்பட்டிருக்கும்.

**dovetail saw:** *(மர.வே.)* **பொருத்**



பொருத்திணைப்பு ரம்பம்

**திணைப்பு ரம்பம்**; இது தடித்த புறமுடைய ரம்பம் போன்றது; ஆனால் அதைவிடச் சிறியது. இதில் பற்களும் நுண்ணியதாக இருக்கும். கைப்பிடியும் வேறு வடிவில் அமைந்திருக்கும்.

**dowel: இணைப்பாணி:** மரத் துண்டுகள் கற்கள் முதலியவற்றைப் பொருத்துவதற்கான மரம் அல்லது உலோகத்தாலான தலைப்பில்லாத ஆணி.

**doweling: இணைப்பாணி இணைப்பு:** இணைப்பாணிகளின் உதவியினால் இணைப்புகளை ஏற்படுத்துதல்.

**dowel pin:** *(மர.வே.)* **இணைப் பூசி:** உள்ளீடற்ற பெட்டியின் இரு பகுதிகளை இணைப்பதற்கு அல்லது கெட்டிப்படுத்தும்போது தோரணியின் பகுதிகளை இணைப்பதற்குப் பயன்படும் அல்லது உலோகத்தாலான ஊசி.

**dowel screw: இணைப்பாணித் திருகு**; இருமுனைகளில் திருகிழை அமைக்கப்பட்ட மரத்தாலான திருகு.

**downdraft carpuretor.** *(தானி.)* **கீழ்வழி எரி-வளி கலப்பி:** காற்று மேற்பகுதி வழியே உட்புகுந்து கீழ் நோக்கிச்சென்றுதெளிப்பான் நுனியை அடையும் அமைப்புடைய ஓர் எரி-வளி கலப்பி.

**down spout:** *(க.க.)* **கீழ்நோக்கிய கெண்டி வாய்க்குழாய்:** கூரையிலிருந்து தரைக்கு அல்லது சாக்கடைக் குழாய்க்கு மழை நீரைக் கொண்டு செல்வதற்கான ஒரு குழாய் அல்லது குழாய்க் கால்வாய்.

**downwash:** *(வானூ.)* **கோட்டக் கோணம்:** விமானத்தை உயர்த்தும் மேற்பரப்புகள் காற்றோட்டத்திலிருந்து கோட்டமுறும் கோணம்.

**drachm: திராம்:** மருந்துத் திரவங்களை அளவிடப் பயன்படும் 'அவுன்ஸ்' என்னும் எடுத்தலளவை வீசக்கூறு.

**draft:** *(வார்.)* **வாரிழைப் பட்டை:** ஒரு தோரணியை மணலிலிருந்து எளிதாக அகற்றுவதற்கு உதவுகிற அத்தோரணியிலுள்ள வாரிழைப் பட்டை.

**drafting: வரைதல்:** முன் வடிவ வரையும் கலை.

**draftsman: வரைவாளர்:** உரு வரைப்படங்களை வரைபவர்.

**draftsmans' scale: வரைவாளர் அளவுக்கோல்:** உருவரைப்படங்களை வரைபவர்கள் பயன்படுத்தும் முக்கோண வடிவ அல்லது தட்டையான அளவுகோல். இதன் ஒரு விளிம்பு $1\frac{1}{2}$, $\frac{1}{8}$, $\frac{1}{4}$, $\frac{1}{2}$ முதலிய அளவுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இன்னொரு விளிம்பு பின்ன

அளவுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

**dragft stop on fire stop:** *(க.க.)* **இழுவை நிறுத்தம் அல்லது நெருப்பு நிறுத்தம்** *: கட்டிடத்தின் குறுக்கே எரிதழல் பாதையினைத் தடுப்பதற்காக விமானப்பாதையில் அமைக்கப்பட்டுள்ள தடுப்புகள்.*

**drag** *: (வானூ.)* **இழுவை விசை** *:* இயங்கும் ஒரு பொருளின் மீது அதன் இயக்கத் திசைக்கு இணையாக ஒரு திரவத்தின் வழிச் செயற்படும் ஒரு பின்னோக்கிய விசை. இது அந்தப் பொருளின்மீது செயற்படும் மொத்தத் திரவ விசையின் ஒரு கூறாக இருக்கும்.

**drag link** *: (தானி.)* **இழுவை இணைப்பு :** இடது இயக்கக் கைபிடிக்கரத்தினை இயக்குக் கருவிக் கரத்துடன் இணைக்கும் ஒரு கோல். இந்தக் கரங்களின் குண்டு முனைகளை இயக்குவதற்காக இரு முனைகளிலும் இரு கிண்ணங்களும் ஒரு விற்சுருளும் இருக்கும்.

**dragon's blood** *: (வண்.)* **குங்கிலியம் :** சயாமில் வளரும் ஒருபனை வகையிலிருந்து பெறப்படும் ஒரு பிசின் பொருள். மணமற்றது; சுவையற்றது; நீரில் கரையாதது; ஆல்ககாலிலும் ஈதரிலும் கரையக் கூடியது. சிவப்புத் திரவ வடிவில் உள்ளது. வண்ணச் சாயங்கள் தயாரிப்பதிலும், ஒளிச்செதுக்கு முறையிலும் பயன்படுகிறது.

**drag rope :** *(வானூ.)* **இழுவை வடம் :** ஒரு பலூனின் மேற்பகுதியிலுள்ள நீண்ட வடம். இது ஒரு தடையாகவும், இறங்கும்போது மாறுகிற பாரமாகவும் பயன்படுகிறது.

**drain : வடிகால்** *:* சாக்கடை நீர் அல்லது மற்றக் கழிவுத் திரவங்கள் வெளியேறுவதற்கான ஒரு குழாய்.

**drainage : வடிகால் அமைப்பு** *:* சாக்கடையை அப்புறப்படுத்துவதற்கு அமைக்கப்படும் வடிகால்களின் அமைப்பு.

**drain cock :** (கம்,) **வடிகால் குழாய் முனை :** சாக்கடை வடிவதற்கு அனுமதிப்பதற்காக குழாய்த் தொடர்பின் கீழ் முனையில் பொருத்தப்பட்டுள்ள ஒரு சிறிய ஓரதர்.

**drain tile** *:* **வடிதாரை ஓடு** *:* ஈரப் பகுதிகளிலிருந்து நீரை வெளியேற்றுவதற்காகப் பயன்படும் வடிதாரை ஓடு.

**dram : திராம் :** ஓர் அவுன்சின் *1/16* பகுதி.

**draw :** *(1)* **வரைதீட்டு***:* வரிகளினால் வரைதீட்டுதல்.

*(2)* **நெகிழ்விப்பு** *:* எஃகினை மிக அதிகமான முடுக்கத்திலிருந்து தேவையான அளவுக்கு நெகிழ்வித்தல்.

*(3)* **இழுத்தல்***:* கம்பியினை இழுத்து மெல்லியதாக்குதல்.

**draw bar** *:* **இழுவைச் சலாகை :** உந்து வண்டியில் இழுத்துச் செல்லப் பயன்படும் ஒரு சலாகை. இதன் இரு முனைகளிலும் கண் இருக்கும். இதே நோக்கத்திற்குப் பயன்படும் பிற சாதனங்களையும் குறிக்கும்.

**draw bolt** *:* **இழுவை மரையாணி** *:* கதவுகளை பிணைப்பதற்குப் பயன்படும் மரையாணி.

**draw chisel** *: (எந்.)* **இழுவை சிற்றுளி** *:* ஒரு கூர்மையான சிற்றுளி. துவாரமிடுகையில் மையத்தை மாற்றியமைக்கப் பயன்படுகிறது.

**draw chuck** *:* **இழுவை ஏந்தமைவு***:* சிறிய துல்லியமான வேலைப்பாடுகளுக்குப் பயன்படுகிறது. இது ஒரு தேய்ந்து செல்கிற தாங்கியில், நீளவாக்கில் இயங்குகிறது.

**draw cut shaper :** *(எந்.)* **இழுவை வெட்டு வடிவாக்கி:** *தட்டுதல் மூலம் அல்லாமல் இழுத்தல் மூலம் வடிவுகளை வெட்டுவதற்குப் பயன்படும் ஒரு சாதனம்.*

**drawing back :** *(உலோ.)* **மறு சூடாக்கம் :** *எஃகின் கடினத் தன்மையை மாற்றுவதற்காக, எஃகு கெட்டியான பின்பு, முட்டுபதன் வெப்ப நிலைக்குக் குறைந்த ஒரு வெப்ப நிலைக்குக் மீண்டும் சூடாக்குதல்.*

**drawing board :** **படம் வரை சட்டம் :** *படம் வரைவதற்குத் தாளைப் பரப்பிக் குத்திவைப்பதற்கான பலகைச் சட்டம். இது வெண் தேவதாரு, எலுமிச்சை, நெட்டிலிங்கம் ஆகிய மரங்களிலிருந்து செய்யப்படுகிறது.*

**drawing die :** *(உலோ.வே.)* **வரை படிவ அச்சு :** *உலோகத் தகட்டினை கிண்ண வடிவுகளில் அழுத்தித் தயாரிப்பதற்கு விசை அழுத்திகளில் பயன்படுத்தப்படும் பொறிப்புக் கட்டை அல்லது படிவ அச்சு.*

**drawing in :** **நூலிழைத்தல் :** *வார்ப்பு இழைகளைத் தறியின் பாவு வழியாக நூலிழைத்தல்.*

**drawing of pattern :** *(வார்.)* **தோரணி இழுப்பு :** *வார்ப்பு மணலிலிருந்து ஒரு தோரணியை வெளியில் எடுத்தல்.*


**drawing of temper** *எஃகினை செம்பதமாகச் சூடாக்கி, அதனை மெல்ல மெல்ல குளிர்வித்தல். இது கெட்டியாக்கும் அல்லது உறுதியூட்டும் முறைக்கு எதிர்மாறானது.*

**drawing out :** **நீட்டுதல் :** *உலோகத்தைச் சூடாக்கி சம்மட்டி கொண்டு அடித்து நீட்டுதல். இதனால் பரப்பளவு வீத அளவுப்படி குறையும்.*

**drawing paper :** **படம் வரைதாள் :** *பென்சில், வண்ணக்கோல், பேனா மை இவற்றால் படம் வரைவதற்கு ஏற்ற தாள்.*

**drawing pen :** **படம் வரை பேனா:** *வரைவாளர்கள் பயன்படுத்தும் வரை பேனா.*

**draw knife :** **வரைவுக் கத்தி:** *இரு கை பிடிகள் உடைய மரம் வெட்டும் கருவி. இது குறுகலான நீண்ட கத்தி முனையை உடையது. இரு கைபிடிகளும் கத்திக்குச் செங் கோணத்தில் அமைந்திருக்கும்.*



வரைவுக் கத்தி

**draw plate :** *(வார்.)* **தோரணி இழுவைத் தட்டம் :** *ஒரு தோரணியில் வைக்கப்பட்டுள்ள திருகிழைத் துவாரமுள்ள ஒரு தட்டம். இதன் துவாரத்தில் செருகப்படும் மணலிலிருந்து தோரணியை அகற்றுவதற்கு உதவுகிறது.*

**draw screw :** *(வார்.)* **இழுப்புத் திருகு :** *திருகிழைகள் கொண்ட ஒரு சலாகை. இதன் ஒரு முனையில் தோரணியில் தட்டத்தை இழுப்பதற்கான திருகிழையிட்ட துவாரம் இருக்கும்.*

**draw sheet :** *(அச்சு.)* **சமனத் தகடு :** *அச்சுத் தகட்டுப்பாளத்தின் மீதான சமனத் தகட்டின் மேற்படலம். இதனுடன் இயக்கு தண்டுகளும், தடுப்புக் காப்புகளும் இணைக்கப்பட்டிருக்கும்.*

**draw spike :** *(மர.வே.)* **இழுவைச் சலாகை :** *வார்ப்பு மணலிலிருந்து ஒரு தோரணியை இழுத்தெடுப்பதற்குப் பயன்படும் ஒரு கூர்மையான உலோகச் சலாகை.*

**dredge:** **தூர்வாரி :** *நீரோடையின் படுகையிலிருந்து சேற்றினை அல்லது மணலைத் தூரெடுத்து அகற்றுவதற்குப் பயன்படும் எந்திரம்.*

**dress** : (எந்.) **செப்பனிடல்** : ஒரு கருவியைச் சாணைபிடித்து அதன் மூல வடிவத்திற்குச் செப்பனிடுதல்.

**dresser**: (கம்.) **செப்பனிடு கருவி**: உலோகக் குழாய்களையும் தகடு களையும் சீர்மை செய்வதற்கு அல் லது நேராக்குவதற்குப் பயன்படும் எந்திரம்.

**dressing**: **மெருகுப் பொருள்**: துணி களுக்கு மெருகேற்றுவதற்குப் பயன்படும் பொருள்;

**drier** : (வண்.) **உலர்த்து பொருள் கள்** : வண்ணங்களை உலர்த்து வதற்குப் பயன்படும் பல்வேறு பொருள்களான ஈயம், மாங்கனீஸ் ஆகியவற்றின் உப்புகளும், ஆக் சைடுகளும் இவற்றுள் சில.

**drift** : (வானூ.) **காற்று விசை யியக்க அழுத்தம்**: விமானத்தின் வெளிப்புறங்களில் செயற்படும் விசை யியக்க அழுத்தம்.



காற்று விசை யியக்க அழுத்தம்

**drift angle** : (வானூ.) **திசைமாறு கோணம்** : ஒரு விமானத்தின் நீள் வாக்கு அச்சுக்கும், தரைக்கு மேல் அதன் பாதைக்குமிடையிலான கிடைமட்டக் கோணம்.

**drift bar**: (வானூ.) **திசைமாற்றக் கோல்** : விமானத்தின் அச்சுக்கும் அதன் இயக்கத் திசைக்குமிடையி லான மாற்றத்தைக் காட்டும் திசை மாற்ற மானியின் ஒரு பகுதி. இதில் இந்த இயக்கத் திசையை யொட்டி அமைத்திடத்தக்க ஒரு கம்பி அல்லது புயம் அமைந்திருக் கும்.

**drift meter** : (வானூ.) **திசை மாற்று மானி** : ஒரு விமானத்தின் நீள்வாக்கு அச்சுக்கும் தரைக்கு மேல் அதன் பாதைக்குமிடையி லான கிடைமட்டக் கோணம்.

**drift pin** : (எந்.) **குடையாணி முனை** : குடையாணித் துவாரங் கள் ஒழுங்கு வரிசையில் இல்லாத போது அவற்றில் செலுத்தப்படும் ஒரு வட்டவடிவக் கூம்பு முனை. பல சமயங்களில் குடையாணியைப் பொருத்துவதற்கு அனுமதிக்கும் அளவுக்கு இந்தத் துவாரங்கள் திருத்தியமைக்கப்படும்.

**drift plug** : (கம்.) **நீட்சி ஆப்பு** : இடைமுறுக்கினை நீக்குவதற்காக ஓர் ஈயக் குழாயினுள் செலுத்தப் படும் ஒரு மரஆப்பு.

**drift punch** : (எந்.) **இணைப் பாணி** : குடையாணி அல்லது மரையாணித் துவாரங்களை அண் டைப்பகுதிகளுடன் இணைப்பதற் குப் பயன்படும் ஒரு கருவி.

**drill** : (எந்.) **துரப்பணம்**; கல் லிலோ, உலோகத்திலோ, பற்களி லோ பிற திண்ணிய பொருள்களி லோ துளையிடுவதற்கான ஒரு கருவி.

**drill bushings**: (எந்.) **துரப்பணச் செருகிகள்** : துவாரங்களைச் சரி யான இடத்தில் நிலைப்படுத்த உதவும் இடுக்கிகள், பொருத்திகள் ஆகியவற்றின் நுழைவாயில் பொருத்துவதற்கான கடினமான எஃகுச் செருகிகள்.

**drill chuck** : (எந்.) **துரப்பண ஏந்தமைவு**: துரப்பணங்களை ஏந்தி வாகாகப் பிடித்துக் கொள்ள வல்ல அமைவு.



துரப்பண ஏந்தமைவு

**drilled hole**: **துரப்பணத் துவாரம்**: துரப்பணத்தால் துளையிடப் பட்ட துவாரம்.

**drill gauge** : *(எந்.)* **துரப்பண அளவி** : ஒரு துரப்பணத்தின் வடிவளவினை எளிதாகத் தீர்மானிக்க உதவக்கூடியவாறு முறையாகக் குறியிடப்பட்ட வெவ்வேறு வடிவுகளில் துவாரங்களையுடைய ஒரு தட்டையான எஃகுத் தகடு.

**drill grinding gaug** : *(எந்.)* **துரப்பண அரைவை அளவி** : துரப்பணத்தின் வெட்டு இதழ்களின் நீளத்தையும் கோணத்தையும் அளவிடப் பயன்படும் கருவி.

**drilling jig** : *(எந்.)* **துரப்பண இடுக்கி** : துவாரங்களைத் துல்லியமாகத் துரப்பணம் செய்வதற்கு உதவும் வகையில் வார்ப்பிரும்பினால் துல்லியமாக வார்க்கப்பட்ட ஒரு சாதனம்.

**drill motor**: *(மர.வே.)* **துரப்பண மின்னோடி** : துரப்பண வேலைகளுக்கும், கருவிகளுக்கு மெருகேற்றுவதற்கும் பயன்படும் கையால் இயக்கப்படும் சிறிய மின்னோடி.

**drill press** : *(எந்.)* **துரப்பணத் துளைப் பொறி** : உலோகத்தில் துவாரங்களைத் துரப்பணம் செய்வதற்குப் பயன்படும் பல் வினையுள்ள தானியங்கிச் சாதனம்.

**drill press vise** : *(எந்.)* **துரப்பணத் துளைக் குறடு** : துரப்பணம் செய்யப்படும் உறுப்புகளைப் பற்றிப் பிடித்துக்கொள்வதற்கு ஒரு துரப்பணத் துளைப்பொறி மேசையில் பயன்படுத்தப்படும் ஒரு தனிவகைக் குறடு.

**drill rod** : *(எந்.)* **துரப்பணச் சலாகை** : 90 முதல் 100 அலகுடைய கார்பன் ஆதாரத்துடன் .0013செ.மீ. வரையில் அளவுடைய மெருகேற்றிய எஃகுச் சாதனம்.

**drill socket** : *(எந்.)* **துரப்பணக் குழி** : ஒரு துரப்பணத்தின் கூம்புத் தண்டினை ஏற்றுக் கொள்ளும் குழி.



துரப்பணக் குழி

**drill spindle** : *(எந்.)* **துரப்பணக் கதிர்ச் சலாகை** : ஒரு துரப்பண எந்திரத்தின் செங்குத்தான கதிர்ச் சலாகை. இது துரப்பணத்தை ஏந்திக் கொண்டு சுழல்கிறது. இதன் செங்குத்தான இயக்கத்தின் வழியே ஊட்டமைவு இயங்குகிறது.

**drill vise** : *(எந்.)* **துரப்பணக் குறடு** : துரப்பணம் செய்ய வேண்டிய பொருளைப் பற்றிப் பிடித்துக் கொள்வதற்காக ஒரு துரப்பணத் துளைப்பொறிமேசையில் பயன்படுத்தப்படும்ஒரு குறடு.

**drip line** : *(எந்.பொறி.)* **கசிவுக் குழாய்** : ஒரு சூடாக்கும் அமைப்பு முறையில், வெப்பம் பரவுவதன் மூலம் ஏற்படும் செறிமானத்தினால் நீர்மம் மீண்டும் கொதிகலனில்பாய்வதற்கானகுழாய்கள்.

**drip mould** *(க.க.)* **கசிவு வார்ப்புபடம்** : ஒரு சுவரின் முகப்பின் வழியே மழைநீர் கசியாமல் தடுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு வார்ப்படம்.

**drip stone** : *(க.க.)* **கசிவுக்கல்** : மழை நீரைச் சன்னலுக்கு அப்பால் விழச் செய்யப் பயன்படுத்தப்படும் ஒரு மேற் கட்டமைவு. இதனைப் ''படிமுகக்கல்'' என்றும் கூறுவர்.

**drive chain** : *(தானி.)* **இயக்குச் சங்கிலி**: எந்திரத்தின் பிற உறுப்புகளை இயங்கவைக்கும் சக்கரங்களுக்கு விசையினை வழங்கப் பயன்படும் ஒரு கனமான உருள் சங்கிலி.

**driven** : *(எந்.)* **இயக்குவித்தல்** : ஓர் இயக்கியினால் இயக்கப்படும் சக்கரம், சக்கரங்கள் அல்லது கப்பிகள்.

**drive pinion :** *(தானி.)* **இயக்கு விசை நுனி :** ஒரே இயக்கத்தை இருவேறு இயக்கமாகப் பிரிந்தியக்குவிக்கும் இணைப்பமைவுடன் இணைக்கப்பட்டுள்ள சரிவுப் பல்லிணை.

**drive :** *(எந்.)* **நேர்முக இயக்கச் சக்கரம் :** இயக்கிக்கு நேர்முகமாக விசையைச் செலுத்தும் சக்கரம் அல்லது கப்பிகள்.

**drive punch : இயக்கத் தமருசி :** சம்மட்டியால் அடித்து இயக்கப்படும் எஃகுத் தமருசி, இது கப்பற்பாய் முதலியவற்றில் நுண்துளைகளிடுவதற்குப் பயன்படுகிறது.

**drive screw or screw nail : இயக்குத்திருகு அல்லது திருகாணி:** சம்மட்டியால் அடித்துப்பொருத்தப்படும் ஒரு வகைத் திருகு.



திருகாணி

இதனை ஒரு மரையாணி முடுக்கியினால் கழற்றிவிடலாம்.

**drive shaft :** *(தானி.)* **இயக்கு சுழல் தண்டு :** இணைப்புகள் மூலம் சக்கரங்களுடன் விசை ஊடிணைப்பியை இணைக்கின்ற சுழல் தண்டு.

**driven pulley:** *(உலோ.)* **இயக்கு கம்பி :** இயக்கு கப்பியிலிருந்து விசையினைப் பெறுகிற கப்பி.

**driving mechanism :** *(பட்.வே.)* **இயக்குப் பொறியமைவு :** இயக்கத்தைப் பரப்பீடு செய்வதற்குப் பயன்படும் சக்கரங்கள், கப்பிகள், இணைப்பு வார்கள், நெம்புகோல்கள் முதலிய தொகுப்பமைவுகள்.

**drone :** *(வானூ.)* **ஆளியக்கா விமானம் :** விமானம் ஓட்டி இன்றி இயக்கப்படும் விமானம். இது சேய்மையிலிருந்து அல்லது தானியக்க முறையில் இயக்கப்படுகிறது. இது பெரும்பாலும் ராணுவத் இதில்இல்க்குகளைக்குறிபார்த்துத் தாக்கும் பயிற்சிகளிலும், எதிரிகளின் இலக்குகளைத் தாக்கி அழிப்பதிலும் பயன்படுத்தப்படுகிறது.

**dorp : தொங்கல் மணி :** பதக்கம் போன்ற தொங்கல் அணிகலன்.

**dorp elbow :** *(கம்.)* **தொங்கு இயக்க முனை :** கட்டிடத்தில் எரிவாயு பயன்படுத்தப்படும் இடத்தில் பயன்படுத்தப்படும் ஒரு சிறு கை முட்டுமுனை. இரு இருபுறங்களிலும் சுவரில், முகட்டில் அல்லது சட்டகங்களில் பொருத்துவதற்கு ஏற்ப இறகுகளைக் கொண்டிருக்கும்.

**drop ell :** *(கம்.)* **தொங்கு முனை:** பக்கங்களில் பொருத்து முனைகள் கொண்ட ஒரு முட்டு முனை. இதனை ஓர் ஆதாரத்துடன் இணைத்து விடலாம்.

**drop-feed oiler :** *(எந்.)* **மசகு கிண்ணி :** மசகு எண்ணெய் ஊற்றி வைக்கப்படும் கிண்ணி.

**drop front : சாய்வுமுகப்பு :** முன்புறமாகச் சாய்ந்துள்ள மேசை.

**drop hammer :** *(பொறி.)* **விழு சம்மட்டி :** காய்ச்சி வடித்து வார்ப்படம் உருவாக்கப் பயன்படும் ஒரு கனமான சம்மட்டி.

**drop handle : தொங்கு கைபிடி :** பதக்கம் போல் தொங்கும் பல்வேறு வடிவிலுள்ள கைபிடிகள்.

**drop hanger :** *(எந்.)* **தூக்குச் சங்கிலி :** ஒரு முகட்டுடன் அல்லது ஒரு தூலத்தின் உட்பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள ஊடிணைப்பு ஆதாரம்,

**drop ornament: தொங்கு ஆடை:** தூசாடை போன்ற ஓர் உடுப்பு. ஆனால், சட்டத்தின் முழு அகலத்தையும் போர்த்தியிருக்காது.

**dropout :** *(வார்.)* **வார்ப்புச் சிதறல் :** வார்ப்படத்தை மூடும் போது மண் தளர்ச்சியுற்றுச் சிதறு தல்.

**drop siding :** *(க.க.)* **சாளரப் பலகை :** கட்டிடங்களின் புறப் பரப்பின் மீது பயன்படுத்தப்படும் ஒருவகை சாளரப் பலகை.

**drop tee :** *(கம்.)* **டிராம் டீ :** தொங்கு இயக்கு முனையைப் போலவே இறகுகளைக் கொண்ட ஒரு சிறிய முகட்டு முனை.

**drop window :** *(க.க.)* **இறக்கு பலகணி :** தள்ளு வண்டிகளில் உள்ளது போன்று பலகணிப் படிக் கல்லுக்குக் கீழுள்ள ஒரு குழியி னுள் இறக்கக் கூடிய ஒரு பலகணி

**dross :** *(வார்.)* **கசடு :** உருக்கிய உலோகங்களின் மேற்பரப்பில் மிதக்கும் பொடுகுகள், ஆக்சைடு கள் போன்ற கழிவுப் பொருள் கள்.

**drum :** *(பட்.வே.)* **: வட்டுருளை :** ஒரு சுழல் தண்டின் மீது ஏற்றப் பட்டிருக்கும் உட்புழையுள்ள நீள் உருளை. விசையினை வார்ப்பட் டைகள் அல்லது கம்பி வடங்கள் மூலம் கொண்டு செல்வதற்குப் பயன்படுகிறது.

**drum armature :** *(மின்.)* **உருளை மின்னகம் :** இயங்கும் மின் னகங்கொண்ட ஒரு நேர் மின் னாக்கி. இதில் கம்பிச் சுருள்கள் நீளவாக்கில் அல்லது அதன் அச்சுக்கு இணையாகச் சுற்றப்பட் டிருக்கும்.

**drum switch :** *(மின்.)* **சுழல் விசை :** நீள் உருளை வடிவிலான சுழலும் விசை.

**drum winding :** *(மின்.)* **சுழல் சுருணை :** மின்னாக்கியின் மின்ன கத்தில் சுருணை செய்யும் ஒரு முறை. இதில், மின் கடத்திகள் மின்னகத்தின் மேற்பரப்பின் அருகே இயைவடுப்பள்ளங்களில் அமைந்திருக்கும்.

**dry air:** *(குளி.பத.)* **வறள் காற்று:** நீராவி இல்லாத வெறுங் காற்று.

**dry battery :** *(மின்.)* **பசை மின் கலத் தொகுதி:** உலர்ந்த வேதி மின் கலத் தொகுதியினைக் கொண்ட ஒரு மின்கல அடுக்கு. இச்சொல் சில சமயம் ஒற்றை உலர் மின்கலத் தைக் குறிக்க தவறுதலாகப் பயன் படுத்தப்படுகிறது.

**dry cell :** *(மின்.)* **பசை மின்கலம்:** திரவ மின் பகுப்பான் பயன்படுத் தப்படாத ஓர் அடிப்படை மின் கலம். இதில் திரவம் இல்லாதிருப் பதால் இதனை எந்த நிலையிலும் பயன்படுத்தலாம்.

**dry disk clutch :** *(தானி.)* **உலர் வட்டு ஊடிணைப்பி:** இதில் இயக்கு வட்டுகள் இரு புறங்களிலும் ஓர் உராய்வுப் பொருளால் மூடப்பட் டிருக்கும். எஞ்சினின் சமனுருள் சக்கரத்துடன் பொருத்தப்பட்டி ருக்கும் ஊடிணைப்பி வளையத்தி லுள்ள விசைகள் மூலம் இவை இயக்கப்படுகின்றன. இதில் ஊடி ணைப்பி முகப்புகளில் எண்ணை யோ பசையோ படக் கூடாது என் பதால் "உலர்" என்னும் அடை மொழி சேர்க்கப்பட்டுள்ளது.

**dry friction :** *(தானி.)* **வறள்: உராய்வு :** மசகிடப்படாத வறண்ட மேற்பரப்புகளுக்கிடையி லான இயக்கத்திற்கு ஏற்படும் தடை.

**dry fuel rocket :** *(விண்.)* **உலர் எரிபொருள் ராக்கெட்டு :** விரை வாக எரியும் தூள் கலவையைப் பயன்படுத்தும் ஒரு ராக்கெட்டு.

**dry grinding :** **உலர் மாவரைத் தல் :** நீர் அல்லது பிற குளிர் திரவ மின்றி மாவரைத்தல்.

**dry ice** : *(குளிர். பத.)* **உலர் பனிக்கட்டி** : குளிர்பதன முறையிலும், பொறியாண்மையிலும் பனிக்கட்டிக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் திட கார்பன்டையாக்சைடு.

**dry indicator** : *(ஒளி.)* **உலர் வளவி**: ஈரப்பதனைக் கண்டறிந்து காட்டும் ஒரு தூள். இதில் குருணை வடிவச் சர்க்கரையின் 10 பகுதிகள், மெத்தில் கலவையின் $\frac{1}{10}$ பகுதியுடன் கலக்கப்பட்டிருக்கும்.

**dry kiln** : *(மர.)* **உலர் உலை** : மரத்தை விரைவாகப் பதப்படுத்தப் பயன்படும் ஒரு சூளை.

**dry measure** : **முகத்தலளவை** : கூலம் முதலிய பண்டங்களை அளப்பதற்கான முகத்தலளவை முறை.

| | | |
|---|---|---|
| 2 பிண்ட் | = | 1 குவார்ட் |
| 8 குவார்ட் | = | 1 பெக் |
| 4 பெக் | = | 1 புஷல் |
| 105 குவார்ட் | = | 1 பேரல் |

**dry rot** : **உளுப்பு** : காளான் வகைகளினால் வெட்டு மரத்திற்குப் புறந்தோன்றாமல் உள்ளீடாகச் சிதைவு ஏற்படுத்தும் நோய் வகை.

**dry rubble** : **உலர் கட்டுமானக் கல்** : சுவரில் காரையின்றி கொத்தாத கட்டுமானக் கற்களை அடுக்கி வைத்தல்.

**dry run**: **வெற்று ஒத்திகை**: ஒளிப்படக் கருவிகள் அல்லது பிற சாதனங்கள் இன்றி நடைபெறும் ஒத்திகை.

**dry sand** : *(வார்.)* **உலர் மணல்** : மணற் கலவைகள், இது உலர்ந்தவுடன் உருகிய உலோகத்தினால் ஏற்படும் அழுத்தத்தினைத் தாங்கும் ஆற்றலுடையது.

**dry sand core** : *(வார்.)* **உலர் மணல் வார்ப்படம்** : அடுப்பில் முழுவதுமாக வதக்கிய அல்லது உலர்த்திய வார்ப்பட உருச்செறிவு.

**dry spot** : *(குழை.)* **உலர் பரப்பு** : தகடாக்கிய பிளாஸ்டிக்குகள், கண்ணாடி ஆகியவற்றில், உள்படுகையும் கண்ணாடியும் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளாதிருக்கிற பரப்பிடம்.

**dry steam** : **உலர் நீராவி** : ஈரப்பதம் இல்லாமல் பூரிதமாகிய நீராவி.

**dry weight** : *(விண்.)* **உலர் எடை** : எரிபொருள் இல்லாத ராக்கெட்டு ஊர்தியின் எடை.

**dry weight of an engine** : *(வானூ.)* **உலர் எடைமானம்** : ஓர் எஞ்சினின் எடைமானம். இதில் எரி-வளி கலப்பி, முழு மூட்ட அமைப்பு, முற்செலுத்தி, குறைப்புப் பல்லிணை ஆகியவை உள்ளடங்கும். ஆனால், வெளியேற்றுப் பெருங்குழாய்கள், எண்ணெய், நீர் ஆகியவை உள்ளடங்காது. எஞ்சினின் ஒரு பகுதியாக முடுக்கு கருவியும் அமைக்கப்பட்டிருக்குமாயின் அதனையும் உள்ளடக்கும்.

**dry well** : *(கம்.)* **உலர் குழி** : தரையில் கல்பாவிய ஒரு பள்ளம்; அதில் சுற்றுப்புற மண்ணில் பாயும் கழிவு நீர் அல்லது சாக்கடைத் திரவங்கள் கசிந்து தேங்கும்.

**dry wood** : **உலர் மரம்** : பதப்படுத்துவதன் மூலம் சாறு அகற்றப்பட்ட வெட்டு மரம்.

**dryer** : **உலர்த்தி** : மென்பூச்சுமானத்திலிருந்து ஈரப்பதனை அகற்றுவதற்குப் பயன்படும் உலர்த்து எந்திர வகை.

**drying** : *(வார்.)* **உலர்த்தல்** : ஒரு வார்ப்படத்தில் சூடான காற்றினை உட்செலுத்தி ஈரப்பதத்தை ஆவியாகச் செய்து உலர்த்தும் செய்முறை.

**drying oil** : *(குழை.)* **உலரும் எண்ணெய் :** காற்றுப்பட்டே எளி தில் கெட்டியாகக் கூடிய மரப்பூச் செண்ணெய் அல்லது பெரில்லா போன்ற தனிவகை எண்ணெய்.

**drying rack** : *(அச்சு.)* **உலர்த்து அடுக்கு** : அச்சிட்ட காகிதங்களை உலர்த்துவதற்குப் பயன்படும் ஓர் அடுக்கு அல்லது சட்டகம்.

**dual ignition : இரட்டை மூட்டம்** : இரு ஆதாரங்களிலிருந்து மின் னோட்டத்தைக் கொண்டிருக்கிற, ஒரே தொகுதி. பொறிவினை முனைகளைப் பயன்படுத்துகிற ஓர் மூட்ட அமைப்பு. ஒவ்வொரு நீள் உருளையிலும் ஒரே சமயத் தில் தீ மூட்டுகிற இரட்டைப் பொறிவினை முனைகளைக் கொண்ட ஒரு மூட்ட அமைப்பை யும் குறிக்கும்.

**dubbing :** *(மின்.)* **ஒலி இணைப்பு:** திரைப்படத்திற்கு வேறு மொழி யில் புதிய ஒலிப்பதிவை இணைத் தல்; இயக்கத் திரைப்படத்துடன் ஒலிப்பதிவு இணைத்தல்.

**duct :** *(குளி; பத.)* **கம்பி வடக் குழாய்** : காற்றைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் உலோகக்கம்பிவடக் குழாய்

**ductile** : *(உலோ.)* **நெகிழ்திறன்:** உலோகங்களில் எளிதில் கம்பியாக இழுத்து நீட்டுவதற்கான நெகிழ் வுத் திறன்.

**ductless glands** : *(உட.)* **நாள மில்லாச் சுரப்பிகள்** : இழைநாள மில்லாமலேயே நேரடியாகக் குரு திக்குள் கசிவுநீர் பரப்பும் சுரப்பி கள்.

**ductility** : **ஒசிவுத்திறன்** : உலோ கங்களின் வகையில் வேலைப்பாடு களில் அடித்துருவாக்குவதற்கு ஏற்ற தன்மை, உலோகத்தைக் கம்பியாக நீட்டுவது இதற்கு எடுத் துக்காட்டு.

**dull coated paper** : *(அச்சு.)* **மழுங்கல் மெருகுத்தாள்** : மெரு கேற்றாத வளவளப்பான எனா மல் காகிதம்.

**dull finish paper** : *(அச்சு.)* **மெருகற்ற தாள்** : பளபளப்பாக மெருகேற்றாத பரப்புடைய காகி தம்.

**dull iron** : *(வார்.)* **மழுங்கல் இரும்பு** : ஊற்றுவதற்கு மிகவும் உகந்ததாக இருக்கும் அளவுக்கு நன்கு சூடாகாத இரும்பு.

**dumb waiter** : *(க.க.)* **சுழல் நிலை மேடை** : பரிமாறுபவரின் தேவையில்லாமல் உணவு முதலிய வற்றைப் படைக்க உதவும் நகரக் கூடிய சுழலுசசி மேடையை யுடைய ஒரு நிலைதாங்கி.

**dummy** : *(அச்சு.)* **அச்சிடாப் போலி வெள்ளேடு** : அச்சுப் பார் வைப் படிகளிலிருந்து துணுக்கு களை ஒட்டி அச்சிடுவதற்காக உரு வாக்கிய போலி வெள்ளேட்டு உரு வமைப்பு.

அச்சிடாத கவற்றுக் காகிதங் களைத் தைத்துப் புத்தகத்தின் உரு மாதிரியில் வடிவமைத்த நூல் படிவம்.

**dumpy level:** *(எல்.)* **காட்சித் தள மட்டம்:** தொலைநோக்கியுடன் மட்டத் தொடர்பில் இணைக்கப் பட்டுள்ள அளவாய்வாளரின்காட் சித் தளமட்டம்.

**duplex cable:** *(மின்.)* **இருமடிக் கம்பிவடம்:** ஒரு மின்காப்பு உறை யினுள், ஒன்றையொன்று தொ டாதவாறு மின்காப்பிடப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் இரட்டைக் கம்பிகள்.

**duplex gas-burner:** **இரட்டை வாயு விளக்கு:** இரு பீற்றின் ஒரு சுடரான வாயு விளக்கு.

**duplex lamp:** **இரு திரி விளக்கு:**

**duplex telegraphy: இரட்டைத் தந்தி முறை:** இருபுறமும் ஒரு கம்பியின் மூலம் செய்தி அனுப்பப் பெறும் தந்தி அமைப்பு.

**duodecimo: பன்னிரு மடிப்புத் தாள்:** பன்னிரண்டாக மடிக்கப் பட்ட (13 × 19செ.மீ.) தாள் மடிப்பு.

**duograph: (அச்சு.) இரட்டை நுண் படப் பதிவு:** ஒரே படியிலிருந்து தயாரிக்கப்பட்ட இரு நுண் பதிவுப்படத் தகடுகள். இதில் ஒன்று கருமையாகவும், இன்னொன்று மெல்வரிப் பின்னணி வண்ணச் சாயலுடனும் அச்சடிக்கப்பட்டிருக்கும். வெவ்வேறு திரைக் கோணங்களுடன் தயாரிக்கப்படும் இரு தகடுகள்.

**duotone: (அச்சு.) இரட்டை வண்ண நுண்பதிவு:** ஒரு வண்ணத்தில் அச்சடித்த காகிதத்தில் மை உலர்ந்தவுடன் இருவேறு வண்ணங்களில் அச்சடித்ததுபோல் தோற்றமளிக்கும் ஒருவகை மை.

**duotype : (அச்சு.) இரட்டை அச்செழுத்து :** ஒரே படியிலிருந்து தயாரிக்கப்பட்ட இரு நுண்பதிவுப் படத் தகடுகள். இவற்றில் வெவ்வேறு விதமாக செதுக்குருச் செய்யப்பட்டிருக்கும்:

**duplex carburetor : (தானி.) இரட்டைஎரி-வளி கலப்பி:** கலவைப் பகிர்மானத்திற்காக இரட்டை அமைவுடைய எரி-வளி கலப்பி.

**duplex printing . இரட்டை அச்சடிப்பு :** ஒரு துணியின் இருபக்கங்களிலும் ஒரு துணியின் இருபக்கங்களிலும் ஒரு தோரணியை அச்சடிக்கும் முறை.

**duplex steel : (உலோ.) இருமடி எஃகு :** காய்ச்சி உருகு நிலையிலுள்ள கட்டிரும்பூடாகக் காற்றோட்டக் கீற்றுகளைப் பாய விட்டு அதிலுள்ள கரி-கன்மம் ஆகியவற்றை நீக்குகின்ற பெஸ்ஸமர் முறைப்படித் தயாரித்த எஃகினை மேலும் அடிப்படைத் திறந்த உலையில் சுத்திகரித்துத் தயாரிக்கப்படும் மலிவான குறைந்த அளவு கார்பன் கொண்ட எஃகு. இரண்டாம் சுத்திகரிப்பானது, ஒரு மின் உலையில் செய்யப்படுமாயின் கிடைக்கும் இரும்பு அதிகத் தரமுடையதாக இருக்கும்.

**duplicate : இருமடிப் பகர்ப்பு :** மூலப்படியை அப்படியே பகர்த்துப் படியெடுத்தல்.

**duplicate part : நிகரொத்த உறுப்பு:** ஓர் உறுப்புக்கு நிகரொத்த மற்றொரு உறுப்பு.

**durability : (க.க.) உழைப்புத் திறன் :** நெடிய கடினமான பயன்பாட்டிற்குத் தாக்குப் பிடிக்கும் திறன்.

**duralumin : (வானூ.) வலிவலுமினியம்:** விமானம் முதலியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் வலிமையும் கடினமும் வாய்ந்த அலுமினியக் கலவைப் பொருள். இதில் 3.5%-4.5% செம்பும், 0.4%-1% மாங்கனீசும், 2%-0.75% மக்னீசியமும், 92% அலுமினியமும் கலந்திருக்கும். இதன் இறுதி விறைப்பாற்றல்-55,00 பவுண்டு/ச.அங். நெகிழ்திறன் வரம்பு 30,000 பவுண்டு/ச. அங். வீத எடைமானம் - 2.85-க்கு மேற்படாமல்.

**dur iron : (உலோ.) டூர் இரும்பு :** சிலிக்கன் செறிவு மிகுதியாகவுள்ள இரும்பின் வாணிகப் பெயர். இது அமிலத்தை எதிர்க்கும் தன்மையுடையது. எனவே, ஆய்வுக் கூடங்களுக்கு வடிகுழாய்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**dust bottom : தூசுப்படிவு அடித்தளம் :** இரு இழுவறைகளிடையே மெல்லிய மரப்பலகை.

**dutch arch : டச்சுக் கவான் :** உச்சியிலும் அடித்தளத்திலும்

தட்டையாக இருக்கும். ஒரு பிணைப்புக் கவான் இதில் செங்கற்கள் ஒரு பொதுவான மையத்தியிலிருந்து சாய்வாக அடுக்கப்பட்டிருக்கும்.

**Dutch bond, or English cross bond** : **டச்சுப் பிணைப்பு அல்லது ஆங்கிலக் குறுக்குப் பிணைப்பு** : செங்குத்துச் செங்கற்களும், நீள வாட்டுக் கிடைச் செங்கற்களும் மாற்றிமாற்றி அமைக்கப்பட்டுள்ள ஒருவகைக் கவிகைப் பிணைப்பு.

**Dutch metal** : **டச்சு உலோகம்** : மிகுந்த நெகிழ்திறனுடைய உலோகக் கலவை. இதில் 11 பகுதி செம்பும், இரு பகுதி துத்தநாகமும் கலந்திருக்கும்.

**dwell** : *(தானி.)* **தொடர்பறு காலம்** : இருமுனைகளின் தொடர் பினைத் துண்டிக்கும் கால அளவு. இது வளைகோல் வடிவின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

**dwelling** : *(க.க.)* **குடியிருப்பு** : குடியிருக்கும் வீட்டினை அல்லது உறைவிடத்தைக் குறிக்கும் ஒரு விரிவான பொருள்கொண்ட சொல்.

**dye** : *(1)* சாயந்தோய்த்தல். *(2)* வண்ணக் கறைப்படுத்துதல். *(3)* சாயப் பொருள்; சாயந் தோய்க்கப் பயன்படும் சாயப் பொருள்.

**dye wood** : **சாய மரம்** : சாயந் தோய்ப்பதற்கான வண்ணப் பொருள் தரும் ஒருவகை மரம்.

**dyna-flow transmission** : *(தானி.எந்.)* **இயங்கு பாய்வுச் செலுத்தீடு** : இதில் ஒரு நீரியல் ஒரு போக்கியும், நிலை திறப்புப் பல் விணைத் தொகுதியும் அமைந்திருக்கும். இதனால், ஓட்டுநர், நேரடியாக ஓட்டவும், நெருக்கடி நிலையில் மெதுவாக ஓட்டவும், பின்னோக்கி ஓட்டவும், இயங்கா நிலையில் நிறுத்தவும் முடிகிறது.

**dynamic balance** : *(தானி.)* **இயக்கச் சமநிலை** : உறுப்புகள் எந்த வேகத்தில் சுழல்வதற்கெனச் சமநிலைப் படுத்தப்பட்டுள்ளனவோ அந்த வேகத்தில் அதிர்வு இன்றிச் சுழல்வதற்கு அனுமதிக்கும் சமநிலை அமைப்பு.

**dynamic factor** : *(வானூ.)* **இயக்க காரணி** : ஒரு விமானம் வேகம் எடுக்கும்போது, அதன் உறுப்பு எதுவும் தாங்கும் பளுவிற்கும், அதற்கு நேரிணையான அடிப்படைப் பளுவிற்குமிடையிலான விகிதம்.

**dynamic lift** : *(வானூ.)* **இயக்க எழுச்சி** : விமானம் பறக்கும்போது அதன்மீது செயற்படும் நான்கு விசைகளில் ஒன்று. இந்த எழுச்சி விசை விமானத்தை உயரத்தில் நிலைத்து நிற்கச் செய்கிறது.

**dynamic load** : *(வானூ.)* **இயக்கப் பளு** : விமானத்தின் வேக முடுக்கம் காரணமாக உண்டாகும் பளு. இந்த இயக்கப் பளுவானது. விமானத்தின் பொருண்மைக்கு வீத அளவில் அமைந்திருக்கும்.

**dynamic pressure** : *(வானூ.)* **இயக்க அழுத்தம்** : $\frac{1}{2}PV^2$ என்ற சூத்திரத்தின் பெருக்குபலன். இதில் P = காற்றின் அடர்த்தி. $V^2$ = காற்றின் ஒப்புவேகம்.

**dynamics** : **விசையியக்கவியல்** ; இயக்க ஆற்றல். இயக்கத் தாக்கு ஆற்றல் ஆகியவற்றையும் ஆராயும் இயற்பியலின் இயக்கவியல் சார்ந்த துறை.

**dynamic speaker** : **இயக்க ஒலி பெருக்கி** : ஒலி அதிர்வு ஓட்டங்களை ஒலியலைகளாக மாற்றக்கூடிய ஒரு கருவி. இதில் ஒரு மின் காந்தப் புலம் அமைந்திருக்கும்.

அதில், ஒரு பிரிசுவருடன் இணைக்கப்பட்டுள்ள நகரும் ஒலிச்சுருள் வைக்கப்பட்டிருக்கும்.

**dynamic stability :** *(வானூ.)* **இயக்க உறுதி நிலை:** ஒரு விமானம் பறக்கும்போது அதன் சீராக இயக்கம் சீர்குலையுமானால் அதனை உறுதி நிலைக்குக் கொண்டு வருவதற்கான உறுதிப்பாட்டு நிலை.

**dynamite : சுரங்க வெடி :** நைட்ரோ கிளிசரின் என்னும் வெடி மருந்து வகை.

**dynamiting :** *(மின்.)* **பளுவேற்றுதல் :** பட்டுத் துணிகளுக்கு கனிம உப்புகள் மூலம் பளுவேற்றுதல்.

**dynamo:** *(மின்.)* **நேர் மின்னாக்கி:** காந்தச் சூழுறவில் செப்புக் கம்பிகளைச் சுழற்றுவதன்மூலம் இயக்க ஆற்றலை மின் ஆற்றலாக மாற்றும் எந்திரக் கருவி.

**dynamometer :** *(மின்.)* **திறன் மானி :** பணியில் செலவிடப்படும் ஆற்றலின் அளவினை அளவிடுவதற்கான ஒரு கருவி அல்லது எந்திரம்.

**dynamometer:** *(குளி,பத.)* **திறன் மானி :** ஒரு மின்னோடியின் அல்லது எஞ்சினின் திறனை அளந்து கணிக்கும் கருவி.

**dynamotor :** *(மின்.)* **விசையியக்க மின்னோடி :** ஒரே மின்னகத்தில் இரு சுருணைகளாய் பயன்படுத்தும் ஒரு மின்னோடி-மின்னாக்கி இணைப்பு. இது மாற்று மின்னோட்டத்தை நேர்மின்னோட்டமாக மாற்றுவதற்குப் பயன்படுகிறது.

**dyne :** *(இயற்.)* **நொடி விசையழுத்தம் :** ஒரு கிராம் எடைமானத்தை ஒரு நொடியில் நொடிக்கு ஒரு செண்டிமீட்டர் விழுக்காடு செலுத்தவல்ல அளவுடைய விசையாற்றல் அலகு.

**dynode :** *(மின்.)* **வெற்றிடக் குழல் மின் முனை:** ஒரு வெற்றிடக் குழலிலுள்ள மின்முனை. இது எதிர்மின் உமிழ்வினைச் செய்வதன் மூலம் ஒரு பயனுள்ள பணியைச் செய்கிறது.

**dysentery :** *(நோயி.)* **சீதபேதி :** சீழும் இரத்தமுமாக மலம் போகும் வயிற்று அளைச்சல் நோய்.

# E

**e.m.f. (electro-motive force)** *(மின்.)* **மின்னியக்கு விசை :** ஒரு மின் கடத்தியின் வழியாக மின்னோட்டத்தைத் தொடங்கி நிலைப் படுத்துகிற விசை; இதனைப் பொதுவாக "ஓல்ட்" என்னும் மின்னலகுகளில் கணக்கிடுவர்.

**ear : காதுப்புறம் :** காது வடிவ விளிம்புப் பகுதியைக் குறிக்கும் மெத்தை - திண்டு ஒப்பனைச் சொல்.

**early warning radar :** *(விண்.)* **முன்னெச்சரிக்கை ராடார் :** ஒரு பாதுகாப்புப் பகுதியை ஒரு விமானம் அணுகும்போது, அது பற்றி எச்சரிப்பதற்காக அப்பகுதியின் புறவிளிம்பு அருகே நிறுவப்பட்டிருக்கும் ஒரு ராடார் அமைப்பு.

**ear mark : அடையாளக் குறி :** ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பயன்படுத்துவதற்கு ஒதுக்கி வைக்கப்பட்டதெனத் தனிப்பட இட அடையாளக் குறி.

**ear piece :** *(மின்.)* **செவிக் கருவி:** தொலைபேசியில் கேட்போர் காதுப்புறமாக வைத்துக் கேட்பதற்குரிய செவிக் கருவி.

**ear phones ;** *(மின்.)* **காதொலிக் கருவி :** தொலை பேசியில் செவியுடன் பொருந்தத்தக்க ஒலிவாங்கும் கருவி.

**earth inductor compass :** *(வானூ.)* **நிலைக்கிளர் மின்னோட்டமானி :** பூமியின் காந்தப் புலத்தில் சுழலும் ஒரு கம்பிச்சுருளில் உற்பத்தியான மின்னோட்டத்தின் அளவினைக் குறித்துக் காட்டும் கருவி.

**earth oxides :** *(மின்.)* **மண் ஆக்சைடுகள்:** எலெக்ட்ரான்களை வெளிப்படுத்தும் பொருட்களாகப் பயன்படுத்தப்படும் பேரியம், ஸ்டிரான்ஷியம் போன்ற பொருள்கள்.

**earth pigment :** *(விண்.)* **மண் நிறமிகள் :** மண்ணில் படிவுகளாகக் கிடைக்கும் நிறமிகள். இவற்றைச் சுரங்கம் தோண்டி எடுக்கிறார்கள்.

**earth satellite :** *(விண்.)* **பூமி செயற்கைக் கோள் :** பூமியை ஒரு சுற்றுப்பாதையில் சுற்றி வரும் ஒரு கலம்.

**easel : நிலைச்சட்டம் :** ஓவியர் பயன்படுத்தும் நிலைச் சட்டம்.

**easement :** *(க.க.)* **துணை விரிவுக் கட்டுமானம் :** கைபிடிக் கிராதியின் அல்லது அடிப்பலகையின் வளைந்த பகுதி. படிக்கட்டுக் கட்டுமானத்தில், சுவரின் உட்புற நிலைக்கட்டும் சுவரின் அடித்தளமும் படிக்கட்டின் அடிப்புறத்தில் சந்திக்கும் இடத்திலுள்ள பளுக் குறைவான அல்லது முக்கோணப் பகுதி.

**eaves :** *(க.க.)* **இறவாரம்:** கூரையின் பிதுக்க விளம்பு.

**eaves trough:** *(க.க.)* **இறவாறத் தொட்டி :** மழைத்தண்ணீர் வடிவதற்குரிய ஒரு வாய்க்கால் அல்லது தொட்டி.

**ebonite : வன் கந்தகம் :** கருநிறத் தொய்வகம் கலந்த கந்தகக் கலவை அல்லது கடினமான ரப்பர்.

**ebonize: கருங்காலிக் கருமெருகு:** கருங்காலி மரம் போன்று கருநிற மெருகேற்றுதல்,

**ebony : கருங்காலி மரம் :** கடின மான, நெடுநாள் உழைக்கக்கூடிய கருநிறமான மரம். இது வெப்ப மண்டலத்தில் வளரக்கூடியது. இது செதுக்கு வேலைகளுக்கும், பெட்டிகள் தயாரிக்கவும் பயன்படு கிறது.

**ebulator : (குளி.பத.) குளிர்திரவ இயக்கத் தடுப்பான் :** ஒரு குளிர் பதனச் சாதனத்தில், குளிர்விக்கும் திரவமானது அதன் கொதி நிலை யில் அல்லாமல் குறைந்த அழுத்தத் தில் இயங்காமல் இருப்பதைத் தடுப்பதற்காக அந்தச் சாதனத் தின் ஆவியாக்கக் குழாய்களில் செருகப்படும் ஒரு சாதனம்.

**ebullition : பொங்கழற்சி :** நுரை பொங்கும் வகையில் கொதித் தெழுதல்.

**eccentric: (பொறி.) பிறழ்மையம்** சுழலியக்கத்தை முன் பின அல்லது மேல் கீழான நேர் வரை இயக்கமாக மாற்றும் எந்திர அமைவு.



பிறழ் மையம்

**eccentric adjustment: (தானி.) பிறழ் மையச் சீரமைவு:** பிறழ் மைய மாகத் துளையிடப்பட்ட செருகு வகைக் கப்பியினைத் திருப்பு வதன் மூலம் தொடர்புடைய உறுப்புகளைச் சீரான அமைப்பு நிலைக்குக் கொண்டுவருதல்.

**eccentric clamp : (உலோ.வே.) பிறழ்மையப் பற்றிரும்பு :** பிறழ் மையத் தத்துவத்தின் அடிப்படை யில் துரிதமாகச் செயற்படும் இறு கப் பற்றிக்கொள்ளும் ஒரு சாதனம்.

**eccentric fitting : (கம்.) பிறழ் மையப் பொருத்தி :** மையக் கோடு எதிரீடாக இருக்கக் கூடிய ஒரு பொருத்தி.

**eccentric fluted reamer: (எந்.) பிறழ்மையத் துளைச்சீர்மி:** உட்குழி வான செல்வழிகளில் அலம்பல்ஒலி கேட்காதவாறு ஒரே சீரான இடைவெளி கொண்ட ஒரு துளைச் சீர்மி. ஆனால், இது விட் டத்தை ஒரு நுண்ணளவியினால், அளப்பதற்கு வசதியாக அமைக் கப்பட்டிருக்கும்.

**eccentricity : பிறழ்மையத் திறன்:** இரு வட்டங்களின் மையங்கள். ஒன்றுக்கொன்று பிறழ்ந்திருக்கும் தன்மை.

**eccentric rod : (பொறி.) பிறழ் மையச் சலாகை :** ஓரதர் எந்திர அமைவுடன் பிறழ்மையத்தை இணைக்கிற சலாகை.

**eccentric starp : (பொறி.) பிறழ் மையப் பட்டை:** பிறழ் மையப் பள் ளத்தைச் சுற்றியுள்ள உலோக வளையம் அல்லது கலம். இது, நீராவி எஞ்சினிலுள்ள சலாகை களுக்கு ஓரதர் பல்லிணைக்கும் இயக்கத்தைக் கொண்டு செல் கிறது.

**eccentric turning ; (எந்.) பிறழ் மையச் சுழற்சி :** அச்சுடன் பொது மையங் கொண்டிராத கடைசல் சுழற்சிப் பணி.

**echinus : (க.க.) புறங்கவி ஆதாரம் :** தூண் தலைப்பின் மேல் மட்டத்தைத் தாங்கும் புறங்கவி வான முட்டை வடிவ அடிப்பகுதி.

**echo : (மின்.) எதிரொலி :** ஒலி பரப்பீட்டின்போது ஒரு குறுகிய இடை, வெளியில் அந்த அலை எதிரொலியாக மீண்டு வந்து ஒலித்தல்.

**echo box : (மின்.) எதிரொலிப் பெட்டி :** ஒலிபரப்புவதில்

செயற்கை எதிரொலிகளை உண்டாக்குவதற்குப் பயன்படும் உட்குழிவான அல்லது குழாய் போன்ற சாதனம்.

**ecliptic** : *(விண்.)* **கோள வீதி** : சூரியனைச் சுற்றி பூமிக்கோளம் வலம் வரும் தளப்பரப்பு. இதனை அடிப்படையாகக் கொண்டே மற்றக் கோளங்களுக்கு இடையிலான சுற்றுப்பாதைகள் கணக்கிடப்படுகின்றன.

**economic** : **பொருளியல்**: நிதியியல் அல்லது செல்வம், வளமான வாழ்க்கை வழிமுறைகள் தொடர்பானவை.

**economic speed** : *(வானூ.)* **சிக்கன வேகம்** : எரிபொருள் மிகக் குறைவாகச் செலவழிகிற வேக அளவு.

**economizer** : *(பொறி.)* **சிக்கனக் கருவி** : வெப்பம்-எரிபொருள் முதலியவற்றை மிச்சப்படுத்துவதற்கான எந்திர அமைவு.

**economy coil**: *(மின்.)* **சிக்கனக் கம்பிச் சுருள்** : தூண்டு சுருளும் மின்மாற்றியும் ஒருங்கிணைந்த அமைப்பு. இது மாற்று மின்னோட்டத்துடன் பயன்படுத்தப் படுகிறது.

**eddy currents** : *(மின்.)* **சுழல் மின்னோட்டம்**: ஒரு காந்தப் புலத்தில் ஒரு திடமான உலோகப் பொருளைச்சுழற்றும்போது உண்டாகும் தூண்டு மின்னோட்டம். இதற்குப் பெருமளவு எரியாற்றல் தேவைப்படும். பல சமயங்கள் தீங்கு விளைக்கும் வெப்ப உயர்வு ஏற்படும்.

**eddy current loss**: *(மின்.)* **சுழல்மின்னோட்ட இழப்பீடு** : உள்ளீட்டுத் தடையின் வழியே பாயும் சுழல் மின்னோட்டத்தினால் உண்டாகும் வெப்ப இழப்பு.

**edged tools**: **வெட்டுக் கருவிகள்**: கூர் விளிம்புடைய வெட்டுக் கருவிகள்.

**edge flare** : **விளிம்புச் சுடர்** : தொலைக் காட்சியில் படத்தின் விளிம்பினைச் சுற்றி மின்னிடும் சுடரொளி.

**edging machine** : *(உலோ.)* **விளிம்பமைப்புக் கருவி** : உலோகத் தகடுகளின் விளிம்புகளை மடக்குவதற்குப் பயன்படும் கருவி.

**edging trowel** : **விளிம்புச் சட்டுவம்**: ஒரு செவ்வக வடிவச் சட்டுவக் கரண்டி. இதில் ஒரு புற விளிம்பு கீழ்நோக்கித் திரும்பியிருக்கும். இது மேடைகளின் விளிம்புகளையும் வளைவுகளையும் அமைக்க உதவுகிறது.

**edifice** : *(க.க.)* **மாளிகை** : ஒரு பெரிய கட்டிடம். சிறப்பான கட்டிடக் கலை வேலைப்பாடுகளுள்ள ஒரு பெருஞ் செயற் கட்டமைவு.

**Edison cell** *(மின்.)* **எடிசன் மின்கலம்** : நிக்கல் ஆக்சைடை நேர் மின் முனையாகவும், இரும்புத் தூளை எதிர்மின் முனையாகவும் பயன்படுத்தும் மின்கலம். இதில் மின்பகுப்புக் கரைசலாக நீர்த்த சோடியம் ஹைடிராக்சைடுக் கரைசல் பயன்படுத்தப்படுகிறது.

**Edison effect** : *(மின்.)* **எடிசன் விளைவு** : ஒரு வெற்றிடக் குழாயில் ஒரு நேர்மின் தகட்டை நோக்கி எலெக்ட்ரான்கள் ஈர்க்கப் படும் விளைவு. இந்த விளைவினை முதன்முதலில் கண்டறிந்தவர் தாமஸ் எடிசன்.

**Edison socket** : *(மின்.)* **எடிசன் குதை குழி** : திருகு வகை ஆதாரமுடைய ஓர் ஒளிக்குழலை ஏற்கிற குதை குழி.

**Edison storage battery**: *(மின்.)* **எடிசன் மின்சேமக்கலம்** : உந்து

வண்டிகளில் பயன்படுத்துவதற்காக எடிசன் தயாரித்த ஓர் இரு உலோக மின்கலம். இதில் நேர் மின் தகடு நிக்கல் பெராக்சைடினாலும், எதிர்மின் தகடு இரும்பினாலும் அமைந்திருக்கும்.

**effective area** : *(வானூ.)* **பயன் முனைப்புப் பரப்பிடம்** : ஒரு திருகு அலகின் பயன் முனைப்புப் பரப்பிடம் என்பது, அந்த அலகினைச் சம தளத்தில் அதன் அச்சுக்குச் செங்கோணத்தில் உருவரை செய்வதால் உண்டாகும் பரப்பிடம் ஆகும்.

**effective conductance** : *(மின்.)* **பயனுறு கடத்துத் திறன்** : ஒரு மாற்று மின்னோட்ட மின்சுற்றில் மொத்த மின்னியக்க விசைக்கும், அதன் விசையாற்றல் பகுதிக்குமிடையிலான விகிதம்.

**effective current** : *(மின்.)* **பயனுறு மின்னோட்டம்** : அம்மீட்டரில் குறிக்கப்படும் மின்னோட்ட வலிமை.

**effective helix angle**: *(வானூ.)* **விளைவுறு திருகு சுழல் கோணம்** : விமானம் காற்றினூடே முன்னோக்கிச் செல்லும்போது அதன் முற்செலுத்து அலகிலுள்ள ஒரு குறிப்பிட்ட புள்ளியில் ஏற்படும் திருகுசுழல் கோணம்.

**effective horse - power** : *(பொறி.)* **விளைவுறு குதிரைத் திறன்** : ஓர் எஞ்சின் அளிக்கக் கூடிய பயனுறு ஆற்றலின் அளவு.

**effective landing area** : *(வானூ.)* **பயனுறு தரையிறங்கு பரப்பிடம்** : விமானம் தரையிறங்கும் போதும், தரையிலிருந்து மேலேறும்போதும் அதன் ஏற்ற, இறக்கக் கோணங்களுக்குப் பாதுகாப்பான அளவுக்குக் கிடைக்கக் கூடிய தரைப் பரப்பின் பகுதி.

**effective propeller pitch** : *(வானூ.)* **பயனுறு முற்செலுத்து வீச்சு** : முற்செலுத்தி ஒரு முறை சுழலும்போது விமானம் முன்செல்லும் தூரத்தின் அளவு.

**effective propeller thrust** : *(வானூ.)* **பயனுறு முற்செலுத்து அழுத்தம்** : விமானத்தின் முற்செலுத்தியினால் உண்டாகும் நிகர இயக்க விசை.

**effective resistance** : *(மின்.)* **பயனுறு தடை**: ஒரு மின்சுற்று வழியில், உள்ளபடி ஈர்த்துக் கொள்ளப்படும் விசைக்கும், அதில் பாயும் பயனுறு மின்னோட்டத்தின் வர்க்கத்திற்குமிடையிலான விகிதம்.

**effective value** : *(மின்.)* **பயனுறு மதிப்பு** : ஒரு மாற்று மின்னோட்டத்தின் மதிப்பு அல்லது மின்னழுத்த அளவு. இது மின்சுற்றில் இணைக்கப்பட்டுள்ள அம்மீட்டரில் குறித்துக் காட்டப்படும்.

**effer-vescence**: **நுரைத்தெழுச்சி**: ஒரு திரவம் கொதிக்கும் போது அல்லாமல் பிறவாறு அதிலிருந்து வாயு குமிழியிட்டுப் பொங்கி எழுதல்

**efficiency** : **திறம்பாடு** : எந்திரத்தில் இயக்காற்றல் மீது விளைவாற்றலுக்குரிய விழுக்காடு.

**efflorescence** : *(வேதி.)* **பொடியார்ந்த மேற்படலம்**: திறந்தவெளிக் காட்டுப் பொருட்களின் மீது பொடிப் பொடியாகக்கூடிய மேற்படலம் உருவாதல்.

நிலஞ்சுவர்ப் பரப்புகள் வகையில் உப்புப் பொலிவுறுதல்.

**eggshell finish** : **வெண்மெருகு**: முட்டையின் வெண்தோட்டினைப் போன்ற காகித மேற்பரப்பில் மெருகேற்றுதல்.

**ejector pin** : *(குழை.)* **வெளியேற்றுமுனை** : ஒரு வார்ப்படத்திலி

ருந்து பணி முற்றிய ஒருபொருளை வெளியில் எடுப்பதற்குப் பயன் படும் ஒரு சாதனம்.

**elastic** : *(பொறி.)* **மீட்சிம நிலை:** ஒரு பொருளின் மீது விசையினைப் பயன்படுத்தும்போது அப்பொருள் உருத்திரிபடைந்து, அந்த விசை யினை அகற்றி அப்பொருள் தனது மூல வடிவத்திற்கு மீண்டும் வருவ தற்கு அனுமதிக்கும் நிலை.

**elastic axis** : *(வானூ.)* **மீட்சிம அச்சு** : ஒரு கட்டமைப்பில், திருகு விலக்கம் ஏற்படாமல் விசை யினைச் செலுத்துவதற்குரிய அனைத்துப் புள்ளிகளின் நிலை யிடம்.

**elastic deformation** : (குழை.) **மீட்சிம உருத்திரிபு** : ஒரு பொரு ளின் மீது செலுத்திய தகைவினை விடுவித்த பிறகு அந்தப் பொருள் தனது மூலப் பரிமாணங்களுக்குத் திரும்பும்போது வடிவம் மாறுபட் டிருத்தல்.

**elasticity** : (பொறி.) **மீட்சிமத் திறன்** : ஒரு சலாகையில் அல்லது கட்டமைவில் விறைப்பாற்றல் விசையினைச் செலுத்தி, அதில் நிரந்தரக் கோட்டம் ஏற்படுத்தா மல் அதனை நீட்சியுடையதாக்கும் திறன்.

**elastic limit** : *(பொறி.)* **மீட்சிம வரம்பு** : ஒரு பொருளை அதற்கு நிரந்தர உருத்திரிபு ஏற்படாமல் எவ்வளவு நீளத்திற்கு நீட்ட முடி யுமோ அந்த வரம்பு.

**elastic strength** : *(பொறி.)* **மீட்சிம வலிமை** : *மீட்சிம வரம்புக் குள் ஒரு சலாகையின் அல்லது கட்டமைவின் மீது மிக அதிக அளவு செலுத்தப்படும் தகைவின் அளவு.*

**elaterite** : **எலாட்டரைட்** : எளி தில் தீப்பற்றக்கூடிய நிலக்கீல் என னும் கனிமப்பொருள்களுள் ஒன்று. இதில் கந்தகம் கணிசமான அளவு அடங்கியிருக்கிறது. இது அமெரிக் காவில் கொலொரோடோ, ஊட் டா மாநிலங்களில் கிடைக்கிறது. இது கூரையிடுவதற்குப் பயன்படு கிறது.

**elbow** : *(கம்.)* **இணைப்பான்:** இரு குழாய்களை ஒரு கோணத் தில் இணைப்பதற்குரிய ஒரு பொருத்தி.

**electrical capacity altimeter** : *(வானூ.)* **மின்திறன் உயரமானி** : பூமியின் மேற்பரப்பிலிருந்து உய ரத்தை மதிப்பிடும் கருவி. இதில் மின்திறன் மாற்றத்தின் மூலம் உயரத்தின் அளவு குறித்துக் காட் டப்படுகிறது.

**electrical conductivity: மின் கடத்து திறன்:** பல்வேறு பொருள் களில் மின்விசையைக் கடத்து வதற்கு உரிய திறம்பாடு. தூய செம்பின் கடத்து திறனை ஒரு திட்ட அளவாகக் கொண்டு இந்தத் திறன் அளவிடப்படுகிறது.

**electrical engineer: மின் பொறி யாளர்:** மின்விசை உற்பத்தி, பயன் பாடு பற்றிய கோட்பாடுகளிலும், நடைமுறைகளிலும் தேர்ச்சியும் பயிற்சியும் பெற்ற பொறியாளர்.

**electric brazing: மின் பற்றாசு:** மின்னோட்டத்தின் மூலம் வெப் பம் உண்டாக்கும் ஒரு வகைப் பற்றாசு முறை.

**electric drill: மின் துரப்பணம்:** மின் விசையால் இயங்கும் துரப் பணக் கருவி.

**electrical height:** *(மின்.)* **மின் னியல் உயரம்:** செயற்படும் அலை நீளத்தின் பின்னமாகக் குறிப் பிடப்படும் வானலை வாங்கியின் உயரம்.

**electric horsepower** : **மின் குதிரையாற்றல்** : இது 746 வாட் மின்விசைத் திறனாகும்.

**electrician: மின்னியல் நுட்பாளர்:** மின்விசைப் பயன்பாடு குறித்த கோட்பாடுகளிலும் நடைமுறைகளிலும் தேர்ச்சி பெற்ற ஒரு நிபுணர்.

**electricity** : (மின்.) **மின்விசை** : ஓட்ட மின்விசை என்பது இயங்கும் எலெக்ட்ரான்கள் ஆகும். நிலை மின்விசை என்பது நிலையாகவுள்ள எலெக்ட்ரான்கள்.

**electric motor:** : (மின்.) **மின்னோடி** : மின்னாற்றலை எந்திர ஆற்றலாக மாற்றுவதற்குரிய ஓர் எந்திரம்,

**electric potential** : மின்னியக்காற்றல்.

**electric power** : (எந்.பொறி.) **மின்னாற்றல்** : மின்விசை கொண்டு பணியாற்றும் வேகவீதம். இதனை வாட் அல்லது கிலோவாட் அளவுகளில் கணக்கிடுவர்.

**electric pyrometer** : **மின் உயர் வெப்பமானி** : வெப்பநிலையைத் துல்லியமாக அளவிடுவதற்கான ஒரு நுட்பமான உயர் வெப்பமானி. சூடாக்கும்போது பிளாட்டினத்தின் மின்தடை காரணமாக ஏற்படும் மாறுதல்களை இது பயன்படுத்திக் கொள்கிறது.

**electric steel** : (உலோ.) **மின் எஃகு** : ஒரு மின் உலையில் தயாரிக்கப்படும் உயர்தரமான எஃகு. இந்த முறையில் கந்தகமும் பாஸ்வரமும் பெரும்பாலும் நீக்கப்பட்டு விடும். மிகக் குறைந்த குறைபாடுகளுடன் தூய எஃகினைத் தயாரிப்பதற்கு மற்ற முறைகளைவிட இது மிகவும் சிறந்தது.

**electrification:** (மின்.) **மின்னூட்டம்** : ஒரு பொருளுக்கு நிலைமின்னூட்டம் அளித்தல்.

**electroacoustic** : (மின்.) **மின் ஒலியியல்** : ஒலியியல் மற்றும் மின்னியல் பண்பியல்புகளைக் கொண்ட சாதனங்கள்.

**electro cardiograph** : (மின்.) **மின்னணு இதயத் துடிப்புப் பதிவு கருவி** : இதயத் துடிப்பினை அளவிட்டு. பதிவு செய்கிற மின்னணுவியல் சாதனம்.

**electro-chemical action** : **மின் வேதியியல் வினை:** மின்னோட்டத்தைப் பயன்படுத்தி வேதியியல் வினையை உண்டாக்குதல் அல்லது அத்தகைய வினையை நிலைபெறச் செய்தல்.

**electrode** : (மின்.) **மின்முனை** : வெற்றுக்கல மின்னோட்டத்தில் இருகோடி முனைகளில் ஒன்று.

**electro-forming** : (குழை.) **மின் உருவாக்கம்** : இரும்பினால் மின் முலாமிடுவதன் மூலம் ஒரு வார்ப்படப் பள்ளத்தை உருவாக்கும் முறை.

**electro-lier** : (மின்.) **மின் விளக்குத் தொகுதி** : முகட்டில் தொங்க விடுவதற்கான கொத்தான மின் விளக்குகளின் தொகுதி.

**electrolysis** : (மின். பொறி.) **மின்னாற் பகுத்தல்** : ஒரு பொருளினுள் மின்னோட்டத்தைச் செலுத்தி அதனை அதன் ஆக்கக்கூறுகளாகப் பகுத்தல்.

**electrolyte** : (மின்.) **மின்பகுப்பான்** : மின்னாற் பகுப்பதற்குப் பயன்படும் நீர்மப் பொருள், அமிலங்கள், உப்பு மூலங்கள், உப்புகள் ஆகிய அனைத்தும் மின்பகுப்பான்களேயாகும்.

**electrolyte level** : (தானி.) **மின் பகுப்பான் அளவு** : சேம மின்கலத்திலுள்ள தகடுகளிலுள்ள மின்பகுப்பானின் முறையான அளவு.

**electrolytic condenser** : *(மின்.)* **கொண்மி மின்பகுப்பான்.**

**electrolytic copper** : *(உலோ.)* **மின்பகுப்பான் செம்பு** : *மின்பகுப்பான் செய்முறைகளின் மூலம் சல்பைடு தாதுக்களிலிருந்து முக்கியமாகத் தயாரிக்கப்படும் செம்பு.*

**electrolytic corrosion** : *(மின்.)* **மின்பகுப்பான் அரிமானம்** : *நீருடன் தொடர்புடைய உலோகப் பொருள்கள் மின்னோட்டங்களுக்கு அருகில் இருக்கும்போது மின்னாற் பகுத்தல் மூலம் ஏற்படும் அரிமானம்.*

**electrolytic iron** : *(உலோ.)* **மின்பகுப்பு இரும்பு** : *மின்பகுப்பான் செய்முறை மூலம் தயாரிக்கப்படும் மிகத்தூய்மையான இரும்பு. இதில் மிகச் சிறந்த காந்தப் பண்புகள் உள்ளன. எனவே இது காந்தமையச் சலாகையாகப் பயன்படுத்தப்படுகிறது.*

**electrolytic rectifier** : *(மின்.)* **மின்பகுப்பான் திருத்தி** : *மின்-வேதியியல் தத்துவத்தினைப் பயன்படுத்தி மாற்று மின்னோட்டத்தை நேர்மின்னோட்டமாக மாற்றுக் கருவி.*

**electrolytic refining** , **மின்பகுப்பான் சுத்திகரிப்பு** : *மின்னாற் பகுத்தல் மூலம் உலோகங்களைச் சுத்திகரித்தல்.*

**electro magnet** : **மின்காந்தம்** : *சுற்றி வரியப்பட்ட மின்னோட்டமுடைய கம்பிச் சுழலால் காந்தமாக்கப்பட்டதேனிரும்புப்பிழம்பு.*

**electro magnetic field**: *(மின்.)* **மின்காந்தப் புலம்** : *ஒரு மின் காந்தத்தின் இரு துருவங்களுக்கிடையிலான அல்லது காந்த விளைவுள்ள பகுதி. இந்த புலத்தினூடே காந்தவிசைக்கோடுகள் பயணஞ் செய்யும்.*

**electromagnetic induction** : *(மின்.)* **மின்காந்தத் தூண்டல்** : *ஒரு காந்தப் புலத்தின் காந்த விசைக் கோடுகளைக் குறுக்கே வெட்டும் ஒரு கம்பியில் அமைந்திருக்கும் தூண்டப்பட்ட மின் இயக்க விசை.*

**electricmagnetic waves** : *(மின்.)* **மின் காந்த அலை** : *வானொலி அலைகள், ஒளி அலைகள், எக்ஸ்-கதிர்கள் போன்ற வற்றில் உள்ள இடப்பரப்பு வழியே பயணம் செய்யும் மின்னியல் விசை.*

**electromagnetism** : *(மின்.)* **மின் காந்த விசை** : *மின் விசையினால் உண்டு பண்ணப்படும் காந்த ஆற்றல்.*

**electro motive** : **மின் இயக்கம்** : *ஒரு மின் கடத்தியின் வழியே மின்னோட்டத்தைச் செலுத்தி, அம் மின்னோட்டத்தை நிலை பெறச் செய்யும் விசை. இது ஓல்ட்டுகளில் அளவிடப்படும்.*

**electromotive force of self-induction** : *(மின்.)* **தற் தூண்டல் மின்னியக்க விசை** : *தனியொரு கம்பிச் சுருளில், அதன் சுற்றுகளுக்கிடையிலான தூண்டு விளைவு காரணமாக ஏற்படும் மின்னியக்க விசை.*

**electrode**: *(விண்.)* **மின்வாய்**: *வெற்று மின் கல மின்னோட்டத்தில் இரு கோடி முனைகளில் ஒன்று.*

**electrodynamic** ; *(மின்.)* **மின்னியக்கவியல்** : *இயக்க நிலையிலுள்ள மின் விசை தொடர்பான ஆய்வு.*

**electro jet** : *(விண்.)* **மின்னியக்கத் தாரை** : *ஒரு கோளத்தில் மேல் வாயு மண்டலத்திலுள்ள அயனியாக்கிய படுகையில் ஒட்டிக்*

கொண்டிருக்கும் மின்னோட்ட இயக்கம்.

**electro luminescence :** *(மின்.)* **மின்னியக்க ஒளிர்வு :** *ஒளி உண்டாக்குவதற்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒரு முறை:* இதில் ஒரு பரஸ்பர வெண்களிமண் படுகை, ஒளியை உண்டாக்குவதற்கு மின்விசை விளைவு கடத்தியாகச் செயற்படுகிறது. நேர் மின்னோட்ட அழுத்தத்தைக் கொடுக்கும்போது, எலெட்ரான்கள் விடுபட்டு, பரஸ்பர அணுக்களைத் தாக்கி ஒளி உண்டாக்குகின்றன.

**electrolytic capacitor :** *(மின்.)* **மின் பகுப்பான் கொண்மி:** ஓர் அலுமினிய நேர் மின் தகட்டினை உடைய கொண்மி. இதில் ஓர் உலர்ந்த பசை அல்லது திரவம் எதிர் மின் தகடாக அமைகிறது. மின் விளைவு கடத்தியாக ஒரு மெல்லிய ஆக்சைடு படலம் அலுமினியம் தகட்டில் படிகிறது.

**electrometallurgy :** *(மின்.)* **மின் உலோகத் தொழில் :** உலோகங்களைச் சுத்திகரிப்பதற்கும், பற்ற வைப்பதற்கும், குளிர்வித்துப் பதனப்படுத்துவதற்கும், பகுப்பதற்கும், படியவைப்பதற்கும் பயன்படும் மின்னியல் செயல்முறை.

**electro meter :** *(மின்.)* **மின் மானி :** *மின்னேற்றத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவி.*

**electron:** *(மின்னி.)* **எலெக்ட்ரான்:** *மிகச்சிறிய மின்னியக்க அணுத்துகள்.* இது இயற்கையில் காணப்படும் சிறிதளவு எதிர்மின்னேற்றத்தைக் கொண்டிருக்கிறது.

**electron beam :** *(மின்னி.)* **எலெக்ட்ரான் கற்றை :** புற நிலை மின்னியல் காந்தப் புலங்களின் மூலமாக ஒரு கற்றை வடிவில் ஒரு முகப்படுத்தப்படும் எலெக்ட்ரான்களின் தொகுதி. இதனை 'எதிர் மின் கதிர்க் கற்றை' என்றும் அழைப்பர்.

**electron gun :** *(மின்.)* **எலெக்ட்ரான் பீற்று :** தொலைக்காட்சியில் ஒளிப்படக் கருவியிலும் படக் குழாய்களிலுமுள்ள குறுகிய இரு முனைகளிலும் அடுக்கி வைக்கப் படும் உலோகத்தாலான நீள் உருளைத் தொகுதிகள். இதில் தொலைக்காட்சி ஒளிப்படக் கருவியின் முன்பு உருவங்களை நுண்ணாய்வு செய்வதற்கும், தொலைக் காட்சித் திரையில் அந்த உருவம் மறுபடியும் உண்டாவதற்கும் பயன்படும் எலெக்ட்ரான் கற்றை ஏற்படுகிறது.

**electronics :** *(மின்னி.)* **மின்னணுவியல்:** *மின்மங்கள் (எலெக்ட்ரான்கள்) போன்ற அணுத் துகள்களைப் பற்றிக் கூறும் இயற்பியல் பிரிவு.* இது சுதந்திரமான எலெக்ட்ரான்களையும் அவற்றை விடுவிக்கும் வழிமுறைகளையும். சுதந்திரமாக இருக்கும்போது அவை ஏற்படுத்தும் விளைவுகளையும் ஆராய்கிறது. வானொலி, தொலைக் காட்சி, ஒளியியல் மின்கலங்கள் போன்ற சாதனங்களில் பயன்படும் எலெக்ட்ரான் தத்துவங்கள் பற்றிய ஆராய்ச்சியும் இதில் அடங்கும்.

**electron lens:** **எலெக்ட்ரான் ஆடி:** ஒரு கண்ணாடி வில்லை ஒளிக்கற்றையை ஒரு முகப்படுத்தும் ஒரு காந்தப்புலம்.

**electron microscope :** **எலெக்ட்ரான் நுண்ணோக்காடி :** சாதாரண நுண்ணோக்காடியில் பொருள்களைப் பார்க்கும்போது, ஒளியின் ஒரு பகுதியை அந்தப் பொருள்கள் பிரதிபலிப்பதால் அப்பொருள்களைப் பார்க்கிறோம். ஆனால், பார்க்கப்படும் பொருள் ஒளியின் அலை நீளத்தில் ½ பகுதிக்குக் குறை

வாக இருக்குமானால், ஒளி அதனைச்சுற்றிப்பாயும். அதனால் அப்பொருளைப் பார்க்கஇயலாது. ஓர் எதிர் முனையிலிருந்துவரும் எலெக்ட்ரான் கற்றை, ஓர் ஒளிக் கற்றைபோல் செயற்படுகிறது. எலெக்ட்ரான் ஒளிக்கற்றையின் அலை நீளம் ஒளியைவிடப் பல்லாயிரம் மடங்கு குறைவாக இருப்பதால், 100—300-க்குக் குறைவில்லாத அணுக்களின் மூலக் கூறுகளைக் காட்டக் கூடியவை.

**electron tube** : *(மின்னி.)* **எலெக்ட்ரான் குழாய் :** இது ஓர் எலெக்ட்ரான் சாதனம். இதனுள், உட்புகாத ஒரு கொள்கலத்தில் உள்ள ஒரு வெற்றிடத்தில் அல்லது வாயு ஊடகத்தின் வழியே எலெக்ட்ரான்கள் மூலமாக மின் கடத்தல் நடைபெறுகிறது.

**electron metal** : *(உலோ.)* **எலெக்ட்ரான் உலோகம் :** இது ஒரு மக்னீசிய உலோகக் கலவை. இதில் 5% துத்தநாகமும், 5% செம்பும் கலந்திருக்கும். இது உந்துவண்டிகளின் உந்துதண்டு தயாரிக்கப் பயன்படுகிறது.

**electroplating** : **மின்முலாம் பூசுதல் :** மின்பகுப்பு முறையின் மூலம் உலோக முலாமிடும் செய்முறை

**electroscope**: *(மின்.)* **மின்காட்சி;** ஒரு பொருளில் மின்னாற்றல் இருப்பதையும், அதன் இயல்பினையும் காட்டும் கருவி.

**electrophorous**: *(மின்.)* **அணுக்க நிலை மின்னாக்கி :** அணுக்கத்தால் நிலை மின் ஆற்றலை உண்டு பண்ணும் பொறி அமைவு.

**electropism** : *(மின்.)* **தாவர மின்னியல் :** தாவரங்களின் வளர்ச்சியும் மின்விசையும் தொடர்பான அறிவியல்.

**electrostatic corona** : *(மின்.)* **நிலைமின்னியல் ஒளிர்வு:** ஒரு நிலை மின்விசை போதிய அளவு ஆற்றலுடன் உருவாகும்போது மின் முனைகளைச் சுற்றி உண்டாகும் மின் மயத் துகள்.

**electrostatic discharge**: *(மின் )* **நிலைமின்னியல் மின்னோட்டம் :** நிலைமின்னியல் பொருட்களுக்கிடையிலான ஆற்றலின் வேறுபாட்டினால் உண்டாகும் சுடர்.

**electrostatic field** : *(மின்.)* **நிலைமின்னியல் புலம் :** நிலைமின்னூட்டம் பெற்ற ஒரு பரப்பிடம்.

**electrostatistic focus** : *(மின்.)* **நிலைமின்னியல் குவிமையம்:** சரிசமமில்லாத நிலைமின்னியல் புலங்களைக் கொண்ட நேர்முனை வழியாகப் பாயும் ஓர் எலெக்ட்ரான் கற்றையைக் குவி மையப்படுத்துதல்.

**electro-statics :** *(மின்.)* **நிலை மின்னியல் :** நிலையான மின்விசை நிகழ்வுகளைப்பற்றி ஆராயும் மின் அறிவியல் பிரிவு.

**electrotheraphv** : *(மின்.)* **மின்னியல் நோய்ச் சிகிச்சை :** மின்னாற்றலைச் செலுத்தி நோய் தீர்க்கும் முறை.

**electro-type**: *(அச்சு.)* **மின்அச்சு:** மின்னாற் பகுக்கும் முறையின் மூலம் அச்சுருவின் மீது செம்பு பூசிச் செய்யப்படும் அச்சுத் தகடு.

**electrum** : *(வேதி.)* **பொன் வெள்ளிக் கலவை :** பொன்னும் வெள்ளியும் இயல்பாகக் கலந்த ஓர் உலோகக் கலவை. இதில் ஏறத்தாழ 40% வெள்ளி கலந்திருக்கும்.

**element :** *(வேதி.)* **தனிமம் :** அறிவியல் அறிந்த வழிமுறைகளில் எதனாலும் பகுக்க முடியாத ஒரு பொருளின் அடிப்படைக் கூறு.

**elementary**: **தனிமஞ்சார்ந்த:** ஒரு தனிமத்தை அல்லது தனிமங்களைச் சார்ந்த.


**elementary particle:** *(இயற்.)* **மூலத் துகள் :** தானே ஓர் அணுவாக இல்லாமல், அணுக்களைப் பிரிப்பதால் உண்டாகும் ஒரு துகளின் பொதுப் பெயர். எடுத்துக்காட்டு: புரோட்டான்; எலெக்ட்ரான்; நியூட்ரான். இவை அனைத்தும் ஒரு புரோட்டானின் எடையைவிட இரு மடங்கு குறைவாக இருக்கும்; சில இன்னும் இலேசானவை.

**elements of a storage battery** *(மின்.)* **சேமக்கலத் தனிமங்கள் :** ஒரு சேமக்கலத்தின் எதிர்மின் மற்றும் நேர்மின் உலோகத் தகடுகள். இவற்றில் மின்னோட்டத்தின் போது வேதியியல் மாற்றங்கள் ஏற்படும்.

**elephantiasis :** *(நோய்.)* **யானைக் கால் நோய் :** கால்கள் மிகப்பெரிய அளவில் வீங்கிக் கொள்ளும் ஒரு வகை நோய். "ஃபிலியாரிசிஸ்" என்னும் நுண்ணிய புழுக்கள் நிண நீர் நாளங்களை அடைத்துக் கொள்வதால் இந்நோய் உண்டாகிறது.

**elevation :** **ஏறுசரிவு :** எந்திரவியல் வரைபடங்களில் செங்குத்துச் சாய் தளத்தின் மீதான வடிவியல் எறிவுப் படிவம்.

**elevator :** *(வானூ.)* **உயர்த்தி :**




விமானத்தின் பின்புற ஏற்ற இறக்கத் தட்டு.

**elevator angle :** *(வானூ.)* **ஏறு கோணம் :** விமானம் நடு நிலையிலிருந்து உயர்ந்து ஏறுமுகமாகச் செல்லும் கோணம். உயர்த்தியின் இழுவை முனை நடுநிலைக்கு கீழே இருப்பின் இந்தக் கோணம் நேர் எண் ஆகும்.

**elevator rope :** *(பொறி.)* **உயர்த்திவடம் :** சணல் நார் சுற்றப் பட்ட கம்பி வடம், இதனைச் சுற்றி, ஒவ்வொன்றும் 19 கம்பிகள் கொண்ட 6 சரங்கள் அமைந்திருக்கும்.

**eliminating :** **அகற்றீடு :** விட்டொழித்தல்; விலக்கீடு; முக்கியமில்லாதது அல்லது பயனற்றது என நீக்கிவிடுதல்.

**eliminating :** **பிரித்தகற்றி :** மின்னாற்றல் பயன்படுத்தும் கம்பியில்லாத தந்திக்குரிய கருவி.

**elixir of life :** *(வேதி.)* **கற்பம் :** வாழ்நாளை நீடிக்கவல்ல மருந்து.

**Elizabethan :** *(க.க.)* **எலிசபெத் காலத்திய :** இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபெத் ஆட்சிக் காலத்துக்குரிய.

**elk hide :** **மரைமான் தோல்:** மரைமான் எனப்படும் காட்டுமான் இனப் பெருவிலங்கின் தோல். இது கனமானது; இது செருப்பு, காலணிகள் தயாரிக்க ஏற்றது.

**ell :** *(க.க.)* **'எல்' அலகு :** ஏறத்தாழ 114செ.மீ.குச் சரியான நீட்டலளவைக் கூறு.

**ellipse :** *(வடி.)* **நீள் வட்டம் :** ஒரு தள மட்ட வளைவு. இந்த வளைவின் புள்ளி எதிலுமிருந்து இரு நிலைத்த புள்ளிகளுக்குள்ள தொலைவுகளின் கூட்டுத்தொகை ஒரு நிலை எண்ணாக இருக்கும்.

பரப்பளவு = நீள விட்டம் × குறுகியவிட்டம் × 0.7854

**ellipsoid:** *(வடி.)* **ஓரைவட்ட உரு:** குறுக்கு வெட்டுகள் ஓர் ஊடச்சு நெடுக நீள் வட்டமாகவும், வட்டமாகவும் அமைகின்ற உரு.

**elliptical arch** : *(க.க.)* **நீள் வட்டக் கவான்** : *மூன்று மையங்களை அளாவி அமைக்கப்படும் நீள் வட்ட வடிவ ஒரு வில் வளைவு.*

**elliptical or eccentric gears**: *(பட்.)* **நீள் வட்ட அல்லது பிறழ் மையப் பல்லிணை** : *இந்தப் பல்லிணையில் சுழல் தண்டு மையத்தில் இருக்காது. முட்டை வடிவம், இதய வடிவம் போன்ற எந்த வடிவிலும் இது அமைந்திருக்கும். அச்சு எந்திரங்கள் இந்த வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.*

**elm**: *(மர.)* **எல்ம் மரம்**: *இரட்டைரம்பப் பல் விளிம்புடைய இலைகளும் சிறு மலர்க்கொத்துகளும் உள்ள மரம்.*

**elongation** : *(எந்.பொறி.)* **நீட்சி**: *தகடாகக்கூடிய இரும்பும், எஃகும் விறைப்பாக்க அழுத்தத்திற்கு உட்படுத்தப்படும்போது முறிகின்ற வரையில் நீட்சியடையும். இதனால் பரப்பளவு குறையும். நீட்சியளவும் பரப்பளவுக் குறையும் அதன் தரத்திற்குச் சோதனையாகும்.*

*குழைமப் பொருட்களில், அழுத்தத்திற்குள்ளான பொருளின் நீளத்தில் ஏற்படும் அதிகரிப்பு.*

**em** : *(அச்சு.)* **'எம்' அலகு**: *அச்சுவரி நீளத்திற்குரிய அலகுகளில் பெரும்படி அலகுக்கூறு.*

**embellish** : **ஒப்பனை** : *ஒப்பனை செய்தல் அல்லது அழகுபடுத்துதல். அலங்கார வேலைப்பாடுகள் செய்து நுணுக்க நயமுடையதாக்குதல்.*

**emblazon** : **மரபுருவ ஒப்பனை** : *மரபுரிமைச் சின்ன உருவங்களால் ஒப்பனை செய்தல்.*

**emblem** : **இலச்சினை** : *மரபுச் சின்னமாகப் பயன்படும் சிறப்பு அடையாளக் குறி.*

**embossed** : *(பட்.)* **புடைப்புச் சித்திர வேலைப்பாடு** : *மேல் வந்து முனைப்பாக இருக்கும்படி புடைப்புருப்படச் செதுக்கிச் செய்யப்படும் சித்திர வேலைப்பாடு.*

**embossing** : **புடைப்புச் சித்திரக் கலை** : *புடைப்பு உருப்படச் செதுக்கிச் செய்யப்படும் சித்திரக் கலை.*

**embossing hammer** ; **புடைப்புச் சித்திரச் சுத்தி** : *உட்புழைவான பொருள்களின் உட்பரப்பில் வேலைப்பாடு செய்வதற்குப் பயன்படும் சுத்தி.*

**embossing plate** : *(அச்சு.)* **புடைப்புச் சித்திரத் தகடு** : *ஒரு தகட்டின் பரப்புக்குக் கீழே செதுக்கப் பட்டுள்ள பகுதிக்குள் காகிதத்தை நுழைத்து அச்சுப் பக்கத்தின் உருவத்தை புடைப்பாக்கம் செய்யலாம்.*

**emergency brake** . *(தானி.)* **அவசரத் தடுப்புக் கருவி** : *உந்து வண்டியில் கையினால் இயக்கப்படும் தடுப்புக் கருவி. இதனைப் பொதுவாக நிறுத்தும் தடுப்புக் கருவி என்பர். இதனை உந்து வண்டி ஏற்றத்தில் ஏறும்போது மட்டுமே மிக அரிதாகப் பயன்படுத்துவர். நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் உந்து வண்டி நகராமல் தடுப்பதே இதன் பணி.*

**emergency floatation gear** : *(வானூ.)* **அவசர மிதவைப் பல்லிணை** : *விமானம் அவசரமாக நீரில் இறங்க வேண்டியிருக்கும் நேர்வில் மிதப்பாற்றல் அளிப்பதற்காகத் தரைத் தளத்தில் இணைக்கப்பட்டுள்ள ஒரு சாதனம்.*

**emergency switch**: : *(மின்)* **அவசர இணைப்பு விசை** : *ஓர் அவசர நிலையின்போது அல்லது தீ விபத்தின்போது ஒரு கட்டிடத்*

தின் எல்லாப் பகுதிகளிலிருந்து மின்னோட்டத்தை துண்டிப்பதற்காக மின் நிறுவனத்தின் மானிக்குமேலாக இணைக்கப்பட்டுள்ள ஓர் இணைப்பு விசை.

**emery** : **குருந்தக்கல்** : சாணை பிடிப்பதற்குப் பயன்படும் மிகக் கடினமான கனிமம். இது அலுமினியா, இரும்பு, சிலிக்கா, சுண்ணாம்பு ஆகியவற்றின் ஆக்சைடினாலானது. இது உராய்வுப் பொருளாகப் பயன்படுகிறது.

**emery cloth** : **தேய்ப்புத் துணி** : உலோகப் பரப்புகளைத் தேய்த்து மெருகேற்றுவதற்குப் பயன்படும் குருந்தக்கல் தூள் பூசிய துணி.

**emery paper** : (க.க.) **தேய்ப்புத் தாள்; உப்புத்தாள்** : உலோகங்களுக்கு மெருகேற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் குருந்தக்கல் தூள் பூசிய தாள்.

**emery wheel** : (எந்.) **சாணைக் கல்** : சாணை பிடிப்பதற்காகக் குருந்தக்கல் ஒட்டப்பட்ட சக்கரம். இதனை வேகமாகச் சுற்றிச் சாணை பிடிக்கப்பயன்படுத்துவர்.

**emission** : (மின்.) **ஒளி வெளிப்பாடு**: ஒரு பரப்பிலிருந்து எலெக்ட்ரான்கள் வெளிப்படுதல்.

**emission theory** : **ஒளி வெளிப்பாட்டுக் கோட்பாடு** ; "ஒளிவிடு பொருள்களின் நுண்ணிய பகுதிகளிலிருந்து ஒளிவெளிப்படுகிறது' என்னும் கோட்பாடு.

**emissivity**:(குளி.பத.)**ஒளிவெளிப்பாட்டுத் திறன்** : ஒரு பரப்பிலிருந்து கதிரியக்கம் மூலம் வெப்பம் வெளிப்படுத்தப்படும் திறன்.

**empennage** : (வானூ.) **வால் பரப்பு** : விமானத்தின் வால் பகுதியின் பரப்புகள்.

**empirical rule** : (பொறி.) **அனுபவ விதிமுறை** : முற்றிலும் கணித அல்லது இயற்பியல் வழியில் அல்லாமல், செயலறிவின் அல்லது அனுபவத்தின் அடிப்படையிலமைந்த ஒரு விதி முறை அல்லது சமன்பாடு.

**e.m u.** : (மின்.) **மின்காந்த அலகு (இ.எம்.யூ.)** : மின்காந்த அலகுகளைக் குறிப்பிடும் பன்னாட்டு அடிப்படை அளவு.

**emulsification** : (குளி.பத.) **திரவக் குழம்பு** ; ஒன்றில் ஒன்று கரையாத இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட திரவங்களின் கலவை.

**emulsify** : (குழை.) **குழம்பாக்கு**: ஒரு திரவத்தில் நேர்த்தியாகக் குழம்பாக்கிய நிலையில் ஒரு பொருளை மிதக்கவிடுதல்.

**emulsion**: (ஒளி.) **பசைக் குழம்பு**: ஒளிப்படத் தகடுகளுக்கும் படச் சுருளுக்கும் பயன்படும் வெள்ளி உப்புக் கலவை.

**en** : (கம்.) "**என்" அலகு** : அச்சுக் கோப்பதில் உள்ள ஓர் அகல அளவு. இது "எம்" அலகில் ஒரு பாதி.

**enamel** : **எனாமல்** : வண்ணமாகிப் பூசப்படும் ஒரு பொருள். இந்தப் பூச்சு காய்ந்தவுடன் கடினமாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.

**enameled** : **காகித மெருகு** : காகிதத்திற்கு மிக நேர்த்தியாகப் பளபளப்பு மெருகேற்றுதல்.

**enameled brick** : (க.க.) **மெருகேற்றி செங்கல்** : எனாமல் போன்று நன்கு பளப்பளப்பாக மெருகேற்றிய செங்கல்.

**enameled wire** : (மின்.) **மெருகேற்றிய மின்கம்பி** : மின்காப்பு எனாமல் மூலம் மெருகு பூசப்பட்ட கம்பி. இது பெரும்பாலும்

பஞ்சு அல்லது பட்டுத்துணியால் பொதியப்பட்டிருக்கும்.

**enargite :** *(உலோ.)* **எனார்கிட்:** $Cu_3AsS_4$. இது ஒரு செம்புத் தாது. (செம்பு ஆர்சனிக் சல்பைடு).


**encircle : வளை(தல்) :** வட்ட வடிவமாகச் சூழ்ந்து கொள்ளுதல்; வட்டவடிவமாகக் கோடு வரைதல்.

**enclosed arc lamp :** *(மின்.)* **அடைப்புச் சுடர்விளக்கு:** ஒரு சுடர் விளக்கில், சுடரினை ஒரு கோள வடிவம் அடைத்துக் கொண்டிருக்குமாறு அமைத்தல். இதனால் சிறிதளவு காற்று மட்டுமே உட்புக முடியும். அதனால் கார்பன் செலவழிவு குறையும்.

**enclosed fuse:** *(மின்.)* **அடைப்பு உருகி :** காற்றுப் புகாத காப்புறை அண்டையிடத்து வைக்கப்பட்டுள்ள ஓர் உருகி இது. வாயு அல்லது தூசு தீப்பற்றி விடாமல் தடுக்கிறது.

**endive scroll : சுருள் இலை வடிவு :** சுருள் இலைபோல் செதுக்கப்பட்ட வடிவமைப்பு.

**end-lap joint : முனை கவி இணைப்பு:** இணைக்கப்படும் இரு துண்டுகளையும் அவற்றின் அகலங்களின் அளவுக்கு இரு பகுதிகளாகப் பகுத்து அமைக்கப்படும் முனை இணைப்பு.



முனை கவி இணைப்பு

**endless saw : முனையிலா ரம்பம்:** சுற்றுவரிப்பட்டையிட்ட ஈர்வாள்.

**end mill :** *(எந்.)* **முனை வெட்டு எந்திரம் :** கதிர்களுடன் அல்லது பொருத்து குழியுடன் நேரடியாகப் பொருத்துவதற்கான, கூம்பு வடிவத் தண்டு கொண்ட வெட்டு எந்திரம்.

**endogen :** *(தாவ.)* **தண்டக வளர்ச்சித் தாவரம் :** தண்டில் அக வளர்ச்சியுடைய தாவர வகை.

**end paper : இறுதிக் காகிதம் :** கட்டுமானம் செய்த புத்தகங்களில் முன்புறமும் பின்புறமும் வைத்துத் தைக்கப்படும் காகிதம்.

**end play :** *(மின்.)* **இறுதி முனை இயக்கம் :** ஒரு சுழலும் உறுப்பின் இறுதி முனைகளிலுள்ள இயக்கம்: அதாவது, நீளப்பாங்கான திசையிலுள்ள இயக்கம்.

**end thrust :** *(பொறி.)* **முனை உதைப்பு :** செங்குத்தான அல்லது கிடைமட்டமான ஒரு சுழலும் தண்டினால் ஏற்படும் முனை இயக்க அல்லது நீளப்பாங்கான அழுத்தம். இது பெரும்பாலும் ஓர் உதைப்புத் தாங்கியினால் உண்டாகும்.

**endurance :** *(வானூ.)* **இசை தகைவு :** ஒரு விமானம், வானத்தில் ஒரு குறிப்பிட்ட உயரத்தில், குறிப்பிட்ட வேகத்தில் நிலைத்து நிற்கக் கூடிய உயர்ந்த அளவு நேரம்.

**endurance limit:** *(உலோ.)* **இசைதகைவு வரம்பு :** ஒரு பொருள் நலிவுறாமல் எவ்வளவு அதிக அளவுத் தகைவுக்கு உட்படுத்தப்படலாமோ அந்த அளவு.

**energy :** *(இயற்.)* **விசையாற்றல்:** ஒரு பொருள் தடையினைச் சமாளித்து செயலுறுவதற்குத் திறனுடையதாக இருக்குமாயின், அது விசையாற்றல் உடையதெனக் கூறப்படும். இந்த விசையாற்றல் (1) விசையாற்றல் (2) உள்நிலையாற்றல் என இருவகைப்படும்.

**engage** : *(எந்.)* **பிணைப்பு :** எந்திர உறுப்புகளை, இயக்கத்தை அல்லது விசையை அனுப்பீடு செய்வதற்காக ஒன்றாக இணைத்தல் அல்லது தொடர்புபடுத்துதல். அதாவது, பல்லிணை மாற்று நெம்புகோல் உந்து வண்டியின் வேகமாற்றப் பல்லிணைகளை பிணைக்கவோ, விடுக்கவோ செய்கின்றன.

**engine** : *(இயற்.)* **எந்திரம்/பொறி:** பல்வேறு உறுப்புகளுள்ள எந்திர அமைப்பு. நீராவி, எரிவாயு, பெட்ரோல் போன்றவற்றினால் இயக்கக் கூடிய பலவகை எந்திரங்கள் உள்ளன.

**engine altimeter** : *(வானூ.)* **எந்திர உயரமானி :** அளவுக்கு மீறி அழுத்தம் நிரம்பிய எந்திர அறையில் ஏற்படும் அழுத்தத்திற்கு நேரிணையான உயரத்தைக் குறித்துக் காட்டும் உயரமானி.

**engine control** : *(வானூ.)* **எந்திரக் கட்டுப்பாடு** : எந்திரத்தின் விசை வெளிப்பாட்டினைக் கட்டுப்படுத்தப் பயன்படும் சாதனம். காற்றுக் கட்டுப்பாடு அல்லது எந்திரக் கட்டுப்பாடு மூலம் வேகத்தைக் கட்டுப்படுத்தலாம்.

**engine cowling** : *(வானூ.)* **எந்திர மூடி** : விமானத்தின் எந்திர அமைப்பில் குளிர்காற்றுப் பாய்வதை நெறிப்படுத்தி முறைப்படுத்துவதற்காக அந்த எந்திரத்தைச் சுற்றி வைக்கப்படும் ஒரு மூடி.

**engine displacement:** *(வானூ.)* **எந்திர இடப்பெயர்ச்சி** : ஒவ்வொரு உந்து தண்டின் ஒரு முழு உகைப்பின்போது நீள் உருளைகள் அனைத்தின் உந்து தண்டுகளினாலும் இடம் பெயரச் செய்யப்படும் மொத்தக் கன அளவு.

**engineer** : **பொறியாளர் :** மின்னியல், சுரங்கவியல், எந்திரவியல், கட்டிடவியல் முதலிய துறைகளில் வடிவமைப்பு, கட்டுமானம், மேம்பாடு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றுள்ளவர்.

**engineering** : **பொறியியல் :** தொழில் துறையின் பல்வேறு துறைகளில் திறமையாகத் திட்டமிட்டு கட்டுமானம் செய்யும் கலையும் அறிவியலும்.

**engineer's chain**; *(எல்.)* **பொறியாளர் சங்கிலி:** இதில் ஒவ்வொன்றும் 30செ.மீ.நீளமுள்ள100கண்ணிகள் இருக்கும். நில அளவையில் முன்னர் பெருமளவில் பயன்படுத்தப்பட்ட குன்டர் சங்கிலி 20மீ. நீளமுடையது. இதில் ஒவ்வொன்றும்18—ட34செ.மீ.நீள'00 கண்ணிகள் இருக்கும்.

**engine lathe**: *(எந்.)* **எந்திரக் கடைசல் பொறி**: ஒரு குறுக்குச் செருக்குழைவும், கூட்டு ஆதாரமும், முன்னீட்டுத் திருகு, விசையூட்டம் உடைய ஒரு கடைசல் எந்ரம். இதில் மாற்றப் பல்லிணைகளும் அமைந்திருக்கும்.

**engine weight per horse power**: **ஒரு குதிரை ஆற்றலுக்கு எந்திர எடை** : ஓர் எந்திரத்தின் உலர் எடையை அதன் குதிரை ஆற்றலினால் வகுத்துப் பெறும் ஈவு.

**engraving** : *(அச்சு.)* **செதுக்கு வேலைப்பாடு** : (1) ஒரு தகட்டில் உட்செதுக்கு வேலைப்பாடுகள் செய்தல்.

(2) செதுக்கு வேலைப்பாடு செய்யப்பட்ட வடிவமைப்பு.

(3) செதுக்கு வேலைப்பாடு செய்த ஒரு தகட்டிலிருந்து அச்சிடப்பட்ட படம்.

**enrichment** : **நுண் நய ஒப்பனை :** சாதாரண வேலைப்பாட்டில் நுண் நய ஒப்பனை சேர்த்து அழகுடையதாக்குதல்.

**ensemble :** **பொதுத் தோற்றம்:** ஒரு வேலைப்பாட்டின் பகுதியல்லாமல், முழுமையான மொத்தத் தோற்றம்.

**entablature :** (க.க.) **தூண் தலைப்பு :** பண்டைய பாணிக் கட்டிடங்களில் ஒரு தூணுக்கு மேலுள்ள தலைப்பு அமைவு.

**entasis of a column :** **தூண் மையப் புடைப்பு :** ஒரு தூணின் மிகச் சிறிதளவான மையப் புடைப்பு முறை. இது உட்புழைவுத் தோற்றம் ஏற்படாமல் செய்ய உதவுகிறது.

**entrance switch:** (மின்.) **நுழைவு விசை :** ஒரு கட்டிடத்திற்குள் நுழையும் கம்பிகள் இணைக்கப்பட்டுள்ள விசை.

**entropy :** (இயற்.) **அகவெப்பம்:** வெப்ப இயக்கவியல் செயற்பணி; இயற்பியல்-வேதியியல் அமைப்பு முறையில் பெற முடியாதிருக்கும் ஆற்றலின் அளவு.

**enumerated :** **கணக்கீடு :** ஒன்றன்பின் ஒன்றாக எண்ணிடுதல்; தனித்தனியே குறித்துரைத்தல்.

**envelope corner card :** (அச்சு.) **கடித உறை முகவரி :** கடித உறைகளில் இடது மேல் முனையில் அச்சடிக்கப்பட்டுள்ள முகவரி.

**eosin :** (வேதி.) **சாயப் பொருள் :** சிவப்பூதா நிறச் சாயப் பொருள்; கரி எண்ணெயிலிருந்து எடுக்கப்படுகிறது. பருத்தி, பட்டு, கம்பளித் துணிகளுக்குச் சாயமிடுவதற்கும், சிவப்பு மை, அரக்கு ஆகியவை தயாரிக்கவும் பயன்படுகிறது.

**epicycloid :** (வடி.) **வளைவரி :** வட்டக்கோல் வட்டத்தின் வளைவரி.

**epoxy resins:** (குழை.) **இப்போக்சிப் பிசின்:** இன்றியமையாத பிளாஸ்டிக்பொருள். பிஸ்பினால், எபிகுளோரோஹைட்ரின் ஆகியவை வினைபுரிவதால் தயாரிக்கப்படுகிறது. தொழில்துறையில் காப்புப் பூச்சுப் பொருட்களாகப் பயன்படுகிறது.

**epsom salt:** (வேதி.) **வெளிமக் கந்தகி:** இதன் வேதியியற் பெயர் மக்னீசியம் சல்பேட், நிறமற்ற படிக உப்பு, பேதிமருந்தாகவும், பருத்தித் துணிகளுக்கு மெருகேற்றவும் பயன்படுகிறது.

**equal forces :** (இயற்.) **சமநிலை விசைகள் :** எதிர்மாறான திசைகளில் செயல்புரிந்து சமநிலையை உண்டு பண்ணும் விசைகள்.

**equalizer:** (மின்.) **சமன்படுத்தி:** குறைந்த அளவுத் தடையுள்ள மின் கம்பிகள் அல்லது சலாகைகள். இவை, இணையாக இயங்கும் கூட்டு மின்னாக்கிகள் அனைத்திலும் மின்னகம், தொடர்புலங்கள், இணைப்புலம் ஆகியவை சேரும் முனைகளை இணைக்கின்றன.

**equalizer brake :** (தானி.எந்.) **சமன்படுத்தித் தடை:** உந்து வண்டியில் நெம்புகோல்களையும், சலாகைகளையும் சீரமைத்து வைத்திருக்கும் முறை. இதில், தடைமிதி கட்டையில் அல்லது தடை நெம்புகோலில் அழுத்தம் செலுத்தப்படும்போது, சலாகை வழியாக, சக்கரங்களுக்குத் தடையழுத்தம் அளிக்கும் முறையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சலாகைகளுக்கு அழுத்தத்தை அனுப்புவதற்கென வடிவமைப்பு செய்யப்பட்டிருக்கும்.

**equalizer wire :** (மின்.) **சமன்படுத்திக் கம்பி :** சமநிலை மின்னோட்டம் பாய்கிறவாறு இணையாக இணைக்கப்பட்டுள்ள இரு கூட்டு மின்னாக்கிகளை இணைக்கும் கம்பி.

**equalizing current** : *(மின்.)* **சமன்படுத்தி மின்னோட்டம்** : மின் உற்பத்தியைச் சமன்படுத்துவதற்கு இணையாக இணைக்கப்பட்டுள்ள இரு கூட்டு மின்னாக்கிகளுக்கிடையில் ஓடும் மின்னோட்டம்.

**equation** ; *(கணி.)* **சமன்பாடு** : கணிதத்தில், இரு அளவுகளின் சமன்மையைக் குறிக்கும் சமன்பாடு.

வேதியியலில் வேதியியல் வினைகளைக் குறியீடுகளாகக் குறித்தல்.

**equilibrator** : **சமநிலைப்படுத்தி** : சமநிலையை ஏற்படுத்தும் ஒரு சாதனம்.

**equilibrium** : *(இயற்.)* **சமநிலை** : சரியமைதி நிலை.

**equivalent** : **சம மதிப்புகள்** : எண்ணிக்கையில் ஒன்றுக்கொன்று சரிசமமாகவுள்ள, ஆனால் வெவ்வேறு வகையில் குறிக்கப்படும் எண்கள் அல்லது அளவுகள்.

**equivalent evaporation** : *(பொறி.)* **சரிநிகர் ஆவியாதல்** : ஒரு கொதிகலனுக்கு212°ஃபா. சூடான நீர் வந்து, அது அதனை அதே வெப்ப நிலையிலும், வாயுமண்டல அழுத்தத்திலும் ஆவியாக்குமானால், ஒரு மணிநேரத்தில் ஆவியாகக் கூடிய நீரின் அளவு.

**equivalent monoplane**:*(வானூ.)* **சரிநிகர் ஒற்றைத் தட்டு விமானம்** : இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சிறகுகளின், எத்தற்கும் பொருட்களைத் தூக்குவதற்குச் சரிநிகரான ஒற்றைத் தொகுதிச் சிறகுகளையுடைய விமானம்.

**equivalent weights of paper** : *(அச்சு.)* **சரிநிகர் எடைமானங்கள்** : ஒரே அடிப்படையான எடையுள்ள ஆனால், வேறுபட்ட வடிவளவு காரணமாக வேறுபட்ட கட்டு (ரீம்) எடை கொண்ட பல்வேறு வகைக் காகிதங்களின் எடைமானங்கள்.

**erecting** : **நிறுவுதல்** : எந்திரங்களின் பல்வேறு உறுப்புகளை ஒருங்கிணைத்துப் பொருத்தி இறுதியாக நிறுவுதல்.

**erosion** : *(மண்.)* **அரிமானம்** : மழை, வெப்பம், குளிர்காற்று முதலிய இயற்கையாற்றல்களால் பாறைகள் அடையும் அரிப்புத் தேய்மான அழிவு.

**errata**: *(அச்சு.)* **அச்சுப்பிழைகள்** : அச்சுப்பிழைத் தொகுப்புப் பட்டியல்.

**escalator** : **இயங்கு படிக்கட்டு** : பண்டக சாலைகள், ரயில் நிலையங்கள் முதலியவற்றில் பயன்படுத்தப்படும் இயங்கும் படிக்கட்டு.

**escalop shell** : **சிப்பியணிகலன்** : ஈரிதழ்த் தோடுடைய நத்தைச் சிப்பியினாலான அணிகலன்,

**escapement**: **இயக்க மாற்றி** : கடிகாரங்களில் செங்குத்து இயக்கத்தை எதிரீட்டு இயக்கமாக மாற்றுகிற ஒரு சாதனம். இது கடிகாரங்களில் ஒரு சீரான இயக்கம் நடைபெற வழிசெய்கிறது.

**escape velocity**: *(விண்.)* **வெளிச்செல் வேகம்** : ஒரு பொருள் பூமியின் ஈர்ப்புப் புலத்திலிருந்து விடுபட்டு விண்வெளிக்குச் செல்வதற்குத் தேவையான வேக அளவு.

**escritoire** : **சாய்வு மேசை** : தாள் எழுதுகோல் முதலிய பொருள்களை வைக்க உதவும் இழுப்பு அறைகளுள்ள சாய்வான எழுது மேசை.

**esparto paper**: **எஸ்பார்ட்டோ தாள்**: ஸ்பெயின், ஆஃப்ரிக்கா ஆகிய பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 'எஸ்பார்ட்டோ' என்னும் புல்வகையிலிருந்து தயாரிக்கப்படும் தாள்.

**espognolette**: **பலகணித் தாழ்ப்பாள்**: ஃபிரெஞ்சு நாட்டு அலங்காரப் பலகணித் தாழ்ப்பாள்.

**ester**: (வேதி.) **ஈஸ்டர்**: ஒரு கரியக உப்பு மூலப் பொருளும் அமிலமும் வினைபுரிவதால் கிடைக்கும் ஒரு கலவை. (உ-ம்) ($CH_3C_7H_5O_3$) = மெத்தில் சாலிசைக்ளேட்.

**ester gum**: (வேதி.) **ஈஸ்டர் கோந்து**: படிக வண்ண மெருகு தயாரிக்கப்படும் பொருள். பிசின், கிளிசரின் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

**estimating**: (க.க.) **மதிப்பீடு செய்தல்**: ஒரு வேலைப்பாட்டுக்குத் தேவைப்படும் பொருளின் அளவு, உழைப்பின் அளவு, முடிவுற்ற பொருளின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கிடுதல்.

**etching**: **செதுக்கு வேலைப்பாடு**: மெழுகு பூசிய தகட்டுப் பரப்பில் ஊசியினால் செதுக்கு வேலை செய்து, செதுக்கப்பட்ட பகுதிகளை அமிலத்தில் வினைபுரியச் செய்து உருவம் அமைத்தல்.

**ethane** : (வேதி.) **ஈத்தேன்** : வெள்ளிய நிறமாக எரிசுடர் வீசுகிற, நீரில் கரையாத, நிறவாடையற்ற நீர்க்கரியகக் கூட்டுப் பொருள் ($C_2H_6$)

**ethanol** : (வேதி.) **எத்தனால்** : எத்தில் ஆல்ககால் ($C_2H_5OH$).

**ether** : (வேதி,) **ஈதர்** : $(C_2H_5)_2O$ மயக்க மருந்தாகப் பயன்படுகிற, எளிதில் ஆவியாகக் கூடிய சேர்ம நீர்ம வகை. கந்தக அமிலத்துடன் ஆல்ககால் கலந்து தயாரிக்கப்படுகிறது.

**ethyl** : (வேதி.) **எத்தில்** : $C_2H_5$ வெறியம் (ஆல்ககால்) முதலியவற்றிலடங்கிய அடிப்படை நீர்க்கரியகப் பொருள். ஈத்தேனிலிருந்து ஒரு ஹைட்ரஜன் அணுவை விலக்கி விடுவதன் மூலம் இது கிடைக்கிறது.

**ethyl cellulose** : (வேதி.குழை.) **எத்தில் செல்லுலோஸ்** : மரக்கூழ் அல்லது பருத்திக் கந்தல்கள் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இது வலுவான வெப்பந் தாங்கக் கூடியது; எளிதில் தீப்பிடிக்காதது. இது வார்ப்படங்கள் தயாரிக்கவும், காப்புப் பூச்சுகளுக்கும், மின்காப்புக்கும் பயன்படுகிறது.

**ethylene** : (வேதி.) **எத்திலீன்** : நிறமற்ற, எளிதில் தீப்பிடிக்கக் கூடிய, பூரிதமாகாத, வாயு வடிவக் கூட்டுப் பொருள் ($C_2H_4$). இது ஒளிரும் வாயுக்களில் அடங்கியுள்ளது.

**eucolloids** : (வேதி.குழை.) **ஈக்கோலாய்டுகள்**: ஆயிரத்திற்கு மேற்பட்ட மீச்சேர்மங்கள். அதாவது இதில், ஒவ்வொரு மூலக்கூறும், தனிப்பொருளின் 1000 அலகுகளைக் கொண்டிருக்கும். இதன் கரைசல்கள் மிகுந்த பசைத் தன்மையுடனிருக்கும். திட நிலையில் இவை மிகவும் கடினமானவை.

**eutectic** : (இயற்;உலோ;வேதி.) **கூறு நிலையமைவுடைய** : கலவைகளில் ஒரே வெப்ப நிலையில் ஒருங்கே திட்ப உருப்பெறும்படியான அளவுத் தொடர்பமைதியில் எல்லாக் கலப்புக் கூறுகளையும் உடைய.

**eutectic alloys** : (உலோ.) **கூறு நிலையமைதி உலோகக் கலவைகள்**: அலுமினியம், சிலிக்கன், காட்மியம், பிஸ்மத் போன்ற உலோகக் கலவைகள் இந்த வகையைச் சேர்ந்தவை. ஒன்றில் மற்றொன்று முற்றிலுமாகக் கரைந்து விடக் கூடிய இரு உலோகங்களின் கலவை.

**evaporate**: (வேதி.) **ஆவியாக்கு**:

ஈர நயப்பு நீக்கி ஆவியாக மாற்று தல்.

**evaporation** : **ஆவியாக்குதல்** : ஈர நயப்பு நீக்கி ஆவியாக்குதல்; வேதியியற் பொருட்களை உலர்த்திச் செறிமங்களாக்குதல்; திரவத்தை ஆவியாக மாற்றுதல்.

**evolution** ; (உயி,) **உயிர்மலர்ச்சி/பரிணாமம்** : உயிரினங்களும் இன வகைகளும் படிமுறை வளர்ச்சியடைந்தே தொகை வளமும் வகை வளமும் வளர்ச்சி மாறுபாடுகளும் உயர்வும் பெற்றன என்னும் உயிரியல் கோட்பாடு.

**excavation** : (க.க.) **அகழ்வு** : பொறியியல் பணிகளுக்காக நிலத்தை அகழ்தல் ; அகழ்வு செய்த பள்ளம்.

**excelsior** : **உட்திணிவு மரச்சீவல்**: உட்திணித்து இடம் நிரப்பப் பயன்படுத்தப்படும் மரச்சீவல்.

**exchange** : **பரிமாற்றம்** : பணத்திற்காக பணிபுரிதல் அல்லது சரக்குகளை விற்பனை செய்தல்; சரக்குகளுக்குப் பணம் கொடுத்தல்; வாணிகத்தில் பண்டங்களைப் பரிமாற்றிக் கொள்ளுதல்; நாணயப் பரிமாற்றம்.

**excitation of field** : (மின்.) **புலக்கிளர்ச்சி** : ஓர் இயக்கியின் அல்லது மின்னாக்கியின் புலங்களிலுள்ள கம்பிச் சுருள்களின் வழியே மின்னோட்டத்தைச் செலுத்தி காந்த இயக்கம் உண்டு பண்ணுதல்.

**excited molecule** : (இயற்.) **கிளர்வுறு மூலக்கூறு** : ஒரு மின்னியல் வெளியேற்றத்திலிருந்து ஆற்றலை ஈர்த்துக் கொள்ளும் ஒரு மூலக்கூறு. அவ்வாறு ஈர்த்துக் கொள்ளும் மின் ஆற்றலை அந்த மூலக்கூறு ஒளியாக வெளியிடுகிறது.

**exciter** : (மின்.) **கிளர்ப்பி**: மாறு மின்னாக்கிப் புலத்திற்கு மின் விசையளிப்பதற்குப் பயன்படும் ஒரு சிறிய நேர்மின்னாக்கி.

**exciter current** : (மின்.) **கிளர்ப்பி மின்னோட்டம்** : ஒரு பெரிய மாறு மின்னாக்கிக்கு அல்லது மின்னாக்கிக்குப் புல மின்னோட்டமளிப்பதற்குப் பயன்படும் ஒரு சிறிய மாறு மின்னாக்கி உற்பத்தி செய்யும்மின்னோட்டம்.

**exciiter generator** : (மின்.) **கிளர்ப்பி மின்னாக்கி** : ஒரு மாறு மின்னாக்கிக்குப் புலமின்னோட்டமளிப்பதற்குப் பயன்படும் ஒரு நேர் மின்னாக்கி.

**exhaust** : (எந்.) **புறம் போக்கி** : ஓர் எஞ்சினின் நீள் உருளையிலிருந்து பயன்படுத்தப்பட்ட நீராவியை வெளியேற்றுவதற்கான எந்திரப் பொறியமைவு.

**exhaust collector ring** : (வானூ.) **உள் வெப்பாலை வெளியேற்றமைவு** : எஞ்சினின் நீள் உருளைகளிலிருந்து வெளியேறும் வாயுக்களைப் புறம்போக்குவதற்கான வட்ட வடிவச் செல்வழி.

**exhaust fan** : (மின்.) **புறஞ் செல் காற்றோட்ட விசிறி** : தூசு, புகை முதலியவற்றை உறிஞ்சி வெளியேற்றுவதற்கான சுழல் விசிறி.

**exhaust manifold** : (தானி.) **வெளியேற்றுப் பல்புழை** : பல்வேறு நீள் உருளைகளிலிருந்து வெளியேற்றுக் குழாய்க்கு வாயுக்களைக் கொண்டு செல்வதற்கான பல் புழைவாய்.

**exhaust pipe** : (தானி.) **வெளியேற்றுக் குழாய்** : நீள் உருளைகளிலிருந்து வெளியேறும் நீராவியை அல்லது வாயுக்களை வெளியே கொண்டு செல்லும் குழாய்.

**exhaust valve : வெளியேற்று ஓரதர் :** எஞ்சினிலிருந்து வாயு அல்லது நீராவி வெளியேறுவதற்கு மட்டுமே அனுமதிக்கும் ஓரதர்.

**exlibris:** *(அச்சு.)* **முகப்புச் சீட்டு:** புத்தக உடைமை உரிமையாளரின் பெயர், சின்னம் முதலிய விவரங்களடங்கிய முகப்புப் பொறிப்புச் சீட்டு.

**exophthalmic goitre** : *(நோயி.)* **கழுத்துக் கழலை:** தைராய்டுச் சுரப்பிகளில் உண்டாகும் ஒரு வகை நோய். இது கண்களைப் புறந்தள்ளி, கழுத்தை வீங்கச் செய்கிறது.



கழுத்துக் கழலை

**exosphere** : *(விண்.)* **புறக்கோடி வாயு மண்டலம் :** வாயு மண்டலத்தின் புறக்கோடி விளிம்பு அல்லது படுகை.

**exotic fuel** : *(விண்.)* **அயற்பண்பு எரிபொருள் :** விமானங்களுக்கும், ராக்கெட்டுகளுக்கும் பயன்படும் பல்வேறு வாயுக்கள் கலந்த எரிபொருள்.

**expanded metal :** *(உலோ.)* **விரிவாக்கிய உலோகம் :** வெட்டிக் காரைக் கட்டுமான உள்ளீடாகப் பயன்படும், பின்னால் சட்டமாக விரிவாக்கப்படுகிற உலோகத் தகடு.


**expanding mandrel** : *(எந்.)* **விரிவாக்கிய நடுவச்சு :** விரிவாக்கிக் கொள்ளக்கூடிய வகையில் அமைந்த கடைசல் பிடிக்கும் பொறியின் நடுவச்சு.

**expandig universe :** *(விண்.)* **அகல் விரிவு அண்டம் :** நாம் கண்ணால் காணும் சூரியனும், விண்மீன்களும்ஒருவகைப்பால் வீதிமண்டலத்தின் ஒரு பகுதி. இது தவிர, வேறு வகைப் பால் வீதிமண்டலங்களும் உள்ளன. இவற்றின் ஒளி, ஓர் ஊடகத்தின் ஒளிச் சிதறலால் உண்டாகும் நிறமாலையில் நீண்ட அலை நீளங்கள் கொண்ட சிவப்பு நிறமுடையவை. இதனாலேயே, இவை நம்மிடமிருந்து தூர விலகிச் செல்வது போல் தோன்றி, அண்டம் அகன்று விரிந்து செல்வதாகத் தோன்றுகிறது.

**expansion :** *(இயற்.)* **விரிவாக்கம்:** பரவுதல்; விரிவடைதல்; வடிவளவில் பெருக்கமடைதல்,

**expansion bit** : *(மர.வே.)* **விரிவாக்க வெட்டிரும்பு :** ஒரு துளையிடும் வெட்டிரும்பு. இதில் வெட்டுக்கத்திகள் ஆரைபோல் அமைக்கப்பட்டிருக்கும். இதனால், ஒரே கருவியினால், பல்வேறு விட்டங்களுடைய துளைகளைச் செய்யலாம்.

**expansion bolt : விரிவாக்க மரையாணிகள் :** ஆப்பு போல் செயற்படும் பிரிப்புப் பெட்டியுள்ள மரையாணி. இது செங்கலுடன் அல்லது கான்கிரீட்டுடன் இணைக்கப் பயன்படும்.



விரிவாக்க மரையாணி

**expansion fit :** *(உலோ.வே.)* **விரிவாக்க இணைப்பு :** உலோக உறுப்புகளை ஒன்றோடொன்று இறுகப் பொருத்தி இணைத்தல். உட்பகுதி பனிக்கட்டி மூலம் சுருக்கவோ உறைவிக்கவோ செய்யப்பட்டு, சுருங்கும் இணைப்புக்கு எதிரான நிலையில் பொருத்தப்படுகிறது.

**expansion joint** : *(பொறி.)* **விரிவாக்க மூட்டு :** குழாய்களில் விரிவாக்கத்தாலும் சுருக்கத்தாலும் ஏற்படும் இயக்கத்தைச் சமாளிப்பதற்குரிய சாதனம். ஒரு நீராவி மற்றும் வென்னீர் சூடாக்கும்

அமைப்புகளில் விரிவாக்க மூட்டுகள் இருவகைப்படும்: (1) நடுவு குழல் வகை. (2) துருத்திவகை. குறைந்த அழுத்தத்தில் துருத்தி வகை சிறந்தது.

**expansion reamer** : *(எந்.)* **விரிவாக்கத் துளைச்சீர்மி** : வடிவளவுக்கேற்ப குறிப்பிட்ட அளவு நேரமைவுக்கு அனுமதிக்கும் ஒரு துளைச் சீர்மி. இத்தகைய நேரமைவு, திருகி மூலம் கட்டுப்படுத்தப்படும் ஆப்பு வினை வாயிலாக நடைபெறும்.

**experiment : பரிசோதனை** : அறிந்து கொண்ட சூழ்நிலைகளில் முடிவுகளைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக நடத்தப்படும் சோதனை அல்லது செய்முறை.

**experiment** : *(வானூ.)* **பரிசோதனை (அல்லது சோதனை) அறை** : விமானங்களின் மாதிரிகளும் மற்றப் பொருட்களும் சோதனை செய்யப்படுவதற்குரிய ஒரு காற்றுப் புழைவாயின் மையப்பகுதி.

**explosive** : **வெடி பொருள்** : ஒரு விசையினால் உரக்க வெடிக்கக் கூடிய ஒரு பொருள்.

**exponent** : *(தானி.)* **விசைக் குறி எண்** : ஓர் எண்ணில் எத்தனை காரணிகள் உள்ளன என்பதைக் குறிக்க ஒரு கணித அளவில் வலது தலைப்பகுதியில் இடப்படும் சிறிய இலக்கம் அல்லது குறியீடு, எடுத்துக்காட்டாக: $a^4$ என்பது a, a, a, a என்னும் நான்கு காரணிகளைக் கொண்டது.

**exposure** : *(ஒளி.)* **ஒளிபடர் நேரம்** : ஒளிப்படச் சுருளில் ஒளி படரும் மொத்த நேரத்தின் அளவு. இது ஒளித்திரையின் ஊடுருவும் திறன், கால நீட்சி, வடிவளவு ஆகியவற்றைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

**exposure meter** : *(ஒளி.)* **ஒளிபடர் நேரமானி** : ஒளிப்படச் சுருளில் சரியான அளவு ஒளிபடர் நேரத்தைக் காட்டுகின்ற ஒரு சாதனம்.

**extended type** : *(அச்சு.)* **நீட்சி அச்செழுத்துரு** : கூடுதலான அகலமுடைய அச்செழுத்துரு.

**extension bit** : *(மின்.)* **நீட்சி வெட்டிரும்பு** : சற்று நீண்ட தண்டுடைய ஒரு வெட்டிரும்பு. வழக்கமான வெட்டிரும்பினைப் பயன்படுத்த முடியாத இடங்களில் இதனைப் பயன்படுத்தலாம்.

**extension cord** : *(மின்.)* **நீட்சி வடம்** : தேவையான இடத்திற்கு மிக அருகில் விளக்கினை அல்லது மின்விசையினைக் கொண்டு வருவதற்கு ஒரு செருகியை அல்லது குதை குழியை உடைய ஒரு கம்பி அல்லது விளக்கு வடம்.

**extension tap** : *(எந்.)* : **நீட்சிக் குழாய்** : எட்டுவதற்குக் கடினமான இடங்களில் குழாய் அமைப்பதற்கு அனுமதிக்கும் வகையில் சற்று நீண்ட தண்டுடைய ஒரு குழாய்.

**extensometer** : **நீட்சிமானி** : (1) உடலின் விரிவாக்கத்தை அளவிடுவதற்குப் பயன்படும் ஒரு நுட்பக் கருவி.

(2) உலோகங்களைச் சோதனை செய்வதற்குப் பயன்படும் ஒரு சாதனம்.

**exterior** : *(க.க.)* **புறத்தோற்றம்** : ஒரு கட்டிடத்தின் முழுமையான அல்லது பகுதியான வெளிப்புறத் தோற்றம்; புறச்சுவர்.

**exterier finish** : *(வண்.)* **புற அலங்காரம்** : புறத்தோற்றத்திற்குப் பொருத்தமான அலங்கார வேலைப்பாடு.

**external aileron** : *(வானூ.)* **புற ஓர மடக்கு** : ஒரு விமானத்தின் சிறகுப் பரப்புகளுக்குப் புறத்தே, ஆனால் பக்கவாட்டில் திருப்பு

வதற்காக அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு தனி காற்றழுத்தத் தளம்.

**external circuit** : *(மின்.)* **புறமின் சுற்று** : மின்னோட்ட ஆதாரத்திற்கு வெளியேயுள்ள ஒரு மின்சுற்றின் பகுதி.

**external drag wire** : *(வானூ.)* **புற இழுவைக் கம்பி** : விமானத்தின் கட்டுமானச் சட்டத்திற்கு அல்லது பிற உறுப்புகளுக்குச் சிறகிலிருந்து செல்லும் ஓர் இழுவைக் கம்பி.

**external thread** : *(எந்.)* **புற இழை** : ஒரு திருகின் அல்லது மரையாணியின் வெளியேயுள்ள இழை.

**extra condensed** : *(அச்சு.)* **அதிகம் குறுகிய** : சராசரி அளவை விடச் சற்றுக் குறுகிய முகப்பினையுடைய அச்செழுத்து.

**extrados** : *(க.க.)* **வெளி வளைவு**: வளை முகட்டின் வெளிப்புற வளைவு.

**extrusion** : *(குழை.)* **புற உந்துப் பொருள்** : வெப்பமூட்டி, அழுத்த மூட்டுவதன் மூலம் குருணை வடிவக் கூட்டுப் பொருளைத் திரவமாக்கி, ஒரு துவாரத்தின் வழியாகச் செலுத்தி, குழாய், தகடு, சலாகை போன்றவற்றின் வடிவில் உருவாக்கம் செய்தல்.

**extrusion of metal** : *(உலோ. வே.)* **உலோகப் புற உந்து** : உலோகத்தைத் தேவையான வடிவத்திற்கு உருவாக்கம் செய்வதற்காக ஒரு துவாரத்தின் வழியாக அதிக அழுத்தத்தில் சூடான அல்லது குளிரான உலோகத்தைச் செலுத்தும் செய்முறை.

**eyebolt** : *(எந்.)* **கண் மரையாணி**: ஒரு முனையில் வழக்கமான



கண் மரையாணி

கொண்டைக்குப் பதிலாக, ஒரு துவாரத்தை அல்லது கண்ணை உடைய ஒரு மரையாணி. இந்தக் கண்ணில் மரையாணியின் இழுவிசையினைத் தாங்கும் ஒரு பிணைப்பூசி, குமிழ்முனை பொருத்தப்பட்டிருக்கும்.

# F

**fabricate** : *(குழை.)* **உருவாக்கம்** : ஏதேனும் உற்பத்தி முறையின் மூலம் அல்லது பல உற்பத்தி முறைகளை ஒருங்கிணைத்து பிளாஸ்டிக்கைப் பொருட்களாக உருவாக்குதல்.

**fabrication** : *(பொறி.)* **உருவாக்கம் செய்தல்** : பல பொருட்களை ஒன்றாக இணைத்து உருவாக்கம் செய்தல். உதாரணமாக, ஒரு கப்பலை அல்லது ஒரு பாலத்தை உருவாக்குதல்.

**fabric universal joint**: *(தானி.)* **பொதுமுறைக் கட்டிணைப்பு மூட்டு** : இது குறுகிய சுழல் தண்டுகளுக்கும், நெருக்கமான கண்டங்களின் இணைப்புக்கும் மிகவும் ஏற்புடையது. எனினும், சிலசமயம் இது அனுப்பீட்டு அச்சுக்கும் மின் அச்சுக்குமிடையிலும் பயன்படுத்தப்படுகிறது.

**facade** : *(க.க.)* **கட்டிட முகப்பு** : ஒரு கட்டிடத்தின் முகப்புத் தோற்றம் அல்லது புறத் தோற்றம்.

**face** : *(எந்.)* **முகப்பு** : (1) மெருகேற்றப்படும் வார்ப்படத்தின் முகப்பு.
(2) பல்லிணைச் சக்கரத்தின் முகப்பு, அதன் பல்லின் அகலத்தைக் காட்டும்; (3) கப்பி வார்ப்பட்டையின் முகப்பு; (4) வெளி விளிம்பின் அகலம்; (5) அச்சுருவின் எழுத்து வடிவப் பாணி; (6) கடைசல் மையங்களுக்கிடையிலான முகப்பு முனை.

**facebrick** : *(க.க.)* **முகப்புச் செங்கல்** : சுவர்களின் எடுப்பான பகுதிகளுக்குப் பயன்படுத்தப்படும் உயர் தரமான செங்கல்.


**face hammer** : *(க.க.)* **முகப்புச் சுத்தி**: கரடுமுரடான கற்செதுக்கு வேலைகளுக்குப் பயன்படும் சுத்தி. இதில் ஒரு முனை மொட்டையாகவும், இன்னொரு முனை வெட்டு முனையாகவும் இருக்கும்.

**face lathe** : *(எந்.)* **முகப்புக் கடைசல் எந்திரம்**: பெரிய, தட்டையான மேற்பரப்புகளை எந்திரத்தால் உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள குறுகிய படுகையுள்ள ஆழ்ந்த இடைவெளியுள்ள எந்திரம்.

**face mark** : *(மர.வே.)* **முகப்புக் குறி** : வேலைப்பாடு செய்யப்படும் மரத்துண்டின் ஒரு பரப்பின் மீது பொறிக்கப்படும் குறி. இந்த அடையாளக் குறியினைக் கொண்டு, அதனை முகப்பு என அறிந்து, அதிலிருந்து மற்ற முகப்புகள் உருவாக்கப்படும்.

**face mould** :*(க.க.)* **முகப்பு வார்ப்படம்**: சாய்ந்து செல்லும கைபிடிக் கிராதியின் மேற்பகுதியின் உண்மையான பரிமாணத்தைக் காட்டும்.

**face plate or face chuck** :



முகப்பு ஏந்தமைவு

**முகப்புத் தகடு அல்லது முகப்பு ஏந்தமைவு** : ஒரு கடைசல் எந்திரத்

தின் உருளையிலுள்ள கதிருடன் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு வட்ட வடிவத் தகடு. வேலைப் பாடு செய்ய வேண்டிய பொருளை இதனுடன் இணைத்துக் கொள்ள லாம்.

**facet : : பட்டை தீட்டிய முகப்பு** : நவமணிகளில் பட்டையிட்ட பரப் பின் ஒரு முகப்புக் கூறு.

**facilitate : எளிதாக்கு** : எளிதாக அல்லது முழுமையாக இயங்கு வதற்கு உதவி புரிதல்.

**facing** : *(வார்.)* **முகப்பமைத்தல்** : வார்ப்படத்திலிருந்து ஒரு தோர ணியை அகற்றிய பின்பு காரீயம், அப்பிரகம் போன்ற முகப்புப் பொருளைக் கொண்டு சிறிய வழு வழுப்பான வார்ப்பு வேலைகளைச் செய்தல்.

**facsimile: உருவ நேர்ப்படி**: எழுத்து மட்டுமின்றி வரி வடிவின் தோற்ற மும் நிழற்படுத்திக் காட்டும் நேர் படி உருப்பகர்ப்பு.

**facsimile transmission** : *(மின்.)* **உருவ நேர்ப்படி அனுப்பீடு** : தொலைக்காட்சியில் தொலைக் கனுப்பும்படி படத்தின் நிழல்—ஒளிக்கூறுகளைத் தனித்தனியே பகுத்து, திரையில் தோன்றும் வகையில் நிழல் கூறுகளை மின்னி யல் தூண்டுதல்களாக மாற்றுதல்.

**factor of safety : காப்புக் கரணி**: உறுதிப்பாட்டுக்கும் உயர்வெல் லைப் பாரத்துக்கும் இடையே யுள்ள வீத அளவு.

**fade in: உருத்தோற்றம்**: தொலைக் காட்சியில் மின்னணுவியல் முறை யில் உருவங்களை படிப்படியாக உருவாகுமாறு செய்தல்.

**fade out : உருவ மறைவு** : தொலைக்காட்சியில் மின்னணு வியல் முறையில் உருவங்கள் படிப் படியாக தேய்ந்து மறையுமாறு செய்தல்.

**fading** : *(மின்.)* **குன்றல்** : வானொலியில், வாயுமண்டலச் சூழ்நிலைகளினால் சைகை வலிமை தற்காலிகமாக மாற்றமடைதல்.

**fagot : எஃகுக் கம்பிக்கற்றை**: சூடாக்கி, கத்தியால் அடித்து, வேறொரு சலாகையாக மாற்று வதற்காக ஒன்று சேர்த்துக் கூட் டப்படும் எஃகுக் கம்பிகளின் கற்றை.

**fahlum metal** : *(உலோ.)* **ஃபாஹ் லம் உலோகம்** : மலிவான அணி கலன்கள் தயாரிக்கப் பயன்படும் ஒரு வெண்ணிற உலோகக் கலவை. இதில் 40% வெள்ளீயமும், 60% ஈயமும் கலந்திருக்கும்.

**fahrenheit : ஃபாரன்ஹீட்** : ஜெர் மன் இயற்பியலறிஞர் கேப்ரியல் ஃபாரன்ஹீட். உறை நிலை 32° ஆகவும், கொதிநிலை 212° ஆகவும் கொண்ட வெப்பமானி இவரு டைய பெயரில் அழைக்கப்படு கிறது.

**faience : ஒப்பனை மண்பாண்டம்**: சித்திர வேலைப்பாடுகளுடன் ஒப் பனை செய்யப்பட்ட பீங்கான் மண்பாண்டங்கள்.


**failure ; தளர்வு** ; பொருட்களும், கட்டமைவுகளும் எந்தப் பணி களுக்காக வடிவமைக்கப்பட்ட னவோ அந்தப் பணிகளுக்குத் தாக் குப்பிடிக்க முடியாமல் தளர்வுறு தல்.

**fairing** : *(வானூ.)* **நேரொழுங் கமைப்பு** : விமானத்திற்குரிய மேற் பரப்பில் நேரொழுங்கமைதிப் படுத்த இணைக்கப்பட்டுள்ள பளு வற்ற மழமழப்பான புறக்கட்ட மைப்புப் பகுதி.

**fald stool: சாய்வு மேசை** : முழங் காற் படியிடுவதற்குரிய அசை வியக்கமுள்ள சாய்வு மேசை.

மடிக்கக்கூடிய கையில்லா நாற் காலியையும் குறிக்கும்.

**false key : போலி இருசாணி :** ஒரு பாதி ஒரு கதிரின் முனையிலும் இன்னொரு பாதி குமிழாகவும் துரப்பணம் செய்யப்பட்டுள்ள ஒரு துவாரத்தினுள் செலுத்தப்படும் ஒரு வட்ட வடிவ முளை.



இருசாணி

**false rafter :** (க.க.) **போலி இறை வாரக் கை :** ஓர் எழுதகத்தின் மேலுள்ள பிரதான இறை வாரக் கையுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு குறுகிய விரிவாக்கம்.

**falsh wing rib :** (வானூ.) **போலி இறக்கைக் குறுக்குக் கை:** முழுமையற்ற குறுக்குக் கை. இது, விமானத்தின் காற்றழுத்தத் தளத்தின் வளைவு கூர்மையாக இருக்கும் இடத்தில் சிறகின் வடிவத்தைப் பராமரித்து வருவதற்கு உதவப் பயன்படுத்தப்படும் முன்புறக் கழிக்கு முனைப்பு முனையிலிருந்து நீண்டு செல்லும் மரத்துண்டினை மட்டும் கொண்டுள்ளதாக இருக்கும்.

**false work :** (பொறி.) **போலிச் சட்டகம் :** கட்டுமானத்தை முடிவுறுத்துவதற்குப் பயன்படும் தற்காலிகச் சட்டகம் அல்லது ஆதாரம்.

**family :** (அச்சு.) **அச்செழுத்துக் குடும்பம் :** பல்வேறு வடிவளவுகளிலுள்ள முகப்புகள் கொண்ட தொடர்புடைய அச்செழுத்துக்களை வகைப்படுத்துதல்.

**fan belt :** (தானி.) **விசிறி வார்ப் பட்டை :** குளிர்விக்கும் விசிறி, மின்னாக்கி, நீரேற்றும் எந்திரம் ஆகியவற்றை இயக்குவதற்கான வார்ப் பட்டை.

**fan blower : ஊது விசிறி :** காற்றோட்டத்தை உண்டாக்குவதற்கான சுழல் விசிறி. வேதியியற் பொருட்களிலிருந்து வெளிப்படும் நச்சுப் புகைகளை வெளியேற்றுவதற்கும் இது பயன்படுகிறது.

**fancy rule :** (அச்சு.) **சித்திர இடைவரித் தகடு :** பல்வேறு சித்திர வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ள பித்தளை இடைவரித் தகடு.

**fan dango : கட்டுமான அட்டை:** புத்தகங்களைக் கட்டுமானம் செய்வதற்குப் பயன்படும் அட்டையின் யின் வாணிகப் பெயர்.

**fan bolt :** (பொறி.) **விசிறி மரையாணி :** வெட்டு மரத்துடன் இரும்பு வேலைப்பாட்டினை இணைத்திடப் பயன்படும் மரையாணி. இந்த மரையாணி, மரத்தைக் கவ்விக் கொள்வதற்கேற்பப் பற்களைக் கொண்டிருக்கும்.

**fan out:** (அச்சு.) **விசிறிப் பிரிப்பு:** அச்சு எந்திரத்தினுள் செலுத்துவதற்காகத் தாள்களைத் தனித் தனியாகப் பிரித்திடும் முறை.

**fan pulley:** (தானி.) **விசிறிக்கப்பி:** விசிறியை இயக்கும் வார்ப்பட்டையை முடுக்கிவிடுவதற்காக, விசிறியுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு கப்பி. உந்து வண்டிகளில் காற்றோட்டம் உண்டாக்குவதற்கும், மின்னாக்கியைக் குளிர்விப்பதற்கும் பயன்படுகிறது.

**farad :** (மின்.) **ஃபாரட் :** மின் திறனை அளவிடுவதற்கான ஓர் அலகு. ஒரு ஃபாரட் திறனுள்ள கொண்மியில், ஒரு கூலோம் அளவின் மூலம் ஒரு ஓல்ட் மின்னழுத்தத் திறன் ஏற்றப்படும். நடைமுறைப் பணிகளில் இது மிகப் பெரிய அலகு. இது 'நுண்ஃபாரட்' அளவுகளில் பயன்படுத்தப்படுகிறது.

**faraday, michael : ஃபாரடே, மைக்கேல், (1791-1867):** ஆங்கி

லேய விஞ்ஞானி; மின்மாற்றிகளைக் கண்டுபிடிப்பதில் முதல் ஆராய்ச்சிகள் செய்தவர்.

**faraday's laws of electrolysis : ஃபாரடேயின் மின்பகுப்பாய்வு விதிகள்** : (1) மின்பகுப்பாய்வுப் பொருட்களின் எடையானது,மின் பகுப்பான் வழியாகச் செலுத்தப் படும் மின்விசையின் அளவின் வீத அளவில் இருக்கும்.

(2) ஒரு குறிப்பிட்ட அளவு மின் விசையைப் பொறுத்தவரையில், மின்பகுப்பாய்வுப் பொருட்களின் எடையானது, அப்பொருட்களின் மின்-எந்திரவியல் நிகர் எண்களின் வீத அளவில் இருக்கும்.

**farmers' drill** : (உலோ;வே.) **உழவர் துரப்பணம்:** நேர்மட்டமான, புல்லாங்குழல் வடிவான திருகு துரப்பணம். இது மென்மையான உலோகங்களில் பயன்படுத்த உதவுகிறது.

**fasces: சலாகைக்காட்டுச் சின்னம்:** கோடரி நடுவே வைத்த சலாகைக் கட்டுச் சின்னம். இது பண்டைய ரோமாபுரியில் உயர் நடுவரின் அதிகாரச் சின்னம்.

**fascia :** (க.க.) **மதிற்சிற்பம் :** மதில் உச்சியிலுள்ள பட்டைச் சிற்பத் தொகுதி.

**fascicle** : **தொகுதி** : தனியாக வெளியிடப்படும், ஒரு நூலின் பல பகுதிகளில் ஒன்று.

**fast charger** : (தானி.) **விரைவு மின்னேற்றம்** : உந்து வண்டியில் சேம மின்கலத்தில் அரைமணி நேரத்திற்குள்ளாக விரைவாக மின்னேற்றுவதற்கான ஒரு மின் சாதனம்.

**fast pulley: விரைவுக் கப்பி:** சுழல் தண்டுடன் ஒரு சாய்வுத் திருகு மூலம் இணைக்கப்படும் ஒருகம்பி. இது இயக்கத்தை அனுப்பீடு செய்ய உதவுகிறது.

**fastening** :(எந்.) **கட்டிறுக்குதல்:** மரையாணிகள், திருகாணிகள் போன்ற இறுகப்பற்றி இறுக்கக் கூடிய சாதனங்கள்.

**fat : (1) பசைக்களிமண்** : பசை மிக்க களிமண் வகை.

**(2) கொழுப்புப் பசை** : கொழுப்பு நிறைந்த வேதியியற் பொருள். இது பெரும்பாலும் ஒலயிக், ஸ்டியரிக், பால்மிட்டிக் போன்ற அமிலத் தன்மை வாய்ந்தது.

**(3) திண்அச்சுரு** : திண்ணியதான அச்சுரு. படங்கள் வெற்றுக்கோடுகள், இடைவெளியிடங்கள் உடையது.

**fathom** : **கடல் ஆழ அளவு** : கடலின் ஆழத்தைக் கணக்கிடுவதற்குப் பயன்படும் அலகு. இந்த அலகு ஆறு அடி அளவு அல்லது 1.828 மீட்டர் அளவுடையது.

**fatigue of meterial : பொருளயர்ச்சி** : பொருள்களை அடிக்கடிப் பயன்படுத்துவதால் அந்தப் பொருளில் ஏற்படும் நலிவு. இவ்வாறு நலிவுறுவதால் அப்பொருள் முன்பு பாதுகாப்பாகத் தாங்கிய பளுவினை ஏற்றும்போது முறிந்து போகும்.

**fat spark:** (தானி.) **தடித்த அனற்பொறி** : குள்ளமாகவும் தடிமனாகவும் உள்ள மூட்ட அனற்பொறி.

**faucet** : (கம்.) **திறப்படைப்புக் குழாய்** : திரவங்கள் பாய்வதைக் கட்டுப்படுத்துவதற்குரிய திறப்பும் அடைப்பும் உடைய குழாய்.

**faun** : (க.க.) **ஆடு-மனித உருவம்:** பாதி ஆட்டின் உடலும், பாதி மனித உடலும் கொண்ட பண்டைய ரோமாபுரிச் சிறு தெய்வத்தின் உருவம். இது அலங்கார வேலைப்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டது.

**fauteuil : கைநாற்காலி** : 18ஆம் நூற்றாண்டு பாணியில் அமைந்த

நாடக அரங்குகளில் பயன்படுத் தப்படும் நாற்காலி.

**favus** : *(க.க.)* **சித்திர வேலை:** தேன்கூடு போன்று செய்யப்படும் வண்ணப் பின்னல் சித்திர வேலைப்பாடு.

**feather** : *(வானூ.)* **சுழல் இறகு** : விமானத்தில் சுழலும் வகையில் அமைந்த இறகு அமைப்பு. விமானத்தில் இறக்கை முனையிலிருந்து இறக்கை முனையளவான இடையகலச் சுருணையைச் சுற்றி இறகு அலகினை ஊசலாடச் செய்வதன் மூலம் அந்த அலகின் வீழ் தகவினைக் குறைக்கவும் கூட்டவும் செய்ய இது உதவுகிறது.

**feather or sunk key:** *(எந்.)* **வரி இருசாணி:** எந்திரச் சுழல் தண்டின் ஓர் அங்கமாக அமைந்திருக்குமாறு அச் சுழல் தண்டின் உட்புழையில் ஒரு பகுதி புதைந்துள்ள ஓர் இணையான இருசாணி. சுழல் தண்டின்மீது இந்த இருசாணி நீளவாக்கில் செல்லும் வகையில் சுழல் தண்டில் வழி அமைக்கப்பட்டிருக்கும்.

**feather edge:** **ஆப்புமுனை:** ஆப்பு வடிவில் அமைந்துள்ள கூர்முனை.

**feed:** *(அச்சு.)* **ஊட்டு:** *(1)* அச்சு எந்திரத்தினுள் செலுத்துவதற்காக ஆயத்தமாக ஒழுங்கு நிலையுடன் வைத்துள்ள தாள்.

*(2)* எந்திரங்களுக்கு எரிபொருளூட்டுதல்.

**feed-back coil:** **பின்னூட்டச் சுருள்:** ஒரு வெற்றிடக் குழாயின் தகட்டு மின் சுற்றில் இணைக்கப்பட்டுள்ள கம்பிச்சுருள். இது அந்த மின்சுற்றிலிருந்து அதே குழாயின் இணைப்பு மின்சுற்றுக்கு மின் விசையை மீண்டும் செலுத்துவதற்கு அல்லது பின்னூட்டம் செய்வதற்குப் பயன்படுகிறது.

**feed back:** *(தானி.)* **பின்னூட்டம்:** ஓர் எந்திரத்தின் வெளிப்பாட்டிலிருந்து அதன் உட்பாட்டிற்குத் திரும்பிவரும் அளவீடுகள் போன்ற தகவல்கள்.

**feed edge:** *(அச்சு.)* **ஊட்டு முனை:** அச்சு எந்திரத்தினுள் செலுத்துவதற்கு ஆயத்தமாக ஒழுங்கு நிலையுடன் அடுக்கி வைக்கப்பட்டுள்ள தாளின் முன் பகுதி முனை.

**feeder:** *(மின்.)* **(1) ஊட்டுகருவி:** கிளை மின்சுற்றுகளுக்கு மின்விசையைக் கொண்டு செல்லும் கருவி.

**(2) ஊட்டுவோர்:** அச்சு எந்திரத்தினுள் தாள்களைச் சீராகச் செலுத்துபவர்.

**(3) ஊட்டி:** அச்சு எந்திரத்தினுள் தாளினை ஒரே சீராகச் செலுத்தும் சாதனம்.

**feed gears:** *(எந்.)* **ஊட்டுப் பல்லிணை:** ஊட்டுச் சலாகையினை இயக்கி, ஊட்டும் வேகத்தைக் கட்டுப்படுத்தும் பல்லிணைகள்.

**feed guides;** *(அச்சு.)* **ஊட்டு நிலைப்படுத்தி:** அச்சு எந்திரத்தினுள் செலுத்தப்படும் தாளினை அச்சிடுவதற்கேற்ற நிலைக்குக் கொண்டுவரும் சாதனங்கள்.

**feeding:** *(அச்சு.)* **ஊட்டுதல்:** அச்சு எந்திரத்தினுள் தாள்களை ஒழுங்கு நிலையுடன் செலுத்தல்.

**feed mechanism:** *(எந்.)* **ஊட்டுப் பொறியமைவு:** எந்திரத்திற்குள் தேவையான பொருட்களைச் செலுத்துவதற்குப் பயன்படும் பொறியமைவு.

**feed pipe:** *(கம்.)* **ஊட்டக் குழாய்:** பிரதானக் குழாயிலிருந்து பயன்படுத்தப்படும் இடத்திற்குப் பொருட்களை நேரடியாகக் கொண்டு செல்லும் குழாய்.

**feed screw:** **ஊட்டுத் திருகு:** ஓர் எந்திரத்தின் வெட்டுக் கருவிக்கு

ஊட்டுப் பொருளைச் செலுத்து வதைக் கட்டுப்படுத்தும் திருகு.

**feed water heater: ஊட்டுநீர் அடுப்பு:** ஒரு நீராவிக் கொதிகல னுக்குள் செலுத்தப்படும் நீரினைச் சூடாக்குவதற்கான ஒரு கொதி கலன்.

**feeler: உணர்விக்கடிகை:** வேலைப் பாடு செய்யவேண்டிய ஒரு பொரு ளின் வடிவளவைக் கண்டறிவதற் கான ஒரு கருவி. தொடு உணர் வின் தன்மையைப் பொறுத்து இந்தச் சோதனையின் துல்லியம் அமையும்.

**feeler:** *(உலோ.)* **உணரிழை:** அள விடுவதற்குப் பயன்படுத்தப்படும் துல்லியமாக அமைக்கப்பட்ட நுண்ணிய உலோக இழை.

**feet:** *(அச்சு.)* **ஆதாரப் பகுதி:** அச்சு எழுத்தினைத் தாங்குவதற் காக அதன் உடற்பகுதியின் அடி யிலுள்ள இருபகுதிகள்.

**feldspar:** *(வேதி.)* **களிமம்:** பொட்டாசியம், சோடியம், கால் சியம் ஆகியவற்றுடன் அலுமினி யம் சிலிக்கேட்டுகள் கொண்ட பாறையின் பெரும்பான்மைக்கூறு.

**felloe or felly: புறவட்டம்:** ஆரை களால் இணைக்கப்பட்ட சக்கரத் தின் புறச்சுற்று வட்டப்பகுதி.

**felt papers:** *(க.க.)* **ஒட்டுக் காகி தங்கள்:** ஈரம், வெப்பம், குளிர் ஆகியவற்றிலிருந்து பாதுகாப் பதற்காக முகடுகளிலும், பக்கச் சுவர்களிலும் ஒட்டப்படும் கவசத் தாள்கள்.

**felt side of paper: காகித ஒட்டுப் பக்கம்:** காகிதத்தின் ஒரு பக்கத்தில் கம்பியின் அல்லது திரையின் கறைபடாமலிருப்பதற் காக அக்காகிதத்தில் செய்யப்படும் மெருகு வேலை.

**female: புழை:** கருவியின் புற முனைப்பான பகுதிக்கு ஏற்பிசை வாக உட்குழிவாக அமைந்துள்ள புழை.

**female screw: புரியாணி மரை;** திருகாணி செல்வதற்கிசைவான புழையுள்ள மரை.

**famale thread: உட்புழைத் திரு கிழை:** ஒரு துவாரத்தினுள் அல் லது உட்புழையுள்ள பரப்பில் வெட்டப்படும் திருகிழை.

**fence:** *(மர.வே.)* **எந்திரக் காப்பு:** வாள்கொண்டு அறுக்கும் வட்ட வடிவ எந்திரத்தில் தற்காப்புக் காக அமைக்கப்படும் உலோகச் சலாகை அல்லது பட்டை.

**fender: தடுப்புக்காப்பு:** *(1)* திறந்த தீமூட்டத்திலிருந்து தரையினைப் பாதுகாப்பதற்காக அலங்கார மாக அமைந்த உலோகச் சலாகை.

(2) உந்து வண்டிகளில் சக்கரங் கள் நீரை அல்லது சேற்றை இறைக்காமல் தடுப்பதற்கான காப்பு.

(3) அச்சு எந்திரத்தில், ஊட்டும் தாள்கள் நழுவி விழுந்து விடாமல் சமணத் தகட்டுடன் இணைக்கப் பட்டுள்ள தடுப்பு அட்டை.

**fenestral:** *(க.க.)* **காப்புச் சட்ட கம்:** பண்டைக் காலத்தில் பல கணிக் கண்ணாடிகள் இல்லா திருந்தபோது, காற்றிலிருந்தும் மழையிலிருந்தும் பாதுகாப்பதற் காக பசைக் காகிதம் அல்லது மெல்லிய துணி ஒட்டப்பட்ட ஒரு சட்டகம்.

**fenestration:** *(க.க.)* **சாளர வரி சை:** ஒரு கட்டிடத்தின் சாளரங் களின் ஒழுங்கு வரிசை.

**feretory:** *(க.க.)* **பள்ளிப்படை:** திருத்தொண்டர்களின் நினைவுச் சின்னங்களுக்கான கோயில்.

**fermentation**: *(வேதி.)* **நொதித்தல்**: உயிரிகள் அல்லது வேதியியல் காரணிகள் மூலமாக ஒரு கரிமக் கூட்டுப் பொருளை வேதியியல் முறைப்படி சிதைவுறச் செய்தல்.

**fermi, enrico** : *(மின்.)* **ஃபெர்மி, என்ரிக்கோ (1901-1954)**: இத்தாலிய அமெரிக்க விஞ்ஞானி; *1942*இல் முதலாவது அணுவியல் தொடர் விளைவினை உண்டாக்குவதில் முக்கிய பங்கு கொண்டவர்; *1938*இல் நோபல் பரிசு பெற்றவர்.

**feron**: *(வேதி.)* **ஃபெரோன்**: $(F_{12})$ குளிரால் உறை பதனம் ஊட்டும் பொருளாகப் பயன்படும் டைக்ளோரோடைஃப்ளூரோமீத்தேன்.

**ferric oxide**: *(மின்.)* **அய ஆக்சைடு**: ஒலிப்பதிவு நாடாக்களில் பூசுவதற்குப் பயன்படுத்தப்படும் காந்தத் தன்மையுடைய அய ஆக்சைடு.

**ferrite**: *(மின்.)* **ஃபெர்ரைட்**: இரும்பு மற்றும் நிக்கல், துத்தநாகம், மாங்கனீஸ் போன்ற பிற உலோகங்களிலிருந்து தயாரிக்கப்படும் காந்தத் தன்மை வாய்ந்த பொருள். கம்பிச் சுருள்களுக்கான ஃபெர்ரைட் உட்புரி தயாரிக்கப் பயன்படுகிறது.

**ferrite core**: *(மின்.)* **ஃபெர்ரைட் உட்புரி**: ஃபெர்ரைட்டிலிருந்து தயாரிக்கப்படும் காந்த உட்புரி.

**ferrochromium**: *(உலோ.)* **அயக் குரோமியம்**: இது குரோமியமும் இரும்பும் கலந்த உலோகக்கலவை. எஃகுகளைத் தயாரிப்பதற்கு இது பயன்படுத்தப்படுகிறது. இதில் 5% கார்பன் கலந்திருக்கிறது. இது கருவிகளும், உந்து வண்டிகளுக்கான எஃகும் தயாரிக்கப் பயன்படுகிறது.

**ferromanganese**: *(உலோ.)* **அய மாங்கனீஸ்**: *20%* முதல் *80%* வரையிலான மாங்கனீசும், 5% முதல் 7% வரையிலான கார்பனும் கலந்து தயாரிக்கப்படும் உலோகக் கல்வை. இது ஆக்சிகரணத்தை நீக்கும் காரணியாகச் செயற்பட்டு, மிகையான கந்தகத்தின் பாதிப்பை நீக்குகிறது.

**ferro-magnetic**: *(மின்.)* **நேர் காந்தத் திறம்**: ஒன்றுக்குமேல் கணிசமான அளவு ஊடுருவும் திறன் பெற்ற ஒரு பொருளின் பண்பு. கோபால்ட், இரும்பு, நிக்கல், எஃகு போன்ற உலோகங்களும், இவற்றின் உலோகக் கலவைகளும் இந்தப் பண்பு உடையவை.

**ferro-nickel**: *(உலோ.)* **அய நிக்கல்**: இது நிக்கலும் எஃகும் கலந்த உலோகக் கலவை. இது தடை மாற்றிகளும், மின் கம்பிச் சுருள்களும் தயாரிக்கப் பயன்படுகிறது.

**ferro-phosphorous**: *(உலோ.)* **அய ஃபாஸ்வரம்**: அதிக அளவு ஃபாஸ்வரம் கலந்துள்ள ஒருவகை இரும்பு. தகரத் தகடுகளுக்கான எஃகு தயாரிக்கப்படுகிறது.

**ferro-silicon**: *(உலோ.)* **அய சிலிக்கன்**: கடினமான எஃகு. இதில் *97.6%* இரும்பும், *2%* சிலிக்கனும், *0.4%* கார்பனும் அடங்கியிருக்கும்.

**ferro-typing**: *(ஒளி.)* **அய ஒளிப்பட முறை**: மெல்லிய இரும்புத் தகட்டின்மீது நேர்படியாக எடுக்கப்படும் முற்கால ஒளிப்படமுறை.

**ferrous**: *(வேதி.)* **அயக**: இரும்புக் கூட்டுப் பொருட்கள் அடங்கிய பொருட்கள்.

**ferrule**: *(எந்.)* **உலோகப் பூண்**: மரக்கருவிகளின் முனை உடைந்து விடாமல் காப்பதற்கெனப் பொருத்தப்படும் வளைய வடிவ உலோகப் பூண்.


ஒரு குழாயின் உட்பகுதியைச்

சுத்தம் செய்வதற்காக அமைக்கப் படும் முகப்புப் பூண்.

**fertilizer**: *(வேதி.)* **உரம்:** மண் வளத்தைப் பெருக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் வேதியியற் பொருட்களின் கலவை.

**festoon**: *(க.க.)* **தோரணம்:** மலர் மாலைகள், மலர் வளையங் கள், பசும் இலைகள் இவற்றைக் கொண்டு அலங்காரமாகக் கட்டப் படும் தோரணங்கள்.

**f-head engine**: *(தானி.)* **எஃப்-முகப்பு எஞ்சின்**: எல்-முகப்பும், ஐ-முகப் பும் இணைந்த எஞ் சின், இதில் உள்ளி ழுப்பு ஓரதர்கள்மேற் பகுதியிலும், வெளி யேற்று ஓரதர்கள் நீள் உருளைத் தொகு தியிலும் அமைந் திருக்கும். இந்த வகை எஞ்சின்கள் இப்போதுஅதிகமாகப் பயன்படுத்தப்படுவதில்லை.



முகப்பு எஞ்சின்

**fiber**: **இழை/இழைமம்:** நூற்பதற் கும் நெசவு செய்வதற்கும் ஏற்ற கடினமான இழை.

**fiber-glass**: *(குழை.)* **கண்ணாடி இழை**: கண்ணாடி நுண்ணிழையா லான இழைமப் பொருள்.

**fibrous**: **இழைமத் தன்மையதான**: உலோகங்களுக்குள்ள இழைமைத் தன்மை; இது குருணை இயல்பி லிருந்து மாறுபட்டது.

**fibrous tissue** : *(உயி.)* **நார்ப் பொருள் திசு** : உடலின் தசைகளை ஒன்று சேர்த்து, எலும்புகளுடன் தசைகளை இணைத்திடும் வெள்ளை நிற நாரியற் பொருள். இது தோலின் அடிப் படலமாக அமைந்துள்ளது. தசையில் காயம் பட்டால், சேதமுற்ற தசையைச் சீர்படுத்திக் காயத்தை ஆற்றுவ தும், காயம்பட்ட இடத்தில் வடு ஏற்படுவதற்கும் இதுவேகாரணம். மஞ்சள் நார்ப் பொருள் திசுவும் இது போன்றதே; ஆனால் இது மிகுந்த நெகிழ்திறனுடையது; இரத்த நாளங்களின் தமனி சுவர் களில் இது உள்ளது.

**fiddle back** : **பிடில் முதுகு நாற் காலி**: வாத்தியக் கருவியின் வடிவில் முதுகுப் பகுதியைக் கொண்ட ஒரு வகை நாற்காலி.

**fidelity** : *(மின்.)* **முற்றுருப் படி வாக்கம்:** மின் சைகைகளை சற்றும் திரிபடையாமல் அப்படியே மீண் டும் உருப்படிவாக்கம் செய்து அனுப்பீடு செய்தல்.

**field** : *(மின்.)* **புலம்** : (1) மின் காந்த ஆற்றல் களம்.

(2) தொலைக்காட்சியில், இறு திப்படத்தின் ஒரு பகுதியாக அமையும் நுண்ணாய்வு வரிகளின ஒரு தொகுதி. இப்போதையத் தர அளவுகளின்படி, மாற்று வரி களைக்கொண்ட இரு புலங்களில் படங்கள் அனுப்பப்படுகின்றன. வினாடிக்கு 30 முழுமையான படங்கள் உருவாகும் வகையில் 525 வரிகள் கொண்ட படம் அமைகிறது.

**field book:** *(மின்.)* **களப்புத்தகம்:** பொறியாளர்களும், மற்றவர் களும் பணிபற்றிய குறிப்புகள் எழுதுவதற்குப் பயன்படுத்தும் ஒரு புத்தகம்.

**field coil** : *(மின்.)* **புலச் சுருள்** : ஓர் இயக்கத்தின் அல்லது மின் னாக்கியின் புலக்காந்தங்களை அல்லது துருவத் துண்டுகளைச் சுற்றி அமைந்துள்ள சுருள் அல் லது சுற்றுச்சுருள்.

**field core** : *(மின்.)* **புல மையம்** : ஒரு மின்னாக்கியின் அல்லது இயக் கியின் புலச்சுருள் சுற்றப்படுகிற இரும்பு நீட்சி.

**field density :** *(மின்.)* **புல அடர்த்தி :** காந்தப் புலத்தின் அல்லது காந்தப் பெருக்கின் அடர்த்தி. இது ஓர் அலகுப்பரப்பிடத்திலுள்ள ஆற்றல் வரிகளின் எண்ணிக்கையைக் கொண்டு அளவிடப்படுகிறது. இந்த அடர்த்தி, புலத் தனிமத்தின் வலிமை, கம்பியிலுள்ள திருப்பங்களின் எண்ணிக்கை, துருவத்துண்டுகளின் வடிவளவு, பண்பியல்புகள் ஆகியவற்றைப் பொறுத்திருக்கும்.

**field distortion :** *(மின்.)* **புலத் திரிபு :** ஒரு மின்னாக்கியில், மின்காந்த வடதுருவத்திற்கும் தென் துருவத்திற்குமிடையில் மின்னகச் சுருணைகளில் உண்டாகும் எதிர் மின்னியக்க விசையின் காரணமாக சாதாரணப் புலத்தில் ஏற்படும் திரிபு.

**field excitation :** *(மின்.)* **புலக் கிளர்ச்சி :** ஒரு மின் காந்தத்தில் சுருணையின் வழியாக ஓர் இரும்புத்துண்டினைச் செலுத்தி மின்னோட்டம் பாயும்போது ஏற்படும் காந்த விளைவு.

**field frequency :** **புல அலைவெண் :** காந்தப்புலத்தில் அடுக்கு நிகழ்வு வேகம். இப்போதுள்ள தொலைக்காட்சி அமைப்பு முறையில், இது வினாடிக்கு 6 புலங்கள் என்ற வேகத்தில் அமைந்திருக்கும்.

**field magnets:** *(மின்.)* **புலக் காந்தம்:** ஒரு நேர்மின்னாக்கியில் காந்தப்புல விசையை உண்டாக்கப் பயன்படும் மின்காந்தம்.

**field resistance :** *(மின்)* **புலத் தடை :** புலச்சுருணைகளின் வழியாகப் பாயும் மின்னோட்டத்தின் அளவினைக் கட்டுப்படுத்துவதற்காக புலச் சுருள்களுடன் வரிசையாக இணைக்கப்பட்டுள்ள தடை.

**field rheostat :** *(மின்.)* **புலத் தடை மாற்றி :** ஒரு மின்னாக்கியின் உற்பத்தி அளவினைக் கட்டுப்படுத்துவதற்காக புலமின் சுற்றில் செருகப்பட்டுள்ள குறைந்த மின்னோட்டத் திறன் கொண்ட மாறுநிலை மிகைத் தடை.

**field strength :** *(மின்.)* **புல வலிமை :** ஒரு குறிப்பிட்ட தொலைவிலும், திசையிலும் ஒரு மின்புலத்தின் வலிமையை அளவிடுதல். இது ஒரு மீட்டருக்கு இதனை ஓல்ட்ஸ் என்று கணக்கிடப்படும்.

**field voltage control :** *(தானி. மின்.)* **புலமின்னழுத்தக் கட்டுப்பாடு:** ஒரு மின்னாக்கியின் புலச்சுருணையில் செலுத்தப்படும் மின்னழுத்தினைக் கட்டுப்படுத்தும் முறை. பொதுவாக, இது அதிர்வு மின்னழுத்தத்தாலும், தடையினாலும் செய்யப்படுகிறது. இதனால், மின்னாக்கியின் உற்பத்தியளவினை ஒரு குறிப்பிட்ட அளவுக்குள் வைத்திருக்கலாம்.

**field winding :** **புலச் சுருணை :** மின்காந்தப்புலம் ஏற்படுத்துவதற்காக இயக்கிகள், மின்னாக்கிகள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் மின்காந்தங்கள்.

**fifth wheel :** **ஐந்தாம் சக்கரம் :** ஒரு வாகனில் அல்லது அதுபோன்ற ஊர்தியிலுள்ள கிடைமட்டத் தட்டையானதாங்கி திருப்பங்களில் திரும்பும்போது உந்துவண்டியின் உடற்பகுதியின் நிலைக்கேற்ப அச்சின் நிலையைக் கொண்டு வருவதற்கு இது அனுமதிக்கிறது.

**filament :** **இழை:** மெல்லிய கம்பி அல்லது இழை.

பிளாஸ்டிக் தொழில், பிசினி லான அல்லது கண்ணாடியாலான ஓர் இழை.


**filament transformer :** **இழை மின்மாற்றி :** வானொலியில்,

வானொலிக் குழாய்களின் இழை களுக்கு அல்லது சூடேற்றிகளுக்குச் சீரான அளவு மின்னழுத்தத்தைச் செலுத்துவதற்கு மின்னழுத்த அளவைக் குறைப்பதற்குப் பயன்படும் மின்மாற்றி.

**filament voltage**: *(மின்.)* **இழை மின்னழுத்தம்** : ஓர் எலெக்ட்ரான் குழலின் வெப்ப மூட்டிகளுக்கு அல்லது இழைகளுக்குத் தேவைப் படும் மின்னழுத்தம். இதன் மதிப் பளவு, முதல் எண் மூலம் குறிக்கப் படுகிறது. எடுத்துக்காட்டாக, 6 B E 6 என்பதற்கு 6.3 ஓல்ட் இழை மின்னழுத்தம் தேவை.

**filament winding** : *(மின்.)* **இழைச் சுருளை**: வெற்றிடக் குழல் களுக்குத் துல்லியமான இழை மின்னழுத்தங்களை வழங்கு வதற்கு ஒரு மின் மாற்றியிலுள்ள சுருணை.

**file : அரம் :** அராவுவதற்காகப்



அரம்

பல்வேறு வடிவளவுகளில் அமைந்த கடினமான எஃகுக் கருவி. இதனைக் கொண்டு மரத்தை அல்லது உலோகத்தை அராவி மழமழப் பாக்கலாம்.

அரத்தைக் கொண்டு அராவுதல் பளபளப்பாக்குதல், சமனப்படுத் துதல் ஆகியவற்றையும் குறிக்கும்.

**file card** : **அராவு சிக்குவாரி** : குறுகிய நுண்ணிய கம்பிகள் பொருத்தப்பட்ட ஒருவகைத் தூரிகை. இது அரங்களைச் சுத்தம் செய்யப் பயன்படுகிறது.

**file hard** : *(உலோ.)* **அராவ இய லாக் கடினம்** : அராவ இயலாத அளவுக்குக் கடினமாகவுள்ள ஓர் உலோகம், ''அராவ இயலாக் கடி னத்தன்மை'' வாய்ந்ததாகக் கரு தப்படுகிறது.

**files, kinds of** : *(உலோ.)* **அரங் களின் வகை** : அரங்கள், அவை பயன்படுத்தப்படும் நோக்கங்களுக் காகத் தனிவகையில் தயாரிக்கப் படுகின்றன; அவை அந்த நோக் கங்களின் பெயராலேயே அழைக் கப்படுகின்றன. பொதுவாக சமன அரம், மழிப்பு அரம், இரண்டாம் வெட்டு அரம், மழமழப்பாக்கு அரம் என்று அழைக்கப்படுகின் றன,

**filigree** : **சரிகை சித்திரவேலை** : தங்கத்திலும், வெள்ளியிலும் செய் யப்படும் நுட்பமான அலங்கார வேலைப்பாடு.

**filing** : *(உலோ. வே.)* **அராவு வேலைப்பாடு**: அரத்தினைப் பயன் படுத்திப் பொருள்களை அகற்று வதற்கோ, மெருகேற்றுவதற்கோ, பொருத்துவதற்கோ செய்யப்படும் வேலை.

**fill** : *(பொறி.)* **நிரப்பு வேலைப் பொருள்** : பொறியியல் தாழ்வான பகுதியை தேவையான நிலைக்குக் கொண்டுவருவதற்குப் பயன்படும் பொருள்.

**filler** : **திண்பொருள்** : (1) காகி தம் தயாரிப்பதில் காகிதத்திற்கு உடற்பகுதியும் கனமும் அளித்தல். அச்சிடும் பரப்பளவைச் செம்மைப் படுத்துவதற்காகப் பயன்படுத்தப் படும் களிமண் அல்லது கனிமநீர்.

(2) பிளாஸ்டிக் தொழிலில், கடினத்தன்மையும், வலிமையும், விறைப்பும் அளிப்பதற்காகக் குழைமப் பொருளுடன் கலக்கப் படும் சீனக் களிமண், மரத்தூள், கல்நார், முதலியவை.

(3) மரவேலைப்பாட்டில் ஓவி யம் தீட்டுவதற்கு அல்லது வண்ண மடிப்பதற்கு முன்பு அதிலுள்ள பள்ளங்களையும் துவாரங்களை யும் அடைப்பதற்குப் பயன்படும் கலவைப் பொருள்,

**fillers :** *(பொறி.)* **அடைப்புப் பொருள் :** பொறியியலில் வலிவுத் தட்டு பயன்படுத்தப்படாதபோது இரு உறுப்புகளைப் பிணைப்பதற்குப் பயன்படும் இடைவெளி அடைப்புப் பொருள்கள்.

**filler specks :** *(குழை.)* **அடைப்புக் கறைகள்:** பிளாஸ்டிக் பிணைப்புகளில் பலவித வண்ணங்களில் காணப்படும் மரத்துள், கல்நார் போன்ற அடைப்புப் பொருள்களினால் உண்டாகும் மாறுபட்ட வண்ணப்புள்ளிகள்.

**fillet: கட்டுமான வளைவிணைப்பு:** ஒரு கோணத்தில் சந்திக்கும் இரு பரப்புகளை இணைக்கின்ற குழிவான வளைவு. இதில், கூர்மையான கோணம் தவிர்க்கப்படுவதால், வடிவமைப்புக்கு வலிவும் அழகும் கூடுகிறது.

**filling : நிரவுப் பொருள் :** பருத்தித் துணிகளில் இடைப்பிறிதிட்டு நிரப்பிக் கலவை செய்யும் களிமண் அல்லது மாப்பொருள். இது துணிக்கு எடையும் விறைப்பும் அளிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**filling in :** *(க.க.)* **இடைநிரப்பி :** கட்டிடங்களில் முகப்புக்கும் பின்புறத்திற்குமிடையிலான சுவரின் மையத்தில் இட்டு நிரப்புவதற்கான அமைவு.

**fillister : சறுக்கு வழி :** (1) பலகணிக் கண்ணாடியின் சறுக்குச் சட்டம்.

(2) ஒரு கொண்டைத் திருகின் நீள் உருளை வடித்தலைப் பகுதியில் திருப்புளி செல்வதற்கான வரிப் பள்ளம்.

**film :** *(குழை.)* **மென்படலம் :** மெல்லிய பிளாஸ்டிக் படலம்.

**filter :** *(மின்.)* **வடிப்பான் :** தூண்டுச் சுருள்களும் கொண்மிகளும் உடைய ஒரு சாதனம். இது பல்வேறு மின்னோட்டங்களைச் சீராக அமைக்கவும், ஒரு சில மாற்று மின்னோட்ட அலைவெண்களை அகற்றவோ செல்வதற்கு அனுமதிக்கவோ செய்கிறது.

**filter element :** *(தானி.)* **வடிகட்டும் பொருள் :** உந்து வண்டிகளில் எண்ணெய் வடிப்பானிலுள்ள துணி போன்ற வடிகட்டும் பொருள். உந்துவண்டி எரிபொருளிலிருந்து தூசு, கசடு போன்ற அயற்பொருள்களை வடிகட்டி நீக்குவதற்குப் பயன்படுகிறது.

**filter paper : வடிகட்டு தாள்:** வடிகட்டும் நோக்கங்களுக்காகப் பயன்படும் முற்றிலும் இழைகளினாலான காகிதம்.

**filtration of water : நீர் வடிகட்டும் முறை:** குடிநீரை மணற்படுகைகளில் செலுத்தி மாசுப் பொருள்களை நீரிலிருந்து வடித்தெடுக்கும் முறை.

**fin : செதில் :** (1) ஒரு பெரிய உலோகப் பகுதியில் பக்கத்தில் அல்லது விளிம்பில் ஏற்படுகின்ற நீர் போன்ற மெல்லிய விரிவாக்கப் படலம்.

(2) வானூர்திப் பின்புறத்தின் நிமிர்நேர் விளிம்பு.

(3) நிமிர் நேர் விளிம்புடைய தகடு.

**fine arts : நுண்கலைகள் :** கட்டிடக் கலை, ஓவியக் கலை, சிற்பக் கலை போன்ற கவின் கலைகள்.

**fine feed :** *(எந்.)* **நுண்ணூட்டு :** செப்பமற்ற ஊட்டுக்கு எதிர்மாறானது. அளவில் மிக நுண்ணிய ஊட்டு.

**fineness ratio :** *(வானூ.)* **நுண்மை விகிதம் :** விண்வெளிக் கலத்தின் உடற்பகுதி போன்ற ஓர் இழைவரி உடற்பகுதியின் பெரு

மளவு விட்டத்திற்கும் நீளத்திற்கு மிடையிலான விகிதம்.

**fine pitch : நுண் இடைவெளி யளவு:** சிறிய பற்களைக் கொண்ட ஒரு பல்லிணை அல்லது ஓர் அங்கு லத்தில் மிக அதிக அளவில் இழை கள் கொண்ட திருகு.

**fines :** *(குழை)* **நுண்துகள்கள் :** நுண்படிகளில் சிறுகச் சிறுக மாற் றியமைத்த பொருள்.

**finger:** *(எந்.)* **விரற்குறி :** ஒரு பற் சக்கரத் தடைக்கான அடைதாழா கப் பயன்படும் ஒரு குறுகிய நீண்ட விரல் வடிவத் துண்டு.

**finial :** *(க.க.)* **முகட்டு ஒப்பனை:** கூரை முகட்டு ஒப்பனை; தூபி வேலைப்பாடு.

**fining : நேர்த்தியாக்குதல் :** விலை யுயர்ந்த உலோகங்களைத் தூய் மையாக்குதல்.

**finish : மெருகேற்றுதல் :** துணி, காகிதம், தோல் போன்ற புத்தகக் கட்டுமானப் பொருள்களுக்கும் மெருகும் பளபளப்பும் ஏற்றுதல்.

**finish all over :** *(எந்.)* **முழுமை மெருகு :** எல்லாப் பரப்புகளும் மெருகேற்றி முடிக்கப்பட வேண் டும் என்பதைக் குறிக்கச் செயல் முறை வரைபடத்திலுள்ள ஒரு குறியீடு.

**finish allowance : மெருகு விளிம்பு :** மெருகு வேலைப்பாடு செய்வதற்காக ஒரு தோரணியில் சேர்க்கப்படும் விளிம்பளவு.


**finishing : இறுதியாக்கம் :** முடி வுறுத்துதல்; இறுதியாக முற்றுவித் தல்.

பிளாஸ்டிக் தொழிலில், மண லால் மெருகிட்டு, அழல் நீக்கி, அச்சிட்டு, அலங்கரித்து, முலா மிட்டு, செதுக்கு வேலை செய்தல்.

**finishing cut :** *(எந்.)* **இறுதிப் பட்டை தீட்டல் :** இறுதியாகச் செப் னிட்டு மெருகேற்றிப் பட்டை தீட் டுதல்.

**finishing tool : மெருகு வேலைக் கருவி :** உலோகத்தில் நுட்பமான மெருகு வேலைப்பாடுகள் செய்வ தற்கான கருவிகள்.

**finneck bolt : ஏந்து மரையாணி:**



ஏந்து மரையாணி

மரத்திலும் உலோகத்திலும் துளை யிட்டுப் பிணைக்கப் பயன்படும் மரையாணி. தலைப்பகுதிக்கு அடி யிலுள்ள இரு செதில்கள், மரை யாணியை இறுக்கும்போது அல் லது கழற்றும்போது திரும்பாமல் தடுக்கிறது.

**fire brick: தீக்காப்புச் செங்கல்:** தீக்காப்புடைய செங்கல். இது பெருமளவு வெப்பத்தைத் தாங்கக் கூடியது.

**fire clay : சுடுகளிமண் :** சுடு செங்கலுக்குரிய களிமண். இது அதிக அளவு வெப்பத்தைத் தாங்க வல்லது. இதில் பெருமளவு மண் ணும் சிறிதளவு உருகும் பொருட் களும் கலந்திருப்பதே இதற்குக் காரணம். இது, தீக்காப்புச் செங் கல், ஊதுலைச் சுவர்ப் பூச்சுப் பொருட்கள் தயாரிக்கப் பயன்படு கிறது.

**fire damp :** *(சுரங்)* **சுரங்க எரி யாவி :** நிலக்கரிச் சுரங்கத்தில் காற் றுடன் கலக்கும் சமயம் வெளி விபத்து விளைவிக்கும் கரிய நீரகை வாயு.

**fire irons அடுப்படிக் கருவிகள்:** அடுப்படி இரும்புக் கருவிகள்.

**fire proof : தீத்தடைக் காப்பு :** நெருப்பினால் பாதிக்கப்படாம லிருக்கச் செய்யப்படும் தீத்தடைக் காப்பு.

**fire screen : தீத்தடைத்திரை :** தீயின் வெப்பத்தைத் தடுக்கும் திரை.

**fire wall:** *(வானூ.)* **தீத்தடுப்புச் சுவர் :** எஞ்சின் அறையில் தீயைத் தடுப்பதற்கான தடுப்புச் சுவர்.

**firing : வெப்பூட்டுதல் :** மண் பாண்டங்களை சூளையிலிட்டுச் சூடாக்கி வலிமையூட்டுதல்.

**firing chamber:** *(விண்.)* **எரியூட்டு அறை :** ஒரு ராக்கெட் எஞ்சினில் அல்லது மின்னோடியில், எரிபொருளும், ஆக்சிகரணியும் எரியூட்டப்பட்டு, போதிய அளவு உந்து ஆற்றலை அளிக்கும் அளவுக்கு வாயுவின் அழுத்தத்தைப் பெருக்குவதற்குரிய ஓர் அறை.

**firing order:** *(தானி.)* **வெடிப்பு வரிசை:** பன்முக நீள்உருளை வாயு எஞ்சின்களில் வெடிப்புத் தொடர் வரிசை.

**firm joint caliper:** *(எந்.)* **அசையா இணைப்பு இடுக்கியளவி:** இரு கால்களும் அசையாத பெரிய இணைப்புமூலம் பிணைக்கப்பட்டுள்ள சாதாரண இடுக்கியளவி.

**first class lever:** *(எந்.)* **முதல் தர நெம்புகோல்:** விசைக்கும் எடைக்கு நடுவில் ஆதாரம் உள்ள ஒரு நெம்புகோல்.

**first gear:** *(தானி.)* **முதற் பல்லிணை:** மிகக் குறைந்த வேகத்தில் செல்லப் பயன்படும் பல்லிணை இணைப்பு. இதனைத் தாழ் பல்லிணை என்றும் கூறுவர்.

**fished joint:** *(மர.வே.)* **கொக்கிப் பிணைப்பு:** கொண்டை ஆணி போன்ற உறுப்புகளை நீட்சியுறச் செய்வதற்காக அதன் நெடுக்கு வாக்கிற்கு எதிராக ஓர் உபரித் துண்டு பிணைக்கப்படுகிறது. இவ்விரு துண்டுகளும் ஒருங்கிணைந்த பிணைப்பு. எதிர்ப் பக்கங்களில் ஆணி அடித்திறுக்கப்படுகிறது. அல்லது மரையாணியால் முறுக்கப் படுகிறது.

**fish eye:** *(குழை.)* **மீன் கண்:** ஒளி புகும் அல்லது ஒளியுருவலான பிளாஸ்டிக்கில், பொதிந்துள்ள பொருளுடன்முழுமையாக இணையாத காரணத்தினால் உள்ள சிறிய கோள வடிவ உருண்டை.

**fish glue: மீன் பசை:** மீன் வகைகளினின்றும் கிடைக்கிற பசை செய்ய உதவும் வெண்மையான நுங்கு போன்ற பொருள்.

**fishing:** *(மின்.)* **கொக்கிழுப்பு:** மின் கடத்திகளை வெளியில் எடுப்பதற்காக ஒரு வடிகாலிலிருந்து இன்னொரு வடிகாலுக்கு தனியொரு கம்பிவடம் முதலியவற்றை இழுப்பதற்குப் பயன்படும் முறை.

**fish oils: மீன் எண்ணெய்கள்:** உலராத, வெறுப்பூட்டும் நெடியுடைய எண்ணெய் வகைகள். இவை, மீன் வகைகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. இந்த எண்ணெய்கள் வெப்பந்தாங்கும் பொருளாகவும், மசகுப் பொருளாகவும் பயன்படுகின்றன.

**fish plate:** *(எந்.)* **இணைப்புக் கட்டை:** தண்டவாளங்களை இணைக்கும் இருப்புக் கட்டை.



இணைப்புக் கட்டை

**fish tail:** *(வானூ.)* **மீன் வால் துடுப்பு:** விமானத்தில் மீன் வால் போன்ற வடிவுடைய துடுப்பு அமைப்பு. விமானம் தரையிறங்குவதற்கு தரையை அணுகும்போது வேகத்தைக் குறைப்பதற்குப் பயன் படுகிறது.

**fishtail cutter**: *(எந்.)* **மீன் வால் வெட்டுளி**: *வரிப்பள்ளங்கள் அல்லது சுழல் தண்டுகளில் கால்கள் வெட்டுவதற்குப் பயன்படும் கருவி*



மீன்வால் வெட்டுளி

**fish wire**: *(மின்.)* **இழு கம்பி**: *சுவர் முகடு, ஊடு கடத்தி இவற்றிலிருந்து மின்கம்பிகளை இழுப்பதற்குப் பயன்படும் தட்டையான எஃகுக் கம்பி.*

**fish paper**: *(மின்.)* **மின் காப்புத் தாள்**: *மின் கடத்திகளையும் மின்மாற்றிச் சுருணைகளையும் பொதிவு செய்வதற்குப் பயன்படும் வலுவான மின்காப்புத் தாள்.*

**fission**: *(இயற்.)* **அணுப் பிளப்பு**: *ஓர் அணுவின் உட்கருவைப் பிளப்பதன் விளைவாகக் கதிரியக்கமும், வெப்பமும் உண்டாகும்.*

**fissure**: **பிளவு**: *பிளவினாலும் பாகங்களின் பிரிவினாலும் ஏற்படும் இடைச் சந்து பிளப்பு.*

**fitment**: **தட்டுமுட்டுப்பொருட்கள்**: *ஒரு சுவரில் அல்லது அறையில் பொருத்தப்படும் சன்னல் கதவுகள், புகைபோக்கிகள், அறைகலன்கள் போன்ற பொருட்கள்.*

**fitting**: *(வானூ.) (1)* **தள வாடங்கள்**: *விமானங்கள் தயாரிப்பதில் பயன்படும் சிறுசிறு உறுப்புகள்.*

*(2)* **பொருத்துதல்**: *எந்திரவியலில் எஞ்சின்கள், பொறிகள் முதலிய பல்வேறு பகுதிகளை ஒருங்கிணைவாகப் பொருத்துதல்.*

**fittings**: *(கம்.)* **துணைக்கருவிகள்**: *இணைப் பொருத்துவதற்குப் பயன்படும் கருவிகள்.*

**fixative**: **சாய நிலைப்பாட்டுப் பொருள்**: *சாயங்கள் நிலையாக இருக்கும்படி செய்யும் பொருள்.*

**fixed landing gear**: *(வானூ.)* **தரையிறங்கு நிலைப்பல்லிணை**: *விமானத்தில் பொருத்தப்பட்டிருக்கும் தரையிறங்கு பல்லிணை. இதனை இணக்கமற்ற தரையிறங்கு பல்லிணை என்றும் கூறுவர்.*


**fixed light**: *(வானூ.)* **நிலைப்பாட்டு விளக்கு**: *இருளில் நிலையாக ஒளி வீசுகின்ற விளக்கு. இது விமான நிலையங்களில் பயன்படுகிறது.*

**fixed pitch propeller**: *(வானூ.)* **நிலை அலகு முற்செலுத்தி**: *அலகின் கோணம் மாற்றப்படாதிருக்கிற விமான முற்செலுத்தி.*

**fixture**: *(மின்.)* **நிலைப்பொருத்தி**: *விளக்குத் தண்டு அல்லது கொத்தான விளக்குகளின் தொகுதி.*

*எந்திர சாதனங்களில் ஒன்றுக்கொன்று மாற்றக்கூடிய உறுப்புகளைத் தயாரிப்பதில் பயன்படும் சாதனம்.*

**fixture splice**: *(மின்.)* **பொருத்துப் பொறியிணைவு**: *முதன்மை மின் கடத்தியைச் சுற்றி நெருக்கமாகச் சுற்றப்பட்டுள்ள பொருத்து கம்பி. இந்த முதன்மை மின் கடத்தியின் முடிவில், பொருத்துக் கம்பியின் சுருணைகளுக்குப் பின் புறமாக இறுக வளைக்கப்பட்டிருக்கும்*



பொருத்துப் பொறியிணைவு

**fixture wire**: *(மின்.)* **பொருத்து கம்பி**: *இது பொதுவாக 16-18 வரையளவுடையது; திடமானது; பிரியிழையுடையது; மின்காப்பிடப்பட்டது. இது மின் பொருத்து கருவிகளில் மின்கம்பி இணைப்பதற்குப் பயன்படுகிறது.*

**flagging: கல்பாவுதல்** : தட்டையான தளவரிசைக் கற்களால் தளம் பாவுதல்.

**flagstones : பாவுகற்கள்**: தளவரிசைக்கான தட்டையான தளவரிசைக் கற்கள்.

**flam-boyant** : (க.க.) **அழல் வண்ண ஒப்பனை** : அலைத்தெழும் தழல் போன்ற தோற்றம் வாய்ந்த ஒப்பனை வேலைப்பாடு.

**flame hardening** : (உலோ.) **அனல் வழிக் கெட்டியாக்கம்** : ஆக்சி அசிட்டிலீன் சுடர் மூலமாக எஃகைச் சூடாக்கிக் குளிர்விப்பதன் மூலம் எஃகைக் கெட்டிப் படுத்தும் முறை.

**flaming arc** : (மின்.) **எரிசுடர்**: உள்ளீடகற்றிய கனிமக் கார்பன்கள் பயன்படுத்தப்படும் சுடர் விளக்கு. இது அதிக அளவுச் சுடரொளியை உண்டாக்க வல்லது.

**flaming of arc** : (மின்.) **சுடர்ப் பிழம்பு**: தொலைவில் வைக்கப்பட்டுள்ள இரு கார்பன்களுக்கிடையில் உள்ள அனற்பிழம்பு வீசும் சுடர்.


**flange** : (எந்.) **விலா விளிம்பு** : ஒரு வார்ப்படத்தில் விலாப்பக்கமுள்ள தட்டையான விளிம்பு. இது வளைவின் அழுத்தத்தைத் தடுக்க உதவும்.

**flanged pulley** : (எந்) **விளிம்புக் கப்பி** : ஒரு விலா விளிம்புள்ள ஒரு கப்பி. இதில் முகத்தின் ஒரு விளிம்பின் விட்டம் அதிகமாக இருக்கலாம். இது ஒரு விலாவிளிம்புக் கப்பி எனப்படும். இரு விளிம்புகளின் விட்டமும் அதிகமாக இருந்தால் அது இரு விலாவிளிம்புக் கப்பி எனப்படும்.

**flange nut** : (எந்.) **விளிம்பு மரை**: அகன்ற விளிம்புடைய ஒரு மரை. இது தனி வளையத்திற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகிறது.

**flange pipe** : (கம்.) **விளிம்புக் குழாய்** : மற்றக் குழாய் இணைப்புகளுடன் இணைப்பதற்காக முனைகளில் விளிம்புகளுடைய நீராவி அல்லது நீர்க்குழாய், வார்ப்பிரும்புக் குழாய்களில், இந்த விளிம்புகள் வார்ப்படத்தின் ஒரு பகுதியாக இருக்கும்.

**flange union** : (கம்.) **விளிம்பு இணைப்பு**: இணைக்கப்படவேண்டிய குழாய்களின் முனைகளுடன் இழைவரி மூலம் இணைக்கப் படுவதற்குரிய ஓர் இணைவிளிம்புகள் குழாய்களை இணைக்கும்போது இந்த விளிம்புகள் மரையாணியால் இறுக்கப்படும்.



**flange wheel** : (எந்.) **விளிம்புச் சக்கரம்** : தண்டவாளத்திலிருந்து சக்கரம் இறங்கிவிடாமல் தடுப்பதற்காக விளிம்புகளுள்ள ஊர்திச் சக்கரம்.

**flank** : (க.க.) **புடைச்சிறை** : ஒரு கவானின் பக்கப் பகுதி.

எந்திரத்தில், இடைவெளிக் கோட்டிற்குக் கீழேயுள்ள பல்லிணையின் பக்கப் பகுதி.

**flap** : (வானூ.) **ஆடல் விளிம்பு** : விமானத்தின் காற்றழுத்தத் தளத்தின் பின்பகுதியாக அமைந்துள்ள கீலுள்ள அல்லது திருகு குடுமியுள்ள தளம். இது மேல் வளைவினை மாற்றுவதற்கு உதவுகிறது.

**flapping angle** : (வானூ.) **ஊசலாட்டக் கோணம்** : விமானத்தில் சுழல் அச்சுக்குச் செங்குத்தாகவுள்ள தளத்திற்குத் தொடர்பான சுழலும் சிறகு அமைப்பின் ஓர் அலகின் வீச்சளவு. அச்சின் படுகோணத்திற்கும் திரும்பு கோணத்திற்குமிடையிலான வேறுபாடு.

**flare** : **கதிரொளி**: உருவ நோக் காடியில் நுண்ணாய்வு முனை களில் ஒளி குறைவாக இருக்கும் போது உண்டாகும் வெண்ணிறச் சைகை. அதிக ஒளியும் இருளும் நிறைந்த பொருட்கள் அருகருகே இருக்கும்போது வரம்பிற்கு அப் பால் உண்டாகும் ஒளி.

**flash** : (குழை.) **அழற்பாய்ச்சல்** : (1) கண்ணாடி வார்ப்பில் உருக் கிய குழம்பை மெல்லிய தகடாகப் பரப்பிப் பாய்ச்சுதல்.

(2) வார்ப்படத்தில் வேகமாகப் பாய்ந்து பெருகும் மிகுதியான வார்ப்படப் பொருள்.

(3) தடைப் பற்றவைப்பில் இணைப்பிலிருந்து வெளியேற்றப் படும் உலோகமும் ஆக்சைடும்.

**flash butt welding** : **சுடர்முறை முட்டுப் பற்றவைப்பு** : இது தடை முட்டுப் பற்றவைப்பு முறையா கும். இதில், உறுப்புகள் ஒன்றை யொன்று தொடுவதற்கு முன்னர் மின்னழுத்த நிலை உண்டாக்கப் படுகிறது. அப்போது, பற்றவைக் கப்படும் உறுப்புகளுக்கிடையி லான தொடர்வரிசைச் சுடர்களி லிருந்து வெப்பம் உண்டாகிறது.

**flash-dry ink** : (அச்சு.) **சுடர் முறை உலர் மை**: செயற்கை வண் ணங்களிலிருந்தும் கோந்துகளி லிருந்தும் தயாரிக்கப்படும் மை. உருளைகளிலிருந்து வெளிவரும் அச்சிட்ட தாளில் உள்ள மை தீவிர வெப்பம் காரணமாக உட னடியாக உலர்ந்து படிகிறது.

**flasher** : (மின்.) **மின்னொளிர் வான்** : சில மின் சைகைகளில் உள் ளது போன்று விளக்குகளில் ஒளி தோன்றித் தோன்றி மறையச் செய்வதற்கான அமைவு.

**flash tube** : (மின்.) **சுடரொளி குழல்விளக்கு** : மிகவும் பிரகாச மான சுடரொளியை உண்டாக் கும் மின்னியல் விளக்கு.

**flashing** : (க.க.) **கூடல் தகடு** : மழைநீர் உள்ளே கசியாமல் விலக் குவதற்காக மோட்டின் கூடல் வாய்களிற் பொருத்தப்படும் உலோகத் தகடு.

**flashing light** : (வானூ.) **ஒளிர் விளக்கு** : ஒரு திசையிலிருந்து பார்க்கும்போதும் விட்டுவிட்டு ஒளிரும் விளக்கு.

**flashing over**; (மின்.) **பாய்ச்சல் மின்னோட்டம்**: ஓர் எந்திரம் இயங் கும்போது ஒரு திசைமாற்றியின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு மின்னோட்டம் பாய் வதைக் குறிக்கும் சொல். இது, திசைமாற்றியின் தவறான மின் காப்பு காரணமாக, குதித்து குதித்துச் செல்லும் நெருப்பு வளையம் போல் இருக்கும்.

**flash light** : (மின்.) **மின்பொறிக் கை விளக்கு** : பசை மின்கலங்கள் மூலம் இயங்கும் கையில் எடுத்துச் செல்லக்கூடிய மின்பொறி விளக்கு.

**flash light powder** : (வேதி.) **மின்னொளித் தூள்** : மெக்னீசியத் தூள் இரு பங்கும், பொட்டாசியம் குளோரைடுத்தூள் ஒரு பங்கும் கலந்த ஒரு கலவைத்தூள்.


**flash lines** : (குழை.) **சிதறுவரிக் குறிகள்** : வார்ப்படத்திலிருந்து மிகையான வார்ப்படப்பொருள் வழிந்து வடிந்த வரிக்குறிகள்.

**flash mould** : (குழை.) **சிதறல் வார்ப்படம்** : இறுதி அடைப்பின் போது மிகையான வார்ப்படப் பொருள் வழிந்தோடுவதற்கு அனு மதிக்கும் வகையில் வடிவமைக்கப் பட்ட வார்ப்படம்.

**flash point** : **தீப்பற்று நிலை** : தீயை அருகில் கொண்டு சென் றால் உடனே தீப்பற்றிக் கொள் ளக்கூடிய நீர்மத்தின் வெப்ப நிலை.

**flashpots :** **மின்னொளிக் கலங்கள் :** மின்னொளித்தூள் நிரப்பிய கொள்கலங்கள். இவை குறுக்கு வெட்டு மின்னோட்டம் மூலம் மின்னியல் முறையில் இயக்கி வைக்கப்படும்.

**flask :** (வார்.) **வார்ப்புச் சட்டகம்:**




வார்ப்புச் சட்டகம்

வார்ப்படச் சாலையில் வார்ப்படம் திணித்து அடைக்கப்படும் மரத்தினாலான அல்லது உலோகத்தினாலான சட்டகம்.

**flat :** (அச்சு.) **நீளத்தாள் :** மடிக்கப்படாத தாள். பொதுவாக 43 × 71செ.மீ. அளவு வரையிலான தாள்கள் இப்பெயரில் அழைக்கப்படுகின்றன.

**flat arch or jack arch :** **சமதளக் கவான் :** வளைவடிச் செதுக்குமானம். வளை முகட்டின் வெளிப்புற வளைவு இரண்டும் சமதளமாக இருக்கும் ஒரு கட்டுமானம்.

**flat bed :** (அச்சு.) **சமதள அச்சுப் படிவம் :** அச்சு எந்திரத்தில் அச்




சடிப்பதற்கான சமதள அச்சுப் படிவம்.

**flat carving:** (மர.வே.) **சமதள செதுக்கு வேலைப்பாடு :** பின்னணி மட்டும் செதுக்கப்பட்டு, வடிவமைப்புச் சமதளமாக இருக்குமாறு அமைக்கப்படும் செதுக்கு வேலைப்பாடு.

**flat chisel :** (உலோ.வே.) **சமதள உளி:** உலோகத்தில் சிராய்ப்பு மூலம் சமதளமான மேற்பரப்பை உண்டாக்குவதற்குப் பயன்படும் உலோகத்தாலான உளி.

**flat drill :** (எந்.) **சமதளத் துரப்பணம் :** ஒரு வகைத் துரப்பணக் கருவி. இதில் வெட்டும் அலகு. இணையான, சாய்வான முனைகளைக் கொண்டிருக்கும். இது உட்புழையுள்ள துவாரங்களை வெட்டுவதற்குப் பயன்படுகிறது.

**flat moulding:** **சமதள வார்ப்படம்:** மரவேலைப்பாட்டுப் பொருட்களில் இறுதி மெருகு வேலை செய்வதற்குப் பயன்படும் மெல்லிய, சமதளமான பட்டைகள்.

**flat plate :** (அச்சு.) **தட்டை அச்சுத் தகடு :** வேறுபாட்டு முனைப்பு அதிகமின்றி, செதுக்கு வேலை செய்யப்பட்ட அச்சுத் தகடு.

**flat pull :** (அச்சு.) **சமதளப் பார்வைப் படி :** அச்சு வகையில் அடிப்பதிவு அல்லது மேற்பதிவு செய்து எடுக்கப்பட்ட பார்வைப் படி.

**flat roof :** (க.க.) **சமதள முகடு:** மழைநீர் வடிவதற்குப் போதிய பள்ளமுடைய ஒரு முகடு.

**flat skylight :** (க.க.) **சமதள மேல் சாளரம் :** நீரை வடித்துக் கொண்டு செல்வதற்குப் போதிய அளவு மட்டுமே பள்ளமுடைய சமதள மேற்பரப்பு கொண்ட சாளரம்.

**flat spin :** (வானூ.) **சமதளத் திருகியக்கம் :** விமானத்தில், நீள

வாக்கு அச்சு, கிடைமட்ட அச்சிலிருந்து 45°க்குக் குறைவாக இருக்கும் திருகியக்கம்.

**flat spots** : (வண்.) **சமதளப் புள்ளிகள்** : வேலைப்பாடு முடிவுற்ற மேற்பரப்பில் உள்ள பளபளப்பில்லாத புள்ளிகள். இப்புள்ளிகள், சீரற்ற மேற்பரப்புப் பூச்சுமானம் காரணமாக ஏற்படும் நுண் துளைகளாகும்.

**flatter** : **தட்டையாக்குச் சம்மட்டி**: கொல்லர்கள் தட்டையாக அடிப்பதற்குப் பயன்படுத்தும் ஒரு வகைச் சம்மட்டி.

**flat-tube radiator** : (தானி.) **சமதளக் குழாய்க் கதிர்வீசி** : தட்டையான குழாய்களினாலான கதிர்வீசி. இதில் வெப்பம் கலத்திற்குக் கலம் நேரடியாகப் பாய்வதற்குப் பதிலாக, இரண்டு மூன்று மடங்கு நீளமாக இருக்கும் வகையில் குழாய்கள் வளைக்கப்பட்டிருக்கும். இந்த வளைவு நீரை இருத்தி வைத்துக் கொண்டு அதிகக் குளிர்ப் பரப்பினை உண்டாக்குகிறது. இதனைப் பொதுவாகத் தேன்கூட்டுக் கதிர்வீசி என்பர். ஆனால், உண்மையில் இது தேன் கூட்டின் அமைப்புடையதன்று.

**flaw** : **வெடிப்பு/பிளவு** : வார்ப்படத்தில் ஏற்படும் வெடிப்பு அல்லது பிளவு.

பொதுவாக, செயற்படுவதைத் தடை செய்யும் பழுது.

**flax**: (தாவ.) **ஆளிவிதைச்செடி**: பல நாடுகளில் வளரும் செடி. இது 2.5–10செ.மீ. வளரும். இதன் விதையிலிருந்து ஆளிவிதை எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இதன் நாரிலிருந்து இழைகள் தயாரிக்கப்படுகின்றன.

**flaxseed**: (தாவ.) **ஆளிவிதை**: ஆளி விதைச் செடியிலிருந்து கிடைக்கும் விதை. இந்த விதையிலிருந்து ஆளிவிதை எண்ணெய் தயாரிக்கப்படுகிறது.

**flax twine** : **ஆளிச் சரடு** : ஆளி விதைச் செடியின் நாரிலிருந்து தயாரிக்கப்படும் சரடு. இது முனைகளையும் பாய்களையும் தைப்பதற்குப் பயன்படுகிறது.

**fleming, john ambrose** : **ஃபிளெமிங், ஜான் அம்புரோஸ்** (1849—1945) : மின்மாற்றிகள், உயர் அழுத்த மின்விசை அனுப்பீடு பற்றிய ஆய்வுகள் நடத்திய ஆங்கிலேய மின்னியல் பொறியியலறிஞர். 'ஃபிளெமிங் ஓரதர்' எனப்படும் 'வானொலிக் குழல்' கண்டு பிடித்துப் புகழ் பெற்றவர். இவர் லண்டனிலுள்ள பல்கலைக்கழகக் கல்லூரியில் பேராசிரியராக இருந்தார்.

**fleming's rule**: (மின்.) **ஃபிளெமிங் விதி/ வலக்கை விதி** : ஆட்காட்டி விரல் இயக்கத் திசையினையும், கட்டை விரல் கடத்தியின் இயக்கத் திசையினையும் காட்டுமாயின், நடுவிரல் மின்னியக்க விசையினைக் காட்டும்.

**இடக்கை விதி** : ஆட்காட்டி விரலை இயக்கத் திசையை நோக்கியும், நடுவிரலை கடத்தியில் மின்னோட்டத்தின் திசையிலும் காட்டும்போது, கட்டை விரல் கடத்தி இயங்கத் தொடங்கும் திசையைக் காட்டும்.

இந்த விதிகள், ஒரு மின்னாக்கி சுழலும் திசையினை அல்லது ஒரு மின்னாக்கியின் பொது மின்னோட்டத்தின் முனைமையைத் தீர்மானிக்க உதவுகின்றன.


**flemish bond** : (க.க.) **பிளெமிஷ் பாணிக் கவிகைப்பிணைப்பு** : பிளெமிஷ் பாணியில் அமைந்த கட்டிடச் செங்கல் அல்லது கல்லின் பற்றுமானக் கவிகைப் பிணைப்பு.

**flemish bond double** : (க.க.)

**இரட்டைக் கவிகைப் பிணைப்பு** : வெளிப்புறச் சுவரின் உட்புற வெளிப்புறப் பரப்புகள் ஃபிளெமிஷ் பாணியில் பற்றுமானமாக அமைக்கப்படும்போது, முன்புறச் செங்கற்கள் அல்லது கற்கள் அனைத்தும் முழுமையானவையாக இருக்கும். இவற்றை "இரட்டைக் கவிகைப் பிணைப்பு" என்பர்.

**flemish garden bond** : (க.க.) **ஃபிளெமிஷ் தோட்டக் கவிகைப் பிணைப்பு :** இதில் ஒவ்வொரு வரிசையிலும் சுவர் முகப்பு நீளவாட்டுக் கிடைச் செங்கற்கள் மூன்று அமைந்திருக்கும். அவற்றைத் தொடர்ந்து முகப்புச் செங்கற்கள் அமைந்திருக்கும். ஒவ்வொரு வரிசையிலுள்ள முகப்புச் செங்கல் மேலும் கீழுமுள்ள இடைச் செங்களுக்கிடையில் அமைந்திருக்கும்.

**fleur-de-lis** : **ஃபிரெஞ்சு அரசுச் சின்னம் :** ஃபிரான்ஸ் நாட்டரசரின் அரசுச் சின்னம். இது அலங்கார வேலைப்பாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.



**flexible conduit**: (மின்.) **துவள் காப்புக் குழாய் :** மின் கடத்திகள் பாதுகாப்பாக வைக்கப்படும் துவள் உலோகக் குழாய்.

**flexible coupling** : **துவள் இணைப்பி :** துவள்கின்ற உருண்டை இணைப்பி. இதில் தண்டின் முனைகளுடன் இணைக்கப்பட்டுள்ள இரு வட்டத் தகடுகள் அமைந்திருக்கும். இந்தத் தகடுகள் அவற்றின் முகப்புகளுக்கிடையில் வைக்கப்படும் உருண்டையில் சுழலும் வண்ணம் அம்முகப்புகளில் புழை செய்யப்பட்டிருக்கும்.

**flexible mould**: (குழை.) **துவள் வார்ப்புப்படம் :** திரவ பிளாஸ்டிக்குகளை வார்ப்படம் செய்வதற்குப் பயன்படும் ரப்பர் மரப்பாலினாலான அல்லது நெகிழ்திறனுள்ள பிசினிலான வார்ப்படம்.

**flexible shaft** : (எந்.) **துவள் சுழல் தண்டு :** துவள் காப்புக் குழாயினுள் அடைத்து வைக்கப்பட்டுள்ள சங்கிலித்தொடர் இணைப்புச் சுழல்தண்டு பயன்படுத்த இயலாத இடங்களில் விசையினைச் செலுத்துவதற்குப் பயன்படுகிறது.

**flexure formula** : (பொறி.) **வளைவுச் சூத்திரம்:** உத்தரங்களில் கிடைமட்ட விறைப்பு, அழுத்த இறுக்கவிசைகளைத் தொடர்புபடுத்தும் சூத்திரம்.

$$M = \frac{SI}{C} \text{ அல்லது } S = \frac{Mc}{I}$$

இதில், 'S' என்பது, உத்தரத்தின் புற இழை எதிலும் வளைத்திறன் காரணமாக அழுத்தும் இறுக்கவிசையின் அலகு; 'C' என்பது அந்த இழையிலிருந்து மையப்பரப்பிற்குள்ள தூரம்; 'M' என்பது தடைத்திறன் அளவு; 'I' அந்தப் பகுதியுள்ள இயக்கத்திறன் அளவு.

**flexure linkage**:(கணிப்.) **வளைவு இணைப்பு:**

**flicker** : (மின்.) **சுடர் நடுக்கம் :** தொலைக்காட்சியில் படம் தாறுமாறாக அசைவுறுதல் அல்லது நடுங்குதல்; ஒளித் தெளிவில் ஏற்படும் ஏற்றத் தாழ்வு.

**flier** : (க.க.) **தாவுபடி :** படிக்கட்டின் நாற்கட்டான ஒரு படி.

**fliers** : (அச்சு.) **முன்னறிவிப்பு விளம்பரம் :** எதிர்வரும் ஒரு நிகழ்ச்சியை அறிவிப்பதற்கான, கவர்ச்சியான வடிவமைப்பிலுள்ள ஒரு சிறிய விளம்பரம்.

**flight indicator** : *(வானூ.)* **பறக்கும் தூரங்காட்டுங் கருவி** : விமானம் பறக்கும் தூர அளவினைக் காட்டும் கருவி.

**flight bird** : *(விண்.)* **சோதனை ஏவுகணை** : சோதனைக்காகப் பறக்க விடுவதற்குக் காத்திருக்கும் ஓர் ஏவுகணை.

**floating anchor** : **மிதவைச் சட்டம்**: மிதந்து செல்லும் நிலையில் கப்பலின் காற்றுவாட்ட வேகம் தடுக்கும் மிதவைச் சட்டம்.

**flight of stairs** : *(க.க.)* **படிக்கட்டு வரிசை** : தளங்களுக்கிடையிலான படிக்கட்டு வரிசைகள். இரு வரிசைப் படிக்கட்டுகளுக்கிடையில் ஒரு தளம் அமைந்திருக்கலாம்.

**flight path** : *(வானூ.)* **பறக்கும் பாதை**: விமானம் பறக்கும் பாதை. அதன் புவியீர்ப்பு மையம் செல்லுகின்ற பாதை.

**flight path angle** : *(வானூ.)* **பறக்கும் பாதைக் கோணம்** : விமானம் பறக்கும் பாதைக்கும் அதன் கிடைமட்டத்திற்குமிடையிலான கோணம்.


**flight recorder** : *(வானூ.)* **விமான இயக்கப் பதிவுக் கருவி** : விமானம் இயங்குவது பற்றிய சில குறிப்புகளைப் பதிவு செய்வதற்கான கருவி.

**flint** : *(கனி.)* **சக்கிமுக்கிக்கல்** : மங்கலான நிறமுடைய படிகக் கல் வகையைச் சேர்ந்த பளிங்குக் கல்.

**flip titles**: *(தொலை.)* **சொடுக்குப் பெயர்ப் பட்டிகள்** : வளையப் பிணைப்புச் சட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள பெயர்அட்டைகள். இவை தனியாகவோ ஒன்றன்பின் ஒன்றாகவோ ஒளிப்படக்கருவியின் முன்புள்ள இடத்தில் திடீரெனத் தோன்றுகிறது.

**flitch beam** : **துண்டு உத்தரம்** : மையத்திலுள்ள ஓர் இரும்பு உத்தரத்தைச் சூழ்ந்துள்ள புற உத்தரத் துண்டுகள், மரையாணிகள் மூலம் பிணைக்கப்பட்டிருக்கும் உத்தரங்களின் ஒருங்கிணைப்பு.

**float** : *(வானூ.)* **மிதவை** : (1)



மிதவை

விமானம் நீரில் மிதப்பதற்கு அனுமதிப்பதற்கு அந்த விமானத்தில் இணைக்கப்பட்டுள்ள நீர் புகா அமைப்பு.

(2) எந்திரத்தில் அரம் போன்ற வடிவுடைய ஒரு கருவி. இதில் ரம்பத்தில் உள்ளது போன்ற பற்கள் அமைந்திருக்கும்.

(3) சுவர்களின் பரப்பில் பூச்சுப் பொருட்களைப் பூசுவதற்குப் பயன்படும் அகலமான இழைப்புக் கரண்டி.

(4) ஊடிழையுடன் பின்னிச் செல்லும் பாவிழைப் பகுதி.

**float carburetor** : *(தானி.)* **மிதவை எரி-வளி கலப்பி** : உந்து வண்டியில் எரிபொருளின் உயரத்தைக் கட்டுப்படுத்துவதற்குற்ற தக்கையினாலான அல்லது உட்புழையுள்ள உலோகத்தினாலான மிதவையுள்ள எரி-வளி கலப்பி.


**floating** : **சாந்துப்பூச்சு**: சாந்து, சிமெண்டு முதலியவற்றைச் சமதளமாகப்பூசுதல். இதற்குப் பயன்படும் சாதனம் ''மிதவை'' எனப்படும்.

**floating axle** : **மிதவை அச்சு** : பாரங்கள் அல்லது அழுத்தங்கள்

அனைத்திலிருந்தும் விடுபட்டுள்ள சுழல் தண்டுடைய அச்சு.

**floating power** : (தானி.) **மிதவை விசை:** எஞ்சினின் அதிர்வினை ரப்பர் திண்டுகள் தாங்கிக் கொள்ளும் வகையில் சட்டகத்தில் எஞ்சினை ஏற்றியமைக்கும் முறை.

**floating ribs:** (உட.) **நிலை பெயர்வு விலா எலும்புகள்** : நெஞ்சு எலும்புடனோ மற்ற விலா எலும்புகளுடனோ இணையாமலிருக்கிற 11ஆவது, 12ஆவது விலா எலும்புகள்.



**floating tool** : (எந்.) **மிதவை கருவி :** வேலைப்பாடு செய்வதற்குப் பயன்படும் கருவியானது, வேலைப்பாடு செய்யப்படும் பொருளின் மீது மிதந்தவாறே இயங்கிச் செல்லும் அமைப்புடைய கருவி.

**float switch** : (மின்.) **மிதை மின் விசை:** ஒரு மிதவை மூலம் தொடுக்கவும் விடுக்கவும் பயன்படும் ஒரு மின்விசை. இது தொட்டியில் திரவத்தின் மட்டத்திற்கேற்ப ஏறி இறங்கும்.

**float system:** (வானூ.) **மிதவை யமைப்பு** : கடல் விமானத்திற்கு அல்லது ஒரு பறக்கும் படகிற்கு அது மிதப்புத் தன்மையினையும், உறுதிப்பாட்டினையும் அளிக்கவும், உயரே எழும்போது நீரியல் இயக்க ஏந்துவிசையளிக்கவும் பயன்படும் நிரந்தரமான மிதவைகளின் அமைப்புமுறை.

**float trap** : **மிதவைப் பொறியமைப்பு** : வடிவாலையில் காற்று உள்ளே செல்லவும் நீராவியை இறுத்தி வைத்துக்கொள்ளவும் வசதியாக அமைக்கப்பட்டுள்ள உட்புழையுள்ள உலோக மிதவையினால் இயங்கும் ஓரதர்.

**float valve** : (கம்.) **மிதவை ஓரதர் :** கழிப்பிடத் தொட்டியில் பயன்படுத்தப்படுவது போன்ற ஓர் ஓரதர். மேற்பரப்பில் மிதக்கும் ஓர் உட்புழையுள்ள உருண்டை நீர் உட்புகுந்ததும் அடைத்துக் கொள்கிறது.

**flock:** (நூற்பு.) **குஞ்சம்** : கம்பளி மயிர்க் கழிவு அல்லது கிழிந்த துணிகளினாலான குஞ்சம்.

**flong:** (அச்சு.) **பதிவச்சுத் தாள்:** பதிவுத் தகட்டினால் அச்சடிப்பதற்குச் செப்பனிட்ட தாள்.


இந்தத் தாள் படிவத்தில் உருகிய உலோகம் குளிர்ந்த அச்சுப்படிவப் பக்கங்கள் கிடைக்கின்றன.

**flooding:** (தானி.) **மிகை எரிபொருள்:** கலவையை அதிக அளவில் எஞ்சினுள் செலுத்துதல். இதனால் எஞ்சினை இயக்குவதில் சிரமம் ஏற்படும்.

**flood light** : (மின்.) **பேரொளி:** நிழல் விழாதபடி பல திசைகளிலிருந்து வீசப்படும் பேரொளிப் பெருக்கு.

**floor** : (க.க.) **(1) தளம் :** ஒரு கட்டுமானத்தில் அல்லது கட்டிடத்தில் ஒருவர் நடப்பதற்குரிய பகுதி. **(2) தள அடுக்கு** : வீட்டின் அல்லது கட்டிடத்தின் தள அடுக்குகளில் ஒன்று. இவற்றை கீழ்த் தளம், முதல் தளம், இரண்டாம் தளம் என அழைப்பர்.

**floor chisel:** (மர;வே.) **தள உளி:**



தள அட்டைகள் முதலியவற்றை அகற்றுவதற்குப் பயன்படும் 5—7.5செ.மீ. அகல விளிம்புள்ள எஃகு உளி.

**floor drain** : *(க.க; கம்.)* **தள வடிகால்** : *தளங்களிலிருந்து வடிகால்களுக்குள் மழைநீர் வடிவதற்கு அமைக்கப்படும் அமைப்பு.*

**floor molding** : *(வார்.)* **தள வார்ப்படம்** : *தளத்தில் வார்ப்படங்கள் செய்வதற்கான முறை. இது மேசை வார்ப்படத்திலிருந்து வேறுபட்டது. இது பெரிய அளவு வார்ப்பட வேலைகளுக்குப் பயன்படுகிறது.*

**floor plan** : *(க.க.)* **தள அமைப்புப் படம்** : *ஒரு கட்டிடத்தின் நீள அகலங்களையும், அவற்றில் அடங்கும் அறைகளின் நீள அகலங்களையும் காட்டும் வரைபடம். ஒவ்வொரு தளத்திற்கும் தனித்தனி அமைப்புப் படம் வரையப்படும்.*

**flore lated** : **மலர் உரு ஒப்பனை** : *மலர் உருவரைகளால் ஒப்பனை செய்தல்.*

**floatation gear** :*(வானூ.)* **மிதவைப் பல்லிணை** : *தரை விமானம் நீரில் இறங்குவதற்கும், நீரின் மேற்பரப்பின் மீது மிதக்கச் செய்வதற்கும் அனுமதிக்கும் நெருக்கடி நிலைப் பல்லிணை.*

**flowering dogwood** : *(தாவ.)* **மலர் மரம்** : *இலையுதிர் பருவத்தில் தண்டும் இலைகளும் சிவப்பாக மாறவல்ல ஒரு மரவகை. இந்த மரம் மிகக் கடினமானது. குளிர்ப் பந்தாட்டக் கோல், கருவி கைப்பிடிகள் முதலியன தயாரிக்கப் பயன்படுகிறது.*

**fluctuation** : **ஏற்ற இறக்கம்** : *அலையலையாக எழுந்து தாழ்ந்து ஊசலாடுதல்.*

**fluctuating current** : *(மின்.)* **நிலையிலி மின்னோட்டம்** *சீரற்ற இடைவெளிகளில் அளவு மாற்றமடையும் மின்னோட்டம்.*

**flue** : **புகை போக்குக் குழல்** : *வெப்பக்காற்று, புகை முதலியவற்றை வெளிக்கொண்டு செல்வதற்கான குழாய்.*

**fluid** : **நீர்மம்** : *கன அளவு மாறாமல் வடிவத்தை எளிதில் மாற்றிவிடக்கூடிய நெகிழ்ச்சிப் பொருள். இதிலுள்ள துகள்கள் இடம் பெயர்ந்து வடிவத்தில் மாறுமேயொழிய, தனியாகப் பிரிந்து விடுவதில்லை.*

**fluid drive** : *(தானி.)* **நீர்ம வழி இயக்கம்** : *அரை நீர்மங்களின் வழி ஆற்றல் இயங்கச் செய்யும் முறை. உந்து வண்டியின் சமனுருள் சக்கரத்தில் இது பயன்படுகிறது.*

**fluid friction** : *(எந்.)* **நீர்ம உராய்வு** : *ஒரு நீர்மத்தின் துகள்கள் இயங்கி நீர்மத்தின் புறப்பரப்புகள் திடப்பரப்பினைத் தொட்டுக் கொண்டிருக்கும்போது, நீர்மத் தொகுதி தனக்குள் பல்வேறு அடுக்குகளாகப் பிரிகிறது. இந்த அடுக்குகள் ஒன்றன்மீது ஒன்று நகரும் போதும் ஏற்படும் உராய்வு மூலம் ஏற்படும் உரசல் விளைவு 'நீர்ம உராய்வு' எனப்படும்.*

**fluidity** : *(குழை.)* **நீர்மத் திறன்**: *இதனைக் குழைமத் திறன் என்றும் கூறுவர்.*

**fluid pressure** : **நீர்ம அழுத்தம்** : *நீர்மத்தில் அழுத்தமானது, எல்லாத் திசைகளிலும் செலுத்தப்படுகிறது. இவ்வாறு செலுத்தப்படும் அழுத்தம், அனைத்துத் திசைகளிலும் சம அளவிலும், மேற்பரப்பின் பரப்பளவிற்கு நேர்விகித அளவிலும் இருக்கும்.*

**fluorescent lamp** : *(மின்.)* **உமிழொளி விளக்கு** : *மின் ஆற்றலின் அளவு மிகாமல் நிறை ஒளி தரும் விளக்கமைவு. இது பாதரசச் சுடர்த் தத்துவத்தின்படி செயற்படுகிறது. பாதரசச் சுடர் உமிழும்*

புறவூதாக்கதிர்கள் உமிழொளிர் வுப் பொருளைத் தூண்டி ஒளி யூட்டுகிறது.

**fluorescent paint :** *(வண்.)* **ஒளிர்வுறு வண்ணம் :** புறவூதா அல்லது "கறுப்பு" ஒளியில் செய லூக்கம் பெற்று ஒளிவிடும் வண்ணம்.

**fluorescent substances : ஒளிர் வுறு பொருள்கள் :** ஊடுகதிர் (எக்ஸ்-ரே) அல்லது புறவூதா ஒளி யிலிருந்து ஆற்றலை எடுத்துக் கொண்டு, அந்த ஆற்றலை மிகக் குறுகிய (ஒரு வினாடிக்கும் குறைவான) காலத்திற்கு இருத்தி வைத்திருந்து, பின்னர் கண்ணுக் குப் புலனாகும் ஒளியின் வடிவத் தில் ஆற்றலை வெளியிடும் பொருள். எடுத்துக்காட்டு: தொலைக்காட்சித் திரை.

**flourine :** *(வேதி.)* **ஃபுளோரின்** நிறமற்ற, அரிக்கும் தன்மையுள்ள நச்சு வாயு. நீர் நீக்கப்பட்ட ஹைட்ரோபுளோரிக் அமிலத்தை மின்னால் சிதைத்து வடித்தல் மூலம் இது பெறப்படுகிறது.

**fluorite or flour spar : ஃபுளோ ரைட் அல்லது மணியுருப்படிகம் :** மணியுருப் படிக வடிவத்தில் கிடைக்கும் கால்சியம் ஃபுளோ ரைடு என்னும் கனிமப் பொருள். அமெரிக்காவில் கென்டக்கி, இலினாய்ஸ் மாநிலங்களில் கணிச மாகக் கிடைக்கிறது. உராய்வுச் சக்கரங்கள் தயாரிப்பில் எளிதில் உருகும் பொருளாகவும் பயன் படுத்தப்படுகிறது.

**fluoro carbons :** *(குழை.)* **ஃபுளோரோ கார்பன் :** பிளாஸ்டிக் அணுக்கள். இதில் கார்பனும், ஃபுளோரினும் அடங்கிய மூலக் கூற்றுக் கட்டமைவு அமைந்திருக் கும். இது வேதியியல் பொருட் களின் தாக்குதலைத் தடுக்கும் திற னும், உயர்ந்த வெப்பநிலைப்பாட் டுத் திறனும், மின்னழுத்தத்தைத் தாங்கும் திறனும் உடையது. எனினும், இதன் பசையற்ற தன் மைக்கும், குறைந்த உராய்வுத் திறனுக்குமே இது முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது. தாங்கி கள், வளையங்கள், மின்சாதனங் கள், நாடாக்கள் முதலியன தயா ரிக்க இது பயன்படுகிறது.

**fluoroscopy :** *(மின்.)* **உமிழொளி கணிப்பு :** ஒளி ஊடுருவிச் செல் லாத பொருள்களை ஊடுகதிர் (எக்ஸ்-கதிர்) மூலம் ஆராய்வதற் குப் பயன்படும் நுட்பம். பொரு ளின் வழியாக ஊடுகதிர் சென்று ஒரு வண்ண ஒளிகாலுகிற திரை யில் உடனடியாகப் பிம்பத்தை உண்டாக்குகிறது.

**flush :** *(பட்.)* **நேர்தள பரப்பு :** தடைபடாத சரிசமமான நேர் தளப் பரப்புடைய உறுப்புகள் எனப்படும்.

**flush bolt : நேர்தள மரையாணி :** எதிர் துளையிட்ட துவாரத்தினுள் நுழைவதற்கேற்ப தலை அமைந் துள்ள ஒரு மரையாணி. இதன் தலைப்பகுதி அது செருகப்படும் தட்டின் முகப்புக்குச் சமதளத்தில் இருக்கும்.

**flush head rivet : நேர்தளத் தலைத் தரையாணி :** செலுத்தப் படும் தட்டின் தளப்பரப்புக்குமேல் நீட்டிக்கொண்டிராதவாறு தலைப் பகுதி அமைந்துள்ள ஒரு தரை யாணி.

**flush receptacle :** *(மின்.)* **நேர் தளக் கொள்கலம் :** சுவரில் உள்ள மைவாகப் பொருத்தப்பட்டிருக் கும் காப்பிட்ட பிணைப்பூசி அல் லது திருகு வகையான கொள் கலம். இதில், தகடு மட்டுமே மேற் பரப்புக்கு மேல் நீட்டிக்கொண் டிருக்கும்.

**flush switch**: (மின்.) **நேர்தளமின் விசை** : சுவரில் உள்ளமைவாகப் பொருத்தப்பட்டிருக்கும் மின் விசை. இதில் இயங்கும் எந்திரப் பொறியமைவு மட்டுமே வெளியே நீட்டிக்கொண்டிருக்கும்.

**flush valve** : (கம்.) **நேர்தள ஓரதர்** : விசைநீர் கொட்டுவதன் மூலம் துப்புரவு செய்வதற்குப் பயன்படும் ஓரதர். இதில், நீர் வழங்கும் குழாய்களிலிருந்து நீர் விசையுடன் பாய்ந்து தொட்டி களைத் துப்புரவு செய்யும்.

**flute** : (க.க.) (1) **வரிப்பள்ள ஒப்பனை** : தூணில் செங்குத்தான வரிப்பள்ளங்களைச் செதுக்கிச் செய்யப்படும் ஒப்பனை.

(2) நெசவுத்தறியின் ஓடம்.

**fluted reamer** : **வரிப்பள்ளத் துளைச் சீர்மி** : நீளவாக்கில் வரிப் பள்ளங்கள் இடப்பட்ட ஒரு துளைச் சீர்மி. இது பக்கங்களை வெட்டிச் சீர்படுத்த உதவும்.

**fluting cutter** : (எந்.) **வரிப்பள்ள வெட்டி** : நீர்வரிப்பள்ளம் இட்டு வேலைப்பாடு செய்வதற்குப் பயன் படும் வெட்டுக் கருவி.

**flutter** : (வானூ.) **ஒழுங்கிலா அதிர்வு** : விமானத்தின் எந்த ஒரு பகுதியிலும் ஒரு குறிப்பிட்ட தரு ணத்தில் ஏற்படும் தடுமாற்றம் காரணமாக ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு உண்டாகும் ஒழுங்கில் லாத அதிர்வு. இது அந்த உறுப் பின் மற்றப் பண்புகள் காரண மாகச் சீரடைகிறது.

**flux** : (வேதி.) **உருகு பொருள்** : உலோகங்களை அல்லது கனிமங் களை எளிதில் உருகச் செய்வதற்கு அவற்றுடன் சேர்க்கப்படும் காரங் கள், போரக்ஸ், சுண்ணாம்பு ஃபுளோரைட் போன்ற கலவைப் பொருள்கள்.

**flux density** : (மின்.) **பெருக் கடர்த்தி** : மின்தூண்டலில், ஓர் அலகு பரப்பளவில் தூண்டலுக் குச் செங்குத்தாகச் செயற்படும் விசை அல்லது தூண்டல் விசைக் கோடுகளின் எண்ணிக்கை. தங்கு தடையற்ற இடப்பரப்பில் பெருக் கடர்த்தியும், புலச்செறிவும் எண் ணிக்கையில் சமமாக இருக்கும். ஆனால் காந்தப் பொருளினுள் இவ்விரண்டும் முற்றிலும் வேறு பட்டிருக்கும்.

**flux leakage** : (மின்.) **பெருக் கிக் கசிவு** : பிணைப்பு மின்சுற்று வழியை இணைக்காத பெருக்கி யின் ஒரு பகுதி.

**fluxometer** : **பெருக்களவி** : எளிதில் உருகுவதற்காக உலோகத் துடன் சேர்க்கப்படும் கலவைப் பொருள் கசிவை அளவிடும் கருவி.

**fly** : (வானூ.) (1) **பறத்தல்** : விமானத்தை நெறிப்படுத்தி ஓட்டி வானில் பறந்து செல்லுதல்.

(2) பயணிகளை வான்வழியில் விமானத்தில் இட்டுச் செல்லுதல்.

(3) நீர் உருளை அச்சு எந்திரத் தில் தாள்களை ஊட்டுவதைக் கட்டுப்படுத்தும் கருவி.

**fly boat** : **மிதவை விமானம்** : கடலில் படகு போல் மிதக்கக் கூடிய விமானம்.

**fly cutters**:(எந்.)**விரைவு வெட்டுக் கருவி** : கடைசல் எந்திரத்திலும், பிற எந்திரங்களிலும் தொகுதி யாக அல்லது ஏந்தமைவாகவுள்ள வெட்டுக்கருவிகள். உலோகச் சலா கைகளின் முனைகளில் வேலைப் பாடுகள் செய்வதற்கு உதவுகிறது.

**flying boat** : (வானூ.) **கடல் விமானம்** : கடலில் படகு போல் மிதக்கவல்ல விமானம். இதன் உடற்பகுதிநீரில் மிதக்க ஏற்றவாறு அமைக்கப்பட்டிருக்கும். அது விமானத்தின் கட்டுமானச் சட்ட மாகவும் இயங்கும். இதற்குப் பக்க

வாட்டில் உறுதிப்பாடு அளிப்பதற்கு இறகுகளின் முனைகளில் மிதவைகள் அமைக்கப்பட்டிருக்கும்.

**flying bomb** : **பறக்கும் குண்டு** : ஆளில்லாமல் இயக்கப்படும் தரை விமான வடிவிலான வான்செல் வெடிகுண்டு.

**flying buttress** : *(க.க.)* **உதைகால் வளைவு** : உயர் கட்டுமானங்களுக்குச் சுவரின் மேற்பகுதியிலிருந்து ஆதாரம் கொண்டு செல்லும் அடிவளைவுடன் கூடிய உதை கட்டுமானம். பண்டைய ஜெர்மானியப் பாணிக் கட்டிடக் கலையில் இந்த அமைப்பு பெருமளவில் இடம் பெற்றிருக்கும்.

**flying saucer** : **பறக்கும் தட்டு** : வானில் அவ்வப்போது மிகுந்த உயரத்திலும் பெருவேகத்திலும் பறந்து செல்வதாகத் தெரியவரும் தட்டுப் போன்ற ஒளி வடிவம்.

**fly leaf**: *(அச்சு.)* **திறவுப் பக்கம்**: கட்டுமானம் செய்த புத்தகங்களில் முன்புறம் அல்லது பின்புறம் உள்ள வெற்றுத் தாள்.

**fly over** : **மேம்பாலம்** : போக்குவரத்து நெருக்கடியுள்ள இடங்களில் பெரும் பாதைக்கு மேலாகக் கிளைப்பாதையைக் கொண்டு செல்லும் பாலம்.

**fly title** : **திறவுத் தலைப்பு** : உண்மையான தலைப்புப் பக்கத்திற்கு முன்புள்ள பக்கத்திலுள்ள புத்தகத் தலைப்பு. இதனைக் குறுந் தலைப்பு என்றும் கூறுவர்.

**fly wheel** : *(எந்.)* **சமனுருள் சக்கரம்** : எந்திரத்தில் ஒரே சீரான இயக்கம் ஏற்படுவதற்காக எதிரீட்டு இயக்கத்தினை சுழல் இயக்கமாக மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு கனமான சக்கரம்.

**fly wheel marking** : *(தானி.)* **சமனுருள் சக்கரக் குறியீடு** : ஒரு சமனுருள் சக்கரத்தின் மேற்பரப்பிலுள்ள அளவுக்குறிகள். இது எஞ்சினில் ஓரதரின் இயக்கம் சரியான நேரத்தில் நடைபெறச் செய்வதற்கான வழிகாட்டியாகப் பயன்படுகிறது.

**F.numbers** : *(ஒளி.)* **F எண்கள்**: ஒளிப்படக் கருவிகளில் இடையீட்டுத் திரையின் திறப்பு வடிவளவுகளைக் குறிக்கும் எண்கள். எடுத்துக்காட்டு; F-4,5; F-5-6; முதலியன.

**foamed plastics** : *(குழை.)* **கடற்பஞ்சுப் பிளாஸ்டிக்குகள்** : திண்மமாகவோ நெகிழ்வாகவோ கடற்பஞ்சு போன்று உருவாக்கப்பட்ட பிசின்கள். பல்வேறு வகையான பிளாஸ்டிக்குகளில் கடற்பஞ்சுகள் தயாரிக்கப்படுகிறது. மின் காப்பிடுவதற்கு திண்மக் கடற்பஞ்சுகள் பயன்படுத்தப்படுகின்றன; மிதவைகளில் இது பயன்படுகிறது. மெத்தை-திண்டு வேலைப்பாடுகளில் நெகிழ்வுக் கடற்பஞ்சு பயன்படுகிறது. யூரித்தேன் கடற்பஞ்சு, பிளாஸ்டிக் கடற்பஞ்சுக்கு உதாரணம் (பார்க்க: ஐசோ சையனேட்.)

**F.O.B: கலத்தில் ஒப்புவிப்பு** : சரக்குகளைக் கட்டணமின்றி கப்பல் தளம் வரையில் அல்லது பிற ஊர்திகள் வரையில் கொண்டு வந்து ஒப்புவிப்பது குறித்த ஒப்பந்தம்.

**foci** : **குவிமையங்கள்** : ஒரு நீள் உருளை வடிவின் முனை வளைவுகள் இந்த மையங்களிலிருந்து வரையப்படும்.

**foil** : *(க.க.)* **பலகணி வளைவு** : பலகணி விளிம்புகளிடைப்பட்ட பள்ள வளைவு. இது விளிம்பிடை வளைவுப் பள்ளம் உருவாக்கி ஒப்பனை செய்யும் ஒரு முறை.

**folders :** *(அச்சு.)* **மடிதாள் :** அச்சடித்த தாள்களின் மடிக்கப் பட்ட பக்கங்கள். பொதுவாக ஒரு தாள் ஒரு முறை மடிக்கப் பட்டு நான்கு பக்கங்களாகச் செய் யப்படும்.

**folding machine :** *(அச்சு.)* **மடிக்கும் எந்திரம்:** அச்சடித்த தாள் களைத் தானே மடிக்கும் எந்திரம். நூல்கள், செய்தியிதழ்கள் முதலிய வற்றின் பக்கங்களை மடிப்பதற்கு இது பயன்படுகிறது.

**folding rule: மடக்கு அளவுகோல்:** அளவிடுவதற்குப் பயன்படும் மடக் கக் கூடிய ஒரு கருவி.

**foliated : இலை வேலைப்பாடு :** இலைகள் போன்ற வடிவமைப் புடன் செய்யப்படும் அலங்கார வேலைப்பாடு.

**folio :** (1) **இருமடி :** ஒரு தடவை மடித்த தாள். அவ்வாறு மடித்துக் கட்டுமானம் செய்த புத்தகத்தை யும் குறிக்கும்.

(2) **பக்க எண் :** அச்சடித்த புத்த கத் தாள் எண்.

**follow board :** *(வார்.)* **உண்மை வார்ப்படப் பலகை:** உள்ளமைவாக வுள்ள அல்லது வெட்டியெடுக்கப் பட்ட வார்ப்படப் பலகை. இதில், பயன்படுத்தப்பட விருக்கும் தோரணி பிரிவுக் கோட்டுடன் பொருந்தியிருக்குமாறு அமைக்கப் பட்டிருக்கும். இதனைப் பயன் படுத்தும்போது மணல் மூலம் பகுப்பீடு செய்ய வேண்டிய தில்லை.

**follower ;** *(எந்.)* (1) **இயக்கு எந்திரம்:** மற்றொரு சக்கரத்தி னால் இயக்கப்படும் ஒரு சக்கரம். (2) இயக்கு சக்கரத்தின் சுற்று வட்டம் கடந்த முனைப்புப் பகுதிக்கு எதிராக இயங்கும் உருளை அல்லது அதனுடன் இணைக்கப்பட்டுள்ள உருளையும் புயமும்.

**follower rest : தொடர் ஆதாரம்:** கடைசல் வேலைப்பாட்டுக்காக ஊர்தியுடன் இணைக்கப்பட் டுள்ள ஓர் ஆதாரம். இதுவெட்டுக் கருவியைத் தொடர்ந்து அல்லது அதற்கு எதிராக இயங்கி வேலைப் பாடு செய்யப்படும் பொருள் கருவி யிலிருந்து துள்ளிச் சென்று விடா மல் தடுக்கிறது.

**font : தீக்கைக் கலம் :** (1) தீக்கைக் குரிய நீர் வைக்கும் கலம்.

(2) **அச்செழுத்து முகப்பு :** அச் செழுத்தின் முகப்பு வடிவளவு.

**fontanelles :** *(உட.)* **உச்சி மையம்:** குழந்தை யின் தலையில் எலும்பு வளரா மல் மென்தோல் மட்டும் உள்ள உச்சி மையம்.



உச்சி மையம்

**foolscap : முழு அளவுத் தாள் :** எழுதுவதற்குத் தட்டச்சு செய்வ தற்கும் பயன்படும் 33.× 41செ·மீ. வுள்ள தாள்.

**foot : காலடி :** தட்டுமுட்டுப் பொருட்களின் ஆதாரக் காலடிப் பாதம்.

**foot and mouth disease :** *(நோயி.)* **கால்-வாய் நோய்: :** செம் மறி ஆடு, பன்றி, வெள்ளாடு போன்ற கால்நடைகளுக்கு ஏற் படும் ஒரு கொடிய தொற்று நோய். ஒரு வகை நோய்க்கிருமி யினால் உண்டாகும் இந்நோய் பீடித்த கால்நடைகளின் வாயி லும், பாதங்களிலும், பால்மடியி லும் கொப்புளங்கள் ஏற்படும்.

**foot brake :** *(தானி.)* **கால்தடை:** உந்து வண்டிகளில் காலினால் இயக்கப்படும் தடை. இது கையி னால் இயக்கப்படும் தடையி லிருந்து வேறுபட்டது.

**foot candle:** *(மின்.)* **ஓரடி மெழுகுவர்த்தித் திறன்:** தரத் திட்ட அளவுடைய ஒரு மெழுகுவர்த்தி ஓரடி தூரத்திலிருந்து உண்டாக்கும் ஒளியின் அளவு.

**footing:** *(க.க.)* **காலடி ஆதாரம்:** தூணுக்கு உள்ளது போன்ற அடித் தளம்.

**foot lever:** **அடியாதார நெம்பு கோல்:** காலடி ஆதாரத்தின் அழுத்தத்தினால் மட்டுமே செயற்படும் ஒரு நெம்புகோல்.

**foot note:** *(அச்சு.)* **அடிக்குறிப்பு:** புத்தகத்தின் ஒரு பக்கத்தில் அடிப் புறத்தில் அச்சிடப்படும் விளக்கக் குறிப்பு.

**foot pound:** *(இயற்.)* **வேலை அலகு:** ஒரு கல் எடையுள்ள பொருளை ஓரடி உயர்த்துவதற்குத் தேவையான ஆற்றல் அலகு.

**foot selector switch:** *(தானி.)* **காலடித் தெரிவு விசை:** முகப்பு வெளிச்சத்தின் அளவினை கூட்டவும் குறைக்கவும் பயன்படும் காலடியிலுள்ள விசை.

**footstep or footstep bearing:** *(எந்.)* **காலடித் தாங்கி** ஒரு செங்குத்தான சுழல் தண்டின் அல்லது கதிரின் கீழ்முனையில் இறுதி அழுத்தத்தைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு தாங்கி.

**foot switch:** *(தானி;மின்.)* **காலடி விசை:** காலழுத்தத்தின் மூலம் இயக்கப்படும் ஒரு மின் விசை. உந்து வண்டியில் தளப் பலகைகளில் பொருத்தப்பட்டுள்ள முகப்பு விளக்கினைக் கட்டுப்படுத்தும் விசை இதற்குச் சான்று.

**forbidden region:** *(மின்.)* **தடை மண்டலம்:** ஓர் அணுவின் இணை திறனுக்கும், கடப்புப் பட்டைக்கும் இடையிலான ஒரு பகுதி.

**force:** *(எந்;இயற்.)* **விசையாற்றல்:** ஒரு பொருள் நிலையாக இருக்கும்போது அல்லது இயங்கும் போது அதன்மீது செயற்பட்டு அதன் நிலையை மாற்றுகிற அல்லது மாற்ற முனைகிற ஆற்றல். இதற்குத் திசை, பயன்படுத்தப்படும் இடம், பரிமாணம் என மூன்று பண்பியல்புகள் உண்டு.

**force feed lubricators:** *(தானி; எந்.)* **விசையூட்டு உயவிடுவான்கள்:** மூழ்குவது போன்ற இயக்கத்துடன் செயற்படும் எந்திர உறுப்புகளின் அமைப்பு முறை. இந்த உறுப்புகள், இயக்கும் சக்கரத்தின் சுற்றுவட்டம் கடந்த முனைப்புடைய சுழல்தண்டில் மேலும் கீழும் சென்று இயங்கும்.

**force feed of oil:** *(தானி; எந்)* **எண்ணெய் விசையூட்டல்:** விசையூட்டு என்பது ஒரு வகை உயவிடு அமைப்பு முறை. இதில் பிரதான தாங்கிகள், சலாகைத் தாங்கிகள், உந்துதண்டுத் தாங்கிகள் போன்றவற்றுக்கு விசையூட்டு மூலம் எண்ணெயைச் செலுத்துகிறது. இந்த மூன்றுக்கும் எண்ணெய் செலுத்தப்படும்போது முழு விசையூட்டு முறை எனப்படும்.

**force fit:** *(எந்.)* **விசைப் பொருத்தி:** விசை மூலம் செய்யப்படும் பொருத்திணைப்பு. இதன் விளைவாக உறுப்புகள் ஒரு தனி அலகு போல் தோன்றுமாறு பொருந்த இணைக்கப்படுகின்றன.

**force plate:** *(குழை.)* **விசைத் தட்டம்:** வார்ப்படத்தின் மூழ்கு அல்லது விசை முளை, செலுத்துச் செருகிகள், அல்லது செருகு காப்பிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள தட்டம். இது பெரும்பாலும் நீராவி அல்லது நீர்க் குழாய்களுக்காகத் துரப்பணம் செய்யப்படுவதால், இதனை 'நீராவித் தட்டம்' என்றும் அழைப்பர்.

**force plug** : (குழை) **விசைச் செருகி** : வார்ப்படக் குழி அச்சினுள் நுழைந்து வார்ப்புப் பொருளுக்கு அழுத்தம் கொடுக்கும் வார்ப்படத்தின் பகுதி. இதனை மூழ்குதண்டு அல்லது உந்து தண்டு என்றும் கூறுவர்.

**force pump** : (எந்.) **விசை இறைப்பி** : ஒரு வெற்றிடத்திற்கு எதிராக வாயு மண்டல அழுத்தம் செயற்படுவதன் காரணமாக ஏற்படும் விசையினால் நீர் இறைக்கும் சாதனம்.

**forecooler** : (குளி;பத.) **முன் குளிர்விப்பான்** : குளிர்பதன சாதனத்தில் பயன்படுத்துவதற்கு முன்னர் நீரைக் குளிர்விப்பதற்கான ஒரு சாதனம்.

**forging** : (உலோ.) **உலோக வடிவாக்கம்**: உலோகங்களைக் காய்ச்சி அடித்து, வளைத்து, இழுத்து தகடாக்கிக் குறிப்பிட்ட வடிவத்தில் உருவாக்குதல்.

**foreign matter** : (குழை.) **புறப் பொருள்** : ஒரு பிளாஸ்டிக் பொருளில், அதன் சராசரி அமைப்பான்களிலிருந்து வேறுபட்டதாகத் தோன்றும் பொருளின் துகள்கள்.

**foreman** : **மேன்முறையாள்** : வேலை செய்து கொண்டே பிற தொழிலாளர்களைக் கண்காணிக்கும் பொறுப்புடைய ஒரு குழுமத்தின் பொறுப்பாளர்.

**fore plane** : (மர;வே.) **முதற்படி இழைப்புளி**: வெட்டியபின் அல்லது அறுத்தபின் முதல்தள மட்டம் செய்யப் பயன்படும் கருவி.

**fore shortened** : **தொலைக் குறுக்க நோக்குப்பட வரைவு** : தொலைக் காட்சியினால் குறுக்கப்பட்டது போன்று தோற்றுவிக்கும் வகையில் வரையப்பட்ட படம்.

**forge** : (1) **கொல்லுவேலை** : கொல்லுலையில் உலோகங்களைக் காய்ச்சி அடித்து உருவாக்குதல். (2) **உலைக்களம்** : கொல்லரின் உலைக்களத்தில் தீ மூட்டும் துருத்தியுள்ள இரும்பினாலான அல்லது செங்கல்லினாலான கொல்லுலை.


**forge welding** : **உலைப் பற்றவைப்பு** : பற்றவைக்க வேண்டிய உறுப்புகளை உலையில் தகுந்த வெப்பநிலைக்குச் சூடாக்கி அழுத்தம் செலுத்தி அல்லது அடித்துப் பற்றவைக்கும் முறை.

**forging brass** : (உலோ.) **உருக்குப் பித்தளை**: செம்பு, துத்தநாகத்துடன் சிறிதளவு வெள்ளீயமும், ஈயமும் கலந்த உலோகக் கலவை. இது வார்ப்பட உலைகளில் பயன்படுகிறது.

**forging press** : (எந்.) **உலையழுத்தக் கருவி** : வார்ப்பட உலையில் தேவைப்படும் அழுத்தம் செலுத்துவதற்குப் பயன்படும் எந்திரம்.

**forgings** : **உலை வார்ப்புகள்** : சுத்தியால் அடித்து வடிவாக்கம் செய்யப்பட்ட உலோகத் துண்டுகள்.

**forked center** : (எந்.) **கவர்**



கவர் மையம்

**மையம்** : கூம்புடைய அல்லது நீண்ட பிடியுடைய கரண்டி. இது 'V' வடிவத் தலையும் உடையது. இது துரப்பணம் போன்ற நடவடிக்கைகளில் நீள் உருளை வடிவப் பொருட்களை நிலையில் பிடித்துக் கொள்ளப் பயன்படுகிறது.

**form**: **உருப்படிவம்/அச்சுருப்படிவம்**: (1) வார்ப்படம் தயாரிப்பதற்காக ஒரு தோரணியில் சாந்து ஊற்றுவதற்கான ஒரு கலம்.

(2) காங்கிரீட் ஊற்றி தேவை யான வடிவத்தைத் தயாரிப்பதற் கான கலம்.

(3) அச்சிடுவதற்காகத் தளைச் சட்டத்தில் முறையாக வைத்து இறுக்கப்பட்ட அச்சுருப் படிவம்.

**form factor** : *(மின்.)* **வடிவக் காரணி**: ஓர் மாற்று மின்னோட்ட அலையின் சராசரி அளவில் உள்ள படியான அளவின் வீத அளவு. அனைத்து நெடுக்கை அலைகளும் 1:11 என்ற வடிவக்காரணியை உடையவை.

**formaldehyde** : *(வேதி.)* **ஃபார் பால்டிஹைடு (HCHO)** : நிறமற்ற, நச்சுவாயு. சூடாக்கிய செப்புக் குழாயின் வழியே மெத்தில் ஆல்க ஹால் ஆவியைச் செலுத்த இந்த வாயு பெறப்படுகிறது. இது நீரில் எளிதில் கரையக்கூடியது. திரவ வடிவில் இது ஃபார்மாலின் எனப் படும் தொற்று நீக்கு மருந்து களில் மிகச் சிறந்தது. சாயப் பொருட்கள், மைகள், தோல் பத னிடுதல் ஆகியவற்றிலும் பயன் படுத்தப்படுகிறது.

**format** : **நூல் வடிவளவு** : அச் சிட்டு, கட்டுமானம் செய்யப்பட்ட ஒரு நூலின் வடிவம், அளவு, அச் செழுத்து முகப்பு, பக்க ஓர இடம், பொதுவான பாணி ஆகிய வற்றைக் குறிக்கும் சொல்.

**formed plate** : *(மின்.)* **வடிவாக் கத் தகடு** : ஒரு தனிவகைச் சேமக் கலத்திலுள்ள தகடு. இது மின்னேற் றமும் மின்னிறக்கமும் செய்யும் முறையின் மூலமாக உருவாகிறது.

**forming process** : *(மின்.)* **வடி வாக்கச் செய்முறை** : சேமக்கலங் களில், கந்தக அமிலத்திலும் நீரி லும் ஈயத்தகடுகளை மூழ்கச் செய்து, அவை ஈய ஆக்சைடாக வும் ஈயமாக ஆகும் வரையில் மின் னேற்றமும், மின்னிறக்கமும் செய்து சேமக்கலம் உண்டாக்கும் செய்முறை.

**forming rolls** : *(உலோ; வே.)* **வடிவாக்கச் சுருள்கள்** : பல்வேறு அளவு கனமுள்ள தகட்டு உலோ கத்திற்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ளக்கூடிய மூன்று தொடர் சுருள்கள். இவை தேவையான விட்டத்துடன் நீர் உருளைகள் தயாரிக்கப் பயன்படுகின்றன.

**forming tools** : **வடிவாக்கக் கருவிகள்** : வேலைப்பாடு செய்யப் படும் பொருளில் எந்த வடிவத்தை உருவாக்க வேண்டுமோ அந்த வடிவத்தில் வெட்டுமுனைகள் அமைந்துள்ள கருவிகள்.

**form truck** : *(அச்சு.)* **அச்சுருப் படிவ ஊர்தி** : கனமான அச்சுருப் படிவங்களை இடம் விட்டு இடம் எடுத்துச்செல்வதற்குப் பயன்படும் இரு சக்கர ஊர்தி.

**formula**: *(கணி.)* **சூத்திரம்**: கணி தத்தில், அல்லது இயற்கணிதத் தில், ஒரு கணக்கிற்குத் தீர்வு காண் பதற்குத் தேவையான கணிதச் செய்முறைகளைக் குறிப்பதற்கு முறைபட அமைக்கப்பட்ட இலக் கங்கள், எழுத்துக்கள், சைகைகள், குறியீடுகள் அடங்கிய வாய்ப்பாடு.

**form wound coil** : *(மின்.)* **வடி வச் சுற்றுச்சுருள்** : ஒரு மரச்சட் டத்தில் அமைக்கப்படும் அல்லது வடிவாக்கம் செய்யப்படும் மின்ன கச் சுருள் அல்லது சுருள். பின்னர் இந்தச் சுருள் மின்னகத்தில் முழு மையாக வைக்கப்படுகிறது.

**forward walding**: *(பற்ற.)* **முனைப் பற்றவைப்பு** : சுடர்பிழம்பு சுட்டிக் காட்டுகிற அதே திசையில் உலோகத்தை உருக்குதல்.

**forwarding** : *(அச்சு.)* **முந்துறு கட்டுமானம்** : புத்தகத் தாள்களை ஒன்று சேர்த்துத் தைத்த பிறகு, கட்டுமானம் செய்யும் முறை.

**fouling: அடைப்புறுதல்:** நீராவிக் கொதிக்கலன்களிலும், நீராவி நீளக் குழாய்களிலும் மேலேடு படிந்து அடைப்புறுதல். இதனால் எந்திரங்களிலும், உறுப்புகளிலும் பொதுவாக இயக்கம் பாதிக்கப் படும்.

**foundation :** *(க.க.)* **அடித்தளம்:** கட்டிடத்திற்கு அல்லது சுவருக்குக் கீழே தரைமட்டத்திற்குக் கீழே போடப்படும் அடிப்படை ஆதாரம். இந்த அடித்தளத்தின் மீது மேற்கட்டுமானம் கட்டப்படுகிறது.

**foundation bolts : அடித்தள மரையாணி :** எந்திரங்களை அல்லது கட்டமைவு உறுப்புகளை அவற்றின் அடித்தளத்துடன் இறுக்கிப் பொருத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மரையாணிகள்.

**foundation plate :** *(பொறி.)* **அடித்தளத் தட்டம் :** *(1)* ஓர் இறைப்பி, ஓர் எஞ்சின் அல்லது ஓர் இயக்கி இணைத்துப் பிணைக்கப்படும் ஒரு தட்டம்.

*(2)* வார்ப்படத் தொழிலில், வீச்சளவினை நிலைப்படுத்துவதற்காகக் கதிரைத் தாங்குவதற்கென வார்ப்படத்தின் அடிப்பகுதியில் வைக்கப்படும் வார்ப்பிரும்புத் தட்டம்.

**foundry : வார்ப்படச் சாலை :** வார்ப்படத் தொழில் நடைபெறும் கட்டிடம் அல்லது இடம்.

**foundry sand : வார்ப்பட மணல் :** வார்ப்படங்களில் தேவையான வடிவங்களைப் பெறுவதற்கு உருகிய உலோகத்தை ஊற்றுவதற்குப் பயனபடும் மணல்.

**fourdrinier : ஃபூர்டிரினியர் எந்திரம்:** காகிதம் தயாரிப்பதற்காகப் பயன்படும் எந்திரம். இந்த எந்திரத்தின் உதவியால் முதன் முதலில் அச்சுத் தயாரிக்கப்பட்டது. இந்த எந்திரத்தை முதலில் கண்டுபிடித்தவர் லூயி ராபர்ட். இதனை 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஹென்றி மற்றும் சீலி ஃபூர்டிரினியர் என்பார் பிரியான் டோங்கின் உதவியுடன் சீரமைத்தார்.

**fournier :** *(அச்சு.)* **ஃபூர்னியர்:** அச்செழுத்தில் அலகு முறையைக் கண்டுபிடித்த ஃபிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பியர் சைமன் ஃபூர்னியர்.

**four pole : நாற்துருவம் :** ஒரு விசையில் உள்ளது போன்று நான்கு தொடர்புகளை உடைய; ஒரு மின்னாக்கியில் உள்ளது போன்று நான்கு துருவங்களை உடைய.

**four-pole design :** *(தானி.)* **நாற்கோல் வடிவமைப்பு:** நான்கு களக் கோல்களைக் கொண்ட மின்னாக்கி அல்லது தொடக்க இயக்கி.

**four-stroke cycle :** *(தானி.)* **நான்கடிச் சுழற்சி:** எஞ்சினின் நான்கடிகளில் முடிவுறும் ஒரு விசைச் சுழற்சி உந்து வண்டியின் எஞ்சினில், கீழ்நோக்கிய முதல் அடி உள்ளிழுப்பாகவும், அடுத்த மேல்நோக்கிய அடி, அழுத்தத்தை அனுமதிப்பதாகவும், மூன்றாவது அடி எரியூட்டுதலாகவும் விரிவாக்கமாகவும், நான்காவது அடி வெளியேற்றமாகவும் அமையும்.

**fourway switch :** *(மின்.)* **நான்குவழி விசை:** மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களிலிருந்து மின்விசையைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படும் விசை. இதற்கு மூவழி விசைகள் இரண்டும், மற்ற அனைத்தும் நான்குவழி விசைகளாகவும் அமைந்திருக்கும்.

**four-wheel drive** : (*தானி.*) **நான்கு சக்கர இயக்கி** : முன்னும் பின்னும் விசையியக்கம் தூண்டுகிற இருசுகளையுடைய ஓர் இயக்கி. இது நான்கு சக்கரங்களுக்கும் இயக்க விசையைச் செலுத்தும்.

**foxed**: (*தாள்.*) **உருவழிந்த**: பூஞ்சணம்பற்றுவதால் காகிதம் உருவழிதல் அல்லது அதில் புள்ளிகள் விழுதல்.

**fox lathe** : (*எந்.*) **நரி கடைசல் எந்திரம்** : திருகிழை வெட்டுவதற்கான செதுக்குச் சலாகை அல்லது "நரி" உள்ள பித்தளை வேலைப்பாட்டுக்கான கடைசல் எந்திரம்.

**fraction: பின்னம்**: (1) ஒரு பொருளின் சிறு கூறு.
(2) கீழ்வாய் எண்.

**fractional distillation** : (*வேதி.*) **வடித்துப் பிரித்தல்**: படிப்படியாகச் சூடேற்றுவதன் மூலமாக வெவ்வேறு கொதிநிலைகளையுடைய திரவங்களைப் பிரித்தெடுத்தல்.

**fractional horizantal spacing**: (*கணிப்.*) பகுமுறைக் கிடைநிலை இடைவெளி அமைப்பு.

**fractional verticle paper spacing**: (*கணிப்.*) பகுமுறை செங்குத்துக் காகித இடைவெளி அமைப்பு.

**fracture** : (*உலோ. எந்.*) **முறிவு** : உலோகங்கள் திடீர் அதிர்ச்சியினால் அல்லது அளவுக்கு மீறிய அழுத்தத்தினால் உடைந்து முறிதல்.

**frame**: (*க.க.*) (1) **நிலைச்சட்டம்**: சன்னல்கள், கதவுகள் முதலியவற்றின் மரநிலைச் சட்டம்.
(2) **மரச்சட்டம்** : தளங்களையும் கூரைகளையும் தாங்கும் மரச் சட்டம்.
(3) சித்திர வேலைத் துணை வரிச்சட்டம்.
(4) அச்சுப்பக்க உருப்படிவச் சட்டம்.
(5) தொலைக்காட்சியில் ஒரே உருப்படிவத்திற்குரிய வரைத் தொகுதி.
(6) திரைப்படத்தில், 35 மி.மீ. அல்லது 16 மி.மீ. சுருளிலுள்ள முழுப்படம்.

**frame high** : (*க.க.*) **நிலைச்சட்ட உயரம்** : சன்னல் அல்லது கதவுச் சட்டங்களின் மேல்நிலை உயரம்.
வாயில்-பலகணி அல்லது மேல் விதானம் அமைக்கப்பட வேண்டிய உயரம்.

**frame of a house** : (*க.க.*) **சட்டக வீடு** : பலகைகளிட்டு அடைக்கத்தக்க மரச் சட்டங்களால் அமைந்த வீடு.

**frame work** : **வரைச் சட்டம்** : கட்டுமானம் செய்யப்படவிருக்கும் கட்டமைப்பின் புனையா வரைச் சட்டம்.

**framing**:(*தச்*) **உருவரைச்சட்டம்**: ஒரு கட்டுமானத்தின் உருவரைச் சட்டம். அதனைக்கட்டுகின்ற செயல்.

**framing control** : **உருப்படிவக் கட்டுப்படுத்தி** : தொலைக்காட்சியில் படத்தின் மறுபகர்ப்பு வீதத்தை அனுப்பீட்டுக் கருவிக்கு இயைபாக நேரமைவு செய்வதற்கு அனுமதிப்பதற்கு ஒளிவாங்கிப் பெட்டியிலுள்ள கட்டுப்பாட்டுச் சாதனம்.

**fraying**:(*நூ.க.*) **புரியவிழ்த்தல்**: ஒரு நூலுக்கு நுனிமுனை அமைப்பதற்கு ஆயத்தமாக மூட்டு நூல் இழைகளை அல்லது கட்டுத் தளைகளைப் பரவலாக்குதல்.

**free**: (*தாள்.*) **நீர்க்கட்டிலாக் காகிதம்**: நீரிலிருந்து எளிதாகப் பிரித்தெடுக்கப்படும் காகிதப் பொருள்.

**free balloon** : *(வானூ.)* **தடையிலாப் பலூன்** : ஒரு கோள் வடிவப் பலூன். இதன் ஏற்றமும் இறக்கமும் அடிச்சுமை அல்லது வாயு மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்தப் பலூன் பறக்கும் திசை காற்றினால் தீர்மானிக்கப்படுகிறது.

**free burning coal**: **எளிதில் எரியும் நிலக்கரி** : இந்த நிலக்கரி எரிந்தாலும், ஒன்றாக இணைந்து இளகுவதில்லை; மாறாகச் சூடாகும் போது ஒரு பசைத் திரள் உண்டாகிறது.

**free burning mixture** : *(தானி.)* **எளிதில் எரியும் கலவை** : எடையில் காற்றைப் போல் பெட்ரோலின் 12—16 மடங்கு அல்லது கன அளவில் காற்றைப்போல் 9,000மடங்கு கொண்ட ஒரு கலவை; அதன் பொருள் திரட்சியில் எங்கு தீப்பற்றினாலும் அந்தத் திரள் முழுவதிலும் ஒரே சமயத்தில் தீப்பற்றி எரியக்கூடியது.

**free end** : **தனி இயக்க முனை** : ஒற்றைத் தாங்கியில், எதனுடனும் பொருத்தப்படாமல் தனித்து இயங்கக்கூடிய முனை.

**free fit** : *(எந்.)* **தன்னியக்கப் பொருத்திகள்** : எந்திர உறுப்புகள் தங்குதடையின்றி இயங்குவதற்கு அனுமதிக்கும் பொருத்திகள்.

**free flight rocket** : *(விண்.)* **தன்னியக்க ராக்கெட்** : மின்னணுவியல் கட்டுப்பாடு அல்லது வழிச் செலுத்தம் இல்லாமல் பறக்கும் ராக்கெட்.

**freehand** : **கை வரைவு** : கருவிகளின்றி இயல்பாகக் கையினால் வரைதல்.

**freestone** : *(க.க.)* **மாக்கல்** : பாளம் பாளமாகப் பிளவுறாத வாள் அறுப்பு வேலைப்பாட்டுக்குரிய கல் வகை.

**free wheeling** : *(தானி.)* **இயல்புச் சக்கர இயக்கம்** : இரண்டாவது உயர் பல்லிணை ஒருங்கிணைப்பில் பொருத்தப்பட்டுள்ள விஞ்சியோடும் ஊடிணைப்பி. இது, எஞ்சின் வேகம் எவ்வாறிருப்பினும், எளிதாக இயங்குவதற்கு அனுமதிக்கிறது.

**freezer** : *(குளி.பத.)* **உறைவுச் சாதனம்** : அழுகும் பொருள்களை உறையவைக்கும் ஒரு சாதனம். இது பொதுவாக 30°F வெப்ப நிலைக்குக் குறைவாக வெப்பமுள்ள ஒரு குளிர் சேம அறையாக இருக்கும்.

**freezing-mixture** : **உறைவுக் கலவை** : பொருட்களை உறையும்படி செய்யும் கலவைப் பொருள்.

**freezing point** : *(குளி.பத.)* **உறைநிலை** : ஒரு திரவம் உறைந்து திடப்பொருளாகும் வெப்பநிலை.

**french curve** : **வளைகோடு வரைவான்** : கவான்கள் அல்லாத வளைகோடுகளை வரைவதற்கு வரைவாளர்கள் பயன்படுத்தும் ஒரு கருவி. இதனைப் பொதுமுறை வரைகோடு வரைவான் அல்லது சீரற்ற வளைகோடு வரைவான் என்றும் கூறுவர்.

**french fold** : *(அச்சு.)* **ஃபிரெஞ்சு மடிப்பு** : செங்குத்தாகவும் கிடைமட்டத்திலும் காகிதத்தை மடித்தல்.

**french folio** : *(அச்சு)* **ஃபிரெஞ்சு மென்தாள்** : பார்வைப் படிகள் எடுப்பதற்குப் பயன்படும் இலேசான எடையுடைய மெல்லிய தாள்.

**french seam**: **ஃபிரெஞ்சுத் தையல் விளிம்பு** : நிமிர் நேர்வான தையல் மூட்டுவாய்.

**french window** : *(க.க.)* **ஃபிரெஞ்சுப் பலகணி** : இரட்டைப்

பலகணிச் சட்டம். இது தளம் வரையிலும் நீண்டிருக்கும். இது புகுமுக மண்டபத்திற்கு அல்லது மேல் தளத்திற்கு வாயிலாகவும் பயன்படும்.

**frequency**: (மின்.) **அலைவெண்:** (1) ஒரு மாறு மின்னோட்டத்தினால் ஒரு வினாடியில் ஏற்படும் இரட்டை அதிர்வுகளின் எண்ணிக்கை.

(2) தொலைக்காட்சியில் ஓர் அலகு நேரத்தில் அதிர்வுகளின் அல்லது சுழற்சிகளின் எண்ணிக்கை. வானொலி அலைகள் குறைந்த அலைவெண்களும் நுண்ணலைகளும் உடையவை.

**frequency departure** : (மின்.) **அலைவெண் மாற்றம்:** அலைவெண் மாற்றத்தில் அலைவெண் மாற்றம் காரணமாக மைய அலைவெண்ணிலிருந்து உடனடியாக ஏற்படும் மாறுதல்.

**frequency deviation** : (மின்.) **அலைவெண் விலக்கம்** : அலைவெண் மாற்றச் சைகையின் உச்சி நிலையின்போது மைய அலைவெண்ணிலிருந்து மிக அதிக அளவில் ஏற்படும் விலகல்.

**frequency meter** : (மின்.) **அலைவெண் அளவி** : ஒரு மாறு மின்னோட்ட மானி. இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மின் சுற்றின் அலைவெணணை இது நேரடியாகக் குறித்துக் காட்டும்.

**frequency modulation**(தொலை) **அலைவெண் மாறுபாடு:** பேச்சுக்கும் பாட்டுக்கும் இசைந்த வானொலி அனல் அதிர்வின் மாறுபாடு.

**frequency response** : (மின்.) **அலைவெண் உடன் விளைவு** : ஒரு குறிப்பிட்ட அலைவெண் வீச்சின் போது செயற்படும் திறனைக் காட்டும் கருவியின் திறனளவு.

**frequency swing** : (மின்.) **அலைவெண் ஊசல்** : மிக அதிக அளவிலிருந்து மிகக் குறைந்த அளவுக்கு அலைவெண்ணின் மொத்த ஊசலாட்டம். இது அலைவெண் விலக்கத்தைப்போல் இருமடங்குக்குச் சமம்.

**frequency tripler**: (மின்.) **அலைவெண் முப்பெருக்கி:** தகட்டு யின் சுற்று வழியில் அலைவெண் மும்மடங்காகப் பெருக்கப்பட்டுள்ள மின் மிகைப்பு நிலை.

**fresco**: (க.க,) **சுவர்க்கோல ஓவியம்:** ஈரச்சாந்தினைக் கொண்டு ஓவியந் தீட்டும் முறை. இதனைத் தவறுதலாக, உலர்ந்த சுவரில் ஓவியம் வரைவதைக் குறிக்கப் பயன்படுத்துகின்றனர்.

**fresh air inlet**: (கம்.) **காற்றோட்ட வாயில்:** வீட்டின் வடிகாலிலிருந்து மேல் நோக்கி மாசுற்ற காற்றைக் கொண்டு செல்லும் இணைப்புக் குழாய்.

**fret**: **அரிவரிச் சித்திரவேலைப்பாடு:** நேர்வரைச் செங்கோணத்தொடர்புக் கோலமான செதுக்கு வேலைப்பாடு.

**fret saw**: **சித்திர வேலை இழை வாள்:** சித்திரச் செதுக்கு வேலையில் மென்பலகை அட்டைகளை அறுக்கப் பயன்படுத்தப்படும் ஒடுங்கிய இழைவாள்.

**friable**: **தகர்வுறு:** எளிதில் தகர்ந்து விழக்கூடியது.

**friction**: (இயற்.) **உராய்வு:** ஒரு பொருள் மற்றொரு பொருளின் மீது நழுவிச் செல்வதைத் தடுக்க முயலும் ஆற்றல். உராய்வு விசையை விட ஒரு விசை அதிகமாக இருந்தால், அது உராய்வினை விஞ்சி, பொருளை நகரும்படி செய்யும். இயக்கத்தடையாற்றலானது, மேற்பரப்புகளுக்கிடையிலான விசையினை உராய்வுக்குண

கம் என்ற இலக்கத்தினால் பெருக்கிய விசைக்குச் சமம். உராய்வுக் குணகம் வெவ்வேறு பொருள்களுக்கும், வெவ்வேறு மேற்பரப்புகளுக்கும் வெவ்வேறு அளவில் இருக்கும்.

**friction calender**: *(தாள்.)* **உராய்வு உருளை**: காகிதத்தை மழமழப்பாக்குவதற்கு வெவ்வேறு வடிவளவுகளில் உருளைகளைக் கொண்ட ஓர் எந்திரம்.

**friction catch**: *(அக.)* **உராய்வுப் பற்றுக்கொளுவி**: அறைகலன்களின் சிறிய கதவுகளைப் பூட்டாமல் இறுக மூடிவைப்பதற்குப் பயன்படுத்தப்படும் சாதனம். இதில் ஒரு வில் சுருளும் நுழைவு குண்டலமும் அமைந்திருக்கும்.

**friction coupling**: *(எந்.)* **உராய்வு இணைப்பி**: உராய்வுத் தொடர்பு மூலம் செயற்படும் இணைப்பிகளின் வகையைச் சேர்ந்த ஒன்று.

**friction disk**: **உராய்வு வட்டு**: உராய்வு இயக்கமுடைய ஒரு வட்டு.

**friction drive**: *(எந்.)* **உராய்வு இயக்கி**: உராய்வுத்தொடர்புமூலம் விசையை அனுப்பீடு செய்தல்.

**friction feed**: *(கணிப்.)* உராய்வு ஊட்டுமுறை.

**friction of motion**: *(எந்.)* **இயக்க உராய்வு**: ஒரு சமதளப் பரப்பில், திட, கோள அல்லது நீள் உருளைப் பொருள் எதனையும் இயங்கச் செய்தபின் அது தொடர்ந்து இயங்கும்படி செய்வதற்காக விசையினால் கட்டுப்படுத்தவேண்டிய உராய்வு.

**friction of rest**: *(எந்.)* **ஆதார உராய்வு**: திட, கோள அல்லது நீள் உருளை வடிவப்பொருள் எதனையும் ஒரு சமதளப் பரப்பில் சறுக்கி அல்லது உருண்டு செல்லும்படி செய்வதற்கு விசையினால் கட்டுப்படுத்தவேண்டிய உராய்வு.

**friction tape**: *(மின்.)* **உராய்வு நாடா**: மின் கடத்திகளில் புரியிணைவினைப் பாதுகாப்பதற்குத் தேவைப்படும் ரப்பர் நாடாவைக் காப்பிட்டு வைப்பதற்குப் பயன்படும் செறிவூட்டிய பஞ்சினாலான மின்காப்பு நாடா.

**friction wheel**: **உராய்வுச் சக்கரம்**: உராய்வு மூலம் இயக்கப்படும் சக்கரம். இதில், வழுவழுப்பான அல்லது வரிப்பள்ளமிட்ட பரப்புகளிடையில் மட்டுமே தொடர்பு ஏற்படும்போது இயக்கம் உண்டாகிறது.

**friesland design**: **ஃபிரீஸ்லாந்து வடிவமைப்பு**: ஆலந்து நாட்டிலுள்ள ஃபிரீஸ்லாந்து பகுதியில் தட்டையான செதுக்குப் பரப்பில் செய்யப்படும் கோண மற்றும் வட்ட வடிவமைப்பு,

**frieze**: *(க.க.)* **ஒப்பனைப் பட்டை**: கட்டிடத்தில் தூணுக்கு மேலுள்ள சிற்ப வேலைப்பாடுள்ள பகுதி. ஒரு சுவருக்குச் செங்குத்தாக அமைக்கப்பட்டுள்ள எழுதகத்தின் கிடைமட்ட உறுப்பு.

**frise aileron**: *(வானூ.)* **மிகு இழுவைச் சிறகு**: அச்சுக்கு முன்னதாக மூக்குப்பகுதியையும், சிறகின் கீழ்ப்பரப்புக்குச்சமநிலையில் கீழ்ப்பரப்பிணையும் கொண்டுள்ள விமானச் சிறகின் ஓரமடக்கு. இதனை இழுத்துச் செல்கிற முனை உயர்த்தப்படும்போது, மூக்குப்பகுதி, சிறகின் கீழ்ப்பரப்புக்குக் கீழே நீண்டு சென்று இழுவையை அதிகரிக்கிறது.

**frisket**: *(அச்சு.)* **குறுக்குச் சட்டம்**: அச்சுக்கலையில் தாள் நிலைத்திருக்க உதவும் குறுக்குப் பட்டைகள் வாய்ந்த மெல்லிய இரும்புச் சட்டம்.

**frithstool**:*(அ.க.)* **கூம்பு முக்காலி:** ஆங்கிலோ-சாக்சன் காலத்தில் பயன்படுத்தப்பட்ட வட்டமான முக்காலி.

**fritted**:*(மட்.)* **கண்ணாடிக் கலவையாக்கிய:** கண்ணாடி செய்வதற்குரிய மணலும் சுண்ணமுமுள்ள நீரியல் கலவைப் பொருளாக்குதல். தூளாக்கிய பொருளை உருக்கித் திடீரெனக் குளிரவைப்பதன்மூலம் இந்தக் கலவை கிடைக்கிறது.

**frontispiece** : *(நூ.க.)* **முகப்புப் படம்:** ஒரு நூலின் பெயர் முகப்புப் பக்கத்திற்கு எதிர்ப்புறத்திலுள்ள படம்.

**front-wheel drive** : *(தானி.)* **முன்சக்கர இயக்கம்** : இயங்கும் செலுத்து அச்சுகள் முன்புற முனையிலுள்ளவாறு அமைத்தல். இதில் பின்புற அச்சுகள் இயங்குவதில்லை.

**frosting** : *(குழை.)* **உறைபனி உருவாக்கம்** : ஒரு பிளாஸ்டிக்கின் பரப்பில் உறைபனி போன்ற படிகத் தோரணித் தோற்றம் அமைத்தல்.

**frozen batteries** : *(தானி)* **உறை மின்கலத் தொகுதி**: ஒரு மின்கலத் தொகுதி முழுமையாக மின்னிறக்கம் செய்யப்படும்போது வெப்பநிலை பூச்சியத்திற்கு மேல் கணிசமாக இருக்குங்கால் அது உறைந்துவிடும். குளிர்காலத்தில், உந்துவண்டியினை உடனடியாக ஓட்டுவதாக இருந்தாலன்றி அதன் மின்கலத் தொகுதியில் நீர் படக்கூடாது. அப்படிப் படுமாயின், நீர் மேற்பகுதியில் தேங்கி உறைந்துவிடும்.

**frozen iron** : *(வார்.)* **உறை இரும்பு** : திண்மமாகிய இரும்பு. இது ஊற்ற முடியாத அளவுக்குக் குளிர்ச்சியாக இருக்கும்.

**frustum**: *(வடிக.)* **அடிக்கண்டம்** : அடித்தளத்திற்கு இணையான ஒரு சமதளப் பரப்பினை மேற்பகுதியிலிருந்து வெட்டியெடுத்த பிறகு ஒரு திடப்பொருளில் எஞ்சியுள்ள, கூம்பு வடிவ அல்லது பிரமிடு வடிவப் பகுதி கூம்பு அல்லது பிரமிடு வடிவில், குவி பரப்பு = மேல் அல்லது அடி ஆதாரங்களின் சுற்றளவுகளின் கூட்டுத் தொகை $+\frac{1}{2}$ சாய்வு உயரம்.முழுப் பரப்பு = குவி பரப்பு + மேல் ஆதாரப் பரப்பு + கீழ் ஆதாரப் பரப்பு. கன அளவு = கீழ் — மேல் ஆதாரங்களின் பரப்பளவுகளின் கூட்டுத் தொகை + கீழ் — மேல் ஆதாரங்களின் பரப்புகளின் பெருக்குத் தொகையின் வர்க்க மூலம் × அடிக்கண்டத்தின் செங்குத்து உயரத்தின் $\frac{1}{3}$ பகுதி.

**fue** : **எரி பொருள்** : விறகு, நிலக்கரி, வாயு, எண்ணெய் போன்ற எரிபொருட்கள். இவை, தீமூட்டுவதற்கு அல்லது எஞ்சினை இயக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**fuel by-pass regulator**:*(வானூ.)* **எரிபொருள் பக்கவழி ஒழுங்கியக்கி:** அதிமின்னேற்றிய எஞ்சினில், எரி-வளி கலப்பி அறையில் அதிலுள்ள காற்றழுத்தத்திற்குமேல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு எரிபொருள் அழுத்தத்தினைக் கட்டுப்படுத்தி வைப்பதற்கான ஒரு சாதனம்.

**fuel consumption** : *(வானூ.)* **எரிபொருள் நுகர்வு** : ஒரு தடைகுதிரைத் திறன் மணியின்போது நுகரப்படும் எரிபொருளின் அல்லது எண்ணெயின் எடையளவு.

**fuel dope** : *(வானூ.)* **எரிபொருள் மசகு:** விமானத்தில் வெடிப்பினை மட்டுப்படுத்துவதற்காக எரிபொருளுடன் சிறிதளவில் கலக்கப்படும் பொருள்.

**fuel level indicator :** *(தானி.)* **எரிபொருள் மட்டமானி:** எரி பொருள் கலத்திலுள்ள எரி பொருள் அளவினைச் சுட்டிக்காட்டும் சாதனம்.

**fuel lock :** *(தானி.)* **எரிபொருள் அடைப்பு :** பார்க்க ஆவியடைப்பு.

**fuel pump :** *(தானி.)* **எரிபொருள் இறைப்பி :** எரி-வளி கலப்பி அறைக்குள் எரிபொருளைச் செலுத்துவதற்கு வெற்றிடம் ஏற்படுத்துவதற்கு உந்துதண்டு அல்லது இடையீட்டுத் தகடு மூலம் இயக்கப்படும் ஒரு சாதனம்.

**fuel-tank vent :** *(வானூ.)* **எரிபொருள் கலப்புழை :** விமானத்தில் எரிபொருள் கலத்திலிருந்து உபரி எரிபொருளை வெளியேற்றி அழுத்தத்தைச் சமநிலையில் வைத்திடப் பயன்படும் ஒரு சிறிய குழாய்.

**fugitive colours :** **நிலையற்ற வண்ணம்:** ஒளிபட்டால் நிலைத்து நிற்காத வண்ணங்கள்.

**fulcrum:** *(எந்.)* **ஆதாரம்:** நெம்புகோலின் தாங்குநிலை இயக்க ஆதாரம்.

**full annealing :** **முழுமையான பதப்படுத்தல் :** இரும்பை ஆதாரமாகக் கொண்ட உலோகக் கலவைகளை முட்டுபதன் வெப்பநிலைக்கு அதிகமாகச் சூடாக்கி, ஒரு குறிப்பிட்ட அளவு நேரத்திற்கு அதே வெப்பநிலையில் வைத்திருந்து, பின்னர் மெல்ல மெல்ல ஆறவைத்தல் மூலம் பதப்படுத்துதல்.

**fuller:** **இரும்புப் பள்ளம்:** இரும்பை உருவாக்கும் கொல்லுலைப் பள்ளம்.

**fuller faucet :** *(கம்.)* **மிடாக் குழாய் :** ஒரு மிடாவில் திறப்புக்காக ரப்பர் பந்து உள்ள ஒரு குழாய்.

**fuller's earth:** **வண்ணான் காரம்:** துணிகளை வெளுப்பதற்குச் சலவையாளர்கள் பயன்படுத்தும் ஒருவகைக் களிமண்.

**full floating axle :** *(தானி.)* **முழு மிதவை அச்சு :** இந்த வகையான அச்சில் உந்து வண்டியின் முழுப்பாரம் அடைப்புத்துளையாலேயே தாங்கிக் கொள்ளப்படுகிறது. ஒருங்கிணைக்கப்பட்டதும் அச்சினை இயக்கும் சுழல்தண்டு, சக்கரக் குடத்தின் மூடியினால் அதற்குரிய இடத்தில் பொருத்தி வைக்கப்படுகிறது. சுழல் தண்டு அகற்றப்பட்டு, சுழல் தண்டு வெளியே இழுத்து எடுக்கப்படுகிறது. சில உந்து வண்டிகளில் ஒரு வில்வளையும் சக்கரக்குடத்தின் காடியினுள்ளும், சுழல் தண்டின் கொளுவியினுள்ளும் பொருத்தப்படுகிறது. இதனால் குடத்து மூடியில் அச்சு உராய்ந்துவிடாமல் தடுக்கப்படுகிறது.

**full gilded :** **முழு மெருகேற்றிய நூல் :** மூன்று விளிம்புகளும் மெருகேற்றப்பட்டிருக்கும் நூல்.

**fulling or milling :** **கம்பளி வெளுப்பாலை :** கம்பளித் துணிகளை வெளுக்கும் ஆலை.

**full load :** *(வானூ.)* **முழுச்சுமை:** விமானம் காலியாக இருக்கும் போது எடையுடன் சேர்த்து பயனுறும் எடை. இதனை "மொத்த எடை" என்றும் கூறுவர்.

**full point :** *(அச்சு.)* **முற்றுப் புள்ளி :** அச்சுக்கலையில் ஒரு நிறுத்தற் குறியீடு.

**full size :** **முழு வடிவளவு ஓவியம்:** முழு உருவத்தின் அளவுக்கு வரையப்படும் ஓவியங்கள்.

**full thread :** *(எந்)* **முழுத்திருகிழை:** வேண்டிய ஆழத்திற்குத் துல்லியமாகவும் கூர்மையாகவும்

வெட்டப்பட்டுள்ள மரையாணி யின் திருகிழை.

**fully formed characters:** (கணிப்.) முழு வடிவாக்கிய வரி வடிவங்கள்.

**fully formed character serial printer:** (கணிப்.) முழு வடிவாக்கிய வரிவடிவத் தொடர் வரிசை அச்சடிப்பான்.

**fuming:**(மர.வே.)**மர முதுமையாக்கம்:** வேதியியல் இயைபால் புகையெழுப்பி வெட்டுமரத்திற்கு முதிர்ச்சியூட்டுதல்.

**fuming sulphuric acid :** (வேதி.) **புகையும் கந்தக அமிலம் :** பெட்ரோலியத்தைச் சுத்திகரிப்பதற்குப் பயன்படும், எண்ணெய் போன்ற தோற்றமுடைய பசைத்திரவம். இது வெடிபொருட்கள், சாயப் பொருட்கள், காலணி மெருகு முதலியன தயாரிக்கப் பயன்படுகிறது.

**function :** (தானி.) **சார்பலன் :** ஓர் எந்திரத்தின் சார்பலன் என்பது அதன் தனித்தனிச் செயற்பாடுகளின் கூட்டுத் தொகையாகும்.

**functional disorder :** (உட.) **உறுப்பியக்கக் கோளாறு :** உடலின் ஓர் உறுப்பு இயங்கத் தவறுவதால் ஏற்படும் நோய். எடுத்துக்காட்டு; அஜீரணம்.

**functional view point:** (தானி.) **செயல் முறை நோக்கு :** ஒரு பொருளின அல்லது சாதனத்தின் ஒரு செயல் முறையின் குறிக்கோள்.

**fundamental frequency :** (இயற்.) **அடிப்படை அலைவெண் :** ஒரு சுரத்தின் ஒலி அலை என்பது முக்கியமாக ஓர் அலைவெண் (அடிப்படை அலைவெண்) ஆகும். அதே சமயம், அந்தச் சுரம், அடிப்படை அலைவெண்ணின் இரண்டு, மூன்று மடங்கு அலைவெண்களையும் கொண்டிருக்கும். அதே போன்று, ஒரு மாற்று மின்னோட்டம் அல்லது மின்னியல் அலையும் முக்கியமாக அடிப்படை அலைவெண்ணாக இருக்கும். எனினும், உயர்ந்த அலைவெண்களின் பகுதிகளைக் கொண்டிருக்கும்.

**fungus:**(தாவ.) **காளான்:** மட்கிய உயிர்ப்பொருள் மீது வரும் நாய்க்குடை, பூஞ்சணம், பூஞ்சக்காளான் புள்ளிப் பூஞ்சை, கருங்காளான் முதலியவை. இவை விதைகளினால் அல்லாமல், நுண்துகள்கள் மூலம் முளைக்கின்றன. இவற்றில் பச்சையம் இருப்பதில்லை.

**funnel :** (பொறி.) (1) **புனல்:** ஒரு கொள்கலத்திலிருந்து இன்னொரு கொள்கலத்திற்கு திரவங்களை எளிதாக ஊற்றுவதற்குப் பயன்படும் ஒரு முனையில் கூம்பு வடிவ ஊற்று வாயுடைய புனல்.

(2) **புகை வாயில்:** நீராவிக் கப்பல்களில் பயன்படுவது போன்ற புகை வாயில்.

**furlong :** **பர்லாங் :** ஒரு மைல் தொலைவில் எட்டில் ஒரு பகுதி; 220 கஜ நீளம்; 660 அடி; 201மீ.

**furnace:** (பொறி.) **உலை:** நீரைச் சூடாக்குவதற்கும், உலோகங்களையும் மற்றப் பொருட்களையும் உருக்குவதற்கும், பல்வேறு பொருட்களையும் சூடாக்குவதற்கும், உலர்த்துவதற்கும், வதக்குவதற்கும் எரிபொருள் எரிக்கப்படும் கணப்பு அடுப்பு உள்ள இடம்.

**furnace brazing :** **உலை இணைப்பு :** உலையிலிருந்து வரும் வெப்பத்தினால் பொடி வைத்து இணைத்திடும் ஒரு செய்முறை.

**furniture :** **அறைகலன் :** ஒரு கட்டிடத்திலுள்ள மேசை, நாற்காலி போன்ற அலங்காரத் தட்டுமுட்டுப் பொருள்கள்.

அச்சுக்கலையில் அச்சுப் படிவங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படும் மரத்துண்டு அல்லது உலோகத்துண்டு.

**furniture fenders** : **அறைகலன் நீள் தாங்கி** : அறைகலன்களுடன் இணைப்பதற்கு அனுமதிக்கும் வகையில் நீட்டிக் கொண்டிருக்கும் ஆணி அல்லது திருகுமுனையுடன் கூடிய அரைவட்ட வடிவ ரப்பர் தாங்கிகள்.

**furniture glides**: (அ.க.) **அறைகலன் சறுக்கு**: மேசை, நாற்காலி போன்றவற்றின் கால்களில் பொருத்தப்பட்டுள்ள சிறிய கிண்ணம் போன்ற உலோகத்துண்டுகள். இவற்றின் குவிவான பக்கம் தரையைத் தொட்டுக் கொண்டிருக்கும் போது அறைகலன்களைச் சத்தமின்றி எளிதாக இடம் விட்டு நகர்த்தலாம்.

**furring** : (க.க.) **தளச்சமனம்** : நிலத்தளப் பிளவுகளில் மரத் துண்டுகளைச் செருகித் தளத்தைச் சமப்படுத்துதல்.

**furring strips** : (க.க.) **சமனப் பட்டைகள்** : கடைசல் எந்திரத்தில் உள்ளது போன்று ஒரு பரப்புடன் இணைக்கப்பட்டுள்ள மரத் துண்டுகள்.

**fuse** : (மின்.) **மின்காப்பு உருகி** : எல்லை மீறிய மின் வலியில் உருகி இடர் தடுக்கும் மின் இடையிணைப்பான உருகு கம்பி.

**fuse block** : (மின்.) **மின்காப்பு உருகிப்பெட்டி** : மின்காப்பு உருகிகளைப் பற்றி வைத்துக் கொள்வதற்காக உருகி ஊக்குகளைப் பிணைப்பதற்கான ஆதாரப் பெட்டி.

**fuse clips** : (மின்.) **மின்காப்பு உருகி ஊக்குகள்** : வெடியுறை உருகியின் உலோகப் பூண்களைக் கொண்டிருக்கும் விசையின் விற்சுருள் பகுதி.

**fuselage** : (வானூ.) **விமானச் சட்டம்** : விமானத்தின் கட்டுமானச் சட்டம். இதனுடன் சிறகுகளும் வால்பகுதியும் இணைக்கப்படுகிறது.

**fuse link** : (மின்.) **உருகி இணைப்பு** : வெடியுறை உருகியிலுள்ள உருகக்கூடிய பகுதி.

**fuse plug**: (மின்.) **உருகிச்செருகி**: பார்க்க: செருகி உருகி.

**fuse wire**: (மின்.) **உருகிக் கம்பி**: குறைந்த வெப்பநிலையில் உருகக்கூடிய ஓர் உலோகக் கலவையினாலான கம்பி.

**fusibility** : **உருகுதிறன்** : ஓர் உலோகம் திட நிலையிலிருந்து உருகித் திரவ நிலை அடையுந் திறன்.

**fusible alloys** : (வேதி.) **உருகும் உலோகக் கலவைகள்** : ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவு வெப்ப நிலையில் உருகக்கூடிய உலோகக் கலவைகள்.

**fusible plug** : **உருகும் செருகி** : எளிதில் உருகக்கூடிய மென்மையான உலோகத்தினால் அல்லது உலோகக் கலவையினாலான ஒரு செருகி. இது பித்தளை வார்ப்படத்தில் நுழைக்கப்பட்டிருக்கும். இது நீராவிக் கொதிகலத்தின் உலைமுகட்டில் பொருத்தப்பட்டிருக்கும். உலை முகட்டின் அளவுக்கு மட்டம் தாழ்வுறும்போது இது உருகும். இதனால் வெளியேறும் நீரும் நீராவியும் தீயை அணைத்துவிடும்.

**fusing point**: **உருகுநிலை**: உலோகங்களும், உலோகக் கலவைகளும் உருகித் திரவமாகும் வெப்பநிலை,

**fusion** : (இயற்.) **உருகிணைப்பு** : மிகப் பெருமளவு வெப்பத்தின்

மூலம் அணுவின் உட்கருக்களைச் சிதைத்து ஒருங்கிணைத்தல்.

**fusion** : *(விண்.)* **கூட்டிணைவு** : ஆற்றலை வெளியிடுவதற்காக அணுக்கள் ஒன்றாகக் கூடி இணைதல்.

**fusion bomb** : **நீர் வாயுக் குண்டு** : அணுவின் கரு உட்சிதைவினால் ஆற்றல் பெறும் குண்டு வகைகளில் ஒன்று.

**fusion** : *(பற்ற.)* **உருகிய பிழம்பு** : உருகி இளகிய உலோகங்களின் கூட்டுக் கலவை.

**fustic**: *(தாவ.)* **மஞ்சள் மரம்**: மஞ்சள் சாயமாகப் பயன்படுத்தப்படும் வெப்ப மண்டலத்து மர வகை.

**fuzz**: *(தாள்)* **காகிதப்பஞ்சுப்படலம்**: காகிதங்களில் பஞ்சு போன்ற தலைமுடிபோல் தோன்றும் ஒரு படலப் பொருள். இது தனித்தனி இழைகளினால் உண்டாகிறது.

# G

**gable :** *(க.க.)* **மஞ்சடைப்பு** இறை வாரங்களுக்கு மேலுள்ள புறச்சுவரின் முக்கோணக் கோடி.

**gable moulding;** *(க.க.)* **மஞ்சடைப்பு வார்ப்படம் :** ஒரு மஞ்சடைப்பினை முடிவுறுத்துவதற்குப் பயன்படும் வார்ப்படம்.

**gable roof :** *(க.க.)* **மஞ்சடைப்பு முகடு :** ஒரு மஞ்சடைப்பில் முடிவடைகின்ற நீள்வரைக் கூறுகளாயமைந்த கூரை.

**gadget :** *(பொறி.)* **சிறு பொறி :** சிறிய, கையடக்கமான கருவி அல்லது சாதனம்.

**gaggers :** *(வார்.)* **மேற்கட்டி ஆதாரங்கள் :** மேற்கட்டியிலுள்ள மணலுக்கு வலுவூட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உலோக ஆதாரங்கள். தரையில் வார்ப்படங்கள் செய்யத் தொங்கிக் கொண்டிருக்கும் மணற்பொருள்களுக்கு ஆதாரமாகப் பயன்படுத்தப்படுகிறது.

**gain :** *(மர.வே.)* **துளைப் பொருத்து :** உத்தரத்தின் முனையைப் பொருத்துவதற்கு மரத்தில் வெட்டப்படும் துளைப்பொருத்து.

**galaxy :** *(விண்.)* **வான்கங்கை :** கோடிக்கணக்கான சூரியன்களும், விண்மீன்கள், விண்மீன் கூட்டங்களும், ஒண்மீன் படலங்களும் அடங்கிய வான்கங்கை. பூமியின் சூரியன் இதனைச் சார்ந்தது. இதனை பால்வீதி மண்டலம் என்றும் அழைப்பர்.

**galena :** *(கனி.)* **கேலினா :** ஈயத்தின் மிக முக்கியமான தாதுப் பொருள். இது ஒரு சல்பைடு. இது ஈயமும் கந்தகமும் கலந்த ஒரு கலவை. இதில் 8.5% ஈயம் கலந்திருக்கும்.

**gall-bladder :** *(உடலி.)* **பித்தப் பை:** நுரையீரலில் சுரந்து, இரைப்பை கொழுப்புப் பொருள்களைச் சீரணிப்பதற்குப் பயன்படும் பசும்பழுப்பு நிறமுடைய பித்தநீர் என்ற திரவத்தின் கொள்கலன்.



பித்தப் பை

**gallery :** *(க.க.)* (1) **படியடுக்கு மேடை:** இருபுறமும் கட்டிட அறைவாயில் பலகணிகளையுடைய இருக்கைப் படியடுக்கு வரிசை மேடை.

(2) **கலைக்கூடம் :** கலைப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் கலைக் காட்சிக்கூடம்.

**galley:** *(அச்சு.)* **அச்செழுத்துத் தட்டு:** அச்செழுத்துக்கள் அடுக்கும் நீண்ட தட்டு. இது மரத்தினாலோ உலோகத்தினாலோ செய்யப்பட்டிருக்கும்.

**galley lock:** *(அச்சு.)* **அச்செழுத்துப் பிடிப்பான்:** அச்செழுத்துத் தட்டிலிருந்து பார்வைப்படிகள் எடுக்கப்படும்போது, அச்செழுத்துக்களை இறுகப் பிடித்துக் கொள்ளும் ஒரு சாதனம்.

**galley press:** *(அச்சு.)* **பார்வைப் படி அச்சு எந்திரம்:** பக்கங்கட்டாத அச்சுப் பார்வைப்படிகள் எடுப்பதற்குப் பயன்படும் ஓர் அச்சு எந்திரம். இதில், ஓர் ஆதாரமும், தடத்தில் ஓடும் கனத்த உருளையும் இருக்கும்.

**galley proof:** *(அச்சு.)* **அச்சுப் பார்வைப்படி:** பக்கங் கட்டாத அச்சுப் பார்வைப்படி.

**galley rack:** *(அச்சு.)* **அச்செழுத்துத் தட்டடுக்கு:** அச்செழுத்துத்

தட்டுகளை வைப்பதற்குப் பகுதி பகுதியாக பிரிக்கப்பட்ட அடுக்கு.

**gallic acid:** *(வேதி.)* **காலிக் அமிலம்/காழகிக் காரம்:** $[C_6H_2(OH)_3COOH]$: மரவகைக் கரணையிலிருந்து எடுக்கப்படும் மணிக்கார வகை. இது நிறமற்றதாக அல்லது இலேசான மஞ்சள் நிறத்தில் இருக்கும். படிக ஊசிகளாக அல்லது பட்டைகைகளாக அமைந்திருக்கும். இதன் வீத எடைமான 1.694: உருகுநிலை 222°c முதல் 240°c வரை. ஒளிப்படக் கலையிலும், மை, சாயம், மருந்து முதலியன தயாரிக்கவும் பயன்படுகிறது.

**galling:** *(உலோ.)* **ஒட்டுதல்:** உலோகங்கள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொள்ளும் போது அவை ஒன்றையொன்று பற்றிக்கொள்ளுவது உலோகங்களின் இயல்பு. உராய்வுப்பொருள் இன்றி அழுத்தத்தின்கீழ் இவ்வாறு ஒன்றையொன்று பற்றிக்கொள்ளும் தன்மையுடைய பொருள் ஒட்டுப் பொருள் எனப்படும்.

**galli-pot:** **சாடி:** தைலம் வைக்கப் பயன்படும் சிறு பளபளப்பான மட் பாண்டம்.

**gallon:** **காலன்:** நீர்மப் பொருள்களை, அளவிடுவதற்குரிய முகத்தலளவை அலகு. 4 குவார்ட்ஸ், 8 பிண்டுகள், 231 கன அங்குலம் அளவுடையது.

**galloon:** **கட்டு இழைக்கச்சு:** ஆடை விளிம்பில் இணைக்கப்படும் கசவாலான இழைக்கச்சு.

**galvanic action:** *(வேதி.)* **மின்னியக்க வினை:** நேர்மின் உலோகங்களுக்கும், எதிர்மின் உலோகங்களுக்குமிடையிலான இயக்க வினை. இதன் காரணமாக நேர்மின் உலோகம் வீணாகிறது. குறிப்பாக இரும்பும், செம்பும், அல்லது பித்தளையும் இரும்பும் அமிலங் கலந்த நீரில் ஒன்றாக இருக்கும்போது இந்த வினை நடைபெறுகிறது.

**galvanic corrosion:** *(உலோ.)* **மின்னியக்க அரிமானம்:** அதிகம் துருப்பிடிக்காத உலோகங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும் போது இன்னொரு உலோகம் விரைவாக அரித்தழிக்கப்படுதல். எடுத்துக் காட்டாக எஃகும் செம்பும் கடல் நீரில் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்குமாயின், எஃகு விரைவாக அரிமானத்திற்குள்ளாகும்; செம்பு பாதுகாப்பாக இருக்கும்.

**galvanize:** **நாகப்பூச்சு:** இரும்புக்கு துத்த நாகத்தால் மேற் பூச்சிடுதல். இது மின்னியல் செய்முறையால் செய்யப்படுவதில்லை. உருகிய துத்தநாகத்தில் இரும்பை அமிழ்த்து எடுத்தாலே இரும்பில் துத்தநாகப்பூச்சு ஏற்பட்டுவிடும்.

**galvanized iron:** **நாகப்பூச்சு இரும்பு:** துருப்பிடிக்காமலிருப்பதற்காக துத்தநாகத்தால் மேற்பூச்சு பூசப்பட்ட இரும்பு. இதில், இரும்பினைச் சுத்தம் செய்து உருகிய துத்தநாகத்தில் அமிழ்த்து எடுக்கப்படுகிறது. இது மின்னியல் செய்முறையால் நடைபெறுவதில்லை.

**galvanized sheets:** **நாகப்பூச்சுத் தகடுகள்:** துத்தநாகத்தால் மேற்பூச்சு பூசப்பட்ட இரும்புத்தகடுகள். இது 51செ.மீ. முதல் 76செ.மீ. அகலமும் 244செ.மீ.நீளமும் உடையதாக இருக்கும்.

**galvanizing:** **நாகப்பூச்சிடுதல்:** இரும்பு துருப்பிடிக்காமல் துத்தநாகத்தால் மேற்பூச்சு பூசுதல்.

**galvanometer:** *(மின்.)* **மின்னோட்டமானி:** சிறிதளவு மின்னோட்டத்தையும் காட்டுவதற்கான ஒரு கருவி.

**gambrel roof** : *(க.க)* **விரி கோணச் சாய்வுமுகடு**. *விரிகோணத்தில் சாய்வுடைய ஒரு கூரை.*

**gamma** : *(மின்.)* **காமா** : *ஒரு பொதுச் சேமிப்பான் இணைக்கப் பட்ட டிரான்சிஸ்டரில் கிடைக்கும் மின்னோட்டத்தின் அளவைக்குறிக்கும் குறியீடு. இது, சேமிப்பான் அழுத்தம் நிலையாக இருக்கும் போது ஆதாரமின்னோட்டத்தில் ஏற்படும் ஒரு வீத அளவுக்குச் சமமாகும்.*

**gamma rays** : *(இயற்.)* **காமாக் கதிர்கள்; காமாக்கதிரியக்கம்**: *மிகக் குறுகிய ஒளிக்கதிரலையுள்ள ஊடுருவு கதிர்கள்.*

**gang drilling machine** : **கூட்டுத் துரப்பண எந்திரம்** : *பல கதிர்களைக் கொண்ட துரப்பண எந்திரம். இதனால் ஒரே சமயத்தில் பல துளைகளைத் துரப்பணம் செய்யலாம். பெருமளவு உற்பத்திப் பணிகளுக்கு இது முக்கியமாகப் பயன்படுகிறது.*

**gang drill** : *(உலோ.)* **கூட்டுத் துரப்பணம்** : *ஒரு பொதுவான ஆதாரத்துடன் செயற்படும் பல துரப்பணங்களின் தொகுதி.*

**gang mills** : **கூட்டு எந்திரங்கள்** ; *வேலைத் திறனை அதிகரிப்பதற்காகக் கடைசல் எந்திரத்தின் ஒரே நடுவச்சில் அமைக்கப்பட்டுள்ள வரிசையான வெட்டுக் கருவிகள். ஒரே சமயத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பரப்புகளில் வேலைப்பாடு செய்யப் பயன்படுகிறது.*

**gangway** : **ஊடுவழி** : *கப்பல் ஏற்ற இறக்க இடைவெளி.*

**gantry** : *(விண்.)* **நிலைத்தாங்கி**: *ஏவுகணைகளைச் செலுத்துவதற்கான இடங்களில் பேரளவு ஏவு கணைகளை நிறுவவும், ஒருங்கிணைக்கவும், பழுதுபார்க்கவும் பயன்படும், பல்வேறு மட்டங்களில் மேடைகளைக் கொண்ட, நகரக்கூடிய பாரந்தூக்கி போன்ற அமைப்பு.*

**gap** : *(வானூ.) (1)* **இடைவெளி** : *இருதள விமானத்தில் இறகுகளுக்கு இடையிலான தொலைவு. (2) பொறிவினைச் செருகி.*

*(3) திறந்திருக்கும்போது இரு தொடர்பு முனைகளுக்கிடையிலான தூரம்.*

*(4) ஒரு மின் சுற்றுவழியில் உள்ள ஒரு வெளிஇடை வெளி.*

**gap bed** : *(எந்.)* **சந்துப்படுகை** : *கடைசல் எந்திரத்தில் அமைந்துள்ள அளவைவிட அதிக அளவு விட்டமுடைய பொருளைப் பொருத்துவதற்காக, தலைமுனைத் தாங்கிக்குக் கீழே முன்புறம் பின்னொதுக்குப் பகுதியைக் கொண்ட ஒரு கடைசல் எந்திரப் படுகை. இந்தப் படுகை. சந்துக்குக் கீழே வலுப்படுத்தப்பட்டிருக்கும். இந்தச் சந்து பயன்படுத்தப்படாத போது இடைவெளிப் பாலத்தினால் மூடப்பட்டிருக்கும்.*

**gap shears**: *(உலோ.வே.)* **இடைவெளித் துணிப்பான்கள்** : *சதுர வெட்டுத்துணிப்பான் போன்ற ஒரு கத்திரிப்புக் கருவி, அடைப்புத் துளைகளுக்குள் உள்ள இடைவெளியில், நீளவாக்கிலோ குறுக்கு வாக்கிலோ உலோகத் தகடு செருகப்பட்டிருக்கும். இடைவெளி குறைவாக இருக்குமிடத்து நீளத் துணிப்புகள் செருகப்பட்டிருக்கும்.*

**garbage** : *(விண்.)* **சிதைவுப் பொருள்கள்** . *வட்டப்பாதையில், சுற்றுப்பாதையில் சுற்றி வரும் பிற செயற்கைக் கோள்களின் சிதைவுகள் உட்பட பல்வேறு பொருள்கள்.*

**garden bond** ; *(க.க.)* **தோட்டப் பிணைப்பு**: இது ஒவ்வொரு வரிசை

யிலும் மூன்று நீளவாட்டுக் கிடைச் செங்கற்களைக் கொண்டிருக்கும். இதைத் தொடர்ந்து ஒரு முகப்புச் செங்கல் அமைந்திருக்கும். சில சமயம் இந்தப் பிணைப்பு,முகப்புச் செங்கற்களிடையே 2-5 நீள வாட்டுக் கிடைச் செங்கற்களைக் கொண்டிருப்பதுமுண்டு.

**garderobe** : *(மர.வே.)* **ஆடை அலமாரி** : துணிமணி நிலையடுக்கு.

**gargoyle** : *(க.க.)* **நீர்த் தாரை தூம்பு** : விலங்கு, மனித வடிவுகளுடன் கூடிய பழைய சிற்பப் பாணியில் அமைந்த நீர்த்தாரைத் தூம்பு.

**garnet** : **செம்மணிக்கல்** : பளிங்கு போன்று ஒளிரும் செந்நிற மணிக்கல். இது உராய்வுப் பொருளாகவும் கைக்கடிகாரங்களில் தாங்கிகளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**garnet paper** : **மணிக்காகிதம்** : நுண்மணிகள் பூசிய காகிதம். இது பட்டைச்சீலைபோல் பயன்படுகிறது.

**garnierite** : *(உலோ.)* **கார்னியரைட்டு** : நிக்கல் உலோகத்தின் முக்கியத் தாதுப்பொருள். இதில் 5% நிக்கல் அடங்கியிருக்கும்.

**gas brazing** : **வாயுப் பற்றவைப்பு** : வாயு எரிவதால் உண்டாகும் வெப்பத்தின் மூலம் பற்றவைக்கும் ஒரு முறை.

**gas engine** : **வாயு எஞ்சின்** : வாயுவும் காற்றும் கலந்த எரிபொருள் கலவையில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஓர் உள்ளெரி எஞ்சின்.


**gaseous fuel, or "producer gas:" "வாயு எரிபொருள்" அல்லது "விளைவு எரிபொருள்:"** நிலக்கீலார்ந்த நிலக்கரியிலிருந்து வாயுத் தயாரிப்பாளில் தயாரிக்கப்படும் ஒரு வாயு. சூடான காற்றுடன் கலக்கும்போது. ஒரே சீரான வெப்பத்தை உண்டாக்குகிறது. கண்ணாடித் தொழிற்சாலைகளில் கண்ணாடி உருக்கப்படும் தொட்டிகளில் இது பயன்படுத்தப்படுகிறது.

**gas-filled lamp** : *(மின்.)* **வாயு நிறை விளக்கு** : காற்று வெளியேற்றப்பட்டு, பின்னர் அதில் நைட்ரஜனும் ஆர்கானும் கலந்த மந்த வாயுக் கலவை நிரப்பப்பட்ட ஒரு விளக்கு.

**gas-filled tube** : *(மின்.)* **வாயுக் குழல்** : காற்றுக்குப் பதிலாக, நைட்ரஜன், நியோன், ஆர்கோன், பாதரச ஆவி ஆகியவற்றில் ஏதேனுமொரு குறிப்பிட்ட வாயுவைக் கொண்டுள்ள குழல்கள்.

**gashing** : *(எந்.)* **ஆழ்ந்த வெட்டு** : எந்திர உறுப்புகளைக் கரடு முரடாக வெட்டுதல். குறிப்பாக, சாய்வுப்பலலிணைகளின் பற்களை வெட்டுதல்.

**gasket** : *(எந்.)* **ஆவித் தடுப்பான்** : (1)ஆவி கசிவதைத் தடுப்பதற்காக நீள் உருளையிலுள்ள காகிதம், உலோகம், அல்லதுரப்பரினாலான தடுப்பான்.



ஆவித் தடுப்பான்

(2) சுருட்டப்பட்ட கப்பல் பாய் மரத் துணியைக் குறுக்குச் சட்டத்துடன் இணைத்துக் கட்டுவதற்கான சிறு கயிறு.

**gasoline** : **கேசோலின்** : எளிதில் ஆவியாகித் தீப்பற்றக்கூடிய, பெட்ரோலியத்திலிருந்து வடித்தெடுக்கக் கூடிய நீர்மம். முக்கியமாக உள்ளெரி எஞ்சின்களில் எரிபொருளாகப் பயன்படுகிறது.

**gasoline engine** : *(தானி.)* **கேசோலின் எஞ்சின்** : கேசோலிலும் காற்றும் கலந்த ஒரு கலவை எரிபொருளாகப் பயன்படுத்தப்

படும் வகையில் வடிவமைக்கப்பட்ட உள்ளெரி எஞ்சின்.

**gas pliers :** *(கம்.)* **வாயுச் சாமணம்:** சிறிய குழாய்களை அல்லது வட்ட வடிவப் பொருள்களைப் பற்றி எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் இடுக்கிக் குறடு.

**gas producer : வாயு தயாரிப்பான் :** வாயு தயாரிக்கும் உலை. இதில், எரிபொருளை வடித்திறக்குவதன் மூலம் நிலக்கரி வாயு தயாரிக்கப்படுகிறது.

**gas refrigerator :** *(குளி. பத.)* **வாயு குளிர்பதனச் சாதனம் :** வாயு எரிவதால் உண்டாகும் வெப்ப ஆற்றல் மூலம் இயங்கும் குளிர்பதனச் சாதனம்.

**gassing :** *(மின்.)* **வாயுக் குமிழ் :** மின்னேற்றிய சேமக் கலத்தில், மின்வேதியியல் வினை காரணமாக வெளிவரும் வாயுக் குமிழ்கள்,

நெசவுத்தொழிலில், துணிக்கு மெருகேற்றுவதற்காக துணியின் பஞ்சுக் குஞ்சங்களை எரித்து விடுதல்.

**gas turbine :** *(வானூ.)* **வாயு விசையுருளை :** பீற்றுவளி விசைப் பொறியுருளையில் உள்ளது போன்று, விரிவடையும் வாயுக்களினால் சுழலும் ஒரு விசையுருளை.

**gas welding: வாயுப் பற்றவைப்பு:** வாயுப் பிழம்பிலிருந்து கிடைக்கும் வெப்பத்தின் மூலம் பற்ற வைக்கும் ஒரு முறை.

**gate :** *(வார்.)* **வார்ப்பட வாயில் :** ஒரு வார்ப்பட வடிவத்தை உருவாக்குவதற்காக உலோகத்தை ஊற்றுவதற்குள்ள வாயில்.

**gated pattern :** *(வார்.)* **வாயில் தோரணி :** ஒருங்கிணைக்கப்பட்ட பல்வேறு உலோகத் தோரணிகள் கொண்டஒரு தொகுதித்தோரணி. இதனைக் கொண்டு ஒரே சமயத்தில் பல வார்ப்படப் படிகளை எடுக்கலாம். சிறு உறுப்புகளைத் தயாரிப்பதற்கு மிகவும் ஏற்றது.

**gate-leg table:** *(மர.வே.)* **மடிப்புக்கால் மேசை :** மேசை வகையில் மேற்புறத்தின் பகுதிகள் மடிந்து விழுவதற்கு வசதியாகக் கதவுச் சட்டம் போன்ற அமைப்புடைய கால்களைக்கொண்ட மேசை.

**gate valve :** *(பொறி.)* **வாயில் ஓரதர்:** உள்வழி, புறவெளித் திறப்புகளிடையிலுள்ள ஆப்பு வடிவ வாயிலின் இயக்கத்தைப் பொறுத்து இயங்கும் ஓரதர்.

**gathering :** *(அச்சு.)* **ஒன்றிணைப்பு:** புத்தக அச்சிட்ட முழு மடித் தாள்களைக் கட்டுமானம் செய்வதற்கு வரிசை முறையில் அடுக்கி ஒன்று சேர்த்தல்,

**gauge :** *(உலோ.)* **அளவி:** (1) உலோக உறுப்புகளின் வடிவளவைக் கணக்கிடுவதற்கான ஒரு கருவி அல்லது சாதனம். பல்வேறு நோக்கங்களுக்கான அளவிகளுக்குக் குறிப்பிட்ட பெயர்கள் உண்டு.

(2) **சாந்துக் கலவை :** விரைவாக இறுகுவதற்காகச் சாதாரணச் சாந்துடன் பாரிஸ் சாந்தினைக் கலத்தல்.

(3) **மட்டப் பலகை :** தள மட்டத்தைக் கணிப்பதற்குக் கொத்தனார்கள் பயன்படுத்தும் சாதனம்.

**gauge :** *(குளி.பத.)* **அளவை கருவி :** வாயுவின் அழுத்தத்தை அல்லது திரவத்தின் மட்டத்தை அளவிடுவதற்கான ஒரு கருவி.

**gauge pins :** *(அச்சு.)* **அச்சுச் சறுக்குச் சட்ட பிணைப்பூசிகள் :** ஓர் அச்சு எந்திரத்தின் சமனத் தகட்டின் மீது வழிகாட்டியாகப்

பயன்படுத்தப்படும் உலோகத் தகட்டுத் துண்டுகள்.

**gauging :** **அளவிடுதல் :** *(1) ஒரு பொருளின் வடிவளவு, ஒரு கலத்தின் கொள்ளளவு போன்றவற்றை அளவிடுதல்.*

*(2) செங்கற்களை அல்லது கற்களை ஒரே வடிவளவில் வெட்டியமைத்தல்.*

**gauss, karl friedrich :** *(1777-1855) (மின்.)* **காஸ், கார்ல் பிரிட்ரிக் :** *ஜெர்மானியக் கணித மேதை. இவர் தமது வாழ்நாளின் பெரும் பகுதியை கோட்டிங்கன் பல்கலைக் கழக வானியல் ஆய்வுக்கூடத்தின் இயக்குநராகக் கழித்தார். கணிதம், வானியல், இயற்பியல் ஆகிய துறைகளில் துறை போகியவர்.*

**gear :** *(எந்.)* **பல்லிணை :** *பற்கள் முதலியவற்றால் ஒன்றையொன்று இயக்கும் சக்கரங்கள், எந்திரத்தையும் அதன் துணைப் பொறிகளையும் இணைக்கும் சாதனம்.*

**gear case :** *(எந்.)* **பல்லிணைப் பெட்டி :** *பல்லிணைகள் இயங்குவதற்குரிய ஓர் உலோகப் பெட்டி. பொதுவாக, பல்லிணைப் பெட்டியில் மசகுப் பொருள் நிரப்பப்பட்டிருக்கும்.*

**gear cutters: பல்லிணை வெட்டுக் கருவி.** *கடினமாக்கிய எஃகினாலான வட்டவடிவ வெட்டுக்கருவி. இது வெட்டும் பல்லிடைவெளிகள், இதன் வெட்டுவாயின் அளவினதாக இருக்கும்.*

**gear driven super charger :** *(வானூ.)* **பல்லிணை இயக்க உகைப்பான் :** *உந்துகலம், விமானம் முதலியவற்றில் பல்லிணைகளினால் இயங்கும் மீவிசை அழுத்தமூட்டுவதற்கான அமைவு:*

**geared chuck :** **பல்லிணை ஏந்தமைவு :** *எல்லாவற்றிற்கும் பொருந்துகிற ஏந்தமைவு வடிவம்.*

**geared head :** **பல்லிணைத் தலைமுனை :** *பின் பல்லிணை பொருத்தப்பட்ட தலை முனை.*

**geared propeller :** *(வானூ.)* **பல்லிணை முன்செலுத்தி :** *பல்லிணை மூலம் இயக்கப்படும் ஒரு முன்செலுத்தி. பொதுவாக இது எஞ்சின் வேகத்தைவிடச் சற்று அதிக வேகத்தில் இயங்கும்.*

**geared pump: பல்லிணை இறைப்பான் :** *பல்லிணையைப் பயன்படுத்துவதன் மூலம் ஓர் எஞ்சினால் இயக்கப்படும் ஓர் இறைப்பான்.*

**geared shaper :** *(எந்.)* **பல்லிணை வார்ப்புப் பொறி:** *ஒரு பற்சட்டமும் இறக்கைப் பகுதியும், மெதுவாக வெட்டும் ஒரு திமிசினை விரைவாக இயக்கி வார்ப்புருவங்களை உண்டாக்குகிறது.*

**gearing :** **பல்லிணைப்பு :** *பற்கள் மட்டும் சாய்வாக இணைந்து ஒன்றையொன்று இயக்கும்படி அமைக்கப்பட்ட வேறுவேறு தளத்திற் சுழலும் சக்கர அமைவு,*

**gearing down: வேகங்குறைத்தல்:** *பல்லிணைச் சக்கரங்கள் இயக்கும் உறுப்பின் வேகத்தைவிட இயக்கப் பெறும் உறுப்பின் வேகத்தை மிகுதிப்படுத்துதல்.*

**gear ratio :** *(தானி.)* **பல்லிணை விகிதம் :** *இயங்கும் பல்லின் எண்ணிக்கைக்கும், இயக்கப்படும் பல்லிணைகளின் எண்ணிக்கைக்குமிடையிலான விகிதம்.*

**gear shifting:** *(தானி.)* **பல்லிணை மாற்றுதல் :** *எஞ்சினுக்கும் மின் அச்சுக்குமிடையிலான வேக விகிதத்தையும், விசையையும் மாற்றுவதற்காக மாற்றுவேகப் பல்லிணைகளின் பல்வேறு தொகுதிகளைக் கொளுவியிணைத்தல்.*

**gear-shift lever** : *(தானி.)* **பல்லிணை மாற்று நெம்புகோல்:** *மாற்று வேகப் பல்லிணைகளை மாற்றுவதற்கான ஒரு நெம்புகோல்.*

**gear stocking cutter** : *(பல்லி.)* **பல்லிணை வெட்டி :** *விரைவான உற்பத்திக்கும், துல்லியமான வெட்டுதலுக்கும் இயல்விக்கக் கூடிய பல்லிணைப் பற்களை வெட்டுவதற்கான கருவி.*

**gear-tooth caliper** : *(எந்.)* **பல்லிணை திட்பமானி :** *பல்லிணைப் பல்லின் கனத்தையும் ஆழத்தை அளவிடுவதற்குப் பயன்படும் வெர்னியர் வகைத் திட்பமானி.*

**gear train :** *(எந்.)* **பல்லிணைத் தொகுதி :** *இயங்கும் உறுப்புகளையும் இயக்கப்படும் உறுப்புகளையும் இணைக்கின்ற ஒன்று, அதற்கு மேற்பட்ட பல்லிணைகளின் தொகுதி.*

**geiger counter** : *(இயற்.)* **கதிரியக்கக் கண்டுபிடிப்புக் கருவி :** *கதிரியக்கத்தைக் கண்டுபிடிப்பதற்கான ஒருவகை வாயு நிரப்பப்பட்ட ஒரு மின்னியல் சாதனம்*

**gel :** *(வேதி. குழை.)* **அரைத் திண்மக் கரைசல் :** *கூழ்ப் போலியான அரைத்திண்மக் கரைசல். இது ஒளி ஊடுருவக் கூடியது.*

**gelatin** : *(வேதி.)* **ஊன்பசை :** *எலும்பு தோல்களிலிருந்து எடுக்கப்பட்டு, உணவுப் பொருள் துறையிலும், ஒளிப்படத் தகடுகளிலும், பசைகளிலும் பயன்படுத்தப்படும் கூழ்போன்ற பொருள்.*

**gelation** : *(குழை.)* **கெட்டியாக்குதல் :** *திரவ பிளாஸ்டிக்கை உறைய வைத்துக் கெட்டியாக்கும் முறை. இதில் திரவ நிலையிலுள்ள பிசினில் மூலக்கூறுகள் ஊன்பசையாகி பின் கெட்டியாகிறது.*

**geltime** : *(குழை.)* **அரைத்திண்ம நேரம் :** *பிசினின் இயைபூக்கத்திற்கும், தொடக்க நிலைக் கெட்டிமத்திற்குமிடையிலான இடைவெளி நேரம்.*


**genelite**: *(உலோ.)* **ஜெனலைட்டு:** *வெண்கல உலோகக் கலவை. இதில் 40% கன அளவுக்கு காரீயகக் கனிமப் பொருள் கலந்திருக்கும். இது எண்ணெயை ஈர்த்துக் கொள்ளும் தன்மையுடையது.*

**general drawing** : **பொது வரைபடம் :** *எந்திரத்தின் அல்லது பிற பொருள்களின் அமைப்பினைக் காட்டும் வரைபடத்தை வீத அளவுப்படி வரைதல். இதில் எந்திரத்தில் உறுப்புகள் ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்பும், அவை அமைந்திருக்கும் இடமும் குறிக்கப்பட்டிருக்கும். இதனை ஒருங்கிணைப்பு வரைபடம் என்றும் கூறுவர்.*

**generator** : *(மின்.)* **மின்னாக்கி :** *எந்திர ஆற்றலை மின்னாற்றலாக மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் எந்திரங்களைக் குறிக்கும் சொல். அதாவது மின்விசையை உண்டாக்கும் பொறியமைவு.*

**generator bus bars** : *(மின்.)* **மின்னாக்கி மின்வாய்க் கட்டை:** *மின்னாக்கியிலிருந்து மின்விசையைக் கொண்டு செல்லும் மின்விசைப் பலகையின் பின்புறம் பொருத்தப்பட்டுள்ள செப்பு மின்வாய்க் கட்டைகளிலிருந்து பங்கீட்டு மின்சுற்று வழிகளுக்கு மின்விசை செலுத்தப்படுகிறது.*

**geneva motion :** *(பட்.)* **ஜெனீவா இயக்கம் :** *இயக்கப்படும் சக்கரங்*



ஜெனீவா இயக்கம்

களுக்கு உறுதியான, ஆனால் இடையிடையே இயக்கத்தைக் கொடுக்கிற ஒரு சாதனம். ஆனால் இது, இயக்கி இல்லாமல் இரு திசைகளிலும் சக்கரம் இயங்கு வதைத் தடுக்கிறது. இந்த இயக்கி யில் ஒரு பல் அல்லது தேவைக் கேற்ப பல பற்கள் அமைந்திருக் கும். இயக்கப்படும் சக்கரம் முழு மையாகச் சுழன்று விடாமலும் இது தடுக்கிறது.

**geocentric** : *(விண்.)* **புவிமையம்**: பூமியை மையமாகக் கொண்ட தாகக் கருதப்படுபவை.

**geodetic surveying** : **புவிப்பரப்பு அளவாய்வு** : பூமியின் மேற்பரப் பின் கோளவடிவைக் கவனத்திற் கொண்டு, மிகத் துல்லியமாக அள வாய்வு செய்வதற்கான ஒருமுறை, இந்த முறை புவியமைப்பியல், நீரியல் ஆய்வுகளில் பயன்படுத்தப் படுகிறது.

**geology** : **புவியமைப்பியல்** : நில வுலக மேல் தோட்டின் அடுக்கு வளர்ச்சி மாறுபாடுகள் குறித்துப் பாறைகளைக் கொண்டு ஆராய்ந் தறியும் அறிவியல் துறை.

**geometrical** : **வடிவியல் சார்ந்த** : வடிவியலுக்கு இணங்கிய உருவு டைய; வடிவியல் விதிகளுக்கு இணங்க அமைந்த; கோணங்கள் போன்ற வடிவியல் கூறுகளை அமைத்தல் அல்லது கொண்டிருத் தல்.

**geometrical mean** : **பெருக்க மூலம்** : இரு எண்களைப் பெருக்கி அந்தப் பெருக்குத் தொகையின் வர்க்கமூலம் காண்பதால் கிடைக் கும் எண்.

**geometrical pitch of a propeller** : *(வானூ.)* **விமான முன் செலுத்தி வடிவியல் இடைமுகம்** : ஒரு விமானத்தின் முன் செலுத்தி யானது, அதன் அலகுக் கோணத் திற்குச் சமமான ஒரு கோணத் தைக் கொண்ட ஒரு திருகுசுழல் வட்டத்தின் வழியே நகருமாயின் அந்த முன் செலுத்தியின் ஒரு கூறு ஒரு சுழற்சியில் முன்செல்லும் தூரம்.

**geometrical progression** : *(கணி.)* **பெருக்க ஏற்றத் தொடர்பு** : ஒரே வீதத்தில் ஏறிச்செல்லும் எண் தொடர்பு. இத்தொடர்பின் ஒவ்வொரு எண்ணும் முந்திய எண் ணின் ஒரு காரணியால் பெருக்கப் பட்டுக் கிடைக்கும் தொகையாக இருக்கும். (உதாரணம்:) 2, 4, 8, 16,32 ஆகிய எண்கள் பெருக்க ஏற் றத் தொடர்பில் அமைந்துள்ளன, இதில் பெருக்கக் காரணி 2.

**geometrical stair** : *(க.க.)* **வடி வியல் படிக்கட்டு** : குறுகிய கிணறு களில் திருகுமுறுகாக அமைக்கப் படும் படிக்கட்டு. இதனை சுழல் படிக்கட்டு என்றும் அழைப்பர்.

**geometry**: **வடிவகணிதம்** : கோடு கள், மேற்பரப்புகள், திடப் பொருள்கள் ஆகியவற்றின் பண் பியல்புகள் பற்றி ஆராயும் கணித அறிவியல்.

**georgia pine** : *(மர.)* **ஜார்ஜியா தேவதாரு** : கரணைகளைக் கொண்ட கருநிறமரம். இது இறுதி மெருகுப் பொருளாகப் பயன்படும். இந்த மரம் கடினமானது; கன, மானது; வலுவானது. ஆனால் ஈரமான இடங்களில் எளிதில் மட்கிவிடக் கூடியது. இது பிசின் தன்மை கொண்டிருப்பதால் இதில் வண்ணங்கள் ஒட்டுவதில்லை.

**geophysics** : *(இயற்.)* **புவி இயற் பியல்** : பூமியின் இயற்பியல் பண்பு களை ஆராயும் அறிவியல். எடுத் துக் காட்டாக, பூமியின் காந்தத் தன்மை, அதன் மின்கடத்தும் தன்மை, அதன் அடர்த்தி, நில அதிர்ச்சிகள், மாகடல்கள், வாயு

மண்டலம் போன்றவற்றை ஆராய்தல்.

**germanium** : *(வேதி.)* **ஜெர்மானியம்** : எளிதில் முறிவுறும் வெண்ணிற உலோகத் தனிமம். மிகுந்த பளபளப்புடையது. இதன் உருகு நிலை 1562°F.

**german silver**: **ஜெர்மன் வெள்ளி**: செம்பு, துத்தநாகம், நிக்கல் ஆகிய உலோகங்கள் கலந்த ஓர் உலோகக் கலவை. வெள்ளி போல் வெண்ணிறமானது. நுண் கருவிகள் செய்வதற்குப் பயன்படுகிறது.


**gesso** : **ஓவிய உறைகள்** : வண்ணந்தீட்டுவதிலும், சிற்பக்கலையிலும் பயன்படுத்தப்படும் உறைகள்.

**get away speed**: *(வானூ.)* **பறக்கும் வேகம்** : ஒரு கடல் விமானம் முற்றிலுமாக வானில் பறப்பதற்கான வேகம்.

**ghost** : **இரட்டைத் தோற்றம்** : தொலைக்காட்சியில் காலந்தாழ்த்தி அனுப்பப்பட்ட இரட்டைத் தோற்றக் குளறுபடி. ஒளி வாங்கி அருகில் இருக்கும் உயர்ந்த கட்டிடங்கள், குன்றுகள் முதலியவை சைகைகளைப் பிரதிபலிப்பதால் இந்தக் குளறுபடி ஏற்படுகிறது.

**gib** : *(எந்.)* **உலோக ஆப்பு** : எந்திர உறுப்புகளை இறுக்கமாகப் பொருத்துவதற்குப் பயன்படும் ஒரு மெல்லிய எஃகுத்துண்டு. கடைசல் எந்திரத்தில் குறுக்கு நழுவு சட்டத்தில் இது பயன்படுகிறது.

**gib headed key** : **ஆப்புத்தலை திறவுகோல்** : கனத்த முனைக்கு செங்கோணத்திலுள்ள ஒரு கவர் முள் உடைய ஒரு திறவுகோல். இது அதனைத் திரும்ப எடுப்பதை எளிதாக்குகிறது.



ஆப்புத்தலை திறவுகோல்

**gilbert** : *(மின்.)* **கில்பெர்ட்** : காந்த இயக்க ஆற்றல் அலகு.


**gilbert,william** : *(மின்.)* **கில்பெர்ட், வில்லியம் (1540-1603)** : முதலாம் எலிசபெத் அரசி காலத்தில் வாழ்ந்த ஆங்கில மருத்துவர். இவர் முதன் முதலில் திசைகாட்டியின் செயல் முறையைக் கண்டு பிடித்தார். பூகோளக் காந்த விசை ஆய்வியலின் தந்தை எனப் போற்றப்படுவர்.

**gilding**: **பொன்முலாமிடுதல்**: மின் முலாம் பூசுதல் மூலம் தங்க முலாமிடுதல் அல்லது தங்கத் தகட்டினால் கையால் பூச்சுவேலை செய்தல். இந்தச் சொல் பெரும்பாலும் வெண்கலத் தூளினால் அல்லது திரவத்தினால் பூச்சுவேலை செய்வதைக் குறிக்கும்.

**gilt** : **பொன்பூச்சுமானம்** : பொன் முலாமிடுதல் மூலம் இறுதியாகக் கிடைக்கும் மெருகு.

**gimbals** : *(உலோ.)* **எந்திரக் குழையச்சு** : கடலில் திசைகாட்டி முதலிய கருவிகளைத் தளமட்டமாக வைத்திருப்பதற்கான எந்திரக் குழையச்சு அமைவு.

**gimlet** : **துரப்பணம்**: மரவேலைத் துளைப்புக் கருவி.



துறப்பணம்

**gimp**: **கெட்டி இழை**: பூவேலைப்பாடுகளில் சித்திர விளிம்புக் கெட்டி இழை. இது 33மீட்டர் கொண்ட துண்டுகளாக விற்கப்படுகின்றன. உயர்த்திய மேற்பரப்புடைய கனத்த கெட்டி இழை "கட்டு இழைக்கச்சு" எனப்படும், இது ஆடை விளிம்புகளில் இணைக்கப்படும்.

**gimping** : **கெட்டி இழை** : பூ வேலைப்பாட்டில் சித்திர விளிம்புக் கெட்டி இழை அமைத்தல்.

**gin** : **விதை நீக்குதல்** : பருத்தியிலிருந்து விதைகளை எந்திரத்தினால் நீக்குதல்.

**ginger-bread work** : (க.க.) **குமிழ்மாட்டி வேலைப்பாடு** : வீடுகளில் உள்ளது போன்ற, அலங்கார அல்லது நுட்பமான செவ்வொழுங்கு வேலைப்பாடு.

**gin pole** : (பொறி.) **பாரந்தூக்கிக் கம்பம்** : மரத்தால் அல்லது எஃகினாலான ஒரு செங்குத்தான கம்பம். இதில் கயிறு கப்பிக் கலனும், கட்டைகளும் கயிற்று வடம் அல்லது எஃகு வடத்துடன் பொருத்தப்பட்டிருக்கும். இதனைக் கொண்டு கனமான பொருள்களை எந்திரவிசையினால் வேண்டிய உயரத்திற்கு ஏற்றலாம். இது பளுதூக்கி போன்று பயன்படுகிறது.

**giran dole** : **மெழுகுதிரிக் கொத்து விளக்கு** : ஒரு மையத் தண்டினைச் சுற்றியுள்ள வட்டத்தில் பொருத்தப்படும் மெழுகுதிரிக் கொத்து விளக்கு.

**girder** : (க.க.) **தூலம்** : தள ஆதாரமாகப் பயன்படும் மரத்தாலான அல்லது எஃகினாலான பெரிய உத்தரம்.

**girt** : **முரண் கணிப்பீட்டளவை** : (1) தட்டையாக இராத பரப்புகளில் மேடுபள்ளக் கணிப்புகளுடன் குறுக்காகவும், சுற்றியும் எடுக்கப்படும் அளவை.

(2) நீள் உருளை ஒத்த அளவுடையவற்றின் சுற்றுப் பட்டை அளவு.

**glair** : (நூ.க.) **முட்டைப்பசை** : முட்டை வெண் கருவிலிருந்து செய்யப்படும் மெருகுப் பூச்சுக்கான பசைப் பொருள்.

**gland** : (எந்.) **உள்திகைப்பு வாய் தாங்கி** : காற்று முதலியவை உட்புகாதவாறு இயங்கவல்லஉள்திணிப்புப் பொறியமைவின் வாயை அடைத்துக் கொண்டு உந்துதண்டின் தேய்மானத்தைத் தடுக்கும் சிறிய தாங்கி.



வாய் தாங்கி

**gland** : (உடலி.) **சுரப்பி** : உடலின் இயக்கத்திற்குத் தேவையான பொருள்களைச் சுரக்கும் உடலின் பகுதி. வியர்வைச் சுரப்பி, பால் சுரப்பி, நிணநீர்ச்சுரப்பி, சீரணத்திற்கு உதவும் திரவங்களைச் சுரக்கும் கணையம் போன்றவை இவ்வகையைச் சேர்ந்தவை.

**glare** : (தாள்.) **காகிதப் படரொளி** : பளபளப்பான காகிதத்திலிருந்து பிரதிபலிக்கும் ஒளி.

**glass** : **கண்ணாடி** : மணல் அல்லது சிலிக்காவை சுண்ணாம்பு, பொட்டாஷ், சோடா அல்லது ஈய ஆக்சைடு இவற்றுடன் சேர்த்து உருக்குவதால் கிடைக்கும் கடினமான, ஆனால் எளிதில் உடையும் தன்மையுள்ள பொருள்.

**glass cloth** : (குழை.) **கண்ணாடித் துணி** : கண்ணாடி இழைகளைக் கொண்டு நெய்யப்பட்ட துணி. இது பிசின் தகடுகளில் பயன்படுகிறது. இது ஒரு பொருளுக்கு வலிமையும், எஃகு போன்ற உறுதியும் அளிக்கிறது. கட்டுமானத்திற்குப் பலவகைப் பிசின்கள் பயன்படுகின்றன. பாலியஸ்டர் அவற்றில் ஒன்று.

**glass cutter** : **கண்ணாடி வெட்டி** : கண்ணாடியை வேண்டிய அளவுகளில் அறுப்பதற்கு உதவும் ஒரு சாதனம். இது பெரும்பாலும், கைப்பிடி கொண்ட ஒரு சுழல் சக்



கண்ணாடி வெட்டி

கரத்தில் பொருத்தப்பட்ட ஒரு வைரமாக இருக்கும்.

**glass hard**: *(உலோ.)* **கண்ணாடிக் கடினம்**: கண்ணாடியில் கீறல் உண்டாக்கும் அளவுக்குக் கடினமாகவுள்ள பொருள்.

**glassine**: *(தாள்.)* **பளிங்குத்தாள்**: பளிங்கு போன்ற தாள். செலோபோன் காகிதம் போன்று ஒளி ஊடுருவக் கூடியது. துப்புரவு நோக்கங்களுக்காகப் பயன்படுகிறது. சல்ஃபைட் கூழிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

**glass insulator**: *(மின்.)* **கண்ணாடி மின்காப்பான்**: மின்கம்பக் கம்பி அமைப்பதில் பயன்படுத்தப்படும் மின்விசை பாயாமல் காப்பிடுவதற்கான காப்புப் பொருள். இது குறுக்குப்புயங்களில் ஊசிகொண்டு பிணைக்கப்படுகிறது. தொடர் கம்பிகள் இந்த மின்காப்பானுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

**glazed**: **மெருகூட்டிய**: மெருகிட்டு பளபளப்பான பரப்பினை உண்டாக்குதல்.

கட்டிடங்களில் கண்ணாடிப் பலகணிகள் அமைத்தல்.

**glazed brick** *(க.க.)* **மெருகுச் செங்கல்**: மெருகிட்ட பளபளப்பான பரப்புடைய செங்கல். மெருகுப் பொருள்களை ஒன்றாகக் கலந்து இது தயாரிக்கப்படுகிறது.

**glazed doors**: *(அ.க.)* **மெருகுக் கதவுகள்**: கண்ணாடி போன்ற பளபளப்பான தோற்றமுடைய கதவுகள். இதில் பெரும்பாலும் கண்ணாடிச்சில்லுகளிடையேவேலைப்பாடுடைய மரத்தினாலான தோரணிகள் அல்லது பின்னல் வேலை அமைந்திருக்கும்.

**glazed tile**: *(க.க.)* **மெருகு ஓடு**: மெருகிட்ட பளபளப்பான தோற்றமுடைய கண்ணாடி போன்ற மேற்பரப்புடைய ஓடு.

**glazing**: *(1)* **கண்ணாடி பொருத்தும் கலை**: பலகணிகளுக்குக் கண்ணாடி பொருத்தும் கலை.

*(2)* **மெருகுப் பூச்சுக்கலை**: மாவரைக்கும் எந்திரத்தின் அல்லது சாணைச் சக்கரத்தின் மேற்பரப்பின் இடைவெளிகளை நுண்துகள்களைக் கொண்டு நிரப்புதல்.

**glide**: *(வானூ.)* **சறுக்கு**: விமானம் இயங்குபொறி இல்லாமலேயே சறுக்கிச் செல்லுதல்.

**glide landing**: *(வானூ.)* **சறுக்கித் தரையிறங்குதல்**: விமானம் இயங்கு பொறியின்றி சறுக்கிப் பறந்து தரையிறங்குதல்.

**glider**: *(வானூ.)* **சறுக்குவிமானம்**: இயங்கு பொறியமைப்பில்லாமல் பறக்கும் சறுக்கு விமானம்.

**gliding angle**: *(வானூ.)* **சறுக்குக் கோணம்**: ஒரு சறுக்கு விமானத்தின் பறக்கும் பாதைக்கும், இடைமட்ட அச்சுக்குமிடையிலான கோணம்.

**globe valve**: *(கம்.)* **கோள வடிவ ஓரதர்**: ஒருவகை ஓரதர். இதில் ஒரு வட்டத்தகடு ஒரு திருகு மூலம் செயற்படுகிறது. ஒரு வட்ட வாயின் மீது கைச்சக்கரம் அமைந்திருக்கும். இதன் கீழ்ப்புறத்திலிருந்து அழுத்தம் மேல்நோக்கி மோதுகிறது.

**gloss**: **மேல் மினுக்கு**: மேற்பரப்பு பளபளப்புடன் இருக்கும் மினுமினுப்பான தோற்றம்.

**glost**: *(மட்.க.)* **மெருகு மட்பாண்டம்**: சூளையில் இடப்படவிருக்கும், வழுவழுப்பும் பளபளப்பும் வாய்ந்த மட்பாண்டம்.

**glowcoil**: *(மின்.)* **ஒளிர் சுருள்**: ஒரு கூம்பு வடிவத்தில் சுற்றப்பட்டுள்ள தடைக்கம்பி. இது சூடாக்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**glow-tube**: *(மின்.)* **ஒளிர் குழல்**: மின்னழுத்தத்தை முறைப்படுத்து கிற நியான் ஒளிர் குழல் போன்ற ஒளி வெளியிடும் குழல்.

**glucose** : *(வேதி.)* **பழ வெல்லம்** : மரச்சத்திலிருந்து வெப்பமும் அமிலங்களும் வினைபுரிவதன் மூலம் உண்டாக்கப்படும் மணமற்ற இனிப்பான பாகுப்பொருள். கற்கண்டு, பழச்சத்துகள், வடிசாறுகள் முதலியவை தயாரிப்பதற்கு முக்கியமாகத் தேவைப்படும் பொருள்.

**glue** : **வச்சிரப்பசை** : விலங்கின் தோல், எலும்பு முதலியவற்றை உரிய அளவுக்குக் கொதிக்க வைத்துப் பெறப்படும் திண்ணிய பசைப் பொருள். இது தகடாகவும், பட்டைகளாகவும், மென்படலங்களாவும், குருணையாகவும் விற்கப்படுகின்றது. வெள்ளை, மஞ்சள், பழுப்பு முதலிய பல வண்ணங்களிலும் கிடைக்கிறது.

**glue injector** : *(மர.வே.)* **வச்சிர ஊசி** : மிக நுண்ணிய துவாரங்களுக்குள் வச்சிரப்பசையினைச் செலுத்துவதற்குப் பயன்படும் சிறிய கூரிய முனை கொண்ட ஓர் உலோகப் பீற்றுக் குழல்.

**glycerin** : *(வேதி.)* **கிளிசரைன்/கரு நீர்ப்பாகு** : கொழுப்பிலிருந்து காரம் சேர்ப்பதால் விளைவிக்கப்பட்டு, மருந்துக்கும், பூச்சுநெய்க் களிம்புகளுக்கும், வெடிமருந்துக்கும் பயன்படுத்தப்படும் நீர்மப் பொருள். சோப்பு, மெழுகுவர்த்தி தயாரிப்பதற்கும், ரொட்டித் தொழிற்சாலைகளிலும் அச்சக உருளைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. நிறமற்ற, திண்மமான திரவம்.

**glyph**: *(க.க.)* **ஒப்பனைச் சால்வரி**: சிற்ப வேலைப்பாட்டுக்கு அடையாளமாகவுள்ள குறுகிய செங்குத்தான ஒப்பனைச் சால்வரி.

**gneiss** : *(கனிம.)* **நிஸ்** : படிகம் களிமம், அப்பிரகம் போன்ற கனிமப் பொருள்கள் கலந்த அடுக்குப் பாறை.

**go bo** : **ஒளித்திரை** : மேடையில் தேவையில்லாத இடங்களில் ஒளி படாமல் மூடிமறைக்கப் பயன்படும் ஒரு திரை.

**goggles** : **காப்புக் கண்ணாடி** : பற்றவைப்பவர்களும், சாணை பிடிப்பவர்களும் கண்ணுக்குப் பாதுகாப்பாக அணிந்து கொள்ளும் கண்ணாடி.

**gold** : **பொன்/தங்கம்** : உலோகங்களில் விலைமதிப்பு வாய்ந்த உலோகங்களில் ஒன்று. உலோகங்கள் அனைத்திலும் மிகவும் நெகிழ் விணக்கமுள்ள உலோகம்; கம்பியாக இழுத்து நீட்டக் கூடியது.

**golf ball** : *(கணிப்.)* **குழிப்பந்து**.

**gonio photo meter** : **படரொளி மானி** : வண்ணப் பொருள்களின் படரொளியை அளவிடும் சாதனம்.

**go or no-go gauge** : *(எந்.)* **இரு முனை அளவி** : அளவிடுவதற்கான இருமுனைகளைக் கொண்ட அளவி. ஒரு முனையில் அளவிடப் படவேண்டிய பொருள் நுட்பமாகப் பொருத்தப்பட்டிருக்கும். மற்றொரு முனை, வெளிப்புற விட்டத்திற்கு மிகச்சிறியதாகவும், உட்புற விட்டத்திற்கு மிகப்பெரியதாகவும் இருக்கும்.

**goose neck** : **வாத்துக் கழுத்து** : வாத்தின் கழுத்தினைப் போல் வளைந்திருக்கும் கொக்கி, குழல், தாங்கி முதலியவை,

கட்டிடங்களில் வாத்துக் கழுத்துப் போன்று வளைந்துள்ள படிக் கட்டின் கைபிடி,

**gordon press** : *(அச்சு.)* **கோர்டோன் அச்சு எந்திரம்**: அச்சுத்தாள்


அழுத்தும் தகட்டுப்பான அச்சு எந்திரத்தில் மிகப் பழைய வகை.

**gothic** *(க.க.)* **கூர்மாடப் பாணி :** (1) இடைநிலைக் காலத்து கிழக்கு ஜெர்மனியின் கூர்மாடச் சிறப்புப் பாணியில் அமைந்த கட்டிடம்.

(2) அச்சுருப் படிவ வகையில் அமைந்துள்ள அச்சுரு.

**gothic arch** : *(க.க.)* **கூர்மாடக் கவான்:** உயர்ந்து, குறுகிக் கூர்மையாகச் செல்லும் வில்வளைவு.

**gouge** : **நகவுளி :** தச்சு வேலையி



நகவுளி

லும், அறுவை மருத்துவத்திலும் பயன்படுத்தப்படும் உட்குழிவான அலகுடைய உளி.

**governor** : *(எந்.)* **ஆள்வான் :** எஞ்சின்களிலும், எந்திரங்களிலும் வேகத்தைச் சீராக்கிடும் விசை அமைவு.

**grab** : *(எந்.)* **இறுகுப்பிடிப்பான் :** வலித்திழுப்பதற்காகவும், உயரத் தூக்குவதற்காகவும் பயன்படுத்தப்படும் ஒரு சாதனம்.

**grab hook** : *(வார்.)* **இறுகுப்பிடிப்புக் கொக்கி:** பாரந்தூக்கிக் கொக்கியுடன் பாரங்களை இணைப்பதற்கான குறுகிய சங்கிலிகள் அல்லது சலாகைகளுடன் இணைக்கப்பட்டுள்ள கொக்கிகள்.

**grade** : *(க.க.)* **தரைமட்டம் :** ஒரு கட்டிடத்தைச் சுற்றியுள்ள தரை மட்டம்.

**grading : சாய்தள அமைப்பு :** (1) ஒரு மனையில் தேவையான கோணத்திற்கு சாய்தளம் ஏற்படுத்துதல்.

(2) பக்க நடைபாதையை மழைநீர் சீராக வடியும் வகையில் சாய்வாக அமைத்தல்.

**gradual load: படிப்படியானபாரம்:** ஒரு கட்டமைப்பில் படிப்படியாக ஏற்றப்படும் பாரம். இது அழுத்தத்திற்கு மிகவும் சாதகமான சூழலை ஏற்படுத்தும்.

**graduate** : **நுண்படியளவீடு:** நுண் கூறுகளாக அளவின் அடையாளமிடுதல்.

**graduation** : **படியளவுக் குறியீடு :** நுண் படியளவிட்டுப் படியளவுக் குறியிடுதல்.

**grain** : (1) **மயிர் களைதல்:** தோல் பதனிடுவதில் தோலிலிருந்து மயிர் களைதல்.

(2) **மயிர் களைவுக் கத்தி :** தோல் பதனிடுவதில் மயிர் களைவதற்குப் பயன்படுத்தும் கத்தி.

(3) **அடுக்குவரி அமைவு :** காகித எந்திரத்தில் இயக்கத் திசைக்கு நேரிணையாகக் காகிதத்தில் நீளவாக்கில் அடுக்கு வரி அமைவுறச் செய்தல்.

(4) **நெல் மணி எடை:** மிகச் சிறிய எடை அளவு. 7,000 மணி எடை = 1 அவுன்ஸ்-பவுண்டு.

**grained cowhide: மயிர் களைந்த தோல் :** தோலில் மயிர்களைந்து, பல்வேறு மேற்கரண் பரப்புடைய தோல். இது பல வண்ணங்களிலும் இருக்கும். இதனால் பைகளும், பெட்டிகளும் செய்யப்படுகிறது.

**graining: அகவரி வண்ணமிடுதல்:** கருவாலி, வாதுமை போன்ற உயர்தர மரங்களைப் போன்று தோற்றமளிக்கும் வகையில் அகவரி வண்ணம் கொடுக்கும் முறை.

**graining comb** : *(மர;வே.)* **கரண்சீப்பு:** மரப்பலகைகளில் கரண் போன்ற தோற்றம் ஏற்படுமாறு செய்வதற்குரிய எஃகினாலான

அல்லது தோலினாலான ஒரு சீப்பு போன்ற கருவி.

**gram : கிராம் :** மெட்ரிக் சீரெடை அளவு முறையில் பொதுநிலை எடையலகு 1 கிராம் = 15.432 நெல்மணி.

**gramme ring winding :** (மின்.) **சீரெடை வளையச் சுருணை:** இது ஒரு மின்னகச் சுருணை. இந்த முறை இப்பொழுது மிகுந்த தனி வகைப் பயன்பாடுகளைத் தவிர்த்து, மற்றப்படி நடைமுறையில் பயன்படுத்தப்படுவதில்லை.

**gram molecular weight :** (வேதி.) **அணுக்கட்டு நிறை :** தனிமத்தின் அணு எடை அளவின் பரும அளவெண். ஒரு வாயுவின் அணுக்கட்டு நிறையானது, இயல்பான சூழல்களில் 22.4 லிட்டர் அளவாக இருக்கும்.

**granite :** (க.க.) **கருங்கல் :** வெள்ளை அப்பிரகம் கலந்த கருங்கல். இது மிகவும் கடினமானது; மிகுந்த பளப்பளப்புடையது. கட்டிடங்கள், நினைவுச் சின்னங்கள் கட்டுவதற்குப் பயன்படுகிறது.

**granular : மணியடர்த்தியுள்ள :** இழையாக அமைந்திராமல் சிறு மணி போன்ற செறிவுள்ளது.

**granular carbon :** (மின்.) **அகவரிக் கார்பன் :** சிறுமணிகள் போன்ற அகவரிச் செறிவுள்ள சொரசொரப்பான மேற்பரப்புள்ள கார்பன். தொலைபேசி ஒலியனுப்பீட்டுக் கருவிகளிலும், மாற்றுத் தடைகளிலும் பயன்படுகிறது.

**granular structure :** (குழை.) **அகவரிக் கட்டமைவு:** அமைப்பான்கள் முழுமையாக ஒருங்கிணையாததன் காரணமாக பணிமுடிவுற்ற பிளாஸ்டிக் பொருட்கள், சொர சொரப்பான மேற்பரப்பினைக் கொண்டிருத்தல்.

**grape sugar :** (வேதி.) **பழச் சர்க்கரை:** இது அங்காடிகளில் கடினமான, மெழுகு போன்ற திடப் பொருளாகக் கிடைக்கும். தயாரான புதிதில் இது செறிமான முறாத பழவெல்லமாக அல்லது குளுக்கோசாக இருக்கும். ஒயின், ரொட்டி தயாரிப்பதிலும், புகையிலையைப் பக்குவப்படுத்துவதிலும், குரும உப்பு மூலம் தோல் பதனிடுவதிலும் பயன்படுத்தப்படுகிறது.

**graphic : வரையுரு :** கருத்துக்களைப் படங்களாகவும், வரையுருவங்களாகவும் சித்தரித்தல்.

**graphic arts : வரைகலை :** ஓவியம், படம் வரைதல், சித்திரம்-செதுக்குதல் போன்ற வரையுருக் கலைகள்.

**graphic building blocks : வரைகலைக் கட்டுமானத் தொகுதிகள்.**

**graphic forms : வரைகலை வடிவங்கள்.**

**graphic methods : வரைகலை முறைகள் :** வரையுருவங்கள் வாயிலாகக் கட்டிடங்கள் மீதான அழுத்தம், வேகவீதம் முதலியவற்றைக் கணக்கிடுவதற்கான முறைகள்.

**graphic lines : வரைகலைக் கோடுகள்.**

**graphic plotting: வரைகலை வரைதல்.**

**graphic shapes: வரைகலை வடிவுகள்.**

**graphite :** (வார்;பொறி.) **காரீயகம்:** செயற்கையான அல்லது இயற்கையான கனிப்பொருள் வகை. இதில் 90% கார்பன் அடங்கியிருக்கும். இது வெள்ளி போல் மினுமினுப்புடையது. இது ஈயப் பென்சில்கள் தயாரிக்கவும், உராய் பொருளாகவும், வார்ப்படத்

தொழிற்சாலைகளில் வார்ப்புப் பூச்சுப் பொருளாகவும் பயன்படுகிறது.

**graphite paint :** *(வண்.)* **காரீயக வண்ணம்** : காரீயகமும், கொதிக்க வைத்த ஆளிவிதை எண்ணெயையும், சிறிதளவு உலர்த்து பொருளையும் கலந்த கலவை. இரும்பு வேலைகளில் வண்ணம் பூசுவதற்கு மிகவும் உகந்தது.

**graphitizing :** *(உலோ.)* **காரீயமாக்குதல் :** ஒரு சாம்பல் நிற வார்ப்பிரும்பிலுள்ள கார்பனின் பெரும் பகுதியை ஒரு பதப்படுத்தும் முறையின் மூலம் காரீயக நிலைக்கு மாற்றுதல்.

**grate area or grate surface:** ஒரு கொதிகலனில் கணப்புக் கம்பிகள் அமைந்த பரப்பளவு. இது சதுர அடிக்கணக்கில் கணக்கிடப்படும். இது முழுமையான உள்ளெரிதல் நடைபெறும் பரப்புக்குச் சமமானதாகும்.

**gravel: சரளைக்கல்:** மணலும் கூழாங்கற்களும் கலந்த சரளைக் கலவை.

**graver : செதுக்கு உளி** : சித்திரம் செதுக்குவதற்குப் பயன்படும் ஒரு கருவி.

**gravisphere:** *(விண்.)* **ஈர்ப்பு மண்டலம்** : விண்மண்டலக் கோளங்களில் மற்றக் கோளங்களை ஈர்ப்பதற்கான ஈர்ப்பாற்றல் முனைப்பாக உள்ள கோளப்பரப்பு

**gravity : ஈர்ப்புவிசை** : பூமியின் மையத்தை நோக்கி அல்லது அதன் மேற்பரப்பை நோக்கி பொருள்கள் அனைத்தும் ஈர்க்கப்படும் விசை.

**gravity cell :** *(மின்.)* **ஈர்ப்பு மின்கலம்** : டேனியல் மின்கலத்தின் மாற்றியமைத்த வடிவம். இதில் இரு மின்பகுப்பான்கள் ஈர்ப்பு விசை மூலம் பிரிக்கப்பட்டிருக்கும்.

**gravity - drop annunciator :** *(மின்.)* **ஈர்ப்புவிசை அறிவிப்பான்:** மின்காந்தங்கள் மூலம் இயங்கும் ஒரு சைகைச் சாதனம். இதில் காந்தத்திலிருந்து ஒரு கீல் உறுப்பு விடுபட்டு கீழே விழும் போது எண், பெயர் முதலியன வெளித் தெரியும்.

**gravity lubrication system :** *(தானி.எந்.)* **ஈர்ப்புவிசை உராய்வுத் தடையமைப்பு** : உயரத்திலுள்ள கொள்கலத்திலிருந்து ஈர்ப்புவிசை மூலம் உராய்வுத்தடைக்காக உறுப்புகளுக்கு எண்ணெய் பாயவிடுதல். இந்த அமைப்பு முறையில், எண்ணெய் ஓர் இறைப்பான் மூலம் அது முதற்கண் இருந்த கொள்கலத்திற்கே கொண்டு வரப்படுகிறது.

**gravity water system : ஈர்ப்பு விசைநீர் அமைப்பு** : ஈர்ப்பு விசை மூலம் அழுத்தம் பெறப்படும் ஒரு நீர் அமைப்பு முறை.

**gravity well :** *(விண்,)* **ஈர்ப்புக் கேணி** ; ஈர்ப்புப்புலம் ஓர் ஆழமான கேணியாகக் கருதப்படும் பகுதி. ஒரு வான் கோளிடமிருந்து தப்புவதற்கு ஒரு விண்வெளி ஊர்தி இந்தக் கேணிக்குள்ளிருந்து ஏறி வெளியே வர வேண்டும்.

**gray iron : சாம்பல் வார்ப்பிரும்பு:** தேனிரும்பு அல்லது வார்ப்பிரும்பு. இதில் முறிவு ஏற்படுமாயின், சாம்பல் நிறப்படிகக் கட்டமைவு உண்டாகும்.

**grease :** *(தானி.)* **மெழுகுப் பசை:** தாவர எண்ணெய்களின் குழம்பும், சோடா அல்லது எலுமிச்சை சோப்பும் அடங்கிய ஒரு மசகு எண்ணெய்ப் பொருள்.

**grease gun :** *(தானி.)* **மசகு பீச்சாங் குழல்** : உயவுப் பொருளை தாங்கியினுள் பீச்சிச் செலுத்துவதற்கான ஒரு சாதனம்.

**grease lubricants : மசகு உயவுப் பொருள்கள் :** இவை ஆறுவகைப் படும்: (1) கொழுப்பு மசகு: இது விலங்கின் கொழுப்பும், பனை எண்ணெயும் சில கனிம எண்ணெய்களுடன் கலந்த கலவை. (2) சோப்பு போன்று கெட்டியான கனிம எண்ணெய் வகை. (3) முதலாவது அல்லது இரண்டாவது வகைக் காரீயகம், வெளிமக் கன்மசி, அல்லது அப்பிரகத்துடன் கலந்த கலவை; (4) கற்பூரத் தைல வகை. (5) நீர்மமல்லாத எண்ணெய்கள்; (6) தனிவகை வடிப்பான்கள் உள்ள தனிவகை மசகுகள்.

**grease trap :** (கம்.) **மசகுப் பொறி:** வீட்டுக் கழிவுப்பொருள்களிலிருந்து மசகினைப் பிரித்துத் திடப்பொருளாக்கி, அகற்றுவதற்கான ஒரு முறை. கழிவு நீர்க் குழாய்களில் அடைப்பு ஏற்படாமல் தடுப்பதற்கு இது பயன்படுகிறது.

**green : பசுமை நிறம் :** ஒளிக்கதிர் நிறப்பாட்டையில் நீலத்திற்கும் மஞ்சளுக்குமிடைப்பட்ட வண்ணம்.

காகிதத்திலும், அச்சு உருளைகளிலும், முழுமையாகப் பக்குவப் படுத்தப்படாத நிலையைக் குறிக்கும் சொல்.

**green core:** (வார்.) **பக்குவமடையா உள்ளீடு:** வார்ப்படத்தில் முற்றிலும் எரிந்து பக்குவப்படாத உள்ளீடு.

**green field :** (மின்.) **பசும்புலம்:** துவள் குழாய்க்கு முதற்கண்ணிருந்த வாணிகப் பெயர்.

**green gold :** (வேதி.) **பசும் பொன் :** 25% வெள்ளியும் 75% தங்கமும் கலந்த உலோகக் கலவை.

**green sand :** (வார்.) **பசுமணல்:** பச்சை நிறங்கொடுக்கும் கனிப் பொருள் நிறைந்த மணற்கல். இதனை உலர்த்தாமல், நீருடன் கலந்து ஈரமாக்கி வார்ப்படத் தொழிற்சாலைகளில் பயன்படுத்துகிறார்கள்.

**grand sand core :** (வார்.) **பசு மணல் உள்ளீடு :** ஈரமான பசுமணலினாலான ஓர் உள்ளீடு.

**green vitriol or copper as :** (வேதி.) **பசுங்கந்தகத் திராவகம் அல்லது இரும்புக் கந்தகை :** எஃகினை ஊற வைப்பதால் கிடைக்கும் துணைப்பொருள். இதனை அய சல்ஃபேட்டு என்றும் கூறுவர். தொற்றுத் தடைமருந்தாகப் பயன்படுகிறது. மை, ஆழ்ந்த நீலவண்ணப்பொடி, சிவப்பு ஆக்சைடு ஆகியவை தயாரிக்கவும் பயன்படுகின்றது.

**green wood: பசுமரம் :** ஒருவகை வெட்டுமரம். இதில் சாறு அகற்றப்பட்டு, உலர்த்தப்படுவதில்லை.

**grid :** (மின்.) (1) **மின்வாய் :** எலெக்ட்ரான்கள் அல்லது அயனிகள் செல்வதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட திறப்புகள் கொண்ட ஒரு மின்வாய்.

(2) **இணைப்பு வரைச்சட்டம் :** மின்னாக்கிகளின் இணைப்பு வரைச் சட்டம்.

(3) **சேமக்கல அடித்தளம் :** சேம மின் கலங்களில் தகடுகள் அமைக்கப்படுவதற்கான அடித்தளம்.

(4) **வார்ப்பிரும்புச் சட்டம் :** அச்சகத்தில் அச்சுத்தாள் அழுத்தும் தகட்டுப்பாளங்களிலிருந்து நீராவித் தகடுகளை புறத்தே பிடித்து வைத்துக் கொள்வதற்கான வார்ப்பிரும்புச் சட்டம்.

(5) **வானொலிக் குழாய் :** வானொலியில் உருகாது அழலொளிவிடும் மின்குமிழ் இழைக்கும் தகட்டிற்குமிடையேயுள்ள வானொலிக் குழாய்ப் பகுதி.

**grid condenser : கம்பிக் கொண்மி:** கம்பிவலை மின்சுற்று வழியின் ஒரு பகுதியாகவுள்ள கொண்மி.

**grid current :** (மின்.) **இணைப்பு மின்னோட்டம்:** ஓர் எலெக்ட்ரான் குழலின் இணைப்பு மின் சுற்று வழியில் பாயும் மின்னோட்டம்.

**grid dip meter :** (மின்.) **இணைப்பு மின் இறக்க அளவுமானி:** ஒத்திசைவு அலைவெண்களை அளவிடுவதற்கான ஒரு கருவி.

**grid leak : கம்பிக் கசிவு :** ஒரு மின்னணுக்குழாயின் கம்பிவலை மின் சுற்றுவழியில் பயன்படுத்தப் படும் மின்தடை.

**grid leak detector :** (மின்.) **இணைப்புமின்கசிவு காட்டும் பொறி:** ஒரு மூன்று மின்முனை காட்டும் பொறியாகவும், மின் மிகைப்பியா கவும் செயற்படும் வகையில் இணைக்கப்பட்டுள்ள ஒரு மூன்று மின்முனை மிகைப்பி இணைப்பு மின் சுற்றுவழியில் இந்தக் கண்டு பிடிப்பு நடைபெறுகிறது.

**grid modulation :** (மின்.) **இணைப்பு அலை மாற்றம் :** இது ஓர் அலை மாற்ற மின் சுற்றுவழி. இதில் அலைமாற்றச் சைகையா னது, இணைப்பினுள் அலை மாற்ற நிலையில் செலுத்தப்படு கிறது.

**grid resistance :** (மின்.) **வலை மின்தடை :** மிகப்பெரிய அளவி லான மின்னோட்ட இயக்கிகளுக் கான தொடக்க மின்தடை. இது வார்ப்பிரும்பிலிருந்து கம்பி வலை கள் வடிவில் தயாரிக்கப்படுகிறது.

**grid resistor : வலைமின் தடுப் பான் :** ஒரு வானொலிக் குழாயின் கம்பிவலை மின்சுற்றுவழியில் பயன்படுத்தப்படும் அதிக அளவுத் தடையுள்ள மின் தடுப்பான்.

**grid voltage :** (மின்.) **இணைப்பு மின்னழுத்தம் :** ஒரு வெற்றிடக் குழலின் இணைப்பில் பயன்படுத் தப்படும் சார்பு மின்னழுத்தம்.

**grill :** (க.க.) **வலைத்தட்டி :** திறந்த வாயில்களுக்கு அல்லது கதவில் அல்லது பலகணியிலுள்ள கண்ணாடிகளுக்குப் பாதுகாப் பாக உலோகத்தால் அல்ல மரத் தால் அமைக்கப்படும் வலைத் தட்டி அமைப்பு.

**grind : சாணையிடல் :** சுழலும் சாணைச் சக்கரத்தில் சாணை யிட்டுத் தீட்டுவதன் மூலம் ஒரு பொருளைக் கூர்மையாக்குதல்: வேண்டிய வடிவளவுக்கு அராவிக் குறைத்தல்; அல்லது அகற்றிவிடு தல்.

**grinder:** (பட்.) **அரைவை எந்திரம்:** அரைவைப் பணிக்குப் பயன்படும் கருவி அல்லது சாதனம்.

**grind finish :** (எந்.) **சாணை தீட்டுதல் :** சாணைச் சக்கரத்தில் அராவித்தீட்டி மெருகேற்றுதல். முன்னர் கருவிகளில் மெருகிடப் பட்ட பல வேலைகள் இன்று சாணை தீட்டுதல் மூலம் நடை பெறுகின்றன.

**grinding allowance : சாணைக் கழிவு :** வேலைப்பாடு செய்யப் படும் பொருளில் சாணை தீட்டுவ தால் ஏற்படும் கழிவுக்காக விட்டு வைக்கப்படும் அளவு. நேர்த்தி யான வேலைப்பாட்டில் .0076—.0177செ.மீ. போதுமானது. கன மான பொருள்களின் வேலைப் பாடுகளில் $^{1}/_{64}$, அல்லது $^{1}/_{32}$,, அளவு தேவைப்படும்.

**gridding compound :** (தானி.) **சாணை இணைப்பு:** சாணை தீட்டு வதன் மூலம் நுட்பமாக மெரு கூட்டி உறுப்புகளை முற்றிலுமா கப் பொருந்துமாறு இணைத்தல் இதனைக் கையினாலோ, எந்திரத் னாலோ செய்யலாம்.

**grinding machine** : *(உலோ.)* **சாணை எந்திரம்** : *ஓர் உராய்வுச் சக்கரத்தைச் சுழற்றி சாணை தீட்டுவதற்கான எந்திரம்.*

**grindstone** : **சாணைக்கல்** : *இது சாணை தீட்டுவதற்கான ஒரு கருவி. இது இயற்கையாகக் கிடைக்கும் மணற்பாறையினாலானது. சுழலும் இக்கல்லில் பொருள்களை உராய்ந்து சாணை தீட்டப்படுகிறது.*

**grip** : *(எந்.)* **பிடிப்பாணி** : *பொதுவாக, எந்திரத்தில் இறுகப்பிடிக்கும் பகுதியைக் குறிக்கும்.*

**grippers**: *(அச்சு.)* **பிடிப்பான்கள்**: *அச்சு எந்திரத்தில் அச்சிடும்போது காகிதத்தை உரியநிலையில் இறுகப் பற்றிப்பிடித்துக்கொள்வதற்குப் பயன் படும் உலோகத்தாலான சிறிய விரல்கள் போன்றஅமைப்பு.*

**gri-saille** : **புடைப்போவியம்**: *ஒரு வண்ணத்திறமாகச் சாம்பல்நிறச் சாயல்களில் அமைவுறும் புடைப்பியல் திற ஓவிய ஒப்பனை.*

**grit** : **பருமணல்**: *சாணைச் சக்கரங்கள் செய்வதற்குப் பயன்படும் பொடிக்கற்கள். இந்தப் பொடிக் கற்களின் வடிவளவினைப் பருமணல் எண்மூலம் குறிக்கின்றனர்.*

**groin** : *(க.க.)* **கட்டுமான இடைக் கோணம்** : *கட்டிடக்கலையில் இரு வளைவு மாடங்கள் சேரும் கட்டுமான இடைக்கோணம்.*

**groined vaulting** : *(க.க.)* **இடைக்கோணக் கவிகை மாடம்** : *கவிகை மோடுகள் ஒன்றையொன்று குறுக்கே வெட்டிச் செல்லும் வண்ணம் கட்டிடங்களுக்கும் நடைபாதைகளுக்கும் மோட்டுக் கவிகை அமைக்கும் முறை.*

**grommet**: **வட்டுவளையம்**: *பந்தல்களிலும், கொடிகளிலும் முக்கியமாகப் பயன்படுத்தப்படும் ஓர் உலோகக் கயிற்றுத் துளை.*

*மரையாணிகள், பெருந்தலையாணிகள் ஆகியவற்றைச்சுற்றி, நீர் புகாதவாறு இறுக்கமான தடுப்பானாக அல்லது வளையமாகப் பயன்படுத்தப்படும் மெழுகுவர்த்தித் திரி வளையம்.*

*கப்பல்களில் பயன்படுத்தப்படும் கயிற்று வட்டு அல்லது வளையம்.*

**groove** : *(க.க.)* **வரிப்பள்ளம்/சால்வரி** : *நீண்ட வரிப்பள்ளம்; தவாளிப்பு; வரித்தடம்,*

**grooving** : *(க.க.)* **வரிப்பள்ளமிடுதல்** : *வரிப்பள்ளமிடும் கருவி கொண்டு நீண்டபள்ளத் தடமிடுதல் அல்லது சால்வரி அகழ்தல்.*

**grooving machine** : **தவாளிப்புக் கருவி** : *செல்தடப்பள்ளம் அமைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு கருவி.*

**grooving stake** : **தவாளிப்பு முளை** : *பல்வேறு வடிவளவுகளில் வரிப்பள்ளங்கள் வெட்டப்பட்டுள்ள ஒரு சலாகை. கையால் வரிப்பள்ளமிடும் கருவியைப் பயன்படுத்தாமல், கொட்டாப்புளியினால் பூட்டு விளிம்புகளை மூடுவதற்கு இது பயன்படுகிறது. இதில் பட்டறைப் பிடிப்புக் குறட்டில் சலாகை இறுகப்பற்றிக் கொள்ளப்படுகிறது.*

**gross** : **குரோஸ்** : *பன்னிரண்டு உருப்படிகளடங்கிய தொகுதிகளின் பன்னிரண்டு. எண்ணிக்கையில் 144.*

**grotesque** : **விசித்திர பாணி** : *விசித்திரக் கற்பனைக் கதம்பமாக அமைந்த அலங்காரப் பாணி.*

**ground** : *(க.க.) (1)* **ஆதார மரத் துண்டு** : *செங்கல் அல்லது கற் சுவருடன் இணைக்கப்பட்டுள்ள ஆணி அடிப்பதற்குரிய மரத்துண்டு.*

*(2)* **மின்விசை நிலத்தொடர்பு**: *மின் சுற்று வழியை முற்றுவிப்பதற்காக மின்னாக்கி, மின்னியக்கி, மின் விளக்கு முதலியவற்றுக்கு நிலத் தொடர்பு உண்டுபண்ணுதல்.*

*(3)* **நிலத்தில் மின்கசிவு** : *மின் னோட்டம் தேவையான வேலைக்கு மாறாக, நிலத்தில் கசிந்துவிடுதல்.*

**ground circuit** : *(மின்.)* **நிலமின் சுற்றுவழி** : *இரண்டு அல்லது மூன்று கம்பி மின் சுற்று வழியில், நிலத்தை ஒரு கம்பியாகப் பயன் படுத்தும் ஒரு சுற்று வழி.*

**ground clamp** : *(மின்.)* **நிலப்பற் றுக் கட்டை**: *மின்தொடர்புகளைச் சிறந்தமுறையில் ஏற்படுத்துவதற் காக ஒரு குழாயுடன் ஒரு கம்பியை அல்லது பிற மின்கடத்தியைப் பிணைப்பதற்குப் பயன்படும் பற் றுக் கட்டை.*

**ground detector** : *(மின்.)* **நிலத் தொடர்பு நுண்கருவி** : *ஒரு மின் விசைப் பலகையில், ஒரு மின் சுற்று வழிக்கம்பியில் மண்தொடர்பு ஏற் படும்போது அதனைக்காட்டுவதற் காக அமைக்கப்பட்டுள்ள விளக்கு.*

**ground gear** : *(வானூ.)* **தரைப் பல்லிணை** : *ஒரு பறவைக் கப் பலைத் தரையிறங்கச் செய்வதற் கும், அதனைத் தரையில் இயக்கு வதற்கும் தேவைப்படும் பல்லிணை அல்லது சாதனம்.*

**grounding** : *(மின்.)* **மின்விசை நிலத்தொடர்பு** : *மூன்று மின்கம்பி கள் கொண்ட இணைப்பில் நடு நிலைக்கம்பியில் உள்ளவாறு ஒரு மின் சுற்றுவழிக்கம்பியை நிலத் துடன் பிணைத்தல்; அல்லது மின் கம்பிக் காப்புக் குழாய்களையும் நீர்க் குழாய்களையும் மின்னியல் முறையில் ஒன்றாக இணைத்தல்.*

**grounding conductor** : *(மின்.)* **நிலமின் கடத்தி** : *நிலத்தொடர்பு மின் முனையை அல்லது மின் முனைகளை கம்பியிணைப்புடன் பிணைப்பதற்குப் பயன்படும் மின் கடத்தி.*

**grounding out** : **பின்னணியை அகற்றுதல்** : *செதுக்கு வேலைப் பாட்டில் வடிவமைப்பின் பின்னு ணியை அகற்றுதல்.*

**ground joint** : *(கணி.)* **தேய்ப்பு மூட்டு** : *உறுப்புகளை உராய் பொருள் பசையுடன் சேர்த்துத் தேய்த்து அல்லது உராய் பொருளை எண்ணெயுடனோ நீருடனோ சேர்த்துப் பொருத்து தல். (உ.ம்) உந்துவண்டிகளின் ஓரதர்களைத் தேய்த்தல்.*

**ground joist** : *(க.க.)* **நிலத் துலாக்கட்டை**: *நிலத்திலிருந்து மேல் நோக்கி எழுப்பப்படும் துலாக் கட்டை.*

**ground loop** : *(வானூ.)* **தரைக் கரண வளைவு** : *விமானம் நிலத் தில் இயங்கும்போது அல்லது தரையிறங்கும் போதோ உயரே ஏறும் போதோ தரையில் ஓடும் போதோ கட்டுப்படுத்த முடியா மல் திடீரெனக் திரும்புதல்.*

**ground re-turn** : *(தானி, மின்.)* **நிலமீட்சி** : *உந்து வண்டியில் மின் னியல் சாதனங்கள் அனைத்தும் முழுமையான மின் சுற்றுவழி அமையும் வகையில் அந்த வண்டி யின் அடிச்சட்டத்துடன் மின்னி யல் சாதனங்களை இணைத்தல்.*

**ground speed** : *(வானூ.)* **தரை யோட்ட வேகம்** : *ஒரு விமானம் தரைக்கு மேலே ஓடும் வேகம். எடுத்துக்காட்டாக, மணிக்கு 32 கி.மீ. வேகத்தில் வீசும் காற்றுக்கு எதிராக மணிக்கு 322கி.மீ. வேகத்தில் ஓடும் விமானத்தின் தரையோட்ட வேகம் மணிக்கு 290கி.மீ. ஆகும்.*

**ground speed**: *(வானூ.)* **தரை வேகம்**: விமானம் தரையையொட்டிக் கிடைமட்டமாகச் செல்லும் வேகவீதம்.

**ground speed meter :** *(வானூ.)* **தரை வேகமானி**: விமானம் தரையையொட்டிக் கிடைமட்டமாகச் செல்லும் வேகவீதத்தை அளவிடும் கருவி.

**ground strap**: *(தானி.)* **இணைப்புக் பட்டை** : காரின் சட்டத்துடன் யின்கலத்தை அல்லது ரப்பர் மீது எஞ்சின் ஏற்றப்பட்டிருக்கும் போது எஞ்சினைச் சட்டத்துடன் இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் செப்புக்கம்பி வடம் அல்லது பின்னல் செப்புப்பட்டை.

**ground water :** *(கம்.)* **தரையடி நீர்**: தரையடியில் தேங்கி நிற்கும் அல்லது நீரோட்டமாக ஓடும் நீர்.

**ground waves** : *(விண்.)* **நில அலை** : ஒரு வெடிப்பு காரணமாக நிலத்தில் உண்டாகும் அலை.

**ground wire**: *(மின்.)* **தரையடிக் கம்பி** : தரையடியில் இரு மின்னியல் சாதனங்களை இணைக்கும் கம்பி.

**ground wood**: **தோப்பு மரம்**: இது எந்திர வெட்டு மரம் என்றும் அழைக்கப்பெறும். மரத்தடிகளை அராவித் தேய்த்து இந்த மரம் பெறப்படுகிறது.

**group of dots** : *(கணிப்.)* **புள்ளிக் குறிகளின் குழுமம்.**

**grout** : **அரைசாந்து**: கட்டிட இடைவெளிகளை நிரப்புவதற்கான நீளமான அரைசாந்து.

**growler :** *(மின்.)* **உறுமின் மாற்றி**: மின்னகங்களில் குறுக்கீடுகள், திறப்புகள், மண்தொடர்புகள் ஆகியவற்றைக் கண்டறியப் பயன்படும் சிறிய மின்மாற்றி.

**growth**: *(மின்.)* **வளர்ச்சி நிலை**: மின்னோட்டம், மின்னழுத்தம் ஆகியவற்றின் அளவுகளில் படிப்படியாக ஏற்படும் அதிகரிப்பைக் குறிக்கும் சொல்.

**guard : இடர்காப்பமைவு** : *(எந்.)* எந்திரத்தை இயக்குபவருக்கு உடற்காயம் எதுவும் ஏற்படாமல் காப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள காப்புச் சாதனம்.

**guard band**: *(மின்.)* **காப்புப் பட்டை**: அலைவரிசைகளிடையே இடையீடு ஏற்படாமல் தடுப்பதற்காக ஒவ்வொரு தொலைக்காட்சி அலை வரிசையின் மேல் முனையிலுள்ள ஒரு குறுகிய அலைவெண் பட்டை.

**gudgeon pin** : *(தானி.)* **உந்து தண்டு முனை** : இது இருசுக்கடையாணி அல்லது உந்து தண்டு பிணைப்பாணி போன்றதாகும்.

**gudgeons** : *(அச்சு.)* **சுழல் சக்கரங்கள்** : அச்சு எந்திரங்களில் உருளையின் முனைகளுடன் இணைக்கப்பட்டுள்ள உலோகச் சக்கரங்கள். இவை சுழல்நெறிப் பட்டைகளில் உருண்டு உருளைகளைச் சுழலச் செய்கின்றன.

**guide bearings** : *(எந்.)* **சால் வரித் தாங்கிகள்** : உறுப்புகள் நழுவிச் செல்லக்கூடிய சால்வரி அல்லது வரிப்பள்ளம் உடைய தாங்கிகள்.

**guided aircraft missile.** *(விண்.)* **ஏவு விமானக் கணை**: வானத்தில் பறக்கும்போது இலக்குகளைத் தாக்குவதற்காக விமானத்தில் கொண்டு செல்லப்படும் ஒரு வகைத் தானியங்கி ஏவுகணை. இதனை வானில் செலுத்திய பிறகு இலக்கை நோக்கி ஏவலாம்.

**guided missile** : *(விண்.)* **ஏவு கணை**: வானொலி போன்ற கருவி

களைக் கொண்டு தொலைவிலிருந்தே வேண்டிய நெறியில் செலுத்தப்படத் தக்க படைக்கலம்.

**guide pins** : (குழை.) **ஆற்றுப் படையாணிகள்**: வார்ப்படம் மூடிக்கொள்கிறபோது அழுத்தச் செருகியும், பள்ளமும் முறையாக ஒருங்கிணைவதற்கு உதவும் சாதனம்.

**guide rail** : **ஆற்றுப்படைத் தண்டவாளம்** : இருப்பூர்தியின் சக்கர விளிம்புகளை ஆற்றுப்படுத்திச் செல்வதற்காக இருப்புப்பாதையின் பிரதான தண்டவாளத்தின் உட்புறம் அமைக்கப்பட்டுள்ள ஒரு மிகைத் தண்டவாளம். இந்தத் தண்டவாளம் வளைவிலே வண்டிகள் தண்டவாளங்களிலிருந்து விலகிச் செல்லாமல் தடுக்கின்றன.

**guides** : (அச்சு.) **இயக்கு தண்டுகள்**: ஒவ்வொரு தாளிலும் ஒரே இடத்தில் அச்சிடுதல் நடைபெறுமாறு செய்வதற்காகத் தாளில் வைத்து வழிப்படுத்துவதற்கு உதவும் சாதனம். இந்தச் சாதனத்தை தேவையான நிலையில் சீரமைத்துக் கொள்ளலாம்.

**guilloche** : (க.க.) **பின்னற்சடை ஒப்பனை**: கட்டிடங்களில் பின்னற்சடை போன்று செய்யப்படும் சிற்பக்கலை ஒப்பனை.

**guillotine cut** : **தலைத் தறிப்பு வெட்டு** : தலையை வெட்டுவதற்காகப் பயன்பட்ட வெட்டுப்பொறியின் கத்தி அலகு போன்ற வெட்டுவதற்கான எந்திரக் கருவி.

**gum bloom** : (வண்.) **பிசின் அரக்கு** : இயல்பான பளபளப்புள்ள, ஒளி ஊடுருவக்கூடிய பிசின் குழம்பு.

**gumming test for oils** : **பிசின் சோதனை**: எண்ணெய்கள் பிசினாக மாறுந்திறனைச் சோதிக்கும் சோதனை. வாயு எஞ்சின் நீள் உருளைகளில் எண்ணெய்கள் எந்த அளவுக்கு கார்பனாக மாறும் என்பதை அளவிடுவதற்கு இச்சோதனை பயன்படுகிறது. எண்ணெயை அமிலத்துடன் சேர்ப்பதால் ஏற்படும் மாறுதல்களைக் கொண்டு இது அறியப்படுகிறது.

**gums**: (வேதி;குழை.) **கோந்துகள்**: தாவரங்களிலிருந்து எடுக்கப்படும் பசை வகைகள், பிசின்கள் போலன்றி, இவை தண்ணீரில் கரையக்கூடியவை. வண்ணத் தொழிலில் குங்கிலியம் போன்ற இயற்கைப் பிசின்களை இப்பெயர் குறிக்கிறது.

**gum wood**: **குங்கிலிய மரம்**: நடுத்தர அளவு கனமான, கருநிறமான, வாதுமை மரத்தில் உள்ளது போன்று மணிக்கரணைகள் உள்ள மரம், அறைகலன்கள் செய்யவும், கட்டிடங்களில் உட்புற அலங்கார வேலைகளுக்கும் முக்கியமாகப் பயன்படுகிறது.

**gun cotton**: (வேதி.) **வெடிப் பஞ்சு** : வெடிப்பாற்றலுள்ள நைட்ரிக் அமிலம், கந்தக அமிலம் ஆகியவற்றில் தோய்ந்த மிகுந்த வெடிப்புத் திறனுடைய பஞ்சு.

**gun lathe**: (எந்.) **பீரங்கிக் கடைசல் எந்திரம்**: பீரங்கிகளில் கடைசல் வேலை செய்வதற்கும், அவற்றில் துளையிடுவதற்கும் பயன்படும் பெரிய அளவிலான கடைசல் எந்திரம்.


**gun metal**: **கருங்கலம்**: துப்பாக்கி செய்யப் பயன்படும் செம்பு, துத்தநாகம், வெள்ளீயம் கலந்த உலோகக் கலவை. ஒரு காலத்தில் பீரங்கிகள் செய்ய மிகுதியும் பயன்படுத்தப்பட்டது.

**gunning** : (வானூ.) **முழு வேக இயக்கம்** : விமான எஞ்சினை முழு வேகத்தில் இயங்கும்படி செய்தல்.

**gun powder** : *(வேதி.)* **வெடி மருந்து** : *துப்பாக்கி மருந்தாகப் பயன்படும் வெடி மருந்துக்கலவை. வெடியுப்பு, மரக்கரி, கந்தகம் ஆகியவை கலந்து செய்யப்படு கிறது. இது கருநிறமாகவோ சிவப்பு நிறமாகவோ இருக்கும்.*

**Gunters chain** : **நில அளவைச் சங்கிலி** : *நில அளவையாளர்கள் பயன்படுத்தும்20மீ.நீளமுள்ள நில அளவைச் சங்கிலி இதில், ஒவ் வொன்றும்20செமீநீளமுள்ள 100 கண்ணிகள் இருக்கும்.*

**gusset** : *(பொறி.)* **வலிவுக் கொண்டி** : *வேலைப்பாடு செய்யப் படும் பொருளின் ஒரு முனைக்கு அல்லது கோணப் பகுதி வலுவூட்டுவதற்காகப் பயன் படுத்தப்படும் இரும்பு வளையக் கொண்டி.*



வலிவுக் கொண்டி

**Gutenberg, johann**; *(அச்சு.)***கூட் டன்பர்க், ஜோகான் (1398-1468)**: *நகர்த்தக்கூடிய அச்செழுத்து முறையைக் கண்டுபிடித்த ஜெர் மானிய அச்சுக் கலைஞர்.*

**gutta-percha**: *(மின்.)* **மரப்பால் பிசின்**: *பல்வேறு மரங்களிலிருந்து எடுக்கப்படும் மரப்பாலினால்செய் யப்படும் கட்டிறுக்கமான சாம்பல் நிறப் பிசின். இது பலவகைகளில் பயன்படுகிறது. முக்கியமாக மின் காப்பிடுவதற்குப் பயனாகின்றது.*

**guttae** : *(க.க.)* **துளி ஒப்பனை** : *கிரேக்கச் சிற்ப வகையில் துளி போன்ற அணி ஒப்பனைகள்.*

**gutter**: *(க.க,)* *(1)* **வடிநீர்க்கால்**: *சாக்கடை நீர் வழிந்தோடுவதற் காக தெருவோரமாக அமைக்கப் பட்டுள்ள கால்வாய்.*

*(2)* **வாரி நீரோடை** : *தெருவில் நடைபாதையினையொட்டி செங்கல் அல்லது கல்பாவிய வடிகால்.*

*(3)* **வரிப்பள்ளப் பட்டிகை**: *அச்சுத் துறையில் வரிச்சட்டத்தில் பக்கங் களை இடைப்பிரிக்கும் வெட்டு வரிப்பள்ளமிட்ட பட்டிகை,*

**guy**: *(பொறி.)* **சமநிலைப் பிணிப் பான்**: *பாரந்தூக்கி, கூடாரம் முதலியவற்றைச் சமநிலைப்பட இழுத்து நிறுத்தும் கயிறு அல்லது சங்கிலி முதலியவற்றாலான பிணைப்பு.*

**guy rope** : *(பொறி.)* **சமநிலைப் பிணிப்பு வட்டம்** : *துத்தநாகத்தால் மேற்பூச்சு பூசப்பட்ட வடம். இது ஒவ்வொன்றும் 7 கம்பிகள் கொண்ட 6 சரங்களையும், சணல் நார் உட்புரியினையும் கொண் டது.*

**gypsum** : *(க.க.)* **கனிக்கல்**: *கால் சியத்தின் ஹைட்ஸ் சல்ஃபேட்டு* ($CaSO_4 2H_2O$). *தூய்மையாக இருக்கும்போது நிறமற்றது, மெல்ல மெல்ல சூடாக்கப்படும் போது இதிலுள்ள நீரின் ஒரு பகுதி நீக்கப்பட்டு, எஞ்சிய பொருள் ''பாரிஸ் சாந்து'' என அழைக்கப் படுகிறது. இதனை மருத்துவர்கள் கட்டுப்போடுவதற்கான காரைப் பொருளாகப் பயன்படுத்துகின்ற னர்,*

**gyrate**: **திருகு சுருள்** : *சுழல் அச்சினை திருகு சுருளாகச் சுற்றிச் செல்லச் செய்தல்.*

**gyro horizon** : *(வானூ.)* **திருகு சுருள் விளிம்பு** : *இது திருகு சுழல் கருவி. இது இயல்பான அடிவான விளிம்பினை ஒத்து விமானத்தின் பக்கவாட்டு உயரத்தையும் நீள வாட்டு உயரத்தையும் குறித்துக் காட்டுகிறது.*

**gyro-pilot** : *(வானூ.)* **திருகு சுழல் செலுத்தி** : *விமானத்தைத் தானாகவே திருகு சுழலாகச் சுற் றிச் செல்லச் செய்யக்கூடிய திருகு*

சுருளாகச் சுழலும் எந்திர சாதனம். குறுக்கு வழியில் வழக்க மாகச் செல்லும் விமானத்தின் செலுத்திகள் சோர்வடையாமல் இது தடுக்கிறது.


**gyro-plane :** *(வானூ.)* **நிமிர் விமானம் :** தலைக்கு மேலே விரைவாகச் சுழலும் காற்றாடிப் பொறிகளின் இயக்கத்தால் செங்குத்தாக மேலெழுந்து செல்லும் விமானம்.

**gyro scope :** *(இயற்.)* **திருகு சுழலாழி :** சுழல் வேகமானியால் சமநிலைப்படுத்தப்பட்டு எந்தத் திசையிலும் திருப்பு வளையங்களின் உட்புறம் அமைந்த சமனுருள். இது கப்பல்களை நிலைப்படுத்துவதற்கும், விமானங்களைச் செலுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

**gyro-scopic turn indicator :** *(வானூ.)* **திருகு சுழல்மானி:** திருகு சுழல் இயக்கத்தைப் பொறுத்து இயங்கித் திசைகாட்டும் அளவு கருவி.

# H


**H beam:** *(க.க.)* **H வடிவ உத்தரம்:** ஆங்கில எழுத்து 'H' போன்ற வடிவிலுள்ள எஃகு உத்தரம். ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்கு விளிம்பு அகலங்களை பலவிதமாக இருக்கும் வகையில் அமைக்கப்படும் கட்டுமான வடிவம். இதில் விளிம்புகளின் உட்புறம் பெரும்பாலும் வெளிப்புறத்திற்கு இணையாக இருக்கும். இந்த வகை வடிவமைப்புகள், முக்கியமாகத் தூண்களின் வரிசை அமைப்பதற்குப் பயன் படுத்தப்படுகிறது.



உத்தரம்

**hackling textile:** *(நூற்)* **சிக்கெடுத்தல்:** நீண்ட சணல் இழைகளின் சிக்கலை எஃகுச் சீப்புக்கொண்டு சீவிச் சிக்கறுத்துத் துப்புரவு செய்தல்.

**hack saw :** **உலோக ரம்பம் :**



உலோக ரம்பம்

உலோகப் பொருட்களை வெட்டுவதற்கான ரம்பம். இதனை மின் விசையினாலோ, கையினாலோ இயக்கலாம்.

**haemoglobin :** *(உடலி.)* **செங்குருதியணு :** இரத்தத்திலுள்ள செந்நிறப் பொருள். இதில் 'குளோபின்' என்ற புரதமும், 'ஹேம்' என்ற இரத்தச் சிவப்பு வண்ணப் பொருளும் அடங்கியிருக்கும்.

**haemophilia :** *(நோயி.)* **குருதிப் பெருக்குநோய்:** சிறுகாயத்திலிருந்து இரத்தம் உறையாது பெருகிடும் ஒரு பரம்பரை நோய்.

**haermorrhage** *(உடலி.)* **இரத்தப் போக்கு :** குருதிக் குழாய்களிலிருந்து இரத்தம் வெளிப்படுதல்.

**haft:** **கைப்பிடி:** குத்துவாள், கத்தி, தமரூசி போன்றவற்றில் உள்ளது போன்ற கைப்பிடி.

**hair:** *(குழை.)* **மயிர்க்குச்சு :** கால் நடைகளின்முடியிலிருந்து செய்யப்படும் மயிர்க்குச்சு, இது முடிச் சிக்கல் எடுக்க உதவுகிறது. இப்போது முடிக்குப் பதிலாக கல்நார், மணிலாச் சணல் நார் இழைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

**hair hook :** *(குழை.)* **மயிர்க் கொக்கி:** இரண்டு அல்லது மூன்று கவர் முட்கள் கொண்ட ஒருகருவி. இந்தக் கவர் முட்கள் ஒரு நீண்ட கைப்பிடியில் செங்குத்துக் கோணங்களில் பொருத்தப்பட்டிருக்கும். சுண்ணாம்புச் சாந்துடன் முடியினை இணைப்பதற்குப் பயன்படுகிறது.

**hair line :** *(அச்சு.)* **நுண்வரிக் கோடு :** எழுத்து, அச்சு முதலியவற்றில் மிக நுட்பமான வரித் கோடு.

**hair spring :** *(எந்.)* **கடிகாரச் சுருள்வில் :** கடிகாரத்தில் துடிப்பியக்கச் சக்கரத்தை முதலில் ஒரு பக்கமும், பிறகு மறுபக்கமும் ஊசலாடச் செய்யும் ஒரு நுண்ணிய சுருள் வில்.

**half bearings :** *(எந்.)* **அரைத் தாங்கிகள் :** பாரம் எப்போதும்

ஒரே திசையில் இருக்கக் கூடிய ரயில்வேக் கார்களில் பயன்படுத் தப்படுவது போன்ற தாங்கிகள். இது இருசுக் கட்டைகளைத் தாங் கிக்கு எதிராகத் தாங்கிப்பிடித்துக் கொள்ளும் அளவுக்குப் போது மான கனமுடையதாக இருக்கும்.

**half binding : அரைக்கட்டு மானம் :** புத்தக மூலையும், முது குப் புறமும் தோலால் அமைந்த கட்டுமானம்.

**half - diamond indention :** *(அச்சு.)* **அரை வைர வடிவ ஓரம் :** அச்சிடும்போது பக்கங்களில் அரை வைர வடிவத்தில் ஓரப்பகுதியில் இடம்விட்டு அமைத்தல்.

**holf-lap joint :** *(மர.வே.)* **சம நிலைப்பிணைப்பு :** இணைக்கப்பட வேண்டிய இரு துண்டுகளின் கனத்தைப் பாதியளவுக்குக் குறைத்துப் பொருத்துதல்,

**half-life :** *(மின்ன.)* **பாதிக்கால அளவு :** அணு ஆற்றல் சக்திப் பொருள் இயல்பாக வானிலிருந்து விழும் அளவில் அரைப்பகுதி விழும் கால அளவு.

**half moon stake :** *(உலோ.)* **அரை வட்ட முளை :** மேற்புறம் சந் திரனின் பாதிப்பிறை போன்று வளைந்து ஒரு புறம் சாய்ந்துள்ள ஒரு முளை. வட்டவடிவ விளிம்பு இயக்கங்களில் இது முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது.

**half nut :** *(பட்.)* **அரைச் சுரை யாணி :** நீளவாக்கில் பிளக்கப்பட் டுள்ள ஒரு சுரையாணி. சிலசமயம் ஒருபாதி ஒரு திருகின்மீது இயங் கும். சிலசமயம், ஒரு கடைசல் ஊர்தியிலுள்ள அரைச்சுரையாணி போன்று ஒரு திருகாணியைச் சுற்றி இயங்கும்.

**half-pack bench saw:** *(மர.வே.)* **இரட்டை நைவாள் :** வெட்டப்பட வேண்டிய பொருள் முழுவதையும் வெட்டுவதற்கு வேண்டிய விறைப் பான வெட்டு முனைகளையும், திறனையும் கொண்ட இரம்பம். இது பெரும்பாலும் 35-50செ.மீ. நீளத்தில் செய்யப்படுகிறது. விறைப்பான தண்டுப்பகுதி அல கின் நீளத்தில் ஒரு பகுதி வரையில் மட்டுமே நீண்டிருக்கும். இதன், மூலம் கைவாள், நைவாள் ஆகிய இரண்டின் செயல் முறையும் இதில் இணைந்திருக்கும்.

**half pattern : அரைத்தோரணி :** ஒரு தோரணியின் ஒரு பாதி. இது வார்ப்படத்தின் வசதிக்காக மையத்திலிருந்து பிரிக்கப்பட்டிருக் கும்.

**half-round file: அரைவட்ட அரம்:** ஒரு புறம் தட்டையாகவும், மறு புறம் வளைவாகவும் உள்ள ஓர் அரம். இதிலுள்ள புறங்குவியின் அளவு ஒருபோது அரைவட்டத் திற்குச் சமமாக இருக்காது.

**half section : அரைக் குறுக்கு வெட்டுப் பகுதி :** எந்திரவியல் வரைபடத்தில், மையக்கோட்டில் முடிவுறும் குறுக்குவெட்டுத் தோற் றம். இதனால், ஒரு பகுதி புறத் தோற்றத்தையும், மறுபகுதி உட் புறத்தோற்றத்தையும் காணலாம்.

**half-step-increments:** *(கணிப்.)* **அரைப் படிமுறை ஏறுமுகப்படிகள் :**

**half story :** *(க.க.)* **அரைக்கூரை :** கூரைக்கு நேர் கீழே வேயப்பட் டுள்ள கூரைக்கட்டமைவின் ஒரு பகுதி. இது முடிவுற்ற முகட்டினை யும், தளத்தினையும், பக்கச் சுவ ரையும் கொண்டிருக்கும்.

**half title :** *(அச்சு.)* **குறுந் தலைப்பு :** புத்தகத் தலைப்பும் பக் கத்திற்கு அல்லது புத்தகப் பிரி வுக்கு முன்னுள்ள சிறு தலைப்பு.

**half tone :** *(அச்சு.)* **நுண்பதிவுப் படம் :** ஒளிப்படத்தில் ஒளி நிழல்

மாறுபாட்டளவுப் புள்ளிகளைக் காட்டுகின்ற படம். இது ஒரு தகட்டில் ஓர் அங்குலப்பகுதியில் 55—200 வரிகள் வரை நேர்த்தியாக வரியிடப்பட்ட கண்ணாடித்திரையில் ஒளிப்படம் செதுக்குருவாக்கம் செய்யப்பட்டிருக்கும்.

**halftone paper** : *(அச்சு.)* **நுண் பதிவுப் படத்தாள்** : நுண்பதிவுப் படங்கள் எடுப்பதற்குப் பயன் படுத்தப்படும் பளபளப்பான அச்சுத்தாள்.

**half-wave rectifier** : *(மின்.)* **பாதி அலை மின்னோட்ட மாற்று கருவி** : *(வேதி.)* ஒரு மாற்று மின்னோட்டச் சுழற்சியின் ஒரு பகுதி மட்டும் செல்வதற்கு அனுமதித்து எதிர் மின்னோட்டத்தை அனுமதிக்காதிருக்கிற ஒருமின்னோட்ட மாற்று கருவி.

**halogen** : *(வேதி.)* **உப்பீனி** : ஃபுளோரின், குளோரின், புரோமின், அயோடின் ஆகியவை அடங்கிய தனிமங்களின் குடும்பத்தைக் குறிக்கும். இவை ''உப்பு உண்டாக்குபவை'' எனப்படும்.

**halved pattern** : **பாதியாக்கிய தோரணி** : இரு சம பகுதிகளாக உருவாக்கப்பட்ட வார்ப்படத் தோரணி. இவ்வாறு செய்வதால் வார்ப்படம் செய்யும்போது எளிதில் வெளியில் எடுக்க முடியும்.

**halving** : **செம்பாக இணைப்பு** : ஒரு பகுதியை ஓர் உறுப்பின் முகப்பிலிருந்தும், இன்னொரு பகுதியை அதனுடன் இணைக்கபடவிருக்கும் உறுப்பின் பின்பகுப்பிலிருந்தும் வெட்டியெடுத்துஒன்றாகஇணைத்தல். இவ்வாறு செய்வதன்மூலம் இணைக்கப்படும் இரு உறுப்புகளின் புறப்பகுதிகள் தடைபடா நேர்தளப்பரப்புடன் இருக்கும்.

**ham** : *(மின்.)* **பயில்முறை வானொலி (ஹேம்)** : பயில்முறை அல்லது பரிசோதனை வானொலியைக் குறிக்கும் சொல்.

**hammer** : **சம்மட்டி / சுத்தி** : உலோக வேலையில் ஆணி அறைதல் போன்றவற்றில் அடித்து இறுக்குவதற்குப் பயன்படும் சாதனம் அல்லது கருவி. இது பல வகைப்படும். ஒவ்வொன்றும் அதனதன் பயனுக்கேற்பப் பெயருடையவை.

**hammer movement** : *(கணிப்.)* **சுத்தியல் இயக்கம்.**

**hammer toe** : *(உடலி.)* **கால்விரல் கோணல்** : கால் விரல்களில் ஒன்று நிலையாக மேல் நோக்கி வளைந்து மடிந்திருக்கும் அங்கக் கோணல்



கால்விரல் கோணல

**hams language** : *(மின்.)* **பயில்முறை வானொலி குறியீட்டு மொழி** : பயில்முறை வானொலி இயக்குபவர்கள் பயன்படுத்தும் ஒரு வகைக் குறியீட்டு மொழி.

**handbill** : *(அச்சு.)* **துண்டறிக்கை** : கையினால் வழங்குவதற்கான சிறிய அச்சிட்ட விளம்பர வெளியீடு.

**hand blocking** : **கைப்பட அச்சு** : மெத்தை-திண்டு வேலையில் ஒரு வடிவமைப்பின் அச்சுருவை கையினால் எடுக்கும் முறை,

**handbook** : **கையேடு** : கையில் எடுத்துச் செல்லக்கூடிய வழிகாட்டு நூல். பொறியியல் முதலிய ஒவ்வொரு தொழிலுக்கும் தேவையான தகவல்கள், சூத்திரங்கள் அடங்கிய தனித்தனிக் கையேடுகள் உண்டு.

**hand brake** : *(தானி.)* **கைத் தடை** : உந்து வண்டிகளில் கையினால் இயக்கப்படும் தடை. இது

முக்கியமாக நிறுத்துத் தடையாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தடையை போட்டுவிட்டால், மீண் டும் கையினால் அத்தடை நீக்கப் படும்வரை அது அப்படியே இருந்து வரும்.

**hand dolly:** (உலோ. வே.) **கைத் துடுப்பு :** செவ்வக வடிவ எஃகுப் பாளம். இதன் அடிப்புறத்தில் ஒரு கைப்பிடி பொருத்தப்பட்டிருக்கும். பெரும்பாலும் 13 x15 x3செ.மீ.அள வில் அமைந்திருக்கும். தீத்தாங்கி களிலும்,தொட்டிகளிலும் பொருத் துவதற்கேற்ப இதன் செயல் முகப்பு வளைவாக இருக்கும்.

**hand drill :** (பட்.) **கைத் துரப் பணம் :** கையினால் இயக்கப்படும் ஒரு துரப்பணம்.



கைத் துரபபணம்

**handed:** (எந்.) **கையு டைய:** ஒரே மாதிரி யான இரு உறுப்பு களை, ஒன்றினை இடப் புறமாகவும், மற்றொன்றினை வலப் புறமாகவும் பயன்படுத்தும்போது அல்லது வேறேதேனும் உறுப்புடன் அவ் வாறு இணைக்கப்பட்டிருக்கும் போது அது வலக்கையுடையதென அல்லது இடக்கையுடையதெனக் கூறப்படும். கருவிகள், அவை இடப்புறமாக அல்லது வலப்புற மாகப் பயன்படுத்தப்படுவதைப் பொறுத்து வடிவமைக்கப்படுகின் றன.

**hand feed : கையால் ஊட்டுதல் :** எந்திரங்களில் மூலப்பொருள் களைக் கையால் செலுத்துதல்.

**hand file ;** (பட்.) **கை அரம் :** இந்த அரத்தில் இணையான இரு பக்கங்கள் இருக்கும். ஆனால் கனம் கூம்பு வடிவில் குறைந்திருக் கும். தட்டையான பரப்புகளில் வேலைப்பாடு செய்வதற்கு இது பயன்படுகிறது.

**hand hook or hook wrench :** (எந்.) **கைக்கொக்கி அல்லது கொக்கித் திருக்குக்குறடு :** ஒரு கொக்கியுள்ள நீண்ட சலாகை, இருசுகள் போன்ற வளைந்த உறுப்புகளை நேராக நிமிர்த்து வதற்குப் பயன்படுகிறது.

**handiwork : கைவினை :** கையி னால் நுட்பமாகச் செய்யப்படும் வேலைப்பாடு.

**handmade finish : கைமெருகு :** சிலவகைக் காகிதங்களில் கையி னால் செய்யப்பட்ட மெருகின் தோற்றத்தை உண்டாக்குதல், ஆனால் உண்மையில் இத்தோற் றம் கையினால் உண்டாக்கப்படுவ தில்லை.

**hand miller :** (எந்.) **கையியக்க வெட்டுப்பொறி :** கையினால் இயக்கி உலோகங்களில் வேலைப் பாடுகள் செய்வதற்கான சிறிய பொறியமைவு.

**handrail:** (க.க.) **கைபிடிக் கிராதி:** கையினால் பிடித்துக்கொள்வதற்கு வசதியாகப் படிக்கட்டுகளில் அல் லது ஒரு மாடத்தின் விளிம்பில் அமைக்கப்படும் கைபிடி.

**handrail wreath:** (க.க.) **கைபிடி வளையம் :** படிக்கட்டுக் கைபிடிக் கிராதியின் வளைவான பகுதி.

**hand rule :** (மின்.) **கைவிதி :** மின்னோட்டத்தைக் கொண்டு செல்லும் ஒரு மின் கடத்தியினை, மின்னோட்டம் பாயும் திசையை நோக்கி ஆள்காட்டி விரலை நீட்டி வலதுகையால் பிடிக்குங்கால், மின் விசையின் விளைவுறு வரிகளின் திசையினை விரல்கள் குறிக்கும்.

**handsaw :** (பட்.) **கை ரம்பம் :** மரம் வெட்டும் தொழிலாளர்கள் பயன்படுத்தும் ரம்பம். இது சாதாரணமாக ஒரு கைபிடி

யுடையதாகவும், நீளவாட்டில்



கைரம்பம்

பிளப்பு அல்லது குறுக்கு வெட்டு உடையதாகவும் இருக்கும்.

**hand screw** : **கைத்திருகாணி** : இரு இணையான அலகுகளும் இரு திருகாணிகளும் உடைய, மரத் தொழிலாளர்கள் பயன்படுத்தும் பற்றிரும்பு. இரு திருகாணிகளும் ஒவ்வொரு அலகின் வழியாகவும் இயங்குவதன்மூலம் பற்றும் பிடிப் பும் ஏற்படுகிறது.

**hand tools** : *(பட்.)* **கைக் கருவி கள்** : கையினால் செலுத்தப்படும் அல்லது இயக்கப்படும் கருவிகள்.

**hand turning** : *(பட்.)* **கைக்கடை சல்**: கையால் இயக்கப்படும் கருவி கள் வாயிலாகக் கடைசல் வேலைப் பாடுகள் செய்தல்.

**hand vise** : *(பட்.)* **கைப்பற்றுக் குறடு** : இலேசான வேலைப்பாடு கள் செய்யும்போது கையால் பற் றிக் கொள்வதற்குப் பயன்படுத்தப் படும் சிறிய பட்டறைப் பற்றுக் குறடு.

**hand wheel**: *(எந்.)* **கைச்சக்கரம்**: கையினால் இயக்கப்படும் ஒரு சக்கரம். இது பெரும்பாலும் சீர மைவு செய்வதற்காகப் பயன்படுத் தப்படுகிறது.


**hangar** : **விமானக் கூடாரம்**: விமா னத்தை நிறுத்திவைப்பதற்கான கட்டிடம் அல்லது கொட்டகை.

**hanger** : *(க.க.)* **ஆதாரப் பட்டை**: (1) ஓர் உத்தரத்துடன் அல்லது காலத்துடன் இணைக்கப்பட்டு இன்னொரு உத்தரத்திற்கு அல் லது காலத்திற்கு முட்டு ஆதார மாகப் பயன்படக்கூடிய இரும்பு அல்லது எஃகுப்பட்டை.

(2) எந்திரங்களில் சுழல் தண் டுக்கு ஆதாரமாகத் தளத்திலி ருந்தோ பக்கச் சுவரிலிருந்தோ, மேலிருந்தோ அமைக்கப்பட்டுள்ள ஒரு சட்டம்.

**hanger bearing** : *(எந்.)* **ஆதாரப் பட்டைத் தாங்கி** : ஓர் ஆதாரப் பட்டையினால் தாங்கப்படும் சுழல் தண்டுத் தாங்கி.

**hanger bolt** ; *(எந்.)* **தாங்குமரை**



தாங்கு மரை

**யாணி** : ஒரு முனையில் நீண்ட திரு காணியும் மற்றொரு முனையில் எந்திர மரையாணி இழையும் சுரை களும் உடைய மரையாணி.

**hanging core** ; *(வார்.)* **தொங்கு உள்ளகம்** : உள்ளகத்துடன் பிணைக்கப்பட்டுள்ள கம்பித் தொங்கலை ஆதாரமாகக் கொண்ட உள்ளகம். ஆழத்திற்குச் சென்று விடாமலிருப்பதற்காக இந்தத் தொங்கு உள்ளகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**hanging indention** : *(வண்.)* **வெளி ஓர வெட்டீடு**: ஒரு பத்தியின் முதல் வரி, வாசகத்தின் இடப்புறம் நீட்டியிருத்தல்.

**hanging stile** : *(க.க.)* **தொங்கு நிலை வரிச்சட்டம்** : கதவு, சுவர், வேலி முதலியவற்றின் பாவு கூற் றில் நிலைக்கம்ப உறுப்பு.

**hard** : **கடினப் பொருள்** : பற்ற வைக்கவோ உருக்கவோ முடியாத பொருள்.

**hard copy** : *(கணிப்.)* **திண்மைப் பகர்ப்புப் படி**

**hard brass** : **கடினப் பித்தளை** : நீட்டப்பட்டபின்பு அல்லது உருட்

டப்பட்ட பின்பு பதப்படுத்தப் படாத பித்தளை. விற்சுருள்கள் முதலியவற்றிற்குப் பயன்படு கிறது.

**hard drawn copper wire** : (மின்.) **கடினச் செம்புக் கம்பி** : பல்வேறு வடிவளவுகளுள்ள பொறிப் புக் கட்டைகளின் வழியே உட் செலுத்தி நீட்டும்போது கடினத் தன்மை பெறுகிறது. இந்தக் கடின மான கம்பி, தொலைபேசிக் கம்பி யாகவும், தந்திக் கம்பிகளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**hardeing** : **கெட்டியாக்குதல்** : எஃகினைக் கெட்டியாக்குதல். எஃகினை உயர்ந்த வெப்பநிலைக் குச் சூடாக்கி, பின்னர் அதனை எண்ணெய், நீர் அல்லது வேறு பொருத்தமான கரைசல்களில் திடீ ரென அமிழ்த்திக் குளிர்விப்பதன் மூலம் கெட்டியாக்கப்படுகிறது. தனிவகை எஃகுகளைக் கெட்டி யாக்குவதற்கு வெவ்வேறு முறை கள் உள்ளன.

**harden** : (உலோ.) **கடினமாக்கல்** : முன்னதாகத் தீர்மானித்த வீதங் களில் உலோகங்களை சூடாக்கிக் குளிர் வித்து கெட்டியாக்குதல். கருவிகள் செய்வதற்கான எஃகு தயாரிப்பதற்கு உலோகத்தை 1400—1500°C வரைச்சூடாக்கி, நீர் அல்லது எண்ணெய் மூலம் விரைவாகக் குளிர்விக்கிறார்கள்.

**hard iron** : **கெட்டியிரும்பு** : அடர்த்தியாகவும், சொரசொரப் பாகவும் உள்ள வார்ப்பிரும்பு. இது தேனிரும்பைவிட மங்கலான நிறமுடையது.

**hardness** : (இயற்.) **கடினத் தன்மை**: ஒரு பொருள், மற்றொரு பொருளினால் சுரண்டப்படுவதை எதிர்க்கும் தன்மை.இந்தக் கடினத் தன்மை, மோஹ்ஸ் அளவுப்படி ஏறுவரிசைத் தனிமங்களாகக் குறிக்கப்படும்.

1. வெளிமக் கன்மகி;
2. கனிக்கல்.
3. சுண்ணகம்.
4. ஃபுரோரைட்.
5. அப்பெட்டைட்
6. களிமம்.
7. படிகக்கல்.
8. புட்பராகம்
9. நீலமணி.
10. வைரம்.

**hardpan** : **புறணிப்படலம்** : மேலீடான மண்ணுக்கு அடிப்படை யாகவுள்ள கெட்டியான நிலப்பட லம்.

**hard rubber** : (மின்.) **கடின ரப்பர்** : கந்தகம் கலந்து வலுவூட் டியரப்பர். இது மின்காப்புப் பொருளாகப் பயன்படுகிறது.

**hard-sized** : **கெட்டியளவு** : ஈரம், மை ஊடுருவுவதைத் தடுக்கும் வகையில் அமைந்த காகித வடி வளவு.

**hard solder**: (பட்.) **கடினப் பற்றாசு** : செம்பும், துத்தநாகமும் அமைந்த ஒரு பற்றாசு. இதனைத் துத்தநாகப் பற்றாசு என்றும் கூறுவர். பற்றாசு வைத்தல், ஒட்ட வைத்தல் இரண்டும் ஒரே பொரு ளில் பயன்படுத்தப்படுகின்றன.

**hard top** : (தானி.எந்.) **உலோக முகடு** : இரண்டு அல்லது நான்கு கதவுகளுள்ள பயணிகள் செல்லும் உந்து வண்டி. இதன் மேற்பகுதி உலோகத்தால் மூடப்பட்டிருக்கும்

**hardware** : (க.க.) **உலோகப் பொருட்கள்** : பூட்டுகள், கதவுக் கீல்கள், ஆணிகள் போன்ற வீடு களுக்குத் தேவையான உலோக உறுப்புகள்.

**hardware**: (கணிப்.) **வன் கலம்/ வன்பொருள்.**

**hard water: கடினநீர்**: கால்சியம், மக்னீசியம் கூட்டுப்பொருட்கள் பெருமளவு கரைந்துள்ள நீர்.

**hardwood : வயிரமரம்** : இலையுதிர்க்கும் மரவகைகளின் வயிரம் பாய்ந்த கட்டை, கருவாலி வாதுமை, அசோகு,புங்கம் போன்றவை வயிரம் பாய்ந்த மரங்கள்.

**hardy : கொல்லன் பட்டடை** : உலோகத்தை வெட்டும்போது கீழே ஆதாரமாக வைத்துக்கொள்வதற்கான கெட்டியான இரும்புத் தடை.

**hardy hole : பட்டடைத் துவாரம்**: பட்டடைக் கல்லிலுள்ள சதுரத் துவாரம். இது பட்டையின் தண்டுப்பகுதியைத் தாங்கிக்கொள்கிறது.

**harmonic analysis**: (மின்.) **கிளையலைப் பகுப்பாய்வு** : சிக்கலான கிளையலைகளைப் பகுப்பாய்வு செய்தல்.

**harmonic frequency** : (மின்.) **கிளையலை அலைவெண்** : ஓர் அடிப்படை அலைவெண்ணின்ஒரு மடங்காகவுள்ள எடுத்துக்காட்டு: அடிப்படை அலைவெண் 1000Kc என்றால், இரண்டாவது கிளையலை $2\times1000$Kc அல்லது 2000Kc ஆகும்; மூன்றாவது கிளையலை $3\times1000$Kc அல்லது 3000Kc.

**harmonize : இணக்குவிப்பு** : பல்வேறு உறுப்புகளை இணக்கமாக பொருத்துதல்.

**harness** : (மின்.) **காப்புக் கவசக் கம்பி இணைப்பு**: கம்பிகள் அல்லது மின் கம்பிவடங்கள் ஒரே கட்டாகக் கட்டப்பட்டு, குழுமங்களாக இணைக்கப்பட்ட ஓர் இணைப்புக் குழுமம்.

**hasp: கொண்டி**: கதவில் கொளுவி மாட்டிப் பூட்டுவதற்குரிய கொளுவி.

**hatchet copper**: (உலோ.வே.) **கோடரிச் செம்பு** : கைப்பிடிக்குச் செங்குத்துக்கோணத்தில் பொருத்தப்பட்டுள்ள தலையுடைய, ஒரு கோடரி போன்ற வடிவமைந்த பற்றாசுச் செம்பு.

**hatchet iron**: (கம்.) **கோடரி இரும்பு**: ஒரு தனிவகையான பற்றாசு இரும்பு.

**hatchet stake : கோடரிமுளை** : வெள்ளியத் தகடுகளை வளைப்பதற்குக் கொல்லர்கள் பயன்படுத்தும் ஒரு கருவி.

**hatchings : நிழல் வண்ணம்** : நேர்த்தியான கோடுகள் மூலம் நிழல் வண்ணங்காட்டுதல். இதில் 45° கோணத்தில் இணைகாடுகள் அல்லது குறுக்குக் கோடுகள் பயன்படுத்தப்படும்.

**hatch way**: (க.க.) **தளப்புழை வாய்**: சரக்குகளை இறக்குவதற்காகத் தளத்திலுள்ள புழை; நிலத் தளத்திலுள்ள புகுவாயில்; சிவேரியுள்ள திட்டிவாயில்.

**haunch : உட்சரிவு**: வளைவு மாடத்தின் உட்பக்கச் சரிவு.

**haunched mortise and tenon** : (மர.வே.) **உட்சரிவுத் துளைச் சட்டம்**: துளைச்சட்டத்தின் அகலம், அதன் நீளத்தின் பகுதிக்குப் பதிலாகக் குறைக்கப்பட்டு, துளைப் பொருத்து வெட்டப்பட்டுச் செய்யப்படும் இணைப்பு.

**hawk**: (குழை.) **பூசுதட்டு** : காரை பூசுபவரின் கைப்பிடியுள்ள சதுரப் பலகை.

**hawser-laid rope**: **நங்கூரக்கம்பி வடம்** : மூன்று புரிகள் ஒன்றாகத் திரிக்கப்பட்ட வடம்.

**haze** : (குழை.) **மங்கல் படலம்** : ஒளி ஊடுருவக்கூடிய பிளாஸ்டிகிலுள்ள மங்கலான தோற்றம்.

இதனை ''அக'' அல்லது ''புற'' மங்கல் என்பர்.

**head** : (அச்சு.) **தலைப்பு:** ஒரு செய்திக்குரிய தலைப்பு. ஒரு பக்கத்தின் தலைப்பகுதியையும்குறிக்கும்.

**headband** : (அச்சு.) **தலைப்பட்டி:** ஒரு அச்சுப்புத்தகத்தின் ஒரு பக்கத்தின் அல்லது அத்தியாயத்தின் தலைப்பில் அமைக்கப்பட்டுள்ள அலங்காரப் பட்டை.

**header : முகப்புக்கல்** : சுவரின் முன்பகுதிக்குச் செங்கோணத்தில் பொருத்தப்பட்ட கல் அல்லது செங்கல்.

**header joist** : (க.க.) **முகப்புத் துலாக்கட்டை** : படிக்கட்டுகள், புகைபோக்கிகள் போன்றவற்றுக்கான திறப்புகளைச் சுற்றி அமைக்கப்படும் பொதுத் துலாக்கட்டைகளைச் செருகுவதற்குரிய துலாக் கட்டை.

**heading tool** : **கொண்டைக் கருவி:** மரையாணிகளின் கொண்டைகளை வடிவமைப்பதற்குப் பயன்படும் ஒரு கருவி. மரையாணியின் உடற்பகுதியை ஒரு தகட்டிலுள்ள துவாரத்தினுள் நுழைத்து, மரையாணியின் முனையை அடித்துத்தட்டையாக்கித் தலைப்பகுதியாக்கப்படுகிறது.

**headless set screw** : (எந்.) **தலையிலாநிலைத் திருகாணி** : கொண்டைக்கும் பதிலாகத் திருப்புளியினால் சீரமைப்பதற்கு இடமளிக்கும் தடம் அமைந்துள்ள நிலைத்திருகாணி.

**head of water** : (இயற்.) **நீர்த் தலைமட்டம்** : நீரின் மிக உயர்ந்த மட்டத்திற்கும் நீர்த்தலைமட்டத்திலிருந்து ஒரு புள்ளியின் தூரத்திற்குமிடையிலான செங்குத்துத் தொலைவு. எடுத்துக்காட்டாக, ஒரு நிலைக்குத்துக் குழாயிலுள்ள நீர்மவடத்திற்கும், நீர் வெளியேற்றப்படும் திறப்படைப்புக் குழாய்க் குமிடையிலானது செங்குத்துத் தூரம்

**head piece** (அச்சு.) **ஒப்பனைத் தலைப்பு:** அச்சுத்துறையில் நூலின் அல்லது அதிகாரத்தின் தலைப்பில் அழகுக்குரிய செதுக்கு ஒப்பனைப் பகுதி.

**head room** : (க.க.) **தலைப்பிடம்:** (1) படிக்கட்டுக்கும் அதற்கு மேலேயுள்ள முகட்டுக்குமிடையிலான செங்குத்தான இடம்.

(2) தொலைக்காட்சியில் திரையில் தோன்றும் உருவத்தின் உச்சிக்கும் தொலைக்காட்சிப் பெட்டியின் மேற்பகுதிக்குமிடையிலான இடம்.

**head set: தலைமுனை ஒலிவாங்கி:** (மின்.) தொலைபேசியில் செவியுடன் பொருந்த வைத்து ஒலிவாங்கும் கருவி.

**head stock** : (எந்.) **தலைமுனைத் தாங்கி:** கடைசல் கருவியில் முகப்புத் தகட்டினை அல்லது சுழல் கொளுவு வாரினைத் தாங்கிச் செல்லும் நிலையான தலைமுனை.

**heart cam**: (எந்:) **இதய முனைப்பு** : இயக்கும் சக்கரத்தின சுற்றுவட்டம் கடந்த முனைப்பு. இது இதய வடிவில் அமைந்திருக்கும். இது சுழல் இயக்கத்தை மறுதலை இயக்கமாக மாற்றுவதற்குப் பயன்படுகிறது.

**hearth** : (க.க.) **கணப்படுப்பு** : ஒரு கணப்பறையிலுள்ள கணப் படுப்பு.

**heart-lung machine** : (உடலி; எந்.) **இதயம்-நுரையீரல் எந்திரம்** : இதய அறுவைச் சிகிச்சையின் போது இரத்தத்தைச் செலுத்தி, அதற்கு ஆக்சிஜன் கொடுத்து இறைப்பதற்குப் பயன்படும் எந்திரம்.

**heart wood** : *(மர.)* **மரவைரம்** : ஒரு மரத்தின் மையப்பகுதி. இதனைமென்மரம் சூழ்ந்திருக்கும். இதில் உயிருள்ள உயிரணுக்கள் இரா.

**heat** : *(வார்.)* **வெப்ப நிலை** : இரும்பு வார்ப்படத் தொழிற் சாலை அடுப்பின் வெப்பச் செறி வினை நீர்மநிலைக்குக் குறைத்தல்.

**heat-affected zone** : *(பற்ற.)* **வெப்பம் பாதிக்கும் பகுதி** : உலோ கங்களைப் பற்றவைக்கும்போது வெப்பத்தினால் நிலைமாற்றம் பெறுகிற உலோகத்தின் பகுதி.

**heat conductivity** : *(பற்.)* **வெப்பங்கடத்துத் திறன்** : ஒரு பொருளின் வழியாக வெப்ப ஆற் றல் பாய்ந்து செல்லும் வேகம் மற் றும் திறம்பாடு.

**heat distortion point** : *(குழை.)* **வெப்பத் திரிபு நிலை** : தரமான தொரு பிளாஸ்டிக் பொருளின் ஒரு சலாகையை..0254செமீஅளவு வளைப்பதற்கேற்ற வெப்பநிலை

**heat engine** : *(மின்.)* **வெப்ப எஞ் சின்** : வெப்ப ஆற்றலை நீராவி உள்ளெரிவு போன்ற எந்திர அல் லது இயங்கு ஆற்றலாக மாற்று கிற எஞ்சின். விசைப்பொறி உருளை எஞ்சின்கள், ராக்கெட் எஞ்சின்கள் போன்றவை இவ் வகையைச் சேர்ந்தவை.

**heater** : *(மின்.)* **சூடேற்றி** : ஒரு வெற்றிடக் குழலில் எதிர்முனை யைச் சூடேற்றுவதற்குப் பயன் படும் தடையுள்ள சூடேற்றும் கருவி.

**heater tube**: *(மின்.)* **வெப்பூட்டுக் குழாய்** : மின்தடைக்கம்பியை அல் லது வேறு பொருள்களைக் கொண்ட ஒரு பெரிய, குழாய் வடிவ, கார்பன் இழை விளக்கு அல்லது குழாய்.

**heating** : **வெப்ப மூட்டுதல்** : உலைக்களத்தின் உலையில் இரும் புத் துண்டினை உரிய வடிவில் வடிப்பதற்கு ஏற்ற வெப்ப நிலைக் குச் சூடாக்குதல்.

**heat exchange** : *(குளி.பத.)* **வெப்பப் பரிமாற்றம்** : வெப்பத்தை ஓர் அமைப்பிலிருந்து மற்றொரு அமைப்புக்கு மாற்றுகிற ஒரு சாத னம் அல்லது பன்முக அமைப்பு.

**heating effect of current**: *(மின்.)* **மின்னோட்ட வெப்ப விளைவு**: மின்னோட்டத்தின் வெப்ப விளைவு. பாயும் மின் னோட்டத்தின் அளவுக்கு நேர் விகிதத்தில் அமைந்திருக்கும்.

**heating of bearings: தாங்கிகள் சூடாதல்**: தவறான உயர்வுகாரண மாக, தாங்கிகளின் வெப்பநிலை உயர்தல். இதனால் இருசும் தாங் கியும் ஒட்டிக்கொள்ளும். அவை விரைவாக இற்று விடவும் காரண மாகும்.

**heating of dynamos**: *(மின்.)* **மின்னாக்கப்பொறி சூடாதல்**: மின் னாக்கப் பொறிகள் மூன்று கார ணங்களால் சூடாகின்றன: (1) தாங்கிகளில் எந்திர உராய்வு; (2) சுழல் மின்னோட்டங்கள்,காந் தத் தயக்கம் காரணமாக உள் ளீட்டு இழப்புகள்; (3) சுருணை களில் இழப்புகள்.

**heating surface**: **சூடாக்கும் பரப்பு**: ஒருபுறம் சூடான வாயுக் களையும், மறுபுறம் நீராவி அல் லது நீரையும் கொண்டுள்ளகொதி கலனின் அனைத்துப் பரப்புகளும்.

**heating unit**: *(மின்.)* **சூடாக்கும் அலகு**: மின்னியல் முறையில் சூடாக்கும் சாதனத்தில், மின் விசை உண்டாக்கப்படும் பகுதி.

**heat mark**: *(குழை.)* **வெப்பக்குறி**: பிளாஸ்டிக் பரப்பில் காணப்படும்

மிக நுட்டமான வரிப்பள்ளம். சூரியவிளிம்பு அல்லது கரடுமுரடான பரப்பு காரணமாக இது தோன்றுகிறது.

**heat latent :** (குளி.பத.) **மறைநிலை வெப்பம் :** ஒரு பொருளின் நிலை மாற்றத்துடன் தொடர்புடைய வெப்பம். எடுத்துக்காட்டு: ஆவியாக்க வெப்பம்.

**heat loss :** (மின்.) **வெப்ப இழப்பீடு :** தடை காரணமாக ஏற்படும் ஆற்றல் இழப்பீடு.

**heat of condensation :** (குளி. பத.) **உறைமான வெப்பம் :** ஒரு வாயு ஒரு திரவமாக மாறும் போது வெளியாகும் மறைநிலை வெப்பத்தினால் உண்டாகும் வெப்பம்.

**heat seal :** (குழை.) **வெப்ப முத்திரை :** ஒருபொருளை அதனுடனோ, வேறொரு பொருளுடனோ வெப்பத்தினால் மட்டுமே பிணைத்தல் அல்லது பற்றவைத்தல்.

**heat sensible:** (குளி. பத.) **நுண்ணுணர்வு வெப்பம்:** வெப்பநிலை மாற்றத்துடன் தொடர்புடைய வெப்பம்.

**heat sensitive dye:** (கணிப்.) அனல் ஏற்புச் சாயம்.

**heat specific:** (குளி. பத.) **வெப்ப அலகு எண்:** பொருளின் பரும அலகின் வெப்பநிலையை ஒரு பாகை உயர்த்துவதற்குத் தேவைப்படும் வெப்ப அலகு எண்.

**heat time:** (பற்.) **வெப்ப நேரம்:** அதிர்வுப் பற்றவைப்பு முறையில் ஒவ்வொரு மின்னோட்டத் துடிப்பின் காலநீட்சி.

**heat transmission :** (குளி.பத.) **வெப்ப அனுப்பீடு :** வெப்பத்தைக் கடத்துதல், பரப்புதல் மற்றும் வெப்ப அலை பரப்புதல்.

**heat treating furnace:** (உலோ) **வெப்ப உலை :** உலோக உறுப்புகளை வெப்பத்தின் மூலம் பதப்படுத்தும் வாயுவினால் எரியும் உலை.

**heat treatment :** (உலோ.) **வெப்பப் பதனம் :** எஃகினை மிகக் கவனமாகக் கட்டுப்படுத்தி வெப்ப மூட்டி, மீண்டும் குளிரவைப்பதன் மூலம் மிக உயர்ந்த உழைப்புத் திறன் கொண்ட தாக்குதல். வெவ்வேறு எஃகுக்கு வெவ்வேறு பதன முறை கையாளப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட எஃகுக்குக் குறிப்பிடப்பட்டுள்ள பதனமுறையையே கையாள வேண்டும்.

**heat wave :** (மின்.) **வெப்ப அலை:** ஊடகத்தின் அகச்சிவப்பு மண்டலத்திலுள்ள மின் காந்த அலை.

**heavy joist :** (மர.வே.) **கனத் துலாக் கட்டை** 12-15செமீகனமும், 20செமீஅல்லது அதற்கு அதிகமான அகலமும் உடைய வெட்டுமரம்.

**hecto graph:** **கைப் படி பெருக்கி:** கையெழுத்துப்படி எடுக்கும் கருவி.

**heel:** (க.க.) **உத்தர முனை:** இறைவாரக் கையின் அல்லது உத்தரத்தின் முனை. இது சுவர் முகட்டு உத்தரத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும்.

**height :** (க.க.) **கவான் உச்சி :** ஒரு கவானின் நாணின் மையக் கோட்டிலிருந்து அதன் வளை முகட்டின் உட்புற வளைவுக்குள்ள தூரம்.

**helical angle :** (எந்.) **திருகுசுழல் கோணம் :** ஒரு திருகு சுழலின் அச்சுக்குச் செங்கோணத்தில் வரையப்படும் ஒரு கோட்டுடன் ஒரு திருகு சுழலின் அல்லது திருகின் பகுதி எதுவும் ஏற்படுத்தும் கோணம்.

**helical gear:** (எந்.) **ஏழுசுருள் பல்லிணை :** இந்தப் பல்லிணையில்

சக்கரப்பல். அதன் முகப்புகளுக்குச் செங்கோணங்களில் இருப்பதற்குப் பதிலாக, ஏதேனுமொரு கோணத்தில் அமைக்கப்பட்டிருக்கும். இதனை திருகு பல்லிணை என்று தவறாக அழைப்பர். இணைச் சுழல் தண்டுகள், குறுக்கு வெட்டாமல், ஏதேனும் கோணத்தில் சாய்வாகவுள்ள சுழல் தண்டுகள் ஆகியவற்றிடையே விசையை அனுப்புவதற்கு இது பயன்படுத்தப்படுகிறது.

**helical groove** : *(பட்.)* **திருகு சுழல் வரிப்பள்ளம்** : ஒரே சீராக முன்னேறுவதற்கென அமைந்துள்ள வரிப்பள்ளம் தனியொரு திருகு சுழல் வரிபள்ளத்தில் ஒரு சுழற்சியில் முன்னேறும் அளவினை ''இடைத்தொலையளவு'' என்பர். இருவரிப் பள்ளம், மூவரிப் பள்ளம் போன்ற பலவரிப் பள்ளங்களில்: ஒரு சுழற்சியில் ஏற்படும் முன்னேற்றத்தின் அளவு, ''முந்து நிலை அளவு'' எனப்படும்.

**helical spring** : *(எந்.)* **திருகுசுழல் விற்சுருள்** : ஒரு கூம்பின் ஒகு அடிக்கண்டம் போன்று வடிவுடைய அழுத்தும் வகை விற்சுருள்.

**helicoid** : **திருகுசுருள்**: ஒரு திருகு சுழலை ஒத்திருக்கும் வகையில் சுருளாக்கப்பட்ட சுருள்.

**helicopter** : *(வானூ.)* **உலங்கு வானூர்தி** : செங்குத்தாக மேலெழும்பி இறங்கவல்ல விமானம். இது உலங்குபோன்று முன்னேயும், பின்னேயும், பக்கவாட்டிலும் பறக்கக்கூடியது. அத்துடன் இது அந்தரத்தில் நகராமல் பறக்கக் கூடியது. ஐகோர் சிகோர்ஸ்கி முதலாவது உலங்கு வானூர்தியைத் தயாரித்தார்.

**heliport or helipad** : *(வானூ.)* **உலங்கு வானூர்தித் தளம்** : உலங்கு வானூர்திகள் தரையிறங்கவும், உயரே எழுந்து பறக்கவும் பயன்படும் பரப்பு.

**helium** : **பரிதியம்/ஹீலியம்** : மிக அரிதான தனிமங்களுள் ஒன்று. இது சிலவகை யுரேனியம் தாதுக்களிலும், சிறிதளவு காற்றிலும் கலந்துள்ளது. அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் கிடைக்கும் இயற்கை வாயுவிலிருந்துதான் இது முக்கியமாகக் கிடைக்கிறது.

**helix** : **திருகுசுழல்** : ஒரு நீள் உருளையைச் சுற்றியுள்ள புரியிழையைச் சுழற்றுவதன் மூலம் உண்டாகும் வளைவு. இதில் ஒவ்வொரு சுழற்சியின்போது ஒரே அளவான முன்னேற்றம் ஏற்படும்.

**helix angle** : *(எந்.)* **திருகு வட்டக் கோணம்**: அச்சுக்கும் செங்குத்தாகவுள்ள ஒரு தளத்துடன் இடைத்தொலையளவு விட்டத்தில் புரியிழையின் திருகுசுழல் ஏற்படுத்தும் கோணம்.

**hellbox** : *(அச்சு.)* **கூளப்பெட்டி** : அச்சுத்துறையில் உடைந்துபோன அச்செழுத்துக்களும், மற்ற பயனற்ற அச்சுப் பொருட்களும் போட்டு வைக்கப்படும் பெட்டி.

**helper** : **உதவியாளர்** : தேர்ந்த பணியாளர் ஒருவருக்கு உதவியாகவும், அவருடைய பணிப்புரையின் படியும் பணிபுரியும் உதவியாளர்.

**helve** : **கோடரிக்காம்பு** : ஒரு கோடரியின் அல்லது கைக்கோடரி கைப்பிடி.

**hematite** ; **ஹேமடைட்** : முக்கியமான இரும்புத் தாது.

**hemecolloids** : *(வேதி.குழை.)* **ஹெம்கோலாய்டுகள்** : 20—000 மோனோமெரிக் அலகுகளுக்குச் சமமான அளவுக்கு மீச்சேர்ம இணைவுக்கு நேரிணையாக, 10,000வரை அணுஎடை கொண்ட மீச்சேர்மங்கள், குறைந்த குழைம நிலையுடைய கரைசல்களில் இவை பொங்குதலின்றிக் கரையும். கரை

சலிலிருந்துதான் வீழ்படிவு, தூள் வடிவில் கிடைக்கிறது.

**hemisphere** : **அரைக்கோளம்** : அரையுருண்டை வடிவம்.

**hemlock** : **தேவதாரு** : தேவதாரு மரக்குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மரம். இதன் வெட்டுமரம் தோற்றத்தில் ஊசியிலை மரம் போன்றிருக்கும். சட்டங்கள் செய்வதற்கு மிகுதியாகப் பயன்படுகிறது.

**hempseed oil** : (வண்.) **சணல் விதை எண்ணெய்** : சணல் செடியிலிருந்து பெறப்படும் எண்ணெய். இந்த எண்ணெய் இறக்கியவுடன் இளம்பச்சை நிறத்தில் இருக்கும். பின்னர், பழுப்பு மஞ்சள் வண்ணத்திற்கு மாறிவிடும். வண்ணச்சாயங்கள், சோப்புகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**henry** : (மின்.) **ஹென்றி** : தூண்டத்தின் மின்னியல் அலகு. ஒரு மின்சுற்றுவழியில், மின்னோட்டம் வினாடிக்கு ஓர் ஆம்பியர் என்ற வீதத்தில் மாறும்போது, அந்த மின் சுற்றுவழியில் ஒரு ஓல்ட் மின்னியக்கவிசை உண்டாகிறது. அப்போது அந்த மின்சுற்று வழியில் ஒரு ஹென்றி தூண்டம் இருக்கிறது.

**henry, joseph** : (மின்.) **ஹென்றி, ஜோசஃப் (1797—1878)** : காந்தத் தூண்டல் தத்துவத்தைக் கண்டுபிடித்த அமெரிக்க விஞ்ஞானி. எனினும், இத் தத்துவத்தைப் பின்னர் ஃபாரடே கண்டுபிடித்த பிறகே இவரது பணி வெளியிடப்பட்டு, புகழ்பெற்றது. பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தார். அமெரிக்க வானியல் கழகத்தை நிறுவியவர்.

**hepplewhite** : **ஹெப்பிள்ஒயிட் பாணி** : லண்டனைச் சேர்ந்த ஹெப்பிள்ஒயிட் என்பவர் தயாரித்த அறைகலன்களின் பாணியில் அமைந்த அறைகலன்கள். கேடய. இதய வடிவ நீள் வட்டம் போன்ற வடிவங்களில், இந்த அறைகலன்கள் அமைந்திருக்கும்.

**heptagon** : **எழுகோணக் கட்டம்** : ஏழுபக்கங்களும், ஏழு கோணங்களும் உடைய ஓர் உருவடிவம்.

**heptode** : (மின்.) **எழுமுனையம்** : ஏழுமுனையங்களைக் கொண்ட ஓர் எலெக்ட்ரான். இதில் ஓர் எதிர்முனைத் தகடும், ஐந்து இணைப்புவரைச்சட்டங்களும் இருக்கும்.

**hermer phrodite caliper**: (எந்.) **முரண் இடுக்கியளவி**: இதில் ஒரு கால், கவராயத்தில்உள்ளது போன்று கூர்மையாக இருக்கும்; மற்றொரு கால், சாதாரண வெளிப்புற இடுக்கியளவில் உள்ளது போன்று சற்றேவளைந்திருக்கும்.



**hernia**: (உடலி.) **குடலிறக்கம்**: குடலின் ஒரு பகுதி, உடலின் முன்புறமுள்ள தசைச் சுவரின் வலுக்குறைந்த பகுதி வழியாக வெளித்தள்ளப்படுதல்.

**herringbone bond** : (க.க.) **மீன் எலும்புப் பிணைப்பு** : தையலிலும், கல் செங்கல் ஓடு பாவுதலிலும்' தச்சுக் குறுக்குக் கை இணைப்புகளிலும் மீன்வகையின் எலும்பு போல எதிரெதிர்ச் சாய்வான வரிசைப்பட அமைந்த பிணைப்பு.

**herringbone gear : மீன் எலும்புப் பல்லிணை** : பல்லிணை முகப்பின் மையக்கோட்டிலிருந்து இருபுறமும் சாய்வாக இருக்கும் பற்களைக் கொண்ட ஒரு பல்லிணை. இதில் இரு அகச்சுருள் பல்லிணைகளில் இருப்பதுபோன்று, ஒன்று இடப்புறமும், ஒன்று வலப்புறமாகப் பற்கள் பொருத்தப்பட்டிருக்கும். சுரங்கங்களில் பயன்படும் கனரக

எத்திரங்களில் இது பயன்படுத்தப் படுகிறது.

**herring boning**(க.க.)**எதிரெதிர்ச் சாய்வு படிவ அமைப்பு**: தச்சுக் குறுக்குக் கை இணைப்புகளில் மீன் வகையின் எலும்புகள் போல எதிரெதிர்ச் சாய்வாக வரிசைப்பட அமைத்தல்.

**hertz antenna**: (மின்.) **கம்பியில்லா வானலை வாங்கி**: தனது இயக்கத்திற்குத் தரையைச் சார்ந்திராமல் கம்பியில்லாத் தந்தி மின் அலைகளைப் பயன்படுத்தும் வானலை வாங்கி.

**heterodyne**: (வானொலி.) **ஒலியலைமாற்றி**: தந்தியில்லாக் கம்பி வகையில்,கேளா உயர்விசைஅலை மற்றோர் அலையில் மோதுவித்து, அதிர்வூட்டிக் கேட்கும் ஒலி அலையாக மாற்றுவதற்குரிய கருவியமைப்பு.

**hewing**: **வெட்டி உருவாககுதல்**: கோடரி, வாள் போன்ற வெட்டுக் கருவிகளினால் மரத்தை வெட்டி வேண்டிய வடிவத்திற்கு உருவாக்குதல்.

**hexagon**: **அறுகோணக் கட்டம்**: ஆறு பக்கங்களையும் ஆறு கோணங்களையுமுடைய உருவடிவம். இதில் எல்லாக் கோணங் களும் சமமானவை; கோணங்கள் அனைத்தின் கூட்டுத்தொகை 720°

**hexagon nut**: **அறுகோணச் சுரையாணி**: ஆறு பக்கங்கள் கொண்ட சுரையாணி.

**hex head**: (எந்.) **அறுகோணக் கொண்டையாணிகள்**: அறுகோணக்கொண்டைகளையுடைய திருகாணிகளும் மரையாணிகளும்.

**hexode**: (மின்.) **அறு முனையம்**: ஆறு மின்முனைகளைக் கொண்ட ஓர் எலெக்ட்ரான் குழல். இது பொதுவாக ஓர் எதிர்முனை தகடு நான்கு வரைச்சட்டங்களைக் கொண்டிருக்கும்.

**hickey**: (மின்.) **குழாய் வளைப்பான்**: (1) ஓரிடத்தில் பொருத்தப்பட்டுள்ளபொருளின் இணைப்பில் நடுத்தண்டிற்கும் ஆதாரத்திற்குமிடையில் பொருத்தப்பட்டுள்ள திருகிழையுடைய, சிறிய பித்தளை அல்லது இரும்புச் சாதனம். இது அந்தப் பொருளின் நடுத்தண்டிலிருந்து வெளிவரும் கம்பிகளுக்குப் புற வழியை உண்டாக்குகின்றன.

(2) மின்கம்பிக் காப்புக் குழாயை அல்லது வேறு குழாயினை தேவையான வடிவத்தில் வளைப்பதற்குப் பயன்படும் குழாய் வளைப்புச் சாதனம்.

**hichory**: **வாதுமை மரம்**: திண்ணிய பளுவான வெட்டுமரம். வாதுமை போன்ற கொட்டையும் தரும் மரவகை. இதன் வெட்டு மரம் கடினமானது; திண்மை வாய்ந்தது; இதில் வேலைப்பாடு செய்வது கடினம். வளைப்பு வேலைப்பாடு செய்வது கடினம். வளைப்பு வேலைகளில் மிகுதியும் பயன்படுகிறது.

**hidden surface line**: (எந்.) **மறைபரப்புக்கோடு**: எந்திர வரைபடத்தில் மறைந்திருக்கும் உறுப்பின் பரப்பினைக் குறிக்கும் குறுகிய இடைக்கோடுகளான கோடு.

**highboy**: **உயர்பேழை**: கால்கள் மீது நிற்கும், இழுவைப் பெட்டிகள் உடைய உயரமான பேழை.

**high brass**: (உலோ.) **உயர்தரப் பித்தளை**: வாணிக முறையில் தகடுகளாகவும் துண்டுகளாகவும் கிடைக்கும் பித்தளை. இதில் 65% பித்தளையும் 35% துத்தநாகமும் கலந்திருக்கும். நெசவுக்காகவும், கரைதலுக்காகவும், வடிவமைப்புக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

**high carbon steel** : (உலோ.) **உயர் கார்பன் எஃகு** 0.50%க்கு அதிகமான கார்பனும். நல்ல நெகிழ்வுப் பண்பும் உடைய எஃகு வகை. இது வெட்டுக் கருவிகள் செய்வதற்கு ஏற்புடையது.

**high commutator bars** : (மின்) **உயர் திசை மாற்றுச் சலாகைகள்** : எந்திரக் கோளாறுகள் காரண மாக, சுழலும் மின்னகத்தினால் உண்டாகும் மையம் விலகும் விசை யின் மூலம் அடுத்துள்ள சலாகை களுக்கு மேலே எழுகின்ற திசை மாற்றுச் சலாகைகள்.

**high compression**: (தானி எந்.) **உயர் அழுக்க இயக்கம்** : உள்ளெரி அறையில் வாயுக்கள் அழுத்தப் பட்டுள்ள நிலை. அந்த அறையின் மேல்பகுதியில் சிறிதளவான அழுத்த இடத்தினால் இந்நிலை உண்டாகிறது.

**high discharge** : (மின்.) **உயர் மின்னிறக்கம்** சேமக்கலத்திலிருந்து பெருமளவில் மின்னோட்டம் பாய்தல்,

**high fidelity radio** : **உயர் ஒலி வானொலி**: (வானொலி.) சுதிக் கருவிஒலிபெருக்கிஅமைப்புகளைச் சமநிலையில் ஒருங்கிணைப்பதன் மூலம் ஒலியினை மிகத் துல்லிய மாகக் கேட்கும்படி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட வானொலி. உயர் அலை அதிர் வெண் துலக்கம், குறைந்த அலை அதிர்வெண் துலக்கம், திரிபு ஆகியவற்றின் மூலம் ஒலித் துல்லி யத்தை அளவிடலாம்.

**high flashing point** : **தீப்பற்று வெப்பநிலை** : தீயை அருகில் கொண்டு சென்றால் உடனே தீப் பற்றிக் கொள்ளக்கூடிய நீர்மத் தின் வெப்பநிலை.

**high frequency** : (மின்.) **உயர் அலை அதிர்வெண்** : ஒரு வினாடி யில் பல்லாயிரம் மாற்றங்களை அல்லது சுழற்சிகளை உடைய மாறுமின்னோட்டம்.

**high gloss**: (வண்.) **உயர் மெருகு வண்ணம்** : உலர்ந்ததும் இனாமல் போன்று பளபப்பாக இருக்கக கூடிய வண்ணம்.

**hi3h lead bronze** : (உலோ.) **உயரளவு ஈயக்கலவை வெண்கலம்** : 75% அளவுக்குச் செம்பும், வெள் ளீயமும், ஈயமும் மாறுபட்ட விழுக்காடுகளிலும் கொண்ட உலோகக் கலவை. மிக வேகமாக இயங்கக் கூடிய தாங்கிகள் தயா ரிக்க இது பயன்படுகிறது.

**high level modulation** : (மின்.) **உயர்நிலை அலைமாற்றம்** : இறுதி மின் பெருக்கியில் தகட்டு மின்ன ழுத்தத்தின் உயர்ந்த நிலையில் ஏற் படும் அலைமாற்றம்.

**high light** : **முனைப்பு மெருகு**: அறைகலன்களுக்கு முனைப்பான பகுதிகள் விளக்கமாகத் தெரியும் படி மெருகேற்றுதல்.

**high maintanance** : (கணிப்.) **மிகுந்த பராமரிப்பு**.

**high mica**: (மின்.) **மிகை அப்பிர கம்**: மெதுவாகத் தளர்ச்சியுறும் தன்மையினால் மின்னகத்தின் செப்புத் திசைமாற்றிச் சலாகை களை விட அதிகத் திறனுடைய அப்பிரகம்.

**high potential** : (மின்.) **உயர் மின்னழுத்தம்** : அறுநூறு அல்லது அதற்கு மேற்பட்ட ஓல்ட் உள்ள உயர் மின்னழுத்தம்.

**high potential testing transformer**: **உயர் மின்னழுத்தச் சோதனை மின்மாற்றி** : மின்கடத்தி கள் முதலியவற்றை சோதனை செய்வதற்காகத் தேவையான அள வுக்கு மிக அதிகமான மின்னழுத் தங்களைத் தரக்கூடியவாறு வடி வமைக்கப்பட்ட தனிவகை மின் மாற்றி.

**high pressure cylinder :** **உயர் அழுத்த நீள் உருளை :** கொதிகலனிலிருந்து நீராவியை நேரடியாகப் பெறுகிற ஒரு கூட்டு எஞ்சினின் மிகச்சிறிய நீள் உருளை. இந்த நீள் உருளையில், நீராவி முதலில் விரிவாக்கப்பட்டு, பின்பு அடுத்துள்ள குறைந்த அழுத்த நீர் உருளைகளுக்குள் செலுத்தப்படுகிறது.

**high relief :** **வன்புடைப்பு:** மெய் வடிவத்திலிருந்து மிகுதி அடுத்துள்ள அளவான புடைப்புச் செதுக்கம்.

**higher resistance :** *(மின்.)* **உயர் மின்தடை :** வழக்கமான அழுத்த அளவுடைய மின்னோட்டத்தில் முழு அளவு மின்னோட்டம் பாய்வதைத் தடையுறுத்தும் துரு, அரிமானம் போன்ற வினைகள்.

**high speed :** *(தானி.)* **மிகை வேகம்:** சாலையில் இயல்பான வேகத்தில் ஓடுவதற்கான வேக மாற்றப் பல்லிணைகள் உள்ள நிலைக்கும் வேகமாகச் செல்வதற்காக வணரிச் சுழல்தண்டிலிருந்து இயக்கச்சுழல் தண்டுக்கு மாறும் நிலைக்கும் உள்ள விகிதம்.

**high speed line printer :** *(கணிப்.)* **அதிவேக வரி வாரி அச்சடிப்பான்.**

**high speed print:** *(கணிப்.)* **அதி வேக அச்சடிப்பு**

**high speed skipping :** *(கணிப்.)* **அதி வேகத்தில் தாவிச் செல்லுதல்.**

**high speed steel:** **மிகை வேக எஃகு:** எஃகின் வெட்டுந்திறனை அதிகரிப்பதற்காக டங்க்ஸ்டன் அல்லது மாலிப்டினம் சேர்க்கப்பட்ட எஃகு. இந்த எஃகினால் செய்த கருவிகளை, சாதாரண கார்பன் எஃகினாலான கருவிகளைவிட மிகுதியான வேகத்தில் சேதம் ஏதுமின்றி இயக்கலாம்.

**high spots :** *(எந்.)* **மிகைக் கறைகள் :** (1) சமதளப் பரப்புகளிலுள்ள களங்கக் கறைகள். அப்பரப்புகளை முற்றிலுமாகச் சமதளப்படுத்துவதற்காக இக்கறைகளைச் சுரண்டி அல்லது தேய்த்து அப்புறப்படுத்தப்படுகின்றன.

(2) உண்மையான சமதளத்திலிருந்து நீட்சியாகவுள்ள இடத்தின் பரப்பளவு.

**high technology printers :** *(கணிப்.)* **உயர்நுட்ப முறை அச்சடிப்பான்கள்.**

**hiph tension :** *(மின்.)* **உயர்மின்னழுத்தம் :** உயர்ந்த அளவு மின்னழுத்தம் அல்லது மின்னியக்கு விசை.

**high test fuel :** *(தானி.)* **மிகைச் சோதனை எரிபொருள்:** 75-க்கு அல்லது அதற்கு அதிகமான ஆக்டேன் வீத அறுதிப்பாடுடைய கேசோலின் எரிபொருள்.

**high voltage:** *(தானி.எந்.)* **மிகை மின்னழுத்தம் :** (1) உந்து ஊர்தி மின்சுற்று வழியிலுள்ள மின்னழுத்தத்தின் அளவு. இது தவறான மின்னாக்க உணர்த்தி அல்லது மின்சுற்று வழியிலுள்ள மிகையான தடைகாரணமாக இயல்பான 6 ஓல்ட் அளவுக்கு மேல் உயரும்.


(2) சுடர் மூட்டக் கம்பிச் சுருளின் துணைச் சுருணையில் தூண்டப்பட்ட மின்னழுத்தம். இந்த மின்னழுத்தம் பகிர்ந்தளிப்பான் வழியாகப் பொறிவினைச் செருகிக்கு அனுப்பப்படுகிறது.

**highway engineer :** **நெடுஞ்சாலைப் பொறியாளர் ;** நவீன நெடுஞ்சாலைகளின் பொறியியல் பணி, வடிவமைப்பு, கட்டுமானம் ஆகியவற்றைத் திட்டமிடும் வல்லுநர்.

**high volume printing:** *(கணிப்.)* **அதிகப் பக்கங்கள் அச்சடிப்பு.**

**high-wing monoplane:** *(வானூ.)* **உயர்நிலைச் சிறகு ஒற்றைத் தட்டு விமானம்:** கட்டுமானத்தின் மேல் நேரடியாகவோ, அதற்கு மேலே யோ சிறகு பொருத்தப்பட்டுள்ள ஒற்றைத்தட்டு விமானம்.

**hinge:** **கீல்:** கதவினைத் திறக்கவும் அடைக்கவும் இயல்விக்கும் வகையில் ஒரு குடுமிமீது திருகி இயங்கும் அமைப்புடைய சுழல் திருகு.



கீல்

**hip:** *(க.க.)* **மோட்டு இணைப்பு வாரி:** ஒன்றுக்கொன்று கோணத்தில் அமைந்துள்ள ஒரு சாய்வான கூரையின் இரு பகுதிகளுக்குமிடையில் இறவாரங்களிலிருந்து கூடல் வாய்வரையுள்ள புற இணைப்பு; இந்தச் சொல் கூடல் வாயைக் குறிப்பதில்லை. இது உட்கோண முடைய "மோட்டு உள்மடி"வுக்கு எதிர்மாறானது.

**hip rafters:** **கீழ்விளிம்பு:** **இற வாரக்கை:** கூரையின் இணைப்பு வாரியாக அமைந்துள்ள இறவாரக் கைகள். இது கூரைக்கூடல் வாயி லிருந்து வேறுபட்டது.

**hip roof:** **இணைப்பு வரி மோடு:** கீழ்விளிம்பும், பக்கங்களும் சாய்வாக அமைந்த கூரை.

**hob:** *(எந்.)* *(1)* **சக்கரப்பல்வெட்டு:** புழுப்பற் சக்கரப் பற்களையும், முள் பல்லிணைகளையும் வெட்டுவதற்கான கருவி.

*(2)* **முதன்மை வார்ப்பு:** கெட்டியான எஃகினாலான முதன்மை வார்ப்பு. இது மென்மையான எஃகுப் பாளத்தில் வார்ப்படத்தின் வடிவினை பதிப்பதற்குப் பயன்படுகிறது.

*(3)* **கணப்புத் தட்டம்:** அடுப்பருகிலுள்ள கணப்புத் தட்டம்.

**hobbing:** **பல்வெட்டுதல்:** புழுப்பற் சக்கரங்களின் பற்களையும், வார்ப்புருப் படிம இழைகளையும். செதுக்குக் கருவிகளையும் சக்கரப் பல்வெட்டி கொண்டு வெட்டுதல்.

**hock leg:** **வளைகால் பாணி:** முடக்கு வளைவின் கீழ்ப்பகுதியின் மீது ஒரு வளைவும் கோணமும் உடைய வளைகால் பாணி.

**hod;** **சாந்துத் தட்டு:** கொத்து வேலைச் சாந்து எடுத்துச்செல்லும் தட்டு.

**hoffman apparatus:** *(வேதி.)* **ஹாஃப்மேன் கருவி:** நீரைப் பகுப்பாய்வு செய்வதற்குப் பயன்படும் ஒரு கருவி.

**hogging:** *(எந்.)* **பெருவெட்டு மானம்:** பட்டறைகளில் எந்திரக் கருவிகளில் மிகக் கனமாக வெட்டு வேலைகள் செய்வதைக் குறிக்கும் சொல்.

**hoke blocks:** **ஹோக் அளவிகள்:** பட்டறை அளவிகளைச் சரி பார்ப்பதற்குப் பயன்படும் அளவிப் பாளங்கள். இதனை மேஜர் ஹோக் என்பவர் வடிவமைத்தார்.

**hold control:** *(மின்.)* **நிறுத்தக் கட்டுப்பாடு:** தொலைக்காட்சிப் பெட்டியில் கிடைமட்ட மற்றும் செங்குத்து வீச்சு அலைவெண்களைத் தக்கவாறு அமைப்பதற்காகக் கையால் இயக்கப்படும் கட்டுப்பாட்டுச் சாதனம்.


**hold-down clamp:** *(பட்.)* **பிடிப்புப் பற்றிரும்பு:** வேலைப்பாடு செய்ய வேண்டிய பொருளை உரிய இடத்தில் இறுகப்பிடித்து வைத்துக் கொள்வதற்கென ஒரு சமதளத்தில் பொருத்தப்பட்டுள்ள பற்றிரும்பு.

**hold time** : *(பற்.)* **நிலைப்பாட்டுக் கால அளவு:** பற்றவைப்பு மின்னோட்டம் நின்ற பிறகு மின் முனைகளில் அழுத்தம் நிலைத்திருக்கும் கால அளவு.

**hole gauge** : *(உலோ.)* **துளை அளவி** : ஒரு சிறிய துவாரத்தை அளவிடுவதற்குப் பயன்படும் கருவி. துவாரத்தினுள் ஒரு சிறிய விற்சுருள் கொண்ட அளவைக் கருவியைப் பொருத்தி அந்த விற்சுருள் துவாரத்தினுள் மிக அதிக அளவு விரிவடைவதற்கு அனுமதிக்கப்படுகிறது. பின்னர் அந்த விற்சுருளைத் துவாரத்திலிருந்து எடுத்து நுண்ணளவைமானி மூலம் அளவிடப்படுகிறது.

**hole injection** : *(மின்.)* **மின் துளையிடல்** : மின்கடத்தாத் திண்மப் பொருளிலிருந்து, ஒரு வலுவான மின்னியல் புலத்தின் மூலம் எலெக்ட்ரான்களை அப்புறப்படுத்துவதன் மூலம் அதில் துவாரங்கள் உண்டாக்குதல்.

**hole saw**: *(உலோ.)* **துளை ரம்பம்**: உலோகம், மரம், இழை போன்ற



துளை ரம்பம்

வற்றில் பெரிய துளைகள் இடுவதற்குப் பயன்படும் வட்டவடிவ ரம்பம்.

**hollow plane** : **உட்புழைச் சமதளம்** : மணிகள், வார்ப்படங்கள் உருண்டையான மேற்பரப்புகளை உருவாக்குவதற்காகப் பயன்படும் உட்புழையுள்ள சமதளப்பரப்பு.

**hollow punch** : *(உலோ.)* **உட்புழைத் தமரூசி** : உட்புழையான தலைப்புடைய கெட்டியான எஃகினாலான தமரூசி. உலோகங்கள், அட்டைகள், துணிகள் முதலியவற்றில் துளையிடுவதற்கு இது ஒரு கைச்சுத்தியுடன்



உட்புழைத் தமரூசி

பயன்படுத்தப்படுகிறது. மென்மையான பொருள்களைவிட உலோகங்களில் பயன்படுத்துவதற்கான தமரூசிகள் அதிக மழுங்கலாக இருக்கும்.

**hollow tile** : **உட்புழை ஓடு** : புறச் சுவர்களுக்கும், தடுப்புச் சுவர்களுக்கும் மிகுதியாகப்படும் கட்டுமானப் பொருள். இது பல்வேறு வடிவங்களிலும், வடிவளவுகளிலும் தயாரிக்கப்படுகிறது. புறச் சுவருக்குப் பயன்படுத்தும்போது, இது பெரும்பாலும் சிற்ப ஒப்பனைக்குரிய குழைகாரை பூசி மூடப்படும்.

**holly** : **இலையுதிரா மரம்** : முன் இலைகளையும், பசிய சிறு மலர்களையும், செங்கனிகளையும் உடைய, மெதுவாக வளரும் ஒரு சிறிய மரம். இதன் வெட்டு மரம் வெண்மையானது; கடினமானது; நெருக்கமான கரணைகளையுடையது. பியானோவிரற்கட்டைகள், உட்பூச்சு வேலைகள், உட்புற அலங்காரங்கள் ஆகியவற்றிற்குப் பயன்படுகிறது.

**home** : *(விண்.)* **இலக்கு நோக்கிச் செலுத்துதல்**: ஏவுகணையை வெப்ப அலைகள், ராடார், எதிரொலிகள், வானொலி அலைகள் போன்றவற்றை வழிச்செலுத்துவதன்மூலம் ஓர் இலக்கை நோக்கிச் செலுத்துதல்.

**homeopathy** : *(மருந்.)* **இன முறை மருத்துவம் (ஓமியோபதி)** நோயினால் உண்டாகும் அதே அறிகுறிகளை உண்டாக்கும் மருந்துகளை நோயாளிகளுக்குச் சிறிதளவு கொடுத்து அதன் மூலம்

நோய் நீக்கும் மருத்துவமுறை, எடுத்துக்காட்டாக, வேனற்கட்டியை உண்டாக்கும் ஒரு மருந்தினை உடலில் செலுத்துவதன் மூலம் வேனற்கட்டியைக் குணமாக்குதல்.

**homogeneous : ஒருபடித்தான :** ஒரே இனம் அல்லது வகையைச் சேர்ந்த உறுப்புகள் அனைத்தும் ஒரே மாதிரியாக உடைய; எங்கணும் ஒரே மாதிரியான தன்மை கொண்ட.

**homosexual:** *(பாலின.)* **ஒரு பாலின விருப்பு:** *தன்னொத்த பாலினத்தவர் மீதே பாலின விருப்பு உடையவராக இருத்தல்.*

**hone:** *(உலோ.)* **சாணைக்கல்:** *சவரக்கத்தி முதலியன தீட்டுவதற்கான தீட்டுகல்.*

**hone or oilstone: சாணைக்கல்:** *கூர்ங் கருவிகளுக்கு வெட்டுவதற்குத் தேவையான கூரிய முனையை உண்டாக்குவதற்கு சாணை தீட்டுவதற்குப் பயன்படும் கல்.*

**honey-comb:** *(குழை.)* **தேனடைபாணிப்பொருள்:** தேன்கூடு போன்ற அறுகோண அமைப்புடைய உலோகத்தினாலான அல்லது பிசினர்ல் செறிவாக்கம் செய்த காகிதத்தினாலான உள்மையப் பகுதி. சில விமானக் கட்டமைப்புகளுக்கு மிக இலேசான, ஆனால் மிகவும் வலுவான சேணங்களைத் தயாரிக்க இது பயன்படுகிறது. இவ்வகைப் பொருட்களில் சில, தனது எடையைவிட இரண்டுகோடி மடங்கு பாரத்தை கொண்டு செல்லக்கூடியவை.

**honey-comb radiator:** *(தானி.)* **தேன்கூட்டு கதிர்வீசி :** இது முன்னும் பின்னுமாகவும், ஒன்றன் மேல் ஒன்றாகவும் அமையுமாறு ஒட்டவைக்கப்பட்ட ஏராளமான சிறிய அறைகளினாலானது. இந்த அறைகளைச் சுற்றி நுண்படலமாகத் தண்ணீர் பாய்ந்து, அவற்றில் பாய்ந்து செல்லும் காற்றினைக் குளிர்விக்கிறது.

**honey locust:** *(மர.)* **தேன் இலவங்கம்;** நடுத்தர வடிவளவுடையமரம். பூவும் நெற்றும் அளிக்கக்கூடியது. இதன் வெட்டுமரம் கடினமானது; வலுவானது; மண்தொடர்புடன் நீண்டநாள் உழைக்க வல்லது. வேலிக்கம்பங்கள், கைப்பிடிகள், சக்கரக் குடங்கள் ஆகியவற்றிற்குப் பயன்படுகிறது.

**honing :** *(தானி.)* **சாணை தீட்டுதல் :** எஞ்சின் நீள் உருளைகளை சாணைக் கற்களிலிருந்து தீட்டி. வேண்டிய வடிவங்களாக உருவாக்குதல்; அல்லது மெருகேற்றுதல்.

**hood : ஊர்தி முகடு:** *(தானி.)* (1) உந்து ஊர்தியின் இயக்கியை மூடி, கதிர் வீசியிலிருந்து தடுப்பு உந்து கட்டை வரையில் நீண்டிருக்கும் மடிப்பு முகடு.

(2) கணப்படுப்பு, கொல்லுலை முதலியவற்றில் நீண்டிருக்கும் மூடி.

**hook bolt :** *(எந்.)* **கொக்கி மரையாணி :** மரையில்லாத முனை U-வடிவில் வளைந்து அல்லது மரையாணியின் உடற்பகுதிக்குச் செங்குத்துக் கோணங்களில் நேராக உள்ள ஒரு மரையாணி.

**hooked scale :** *(உலோ.)* **கொக்கித் தராசு :** ஒரு முனையில் ஒரு சிறு கொக்கியும் மறுமுனையில் எடையைக் காட்டுவதற்கான முள்ளும் உடைய ஒருவகைத் தராசு.

**hooke's law :** *(பொறி.)* **ஹூக்ஸ் விதி :** "மீட்சிம வரம்பினுள் உண்டாகும் உருத்திரிபு, தகைவுக்கு வீத அளவில் அமைந்திருக்கும்" என்னும் விதி.

**hook joint: கொக்கி மூட்டு:** காட்

சிப் பெட்டிகளின் கதவுகளுக்கான தூசி புகாதபடிக்கான மூட்டு.

**hook rule** : *(பட்.)* **கொக்கிச் சட்டம்** : அலகுக்குச் செங்கோணங் களில் ஒரு முனையில் புறந்துருத் திய ஒரு துண்டினையுடைய சட்டம்.

**hook spanner** : *(எந்.)* **கொக்கிப் புரி முடுக்கி** : புறப்பரப்பின் மீது வெட்டுத்தடமுடைய சுரையாணி களில் பயன்படுத்துவதற்கான முடுக்குக் கருவி.

**hook up** : *(மின்.)* **மின் இணைவு** : ஒரு மின்சுற்றுவழியில் அல்லது சாதனத்தில் உள்ள உறுப்புகளுக் கிடையிலான இணைப்புகள்.

**hoop iron** : **இரும்புப் பட்டை** : மிடாக்களை வரிந்திறுக்கும் இருப் புப் பட்டை.

**hopper** ; **பெய் குடுவை** : எந்திரங் களுக்கு அல்லது ஊதுலைகளுக்குப் பொருள்களை ஊட்டுவதற்குப் பயன்படும் ஒரு கொள்கலம்.

**horizontal** : **கிடைநிலை** : அடி வானத்திற்கு ஒருபோகாக அல்லது இணையாக உள்ள நிலை.

**horizontal exis** : *(கணிப்.)* **கிடை நிலை அச்சு.**

**horizontal boiler** : **கிடைநிலைக் கொதிகலன்** : செங்குத்தாகவும், நீளவாக்கிலும் தக்கவாறு அமைத் துக் கொள்ளத்தக்க இடைநிலைக் கதிர்ச் சலாகையுடைய கொதி கலன்.

**horizantal centre movement** : *(கணிப்.)* **கிடைநிலைத் துப்புரவுச் சீப்பு இயக்கம்.**

**horizontal boring machine** : *(எந்.)* **கிடைநிலைத் துளையிடு எந் திரம்** : துளையிடுவதற்கான கிடை மட்டக் கதிர் உள்ள ஒரு கருவி. இதனைக் கிடைநிலையிலும், செங்குத்து நிலையிலும் அமைத் துக் கொள்ளலாம்.

**horizontal centering** : **கிடை நிலை மையக் குவிப்பு** : தொலைக் காட்சியில் எதிர்மின் கதிர்க் குழா யின் அச்சினைப் பொறுத்து படத் தின் அமைவுநிலை. ஒளிவாங்கிப் பெட்டியிலுள்ள ஒரு கட்டுப்பாட் டுக்கருவி மூலம் இதனை உரு வாக்க முடிகிறது.

**horizontal drill press** : *(எந்.)* **கிடைநிலைத் துரப்பண அழுத்தப் பொறி** : செங்குத்தாக அல்லாமல் கிடைநிலையில் இயங்குகிற துரப் பண அச்சுப்பொறி.

**horizontal hold control** : **கிடை நிலைப் பிடிக்கட்டுப்பாடு**: தொலைக் காட்சி ஒளிவாங்கிப் பெட்டியில் கிடைநிலை அலைவீச்சு அலைப் பான், வாங்கும் படச்சைகையுடன் ஒருங்கிணைப்புச் சைகைகள் இயை பாக இருக்கும் வகையில் நேர மைவு செய்வதற்கான கட்டுப் பாட்டுக் கருவி.

**horizontal matrix printing** : *(கணிப்.)* **கிடைநிலை அச்சுவார்ப்பு அச்சடிப்பு.**

**horizontal milling machine** : **கிடைநிலைத் துளையிடு எந்திரம்** : கிடைநிலையான கதிரும், சுழலும் வெட்டுச் சக்கரமும் உடைய துளையிடும் எந்திரம். இது உலோ கங்களில் இடுவரிசைத் துளைகள் இடுவதற்குப் பயன்படுகிறது. இதில் சமதளப் பலகையை வேண் டிய நிலைக்கு உயர்த்திக் கொள் ளவோ தாழ்த்திக் கொள்ளவோ முடியும்.

**horizontal polarization**: *(மின்.)* **கிடைநிலை முனைப்பாடு** : ஒரு வானலை வாங்கியின் மின்னியல் புலமானது, பூமியின் மேற் பரப்புக்கு இணையாக இருக்கு மாறு அமைக்கப்பட்ட வானலை வங்கி.

**horizontal return tubular boiler**: **கிடைநிலை மீட்சிக் குழாய்க் கொதிகலன்** : இது ஒருவகை எஃகுக் கொதிகலன். இதில், நெருப்புக் குழாய்கள் உடைய நீள் உருளை வடிவ நுண்ணறைகள் இருக்கும். இவை செங்கற் கட்டுமானத்தால் மூடப்பட்டு, ஊதுலையாகவும், உள்ளெரி அறையாகவும் அமைக்கப்பட்டிருக்கும்.

**horn** : *(வானூ.)* **கொம்பு நெம்பு கோல்** : விமானத்தின் கட்டுப்பாட்டுப் பரப்புடன் பொருத்தப்பட்டுள்ள ஒரு குறுகிய நெம்பு கோல். இதனுடன் இயங்கு கம்பி அல்லது சலாகை இணைக்கப்பட்டிருக்கும்.

**hornblende** : **பச்சைத் துத்தம்**: திண்பழுப்பு அல்லது கருமை அல்லது பச்சை நிறமுடைய கனிப் பொருள். இதில், இரும்பு, மக்னீசியம், கால்சியம், அலுமினியம் ஆகியவற்றின் சிலிக்கேட்டுகள் அடங்கியிருக்கும்.

**horn center** : **கொம்பு மையம்** ; வரைவாளர்கள் பயன்படுத்தும் ஒரு சிறிய, வட்டவடிவான, ஒளி ஊடுருவக்கூடிய வட்டு. காகிதத்தில் வட்டங்கள் வரையும்போது காகிதம் கிழிந்துபோகாமல் இருப்பதற்காக, காகிதத்தின் மேல் இதனை வைத்துக் கவராயங்களைச் சுழற்றி வட்டம் வரைவார்கள்.

**horning press** : *(எந்.)* **கொம்பு அழுத்தப் பொறி** : வாளிகள் போன்ற உலோகத் தகட்டினாலான கொள்கலங்களின் விளிம்புகளை மழுங்க மடக்குவதற்குப் பயன்படும் கருவி.

**horn relay** : *(தானி.எந்.)* **கொம்பு உணர்த்தி** : கொம்பு வடிவ மின் சுற்றுவழியில் செலுத்தப்படும் ஒரு காந்தக் கட்டுப்பாட்டுச் சாதனம். இதில், கொம்புப் பொத்தானை அழுத்துவதால் அது ஒரு மின்னகத்தை நகரச் செய்து தொடர்பு முனைகளுக்கு மிக நெருக்கமாகக் கொணர்கிறது. இதனால் மின்னோட்டத்தின் முழு விளைவும் கொம்புக்கு அல்லது கொம்புகளுக்கும் நேரடியாகப் பாய்கிறது.

**horology** : **கடிகாரக் கலை** : கடிகாரங்கள், கைக் கடிகாரங்கள் முதலியவற்றைத் தயாரித்தல், அவற்றைப் பழுதுபார்த்தல், மணிப் பொறிக்கலை, காலமளப்பது பற்றிய அறிவியல் துறையினையும் குறிக்கும்.

**horse** : *(க.க.)* **தாங்கு சட்டம்** : *(1)* சால்கால்.

*(2)* மிதிகட்டைகளும், படியின் நிலைக் குத்துப்பாதிகளும் இணைக்கப்பட்டுள்ள படித்தொகுதிகளை தாங்குகிற ஒரு சாய்வான ஆதாரம்.

**horse hair** : **குதிரை முடித்திண்டு**: குதிரை முடியினை உள்திணித்து நிரப்பிச் செய்யப்பட்ட ஒரு திண்டு.

**horse power** . **குதிரைத் திறன்** : எந்திரவியலில், ஒரு குதிரை வலிமைக்கு ஈடாகக் கணிக்கப்படும் ஆற்றல் அலகு.


33,000 பவுண்டு எடையை, ஒரு நிமிட நேரத்தில் ஓர் அடி உயரத்திற்குத் தூக்குவதற்குத் தேவையான ஆற்றல் ஒரு குதிரைத்திறன் எனப்படும்.

**horse power rating** : *(தானி.)* **குதிரைத் திறன் வீத அறுதிப்பாடு** : குதிரைத்திறன்.

$$\frac{\text{அங்குலத்தில் துளை} \times \text{நீள் உருளை எண்ணிக்கை}}{2.5} = \frac{D^2 \times N}{2.5}$$

**horse shoe magnet :** *(மின்.)* **குதிரை லாடக்காந்தம் :** குதிரை லாட வடிவில் அல்லது U-வடிவில் உள்ள ஒரு காந்தம்.

**hose clamp : நெகிழ்வுப் பற்றுக் கட்டை :** ஒரு நெகிழ்வுக் குழாய்க்கும், அதன் முனை பொருத்தப்பட்டுள்ள நெகிழ்வுத் திறன் குறைவான பொருளுக்குமிடையில் இறுக்கமான பிணைப்பு ஏற்படுத்துவதற்கான ஒரு பற்றுக் கட்டை.


பற்றுக் கட்டை

**hose coupling: நெகிழ்வு இணைப்பான்:** நீண்ட நெகிழ்வுக் குழாய்களின் முனைகளை ஒன்றாக இணைப்பதற்காகப் பயன்படும் ஓர் இணைப்புச் சாதனம்.

**hot: மிகை ஒளிப்பரப்பு:** தொலைக் காட்சியில் அளவுக்கு மிகுதியான ஒளியையுடைய அல்லது ஒளியைப் பிரதிபலிக்கிற பரப்பு.

**hot box :** *(எந்.)* **கடுவெப்பப் பெட்டி :** தவறாகப் பொருத்தியதன் காரணமாக அல்லது குறைந்த மசகிடுதல் காரணமாக அளவுக்கு அதிகமாகச் சூடாகக் கூடிய தாங்கி.

**hot-die steel : வெப்ப வார்ப்பட எஃகு :** பழுக்கக் காய்ச்சிய உலோகத்துடன் தொடர்புறுத்தி, வார்ப்புருக்களை அடித்து உருவாக்குவதற்குப் பயன்படும் எஃகு.

**hot dipping : வெப்பத் தோய்ப்பு :** சூடான கரைசலில் தோய்த்துத் தூய்மையாக்கும் அல்லது முலாம் பூசும் முறை.

**hot embossing :** *(அச்சு.)* **வெப்ப புடைப்பகழ்வு வேலை :** சூடாக்கிய வார்ப்புருக்களைப் பயன்படுத்தி புடைப்பகழ்வுச் சித்திர வேலைப்பாடு செய்தல்.

**hot metal :** *(வார்.)* **உருகிய உலோகம் :** மிக உயர்ந்த வெப்ப நிலையில் உருகிய நிலையிலுள்ள இரும்பு அல்லது பித்தளை,

**hot plug:** *(தானி.)* **சுடர்ப் பொறிச் செருகி :** நீண்ட பீங்கான் தொடர் அடுக்குகள் கொண்ட ஒரு சுடர்ப் பொறிச் செருகி. இது குறுகிய பீங்கான் தொடர் அடுக்குகளை விட அதிகச் சூடானது. எனவே, இதனை 'வெப்பச் செருகி' என்றும் கூறுவர்.

**hot rolled :** *(உலோ.)* **வெப்ப உருட்டு:** எஃகினைச் சூடாக இருக்கும்போதே வணிகப் பயன்பாட்டிற்கான வடிவங்களில் உருட்டி உருவாக்குதல்.

**hot short : நொறுங்கு இரும்பு :** சூடானபோது எளிதில் நொறுங்கத்தக்கதாகவுள்ள தேனிருமபு. கந்தகம் கலந்திருப்பதால் தேனிரும்புக்கு இந்நிலை உண்டாகிறது. இதனால் இதனை இரும்பு மிகவும் கடினமாகவே பற்றவைக்க முடிகிறது; அல்லது பற்றவைக்க முடியாமல் போகிறது.

**hot wire ammeter :** *(மின்.)* **சுடு கம்பி மின்னோட்ட மானி :** மின்னோட்டத்தின் வெப்ப விளைவினைப் பயன்படுத்திக் கொள்ளும் மின்னோட்டமானி. இதில் வெப்பத்தினால் ஒரு கம்பி நீட்சியடைந்து, ஒரு துலாத்தட்டின் முள்ளை நகர்த்துகிறது. இவ்வகை மின்னோட்ட மானியில் அடிக்கடி நேரமைவு செய்யவேண்டும். இதனால், இது இப்போது புழக்கத்தில் இல்லை.

**hot working steels :** *(உலோ.)* **வெப்ப வேலை எஃகு :** 5—15% டங்ஸ்டன், சிறிதளவு குரோமியம், மிதமான அளவு கார்பன் அடங்கிய எஃகு சூடான நிலையில்

வேலைப்பாடு செய்வதற்குரிய கருவிகளுக்கு இது பயன்படுகிறது.

**hourglass worm** : *(தானி.)* **மணல் வட்டில் இயக்காழி** : மணல் சொறிந்து காலங்காட்டுங்கருவி போன்று புழுப்போல் வளைந்த உந்துகல இயக்காழி.

**house drain** : *(கம்.)* **வீட்டுவடிகால்** : சாக்கடை நீரை ஏற்று, வடிகாலில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காகக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ள குழாய் அமைப்பு.

**housed string** : *(க.க.)* **அடைப்பு ஏணிப்படி** : இரண்டு படிகளின் மேற்பரப்புகளை இணைக்கும் செங்குத்துப் பகுதிகளையும், ஏறு படிக்காலின் மிதிகட்டைகளையும் ஏற்பதற்கென உட்புறத்தில் செங்குத்தாகவும் கிடைநிலையாகவும் வரிப்பள்ளங்கள் வெட்டப்பட்டுள்ள ஏணிப்படி.

**house organ** : *(அச்சு.)* **அகச் செய்தியேடு** : ஒரு நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்காகவும், பணியாளர்களுக்காகவும் கால இடைவெளிகளில் வெளியிடும் செய்தியேடு. இதில் ஒரு பகுதியில் பொதுவான செய்திகளும், ஒரு பகுதியில் அந்த நிறுவனத்தின் பொருட்கள் பற்றிய விளம்பரங்களும் இடம்பெற்றிருக்கும்.

**house slant**: *(கம்.)* **வீட்டுச்சாய்வு நிலை வடிகுழாய்** : வீட்டுக்கழிவு நீர்க்குழாய் இணைப்பை ஏற்பதற்கென ஒரு கழிவுநீர்க்காலில் உள்ள T அல்லது Y வடிவ இணைப்பு.

**housing** : *(எந்.)* **உள்ளிடம்** : உரு வார்ப்படம், முதன்மை உறுப்பு, கொள்கலன், மேலுறை, பிற உறுப்புகளுக்கான ஆதாரம் போன்றவற்றைக் குறிக்கும் சொல்.

**howe truss** : **விதானத் தூலக் கட்டு** : கூரைகளையும், பாலங்களையும் அமைப்பதற்குப் பயன்படும் ஒருவகைத் தூலக்கட்டு. இது மரம், எஃகு இவற்றினாலான கட்டுமானத்திற்கு மிகவும் ஏற்புடையது.

**hub** : **சக்கரக்குடம்** : வண்டிச் சக்கரத்தின் குடம். இதன் வழியே சக்கரத்தின் அச்சு செல்லும். இது பெரும்பாலும் நீள் உருளை வடிவில் அமைந்திருக்கும்.

**hubbing** : *(பட்.)* **மென் எஃகு உருவாக்கம்** : வார்ப்புப் படிவத்தை அல்லது வார்ப்படத்தைச் செய்வதற்கான கடினமான வார்ப்புப் படிவத்தை அல்லது "குடத்தை" ஒரு குளிர்ந்த, மென்மையான எஃகுப் பாளமாக ஆக்குதல். இது பொதுவாக 1.27 செ.மீ. கனம் இருக்கும். இது சராசரியாக ஒரு சதுர அங்குலத்தில் 100டன் அழுத்தத்தைத் தாங்க வல்லது.

**hub dynamometer** : *(வானூ.)* **குடத் திறன்மானி** : விமானத்தில் எஞ்சின் அழுத்தம், சுழற்சித்திறன் போன்ற உறுப்பாற்றல்களைக் கணிக்கும் கருவி. இது விமானத்தின் முற்செலுத்தியின் குடத்தினுள் பொருத்தப்பட்டிருக்கும்.

**hue** : *(வண்.)* **வண்ணச் சாயல்** : ஒரு வண்ணத்துடன் பிறிதொன்றைச் சேர்ப்பதால் ஏற்படும் வேறொரு வண்ணச் சாயல்.

**hull**: *(வானூ.)* **கப்பல் உடற்பகுதி**: ஒரு பறக்கும் படகின் உடற் பகுதி, படகு நீரில் மிதக்கும் போது இந்தப்பகுதி மிதவையாகப் பயன்படும். இப்பகுதியில் மாலுமியும், பயணிகளும் அமர்ந்திருக்கலாம். மிதவையாகவும், உடற்பகுதியாகவும் ஒரே சமயத்தில் செயலுறுகிறது.

**hum** : *(மின்.)* **முரற்சி** : ஒரு மின் பெருக்கியில் சிதறலான மின்காந்

தப்புலத்துடன் அல்லது நிலை மின்னியல் புலங்களுடன் இணைக் கப்பட்டதன் விளைவாக ஏற் படும் ஒருவகைத் திரிபு.

**humidifier** : *(குளி.பத.)* **ஈரப்ப தனாக்கி** : காற்றில் ஈரப்பதனை அதிகமாக்கும் ஒரு சாதனம்.

**humidify** : *(குளி.பத.)* **ஈரப்பத னாக்கம்** : காற்றில் அல்லது பிற பொருள்களில் நீராவியைச் சேர்த் திடும் செய்முறை.

**humidity** : **ஈரப்பதம்** : காற்றி லுள்ள ஈரத்தின் அளவு. காற் றோட்டத்திற்கான காற்றில் ஈர நயப்பூட்டுவதற்காக, அக்காற் றினை ஒரு நீர்ப்படலத்தின் வழியே செலுத்தி ஈரப்பதமாக்கு வர்.

**humidity relative**: *(குளி.பத.)* **ஒப்பீட்டு ஈரப்பதன்** : ஒரு குறிப் பிட்ட வெப்ப நிலையில், காற்றில் எந்த அளவுக்கு ஈரப்பதன் அடங் கியிருக்கலாகுமோ அந்த அளவு டன் ஒப்பிடத்தக்க வகையில் உள்ள ஈரப்பதன் அளவு.

**humus** : **மட்கிய மண்** : இலை தழை முதலிய தாவரப் பொருட் கள் அல்லது விலங்குப் பொருட் கள் மடகிய தோட்ட மண்.

**hunting link** : *(தானி.)* **துருவு கண்ணி** : ஒரு சங்கிலியில் ஒரு கண்ணியை எடுத்தோ, சேர்த்தோ நீளத்தைத் தக்கவாறு அமைப் தற்கு வசதியாகக் காலத்திட்டச் சங்கிலியைப் பிரிப்பதற்குரிய கண்ணி.

**hutch** : *(1)* **சிற்றறை** : ஒரு சிறிய இருண்ட அறை.

*(2)* **பெட்டி** : குழிமுயல்களுக்கான பெட்டி.

*(3)* அளவை.

*(4)* சேமத்தட்டம்

**hydrant** : **நெடுநீர்க் குழாய்** : நீள் குழாயை இணைத்து நீர் கொண்டு செல்லும்படி பெருங்குழாயுடன் பொருத்தும் இணைப்பு வாயினை யுடைய நீர்க்குழாய். இது தீய ணைப்புக்குப் பயன்படுகிறது.

**hydrate** : *(வேதி.)* **சேர்மப் பொருள்** : *(1)* தனிமத்துடன் அல் லது மற்றொரு சேர்மத்து டன் நீர் இணைந்த சேர்ப் பொருள்.

*(2)* தனிமம் அல்லது சேர்மம் வகையில் நீருடன் இணைத்தல்.

**hydrate** : **காகிதக்கூழ்** : நீர்த் தடுப்புக் காகிதமாகச் செய்வதற் குரிய ஊன் பசையாக்கிய கூழ்.

**hydrated lime** : *(க.க.)* **நீற்றிய சுண்ணாம்பு**: கட்டுமானத்திற்குப் பயன்படும் சுண்ணாம்புத் தூள். இது பெரும்பாலும் 50-ராத்தல் கொண்ட பைகளில் கிடைக்கும். இது தேவையான திண்மைக் கேற்ப நீருடன் கலந்து பயன்படுத் தப்படும்.

**hydraulic brake** : *(தானி.)* **நீரழுத்தத் தடை**: நீர் அழுத்தத்தின் மூலம் ஏற்படும் விசையினால் இயங்கும் எந்திரத் தடையமைப்பு கள். கால் மிதியை அழுத்தும் போது, ஒரு சுழல்தண்டு ஒரு நீள் உருளைக்குள் அழுந்தி, அதிலுள்ள நீர்மத்தை (இயல்பு திரிந்த ஆல்க காலும் விளக்கெண்ணையும் கலவை) செப்புக் குழாய்களின் வழியாகப் பல்வேறு உறுப்புகளுக் கும் பாய்ச்சப்படுகிறது.

**hydraulic bronze** : *(உலோ.)* **நீரியல் வெண்கலம்** : ஓரதர்கள் நீர் இறைப்பான் உறுப்புகள் முதலி யவை செய்வதற்குப் பயன்படும் வெண்கலத்தை அல்லது பித்தளை யைக் குறிக்கும் சொல்.

**hydraulic drive**: *(தானி.)* **நீரியல் இயக்கம்** : (பார்க்க; நீர்ம இயக் கம்.)

**hydraulic engineer** : **நீரியல் பொறியாளர்** : வடிகால் அமைப்புகள், நீரியல் பணிமானங்கள், அணைகள், நீரியக்க மின்விசை எந்திரங்கள் முதலியற்றை வடிவமைத்தல், நிறுவுதல், கட்டுமானம் செய்வித்தல் ஆகிய பணிகளில் தேர்ந்த வல்லுநர்.

**hydraulic glue** : **நீரியல் வச்சிரம்**: ஈரப்பதத்தின் வினையைத் தடையுறுத்தும் இயல்புள்ள வச்சிரப் பசை.

**hydraulic jack** : **நீரியல் பாரந் தூக்கி** : ஒரு சிறிய நீர் இறைப்பான் விசையால் இயங்கும் ஒரு பாரந்தூக்கி. இது வெளிப்புறத்தில் ஒரு நெம்பு கோலால் இயக்கப்படும்.

**hydraulic lime** : (க.க) **நீரியல் சுண்ணாம்பு** : கொண்ட பறையிலிருந்து இயற்கைச் சிமெண்டு தயாரிக்கப்படுவதுபோல் தயாரிக்கப்படும் ஒரு சுண்ணாம்புக் கிளிஞ்சல் போன்று நீற்றுவதற்குரியது. இது நீரியல் சிமென்ட் போன்று எளிதில் கெட்டியாகிவிடக் கூடியது.

**hydraulic press** : (எந்.) **நீரழுத்த எந்திரம்**: நீர்விசை மூலம் இயங்கக் கூடிய ஓர் எந்திரம்.

**hydraulic ram** : **நீரியல் உயர்த்தி**: இயங்கு நீரின் தடையாற்றல் மூலம் அதன் பகுதியை உயர்த்தும் அமைவு.

**hydraulics** : **நீரியல்** : திரவங்களின் குறிப்பாக நீரின் இயக்காற்றல் பற்றிய அறிவியல்.

**hydraulic valve** : **நீரியல் ஓரதர்**: நீரின் இயக்கத்தை ஒழுங்குறுத்துவதற்கும், நீரைப் பகிர்மானம் செய்வதற்கும் பயனாகும் ஓரதர்.

**hydro-barometer** : **நீர்ம எடைமானி** : நீர்ம எடைமான ஒப்பீட்டளவினைக் காட்டும் கருவி. இது கடல் நீரின் ஆழத்தை அதன் அழுத்தத்தைக் கொண்டு அளவிட உதவுகிறது.

**hydrocarbon fuel** : (விண்.) **ஹைட்ரோகார்பன் எரிபொருள்** : ஹைட்ரோகார்பன் இணைந்த கேசோலின், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்.

**hydrochloric acid** : **ஹைட்ரோகுளோரிக் அமிலம்** : (HCl) எரிமலை உமிழும் வாயுக்களின் ஓர் அமைப்பானாக இயற்கையாகக் கிடைக்கிறது. வாணிக முறையில், கந்தக அமிலத்தை உப்புடன் வினை புரியச் செய்து தயாரிக்கப்படுகிறது. பற்றாசு வைப்பதில் உருகும் பொருளாகப் பயன்படுகிறது. தொழிற்சாலைகளில் பல்வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

**hydrocyanic**: **ஹைட்ரோசயனிக் அமிலம்** : இதனை 'நீரசயனிக அமிலம்' என்றும் அழைப்பர். தீவிர நச்சுத் தன்மையுடையது. நிறமற்ற வாயு அல்லது திரவ வடிவில் உள்ளது. பொட்டாசியம் சயனைடுச் செறிவுக் கரைசலை நீர்த்த கந்தக அமிலத்துடன் சேர்த்து வாலை வடித்து நீரில் ஈர்த்துக் கொள்வதன் மூலம் இது பெறப்படுகிறது.

**hydrodynamics** : **நீரியக்கவியல்**: நீர், மற்றத் திரவங்கள் ஆகியவற்றின் இயக்கம், வினை பற்றிய விதிகளை ஆராயும் எந்திரவியல் துறை.

**hydroelectric** : (மின்.) **புனல் மின் விசை** : நீராற்றலால் உண்டாக்கப்படும் மின்விசை.

**hydrofluoric acid** : **ஹைட்ரோஃபுளோரிக் அமிலம்**: (HF): எளிதில் தீப்பற்றக் கூடிய, நிறமற்ற, அரி

மானமுடைய திரவக்கூட்டுப் பொருள். உலோக ஃபுளோரைடு களையும், கந்தக அமிலத்தையும் இருமடிச் சேர்மானம் செய்து தயாரிக்கப்படுகிறது. கண்ணாடி, மட்பாண்டங்கள் ஆகியவற்றிலும் செதுக்குவேலை செய்தல், மது வடித்திறக்குதல், நொதிமானம் ஆகியவற்றிலும் இது பயன்படுத் தப்படுகிறது.

**hydrofoil or hydrovane** : *(வானூ.)* **நீரியல் இயக்கப் பரப்பு** : நீரின் வழியாக இயங்குவதன் மூலம் வினைபுரியக் கூடிய வகை யில் வடிவமைக்கப்பட்ட ஒரு பரப்பு.

**hydrogen** : *(பற்.)* **ஹைட்ரஜன்** ; ஹைட்ரஜன் என்ற தனியொரு தனிமத்தினாலான ஒரு வாயு. மிகுந்த செயற்பாடுடைய வாயுக் களில் ஒன்று. இது ஆக்சிஜனுடன் இணையும்போது தீப்பிழம்பு உண் டாகிறது.

**hydrogen** : *(வேதி.)* **ஹைட்ரஜன்**: இயற்கையில் மிகக்குறைந்த அள வில் கிடைக்கக் கூடிய வாயு. மற் றத் தனிமங்களுடன் இணைந்து ஏராளமான அளவில் கிடைக் கிறது. தூய்மையான நிலையில், நிறமற்றதாகவும், சுவையற்றதாக வும், மணமற்றதாகவும் உள்ளது.

**hydrogen bomp** : *(இயற்.)* **ஹைட்ரஜன் குண்டு** : நீரகச்சேர் மம் செறியப்பெற்று உள்ளமைந்த அணுகுண்டினால் நீரகம் கதிரக மாக மாற்றப்படுவதன் மூலம் பெரும் விசையாற்றல் ஏற்படுத் தும் குண்டுவகை.

**hydrogenation** : *(குழை.)* **நீரகச் செறிவூட்டுதல்** : ஒரு கூட்டுப் பொருளினுள் ஹைட்ரஜன் வாயு வினைச் செலுத்துவதற்குரிய ஒரு வேதியியல் செய்முறை.

**hydrolysis** : *(குழை.)* **நீரியல் பகுப்பாய்வு** : நீரினைச் சேர்ப்பதன் மூலம் ஒரு பொருளைத் தனிக்கூறு களாகப் பகுத்தல்.

**hydrolyte**: *(குளி.பத.)* **நீரியல் பகுப்பான்**: நீரியல் பகுப்பாய்வுக்கு உட்படும் ஒரு பொருள்.

**hydromatic welding**: **நீரகப் பற்றவைப்பு**: இது ஒரு தடைப் பற்றவைப்புச் செய்முறையாகும். இதில் தொடர்வரிசையிலுள்ள மின் முனைகளில் இரண்டு அல் லது அதற்கு மேற்பட்டவற்றில் ஒவ்வொன்றும், பற்றவைப்பு மின்னோட்டக் கட்டுப்பாட்டுச் சாதனத்துடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ள நீரியல் வரிசைப்படுத்துக் கருவியின் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு முழுமையான பற்றவைப்புச் சுழற்சிக்கு உட்படுத்தப்படுகிறது.

**hydromechanics** : *(இயற்.)* **நீரி யக்க எந்திரவியல்** : திரவங்கள், அவற்றில் அல்லது அவற்றைச் சுற்றியுள்ள பொருள்கள் ஆகிய வற்றின் சமநிலை, இயக்கம் பற்றி ஆராயும் எந்திரவியலின் ஒரு பிரிவு நிலை. நீரியல்,இயக்க நீரியல் ஆகியவை நீரியக்க எந்திரவியலின் பிரிவுகளாகும்.

**hydrometer** : **நீர்ம எடைமானி**: நீர்ம எடைமான ஒப்பீட்டளவு காட்டும் கருவி.

**hydrophobia**: *(நோயி.)* **நீர் வெறுப்பு நோய்** : மனிதரை வெறி நாய் கடிப்பதால் உண்டாகும் நீர் வெறுப்பு நோய். இதனை 'வெறி நாய்க்கடி நோய்' என்றும்கூறுவர். இது மூளையையும் தண்டுவடத் தையும் தாக்கித் தசைகளை முக் கியமாகத் தொண்டைத் தசை களைச் சுருங்கச் செய்கிறது. இத னால், தண்ணீர் குடிக்கும்போது அல்லது பெருத்த ஓசையைக் கேட் கும்போது பிரகாசமான ஒளியைப் பார்க்கும்போது உடலின்

அனைத்து உறுப்புகளும் சுருங்கு கின்றன.

**hydrophone** : *(மின்.)* **நீரியல் ஒலியலைக் கருவி**: நீரினுள் ஒலிய லைகளைக் கண்டுபிடிக்கும் ஒரு வகைக் கருவி. இது நீரில் உண்டா கும் ஒலியை மின்னியல் சைகை களாக மாற்றுகிறது.

**hydro static brakes**: *(தானி.)* **நிலை நீர்மத் தடைகள்** : காற்றிடை புகாமல் மூடப்பட்டுள்ள, நீர்மங் கொண்ட ஒருவகைத் தடை அமைப்பு. கால்மிதியை அழுத்தும் போது நீர்மதேக்கம் திரிபடைந்து, அழுத்தம் நான்கு சக்கரங்களுக்குச் சரிசமமாகப் பகிர்மானம் செய்யப் படுகிறது. ஒவ்வொரு சக்கரத்திலு முள்ள தடைதிரவக் கலம் வெளிப் புறமாக விரிவடைந்து தடை வட் டுருளையில் ஆறு தடைக்கால் மிதி கள் உரசும்படி செய்கிறது.

**hydro static joint**: *(கம்.)* **நிலை நீரியல் இணைப்பு** : இது பெரிய நீரிணைப்புகளில் பயன்படுத்தப் படுகிறது. இதில், ஒரு திரவத்தின் நிலைநீரியல் அழுத்தத்தின் மூலம் ஒரு குழாயின் மூட்டு வாயினுள் ஈயத்தகடு இறுக்கமாக நுழைக்கப் படுகிறது.

**hydrostatics**: **நிலை நீரியல்** : (1) அமைதி நிலையிலுள்ள நீர்மத்தின் அழுத்த மற்றும் சமநிலை ஆற்றல் களைக் கையாள்தல்.

(2) நீர்மங்களின் அழுத்த நிலை சமநிலை பற்றி ஆராயும் அறி வியல்.


**hydro static pressure**: *(குளி. பத.)* **நிலைநீர்ம அழுத்தம்**: ஒரு திரவத்தில் மூழ்கச் செய்து, அந்தத் திரவத்தின் பாய்ச்சலோடு நுகர் கின்ற ஒரு சிறிய பொருளின் மீது ஓர் அலகு பரப்பளவில் உண்டா கும் அழுத்த விசை.

**hydrous**: *(வேதி.)* **நீரகப் பொருள்**: வேதியியலில் நீரடங்கிய களிப் பொருட்கள். இவை ஹைட்ரஜன் அணு ஒன்றையும், ஆக்சிஜன் அணு ஒன்றையும் கொண்டிருக் கும்.

**hygrometer** : **ஈரமானி** : வாயு மண்டலத்தில் ஈரநிலை அள வினைக் கணித்துக் காட்டும் கருவி.

**hygroscopic** : *(குழை.)* **ஈரம் உறிஞ்சும் தன்மை** : ஈரம் உறிஞ்சும் தன்மையுடைய பொருள்.

**hyperbola** : **நிமிர்மாலை வட்டம்** : குவிகையுருவில் அடித் தளத்தின்மீது சாய் பக்கங்களுக் குள்ள கோணத்திலும் பெருங்கோணம் படும்படி வெட்டிய குறுக்கு வெட்டு வாயின் வடிவம்.



நிமிர் மாலை வட்டம்

**hyperbolic** : *(கணி.)* **குவிபிறை சார்ந்த** : நிமிர்மாலை வட்டவடி வம் உடைய.

**hypereutectoid** : *(உலோ.)* **உயர் நிலையமைதிப் பொருள்** : நிலை யமைதிப் பொருளை கார்பனி லுள்ள பொருளின் வீதத்தைவிடக் குறைந்த அளவில் கொண்ட எஃகு.

**hyperacoustic zone** : *(விண்.)* **ஒலிச்செறிவுக் குறைவு மண்டலம்** : உயர் வாயுமண்டலத்தில் 96 முதல் 160கி.மீ. வரையுள்ள மண்ட லம். இங்கு, அடர்த்தி குறைந்த காற்று மூலக் கூறுகளுக்கிடையி லான தூரம். ஒலியின் அலைநீளத் திற்குச் சமமாக இருக்கும், இத னால். ஒலியானது, கீழ்மட்டங் களிலுள்ளதை விடக் குறைந்த ஒலி அளவுடன் அனுப்பப்படுகிறது.

**hypocycloid** : **உள் உருள்வரை** : வட்டத்தின் சுற்றுவரையிலுள்ள புள்ளி மற்றொரு வட்டச் சுற்று

வரையினுள்ளாக வட்டம் உருளும் போது இயக்கும் வளை வரை வடிவம்.

**hypoid** : *(எந்.)* **குவிபிறை வடிவம்** : *நிமிர் மாலை வட்டவடிவைக் குறிக்கும் சுருக்கச்சொல். இது சுழல் சாய்தளப் பல்லிணை பல் உடைய தனிவகைப் பல்லிணையைக் குறிக்கும்.*

**hypoid gears** : *(தானி.எந்.)* **குவிபிறைப் பல்லிணைகள்** : *சுழல் சாய்தளப் பல்லிணைகளின் ஒருவகை. இது பல்லிணையின் மையத்திற்கு மேலே அல்லது கீழே இறக்கைப் பகுதியை அமைப்பதற்கு அனுமதிக்கிறது.*

**hypotenuse** : **நெடுங்கை வரை** : ஒரு செங்கோணத்தின் முக்கோணத்தின் பக்கங்களை இணைக்கும், செங்கோணத்திற்கு எதிர்முகமான உறுநீள் கோடு.

**hypotenuse oblong** : *(தச்சு.)* **நீள்நெடுங் கைவரை** : *காகிதத்தில் கனத்திற்கும் அகலத்திற்குமிடையிலான விகிதம். ஏறத்தாழ, 1½ : 1.*


**hypothermia** : (நோயி.) **ஆழ் உறைநிலைச் சிகிச்சை முறை** : ஒரு நோயாளியை இயல்பான உடல் வெப்பநிலையிலிருந்து பல பாகைகள் குறைந்த குளிர்ந்த வெப்ப நிலையில் வைத்திருந்து நோயைக் குணமாக்க ஆழ்ந்த உறைநிலை மருத்துவச் சிகிச்சைமுறை.

**hypothesis**: **புனைவுகோள்**: வாத ஆதாரமாகத் தற்காலிகமாகக் கொள்ளப்படும் ஓர் அனுமானக் கருத்து.

**hysteresis** : *(மின்.)* **காந்தத் தயக்கம்** : *காந்த ஆற்றலுக்குக் காந்தத்தின் தூண்டுதல் இயக்கம் பிறபடும் நிலை, இந்த நிலையினால் வெப்பம் உண்டாகும்.*

# I


**I beam :** *(பொறி.)* **I வடிவ உத்தரம்:** I-என்ற ஆங்கில எழுத்தின் வடிவில் அமைந்த எஃகு உத்தரம், இது கட்டுமானப் பணிகளில் பயன்படுத்தப்படுகிறது.



**ice box:** *(குளி.பத.)* **குளிர்ப்பதன பேழை :** பனிக்கட்டியைக் குளிர்விக்கும் பொருளாகப் பயன்படுத்தும் ஒரு குளிர்பதனப் பெட்டி.

**ice point :** *(குளி.பத.)* **உறை நிலை :** இயல்பான அழுத்த நிலையில் நீர் பனிக்கட்டியாக உறையும் வெப்ப நிலை.

**ichneumon flies :** *(உயி.)* **ஒட்டுண்ணிப்பூச்சி:** மற்றொரு பூச்சியின் முட்டைப் புழுக்களில் தான் முட்டையிடும் பளிங்கு போன்ற நான்கு சிறகுகளைஉடைய சிறிய ஒட்டுண்ணிப் பூச்சி வகை.



**icing :** *(தானி.)* **பனிப்படிவு :** எரிபொருள் விரைவாக ஆவியாவதன் விளைவாக எரி—வளி கலப்பியில் பனி படிதல்.

**iconoscope: உருவமாற்றுக்குழாய்:** ஒரு காட்சியின் ஒளியையும். நிழலையும், மின்னியல் தூண்டல்களாக மாற்றுவதற்கெனத் தொலைக்காட்சி ஒளிப்படக்கருவியில் உள்ள ஒரு குழாய்.

**identification light :** *(வானூ.)* **அடையாள ஒளி :** இரவில் விமானத்தை அடையாளங்காட்டுவதற்காக அதன் பின்புறத்தில் உள்ள, வெண்மையாகவோ வண்ணத்திலோ அமைந்துள்ள விளக்குகளின் தொகுதி.

**identity :** *(கணி.)* **முற்றொருமை/ சர்வ சமம் :** முற்றிலும் ஒத்துள்ள அல்லது சர்வ சமமான நிலை.

**idle circuit:** *(தானி.)* **செயலற்ற மின்சுற்றுவழி :** ஓர் எரி—வளி கலப்பியில் நீராவித் தடுக்கிதழ்.

**idler gear :** *(உலோ.)* **காப்புப் பல்லிணை :** ஒரு பல்லிணைத் தொடரில் இயங்கு பல்லிணைக்கும் இயக்கு பல்லிணைக்கும் இடையில் பொருத்தப்பட்டுள்ள பல்லிணை.

**idle wheel or Idler :** *(எந்.)* **காப்புச் சக்கரம் :** திசையை மாற்றாமலேயே ஒரு சக்கரத்திலிருந்து மற்றொன்றிற்கு விசையைச் செலுத்துவதற்காக அவற்றுக்கிடையில் பொருத்தப்படும் மூன்றாவது சக்கரம்.

**idling :** *(தானி.)* **மெல்லியக்கம் :** உந்து ஊர்தி இயங்காமல் இருக்கும்போது எஞ்சின் மெதுவாக இயங்குதல்.

**idling jet :** *(தானி.)* **மெல்லியக்கத் தாரை:** மெல்லியக்க வேகத்தில் எஞ்சினை இயக்குவதற்குத் தேவையான எரி பொருளின் (கேசோலின்) அளவினைக் கட்டுப்படுத்துகிற தாரை.

**igneous rock: எரிமலைப் பாறை :** எரிமலை குமுறுவதால் உண்டாகும் வெப்பத்தினால் உருவாகும் பாறைகள். தீக்கல், கருங்கல், படிகக்கல் முதலியவை இவ்வகையின.

**ignition :** *(மின்.)* **சுடர் மூட்டம் :** வாயு எஞ்சின்களில் மின்சுடர் மூல மாகத் தீமூட்டும் ஏற்பாடு.

**ignition battery :** *(தானி.)* **சுடர் மூட்ட மின்கலம் :** கேசோலின் எஞ் சின்களின் சுடர் மூட்ட அமைப் பிற்கு மின்னோட்டம் பாய்ச்சுவ தற்காகப் பயன்படுத்தப்படும் சேமமின்கலங்களின் அல்லது உலர் மின்கலங்களின் ஒரு தொகுதி.

**ignition coil:** *(மின்)* **சுடர்மூட்டச் சுருள் :** உந்து ஊர்தியில் சுடர்ப் பொறித்தாவு மின் முனைகளைத் தாவிச் செல்வதற்கு உயர் மின் னழுத்த மின்னோட்டத்தை உண் டாக்குவதற்காகப் பயன்படுத்தப் படும் மின்சுருள்.

**ignition distributor :** *(தானி; மின்.)* **சுடர்மூட்டப் பகிர்வான் :** உயர் அழுத்தச் சுடர்ப் பொறியை மின்சுருளிலிருந்து சுடர்ப் பொறி தாவு மின்முனைகளுக்குப் பகிர் மானம் செய்வதற்கான கால முறைப் பகிர்மான நுட்பமுறை.

**ignition points :** *(மின்.)* **சுடர் மூட்டமுனை:** மின்னோட்ட முறிப் பானில் சுடர் மூட்டத்திற்கான ஓர் உயர் மின்னழுத்தத்தை உண் டாக்கும் வகையில் சுடர் மூட்டக் கம்பிச்சுருளின் அடிப்படை மின் சுற்றுவழியைத் திறந்துவிடுகிற முனை.

**ignition spark :** *(தானி.)* **சுடர் மூட்டப்பொறி :** சுடர்மூட்ட மின் சுருளின் துணைச் சுருணையில் தூண்டப்படும் உயர் அழுத்தச் சுடர்ப் பொறிஅல்லது சுடர். இது சுடர்ப் பொறி தாவு மின்முனை களுக்குப் பாய்ந்து எஞ்சின் நீள் உருளைகளிலுள்ள வாயுக்களை வெடிக்கச் செய்கிறது.

**ignition system :** *(மின்.)* **சுடர் மூட்ட அமைப்பு முறை :** ஒரு தானி யங்கி எஞ்சினில் உயர் அழுத்த சுடர் மூட்டத்தை உண்டுபண்ணு கிற உறுப்புகளின் முழுமையான தொகுதி.

**ignition switch :** *(தானி.)* **சுடர் மூட்டவிசை:** சுடர்மூட்டச் சுருளுட னான மின் சுற்றுவழியை முற்று றுத்துகிற அல்லது முறிக்கிற மின் னியல் கட்டுப்பாட்டுக் கருவி.

**ignition temperature :** **சுடர் மூட்ட வெப்பநிலை :** எரியும் தன் மையுடைய ஒரு பொருள் ஆக்சிஜ னுடன் விரைவாக வேதியியல் முறையில் இணைவதற்காக எந்த அளவுக்கு உயர்த்தப்பட வேண்டு மோ அந்த அளவு வெப்ப நிலை.

**ignition timer :** *(தானி.)* **சுடர் மூட்ட நேரப் பதிப்பான்:** திறம்பட்ட கனற்சியை உண்டாக்குவதற் கென சுடர் மூட்ட நேரத்தைக் குறிப்பதற்காகப் பயன்படும் ஒரு எந்திர சாதனம்.

**ignition timer distributor :** *(தானி.)* **சுடர்மூட்ட நேரப்பதிவுப் பகிர்வான் :** இயக்கி. தடைப்புயம், சுழல் தண்டு, இயக்குச் சக்கரம், எஞ்சினின் இயக்கு சக்கரச் சுற்று வட்ட முனைப்பிலிருந்து இயங் கும் பல்லிணை ஆகியவை ஒருங் கிணைக்கப்பட்ட முழுமையான அமைப்பு. இதன்மூலம், உயர் அழுத்த மின்விசை, அந்தந்த நீள் உருளைகளுக்குப் பகிர்மானம் செய்யப்படுகிறது.

**I-head engine :** *(தானி.)* **I-முகப்பு எஞ்சின்;** "ஒ ர த ர் முகப்பு" என்றும், "மேல்முகப்பு ஓரதர் இயக்கி" என்றும் இது அழைக்கப்படும்.

**ileo :** *(உட.)* **அடிச் சிறுகுடல் :** சிறு குடலை பெருங்குடலுடன் இணைக்கும் சிறுகுடலின் அடிப் பகுதி.

**illuminating :** *(அச்சு.)* **மெருகிடு**

**தல்** : நூல்களின் பக்கங்களில் அலங்கார வண்ண மெருகிடுதல்.

**illuminating gas** : *(வேதி.)* **ஒளி ரும் வாயு** : (1) நிலக்கரி, கரியஞ் சேர்ந்த நீர்வாயுக்கள், அவற்றின் பல்வேறு கலவைகள் ஆகியவை.

(2) எண்ணெய் வாயுக்களின் பல்வேறு வகைகள்.

(3) அசிட்டிலின் வாயு, கேசோ வின் வாயு மற்றும் உற்பத்தி வாயு ஒளிரும் நோக்கங்களுக்கு முக்கிய மானது. எரிபொருள் மற்றும் விசை வாயு வகையில் உற்பத்தி வாயு மிக முக்கியமானது.

**illumination** : **ஒளிர்வித்தல்** : ஒளி ரச் செய்த நிலையிலுள்ள.

**illustrate** : **படவிளக்கம்** : உரு வரைப் படங்கள் மூலம் விளக்கம் செய்தல். எடுத்துக்காட்டாக, ஒப் பீடுகள் போன்றவை.

**ilmenite** : **இல்மனைட்** : டைட் டேனியம் தனிமத்தின் கனிமம். கருநிறமுடையது. தென்கிழக்கு அமெரிக்காவில் கிடைக்கிறது. நீண்டகாலம் உழைக்கக் கூடிய வெண்மை நிற வண்ணப்பொருள் தயாரிக்க முக்கியமாகப் பயன்படு கிறது.

**image** : **உருக்காட்சி** : தொலைக் காட்சியில் ஒளிப்படக் குழாயில் ஒருமுகப்படுத்தப்படும் படம் அல் லது காட்சி. படக் குழாயில் மின் னணுவியல் முறையில் பிரதிபலிக் கப்படும் படம்.

**imageorth** : **மிகு ஒளியுணர்படக் குழாய்** : அரைகுறை இருட்டிலும் காட்சிகளைப்படம் பிடிக்கக்கூடிய மிகுந்த ஒளியுணர் திறனுடைய ஒளிப்படக் குழாய்.

**imaginary number** : *(கணி.)* **கற் பனை எண்** : ஓர் எதிர்மறை எண் ணின் வர்க்கமூலம் உள்ளடங்கிய அளவு அல்லது மதிப்பு. இது உண்மையல்லாதது.

**imitation embossing** : *(அச்சு.)* **போலிப் புடைப்புருவம்** : புடைப்பு அச்சுப் பரப்பினை உருவாக்கும் முறை. புதிதாக அச்சிட்ட காகி தத்தில் பொடியினைத் தூவி வெப்ப மூட்டும்போது மையுள்ள பகுதிகளில் பொடி இணைந்து கொள்கிறது.

**immelman turn** : *(வானூ.)* **இம் மல்மன் சுழற்சி** : விமானத்தின் வழக்கமான கரண வளைவின் முதற் பாதியை முடிவுறுத்தும் இயக்கமுறை. கரண வளைவின் உச்சியில் தலைகீழ் நிலையிலிருந்து விமானத்தைப் பாதியளவு சுழற்சி சமநிலைக்குக் கொண்டு வருதல். இதனால், உயரம் கூடும். அதே சமயத்தில் 180° அளவுக்குத் திசை மாற்றமும் கிடைக்கிறது.

**immerse** : **மூழ்குநிலை**: நீரில் முற் றிலும் மூழ்குவித்தல்; நீர்மத்தில் உள் அமிழ்த்துதல்.

**immersion heater** : **மூழ்கு வெப் பூட்டுக் கருவி** : நீர்மத்தில் உள் தோய்ந்து நின்று வெப்பூட்டும் மின்கருவி.

**immobile** : **இயங்காத** : அசை யாத; ஒரே நிலையில் பொருத்தி வைக்கப்பட்ட.


**immunological reaction**: *(உட.)* **தடைகாப்பு எதிர்வினை**: மற்றொரு வரின் தோல் போன்ற அயல் பொருள்கள் உடலினுள் செலுத் தப்படும்போது, அதை எதிர்ப் பதற்காக எதிர்ப்புப் பொருட்கள் உண்டாகின்றன. இவற்றை தடைக்காப்பு எதிர்வினை என்பர். எடுத்துக்காட்டாக, வேறொரு வரின் தோலை உடலில் பொருத்தி னால், அந்தத் தோல் வளர்வ தில்லை.

**impact**: **மோதல் விளைவு**: மோதித் தாக்குதலின் விளைவு.

**impact strength** : *(குழை.)* **மோதல் விளைவு வலிமை** : சோ

தனை முனையில் திடீரெனப் பாரந்தாக்கும் முறிவு ஏற்படாமல் தடுப்பதற்குப் பிளாஸ்டிக் அல்லது பிறபொருள்களுக்கு உள்ள திறன்.

**impacted tooth** : *(உட.)* **தெற்றுப் பல்** : மற்றொரு பல்லுக்கு அடியில் வளரும் பல். இது மேல் நோக்கி வளர முடிவதில்லை.



தெற்றுப் பல்

**impact test** : *(பொறி.)* **மோதல் விளைவுச் சோதனை** : அதிர்ச்சியைத் தாங்குவதற்குப் பொருள்களுக்குள்ள திறனைச் சோதனை செய்தல்.

**impair** : **பதங்கெடுத்தல்** : அளவிலோ தரத்திலோ குன்றச் செய்தல்.

**impedance** : *(மின்.)* **மின்மறிப்பு** : ஒரு மின் சுற்றுவழியில் மாற்று மின்னோட்டத்திற்கு ஏற்படும் புறத்தோற்றத் தடை. ஒரு மின் சுற்று வழியில் தடை. தூண்டு மற்றும் கொண்மை எதிர்வினைகள் ஆகியவற்றின் கூட்டு விளைவுகள் ஓர் அலகுகளில் கணக்கிடப் படும்.

**impedance matching** : *(மின்.)* **மறிப்புப் பொருத்தீடு** : மிக உயர்ந்த அளவு மின்விசை மாற்றத்தைப் பெறுவதற்காக இரு வேறுபட்ட மின்மறிப்புகள் பொருத்தப்படும் மாற்று மின்னோட்டப் புறத் தோற்றத் தடை.

**impeller** : *(தானி.)* **தூண்டு தட்டம்** : பல விசை விசிறி அலகுகளைக் கொண்ட ஒரு நீர் இறைப்பானிலுள்ள சுழல் உறுப்பு. இது தான் பயணம் செய்கிற ஊடகத்தினை இயங்கச் செய்கிறது.

**imperial** : **படவரைதாள்** : சாதாரணத் தரமுடைய படம் வரைவதற்குரிய தாள். இது 76×5செமீ. அளவுடையது. இதன் மேற்பரப்பு சொரசொரப்பாகவோ. வழுவழுப்பாகவோ இருக்கும்.

**imperviousness** : *(க.க.)* **துளைப்புத் தடைத்தன்மை** : துளைப்புக்கு இடங்கொடாத தன்மை. இது சுவரில் செங்கல் பாவி, சிமென்ட் அல்லது சிமென்ட் காரை பூசுவதன் மூலம் பெறப்படுகிறது. இந்தச் செங்கற்கள் பாவும்போது நன்கு உலர்ந்திருக்க வேண்டும்.

**impetus** : **தூண்டு விசை** : தூண்டு திறம், ஒரு பொருளை இயக்குவதற்கான செயல் தூண்டு விசை.

**impinge** : **மோதுதல்** : இயக்கத்திற்குப் பின்பு ஒரு பொருளின்மீது வந்து மோதுதல்; தாக்குதல்.

**imposing stone** : *(அச்சு.)* **அச்சுக் கோப்புக் கல்**: அச்சுக்கோக்கப்பட்ட உருக்களை இருப்புச் சட்டத்தில்வைத்துப் பொருத்தி அமைப்பதற்கான கல் அல்லது உலோகத் தளமுடைய மேசை.

**imposition** : *(அச்சு.)* **அச்சுப்பக்க உருவாக்கம்**: அச்சுக்கோக்கப்பட்ட உருக்களை இரும்புச் சட்டத்தில் பக்கம் பக்கமாக வைத்துப் பொருத்தி அமைத்தல்.

**impost** : *(க.க.)* **தூண்தலை** : மேல் வளைவைத் தாங்கும் தூணின் மேற்பகுதி.

**impregnated** : **வலுவேற்றிய** : வெளிக்கதவுக்கான வெட்டுமரம் வாயுமண்டலத்தின் பாதிப்பினால் சிதைவுறாமலிருப்பதற்காக பல்வேறு நீர்மங்களைக் கொண்டு வலுவூட்டப்படும்.

**impressed voltage**: *(மின்.)* **தூண்டு மின்னழுத்தம்** : ஒரு சாதனத்தில் மின்னழுத்தம்.

**impression**: *(அச்சு.)* **அச்சுப் பதிவு**: பக்கத்தில் அல்லது காகிதத்

தில் அச்செழுத்துக்களை அல்லது அச்சுப்படங்களைப் பதிவு செய்தல்.

**impression screws** : (அச்சு.) **அச்சுப்பதிவுத் திருகாணிகள்** : அச்சகத்தில் அச்சுத்தாள் அழுத்தும் தகட்டுப் பாளத்தின் நிலையை வேண்டியவாறு அமைப்பதற்குப் பயன்படும் திருகாணிகள்.

**imprint** : (அச்சு.) **பெயர் விவரப் பொறிப்பு** : ஓர் அச்சு வெளியீட்டினை அச்சடித்தது யார் என்ற விவரம் அடங்கிய அடையாள முத்திரை.

**impulse**: (தானி.எந்.) **உந்து வேகம்**: உந்து ஊர்தி எஞ்சினிலும், விமான எஞ்சினிலும் வேகத்தைத் தூண்டிவிடுவதற்கான உந்து விசையாற்றல்.

**impurity**: (மின்.) **மாசுப் பொருள்**: ஒரு படிக வடிவத் திடப் பொருளில் உள்ள அப்படிகத்திற்குப் புறம்பான அணுக்கள்.

**inboard stabilizing float** : (வானூ.) **மைய நிலைப்படுத்து மிதவை**: கப்பலில் பிரதான மிதவைக்கு அல்லது உடற்பகுதிக்கு மிக நெருக்கமாகப் பொருத்தப்பட்டுள்ள நிலைப்படுத்து மிதவை.

**incandescence** : **வெள்ளொளி**: மின்விளக்கு முதலியவற்றின் வகையில் இழைகள் சூடாவதால் உண்டாகும் வெண்சுடர் ஒளி.

**incandescent** : **வெண்சுடர் வீசுகிற**: வெப்பத்தோடு வெண்சுடர் வீசுகிற பொருள்.

**incandescent lamp**: (மின்.) **வெண்சுடர் விளக்கு** : உருகாத மின்கடத்து பொருளினாலான இழையை அல்லது கம்பியை உடைய மின் விளக்குக் குமிழ்.

**incarnadine** : **திசை நிறமுடைய** : சாய வகையில் சதை வண்ணம் முதல் மிகச்சிவப்பு வரையிலான வண்ணச் சாயல்கள்.

**incinerator** : (க.க.) **நீற்றுலை**: குப்பை கூளங்களை எரிப்பதற்கான தொட்டி.

**incise**: (க.க.) **வெட்டு; செதுக்கு.** வெட்டுதல், செதுக்குதல்.

**incised work** : (அ.க.) **செதுக்கு வேலைப்பாடு** : செதுக்கு வேலைப்பாடு செய்யப்பட்ட பொருள்.

**inclination** : **சாய்வு**: கிடைமட்டத்திற்குச் சாய்வாக உள்ள சரிவு.

**inclined plane** : **சாய்வு மட்டம்**: கிடைமட்டத் தளத்திற்குச் சாய்வாக உள்ள தளம். இந்தச் சரிவின் கோணம் சாய்வுக் கோணமாகும்.

**inclinometer**: (வானூ.) **சாய்வு மானி**: விமானம் பறக்கும் உயரத்தைக் காட்டும் கருவி. விமானத்தின் முன்புற-பின்புற அச்சின் வழியாகச் செல்லும் செங்குத்துத் தளத்துடனான சாய்வினைக் காட்டுவதற்கேற்ப அல்லது கிடைமட்ட அச்சின் வழியாகச் செல்லும் செங்குத்துத் தளத்துடனான அல்லது இரு தளங்களுடனுமான சாய்வினைக் காட்டுவதற்கேற்ப சாய்வு மானியை முன்-பின்மானி, கிடைமட்டச் சாய்வுமானி, பொது நிலைச் சாய்வுமானி என வகைப்படுத்துவர்.

**inclusions**: (உலோ.) **சேர்மானங்கள்**: முடிவுற்ற நிலையிலுள்ள எஃகில் எஞ்சி நிற்கும் கசடு மற்றும் அயல் பொருள்கள்.

**increaser**: (எந்.) **விரிவாக்கி**: ஒரு பொருளின் வடிவளவு, வலிமை முதலியவற்றை அதிகரிக்கும் ஒரு சாதனம்.

குழாய் பொருத்து வேலைகளில் ஒரு முனை மற்றதைவிட பெரிதாகவுள்ள இணைப்பிகள்.

**increment :** **மிகைப்பாடு :** மாறுபடு தொகையில் இரு நிலைகளுக்கிடையிலான உயர்வுத்தொகை.

**incrust:** (அ.க.) **மேலடை:** ஒரு பிரதான மேற்பரப்பின் மீது அலங்காரப் பொருளினால் கடினமான மேற்பூச்சு பூசுதல்.

மரச்சாதனங்களில் மேலடை மெல்லொட்டுப் பலகையிடுதல்.

**incrustation :** (பொறி.) **படல மிடுதல்:** நீராவிக் கொதிகலன்களில் உட்புறத்தில் படலமிடுதல்.

**incubation period :** (நோயி.) **நோய்க்கிருமி பெருக்க காலம்:** உடலில் பாக்டீரியா நுழைவதற்கும், நோய்க்குறிகள் தோன்றுவதற்குமிடையிலான காலம்.

**incus :** (உட.) **காதெலும்பு :** சுத்தி எலும்பிலிருந்து ஒலியலை அதிர்வுகளை வாங்கும் காது எலும்பு.

**indefinite :** **வரையற்ற :** துல்லியமற்ற; அறுதியற்ற; தெளிவற்ற.

**indent :** (அச்சு.) **ஓர வெற்றிடம்:** அச்சுத் துறையில் ஓரத்தில் வெற்றிடம் விட்டு வரிகளைத் தொடங்குதல்.

**indentation :** **விளிம்பு வெட்டுதல்:** அறைகலன் ஓரங்களில் வளைவு நெளிவுடைய விளிம்பு வெட்டுதல்.

**indention:** (அச்சு.) **ஓரவெட்டீடு:** ஒரு பத்தியின் தொடக்க வரிபோல் விளிம்பிலிருந்து உள்தள்ளி அமைக்கப்படும் வரிகள். மற்ற வரிகளைவிட முதல் வரி நீண்டிருக்குமானால், அது "தொங்கல் ஓர வெட்டீடு" எனப்படும்.

**indenture :** **சட்ட முறையாவணம்:** (1) ஒரு தொழில் பயிலுநரை வேலை தருநருடன் பிணைக்கும் ஒரு சட்ட முறை ஒப்பந்தம்.

(2) ஓர் ஒப்பாவணம், அடைமானம் அல்லது குத்தகை. இத்தகைய ஆவணங்கள் முன்னர் வரை தோலில் எழுதப்பட்டதால் இந்தப் பெயர் பெற்றது.

**independent jaw chuck :** **தற்சார்புத் தாடைக் கவ்வி:** ஒன்றுக்கொன்று சார்ந்திராமல் சுதந்திரமாக நகரும் தாடைகள் கொண்ட ஒரு தாடைக்கவ்வி.

**independent wheel suspension :** (தானி.) **தற்சார்புச் சக்கரத் தொங்கல் நிலை :** உந்து ஊர்திகளின் முன் சக்கரங்களின் தொங்கல் நிலை. இதன் மூலம் சக்கரங்கள் சாலை அதிர்ச்சிகளுக்கேற்பச் செயல்புரியும் அல்லது ஒன்றுக்கொன்று சார்ந்திராமல் சுதந்திரமாக இயங்கும்.

**indestructibility :** (இயற்.) **அழிவின்மை :** பொருள்களின் அழிக்க முடியாத தன்மை.

**index :** (அச்சு.) **பொருட் குறிப்பகராதி :** ஒரு புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள இனங்களை அல்லது பொருள்களை அகரவரிசையில் அமைந்த பட்டியல். இது தேவையான பொருளை எளிதாகக் கண்டு கொள்ள உதவும்.

**iodex die :** (பட்.) **பகுப்புப் பொறிப்புக் கட்டை :** பெரிய வட்டத்தகடுகளின் விளிம்புகளை வெட்டுதல். மின்னகங்களுக்குத் துளையிடுதல் போன்ற சிலவகை வேலைப்பாடுகளுக்குச் சிலசமயம் பகுப்புப் பொறிப்புக் கட்டை பயன்படுத்தப் படுகிறது. இதில் ஒரு சுழலும் பொறிப்புக் கட்டை அமைந்திருக்கும். இது அழுத்து பொறியில் ஒவ்வொரு முறையும் அழுந்தும்போது படிப்படியாக விளிம்புத்தடம் பொறிக்கப்படுகிறது.

**index head or dividing head :** (எந்.) **பகுப்பு முகடு :** ஓர் எந்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் ஓர் எந்திரச் சாதனம். ஒரு வட்ட

வடிவ உருப்படிவத்தைச் சமபகுதிகளாகப் பகுப்பதற்கு இச்சாதனம் பயன்படுத்தப்படுகிறது.

**indexing** : *(எந்.)* **பகுப்பீடு** : *பள்ளம் வெட்டுதல். நீள் வரிப்பள்ளமிட்ட வேலைப்பாடு, பல்லிணை வெட்டுதல் போன்ற நோக்கங்களுக்காக ஒரு வட்டத்தை சீரான இடைவெளிகளில் பகுத்தல்.*

**india ink** : **இந்திய மை** : *உரு வரைபடங்கள் வரைபவர்கள் பயன்படுத்தும் கருநிறப் பொடியாலான எழுதும் மை.*

**india rubber** : **ரப்பர்** : *வெப்ப மண்டலத் தாவரங்களிலிருந்து ஊறும் மரப்பால் உறைவிலிருந்து எடுக்கப்படும் தொய்வகத்துண்டு. இது தொழில்களில் மிகுதியும் பயன்படுத்தப்படுகிறது.*

**indicate** : **சுட்டிக்காட்டு** : *விளக்கிச் சுருக்கமாகக் கூறு.*

**indicated horse-power**: *(பொறி.)* **சுட்டளவுக் குதிரைத் திறன்** : *ஒரு சுட்டளவி வரைபடத்திலிருந்து தீர்மானிக்கப்படும் குதிரைத்திறன்.*

**indicating switch** : *(மின்.)* **சுட்டிக் காட்டு மின்விசை** : *மின்னோட்டம் பாய்வதை அல்லது பாயாமலிருப்பதைச் சுட்டிக் காட்டும் ஒரு விசை.*

**indicator** ; *(பொறி.)* **சுட்டளவி** : *ஓர் எஞ்சினின் உந்து தண்டிலுள்ள அழுத்தத்தையும், இயக்கத்தையும் சுட்டிக்காட்டும் கருவி.*

**indicator card** : *(பொறி.)* **சுட்டளவி அட்டை** : *ஒரு சுட்டளவி நீள் உருளை அல்லது உந்து தண்டின் மீது சுற்றப்பட்டுள்ள காகிதம். இக்காகிதத்தில் சுட்டளவின் வரைபடம் வரையப்படுகிறது.*

**indicator diagram** : *(பொறி.)* **சுட்டளவி வரைபடம்** : *ஒரு சுட்டளவி அட்டையின் மீது அச்சுட்டளவியிலுள்ள பென்சில் வரையும் வரை படம்.*

**indirectly heated** : *(மின்.)* **மறைமுக வெப்பமூட்டம்** : *தனது எதிர்முனைக்கு தனி வெப்ப மூட்டியைப் பயன்படுத்தும் ஓர் எலெக்ட்ரான் குழல்.*

**indirect lighting**: *(மின்.)* **மறைமுக ஒளியமைப்பு**: *ஒளியை முகட்டில் அல்லது வேறேதேனும் பரப்பில் விழும்படி செய்து, அந்த ஒளி சிதறி அறைக்கு ஒளியூட்டுமாறு அமைக்கப்படும் ஒளி அமைப்பு முறை.*

**indirect radiation**: *(இயற்.)* **மறைமுக வெப்பூட்டம்**: *ஒரு மைய வெப்பூட்டும் எந்திரத்திலிருந்து, காற்றை தேவையான வெப்ப நிலைக்குச் சூடாக்கி, அந்தக் காற்றினைப்புழைப்பகிர்மான அமைப்பின் மூலமாக வெப்பம் தேவைப்படுகிற இடத்திற்கு அனுப்பிச் சூடாக்கும் முறை.*

**indium**: *(உலோ.)* **இண்டியம்**: *மிக அரிதாகக் கிடைக்கும் ஒருவகை உலோகம். இது மிகவும் பளபளப்பானது;வெண்மை நிறமுடையது; மென்மையானது; எளிதில் கம்பியாக இழுத்து நீட்டக்கூடியது. இதன் விலை மிகவும் அதிகம் என்பதால், பரிசோதனை நோக்கங்களுக்கு மட்டுமே இது பயன்படுகிறது.*

**individual drive**: *(எந்.)* **தனிநிலை இயக்கம்**: *ஒவ்வொரு அலகும் நேரடி உந்து இயக்கத்தால் இயங்குவதைக் குறிக்கும். இது ஒரு வரிசைச் சுழல் தண்டிலிருந்து எதிர் சுழல் தண்டு மூலமாக இயங்குவதற்கு எதிரானது.*

**indraft**: *(வானூ.)* **உள்ளீர்ப்பு**: *விமானத்தில் முன்புறமுள்ள முற்*

செலுத்தியிலிருந்து அலகுகளுக்கு உள்நோக்கிப் பாய்தல்.

**induced angle of attack:** *(வானூ.)* **தூண்டு தாக்குறவுக் கோணம்:** ஒரு விமானத்தின் உள்ள படியான தாக்குறவுக் கோணத் திற்கும், அதே குணக உயர்த்திக் கான உடற்பகுதியின் வரம்பற்ற நோக்குக் கோணத்திற்குரிய தாக் குறவுக் கோணத்திற்குமிடையி லான வேறுபாடு.

**induced current:** *(மின்.)* **தூண்டு மின்னோட்டம்:** பார்க்க: மின் தூண்டல்.

**induced draft:** *(பொறி.)* **தூண்டு இழுவை:** உயர்த்துவதன் காரண மாக உண்டாகும் செயற்கையான பார இழுப்பு.

**induced drag:** *(வானூ.)* **தூண்டு இழுப்பு:** உயர்த்துவதன் காரண மாகத் தூண்டப்படும் இழுவை யின் ஒரு பகுதி.

**induced magnetism:** *(மின்.)* **தூண்டு காந்த விசை:** பார்க்க மின்தூண்டல்.

**Induced voltage:** *(மின்.)* **தூண்டு மின்னழுத்தம்:** ஒரு கம்பியுடனோ, கம்பிச்சுருளுடனோ அல்லது மின் சுற்று வழியுடனோ இணைக்கப் பட்டுள்ள மாறுகிற காந்தப் புலன் மூலமாக உண்டாகும் மின்னழுத் தம்.

**inductance:** *(மின்.)* **மின்தூண் டம்:** ஒரு மின் சுற்று வழியின் மூல மாக உண்டாகும் மொத்த மின் தூண்டலுக்கும், அதில் உண்டா கும் மின்னோட்டத்திற்குமிடையி லான விகிதம் ஒரு மின் சுற்றுவழி மூலமாகப் பாயும் மின்னோட்டத் தில் மாற்றத்தை எதிர்க்கும் திறன்.

**induction:** *(மின்.)* **மின்தூண்டல்:** அணுக்க நிலை மின் பாய்வு. காந்தமேற்றிய பொருட்களின் அல்லது ஒரு மின்கடத்தியிலுள்ள மின்னோட்டத்தின் மிக்க அணுக் கத்தினால், அதன் அருகேயுள்ள காந்தப்புலத்தில் ஏற்படும் மாறு தல் காரணமாக உண்டாகும் காந்தமேற்றம் அல்லது மின்னேற் றம்.

**induction brazing:** **மின்தூண் டல் பற்றவைப்பு:** மின்னியல் முறையில் பற்றவைப்பு செய்யும் ஒரு முறை. இதில் தூண்டு மின் னோட்டத்திலிருந்து வெப்பம் உண்டாக்கப்படுகிறது.

**induction coil:** *(மின்.)* **தூண்டு சுருள்:** அணுக்க மின்பாய்வு மூலம் நேர்மின்னோட்டத்தை மாற்று மின்னோட்டமாக மாற்று வதற்கான ஒரு மின் சுருள்.

**induction compass:** *(வானூ.)* **மின்தூண்டல் திசைகாட்டி:** இது ஒரு வகை திசை காட்டி. இதில், பூமியின் காந்தப்புலனைச் சுற்றிச் சுழலும் ஒரு மின்சுருளில் உண்டா கும் மின்னோட்டத்தைப் பொறுத் துக் குறியீடுகள் காட்டப்படு கின்றன.

**induction motor:** *(மின்.)* **தூண்டு மின்னோடி:** மாறிமாறி வரும் மாற்று மின்னோட் டம். இதன் மூலம் உண்டாகும் மின்னோட்டங்கள், நிலைமின் சுருள்கள் வேகமாக மட்டுமே செலுத்தப்படுகின்றன. நிலை மின் சுருள்கள் மூலம் உண்டாகும் மாறும் காந்தப்புலத்தினால் தூண் டப் பெறும் மின்னோட்டங்களி னால் சுழற்றப்படும் சுழலி.

**inductive circuit:** *(மின்.)* **தூண்டு மின் சுற்றுவழி:** ஒரு மின்சுற்றுவழி, மின்னோட்டம் மாறுபடும்போது கணிசமான அளவு மின்னியக்கு விசை தூண்டப்படுகிறது.

**inductive load:** *(மின்.)* **தூண்டு மின்சுமை:** மின்னழுத்தத்தைவிட

மின்னோட்டம் குறைவாக உண்டாகும்படி செய்கிற ஒரு மாறு மின்னோட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு மின்சுமை.

**inductive reactance** : (மின்.) **தூண்டு எதிர் வினைப்பு** : திருகு வளைவுடைய கம்பியைக்கொண்ட ஒரு மின்சுற்றுவழியில் மின்னோட்டம் பாய்வதற்கு எதிரீடு. இந்தத் திருகு வளைவுகள் ஓர் இரும்பு உட்புரியில் சுற்றப்பட்டிருந்தால் எதிரீடு அதிகமாக இருக்கும். ஒரு மின் சுருள்வழியாக மாற்று மின்னோட்டம் பாய்வதற்கு ஏற்படும் மின் தடையின் அளவு.

**inductivity** : (மின்.) **தூண்டு திறன்** : மின் தூண்டலுக்கான திறன் அல்லது ஆற்றல்.

**inductor** : (மின்.) **மின்தூண்டு கருவி** : தூண்டு மின் இயக்க விசையை (இ.மி.வி.) உண்டாக்கப்படும் ஒரு மின் கடத்தி.

**inductor type magneto:** (தானி. எந்.) **மின்தூண்டு வகைத் தனிக் காந்த மின்னாக்கி** : இது ஒரு நிலைக்காந்தம். மின்சுருள்கள் நிலையாக இருக்க, ஒரு மின்னகத்துடன் சுழல்கிறது.

**industrial automation**: (தானி.) **தொழில்முறை தானியக்கம்** : சரக்குகளையும், உற்பத்திப் பொருள்களையும் தானியக்க முறையில் உற்பத்தி செய்தல்.

**industrial life** : **தொழில் வாழ்க்கை** : தொழில் துறை தொடர்பான மனித நடவடிக்கை நடைபெறும் துறை.

**industrial system** : **தொழிலியல் அமைப்புமுறை**: தொழிற்சாலையை நிறுவி மேலாண்மை செய்யும் அமைப்பு முறை. தொழிற்சாலையில் உற்பத்தி, தொழிலாளரை வேலைக்கமர்த்துதல் முதலியவற்றை சீரமைத்தல்.

**industrial waste** : (கம்.) **தொழிலியல் கழிவு** : தொழில் நிறுவனங்களில் கையாளப்படும் செய்முறைகளிலிருந்து வெளிப்படும் திரவக் கழிவுப் பொருட்கள்.

**inert: செயலறு** : எந்தப் பொருளுடனும் எளிதில் ஒருங்கிணைந்து இயங்கும் ஆற்றலற்ற.

**inertia** : (இயற்.) **சடத்துவம்** : நிலையாக இருக்கும் ஒரு பொருள். அதே நிலையில் நிலைத்திருப்பதற்கு அந்தப் பொருளுக்குள்ள நாட்டம் அல்லது இயங்கும் ஒரு பொருள் அதே இயக்க நிலையிலேயே நிலைத்திருப்பதற்கு அந்தப் பொருளுக்குள்ள நாட்டம்.

**inertial force** : (விண்.) **செயலறு விசை** : முடுக்கு விசைக்குச் சமமான அளவில் அமைந்து எதிர்த் திசை இயங்குகிற, ஒரு முடுக்கு விசைக்கு எதிர்வினையாக உண்டாகிற விசை. இந்த விசையானது. முடுக்கு விசை நீடித்திருக்கும் வரையில் மட்டுமே நீடித்திருக்கும்.

**interior figures and letters** : (அச்சு.) **அடிநிலை எண்கள், எழுத்துகள்** : அச்சிட்ட வரியில் காலடியில் அமைக்கப்படும். எடுத்துக்காட்டு: $C_6H_5OH$.

**infiltration** : (குளி,பத.) **ஊடு பரவல்** : துளையுடைய சுவர். வெடிப்பு, கசிவு வழியாக காற்று உள்நோக்கி ஊடுபரவுதல்.

**infinite impedance** : (மின்.) **வரையிலா மறிப்பு** : மின்னியலில் பல கோடி மெகோ எச்.எம்,எஸ். அளவுள்ள மிக அதிக மறிப்பு.

**inflation** : **உப்பச் செய்தல்** : (1) காற்று அல்லது வாயு நிரப்பி உப்பச் செய்தல்.

(2) தகுதித் தரங்கள் குறித்துப்

போலியான நியதிகளை ஏற்படுத்துதல்.

**inflow** : *(வானூ.)* **உட்பாய்வு** : விமானத்தின் ஒரு முற்செலுத்தியினுள் காற்று உட்பாய்தல்.

**information** : *(மின்.)* **நுட்பச் செய்தி** : வானொலி அல்லது தொலைக்காட்சிச் சைகைகளில், படத்தகவல் போன்ற நுட்பச் செய்திகள்.

**infrared** : *(குழை.)* **அகச்சிவப்பு** : கட்புலனாகும் கதிர்வீச்சுடைய நிறமாலையின் சிவப்பு முனையின் கீழேயுள்ள கட்புலனாகாத கதிர் வீச்சு மண்டலம். இந்த கதிர்வீச்சு அலைகள் ஒளியைவிட ஊடுருவக் கூடியது. இந்த மண்டலத்தை வெப்பம் சூழ்ந்திருக்கும்.

**infrasonic** : *(மின்.)* **மிகையொலி அலைவெண்** : காதால் கேட்கக் கூடிய அலைவெண் வீச்சுக்கு அப்பாற்பட்ட ஒலி அலைவெண்கள்.

**infrared guidance** : *(விண்.)* **அகச்சிவப்பு வழிகாட்டி** : அகச்சிவப்பு வெப்ப ஆதாரங்களைப் பயன்படுத்தி இலக்குகளை உளவு பார்க்கவும், திசைகாட்டவும் பயன்படுத்தப்படும் ஓர் அமைவு.

**infusorial earth** : *(மண்.)* **மட்கிய மண்** : நுண்ணிய உயிரிகளின் எச்சங்களில் படிந்துள்ள மண் படிவம்.

**ingle nook**: *(க.க.)* **புகை போக்கி மூலை** : ஒரு கணப்படுப்பின் மூலைப்பகுதி.

**ingot** : **வார்ப்புக்கட்டி** : தங்கம், வெள்ளி, எஃகு போன்ற உலோக வார்ப்புக்கட்டி. உலோகம் தூய்மையாக்கப்பட்டதும் இத்தகைய வார்ப்புப் பாளங்களாகத் தயாரிக்கப்படுகின்றன. இவை பொதுவாகச் செவ்வக வடிவில் இருக்கும். இக்கட்டிகளில் தயாரிப்பாளர்களின் அடையாளக் குறி முத்திரையிடப்பட்டிருக்கும்,

**ingot iron** : **இரும்புக்கட்டி**: மென்மையான எஃகு. இதில் கார்பன் குறைவாக இருக்கும். இது, திறந்த உலை முறை அல்லது பெசமர் முறை மூலம் தயாரிக்கப்படுகிறது.

**ingredient** : **அமைப்பான்** : ஒரு கலவையின் கூறுகளில் ஒன்று.

**inherent stability** : *(வானூ.)* **உள்ளார்ந்த உறுதிப்பாடு** : ஒரு விமானத்தின் உறுப்புகளை முறைபட அமைத்துப் பொருத்துவதால் ஏற்படும் உள்ளார்ந்த உறுதிப்பாடு.

**inhibitor**; *(வேதி.)* **தடையுறுத்து பொருள்** : வேதியியல் வினைப்பாட்டினை நிறுத்துகிற அல்லது மந்தமாக்குகிற ஒரு வேதியியல் காரகி. துருப்பிடிப்பதைத் தடுக்கும் அல்லது வேகங்குறைக்கும் ஒரு பொருள்.

**inhibitors** : *(தானி.)* **தடைக்கட்டுப் பொருள்** : சீர் குலைவைத் தடுப்பதற்காக எண்ணெயுடன் சேர்க்கப்படும் சேர்மானப் பொருள்.

**initial** : *(அச்சு.)* **தலைப்பு எழுத்துக்கள்** : அத்தியாயங்களின் அல்லது முக்கிய பிரிவுகளின் தொடக்கத்தில் பயன்படுத்தப்படும் பெரிய எழுத்துக்கள்.

**initial velocity** : *(இயற்.)* **தொடக்க வேகவீதம்** : ஒரு பொருளின் இயக்க வேகவீதம் எந்த நிலையிலிருந்து கணக்கிடப்படுகிறதோ அந்த நிலையில் அதன் இயக்க வேகவீதம்.

**injection moulding**: **உட்செலுத்து வார்ப்பு** : சூட்டால் நிலையாக இறுகி விடுந் தன்மையுடைய வெப்பத்தினால் மென்மையாக்கப்பட்ட வார்ப்படப் பொருளை நன்கு

சூடாக்கிய உலோக வார்ப்படத்தினுள் ஒரு திமிசு மூலம் செலுத்தி உருவாக்கும் வார்ப்படம். திமிசை வெளியில் எடுத்ததும், வார்ப்படம் திறந்து கொண்டு, உருவாக்கிய பொருளை வெளித் தள்ளிவிட்டு, அடுத்த சுழற்சிக்காக மூடிக்கொள்கிறது.

**injector**: *(பொறி.)* **உட்செலுத்தி:** ஒரு நீராவிக் கொதிகலனுக்குள் தொடர்ந்து நீரினைச் செலுத்துவதற்குப் பயன்படுததப்படும் ஒரு சாதனம்.

**ink** : *(அச்சு.)* **மை அட்டை :** அச்சுருக்கள் மீது மை பூசுவதற்காகப் பயன்படுத்தப்படும், பஞ்சு திணித்த தோல் அட்டை. உருளை அச்சு எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு இவை பயன்படுத்தப்படுவதில்லை.

**ink ball** : *(அச்சு.)* **மைக்கோளம் :** அச்சுருக்கள் மீது மை பூசுவதற்காகப் பயன்படுத்தப்படும், பஞ்சு திணித்த தோல் பந்து. உருளை அச்சு எந்திரங்கள் பயனுக்கு வந்ததும் இது பயனற்றுப் போயிற்று.

**ink disk**: *(அச்சு.)* **மைத் தட்டம் :** வட்டவடிவமான தட்டு அல்லது தட்டம். இதில் மை தடவப்பட்டு, அச்சுத்தாள் அழுத்தும் தகட்டுப் பாளத்தில் பரப்பப்படுகிறது.

**ink fountain**: *(அச்சு.)* **மை ஊற்று:** ஓர் அச்சு எந்திரம் இயங்கும் போது அதன் தட்டத்திலும் உருளைகளிலும் தானாகவே மையை ஊட்டும் ஒரு சாதனம்.

**inking in** : **மைப்பூச்சு :** ஒரு வரைபடத்திற்கு மைபூச்சுக் கொடுக்கும் முறை.

**ink knife** : *(அச்சு.)* **மைக் கத்தி :** மைகளைக் கலப்பதற்காகப் பயன்படும் வண்ணத் தட்டுக்கத்தி.

**inlaid work** : **உட்பதிவு ஒப்பனை:** கல் முதலியனவற்றை உள் அழுந்தலாகப் பதித்துச் செய்யப்படும் அலங்கார வேலைப்பாடு.

**inlay :** **உட்பதிவு :** *(1)* தந்தம், மரம் உலோகம் ஆகியவற்றின் துண்டுகளை இன்னொரு பொருளில் உட்பதித்துச் செய்யப்படும் அலங்கார வடிவமைப்பு.

*(2)* இத்தகைய ஒப்பனை வடிவமைப்பு.


**inlet port**: *(தானி.)* **நுழைவாயில்:** நீள் உருளைக்கு எரிபொருளைச் செலுத்துவதற்கான நுழைவாடம்.

**in-line engine** : *(தானி.)* **உள்வரி எஞ்சின்:** நீள் உருளைகள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையில் அடுக்கப்பட்டுள்ள எஞ்சின்.

**inorganic** : *(வேதி.)* **கரியமற்ற :** கரியம் (கார்பன்) உள்ளடங்கியிராத வேதியியற்பொருட்கள்.

**input** : *(இயற்.)* **உட்பாடு :** ஒரு வேலையைச் செய்வதற்குச் செலவாகும்ஆற்றலின் மொத்த அளவு.

**inscribe :** *(1)* **எழுத்துப் பொறிப்பு** நீண்ட நாள் இருக்கும் வகையில்



எழுத்துப் பொறிப்பு

எழுதிப் பதிவு செய்தல் அல்லது பொறித்து வைத்தல்.

*(2)* **உள்வரை :** ஓவியத்தில் ஓர் உருவத்திற்குள் இன்னொரு உருவத்தை வரைதல்.

**insert,(same as inset):***(அச்சு.)* **இடைச்செருகுப் பக்கம் :** ஒரு புத்தகத்தைக் கட்டுமானம் செய்வதற்கு முன்பு, அதிகப்படியான பக்கங்களைத் தனியாக அச்சடித்து உரிய இடங்களில் இடைச்செருகி வைத்தல்.

**inserted blade cutters** : *(எந்.)* **செருகு வெட்டுக்கத்திகள்:** உலோகத் தகட்டில் வடிவரிசைத் துளைகள் இடுவதற்கான பெரிய அளவு வெட்டுக்கத்திகள். இதில் அதிவேக எஃகுக்கத்திகள் உரிய நிலைகளில் செருகப்பட்டு வெட்டும் வேலை செய்யப்படுகிறது.

**inserted tooth cutter** : *(எந்.)* **செருகு பல்வெட்டி** : செருகப்பட்ட பற்களைக்கொண்ட ஒரு வெட்டுச் கருவி. இதில், பல்வேறு முறைகளில் பற்கள் பொருத்தப்படுகின்றன. வெட்டுக்கருவி ஆறு அங்குலம் அல்லது அதற்கு அதிகமான விட்டமுடையதாக இருக்கும்போது இந்தச் செருகு பற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**insertion loss** : *(மின்.)* **செருகல் இழப்பீடு :** ஒருசில சாதனங்களை அல்லது கருவிகளைச் செருகுவதன் காரணமாக மின் அனுப்பீட்டு முறையில் ஏற்படும் இழப்பீடு.

**inside calipers** : *(பட்.)* **உள்முக விட்டமானி** : இதில் கால்களின் நுனியிலுள்ள புள்ளிகள், உள்முகமாக, வளைந்திருப்பதற்குப் பதிலாக வெளிப்புறமாக வளைந்திருக்கும் இதனால், உள்முக விட்டங்களை அளவிடுவதற்கு இது பயன்படுகிறது.

**inside thread :** *(எந்.)* **உள்முகத் திருகிழை :** ஒரு மரையாணியைப் பொருத்துவதற்கேற்ப உள்முக விட்டத்தில் வெட்டப்பட்ட திருகிழை,

**inspection** : *(எந்.)* **ஆய்வு செய்தல் :** உற்பத்தி செய்த பொருட்களின் உறுப்புகளும் மூலப்பொருட்களும் குறித்துரைக்கப்பட்ட தர அளவுகளில் அமைந்திருக்கின்றனவா என்பதை அறிந்துகொள்வதற்காக ஆய்வுசெய்திடும் முறை.

**inspection bench**: *(பட்.)* **ஆய்வு மேசை** : மேல்மட்டம் வழுவழுப்பாக அமைந்த ஒரு மேசை, இது பெரும்பாலும் உலோகத்தில் செய்யப்பட்டிருக்கும். இதன்மேல் அளவு கருவிகள் வைத்துப் பொருட்கள் ஆய்வு செய்யப்படும்.

**inspection gauges:** *(எந்.)* **ஆய்வு அளவிகள்:** கொள்வினை செய்யப்படும் பொருளின் துல்லியத்தைச் சோதனை செய்வதற்குக் கொள்வினை செய்வதற்குப் பயன்படும் அளவு கருவிகள்.

**inspector :** **ஆய்வாளர்** : ஒரு பொருளின் தரமும் அளவும் வேண்டுறுத்தங்களுக்கேற்ப இருக்கின்றனவா என்பதைக் கண்டறியும் கடமை கொண்டுள்ள அதிகாரி.

**instellation** : **நிறுவுதல் :** எந்திர: சாதனங்கள், மின்னாக்கக் கருவிகள் முதலியவற்றை அதனதன் நிலையில் பொருத்தி வைத்தல்.

**instalment**: **தவணை :**
(1) தவணையில் வழங்குதல்.
(2) தவணை முறையில் பணம் வழங்குதல்.

**instrument flying** : *(வானூ.)* **கருவியால் பறத்தல்** : கருவிகளைப் பயன்படுத்தி மட்டுமே விமானத்தைக் கட்டுப் படுத்தும் கலை. இதனை 'நிலங்காணாது பறத்தல்' என்றும் கூறுவர்.

**instrument panel** : *(தானி.எந்.)* **கருவிச்சேணம்** : விமானம் ஓட்டியின் கண்ணுக்கு எளிதில் தெரியும்படி பல்வேறு கருவிகளும், சுட்டு கருவிகளும் பொருத்தப்பட்டுள்ள மென்பலகை.

**instrument transformer:** *(மின்.)* **அளவி மின்மாற்றி :** உயர்ந்த அளவு மின்னழுத்தங்களை அதிகப் பதிவுத் திறன் கொண்ட மானியாலும் அறிந்து கொள்வதற்கு உதவும் சாதனம்.

**insulated**: (க.க ) **காப்பிடப்பட்ட:** (1) கட்டிடங்களை அல்லது தூண்களை மற்றக் கட்டிடங்களி லிருந்து அல்லது தீப்பற்றும் பொருள்களிலிருந்து பாதுகாப் பாகப் பிரித்து வைத்தல்.

(2) மின்விசையோ வெப்பமோ பாயாதவாறுகாப்பிட்டு வைத்தல்.

**ihsulating tape** : (மின்.) **மின் காப்பு நாடா:** மின் காப்புப் பொரு ளில் தோய்த்து மின் கடத்தாத வாறு செய்யப்பட்டுள்ள ஒட்டுப் பசையுடைய நாடாமின் இணைப் புக் கம்பிகளையும், வெளியில் தெரியும் பகுதிகளையும் மூடி மறைக்கப் பயன்படுகிறது.

**insulating transformer** : (மின்) **மின்காப்பு மின்மாற்றி** : கிளர் மின் னோட்டத்தை தாங்கிச் செல்லும் கம்பிச் சுருளிலிருந்து முதல் நிலை மின்னாற்றலைக் கவனமாகப் பிரித்தும் மின்காப்பு மின்மாற்றி, இதில் நிலை மின்னாற்றலுக்கும் கிளர்நிலை மின்னாற்றலுக்கும் இடையில் மின்னியல் உலோகத் தொடர்பு ஏதுமில்லை.

**insulating varnish** : (மின்.) **மின்காப்பு மெருகெண்ணெய்** : சிறந்த மின்காப்பு இயல்புகள் கொண்ட ஒரு தனிவகை மெரு கெண்ணெய். இது மின்சுருள்களி லும். சுருணைகளிலும் பயன்படுத் தப்படுகிறது.

**insulation** : (க.க.) **தீக்காப்புப் பொருள்** : தீப்பிடிக்காத பொருள் களில் ஒன்று. தீவிபத்துகளைத் தடுப்பதற்காகவும் வெப்ப குளிரி லிருந்து பாதுகாப்பதற்காகவும் கட்டிடக் கட்டுமானத்தில் பயன் படுத்தப்படுகிறது.

**insulation resistance** : (மின்.) **மின்காப்புத் தடை** : ஒரு மின் சுற்று வழியின் மின் கடத்திகளும் அல் லது ஓர் எந்திரத்தின் மின் சுருணைக்கும், தரை, மண் அல் லது சட்டகத்திற்குமிடையிலான தடை.

**insulator** : (மின்.) **மின்காப்பி** : கடத்தாத கண்ணாடி, பீங்கான் போன்ற பொருள்கள்.

**insulin** : (உட.) **கணையச்சுரப்பு நீர்** : கணையத்தில் சுரக்கும் நீர்ப் பொருள். இது தசைகள். இரத்தத் திலிருந்து சர்க்கரையை எடுத்து, அதை உடைத்து எரியாற்றலாக மாற்ற உதவுகிறது. நீரிழிவு நோய் உடையவர்களிடம் இந்தப் பொருள் சுரப்பதில்லை. அதனால் இரத்தத்தில் சர்க்கரை அதிகமா கிறது. எனவே, விலங்குகளின் கணையச் சுரப்பியிலிருந்து எடுக் கப்பட்ட கணையச் சுரப்பு நீர் நீரிழிவு நோயாளிகளுக்கு ஊசி மூலம் செலுத்தப்படுகிறது.

**intaglio** : **செதுக்கு வேலைப்பாடு** : மரம், உலோகம் போன்ற கடின மான பொருள்களின் மீது செய்யப் படும் செதுக்குவேலைப்பாடு. இது புடைப்புச் சித்திர வேலைப்பாடு களிலிருந்து வேறுபட்டது.

**intaglio printing**: **செதுக்கு முறை அச்சுக்கலை** : செதுக்கு வேலைப் பாட்டு அச்சுப்பாளங்களிலிருந்து செதுக்கிய செப்புத்தகடுகளி லிருந்து அச்சிடும்முறை.

**intake** : (தானி.எந்.) **கொள் பொருள்** : வாயு அல்லது பெட் ரோல் எஞ்சினின் புழைவாயிலின் வழியே பாயும் எரிபொருள் கலவை.

**intake belt course** : (க.க.) **உள் வாய் வார்ப்பட்டை வழி** : கட்டிடத் தின் இரு சுவர்களின் வேறுபட்ட திண்மைகளுக்கிடையில் உள் வாயாகப் பயன்படும் வகையில் சித்திரவேலைப்பாடு வெட்டப் பட்ட வார்ப்பட்டை வழி.

**intake header** : (வானூ.) **உள் வாய் நுண்புழை** : உந்துகலம்,

விமானம் முதலியவற்றின் மீவிசைக் காற்றடைப்புக் குழாய்க்கு எஞ்சின் மேல் மூடியின் புறப் பகுதியிலிருந்து நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு குறுகிய நுண்புழை.

**intake manifold** : (தானி.) **உள் வாய்க் கவர்குழாய்** : Y-வடிவிலுள்ள கிளைக்குழாய். இதன் வழியாக எரியும் வாயுக் கலவையும், காற்றும் எரி-வளி கலப்பிலிருந்து இயக்கு பொறிக்குச் செல்கின்றன.

**intake valve** : (தானி.) **உள்ளிழுப்பு ஓரதர்** : நீள் உருளையில் உள் இழுப்புப் பகுதியிலுள்ள ஓரதர்.

**intarsia** : **உட்பதிவு வேலைப்பாடு**: மரத்தில் செய்யப்படும் ஒருவகை உட்பதிவு வேலைப்பாடு. 15ஆம் நூற்றாண்டில் இத்தாலியர்கள் இதனைப் பெருமளவில் பயன்படுத்தினர்.

**integer** : (கணி.) **முழு எண்** : ஒரு பின்னமாக இல்லாத முழுமையாகவுள்ள எண்.

**integral** : **முழுமை அளவை** : பகுக்க முடியாத உறுப்புகளின் முழுமொத்தம். எடுத்துக்காட்டாக ஒரு முனைந்த பகுதியுள்ள சுற்றுருளையின் முனைப்புகள் அந்த உருளையின் முழுமொத்த உறுப்புகளாகும்.

**integral calculus** : (கணி.) **தொகையீட்டுக் கலனம்** : வகையீட்டுக் கலனத்திற்கு எதிர்மாறானது. தனியொரு மாறியல் மதிப்புருவின் வகையீடு அறியப்பட்டிருக்கும் போது அதன் சார்பலனைக் கண்டுபிடிப்பது இக்கணிதத்தின் நோக்கம், வளைகோடுகளின் பரப்பளவுகள், வளைகோடுகளின் நீளங்கள்: திடப்பொருள்களின் கன அளவுகள் பரப்பளவுகள், படிமைத் திருப்புமைகள், சராசரி மதிப்பு, நிகழ்தகவு ஆகியவற்றைக் கண்டுபிடிக்க இது உதவுகிறது.

**integration** : **தொகையீடு/ஒருங்கிணைப்பு** : பல்வேறு உறுப்புகளை ஒருங்கிணைத்து முழுமையாக உருவாக்குதல்.

**intensifier**; (எந்.) **செறிவாக்கி**: குறைந்த அழுத்தத்தினை உயர்ந்த அழுத்தமாக மாற்றுவதற்கென நீரியல் சேமிப்பானுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் ஒரு சாதனம்.

**intensity of light**: (மின்.) **ஒளிச் செறிவு**: ஒளியூட்டும் ஆதாரம் ஒன்றன் ஒளியடர்த்தித் திறன்.

**intensity of pressure** : (இயற்.) **அழுத்தச் செறிவு** : ஒரு பாய்மரத்தின் விசை ஆற்றல் அல்லது வினைத் திறனளவு. இது செயற்படும் இடைவெளிக்கும் இதற்குமுள்ள விகிதத்தின் அடிப்படையில் இது மதிப்பிடப்படுகிறது.

**interceptor** : (வானூ.) **இடைமறிப்பு விமானம்**: பகை விமானங்களைப் பின்பற்றிச் சென்று துரத்தி இடைமறிப்பதற்கேற்ற பளுவற்ற விரைவிமானம்.

**inter changeable gear**: **பரிமாற்றப் பல்லிணை**: ஒரே மாதிரியான இடைவெளியளவுடைய பிற பல்லிணை எதனுடனும் முறையாகக் கொளுவி இணையக்கூடியவாறு பற்கள் அமைக்கப்பட்ட பல்லிணை.

**intercom**: (மின்.) **இடைச் செய்தித் தொடர்பு** : தொழிற்சாலைகள், வாணிக நிறுவனங்கள் போன்ற பல இடங்களில் அலுவலகங்களைக் கொண்ட அமைவனங்களில் அலுவலகங்களிடையே தொடர்பு கொள்வதற்குப் பயன்படும் இடைத்தொலைபேசி அமைப்பு முறை.

**intercontinental ballistic missile**: (விண்.) **கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் ஏவுகணை**: ஒரு

கண்டத்திலிருந்து இன்னொரு கண்டத்திலுள்ள இலக்குகளைத் தாக்குவதற்குச் செலுத்தப்படும் ஏவுகணை.

**inter electrode capacitance**: (மின்.) **மின் முனையிடைக் கொண்மம்**: ஓர் எலெக்ட்ரான் குழலில் உள்ள உலோக உறுப்புகளிடையிலான கொண்மம்.

**interference** : (வானொ.) **இடையீடு**: (1) இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட பொருள் ஒன்றன்மீது ஒன்று ஏற்படுத்தும் வளியியக்கத் தாக்குறவு.

(2) வானொலியில் பெறப்படும் சைகைகளில் மாற்றத்தை அல்லது ஏற்றத்தாழ்வை உண்டாக்கும் மின்னியல் அல்லது காந்த உலைவு.

(3) தொலைக்காட்சியில் ஒலியையும் ஒளியையும் குலைக்கும் போலியான மின்னியல் சைகைகள்.

**interferometer**: (உலோ.) **ஒலியலை அளவுமானி**: இடையீட்டுத் தடுப்பு மூலம் ஒலியலைகளின் நீளத்தை அளக்கும் கருவி.

**intergalactic space** : (விண்.) **வான்கங்கை இடைவெளி** : வான் கங்கைகளுக்கு இடையேயுள்ள இடைவெளி தூரம்.

**interior finish**: (க.க.) **உட்புறச் செப்பம்**: (1) ஒரு கட்டிடத்தின் உட்புறத்தில் செய்யப்படும் இறுதிச் செப்பத்தின் விளைவு.

(2) கட்டிடத்தின் உட்புற அலங்காரங்களை இறுதியாகச் செப்பமிடுவதற்குப் பயன்படும் ஒரு பொருள்.

**interlacing**: **இடையீட்டு இணைப்பு**: தொலைக்காட்சியில் தொலைவுக்கனுப்பும்படி நிழல் ஒளிக்கூறுகளைத் தனித்தனியாகப் பிரித்தெடுக்கும் முறை. இதில் ஒற்றப்படை எண்ணிக்கை வரிகள் தனிப்புலமாக அனுப்பப்படுகின்றன. இரட்டைப்படை எண்ணிக்கை வரிகள் பின்னர் மேலடுக்கில் நிரப்பப்பட்டு முழுப்படமாக உருவாக்கப்படுகிறது.

**interlock**: (மின்.) **இடைப்பூட்டு**: உயர் மின்னழுத்தங்களையுடைய பெட்டிகளின் கதவுகளிலுள்ள ஒரு காப்புவிசை. கதவைத் திறந்ததும் உயர் மின்னழுத்தச் சுற்றுவழிகள் செயலற்று விடும்.

**interlocking**: (எந்.) **இடைப்பூட்டு செய்தல்**: கண்ணறுத்துப் பொருத்துவதன் மூலம் ஒன்றாக இணைத்தல்.

**intermediate frequency**: **இடையீட்டு அலைவெண்**: வானொலியில், மீமிகை ஒலியலை மாற்றி ஒலிவாங்கியில் கலப்பியினால் அல்லது முதலாவது பிரிப்பானால் பெறப்படும் சிறந்த அலைவெண்.

**intermediate gear**: **இடையீட்டுப் பல்லிணை**: திசை மாற்றாமலேயே ஒரு சக்கரத்திலிருந்து மற்றொன்றிற்கு விசையைச் செலுத்துவதற்காக அவற்றுக்கிடையே பொருத்தப்படும் மூன்றாவது பற்சக்கரம்.

**intermittent gear**: (பட்.) **இடைவிட்ட பல்லிணை**: பற்கள் தொடர்ச்சியாக இல்லாத ஒரு பல்லிணை. ஆனால் இதில் இடையிடையே சமதளப்பரப்புகள் இருக்கும். இந்தச் சமதளப் பரப்புகளில் இயங்கும் சக்கரம்படும்போது நிலையாக இருக்கும்.

**intermodulation** : (மின்.) **இடை அலைமாற்றம்**: சிக்கலான ஒரு மின்னலையை மற்றொரு மின்னலையாக மாற்றுதல். இது அலைவெண்களின் கூட்டுத்தொகையாகவும், வேறுபாடாகவும் குறிக்கப்படும்.

**internal circuit**: (மின்.) **உள் மின்சுற்றுவழி** : புறமுனைகளுக்

கிடையே சேர்க்கப்பட்ட ஒரு மின்னியல் சுற்று வழியின் பகுதி. உள் மின்சுற்றுவழியில் ஏற்படும் தடையினால் மின் இழப்பு ஏற்படுவதுடன், மின்கலத்தின் அல்லது மின்னாக்கியின் உற்பத்தித் திறனளவையும் குறைக்கிறது.

**internal combustion engine:** (எந்.) **உள்ளெரி எஞ்சின்:** ஓர் அடைபட்ட அறைக்குள் அல்லது நீள் உருளைக்குள் உள்ள எரி பொருள் எரிவதால் விரிவாக்க விசை ஏற்படுவதன் மூலம் இயக்க விசை உண்டாகும் எஞ்சின்.

**internal forces :** (இயற்.) **அக விசைகள்:** ஒரு பொருளின் மூலக் கூறுகள் இயங்குவதால் அந்தப் பொருளின் உள்ளே உண்டாகும் விசைகள்.

**internal gear: அகப்பல்லிணை:** ஒரு வளையத்தின் உட்புறப் பரிதியில் அமைக்கப்பட்டுள்ள பற்களில் பொருந்தி பற்சக்கரங்கள் சுழலும் போது, அந்தப் பல்லிணை "அகப் பல்லிணை" எனப்படும்.

**internal gear drive:** (தானி.) **அகப்பல்லிணை இயக்கம்:** வேக விகிதத்தை அதிகரிப்பதற்காக அல்லது குறைப்பதற்காக, ஓர் அகப்பல்லிணை, ஒரு சுழல் நுனியுடன் கொளுவி இணைத்து இயங்கும் இயக்கம். பின்புற அச்சு இயக்கம் இதற்கு எடுத்துக்காட்டு.

**internal grinder :** (எந்.) **அக உராய்வு எந்திரம் :** நீள் உருளைகளைத் துல்லியமாக வடிவமைப்பதற்கும், மற்ற உட்புற நுட்ப வேலைப்பாடுகளுக்கும் பயன்படக் கூடிய ஒரு உராய்வு எந்திரம்.

**internal resistance :** (மின்.) **அகத்தடை :** மின்னழுத்தத்தின் அல்லது மின்னியக்க விசையின் ஆதாரத்திலுள்ள உள்தடை. மின் கலத்தில் அல்லது மின்னாக்கியில் இந்த அகத்தடை உள்ளது.

**internal thread:** (எந்.) **அகத் திருகிழை :** ஒரு பொருளின் உட்புறம் வெட்டப்பட்டுள்ள திருகிழை. ஒரு மரையாணியில் இவ்விதம் திருகிழை வெட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

**interplanetary space :** (விண்.) **கோள்களிடைவெளி :** சூரிய மண்டலத்தின் வரம்புகளுக்கு அப்பால், கோள்களுக்கிடைப்பட்டதாகவுள்ள இடைவெளி.

**interteller flight :** (விண்.) **விண்மீன்களிடைப் பயணம் :** கதிரவன் அண்டத்திற்கு அப்பாற்பட்டு, விண்மீன்களுக்கிடையே பறந்து பயணஞ்செய்தல்.

**interpolation :** (கணி.) **இடைமதிப்பீடு :** கொடுக்கப்பட்டுள்ள தொடர்பு வரிசைகளில் இடையிலுள்ள ஓர் உருவின் மதிப்புகளை கணக்கிடுதல்.

**Inter-pole :** (மின்.) **இடைமுனை :** பிரதான களப் புலங்களிடையே வைக்கப்பட்டு மின்னகத்தின் மூலம் தொடர்பு வரிசைகளில் மின்னியல் முறையில் இணைக்கப் பட்டுள்ள ஒரு சிறிய புலமுனை.

**inter-rupted arch : இடையறு கவான்:** வில்வளைவுடைய முகப்பு. இதன் மையப் பகுதி துண்டுபட்டிருக்கும்.

**interrupter :** (மின்.) **இடையறுப்பான் :** ஒரு மின்சுற்றுவழியில், மிக அடுத்தடுத்த இடைவெளிகளில் மின் இணைப்பைத் துண்டிக்கவும், இணைக்கவும் செய்யக்கூடிய ஒரு சாதனம்.

**inter-sect: குறுக்குவெட்டு:** குறுக்காகச் செல்; ஊடறுத்தல்; குறுக்கிட்டுப் பிரித்தல்.

**inter-section :** (வடி.கணி.) **குறுக்கு வெட்டுப் புள்ளி :** வடிவ கணிதத்தில் ஒன்றையொன்று


குறுக்கு வெட்டும் பொருள்கள் குறுக்கிட்டுச் சந்திக்கும் புள்ளி.

**interstice : சிறு இடைவெளி:** சிறு வெடிப்பு அல்லது ஒடுங்கிய பிளவு.

**inter-type :** *(அச்சு.)* **வரிவாரி அச்சுக்கோப்பான் :** அச்செழுத்துக் களை வரிவரியாக வார்த்து உரு வாக்கும் அச்சுக்கோப்பு எந்திரம். இது வரி உருக்கச்சுப்பொறி போன் றது.

**interval :** *(பட்.)* **இடைவெளி :** ஒரேமாதிரியான எந்திரச் செயற் பாடுகளிடையே காலஇடைவெளி.

**intestine :** *(உட.)* **குடல் :** உணவுக் குழா யின் கீழ்ப்பகுதி. இது பெருங் குடல், சிறு குடல் என இரு பகுதிகளைக் கொண்டது.



குடல்

**intrados or soffit : உட்புற வளைவு :** ஒரு வளைமுகட்டின் உட்புற வளைவு.

**intrinsic energy : உள்ளார்ந்த ஆற்றல் :** இரு தனிமங்கள் (எ-டு : ஆக்சிஜன், கார்பன்) இணையும் போது ஒரு குறிப்பிட்ட அளவு வெப்பம் உண்டாகிறது. எனவே, அவை இணைவதற்கு முன்பே, அவற்றில் ஓரளவு வெப்பம் அடங்கியிருந்தது எனலாம். இது அவற்றின் உள்ளார்ந்த எரியாற் றல் ஆகும்.

**invar :** *(மின்.)* **இன்வார் :** மின் தடைப்பொருளாகப் பயன்படும், மிகக்குறைவான விரிவகற்சி அல கெண்ணுடைய நிக்கல் — எஃகு உலோகக் கலவை.

**invarstrut** *(தானி.)* **கலவை எஃகுக் காழ்:** மிகக் குறைவான விரி வகற்சி அலகெண்ணுடைய ஜெர் மன் வெள்ளி எஃகுக் கலவையில் செய்த தாங்கு காழ். இது உந்து தண்டுகளின் விளிம்புக்கும் தலைப் பகுதிக்குமிடையில் விரிவாக்கத் தைச் சமநிலைப்படுத்துவதற்காக அலுமினியம் உந்து தண்டுகளில் பொருத்தப்பட்டிருக்கும்.

**invention: புத்தாக்கப் புனைவு:** புதிதாகப் புனைந்து உருவாக்கிய ஒரு கோட்பாடு, உத்தி அல்லது சாதனம்.

**inventory: விளக்க விவரப்பட்டி:** ஒரு வாணிகத்தில் கையிருப்பி லுள்ள சரக்குகளின் அல்லது பண் டங்களின் இனவாரியான விவரப் பட்டி. அவ்வாறு பட்டியலிடப் பட்ட சரக்குகளையும் பண்டங் களையும் இது குறிக்கும்.

**inverse: தலைகீழ்த் தகவு:** நிலை ஒழுங்கு, உறவு முதலியவற்றில் தலைகீழ் எதிர்மாறான விளைவு.

**inverse square law:** *(மின்.)* **தலைகீழ் வர்க்கவிதி:** ஓர் இயற் பியல் அளவானது, மதிப்பில் தொலைவின் வர்க்கத்திலிருந்து குறைந்து வருகிறது என்னும் விதி. எடுத்துக்காட்டாக, ஆதாரத்தி லிருந்து தொலைவின் வர்க்கத்தி லிருந்து ஒளிர்வின் செறிவு குறைந்து கொண்டுவரும்.

**invert:** *(கம்மி.)* **தலைகீழ்ப் பகுதி:** செங்குத்தாக இல்லாத ஒரு குழா யின் அல்லது நீர் செல்குழாயின் உட்புறத்தில் அடிப்பகுதி.

**inverted arch:** *(க.க.)* **தலைகீழ் கவான்;** கவானின் வளைவு முகட் டுக்கல் மிகவும் கீழே அமைந்திருக் குமாறு அமைக்கப்பட்ட கவான்.

**inverted engine** *(வானூ.)* **தலை கீழ் எஞ்சின்:** நீள் உருளைகள் வணரி அச்சுத் தண்டுக்குக் கீழே அமைந்துள்ள ஓர் எஞ்சின்.

**inverted normal loop:** *(வானூ.)* **தலைகீழ் இயல்பு வளைவு:** விமா னம் தலைகீழாகப்பறப்பதிலிருந்து தொடங்கி பாய்ச்சல், இயல்பாகப்

பறத்தல், மேலேறுதல் இவற்றை வெற்றிகரமாகச் செய்து மீண்டும் தலைகீழாகப் பறக்கும் நிலைக்கு வருதல்.

**inverted outside loop** *(வானூ.)* **தலைகீழ்ப்புற வளைவு:** *விமானம் தலைகீழாகப் பறப்பதிலிருந்து தொடங்கி, மேலே ஏறுதல், இயல்பாகப் பறத்தல், பாய்தல், இவற்றை வெற்றிகரமாகச் செய்து மீண்டும் தலைகீழாகப் பறக்கும் நிலைக்கு வருதல்.*

**inverted spin**: *(வானூ.)* **தலைகீழ் சுழற்சி:** *விமானம் தலை கீழ் நிலையிலிருந்து இயல்பாகச் சுழலும் ஓர் உத்தி.*

**inverter**: *(மின்:)* **மின்மாற்றி :** *நேர்மின்னோட்டத்தை மாறுமின்னோட்டமாக மாற்றுவதற்கான ஒரு மின் எந்திரவியல் அமைப்பு.*

**involute : உட்சுருள் :** *வட்டமையத்தை அடுத்த உள்வட்டத்தின் மீது உள்வளை கோட்டமுறும் வட்டவளைவு.*

**involute gear** : *(எந்.)* **உட்சுருள் பல்லிணை :** *உட்சுருள் முறைக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்ட பல்லிணை முறை. இது வட்டப்புள்ளி நெறிவளைவு முறையிலிருந்து வேறுபட்டது. இப்போது வட்டப்புள்ளி நெறி வளைவுமுறை பல்லிணைகளைவிட உட்சுருள் பல்லிணை முறையே அதிகம் பயன்படுத்தப்படுகிறது.*

**involute teeth : உட்சுருள் பல் :** *பல்லிணையில் பெருமளவில் பயன்படுத்தப்படும் பல். இது உட்சுருள் வளைவினை அடிப்படையாகக் கொண்டது.*

**involution**: *(தானி.)* **விசை அமுக்கம் :** *கணிதத்தில் ஓர் எண்ணை அந்த எண்ணாலேயே எத்தனை மடங்குக்கும் பெருக்கி, அந்த எண்ணை எத்தனை விசைப்பெருக்கத்திற்கும் உயர்த்துதல்.*

**iodide :** *(வேதி.)* **அயோடைடு :** *பிறிதொரு தனிமத்துடன் அயோடின் சேர்ந்த கூட்டுக்கலவை. பொட்டாசியம் அயோடைடு போன்ற அமில உப்பு.*

**iodine :** *(வேதி.)* **அயோடின் (கறையம்) :** *கரியப் பொருளைக் கருந் தவிட்டு நிறமாகக் கறைப்படுத்தும் இயல்புடைய ஒரு தனிமம். இது சிலியன் உவர்க்கார நைட்ரேட்டிலிருந்தும், கடற்பாசிகளின் சாம்பலிலிருந்தும் தயாரிக்கப்படுகிறது. நோயாளிகளுக்கு உள்ளே கொடுக்கவும் வெளியே பூசவும் மருந்தாகப் பயன்படுகிறது. சாயப்பொருள்களாலும் பயன்படுத்தப்படுகிறது.*

**ion :** *(வேதி.)* **அயனி :** *(1) மின் பகுப்புச் சிதைவுக் கோட்பாடு பற்றியது. அதாவது, அமிலங்கள், காரங்கள், உப்புகள் ஆகிய அனைத்தின் மூலக்கூறுகளும் நீரிலும் வேறு சில கரைப்பான்களிலும் கரையும்போது பல்வேறு அளவுகளில் சிதைவுறுகின்றன என்னும் கோட்பாடு.*

*(2) ஓர் அணு அதன் எலெக்ட்ரான்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எலெக்ட்ரான்களை இழந்து, அதில் நேர்மின்னேற்றம் மட்டுமே இருக்குமாயின் அது அயனி எனப்படும்.*

**ion burn : அயனி எரியழிவு :** *ஓர் எதிர்முனைக் கதிர்க் குழலின் ஒளித் திரையின் மையத்தில், எதிர்மின் அயனிகள் வலுவாகத் தாக்குவதால் உண்டாகும் நிற மாறுபாடு.*

**ionic order : அயோனிய பாணிக் கட்டிடக் கலை:** *அயோனியாவைச் சேர்ந்தவர்கள் வகுத்த கட்டிடக் கலைப் பாணி. இதில் தூண் தலைப்பின் இரு புறமும் சுருள்*

அணி அலங்கார அமைப்பு முக்கிய அம்சமாகும்.

**ionic valence bond** : *(மின்.)* **அயனி ஒருங்கிணைவு :** ஓர் அணுவின் புற வளையத்திலுள்ள எலெக்ட்ரான்கள், மற்றொரு அணுவின் புற வளையத்திற்கு எலெக்ரான்களைக் கொடுக்கும் வகையில் அணுக்கள் ஒருங்கிணைந்திருத்தல். எடுத்துக்காட்டு: ஹைட்ரஜனும், ஆக்சிஜனும் ஒருங்கிணைந்து நீர் உண்டாகிறது.

**ionization** : *(வேதி.)* **அயனியாக்கம்** : மின்பகுப்புப் பொருளாகப் பயன்படும் ஒரு கலவைப் பொருளை நேர்மின், எதிர்மின் அயனிகளாகப் பகுத்தல்.

**ionization potential** : *(மின்.)* **அயனியாக்க ஆற்றல் :** வாயு நிரப்பிய குழலில் அயனியாக்கம் நடைபெறும் வகையில் செலுத்தப்படும் மின்னழுத்தம்.

**ionosphere :** *(மின்.)* **மீவளி மண்டலம்**:பூமிக்குமேலே 63—563கி.மீ. உயரத்திலுள்ள வாயுமண்டலப் படுகை. அங்கு, மிக அதிக எண்ணிக்கையில் நேர்மின் எதிர்மின் அயனிகள் அடங்கியிருக்கும்.

**ion spot** : *(மின்.)* **அயனிப்புள்ளி** ; அயனித் தாக்கம் காரணமாக ஒரு படத்தின் மையத்தில் உண்டாகும் பழுப்பு நிறப் புள்ளி.

**ion tray** : **அயனிக் கவணை** : தொலைக்காட்சிப் படக் குழாயின் நுனியில் அயனி எரியழிவினை அகற்றுவதற்குப் பயன்படும் ஒரு சாதனம்.

**iridescence** : **வண்ணக் கோலம்** : வானவில்லின் வண்ணக் கோலத்தைக் காட்டும் தோற்றம்.

**iridium** : **இரிடியம் (உறுதியம்)** : பிளாட்டினம் குடும்பத்தைச் சேர்ந்த வெள்ளிபோல் வெண்மையான உலோகத் தனிமம். கடுமை வாய்ந்த இதன் அணு எண் 77.

**iris : ஒளி வகுப்பு மறைப்பு** : தொலைக் காட்சியில் ஒளியை கட்டுப்படுத்தக்கூடிய சுருங்கி விரியக்கூடிய மறைப்பு.

**irish moss** : **ஐரிஷ் பாசி** : கடற் பாசியிலிருந்து கிடைக்கும் ஒரு வகைப் பாசி. இதனை நீரில் கொதிக்க வைக்கும்போது, பாகு போல் மாறிவிடும். இதனை நெசவாலை, தோல் தொழில்களில் பயன்படுத்துகிறார்கள்.

**iron** : **இரும்பு** : தொழில் உலகில் மிக முக்கியமாகப் பங்கு பெறும் உலோகத் தனிமம். தாதுக்களில் மற்றப் பொருள்களுடன் கலந்து இது கிடைக்கிறது. வார்ப்பிரும்பு, தேனிரும்பு. நெகிழ்விரும்பு, எஃகு என்ற வகைகளில் இரும்பு விற்பனையாகிறது.

(2) தோலின் கனத்தை அளவிடுவதற்கான ஓர் அலகு.இது.053 செ.மீஅளவுடையது.

**iron-core inductor :** *(மின்.)* **இரும்புப்புரி கிளர்மின் சுருள் :** ஓர் இரும்புப் புரியின் மீது சுற்றப்பட்ட கிளர மின்னோட்ட மின் சுருள்.

**iron core transformer**: *(மின்.)* **இரும்பு உட்புரி மின்மாற்றி**: ஓர் இரும்பு உட்புரியினைச் சுற்றி மின் கம்பிச் சுருள்கள் சுற்றப்பட்டுள்ள ஒரு மின்மாற்றி. இதனால், மின் கம்பிச் சுருள்களில் அதிகக் காந்தப் பிணைப்பு கிடைக்கிறது.

**iron-oxide paint: அய ஆக்சைடு வண்ணச் சாயம்**: அய ஆக்சைடு மண்ணிலிருந்து தயாரிக்கப்படும் வண்ணச் சாயம் ஆளிவிதை எண்ணெயுடன் கலந்து பயன்படுத்தப்படுகிறது. உலோகங்களில் காப்புப் பூச்சுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

**iron-work:** *(க.க.)* **இரும்பு வேலைப்பாடு:** அலங்கார வேலைகளுக்காக இரும்பினைப் பயன்படுத்துதல். மத்திய காலத்துக் கட்டிடக் கலையில், கதவுக் கீல்கள். கதவு தட்டும் கைப்பிடிகள் போன்றவற்றிற்கு இரும்பு வேலைப்பாடுகள் மிகுதியாகப் பயன்படுத்தப் பட்டன.

**irradiation:** *(குளி.பத.)* **கதிரியக்கப் பதனாக்கம்:** உணவிலுள்ள சில பாக்டீரியாக்களைக் கொல்வதற்காக உணவைக் கதிரியக்கத்திற்கு உட்படுத்துதல்.

**irregular curve: ஒழுங்கற்ற வளையம்:** வளை வரைகளாக அல்லது வட்டங்களாக வளை இல்லாத கோடுகளை வரைவதற்காக வரைவாளர்கள் பயன்படுத்தும் ஒரு கருவி.

**irregular polygon: ஒழுங்கற்ற பல கோணக்கட்டம்:** பக்கங்கள் ஏற்றத்தாழ்வான நீளங்களில் உள்ள பல்கோணக் கட்டம். பக்கங்கள் ஏற்றத்தாழ்வாக இருப்பதால் கோணங்களும் ஏற்றத்தாழ்வாக இருக்கும்.

**isinglass :** *(1)* **மீன் பசைக்கூழ்:** மீன்களின் காற்றுச் சவ்வுப் பைகளிலிருந்து தயாரிக்கப்படும், ஒளி அரைகுறையாக ஊடுருவக்கூடிய ஒரு பொருள்.

*(2)* ஒளிபுகு அப்பிரகம்.

**isobar:** *(இயற்.)* **சம அழுத்தக் கோடு:** ஒரே வாயு மண்டல அழுத்தம் உள்ள இடங்களை இணைத்துக் காட்டும் கோடு.

**isocyanate resin:** *(குழை.)* **ஐசோசயனேட்டுப் பிசின்:** செயல் திறமுடைய ஹைட்ரஜன் அணுக்களுடன் ஐசோசயனேட்டுகள் எளிதாக இணைவதால், பிளாஸ்டிக் தொழிலில் யூரித்தேன் வேதியியல் என்னும் ஒரு புதிய தொழில்நுட்பத்துறையே தோன்றியுள்ளது. இந்த வேதியியல் நெகிழ்வும் விறைப்பும் உடைய நுரைப் பொருள் பற்றியதாகும்.

**isogonic lines:** *(அள.)* **சரிசமக் காந்தக் கோண வரிகள்:** காந்த ஊசியின் பிறழ்ச்சி குறிப்பிட்ட நேரத்தில் ஒரே மாதிரியாக இருக்கும் இடங்கள் அனைத்தையும் இணைக்கும் ஒரு படத்தின் மீது வரையப்பட்ட வரிகள்.

**isolating switch:** *(மின்.)* **தனிப்படுத்து விசை:** ஒரு மின்சுற்று வழியை அதன் விசை ஆதாரத்திலிருந்து தனியாகப் பிரித்திடப் பயன்படுத்தப்படும் விசை மின்சுற்று வழியினை வேறேதேனும் முறைகளில் திறந்திடும்போது மட்டுமே இது இயக்கப்படுகிறது.

**iso-metric: சமச் சீரான:** ஒரே சீரான அளவுடைய.

**isopropyl alcohol:** *(வேதி.)* **ஐசோபுரோப்பில் ஆல்கஹால்:** தேய்ப்பு ஆல்கஹால்.

**isosceles:** *(கணி.)* **இரு சமபக்க முடைய:** இரு சமபக்க முக்கோணத்தில் உள்ளது போன்ற சமநீளமான இரு பக்கங்களையுடைய.

**isosceles triangle: சமபக்க முக்கோணம்:** இரு பக்கங்கள் சம அளவிலுள்ள ஒரு முக்கோணம்.

**isosotope:** *(வேதி.)* **ஓரகத் தனிமம்:** ஒரே பொருண்மையுடன் எடை மட்டும் வேறுபாடுடைய தனிமம். இதில் புரோட்டான்களின் எண்ணிக்கை ஒரே அளவாக இருக்கும்; ஆனால் நியூட்ரான்களின் எண்ணிக்கை வேறுபட்டதாக இருக்கும்.

**isothermal:** *(இயற்.)* **சமவெப்ப நிலைக்கோடு:** ஒரே சீரான சராசரி ஆண்டு வெப்ப நிலையுடைய இடங்களை இணைக்கிற கோடு.

**itallic**: *(அச்சு.)* **அச்செழுத்து:** வலப்பக்கம் சாய்ந்த அச்செழுத்து, முக்கியமான குறிப்புகளை எடுப்பாகக் காட்ட இது பயன்படுத்தப்படுகிறது. இத்தாலிய அச்சுப்பணியாளர் ஒருவரால் *1501*-இல் இது வழக்காற்றுக்குக் கொண்டு வரப்பட்டது.

**ivory**: **தந்தம்:** யானை, நீர் யானை, கம்பிளி யானை, திமிங்கிலம் முதலிய விலங்குகளின் மருப்பு. இது அலங்கார வேலைப்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

**ivory black**: **தந்தப் பொடி:** எரிக்கப்பட்ட தந்தத்திலிருந்து கிடைக்கும் கறுப்புப் பொடி.

ஒரு வகை வண்ணச் சாயத்திற்கும் இந்தப் பெயர் உண்டு.

# J

**jack:** *(எந்.)* **தூக்கிப்பொறி:** அதிக அளவுப் பாரங்களை மிகக் குறைந்த அளவு மனித ஆற்றலைப்பயன் படுத்தி குறுகிய உயரத் திற்குஉயர்த்துவதற்குப் பயன்படும் ஒரு சாத னம்.



தூக்கிப் பொறி

**jack arch:** **தூபிக் கவான்:** வழக்கமான தட்டையான கவான். "ஃபிரெஞ் சுக் கவான்" என்றும் கூறுவர்.

**jack, electric:** **மின்தொடுமுனை:** ஒருவகை உலோக விற்சுருள் தொடுமுனை. ஒரு நூல் கயிற்று டன் இணைக்கப்பட்டுள்ள ஒரு செருகியைச் செருகுவதன் மூலம் இணைப்பு ஏற்படுத்தப்படுகிறது. தொலைபேசி விசைப் பலகைகளி லும், வானொலிகளிலும் இது பெரும்பாலும் பயன்படுத்தப்படு கிறது.

**jacket:** *(எந்.)* **உறையுள்:** வெப் பாலையின் உள்வெப்பக் காப்பு மேலுறை. இது ஓர் உந்து நீள் உருளையைச் சுற்றி நீர் பாயச் செய்து வெப்பம் அல்லது குளிர்ச்சி பாதுகாக்கப்படுகிறது.

**jack, hydraulic:** *(பட்.)* **நீரியல் பாரந்தூக்கி:** எடையைத் தூக்கு வதற்கான சாதனம். நீரில் அல் லது திரவத்தில் அழுத்தம் செலுத் துவதன் மூலம் பாரம் மேலே தூக்கப்படுகிறது.

**jakging up:** **உயர்த்துதல்:** பெரிய வடிவளவிலுள்ள எந்திரங்களை யும் கனத்த கட்டுமானங்களையும் தூக்கிப் பொறியின் துணையுடன் உயரே தூக்குதல்.

**jack leveling:** *(பட்.)* **சரி மட்டத் திருகுப் பொறி:** எந்திரத்தின் பகுதி களை மயிரிழை கூடப் பிசகாது தளமட்டத்திற்கு ஒழுங்குபடுத்தும் சரிமட்டத் திருகுப்பொறி.

**jack plane:** **கட்டை விமானம்:** கரடுமுரடான வேலைகளுக்குப் பயன்படும் வானூர்தி.

*(2)* **திருகு தளம்:** வெட்டு மரத் தைத் தேவையான வடிவளவுக்குக் கொண்டு வருவதற்கு இழைப்பதற் கெனப் பயன்படும் தளம்.

**jack rafter:** *(க.க.)* **குறு உத்தி ரம்:** கூரை உச்சியிலுள்ள குறுகிய உத்திரம்.

**jackscrew:** *(எந்.)* **திருகுப் பொறி:** பற்றுக் கருவிகளில் வேலைப்பாடு செய்ய வேண்டிய பொருள்களைப் பற்றியவாறு இழைப்பதற்குப் பயன்படும் சிறிய திருகுப்பொறி.

**jamb:** *(க.க.)* **புடைநிலை:** வாயி லின் புடைநிலை அல்லது பலகணி யின் பக்க நிலை; பலகணித் தளச் சரிவு.

**jamming:** *(மின்.)* **வானொலி இடையீடு:** வானொலி அல்லது தந் தியில்லாக் கம்பி வகையில் வேறு இடத்தில் செயலாற்றுவதன் மூலம் செய்திகளைத் தெளிவற்ற தாக்கு தல்.

**jam nut:** *(எந்.)* **நெருக்கு மரை யாணி:** இது பூட்டு மரையாணி போன்றது.

**jam plate:** *(பட்.)* **நெருக்குத் தகடு:** திருகு தகட்டுக்குரிய பழைய பெயர். இதில் திருகிழை கள் வெட்டப்படாமல் நசுக்கி ஏற் படுத்தப்பட்டிருக்கும்.

**japan**: **திண்சாயம்** : திண்ணிய சாய எண்ணெய்.

**japan drier**: **ஜப்பானிய உலர்த்தி**: லினோலெனிக் அமிலத்தின் ($C_{17}H_{29}HCO_2H$), ஓர் உப்புப் பொருளாகிய லினோலியேட் அல்லது ஈய அல்லது மாங்கனீஸ் பிசின் பொருள்களை கற்பூரத் தைலம் அல்லது பென்சின் திரவத்தில் கரைத்துக் கிடைக்கும் சாயப் பொருள். விரைவில் உலர்வதற்காகச் சாயப் பொருட்களுடன் சேர்க்கப்படுகிறது.

**japanning**: (வண்.சாய.) **மெருகு வேலைப்பாடு**: மரம் அல்லது உலோகப் பொருள்களில் கெட்டியான மெருகெண்ணெயை மேற்பூச்சுப் பூசி கறுப்பாகவும் பளபளப்பாகவும் ஆக்குதல். மரங்களில் குறைந்த வெப்பத்தில் பூசலாம். உலோகத்தில் 300—400°F வெப்ப நிலையில் பூசப்படுகிறது.

**jardiniere**:(அ.க.) **பூங்குடுவை**:மரத்தாலோ, மண்ணாலோ, உலோகத்தாலோ செய்யப்பட்ட அழகுப் பூங்குடுவை மலர்த் தொட்டி.

**jarno taper** : (எந்.) **ஜார்னோ கூம்பு** : ஓரடி $\frac{1}{2}''$ கூம்பு உள்ள இந்தக் கூம்பு எந்திரக் கருவிகளில் பயன்படும் கூம்புத் தமரூசிகள், குதை குழிகள், எந்திரத் தண்டுகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிறது.

**jarring machine** : (வார்.) **முரணியக்க வார்ப்புப் பொறி** : முரண்பட்ட இயக்கத்தின் மூலம் வார்ப்படங்களை அடித்து இறுகுவதற்குப் பயன்படும் ஒருவகை வார்ப்பட எந்திரம். இதனை "குலுக்கு எந்திரம்" என்றும் கூறுவர்.

**jaundice** : (நோயி.) **மஞ்சள் காமாலை நோய்** : இரத்தத்தில் பித்தநீர் கலப்பதால் அல்லது சிவப்பு இரத்த உயிரணுக்கள் உடைவதால் உண்டாகும் நோய். இதனால் தோல் மஞ்சள் நிறமாகும்.

**jaw chuck** : **தாடை இடுக்கி** : கடைசல் எந்திரத்தில் உள்ள ஒரு இடுக்கி. இதில் வேண்டியவாறு நகர்த்தக் கூடிய தாடைகளுடன் ஒரு முகப்புத் தகடு அமைந்திருக்கும். இதில் உள்ள தாடைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகவோ ஒன்றாகவோ நகர்த்தலாம்.

**jenson** : (அச்சு.) **ஜென்சன் அச்செழுத்து** : இது ஒருவகை அச்செழுத்து. இதனை முதல் முதலில் 15 ஆம் நூற்றாண்டில் ஃபிரெஞ்சு அச்சுக் கலைஞர் புகுத்தினார். அவர் பெயராலேயே இது அழைக்கப்படுகிறது.

**jet** : **தாரை** : (1) பீற்றுக் குழாய் நுனி.

(2) பீற்றுப் பொருள்.

**jet aircraft** : (வானூ.) **தாரை விமானம்** : ஓரிரு தாரை எஞ்சின்கள் மூலம் பீற்று விசை பெற்று இயங்கும் விமானம் அல்லது வான்கலம்.

**jetavator** : (விண்.) **தாரைத் திசை மாற்றி** : ராக்கெட்டின் தாரையோட்டத்தினுள் அல்லது அதற்கு எதிராக இயங்கும்படி செய்யக்கூடிய ஒரு கட்டுப்பாட்டுச் சாதனம்.இது, தாரை ஓட்டத்தின் திசையை மாற்றுவதற்குப் பயன்படுகிறது.

**jet engine** : (வானூ.) **தாரை எந்திரம்** : வாயுவை அல்லது பாய்மத்தைத் தாரையாகப் பீற்றி வெளிப்படுத்தும் எந்திரம். இதன் பீற்று விசையால் விமானம் முன்னே செலுத்தப்படுகிறது.

**jet moulding** : (குழை.) **தாரை வார்ப்படம்** : வெப்பமூட்டப் பெற்ற நிலையில் உருக் கொடுக்

கப்படும் பொருளுக்கான தொடர்ச்சியான வார்ப்படச் செயற்பாட்டு முறை. இதில், அமைப்பான உட்செலுத்தப்படுவதற்கு முன்னர் சூடாக்கப்பட்டு. அதன் வெப்பம் சீரான முறையில் கட்டுப்படுத்தப்படுகிறது.

**jet propulsion** : *(வானூ.)* **தாரை முற்செலுத்தம் :** எண்ணெயுடன் காற்றைக் கலக்கும்படி செய்து தீ மூட்டி, சூடான எரிந்த வாயுக்களைப் பின்புறமாக அனுப்பி, விமானத்தின் முன்புள்ள காற்றை உறிஞ்சுவதன் மூலம் விமானத்தைத் முன்னே செலுத்தும் உந்துவிசை. இதில் பயன்படும் எஞ்சின் முழுவதும் தாரை எஞ்சின்.

**jet steering** : *(விண்.)* **தாரை இயக்கி** : *(விண்.)* விண் வெளிக் கலத்தைத் தேவையான வளை வீச்சு நெறியில் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் நிலையான அல்லது அசையும் தாரைகள்.

**jet stream** : *(விண்.)* **தாரை ஒழுக்கு :** ஒரு தாரை எஞ்சினிலிருந்து அல்லது ராக்கெட் மின்னோடியிலிருந்து உள்ளெரிதல் மூலம் வெளிப்படும் வாயு அல்லது திரவத் தாரை ஒழுக்கு.

**jetty** : **அணைகரை** : துறை முகத்தை அல்லது கடற்கரையைப் பாதுகாப்பதற்கு, நீரோட்டத்தின் திசையை திருப்புவதற்கென நீருக்குள் நீட்டிக் கொண்டிருக்கும் வகையில் கல்லால் அல்லது மரத்தால் அமைக்கப்படும் கட்டுமானம்.

**jewelers saw** : **பொற் கொல்லர் இரம்பம்** : உலோகங்களை அறுப்பதற்குப் போதிய வலுவுடன் பற்கள் கொண்ட இரம்பம்.

**jeweling :** **அணிமணி ஒப்பனை** : ஒரு மேற்பரப்பில் அணிமணிகளை ஒத்திருக்குமாறு அலங்கார வேலைப்பாடுகள் செய்தல்.

**jewel bearing** : *(மின்.)* **மணிக் கல் தாங்கி :** கடிகாரத்தின் சுழலச்சுத் துளைகளில் தாங்கிகளாகப் பயன்படுத்தப்படும் மணிக்கற்கள்.

**jib** *(எந்.)* *(1)* **பாரந்தூக்கிக் கை** : பாரந்தூக்கியில் ஆடிக்கொண்டிருக்கும் கை போன்ற கருவி.

*(2)* **முக்கோணப் பாய் :** கப்பலின் பாய் முகட்டிலுள்ள நிலவரமான முக்கோணப் பாய்.

**jib crane**: **கை ஒந்தி**: ஊசலாடும் உந்து கட்டை அல்லது கை போன்ற கருவியுடைய ஒரு பாரந்தூக்கி.

**jig**: *(எந்.)* **பிடிகருவி**: கைக் கருவிகளைக் கொண்டு உருவாக்கும் பொருளை நிறுத்திப் பிடிப்பதற்குப் பயன்படும் ஒரு சாதனம்.

**jig boring** : *(எந்.)* **தவ்வித்து அகழ்தல் :** வேலைப்பாடு செய்யப்பட வேண்டிய பொருளை ஒரு பிடி கருவியால் பிடித்துக் கொண்டு, அந்தப் பிடி கருவியின் ஒரு பகுதியினைச் செலுத்தி அகழ்வு செய்தல்.இது துரப்பணத்தால் செய்யப்படும் பணியிலிருந்து வேறுபட்டது.

**jig bushing :** *(எற்.)* **தவ்வி உழல் வாய்** : துரப்பணங்களைச் செலுத்துவதற்கு ஒரு பிடி கருவியின் முகப்பில் செருகப்பட்டுள்ள கடின எஃகினாலான உழல்வாய்.

**jig drill**: *(பட்.)* **துரப்பணத் தவ்வி**: துரப்பண வேலையின்போது பிடித்துக் கொள்வதற்காக அழல் வாய்கள் கொண்ட ஒரு சாதனம். இந்த அழல் வாயின் வழியாக துரப்பணம் செய்யப்பட்டு துரப்பணம் செய்யப்படும் பொருளில் துளைகள் துல்லியமாக அமையுமாறு செய்யப்படுகிறது.

**jigger** : *(எந்.)* **ஏற்றி இறக்குக் கருவி** : ஓர் இரட்டைக் கம்பியும்,

கயிற்றோடு கூடிய ஏற்றி இறக்கும் கருவி அமைவு.

**jig saw :** *(மர.)* **திருகுவாள் :** எந்த வடிவத்தையும் அறுக்கத்தக்க ஒடுங்கியஇருபுறக்கூர்வாள்பொறி.

**jimmy:** **குறுங்கடப்பாறை:** நெம்பு கோலாகப் பயன்படும் கடை வளைந்த குறுகிய இரும்புக் கடப் பாறை.

**job shop :** **பணிப் பட்டறை :** தர மான உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை யாக அல்லாமல் அவ்வப்போது தனித்தனிப் பணிகளைச் செய்து கொடுக்கும் பணிப்பட்டறை.

**job ticket :** *(அச்சு.)* **பணிக் குறிப்புகள் :** அச்சுப் பணி தொடர் பான திட்டவட்டமான அறிவுறுத் தங்கள். இது தனிப்படிவத்தில் குறி யீடுகளில் குறிக்கப்பட்டிருக்கும்.

**job type :** *(அச்சு.)* **சிறுபணி அச் செழுத்து :** சிறுசிறு அச்சுப் பணி களுக்கெனப் பயன்படும் அச் செழுத்துகள்.

**job work :** *(அச்சு.)* **சிறுபணி :** இடையிடையே செய்து கொடுக் கப்படும் பல்வேறு சில்லறை அச்சுப் பணி.

**joggle :** *(க.க.)* **அண்டைப் பொருத்து:** (1) அண்டையிலுள்ள இரு கட்டுமானப் பகுதிகளைப் பிணைக்கும் இணைப்பு.

(2) முட்டுப் பொருத்துக்கான ஒரு பக்கக் குடைவு.

(3) இணைப் பொருத்துக்கான இடைத் துணுக்கு.

**joiner :** **சிறு தச்சர் :** பட்டறை களில் சிறுசிறு தச்சுவேலைகளை- குறிப்பாக இணைப்பு வேலை களைச் செய்பவர்.

**joinery :** **சிறு தச்சு வேலை :** வீட்டுத் தட்டுமுட்டுச் செப்பம் செய்யும் சிறுதிறத் தச்சுத்தொழில்.

**joint :** *(பட்.)* **பொருத்துதல் :** இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட பொருள்களை தச்சு வினைஞர் தமக்குத் தெரிந்த முறை களில் ஒன்றின் மூலம் பொருத்தி இணைத்தல்.

**jointer:** *(க.க )* **கொல்லறு:** சாந்து




கொல்லறு

கலப்பதற்குக் கொத்தனார்கள் பயன்படுத்தும் தட்டையான எஃ குக் கருவி.

(2) **இழைப்புளி :** தச்சுவினைஞர் கள் மரத்தை இழைப்பதற்குப் பயன்படுத்தும் இழைப்புளி.

**jointer plane :** **இணைப்பு இழைப்**



இணைப்பு இழைப்புளி

**புளி :** எல்லா வகையான இழைப்பு வேலைகளையும் செய்வதற்குப் பயன்படும் மரக்கருவிகள் பொருத் தப்பட்ட இழைப்புளி.

**jointing :** **பொருத்திணைப்பு :** பொருத்துகளை இடையிடையே சாந்திட்டுப் பூசி இணைத்தல்.

**joint runner :** *(கம்.)* **பொருத்துப் பொதிவு:** மணியின் ஈயப் பொருத்து களில் ஈயத்தை இருத்தி வைத்துக் கொள்வதற்கெனப் பயன்படுத்தப் படும் தீப்பற்றாத தன்மையுடைய பொதிவு.

**joint stool:** *(அ.க.)* **மனை:** தச்ச ரால் பொருத்தப்பட்ட பாகங்களா லான மனை.

**joint universal :** *(பட்.)* **பொது நிலை முட்டு :** எந்தத் திசையிலும்

இயங்கி, நேரியக்கத்திற்கு இடமளிக்கக் கூடிய சுழல் தண்டு இணைப்பு. இது, 45° வரையில் எந்தக் கோணத்திலும் விசையினை அனுப்பும்.

**joist:** *(க.க.)* **துலாக் கட்டை:** சுவருக்குச் சுவராக இடும் தளக் குறுக்குக் கட்டை.

**jolt-ramming machine:** *(வார்.)* **குலுக்கு வார்ப்படப் பொறி ;** இலேசானது முதல் மிகக் கனமானது வரையிலான எல்லா வகை வேலைகளுக்கும் ஏற்ற ஒரு வார்ப்பட எந்திரம். காற்றழுத்தம் மூலம் உயர்த்தப்படும் ஒரு மேசையின் மீது வைக்கப்பட்டுள்ள வார்ப்புக் கலம் கீழே விழுந்து அந்த வேகத்தில் மணலை நிரப்பிக் கொள்கிறது.

**jordan engine :** **தாள் மெருகுப் பொறி :** தாள் தயாரிப்பதில், தாள் இழைகளின் நீளத்தை ஒழுங்கு படுத்தி, கலக்கும் கருவியிலிருந்து வரும் காகிதத்தில் கரணைகள் ஏற்படாமல் செய்யும் மெருகேற்றும் பொறியமைவு.

**joule:** *(மின்.)* **ஜூல் :** மின்னாற்றலின் நடைமுறை அலகு;
ஒரு ஜூல் = 73732 பவுண்டு.
1 ஜூல்/வினாடி = ஒரு வாட்.

**joule, james prescott (1818-1889) :** *(மின்னி.)* **யூல், ஜேம்ஸ் பிரஸ்காட் (1818-1889) :** ஆங்கிலேய விஞ்ஞானி. சாராயம் காய்ச்சுபவராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கி, மின்னியலில் ஆர்வங்கொண்டு, பல அடிப்படைக் கண்டுபிடிப்புகளைச் செய்தார். வேலை ஊக்க ஆற்றலின் அலகினைக் கண்டுபிடித்ததற்காகப் புகழ்பெற்றவர்.

**journal :** *(எந்.)* **இருசுக் கடை :** தேய்வுருளைகளுடன் இணையும் ஊடச்சின் பகுதி.

**journal box :** *(எந்.)* **இருசுப் பெட்டி :** தாங்கி அல்லது இருசு உள்ள ஒரு பெட்டி.

**journey man :** **கைவினைஞர் :** ஒரு தொழிலில் முழுத்தேர்ச்சி பெற்றுள்ளவரும், மற்றொருவருக்காக வேலை செய்பவருமான கைவினைஞர்.

**joyner:** **அறைகலன் தச்சர்:** அறைகலன்கள் செய்திடும் சிறு தச்சு வேலை செய்பவர்.

**jumper :** *(மின்.)* **இணைப்புக் கயிறு :** குறுக்குச் சட்டங்களை இறுக்கிப்பிடிக்கும் கயிறு அல்லது கம்பி.

**jump spark :** *(எந்.மின்.)* **தாவு மின் பொறி :** மின்பொறியூட்டும் இணைப்புகளிடையில் உள்ளது போன்று, நிலையான மின்முனை இடைவெளியின் குறுக்கே மின் விசை தாவிக்குதித்து உண்டாக்கும் பொறியமைவு.

**junction :** **சந்திப்பு / இணைப்பு :** இணைப்பிடம்; கூடுமிடம், இணைப்பு.

**junction box :** *(மின்.)* **சந்திப் பெட்டி :** பல மின்கம்பிக் காப்புக் குழாய்கள் நுழைந்து, மின்கடத்திகள் புரியிணைவு செய்யப்படும் ஓர் உலோகப்பொடி.

**junction diode :** *(மின்.)* **இணைப்பு இருமுனையம் :** ஒரே திசையில் செல்லும் மின்னோட்டப்பண்புகளுடையஓர் இணைப்பு இரு முனையம்.

**justification :** *(அச்சு.)* **அச்சு வரிச் சரிக்கட்டு :** அச்சுக்கலையில், ஒரு வரியில் பயன்படுத்தப்பட வேண்டிய பொருளை ஒரு குறிப்பிட்ட அளவுக்குள் பொருந்துமாறு சரிக்கட்டுதல்.

**jute board:** *(நூ.க.)* **சணல்அட்டை:** சணல் நாரினால் செய்யப்பட்ட

இலேசான, ஆனால் வலுவுடைய அட்டை. நெகிழ்வுப்பொருள்களை விறைப்பாக்குவதற்குப் பயன்படுகிறது.

**jute bristol : சணல் அட்டைப் பலகை :** படம் வரைவதற்குப் பயன்படும், சணல் நாரினாலான அட்டைப் பலகை.

**jute fiber : சணல் இழை :** இந்தியாவில் பயிராகும் சணல் செடியிலிருந்து கிடைக்கும் நாரிழை. இந்தச் செடி 25-38 செ.மீ.வரை வளரும். இதிலிருந்து 10-20 செ.மீ. நீளமுடைய இழைகள் தயாரிக்கப்படுகின்றன. கரடு முரடான திரைச்சீலைகள், சேணவரிக் கச்சைகள், கயிறுகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**jute Manila:** *(தாள்.)* **சணல் தாள்:** சிப்பங் கட்டுவதற்குப் பயன்படும் மண்ணிறமான தாள்.

# K

**kaolin : பீங்கான் களிமண் :** பீங்கான் செய்வதற்கேற்ற மென்மையான களிமண். இதனைச் "சீனாக் களிமண்" என்றும் கூறுவர். சிலிக்கா, அலுமினா ஆகிய பொருள்களை நீருடன் கலந்து வேதியியல் வினை புரியச் செய்வதன் மூலம் இது கிடைக்கிறது. பீங்கான் கலங்கள், ஓடுகள் முதலியன செய்யப் பயன்படுகிறது.

**kapok : இலவம் பஞ்சு :** மிகச் சிறந்த மென்மையான பஞ்சு மெத்தைகள், தலையணைகள் தயாரிக்கப் பெருமளவில் பயன்படுகிறது.

**karat : பொன் மாற்று அளவு :** தங்கத்தின் தூய்மையினைக் குறித்துரைப்பதற்கான மாற்று அலகு. தூய்மையான தங்கம் 24 மாற்று உடையது. உலோகக் கலவையாக 14 மாற்று ($^{14}/_{24}$), 10 மாற்று ($^{10}/_{24}$) என்ற அளவுகளிலும் தங்கம் தயாரிக்கப்படுகிறது.

**katabolism : (உட.) ஊன்மச் சிதைவு :** உடலிலுள்ள சிக்கலான உயிர்ச்சத்துப் எரியாற்றல் உண்டாதல்.

**katathermometer : குளிர்ச்சி அளவு மானி :** காற்றின் குளிர்ச்சியுறும் ஆற்றலை அளப்பதற்குரிய வெறியச் சத்தடங்கிய வெப்பமானி.

**kauri gum : நறுமணப் பிசின்:** நியூசிலாந்தின் பெருமளவிலுள்ள ஒரு வகை ஊசியிலை மரத்திலிருந்து கிடைக்கும் நறுமணப் பிசின், வண்ணச் சாயங்கள் தயாரிப்பதற்குப் பெருமளவில் பயன்படுகிறது.

**keep down : (அச்சு.) சிறிய எழுத்துருவாக்கம்:** அச்சுப்பணியில் ஆங்கில எழுத்து வடிவின் சிறிய பொது முறை உருவ அச்சு எழுத்துக்களை இயன்ற அளவு மிகுதியாகப் பயன்படுத்துதல்.

**keeper : (மின்.) காந்த முனைத் தேனிரும்பு :** குதிரை இலாட நிரந்தரக் காந்தம். காந்த ஆற்றலை இழந்து விடாமல் தடுப்பதற்காக இரு துருவங்களின் குறுக்கே வைக்கப்படும் தேனிரும்புச் சலாகை.

**keep in : (மின்.) செறிவு எழுத்துருவாக்கம் :** அச்சுப்பணியில் அச்சு எழுத்துக்களை இடைவெளியின்றி நெருக்கியடுக்குதல் அல்லது குறுக்குதல்.

**keeps test for hardness of metals : உலோகக் கடினத்தன்மைச் சோதனை :** உலோகங்களின் கடினத் தன்மையைச் சோதிப்பதற்கான ஒரு வகைச் சோதனை. சோதனை செய்யப்பட வேண்டிய உலோகத் துண்டினைத் துளைப்பதற்கு ஓர் எஃகுத் துரப்பணம் எத்தனை முறை சுழல்கிறது என்பதைக் கொண்டு கடினத்தன்மை அளவிடப்படுகிறது.

**keep up: (அச்சு.) முதன்மை எழுத்துருவாக்கம் :** அச்சுப்பணியில் ஆங்கில எழுத்து வடிவின் பெரிய சிறப்பு முறையான முதன்மை உருவ எழுத்துகளை மிகுதியாகப் பயன்படுத்துதல்.

**kelvin · கெல்வின் :** வெப்பத்தின் மூலம் ஒளியை அளவிடுவதற்கான ஒருமுறை. வண்ண ஒளிப்படத்திற்கான ஒளியின் அளவு 3200°

கெல்வின் இருக்க வேண்டும். தொலைக்காட்சிப் படப்பிடிப்பு நிலையங்களில் பொதுவாக ஒளியின் அளவு 3200° கெல்வினுக்கு அதிகமாக இருக்கும்.

**kemp** : (நூற்.) **முரட்டுக் கம்பளி** : சாயம் எளிதில் பிடிக்காத முரட்டுக் கம்பளி மயிர்.

**kennedy key** : (எந்.) **கென்னடி இருசாணி** : இரண்டு சதுர வடிவ இருசாணிகள். அவற்றின் மூலவிட்ட முனைகள் துளையின் பரிதியில் குறுக்கே வெட்டும் வகையில் அமைக்கப்படுதல். மிகக் கனமாக வேலைப்பாடுகளுக்குப் பயன்படுகிறது.

**kepler's laws** : (இயற்.) **கெப்ளர் விதிகள்** : கோளங்களின் இயக்கம் தொடர்பான மூன்று கணித விதிகள்: (1) ஒரு கோளம், சூரியனைச் சுற்றி நீள்வட்டப் பாதையில் இயங்குகிறது; (2) கோளத்திலிருந்து சூரியனுக்குள்ள கோடு, சமகாலத்தில் சமபரப்பளவினை உண்டாக்குகிறது. எடுத்துக்காட்டு: கோளம், 'A'-விருந்து B-க்கும், B-லிருந்து C-க்கும், C-லிருந்து D-க்கும் சமகாலத்தில் செல்கிறது என்றால், SAB, SBC, SCD சமமானவை. (3) ஒரு சுற்றுக்கு எடுத்துக் கொள்ளப்படும் காலம், சூரியனிலிருந்து சராசரி தூரத்திற்கு வீத அளவில் இருக்கும்.

**kerf** : **இரம்பப் பிளவு** : இரம்பத்தினால் அறுப்பதால் ஏற்படும் பிளவு.

**kerfing**: **இரம்ப வரிப்பள்ளம்** : ஒரு பலகையின் குறுக்கே, அதனை எளிதாக வளைப்பதற்காக இரம்பத்தினால் அறுத்து வரிப்பள்ளங்கள் உண்டாக்குதல். இந்த வரிப்பள்ளங்கள் பலகையின் கனத்தில் மூன்றில் இரண்டு பகுதிக்கு ஏற்படுத்தப்படுகின்றன.

**kerite** : **கெரைட்** : தார் (கீல்) அல்லது புகைக்கீல், விலங்கு அல்லது தாவர எண்ணெய் கலந்து, மின் பாயாமல் காப்பிடுவதற்குக் கந்தகம் கலந்து வலுவூட்டிய ஒரு கலவைப் பொருள். இது ரப்பருக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகிறது.

**kerosene** : (வேதி.) **மண்ணெண்ணெய்** : (1) எரிக்கவும், விளக்கேற்றவும் பயன்படும் ஹைட்ரோகார்பன் எண்ணெய்.

(2) கச்சாப் பெட்ரோலியத்திலிருந்து வடித்திறக்கப்பட்ட வடிநீர்மம். வீத எடைமானம். .7850; வெப்ப நிலை 110°F-க்கு மேல்; எரிநிலை 125°F-க்கு மேல்.

**key** : (எந்.) **ஆப்பு இருசாணி** : ஆப்புவடிவ இரும்பு அல்லது எஃகு வார்ப்பட்டை. சக்கரங்கள் அவற்றின் அச்சாணிகளில் கழன்று விழுந்துவிடாமல் தடுக்க உதவுகிறது. இது பல வகைகளிலும் வடிவளவுகளிலும் உள்ளது.


**keyboard**: (அச்சு.) **விரற்கட்டைப் பட்டை** : அச்சு வார்ப்புருவை ஒருங்கிணைப்பதற்கு இடமளிக்கும் ஓர் இயக்க முறையினைக் கட்டுப்படுத்துகிற விரற்கட்டைப் பட்டை அமைப்பு. இதுபோன்ற அமைப்பு வரிவாரி உருக்கச்சுப் பொறியிலும், எழுத்துவாரி உருக்கச்சுப் பொறியிலும் உள்ளன.

**key, center** : (பட்.) **மையத் திருப்பாணி** : கூம்புவடிவில் உள்ள தட்டையான எஃகுத் துண்டு. துரப்பணக் கதிரிலிருந்து கூம்பு தண்டுத் துரப்பணங்களை அகற்றுவதற்குப் பயன்படுகிறது.

**key drawing**: (அச்சு.) **வழிகாட்டு வரைபடம்**: செதுக்கு வேலைப்பாடு செய்பவருக்கு அறிவுறுத்தங்கள் அடங்கிய ஒரு வரைதாள்.

**keyed mortise and tenon :** **துளைப்பொருத்து மற்றும் பொருத்து முளை :** நீட்டிய பொருத்து முளை யுடைய ஒரு மூட்டு. இது மூட் டினை இறுக்குவதற்குப் பயன் படும் ஆப்பு இருசாணியை ஏற்கத் துளையிடப்பட்டிருக்கும்.

**keyhole caliper ;** *(பட்.)* **பூட்டுத் துளை வடிவ விட்டமானி:** ஒரு கால்



பூட்டுத்துளை விட்டமானி

நேராகவும், இன்னொரு கால் வளைந்தும் இருக்கும் ஒரு விட்ட மானி.


**keyhole saw :** **பூட்டுத் துளை வடிவ இரம்பம் :** பூட்டுத்துளைகள், சித்திர அறுப்பு வேலைகள் முதலிய வற்றுக்குப் பயன்படும் சிறிய கூம்பு வடிவ அலகுடைய இரம்பம்.

**key light:** **ஆதார விளக்கு** பொது வான விளக்கு வசதி.

**key plate :** **பூட்டுத்துளைத் தகடு :** பூட்டுத் துளைக்குச் கவசமாக அமைக்கப்படும் சிறிய உலோகத் தகடு. இது மற்ற உலோகப் பகுதி களின் வடிவமைப்புக்கு ஏற்புடைய தாக இருக்கும்.

**key seat :** *(எந்.)* **ஆதார பீடம் :** எந்திரத்தின் சுழல் தண்டில் அல் லது வண்டிச் சக்கரக் குடத்தில் இருசாணியை ஏற்பதற்கென உள்ள உட்புழை வரிப்பள்ளம் அல்லது இடைவெளி.

**key seat rule :** *(பட்.)* **ஆதாரபீட வரைகோல் :** ஆதாரபீடங் கள் அமைப்ப தற்குப் பயன் படுத்தப் படும் ஒரு வரைகோல்



வரைகோல்

**keystone :** **மையக்கல் :** ஒரு வளைவு முகட்டில் மற்ற உறுப்பு களை ஒருங்கிணைக்கும் முகட்டுக் கல்.

**keystone distortion :** *(மின்.)* **கோடகத் திரிபு :** தொலைக்காட்சி யில் படம் கோடக வடிவில் இருக்குமாறு திரிபடைதல்.

**keystoning :** **ஒருங்கிணை முனைப்பு :** தொலைக்காட்சியில், குறுகிய குவிமையத் தூரம் காரண மாக இணைகோடுகள் ஒருங்குகூட முனையும் போக்கு.

**keyway :** *(எந்.)* **சாவி வழி :** ஏதேனுமொன்றைக் கட்டிப் பிணைப்பதற்காக சாவி நுழைக் கப்படும் வரிப்பள்ளம். வணரி, பல் லிணை, கப்பி சுழல்தண்டு போன்ற வற்றில் இது அமைந்திருக்கும்.

**kick :** **மிகையொளி :** பளபளப் பான பரப்பின் மீதான ஒளி. ஆதா ரத்திலிருந்து பிரதிபலிப்பதால் உண்டாகும் தேவையில்லாத மிகை ஒளி.

**kick plate :** *(க.க.)* **உதைவிசைத் தகடு:** மெருகுப் பூச்சு குலையாமல் தடுப்பதற்காக ஒரு கதவின் அடிப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ள உலோகத்தகடு.

**kid finish :** **தோல் மெருகு :** பத னிடப்பட்ட வெள்ளாட்டுக் குட் டித் தோலினைப்போல் தோற்ற மளிக்கும் வகையில் மெருகு வேலைப்பாடு செய்யப்பட்டுள்ள காகிதம் அல்லது அட்டை.

**kill :** *(அச்சு.)* **அச்செழுத்து அழிப்பு :** அச்சுக்கோப்பு செய்த எழுத்துப் பகுதியை ஒதுக்கிவிடு தல் அல்லது அழித்து விடுதல் அல் லது பயன்படுத்த வேண்டாமெனக் குறித்தல்.

**killed steel:** *(உலோ.)* **செறிவற்ற எஃகு :** சட்டுவத்தில் அல்லது உலையிலுள்ள உருக்கிய எஃகு.

உருகிய எஃகிலுள்ள வாயுக்கள் அனைத்தும் அதிலிருந்து நீங்கும் வரை இந்நிலையில் வைக்கப்பட்டிருக்கும்.

**kiln** : **காளவாய் சூளை** : *சுண்ணாம்புக் காளவாய்; செங்கற் சூளை; சூட்டடுப்பு அல்லது உலை.*

**kiln-dried**: *(மர.வே.)* **உலை உலர்த்து வெட்டு மரம்** : *உலையில் அல்லது உலர்த்து அறையில் வைத்து உலர்த்தப்பட்ட வெட்டு மரங்கள்.*

**kilo** : **கிலோ** : *மெட்ரிக் முறையில் ஆயிரத்தைக் குறிக்கும் சொல்; கிலோ கிராம் என்பதன் சுருக்கம்.*

**kilocycle** : *(மின்.)* **ஆயிரவிசை விரையதிர்வலகு** : *வானொலியில் ஒரு வினாடிக்கு ஆயிர விசை விரையதிர்வலகு.*

**kilogram** : *(மின்.)* **கிலோ கிராம்** : *மெட்ரிக் முறையில் எடையலகு; ஆயிரம் கிராம் எடை; 2 204 பவுண்டுக்குச் சமமான எடை.*

**kilometer** : **கிலோ மீட்டர்** : *மெட்ரிக் முறையில் நீளத்தின் பேரலகு. ஆயிரம மீட்டர் நீளம் 3280 அடி 10 அங் அல்லது .62137 மைல்.*

**kilo-volt ampere** : *(மின்.)* **கிலோ ஓல்ட் ஆம்பியர்** : *ஓராயிரம் ஓல்ட்-ஆம்பியர்கள்.*

**kilowatt** : *(மின்.)* **கிலோவாட்** : *ஆயிரம் மின் பேரலகு (ஆயிரம் வாட்டுகள்)*

**kilo-watt hour** : *(மின்.)* **கிலோ வாட் மணி** : *ஒரு மணி நேரத்தில் ஒரு கிலோவாட் மின்விசை செய்து முடிக்கும் வேலையளவு. மின்னாற்றலின் விலையினைக் கணக்கிடுவதற்கான அலகு.*

**kindling temperature** : *(வேதி.)* **எரியூட்டு வெப்ப நிலை** : *ஒரு பொருள் தீப்பற்றுவதற்கான வெப்பநிலை.*

**kinescope** : *(மின்.)* **படக்குழல்** : *தொலைக்காட்சிப் பெட்டியில் படம் உருவாகச் செய்யும் குழல். இதனைப் "படக்குழல்" என்றும் கூறுவர்.*

**kinematics**: *(இயற்.)* **இயக்கவியல்**: *ஆற்றல் தொடர்பில்லாத இயக்கம் சார்ந்த ஆய்வியல்.*

**kinescope**: **திரை நோக்காடி**: *தொலைக்காட்சிப் பெட்டிகளிலும், கட்டுப்பாட்டு அறைகளிலுள்ள செய்தி அறிவிப்பான்களிலும் பயன்படுத்தப்படும் எதிர்மின் கதிர் அல்லது படக்குழாய்.*

**kinetic**: *(பொறி.)* **இயக்கவினை**: *இயக்கத்தின் விளைவான வினை. இது உள்ளார்ந்த ஆற்றலுக்கு எதிர்மாறானது.*

**kinetic energy**: *(பொறி.)* **இயங்காற்றல்**: *நகரும் பொருள் அதன் இயக்கத்தின் காரணமாகப் பெறும் ஆற்றல்.*

**kinetic energy**: *(இயற்.)* **இயங்காற்றல்**: *ஓர் அசையும் பொருளின் இயக்கம் காரணமாக அந்தப் பொருள் கொண்டிருக்கும் ஆற்றல்.*

**kinetic theory of gases**: *(இயற்.)* **வாயு இயக்கக் கோட்பாடு**: *நுண்துகள்களின் இயக்கத்தினாலேயே வாயு நிலை தோன்றுகிறது என்னும் கோட்பாடு.*

**kinetic theory of heat**: *(இயற்.)* **வெப்ப இயக்கக் கோட்பாடு**: *நுண்துகள்களின் இயக்கத்தினாலேயே வெப்பம் உண்டாகிறது என்னும் கோட்பாடு.*

**kinetics**: *(இயற்.)* **இயக்கத் தாக்கியல்**: *பொருள்களின் இயக்கங்களுக்கும் அவற்றின் மீது செயற்*

படுகிற ஆற்றல் தாக்கங்களுக்கு முள்ள தொடர்புகளைப் பற்றிய ஆய்வியல்.

**kingpin:** *(தானி. எந்.)* **முதன்மைப் பெருமுளை:** இது எஃகினாலான ஒரு முளை அல்லது தண்டு. இது கடினமானதாகவும் வேண்டிய வடிவளவுக்குத் தேய்த்து உருவாக்கப்பட்டதாகவும் இருக்கும். அச்சுத் தண்டுடன் இயக்கு இணைப்புக்கோலினை இணைத்துத் தாங்கி நிற்பதற்கு இது பயன்படுகிறது. இது முன்புறச் சக்கரங்கள் இடமும் வலமும் தாராளமாக இடமளிக்கிறது.

**king post:** *(க.க.)* **நடுமரம்:** கூரைச் சட்டத்தில் கைம்மரங்களின் கீழ் முனைகளை இணைக்கும் கட்டையின் மையத்திலிருந்து செங்குத்தாக உச்சி வரை மேலெழும்பும் கம்பம்.

**kink:** *(பட்.)* **கோட்டம்;** அடிப்பதால் அல்லது அழுத்துவதால் உலோகத் துண்டில் உண்டாக்கப்படும் வளைவு அல்லது கோணம்.

**kip:** *(பொறி.)* **கீப்:** பொறியியல் துறையில் பயன்படுத்தப்படும், ஓராயிரம் பவுண்டு எடையைக் குறிக்கும் சொல்.

**kirchhoff's law of voltages;** *(மின்.)* **கிர்ச்சாஃப் மின்னழுத்த விதி:** "ஓர் எளிய மின்சுற்று வழியில், ஒரு மின்சுற்றுவழியைச் சுற்றியுள்ள மின்னழுத்தங்களின் இயற்கணிதக் கூட்டுத்தொகை பூச்சியம்" என்னும் விதி.

**kit:** **கருவிப் பெட்டி:** தொழிலாளர்கள் தங்கள் கருவிகளை வைத்திருக்கும் பெட்டி.

**kite ballon:** *(வானூ.)* **வேவுக் கூண்டு:** படைத்துறையினர் வேவு பார்ப்பதற்காகப் பயன்படுத்தும் பறக்கும் கூண்டு.

**kiln dry:** *(மர.)* **வெப்ப உலர்த்தல்:** வெட்டு மரங்களைச் செயற்கையாகப் பக்குவப்படுத்தும் முறை. இதில், வெட்டு மரத்தை ஒரு நீராவி அறையில் இட்டு ஒரே மாதிரியாகப் பூரிதமாக்கி, பின்னர் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு வெப்பத்தின் மூலம் உலர்த்துதல்.

**knee:** *(1)* **முழங்கால் மூட்டு:** வடிவத்தில் அல்லது நிலையில் முழங்கால் போன்ற அமைப்பு.

*(2)* **இறுக்குத் துண்டு:** அச்சுத் துறையில் அச்சுக்கோப்புச் சட்டத்தின் வரம்புகளுக்குள் எந்த அளவுக்கும் அச்செழுத்துக்களை அடுக்கி அடக்குவதற்குப் பயன்படவேண்டியவாறு அமைத்திடக் கூடிய இறுக்குத் துண்டு.

**knee-action wheels:** *(தானி.)* **கீல் மூட்டுச் சக்கரங்கள்:** உந்தூர்திகளில் தனித்தியங்குகிற முன் சக்கரங்கள். இதில், மனிதன் முழங்கால் மூட்டினைப் போல் இயங்கு மாறு சக்கரங்களுடன் இணைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

**kneeler:** **திசைமாற்றுக் கல்:** திசை மாற்றத்திற்கு வழி செய்யும் வகையில் வெட்டப்பட்ட கல்.

**knife:** **கத்தி:** வெட்டு முனையுள்ள கைப்பிடி பொருத்தப்பட்ட ஒரு வெட்டுக் கருவி.

**knife-blade fuse:** *(மின்.)* **கத்தி முனை உருகி:** ஒரு கத்தி முனை விசையின் அலகுகள் போன்ற வடிவுடைய நுனி இணைப்புகள் கொண்ட ஓர் உருகி.

**knife switch:** *(மின்.)* **கத்தி முனை விசை:** இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட சமதளப் பரப்புகளிடையே அல்லது தொடர்பு அலகுகளிடையேயுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அலகுகளின் தொடர்பு மூலமாக ஒரு மின் சுற்றுவழியை முற்றுவிக்

கவும் துண்டிக்கவும் பயன்படும் மின் விசை.

**knob:** *(மின்.)* **குமிழ் கைபிடி:** *(1)* மின்கடத்திகளை அதனதன் நிலைகளில் பிடித்து வைத்துக் கொள்வதற்கான ஒரு பீங்கான் சாதனம்.

(2) ஒரு வகைக் கைப்பிடி.

**knob turning:** **குமிழ் கடைசல்:** குமிழ் அல்லது உருண்டை வடிவக் கடைசல்.

**knock:** *(எந்.)* **இடிமானம் :** உறுப்புகளைத் தளர்வாக பொருத்துவதன் விளைவாக உண்டாகும் அதிர்வு அல்லது இடிமானம்.

**knocked down:** **எந்திரப் பகுப்பு:** எந்திரத்தின் உறுப்புகளை எளிதாக எடுத்துச் செல்வதற்காகத் தனித்தனியாகப் பிரித்தெடுத்தல்.

**knocking;** *(தானி.)* **உள்வெடிப் பொலி:** *(1)* உந்து தண்டுகள், உந்து தண்டு இருசாணிகள், இணைப்புச் சலாகைகள், பிரதானத் தாங்கிகள் ஆகியவை தேய்வுறுவதால் அல்லது அவற்றைச் சீராகப் பொருத்தாதிருப்பதால் உண்டாகும் உள்வெடிப்பொலிகள்.

(2) நீள் உருளையிலுள்ள எரிபொருள் சீரற்ற நேரத்தகவின்மையால் உரிய நேரத்திற்கு முன்னதாகவே வெடிப்பதால் எஞ்சினுள் ஏற்படும் ஒலிகள்.

(3) சிலவகைக் கார்பன் வெடிப்பதால் அல்லது வெப்பத்தினால் எஞ்சினில் உண்டாகும் ஒலி.

**knot:** *(1)* **நெருகு:** அடிமரத்தில் கிளை தோன்றுமிடத்தில் உண்டாகும் கெட்டியான திரட்சி.

(2) **கடல் நீட்டலகு:** *1852மீட்டர்* நீளங்கொண்ட கடல் துறை நீட்டலளவை அலகு.

**knotting:** *(வண்.)* **நெருகு வண்ணம்:** புடைப்புகள் வெளியில் தெரியாதபடி மறைப்பதற்கு வண்ணப் பூச்சாளர்கள் பயன்படுத்தும் ஒரு வகைக் கலவை. அவலரக்கு, சிவப்பு ஈயக்கலவை, வச்சிரப்பசை ஆகியவை இதற்குப் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

**knuckle joint:** *(எந்.)* **முட்டி இணைப்பு:** ஒரு சலாகையின் முனையிலுள்ள துளையில் மற்றொரு சலாகையின் கவர் முனையைப் பொருத்தி ஓர் இணைப்பு இரு சாணியால் இணைத்தல்.

**knurl:** **திருப்புக்குமிழ்:** தட்டச்சுப் பொறியில் அச்செழுத்துத்தாள் தகட்டைத் திருப்பும் குமிழ்.

**koa:** *(மர.)* **கோவா மரம்:** ஹவாய் தீவுகளில் மட்டும் காணப்படும் மரம். இதன் எடை ஒரு கன அடிக்கு 24கிலோ இளம் பழுப்பு நிறமுடையது. குறுக்கே அலை அலையாகப் பட்டைகள் இருக்கும். அறைகலன்கள், இசைக் கருவிகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**koko:** *(தாவ.)* **கோகோ மரம்:** இதனைக்கிழக்கு இந்திய வாதுமை மரம் என்றும் கூறுவர். இது சொர சொரப்பான கரண் உடையது; கடினமானது; எளிதில் உடையக் கூடியது. ஒரு கன அடியின் எடை 24கிலோ நிறமும், கரணும் கருத்த சீமை நூக்கு போன்றது. வானொலிப் பெட்டிகள் செய்யப் பயன்படுகிறது.

**kraft board:** *(தாள்.)* **மரக்கூழ்அட்டை:** வெண்மையாக்கப்படாத சல்பேட் கூழ் அல்லது மரக்கூழ் கொண்டு தயாரித்த வலுவான அட்டை.

**kraft paper:** *(தாள்)* **முரட்டுக்காகிதம்:** சிப்பங்கட்டுவதற்குப் பெருமளவில் பயன்படுத்தப்படும் வலுவான பழுப்புநிறக் காகிதம்.

**kraft pulp**: **மரக் கூழ்**: தேவதாரு, ஊசியிலை மரங்களிலிருந்து சல்ஃபேட் முறை மூலமாகத் தயாரிக்கப்படும் திண்ணிய மரக் கூழ்.

**kyanize**: **மரக் காப்புப் பூச்சு**: மரங்கள் உளுத்து அல்லது மக்கிப் போகாமல் தடுக்கும் வகையில் பாதரசக் குளோரைடுக் கரைசலை பூசுதல்.

**kyans process**: *(மர.)* **கியான்ஸ் முறை**: பாதரசப் பைகுளோரைடு மூலம் வெட்டு மரங்கள் உளுத்துப் போகாமல் பாதுகாக்கும் முறை.

**kymograph**: *(வானூ.)* **ஒலியழுத்த அளவி**: ஒலி அலைகளின் அழுத்த வேறுபாடுகளைப் பதிவு செய்யும் கருவி.

# L

**L-head engine :** *(தானி.எந்.)* **'எல்' வடிவத் தலை எஞ்சின் :** *தலைப் பகுதி ஆங்கில எழுத்து 'L' வடிவில் அமைந்துள்ள ஓர் எஞ்சின்.*

**lable :** *(க.க.)* **வடிதாரை :** *ஒரு சுவரிலுள்ள இடைவெளிக்கு மேலாக நீட்டிக்கொண்டிருக்கும் மழைத்துளிகளை அப்பால் விழச் செய்யும் கட்டமைவு.*

**lable paper : குறிப்புச் சீட்டுத் தாள் :** *அடையாளத் துண்டுக் குறிப்புச் சீட்டுகள் தயாரிப்பதற்குப் போதிய வடிவளவில் வெட்டப்பட்ட தாள்.*

**laboratory : ஆய்வுக்கூடம் :** *அறிவியல் ஆராய்ச்சிகள், பரிசோதனைகள், பகுப்பாய்வுகளைச் செய்வதற்கான செய்முறைச் சாலை.*

**laboratory assistant : ஆய்வுக் கூட உதவியாளர் :** *ஆய்வுக்கூடத்தில் பொருள்களை வழக்கமான முறையில் சோதனை செய்யும் ஓர் இளநிலைப் பொறியாளர்.*

**labour saving:** *(அச்சு.)* **உழைப்புச் சுருக்கப் பொருள் :** *உழைப்பினைச் சுருக்கி, கால விரயத்தைக் குறைக்கும் அச்சுப் பொருள்.*

**labyrinth :** *(உட.)* **உட்காதுத் துளை :** *உட்காதிலுள்ள திருக்கு மறுக்கான துளை. அரை வட்ட வடிவமான மூன்று குழாய்கள், திரும்புதல், நிலையிலிருத்தல் உணர்வுகளைக் கொடுக்கின்றன. காதின் சுருள்வளையின் மையக் குழாய். ஒலி அலைகளை கேட்கும் நரம்புத் தூண்டுதல்களாக மாற்றும் உறுப்பினைக் கொண்டிருக்கிறது.*

**lac :** *(மர.வே.)* **அரக்கு :** *அரக்குப் பூச்சியிலிருந்து சுரக்கும் பிசின் போன்ற ஒரு பொருள். இது அவலரக்கிலிருந்து வேறுபட்டது. அவலரக்கு என்பது அரக்கிலிருந்து தயாரிக்கப்படும் பொருள். விரைவாக உலரும் மரவண்ணப் பூச்சுப் பொருள்களையும் இது குறிக்கும்.*

**lace wood : பட்டுக் கருவாலி :** *ஆஸ்திரேலியாவில் வளரும் ஒரு வகை மரம். இது விலை மலிவானது; பட்டுப்போல் சீரான புள்ளிகள் உடையது. அலங்கார வேலைகளுக்கு ஏற்றது. சிறிய பரப்புகளிலும், உள்பதிவு வேலைகளிலும் பயன்படுகிறது.*

**lacing :** *(பொறி.)* **இறுக்கு இழைவார் :** *எந்திர உறுப்புகளை இணைத்தியக்கும் தோல் பட்டை வாரின் முனைகளை இழைக்கச்சினால் இறுக்கிப்பிணைக்கும் தோல் வார். இப்போது இதற்கு உலோக இணைப்பிகள் பயன்படுகின்றன.*

**lacquer :** *(உலோ.)* **உலோக மெருகு :** *வாயுமண்டலப் பாதிப்பினால் வண்ணங் கெடாமல் பாதுகாப்பதற்கு உலோக வேலைப்பாடுகளில் பூசப்படும் மெருகெண்ணெய்.*

**lacquer film :** *(வரை.)* **அரக்குச் சாய மென்தாள் :** *பட்டுத் திரை வேலைப்பாடுகளுக்கான படியெடுப்பு உள்வெட்டுத் தகடுகள் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் அரக்குச் சாயம் பூசிய மென்தாள்.*

**lacquer work : மெருகு வேலை :** *வண்ணங்கெடாமல் தடுப்பதற்கு*

உலோக மெருகெண்ணெய் பூசப் பட்ட அலங்கார வேலைப்பாடு.

**lactose**: *(வேதி.)* **பால் வெல்லம்:** $C_{12}H_{22}O_{11}$) பாலிலுள்ள சாக்கரை. உறைபால் தெளிவினைச் செறிவாக்குதல், படிகமாக்குதல் மூலம் பெறப்படும் இனிப்பான, மிக நுண்ணிய வெண் பொடி.

**lacunar** : *(க.க.)* **பொட்டிப்பு முகடு** : பொட்டிப்புகள் அல்லது உள் கண்ணறைகள் உடைய மேல் முகடு.

**ladder** : *(க.க.)* **ஏணி** : ஏறுவதற்கு உதவும் சாதனம். இணையான இரு கோல்களை குறுக்குப் படிகளால் இணைத்து அமைக்கப் பட்ட படிமரம்.

**ladder back** : **ஏணி நாற்காலி** : பல கிடை மட்ட மரச் சட்டங்கள் கொண்ட நாற்காலிச்சாய்பலகை.

**ladle** : *(வார்.)* **சட்டுவம்**: இரும்பு வார்ப்படத் தொழிற்சாலை அடுப்பிலிருந்து உருகிய உலோகத்தைக் கோதி வார்ப்படத்தில் ஊற்றுவதற்குப் பயன்படும் கொள்கலம். இது, 25—100டன் வரைக் கொள்ளக் கூடியதாகப் பல்வேறு வடிவளவுகளில் உண்டு.

**la Farge cement** : **சுண்ணச் சிமெண்ட்** : சுண்ணாம்பை நீற்றும் போது துணைப்பொருளாக உண்டாகும் சிமெண்ட். இது கறைபடாதது. இது போர்ட்லந்து சிமெண்ட் போன்றவலுவுடையது.

**lagging angle** : *(மின்.)* **பின்னடைவு கோணம்** : ஒரு தூண்டு மின் சுற்றுவழியில் மின்னழுத்தத்தைப் பின்னடையச் செய்கிற மின்னோட்டத்தின் கோணம்.

**lagging current** : *(மின்.)* **பின்னடைவு மின்னோட்டம்** : ஒரு மின் சுற்று வழியிலுள்ள தூண்டலினால் மின்னோட்டம் பின்னடையும்படி செய்கிறது.

**lag screw** : **பின்னடைவுத் திருகு** :



திருகு

சதுர வடிவத் தலையுடைய, கனமான தரத் திருகு. இதன் தலையில் இயைவுப்பள்ளம் இல்லாததால் இதனைத் திருக்குக் குறடு மூலம் இறுக்க வேண்டும்.

**laid paper** : **முகட்டுக் காகிதம்** : கம்பிகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்டதால் வரிவரியான முகடுகளுள்ள காகிதம்.

**lake** : *(வேதி.)* **அரக்குச் சாயம்** : அரக்கினால் செய்யப்பட்ட வண்ணப் பொருள்.

**lake copper** : *(உலோ.)* **ஏரிச் செம்பு** : மிச்சிகன் ஏரி அருகே கிடைக்கும் தாதுப்பொருள்களிலிருந்து குளிர் செறிவாக்க முறைகள் மூலம் பெறப்படும் செம்பு.

**lambre quin** : **முகட்டுத் திரை** : கதவின் அல்லது பலகணியின் அலங்கார முகட்டுத் திரை.

**laminar flow** : *(வானூ.)* **தடைபடாத் துகளியக்கம்** : தடைபடாத் துகளணுக்களின் இயக்கம். திட எல்லைகள் அருகே பசைத் திரவம் பாய்வதை இது குறிக்கும்.

**laminate** : **தகட்டடுக்கு** : மரப் பலகைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி ஒட்டுப் பலகை தயாரித்தல், மென்தாள் ஒட்டல்.

**laminated brush** : *(மின்.)* **மென் தகட்டுத் தொடுவி** : செம்பு, வெண்கலம் போன்ற உலோகங்களின் மென் தகடுகளாலான திசை மாற்றுத் தொடுவி.

**laminated construction** : **அடுக்குக் கட்டுமானம்** : குறைந்த எடையில் உயர்ந்த அளவு வலிமை பெறு

வதற்காக அடுக்குகள் அடுக்கி எழுப்பப்படும் கட்டுமானம்.

**laminated core** ; *(மின்.)* **மென் தகட்டு உள்ளீடு :** *மின் காப்பிடப் பட்ட இரும்புத் தகடுகளின் அடுக்குகளினாலான ஒரு மின்னக உள்ளீடு. இது உலோகத்தில் சுழல் மின்னோட்டம் ஏற்படாமல் தடுக் கிறது.*

**laminated liner** : *(தானி.)* **அடுக் குக் காப்புறை :** *உந்து ஊர்திகளில் சுழற்றக்கூடிய பல அடுக்கு உள் வரி உலோகக் காப்புறை.*

**laminated plastics** : *(குழை.)* **அடுக்கு பிளாஸ்டிக்:** *கனமில்லாமல் வலுவாகவுள்ள பிளாஸ்டிக். கண் ணாடிப் பொருள்களை அடுக்கடுக் காக அமைத்துச் செறிவாக்குவ தன் மூலம் போதிய வலிமையுள்ள பிளாஸ்டிக் கிடைக்கிறது. இவை தகடுகளாக அல்லது படகின் உடற்பகுதிக்கேற்ப வலுவாகத் தயாரிக்கப்படுகின்றன,*

**lamp** : *(மின்.)* **விளக்கு :** *மின் இழை அல்லது சுடர் உள்ள ஒரு சாதனம். இது சூடாகும்போது சுடர்விட்டு ஒளியுண்டாக்குகிறது.*

**lamp adapter** : *(மின்.)* **விளக்குக் கிளைப்பான் :** *தொலைபேசித் தொடர்பாளரின் கவனத்தைக் கவர்வதற்காக தொலைபேசி, விசைப் பலகைகளில் பயன்படுத் தப்படும் வெண்சுடர் விளக்கு களைப் பயன்படுத்துவதற்கான ஒரு சாதனம்.*

**lamp annunciator** : *(மின்.)* **தொலைபேசிச் சுடர் விளக்கு :** *தொலைபேசி இயக்குநரின் கவனத் தை ஈர்ப்பதற்காகத் தொலைபேசி விசைப் பவகைகளில் பயன்படுத் தப்படும் வெண்சுடர் விளக்கு களின் தொகுதி.*

**lamp bank** : *(மின்.)* **விளக்குப் பலகை :** *விலக்குகளுக்கான பல கொள்கலன்கள் பொருத்தப்பட் டுள்ள ஒரு பலகை. இந்த விளக்கு கள் கட்டுறுத்தும் கம்பங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும்.*

**lamp base**: *(மின்.)* **விளக்காதா ரம் :** *ஒரு வெண்சுடர் விளக்கின் முனையுடன் இணைக்கப்பட் டுள்ள பித்தளைத் திருகு ஆதாரம். இது ஒரு குதை குழியுடன் விளக் கினை இணைப்பதற்கு இடமளிக் கும்.*

**lampblack : புகைக்கரி வண்ணம்:** *புகைக்கரியிலிருந்து செய்யப்படும் கருவண்ணப் பொருள். இது இயற்கை வாயுவிலிருந்து அல்லது எண்ணெயிலிருந்து கிடைக்கிறது.*

**lamp cord :** *(மின்.)* **விளக்குக் கட்டிழை :** *இரு சரங்களாக மின் காப்பிட்ட மின் கடத்திகளைக் கொண்டநெகிழ்வுடையகட்டிழை. இது பொதுவாக ஒரே உறையில் இருக்கும்.*

**lamp efficiency :** *(மின்.)* **ஒளித் திறன் :** *ஒரு மெழுகுவர்த்தியின் ஒளித்திறனை உண்டாக்குவதற் குத் தேவைப்படும் ஆற்றலின் அளவு. இது வாட்டுகளில் குறிப் பிடப்படும். இதனை வாட்/ மெழுகுவர்த்தித் திறன்* **(W.P.C.)** *என்று குறிப்பிடுவர்.*

**lamp socket** : *(மின்.)* **விளக்குக் குதைகுழி:** விளக்குக்கும் மின்சுற்று வழிக்குமிடையே இணைப்பு ஏற் படுத்துவதற்காக ஒரு விளக்கின் அடிப்பகுதியைப் பொருத்துவதற் குரிய கொள்கலன்.

**land**: *(பட்.)* **சால்வரி இடைவெளி:** *துரப்பணங்கள், குழாய்கள், துளைச் சீர்மிகள் போன்ற கருவி களில் வடுப்பள்ளங்களுக்கிடையி லுள்ள இடைவெளி.*

**landing** : *(வானூ.)* **தரையிறங்கு தல் :** *பறக்கும் விமானம் பறக்கும் வேகத்தைக் குறைத்துக் கீழே*

இறங்கு தரையுடன் தொடர்பு கொண்டு இறுதியாக நின்று விடுதல்.

**landing angle:** (வானூ.) **தரை நிலைக் கோணம்:** விமானம் தரை மட்டத்தில் அதன் இயல்பான நிலையில் நிலையாக இருக்கும் போது அதன் உந்து கோட்டிற் கும் கிடைமட்டக் கோட்டிற்கு மிடையிலான கூர்ங்கோணம்.

**landing area floodlight:** (வானூ.) **தரையிறங்கு பகுதி ஒளிப் பெருக்கு:** விமானம் தரையிறங்கும் பகுதியில் பல திசைகளிலிருந்து ஒளி வீசுவதற்கான சாதனம்.

**landing beam:** (வானூ.) **அலைக் கதிர்க்கற்றை :** விமானம் தரையி றங்குவதற்கு வழி காட்டும் வானொலி அலைக்கதிர்க்கற்றை.

**landing direction light :** (வானூ.) **இறங்குதிசை விளக்கு :** விமானம் எந்தத் திசையில் தரை யிறங்க வேண்டும் என்பதைக் காட்டும் விளக்கு அல்லது விளக்கு களின் தொகுதி.

**landing field :** (வானூ) **தரை யிறங்கு தளம் :** விமானம் தரை யிறங்குவதற்கு ஏற்ற வடிவளவும் பரப்பளவும் கொண்ட ஒரு தளம். இது விமான நிலையத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம்; இல்லாம லுமிருக்கலாம்.

**landing flap:** (வானூ.) **தரையி றங்கு சிறகு :** விமானத்தின் ஓர் இறகின் பின் முனையுடன் இணைக்கப்பட்டிருக்கும் ஓர் இணைப்பு தரையிறங்கும்போது இதைத் திருப்பும்போது இது காற்றுத்தடையாகச் செயற்படு கிறது.

**landing gear :** (வானூ.) **தரை யிறங்கு பல்லிணை:** விமானத்தின் அடியிலுள்ள ஒரு கட்டுமானம் தரையிறங்கும்போது ஏற்படும் அதிர்ச்சியைக் குறைக்கவும் தரை யிலோ, நீரிலோ விமானம் இருக் கும்போது அதனைத் தாங்கிக் கொள்ளவும் இது பயன்படுகிறது.

**landing light :** (வானூ.) **தரை யிறங்கு ஒளி:** விமானம் தரையிறங் கும்போது ஒளியூட்டுவதற்காக விமானத்திலுள்ள ஒரு விளக்கு.

**landing mat :** (வானூ.) **தரை யிறங்கு தளப்பாய்:** விமானம் தரை யிறங்குவதற்கான ஓடுபாதையாக அமைக்கப்பட்டுள்ள உலோக வலைகள் அல்லது துவாரமுள்ள உலோகத் தகடுகள்.

**landing newel :** (க.க.) **தரை யிறங்கு நடுத்தூண் :** ஒரு படிக்கட் டின் தரையிறங்கு முனையில் அமைக்கப்பட்டுள்ள, படிக்கட்டுக் கைப்பிடி வரிசையின் அடிக்கம்பம்.

**landing rocket:** (விண்.) **இறங்கு ராக்கெட்:** ஒரு செயற்கைக் கோளி லிருந்து அல்லது ஒரு பெரிய விண் வெளிக்கலத்திலிருந்து ஒரு கோளத் தின் மேற்பரப்பில் பயணிகளை யும் சரக்குகளையும் மாற்றுவதற் குரிய மனிதரால் இயக்கப்படும் ஒரு விண்வெளி ஊர்தி.

**landing speed:**(வானூ.) **தரை யிறங்கு வேகம்:** விமான சமதளத் தில் பறந்து கொண்டு, போதிய அளவு கட்டுப்பாட்டில் நிலைத்து நிற்கக்கூடிய குறைந்த அளவு வேகம்.

**landing strip:** (வானூ.) **தரை யிறங்கு நீள் தளம்:** விமான நிலை யத்தின் ஒரு பகுதியாக அமைந் துள்ள குறுகலான நீண்ட நிலப் பகுதி. இயல்பான சூழ்நிலைகளில் விமானம் தரையிறங்குவதற்கும், தரையில் ஓடிப் பறப்பதற்கும் இது பயன்படுகிறது.

**landing T:** (வானூ.) **தரையிறங்கு T:** ஆங்கிலத்தில் 'T' எழுத்தின்

வடிவிலுள்ள ஒரு பெரிய சைகை. இது, விமானம் தரையிறங்குவதற்கும், தரையில் ஓடி மேலே பறப்பதற்கும் வழிகாட்டுவதற்காக தரையிறங்கு தளத்தில் அல்லது ஓர் உயரமான கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருக்கும்.

**landing tread**: *(க.க.)* **படிக்கட்டு மிதி கட்டை:** படிக்கட்டின் தரையினைத் தொடும் மிதி கட்டை. பொதுவாக, இதன் முன்முனை ஒரு மிதிக்கட்டையின் கனத்தையும், பின்முனை தரைத் தளத்தின் கனத்தையும் கொண்டிருக்கும்.

**landing wire**: *(வானூ.)* **தரையிறங்கு கம்பி:** *விமானத்தை உயரே செலுத்துகிற இயல்பான திசைக்கு நேர் எதிர்த்திசையில் இயங்கும் விசைகளைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒரு கம்பி. இது உறுப்புகள் அளவுக்கு மீறி இறுகி கட்டுமானத் திரிபடைந்து விடாமல் காக்கிறது.*


**landmark beacon**: *(வானூ.)* **நில எல்லை அடையாள ஒளி:** *திட்டவட்டமான புவியியல் எல்லைகளைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படும் அடையாள ஒளி. இது விமான நிலைய அடையாள ஒளி. அல்லது ஓடுபாதை அடையாள ஒளியிலிருந்து வேறுபட்டது.*

**land plane**: *(வானூ.)* **தரை விமானம்:** *தரையில் மட்டுமே இறங்கவும், தரையிலிருந்து மட்டுமே ஏறவும் கூடிய ஒரு விமானம்.*

**landscape panel**: **இயற்கைக் காட்சிக் கரணை:** *கிடைமட்டக் கரணையுடைய பொட்டிப்பு.*

**lap**: *(எந்.)* **மெருகிடு கருவி:** *உராய்வுப் பொருள் பூசிய மேற்பரப்பினையுடைய துல்லியமான கூர்மை கொண்ட ஒரு கருவி.*

**lap joint**: *(மர.வே.)* **மடிப்புமூட்டு:** *தண்டவாளம், கம்பம் முதலியவற்றின் இரு விளிம்புகளையும் பருமனில் பாதியாக்கி இணைத்துப் பொருத்தும் முறை.*



மடிப்பு மூட்டு

**lapping**: *(எந்.)* **மடிப்புறுத்துதல் :** *உட்புற அல்லது வெளிப்புறப் பரப்புகளை கையாலோ எந்திரத்தாலோ மடித்துச் சமனாக்குதல்.*

**lap - riveted joint**: **மடித்திறுக்கு மூட்டு:** *தகடுகளின் முனைகள் ஒன்றன் மேல் ஒன்று பொருந்துமாறு மடித்து இறுக்கிப் பிணைத்த மூட்டு.*


**lap-seam welding**: **மடிப்புப் பற்றவைப்பு:** *விளிம்புகள் ஒன்றன் மேல் ஒன்று பொருந்துமாறு மடித்து வைத்துப் பற்ற வைக்கும் முறை.*

**larch**: *(தாவர.)* **ஊசியிலை மரம்:** *கற்பூரத் தைலம் தரும் ஊசியிலைக் கட்டுமான மரம். இது நடுத்தர வடிவளவுடையது: கூம்பு வடிவக் கனி தருவது; குறிப்பிட்ட பருவத்தில் இலையை உதிர்க்கக்கூடியது. இதன் மரம் கடினமானது; கனமானது; வலுவானது. இதன் மரம் தொலைபேசிக் கம்பங்களுக்கும் வேலிக் கம்பங்களுக்கும் கப்பல் கட்டுவதற்கும் பயன்படுகிறது.*

**lard oil**: *(எந்.)* **பன்றிக் கொழுப்பு எண்ணெய்:** *பன்றிக் கொழுப்பிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய். உலோக வெட்டுக் கருவிகளில் திறன் வாய்ந்த உயவுப் பொருளாகப் பயன்படுகிறது.*

**large knot**: **பெருங்கணு:** *4 செ.மீ.க்கு மேல் விட்டமுள்ள மரக்கணு.*

**larry**: **கலவைக் கருவி:** வளை



கலவைக் கருவி

வான எஃகு அலகுடைய ஒரு கருவி. இதன் கைபிடி 18செ.மீ. அல்லது 20 செ.மீ. நீளமுடையதாக இருக்கும். இது கலவை செய்திடப் பயன்படுகிறது.

**larva:** *(உயி.)* **முட்டைப் புழு:** ஒரு பூச்சியின் வாழ்க்கையில், முட்டையிலிருந்து வெளிவந்த புழு.

**laser:** *(விண்.)* **லேசர்:** கதிரியக்கத்தின் தூண்டிய ஒளிர்வு மூலம் ஒளிப்பெருக்கம் செய்யும் கருவி. ஒரு மூலக்கூற்று அல்லது அணு அமைப்பில் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஆற்றலை ஓர் உட்பாட்டுச் சைகை மூலம் தூண்டி ஒளியை உண்டாக்குவதற்கான சாதனம்.

**last:** **மிதியடிப் படியுரு:** புதை மிதியடி செய்வதற்குரிய படியுருவக் கடை.

**lastic:** *(வேதி.குழை.)* **ரப்பர் பிளாஸ்டிக்:** ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் ரப்பரின் பண்புகளையுடைய ஒரு பிளாஸ்டிக் பொருள்.

**latent heat:** **உட்செறி வெப்பம்:** ஒரு பொருளின் வெப்ப நிலையை மாற்றாமல் அப்பொருளின் இயற்பியல் நிலையை மாற்றுகிற வெப்பம், எடுத்துக்காட்டு: பனிக்கட்டியை நீராக மாற்றுவதற்குத் தேவை வெப்பம்; 32° ஃபாரன்ஹீட். நீரை நீராவியாக மாற்றுவதற்குத் தேவையானது 212° ஃபாரன்ஹீட்.

**lateral:** **பக்கம் நோக்கிய;** பக்கம் நோக்கிச் செல்கிற அல்லது நீள்வாக்கிற்குக் குறுக்காகச் செல்கிற.

**lateral motion:** **பக்கம் நோக்கிய இயக்கம்:** பக்கம் நோக்கிய திசையில் இயங்குதல்.

**laterals:** *(பொறி.)* **மூலை விட்டத் தளை இணைப்பு:** விறைப்புத் தன்மையை அதிகரிப்பதற்காக எந்திரத்தின் இரு உறுப்புகளிடையே மூலை விட்டமாகத் தலைப் பட்டைகளால் இணைத்தல்.

**lateral stability:** *(வானூ.)* **பக்க உறுதிப்பாடு:** விமானத்தில் சுழற்சி விரிசல், பக்கத் தளர்வு போன்றவற்றால் சமநிலைச் சீர்குலைவு ஏற்படாமல் உறுதி நிலையை ஏற்படுத்துதல்.

**lateral strain:** *(பொறி.)* **பக்க வாட்டத் திரிவு:** எந்திரக் கட்டமைப்புக்கு எதிராகப் பக்கவாட்டில் ஏற்படும் திரிவு. இதனைக் குறுக்குத் திரிவு என்றும் கூறுவர்.

**lateral thrust:** **பக்க உந்து விசை:** பக்கங்களை நோக்கி அளாவுகிற ஒரு பளுவின் அழுத்த விசை.


**latex :** **ரப்பர் மரப்பால்:** காகிதத்தை வலுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் ரப்பர் மரப்பால்.

**lath:** *(க.க.)* **வரிச்சல்:** சுவர், மச்சு ஆகியவற்றிற்குப் பாவப்படும் 4×1×10செ.மீ.அளவு மென் மரப்பட்டிகை.

**lathe:** **கடைசல் எந்திரம்:** *(எந்.)* வட்ட வடிவப் பொருள்களைத் தயாரிப்பதற்குப் பயன்படும் எந்திரம்.

**lathe bed:** *(எந்.)* **கடைசல் எந்திரப் படுகை:** கடைசல் பிடிக்கும் எந்திரத்தின் ஏற்பமைவு வாய்ப்புடைய அடிப்பணிச் சட்டம்.

**lathe center grinder:** *(எந்.)* **கடைசல் மைய அரைப்பான்:** ஒரு




கடைசல் மைய அரைப்பான்

கடைசல் எந்திரத்துடன் இணைக்கப்படும் ஓர் அரைவைச் சாதனம். இது மையங்களை அராவுவதற்குப் பயன்படுகிறது.

**lathe chuck**: *(எந்.)* **கடைசல் கவ்வி**: கடைசல் எந்திரத்தின் கதிர்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு கவ்வும் சாதனம். இது கடைசல் எந்திரம் இயங்கும் போது, அதில் வேலைப்பாடு செய்யப்படும் பொருளைக் கவ்விப் பிடித்துக் கொள்கிறது.

**lathe dog**: *(எந்.)* **கடைசல் எந்திரக் குறடு**: ஒரு கடைசல் எந்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள இடுக்குக் குறடு.



கடைசல் எந்திரக் குறடு

**lathe engine**: *(எந்.)* **எந்திரக் கடைசல் பொறி**: திருகினைக் கொண்ட விசையினால் இயங்கும் கடைசல் எந்திரம்.

**lathe gap**: *(எந்.)* **இடைவெளிக் கடைசல் பொறி**: எந்திரத்தால் இயங்கும் கடைசல் படுகை கொண்ட கடைசல் பொறி.

**lathe tool**; *(எந்.)* **கடைசல் கருவி**: கடைசல் எந்திரத்தில் வேலைப்பாடு செய்யப்பட்ட உலோகப் பொருளிலுள்ள பிசிறுகளை அகற்றுவதற்குப் பயன்படும் கருவி. இதனை ''வெட்டுக் கருவி'' என்றும் கூறுவர்.

**lathe work**: **கடைசல் வேலைப்பாடு**: கடைசல் எந்திரத்தில் செய்யப்படும் துளையிடுதல், நெளிவெடுத்தல் போன்ற அனைத்து வேலைப்பாடுகளையும் குறிக்கும்.

**latitude**: **அட்சரேகை**: பூமியின் மேற்பரப்பில், பூமத்திய ரேகையிலிருந்து வடக்கே அல்லது தெற்கே உள்ள தொலைவு.

**lattice**: *(க.க.)* **பின்னல் தட்டி**: வரிச்சல் அல்லது கம்பிகளின் பின்னால் அமைந்த பலகணி.

**lattice girder**: *(க.க.)* **குறுக்குச் சட்ட உத்தரம்**: இரும்பாலான பின்னற் சட்ட அமைப்போடு இணைக்கப்பட்ட பெரிய உத்தரம்.

**lattice work**: *(அ.க.)* **பின்னல் வேலைப்பாடு**: மரத்தினாலான அல்லது உலோகத்தினாலான பின்னல் வலை வேலைப்பாடு.

**laureling**: *(அ.க.)* **புன்னையிலை வேலைப்பாடு**: புன்னை இலைப் புடைப்புச் சித்திர வேலைப்பாடுகளைக் கொண்ட அலங்கார வேலைப்பாடு.

**launch pad**: *(விண்.)* **செலுத்து மேடை**: ஓர் ஏவுகணையைச் செலுத்துவதற்கு ஏற்றி வைப்பதற்கான காங்கிரீட் அல்லது வேறு கெட்டியான ஒரு பரப்பிடம்.

**lava**: *(வேதி.)* **எரிமலைக் குழம்பு**: எரிமலை உருகிய பாறைக் குழம்பு.

**lavatory**: *(க.க.)* **கழிப்பிடம்**: கை கால் கழுவவும் துணி துவைக்கவும் சிறுநீர் கழிக்கவும் பயன்படும் அறை.

**lawn**: **சல்லடை**: நார்த்துணி அல்லது பட்டாலான மென்மையான சல்லடை.

**layout**: *(அச்சு.) (1)* **அமைப்புத் திட்டம்**: ஒரு பணியின் செயல் முறைத்திட்டம் அல்லது வரைபடம்.

*(2)* **மனைத்திட்ட அமைப்பு**: ஒரு வீட்டுமனையின் திட்ட அமைப்பு.

*(3)* **நிலத்திட்ட அமைப்பு**: வீடுகள் கட்டுவதற்கான நிலத்தை மனைகளாகப் பகுத்துத் திட்ட அமைப்பு செய்தல்.

**layout bench or a table**: **விரிப்பு மேசை**: வேலைப்பாடு செய்யப்பட வேண்டிய பொருளை விரித்து வைப்பதற்கான உலோகச் சமதளமுடைய மேசை.

**layout man**: *(அச்சு.)* **பக்க அமைப்பாளர்**: அச்சுப்பணியில் பக்கங்களை அமைப்பாக்கம் செய்பவர். இவரை 'அச்சுப் பக்க அமைப்பாளர்' என்றும் கூறுவர்.

**layout paper**: *(அச்சு.)* **பக்க அமைப்புக் காகிதம்**: அச்சுப் பக்க வடிவாக்கத்திற்குப் பயன்படும் காகிதம். இதில் அச்சுருப் படிவச் சதுரங்கள் வரையப்பட்டிருக்கும். இதில் விளம்பரங்களும், மற்ற அச்சிடவேண்டிய பணிகளும் வடிவமைக்கப்படும்.

**lazy tongs** : **பல் திசை விளைவு நெம்புகோல்** : தூரத்திலுள்ள பொருட்களைப் பற்றியெடுப்பதற்குரிய பல்திசை வளைவுகளையுடைய நெம்புகோல் அமைவு.

**leach** : *(குழை.)* **நீர்மக் கசிவு** : ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளைக் கசிவூதல் மூலம் உள்மாசு வெளியேற்றுதல்.

**leaching cesspool** : *(கம்.)* **கசிவு வடிகுட்டை** : நீர் கசியக்கூடிய ஒரு வடிகுட்டை.

**lead** : *(மின்.)* *(1)* **தலைமை மின்னிணைப்புக் கம்பி**: ஒரு மின் இணைப்புச் செய்யப்பட்டுள்ளமின் சாதனத்திலிருந்து வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் ஒரு மின் கடத்தி.

*(2)* **முந்து நிலை அளவு** ; ஒரு நிமிர் வீத வளைகோட்டின் நீச முனையும் உச்ச முனையும் மற்றொரு வளை கோட்டின் மீதான அதே முனைக்கு முன்னேறி எட்டுகிற போது, அந்த வளைகோடு மற்ற வளைகோட்டிற்கு முந்து நிலையிலிருப்பதாகக் கூறப்படும்.

*(3)* **திருகாணி இடைவெளி** : ஒரு திருகாணியில் ஒரு முழுச்சுற்று முடிந்ததும் திருகாணி முன்னேறியிருக்கக் கூடிய தூரம்.

**lead** : **ஈயம்** : பழுப்பு நீலநிற உலோகம்; மென்மையானது;கம்பியாக இழுத்து நீட்டத்தக்கது. தகடாக்கத்தக்கது. வீத எடைமானம் 11 34; உருகுநிலை 327°C நைட்ரிக் அமிலத்தில் கரையக் கூடியது. பொதுவாக, கந்தகத்துடன் கலந்து ஈயச்சல்பைடு ஓர் காலினா என்ற தாதுவாகக் கிடைக்கிறது. தூய்மையாகவும், கூட்டுப்பொருளாகவும் பல்வேறு வகையில் பயன்படுகிறது

**lead bath** : *(உலோ.)* **ஈயக் குழம்பு** : எஃகுத் துண்டுகளை 650°F முதல் 1700°F வரைச் சூடாக்குவதற்கான உருகிய ஈயக் குழம்பு.

**lead burning**: *(தானி.)* **ஈயப்பற்ற வைப்பு** : ஈயத்தைப் பயன்படுத்திப் பற்றவைத்தல் சேமக்கலங்களில் முக்கியமாகப் பயன்படுகிறது.

**lead cutter** : *(அச்சு.)* **ஈயவெட்டுச் சாதனம்** : ஈயத்தை வேண்டிய வடிவளவுகளில் வெட்டுவதற்குக் கையினால் இயக்கப்படும் ஒரு கருவி.

**leaded matter** ; *(அச்சு.)* **ஈய இடை வெளி** : அச்சுப்பணியில் வரிகளுக்கிடையே ஈய இடைவரிக் கட்டைகள் இடப்பட்டு அமைக்கப்பட்ட அச்செழுத்துகள்.

**leaded zinc oxide** : *(வண்.)* **ஈய நாகஆக்சைடு** : ஈயச் சல்பேட்டையும் துத்தநாக ஆக்சைடையும் இணைத்துத் தயாரிக்கப்பட்ட வெண்ணிறச் சாயப் பொருள்.

**leader** : *(தொ. கா.)* **இணைப்புத் திரைப்படச் சுருள்**; திரைப்பட ஒளியுருப்படிவுக்கருவியில்இணைத்துத் தொடர்பு படுத்துவதற்குத் திரைப்படச் சுருளின் இரு முனையிலும் பயன்படுத்தப்படும் வெற்றுத் திரைப்படச் சுருள்.

**leaders** : *(அச்சு.)* **வழி காட்டு வரை** : விழிக்கு வழிகாட்டும்

புள்ளிகளால் அல்லது கோடுகளாலான வரை.

**lead hammer:** (*எந்.*) **ஈயச் சுத்தியல் :** ஈயத்தாலான கொண்டையுடைய ஒரு சுத்தியல். உறுப்புகளில் சிராய்வு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக எஃகுச் சுத்தியலுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகிறது.

**lead hole :** (*எந்.*) **முந்து துவாரம்:** ஒரு பெரிய துவாரத்தைத் துரப்பணம் செய்வதற்கு அல்லது ஒரு சாய்வு தளத்தின் மீது மையத் துவாரமிடுவதற்கு வசதியாக ஓர் உலோகத் துண்டில் துரப்பணம் செய்யப்படும் துவாரம்,

**leading :** (*அச்சு.*) **வரி விரிவாக்கல் :** அச்சுப்பணியில் வரிகளின் இடைவெளியை அகலமாக்குவதற்கு ஈயத் தகட்டுப் பாலங்களிட்டு அகலமாக்குதல்.

**leading angle :** (*மின்.*) **முற்செலுத்து கோணம் :** ஒரு கொண்மமின் சுற்றுவழியில் மின்னழுத்தத்தை முற்செலுத்துகிற மின்னோட்டத்தின் கோணம்.

**leading current :** (*மின்.*) **முந்து மின்னோட்டம்:** மின்னோட்டத்தை உண்டாக்கும் மின்னியக்க ஆற்றலின் முன்னோடியான உச்ச நீச அளவுகளை எட்டுவதற்கான மாற்று மின்னோட்டம்.

**leading edge :** (*வானூ*) **முந்து முனை :** விமானத்தின் முற்செலுத்தி அலகு முனை. இதனை "நுழைவு முனை" என்றும் கூறுவர்.

**lead joint :** (*கம்.*) **ஈயஇணைப்பு:** ஒரு மணிக்கும் மூடு குமிழுக்கு மிடையிலான வளைவடிவ இடைவெளிக்குள் உருகிய ஈயத்தை ஊற்றி, பின்னர் கூர்முனையை இறுகப் பொருத்துவதன் மூலம் செய்யப்படும் இணைப்பு.

**lead monoxide :** (*வேதி*) **ஈய மோனாக்சைடு ($PbO$):** மஞ்சள் நிறமான அல்லது மஞ்சள் கலந்த சிவப்பு நிறமான தூள். ஈயத்தைக் காற்றில் சூடாக்குவதன் மூலம் பெறப்படுகிறது. ஈயக்கண்ணாடி மட்பாண்ட மெருகுப் பொருள் தயாரிக்கப் பயன்படுகிறது. கசிவு மூட்டுகளை அடைக்க கிளிசரினுடன் கலந்து சாந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

**lead paint:** (*வண்.*) **ஈய வண்ணச்சாயம் :** சாதாரண வண்ணப் பொருள். இதில் வெள்ளை ஈயம் ஆதாரப் பொருளாகப் பயன்படுத்தப்படுவதால்இப்பெயர் பெற்றது.

**lead peroxide :** (*வேதி மின்.*) **ஈயப் பெராக்சைடு : ($PbO_2$)** ஓர் ஈயக் கூட்டுப் பொருள் மின்சேமக் கலங்களின் நேர்மின் தகடுகள் இதிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

**lead poisoning: ஈய நஞ்சு :** வண்ணம் பூசுவோர், ஈயத்தில் அல்லது ஈயப் பொருட்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களைப் பாதிக்கும் ஒரு நோய்.

**leads :** (*அச்சு.*) **இடைவரிக் கட்டைகள் :** அச்சு வேலையில் வரிகளின் இடைவெளியை அகலமாக்குவதற்கான உலோகத் தகடுகள். இவை அச்செழுத்து அலகுகளின் மடங்குகளில் தயாரிக்கப் பயன்படுகின்றன.

**lead screw :** (*எந்.*) **முன்னேற்றத் திருகு :** திருகு வெட்டுக் கடைசல் எந்திரத்தின் படுகையின் முன்புறம் நீளவாக்கில் அமைந்துள்ள திருகு.

**lead sponge :** (*மின்*) **ஈயப்பஞ்சு:** ஒரு சேமக் கலத்திலுள்ள எதிர் மின் தகட்டிலுள்ள செயல் திறமுடைய தனிமம்.

**lead storage cell : ஈயச் சேமக் கலம் :** கந்தக அமிலத்தின் மின்

பகுப்பானிலுள்ள ஈயப் பெராக்சைடு, பஞ்சு ஈயம் இவற்றினாலான தகடுகளைக் கொண்ட சாதனம்.

**lead tetraethyl :** *(வேதி.)* **ஈய டெட்ராஎத்தில் :** Pb $(C_2H_5)_4$ : உள்வெப்பாலை வெடிப்பைத் தடுக்கும் பொருளாகிய கேசோலின் ஒரு முக்கியமான அமைப்பான்.

**lead wool :** *(கம்)* **ஈயக் கம்பளி :** உருகிய ஈயத்திற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் ஈய இழை குழாய் இணைப்புகளில் பயன் படுத்தப்படுகிறது.

**leaf :** *(அச்சு.)* **சுவடித் தாள் :** மடிக்கப்படாத ஒரு தாள்; அல்லது ஒரு புத்தகத்தில் உள்ளது போன்று மடிக்கப்பட்ட தாளின் இரண்டு பக்கங்கள்.

**leaflet :** *(அச்சு.)* **துண்டு வெளியீடு :** சில பக்கங்கள் மட்டுமே அச்சிடப்பட்ட சிறிய துண்டு வெளியீடு.

**leaf spring : இலை விற்சுருள் :** அடுக்கடுக்காக அமைந்த தட்டையான பல தகடுகளினாலான ஒரு விற்சுருள். இது உந்து ஊர்திகளில் பயன்படுத்தப்படுகிறது.

**leaf work:** *(அ.க.)* **இலை வேலைப்பாடு:** அறைகலன்களிலும் கால்களிலும் சாய்மானங்களிலும் இலைகளின் வடிவில் செய்யப்படும் நுட்பமான இலை வேலைப்பாடுகள்.

**league : லீக் :** ஏறத்தாழ மூன்று மைல் தொலைவு; 15,840 அடி நீளம்.

**leakage :** *(மின்.)* **மின்கசிவு :** மிக உயர்ந்த அளவு மின்காப்புடைய பரப்பின் மீது அல்லது பாதை வழியே மின்னோட்டம் பாய்தல்.

**leak detector:** *(குளி.பத.)* **கசிவு காட்டும் கருவி :** ஒரு குளிர்பதனச் சாதனத்தில் கசிவுகளைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் கருவி.

**lean mixture :** *(தானி.)* **செறிவிலா எரிபொருள் கலவை :** ஒரு வகை எரிபொருள் கலவை. இதில் கேசோலினைவிடக் காற்று அதிக விகிதத்தில் கலந்திருக்கும்.

**lease:** *(நெச.)* **பாவுநூல் பிரித்தல்:** தறியில் பாவு நூலிழைகளை முனைகளில் பிரித்துவிட்டுத் தறிக்குத் தயாராக்குதல்.

**leather : பதனிட்ட தோல்:** தோற் பொருட்கள் செய்வதற்காகப் பதனிடப்பட்ட தோல்,

**leather-board : தோல் அட்டை :** பல்வேறு இழைப் பொருள்களை சீமைச் சுண்ணாம்பு அல்லது வெண்சுண்ணத்துடன் கலந்து தயாரிக்கப்படும் குழம்பினாலான அட்டை.

**leather craft : தோல் வேலைப்பாடு :** கருவிகளைக் கொண்டு தோலில் செய்யப்படும் அலங்கார வேலைப்பாடுகள்.

**learherette cover paper : போலித்தோல் உறைக் காகிதம் :** தோல்போல் செய்யப்பட்ட தாளினாலான உறைக் காகிதம்.

**leather fillet : தோல் கச்சை :** வார்ப்படத் தொழிலில் வார்ப்படங்களின் வலிமையை அதிகரிக்கவும், வார்ப்பட மணலில் கூர் முனைகளை நீக்கவும் பயன்படும் தோலினாலான பட்டை.

**leatheroid : செயற்கைத் தாள் தோல் :** வேதியியல் முறையில் பாடம் செய்யப்பட்டுப் பச்சைத் தோல் போலிருக்கும் பருத்தித் தாள்.

**leclanche cell:** *(மின்)* **லெக்லாஞ்சிக் கலம் :** திறந்த மின் சுற்றுவழி

யுடைய ஓர் அடிப்படை மின் கலம். இதில் கார்பன் துத்தநாக மின் முனைகளும், நவச்சார மின் பகுப்பானும் மின்காந்த முனைப் பியக்க அகற்றியாக மாங்னீஸ் டையாக்சைடும் பயன்படுத்தப்படு கின்றன.

**lectern** : **சாய்மேசை** : படிப்பதற் குப் பயன்படும் சாய்வான மேசை.

**ledge** : (க.க.) **வரை விளிம்பு** : சுவர்ப் பக்கத்தை ஒட்டிய நீள் வரை விளிம்பு.

**ledger paper** : **பேரேட்டுத் தாள்** : கணக்குப் பதிவுப் பேரேடுகள் தயாரிப்பதற்கான கனமான தாள்.

**left hand engine** : (வானூ.) **இடப்பக்க எஞ்சின்** : விமானத்தின் முற் செலுத்தியைப் பார்த்துக் கொண்டிருப்பவருக்கு இடப்புற மாக இயங்கும் வகையில் உள்ள எஞ்சின்.

**left hand screw** : (எந்.) **இடப் புறத் திருகு** : வடமிருந்து இடமா கத் திருகும்போது முற்செல்லும் வகையில் அமைந்த திருகாணி.

**left hand thread** : (எந்.) **இடப் புறத் திருகிழை** : மரையாணி அல் லது திருகாணியை இறுக்குவதற்கு இடப்புறமாகத் திருகும் வகையில் அமைந்த திருகிழை

**legend** : **நீளம்** : பிழம்புருவின் மூவளவையில் கழிமிகையான அளவைக் கூறு : ஒரு முனையி லிருந்து இன்னொரு முனைக்கு உள்ள தூரம், கால நீட்சியையும் குறிக்கும்,

**length**: (அச்சு.) **விளக்க வாசகம்**: ஒரு படத்திற்கான விளக்க வாச கம்.

**lens** : (பற்.) **பற்றலைவப்புக் கண் ணாடி வில்லை** : பற்றறைக்கும் பணியில் மிகுந்த ஒளிவுடைய ஒளிப்பிழம்பினைக் கண்ணுக்கு ஊறு நேரிடாவண்ணம் பார்ப்ப தற்குப் பயன்படுத்தப்படும் தனி வகைக் கண்ணாடி வில்லை.

**lenz's law** : (மின்.) **லென்ஸ் விதி** : ஒரு தூண்டு மின்னோட் டத்தின் திசையானது எப்பொழு தும் அதன் காந்தப் புலன் தூண்டு மின்னியக்க விசையினை உரு வாக்குகின்ற காந்தப் புலனின் வலிமையில் ஏற்படும் மாறுதலை எதிர்க்கும் என்பது லென்ஸ் விதி யாகும்.

**leopard wood**: (தாவர ) **வேங் கை மரம்** : தென் அமெரிக்க மரம். இது கடினமானது; பல வண்ணப் புள்ளிகளுடையது.இது அலங்கார மேலொட்டுப் பலகையாகப் பயன் படுத்தப்படுகிறது.

**leprosy** : (நோயி.) **தொழுநோய்** : வெப்ப நாடுகளில் தோலிலும் நரம்புகளிலும் உண்டாகும் ஒரு பாக்டீரியா நோய். இதனால் தோலில் வெண்புள்ளிகள் தோன் றும். அந்த இடத்தில் உணர்ச்சி இல்லாமற்போகும்; தசையாற்ற லும் குறையும். இறுதியில் நரம்பு இயக்கம் நின்றுபோய் உறுப்பு செயலற்றுவிடும். இன்னொரு வகைத் தொழுநோயினால் தோல் தாறுமாறாக வீங்கும்

**letter board** : (அச்சு.) **கடிதத் தாள் படிவம்** : கடிதம் எழுதுவதற் கான நான்மடி உருவத்தாளின் தலைப்பில் அச்சடிக்கப்பட்டுள்ள படிவம். அச்சடிக்கப்பட்ட பின்னர் உள்ள தாளையும் குறிக்கும்.

**letter press** : **எழுத்து அச்சுப் பொறி**: எழுத்துகளைப் படியெடுப் பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு சாதனம்.

**letter-press printing** : (அச்சு.) **அச்செழுத்தில் அச்சிடல்** : அச் செழுத்துகளில் அல்லது புடைப்

பெழுத்துகள் உள்ள தகடுகளில் அழுத்த அச்சிடுதல்.

**letter-size drills :** (உலோ.வே.) **எழுத்து வடிவத் துரப்பணங்கள் :** இவை A முதல் Z வரையிலான எழுத்துக்களின் வடிவில் அமைந்திருக்கும். A வடிவம் சுமார் 15/64 விட்டமுடையது. Z வடிவம் சுமார் 13/32" விட்டமுடையது.

**letter spacing :** **எழுத்து இடைவெளியாக்கம் :** அச்சுப்பணியில் எழுத்துகளிடையே இடைவெளியை அதிகப்படுத்திச் சொற்களை விரிவுபடுத்துதல்.

**level :** (1) **கிடைமட்டம் :** கிடைமட்டமான தளத்தில் கிடைமட்ட நிலை.



கிடைமட்டம்

(2) **மட்டக் கருவி :** கிடை மட்டத்தைப் பார்ப்பதற்கான கருவி.

(3) **ஒலியாற்றல்:** தொலைக்காட்சியில் அனுப்பீடு செய்யப்படும் ஒளியின் ஆற்றல் அளவு. இது 'டெசிபல்' கணக்கில் அளவிடப்படும்.

**level :** **தளமட்டம் :** சமதள நிலையைக் காட்டும் கருவி. சாராய மட்டம் கிடைமட்டமாக இருக்கும் போது இதிலுள்ள குமிழ் துல்லியமாக குழலின் மையத்தில் நிற்கும்.



**leveling instrument :** (பொறி.) **தளமட்டக் கருவி :** ஒரு காட்சிக் குழாய் கொண்ட சாதனம். இந்தக் குழாயில் சாராயம் இருக்கும். இதில் குமிழ் மையக் கோட்டில் இருக்கும்போது, காட்சிக்கோடு கிடைமட்டத்தில் இருக்கும் வகையில் இக்குழாய் பொருத்தப்பட்டிருக்கும். இதிலுள்ள அளவுக் குறியீடுகளுடைய வளைவரை, இக்கருவி ஊசலாடுவதற்கு இடமளிக்கிறது. அப்போது கிடைமட்டத் தளத்தின் கோணங்களை அளவிடலாம்.

**leveling rod :** (எல்.) **சமதளக் கோல்:** இதில் இருவகைகள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. (1) இலக்குக் கோல்; (2) தானே அளவு காட்டும் கோல்

இலக்குக் கோல் அளவுகளைக் கோல் அளவுக்காரர்களே படித்தறிய முடியும். தானே அளவு காட்டும் கோல்களில் அளவுகளைச் சமதள அளவாளர் நேரடியாகப் படித்தறியலாம்.

**level man :** (எல்.) **சமதள அளவாளர் :** நில அளவையாளரின் சமதள மானியை இயக்குபவர்.

**lever :** (பொறி.) **நெம்புகோல்:** ஓர் ஆதாரத்தின் மீது இயங்கும் ஒரு விறைப்பான கோல்.

**leverage :** (எந்.) **நெம்புகோலியக்கம் :** ஓர் ஆதாரத்தின் மீது இயங்கும் நெம்புகோலின் இயக்கம்.

**lewis:** (க.க.) **கல் தூக்குப் பொறி:** கனமான கற்களைப் பற்றித் தூக்குவதற்கான இரும்புப் பொறியமைப்பு.

**lewis bolt :** (க.க.) **நங்கூர மரையாணி :** கூர்மையான பல்வெட்டும் கூம்பான வாலும் உடைய ஒரு மரையாணி. இது கட்டுமானப் பணிகளில் பயன்படுகிறது.

**leyden jar :** (மின்.) **லேடன் மின்கலம் :** மிக எளிய வடிவ வடிகலம். இது உட்புறமும் வெளிப்புறமும் ஓரளவு உயரத்திற்கு வெள்ளீயத் தகட்டுப் படலமிடப்பட்ட ஒரு கண்ணாடி ஜாடியைக் கொண்டிருக்கும். இதன் மரமூடியின் வழியே ஒரு பித்தளைக்கோல் உட்புறப் படலத்துடன் ஒரு சங்கிலி வழியாகத் தொடர்பு கொள்ளும்.

**liberation :** *(விண்.)* **விடுவிப்பு :** சந்திரனின் உள்ளபடியான அல்லது வெளிப்படையான ஊசலாட்டம் குறிப்பாக, வெளிப்படையான ஊசலாட்டம்.

**lifespan :** *(விண்.)* **ஆயுள் நீட்சி :** ஒரு செயற்கைக் கோள் ஒரு சுற்றுப் பாதையை அடைவதற்கும் அது பூமிக்குத் திரும்பவோ சிதைவுறவோ செய்வதற்குமிடையிலான கால நீட்சி.

**lift:** *(வானூ.)* **தூக்காற்றல்:** விமானத்தைச் சமதளத்திற்கு மேலே உயர்த்துவதற்கான காற்றின் மொத்த ஆற்றல்.

**lifting magnet :** *(மின்.)* **தூக்கு காந்தம் :** பாரந்தூக்கிப் பொறியின் கொக்கியினால் தூக்கிச் செல்லப்படும் ஒரு மின்காந்தம். பெரும் இரும்பு எஃகுக் கட்டிகளைத் தூக்குவதற்கு இது பயன்படுகிறது.

**liftoff :** *(விண்.)* **மேலுந்தல் :** ஒரு விண்வெளி ஊர்தி செலுத்து மேடையிலிருந்து ராக்கெட் முற்செலுத்தத்தினால் வலைவீச்சு நெறியில் தொடக்கநிலையில் இயங்குதல்.

**ligature :** *(அச்சு.)* **எழுத்து இணைப்புரு :** அச்சில் 'ff', fi போன்று இரு எழுத்தாக இணைத்து உருவாக்கப்பட்ட எழுத்துகள்.

**light :** *(அச்சு.)* **ஒளிப்புழை :** ஒளி வருவதற்கான புழை வழி; பல கணிக் கண்ணாடிப் பாளம்.

**light bridge :** **ஒளிமேடை :** ஒளிக் கட்டுப்பாட்டுக் கருவிகளும், சில சமயம் விளக்குகளும் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் ஒரு மேடை.

**light cut :** *(பட்.)* **நுட்ப வெட்டுமானம் :** உலோக வேலைப்பாடுகளில் குறுகலாகவும் நுண்ணியதாகவும் வெட்டி வேலைப்பாடு செய்தல்.

**light face :** *(அச்சு.)* **மென்முகப்பு:** அச்சுக் கலையில் மென்மையான முகப்புடைய அச்செழுத்துகள்.

**light flare :** *(தொ.கா.)* **வெண் புள்ளி:** தொலைக்காட்சிப்பட்டத்தில், மோசமான தள அல்லது குவி விளக்கு காரணமாக உண்டாகும் வெண் புள்ளிகள்.

**lightning rod :** *(மின்.)* **இடிதாங்கி :** கட்டிடத்தின் உச்சியில் பொருத்தப்பட்டுள்ள கூர்மையான உலோகச் சூலிகை. இது தரையில் ஈரமண்ணுடன் இணைக்கப்பட்டிருக்கும், இது இடியினால் உண்டாகும் சேதங்களைக் குறைக்கிறது.

**light level :** **ஒளி அளவு நிறை :** ஒரு பொருளின் மீது அல்லது காட்சியின் செறிவளவு. இது மெழுகு விளக்கொளி அலகுகளில் அளவிடப்படும்.

**lightning arrester :** *(மின்.)* **இடிதாங்கி :** மின்னலை வாங்கிப் பூமியில் செலுத்தும் ஒரு சாதனம். இதனால் மின்னியல் எந்திரங்கள் காக்கப்படுகின்றன.

**light wave :** *(மின்.)* **ஒளி அலை :** கட்புலனாகிற ஒளியின அலை.

**ligne :** **லிக்னே :** கடிகாரம் செய்பவர்கள் பயன்படுத்தும் ஓர் அளவீட்டு அலகு. இது 6 செ.மீ. அளவுக்குச் சமமானது.

**lignin:** *(மர.)* **லிக்னின் :** மரத்தின் இழைகளை ஒன்றாக இணைத்து வைத்துக் கொள்கிற பொருள். இது மரத்திற்கு வலிமையும் நெகிழ்திறனும் அளிக்கிறது.

**lignite:** **பழுப்பு நிலக்கரி:** பழுப்பு நிறமான, கெட்டியாகாத நிலக்கரி. இதில் பெருமளவு ஈரப்பதன் கலந்திருக்கும்.

**lignum vitae :** **புதர்ச் செடிமரம் :** மத்திய அமெரிக்காவில் காணப்

படும் நடுத்தர வடிவளவுடைய புதர்ச்செடி. இதன் மரம் மிகக் கடினமானது; கனமானது. இதன் ஒரு கன அடி 20 கி.கி. எடை யுள்ளது. தாங்கிகளும், செருகு வகைக் கப்பிகளும் செய்யப் பயன் படுகிறது.

**lime:** *(க.க.)* **சுண்ணாம்பு:** சுண் ணாம்புக்கல், சிப்பிகள் போன்ற வற்றின் மீது வெப்பம் செயற்படு வதால் கிடைக்கிறது. கட்டிடப் பணிகளில் பலவிதங்களில் பயன் படுகிறது. இதனைக் கால்சியம் ஆக்சைடு ($CaO$) என்பர்.

**lime light:** **சுடரொளி:** ஆக்சிஜ னும், ஹைட்ரஜனும் கலந்துரு வான சுடரொளி. இதனை கால்சி யம் ஒளி என்றும் கூறுவர். இது பிரகாசமான ஒளியைத் தரும். மேடை ஒளியமைப்புகளுக்குப் பயன்படுகிறது.

**limestone:** *(க.க.)* **சுண்ணாம்பு கல்:** இதனைக் கால்சியம் கார்ப னேட் ($C_a CO_3$) என்பர். கட்டு மான வேலைகளுக்குப் பயன்படும் சுண்ணாம்பு தயாரிக்கப் பயன்படு கிறது.

**limiter:** **வரம்புறுத்துக் கருவி:** தொலைக்காட்சியில் ஒலி அல்லது அதிர்வு அலை வீச்சுத் திரிபினை நீக்குவதற்குப் பயன்படும் ஒரு மின்னணுவியல் வாயில்.

**limit gauge:** *(எந்;பட்.)* **வரம் புறுத்து அளவி:** ஒன்றுக் கொன்று மாறுவதை அனு மதிப்பதற் கென சரியான பரிமாண த்தில் ஒவ்வொரு பக்கத்திலும் மாறுதல் வரம்பு ஒன்று அனுமதிக்கப்படுகிறது. இந்த வரம்புகளுக்கேற்ப அளவி கள் செய்யப்பட்டு வேலைப்பாட் டினைச் சோதனையிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.



வரம்பளவி

**limits of tolerance:** *(எந்.)* **தாங்கு திறன் வரம்புகள்:** எந்திரங் களில் உறுப்புகளின் துல்லியம் கூடு தல் வடிவளவு குறைந்த வடிவளவு பற்றிய வரம்புகள்.

**limonite:** **லைமோனைட்:** ஓர் இரும்பு ஹைட்ராக்சைடு. இதனை ''பழுப்பு ஹேமடைட்'' அல்லது ''சதுப்பு இரும்பு'' என்றும் கூறு வர்.

**linden:** **எலுமிச்சை இனமரம்:** அழகொப்பனைக்குரிய இருதய வடிவ இலைகளும், சிறு நறுமண இளமஞ்சள் வண்ண மலர்களும் உள்ள மரவகை.

**line:** *(மின்.)* (1) **மின் கம்பி:** மின் உற்பத்தி நிலையங்களி லிருந்து அல்லது துணை மின் நிலையங்களிலிருந்து மின் மாற்றி களுக்கு அல்லது கட்டிடங்களுக்கு நேரடியாக மின் விசையினைக் கொண்டு செல்லும் மின் கம்பி வழி.

(2) **வரி:** அச்சுக்கலையில் அச் சிட்ட சொற்கள் அல்லது இலக்கம் அடங்கிய வரி.

(3) **பக்கக் கீற்றுவழி:** தொலைக் காட்சியில் பக்கவாட்டில் கீற்றுக் கீற்றாக எழும் நிழற் காட்சிக் கூறுகளில் ஒன்று.

**lineal foot:** **நேர்கோட்டு அடி:** நீளவாக்கிலான அடி அளவு. இது சதுர அடி அளவிலிருந்து வேறு பட்டது.

**line amplifier:** **மின்வழி மிகைப் பான்:** தொலைபேசியில் மின் அனுப்பீட்டுக் கம்பிக்குச் சைகை களை வழங்குகிற ஒரு மின் மிகைப் பான்.

**linear:** **நீட்டலளவை சார்ந்த:** ஒரே அளவாக ஒடுங்கி நீண்ட கோடுகள் சார்ந்த.

**linear molecule:** *(குழை.)* **நெடிய மூலக்கூறு:** மிக நீண்ட வடிவ

முள்ள ஒரு மூலக்கூறு. பொதுவாக இது நீண்ட சங்கிலி வடிவ மீச்சேர்மங்களைக் குறிக்கும். மீச்சேர்மங்கள் என்பவை ஒரே வகைப்பட்ட சேர்மங்களின் அணித்திரள்கள் இணைந்து வேதியியல் முறையில் மாறாமலேயே அணுத்திரள் எடைமானமும், இயற்பியல் பண்பும் மட்டும் கொண்ட மாறுபட்ட பிறிதுருச் சேர்மங்கள் ஆகும்.

**line cut :** *(அச்சு.)* **வரிவெட்டு:** அச்சுக்கலையில், துத்தநாகத்தில் வரிகளை அல்லது பரப்புகளை செதுக்குதல்.

**lined board:** **உட்பொதிவு அட்டை:** மெல்லிய காகிதத்தினால் உட்பொதிவு செய்த அட்டை,

**line drop:** *(மின்.)* **மின்வழி அழுத்தம் :** மின்கம்பிகள் வாயிலாக மின்னோட்டத்தைச் செலுத்தும் போது பயன்படுத்தப்படும் மின்னழுத்தம்.

**line engraving :** *(அச்சு.)* **வரி உருவப்படம் :** அச்சுப் பள்ளத்தில் செதுக்கு வரி வேலைப்பாடு மூலம் படங்களை அல்லது எழுத்துக்களை அச்சிடுதல்.

**line frequency :** **வரி அலை வெண் :** தொலைக்காட்சியில் ஒரு வினாடியில் அலகிடும் வரிகளின் எண்ணிக்கை.

**line gauge :** *(அச்சு)* **வரி அளவி:** அச்சுக் கலைஞர்கள் பயன்படுத்தும் ஓர் அளவுகோல். இதில் அளவுகள் பிக்கா, நான்பாரைல்ஸ் என்னும் அச்செழுத்து அளவு அலகுகளில் குறிக்கப்பட்டிருக்கும்.

**linen finish :** *(அச்சு.)* **துணிக் காகிதம் :** துணி போன்று இருக்கத்தக்க முறையில் தயாரிக்கப்பட்ட காகிதம் அல்லது அட்டை.

**line scroll :** *(க.க.)* **நார்மடி அணி :** கதவுகளை அழகு படுத்துவதற்கான நார்மடிச்சுருள் போன்ற அலங்காரவேலைப்பாடு.

**line of action : செயலியக்கக் கோடு :** ஒரு விசையின் செயலியக்கக் கோடு என்பது, அந்த ஒரு பொருண்மையைப் புள்ளியின் மீது செயற்படும் திசை என்று பொருள்படும்.

**line pickup ; தந்திவட இணைவு :** தந்தி, தொலைபேசி அறிகுறியீடுகளுடன் தொலை நோக்கிக் குறியீடுகளை ஒருங்கே அனுப்பும்படி பொருந்திய தந்திவட இணைவு போன்ற உலோக மின்கடத்திகள் வாயிலாகச் சைகைகளை அனுப்பீடு செய்தல்.

**line pipe :** *(கம்.)* **கூம்பு குழாய் :** பின்னோக்கிச் சரிந்து கூம்பின் இழையுள்ள இணைப்புடைய தனி வகைக் குழாய். இது பொதுவாக அதிக நீளத் திருகிழையுடையதாக இருக்கும்.

**liner :** *(எந்.)* **புறவுறை :** ஓர் எஞ்சினின் நீள் உருளையின் உட்புறம் பொருந்தக்கூடிய ஒரு உறை. இதனை அகற்றிவிடவும் முடியும், இது ஒரு தாங்கிக்குரிய சுழல் உருளையாகவும் செயற்படும்.

**line shaft :** *(எந்.)* **தொடர் சுழல் தண்டு :** பல சுழல் தண்டுகள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ள ஒரு தொடர். இது பிரதான சுழல் தண்டாக இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம்.

**lines of force :** *(மின்.)* **விசைக் கோடுகள் :** ஒரு காந்தவிசைக் கோடு வடதிசை காட்டும்துருவம். அதைச் சுற்றியுள்ள மற்றத் துருவங்களின் பாதிப்பினால் காட்டுகின்ற திசையினைக்குறிப்பதாகும்.

**lining :** *(அச்சு.)* **வரிசையமைப்பு:** அச்செழுத்து முகப்புகளை கிடைமட்டத்தில் துல்லியமாக வரிசைப் படுத்தி அமைத்தல்.

**link** : *(எந்.)* **கண்ணி**: சங்கிலியின் ஒரு தனிவளையம்.

(2) **பிணைப்புக் கருவி** : எஞ்சின்களில் ஓரதர் இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குரிய ஒரு பொறியமைவு.

**link fuse**: *(மின்.)* **பிணைப்புருகி**: புறக் காப்புறை எதுவுமில்லாத ஓர் உருகிக் கம்பி அல்லது நாடா.

**link motion** : **பிணைப்பு இயக்கம்**: ஓர் உந்து ஊர்தியின் ஓரதர்களை இயக்குவதற்கான உறுப்புகளை ஒருங்கிணைத்தல்.

**linograph** ; *(அச்சு.)* **வரி உருக்கச்சு** : வரி உருக்கச்சுப் பொறி போன்றதான உருக்கச்சு எந்திரத்தில் கோத்து வரிப் பாளங்களை வார்த்தெடுக்கும் அச்சுக்கோப்பு எந்திரம்.

**linotype** : *(அச்சு.)* **வரி உருக்கச்சுப் பொறி** : அச்சுகோப்பு இல்லாமலே எழுத்துக்களை வரிப்பாளங்களாக உருக்கி வார்த்து அடிக்கும் அச்சுப் பொறி.

**linseed oil** : **ஆளிவிதை எண்ணெய்** : வண்ணங்கள் தயாரிப்பதற்கு முக்கியமாகப் பயன்படுத்தப்படும் ஆளிவிதையிலிருந்து வடித்தெடுக்கப்படும் எண்ணெய்.

**lintel** : *(க.க)* **வாயில் மேற்கட்டை** : வாயில், பலகணி ஆகியவற்றின் கிடைமட்டமேற்கட்டை.

**linters** : **குற்றிழைப் பருத்தி** : பருத்தி விதையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் குறுகிய இழைப் பருத்தி இது. மெத்தை, திண்டு வேலைப்பாடுகளுக்குப் பயன்படுகிறது.

**lintless cotton** : **விதைப் பொதிவிலாப் பருத்தி** : நீண்ட இழைப் பருத்தி; இதில் பிற பருத்திகளில் உள்ளது போன்று விதைகள் பஞ்சில் பொதிந்திருக்காது.

**lip** : *(பட்.)* **வெட்டுமுனை** : எந்திரப்பட்டறை வழக்கில் ஒரு கருவியின் வெட்டுமுனை.

**liquefaction**: *(இயற்.)* **திரவமாக்குதல்**: கெட்டிப்பொருளை அல்லது வாயுப் பொருளை நீர்மமாக்குதல்.

**lique-faction** : *(இயற்..)* **திரவமாக்குதல்** : கெட்டிப் பொருள் அல்லது வளிப் பொருளை திரவமாக்குதல்.

**liquid** : *(வேதி.)* **திரவம்** : ஒரு பொருளின் திரவநிலை. இதற்குக் குறிப்பிட்ட கொள்ளளவு உண்டு. கொண்டிருக்கும் கலத்தின் வடிவத்தைப் பெற்றிருக்கும்.

**liquid air** : *(வேதி.)* **திரவக் காற்று** : கடுங்குளிர்ச்சியினால் திரவமாக்கப்பட்ட காற்று. இது குளிர்ப்பதனப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

**liter** : **லிட்டர்** : திரவங்களை அளப்பதற்கான ஃபிரெஞ்சு முகத்தலளவை. 61.027கன அங்குலம் கொண்டது ஒரு லிட்டர்.

**litharge** : **லித்தார்ஜ்** : ஆக்சிஜன் ஓரணுவுடைய காரீயம். இதனை காரீய மோனாக்சைடு என்றும் கூறுவர்.

**lithium**: *(உலோ.)* **லித்தியம் (கல்லியம்)**: ஓர் உலோகத் தனிமம். உலோகங்களில் மிகவும் இலேசானது. இதன் ஒப்பு அடர்த்தி 0.53 மட்டுமே. அலுமினிய உலோகக்கலவைகளின் கெட்டித்தன்மையை அதிகரிக்க இது பயன்படுத்தப்படுகிறது.

**litho**: *(தாள்.)* **கல்லச்சுக் காகிதம்**: கல்லச்சுக் கலையில் பயன்படுத்தப்படும் பல்வேறு காகிதங்களைக் குறிக்கும் பெயர்.

**lithography** : *(அச்சு.)* **கல்லச்சுக் கலை** : கல் செதுக்கீடு செய்து

கற்பாள அச்சு முறையில் அச்சடிக்கும் முறை.

**lithophone** (வண்) **லித்தோஃபோன்:** பேரியம் சல்ஃபேட்டும் துத்தநாக சல்ஃபைடும் கலந்த ஒரு கூட்டுப் பொருள். வெண்ணிற வண்ணப் பொருளான இது சிறந்த பொதிவுப்பண்புகளுடையது. உள்வண்ணப் பூச்சு, சுவர்வண்ணப்பூச்சு போன்றவற்றுக்கு ஏற்றது. ஆனால் புறப் பயன்பாட்டுக்கு ஏற்புடையதன்று. லினோலியம் தயாரிப்பதிலும் ரப்பருக்கு வலிவூட்டுவதிலும் பயன்படுகிறது.

**litmus:** (வேதி.) **லிட்மஸ்:** கற்பாசி வகையிலிருந்து கிடைக்கும் வேதியியல் நிறமாற்ற இயல்புடைய வண்ணப்பொருள்.

**litmus-paper:** (தாள்.) **லிட்மஸ் தாள்:** வேதியியல் நிறமாற்ற வண்ணப்பொருள்தோய்ந்த நீலத்தாள். இதனை அமிலத்தில் நனைத்தால் சிவப்பாக மாறும்; காரத்தில் நனைத்தால் நீலமாகவே இருக்கும்.

**live:** (தொ.கா.) **நேரடி ஒளிபரப்பு:** தொலைக்காட்சியில் ஒளிப்பதிவு மூலமாக அல்லாமல் நிகழ்ச்சிகளை நேரடியாகவே ஒளிபரப்புதல்.

**live axles:** (தானி.) **இயங்கு இருசுகள்:** பாரமும் விசைப்பயன்பாடும் அமைந்துள்ள இருசுகள். இவற்றில் பாதி மிதவை, முக்கால் மிதவை வகைகளும் அடங்கும்.

**live center:** (பட்.) **இயங்கு மையம்:** கடைசல் எந்திரம் அல்லது அது போன்ற எந்திரத்தின் சுழலும் கதிரிலுள்ள மையம். வேலைப்பாடு செய்யப்படும் பொருள் திரிபான பாதையில் செல்லாமல் பார்த்துக் கொள்வதற்கு இது இன்றியமையாதது.

**live load:** (பொறி.) **இயங்கு பாரம்:** இயங்குகின்ற அல்லது திரும்பத் திரும்ப வருகிற பாரம். இது அதன் இயைபில் மாறாமல் இருப்பதில்லை.

**live matter:** (அச்சு.) **அச்சு வாசகம்:** அச்சிட வேண்டிய வாசகம்.

**live spindle:** (எந்.) **இயங்கு கதிர்:** ஒரு கடைசல் எந்திரத்தின் சுழலும் பகுதியின் உராய்வு தாங்கி உருளையிலுள்ள சுழலும் கதிர். இது வால் பகுதியிலுள்ள நிலையான கதிருக்கு நேர் எதிரானது.

**live testing:** (விண்.) **இயக்கச் சோதனை:** ஒரு ராக்கெட் எஞ்சினை அல்லது விண்வெளி ஊர்தியை உள்ளபடியாகச் செலுத்திச் சோதனை செய்தல்.

**live wire:** **உயிர்க் கம்பி:** மின்விசை ஓடிக்கொண்டிருக்கும் கம்பி.

**load:** (மின்.) **மின்னோட்ட அளவு:** மின்விசை ஆக்கப் பொறியால் குறித்த காலத்தில் வெளியேற்றப்படும் மின்னோட்ட அளவு.

**loaded wheel:** (மின்.) **அரவைச்சக்கரம்:** அரவை செய்யப்படும் பொருளின் துகளினால்மெருகிடப்பட்ட அல்லது தடங்கலிட்ட சக்கரம்.

**load factor:** (வானூ.) **சுமைக் காரணி:** ஒரு விமானத்தில் ஓர் உறுப்பின் மீதான குறிப்பிட்ட பாரத்திற்கும், நேரிணையான அடிப்படைப் பாரத்திற்குமிடையிலான விகிதம். இது பொதுவாக, முறிவுறுத்தும் பாரத்திற்கும் அடிப்படைப் பாரத்திற்குமிடையிலான விகிதமாகக் குறிக்கப்படும்.

**loading:** (தாள்.) **காகித மெருகுப் பொருள்:** காகிதத்தை வழுவழுப்பாக்குவதற்கு அல்லது ஒளி புகாதபடி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் வண்ணப் பொருள் அல்லது கனிமப் பொருள்.

**load line:** (மின்.) **பாரவரை:** அளவு சுமை ஏற்றப்பட்டதைக் காட்டும் கோடு.

**loadstone : காந்தக்கல் :** காந்தம்.

**loam :** (வார்.) **களிச்சேற்று வண்டல் :** வார்ப்பட வேலையில் பயன்படும் மணலும் களிமண்ணும் கலந்த கலவை.

**loam moulds:**(வார்.) **களிச்சேற்று வண்டல் வார்ப்படம் :** செங்கற்களினால் உருவாக்கப்பட்டு களிச்சேற்று வண்டல் கொண்டு மேற்பூச்சு பூசப்பட்ட வடிவங்கள். இந்த வார்ப்படங்கள் பெரும்பாலும் பெரிய வடிவங்களை வார்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**lobby :** (க.க.) **முகப்பு அறை :** ஒரு கட்டிடத்தில் முகப்பிலுள்ள ஒரு பெரிய அறை. உணவகங்களில் உள்ளதுபோல் இதனை பொதுக்கூடமாகவும், புகுமுகக் கூடமாகவும் பயன்படுத்தலாம்.

**lobe : தொங்கு தசை :** உடலின் ஓர் உறுப்பிலிருந்து தட்டை வட்டாகத் தொங்கும் பகுதி.


காதுமடல்

**lobe og ear : புறக் காதுமடல்:**

**loblolly pine :** (மர.) **சிவப்புத் தேவதாரு:** கரணையுடைய, மென்மையான இழை கொண்ட மிகுந்த மென் மரமுள்ள ஒருவகைத் தேவதாரு மரம். அமெரிக்காவின் தென் பகுதியில் சட்டங்களுக்கு மிகுதியும் பயன்படுத்தப்படுகிறது.

**local action :** (மின்.) **உள்ளிட நிகழ்ச்சி :** ஓர் அடிப்படை மின்கலத்தில், மின்பகுப்பானின் மேற்பரப்பின் கீழுள்ள நேர்மின் முனையில் (எதிர்ச் சேர்முனை) ஏற்படும் வேதியியல் வினை.

**local currents :** (மின்.) **உள்ளிட மின்னோட்டங்கள்:** இவற்றைச் சுழல் மின்னோட்டங்கள் அல்லது ஃபூர்க்கால்ட் மின்னோட்டங்கள் என்றும் கூறுவர்.

**local vent :** (கம்.) **உள்ளிடக் காலதர் :** ஓர் அறையிலிருந்து மாசடைந்த காற்றினை வெளியேற்றுவதற்கான ஒரு குழாய் அல்லது கூண்டு.

**locate: இட அமைவு :** ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது இடச் சூழலில் அமைத்தல்; இடத்தைக் குறித்திடுதல் அல்லது எல்லைகளைக் குறித்தல்.

**lock:** (மர.) **பூட்டு:** பூட்டு விசைத் தாழ்.

**locker :** (க.க.) **நிலைப் பெட்டி :** சிறிய அடுக்குப் பெட்டி.

**lockin :**(தொ.கா.) **ஒலித்தெளிவு :** தொலைகாட்சியில் படம் நிலையாகவும் தெளிவாகவும் தெரிவதற்குரிய நிலை. தொலைக்காட்சியில், ஒளிபரப்புக் கருவியிலிருந்து வரும் ஒரு கணத்தொகை நிகழ்வுத் துடிப்புகளினால் அலைவீச்சுச் சுற்றுவழிகள் கட்டுப்படுத்தப்படும் போது இந்த ஒளித்தெளிவு நிலை ஏற்படுகிறது.

**locking bolts :** (எந்.) **பூட்டு மரையாணிகள் :** எந்திர உறுப்புகளை அவற்றின் நிலைகளில் பொருத்திப் பூட்டுவதற்குரிய மரையாணிகள்.

**locking stile :** (தச்சு.) **பூட்டு நிலை வரிச்சட்டம்:** பூட்டு இணைக்கப்பட்டுள்ள கதவின் பகுதி.

**lock nut :** (எந்.) **பூட்டுச் சுரையாணிகள் :** பிரதானச் சுரையாணி பின்புறம் நழுவிவிடாமல் தடுப்பதற்காக மற்றொரு சுரையாணியின் அடிப்புறம் திருகி இறுக்கப்படும் ஒரு மெல்லிய மரையாணி.

**lock pin :** (எந்.) **பூட்டு முளை:** எந்திரத்தின் உறுப்புகள் கழன்றுவிடாமலிருப்பதற்காக உறுப்பினுள் செருகப்படும் பிணைப்பூசி அல்லது முளை.

**lock stitch** : **பூட்டுத் தையல்** : தையல் எந்திரங்களில் தைப்பது போன்ற ஈரிழைத் தையல்.

**lockup** : *(அச்சு.)* **முடுக்கிப் பூட்டுதல்** : அச்சு எந்திரத்தில் அச்சுப் பதிப்புச் சட்டங்களை முடுக்கிப் பூட்டுதல்.

**lock washer** : **பூட்டு வளையம்** : அழுத்த விற்சுருள்போல் வினை புரியும் பிளவு வளையம். ஒரு பூட்டு மரைபோல் செயற்படுகிறது.

**locust**: *(மர.வே.)* **இலவங்க மரம்**: நடுநிலக்கடலக மரவகை; கடினமானது. நீண்டநாள் உழைக்கக் கூடியது. புற அலங்கார வேலைப் பாடுகளுக்கு ஏற்றது.

**lodestone**:*(கனிம.)* **அயக்காந்தம்**: இயற்கையான காந்தக்கல்; மாக்னடைட்.

**loess** : *(மண்.)* **மஞ்சள் வண்டல்** : ஆற்றுப்பள்ளத்தாக்குகளில்படியும் களிமண் கலந்த சாம்பல், மஞ்சள் நிறமான வண்டல் படிவு. மிசிசிப்பி பள்ளத்தாக்கிலும், சீனாவிலும்1.5 மீ.. முதல் 305மீ. ஆழத்தில் கிடைக்கிறது.

**loft-dried paper**: *(தாள்.)* **உயர் உள்தளக்காகிதம்**: மேற்பரப்பு வடிவாக்கம் செய்யப்பட்டபின்பு உயர் தளத்தில் உலர்த்தப்படும் காகிதம்.

**log** : *(கணி.)* (1) **மடக்கை** : எண்ணுக்கு நிகரான மதிப்புடைய கட்டளை விசை எண்ணின் மடங்கெண்.

(2) **மரக்கட்டை** : வெட்டப்பட்ட மரத்துண்டு.

**logarithm** : *(கணி.)* **மடக்கை** : எண்ணுக்கு நிகரான மதிப்புடைய கட்டளை விசை எண்ணின் மடங்கெண்.

**logarithmic scale**: **மடக்கை எண் அளவுகோல்** : எண்களின் மடக்கைகளுக்கு வீத அளவில் இருக்குமாறு தொலைவுகள் குறிக்கப்பட்டுள்ள ஓர் அளவுகோல்.

**loggia** : *(க.க.)* **படிமேடை இருக்கை** : திறந்த பக்கங்கள் உள்ள படிமேடை இருக்கை.

**logical functions**: **தருக்க முறைச் சார்பலன்** : ஒரு குறிப்பிட்ட நிலையினைக் குறிக்கக் கூடிய ஓர் எண் கோவை.

**logo-type**: *(அச்சு.)* **சொற்பாள வார்ப்பு**: அச்சு முறையில் இணையெழுத்து வார்ப்பு.

**logwood**: *(வேதி.)* **சாயமரம்**: மத்திய அமெரிக்காவிலும், மேற்கிந்தியத் தீவுகளிலும் வளரும் ஒரு வகைச் சாயமர வகை. சாயத் தொழிலிலும், மருந்துகளிலும் பெருமளவில் பயன்படுகிறது.

**long**: **குழைமக் களிமண்**: குழைமமாகவும் எளிதில் வேலைப்பாடு செய்வதற்கு ஏற்றதாகவும் உள்ள களிமண்.

**longeron**: *(வானூ.)* **நீள் உடற்பகுதி**: விமானத்தின் நீட்டு வாட்டமான உடற்பகுதி.

**long fold**:**நீள் மடிப்பு**:*(தாள்.)*காகிதத்தினை நீளவாக்கில் மடித்தல். இது ''அகமடிப்பு''க்கு எதிர்மாறானது.

**longitude**: **தீர்க்கரேகை**: இங்கிலாந்திலுள்ள கிரீன்விச் போன்ற ஒரு நடுவிடத்திலிருந்து கிழக்கில் அல்லது மேற்கில் உள்ள தூரம்.

**longitudinal dihedral angle**: *(வானூ.)* **நிரைகோட்டு இரு சமதள முக்கோணம்**: விமானத்தில் இறகுக்கும் சமநிலையமைவுக்குமிடையிலான கோணத்தில் வேறுபாடு. இறகு அமைவுக் கோணத்தைவிட சகநிலையமைவுக் கோணம் குறை

வாக இருக்குமாயின், அந்தக் கோணம் நேரலையாகும்.

**longitudinal section:** *(பட்.)* **நீளப்பாங்கு வெட்டுவாய்:** நீளவாக்கில் வெட்டப்பட்ட பகுதி.

**longitudinal stability:** *(வானூ.)* **நீளப்பாங்கு உறுதிப்பாடு:** விமானத்தில் சமதளச் சீர்மையில் ஏற்படும் உலைவினைப் பொறுத்த உறுதிப்பாடு.

**long letter:** *(அச்சு.)* **நீள் எழுத்து:** 'f' என்னும் ஆங்கில எழுத்தினைப் போன்று ஏறுமுக, இறங்குமுக வரைவுடைய அச்செழுத்து.

**long screw:** *(கம்.)* **நீள் திருகு:** சாதாரணத் திருகிழையைவிட அதிக நீளமுடைய 15செ.மீ. நீள ஒரு கூர்ங்கருவி.

**long shunt compound connection:** *(மின்.)* **நீள் இணைக்கூட்டுப் பிணைப்பு:** மின்னகமும் தொடர் வரிசைக் களச் சுருணையும் இணைந்த சுருணையுடன் குறுக்காக இணைக்களச் சுருணையை இணைக்கும்போது உண்டாகும் பிணைப்பு. இது குறுகிய இணைப்பிணைப்புக்கு மாறுபட்டது.

**longstroke:** *(தானி.)* **நீள் உகைப்பு:** துளையின் விட்டத்தை விடக் கணிசமான அளவு அதிக நீளம் உகைத்திடக் கூடியதான ஓர் எஞ்சின்.

**loom:** *(மின்.)* **நெகிழ் காப்புறை:** மின் கடத்திகளைக் காப்பதற்குப் பயன்படுத்தப்படும் நெகிழ் திறனுடைய உலோகமல்லாத குழாய்.

**loop:** *(வானூ.)* **கரண வளைவு:** விமானம் செங்குத்தான மட்டத்தில் ஏறத்தாழ ஒரு வட்ட வளையமாகச் செல்லும் ஒரு கரண உத்தி.

**loop wiring:** *(மின்.)* **கண்ணிக் கம்பியிடல்:** மின்சுற்று வழியில் மின் கடத்திகளைக் கண்ணிகள் போல் பிணைத்து அமைத்தல்.

**loose dowel:** **தளர் இணைப் பாணி:** இறுக்கமாகப் பொறுத்தப்படாத இணைப்பாணி இது வேண்டும்போது அகற்றுவதற்கு வசதியாக நகரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும்.

**loose pulley:** *(பட்.)* **தளர் கப்பி:** எந்திரம் ஓடாதிருக்கும் போது அதை இயக்கும் வார்ப்பட்டை தளர்வாக ஓடுவதற்கான கப்பி. எந்திரம் இயங்கும்போது வார்ப்பட்டை தளர் கப்பியிலிருந்து விரைவாக இயங்கும் கப்பிக்கு மாற்றப்படும்.

**loper:** **சுழல் சக்கரம்:** கயிறு திரிப்பதற்குப் பயன்படும் ஒரு சுழல் சக்கரம்.

**loss:** **ஆற்றல் இழப்பீடு:** பயனுள்ள பணி எதுவுமின்றி ஆற்றல் வீணாகிப் போதல்.

**loss factor:** *(மின்; குழை.)* **இழப்புக் காரணி:** விசைக்காரணியையும் மின்காப்பு நிலை எண்ணையும் பெருக்குவதால் கிடைக்கும் தொகை.

**lost motion:** *(எந்.)* **இயக்க இழப்பு:** இயக்க வேகத்திற்கும், இயக்கப்படும் உறுப்புகளின் வேகத்திற்குமிடையிலான வேறுபாடு. இது குறைபாடான இணைப்புகள், தளர்வுகள் காரணமாக ஏற்படலாம்.

**loudness:** *(மின்.)* **ஒலி முனைப்பு:** செவியுணர்வு மூலம் தீர்மானிக்கக் கூடிய ஒலியின் திறனளவு.


**loud speaker:** *(மின்.)* **ஒலி பெருக்கி:** அதிகத் தொலைவுக்கு ஒலி எட்டும் வகையில் ஒலியைப் பெருக்குவதற்கான ஒரு சாதனம்.

**louis xv,:** *(அ.க.)* **லூயி xv பாணி:** ஃபிரெஞ்சு அரசன் பதினைந்தாம்

லூயி (1723-1774) காலத்திற்குரிய பாணியிலமைந்த அறைகலன் வடிவமைப்புகள். இந்த அறைகலன்கள், நேர்கோட்டு அமைப்புகளுடனும், மென்மையான முட்டை போன்ற நீளுருண்டை வடிவுடைய பட்டயத் தகடுகளுடனும் அமைந்திருக்கும். மரத்தாலான இந்த அறைகலன்களில் பெரும்பாலும் வெண்மையான வண்ணம் பூசப்பட்டிருக்கும்.

**louse**:(உயி) **பேன்:** ஒட்டுயிர்ப்பூச்சி இதன் ஒரு வகை உடலில் காணப்படும்; இன்னொரு வகை மயிரில் காணப்படும். மூன்றாவது வகை இனப்பெருக்க உறுப்புகளைச் சுற்றியுள்ள மயிரில் காணப்படும். இரண்டாவது வகைப் பேன் காரணமாகச் ஜன்னிக்காய்ச்சல் பரவுகிறது.

**louver**: (க.க; எந்.) **காற்றுக் கூம்பு**: காற்று புக விடுவதற்கான பலகை அல்லது கண்ணாடிப்பாளங்களின் மோட்டுக் கவிகையடுக்கு.


காற்றுக் கூம்பு

**lowboy**: (அ.க.) **ஒப்பனை மேசை**: ஆங்கில பாணி ஒப்பனை மேசை அல்லது பல இழுப்பறைகள் உள்ள சிறிய மேசை. இது அதிக அளவு 122மீ. உயரமுடையதாக இருக்கும்.

**low brass**; (உலோ.) **மந்தப் பித்தளை**: 80% செம்பும், 20% துத்தநாகமும் கலந்த மஞ்சள் நிறமான பித்தளை உலோகக் கலவை. இது எளிதில் கம்பியாக இழுத்து நீட்டக் கூடியது.

**low carbon steels**: (உலோ.) **மந்தக் கார்பன் எ.்கு**: 30%-க்கும் குறைவான கார்பன் கொண்ட எஃகு உலோகம். இத்தகைய எஃகு உலோகங்களைப் பரப்பில் கார்பனாக்குவதன் மூலம் கடும் பதப்படுத்தலாம்; ஆனால், செம்பதமாக்க இயலாது.

**low case**: (அச்சு.) **சிறு வடிவெழுத்து**: ஆங்கில எழுத்து வடிவின் சிறிய பொது முறை உருவம்.

**lower case**: (அச்சு.) **பொது முறை எழுத்து**: ஆங்கில நெடுங்கணக்கில் முகட்டெழுத்துகள் அல்லாத சிறிய பொதுமுறை வடிவ எழுத்துகள்.

**low finish**; **பழுப்புக் காகிதம்**: முட்டையின் வெண்தோடு, கன்றின் தோல் போன்றவற்றிலிருந்து செய்யப்பட்ட பழுப்பு நிறக் காகிதம்.

**low gear**: (தானி.) **தாழ்விசை இணைப்புத்திறம்**: மிகக் குறைந்த அளவு முன்னோக்கு இயக்க வேகம் உடையதாக இயக்கு உறுப்புகளை அமைத்தல்.

**low in line**: (அச்சு.) **தாழ்வுறு வரி**: அடுத்துள்ள அச்செழுத்தினை அல்லது பொருளைவிடத் தாழ்வாக உள்ள அச்செழுத்து.

**low - pressure laminates**: (குழை.) **குறைவழுத்த மென்தகடுகள்**: குறைந்த அழுத்த நிலையில் அல்லது அழுத்தம் இல்லாத நிலையில் அறை வெப்ப நிலையில் தயாரிக்கப்படும் மென் தகடுகள்.

**low relief**: (அ.க.) **மென்புடைப்புச் சித்திரம்**: மேற்பரப்பிலிருந்து சிறிதளவு புடைப்பாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட செதுக்கோவியம்.

**low tension**: (தானி;மின்.) **தாழ்நிலை மின்சுற்று வழி**: முதல் நிலை மின் சுற்றுவழி (6வோல்ட்).

**low voltage wiring**: (மின்.) **தாழ் மின்னழுத்தக் கம்பியிடல்**: வீடுகளு

க்கு மின்கம்பியிடுவதில், குறைந்த மின்னழுத்தம் செல்லுமாறு மின் சுற்றுவழிகளை அமைத்தல்.

**low-wing monoplane**:*(வானூ.)* **தாழ்நிலை சிறகு ஒற்றைத்தட்டு விமானம்** : *விமான உடற்பகுதியின் அடிப்பகுதியில் சிறகுகள் பொருத்தப்பட்டுள்ள ஒற்றை தொகுதி சிறகுகளையுடைய விமானம்.*

**lozenge** : **வைர வடிவம்** : *வைரம் போன்று சாய்சதுர உருவம்.*

**lozenge moulding** : *(க.க.)* **சாய் சதுர வார்ப்படம்** : *வைரம் போன்ற சாய் சதுர வடிவில் அமைந்த வார்ப்பட அலங்கார வேலைப் பாடும், நார்மானியக் கட்டிடக் கலையில் மிகுதியாகப் பயன்படுத் தப்படுகிறது.*

**lubricant** : *(பொறி)* **மசகுப் பொருள்**: *உராய்வு காப்புப் பொரு ளாகப் பயன்படுத்தப்படும் எண் ணெய், கொழுப்பு, காரீயகம் போன்ற பொருள்கள். இது வெட்டு மானம் செய்யப்படும் கருவிகளைக் குளிர்விப்பதற்கும் பயன்படுகிறது.*

**lubrication** : *(பொறி.)* **மசகிடல்** : *உராய்வைத் தடுப்பதற்காக மசகுப் பொருட்களைக் கொண்டு மசகிடு தல்.*

**lubrication system** : **மசகிடு முறை** : *எந்திரங்களில் எண்ணெய் பூசி உராய்வினைக் குறைப்பதற் கான மசகிடல் முறை.*

**ludlow** : *(அச்சு.)* **லட்லோ அச் சுப்பொறி**: *அச்சுக்கலையில், கரை கள், வரிக்கோடுகள், அலங்கார வரிகள் முதலியவற்றை வார்ப் பதற்காகப் பயன்படுத்தப்படும் உருக்கச்சு வரிப்பாள எந்திரம்.*

**lug**: *(எந்.)* **பிடிவளை**: *எந்திர வார்ப்புப் பகுதியின் பிடிப்புக் குமிழ்.*

**lugs**: *(மின்.)* **பொருத்து முளைகள்**: *விரைவான இணைப்புக்கு வசதி யாக ஒரு மின்கம்பியின் முனை களில் பொருத்தப்படும் பொருத்து முளைகள்.*

**lumber**: *மர.வே.)* **வெட்டுமரம்**: *விற் பனைக்கு ஏற்ற பலகைகள், துண் டுகள் போன்ற வடிவளவுகளில் கட்டைகளாக வெட்டப்பட்ட வெட்டுமரம்.*

**lumber jack**: *(மர.வே.)* **மரத்தொழி லாளி**: *வெட்டுமரத் தொழிலில் காட்டு மரங்களை வெட்டி வகைப் படுத்தும் தொழிலாளி.*

**lumber scale**; **வெட்டுமர அளவி**: *முரட்டுக் கட்டைகளாக வெட்ட மட்ட வெட்டு மரத்தில் பலகை அளவுகளை அளவிடுவதற்குப் பயன்படும் அளவுக் குறியிடப் பட்ட ஒரு சாதனம்.*

**lumen** : **லூமன்** : *ஒளிபாயும் அள வினை அளவிடுவதற்கான ஓர் அலகு*

**lumen bronze** : *(உலோ.)* **லூமன் வெண்கலம்** : *86% துத்த நாகம் 10% செம்பு, 4% அலுமினி யம் கொண்ட ஓர் உலோகக் கலவை. மிகுவேகத் தாங்கிகள் தயாரிப்பதற்குக் குறிப்பாகப் பயன்படுகிறது.*

**luminance**:*(மின்.)* **ஒளிர்வுத்திறன்**: *ஒளிக்கதிர் வீச்சின் ஒளிர்வு அளவு தொலைக்காட்சியில் ஒளிர்வுத் திறனைக் குறிக்கும் சொல்.*

**luminance channel**: **ஒளிர்வு அலைவரிசை**: *வண்ணத் தொலைக் காட்சியில் ஒளிர்வு அல்லது ஒரே வண்ணச் சைகையை மட்டுமே செலுத்தும் வகையில் அமைக்கப் பட்ட மின்னியல் சுற்றுவழிகள்.*

**luminosity**: *(மின்.)* **சுடர் ஒளித் திறன்**: *இருளில் ஒளி வீசுகின்ற திறன்.*

**luminous**: **ஒளிர்திறனுடைய**: *சுடர் ஒளி வீசுகின்ற அல்லது மின்னிடு கின்ற திறனுடைய.*

**luminous paint**: **ஒளிரும் வண்ணம்**: *இருளில் ஒளிவிடுகின்ற திற னுடைய வண்ணப்பூச்சு.*

**lump lime** : **கட்டிச் சுண்ணாம்பு** : *சுண்ணாம்புக் காளவாய்களில் எரிக்கப்பட்ட அல்லது புடமிடப் பட்ட சுண்ணாம்புக் கல்லிலிருந்து தயாரான கட்டிச் சுண்ணாம்பு.*

**lunar base**: *(விண்.)* **நிலவுத்தளம்**: *அறிவியல் மற்றும் இராணுவ நட வடிக்கைகளில்ஒரு தளமாகப்பயன் படுத்துவதற்கு நிலவின் மேற்பரப் பில் நிறுவப்படும் கருவித் தொகுதி கள்.*

**lunar gravity**:*(விண்.)***நிலவுஈர்ப்பு**: *நிலவின் ஈர்ப்பு மையத்தை நோக் கித்துகள்களும் பொருள்களும் ஈர்க் கப்படுதல்.*

**lunar probe**: *(விண்.)***நிலவு ஆராய்ச்சி**: *நிலவைப்பற்றியும் அதிலுள்ள நிலைமைகள் குறித்தும் ஆராய்தல்.*

**lunar space**: *(அ.க.)***நிலவு வெளி**: *நிலவின் அருகிலுள்ள வெளிப் பரப்பு.*

**lunette**: *(அ க.)* **தொங்கணிச் சர விளக்கு**: *கண்ணாடித் தொங்கணி கள் கொண்ட சரவிளக்கு.*

**luster** : *(கனி.)* **பிறங்கொளி** : *ஒரு கனிமப் பொருளின் ஒளிப் பிரதி பலிப்புப் பண்பு காரணமாக பரப் பில் ஏற்படும் ஒளிர்வு.*

**lute**: **கல மட்பூச்சு** : *காற்றுப் புகா மண்ணடைப் பூச்சு.*

*(2)* **சீலைமண்**: *(1) காற்றுப் புகா மண்ணடைப் பூச்சுக்காகப் பயன் படும் பொருள்.*

**lye** ; *(வேதி.)* **கடுங்கார நீர்**: *மாசு போக்கும் ஆற்றல் வாய்ந்த கழுவு நீர்ம வகை. சோடியம் ஹைட்ராக் சைடு (NaOH), அல்லது பொட்டா சியம் ஹைட்ராக்சைடு (KOH) போன்றவை இவ்வகையின. காரப் பொருள் உள்ள பொருளிலிருந்து கரைசலாக அல்லது தூளாக இது எடுக்கப்படுகிறது. இது முக்கிய மாக சோப்பு தயாரிக்கும் தொழி லில் பயன்படுத்தப்படுகிறது.*

**lyophiliazation** : **நீரகற்றல்** : *உறைந்துபோன ஒரு பொருளி லிருந்து பதக்கமாக்கல் நிலைகளில் நீரகற்றுதல்.*

# M

**machinable : எந்திர வேலைப் பாடு செய்யத்தக்க** : கருவிகளினால் அல்லது எந்திரக் கருவியிலுள்ள வெட்டுக் கருவிகளினால் வேலைப்பாடு செய்யத்தக்க பொருள்.

**machine : (எந்.) எந்திரம் :** விசையாற்றலை உருமாற்றுவதற்கான அல்லது இடமாற்றுவதற்கான ஒரு சாதனம்.

**machine composition : (அச்சு.) எந்திர அச்சுக்கோப்பு** : எந்திர முறை மூலம் அச்செழுத்துக்களைக் கோத்தல்.

**machine drawing: எந்திர முறைப் பட வரைவு** : எந்திரத்தின் அல்லது எந்திர உறுப்புகளின் வரைபடங்களை எந்திரத்தின் மூலம் வரைதல். இதில் குறிப்புகளும், பரிமாணங்களும் பட்டறைத் தகவல்களும் குறிக்கப்பட்டிருக்கும்.

**machine dried : எந்திர உலர்த்து தாள்** : எந்திரத்தின் உலர்த்து உருளைகளில் உருட்டி முழுமையாக உலர்த்தப்பட்ட காகிதம்.

**machine drilling : (எந்.) எந்திரத் துரப்பணம்**: விசையினால் இயக்கப்படும் எந்திரத்தின் மூலம் துரப்பண வேலைகள் செய்தல்.

**machine finish: எந்திர மெருகீடு:** எந்திரத்தின் மூலமாகக் காகிதத்தின் மேற்பரப்புக்கு மெருகூட்டுதல்.

**machine glazed : மெருகேற்றிய தாள்** : ஒருபக்கம் நன்கு மெருகேற்றப்பட்ட தாள்.

**machine language : (தானி.) பொறி மொழி :** ஓர் எந்திரத்தை இயக்குவதற்கு அறிவுறுத்தும் குறியீட்டுச் சைகைகள்.

**machine moulding: (வார்.) எந்திர வார்ப்படம்** : வார்ப் புருவங்களைத் தயாரிப்பதற்கான வார்ப்படங்களை தனிவகை எந்திரங்களைப் பயன்படுததி உருவாக்குதல்.

**machine rating : (மின்.) எந்திர அறுதிப்பாடு** : ஓர் எந்திரம் அளவுக்கு மீறிச் சூடாகி விடாமல் விசையை அனுப்பும் திறன்.

**machinery : எந்திரத் தொகுதி** : எந்திரக் கருவிக் கலன்களின் தொகுதி. ஓர் எந்திரத்தின் செயலுறு உறுப்புகளையும் குறிக்கும்.

**machinery steel : (எந்.) எந்திர எஃகு** : திறந்த உலை முறையில் தயாரித்த எஃகு. இதில் 0.15% முதல் 0 25% கார்பன் கலந்திருக்கும். கடும் பதப்படுத்தக்கூடிய, ஆனால் செம்பதமாக்க முடியாத மென்மையான எஃகு அனைத்தையும் இச்சொல் குறிக்கும்.

**machine screw : எந்திரத் திருகு:** தெளிவான வெட்டுத் திருகிழைகளும் பல்வேறு தலைவடிவங்களும் கொண்ட திருகு வகை. பெரும்பாலும் பயன்படுத்தப்படும் இந்தத் திருகு ஒரு மரையாணியுடனோ, மரையாணி இன்றியோ அமைந்திருக்கும்.

**machine tool : (பட்.) வெட்டுக் கருவி** : கடைசல் எந்திரம், துரப்பண எந்திரம், இழைப்புளி, அரைவை எந்திரம் போன்ற வெட்டும் வகையைச் சேர்ந்த கருவிகள்.

இவை மற்ற எந்திரங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படும் கருவிகள். எனவே, இந்தக் கருவிகள் ''தொழில் துறையின் தலைமைக் கருவிகள்'' என்று அழைக்கப்படுகின்றன.

**machining** : **எந்திர வேலைப்பாடு:** உலோக வேலைப்பாடுகளில் எந்திரங்களினால் செய்யப்படும் நுட்ப வேலைப்பாடுகள்.

**machining allowance** : *(எந்.)* **மெருகு வேலை மிகைப்பகுதி**: வெட்டுக் கருவிகளினால் மெருகு வேலைப்பாடு செய்வதற்கு வசதியாகப் போதிய அளவு விடப்படும் மிகைப்பகுதி.

**mechinist: எந்திர இயக்குநர்:** எந்திரக் கருவிகளை இயக்குபவர்.

**Mach number** : *(வானூ.)* **ஒப்பு வேக எண்** : உண்மையான காற்று வேகத்திற்கும் ஒலியின் வேகத்திற்குமிடையிலான விகிதத்தைக் குறிக்கும் எண். ஒலியை விடக் குறைந்த வேகத்திற்கான இந்த எண் ஒரு பின்னமாகும். ஒலியினும் மிகுதியான வேகத்திற்கு இந்த எண் ஒன்றுக்கு மேற்பட்டதாகும்.

**macro molecule** : *(குழை.)* **பெரு மூலக்கூறு** : கரைதக்கை நிலைப் பண்புகளை வெளிப்படுத்தும் அளவுக்கு வடிவளவுள்ள ஒரு மூலக்கூறு.

**madrono** : *(மர.வே.)* **மாட்ரோனோ** : ஒரு பூக்கும் இள மரம். பசிபிக் கடற்கரையோரம் வளர்கிறது. இதன் வெட்டு மரம் கரடுமுரடானது; கனமானது; இளஞ்சிவப்பு நிறமுடையது. அறைகலன்கள் செய்வதற்கு மிகுதியும் பயன்படுகிறது.

**magazine** : *(க.க.)* **படைக்கலக் கொட்டில்** : போர்க்காலத்தில் படைக்கலங்களையும் போர்த் தளவாடங்களையும் சேர்த்து வைக்குமிடம்; துப்பாக்கி மருந்து முதலிய வெடிமருந்துகளைச் சேர்த்து வைக்குமிடம்.

(2) **பருவ இதழ்** : பல எழுத்தாளர்களின் படைப்புகளடங்கிய புத்தக வடிவிலுள்ள பருவ வெளியீடு.

(3) **அச்சுக்கோப்பு எந்திரப் பகுதி:** அச்சுக்கோப்பு எந்திரத்தின் ஒரு பகுதி. இதில், அச்சு வார்ப்புருக்கள் அல்லது எழுத்துகள் வரிகளாக ஒருங்கிணைப்பதற்காகச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும்.

**magnalium** : *(உலோ.)* **மாக்னாலியம்** : அலுமினியமும் மக்னீசியமும் கொண்ட இலேசான உலோகக்கலவை. இதில் 2%—10% மக்னீசியம் கலந்திருக்கும். இந்த உலோகக் கலவை மிகக் கடினமானது. இதனை எளிதில் வார்க்கலாம்; வடிவமைக்கலாம்; இதில் எளிதில் வேலைப்பாடுகள் செய்யலாம்.

**magnesia** : *(வேதி.)* **மக்னீசியா:** இதனை வெளிம உயிரகை என்றும் கூறுவர். இது வயிற்றுப் புளிப்பகற்றும் மருந்தாகப் பயன்படுத்தப்படும் வெண்பொடி.

**magnesia** : *(உலோ.)* **மக்னீசியா:** மக்னீசியம் கார்பனேட்டை நெருப்பில் சுட்டு மாறாச் சுண்ணமாக்குவதன்மூலம் கிடைக்கும் பொருள். இலேசான வெண்ணிறப் பொடியான இது, வயிற்றில் அமிலத்தன்மை, மலச்சிக்கல் போன்ற வயிற்றுக் கோளாறுகளை நீக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**magnesium** : *(உலோ.)* **மக்னீசியம்** : மிக இலேசான உலோகத் தனிமம். இதன்வீத எடைமானம் 1:74. இது தனியாகப் பயன்படுத்தப்படுவதில்லை. இதனை அலுமினியம் அல்லது பிற உலோகங்களுடன் கலந்து விமானம் முதலிய

வற்றின் இலேசான உறுப்புகளைத் தயாரிக்கப் பயன்படுத்துகிறார்கள். இந்த உலோகம் எளிதில் தீப்பற்றும் தன்மையுடையது. அதனால், இதில் எந்திரத்தால் வேலைப்பாடுகள் செய்யும்போது தீப்பிடிப்பதற்கு எதிராக முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும். இது கண்கூச வைக்கும் ஒளி விளக்குகளிலும், வாண வேடிக்கைப் பொருள்களிலும் பயன்படுகிறது.

**magnesium silicate :** *(வண்.)* **மகனீசியம் சிலிக்கேட் :** வெண்மையான வண்ணப் பொருள். இது எதனுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படுகிறதோ அந்தப் பொருளுக்கு இழைத் தன்மையைக் கொடுக்கிறது.

**magnet:** *(மின்.)* **காந்தம்:** வளைவில் (குதிரை லாட) அல்லது சலாகை வகைத் துகள்களைக் கவர்ந்திழுக்கும் இயல்புடைய பொருள்.

**magnetic amplifier:** *(மின்.)* **காந்த மின்பெருக்கி:** நேர் மின்னோட்டம் மற்றும் மாற்று மின்னோட்டச் சுருணையைப் பயன்படுத்தும் ஒரு மின்மாற்றி வகைச் சாதனம்.

**magnetic brake:** *(மின்.)* **காந்தத் தடை:** காந்த ஆற்றல் மூலம் இயக்கப்படும் உராய்வு வகை எந்திரத் தடை.

**magnetic chuck:** *(உலோ.)* **காந்த ஏந்தமைவு:** எந்திரப் பணிகளில் இரும்பை அல்லது எஃகை ஒரு நிலையில் ஏந்திப் பிடித்து வைப்பதற்குப் பயன்படும் வலிமையான காந்தம்.

**magnetic chuck:** *(மின்; பட்.)* **காந்தப்பற்றி:** காந்த ஈர்ப்பு சக்தி மூலம் இரும்பையும் எஃகையும் பற்றிக் கொள்ளும் ஒரு வகைப் பற்றுக்கருவி மேற்பரப்பினை அராவித் தீட்டும் எந்திரங்களில் இது முக்கியமான உறுப்பாகும். இதனை நேர் மின்னோட்டத்தை மட்டுமே கொண்டு பயனபடுத்த முடியும்.

**magnetic circuit:** *(மின்)* **காந்தச் சுற்று வழி:** ஒரு காந்தப் பொருளில் அல்லது ஒரு காந்தக் கருவியில் காந்தவிசை வரிக்கோடுகள் செல்லும் வழி. ஒரு சுற்று வழி ஓர் இடைவெளியையும் கொண்டிருக்கலாம்.

**magnetic circuit breaker:** *(மின்.)* **காந்தச் சுற்றுவழி முறிப்பான்:** ஒரு சுற்று வழித் தொடர்பை ஏற்படுத்துவதற்குப் பயன்படும் ஒரு மின்காந்தச் சாதனம்.

**magnetic circuit:** *(மின்.)* **காந்தச் சுற்றுவழி:** காந்தமேற்றும் ஆற்றலின் விளைவினால் ஆற்றலின் காந்தக் கோடுகளை ஏற்படுத்தும் ஒரு முழுச் சுற்றுவழி.

**magnetic circuit breaker:** *(மின்.)* **காந்தச் சுற்றுவழி முறிப்பான்:** ஒரு மின்னியல் சுற்று வழியில் சுமை அதிகமாகும்போது ஒரு காந்தவிசை மூலம் சுற்றுவழியைத் திறக்கின்ற ஒரு காப்புச் சாதனம்.

**magnetic coil:** *(மின்.)* **காந்தச் சுருணை:** ஒரு மின்காந்தச் சுருள். இதில் ஒரு கம்பிச் சுருள் ஒரு திசை சுற்றப்பட்டிருக்கும். இதில் மின்னோட்டம் பாயும்போது, அடர்த்தியான காந்தப்புலம் உண்டாக இரும்பையும் எஃகையும் ஈர்க்கும்.

**magnet core:** *(மின்.)* **காந்த உள்ளீடு:** இது பெரும்பாலும் மெல்லிரும்பாக அமைந்திருக்கும். இதனை மையமாகக் கொண்டு கம்பி சுற்றப்பட்டிருக்கும். இக்கம்பியில் மின்விசை பாயும்போது மின்காந்தம் உண்டாகும்.

**magnetic cutout:** *(மின்.)* **காந்த வெட்டுவாய்:** ஒரு மின் சுற்று

வழியை, அந்தச் சுற்று வழியின் ஒரு பகுதியை உருக்குவதற்குப் பதிலாக ஒரு மின்காந்தத்தின் மூலம் முறிப்பதற்கான ஒரு சாதனம்.

**magnetic deflection:** **காந்த விலக்கம்:** காந்தப் புலங்கள் மூலம் மட்டுப்படுத்தப்படும் எலெக்ட்ரான் கற்றையின் இயக்கம்.

**magnetic density:** *(மின்.)* **காந்த அடர்த்தி:** பார்க்க:பெருக்கடர்த்தி.

**magnetic field:** *(மின்.)* **காந்தப் புலம்:** ஒரு காந்தத்தின் அருகிலுள்ள இடப்பகுதி. இதன் வழியே காந்த விசைகள் செயற்படுகின்றன.

**magnetic flux:** *(மின்.)* **காந்தப் பெருக்கடர்த்தி:** மின்காந்தம், நிலைக்காந்தம் அல்லது கம்பிச் சுருள் மூலம் உருவாக்கப்படும் காந்தவிசைக் கோடுகள்.

**magnetic force:** *(மின்.)* **காந்த விசை :** ஒரு காந்தத்தின் துருவங்கள் கவர்ந்திழுக்கிற அல்லது விலகிச் செல்கிற விசை.

**magnetic fuel pump:** *(தானி.)* **காந்த எரிபொருள் இறைப்பான்:** வெற்றிட அமைப்பு முறையின் உதவியின்றி எரிபொருள் வழங்குவதை முறைப்படுத்தும் மின்விசையால் இயங்கும் எந்திர இறைப்பான்.

**magnetic hoist:** *(மின்.)* **காந்தப் பாரந்தூக்கி:** மின்காந்தத்தின் மூலம் பாரத்தைத் தூக்கும் ஒரு பாரந்தூக்கி எந்திரம்.

**magnetic induction:** *(மின்.)* **காந்தத் தூண்டல்:** பாய்வுத் திசைக்குச் செங்குத்தாகவுள்ள குறுக்கு வெட்டுப் பரப்பின் ஓர் அலகிலுள்ள காந்தக் கோடுகளின் அல்லது காந்தப் பெருக்கத்தின் எண்ணிக்கை.

**magnetic line of force:** *(மின்.)* **காந்தவிசைக் கோடு:** ஒரு திசை காட்டியின் முள்ளுக்கு இணைவாக அமைந்துள்ள காந்தக் கோடு.

**magnetic materials:** *(மின்.)* **காந்தப் பொருட்கள்:** காந்தம் ஈர்க்கக் கூடிய இரும்பு, எஃகு, நிக்கல், கோபால்ட் போன்ற பொருட்கள்.

**magnetic needle:** *(மின்.)* **காந்த ஊசி:** ஒரு நுண்ணிய எஃகுக் காந்தம். இதனை ஒரு ஆதாரத்தில் வைக்கும்போது, பூமியின் காந்தத் துருவங்களுக்கேற்ப, இயல்பாக வடக்கு-தெற்குத் திசையில் நிற்கும்.

வடக்கு நோக்கிய கருவியில் எப்போதும் வடக்கையே காட்டும் காந்த ஊசி.

**magnetic permeability:** *(மின்.)* **காந்தத் தகவு:** காந்தத் தாக்குதலுக்கும் இளக்கி அடர்த்திக்கும் உள்ள தகவு. ஒரு பொருளுக்குள் காந்தம் எளிதாக ஊடுருவிச் செல்லக்கூடிய திறனைக் கணக்கிடும் அளவு.

**magnetic potential:** *(மின்.)* **காந்த ஆற்றல்:** காந்தப் புலத்தின் எல்லையிலிருந்து ஒரு காந்தத் துருவ அலகினைக் காந்த ஆற்றல் தேவைப்படும் புள்ளிக்கு நகர்த்துவதற்குத் தேவைப்படும் பணியின் அளவு.

**magnetic saturation:** *(மின்.)* **காந்தப்பூரித நிலை:** ஒரு காந்தப் பொருளில் காந்தமூட்டும் பொழுது, எந்த நிலையில் காந்த மூட்டும் விசை அதிகரித்தாலும் அதன் இளக்கி அடர்த்தியில் எவ்வித அதிகரிப்பும் ஏற்படுவதில்லையோ அந்த நிலை. அந்த நிலையில் காந்தம் ஏறுவது பூரிதமடைந்து விட்டது என்று பொருள்.

**magnetic screen or shield** : (மின்.) **காந்தத் திரை அல்லது கேடயம்** : இது உட்புழையான இரும்புப் பெட்டி. இதன் மையப் பகுதி காந்த விசைக்கோடுகளின்றி அமைக்கப்பட்டிருக்கும்.

**magnetic switch** : (மின்) **காந்த இணைப்பு விசை** : மின்காந்தம் மூலம் இயக்கப்படும் அல்லது கட்டுப்படுத்தப்படும் ஓர் இணைப்பு விசை.

**magnetic whirl**: (மின்.) **காந்தச் சுழற்சி** : மின்னோட்டம் பாயும் ஒவ்வொரு கம்பியைச் சுற்றிலும் ஒரு வடிவமான காந்தப்புலம் நீர்ச் சுழி அல்லது சுழல் போல் அமைந்திருக்கும். இதுவே காந்தச் சுழற்சி எனப்படும். இது தூண்டலற்ற சுருணையைக் குறிப்பதில்லை.

**magnetism** : (மின்.) **காந்த விசை** : இரும்பு, எஃகு, வேறு பொருள்களுக்குள்ள ஒருவகை ஈர்ப்பு இயல்பு. இந்த இயல்பு காரணமாக, இவை குறிப்பிட்ட விதிகளுக்குட்பட்டு ஈர்ப்புவிசை களையும் செலுத்துகின்றன.

**காந்தவியல்** : காந்தவிசை பற்றிய விதிகளையும் நிலைகளையும் ஆராயும் அறிவியல் பிரிவு.

**magnetite** : (கனி.) **அயக்காந்தம்** : (மாக்னட்டைட்) காந்த விசையுடைய இரும்புக் கனிமம் ($Fe_3O_4$)

**magnetization** : (மின்.) **காந்த விசையூட்டுதல்** : காந்தத்தின் இயல்புகளை ஏற்றல் அல்லது காந்தவிசையினை ஊட்டுதல்.

**magnetizing current** : **காந்த மூட்டு மின்னோட்டம்** : ஒரு மின் மாற்றியில், மின்மாற்றிக் காப்புப் பெருக்கம் ஏற்படுத்தப் பயன்படுத்தப்படும் மின்னோட்டம்.

**magneto** : (மின்.) **தனிக் காந்த மின்னாக்கி** : உள் வெப்பாலைப் பொறி முதலியவற்றில் தீக்கொளுவுவதற்காகப் பயன்படுத்தப்படும் தனி நிலைக்காந்த மின்னாக்கிப் பொறி. இதில் மின்காந்தத் தூண்டுதல் மூலம் மின்விசை உற்பத்தி செய்வதற்காக நிலைக் காந்தங்களும் ஒரு மின்னகமும் அமைந்திருக்கும்.

**magneto - hydrodynamics** : (விண்.) **காந்த நீரியக்கவியல்** : நீர்சார்ந்த இயக்க விசை பற்றிய, அல்லது நீர்மத்தின் அல்லது நீர் மத்தின் மீது தாக்கும் ஆற்றல் பற்றிய ஆய்வியல்.

**magnetometer** : (மின்.) **காந்த மானி** : ஒரு காந்தப்புலத்தின் திசையினையும் விசையினையும் அளவிடப் பயன்படுத்தப்படும் கருவி.

**magnetomotive force** : (மின்.) **காந்தவியக்க விசை** : ஒரு முழுமையான காந்தச் சுற்று வழியின் நெடுகிலும் ஒருங்கிணைக்கப்பட்ட முழுமையான காந்தம் ஏற்றும் விசை.

**magnet steel** : **காந்த எஃகு** : இது சாதாரணமாக, குரோமியமும் மக்னீசியமும் கலந்த உயர்தரமான எரியும் மின்னிழைம எஃகினைக் குறிக்கும். இது நிலைக்காந்தங்களுக்குப் பயன்படுகிறது.

**magnetostriction**: (மின்.) **காந்த விளைவு** : ஒரு காந்தப் புலத்தில் வைக்கப்படும் சில தனிமங்களின் பரிமாணத்தில் ஏற்படும் மாறுதல் விளைவு.


**magnet poles** : (மின்.) **காந்தத் துருவங்கள்** : ஒரு காந்தத்தில் உள்ள மிக அதிக அளவு ஈர்ப்பாற்றல் புள்ளிகள். இவை வடதுருவங்கள், தென்துருவங்கள் எனப்படும்.

**magnet wire** : (மின்.) **காந்தக் கம்பி** : மின்னகங்கள், புலச் சுருள்

கள், தூண்டு சுருள்கள் முதலியவற்றின் சுருணைகளில் பயன்படுத்தப்படும் கம்பி; இது சிறியது. ஒரே செம்புக் கம்பியினாலானது; பஞ்சு, பட்டு, எனாமல் போன்றவற்றால் மின் காப்பிடப்பட்டது; செறிவூட்டப் பெறாதது.

**magnitude** : *(விண்.)* **ஒளிப்பிறக்கம் :** *விண்மீன்களின் ஒளிப்பிறக்க நிலை. 390மீட்டர் தூரத்திலுள்ள ஒரு மெழுகுவர்த்திப் பிரம்பின் ஒளிர்வு, முதன்மை நிலை ஒளிப் பிறக்கம் எனப்படும்.*

**mahlstick** : *(வண்.)* **தாங்கு கோல் :** ஓவியம் வரைபவர்கள் இடது கைத்தாங்கலாகப் பயன்படுத்தும் தோலுருளை அடியுடைய கோல்.



தாங்கு கோல்

**mahogany***(தாவ)***சீமை நூக்கு**:உலகெங்கும் பெட்டிகள், அறைகலன்கள் செய்வதற்குப் பயன்படும் முக்கியமான மரம். தெற்கு ஃபுளோரிடா, மேற்கிந்தியத் தீவுகள் மெக்சிக்கோ, கொலம்பியா வெனிசூலா, மேல் அமேசான் மண்டலம் ஆகியவற்றில் மிகுதியாக வளர்கிறது. இம்மரம் வெட்டியவுடன் இளஞ்சிவப்பு அல்லது வஞ்சிரம் அல்லது மஞ்சள் நிறத்தில் இருக்கும்; வெயில் படப்படக் கருஞ்சிவப்பு நிறமாக மாறிவிடும். அடர்த்தி வேறுபடும். கரணைகள் கவர்ச்சியான உருவங்களில் அமைந்திருக்கும்.

**mahogany, philippine**: *(தாவ.)* **:.பிலிப்பைன் நூக்கு** : ஃபிலிப்பைன் தீவுகளில் வளரும் சீமை நூக்கு மரவகை.

**main** : *(குளி.பத.)* **தலைப்பெருங் குழாய்** : பல்வேறு கிளைக்குழாய்களிலிருந்து நீர் வழங்குவதற்கு அல்லது நீரைச் சேகரிப்பதற்குப் பயன்படும் பெரிய குழாய்.

**main bearings** : *(தானி.)* **முதன்மைத் தாங்கிகள் :** உந்து ஊர்தி எஞ்சின்களில் வணரி அச்சுத்தண்டினைத் தாங்கி நிற்கும் தாங்கிகள் முதன்மைத் தாங்கிகள் ஆகும்.

**mains** : *(மின்.)* **மின் வாய்கள் :** கிளைமின் சுற்று வழிகளுக்கு மின் விசை வழங்குகிற மின்னியல் கடத்திகள்.

**main shaft** : *(எந்.)* **முதன்மைச் சுழல் தண்டு** : எஞ்சினிலிருந்து அல்லது இயக்கியிலிருந்து நேரடியாக மின்விசையைப் பெற்று மற்ற உறுப்புகளுக்கு விசையை அனுப்புகிற சுழல்தண்டு.

**main supporting surface** : *(வானூ)* **முதன்மை ஆதாரப்பரப்பு** : விமானத்தில், இறகுகளின் மேற்பரப்பு. இப்பரப்பு விமானம் இயங்குவதற்கு உதவியாக இருக்கிறது.

**major axis** : **நெட்டச்சு** : ஒரு நீள் வட்டத்தின் நீள் விட்டம்.

**major diameter**: *(எந்.)* **நீள் விட்டம்**: இதனைப் 'புற விட்டம்' என்றும் அழைப்பர். ஒரு திருகில் அல்லது சுரையாணியில் உள்ள மிகப் பெரிய விட்டம்.

**make up**: *(அச்சு.)* **பக்கத் தயாரிப்பு**: அச்சுக்கலையில் அச்சுக் கோத்த எழுத்துக்களைப் பக்கங்களாகத் தயாரித்தல்.

**make-up rule**: *(அச்சு.)* **பக்கத் தயாரிப்பு வரித்தகடு**: அச்சுக்கலையில் பக்கங்களைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் எஃகு வரித்தகடு.

**malleable**: *(உலோ.)* **தகடாக்கத் திறன்**: உலோகங்களின் வகையில் அடித்து, நீட்டி, வளைத்து, தகடாக்கத் தக்க தன்மை.


**malachite** : *(கனி.)* **மாலாஷைட்**: தாமிரத் தாதுக்களில் ஒன்று. பச்சை நிறமான, அடிப்படைத் தாமிரக் கார்போனேட். மேலேட்டுப் படிவங்களாகப் பெருமளவில் கிடைக்கிறது. ''மலைப்பச்சை'' என்னும் பெயரில் வண்ணப் பொருளாகப் பயன்படுகிறது.

**malleable**: **நெகிழ் திறனுடைய**: தங்கம் போன்ற உலோகங்களை உடைந்துவிடாதபடி தகடாக நீட்டத்தக்க நெகிழ்திறத் தன்மையுடைய.

**malleable cast iron**: *(உலோ.)* **நெகிழ்திற வார்ப்பிரும்பு**: ஓரளவுக்குக் கரிம நீக்கம் செய்யப்பட்ட வார்ப்பிரும்பு. இது சாதாரண வார்ப்பிலிருந்து வேறுபட்டிருக்கும். இதில் கட்டமைப்புக் கரணையாக இருப்பதற்குப் பதிலாக இழை இருக்கும். கடும் அதிர்ச்சிக்குள்ளாகும் உறுப்புகளைத் தயாரிக்க இது பயன்படுகிறது.

**malleablizing**: *(உலோ.)* **நெகிழ் திறனூட்டுதல்**: வெண்மையான வார்ப்பிரும்பிலிருந்து பெரும்பாலான கார்பனை அகற்றுவதற்காக அல்லது கார்பனைச் செம்பதமாக்கிய கார்பனாக மாற்றுவதற்காகப் பதப்படுத்தும் முறை.

**mallet**: **கொட்டாப்புளி**: மரச்சுத்தி.



கொட்டாப் புளி

**maltose**: *(வேதி )* **மால்ட்டோஸ்**: மாவூறலிலிருந்து எடுக்கப்படும் படிக வடிவச் சர்க்கரை. ரொட்டி தயாரிக்கப் பயன்படுகிறது.

**management**: **மேலாண்மை**: நிருவாகம் செய்தல்; நெறிப்படுத்துதல்; கண்காணித்தல்; கட்டுப்படுத்துதல்.

**mandrel**: *(எந்.)* **குறுகு தண்டு**: கடைசல் பிடிக்கும் எந்திரத்தின்



குறுகு தண்டு

நடுவச்சு. கடைசல் பிடிக்க வேண்டிய பொருளை இதில் பொருத்தி, இதனைச் சுழலச் செய்து கடைசல் வேலை செய்வார்கள்.

**mandrel stake**: *(உலோ.வே.)* **கடைசல் நடுவச்சு** : கடைசல்பிடிக்கும் பொறியில் குழல்வடிவம் உருவாக்கப்பயன்படும் நீள் உருளைக் கோல்.

**maneuver** : *(வானூ.)* **நுட்ப இயக்கம்** : (1) விமானத்தைத் தேர்ச்சித் திறனுடன் மிக நுட்பமாக இயக்குதல்.

(2) விமானத்தில் சுழன்று பறந்து சாதனை புரிதல்.

**maneuverability** : *(வானூ.)* **நுட்ப இயக்கத் திறன்** : விமானத்தை எளிதாக இயக்குவதற்கு இடமளிக்கும் நுட்ப இயக்கத்திறன்.

**manganese**: *(கனி.)* **மாங்கனீஸ் (மங்கனம்)** : கடினமான, எளிதில் உடைந்து போகக்கூடிய உலோகத் தனிமம். பழுப்பான வெண்மை நிறம் முதல் சிவப்பு நிறம்வரை பல வண்ணங்களில் கிடைக்கிறது. இது காந்தத் தன்மையற்றது. எஃகு கண்ணாடி, வண்ணங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**manganese bronze** : *(உலோ.)* **மாங்கனீஸ் வெண்கலம்** : ஓர் உலோகக் கலவை. இதில் 55%—60% செம்பு, 38% — 42% துத்தநாகம், சிறிதளவு வெள்ளீயம், மாங்கனீஸ், அலுமினியம், இரும்பு, ஈயம் கலந்திருக்கும். வன்மையும் வலிமையும் வாய்ந்த

உறுப்புகள் செய்யப் பயன்படுகிறது.

**manganese diaxide** : *(மின்.)* **மாங்கனீஸ் டையாக்சைடு** : மின் கலங்களில் மின் முனைப்பு நீக்கப் பொருளாகப் பயன்படும் வேதியியல் பொருள்.

**manganese steel**: *(உலோ.)* **மாங்கனீஸ் எஃகு** : இதில் 0 20% 0.50% கார்பனும் 1.00% 1.30% மாங்கனீசும் கலந்திருக்கும். இது மிக அதிக அளவு விறைப்புத் திறன். உடையது 3.5% நிக்கல் எஃகுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகிறது. இதிலுள்ள மாங்கனீஸ் அளவை அதிகரிப்பதால் இது முறியும் தன்மையுடையதாகிறது.

**manganin** : *(உலோ.)* **மாங்கானின்** : செம்பு, நிக்கல். அய மாங்கனீஸ் கலந்த உலோகக் கலவை, தரமான தடைச் சுருள்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**mangling**: *(நெச.)* **சலவை மடிப்பு**: சலவைப் பொறியிட்டுத் துணிகளை அழுத்தி மடித்தல்.

**manhole** : *(கம்.)* **சாக்கடை வாயிற்புழை** : புதை சாக்கடைக்குத் தெரு மீது அமைக்கப்பட்டிருக்கும் திறப்பு.

**manifold** : *(உலோ.)* **பல்வாயில் குழாய்** : குடிநீர்த் தொட்டிகளின் தொகுதிகளை ஒன்றாக இணைக்கப் பயன்படும் பல வாயில்கள் உடைய குழாய்.

**manifold writer** : **படிபெருக்கி** : மைத்தாள் படியெடுக்கும் கருவி.

**manifold**: *(தானி.)* **புறம்போக்குக் குழாய்** : உந்து ஊர்தி எஞ்சினில் உள்ள புறம் போக்குப் பல்புழை வாய்க்குழாய்கள். இது ஒவ்வொரு நீள் உருளையிலிருந்தும் புறம் போக்கு வாயுக்களைத் தனியொரு புறம் போக்குக் குழாயினுள் செலுத்துவதற்குப் பயன்படுகிறது.

**manifold paper** : *(அச்சு.)* **பல்படித் தாள்**: பல படிகளை ஒருங்கே எடுப்பதற்குப் பயன்படும் மென்மையான காகிதம்.

**manifold vacuum** : *(தானி.)* **புறம் போக்குக் குழாய் வெற்றிடம்** : எஞ்சின் இயங்கும்போது புறம் போக்குக் குழாயிலுள்ள வாயு மண்டல அழுத்த நிலை.

**manila** : **சணல் தாள்** : சிப்பம் கட்டுவதற்குப் பயன்படும் மஞ்சள் நிற அல்லது மஞ்சள் பழுப்பு நிறக் காகிதம்.

**manometer** : *(இயற்.)* **அழுத்தமானி** : ஆவி, வாயு போன்றவற்றின் அழுத்தத்தை அளவிடுவதற்கான ஒரு கருவி.

**mansard roof** : *(க.க.)* **இரு சரிவு மோடு**: மேற்பாதிச் சாய்வைவிடக் கீழ்ப்பாதிச் சாய்வு செங்குத்தாகவுள்ள இரு சரிவு மோடு.

**mansion** : *(க.க.)* **மாளிகை** : ஒரு பெரிய அலங்காரமான வீடு.

**mantel**: *(க.க.)* **தண்டயம்**: அடுப்பங்கரையிலுள்ள தண்டயப் பலகை.

**mantissa** : *(கணி.)* **மடக்கைப் பதின்மானம்** : இயற்கணிதத்தில் ஒரு மடக்கையின் தசமப்பகுதி அல்லது பின்னப்பகுதி.

**manual** : *(பட்.)* (1) **கையேடு** : அறிவுறுத்தங்கள் அடங்கிய சிறு குறிப்பு ஏடு.

(2) **கைவேலை** : கைகளால் செய்யப்படும் பணிகள்.

**manual arts** : **கைவேலைப்பாடு** : கைகளினால் செய்யப்படும் நுட்பமான கலை வேலைப்பாடுகள்.

**manual switch** : *(தானி.)* **ஆளியக்க விசை** : உந்து ஊர்திகளில்,

கைகளால் அல்லது கால்களால் இயக்கப்படும் விசை. இது மற்ற வழிகளில் இயக்கப்படும் விசைக்கு மாறானது.

**manufacturing**: *(தானி.)* **ஆக்கத் தொழில்** : மனிதரின் தேவைகளுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்ற பொருள்களை உற்பத்தி செய்தல்.

**manuscript** : *(அச்சு.)* **எழுத்துப் படி** : அச்சிடுவதற்குக் கையால் எழுதி அல்லது தட்டச்சு செய்து கொடுக்கப்படும் மூல வரைபடி.

**mar** : **பாழ்படுத்து** : அழித்தல் அல்லது முழுவதும் பாழ்படுத்துதல்.

**marble**: *(க.க.)* (1) **சலவைக் கல்; பளிங்குக் கல்**: வெண்மை, கரும்பழுப்பு, பழுப்பு வண்ணங்களிலுள்ள ஒரு வகைச் சுண்ணாம்புக்கல். கட்டிடங்களின் உட்புற, வெளிப்புற அலங்கார வேலைப்பாடுகளுக்கு மிகுதியும் பயன்படுகிறது.

(2) **பளிங்குத் தாள்**: பளிங்கு போல் பளபளப்பாகத் தோற்றமளிக்கும் காகிதம்.

**marble dust**: **பளிங்குத் தூள்** : அரைத்துத் தூளாக்கிய சுண்ணாம்புக்கல் மெருகு. சுண்ணத்தூள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**marblizing**: *(வண்.)* **பளிங்குத் தோற்றமளித்தல்**: பல வண்ணச் சலவைக்கல் தோற்றமளிக்குமாறு மெருகேற்றுதல்.

**marbling**: **பளிங்கு வண்ணப்பூச்சு**: பல்வண்ணச் சலவைக்கல் போல் தோற்றமளிக்கும் வகையில் மரத்தில் வண்ணம் பூசுதல்.

**marconi antenna**: **மார்க்கோனி வானலைவாங்கி**: இயங்குவதற்குத் தரையைச் சார்ந்திருக்கும் ஒரு வகை வானலை வாங்கி.

**Marconi, Gugliemo** : *(மின்.)* **மார்க்கோனி, குக்ளிமோ (1874-1937)** கம்பியில்லாத் தந்தியைக் கண்டு பிடித்த இத்தாலியப் புத்தமைப்பாளர். அட்லாண்டிக் கடலைக் கடந்து கம்பியில்லாத் தந்திமூலம் செய்தி அனுப்புவதில் 1901 இல் வெற்றியடைந்தார் 1909 இல் சி. எஃப் பிரானுடன் சேர்ந்து கூட்டாக நோபல்பரிசு பெற்றார்.

**margin** : *(அச்சு.)* **பக்க ஓரம்** : அச்சுத்துறையில் பக்கங்களில் அச்சிடாது விடப்படும் பக்க ஓர இடம்.


**marginal note** : *(அச்சு.)* **ஓரக் குறிப்பு** ; பக்கங்களின் ஓர் இடத்தில் எழுதப்படும் குறிப்புகள்.

**marine glue** : *(மர.வே.)* **கடற் பசைப் பொருள்** : ஒரு பகுதி கச்சா ரப்பர், இரு பகுதி அவலரக்கு, மூன்று பகுதி நிலக்கீல் கொண்ட பசைப் பொருள்,

**marker generator** : *(மின்.)* **குறியிடு மின்னாக்கி** : வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஒருங்கிணைப்பு சரியாக இருக்கிறதா என்று சோதனை செய்து பார்ப்பதற்கான ஒரு கருவி. இதில் குறியிடு. அலைவெண்கள் 'பிப்' என்ற ஒலியை எழுப்பும்.

**marking - ink** : **குறியிடு மை** : துணி குறியிடும் மை.

**marking awl** : *(மர வே.)* **குறியிடு தமரூசி**: கடினமான மரத்தில்குறியிடுவதற்கான கூர்மையான எஃகுக் கருவி.


குறியிடு தமரூசி

**marking machine**: *(மர.வே.)* **குறியிடு பொறி**: வாணிக முத்திரைகள் புனைவுரிமைத் தேதிகள், ஆகியவற்றை வெட்டுக் கருவிகளிலும், துப்பாக்கிக் குழல்களிலும் பொறிப்பதற்குப் பயன்படும் எந்திரம்.

**marl** : *(மண்.)* **சுண்ணக்கரிகை உரம்** : *களிமண்ணும், சுண்ணக் கரிகையும் கலந்த மண்வள உரச் சத்து.*

**marquetry** : *(மர.வே.)* **உள் இழைப்பு வேலை**: *மரத் தளவாடங் களில் உள் இழைப்பு அலங்கார வேலைப்பாடுகள் செய்தல். அரிதாக தந்தம், எலும்பு, முத்து ஆகிய வற்றிலும் இந்த வேலைப்பாடு செய்வதுண்டு.*

**marsh gas or methane**: *(வேதி.)* **சதுப்பு வாயு அல்லது மீத்தேன்** ; ($CH_4$) *இலேசான, நெடியற்ற, தீப்பற்றக்கூடிய, ஹைட்ரோ கார்பன் என்னும் வாயு. சதுப்பு நிலங்களிலும், சுரங்கங்களிலும் கரிமப் பொருள்கள் சிதைவுறுவதால் இயற்கையாகக் கிடைக்கிறது. பல கரிமப் பொருள்களை வாலை வடிப்பதன் மூலமும் பெறப்படுகிறது.*

**marsupials** : *(உயி.)* **பைம்மாவினம்:** *வயிற்றில் பையுடைய கங்காரு போன்ற பாலூட்டி உயிரினம். இவை இந்தப் பையில் தன் குட்டிகளைக் கொண்டு செல்கின்றன.*



கங்காரு

**martensitc**: *(உலோ.)* **மார்ட்டென்சைட்** : *மிகக் கடினமான எஃகில் முதன்மைக் கட்டமைப்புத் தனிமம்.*

**Martensit alloy steels** : *(உலோ.)* **மார்ட்டன்சிட்டிக் உலோகக் கலவை** ; *எஃகு முழுமையாக 'மார்ட்டன்சைட் கொண்ட ஒரு வகை எஃகு. மார்ட்டன்சைட் என்பது, கார்பனும், ஆல்ஃபாவும் (இரும்புப் படிகங்கள்) அணுவியக்கச் சிதறல் மூலம் உண்டாவது' இந்த வகை எஃகு, மிகக் கடினமானது; ஆயினும், பதப்படுத்திய அல்லது டென்மையான எஃகினைப் போன்று அத்துணை கடினமானதன்று. ஆஸ்டினைட்டை 300°C-வெப்ப நிலையில். மெல்ல மெல்லக் குளிர வைப்பதன் மூலம் இது படிகிறது. புகழ்பெற்ற ஜெர்மன் உலோகவியலறிஞர் பேராசிரியர் ஏ. மார்ட்டன்ஸ் என்பாரின் பெயரில் இது அழைக்கப்படுகிறது.*

**mash seam welding** : *(பற்ற.)* **மசிவு மடிப்புப் பற்றவைப்பு** : *இது ஒரு வகை மடிப்புப் பற்றவைப்பு முறை. இதில் விளிம்புகள் ஒன்றன் மேல் ஒன்று வைத்து நன்கு மசிக்கப் படுவதன் மூலம் பற்ற வைக்கப்படுகிறது.*

**mask** : **முகமுடி** : *முகத்தை மூடிக் கொள்வதற்கு விசித்திரமான வடிவங்களில் செய்யப்பட்ட பொம்மைத் தலைகள்.*

**masonite** : **மாசோனைட்** : *மர இழையிலான மின்காப்பு அட்டையின் வாணிகப் பெயர். இது பல்வேறு வகையான மேற்பரப்பு மாதிரிகளில் தயாரிக்கப்படுகிறது. இது பொட்டிப்புகள் அமைப்பதற்குப் பயன்படுகிறது.*

**masonry** : **கட்டுமான வேலை** : *கல், செங்கல் போன்றவற்றால் கட்டிடங்கள் கட்டும் வேலை.*

**mass** : **பொருண்மை** : *இயற்பியலில், ஒரு திரளில் செறிந்தடங்கியுள்ள பொருளின் அளவு.*

*அச்சுக் கலையில் ஒரு பக்க அச்செழுத்துச் செறிவுப் பகுதிகள்.*

**mass** : *(குளி.பத.)* **பொருண்மை** : *குறிப்பிட்ட உருவமில்லாத ஒரு பொருளில் அடங்கியுள்ள பொருளின் அளவு.*

**mass production** : **பேரளவு உற்பத்தி**: *எந்திரக் கருவிகளைப் பயன்*

படுத்தித் திட்டமிடப்பட்ட பெரிய அளவில் பொருட்களை உற்பத்தி செய்தல்.

**mass spectrograph** : *(இயற்.)* **பொருண்மை வண்ணப்பட்டை ஒளிப் பதிவுக் கருவி** : நேர்மின்னேற்றம் செய்யப்பட்ட துகள்களை அவற்றின் பொருண்மைகளுக்கேற்ப தனியாகப் பிரிக்கும் கருவி. படத்தில், அணுக்களின் அயனிகள் முதலில் 'E' என்ற தகடுகளுக்கிடையே செல்லும்போது, கற்றை கீழ் நோக்கி வளைகிறது. பின்னர் காகிதத்திற்கு செங்கோணத்திலுள்ள 'M' என்ற காந்தப்புலம் கற்றையை மேல்நோக்கி வளைக்கிறது. இவ்வாறாக ஒரே பொருண்மையான துகள்கள் அனைத்தும் ஒளிப்படத் தகட்டிலிருக்கும் 'P' என்ற புள்ளிக்கு வருகின்றன. வேறு பொருண்மையுள்ள துகள்கள் மற்றப் புள்ளிகளுக்கு வருகின்றன. பொருண்மை ஊடகம் மூலம் இந்தத் துகள்களைப் பார்க்கலாம்.

**mass-velocity relation**: *(இயற்.)* **பொருண்மை — விரைவு வீதத் தொடர்பு** : ஒரு பொருள் வேகமாக இயங்கும்போது, அதன் பொருண்மையானது, ஒளியின் வேகத்தில் பொருண்மை அளவிட முடியாத அளவுக்கு மிக உயர்ந்திருக்கும் வரையில் அதிகரிக்கிறது.

**master cylinder** : *(தானி.)* **தலைமை நீள் உருளை** : உந்து தண்டு உடைய பாய்மரப் பொருளடங்கிய நீள் உருளை. இதன் மூலம் கால் மிதியை அழுத்தித் தடுப்பு செய்யப்படுகிறது.

**master gauge** : **தலைமை அளவி**: அன்றாடம் பயன்படும் அளவிகளின் துல்லியத்தை அவ்வப்போது சோதனை செய்து பார்ப்பதற்குப் பயன்படும் அளவி.

**master keyed**: *(பட்.)* **ஆணித்திறவு**: பல பூட்டுகளைத் திறக்கவல்ல திறவுகோல்.

**master switch** : *(மின்.)* **தலைமை விசை** : ஒரு பிரதான மினவிசை. இதன்மூலம் மற்ற விசைகளின் இயக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

**master taper** : *(எந்.)* **தலைமை அளவை வார்** : செந்நிறமான அளவை வார். இதன் மூலம் உட்புறம் அல்லது வெளிப்புறம் மற்ற அளவை வார்கள் அளவிடப்படுகின்றன.

**master workman** : **தலைமைத் திறனாளர்** : சாதாரண அளவைவிட அதிகத் தேர்ச்சித் திறன் வாய்ந்த தொழிலாளர். "தலைமைப் பொறிவினைஞர்" என்பது பட்டறை மேன்முனையாளையும் கண்காணிப்பாளர்களையும் குறிக்கும்.

**msstic** : **பூனைக்கண் குங்கிலியம் (கல் புகைக்கீல்)** நிலக்கீலினால் இயற்கையாகப் பூரிதமடைந்த மணற்பாறை. தளம் பாவுவதற்கு மிகவும் உகந்தது.

**mat** ; *(குழை.)* **பாய்** : குழைமவியலில் நெசவு செய்யப்படாத இழைக் கண்ணாடி இழைகளாலானது. இது படலமாக இருக்கும். சில பொருட்கள் முன்னுருவாக்க வடிவங்களிலும் அமைந்திருக்கும்.

**mat board** : **பாய் அட்டை** : படச் சட்டங்களுக்குப் பயன்படுத்தப் படும் கனமான காகித அட்டை.

**matched boards** : *(மர.வே.)* **ஒட்டிணைப் பலகை** : ஒன்றுடன் ஒன்று பொருந்தும்படி குவடு குழிவுகளுடன் கூடிய பலகை வரிச்சல்.

**matched metal moulding** : *(குழை.)* **ஒட்டிணை உலோக வார்ப்படம்** : இரு உலோக வார்ப்படங்

களை அழுத்தி வெப்பமூட்டி ஒட்டி ணைத்து வலுவாக்கிய வார்ப் படம்.

**mah plates** : *(வார்.)* **ஒட்டிணைத் தகடுகள் :** தோரணிகள் ஏற்றப் பட்ட உலோக அல்லது மரத் தகடு கள். பெருமளவு எண்ணிக்கையி லான வார்ப்படங்கள் தேவைப் படும்போது உற்பத்தியை அதிக மாக்க இது பயன்படுகிறது.

**mated position :** *(தானி.)* **இணைவுறு நிலை** : நழுவப் பல்லி ணைகளை முறையாகக் கொளுவி யிணைக்கும்போது அவை இணை வுறு நிலையில் இருப்பதாகக் கூறப் படும்.

**materia medica** : *(மருந்.)* **மருந்துப் பொருள் ஆய்வு** : மருந்துப் பொருட்கள் எவ்வாறு கிடைக்கின் றன, எவ்வாறு தயாரிக்கப்படுகின் றன, எவ்வாறு பயன்படுத்தப்படு கின்ற என்பது பற்றிய ஆய்வு.

**material well**: *(குழை.)* **பொருள் குழிவிடம்**: அழுத்தப்பட்ட அல்லது மாற்றப்பட்ட வார்ப்புப் பொருளை வைப்பதற்குரிய குழி வான இடம்.

**mat finish** : **பாய்முறைச் செப்பம்**: பளபளப்பின்றி மங்கலாக இறு திச் செப்பமிடுதல்.

**mathematics** : **கணிதவியல்** : வண்ணளவுகளுக்கும் அவற்றின் செயற்பாடுகளுக்கு மிடையிலான தொடர்புகள் பற்றி ஆராயும் அறி வியல்.

**matrix**: *(அச்சு.)* **அச்சு வார்ப்புரு**: அச்செழுத்துக்களை வார்த்தெடுக் கும் எந்திரத்திலிருந்து எடுக்கப் படும் எழுத்து வார்ப்புருவின் பகுதி. இந்தஅச்சு. வார்ப்புருக்களி லிருந்து அச்சு வார்ப்புருத் தகடு களைத் தயாரிக்கப்படும் கனத்த அட்டையினையும் இது குறிக்கும்.

**matt** : **சரவைப் பரப்பு :** கரட்டுத் தளமான சரவை வேலைப்பாடு டைய மேற்பரப்பு.

**matte** : *(உலோ.)* **கலவைச் செம்பு**: முழுமையாகச்சுத்திகரித்து எடுக்கப்படாத செம்பு. வேறு பல உலோகங்கள் அடங்கிய கலவை யையும் இது குறிக்கும்.

**matter :** *(இயற்.)* **சடப்பொருள் :** எடையுள்ள, இடத்தை அடைத் துக் கொள்ளக் கூடிய பருப் பொருள்.

**maul** : **சம்மட்டி** ; கனமான சம் மட்டிக்கட்டை.

**mausoleum** : *(க.க.)* **கல்லறை மாடம்** : வீறார்ந்த கல்லறை மாடம்.

**mauve** : **ஊதாச் சாயம்** : ஒள்ளிய மெல் ஊதாநிறச் சாயம்.

**maxhete** : *(உலோ.)* **மாக்செட் :** நிக்கல், குரோமியம், டங்ஸ்டன், செம்பு, சிலிக்கன் அடங்கிய கலவை எஃகு. இது அரிமானத் தையும் வெப்பத்தையும் எதிர்க்கக் கூடியது. கொள்கலன் குழாய்கள், உலைகளின் உறுப்புகள் தயாரிக் கப் பயன்படுகிறது.

**maximum** : *(கணி.)* **பெருமம்** : (1) அனைத்திலும் மிகப் பெரிய தான அளவு.

(2) ஒரு சார்பலன் மூலம் இயன்ற வரையிலும் மிகப்பெரிய அளவில் குறிப்பிட்டத்தக்க ஒரு மதிப்பு.

**maximum power transfer :** *(மின்.)* **பெரும விசை மாற்றம்** : மின்சுமையின் தடையானது, மின் ஆதாரத்தின் உள்தடைக்குச் சம மாக இருக்கும் போது பெரும விசைமாற்ற நிலை உண்டாகிறது.

**maximum range** : *(வானூ.)* **பெருமவீச்செல்லை:** ஒரு விமானம் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அள வான வேகத்தில் அனைத்து

உயரங்களிலும் மிகப் பெருமள வில் பறக்கக்கூடிய தொலைவு:

**maximum revolutions:** (வானூ.) **பெருமச் சுழற்சிகள்:** ஒரு நிமிடத்தில் மிக அதிக அளவில் சுழலும் சுழற்சிகளின் எண்ணிக் கை. இது பெருமக் குதிரைத் திறனுக்கு நேரிணையானது.

**maximum voltage:** (மின்.) **பெரும மின்னழுத்தம்:** ஒரு மாற்று மின்னியக்க வரிசையில் ஒவ்வொரு மாற்றத்தின் போதும் உண்டா கும் மிக உயர்ந்த அளவு மின்ன ழுத்தம்.

**Maxwell, James Clerk:** (மின்.) **மாக்ஸ்வெல், ஜேம்ஸ் கிளர்க்** (1831-1879) புகழ்பெற்ற ஸ்காத்லாந்து விஞ்ஞானி. பாரடே கண்டுபிடித்த மின் காந்தத்திற்குத் திட்டவட்ட மான பரிசோதனை ஆய்வு முறை களைக் கண்டறிந்தவர். "மின் விசை மற்றும் காந்தவிசை பற்றிய ஆய்வு" என்ற நூலை 1873இல் எழுதினார். கேம்பிரிட்ஜ் பல் கலைக் கழகத்தில் பேராசிரியரா கப் பணியாற்றினார். கேவண்டிஷ் ஆய்வுக்கூடம் இவரது மேற்பார் வையில் கட்டப்பட்டது.

**mean:** (கணி.) **சராசரி:** இயற் கணிதத்தில் இரண்டு எண்களுக் குச் சரி சமமான இடைநிலையி லுள்ள எண்.

**mean chord of a wing:** (வானூ.) **இறகின் இடைநிலை இயைபளவு:** விமானத்தில் இறகின் பரப்பளவை ஓர் இறகின் முனை வரையிலான இடையகல அளவி னால் வகுப்பதன் மூலம் கிடைக் கும் ஈவு.

**mean line:** (வானூ.) **இடை நிலைக் கோடு:** விமானத்தின் உரு வரைப் படிவப் படத்தில் மேல்-கீழ் உருவரைகளுக்கிடையிலான இடைநிலைக்கோடு.

**measure:** (அச்சு.) **அகலளவு:** அச்சுக்கலையில் ஒரு பத்தியின் அல்லது அச்சுப் பக்கத்தின் அகலம் அல்லது ஒரு பணியின் அகலம்.

**measurement:** **அளவு:** வடி வளவு; பரப்பளவு; கொள்ளளவு அளவிடுதல்.

**measures:** **அளவைகள்:** நீட்டல ளவை, முகத்தலளவை, நிறுத்தல ளவை போன்ற அளவைகள். இவற்றில் மெட்ரிக் முறை, ஆங் கில முறை போன்ற முறைகள் உண்டு.

**measuring machine:** (பட்.) **அளவிடு எந்திரம்:** தேவையான வடிவத்திலுள்ள ஒரு நுண் அளவு மானி. இதனைக் கொண்டு குழாய்கள், துளைகள் முதலிய வற்றை நுட்பமாக அளவிட உதவுகிறது. இவற்றுள் சில இப் போது எந்திர முறைகளுக்குப் பதிலாக ஒளி அலைகளைப் பயன் படுத்தி இயக்குகின்றன.

**measuring tape:** **அளவு நாடா:** அளவுகள் குறிப்பிடப்பட்ட எஃகி னாலான அல்லது நார்த் துணியி னாலான நாடா. இது சாதாரண மாக127-254செ.மீ.நீளமிருக்கும்.இத னைப் பொறியாளர்கள், கட்டி டம் கட்டுவோர், நில அளவை யாளர்கள் போன்றோர் பயன் படுத்துகின்றனர்.

**mechanic:** **பொறிவினைஞர்:** எந்திரங்களைப் பழுது பார்க்கிற அல்லது எந்திரங்களை அல்லது எந்திர உறுப்புகளை ஒருங் கிணைக்கிற தேர்ச்சி பெற்ற கைவி னைஞர்.

**mechanical brakes:** (தானி.) **எந்திரத் தடை:** உந்து ஊர்திகளி லுள்ள தடையமைப்பு முறை: இதில் கால்மிதி மூலம் சக்கரத்தி லுள்ள தடைகளுக்குச்சலாகைகள்,

நெம்புகோல்கள், இயக்கு சக்கரங்கள் ஊடச்சுகள் போனறவற்றின் தொகுதி மூலம் அழுத்தம் செலுத்தப்படுகிறது.

**mechanical drawing** : **எந்திர வரைப்படம்** : *கருவிகளைப் பயன்படுத்தி வரையப்படும் படம். எந்திரங்களின் வடிவமைப்புகள் இவ்வாறு வரைபடமாக வரையப்படுகின்றன.*

**mechanical efficiency** : *(எந்.)* **எந்திரத் திறன்** : *(1) ஓர் எஞ்சினின் எந்தித்திறன் என்பது அதன் தடைக் குதிரை விசைக்கும், அதன் குறிப்பிடப்பட்ட குதிரை விசைக்குமிடையிலான விகிதமாகும்.*

$$\text{எந்திரத் திறன்} = \frac{\text{தடைக் குதிரை விசை}}{\text{குறிப்பிடப்பட்ட குதிரை விசை}}$$

*(2) இயற்பியல், உட்பாட்டுக்கும் வெளிப்பாட்டுக்கு மிடையிலான விகிதம்.*

$$\frac{\text{வெளிப்பாடு}}{\text{உட்பாடு}} = \text{எந்திரத் திறன்}$$

**mechanical engineer** : **எந்திரப் பொறியாளர்** : *எந்திரங்களை அல்லது எந்திர சாதனங்களை வடிவமைத்து, உருவாக்கிப் பயன்படுத்துவதில் வல்லுநர்.*

**mechanical engineering** : **எந்திரப் பொறியியல்** : *விசையை உற்பத்தி செய்து அனுப்பும் எந்திர சாதனங்களை வடிவமைத்து உருவாக்குதல் தொடர்பான அறிவியல்.*

**mechanical vibrator** : *(மின்.)* **எந்திர அதிர்ப்பி**: *எந்திர முறையில் இயங்கும் ஆக்கும்-அழிக்கும் சாதனம்.*

**mechanic arts** : **கம்மியர் கலை** : *கைவினையில் பட்டறையிலும் கருவிகளிலும், எந்திரத்திலும் பயிற்சி பெறுதல்.*

**machanics** : **இயக்கவியல்** : *பொருள்களின் மீது விசையின் விளைவுபற்றி ஆராயும் அறிவியல் பிரிவு.*

**mechanization** : *(தானி.)* **எந்திரமாக்குதல்** : *எந்திரங்களைத் தானியங்கு எந்திரங்களாக மாற்றுதல்.*

**medallion** : *(க.க.)* **பதக்கம்** : *(1) பட்டயத் தகடு.*
*(2) ஒரு பெரிய பதக்கம்.*

**median** : **மைய நிலை** : *நடுவூடான நிலை; சராசரி.*

**medium carbon steel** :*(உலோ.)* **நடுத்தர கார்பன் எஃகு** : *0.30% முதல் 0.70% வரை கார்பன் அடங்கிய எஃகு.*

**medium wave** : **நடுநிலை ஒலி அலை** : *வானொலியில் 100மீட்டருக்கும் 800 மீட்டருக்கும் இடைப்பட்ட நீட்சியுடைய ஒலி அலை.*

**medulla oblongata** : *(உட.)* **பின் மூளை**: *மூளையின் பின் பகுதி. இது, சுவாசம், இதயத் துடிப்பு போன்ற உடலுக்கு இன்றியமையாத பெரும்பாலான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகிறது.*


பின் மூளை

**meg or mega** : *(மின்)* **பத்து லட்சம்** : *மின்னியலில் பத்துலட்சம் அளவினைக் குறிக்கும் சொல்.*

**mega volt** : *(மின்).* **நூறு கோடி ஓல்ட்** : *மின்னியலில் பத்துலட்சம் ஓல்ட் மின்னியக்க விசையைக் குறிக்கும் அலகு.*

**megger** : *(மின்.)* **தடையாற்றல் மானி** : *மின்தடைக் காப்பின் தடையாற்றல் மானி.*

**megohm**: **மெக்ஓம்** : *மின்னியலில் பத்து லட்சம் ஓம்களுக்குச் சமமான மின்தடையைக் குறிக்கும் அலகு.*

**melting point** : *(உலோ.)* **உருகு நிலை ;** உலோகங்கள் திடநிலையிருந்து திரவநிலைக்கு மாறுவதற்குரிய வெப்ப நிலை.

**melting zone** : *(வார்.)* **உருகு மண்டலம் :** இரும்பு வார்ப்படத் தொழிற்சாலை.அடுப்பில், உலோகம் உருகுவதற்கான ஊதுலைக் குழாய்களுக்கு மேலுள்ள பகுதி.

**memory circuit**: *(மின்.)* **நினைவக மின்சுற்றுவழி:** தகவல்களைச் சேமித்து வைப்பதற்கான ஒரு மின் சுற்றுவழி. இந்த மின்சுற்றுவழி தொடுநிலையிலோ விடு நிலையிலோ அமைந்திருக்கும்.

**Mendelism**: *(உயி.)* **மெண்டல் கோட்பாடு:** ஜி. ஜே. மெண்டல் என்ற தாவரவியலறிஞர் கண்டுபிடித்த மரபுப் பண்புகளை எண் கணிப்பு முறைக்குள்ளாக்கும் கோட்பாடு. இதன்படி, ஒன்று அல்லது பிற மரபுக்காரணிகள் (பட்டாணியின் உயரம் அல்லது குள்ளம்) அல்லது கண்களின் நீல நிறம் அல்லது பழுப்பு நிறம்), பாலின உயிரணுக்களில் தனித் தனியே கொண்டு செல்லப்படுகின்றன; இணைப்பினால் மாறுதலடைவதில்லை. ஒரு குழந்தை, தாய்-தந்தை இருவரிடமிருந்தும் 'A' என்னும் ஒரே மரபுப் பண்பினைப் பெறுகிறது என்றால், அந்தப் பண்பினைப் பொறுத்த வரையில் அக்குழந்தை தூய்மையானது. தந்தையிடமிருந்து 'A' என்ற பண்பினையும், தாயிடமிருந்து 'B' என்ற பண்பினையும் அக்குழந்தை பெற்றிருந்தால், அக் குழந்தை 'AB' என்ற ஒரு கலப்புக் குழந்தை ஆகும்.

**meniere's disease**: *(நோயி.)* **மெனியர் நோய்:** உட்காதில் உண்டாகும் ஒரு வகை நோய். இதனால், தலைவலி, செவிட்டுத் தன்மை, தலைசுற்றல் ஆகியவை உண்டாகின்றன.

**meninges**: *(உட)* **மூளைக் கவிகைச் சவ்வு:** தண்டு மூளையைமூடியிருக்கும் சவ்வு.

**meningitis**: *(உட.)* **மூளைச்சவ்வு அழற்சி:** தண்டு மூளைக் கவிகைச் சவ்வு அழற்சி நோய்.

**meningocele**: *(உட.)* **மூளைப் புற்று:** தண்டு மூளைக் கவிகைச் சவ்வு வளர்ச்சி.

**mensuration**: *(கணி.)* **உரு அளவியல்:** நீளம், பரப்பு, கனஅளவு முதலியவற்றை அளப்பதற்கான கணிதப் பிரிவு.

**menthol**: **பச்சைக் கற்பூரம்:** கடுமையான வாசனையுடைய வெண்ணிறமான, பனிக்கட்டி போன்ற பொருள். இது கற்பூரம் போன்று இருக்கும். இதனைத் தோலில் தேய்த்தால் குளிர்ச்சியுணர்வு உண்டாகும்.

**mer**: *(குழை.)* **மீச்சேர்ம கட்டலகு:** மீச்சேர்மத்தின் கட்டுமான அலகு.

**mercerize**: *(வேதி.)* **துணிப் பக்குவமாக்குதல்:** நூல், துணி ஆகியவற்றுக்குப் பளப்பளப்பும் உறுதியும் கொடுப்பதற்காகக் கடுங்கார உப்பிட்டுப் பக்குவப்படுத்துதல்.

**merchant bar**: *(உலோ.)* **வாணிக இரும்புச் சலாகை:** விற்பனை செய்வதற்கு ஏற்பக் குறுகலாக வெட்டப்பட்ட இரும்புச் சலாகை.

**mercury**: *(வேதி.)* **பாதரசம்:** வெள்ளி போல் வெண்ணிறமான திரவ உலோகம். இதன் எடைமானம் 13.6. இரசக் கந்தகை அல்லது பாதரச சல்ஃபைடு (HgS) மூலம் கிடைக்கிறது. சிவப்புப் படிக வடிவில் கிடைக்கிறது. இரசக் கலவைகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**mercury arc rectifier**: *(மின்.)* **பாதரசச் சுடர் திருத்தி:** மாற்று

மின்னோட்டத்தை நேர் மின்னோட்டமாக மாற்றுவதற்குப் பீட்டர் கூப்பர் ஹெவிட் கண்டு பிடித்த ஒரு சாதனம்.

**mercury vapour lamp:** (மின்.) **பாதரச ஆவி விளக்கு:** கூப்பர். ஹெவிட் உருவாக்கிய விளக்கு. இதில் பாதரச ஆவி வழியே மின்னோட்டம் செலுத்துவதன் மூலம் விளக்கு உண்டாக்கப்படுகிறது.

**mercury vapour rectifier:** (மின்.) **பாதரச ஆவி திருத்தி:** உயர்ந்த அளவு வெற்றிடத்தைப் பயன்படுத்தாமல், பாதரச ஆவியைப் பயன்படுத்துகிறது. சூடான எதிர்முனை, இருமுனைக் குழல்.


**meridian :** (இயற்) **வான் கோள மைவரை வட்டம்;** (1) உச்ச நீசங்களையும் வான்கோளத்துருவங்களையும் ஊடுருவிச் சென்றிணைக்கும் வான்கோள வட்டம். (2) வடதுருவம், தென்துருவம் வழியாகச் சென்று மீண்டும் வடதுருவ தீர்க்காம்ச ரேகையைச் சுற்றி அடையும் கற்பனைக் கோடு.

**mesh:** (பட்.) **வலைக்கண்:** வலைப் பின்னல் அமைப்பு.

**mesocolloids;** (வேதி.) **மெசோ கொலாய்டுகள்:** ஹெமிகொலாய்டுகளுக்கும் யூகொலாய்டுகளுக்கும் இடைப்பட்ட மீச்சேர்மங்கள் அதாவது, 100 முதல் 1000 வரை மீச்சேர்ம இணைவுடையவை.

**metabolism:** (உட.) **ஊன்ம ஆக்கச் சிதைவு மாறுபாடு:** உயிர்களின் உடலினுள்ளாக இயற்பொருளான உணவுச்சத்து. உயிர்ச்சத்தாகவும், உயிர்ச்சத்து மீண்டும் இயற்பொருளாகவும் மாறுபடும் உயிர்ப் பொருள் மாறுபாடு.

**metacarpal bones:** (உட.) **உள்ளங்கை எலும்பு:** மணிக்கட்டுக்கும் விரல்களுக்கும் இடைப்பட்ட உள்ளங்கைப் பகுதி.



கை எலும்பு

**metal: உலோகம்:** அடிப் படையான உலோகப்பொருட்களை மட்டுமின்றி நெகிழ்திறன், இணைவுத் திறன் முதலிய உலோகப் பண்புகளுடைய தாதுப்பொருட்களையும் குறிக்கும். பல்வேறு உலோகக் கலவைகளையும் குறிக்கும்.

**metal arc welding: உலோகச் சுடர் பற்றவைப்பு:** இது ஒரு வகை சுடர் பற்றவைப்பு. இதில் பற்றாசு இட்டு நிரப்புவதற்கான உலோகத்தை மின்முனை அளிக்கிறது.

**metal dip brazing: உலோக அமிழ்வுப் பற்றாசு இணைப்பு:** உருக்கிய உலோகத்தில் அமிழ்வித்து நிரப்பு உலோகத்தைப் பெறுவதற்குரிய ஒரு செய்முறை.

**metalene nails: உலோகப் பொருத்தாணி** வட்டமான அல்லது தட்டையான பெரிய கொண்டைகளையுடைய ஆணிகள். அறைகலன்களில் தோல் இழைகளைப் பொருத்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**metal filament:** (மின்.) **உலோக இழை:** ஒரு வகை மின் கடத்தி. இதனை வெண்சுடர் விளக்கில் சூடாக்கும்போது இது ஒளியுடன் எரியும்.

**metal finishing: உலோக மெருகிடல்:** உலோக வேலைப்பாட்டில் வேலைப்பாடு செய்யப்படும் பொருளுக்கு இறுதியாகப் பளபளப்பான மெருகூட்டுதல்.

**metal furniture:** (அச்சு.) **உலோக அச்சுத்துண்டு :** அச்சுக்

கோத்துப் பக்கங்களை முடுக்கும் போது இடைவெளிகளை நிரப்பு வதற்காகப் பயன்படும் உலோகத் துண்டு. இது அச்செழுத்தின் உய ரத்தைவிடக் குறைவாக இருக்கும்.

**metalizing**: *(குழைம.)* **உலோக உறையிடல்**: பிளாஸ்டிக்கிற்கு ஒரு மெல்லிய உலோகப் படலத்தின் மூலம் உறையிடுதல்.

**metal lacquer: உலோக மெரு கெண்ணெய்**: உலோகத்தினாலான பொருட்களுக்கு மெருகெண்ணெ யாகப் பயன்படுத்தப்படும் வெடி யகப் பஞ்சின் அமில மற்றும் மெதில் அசிட்டோ கரைசல்கள்.

**metallic rectifier**: *(மின்.)*: **உலோகத்திருத்தி**: "எலெக்ட்ரான் கள் தாமிரத்திலிருந்து தாமிர ஆக்சைடுக்குப் பாய்கின்றன; ஆனால், தாமிர ஆக்சைடிலிருந்து தாமிரத்திற்குப் பாய்வதில்லை" என்ற தத்துவத்தின் அடிப்படை யில், தாமிர ஆக்சைடினால் செய் யப்பட்ட ஒரு வகைத் திருத்தி. இது, ஒரே திசையில் மின்சாரத் தைக் கடத்தும் மின்கடத்தி.

**metallography**: *(உலோ.)* **உலோக உள்ளமைப்பியல்**: உலோ கங்களின் நுண்ணிய உள்ளமைப் புகளை ஆராயும் துறை.

**metallurgy**: *(உலோ.)* **உலோகக் கலை**: உலோகங்களின் பண்பியல் புகளை ஆராய்ந்தறியும் துறை, உலோகத் தாதுக்களை உருக்கி, சுத்திகரிக்கும் அறிவியல்.

**metallurgy**: **உலோகக் கலை**: உலோகத் தாதுக்களிலிருந்து உலோகங்களைப் பிரித்தெடுக்கும் அல்லது உலோகக் கலவைகளை உண்டாக்கும் கலை அல்லது அறி வியல். உலோகங்கள் பற்றி ஆரா யும் துறை.


**matal pattern**: *(வார்.)* **உலோகத் தோரணி**: நீண்ட நாட்கள் உழைப் பதற்காக மரத் தோரணிகளிலி ருந்து உருவாக்கப்படும் வார்ப் படத் தோரணிகள்.

**metal spinning**: *(பட்.)* **உலோகத் திரிப்பு**: தகடாக்கக் கூடிய உலோ கங்களில் இலேசான உறுப்புகளை வட்டமான வார்ப்பு வடிவங்க ளாக உருவாக்கும் முறை. கடை சல் எந்திரத்தில் வேகமாகச் சுழ லும்போது அழுத்தம் கொடுக் கும்போது இந்தத் திரிப்பு ஏற்படு கிறது.

**metal spraying**: **உலோகத் தெளிப்பு**: உலோகங்களுக்கான காப்பு மெருகுப்பூச்சு. ஒரு கம்பி யை ஹைட்ரஜன்-ஆக்சிஜன் சுடர் வழியாகச் செலுத்தும்போது, அது அணுக்களாகக் குறைந்து கம்பிப் பரப்பில் மேற்பூச்சாகத் தெளிக்கப் பட்டு படிகிறது.

**metamorphic rock**: *(கனிம.)* **உருமாற்றப் பாறை**: தனது மூலப் பண்பியல்பிலிருந்து எரிமலைக் குழம்புப் பாறையாக அல்லது படி வியற் படுகைப் பாறையாக மாற் றம் பெற்றுள்ள பாறை.

**metatarsal bones**: *(உட.)* **கால் விரல் எலும்பு**: கணுக் காலுக்கும், கால் விரல்களுக்கும் இடைப்பட்ட ஐந்து நீண்ட விரல்களின் எலும்புத் தொகுதி.



கால் விரல் எலும்பு

**meteor bumper**: *(விண்.)* **எரி மீன் காப்பு**: விண்ணிலிரு ந்து விழும் எரிமீன் களின் துகள்களினால் விண்வெளி ஊர்திக்கு ஊறு ஏற்படாமல் காக் கும் ஒரு மெல்லிய கேடயம்.

**meteorograph** : *(வானூ.)* **வானி லைப் பதிவுமானி** : பூமியின் மேற் பரப்பிற்கு மேலேயுள்ள வானி லைக் கூறுகள் பலவற்றின் அள வைப் பதிவித்துக் காட்டும்

அமைவு. இது வெப்பநிலை, காற்றழுத்தம், ஈரப்பதம் போன்றவற்றைப் பதிவு செய்யும்.

**meteorology:** *(இயற்.)* **வானிலையியல் :** வருங்குறி அறிவிக்கும் நோக்குடைய வானிலை நிகழ்வியக்க ஆராய்ச்சித் துறை.

**meter :** *(எந்.) (1)* **மீட்டர்:** மெட்ரிக் அளவு முறையில் அடிப்படையான நீட்டலளவை அலகு. *1 மீட்டர் =39•37".*

*(2)* **அளவுமானி:** திரவங்கள், வாயுக்கள், மின்னோட்டம் முதலியவற்றை அளவிடுவதற்கான அளவு கருவி.

**meter :** *(மின்.)* *(1)* **மின்மானி :** மின் விசையினை அளவிடுவதற்கான ஒரு கருவி.

*(2)* **நீள அளவு :** *(மின்.)* மெட்ரிக் அளவு முறையில் நீளத்தின் ஓர் அலகு. *1 மீட்டர்=39.37".*

**micrometer :** *(மின்.)* **நுண்ணளவைமானி :** நுண்பொருட்கள். தொலைவுகள், கோணங்களை அளந்து காட்டும் கருவி.

**micrometry :** *(மின்.)* **நுண்ணளவை :** நுண்ணளவை மானியால் அளத்தல்.

**metering orifice :** *(தானி.)* **அளவித் துளை:** பல்வேறு தேவைகளுக்கேற்ப எரிபொருள் செல்வதை முறைப்படுத்துவதற்காக உள்ள ஒரு நிலையான துளை

**metering pin :** *(தானி.)* **அளவிப் பிணைப்பூசி :** அளவித்துளையின் மீது அமைந்துள்ள ஒரு பிணைப் பூசி. இது அளவித் துறையின் வழியாக வாயு பாய்வதை முறைப் படுத்துகிறது.

**metering rod :** *(தானி.)* **அளவித் தண்டு :** எரிபொருள் பாய்வதை முறைப்படுத்தும் தடுக்கிதழ் புயத்துடன் இணைக்கப் பட்டுள்ள தண்டு.

**methane :** *(வேதி.)* **மீத்தேன் :** மணமற்ற வாயு ($CH_4$). தாவரப் பொருளின் இருமடிச் சேர்மானம் காரணமாக அல்லது கரிமப் பொருளின் உலர் வாலை வடித்தல் மூலமாக உண்டாகும் வாயு. ஒளிரும் வாயுவின் முக்கியமான கூறு.

**methanol :** *(வேதி.)* **மெத்தனால்:** ($CH_3OH$): மெத்தில் ஆல்கஹால், மர ஆல்கஹால், மரச்சாராவி போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. எரிபொருளாகவும், வண்ணங்கள், மெருகெண்ணெய்கள் ஆகியவற்றின் கரைப்பானாகவும், ஆல்கஹாலை இயல்பு திரிப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

**methyl :** *(வேதி.)* **மெத்தில் :** ($CH_3$) மீத்தேனிலுள்ள ஒரு ஹைட்ரஜன் அணு இடம் பெயர்வதால் ஏற்படும் மூலக்கூறு. இது பல்வேறு கூட்டுப் பொருள்களில் ஓர் அங்கமாக உள்ளது.

**methyl acetone :** *(வேதி.)* **மெத்தில் அசிட்டோன் :** மெத்தில் அச்சிட்டேட்டும், அசிட்டோனும் கலந்த ஒரு கலவை ரப்பரின் கரைப்பானாகப் பயன்படுகிறது.

**metric gear :** *(பட்.)* **மெட்ரிக் பல்லிணை :** மெட்ரிக் அளவு முறைக்கிணங்க வடிவமைக்கப் பட்ட பல்லிணை.

**metric plug :** *(தானி.)* **மெட்ரிக் செருகி :** மெட்ரிக் தர அளவுகளுக்கேற்ப திருகிழைகளைக் கொண்ட ஒரு சுடர்ப் பொறிச் செருகி.

**metric system :** *(பொறி.)* **மெட்ரிக் முறை :** பத்தின் மடங்குகளின் அடிப்படையில் அமைந்த நிறுத்தல், நீட்டல், முகத்தல் அளவைகள். முதலில் இம்முறை ஃபிரா

ன்சில் பயன்படுத்தப்பட்டது. இன்றுஉலகெங்கும் அறிவியல்பணி கள் அனைத்திலும் பயன்படுத்தப் படுகிறது.

**metric threads : மெட்ரிக் திரு கிழைகள் :** மெட்ரிக் அளவுகளுக் கிணங்க விகிதமுறையில் அமைந்த திருகிழைகள்.

**mezzanine** : *(க.க)* **இடைமாடி** : இரண்டு உயர்மாடிக் கட்டிடங் களில் நிலத்தளத் தளத்திற்கும் முதல் மாடிக்கும் இடைப்பட்ட இடைத்தள மாடி.

**mezzotint**: *(அச்சு.)* **முரட்டு அச் சுப் பாளம்:** கரடுமுரடாக்கப்பட்ட தகட்டின் பின்னணியையே செறி நிழல் வண்ணமாகக் கொண்டு பிற பகுதிகளில் கரடுமுரடு நீக்கப் பட்ட ஒளிப்பட அச்சுப் பாளம். இதனை 1643இல் லுட் விக் கண்டுபிடித்தார்.

**mica**: *(கனிம.)* **அப்பிரகாம் (காக் காய்ப் பொன்)**: முழுமையாகப் பிளந்திடும் தன்மையுடைய ஒரு வகை சிலிக்கேட் என்னும் மணற் சத்து உப்பு. இது செதில் செதில் களாகப் பிளவுபடும்.

**micas** : **அப்பிரகக் காகிதம்**: அலங் காரப் பெட்டிகள் செய்வதற்கான காகிதம். இதில் அனிலைன் சாயப் பொருளுடன் கலந்து அப்பிரகம் பூச்சுக் கொடுக்கப்பட்டிருக்கும். இதில் செதுக்கு வேலைப்பாடாக வும் புடைப்பாகவும் அச்சிடப் படும்.

**microampere**: *(மின்.)* **மைக்ரோ ஆம்பியர்**: ஒரு ஆம்பியரில் பத்து இலட்சத்தில் ஒரு பகுதி. 0.000001 ஆம்பியர்.

**microfarad**: *(மின்.)* **மைக்ரோ ஃபாராட்**: ஒரு கொள்ளவு அலகு. மின்காந்தப் பரும அளவான ஒரு ஃபாராட்டின் பத்து லட்சத்தில் ஒரு பகுதி.

**micrometer**: **நுண்ணளவைமானி**:



நுண்ணளவைமானி

நுண்பொருட்கள், தொலைவுகள், கோணங்கள் ஆகியவற்றைத் துல் லியமாக அளந்து காட்டுங் கருவி.

**micrometer caliper : நுண் இடுக்கியளவி** ; மிக நுண்ணிய தொலைவுகளை அளப்பதற்குரிய, அளவு வரையிட்ட திருகுடன் கூடிய ஓர் இடுக்கியளவி.

**micron** : *(மின்.)* **மைக்ரோன்** : பதின்மான நீட்டலளவை அலகில் பத்துலட்சத்தில் ஒரு பகுதி.

**microphone** : *(மின்.)* **ஒலி பெருக்கி** : நுண்ணொலிகளைத் திட்பப்படுத்தியும் ஒலிகளை மின் னலைகளாக்கியும் தொலைபேசி ஒலிபெருக்கிகளைச் செயற்படுத் தும் கருவி.

**microphotograph : நுண்ணொ ளிப்படம்** : ஒரு பெரிய பொருளை ஒரு சிறிய ஒளிப்படமாகக் குறைத்து உருவாக்கும் ஒளிப் படம்.

**microscope** : **நுண்ணோக்காடி (பூதக் கண்ணாடி)**: மிக நுண்ணிய பொருட்களின் உருவத்தைப் பெருக்கிக் காட்டக்கூடிய, ஒன்று அதற்கு மேற்பட்ட ஆடிகளைக் கொண்ட ஒரு கருவி.

**microtome : நுண்ணோக்காடி வெட்டு கருவி** : நுண்ணோக் காடிகளுக்கான சிறிய துண்டு களைச் செதுக்கும் கருவி.

**microvolt** : *(மின்.)* **மைக்ரோ வோல்ட்** : மின் இயக்க ஆற்றல் அலகின் பத்துலட்சத்தில் ஒரு பகுதி.

**microwave** : **நுண்ணலை** : ஒரு மீட்டருக்குக் குறைவான நீள முள்ள வானொலி அலைகள். இது நெடுந்தொலைவிலுள்ள கருவி களை நிலையத்துடனும், நிலை யங்களை மற்ற நிலையங்களுட னும் இணைப்பதற்குப் பயன்படு கிறது.

**microtron** : *(மின்னி.)* **மைக் ரோட்ரான்** : அதிவேக எலெக்ட் ரான்களை உண்டாக்கும் சிறிய எந்திரம். இதில், எலெக்ட்ரான் கள், ஒரு காந்தத்தின் மூலம் வட் டப் பாதைகளில் சுற்றும்படி செய் யப்படுகின்றன. ஒவ்வொரு சுற் றின் தொடக்கத்திலும், ஓர் உயர் அலைவெண் வானொலி அலைப் பான் மூலம் உண்டாக்கப்படும் ஒரு மின்னியல் புலத்திலிருந்து அவை முன்னேஉந்தப்படுகின்றன.

**microwave reflectors** : **நுண் ணலை பிரதிபலிப்பான்** : நுண்ண லைக் கற்றைகளை நெறிப்படுத்து வதற்குப் பயன்படும் ஒரே மாதிரி யல்லாத பிரதிபலிப்பான்கள்.

**middle space** : *(அச்சு.)* **நடு இடை வெளி** : அச்சுக்கோப்பில் எழுத்துக்களிடையிலான இடை வெளி.

**middle - tones** : *(அச்சு.)* **நடு வண்ணச் சாயல்** : ஒளிப்படத்தில் அல்லது நுண்பதிவுப் படத்தில் இளம் வண்ணத்திற்கும் அடர் வண்ணத்திற்குமிடையிலான வண் ணச் சாயல்கள்.

**midwing monoplane**: *(வானூ.)* **நடு இறகு ஒற்றைத்தட்டு விமானம்**: விமானத்தின் மையக் கோட்டில் இறகு பொருத்தப்பட்டுள்ள ஒற் றைத் தொகுதி சிறகுகளையுடைய விமானம்.

**mil** : **மில்** : கம்பி முதலியவற்றின் விட்டத்தை அளப்பதற்கான அலகு. இது அங்குலத்தில் ஆயிரத் தில் ஒரு பகுதி, 0.001".

**mild steel** : **மென்னெஃகு** : கரியம் குறைவாகவுள்ள எஃகு; இது பற்ற வைக்கக் கூடியது. ஆனால் இது பதமாவதில்லை.

**mildew** : **பூஞ்சணம்** : ஈரம்படு பொருட்களின் மீது படியும் ஒரு வகை பூஞ்சக்காளான்.

**mil foot** : **மில் அடி** : கம்பியி லுள்ள மின் தடையின் ஒரு தர அலகு. ஓர் அடிக்கம்பியில் மின் தடையின் அளவு = விட்டத்தில் ஒரு மில்.

**milk sugar** : *(வேதி.)* **பால் சர்க் கரை** : பார்க்க பால் வெல்லம்.

**mill** : **ஆலை** : (1) உற்பத்திச் செய் முறைகள் நடைபெறுவதற் கான எந்திரங்கள் பொருத்தப்பட் டுள்ள கட்டிடம் அல்லது கட்டி டங்களின் தொகுதி. பல்வேறு தொழிற்சாலைகளைக் குறிப்பிட இச் சொல் பயன்படுகிறது.

(2) செய்முறை வேலைகளுக்கான திரிகைப் பொறியமைவு.

**milliampere** : *(மின்.)* **மிலி ஆம்பியர்** ; ஒரு ஹென்ரியில் ஆயி ரத்தில் ஒரு பகுதி. கொள்ளளவின் ஓர் அலகு.


**millihenry**: *(மின்.)* **மிலிஹென்றி**: ஒரு கொள்ளளவு அலகாகிய ஹென்ரியின்ஆயிரத்தில் ஒருபகுதி.

**millimeter**: *(பொறி.)* **மில்லி மீட்டர்**: பருமனலளவு அலகு. ஒரு மீட்டரில் ஆயிரத்தில் ஒரு பகுதி .03937".

**milling** : *(பட்.)* **சால்வரிவிடல்**: உலோகத் தகடுகளில் பள்ளங் களை வெட்டும் செய்முறை.

**milling cutters** : *(எந்.)* **துளை வெட்டுங் கருவி**: உலோகத் தகட் டில் துளைகள் இடுவதற்கான எந் திரத்தில் பயன்படும் பல்வேறு சுழல் வெட்டுக் கருவிகள்.

**milling machine:** (பட்.) **துளை**



துளையிடு எந்திரம்

**யிடு எந்திரம்:** உலோகத் தகட்டில் வடு வரிசைத் துளைகள் இடுவதற் கான எந்திரம்.

**milling machine universal :** (பட்.) **பொதுத் துளையிடு எந்திரம்:** எல்லாவகையான பரப்புகளையும் கொண்ட உலோகத் தகடுகளிலும் துளையிடுவதற்கான எந்திரம்.

**milling machine vertical :** (பட்.) **செங்குத்துத் துளையிடு எந் திரம் :** துளையிடுவதற்குச் செங் குத்தான கதிர் கொண்ட எந்திரம். இது இடைமட்ட எந்திரத்தி லிருந்து வேறுபட்டது.

**millivolt :** (மின்.) **மிலிவோல்ட் :** ஓர் பகுதி. 0.001" வோல்ட்.

**millwright: ஆலை அமைப்பாளர்:** ஓர் ஆலையில் அல்லது பட்டறை யில் எந்திரங்களைத் திட்டமிட்டு அமைப்பவர்.

**mimeograph : படியெடுப்பான்:** கையெழுத்து அல்லது தட்டெழுத் துப் படியின் பல படிகளை எடுப்ப தற்கான தகடு ஆக்க அமைவு.

**minaret :** (க.க.) **தூபி :** பள்ளி வாயில் தூபி.

**mineralogy . கனிமயியல் :** கனி மங்களின் பண்பியல்புகள், வகைப் பாடு முதலியவை பற்றி ஆராயும் அறிவியல்.

**miners safety lamp : சுரங்கக் காப்பு விளக்கு :** பார்க்க டேவி காப்பு விளக்கு.

**minimum ; குறுமம் :** மிகக் குறைந்த அளவு; மிகக் குறைந்த எல்லை.

**minimum flying speed** (வானூ.) **குறும பறக்கும் வேகம் :** ஒரு விமா னம் தனது இறகுகளின் இடைய கல் அளவுக்கு அதிகமான உயரத் தில் பறக்கும் மட்டத்தில் ஒரே சீராகப் பேணக்கூடிய மிகக் குறைந்த அளவு வேகம்.

**minimum gliding angle :** (வானூ.) **குறுமச் சறுக்குக் கோணம்:** விமானத்தின் முற் செலுத்தி அழுத்தம் கொடுக்காதி ருக்கும் போது, விமானத்தின் கிடைமட்டப் பாதைக்கும், ஏறத் தாழ அதன் கிடைமட்டப் பாதைக் குமிடையிலான கூர்ங்கோணம்.

**minimum speed :** (வானூ.) **குறும வேகம் :** விமானத்தில் எந் தக் குறைந்த அளவு வேகத்தில் ஒரே சீராகப் பறக்க முடியுமோ அந்தக் குறைந்த அளவு வேகம்.

**mining : சுரங்கத் தொழில் :** பூமி யிலிருந்து உலோகம், கனிப் பொருட்கள் ஆகியவற்றை அகழ்ந் தெடுத்தல்.

**mining engineer: சுரங்கப் பொறி யாளர் :** சுரங்கங்களைத் தோண்டி அவற்றிலிருந்து உலோகத் தாதுப் பொருள்களை அகழ்ந்தெடுக்கும் பணிகளைச் செய்யும் பொறி யாளர்.

**minion :** (அச்சு.) **குறும அச் செழுத்து :** மிகச்சிறிய அளவு அச் செழுத்து. இது 7 புள்ளி அளவுக் குச் சமமானது. அச்செழுத்தில் புள்ளி முறை பயனுக்கு வருவ தற்கு முன்பு இப்பெயர் வழங் கியது.

**minor axis : சிறுபடி அச்சு :** ஒரு நீள் வட்டத்தின் குறுகிய விட்டம்.

**minor carrier** : *(மின்.)* **சிறு மின் கடத்தி:** பெரிய மின்கடத்திகளுக்கு மாறாக மின் கடத்தாத் திண்மப் பொருட்கள் வழியாக மின் கடத்துதல். எடுத்துக்காட்டாக, எலெக்ட்ரான்கள் பெரிய மின் கடத்திகள் என்றால் துளைகள் சிறு மின் கடத்திகளாகும்.

**minor diameter** : **சிறுபடி விட்டம்** : ஒரு திருகில் அல்லது மரை யாணியில் இழையின் மிகக் குறைந்த அளவு விட்டம்.

**minus charge**: *(மின்.)* **மறிநிலை மின்னேற்றம்** : கழித்தற்குறியின் மூலம் சுட்டப்படும் எதிர்மின் னேற்றம் பிசின் பொருட்களில் உரசும் போது இத்தகைய மின் னேற்றம் உண்டாகிறது.

**minute** : *(க.க.)* **நுண்பாகை** : கோண அளவில் ஒரு பாகையின் அறுபதில் ஒரு கூறு.

**minuteman**: *(விண்.)* **வான்படை ஏவுகணை** : கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் வான்படை ஏவு கணை. இது 5,500 கடல் மைல் தொலைவு செல்லக்கூடியது. இது, மூன்று கட்டங்களுடைய செலுத்து ராக்கெட் எஞ்சின்களால் இயக்கப் படுகிறது.

**misalignment of wheels** : *(தானி.)* **பொருந்தாச் சக்கர இணைப்பு** : சீருந்தின் சக்கரங்கள் முறையாக இணைக்கப்பட வில்லையெனில், சக்கரங்களைத் திருப்புவது கடினம். இதனால் சீருந்து முழுவதிலும் அளவுக்கு மீறி அழுத்தம் ஏற்பட்டு டயர்கள் விரைவாகத் தேய்ந்துவிடும் சீருந் தின் முன் சக்கரங்கள் சீராக இணைக்கப்பட்டுள்ளனவா என் பதைக் குறைந்தது ஆண்டிற்கு ஓரிரு முறை சரி பார்த்தல் வேண் டும்.

**misprint** : *(அச்சு)* **அச்சுப் பிழை:** பிழையாக அச்சிடுதல்; அச்சிடுவ தில் ஏற்படும் பிழை.


**missilery** : *(விண்.)* **ஏவுகணையி யல்** : ஏவுகணைகளை வடிவமைத் தல், உருவாக்குதல், செலுத்துதல், வழிச்செலுத்துதல் ஆகியவை பற் றிய அறிவியல்.

**mission type:** **பெரு வடிவ அறை கலன்:** கருவாலி மரத்தில் கருமை வண்ணத்தில் வளைவுகளின்றி நேர்கோடுகளில் தயாரிக்கப்படும் மிகப் பெருமளவில் வடிவங் கொண்ட அறைகலன்.

**miter:** **செங்கோண இணைப்பு:** மரத்துண்டுகளைச் செங்கோணத் தில் இணைத்தல்.

துண்டுகளின் இணை வாயின் சாய்வு 45° கோணம்படும்படியாக இணைத்தல்.


**miter box:** **கோண அறுவைக் கருவி:** மரத்தைக் குறிப்பிட்ட கோ ணத்தில் 'அறுப்ப தற்கு ரம்பத்திற்கு துணை செய்யும் அமைவு.



கோண அறுவைக் கருவி

**miter cut:** *(மர. வே.)* **கோண அறுவை:** துண்டு களின் இணைவாயின் சாய்வு 45° கோணமாக அமையுமாறு அறுத் தல். இரு துண்டுகளும் இணையும் போது ஒரு செங்கோணம் உண் டாகும்.

**miter joint:** *(க.க.)* **செங்கோண**



செங்கோண இணைப்பு

**இணைப்பு:** மரத்துண்டுகளின்

இணைவாயின் சாய்வு 45° கோணம் படும்படியாக வெட்டி செங்கோணமாக அமையும்படி இணைத்தல்.


**miterer:** *(அச்சு.)* **செங்கோண இணைப்பான்:** அச்சுக்கலையில் கரையோரங்கள், கோடுகள் முதலியவற்றை செங்கோணத்தில் இணைப்பதற்குப் பயனம் ஒரு சாதனம். இதனைக் கையினாலோ விசையினாலோ இயக்கலாம்.

**miter gear:** *(எந்.)* **செங்கோண இணைப்புப் பல்லிணை:** *ஊடச்சுக்கு 45° சாய்வாக உள்ள பற்களையுடைய பல்லிணை.*

**milter plane:** *(மர.வே.)* **செங்கோண இணைப்புத் தளம்:** மரத்தைக் குறிப்பிட்ட கோணத்தில் அறுப்பதற்கு ரம்பத்திற்குத் துணை செய்யும் அமைவுடன் பயன்படுத்தப்படும் ஒரு தளம்.

**miter-saw cut:** *(மர.வே.)* **கோண வெட்டு ரம்பம்:** மரத்தைத் தேவையான கோணத்தில் வெட்டுவதற்குப் பயன்படும் ரம்பம்.

**miter square:** *(மர.வே.)* **கோண மட்டச் சதுரம்:** மூலமட்டப் பலகை போன்ற ஒரு கருவி. ஆனால், இதில் 90°, 45° கோணங்களை அமைக்க இடமளிக்கும் ஒரு தலைப்பினைக் கொண்டது.



கோண மட்டம்

**miter wheel:** **சாய்பற்சக்கரங்கள்:** *ஊடச்சுக்கு 45° சாய்வாக உள்ள பற்களையுடைய சக்கரங்கள்.*

**mitography:** *(அச்சு.)* **திரையச்சுக்கலை:** பட்டுத்திரைச் சீலை அச்சுக்கலை.

**mixture:** *(வேதி.)* **கலவை:** வேதியியல் முறையில் ஒன்றோடொன்று இணையாத இரண்டு அல்லது மூன்று பொருட்களின் கலவை.

**M.M.F.:** *(மின்.)* **காந்த இயக்கு விசை:** *(கா.இ.வி.).*

**mobility:** *(மின்.)* **இயங்கு திறன்:** மின்கடத்தாத் திண்மப் பொருளில் மின்னோட்ட ஊர்தியின் வேக வீதம். பயன்முறை மின்புலத்தில் வேகவீதத்தின் வீத அளவு. இதனை செ.மீ.$^2$/ஓல்ட்/ வினாடி என்ற அளவு முறையில் குறிப்பிடுவர்.

**modeling:** **உருப்படிவக்கலை:** காட்சி மாதிரிகளை உருநிலைப் படிவங்களாக உருவாக்குதல்.

**mock-up:** *(வானூ.)* **எந்திர மாதிரிப் படிவம்:** செய்யக் கருதியுள்ள மாதிரிப் படிவம்.

**modulation:** *(இயற்.)* **அலை மாற்றம்:** வானொலியில் அலையகல அதிர்வுகளைப் பிற அதிர்வுகள் மூலம் மாற்றியமைத்தல். (i) பேச்சு ஒலிகளையும், (ii) ஊர்தி அலையினையும், (iii) வெளிச் செலுத்தப்படும் அலை மாற்றிய அலையினையும் குறிக்கிறது. ஆழ அலை மாற்றம் = $x/y$.

**module:** *(க.க.)* **அளவை அலகு:** கட்டுமானப் பொருட்களின் தகவுப் பொருத்தங்களைத் தெரிவிப்பதற்கான நீட்டலளவை அலகு.

**modulus:** **நிலை தகவு:** மடக்கைகளின் வகை மாற்றத்திற்கான நிலையான வாய்ப்பாடு.

**modulus of elasticity:** **மின்விசை நிலை தகவு:** இழு விசைத் திரிபு நெகிழ் வரம்பிற்குள் இருக்கும்போது, ஓர் அலகுப் பரப்பின் மீதான அழுத்தத்திற்கும், அதற்கு இணையான ஓர் அலகு நீளத்தின் மீதான இழுவிசைக்குமிடையிலான வீத அளவு.

**modulus of rigidity**: *(பொறி.)* **விறைப்பு நிலைதகவு**: *அழுத்தச் சறுக்குப் பெயர்ச்சி இழு விசையி னால் சறுக்குப் பெயர்ச்சி அழுத் தத்தை வகுப்பதால் கிடைக்கும் ஈவு.*

**mogul**: *(மின்.)* **மோகல்**: *300 வாட்டுகளுக்கு அதிகமான பெரிய வெண்சுடர் விளக்குகளுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படும் ஒரு குதைகுழி அல்லது கொள்கலன்.*

**mohair**: **ஆங்கோரா ஆட்டுக் கம்பளி**: *ஆங்கோரா ஆட்டுமயி ரைக் கொண்டு செய்யப்படும் நேர்த்தியான துணி வகை.*

**Mohs scale**: **மோஹ்ஸ் அளவு**: *கனிமப் பொருட்களின் கடினத் தன்மையைத் தரம் பிரித்துக் காட் டப் பயன்படும் எண்மான முறை.*

**moisture content**: *(அச்சு.)* **நீர் நயப்பு**: *தயாரித்து முடித்த காகிதத் தில் உள்ள ஈரப்பதனின் அளவு.*

**molar solution**: *(வேதி)*: **மூலக் கூற்றுக் கரைசல்**: *ஒரு கரைவத் தின் மூலக்கூற்று எடையைக் கொண்டுள்ள ஒரு கரைசல். இது ஆயிரம் கன செ.மீ.யில் இவ்வளவு கிராம் என்று குறிக்கப்படும்.*

**molar teeth**: *(உட.)* **பின்கடை வாய்ப் பற்கள்**: *பின்கடை வாய்ப் பல் வகையில் அரைக்க உதவுகிற பற்கள். இவை மேல், கீழ்தாடை களில் ஒவ்வொரு பக்கத்திலும் கடைசியில் 3 தட்டையான பற்கள் வீதம் அமைந்திருக்கும்.*

**mould**: *(வார்.)* **வார்ப்படம்**: *வார்ப்புருக்களை உருவாக்குவதற் கான ஒரு படிவம்.*

*பிளாஸ்டிக் உருவங்களை வெப் பம், அழுத்தம் அல்லது வேதியியல் வினை மூலமாக உருவாக்குவதற் குப் பயன்படும் உலோகக் கொள் கலம்.*

*அச்செழுத்துகளை வடிவமைக்கும் வார்ப்பட எந்திரம்.*

**mould board**: *(மர.வே.)*: **முனைப் பலகை**: *உழுசாலில் மண்ணைப் பெயர்த்துத் தள்ளும் எஃகு முனைப் பலகை.*

**moulders rammer** *(வார்.)* **வார்ப் படத் திமிசுக்கட்டை**: *வார்ப்படப் தை அடித்து இறுக்குவதற்குப் பயன்படுத்தப்படும் உருளை வடிவ மரக் கருவி.*

**moulding** *(க.க.)* **வார்ப்பட உரு வம்**: *கட்டிடம், மரவேலை முதலி யவற்றில் வார்ப்பட முறையில் செய்யப்படும் சித்திர வேலைப் பாடு.*

**moulding board** *(குழைம.)* **பிசை வுப் பலகை** : *வார்ப்படப் பொருட் களை வலுவாக்குவதற்காகப் பயன்படும் அழுத்திய தகடுகள், கலப்பு இழைகள், பிசின்கள் ஆகி யவை.*

**moulding plane**: **வார்ப்பட இழைப் புளி**: *வார்ப்படங்களை வெட்டி யெடுப்பதற்குப் பயன்படும் சிறிய இழைப்புளி.*

**moulding sand**: *(வார்.)* **வார்ப்பட மணல்**: *வார்ப்படங்கள் செய்வதற் குப் பயன்படும் வார்ப்பட மணல்.*

**mole**: *(வேதி.)* **மூலக்கூற்று எடை**: *கிராம்களில் குறிப்பிடப்படும் மூலக்கூற்று எடை.*

**molecular theory**: *(வேதி.இயற்.)* **மூலக்கூற்றுக் கோட்பாடு**: *சடப் பொருட்கள் ''மூலக்கூறுகள்'' எனப்படும் நுண்ணிய துகள்களி னாலானது என்றும், ஒவ்வொரு துகளும் அந்தப் பொருள் முழு மைக்குமுள்ள குண இயல்புகளைக் கொண்டிருக்கும் என்றும் கூறும் கோட்பாடு.*

**molecular weight**: *(இயற்.)* **மூலக்கூற்று எடை**: *ஒரு ஹைட்*

ரஜன் அணுவின் எடையுடன் ஒப்பிடும் போது ஒரு மூலக்கூற்றின் எடை. எடுத்துக்காட்டு: $CO_2$ மூலக்கூற்றில் ஒரு C அணுவும் (அணு எடை 12), இரு ஆக்சிஜன் அணுக்களும் (அணு எடை 16) அடங்கியுள்ளன. எனவே, இதன் மூலக்கூற்று எடை $12+2X16=44$.

**molecule:** *(மின்னி.)* **மூலக்கூறு:** அணு என்பது ஒரு தனிமத்தின் மிகச் சிறிய பகுதி. ஒரு மூலக்கூறு என்பது, தானாகவே உயிர் வாழக் கூடிய ஒரு பொருளின் மிகச் சிறிய துகள். இது, மின்னியல் விசைகளினால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கும் அணுக்களின் ஒரு தொகுதியாகும். கூட்டுப் பொருளில் உள்ளது போல் அணுக்கள் வேறுபட்டிருக்கலாம். எடுத்துக்காட்டு: $H_2O$ சில தனிமங்களின் ஒரே மாதிரியாக இருக்கலாம். எடுத்துக்காட்டு: $H_2$ (ஹைட்ரஜன் மூலக்கூறு).

**molecule:** *(வேதி;இயற்.)* **மூலக்கூறு:** ஒரு பொருளில் அடங்கியுள்ள மிகச் சிறிய நுண்கூறு. இதன் பண்பு, பொருளின் பண்பிலிருந்து மாறுபடாதிருக்கும்.

**molybdenite** **முறிவெள்ளித்தாது:** முறிவெள்ளி (மாலிப்டினம்) என்னும் உலோகத்தின் தாது. இது பசைத்தன்மையுடன் காரீயகப் பொருள் போல் இருக்கும். இது கருங்கல், அடுக்குப்பாறை, சுண்ணாம்புக்கல் ஆகியவற்றுடன் கலந்திருக்கும்.

**molybdenum:** *(உலோ.)* **முறிவெள்ளி: (மாலிப்டினம்):** தகர் வியல்புடைய வெள்ளி நிறம் கொண்ட உலோகம். அதிவேக வெட்டுக்கருவிகளைச் செய்வதற்கான எஃகு உலோகக் கலவைகளைச் செய்வதற்குப் பயன்படுகிறது.

**moment** *(பொறி.)* **நெம்புதிறன்:** ஒரு விசைக்கும், அந்த விசை செயற்படும் புள்ளியிலிருந்து அதன் செயல்வினைக் கோட்டின் செங்குத்துக் கோட்டுக்குமிடையிலான பெருக்குத் தொகை. சுழலச் செய்யும் ஆற்றலின் அளவீடு.

**moment of a couple:** *(கணி.)* **இருவிசை இணைவு நெம்புதிறன்:** விசைகளில் ஒன்றுக்கும், விசைகளின் செயல்விசைக் கோடுகளுக்கிடையிலான செங்குத்துத் தூரத்திற்குமிடையிலான அளவுகளின் பெருக்குத் தொகை.

**moment of a force:** *(பொறி.)* **நெம்புதிறன்:** சுழலச் செய்யும் ஆற்றலின் அளவீடு. இது அடி-பவுண்டு, அங்குலம்-பவுண்டு என்ற அளவுகளில் அளவிடப்படுகிறது.

**moment of inertia:** *(பொறி.)* **மடிமை நெம்புதிறன்:** நகரும் பொருளின் ஒவ்வொரு துகளினையும் அவற்றின் நடுநிலை அச்சிலிருந்து அத்துகளின் தொலைவுகளின் வர்க்கங்களால் பெருக்கி வரும் பெருக்குத் தொகைகளின் கூட்டுத் தொகை.

**momentum:** **உந்துவிசை:** இயக்க உந்து விசையின் அளவு. இது ஒரு பொருளின் பொருண்மையை அதன் வேக விகிதத்தினால் பெருக்குவதால் கிடைக்கும் பெருக்குத் தொகையாகும்.

**mond gas:** *(வேதி.)* **வாயுக் கலவை:** கார்பன் மோனாக்சைடு. கார்பன்டையாக்சைடு, ஹைட்ரஜன், நைட்ரஜன் ஆகிய வாயுக்களின் கலவை. இக்கலவை, நிலக்கரி மீது காற்றையும் 650°C வெப்பமுடைய நீராவியையும் செலுத்தும்போது உண்டாகிறது.

**monel metal:** *(வேதி.)* **மோனல் உலோகம்:** 67% நிக்கல், 28% செம்பு, 5% கோபால்ட், இரும்பு அடங்கிய ஓர் உலோகக் கலவை.


இது அரிமானத்தை எதிர்க்கக் கூடியது. அமிலத்தினால் அரிமானம் ஏற்படாத வேதியியல்சாதனங்கள் செய்ய இது பயன்படுகிறது.

60% நிக்கல் 38% செம்பு, சிறிதளவு அலுமினியம் கொண்ட உலோகக் கலவையையும் மோனல் உலோகம் என்பர்.

**mond "seventy" alloy** : *(உலோ.)* **மாண்ட் "70" உலோகக் கலவை**: நிக்கலும் செம்பும் கலந்த ஓர் உலோகக் கலவை. இதன் விறைப்பாற்றல் 40828 கிலோ கிராம் வரை உயர்வாக இருக்கும்.

**monitor** : *(மின்.)* **உளவுச் செய்தியறிவிப்பு**: அயல்நாட்டுவானொலி, தொலைக்காட்சி ஒலி-ஒளிபரப்புகளை ஒற்றுக் கேட்டுச் செய்திகளைத் தெரிவித்தல்.

**monkey wrench** : **இயங்கு குறடு**:



இயங்கு குறடு

இயங்கு அறுவடைத் திருகு குறடு. இதனைக் கண்டுபிடித்தவர் தாமஸ் மங்கி. அவர் பெயரால் இது அழைக்கப்படுகிறது.

**monobloc** : *(எந்.)* **ஒற்றைப் பாளம்** : ஒரே துண்டாகவுள்ள வார்ப்படம்.

**monochrome television**: *(மின்.)* **ஒரு நிறத் தொலைக்காட்சி** : ஒரே நிறத்தின் பல சாயல்களில் படங்களைக் காட்டும் தொலைக்காட்சி; கறுப்பு-வெள்ளைப் படங்கள்.

**monogroph**: *(அச்சு.)* **தனி வரைவு நூல்** : ஒரே பொருள் அல்லது ஓரினப் பொருட்கள் பற்றிய தனி நூல்.

**monolith** : **ஒற்றைப் பாளக்கல்** : தன்னந்தனியாக நிற்கும் மிகப் பெரிய அளவிலான ஒரே பாளமாகவுள்ள கல்.

**monomer** : *(வேதி;குழைம.)* **எண்முகச் சேர்மம்** : ஒரே முற்றுறா வாய்பாடுடைய சேர்மங்களின் தொடரில் மிக எளிய சேர்மம். பிளாஸ்டிக் தயாரிப்பில் இவற்றின் வினைகள் ஒரு மீச்சேர்மத்தை உண்டாக்குதல்.

**monomial** : *(கணி.)* **ஒருறுப்புக் கோவை** : இயற்கணிதத்தில் ஒரே உறுப்பினைக் கொண்ட கோவை.

**monoplane** : *(வானூ.)* **ஒற்றைத் தட்டு விமானம்** : ஒற்றைத் தொகுதிச் சிறகுகளையுடைய விமானம்.

**monopropellant** : *(விண்.)* **தனி முற்செலுத்தி**: எரிபொருளும், ஆக்சிகரணியும் உடனடியாகப் பயன்படுத்தப்படுவதற்கு முன்னதாகவே கலந்து வைக்கப்பட்டுள்ள ராக்கெட் முற்செலுத்தி.

**monorail crane** : *(பொறி.)* **ஒற்றைத் தண்டவாளப் பாரந்தூக்கி** : ஒற்றைத் தண்டவாளத்தில் இயங்கும் நகரும் பாரந்தூக்கி.

**monoscope**: **சோதனை ஒளிப்படக் கருவி** : சோதனைகளுக்காகப் பயன்படும் எளிய ஒளி அல்லது தோரணி அமைப்பைக் கொண்ட தொலைக்காட்சி ஒளிப்படக்கருவி.

**monotone**: *(அச்சு.)* **சமநிலை அச்செழுத்து** : எல்லாக் கூறுகளும் சம அகலத்தில் உள்ள அச்செழுத்து முகப்பு.

**monotron hardness test** : **வைரகடினச் சோதனை** : வைரத்தின் ஊடுருவும் ஆழத்தினைக் குறிப்பிட்ட பார நிலைகளில் எண் வட்டில் பதிவு செய்யக்கூடிய ஒரு சோதனை எந்திரம்.

**monotype** : *(அச்சு.)* **எழித்துருக்கு அச்சுப் பொறி** : தனித்தனி அச்சுரு

வங்களை வார்த்து அமைக்கும் அச்சுக்கோப்பு எந்திரம்.

**mordant : அரிகாரம் :** செதுக்குருவக்கலையில் பயன்படுத்தப்படும் அரிமானப் பொருள்.

சாயத்தைக் கெட்டிப்படுத்தப் பயன்படுத்தப்படும் நிறம் கெட்டியாக்கும் சரக்கு.

**moresque : அராபிய பாணி :** வட மேற்கு ஆஃப்ரிக்க அராபிய இஸ்லாமியர் பாணிக்குரிய வேலைப்பாடு.

**morocco goat skin : பதனிட்ட வெள்ளாட்டுத் தோல் :** சாயப் பதனீட்டு இலைத் தூள் கொண்டு பதனிடப்பட்ட வேள்ளாட்டுத் தோல். இது பல வண்ணங்களில் கிடைக்கிறது. கனத்த தோல்களில் அக உறையாகவும், புத்தகக் கட்டுமானத்திலும் பயன்படுகிறது.

**morse code :** *(மின்.)* **மோர்ஸ் குறியீடு :** மோர்ஸ் என்பார் அமைத்த தந்திப் பதிவுக்குறியீட்டு முறை. இந்த முறையில் எழுத்துகளையும், எண்களையும் குறிக்கும் புள்ளிகள், கோடுகள்மூலம் செய்திகள் அனுப்பப்படுகின்றன.

**morse taper :** *(எந்.)* **மோர்ஸ் கூம்புச் சரிவு :** துரப்பணத்தண்டுகளையும், மற்றக் கருவிகளையும் எந்திரக் கதிர்களுடன் பொருத்துவதற்குரிய 0 முதல் 7 வரையிலான திட்ட அளவுக் கூம்புச் சரிவு.

**mortar :** *(1)* **கல்வம் :** உலக்கையால் பொருள்களை இடித்துத் தூளாக்குவதற்குப் பயன்படும் கனமான சுவருடைய குழியுரல்.


(2) **சாந்து :** காரை, சுண்ணாம்பு. மணல் கலந்த சாந்து.

**mortar board :** *(க.க.)* **சாந்துத் தட்டு :** காரைச் சாந்து வைப்பதற்கு அடியில் கைப்பிடியுள்ள ஒரு சதுரத் தட்டு.

**mortar box :** *(க.க.)* **சாந்துக் கலவைப் பெட்டி :** சாந்து கலப்பதற்குப் பயன்படும் பெரிய பெட்டி அல்லது தொட்டி.

**mortar joints : சாந்து இணைப்புகள் :** செங்கல் அல்லது காரைக் கட்டுமானப் பணிகளில் சாந்து கொண்டு அணைப்பதற்கான பல்வேறு பாணிகள்.

**mortise :** *(அச்சு.)* **துளைப் பொருத்து:** பொருத்து முளையிடும் துளைச் சட்டம்.



துளைப் பொருத்து

அச்சுக் கலையில் அச்சுத் தகட்டில் எழுத்துக்களைச் செருகுவதற்கான வாயில்.

**mortise chisel :** *(மர.வே.)* **துளைப் பொருத்து உளி :** துளை பொருத்திடும் தடித்த அலகுடைய உளி.

**mortise gauge :** *(மர.வே.)* **துளைச் சட்டமானி :** தேவையான அகலத்திற்குத் துளைச் சட்டத்தினை வெட்டுவதற்குப் பயன்படும் ஒரு கருவி.

**mortise lock :** *(க.க.)* **துளைச் சட்டப் பூட்டு :** துளைச்சட்டத்துடன் பொருத்தப்படும் ஒரு பூட்டு.

**mortising machine :** *(மர.வே.)* **துளைப் பொருத்து எந்திரம் :** மரத்தில் உளியாலோ சுற்று வெட்டு மூலமாகவோ துளைச் சட்டம் வெட்டுவதற்கான ஓர் எந்திரம்.

**mosaic : பல் வண்ணப் பட்டை :** தரையில் பல வண்ணப் பட்டைகளினால் அணிசெய்தல்.

**mother-of-pearl : முத்துக் கிளிஞ்சல் :** கிளிஞ்சல்களின் உட்புறத்திலுள்ள பளபளப்பான பொருள். பொத்தான் போன்ற சிறிய

பொருட்கள் தயாரிக்கப் பயன்படு கிறது.

**motion :** *(இயற்.)* **இயக்கம் :** ஒரு பொருள் இயங்கி நிலை மாற்றம் பெறுதல்.


**motion study :** *(க.க.)* **இயக்க ஆய்வு :** சில பணிகளைச் செய் திடும் தொழிலாளர்களின் நட மாட்டங்களைக் கண்காணித்தல் தேவையற்ற நடமாட்டங்களைத் தவிர்த்து இயக்கத் திறனை அதி கரிக்கும் நோக்குடன் இந்த ஆய்வு செய்யப்படுகிறது.

**motive power :** *(பொறி.)* **எந்திர விசை :** எந்திரத்தில் இயக்கத்தைத் தோற்றுவிக்கும் திறமுடைய ஆற் றல்.

**motometer :** *(எந்.)* **இயக்கமானி :** நீராவி எஞ்சினின் வேகத்தைக் காட்டும் கருவி. இதனை வேக மானி என்றும் கூறுவர்.

**motor :** *(மின்.)* **(1) மின்னோடி :** மின்விசையைஎந் திர ஆற்றலாக மாற்றும் ஒரு கருவி.

**(2) விசைப் பொறி:** எந்திரத்திற்கு இய க்க ஆற்றலை அளிக்கும் பகுதி.



**மின்னோடி**

**Motor analyzer :** *(தானி.)* **இயக் கப் பகுப்பாய்வுக் கருவி :** உந்து வண்டியில் ஒரு தனிப் பெட்டியில் அல்லது ஒரு தனிச்சேணத்தில் ஒருங்கிணைத்து வைத்த கருவி களின் ஒரு தொகுதி. இதன்மூலம் நீள் உருளை அழுத்தம், காற்று -எரிபொருள், அனல் மூட்டும் நேரம் ஆகியவற்றைச் சரிபார்க்க லாம்.

**motor drive :** *(பட்.)* **மின்னோடி விசை :** ஓர் எந்திரத்திற்கு ஒரு மின்னோடியின் மூலம் மின் விசை யளிக்கும் நவீன முறை. இது எந் திரத்துடன் நேரடியாக இணைக் கப்பட்டிருக்கும்.

**motor generator :** *(மின்.)* **மின் னோடி மின்னாக்கி :** ஒரு மின் னாக்கியை இயக்கும் மின்னோடி. இது மாற்று மின்னோட்டத்தை நேர் மின்னோட்டமாகவும் நேர் மின்னோட்டத்தை மாற்று மின் னோட்டமாகவும் மாற்றுவதன் மூலம் மின்னாக்கியை இயக்கு கிறது.

**motor hoist : இயக்க உயர்த்தி :** கையினாலோ விசையினாலோ இயக்கப்படும் பாரந்தூக்கிச் சாத னம்.

**motor jet :** *(வானூ.)* **(1) மின் னோடித் தாரை :** எதிரீட்டு வாயு எஞ்சின் மூலம் இயங்கும் அழுத்தி யினைக் கொண்ட ஒரு தாரை எஞ்சின்.

(2) இத்தகைய எஞ்சின் உடைய ஒரு விமானம்.

**motor starter :** *(மின்.)* **:மின் னோடித் தொடக்கி :** தொடக்க இயக்கத்தைச் செய்வதற்காக ஒரு மினனோடியுடன் இணைக்கப் பட்டுள்ளமாற்றுத்தடைப்பெட்டி. இதில் மின்னோடியின் வேகம் அதி கரிக்க அதிகரிக்க தடைகுறைந்து, இறுதியில் சுற்று வழியிலிருந்து முற்றிலுமாக நீங்கி விடும்.

**motor torque :** *(மின்.)* **மின் னோடி முறுக்குப் பதக்கம் :** ஒரு மின்னோடியில் சுழற்சியை அல் லது சுழலும் போக்கினை உண் டாக்கும் முயற்சி அல்லது திருகு விசை.

**mottled : பல் வண்ணப் புள்ளி யமைவு :** பல்வண்ணப் பட்டைகள் அல்லது புள்ளிகள் இட்ட அமைவு. வேண்டுமென்றே பல்வேறு வண் ணக் கோலங்களில் தயாரிக்கப் பட்ட பரப்புடைய காகிதம்.

**mould** : *(வார்.)* **(1) வார்ப்படம்**; *உலோக வடிவங்களை உருவாக்கும் மாதிரி உரு அச்சு.*

**(2) பூஞ்சக் காளான்** : *(தாவ.)* பழைய ரொட்டியில் வளரும் பசுமை நிறப் பூஞ்சக் காளான்.

**mount** : **ஒப்பனைச் சட்டம்** : *அறைகலனை வலுவாகப் பொருத்துவதற்குரிய அலங்கார ஒப்பனைச் சட்டம். இது பெரும்பாலும் உலோகத்தில் அமைந்திருக்கும்.*

**movieola** : **திரைப்படத் தொகுப்பான்** : *திரைப்படத்தைத் தொகுப்பதற்குப் பயன்படும் ஒரு திரைப் படச் சாதனம்.*

**moving coil**: **இயங்கு சுருள்**: *ஒரு காந்தப்புலத்தில் மின்னோட்டத்தைக் கொண்டு செல்லும் ஒரு மின்கம்பிச் சுருளை நம்பியிருக்கும் ஒரு மின்னியல் சாதனம். எடுத்துக் காட்டு: இயங்கு சுருளுடைய ஒலி பெருக்கி.*

**moving - coil galvanometer** : *(மின்.)* **இயங்கு சுருள் மின்னோட்ட மானி** : *ஒரு நிரந்தரக் காந்தத்தினால் உருவாக்கப்பட்ட வலுவான காந்தப்புலத்தின் ஆதாரத்திலுள்ள நகரக்கூடிய சுருளினைக் கொண்ட ஓர் உணர் கருவி. இது சுருளின் வழியே சிறிதளவு மின்னோட்டம் பாய்ந்தாலும் அதனைச் சுட்டிக் காட்டும்.*

**moving needle**: *(மின்.)* **இயங்கு ஊசி மின்னோட்ட மானி** : *மின்னோட்டத்தைக் காட்டும் நகரும் காந்த ஊசி கொண்ட ஒரு சாதனம். இந்த ஊசியைச் சுற்றி அல்லது அதன் அருகில் சுற்றப்பட்டுள்ள நுண்ணிய கம்பிச் சுருளின் வழியே மின் விசை பாய்கிறதா என்பதைச் சுட்டிக் காட்டக்கூடியது.*

**mucilage** : **தாவரப் பசை** : *ஒரு வகைத் தாவரப் பிசினிலிருந்தும் நீரிலிருந்தும் செய்யப்படும் தாவரப் பசைப் பொருள்.*

**muck bar**: *(உலோ.)* **கூள உலோகக் கட்டி** : *தேனிரும்புத் தயாரிப்பில் முழுவதும் உருகாத உலோகக் கட்டியைக் கூளங்களின் உருளை வழியே செலுத்துவார்கள். அப்போது அது ''கூளக்கட்டி'' என அழைக்கப்படுகிறது. இந்த உலோகக் கட்டியில் கசடு அதிகமாகக் இருக்குமாதலால், இதனைச் சுத்திகரிக்காமல் பயன்படுத்த இயலாது.*

**mudsill** : *(க.க.)* **சேற்றுப்படிக் கட்டை** : *ஒரு கட்டுமானத்தின் அடித்தளப் படிக் கட்டை. இது தரையில் நேரடியாக வைக்கப் படும்.*

**muffle**: *(1)* **சூளை உலை** : *மண் பாண்ட வேலையில் சுடுவதற்காகப் பாண்டம் வைக்கப்படும் சூளை உலையறை*

*(2)* **ஒலித்தடுப்பான்** : *ஒரு மின்னோடிப் புகைபோக்கியில் ஓசையை அடக்குவதற்கான சாதனம்.*

**muffle furnace**: *(உலோ.)* **பொதியுலை**: *மின்விசையினாலோ எரிவாயுவினாலோ இயக்கப்படும் ஒரு சிறிய உலை. உலோகங்களைக் கடும்பதப்படுத்துதல், கடினமாக்குதல், முலாமிடுதல் போன்ற அதிக வெப்பம் தேவைப்படும் வேலைகளுக்கு இது பயன்படுத்தப்படுகிறது*

**muffler**: *(தானி.)* **ஓசையடக்குச் சாதனம்**: *உட்புழையான நீள் உருளை கொண்ட ஒரு எந்திர சாதனம். இது ஒரு கேசோலின் எஞ்சினுடன் இணைக்கப்பட்டிருக்கும். இதன் வழியே புறம்போக்கும் வாயு வெளியே சென்று ஓசை வராமல் அடக்கிவிடும்.*

**mule-pulley stand**: *(எந்.)* **கலப்புக் கப்பி நிலை**: *ஒரு துணைச்சுழல் தண்டின் மேலுள்ள தளர்வான*

இரு கப்பிகளை, இரு சுழல் தண்டு களுக்கிடையில் விசையினை அனுப்புவதற்கு வசதியாக அமைத்துள்ள நிலை.

**mullion** *(க.க.)* **பலகணி இடைக் கம்பி:** மேல்கீழான பலகணி இடைக்கம்பி.

**multicolour press** : *(அச்சு.)* **பல வண்ண அச்சுப் பொறி :** ஒரே சமயத்தில் இரண்டுக்கு மேற்பட்ட வண்ணங்களில் அச்சடிக்கவல்ல அச்சுப் பொறி.

**multi filament lamp** : *(மின்.)* **பல இழை விளக்கு** : பெரிய வெண் சுடர் விளக்குகள் பெரும்பாலும் பல இழைகளுடன் தயாரிக்கப்படுகின்றன. இந்த இழைகள் இணையாக அமைந்திருக்கும். இதனால், ஓர் இழை எரிந்துபோனாலும், விளக்குத் தொடர்ந்து எரியும்.

**multigraph** : **தட்டச்செழுத்துச் சாதனம் :** கடிதங்களையும் ஆவணங்களையும் தட்டச்சு செய்த படிகள்போல் தோன்றுமாறு அச்சடிக்கவல்ல ஒரு சாதனம்.

**multigraph paper** : **தட்டச்செழுத்துக் காகிதம்** : தட்டச்செழுத்துச் சாதனத்தில் பயன்படுத்துவதற்குரிய காகிதம்.

**multipart bearings** : *(எந்.)* **பல உறுப்புத் தாங்கிகள் :** எந்திரத்தில் இருசுக் கட்டையுடன் இணைந்துள்ள மூன்று அல்லது அவற்றுக்கு மேற்பட்ட பகுதிகளைக் கொண்ட தாங்கிகள். இவை எண்ணெய்ப் படலத்தைப் பாதிக்காத வகையில் அமைக்கப்பட்டிருக்கும். இந்த வகைத் தாங்கிகள் ஒரு பெட்டிக் குள் அடங்கியிருக்கும். கனரக எந்திரங்களில் இவை பயன்படுத்தப் படுகின்றன.

**multiplane** : *(வானூ.)* **பல தட்டு விமானம் :** ஒன்றன்மேல் ஒன்றாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆதாரத் தட்டுகளைக் கொண்ட விமானம்.

**multiple** : **பன்மடங்கு :** பல் கூறுகளானது; எண்ணின் பல மடங்கு; மீதமின்றி ஓர் எண்ணால் வகுக்கப் படத்தக்க தொகை.

**multiple disk clutch** ; *(தானி.)* **பன்முக வட்ட ஊடிணைப்பி:** பன்முக வட்டத் தட்டுகளைக் கொண்ட ஊடிணைப்பி. இதில் ஒரு தொகுதி இயங்குவதாகவும், இன்னொரு தொகுதி இயங்குவதாகவும் அமைந்திருக்கும். அழுத்தப்பட்ட சுருணை விற்சுருள் மூலம் அழுத்தம் கொடுக் கப்படுகிறது. ஊடிணைப்பி மிதி கட்டையை அழுத்துவதன் மூலம் ஊடிணைப்பிவிடுவிக்கப்படுகிறது. இந்த ஊடிணைப்பிகள் உலர், ஊடிணைப்பி, ஈர ஊடிணைப்பி என இருவகைப்படும்.

**multiple drilling machine** : **பன்முகத் துரப்பண எந்திரம் :** ஒன்றுக் கொன்று இணையாகப் பல துரப் பணக் கதிர்கள் அமைக்கப்பட் டுள்ள ஓர் எந்திரம். இவை ஒரே சமயத்தில் இயக்கப்படும்.

**multiple projection welding** : **பன்முக வீச்சுப் பற்றவைப்பு** : இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட பற்றாசுகளை ஒரே சமயத் தில் இயங்கச் செய்யும் முறை.

**multiple series** : *(மின்.)* **பன் முகத்தொடர் மின் சுற்று வழி:** இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட தொடர் மின்சுற்று வழி களின் ஓரிணையான இணைப்பு.

**multiple - threaded screw** : *(எந்.)* **பன்முக இழைத் திருகு :** தனது உடற்பகுதியைச் சுற்றி பல திருகு சுழல் வட்டங்கள் உள்ள ஒரு திருகு. இதன் மூலம் ஓரிழைத் திருகின் மூலம் கிடைக்கும் இயக்

கத்தை விட அதிக வேக இயக்கத்தைப் பெறலாம்.

**multiplex : பன்முகச் செய்தி யனுப்பீடு** : வானொலி, தொலைபேசிச் செய்தித் தொடர்புகளில் ஒரே செய்தியனுப்புப் பாதையில் ஒரே திசையில் அல்லது இருதிசைகளிலும் பல்வேறு செய்திகளை அனுப்புவதற்கான முறை.

**multipliar** : (மின்.) **விசைப் பெருக்கி** : மின்விசை ஆற்றலளவைப் பன்மடியாகப் பெருக்குவதற்குரிய சாதனம்.

**multipolar motor** : (மின்.) **பல் துருவ மின்னோடி**: நான்கு அல்லது அவற்றுக்கு புலக்காந்தத் துருவங்களையுடைய ஒரு மின்னோடி.

**multispeed motor** : (மின்.) **பன் முகவேக மின்னோடி** : எவ்வளவு பாரமிருந்தாலும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வெவ்வேறு வேகங்களில் இயங்கவல்ல ஒரு மின்னோடி.

**mumps** : (நோயி.) **புட்டாளம்மை**: ஒருவகை நோய்க் கிருமியினால் உண்டாகும் தொற்று நோய்.இது: எச்சில் சுரப்பிகளில் வீக்கத்தை ஏற்படுத்துகிறது.

**muntz metal**: (உலோ.) **மண்ட்ஸ் உலோகம்** : 60—62 பகுதி செம்பும் 38—40 பகுதி துத்தநாகமும் கலந்த உலோகக் கலவை. இது கப்பற் கவசத்தட்டுகள் செய்யப் பயன்படுகிறது.

**muriatic acid** : (வேதி.) **நீரகப் பாசிகை அமிலம்** : ஹைட்ரோகுளோரிக் அமிலத்தின் (HCl) வாணிகப் பெயர்.

**mushet steel** : (உலோ.) **முஷட் எஃகு**: 9% டங்ஸ்டன், 2.5% மாங்கனீஸ், 1.85% கார்பன் கொண்ட எஃகு. இது வெட்டுக் கருவிகள் செய்வதற்கு முக்கியமாகப் பயன்படுகிறது.

**muslin** : **மென்துகில் (மஸ்லின்)** : பெண்டிர் உடைகளுக்கும், திரைகளுக்கும் உதவும் நுண்ணயமுடைய பருத்தியாலான மென்துகில்.

**mutation : வகை மாற்றம்** : பெற்றோர்களின் பண்புகளிலிருந்து மாறுபட்டு புதிய பண்புகளுடன் தாவரம் அல்லது விலங்கு இனம் தோன்றுதல். இந்த மாற்றம் வழித்தோன்றல்களுக்குச் சேர்ந்தடைகிறது. வகைமாற்றங்கள் சில சமயம் ஊடுகதிர்களினால் (எக்ஸ்-கதிர்கள்) உண்டாகிறது. அண்டக் கதிர்களினாலும் இது உண்டாகலாம்.

**mutual Inductance**: ; (மின்.) **பிறிதின் தூண்டல்** : ஒரு சுருணையின் காந்தப்புலம், இன்னொரு சுருணையின் மீது செயற்படுவதன் மூலம் உண்டாகும் விளைவு.

ஒரு மின் சுற்று வழியில் ஏற்படும் மின்னோட்ட மாறுதலின் இன்னொரு மின் சுற்று வழியில் உண்டாகும் மின் தூண்டல்.

**mutule** : (க.க.) **பிதுக்கக் கவரணை** : டோரிக் என்னும் கிரேக்கக்கலவைப் பாணியின்படி தூணின் மேல் வரம்பிலுள்ள பிதுக்கக் கவரணை.

**myriapods** : (உயி.) **பலகாலிகள்**: அட்டை, பூரான் போன்ற கணக்கற்ற கால்கள் உடைய உயிரினங்கள்.

**myrtle** : **புன்னை** : இதனைக் கலிபோர்னியாப் புன்னை என்றும் கூறுவர். இதன் மரம் கடினமானது; வலுவானது; பசு மஞ்சள் நிறமுடையது. இந்தப் பசுமை மாறாத தன்மையுடைய இது பல நோக்க மரம். அமெரிக்காவின் மேற்குக் கரையில் இது மிகுதியாக வளர்கிறது.

# N

**N.A.C.A. cowling:** *(வானூ.)* **என்.ஏ.சி.ஏ. மேல்மூடி:** வானூர்தி எந்திரத்தின் ஒருவகை மேல்மூடி. இது காற்றினால் குளிர்விக்கப் படும் கதிர்களைப் போலமைந்த எஞ்சினை மூடியிருக்கும். இதில் ஒரு தலைச்சீரா அல்லது வளையம் இருக்கும். இதுவும், உடற்பகுதியின் பின்புறமுள்ள ஒரு பகுதியும், குளிர்விக்கும் காற்று தலைச் சீராவின் முன்புறம் வழியாக உட் சென்று, உடற்பகுதிக்கும் தலைச் சீராவின் பின்பகுதிக்குமிடையிலான வழவழப்பான கோண வடிவப் பள்ளத்தின் வழியே வெளியேறும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும்.

**nacelle:** *(வானூ.)* **விமான எந்திர வேயுறை:** பயணிகளுக்கான அல்லது மின் எந்திரத்திற்கான அடைக்கப்பட்ட காப்பிடம். இது பொதுவாக விமானத்தின் கட்டுமானச் சட்டத்தைவிடக் குறுகலாக இருக்கும். இதில் வால்பகுதி இருக்காது.

**nail: ஆணி:** மெல்லிய உலோகத் துண்டு. இதன் ஒரு முனை கூர்மையாகவும், இன்னொரு முனை தட்டையான அல்லது உருண்டையான கொண்டையினையும் கொண்டிருக்கும். மரத் துண்டுகளையும், பிற பொருட்களையும் இணைக்க இது பயன்படுகிறது. இணைக்க வேண்டிய பொருட்களைப் பொருத்தி ஆணியின் கொண்டையில் அடித்துப் பிணைக்கலாம்.

**nail puller:** *(எந்.)* **ஆணிக் குறடு:** (1) ஆணி பிடுங்கப் பயன்படும் ஒரு கருவி. இது இருகவர்முனைகளைக் கொண்டிருக்கும். சுவர் இடைவெளியை ஆணியின் கொண்டைக்குக் கீழே கொடுத்து நெம்பி ஆணியைப் பிடுங்கலாம்.

(2) இரு தாடைகள் கொண்ட ஒரு எந்திரச் சாதனம். இது மரத்தில் அறையப்பட்டுள்ள ஆணியைப் பிடுங்குவதற்கு ஒரு நெம்புகோலாகப் பயன்படுகிறது.

**nail set:** *(மர.வே.)* **ஆணித்**



ஆணித்தண்டு

**தண்டு:** 10 அல்லது 13 செமீ நீளமுள்ள ஒரு சிறிய எஃகுத் தண்டு. இதன் ஒரு முனை நுனி நோக்கிச் சிறுத்தும் ஆணியின் கொண்டை வழியே கழன்று விடாதவாறு சற்றே கிண்ண வடிவிலும் அமைந்திருக்கும். ஆணியின் கொண்டையை மேற்பரப்புக்குக் கீழே செலுத்துவதற்குப் பயன்படுகிறது.

**naphtha:** *(வேதி.)* **இரச கற்பூரத் தைலம்:** பெட்ரோலியத்திலிருந்து கேசோலினுக்கும் பென்சீனுக்குமிடையே வடித்து இறக்கப்படும் பொருள். இது தூய்மைப்படுத்தும் பொருளாகப் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

**naphthalene:** *(வேதி.)* **இரச கற்பூரம்:** $C_{10}H_8$: கரி எண்ணெயில் (கீல்) கலந்திருக்கும் ஒரு கூட்டுப் பொருள். இது கரி எண்ணெயிலிருந்து வெண்படிகச் சிம்புகளாகப் பிரித்தெடுக்கப்படுகிறது. சாயப் பொருட்கள் தயாரிப்பதாலும், நோய் நுண்ம ஒழிப்புப் பொரு

ளாகவும், அந்துப்பூச்சி அழிப்பானாகவும் பயன்படுகிறது.

**nasa:** *(விண்)* **நாசா:** தேசிய வான்பயண மற்றும் விண்வெளி முகவாண்மை. இது அமெரிக்காவில் உள்ளது.

**national electrical code:** *(மின்.)* **தேசிய மின்விதித் தொகுப்பு:** மின் கடத்திகள், மின் சாதனங்கள், மின் எந்திரங்கள் போன்றவற்றை நிறுவும்போது மின்னியல் வல்லுநர்களுக்கு வழி காட்டியாகவுள்ள விதிகளின் தொகுப்பு.

**native copper:** *(கனிம.)* **தன்னியல்புத் தாமிரம்:** மிக உயர்ந்த தரமான செம்பு. இது உலோக வடிவிலேயே தோண்டியெடுக்கப்படுகிறது. மின்னியல் நோக்கங்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது.

**natural:** *(அச்சு.)* **இயற்கை வண்ணம்:** சிறிதளவு செயற்கை வண்ணம் சேர்க்கப்பட்ட மரக்கூழின் இயற்கை வண்ணத்திலிருந்து கிடைக்கும் காகிதத்தின் வண்ணம்.

**natural cement:** *(பொறி.)* **இயற்கை சிமென்ட்:** சீமைச் சிமென்ட் (போர்ட்லண்ட் சிமென்ட்) எனப்படும் சீமைக்காரையிலிருந்து வேறுபட்டது. இது விரைவாக இறுகிக் கொள்ளும்; விலை மலிவானது; வெளிர் நிறமுடையது; வலிமை குன்றியது.

**natural frequency:** *(இயற்.)* **இயல்பு அலைவெண்:** ஒரு குறிப்பிட்ட நீளமுடைய ஊசல், ஒரு நிமிடத்திற்கு ஒரு குறிப்பிட்ட (இயல்பான) அலைவெண்ணுடன் ஊசலாடும் போக்குடையதாக இருக்கும். அதனை இழுத்து, இன்னும் அதிக வேகமாக ஊசலாடும்படி செய்யலாம். அதே போன்று, ஒரு கொண்மியும் மின்கம்பிச் சுருளும் உடைய குறிப்பிட்ட ஒரு மின் சுற்றுவழியில் மின்னோட்டமான ஓர் இயல்பான அலைவெண்ணைக் கொண்டிருக்கும்.

**natural gas:** **இயற்கை எரிவாயு:** பூமியில், குறிப்பாக எண்ணெய்ப் படிவுகள் உள்ள மண்டலங்களில் கிடைக்கும் எரிவாயு. இது மிக நேர்த்தியான எரி வாயுவாகும். இது வீடுகளிலும், தொழில் துறையிலும் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

**natural resins:** *(வேதி. குழைம.)* **இயற்கைப் பிசின்:** தாவரங்களிலிருந்து சுரக்கும் திடப்பொருள்; எளிதில் உடையக்கூடியது; கண்ணாடி போல் பளபளப்புடையது. கிளிஞ்சலின் தன்மையுடையது; தண்ணீரில் கரையாதது; பல்வேறு உருகுந்திறன் கொண்டது.

**natural selection:** **இயல்தேர்வு விளைவுக் கோட்பாடு:** மரபுப் பண்புகளும், போட்டியின் விளைவான தகுதி நேர்வுப் பண்புகளும் சேர்ந்த இயற்கை இயல் வளர்ச்சித் தேர்வுக் கோட்பாடு. விலங்குகளின் குட்டிகள் அல்லது தாவரங்களின் கன்றுகள், தம் பெற்றோரிடமிருந்து சற்றே வேறுபட்டனவாக இருக்கும். தங்கள் சூழலுக்கேற்பத் தங்களைத் தகவமைத்துக் கொள்ளக்கூடிய குட்டிகளும், கன்றுகளும் உயிர் வாழ்ந்து இனப் பெருக்கம் செய்கின்றன. அவ்வாறு தகவமைத்துக் கொள்ள இயலாதவை மாண்டு போய்விடுகின்றன; அவை இனப்பெருக்கம் செய்வதில்லை. இதனால், சூழலுக்கேற்பத் தகவமைத்துக் கொள்ளும் வகையில் இவற்றின் வடிவமும் இயல்பும் மாறிவிடுகின்றன இதுவே 'இயல் தேர்வு விளைவு' என்பதாகும்.

**nautical measure:** **கடல் அளவை:**

*6080.20 அடி = 1 கடல் மைல் அல்லது அலகு:*

*3 கடல் மைல் = 1 லீக்*

*60 கடல் மைல் = 1 பாகை (பூமத்திய ரேகையில்)*

**N.B.** *(அச்சு.)* **பி.கு.** பின்குறிப்பு என்பதன் சுருக்கம். பின் வருவதை நன்கு கவனி என்பது பொருள்.

**nave:** *(க.க.)* **நடுக்கூடம்:** கிறித் தவத் திருக்கோயிலின் நடுக்கூடம்.

**navel:** *(உட.)* **கொப்பூழ்:** உந்தி; மையப்புள்ளி.

**navel string:** *(உட.)* **கொப்பூழ்க் கொடி.**

**neat cement:** *(க.க.)* **தூய சிமெண்ட்:** மணல் கலக்காத தூய் மையான சிமெண்ட் காரை.

**neat's foot oil:** **மாட்டுக் காலடி எண்ணெய்:** எருது வகையைச் சேர்ந்த தூய்மையான கால்நடை களின் காலடி மற்றும் முழந்தாள் எலும்புகளை நீரில் கொதிக்க வைப்பதன் மூலம் கிடைக்கும் ஒரு வகை எண்ணெய். இது வெளிர் மஞ்சள் நிறமுடையது. இது தோலை மென்மைப்படுத்துவதற்கு முக்கியமாகப் பயன்படுகிறது.

**nebula-ae** : *(விண்.)* **ஒண்மீன் படலம்:** ஒளி ஆவி போலத் தோன்றும் நீள் நெடுந்தொலைவிலுள்ள விண் மீன் குழாம்.

**neck:** *(க.க.)* **தூண் கழுத்து:** தூணின் தலைப்பை அடுத்த கீழ்ப் பகுதி.

(2) மரத்தண்டின் இடை இணைப் புப் பகுதி.

**necking:** *(க.க.)* **எருத்தம்:** தூணின் தலைப்பகுதிக்கும் நடுத் தண்டிற்கும் இடையிலுள்ள பகுதி.

**needle bearing:** **ஊசித்தாங்கி:** ஒரு வகை உருள் தாங்கி. இதி லுள்ள உருளிகள் ஊசிகளைப் போல் மெல்லிதாக இருக்கும்.

**needle point:** *(அ.க.)* **ஊசிப் பின்னல் வேலை:** திரைச்சீலைகளில் கம் பளி இழைகளினால் செய்யப்படும் நுட்பமான ஊசிப் பின்னல் வேலை.

**ஊசிமுனை:** *(எந்.)* எந்திரவியலில் ஊசி போல் கூர்முனையுடைய ஒரு கருவி.

**needle valve:** *(எந்.)* **ஊசி ஓரதர்:** ஒரு குண்டூசியை அல்லது ஊசி யைச் சீரமைவு செய்வதன் மூலம் திரவம் அல்லது வாயு பாய்வதை முறைப்படுத்தக்கூடிய ஓரதர். இது அடிப்பகுதியில் ஒரு சிறிய துவா ரத்தில் கூம்பு வடிவப் பள்ளத்தில் பொருத்தப்பட்டிருக்கும்.

**negative:** **மறிநிலைத்தகடு:** ஒளிப் படக் கலையில் ஒளியும் நிழலும் நேர்மாறாகப் பதிந்திருக்கும் ஒளிப்பட உருவப்படிவம்.

**negative brushes of a dynamo:** *(மின்.)* **நேர் மின்னாக்கி மறிநிலைத் தூரிகை:** எதிர்மின் வாயுடன் இணைக்கப்பட்டுள்ள மின் னோட்ட அலைகளைத் திருப்பி விடும் கருவியின் தூரிகை.

**negative ion:** *(மின்.)* **எதிர்மின் அயனி:** எலெக்ட்ரான்களைப் பெற்று, எதிர் மின்னூட்டம் பெற் றுள்ள ஓர் அணு.

**nagative carbon:** *(மின்.)* **எதிர் மின் கார்பன்:** ஒரு தொடர் மின் னோட்டச் சுடர் விளக்கில் கீழ் நிலைக் கார்பன்.

**negative charge:** *(மின்.)* **எதிர் மின்னேற்றம்:** எலெக்ட்ரான்கள் சற்று மிகுதியாகவுடைய ஒரு மின் னழுத்த நிலை.

**negative conductor:** *(மின்.)* **எதிர்மின் கடத்தி:** எதிர் மின்வாயி லிருந்து செல்லும் ஒரு மின்கடத்தி.

**negative ghosts:** **மறிநிலை இரட் டைத் தோற்றம்:** தொலைக் காட்சி யில் காலந்தாழ்த்தி அனுப்பப் பட்ட அடையாள அலையுடன் பின் அலை கலப்பதால் கறுப்பு வெள்ளைப் பகுதிகள் ஒன்றுக் கொன்று மாறி ஏற்படும் இரட் டைத் தோற்றக் குளறுபடி.

**negative plate:** *(மின்.)* **எதிர்மின் தகடு:** *(1)* ஒரு சேமக்கலத்தில் உள்ள கடற்பஞ்சு போன்ற ஈயத் தகடு. இது மின்னியக்கத்தின் போது எதிர்மின் தகடாக அல்லது எதிர்மின் வாயாகச் செயற்படுகிறது.


(2) ஓர் அடிப்படை மின்கலத்தில் கார்பன், செம்பு, பிளாட்டினம் முதலியவை எதிர்மின் வாயாகச் செயற்படுகின்றன.

**negative resistance:** *(மின்.)* **எதிர்மின் தடை:** ஒரு மின்சுற்று வழியில் மின்னழுத்தம் அதிகமாகும்போது, மின்னோட்டம் குறைகின்ற ஒரு நிலை.

**negative side of circuit:** *(மின்.)* **மின்சுற்றுவழியின் எதிர்மின் பாதை:** ஒரு மின்சுற்று வழியில் மின்விசை நுகர்வுச் சாதனத்திலிருந்து மின் வழங்கும் ஆதாரத்திற்குத் திரும்பிச் செல்லும் மின் கடத்து பாதை.

**negative temperature coefficient:** *(மின்.)* **எதிர் வெப்பக் குணகம்:** வெப்ப நிலையில் ஏற்படும் ஆக்க முறையான மாறுதல் காரணமாக அலைவெண், மின்தடை போன்ற பண்புகளில் உண்டாகும் எதிர்மறை மாறுதல்.

**neon:** *(மின்.)* **நியோன்:** செவ்வொளி விளக்குகளில் பயன் படுத்தப்படும் செயலற்ற, நிறமற்ற தனிம வாயு. இது மற்றப் பொருள்களுடன் வினைபுரிவதில்லை. செவ்வொளி விளக்குகளில் நிரப்பப் பயன்படுகிறது.



நியோன் விளக்கு

**neon light:** *(மின்.)* **செவ்வொளி விளக்கு:** மின் இழைக்குப் பதிலாக இரு மின் முனைகளைக் கொண்ட ஒரு வகை விளக்கு. குழாயினுள்ளிருக்கும் செவ்வொளி வாயு அயனியாகும்போது ஒளி உண்டாகிறது. விளம்பரங்களில் இந்த விளக்குகள் பெருமளவில் பயன்படுகின்றன.


**neon - light ignition timing:** *(தானி.)* **செவ்வொளிச் சுடர்மூட்ட நேரம்:** உந்து ஊர்தியின் எஞ்சினில் ஒரு சிறிய செவ்வொளி விளக்கினை கம்பிகள் மூலமாகத் தொடரிலுள்ள சுடர் மூட்டக் கம்பியின் துணைமின் சுற்றுவழியின் கம்பிகளை முதல் எண் சுடர்ப்பொறிச் செருகுடன் இணைப்பதன் வாயிலாக, முறிப்பான் தொடும்போதும் விடும்போதும் ஒளி மின்னுகிறது. சமனுருள் சக்கரத்தில் அல்லது அதிர்வு அடக்கியில் உள்ள காலக் குறியீட்டில் நேரடியாக ஒளி மின்னும் போது எஞ்சின் உரிய இயக்க நேரத்தில் இருப்பதாகக் கண்டு கொள்ளலாம்.

**nep:** **பருத்தி முடிச்சு:** பருத்தியில் குறைந்த உருட்சி அல்லது மட்டமான விதை நீக்கம் காரணமாக ஏற்படும் சிறிய முடிச்சுகள்.

**nernst lamp:** *(மின்.)* **நெர்ன்ஸ்ட் விளக்கு:** ஒருவகை வெண்சுடர் விளக்கு. இதிலுள்ள ஒளிரும் பகுதியில் அரிய மண்களின் உருகா ஆக்சைடுகளினாலான ஒரு பென்சில் இருக்கும்.

**nested tables:** **கூண்டு மேசை:** பயன்படுத்தாதபோது ஒன்றுக்குள் ஒன்றைச் செருகி வைத்துக் கொள்ளத்தக்கவாறு அமைக்கப்பட்டுள்ள ஒரு மேசைத் தொகுப்பு. இது பொதுவாக நான்கு அடுக்குகளைக் கொண்டிருக்கும்.

**nest of saws:** *(மர.வே)* **தொகுப்பு**



தொகுப்பு ரம்பம்

**ரம்பம்:** ஒரே கைப்பிடியில் பயன்

படுத்தக்கூடிய பல்வேறு நீளங்களைக் கொண்ட அலகுகள் அமைந்த வட்ட வடிவ ரம்பங்களின் தொகுதி. இலேசான வேலைப்பாடுகளுக்குப் பயன்படுகிறது.

**nest plate:** *(குழை.)* **தொகுப்புத் தகடு:** வார்ப்படங்களை உட்செலுத்துவதற்குப் பயன்படும் உட்குழிவுப் பாளங்களுக்கான பள்ளப் பகுதியைக் கொண்ட காப்புத் தகடு.

**neutral:** *(தானி.)* **இயங்காநிலை:** விசையூக்க எந்திரத்தில் இயக்கம் ஊட்டாது இயங்கும் பகுதியின் நிலை. இந்நிலையில் வேகமாற்றப் பல்லிணை பொருந்தாமலிருக்கும்.

மின்னியலில் நேர்மின்னாகவோ எதிர்மின்னாகவோ இல்லாமல் இருக்கும் நடுநிலை இணைவு

**neutral axis:** *(பொறி.)* **நொதுமல் அச்சு:** ஓர் எளிய விட்டத்தில் மேற்புற இழைகள் எப்போதும் அமுக்கத்தில் இருக்கும். அப்புற இழைகள் எப்போதும் விறைப்புடனிருக்கும். எனவே, இழைகள் அமுக்கத்திலோ விறைப்புடனோ இல்லாத ஒரு புள்ளி இருக்க வேண்டும். இந்தப் புள்ளி தான் அப்பகுதியின் "நொதுமல் அச்சு" எனப்படும்.

**neutral conductor:** *(மின்.)* **நடுநிலை மின்கடத்தி:** இரு மின் கம்பி முறையில் தரையுடன் பொருத்தப்பட்டுள்ள மின்கம்பி. மூன்று மின் கம்பி முறையில் தரையுடன் பொருந்தப்பட்டுள்ள மூன்றாவது மின்கம்பி.

**neutral flame:** **நடுநிலைச் சுடரொளி:** வாயு மூலம் பற்ற வைப்பதற்கான சுடரொளி. இதில் முழுமையான உள்ளெரிதல் இருக்கும்.

**neutralization:** *(வேதி;)* **செயலற்ற தாக்குதல்:** அமிலக் கரைசலில் காரத்தைச் சேர்ப்பது போல், மாறான விளைவினால் பயனற்றதாகவோ செயலற்றதாகவோ ஆக்குதல்.

**neutral position:** *(தானி.)* **நடுநிலை:** உந்து ஊர்தியை இயக்காமல் எஞ்சின் மட்டும் ஓடிக் கொண்டிருப்பதற்கு இடமளிக்கும் வகையில் மாற்றுப் பல்லிணைகளை ஒன்றையொன்று தொடாமலிருக்கச் செய்யும் பல்லிணை மாற்று நெம்புகோலின் நிலை.

**neutral wire:** *(மின்.)* **நடுநிலை மின்கம்பி:** சமநிலை மின்கம்பி. மூன்று கம்பிகள் கொண்ட மின் வழங்கு முறையில் கட்டுப்பாட்டு மின்கடத்தி. இந்தக் கம்பி சமநிலையற்ற மின்னோட்டத்தை எடுத்துச் செல்கிறது.

**neutrino:** *(மின்.)* **நியூட்ரினோ:** ஒரு நியூட்ரான் உடைந்து அல்லது சிதைந்து ஒரு புரோட்டானாகவும், ஓர் எலெக்டிரானாகவும், மாறுவதன் காரணமாக உண்டாகும் மின்னூட்டம் பெறாத துகள்.

**neutrodyne:** *(மின்.)* **நடுநிலை விசையழுத்தம்:** கொண்மிகளைச் செயலற்றதாக்குவதன் மூலம் தேவையற்ற மின்னூட்டத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு வானொலி மின்சுற்று வழி.

**neutron:** *(இயற்.)* **நியூட்ரான்/நொதுமம்:** மின்னியக்கமில்லாத சிற்றணு மூன்று அடிப்படை அணுத் துகள்களில் ஒன்று. இது புரோட்டான் போன்றே எடையுள்ளது. ஆனால் இதில் மின்னேற்றம் இராது.

**newel:** *(க.க.)* **நடுத்தூண்:** சுழற் படிக்கட்டின் உச்சியில் அல்லது அடியில் உள்ள நடுக்கம்பம்.

**news:** **பத்திரிகைக் காகிதம்:** அடிமரக்கூழிலிருந்து தயாராகும் ஒரு

வகைக் காகிதம். செய்தியிதழ்கள் அச்சடிக்கப் பயன்படுகிறது.

**news board**: **செய்தியிதழ்க் காகித அட்டை**: செய்தியிதழ்க் காகிதக் கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு வகை மலிவான காகித அட்டை.

**newsprint** : *(அச்சு.)* **செய்தித் தாள் காகிதம்**: செய்தித்தாள் அச்சிடுவதற்கான, மரக்கூழில் தயாரான தாள்.

**news stick**: *(அச்சு.)* **செய்தி அச்சுக்கோப்புக் கட்டை**: ஒரு குறிப்பிட்ட அளவுடைய அச்சுக்கோப்புக் கட்டை. பத்தி அகலத்தைக் கட்டுப்படுத்த பயன்படுகிறது. செய்தித்தாள் பணியில் பயன்படுத்தப்படுகிறது.

**newton**: *(மின்.)* **நியூட்டன்**: விசையின் ஓர் அலகு. இது ஒரு கிலோ கிராம் பொருண்மைக்கு, வினாடிக்கு ஒரு மீட்டர் அளவுக்கு முடுக்கம் கொடுக்கக்கூடியது.

**newton, issaac** (1642-1727): *(மின்.)* **நியூட்டன், ஐசக்**: புகழ் பெற்ற ஆங்கில விஞ்ஞானி; கணிதமேதை; கலன கணிதத்தைக் கண்டுபிடித்தவர்; புவியீர்ப்புக் கோட்பாட்டினை வகுத்தவர்.

**newtonian telescope**: **நியூட்டானியத் தொலைநோக்கி**: ஒரு குழி ஆடியினால் உருவாகும் விண்மீன் உருவத்தை குழாயின் பக்கவாட்டிலுள்ள ஓர் ஆடியின் வழியாகப் பார்ப்பதற்குரிய ஒரு தொலைநோக்கி.

**newton's disc**: *(இயற்.)* **நியூட்டன் வட்டு**: இது ஒரு வட்ட வடிவத் தகடு. இதில் நிறமாலையில் வண்ணங்கள் வீத அளவுகளில் தீட்டப்பட்டிருக்கும். இந்த வட்டினை வெகு வேகமாகச் சுழற்றும் போது அதிலுள்ள வண்ணங்கள் வெண்ணிறமாகத் தோன்றும்.

**newton's law of cooling**: *(இயற்.)* **நியூட்டனின் குளிர்விப்பு விதி**: "ஒரு சூடான பொருள் குளிர்ச்சியடையும் வேகமானது, அந்தப் பொருள், அதைச் சுற்றியுள்ள காற்று போன்றவற்றின் வெப்பநிலைக்கு வீத அளவில் இருக்கும்" என்னும் விதி. ஒரு பொருள், காற்றைவிட 30° அதிகச் சூடாக இருக்கும் போது, அது நிமிடத்திற்கு 6° என்ற வீதத்தில் குளிர்ச்சியடையுமானால், அது காற்றைவிட 15° அதிகச் சூடாக இருக்கும் போது, நிமிடத்திற்கு 3° என்ற வீதத்தில் குளிர்ச்சியடையும். ஒரு பொருள் அதைச் சுற்றியுள்ள பொருள்களைவிட மிகஅதிகமாகச் சூடாக இருக்குமானால், இந்த விதி துல்லியமாக அமையாது.

**newton's laws of motion**: *(இயற்.)* **நியூட்டன் இயக்க விதிகள்**: **முதல் விதி**: புறவிசைகள் எவற்றுக்கும் உட்படாதிருக்கும்போது, ஒவ்வொரு பருப்பொருளும் தொடர்ந்து அசையா நிலையிலோ, ஒரு நேர்கோட்டில் ஒரே சீரான இயக்கத்திலோ இருந்து வரும்.

**இரண்டாம் விதி**: "ஒரு பொருளின் முறுக்கமானது (அதாவது, அதன் வேக வளர்ச்சி வீதம்), அந்தப் பொருளின் மீதான நிகர விசையினை அந்தப் பொருளின் பொருண்மையினால் வகுப்பதால் கிடைக்கும் ஈவுக்குச் சமம்"

**மூன்றாம் விதி**: "ஒவ்வொரு வினைக்கும், அதாவது, ஒவ்வொரு இயற்பியல் விசைக்கும் சமமான எதிர்வினை உண்டு"

**nibbler**: *(எந்.)* **கொந்து கருவி**: உலோகத் தகடுகளைச் சிறுகச் சிறுகக் கொந்தி விசித்திரமான வடிவங்களை உருவாக்கப் பயன்

படும் உலோக வேலைப்பாட்டுக் கருவி.

**nibs:** **பேனா அலகு:** பேனாவின் கூர்மையான அலகு.

**niche:** *(க.க.)* **சுவர் மாடம்:** சிலையுருக்கள் வைப்பதற்குரிய சுவர் மாடம்

**nichrome:** *(உலோ.)* **நிக்ரோம்;** நிக்கலும், குரோமியமும் கலந்த ஓர் உலோகக் கலவையின் வாணிகப் பெயர். இது எளிதில் பற்றிக் கொள்ளும். மின் அடுப்புகள், பிற மின் தடைச் சாதனங்கள் தயாரிக்கப்படுகிறது.

**nickel:** *(உலோ.)* **நிக்கல்:** உலோகக் கலவைகளில் பெரிதும் பயன்படுத்தப்படும் கெட்டியான ஒளிரும் பொருள். இதன் ஒப்பு அடர்த்தி 8. 63 நிக்கல் முலாம்பூசவும், உலோகக் கலவைகள் தயாரிக்கவும் பயன்படுகிறது.

**nickel aluminium:** **நிக்கல் அலுமினியம்:** 80 அலுமினியம், 20% நிக்கலும் கலந்த உலோகக் கலவை. நிக்கல் கலப்பதால் அலுமினிய உலோகக் கலவைகளின் விறைப்பாற்றல் அதிகமாகிறது.

**nickel cadmium cell:** *(மின்.)* **நிக்கல் காட்மியம் மின்கலம்:** குழம்பு வகை மின்பகுப்பானைக் கொண்ட காரக் கரைசலுடைய மின்கலம். இது விமானங்களில் பயன்படுத்தப்படுகிறது.

**nickel copper:** *(உலோ.)* **நிக்கல் செம்பு;** நிக்கலும் செம்பும் கலந்த உலோகக் கலவை. அமிலம் அரிக்காத வார்ப்படங்கள் தயாரிக்கவும், உராய்வுத் தாங்கு வெண்கலமும் தயாரிக்கவும் பயன்படுகிறது. இதில் 60% நிக்கல், 33% செம்பு, 3.5% மாங்கனீஸ், 3.5% இரும்பு கலந்திருக்கும்.

**nickel malybdenum iron:** *(உலோ.)* **நிக்கல் மாலிப்டினம் இரும்பு:** 20%-40% மாலிப்டினம். 60% நிக்கல், சிறிதளவு கார்பன் கலந்த ஒருவகை உலோகக்கலவை. இது அமில அரிப்புத் தடுப்பானாகப் பயன்படுகிறது.

**nickel plating:** *(மின்.)* **நிக்கல் முலாம்:** உலோக மேற்பரப்பில் நிக்கல் முலாம் பூசுதல். ஒரு நிக்கல் உப்பு நீரில் உலோகத்தை மூழ்க வைத்து குறைந்த அழுத்த மின்னோட்டத்தைச் செலுத்தினால் உலோகத்தில் நிக்கல் முலாம் படியும்.

**nickel silver:** **நிக்கல் வெள்ளி:** இதனை ஜெர்மன் வெள்ளி என்றும் கூறுவர். செம்பு, நிக்கல், துத்தநாகம் கலந்த உலோகக் கலவை.

**nickel steel:** *(பொறி)* **நிக்கல் எஃகு:** 3.5% நிக்கல் அடங்கிய எஃகு மிக வலிமை வாய்ந்தது; முறையாகச் சூடாக்கிப் பக்குவப் படுத்தினால் திண்மையாக இருக்கும்.

**nickel-tantalum alloy:** *(வேதி.)* **நிக்கல் டாண்டாலம் உலோகக் கலவை:** 70% நிக்கல், 30% டாண்டாலம் அடங்கிய கடினமான, ஆனால் கசிவுத்தன்மையுடைய உலோகக் கலவை. மின் தடைக் கம்பிகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**nipple:** *(உட.)* **முலைக்காம்பு:** தாயிடம் குழந்தை பால் குடிக்கும் மார்பகத்தின் நுனிப்பகுதி.

**குமிழ்முனை:** *(கம்மி.)* தோல், கண்ணாடி, உலோகம் முதலியவற்றின் மீதுள்ள குமிழ் முளை.

**nitrate:** *(வேதி.)* . **நைட்ரேட்டு:** (1) நைட்ரிக் அமிலத்தின் உப்புப் பொருள் சில்வர் நைட்ரேட்டு இந்த வகையைச் சேர்ந்தது.

(2) நைட்ரிக் அமிலத்துடன் அல்லது ஒரு கூட்டுப் பொருளுடன் மூல அடிப்பொருளோ வெறியமோ சேர்வதால் உண்டாகும் உப்பியற் பொருளிலிருந்து கிடைப்பது.

**nitric:** *(வேதி.)* **நைட்ரிக்:** நைட்ரஜனிலிருந்து அல்லது நைட்ரஜன் தொடர்பான பொருள்.

**nitric acid:** *(வேதி.)* **நைட்ரிக் அமிலம்:** சோடியம் அல்லது பொட்டாசியம் நைட்ரேட்டைக் கந்தக அமிலத்துடன் கலந்து சிதைத்து வடிப்பதால் உண்டாகும் அமிலம். நிறமற்றது. மிகுந்த அரிக்கும் தன்மை கொண்டது.

**nitriding :** *(வேதி.)* **நைட்ரஜனேற்றம் :** இரும்பை ஆதாரமாகக் கொண்ட உலோகக் கலவைகளில் நைட்ரஜனை ஏற்றும் செய்முறை. உலோகக் கலவையை அம்மோனியா வாயுவுடனோ வேறேதேனும் நைட்ரஜனியப் பொருளுடனோ கலந்து சூடாக்குவதன் மூலம் நைட்ரஜன் ஏற்றலாம்.

**nitrogen :** *(வேதி.)* **நைட்ரஜன் :** காற்று மண்டலத்தில் ஐந்தில் நான்கு பகுதியாகவுள்ள வாயுத் தனிமம். நிறமற்றது; மணமற்றது.

**nitroglycerin :** *(வேதி.)* **நைட்ரோகிளிசரின் :** வெடிப்பாற்றல் மிக்க மஞ்சட் கலவை நீர்மம். இளமஞ்சள் நிறத்திலோ நிறமற்றதாகவோ இருக்கும். எண்ணெய்ப் பசையுடையது. கிளிசரின், கந்தக அமிலம், நைட்ரிக் அமிலம் ஆகியவற்றிலிருந்துதயாரிக்கப்படுகிறது. மிகுந்த வெடிப்பாற்றல் வாய்ந்தது, களிமண்ணுடன் கலந்து சுரங்கவெடி தயாரிக்கப்படுகிறது.

**noble metal :** *(வேதி.)* **துருப்படாத உலோகம் :** விலையுயர்ந்த அல்லது தூய உலோகத்தைக் குறிக்கும் சொல். எளிதில் துருப்பிடிக்காத உலோகங்களையும் குறிக்கும்.

**nodes :** *(மின்.)* **அதிர்வு மையப் புள்ளி :** அதிர்வுடைய பொருளின் அதிர்வு மையப் புள்ளி.

**nogging :** *(க.க.)* **மரக்கட்டுமானம் :** மரச்சட்டத்தில் செங்கல் வேலைப்பாடு அமைத்துக் கட்டுமானம் செய்தல்.

**noheet metal:** **செம்பத உலோகம்:** இதனைச் "செம்பத ஈயம்" என்றும் கூறுவர். இது சோடியத்துடன் கலந்து கெட்டியாக்கிய ஈயத்தைக் கொண்ட உராய்வுத் தடுப்பு உலோகம்.

**noil :** **கம்பளிச் சீவல் :** குறுகிய கம்பளிச் சீவல் உல்லன் நூல்களுக்குப் பயன்படுகிறது.

**noise figure :** *(மின்.)* **ஒலி வீதம்:** மின்மப் பெருக்கிகளில் (டிரான்சிஸ்டர்) கோட்பாட்டளவிலான ஒலிவிசையில் உள்ளபடியான ஒலி விசையின் வீத அளவு. இது டெசிபல்களில் குறிக்கப்படுகிறது.

**noise limiter:** *(மின்.)* **ஒலி வரையறுப்பான் :** ஒலிவாங்கி மூலம் ஒலி திடீரென உயர்வதைத் தடுக்கக் கூடிய தனிவகை மின் சுற்றுவழி.

**no load voltage :** *(மின்.)* **பளுவிலா மின்னழுத்தம் :** ஒரு மின் கலத்தில் புறமின் சுற்றுவழியில் மின்னோட்டம் பாயாமலிருக்கும் போது உள்ள முடிவான மின்னழுத்தம்.

**nomen clature:** *(பொறி.)* **கலைச் சொல் :** ஒரு குறிப்பிட்ட கலையில் அல்லது அறிவியல் துறையில் பயன்படுத்தப்படும் தனிச் சொற்களின் தொகுதி.

**nonconductor :** *(மின்.)* **மின் கடத்தாப் பொருள் :** தன்வழியாக மின்விசை செல்வதை அனுமதிக்காத ஒரு பொருள்.

**noncorrosive flux :** **அரித்திடா உருகு பொருள்:** பற்றாசு வைத்தல்,

ஒட்டவைத்தல் போன்றவற்றில் பயன்படுத்தப்படும்போது அரி மானம் உண்டாக்காத ஒருவகை உருகுங் கலவைப் பொருள்.

**nondeforming steel :** *(உலோ.)* **உருத்திரியா எ:கு :** 15% மாங்க னீஸ் கலந்து கடினமாக்கிய எஃகு. இது கருவிகள் செய்யவும் வார்ப் படங்கள் செய்யவும் பயன்படு கிறது.

**nonferrous metals :** *(பொறி.)* **அயமிலா உலோகங்கள் :** இரும்பு அடங்கியிராத உலோகங்கள்.

**noninductive circuit** *(பொறி.)* **தூண்டாமின் சுற்றுவழி :** மின் னோட்டத்தின் காந்த விளைவு மிகக் குறைந்த அளவுக்குக் குறைக் கப்பட்டுள்ள அல்லது அடியோடு இல்லாமல் செய்யப்பட்டுள்ள ஒரு மின்சுற்றுவழி.

**noninductive resistance:** *(பொறி.)* **தூண்டா மின்தடை:** தன் தூண்டலிலிருந்து விடுபட்ட மின் தடை.

**noninductive winding:** *(பொறி.)* **தூண்டாச் சுருணை :** சுருளின் ஒரு பாதியில் பாயும் மின் னோட்டத்தில் ஏற்படும் காந்தப் புலம், மறுபாதியில் எதிர்திசையில் பாயும் மின்னோட்டத்தினால் ஏற் படும் காந்தப் புலத்தின் மூலம் செயலற்றதாக்கப்படும் வகையில் அமைக்கப்பட்ட சுருணை.

**nonmetallic sheath cable :** *(பொறி.)* **உலோகமிலா உறை பொதிக் கம்பிவடம் :** உலோகமல் லாத ஓர் உறையில் அல்லது தறி போன்ற உறையில் பொதியப்பட் டுள்ள இரண்டு அல்லது மூன்று மின் கடத்திகளைக் கொண்ட ஒரு வகை மின் கம்பிப் பொருள்.

**nonpareil :** *(அச்சு.)* **தனி நிலை அச்செழுத்து :** அச்செழுத்தின் அளவு வகைகளில் ஒன்று. இது 6 புள்ளி அளவினைக் குறிக்கும்.

**non pressure : அழுத்தமிலா உரு கிணைப்பு :** அழுத்தம் எதுவுமின் றிப் பற்றவைப்பதற்குரிய பற்ற வைப்பு முறைகளில் ஒன்று.

**nonrigid airship :** *(வானூ.)* **விறைப்பிலா வான்கலம் :** வாயுப் பைகள், காற்றறைப் பைகள் போன்றவற்றிலுள்ள அக அழுத் தத்தின் மூலம் மட்டுமே வடிவம் பராமரிக்கப்படும் ஒரு வான்கலம்.

**nordberg key:** *(எந்.)* **நார்ட்பெர்க் திறவுகோல் :** சக்கரத்தின் குடத் தைச் சுழல்தண்டுடன் பிணைத் துப் பூட்டுவதற்கான வட்டவடி வத் திறவுகோல். இது அடிக்கு 1/16" என்ற அளவில் நுனிநோக் கிச் சிறுத்திருக்கும் பெரிய விட்டம் சுழல்தண்டின் விட்டத்தில் ½ பகுதி 6" வரை இருக்கும். பெரிய வடி வளவுகளில் இத் திறவுகோல் சுழல் தண்டின விட்டத்தில் ஐந் தில் ஒரு பகுதி என்ற அளவில் இருக்கும். பெரிய வடிவளவுகளில், இத்திறவுகோல் சுழல் தண்டின் விட்டத்தில் ஐந்தில் ஒரு பகுதி என்ற அளவில் இருக்கும்.

**normal : இயல்பளவு :** நிலைநாட் டப்பட்ட சட்டம் அல்லது விதிக் கிணங்க அமைந்துள்ள நிலை.

(2) **செங்குத்துக் கோடு :** *(கணி.)* ஒரு வளைவுக்குச் செங்குத்தாக இருக்கும் ஒரு கோடு.

**normalizing :** *(பொறி.)* **இயல் பாக்குதல் :** எஃகினை உயர்ந்த மாறுநிலை வெப்பத்திற்குக் கூடுத லாகச் சூடாக்கி, காற்றில் குளிர் வித்தல்.

**normal loop:** *(வானூ.)* **இயல்புக் கரண வளைவு :** விமானம் இயல் பாகப் பறக்கும் நிலைக்கு வருதல்.

**normal or three-point landing; இயல்பான அல்லது மும்முனைத்**

**தரையிறக்கம் :** தரையிறங்கும் பரப்பிற்குத் தொடுவரைபோற் செல்கிற ஒரு பாதையில் தரை யிறங்குதல். இதில் பறக்கும் வேகத்தில் ஏறத்தாழத் தொடுங் கணத்திலேயே ஏற்படுகிறது.

**normal solution:** *(வேதி.)* **இயல் புக் கரைசல் :** ஓர் அமிலத்தின் இயல்புக் கரைசலில் 1000 க.செ.மீ கரைசலுக்கு ஒரு கிராம் ஹைட்ர ஜன் அயனிகள் அடங்கியிருக்கும். எடுத்துக்காட்டுகள் 1000 க. செ. மீ. யில் 36.5 கிராம் ஹைட்ரஜன் குளோரைடு (HCL) 1000 க.செ. மீ. யில் 49 கிராம் கந்தக அமிலம் ($HS_2SO_4$) உற்பத்தியாகும்.ஹைட் ரஜன் அயனிகளின் எண்ணிக்கையி னால் அணு எடையை வகுப்பதன் மூலம் இந்த மதிப்புக் கிடைக் கிறது. ஓர் உப்பு மூலத்தின் இயல் புக் கரைசலில் 1000 க.செ.மீ. யில் 17 கிராம் ஹைட்ராக்சில் அயனி கள் அடங்கியிருக்கும் எடுத்துக் காட்டு 1000 க.செ.மீ.யில் 40 கிராம்சோடியம் ஹைட்ராக்சைடு.

**normal spin:** *(வானூ.)* **இயல்பு சுழற்சி :** விமானம் அனைத்துக் கட்டுப்பாடுகளுக்கும் எதிர்மா றாக இயல்பான நிலையிலிருந்து சுழன்று கொண்டே தலைகீழாக இறங்கும் இறக்கம், இதனைக் ''கட்டுப்படுத்திய'' சுழற்சி என் றும் அழைப்பர்.

**norman :** *(க.க.)* **நார்மானிய கட்டிடக் கலை :** நார்மானியர் இங்கிலாந்தை வெற்றி கொண்ட பின்னர் இங்கிலாந்தில் உயர் நிலையை எட்டிய நார்மானிய பாணிக் கட்டிடக் கலை.

**north pole :** *(மின்.)* **வடதுருவம்:** காந்த ஊசியின் வடமுனை காட்டும் வடதிசைப் பகுதி.

**nose :** *(பட்.)* **அலகு :** ஆயுதங் கள், கருவிகள் போன்றவற்றின் கூர்மையான அலகுப் பகுதி கடை சல் எந்திரத்தின் திருகிழைமுனை, துளையிடு எந்திரத்தின் கதிர், துரப்பணத்தின் கூர் அலகு போன் றவை இதற்கு எடுத்துக்காட்டு.

**nose cone :** *(விண்.)* **மூக்குக் கூம்பு :** விண் வெளிக்கலம் பறக் கும்போது காற்றுத் துகள்களுடன் உராய்வதால் உண்டாகும் உயர் வெப்ப நிலையைத் தாங்கும் வகை யில் அந்தக் கலத்தின் மூக்குப் பகுதி யில் அமைக்கப்பட்டுள்ள கூம்பு வடிவக் காப்புக் கவசம்.

**nose - down :** *(வானூ.)* **கீழ் நோக்கிப் பாய்தல் :** பறக்கும் விமா னத்தின் கூம்புப் பகுதியைக் கீழ் நோக்கிப் பாயும்படி செய்தல்.

**nose heavy :** *(வானூ.)* **கூம்பு இறக்கம் :** விமானம் இயல்பாகப் பறக்கும்போது, அதன் கூம்புப் பகுதி கீழ் நோக்கி இறங்கும் போக்கு.

**nose - over :** *(வானூ.)* **கூம்பு ஏற்றம் :** விமானம் தரையிறங்கும் போது அதன் கூம்புப் பகுதி தற் செயலாக மேல் நோக்கித் திரும்பு வதைக் குறிக்கும் சொல்.

**nose-up :** *(வானூ.)* **கூம்பு உயர்வு:** பறக்கும் விமானத்தின் கூம்புப் பகுதியை உயர்த்துதல்.

**nose wheel :** *(வானூ.)* **கூம்புச் சக்கரம் :** விமானத்தின் கூம்புப் பகுதியினைத் தாங்குவதற்காக முதன்மைச் சக்கரங்களுக்கு முன்னே அமைக்கப்பட்டுள்ள, திசையறிந்து திருப்பத்தக்க சக்கரம்.

**nosing :** *(க.க.)* **படி வரிசை :** படி வரிசை விளிம்பின் உலோக முகப்பு.

**notation :** **குறிமான முறை :** குறி யீடுகள், சைகைகள். உருவங்கள். எழுத்துகள் போன்றவற்றால் செய்திகளைத் தெரிவிக்கும் முறை

**notching machine** : **வடுவெட்டுக் கருவி** : *உலோகத் தகடுகளில் வடுத்தடங்களை வெட்டவும், விளிம்புகளை மட்டப்படுத்தவும் பயன்படும் கருவி.*

**novolak** : *(வேதி.குழை.)* **நோவோலக்** : *நிரந்தரமாக உருகி இளகக் கூடியதும், கரையத் தக்கதுமான ஃபினோ லால்டிஹைட் பிசின். பினாலின் ஒரு மூலக்கூறுடன், ஃபார்மாடிஹைடின் ஒன்றுக்குக் குறைவான மூலக் கூற்றுடனும், ஓர் அமில வினையூக்கியுடனும் வினைபுரிவதன்மூலம் கிடைக்கும் விளைபொருள் இது.*

**nozzle** : *(எந்.பொறி.)* **கூம்பலகு** : *நீள் குழாயின் குழாய் முனை போன்ற கூம்பலகு.*

**nuclear energy** : *(இயற்.)* **அணு ஆற்றல்** ; *அணுவியல் வினையில் வெளிப்படும் ஆற்றல்.*

**nuclear turbo-jet** : *(வானூ.)* **அணுவியல் விசையாழி**: *விசையாழியின் வழியாக வரும் காற்றினைச் சூடாக்குவதற்காக, உள்ளெரி அறைக்குப் பதிலாக, ஓர் அணு உலையைக் கொண்டிருக்கிற விசையாழி.*

**nucleus** : *(வேதி.)* **மையக்கரு** : *அணுவின் உள்மையத்தில் செறிந்துள்ள அணுக்திரள். இதில் நியூட்ரான்களும் புரோட்டான்களும் செறிந்து சேர்ந்திருக்கும்.*

**number drills** : *(உலோ.வே.)* **எண்ணிட்ட துரப்பணம்** : *1 முதல் 80 வரையில் எண்ணிடப்பட்ட சிறிய துரப்பணங்கள். இவற்றின் விட்டம் ஓர் அங்குலத்தின் ஆயிரங்களின் பகுதியாகக் குறிக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக 1 ஆம் எண் துரப்பணத்தின் விட்டம் 0.228"; 80 ஆம் எண் துரப்பணத்தின் விட்டம் 0.0135".*

**numbering machine** : **இலக்கமிடும் எந்திரம்** : *காசோலைகள், அனுமதிச் சீட்டுகள் முதலியவற்றில் தொடர்ச்சியாக இலக்கங்களை முத்திரையிடும் எந்திரம் அல்லது சாதனம்.*

**numerals** : *(அச்சு.)* **எண்குறி** : *எண்குறித்த இலக்கத் தொகுதி. பெருவழக்காகப் பயன்படுவது 1,2,3,4,5,6,7,8,9,0 என்ற அராபிய எண் குறிகள். ரோமானிய எண்கள் :* I *(1),* V *(5).* L *(50),* C *(100).* D *(500).* M *(1000).*

**numerator** : **(1)பின்ன மேல் இலக்கம்** : *பின்னத்தில் மேல் இலக்கத்தின் பகுதிகளைக் குறிக்கும்.* **(2) எண்ணுபவர்.**

**numismatics** : **நாணயவியல்** : *நாணயம், பதக்கம் ஆகியவற்றை ஆராய்ந்து வரலாற்றைக் கணிக்கும் அறிவியல்.*

**nut** : *(எந்.)* **திருகாணி** : *சதுரமான அல்லது அறுகோண வடிவமுடையதும், உலோகத்தில் அல்லது வேறு பொருளினாலானதுமான ஒரு சிறிய துண்டு. இதன் உள்புறத்தில் மரையாணியை ஏற்பதற்கான திருகிழைகள் அமைந்திருக்கும்.*

**nut arbor or nut mandrel**: *(எந்.)* **ஆதார ஆச்சு** : *திருகாணிகளை வடிவமைப்பதற்குப் பயன்படும் சுழலும் முதன்மை ஆதார அச்சு.*

**nut machine** : *(பட்.)* **திருகாணிப் பொறி** : *ஓர் உலோகப் பட்டையிலிருந்து அல்லது உலோகத் தண்டிலிருந்து திருகாணிகளைத் தயாரிப்பதற்கு வெட்டவும், துளையிடவும், தட்டி விடவும் பயன்படும் ஓர் எந்திரம்.*

**nut shanks** : *(பட்.)* **திருகாணித் துண்டு** : *பெரிய மரக்கைப் பிடிகளுடன் பயன்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட திருகாணித்தண்டு அல்லது துண்டு.*

**nylon :** (குழை.) **நைலான் :** குழைமப் பொருள்களின் ஒரு குடும்பம். இதில் பல வகைகள் உண்டு. இரு காடி மூலங்களையுடைய கரிம அமிலங்களை டையாமின்களுடன் சேர்த்துச் செறிமானம் செய்வதன் மூலம் ஒரு வகைப் பிசின் உண்டாகிறது. இந்தப் பிசின் கெட்டியானது; அதிக வெப்பத்தையும் உராய்வையும், வேதியியல் எதிர்ப்பையும் தாங்கக் கூடியது. இதன் இந்தப் பண்புகளினால் இழைகளில் மட்டுமின்றி, எண்ணெய் வயல், கடல் போன்ற இடங்களிலும் எந்திரங்களில் இதனைப் பெருமளவில் பயன்படுத்த முடிகிறது.

# O

**oak :** *(மர.வே.)* **கருவாலி :** பல நோக்கங்களுக்குப் பயன்படும் மரம். இது கடினமானது; நீண்ட நாள் உழைக்கக்கூடியது; வலிமை மிகுந்தது; தட்பவெப்ப மாறுபாடுகளைத் தாங்கக்கூடியது. அறைகலன்கள் தயாரிக்கவும். தளமிடுவதற்கும், உருச்செப்பமிடுவதற்கும் பயன்படுகிறது.

**oak, red :** *(தாவ.)* **செங்கருவாலி:** கரடுமுரடான பரப்புடைய, கடினமான, நீண்டகாலம் உழைக்கக் கூடிய மரம். செம்பழுப்பு நிறத்தில் கவர்ச்சியான கரணைகள் உடையது. இதில் வேலைப்பாடுகள் செய்வது கடினமாக இருக்கும்.

**oak, white :** *(தாவ.)* **வெண்கருவாலி :** அமெரிக்காவில் மிகுதியாக வளரும் விலைமதிப்பு மிக்க வெட்டு மரம். இது இளம்பழுப்பு நிறத்தில், நெருக்கமான கரணைகள் உடையதாக இருக்கும்.

**oakum :** *(கம்மி.)* **பழங்கயிற்றுச் சிலும்பு :** பழங்கயிறுகளைப் பிய்த்துச் சிலும்புவாகச் செய்து கலப்பற்றாகப் பயன்படுத்துவதற்கான பழங்கயிற்றுச் சிதைவு.

**obelisk :** *(க.க.)* **சதுரத் தூபி :** நான்முகக் கூர்நுனிக் கம்ப வடிவமைந்த மரம்.

**oblique projection :** **சாய்வுத் தளப் படிவாக்கம் :** ஒரு பொருளின் முகம் பார்ப்பவருக்கு இணையாக வரும் வகையில் அமைக்கும் முறை. இதில் இந்த முன் முகத்திற்குச் செங்குத்தாகவுள்ள முகங்கள், முன் முகத்தின் அதே கோணத்திற்கும் அளவு கோலுக்கும் வரையப்படுகிறது.

**oblong :** *(கணி.)* **நீள் சதுரம் :** உயரத்தைவிடக் குறுக்கு அகலம மிகுதியாகவுடைய உருவம்.

**obscuration :** *(வண்.)* **மங்கலாக்குதல் :** ஒரு வண்ணத்தின் அல்லது இனாமலின் மலைப்புத் திறன். ஒளி ஊடுருவாத வண்ணப் பொருளின் மறைப்பு ஆற்றல்.

**obsidian :** *(கனிம.)* **எரிமலைப் பாறை :** எரிமலைக் கரும் பளிக்குப் பாறை. இது மிகவும் கடினமான பளபளப்பானது.

**obstruction light :** *(வானூ.)* **:தடை விளக்கு:** விமானங்கள் பறப்பதற்கு ஆபத்தான உயரத்தைக் குறித்துக் காட்டுவதற்கென வடிவமைக்கப்பட்ட சிவப்பு விளக்கு.

**obtuse :** *(கணி.)* **விரிகோணம் :** கூர் விளிம்பற்ற கோணம். இரு செங்கோணத்திற்குக் குறைந்து ஒரு செங்கோணத்திற்குப் பெரிதான கோணம்.

**obverse :** **முகப்புப் பக்கம் :** நாணயம், பதக்கம் ஆகியவற்றில் முகப்புப் பக்கம். பின்புறத்திற்கு நேர் எதிரான முன்புறம்.

**occasional furniture :** **துணை அறைகலன் :** பல்வேறு வடிவுகளிலுள்ள பல்வேறு பயன்பாடுகளுக்கான சிறிய அறைகலன். இக்காலத்தில் வரவேற்பு அறை. பகல் நேர அறை போன்றவற்றிலுள்ள அறைகலன்கள்.

**occultation :** *(விண்.)* **கோள மறைவு :** ஒரு வான்கோளம், இன்னொரு பெரிய கோளத்திற்குப் பின்னால் மறைதல்,

**ocher :** *(வண்.)* **மஞ்சட்காவி :** சதுப்பு நிலங்களில் இரும்பும் சுண்ணாம்பும் கலந்த நீரில் உண்டாகும் மஞ்சட்காவி மண். இதனை நேர்த்தியான தூளாகச் செய்து ஆளிவிதை எண்ணெயுடன் கலந்து வண்ணச் சாயம் தயாரிக்கப்படுகிறது.


**octagon : எண்கோணம் :** எட்டுப் பக்கங்களும் எட்டுக் கோணங்களும் உடைய ஒரு சமதள உருவம்.

**octane rating : ஆக்டேன் வெடிப்பு வீதம் :** கேசோலின் வெடியெதிர்ப்புத் திறனளவு ஐசோ-ஆக்டேன் மிகக் குறைந்த அளவு வெடிப்பு உண்டாக்கக் கூடியது; அதன் வீதம் 100. இயல்பான ஹெப்டேன் மிக அதிக அளவு வெடிப்பு உண்டாக்கும்; அதன் வீதம் 0. இவை இரண்டையும் சரிபாதி கலந்த கலவை 50 வெடிப்பு வீதம் உண்டாக்கும்.

**octane selector :** *(தானி.)* **நீர்க்கரிமத் தொடர்மத் தேர்வு முறை :** பல்வேறு தரமுடைய கோசோலினிலிருந்து மிக உயர்ந்த அளவு திறம்பாட்டினைப் பெறுவதற்காக நேரத்தைச் சரியமைவு செய்வதற்கான ஒருமுறை.

**octant :** *(வானூ.)* **எண்ம வட்டமானி :** வானியலிலும் கடற்பயணத்திலும் பயன்படுத்தப்படும் அரைக்கால் வளாகம் 90° வரையில் கோண அளவுகளில் இருக்கும். இதன் செயற்கை வானவிளிம்பு குமிழில் வடிவில் இருக்கும்.

**actopod :** *(உயி.)* **எண்காலிகள் :** வாய்முகப்பைச் சுற்றிலும்எட்டு கிளையுறுப்புகளையுடைய அஞ்சத்தக்க கடல் விலங்கினம்.



எண்காலிகள்

**odd leg caliper:** *(எந்.)* **இணையிலாக்கால் விட்டமானி:** மிதமான அளவில் விளைந்தகால்களையுடைய விட்டமானி. இதில் இரு கால்களும் ஒரே திசையில் விளைந்திருக்கும். இது தலையடிப் பகுதித் தொலைவுகளை அளவிடுவதற்குப் பயன்படுகிறது.

**odeum:** *(க.க.)* **இசையரங்கு:** பண்டையக் கிரேக்க ரோமானியர்களிடையே இசை நிகழ்ச்சிகளுக்கான அரங்கு. இக்காலத்தில் ஒரு மண்டபம்; நீண்ட அறைக்கூடம்.

**odometer: தொலைவு மானி:** பயணஞ் செய்த தொலைவினை அளவிடுவதற்கான ஒரு சாதனம். இது சக்கரத்தின் குடத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.

**odontograph:** *(எந்.)* **பல்லிணை ஆர அட்டவணை:** பல்லிணைப் பற்களின் உருவரைகளை அமைப்பதற்கான ஆரங்களின் அட்டவணை.

**O.D. pipe:** *(பொறி.)* **புறவிட்டக் குழாய்:** கொதிகலன் குழாய்களின் பெயரளவிலான வடிவளவுகளைக் குறிக்கும். 12" விட்டத்திற்கு அதிகமான மென்குழாய்களையும் குறிக்கிறது.

**Oersted, Hans Christian** *(1777-1851)* *(மின்.)* **ஒயர்ஸ்டெட், ஹான் கிறிஸ்டியன்:** டென்மார்க்கைச் சேர்ந்த விஞ்ஞானி. கோபன்ஹேகன் பல்கலைக்கழகத்தில் படித்து அங்கேயே ஆசிரியரானார். மின் விசைக்கும் காந்த விசைக்குமிடையிலான தொடர்பைக் கண்டுபிடித்தவர். ஆய்வுக்கூடப் பரிசோதனைகளின்போது, மின்னோட்டத்தைக் கொண்டு செல்லும் ஒரு கடத்தியைச் சுற்றி ஒரு காந்தப் புலம் உண்டாகிறது என்பதைக் கண்டறிந்தார்.

**oersted:** *(மின்.)* **ஒயர்ட்ஸ்டெட்;** காந்தப்புலத்தின் செறிவினைக் குறிக்கும் திட்ட அலகு.


**office automation**: *(தானி.)* **அலுவலகத் தானியக்கம்**: அலுவலகத்தின் தகவல்களைக் கையாள்தல், கணக்கிடுதல், விலைப்பட்டி தயாரித்தல் போன்ற பணிகளைத் தானாகவே செய்யக்கூடிய தானியங்கி எந்திரங்கள்.

**offset**: *(க.க.)* (1) **உட்சாய்வு**; சுவரில் திட்பக் குறைவு உண்டு பண்ணும் பக்க உட்சாய்வு.

(2) **மாற்றுக்கறைப் படிவு**: அழுத்தப்பட்ட தொய்வக உருளைமீது மை தடவி எதிர்ப்படியாக எடுக்கப்படும் கல்லச்சு முறை.

**offset paper**: **மாற்று அச்சுத்தாள்**: மாற்றுக் கல்லச்சு முறைக்குப் பொருத்தமான பண்பியல்புகளுள்ள தாள்.

**offset printing**: **மாற்று அச்சு முறை**: அச்சுப்படிவத்திலிருந்து




மாற்று அச்சுமுறை

அச்சுமை நேரடியாகத் தாளுக்குச் செல்லாமல், ஒரு ரப்பர் பரப்பில் முதலில் பதிந்து, பின்னர் எதிர்ப் படியாகத் தாளில் பதியும் அச்சு முறை.

**ogee**: *(க.க.)* **இரட்டை வளைவு**: பாம்பு வடிவான அல்லது 'S' வடிவான இரட்டை வளைவு.

**ogive**: **கூர்முனை வளைவு**: வளைவுக் கூடத்தின் கூர்முனை வளைவு.

**ohm**: *(மின்.)* **ஓம்**: மின்தடை அலகு.

**Ohm, George Simon (1787-1854)**: *(மின்.)* **ஓம் ஜார்ஜ் சைமன்**: ஜெர்மன் விஞ்ஞானி, மின்னழுத்தம் (ஓல்ட்டேஜ்) மின்னோட்ட அலகு (ஆம்பியரேஜ்), மின் தடை ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினைக் கண்டுபிடித்தவர். இந்தத் தொடர்பு இப்போது ஓம் விதி என அழைக்கப்படுகிறது. இவர் முனீக் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

**ohmic heating**: *(உலோ.)* **மின் தடை வெப்பமூட்டல்**: உலோகத்தின் தடையை மீறி உலோகத்தின் வழியே மின்னோட்டம் செலுத்தி உலோகத்தைச் சூடாக்குதல்.

**ohm meter**: *(மின்.)* **ஓம் மானி**: மின்தடையின் அளவினை ஓம்களில் நேரடியாகக் குறித்துக் காட்டும் ஒருவகை மின்னோட்டமானி.

**ohm resistance**: *(மின்.)* **ஓம் தடை**: ஒரு மின்சுற்று வழியில் (நேர் மின்னோட்டம்) ஓர் ஆம்பியர் மின்னொட்டத்தை ஓர் ஓல்ட் மின்னழுத்தம் உண்டாக்கும்போது அந்த மின்சுற்று ஓர் ஓம் தடையை உடையதாகக் கருதப்படும்.

**ohm's law**: *(மின்.)* **ஓம் விதி**: "ஒரு மின்னோட்டத்தில் பாயும் மின்னோட்டம், அதிலுள்ள தடையின் அல்லது எதிர்ப்பின் விகித அளவில் இருக்கும்" என்னும் விதி. இந்த விதி பெரும்பாலும் கணிதத்தில் பயன்படுத்தப்படுகிறது.

**oil**: *(வேதி.)* **எண்ணெய்**: விலங்குகள், தாவரங்கள், கனிமங்களிலிருந்து கிடைக்கும் எண்ணெய்ப் பொருள். இது மசகுப் பொருளாகப் பயன்படுத்தப்படுவதுடன் தொழில்களிலும் மிகுதியாகப் பயன்படுகிறது.

**oil capacitor**. *(மின்.)* **எண்ணெய் மின் உறைகலம்**: எண்ணெய்ச்

செறிவூட்டிய காகிதத்தை மின் அழுத்தத்தைத் தாங்கக்கூடிய பொருளாகப் பயன்படுத்தும் மின்னியல் உறைகலம்.

**oil control ring:** *(தானி.)* **எண்ணெய்க் கட்டுப்பாடு வளையம்:** இது ஒரு வகை உந்து தண்டு வளையம். இந்த வளையத்தி லுள்ள வரிப்பள்ளத்தின் வழியாகவும், உந்து தண்டின் சுவரிலுள்ள சிறிய துவாரங்கள் வழியாகச் செல்லும் எண்ணெய் நீள் உருளைச் சுவரிலிருந்து பிறாண்டி எடுத்து திருகு கோட்டக் கலத்தினுள் வடிக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

**oil cup:** *(எந்.)* **எண்ணெய்க் குவளை:** இது உட்புழையான கண்ணாடி மேற்பகுதியையும், தகடுகளாலான அடிப்பகுதியையும் கொண்டது. இதனை திருகிழைகள் மூலம் ஒரு தாங்கியுடன் இணைந்து, தேவையான போது எண்ணெய் இடைவிடாமலும் ஒரே சீராகவும் சொட்டுவதற்கு அனுமதிக்குமாறு செய்யப்படுகிறது.

**oiler:** **எண்ணெய்க்கலம்:** சிறிய வடிவளவிலுள்ள எண்ணெய்க் கலம்.

**oil filter:** *(தானி.)* **எண்ணெய் வடிகட்டி:** வடிகட்டும் பொருளுடைய நீள் உருளை. இது, இயக்கு பொறி ஓடிக்கொண்டிருக்கும் போது, மசகு எண்ணெய் இடைவிடாமல் வடிகட்டி வழியாகச் செல்லுமாறு செய்து துகள்களையும், அயல் பொருள்களையும் அகற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கும். இந்த வடிகட்டும் அமைவு 12872கி.மீ. தொலைவுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

**oil gauge:** *(தானி.)* **எண்ணெய் அளவுமானி:** இந்த அளவுமானிகளில் இருவகை உண்டு. ஒன்று கொள்கலத்திலுள்ள எண்ணெயின் அளவினைக் குறிக்கப் பயன்படுகிறது. மற்றொன்று; பாயும் எண்ணெய் அழுத்த அளவுமானி. பொதுவாக கருவிப் பலகைமீது பொருத்தப்பட்டிருக்கும். அளவு குறிக்கப்பட்ட ஒரு வட்டிகையில் இது இந்த அளவுகளைக் காட்டும்.

**oil grinder:** **எண்ணெய்ச் சாணை:** கூர்மையான கருவிகளைச் சாணை தீட்டுவதற்குப் பயன்படும், விசையினால் இயங்கும், ஒரு வகைச் சாணைக்கருவி.

**oil groove:** *(எந்.)* **எண்ணெய்த் துளை:** ஓர் எந்திரத்தின் பித்தளை உள்முகத்திலும், அதன் சறுக்குப் பரப்பிலும் வெட்டப்பட்டுள்ள வரிப்பள்ளம். இது மசகிடுவதற்காக எண்ணெயை வழங்குவதற்குப் பயன்படுகிறது.

**oil hardening:** *(எந்.)* **எண்ணெய் இறுக்கம்:** எஃகினை நீருக்குப் பதிலாக எண்ணெயில் ஊறவைத்துக் கெட்டியாக்குதல்.

**oil hole:** *(எந்.)* **எண்ணெய்த் துளை:** மசக்கெண்ணெய் ஊற்றுவதற்குரிய எந்திரத்துளை.

**oil-hole drills:** *(உலோ. வே.)* **எண்ணெய்த் துளைத் துரப்பணம்:** எந்திரத் தண்டிலிருந்து வெட்டு முனை வரைச் செல்லும் ஒன்று அல்லது இரண்டு துளைகளையுடைய துரப்பணம். ஆழமான துளைகளைத் துரப்பணம் செய்வதற்கு இது முக்கியமாகப் பயன்படுகிறது.

**oilless-type bearings:** *(தானி.)* **எண்ணெயிலாத் தாங்கிகள்:** *(1)* நீண்ட இடைவெளிகளுக்குப் பின்னரே எண்ணெயிடுதல் தேவைப்படும் தாங்கிகள். இவை எண்ணெயை உறிஞ்சிக் கொள்ளும் நுண்

துளையுள்ள உலோகத்தினால் செய்யப்படுகின்றன.

(2) காரீயகச் செருகிகள் கொண்ட வெண்கலத் தாங்கிகள்.

**oil line:** *(தானி.)* **எண்ணெய் குழாய் அமைவு:** மசகு எண்ணெய்க்கான சுற்று வழியினையுடைய குழாயும் அதனுடன் இணைந்த சாதனங்களும்.

**oil pump:** *(தானி.)* **எண்ணெய் விசைக் குழாய்:** எண்ணெய் விசைக் குழாய்களில் பல்லிணை வகை, இதழ் வகை, குண்டல வகை எனப் பல வகை உண்டு. இவை பெரும்பாலும் எஞ்சினின் இணைபிரியா அங்கமாக அமைந்திருக்கும். சேமிப்புக் கலத்திலிருந்து எண்ணெயை மேல்மட்டங்களுக்கு இறைப்பதற்கு இவை பயன்படுகின்றன.

**oil stone:** *(மர.வே.)* **சாணைக் கல்:** கருவிகள் முதலியவற்றை கூர்மையாக்குவதற்கான எண்ணெய் ஊட்டப்பட்ட தீட்டுக்கல்.

**oil-tank vent:** *(வானூ.)* **எண்ணெய்க் கலப்புழை:** எஞ்சினிலிருந்து எண்ணெய்க் கலத்திற்கு எண்ணெய் ஆவிகளைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பெரிய குழாய்.

**oil tannage:** **எண்ணெய் தோல் பதனிடல்:** தோல் பதனிடுவதற்கான மிகப் பழைய முறை. இக்காலத்தில் சில வகை எண்ணெய்களுடனும், மென் கொழுப்புகளுடனும், சேர்த்துப் பிசைந்து தோல் பதனிடப்படுகிறது. வரை மான் தோல், எருமைத்தோல், மான் ஆகியவற்றை பதனிட இம்முறை பயன்படுகிறது.

**oil varnish:** *(மர.வே.)* **எண்ணெய் வண்ண மெருகு:** ஆளிவிதை எண்ணெய், மரப்பூச்செண்ணெய் போன்று உலரும் எண்ணெய்களைக் கொண்ட வண்ண மெருகு ஆக்சிகரணம் மூலமாக மெதுவாகக் கெட்டியாதல் நடைபெறுகிறது.

**oleaginous:** *(வேதி.)* **எண்ணெய்ப் பசை:** எண்ணெயின் இயல்புடையது.

**olefine:** *(வேதி.)* **ஒலி∴பைன்:** எத்திலின் குடும்பத்தைச் சேர்ந்த வேதியியற்பொருள்.

**oleo gear:** *(வானூ.)* **எண்ணெய்ப் பல்லிணை:** எண்ணெய் பூசக்கூடிய ஒரு சாதனம். இது ஒரு துவாரத்தின் வழியாகச் செல்லும் எண்ணெய் பாய்ந்து பல்லிணைக்கு மசகிடுகிறது.

**olive:** **தேவதாரு:** மெதுவாக வளரும் ஒருவகை மரம். நெருக்கமான குருணைமணிகள் உடையது. கனமானது. இளமஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் இருக்கும். அதில் அடர்பழுப்பு நிறப்புள்ளிகளும் பட்டைகளும் அமைநதிருக்கும். நுட்பவேலைப்பாட்டுப் பொருள்கள் செய்யப் பயன்படுகிறது.

**omega:** **ஒமேகா:** கிரேக்க நெடுங்கணக்கின் கடைசி எழுத்து.

**omnigraph:** **தானியங்கிக் கத்தி:** தானியங்கி அசிட்டிலின் கத்தி. இதில் ஓர் எந்திரமுனை அமைந்திருக்கும். அது கத்தியின் இயக்கத்திறகேற்ப உருவங்களைச் செதுக்கும். இதன் உதவியுடன் ஒரே சமயத்தில் பலபடித் தகடுகளை வெட்டி எடுக்கலாம்.

**oneside coated:** **ஒரு பக்கப் படலத் தாள்:** ஒரு பக்கம் மட்டுமே படலப் பூச்சுடைய கற்பாள அச்சுத் தாள்.

**onion skin:** **சருகுத் தாள்:** தட்டச்சில் படியெடுப்பதற்குப் பயன்படும் மிக மெல்லிய தாள்.

**onyx**: *(வேதி.)* **பல்வண்ண மணிக் கல்** : பற்பல வண்ண அடுக்குகள் கொண்ட மணிக்கல் போன்ற சலவைக்கல்.

**oolitic limestone**: *(க.க.)* **மணிக் கல் சுண்ணம்** : மிக நுட்பமானக் கோளவடிவத் துகள்களினாலான பரல் செறிவுடைய சுண்ணக்கல்.

**ooze** : **ஆற்று வண்டல்** : நீரான மான அடிச்சேறு.

**ஈரக்கசிவு** : துளைகள் வழியாக ஈரம் கசிதல்.

**ooze leather** : **தோல் மெருகு** : தோல் பதனிடுவதற்கான ஒரு முறை. தோலுக்கு வெல்வெட்டு போன்ற மென்மையான தன்மை யளிப்பதற்கு இந்த முறை பயன் படுகிறது.

**opacimeter** : **ஒளிபுகாத் திறன் மானி** : காகிதத்தின் ஒளியை ஊடு ருவிச் செல்லவிடாத திறனை அள விடுவதற்கான ஒரு கருவி.

**opacity** : *(அச்சு.)* **ஒளிபுகாத் திறன்** : காகிதத்தின் ஒளியை ஊடு ருவிச் செல்லவிடாத தன்மை.

**opaque** : **ஒளிபுகா** : ஒளியை ஊடுருவிச் செல்ல விடாத இயல்பு.

**open circuit** : *(மின்.)* **திறப்பு மின் சுற்று வழி** ; மின் சுற்று முழுமை பெறாமலும், மின்னோட் டம் இல்லாமலும் இருக்கும் ஒரு மின்சுற்று வழி.

**open circuit cell** : *(மின்.)* **திறப்பு மின்சுற்று வழிக் கலம்** : இடையிடைப் பணிகளுக்காக திறப்பு சுற்று வழியில் வைக்கப் கப்பட்டுள்ள மின் கலம்.

**open hearth** : **திறந்த உலை** : ஆழமற்ற மூட்டு அனல் உலை. இது எஃகு செய்வதற்கான திறந்த உலை முறையில் பயன்படுகிறது.

**open hearth proeass** : **திறந்த உலை முறை** : ஆழமற்ற மூட்டு அனல் உலையில் எஃகு செய்யும் முறை.

**open mould** *(வார்.)* **திறப்பு வார்ப்படம்** : நீண்ட சலாகைகளும் தகடுகளும் தயாரிக்கப் பயன்படும் வார்ப்படம். சமதள மணற்படுகை அமைக்கப்பட்டு அழுத்தப்படு கிறது. உருவமைப்பினை எடுத்து விட்டு, அதில் உருகிய உலோகத் தை ஊற்றலாம்.

**open string stairs** : *(க.க.)* **திறப்பு மென் படிக்கட்டுகள்** : ஒரு பக்கம் சுவரும் மறுபக்கம் கைப் பிடியும் உடைய மாடிப்படி. மின் கட்டைகளும் செங்குத்துப் பகுதி யும் பக்கவாட்டிலிருந்து புலனாகு மாறு கட்டப்படுகிறது.

**open wiring** : *(மின்)* **திறப்பு வகை மின் கம்பியமைப்பு** : மின் கடத்திகள் வெளி தெரியுமாறு கம்பிகை அமைத்தல். இந்த முறையில் மின்கடத்திகள் பீங் கான் குமிழ்களில் அல்லது முளை களில் பொருத்தப்பட்டிருக்கும்.

**operating speed** : *(வானூ.)* **இயக்க வேகம்** : விமானத்தில் எஞ் சின் வேகத்தின் 87.5% வேகத் திற்கு இணையாகப் பறக்கும் வேகம்.

**operator** *(எந்.)* **இயக்குபவர்**: அல்லது அவற்றின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துபவர்.

**opposite** : **மறுதலை** : எதிர் முகமான; எதிர் நிலையான; முற் றிலும் நேர் எதிரான.

**optical altimeter**: *(வானூ.)* **விழாக்காட்சி உயரமானி**: பொருத்த மான பார்வை முறை மூலம் கட் டுப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்ட ஒருவகை உயரமானி.

**optical center**: *(அச்சு.)* **விழிக் காட்சி மையம்**: அச்சிட்ட பக்கத்

தில் அல்லது வரைபடத்தில் நமது கண் நாடும் ஒரு மையப்பகுதி. இது உள்ளபடியான மையத்திற்கு மேலே, மொத்த உயரத்தில் எட்டில் ஒரு பகுதியாக இருக்கும்.

**optical distortion**; *(குழை.)* **காட்சித் திரிபு**: ஒளி ஊடுருவும் பிளாஸ்டிக் வழியாகப் பார்க்கும் போது தோன்றும் தோற்றத் திரிபு பிளாஸ்டிக்கின் ஒரு சீர்மையற்ற காட்சித் தன்மையினால் உண்டாகிறது.

**optical pyrometer**: **ஒளியியல் மின்முறை வெப்பமானி**: கடும் வெப்பத்தினால் உண்டாகும் நிறத்தையும், மின்னோட்டத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட அளவுக்குச் சூடாக்கப்பட்ட கம்பியின் நிறத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து உயர்ந்த அளவு வெப்பத்தை அளவிட உதவும் சாதனம்.

**orbit**: *(விண்.)* **கோளப்பாதை**: ஒரு வான்கோளம் இன்னொரு கோளத்தைச் சுற்றிவரும் பாதை.

**order**: (1) *(க.க.)* **மரபொழுங்கு**: ஒரு கட்டிடக்கலைப் பாணியின் தனிச்சிறப்பான மரபொழுங்கு.

(2) *(தாவ.)* **இனக்குழுமம்**: தாவரவியலில் ஒரு தாவர இனத்தைச் சேர்ந்த குழுமம்.

(3) *(கணி.)* **படிமுறை**: கணிதவியலில், அடுக்குத் தொடரின் படிமுறை; எண்ணின் மதிப்பளவு.

**orders of architecture**: *(க.க.)* **கட்டிடக் கலைப்பாணிகள்**: கட்டிடக் கலையில் பழைமையான ஐந்து பாணிகள். அவை: டாஸ்கன் பாணி; டோரிக் பாணி; அயோனிக் பாணி; கோரிந்தியன் பாணி; கலவைப்பாணி.

**ordinate**: *(கணி.)* **நாண்வரை**: வரைவிளக்கப் படத்தில் நடுச்சுட்டுக்கு இணையான வரை.

**ore**: *(கனிம.)* **தாது**: உலோகம் கலந்துள்ள பாறை. இதிலிருந்து உலோகங்கள் எடுக்கப்படுகின்றன.

**organic**: *(வேதி.)* **கரிமப் பொருள்**: விலங்குகளிலிருந்தோ, தாவரங்களிலிருந்தோ இயற்கையாக கரிமச் சேர்க்கையுடைய பொருள்.

**organism**: *(உயி.)* **உயிரி**: விலங்கு, தாவர இன உயிர்களில் ஒன்று. மனிதன் சிக்கலான உறுப்பமைதியுடைய ஓர் உயிரி. அமீபா ஒரே உயிரணுவுடைய ஓர் உயிரி.

**oriel** : *(க.க.)* **தொங்கற் பலகணி**: சுவர் ஆதாரத் தண்டயக் கைகள் மீதமர்ந்த பல்கோணத் தொங்கற் பலகணி.

**orient** : **கீழ்த்திசை** : கிழ்த்திசைக் குரிய.

**oriental walnut**: **கீழ்த்திசை வாதுமை**: இது ஒருவகை மரம். இதனைக் 'கீழ்த்திசை மரம்' என்றும் கூறுவர். பெரிய வடிவளவில் வளரும் ஆஸ்திரேலிய மரவகை. அலங்கார அறைகலன்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**oriantation** : **திசைத் தொடர்பு நிலை**: கிழக்குத் திசை தொடர்பான திசைத் தொடர்பமைவு. ஓர் விளையாட்டரங்கம், விளையாடும் வீரர்களின் கண்களில் சூரிய ஒளி படாதவாறு அமைக்கப்படும்.

**orifice** : *(பற்.)* **புழைவாய்** : வாயுக்கள் பாய்வதற்கான துவாரம். இந்தப்புழைவாய் ஓரதரினால் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

**original** : **மூலப்படிவம்** : பிறிதொன்றை மூலமாகக் கொள்ளாத மூல முதற்படி. வேறொன்றைப் பார்த்துப் பின்பற்றத்தக்க, தற்பண்பு வாய்ந்த படைப்பு.

**ormolu : பளபளப்பு வெண்கலம் :** தட்டு முட்டுச் சாமான்களை அணி செய்யப் பயன்படும் பளபளப்பான வெண்கலம்.

**ornament : அணி வேலைப்பாடு :** அணி ஒப்பனை செய்யப் பயன் படும் அழகு வேலைப்பாடு.

**ornithopter : (வானூ.) ஆர்னித் தோப்டர்:** ஒருவகை விமானம். இது காற்றைவிடக் கனமானது. பட பட என்று அடிக்கும் சிறகுகள் உடையது.

**orometer : ஒரோ மானி :** கடல் மட்டத்திற்குமேல் உயரங்களைப் பதிவு செய்யக்கூடிய அனிராய்டு பாரமானி.

**orthographic : புடைப் போவியக் கலை :** நிலப்படங்களில் உயர்ச்சி யூட்டும் தொலைத் தோற்றமுறை.

**orthographic projection : தொலைத் தோற்ற முறை :** நிலப் படங்களில் உயர்ச்சியூட்டும் தொ லைத் தோற்றமுறை. இதில் முகப் புத் தோற்றம், மேல்முகத் தோற் றம், வலப்பக்க தோற்றம் முதலிய வற்றைக் காட்டலாம்.

**orthoptera ; (உயி.) அடுக்குச் சிறகிகள் :** நேரான குறுகிய முன் சிறகுகள் கொண்ட வண்டு இனம். இவற்றின் முதல் இணைச் சிறகு கள் கனமாகவும், இரண்டாம் அடுக்குச் சிறகுகள் சவ்வு போன் றும் அமைந்திருக்கும்.

**ortho style: (க.க.) நேர் வரிசைத் தூண் :** நேர்கோட்டில் தூண்களை அமைக்கும் முறை.

**oscillation: (க.க.) ஊசலாட்டம் :** ஓர் ஊசலைப்போல் முன்னும் பின் னுமாக ஊசலாடுதல்; இருமுனை களுக்கிடையே இங்குமங்குமாக அசைதல்.

**oscillator : அலைவி :** மாறு மின் னோட்டம் உண்டாக்குவதற்குப் பயன்படும் உயர் அலைவெண் உள்ள ஒரு மின் சுற்றுவழி.

**oscillograph : (மின்) அலைவுப் பதிப்பி :** தங்கப் பேனாக்களின் முள் நுனிகளிலும், அரிமானத்தை எதிர்க்கும் உலோகக் கலவைகள் உற்பத்தியிலும் பயன்படுத்தப் படும் ஒரு கருவி.

**oscillograph, oscilloscope : (இயற்.) அலை அளவுமானி:** அலை களை ஒளிப்படச் சுருளில் பதிவு செய்யக் கூடிய ஒரு கருவி. ஓர் எதிர் மின் முனைக் கதிர்க் குழலை இதற்குப் பயன்படுத்தலாம்.

**osmium : (உலோ.) ஆஸ்மியம் :** வெண்மக் குழுவினைச் சேர்ந்த, எடையில் எல்லாப் பொருட்களை யும் விஞ்சிய அரிய உலோக வகை. இது அரிமானத்தை எதிர்க்கக் கூடி யது.

**osmosis : (இயற்.) ஊடு கலப்பு :** துளைகள் உள்ள இடைத்தடுப்புக் கள் வழியாகத் திரவங்கள் தம்முள் கலந்திடும் தன்மை.

**osophone : (மின்.) செவிடர் தொலைபேசி :** செவிப்புலன் குறைந்தவர்கள் கேட்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட தொலைபேசி. இதில், ஒலி அதிர்வு கள் நேரடியாகத் தலை எலும்பு களை அடைகின்றன.

**ottoman : சாய்மான இருக்கை :** சாய்மானம் அல்லது கைகள் இல் லாத மெத்தையிட்டுத் தைத்த மெத்தை. இது முதலில் துருக்கியில் பயன்படுத்தப்பட்டது என்பர்.

**outboard motor : புறப்பொறி :** கப்பலுக்கு அல்லது படகுக்கு வெளிப்புறத்தில் அமைக்கப் பெற் றுள்ள ஒரு பெட்ரோல் எஞ்சின். இதனை சிறிய படகுகளின் பின்

புறத்தில் வேண்டும் போது பொருத்தி, வேண்டாத போது கழற்றி எடுத்துக் கொள்ளலாம். மிக வேகமாக ஓடும் பந்தயப்படகு களில் இது பயன்படுத்தப்படு கிறது.

**outlet :** *(மின்.)* **மின் வடிகால் :** மின்கம்பி அமைப்பில் எந்த ஒரு புள்ளியிலிருந்தும் நுகர்வுக்கு மின் விசையை எடுக்கலாம். அவ்வாறு மின் விசை எடுக்கப்படும் புள்ளி யை மின் வடிகால் என்பர்.

**outlet box :** *(மின்.)* **மின் வடிகால் பெட்டி :** மின் கம்பிக் காப்புக் குழாய் அமைப்பில் செருகப்பட் டுள்ள ஓர் இரும்புப் பெட்டி. இதிலிருந்து விளக்கு போன்ற ஒரு சாதனத்திற்கு மின் விசையை எடுக்கலாம்.

**outlined halftone :** *(அச்சு.)* **திண்ணிழல் உருப்படிவம் :** இது ஒரு நுண் பதிவுப் படம். இதிலிருந்து ஓர் உருவத்தின் எந்தப் பகுதியை யும் சுற்றியுள்ள திரையை வெட்டி எடுக்கலாம்,

**outlining :** **உருவரை :** (1) முக் கியக் கோடுகளை மட்டும் காட்டி வரைந்த திருந்தா உருவம்; (2) முக்கியக் கூறுகளை மட்டும் விவ ரித்துக் கூறுதல்; (3) உருமாதிரி வரைதல்.

**out of gear :** *(எந்.)* **செயற்படா நிலை :** வழக்கமாகப் பிணைந் திருக்கும் பல்லிணைச் சக்கரங் களின் பற்கள் பிணையாமலிருக் கும்போது அல்லது ஓர் எந்திரத் தின் இயக்கியின் தொடர்பு நீக்கப் படும்போது, அவை செயற்படா நிலையில் இருப்பதாகக் கூறப்படு கிறது.

**out of phase :** *(மின்.)* **இயங்காப் படி நிலை:** மாற்று மின்னோட்டத் தில் ஒரே சமயததில் பெரும், குறும அளவுக்கு மின்னோட்டம் பாயாம லிருக்கும் நிலை.

**out-put :** *(மின் எந்.)* **எடுப்பு அளவு :** மின்னாக்க ஆதாரத்தி லிருந்து ஒரு புறச்சாதனத்திற்கு வழங்குவதற்கு எடுக்கப்படும் மின் விசையின் அளவு

**output device :** *(தானி.)* **வெளிப் பாட்டுச் சாதனம் :** ஒரு கணிப் பொறியியல் சிக்கல்களுக்கான தீர்வுகளை இறுதியாகப் பதிவு செய்து கொடுக்கும் கருவி. இது மிக விரைவாக வாசித்தறியும் சாதனமாகவோ அட்டைத் துளை யிடு கருவியாகவோ, தட்டச்சுப் பொறியாகவோ ஒலிப்பதிவுக் கரு வியாகவோ இருக்கலாம்.

**output meter :** *(மின்.)* **மின் வெளிப்பாட்டு மானி :** ஒரு மின் சுற்று வழியின் மின் வெளிப் பாட்டுச் சாதனத்துடன் இணைக் கப்பட்டுள்ள அளவு கருவி. இது வாட், வோல்ட் அளவுகளின் மின்னழுத்தத்தைக் காட்டும்

**output stage :** *(மின்.)* **வெளிப் பாட்டு நிலை :** ஒரு மின்னணுவி யல் சுற்றுவழியில் இறுதி நிலை. பொதுவாக இது ஒரு விசைப் பெருக்கியாக இருக்கும். இது வெளிப்பாட்டுச் சாதனத்தை இயக்குகிறது. எடுத்துக்காட்டாக, ஓர் ஒலிபெருக்கி அமைப்பில் இறுதி விசைப் பெருக்க நிலையில், ஒலி பெருக்கி இயக்கப்படுகிறது.

**output transformer :** *(மின்.)* **வெளிப்பாட்டு மின்மாற்றி :** இது ஒரு மின்மறிப்பு பிணைப்பு மின் மாற்றி. இது இறுதிநிலை வெளிப் பாட்டு மின்மறிப்பினை ஒலி பெருக்கி போன்ற இயல் மாற்றி மின் மறிப்புக்கு இணையாகும்படி செய்கிறது.

**outside caliper :** *(பட்.)* **புற விட்ட மானி:** புற அள வுகளை அல்லது வடி வளவுகளை அளவிடு வதற்குப் பயன்படுத் தப்படும்விட்டமானி.



விட்டமானி

**outside loop :** (வானூ.) **புறக் கரண வளைவு :** விமானம் இயல்பாகப் பறப்பதிலிருந்து கழுகுப் பாய்ச்சல், தலைகீழாகப் பறத்தல், உயரே ஏறுதல், மீண்டும் இயல்பான நிலைக்கு வருதல் போன்று கரண வளைவுகள் செய்தல். இவ்வாறு செய்யும்போது விமானி பறக்கும் பாதையினின்றும் புறத்தே இருப்பார்.

**oval :** (கணி.) **நீள் உருளை வடிவம் :** முட்டை வடிவ உருவம் நீள் உருளை வடிவம். இதன் வளைவுகளின் முனைகள் சமமின்றி இருக்கும்.

**over-all length :** (வானூ.) **முழு நீளம் :** விமானத்தில் செலுத்தி, வால் பகுதி உள்ளடங்கலாக முன்புறத்திலிருந்து பின்புறக் கடைசி வரையிலான முழு நீளம்.

**over hanging pulley :** **தொங்கு கப்பி :** தொங்கலாக இருக்கிற ஒரு சுழல் தண்டில் உருண்டு செல்லும் ஒரு கப்பி. இதில் ஒரு பக்கத்தில் மட்டுமே ஓர் ஆதாரத் தாங்கி இருக்கும்.

**overhaul :** (எந்.) **எந்திரப் பகுப்பாய்வு :** ஓர் எந்திரத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து ஆராய்ந்து செப்பனிட்டு மீண்டும் ஒருங்கிணைத்தல்.

**overhead cost :** **அலுவலகச் செலவுகள் :** வாடகை, வட்டி முதவீடு, பராமரிப்பு, தேய்மானம் போன்ற செயலாட்சிக்கான செலவினங்களின் தொகை. இது தொழிலாளர்களுக்கும் மூலப் பொருட்களுக்கும் ஆகும் செலவைவிடக் கூடுதலான செலவாகும்.

**overhead shafting :** (பட்.) **தொங்கு சுழல் தண்டு :** முகட்டில் தொங்கும் இடைச்சுழல் தண்டு. இதிலிருந்து எந்திரங்களுக்கு விசை அனுப்பப்படுகிறது.

**overhead-valve motor :** (தானி.) **மேல் ஓரதர் மின்னோடி :** ஓரதர்கள் அனைத்தும் தலைப்பகுதியில் அமைந்திருக்கும் மின்னோடி.

**overheating :** (தானி.) **மிகைச் சூடாக்கம் :** பாதுகாப்பாக இயங்குவதற்குத் தேவையான அளவுக்கு அதிகமாக ஓர் எஞ்சின் சூடாதல். இது பொதுவாக குளிர்விக்கும் முறையில் ஏற்பட்டுள்ள கோளாறு அல்லது குறைவான மசகிடல் காரணமாக ஏற்படலாம்.

**overload :** (மின்.) **மிகை மின் சுமை :** ஒரு மின்னியல் சாதனத்தின் வழியாக இயல்பான அளவுக்கு அதிகமாக மின்னோட்டம் பாய்தல்.

**overload capacity :** (மின்.) **மிகைச் சுமைத்திறன் :** ஓர் எந்திரம் அல்லது மின் சுற்றுவழி. ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் தனக்குக் குறிக்கப்பட்ட திறனளவுக்கு மேற்பட்டு இயங்கக்கூடிய திறன்.

**overload switch :** (மின்.) **மிகை மின் சுமைவிசை :** ஒரு மின் சுற்று வழியில் மிகையான மின்விசை பாயுமானால் மின்சுற்று வழியைத் தானாகவே முறித்து விடும் விசை.

**overmodulation :** (மின்.) **மிகை அலைமாற்றம் :** ஒரு தொடர் ஊர்தி அலையின் வீச்சுக்கு மிகுதியாக அலை மாற்றி அலை அதிகமாகி ஊர்தி அலையின் ஆற்றலை பூச்சியத்திற்குக் குறைக்கின்ற ஒரு நிலை.

**overrunning clutch :** (தானி.) **விஞ்சியோடும் ஊடிணைப்பி :** உள்ளும் புறமும் வளையங்களுடன் வடிவமைக்கப்பட்ட ஊடிணைப்பி. உள் ஊடிணைப்பில் பல முக்கோண வடிவக் காடிகள் வெட்டப்பட்டிருக்கும். அவற்றில் கடினமான எஃகு உருளைகள் செருகப்

பட்டிருக்கும். இந்த அமைப்பின் மூலம் உள்வளையம் புறவளையத்தை உந்தித் தள்ளும். புறவளையம் உள்வளையத்தைவிட வேகமாக இயங்குமானால், அது உள் வளையத்தை விஞ்சியோடும்.

**over-shoot** : *(வானூ.)* **இலக்கு கடத்தல்**: விமானம் தரையிறங்கும்போது குறி இலக்குகளைக் கடந்து தவறாகப் பறத்தல்.

**over time** : **மிகை நேரம்** : குறித்த வேலை நேரத்திற்கு மிகுதியாக வேலை செய்யும் நேரம்.

**ovolo** : *(க.க.)* **கால்வட்டச் சித்திர வேலை** : கால் வட்டவளைவுடைய சித்திர வேலைப்பாடு.

**oxalic acid** : *(வேதி.)* **ஆக்சாலிக் அமிலம்** : நச்சுத் தன்மை வாய்ந்த அமிலம். மரத்தூள், கடுங்காரச் சோடா, கடுங்காரப் பொட்டாஷ் ஆகியவற்றின் கலவையிலிருந்து இது தயாரிக்கப்படுகிறது. இது சலவை, சாயமிடுதல், காலிக்கோ அச்சு ஆகியவற்றில் முக்கியமாகப் பயன்படுகிறது.

**oxidant** : *(விண்)* **ஆக்சிகரணி** : ராக்கெட்டில் செலுத்து பொருளாகப் பயன்படுத்தப்படும் திரவ ஆக்சிஜன், நைட்ரிக் அமிலம் போன்ற எரிபொருளை எரித்து ஆக்சிஜன் கொடுக்கும் பொருள்கள்.

**oxidation** : *(வேதி.)* **ஆக்சிகரணம்** : ஒரு பொருளை வேதியியல் முறைப்படி ஆக்சிஜனுடன் ஒருங்கிணையும்படி செய்தல்.

**oxide** : *(வேதி.)* **ஆக்சைடு** : தனிமம் அல்லது உயிர்ம அடிச்சேர்மத்துடன் ஆக்சிஜன் இணைந்த வேதியியற் பொருள்.

**oxidizing** : **ஆக்சிஜனேற்றுதல்** : ஓர் அமிலக்கரைசல் மூலம் ஆக்சிஜனேற்றி ஓர் உலோக வேலைப்பாட்டுக்கு மெருகேற்றுதல்.

**oxidizing agent** : *(வேதி.)* **ஆக்சிஜனேற்று பொருள்** : ஒரு பொருள் தன்னிடமிருக்கும் ஆக்சிஜனில் ஒரு பகுதியை உதறிவிட்டு இன்னொரு பொருளை ஓர் ஆக்சைடாகவோ வேறு கூட்டுப் பொருளாகவோ மாறறுகிறது. இந்தப் பொருள் ஆக்சிஜனேற்று பொருள் எனப்படும்.

**oxidizing flame** : **ஆக்சிஜனேற்றுச் சுடர்** : ஒரு வாயுப் பற்றவைப்புச் சுடர். இதில் முழுமையான உள்ளெரிதலுக்குத் தேவையான அளவைவிட அதிகமாக ஆக்சிஜன் அமைந்திருக்கும்.

**oxyacetylene** : *(பொறி.)* **ஆக்சி அசிட்டிலின்** : மிகவும் சூடான சுடரை உண்டாக்கும் வகையிலான விகிதங்களில் ஆக்சிஜனும் அசிட்டிலினும் கலந்துள்ள ஒரு கலவை. உலோகவேலைத் தொழிலில் பற்றவைப்பதற்கும், வெட்டுவதற்கும் இந்த வாயு பயன்படுகிறது.

**oxygen** : *(வேதி.)* **ஆக்சிஜன்** சுவையற்ற, நிறமற்ற வாயுத் தனிமம். காற்றின் கன அளவில் ஐந்தில் ஒரு பகுதி ஆக்சிஜன். இது எரிவதை ஊக்குவிக்கிறது. உயிர்கள் உயிர்வாழ இன்றியமையாத வாயு. இதனால் இதனை 'உயிரகம்' என்று கூறுவர்.

**oxygen - acetylene cutting** : *(பற்.)* **ஆக்சிஜன் - அசிட்டிலின் வெட்டு** : ஆக்சிஜன் அசிட்டிலின் சேர்க்கப்பட்டுள்ள ஆக்சிஜன் தாரையைப் பயன்படுத்தி உலோகங்களை வெட்டுதல்.

**oxygen - acetylene welding** : *(பற்.)* **ஆக்சிஜன் அசிட்டிலின் பற்றவைப்பு** : ஆக்சிஜன், அசிட்டிலின் ஆகிய இரு வாயுக்களும் இணைந்த ஓர் எரிபொருளைப்பயன்படுத்திப் பற்றவைப்பு செய்யும் முறை.

**oxygen cylinder** : *(பற்.)* **ஆக்சிஜன் நீள் உருளை :** ஒரு குறிப்பிட்ட அளவு ஆக்சிஜனைச் சேமித்து வைக்கவும், கப்பல்களில் கொண்டு செல்லவும் பயன்படும் தனிவகைக் கொள்கலம்.

**oxyen-hydrogen flame :** *(பற்.)* **ஆக்சிஜன்-ஹைட்ரஜன் சுடர் :** ஆக்சிஜன், ஹைட்ரஜன் எரிவாயுவுடன் இணையும்போது ஏற்படும் சுடர்.

**oxygen-LP gas flame** : *(பற்.)* **ஆக்சிஜன்-எரிவாயுச் சுடர் :** ஆக்சிஜன், எரிவாயுவுடன் (திரவமாக்கிய பெட்ரோலியம்) வேதியியல் முறையில் இணைந்து உண்டாகும் சுடர்.

**oxygen regulator** : *(பற்.)* **ஆக்சிஜன் ஒழுங்கியக்கி :** நீர் உருளை அழுத்தங்களை வேண்டிய அளவுக்குக் குறைக்கவும், அழுத்தத்தை நிலையாக வைத்திருக்கவும் பயன்படும் ஒரு தானியங்கி ஓரதர்.

**ozocerite** : *(வேதி.)* **மெழுகு அரக்கு :** மெழுகுதிரி, மின்காப்பு ஆகியவற்றில் பயன்படும் மெழுகு போன்ற புதைபடிவ அரக்குப் பொருள். கரையாத பிசின் செய்யப் பயன்படுகிறது.

**ozone** : *(வேதி.)* **ஓசோன் :** கார நெடி கொண்ட நிறமற்றவாயு ($O_3$). சலவை எண்ணெய்கள், மெழுகுகள், மாவு, மரப்பொருள் முதலியவற்றில் பயன்படுத்தப்படுகிறது. சில சமயம் குடிநீரைக் கிருமி நீக்கம் செய்வதற்கும் பயன்படுகிறது. ஒரு தனிவகைச் சாதனத்திலுள்ள உலர்ந்த மற்றும் குளிர்ந்த காற்றின் வழியே உயர் அழுத்த மின்விசையைச் செலுத்துவதன் மூலம் இந்த வாயு தயாரிக்கப்படுகிறது.

**ozone** : *(குளி.பத.)* **ஓசோன்,** மூன்று அணுவுடைய ஆக்சிஜன் காற்றைத் தூய்மைப்படுத்துவதற்குப் பயன்படுகிறது.

**ozonospher :** *(விண்.)* **ஓசோன் மண்டலம் :** வாயு மண்டலத்தின் மேற்படுகையில் சுமார் 65கி.மீ. உயரத்தில் மிக அதிக அளவு ஓசோன் செறிவுள்ள மண்டலம்.

# P

**packaging**: *(தானி.)* **சிப்பங் கட்டுதல்**: பொருள்களை நுகர்வதற்கு வழங்கும் வகையில் பெட்டியில் இட்டு கட்டுதல்.

**pack harden**; *(உலோ.)* **கார்பனாக்குதல்**: *(1)* கார்பனாக்குதல் அல்லது கெட்டிப்படுத்துதல்.

*(2)* மென் எஃகிற்குக் கடினமான புறப் பரப்பினைக் கொடுக்கும் முறை.

எஃகினை ஒரு கார்பன் பொருளுடன் சேர்த்துப் பக்குவப்படுத்தி எண்ணெயில் அமிழ்த்துவதன் மூலம் இது செய்யப்படுகிறது.

**packtong**: *(உலோ.)* **பேக்டாங்**: நிக்கல், துத்தநாகம், செம்பு கலந்த ஓர் உலோகம். ஜெர்மன் வெள்ளியை ஒத்தது. உலோக வேலைப் பாடுகளுக்குப் பயன்படுகிறது.

**pad**: *(தாள்.)* **காகித அட்டை**: ஒட்டுத்தாள் இணைபொதி. பல காகிதங்களைச் சேர்த்து ஒட்டிச் செய்யப்பட்ட அட்டை.

**pad**: *(விண்.)* **செலுத்து மேடை**: விண்வெளிக்கலத்தைச் செலுத்துவதற்கு நிரந்தரமாகவோ அல்லது, தற்காலிகமாகவோ அமைக்கப்பட்டுள்ள பளு தாங்கும் மேடை.

**padauk**: *(தாவ.)* **பர்மா வெட்டு மரம்**: பர்மா நாட்டு வெட்டு மர வகை. இது கடினமானது; கனமானது; பெரிய திறந்த துளைகள் உள்ளது. சிவப்பு நிறக்கோடுகள் அமைந்திருப்பது இதன் தனிச் சிறப்பு. அறைகலன்கள் செய்ய பயன்படுத்தப்படுகிறது.

**padlock**: **பூட்டு**: நாதாங்கியுடன் இணைவாகப் பயன்படுத்தப்படும் பிரித்தெடுக்கக்கூடிய ஒரு வகைப் பூட்டு.

**pad lubrication**: **திண் மசகிடல்**: எண்ணெய்ப் பூரிதமாகிய அடை பஞ்சுடன் இணைத்து மசகிடும் முறை.

**pad saw**: **பொதி ரம்பம்**: ஒரு வகைக் கைரம்பம். நீண்ட கூம்பு வடிவ அலகினைக் கொண்டிருக்கும் இந்த அலகு ஒரு குதை குழிக்குள் அல்லது பொதிவுக்குள் பொருத்தப்பட்டிருக்கும். பயன்படுத்தப்படாதபோது இந்த அலகு கைப்பிடியாகவும் பயன்படும்.

**page**: **பக்கம்**: ஏட்டிதழின் ஒரு புறம்.

**pagoda**: **கூருருளையோடு**: கூர்ங் கோபுரம் வடிவிலான ஒரு முகடு.

**paint**; *(வேதி.)* **வண்ணம்**: எண்ணெய் அல்லது நீருடன் கலந்த அல்லது உலர்ந்த வண்ணப்பூச்சு.

**paint base**: *(வேதி.)* **வண்ண ஆதாரம்**: ஈயம் அல்லது துத்தநாகம் போன்று, வண்ணத்தின் ஆதாரப் பொருள்.

**paint drier**: *(வண்.)* **வண்ண உலர்த்தி**: வண்ணம் பூசியதும் அந்த வண்ணத்தை விரைவாக உலரும்படி செய்வதற்குப் பயன்படும் பொருள். பெரும்பாலான வண்ண உலர்த்திகள் ஈயத்தினாலும், மாங்கனீசினாலும் ஆனவை. இந்தப் பொருளை அளவோடு பயன்படுத்துவது நலம். அளவுக்கு மீறிப் பயன்படுத்துவது கெடுதல்.

**paint for concrete**: *(வண்.)* **கான்கிரீட் வண்ணம்**: துத்த ஆக்

சைடை அல்லது பேரியம் சல்பேட் டை எண்ணெயுடன் கலந்து தயாரிக்கப்படும் வண்ணப் பொருள்.

**painting:** *(வண்.)* **வண்ணம் பூசுதல்:** வண்ணம் பூசி அலங்கார வேலைப்பாடுகள் செய்தல்.

**paint thinner:** *(வண்.)* **வண்ண நெகிழ்ப்பான்:** திண்ணிய வண்ணப் பொருள்களை எளிதாகப் பயன்படுத்துவதற்கு வசதியாக நெகிழ்வுறுத்துவதற்காகக் கற்பூரத் தைல அல்லது பெட்ரோலியச் சாராவிகள் பயன்படுத்தப்படுகின்றன. மலிவாகக் கிடைப்பதால் பெட்ரோலியச் சாராவிகளே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.


**paint remover:** *(வண்.)* **வண்ணம் நீக்கி:** சாயம், வண்ணப்பூச்சுகளை நீக்குவதற்குப் பயன்படுத்தப்படும் செயல் திறமுடைய கரைப்பான்களின் கலவை.

**palette knife.** *(அச்சு.)* **வண்ண அலகுக் கத்தி:** வண்ணங்கள் கலக்கப் பயன்படும் மெல்லிய எஃகு அலகுடைய கத்தி.



அலகுக் கத்தி

**palisade layer:** *(உட.)* **அடித்தோல் படலம்:** ஓர் இலையில் மேல் தோலுக்கு நேர் கோணத்திலுள்ள, புறத் தோலுக்கு அடியிலுள்ள உயிரணுக்களின் படலம்.



**palladium:** *(வேதி.)* **பல்லேடியம்:** வெண்ணிறமான, கம்பியாக இழுக்கக்கூடிய, தகடாக்கக்கூடிய ஓர் அரிய உலோகம். இது பிளாட்டினத்துடன் கிடைக்கிறது.

**pallet:** *(பொறி.)* **சக்கரக்கைப்பிடி:** சக்கர இயக்கத்தை மாற்றப் பயன்படும் பொறியின் கைப்பிடி.

**palm fiber:** **தென்னை நார்:** தேங்காயின் புறநார் இழை. மெத்தை, திண்டு வேலைகளில் பயன்படுகிறது. கம்பளிக்குப் பதிலாகப் பயன்படும் மலிவான பொருள்.

**pamphlet:** *(அச்சு.)* **துண்டு வெளியீடு:** அட்டைகளின்றி அல்லது கட்டுமானம் செய்யப்படாமல் காகிதத்தில் அச்சிடப்பட்ட ஒரு சிறு புத்தகம்.

**pan:** *(மின்.)* **பின் தொடர்தல்:** தொலைக் காட்சியில் காட்டப்படும் காட்சியைப் பின் தொடரும் வகையில் தொலைக்காட்சி ஒளிப்படக் கருவியைச் சுழற்றி இயக்குதல்.


**pan:** **தாலம்:** (1) ஓர் ஒளிப்படக் கருவியின் இயக்கம். இது ஒரு தொகுதியின் அடுக்கணிக்காட்சியைக் காட்டக்கூடியது.

(2) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விளக்குகள் பயன்படுத்தப்படும் ஒரு பிரதிபலிப்பு அலகு. இதில் பெரும்பாலும் நுண்ஊதாக் கதிரால் ஒளிரும் விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன.

**pancake:** *(வானூ.)* **தட்டைச் சிறகுத் தரையிறங்கல்:** விமானம் தட்டைச் சிறகுகளோடு கீழிறங்குதல்.

**panchromatic:** *(ஒ க.)* **நிறப்பதிவுப் பசை:** ஒளியின் நிறங்கள் அனைத்தையும் பதிவு செய்யக் கூடிய பசைக் குழம்புகள்.

**pancreas:** *(உட.)* **கணையம்:**




கணையம்

செரிமானத்திற்கேற்ற நீர் சுரக்கும், இரைப்பைக்கு அருகிலுள்ள சுரப்பி.

**panel board**: *(மின்.)* **மின் விசைப் பலகை:** *மின்விசைகளும். உருகு கம்பிகளும் உடைய ஒரு கட்டுப்பாட்டுப் பலகை.*

**pantile**: *(க.க.)* **வளைகூரை ஓடு**: *எழுதக வளைவான குறுக்கு வெட்டுடன் கூடிய கூரை ஓடு; குழிவான அல்லது குவிவான குறுக்கு வெட்டுள்ள ஓடு.*

**pantograph**: **படப்படியெடுப்பான்**: *வரைபடங்களை பெரிதாக்கிய அளவிலோ, சுருங்கிய அளவிலோ படியெடுக்கப் பயன்படும் ஒரு சாதனம்.*

**pantometer**: *(கணி.)* **கோண மானி**: *கோணங்கள், உயரங்கள் முதலியவற்றை அளவிடுவதற்கான ஒரு சாதனம்.*

**paper**: **வரைதாள்**: *படங்கள் வரைவதற்குப் பயன்படும் வெள்ளை மற்றும் மஞ்சள் நிறத்தாள். இரண்டும் தட்டைத் தகடுகளாகவும் சுருள்களாக இருக்கும். நல்ல வரை தாள் முரடாகவும், பென்சிலையும் மையையும் ஏற்கக் கூடியதாகவும், அழித்துத் திருத்த இடமளிப்பதாகவும் இருக்க வேண்டும். இதற்குப் பொதுவாகக் கையினால் செய்யப்படும் காகிதம் பொருத்தமாக இருக்கும்.*

**paper birch**: **காகிதப் பிரம்பு மரம்:** *இதனை வெண்பிரம்பு மரம் என்றும் அழைப்பர். இது 15மீ. முதல் 23மீ.அடிவரைவளரும். மரம் வலுவானது; ...டனமானது. இளம் பழுப்பு நிறத்தில் இருக்கும். காகிதக்கூழ் தயாரிக்க முக்கியமாகப் பயன்படுகிறது.*

**paper condenser**: *(மின்.)* **காகிதச் செறிவுறுத்து சாதனம்:** *ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட காகிதத்தினாலான மின்தடைப் பொருள் கொண்ட கெட்டிப்படுத்தும் சாதனம்.*

**paper cutter**: *(அச்சு.)* **காகித வெட்டி**: *காகிதத்தை வேண்டிய வடிவளவுகளில் வெட்டுவதற்குப் பயன்படும் ஓர் எந்திரம். இதனை கையினாலோ விசையினாலோ இயக்கலாம்.*

**paper drill**: *(அச்சு.)* **காகிதத் துளைக்கருவி**: *அடுக்கிய காகிதங்களில் துளையிடுவதற்குப் பயன்படும் கருவி.*

**paper machine**: **காகித எந்திரம்**: *காகிதத்தை வடிவமைக்கவும். அழுத்தவும், உலர்த்தவும், மெருகூட்டவும். சுருள்களாக சுருட்டவும், தகட்டுத் தாள்களாக வெட்டவும் பயன்படும் எந்திரம்.*

**papier machine**: **தாள்கூழ்**: *பல்வேறு வடிவங்களில் காகிதங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படும் காகிதக்கூழ்.*

**parabola**: *(பொறி;கணி.)* **மாலை வளைவு:** *கூம்புருளையின் பக்கத்திற்கு இணையான தளவளைவு. ஒரு கூம்புருளையை பக்கத்திற்கு இணையாகச் செலுத்துவதன் மூலம் இது கிடைக்கிறது.*

**parabolic girder**: *(பொறி.)* **மாலை வளைவு உத்தரம்**: *ஒரு மாலை வளைவுக்குள் வரையப்பட்ட பல கோண வடிவில் அமைந்த ஓர் உத்தரம். இது பாலங்கள் அமைப்பதற்குப் பயன்படுகிறது.*

**parabolic reflector**: *(மின்.)* **நீள்வட்ட பிரதிபலிப்பான்**: *ஆற்றலை ஒரு குறுகிய கற்றையாகச் செலுத்தப் பயன்படுத்தப்படும் ஓர் ஒளி அல்லது ஒலிப்பிரதிபலிப்பான். பிரதிபலிக்கும் பரப்பு நீள வட்ட வடிவில் அமைந்திருக்கும்.*

**parachute** : *(வானூ.)* **வான்குடை (பாராசூட்)** : வானிலிருந்து மெதுவாக மிதந்து கொண்டே தரையிறங்குவதற்குப் பயன்படும் குடை வடிவச் சாதனம். இதன் குடை வடிவம் வானிலிருந்து இறங்கும்போது காற்றை எதிர்த்து வேகத்தைக் குறைத்து மெதுவாகத் தரையிறங்குவதற்கு உதவுகிறது.

**parachute canopy** : *(வானூ.)* **வான்குடை மேற்கட்டி** : ஒரு வான் குடையின் முக்கிய ஆதார மேற்பரப்பு.

**parachute flare** : *(வானூ.)* **வான் குடை மின்னொளி** : ஒரு குறிப்பிட்ட உயரத்தில் விமானத்திலிருந்து குதிக்கும்போது ஒரு பரந்த பரப்பளவில் மின்னொளி பரவும்படி வடிவமைக்கப்பட்ட சாதனம் பொருத்திய வான்குடை.

**parachute harness** : *(வானூ.)* **வான்குடைச் சேணம்** : வான் குடையை அணிந்து கொள்பவர் தன்னோடு பிணைத்துக் கொள்ளப் பயன்படுத்தும் பட்டைகள், பட்டைப்பிடிகள், இணைப்பான்கள் அமைந்த ஒரு கூட்டு அமைப்பு.

**parachut pack** : *(வானூ.)* **வான் குடைக் கொள்கலம்** : கொள்கலம் கொண்டுள்ள ஒரு வான்குடை,

**parachute vent** : *(வானூ.)* **வான் குடைப் புழை** : ஒரு வான்குடையின் மேற் கவிகையின் உச்சியிலுள்ள புழை. இது வான்குடை கீழே இறங்கும்போது மிகை அழுத்தத்தினைக் குறைத்து, வான் குடையை நிலைப்படுத்த உதவுகிறது.

**paraffin** : *(வேதி.)* **பாரஃபின் மெழுகு** : பெட்ரோலியத்தைக் காய்ச்சி வடித்தல் மூலம் கிடைக்கும் ஒருவகை மெழுகு. இது ஒளி ஊடுருவக் கூடியது; திண்மையானது.

**parallax** : *(மின்.)* **மாறு கோணத் தோற்றப் பிழை** : நோக்கு மயக்கம்; பார்வைக் கோணத்தால் பொருள் நிலையில் தோன்றும் மாறுதல் கோண அளவு.

**parallax** : *(விண்)* **விழிக்கோட்டக் கோணளவு** : ஒரு பொருளை இரு வேறுபட்ட புள்ளிகளிலிருந்து பார்க்கும்போது அதன் இயக்கத் திசையில் மேற்போக்காகக் காணப் படும் வேறுபாடு.

**parallel** : **இணைகோடு** : ஒரு போக்குடைய இணைகோடுகள். இவை ஒரே திசையில் செல்பவை. எல்லா முனைகளிலும் இணை தொலைவுடையவை.

**parallel cells** : *(மின்.)* **இணை மின்கலங்கள்** : மின்கலங்களை அனைத்து நேர் மின்முனைகளும் இணைந்திருக்குமாறும், அனைத்து எதிர்மின்முனைகளும் இணைந் திருக்குமாறும் இணைக்கும் ஒரு முறை.

**parallel circuit**: *(மின்.)* **இணைச் சுற்று வழி** : பொதுவான ஊட்டு வாயும், பொதுவான திரும்பு வாயும் உடைய ஒரு மின்சுற்றுவழி ஊட்டு வாய்க்குமிடையே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கருவிகள் இணைக்கப்படுகின்றன. ஒவ்வொரு கருவிக்கும் பொது ஊட்டு வாயிலிருந்து தனித்தனி அளவு மின்னோட்டம் பாயும்.

**parallel connected transformer** : *(மின்.)* **இணை இணைப்பு மின்மாற்றி** : ஒரே மின் வழங்கு ஆதாரத்துடன் தொடக்கச் சுருணைகள் இணைக்கப்பட்டுள்ள ஒன்று. அதற்கு மேற்பட்ட மின் மாற்றிகள், இதில் அழுத்தப் பெற்ற மின்னழுத்தம் ஒவ்வொரு நேர்விலும் மின் வழியிலுள்ள அதே அளவுக்கு இருக்குமாறு அமைக்கப்பட்டிருக்கும்.

**parallel feed** : *(மின்.)* **இணை மின்னூட்டம் :** மின் சுற்றுவழியில் நேர்மின்னோட்டமும் மாற்று மின்னோட்டமும் வெவ்வேறு வழிகளில் பாயுமாறு அமைக்கப்பட்ட ஒரு மின்சுற்றுவழி.

**parallel forces** : *(எந்.)* **இணை விசை :** இரண்டு விசைகள் இணையாக இருந்து, ஒரே கிசையிலிருந்து தொடங்காமல் ஆனால் ஒரே திசையில் செயற்படுமானால், அதன் கூட்டு விளைவாக்கம் இரண்டு விசைகளுக்கும் இணையாகவும், அவற்றின் கூட்டுத் தொகைக்குச் சமமாகவும் இருக்கும். இரு விசைகளும் எதிர்த் திசைகளில் செயற்படுமானால், அப்போது கூட்டு விளைவாக்கம், அவ்விரு விசைகளுக்குமிடையிலான வேறுபாட்டிற்குச் சமமாக இருக்கும்.

**parallel jaw pliers** ; *(பட்.)* **இணைத்தடை இடுக்கி :** செங்கோணியக்க இணைப்புடைய இடுக்கி. இது வாயளவு எவ்வாறிருப்பினும் தாடைகள் இணையாக இருப்பதற்கு இடமளிக்கிறது.

**parallel resonance** : *(மின்.)* **இணை ஒத்திசைவு** : தூண்டு எதிர் வினைப்பும், கொண்மை எதிர் வினைப்பும் சரிசமமாக இருக்கும் போது, ஓர் அலைவெண்ணில் ஒரு கிளர்மின்கருவியும் ஒரு கொண்மியும் உள்ள ஓர் இணை மின் சுற்று வழி.

**parallel rulers** : **இணைகோடு வரைகோல்** : ஒரு போகுக் கோடுகள் வரைவதற்குரிய, சுழல் அச்சால் இணைக்கப்பட்ட வரை கோல்.

**parallelogram** : *(கணி.)* **இணைவகம் :** எதிர்ப்பக்கங்கள் சமமாகவும் இணையாகவும் உள்ள ஒரு நாற்கரம். பரப்பளவு = ஆதாரம் × செங்குத்து உயரம்.

**parallelogram of forces** : *(எந்)* **இணைவக விசை :** இரண்டு விசைகள் இணைந்து ஒரே விசையாகச் செயற்படும்போது திசையிலும் அளவிலும் மூல விசைகள் இரண்டும் ஓர் இணைவகத்தின் இரு புடைப் பக்கங்களுக்கும் இணை விசை அவற்றுக்கிடைப்பட்ட மூலை விட்டத்திற்கும் சமமாக இருக்கும் நிலை.

**paramagnetic** : *(மின்.)* **காந்த ஈர்ப்புப் பொருள் :** ஒரு காந்தத்தினால் ஈர்க்கப்படத்தக்க பொருள்கள். இவற்றில் காந்தம் ஊடுருவ இடம் தரும் இயல்பின் அளவு ஒன்றுக்குக் கூடுதலாக இருக்கும்.

**paramount** : **மேதகவு** : அனைத்திற்குமேலான தகைமைச் சான்று.

**parapet** : *(க.க.)* **கைப்பிடிச்சுவர்:** மேல்முகடு, மேல்மாடி, அல்லது ஒரு பாலத்தின் பக்கதில் மறைப்பாகக் கட்டப்படும தாழ்வான சுவர்.

**parasite drag** : *(வானூ.)* **ஒட்டு இழுவை :** விமானத்தில் இறகுகளின் விரைவியக்கப் பகுதியிலிருந்து தனித்தியங்கும் இழுவைப் பகுதி.

**parasitic array** : *(மின்)* **அடுக்கு வானலை வாங்கி :** ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயக்கி மற்றும் பிரதிபலிப்பான் அலகுகள் உடைய ஓர் இரு துருவ வானலை வாங்கி.

**parasol monoplane** : *(வானூ.)* **விமானத்துள் விமானம்** : விமானத்தின் கட்டுமானச் சட்டகத்திற்கு மேலே இறகு அமைந்துள்ள ஒரு குறு விமானம்.

**parathyroid glands** : *(உட.)* **இணை நாளமில் சுரப்பிகள் :** நாளமில் சுரப்பிகளுக்குப் பக்கவாட்டிலும் பின்புறத்திலும் உள்ள நான்கு சிறிய சுரப்பிகள். இவை,

நமது உடல் கால்சியத்தையும் பாஸ்ஃபரசையும் பயன் படுத்திக் கொள்வதைக் கட்டுப்படுத்து கிறது. உடல் அளவுக்கு அதிகமாக வேலை செய்வதால் உடம்பில் கால்சியம் குறைகிறது; இரத்தத் தில் கால்சியம் அதிகமாகிறது; இரத்தத்தில் பாஸ்ஃபரஸ் குறை கிறது.

**paratyphoid fever** : (நோயி.) **போலி குடற்காய்ச்சல்** : குடற் காய்ச்சல் போன்ற ஒரு நோய்; ஆனால் அதைவிடக் கடுமை சற்று குறைவானது; இது 3 வாரங்கள் வரை நீடிக்கும்.

**parchment**: **வரைதோல் தாள்**: எழுதுவதற்காக விலங்குத் தோல் போல் பாடம் செய்யப்பட்ட காகி தம். காகிதத்தை வலுக்குறைந்த கந்தக அமிலக் கரைசலில் நனை த்து கெட்டித் தன்மையுடையதாக வும், நீர் புகாதவாறும் செய்யப் படுகிறது. இக்காகிதம் பளபளப் பாகவும், ஒளி ஊடுருவக்கூடிய தாகவும் இருக்கும்.

**pargeting**:(க.க.)**சுண்ணச்சாந்து**: சுவர்ப்பூச்சுச் சிறப்ப ஒப்பனை வேலைப்பாடுகளுக்குப் பயன்படுத் தப்படும் அலங்காரக் காரை.

**paring chisel**: (மர.வே.) **செப்ப னிடு உளி**: சீவிச் செப்பனிடவும், தறித்துஒழுங்குபடுத்தவும்,விளிம்பு வெட்டவும் ஓரம் நறுக்கவும் பயன் படும் ஒரு நீண்ட உளி.

**paris green**: (வேதி.)**பாரிஸ் வண் ணம்**: ($CuHAsO_3$); பூச்சிகொல்லி யாகவும் வண்ணப்பொருளாகவும் பயன்படும் தாமிர ஆர்சனைட் என்ற நச்சு வேதியியற் பொருள்.

**parquetry**. (க.க.) **மரக்கட்டை எழில் விரிப்பு**: தளங்களில் மரக் கட்டையினால் எழிற்பரப்பு; அமைத்தல்.

**particle**: **துகள்**: சிறுதுண்டு. அணுக்கூறு.

**parting**: (வார்.) **வகிடு**: ஒரு வார்ப்படத்தின் இரு பகுதிகளைப் பிரிக்கும் இணைப்பு அல்லது பரப்பு.

**partition** : (க.க.) **தடுப்புச் சுவர்** : ஒரு கட்டிடத்தைப் பல அறைக ளாகப் பகுப்பதற்குக் கட்டப்படும் நிரந்தரமான உள்சுவர். வீடுகளி லும், தொழிற்சாலைகளிலும்,அலு வலகக் கட்டிடங்களிலும் பல்வேறு கட்டுமானப் பொருள்களினால் வசதிக் கேற்பத் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்படுகின்றன,

**party wall** : (க.க.) **இடைச்சுவர்**: கட்டிடங்களுக்குப் பொதுவுரிமை யாக வழங்கப்படும் இடைச்சுவர்.

**Pascal's law** : (இயற்.) **பாஸ்கல் விதி** : "ஒரு திரவத்தின் ஒரு குறிப் பிட்ட பரப்பளவில் செலுத்தப் படும் அழுத்தமானது, அந்தக் கொள்கலத்தின் அதே அளவுப் பகுதி ஒவ்வொன்றுக்கும் சற்றும் குறையாமல் செலுத்தப்படுகிறது" என்பது பாஸ்கல் விதி.

**passive** : (விண்.) **செயப்பாடு** : ஒரு சைகையை அனுப்பீடு செய்யா மல் பிரதிபலித்தல்.

**pasteboard** : **தாள் அட்டை**: இன்று நடுத்தர அளவு கனமுடைய கெட்டியான அட்டை எதனையும் இது குறிப்பிடுகிறது. முன்னர் பல தகட்டுத் தாள்களை அடுக்கி ஒட் டிய அட்டையை குறிக்கப் பயன் படுத்தப்பட்டது.


**pasted plate**. (மின்.)**ஒட்டுத்தகடு** மலிவான ஈயச்சேம மின்கலங்களில் பயன்படுத்தப்படும் ஒரு வகைத் தகடு. ஈயம், ஆன்டிமணி இவற்றி னாலான ஒரு வலை சிறு இடை வெளிகளில் செருகப்படுகிறது. ஒரு வேதியியல் கூட்டுப் பொருள் உண் டாகி, சிறிது நேரத்தில் பயன்படுத் தப்படும் வேதியியற் பொருளைப் பொறுத்து நேர்மின் தகடாகவோ

எதிர்மின் தகடாகவோ மாறுகிறது.

**pastel : வண்ணக்கோல் :** வண்ணக் கோல்கள் செய்வதற்காகப் பசை நீரில் நிறமிகளைக் கலந்து உண்டாக்கப்படும் உலர் பசைக் கோல்.

**pasteurization :** *(குளி.பத.)* **பால் துப்புரவாக்கம்** : ஃபிரெஞ்சு விஞ்ஞானியான லூயி பாஸ்டர் முறைப்படிப் பாலைச் சூடாக்கித் துப்புரவு செய்தல்.

**patella:** *(உட.)* **கால் முட்டெலும்பு:**




முழந்தாள் முட்டுச்சில்லு.

**patent : காப்புரிமை** : புதுமுறை ஆக்க விற்பனைகளுக்கு அரசு வழங்கும் தனிக் காப்புரிமை.

**patent application: புனைவுரிமை விண்ணப்பம்** : புத்தமைப்பாளர் தனது கண்டுபிடிப்புக்குக் காப்புரிமை பெறுவதற்காக புனைவுரிமை அலுவலகத்திற்கு வரைபடங்கள், உரிமைக்கோரிக்கை ஆகியவற்றுடன் அளிக்கும் விண்ணப்பம்.

**patenting: மெருகிடல்:** இரும்பை ஆதாரமாகக் கொண்ட உலோகக் கலவைகளை முட்டுபதன் அளவுக்குச் சூடாக்கி, பிறகு அளவுக்குக் குறைவாகக் காற்றிலோ அல்லது 700° ஃபா. வெப்பமுடைய உருகிய ஈயத்திலோ குளிர்வித்து மெருகிடுதல்.

**patina : பசுங்களிம்பு** : பழைய வெண்கலப் பொருள்களில் காலத்தால் ஏறும் உலோகக் களிம்பின் மென்படலம்.

**pattern :** *(வார்.)* **தோரணி** : ஓர் எடுத்துக்காட்டு வார்ப்பு. முன் மாதிரியாகக் கொண்டு ஒரே மாதிரியான பொருள்களை வார்ப்படம் மூலம் செய்வதற்கான படிவம்.

**pattern letter:** *(வார்.)* **முன் மாதிரி எழுத்து** : ஈயம், வெள்ளீயம் அல்லது பித்தளையில் செய்த எழுத்து. இது ஒரு தோரணையில் பொருத்தப்பட்டிருக்கும். அதிலிருந்து ஒரே மாதிரியான பெயர் அல்லது இலக்கத்தை வார்த்தெடுக்கலாம்.

**pattern - making : தோரணி வார்ப்படம்** : வார்ப்படத் தொழிலில் பல்வேறு மாதிரிகளை அல்லது உருவரைகளைத் தயாரிப்பதற்குப் பயன்படும் வார்ப்படம்.

**pattern shop : தோரணிப் பட்டறை** : வார்ப்படங்கள் தயாரிக்கப் பயன்படுத்துவதற்கான மரத் தோரணிகளைத் தயாரிக்கும் பட்டறை.

**pavement :** *(க.க.)* **தள வரிசை :** சாலை அல்லது ஓர நடைபாதையில் அமைக்கப்படும் கடினமான பாவு தளம்.

**pavilion :** *(க.க.)* **காட்சி அரங்கம் :** முற்றிலும் சுவர்களினால் அடைக்கப்படாமல் கூடாரமிட்ட ஒப்பனைப் புறத் தாழ்வாரம். காட்சி அரங்காக அல்லது கேளிக்கை அரங்காக இது பயன்படும்.

**pay load :** *(வானூ.)* **வருவாய்ப் பகுதி :** விமானத்தில் பயணிகள், சரக்குகள் போன்ற வருவாய் தரும் பாரத்தின் பகுதி.

**payne's process : தீத்தடைக் காப்பு முறை :** மரத்தில் இரும்பு சல்பேட்டை ஊசிமூலம் செலுத்தி, அதன்பின் சுண்ணாம்புச் சல்பேட்டு அல்லது சோடா கரை

சலை ஊசிமூலம் செலுத்தி தீத் தடைக்காப்பு செய்யும் முறை.

**peak** : *(மின்.)* **உச்ச மின்னழுத்தம்:** ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையின்போது மிக உயர்ந்த அளவு மின்னழுத்தம், மின்னோட்டம் அல்லது மின் விசை.

**peaking coil**: *(மின்.)* **உச்ச நிலைச் சுருள்** : பகிர்மானம் செய்த கொண்ம விளைவினைக் குலைப் பதற்காக ஓர் உயர் அலைவெண் மின் சுற்றுவழியில் உள்ள ஒருசிறு தூண்டு கருவி.

**peak inverse voltage** : *(மின்,)* **உச்சநிலைத் தலைகீழ் மின்னழுத்தம்**: ஓர் இரு முனையத்தின் குறுக்கே எதிர்மாறான திசையில் செலுத் தப்படும் மின்னழுத்தத்தின் அளவு.

**peak load** : *(மின்)* **உச்ச மின் விசை** : ஒரு மின்னாக்கி அல்லது மின்விசை உற்பத்தி அமைப்பு, 20 மணி நேரத்திற்கு ஒரு முறை என் பது சீரான இடைவெளிகளில், மிக உயர்ந்த அளவு வழங்கும் மின் விசையின் அளவு.

**peak value** : *(மின்.)* **உச்ச மதிப்பு** : மாற்று மின்னோட்டத்தின் அல் லது மின்னழுத்தத்தின் உச்ச மதிப் பளவு.

**pearl** : *(வேதி.)* **முத்து** : இது அரும்பொருள்களில் ஒன்று. முத்துச் சிப்பியில் கால்சியம் கார் பொனேட் என்ற வேதியியற் பொருளினால் உண்டாகிறது.

**pearling** : **இழை முடிப்பூவேலை** : இழைமூடிக் கண்ணியிட்டுச் செதுக் கிப் பூவேலைப்பாடுகள் செய்தல்.

**pearlite** : *(உலோ.)* **பியர்லைட்** : கார்பனும் இரும்பும் கலந்த எல் லாக் கலப்புக் கூறுகளையும் உடைய உலோகக் கலவை. இதில் 0.9% கார்பன் கலந்திருக்கும்.

**pearwood** : **பேரிமரம்** : இளம் பழுப்பு நிறமுடைய, நெருக்கமான மணிக்கரன் அமைந்த ஒரு வகை மரம். மிதமான கடினத்தன்மை யுடையது. வரைவாளர்கள் T-சது ரம், முக்கோணங்கள் முதலியவை செய்யப் பயன்படுகிறது.

**peat** : *(வேதி.)* **புல்கரி** : ஓரளவு கார்பனாக்கிய தாவரக் கனிமப் பொருள். எரிபொருளாகப் பயன் படுகிறது. இதனைத் தோண்டி யெடுக்கும்போது இதில் நீர்ச்சத்து மிகுதியாக இருக்கும். அதனால் இதனை அழுத்தி, உலர்த்தி எரி பொருளாகப் பயன்படுத்த வேண் டும்.

**pebble dash** : *(க.க.)* **கூழாங்கல் பதிப்பு** : சாந்து அல்லது சிமெண்ட் பூசிய சுவர்களில் கூழாங்கற்களைப் பதித்து அலங்கார வேலைப்பாடு செய்தல்.

**pedestal** : **நிலை மேடை** : தூண் நிலை போன்றவற்றின் அடிப் பீடம்.

**pedestal** : *(மின்)* **ஒளி மதிப்பளவு**: தொலைக்காட்சியில் கறுப்புப்பட மதிப்பளவினைக் குறிக்கும் ஒளிச் சைகையின் மதிப்பளவு.

**pediment** : *(க.க.)* **முக்கோண முகப்பு முகடு** : பண்டையக் கிரேக் கக் கட்டிடக் கலைப் பாணியில் அமைக்கப்பட்ட வரி முக்கோண முகப்பு முகடு.

**pedometer**: **அடிமீடுமானி**: காலடி எண்ணிக்கை மூலம் தொலைவைக் கணக்கிட்டுக் காட்டுங் கருவி.

**peen** : *(எந்.)* **சுத்தி மென் நுனி**: உலோக வேலைத் தொழிலாளர் கள் பயன்படுத்தும் சுத்தியல் தலைப்பின் மெல்லிய நுனி.


**peening** : *(உலோ.வே.)* **சமதள மாக்கல்** : சுத்தியலின் தலைப்பின் மென் நுனியினால் ஓர் உலோக மேற்பரப்பினை அடித்தல் அல்லது சமதளமாக்குதல்.

**peg : ஆப்பு :** *அறைகலன்களின் உறுப்புகளை ஒன்று சேர்த்து இணைப்பதற்கு ஆணிகளுக்குப் பதிலாகப் பயன்படும் மரத்தினாலான முளை.*

**pellucid : தெள்ளத் தெளிவான :** தெள்ளத் தெளிவான; ஒளி எளிதில் ஊடுருவிச் செல்லக்கூடிய.

**peltier effect:** *(மின்.)* **இணைப்பு மின்னோட்ட விளைவு :** ஒன்று போல் இல்லாத இரண்டு பொருள்களின் இணைப்பைச் சுற்றியுள்ள பரப்பில் வெப்பத்தைக் குறைப்பதற்காக அந்த இணைப்பின் வழியாகப் பாயும் மின்னோட்டத்தின் செயற்பாடு.

**pelvis :** *(உட.)* **இடுப்பெலும்பு :** கால்கள் இணைக்கப் பட்டிருக்கும் உடலின் இடுப்பு வளையத்திலுள்ள எலும்புகள்.



இடுப்பு எலும்பு

**pendant: பதக்கம்:** கழுத்தணியில் கோக்கப்பட்டுள்ள தொங்கணி.

**pendant switch :** *(மின்.)* **பதக்க விசை :** முகட்டிலிருந்து தொங்கும் ஒரு கயிற்றில் இணைக்கப்பட்டுள்ள ஒரு சிறிய அழுத்துப் பொத்தான் விசை. முகட்டிலுள்ள விளக்குகளை இயக்குவதற்குப் பயன்படுகிறது.

**pendulum : ஊசல் :** ஒரு நிலையான புள்ளியிலிருந்து தொங்குகிற ஒரு பொருள். இது கடிகாரத்தின் ஊசல் போன்று இருபுறமும் தங்கு தடையின்றி ஊசலாடக் கூடியது.

**penetrating oil : ஊடுருவு எண்ணெய் :** துருப்பிடித்த அல்லது அரிக்கப்பட்ட உறுப்புகளை எளிதாக இயக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஊடுருவிச் செல்லக்கூடிய ஒரு தனி வகை எண்ணெய்.

**penetration :** *(பற்.)* **ஊடுறுவுத் திறன் :** மதிப்புக் குறைந்த உலோகத்தினுள் ஊடுருவிச் செல்லும் திறனளவு. இது அந்த உலோகத்தின் மேற்பரப்பைக் கொண்டு அளவிடப்படுகிறது.

**penetrometer :** *(குழை.)* **ஊடுருவு மானி :** திடப்பொருள்களின் மேற்பரப்பில் ஊடுருவும் திறனை அளவிடுவதற்கான ஒரு கருவி.

**penicillin:** *(மருந்.)* **பெனிசிலின் :** பூஞ்சக் காளானில் முதலில் கண்டுபிடிக்கப்பட்டுச் சில நோய் நுண்மங்களின் வளர்ச்சியைத் தடுக்கப் பயன்படும் மருந்து. நோய் நுண்மங்களை அழிக்கும் மருந்துகளில் மிகுந்த வலிமையுடையது. இது நோயாளிக்குத் தீங்கு எதுவும் செய்வதில்லை.

**penny:** *(மர;வே.)* **பென்னி:** ஆணிகளின் நீளத்தைக் குறிக்கும் ஒரு சொல். பத்துப் பென்னி என்பது ஓர் ஆணியின் 3" நீளத்தைக் குறிக்கும். ஆதியில் 'பென்னி' என்பது நூற்றுக்கு விலையைக் குறித்தது.

**panny-weight: பென்னி எடை:** இருபத்து நான்கு குன்றிமணி எடை அளவு.

**pentagon:** *(கணி.)* **ஐங்கோணம்:** ஐந்து பக்கங்கள் கொண்ட ஓர் உருவம்.

**pentode:** *(மின்.)* **ஐம்முனையம்:** கம்பியில்லாத் தந்தி தடுக்கிதழ்களில் ஐந்து மின்வாய்கள் கொண்ட எலெக்ட்ரானிக் குழல்.

**penumbra; அரைநிழல்:** பூமி, நிலவு இணை நிழலான திண்ணிழற்பகுதி சூழ்ந்த அரைநிழல் வட்டம்.

**percentage:** *(கணி;எந்.)* **விழுக்காடு:** நூற்றில் பகுதி; சதவீதம்; நூற்று விழுக்காடு.

**percentage of modulation:** *(மின்.)* **அலைமாற்ற வீதம்:** இயல்

பான ஊர்தி மதிப்பளவிலிருந்து, அலைமாற்றம் காரணமாக மிக உயர்ந்த அளவுக்கு ஏற்படும் கோட்டம். இது சதவீத அளவில் குறிக்கப்படுகிறது.

**percentage of ripple**: *(மின்.)* **அதிர்வலை வீதம்**: சராசரி வெளிப்பாட்டு மின்னழுத்த மதிப்பளவில் அதிர்வலை மின்னழுத்தத்தின் பயன் மதிப்பளவின் வீத அளவு. இது சதவீதத்தில் குறிக்கப்படுகிறது.

**perch**: **அளவுகோல்**: கல் வேலைப்பாட்டில் மாற்றமுறு அளவு. இது சுமார் 25 கன அடி அளவுடையது.

**perfecting press**: *(அச்சு.)* **இருபக்க அச்சுப்பொறி**: காகிதத்தின் இரு புறங்களிலும் ஒரே சமயத்தில் அச்சிடக்கூடிய வகையில் இரு அச்சுப் பதிவு நீள் உருளைகளையுடைய அச்சு எந்திரம்.

**perforating**: *(அச்சு.)* **துளையிடல்**: தாளில் முத்திரைகளுக்கான சூழ்வரிசைத் துளையிடுதல்; கிழிப்பதற்கு வசதியான துளை வரிசை.

**perforating machine**: *(அச்சு.)* **துளையிடு கருவி**: தாளைக் கிழிப்பதற்கு வசதியாகத் தாளில் துளையிடுவதற்குப் பயன்படும் ஒரு கருவி.

**perforating rule**: *(அச்சு,)* **துளையிடு உருளை**: ஒரே இயக்கத்தில் அச்சடித்தல், துளையிடுதல் ஆகிய இரு பணிகளையும் செய்யக்கூடிய அச்சு உருளை.

**performance-type glider**: *(வானூ.)* **செயல்திறன் சறுக்கு விமானம்**: மிக உயர்ந்த அளவு செயல்திறன் வாய்ந்த ஒரு சறுக்கு விமானம்.

**perigynous**: *(தாவ.)* **சூலகப் பூவிழை**: கருவகத்தை அல்லது சூலகத்தைச் சுற்றிலும் பூவிழைகளையுடைய தாவரம்.



சூலகப் பூவிழை

**perimeter**: *(வரை. க.)* **சுற்றளவு**: வட்டமான சுற்றுவரை உருவின் நீளம்.

**periodical**: *(அச்சு.)* **பருவ இதழ்**: ஒழுங்கான கால இடைவெளிகளில் வெளியாகும் பத்திரிகை அல்லது இதழ்.

**periodic arrangement**: *(வேதி.)* **எண்மானப் பட்டியல்**: ஒத்த வேதியியற் பண்புகள் ஒரே ஒழுங்காகத் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட தனிமங்களின் அணு எண்படியான வரிசைப் பட்டியல்.

**periodic system**: *(வேதி.)* **அணு எண்வாரிப் பட்டியல்**: ஒத்த வேதியியல் பண்புகள் ஒரே ஒழுங்காகத் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட தொகுதிகளில் சேருகின்ற தனிமங்களின் அணு எண் வாரியான பட்டியல். இந்தத் தனிமங்கள், ஒத்த தனிமங்கள் ஒரே நேர் வரிசையில் வருமாறு குறுக்கு வரிசைகளில் அமைக்கப்படுகின்றன. தனிமம் எந்த வரிசையில் உள்ளது என்பதைப் பார்த்து அது எந்த வகையான தனிமம் என்பதைக் கண்டு கொள்ளலாம்.

**peripheral speed**: *(எந்.)* **பரிதி வேகம்**: ஒரு சக்கரம், அல்லது சுழல்தண்டு போன்ற உறுப்புகள் வட்டப்பரப்பின் சுற்றுக் கோட்டில் ஒரு நிமிடத்திற்குச் சுழலும் சுழற்சிகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடும் வேகம்.

**periphery**: *(கணி.)* **பரிதி**: வட்டம், நீள்வட்டம் போன்ற உருவங்களின் வட்டப்பரப்பின் சுற்றுக் கோடு.

**periscope**: **புறக்காட்சிக் கருவி**: நீர்மூழ்கிக் கப்பலின் முகட்டுமேற்

பரப்புக் காட்சிக் கருவி; பாதுகாப்புக் குழியின் புறக்காட்சிக் கருவி.

**peristyle:** *(க.க.)* **சுற்றுத் தூண் வரிசை:** கோயில், மடம், மண்டபம் முதலியவற்றைச் சுற்றிலும் உள்ள தூண் வரிசை.

**permalloy:** *(மின்.)* **காந்தக் கூருணர்வு உலோகக்கலவை:** இரும்பு, நிக்கல், கோபால்ட், குரோமியம், வனேடியம், மாலிப்டினம் ஆகிய உலோகங்கள் சேர்ந்த காந்தக் கூருணர்வுடைய உலோகக் கலவை.

**permanent load:** *(பொறி.)* **நிலைச் சுமை:** எந்திரத்தில் அதன் கட்டமைப்புச் சுமை போன்ற ஒரு போதும் மாறாத நிலையான சுமையின் அளவு.

**permanent magnet:** *(மின்.)* **நிலைக் காந்தம்:** ஒரு காந்த எஃகு தான் பெற்ற காந்த சக்தியை ஒரு போதும் இழக்காமல் ஒரு காந்தப் புலத்தின் ஆற்றலுடன் நிரந்தரமாக இருத்தி வைத்துக் கொள்கிறது. இக்காந்தம் நிலைக் காந்தம் எனப்படும்.

**permanganate:** *(வேதி.)* **பெர் மாங்கனேட்** ($HMnO_4$): பெர்மாங்கனிக் அமிலத்தின் உப்பு. இது அடர்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

**permeability:** *(மின்.)* **கசிவுத் திறன்:** ஊறி உட்புக இடந்தரும் திறன்.

**permeability curve:** *(மின்.)* **ஊடுருவுதிறன் வளைகோடு:** காந்தமூட்டும் விசையின் அளவு மாறுபடும்போது, ஒரு பொருளின் வழியே உண்டாகும் காந்தவிசையின் அடர்த்தியை அல்லது கோடுகளின் எண்ணிக்கையைக் குறிக்கும் வரைபடத்திலுள்ள ஒரு வளை கோடு.

**permeameter:** *(மின்.)* **காந்த விசைமானி:** ஒரு பொருளின் வழியாகச் செல்லும் காந்த விசைக் கோடுகளின் எண்ணிக்கையையும், காந்தமூட்டும் விசையினையும் அளவிடுவதற்குப் பயன்படும் ஒரு கருவி.

**permutation:** *(கணி.)* **முறை மாற்றம்:** ஒரு தொகுதியில் அடங்கிய பொருட்கள் ஒன்று மாற்றி ஒன்று வரிசை மாறும் ஒழுங்கமைவு.

**perpend:** *(க.க.)* **ஊடுகல்:** சுவரின் ஒரு கல்லிலிருந்து மற்றொரு பக்கத்திற்கு அதனூடே செல்லும் கல்.

**perpendicular:** **செங்குத்துக் கோடு:** வழிகோட்டிற்கு அல்லது தளத்திற்குச் செங்குத்தாக உள்ள கோடு.

**perron:** *(க.க.)* **வாயிற்படி மேடை:** ஒரு கட்டிடத்திற்கு வெளியே முதல் மாடிக்குச் செல்ல அமைந்துள்ள வாயிற்படி.

**persimmon :** *(தாவ.)* **ஈச்சமரம் :** அமெரிக்கவகை ஈச்சமரம். இது பெரிதாக வளர்வதில்லை. அதனால் இதற்கு வாணிக மதிப்பு அதிகம் இல்லை. இதன் வெட்டு மரம் மஞ்சள் நிறமுடையது; அதில் கறுப்புக்கோடுகள் இருக்கும். இது வலுவானது. மிகுந்த பளபளப்புடையது. பில்லியர்ட்கோல் மேலடை மெல்லொட்டுப் பலகை செய்யவும் இது பயன் படுகிறது.

**persistence of vision : பார்வை எதிர்ப்பாற்றல்:** ஒருபிம்பம் உருவாவதற்குக் காரணமாக ஒளி நின்ற பிறகும் 1/12 வினாடி வரை அந்தப்பிம்பம் கண்ணில் தொடர்ந்து நிலைத்திருக்கும். கண் வேதியியல் முறையில் செயற்படுவதும், வேதியியல்பொருட்கள் மீண்டும் பழைய நிலைக்கும் உடனடியாகத் திரும்புவதில்லை என்பதும் இதற்குக்


காரணம். இதனாலேயே, திரைப் படச்சுருளில் எடுக்கப்படும் வெவ்வேறு படங்கள் தொடர்ச்சியான ஒரே படமாக நமக்குத் தோன்று கிறது.

**personal equation : திருத்தச் சமன்பாடு :** கருவிகாட்டும் கணக் கெடுப்பவர் அந்தக் கணக்கினைச் சரியாக எடுக்கும் பாங்கற்றவராக இருப்பதன் காரணமாக, அக் கணக்கில் செய்ய வேண்டிய திருத்தம்.

**perspective ; பரப்புத் தோற்றம் :** ஒரு சமதளப் பரப்பில் உள்ள பொருட்கள் கண்ணுக்குத் தோன்றுகிற அதே தோற்றத்தில் காட்சிப் படங்களை வரைந்து காட்டுதல்.

**persuader : நெம்பு கருவி :** கண மான பொருட்களைக் கையால் நகர்த்துவதற்கு உதவக் கூடிய கடப்பாறை, நெம்புகோல் போன்ற கருவிகள்.

**pestle : சிறு உலக்கை :** உரலில்



சிறு உலக்கை

பொருட்களை இடிப்பதற்குப் பயன் படும் கருவி.

**pet cock: அடைப்புக்குமிழ்:** நீராவி முதலியவற்றை வெளியிடுவதற் கான சிறு அடைப்பிதழ்.

**petrochemicals : பெட்ரோலிய வேதியியல் பொருட்கள் :** பெட் ரோலியத்திலுள்ள மூலப்பொருட் களிலிருந்து தயாரிக்கப்படும் வேதி யியல் பொருட்கள்.

**petrography : கற்பாறையியல் :** கற்பாறைகளின் அமைப்பு, உரு வாக்கம் முதலியவற்றை ஆராய்ந் தறிதல்.

**petrol : கல்லெண்ணெய் -(பெட் ரோல்) :** பொறி வண்டிகளுக்கும், விமானம் முதலியவற்றுக்கும் பயன்படும் தூய்மையாக்கப்பட்ட நில எண்ணெய். அமெரிக்காவில் இதனை "கேசோலின்" என்பர்.

**petroleum :** (வேதி.) **பெட்ரோ லியம் :** உள் வெப்பாலைகளிலும் பிறபொறிகளிலும் எரிபொருளா கப் பயன்படும் நிலப்படுகைக்குரிய தாது எண்ணெய்.

**pew:** (க.க.) **சூழிருக்கை :** திருக் கோயில்களிலுள்ள குடும்பத்தின ருக்குக்கான சூழிருக்கைத் தொகுதி.

**pewter :** (உலோ.) **பியூட்டர் :** வெள்ளீயமும் காரீயமும் கலந்த சாம்பல் நிற உலோகக் கலவை.

**phaeton:** (தானி.) **திறப்புவண்டி:** இரட்டைக் குதிரைத் திறப்பு. இதில் மடக்கக்கூடிய காற்றுத் தடுப்பும் பக்கத்திரைகளும் இருக் கும்.

**phantom drawing :** (வரை.) **புனைவுரு வரைபடம் :** ஒரு திட்ட வரை படத்தில் கருத்துருவைக் காட்டும் வகையில் புள்ளிகளால் வரையப்பட்டுள்ள பகுதி.

**pharmaceuticals:** (வேதி.) **ஆக்க மருந்து :** மருந்துக் கடைகளில் ஆக்கம் செய்து விற்பனை செய் யப்படும் மருந்துகள் மற்றும் வேதி யியற் பொருட்கள்.

**phase :** (மின்.) **மின்னோட்டப் படி நிலை :** மாறுபட்ட அலை இயக் கத்தில் செல்லும் மாற்று மின் னோட்ட இயக்கப் படிநிலை.

**phase angle :** (மின்.) **மாற்று நிலைக் கோணம் :** மாற்று மின் னோட்டச் சுற்று வழியில் மின் னோட்ட இயக்கப் படிநிலையைக் குறிக்கும் கோணம்.

**phase meter :** (மின்.) **மின் னோட்டப் படிநிலை மானி :** மின்

சுற்று வழியில் அலைவெண்ணைக் குறிக்கும் மானி. இதனை அலை வெண் மானி என்றும் கூறுவர்.

**phenol :** (வேதி.) **கரியகக் காடி:** ($C_6H_5OH$) ஒரு படிகப் பொருள் கரி எண்ணெயிலிருந்து (கீல்) ஓரளவு எடுக்கப்படுகிறது. சோடியம் பென்சைன் சல்ஃபொனேட்டை காரச்சோடாவுடன் இணைத்துச் செயற்கை முறையிலும் தயாரிக்கப் படுகிறது. கிருமி நீக்கியாகப் பயன்படுகிறது.

**phenolic-resins molding type:** (வேதி;குழை.) **பெனோலிக் பிசின் வார்ப்படம் :** பிளாஸ்டிக் குடும்பத்தில் மிகப் பழமையானது; மிக முக்கியமானது. குறைந்த செலவில் கிடைக்கக்கூடியது; பயனுள்ள பண்பியல்புகளைக் கொண்டது. இவற்றின் வெப்பத்தை எதிர்க்கும் தன்மையும், பெரும்பாலான அரிமானப் பொருட்களை எதிர்க்கும் தன்மையும் முக்கியமானது. இது மின் கடத்தாப் பொருளாகும். எனவே இதைக் கொண்டு மின் செருகிகள் இணைப்புக் கைபிடிகள், அடைப்பான்கள் போன்ற சாதனங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**pheno plast :** (வேதி; குழை) **பெனோ பிளாஸ்ட்:** பெனால் ஆல்டிஹைட் பிசின்களைக் குறிக்கும் பொதுவான சொல். இதனை "பெனோலிக்ஸ்" என்றும் கூறுவர்.

**phonograph :** (மின்.) **இசைப் பெட்டி :** நீள் உருளைகளைப் பயன் படுத்திச் செய்யப்பட்ட பழைய ஒலிப்பதிவு முறை இசைப் பெட்டி.

**phonography :** (மின்.) **ஒலிப் பதிவுக் கருவி :** ஒலிகளைப் பதிவு செய்யும் கருவிகொண்டு தானே ஒலிப்பதிவு செய்யும் கருவி.

**phosphor bronze :** (உலோ.) **பாஸ்போர் வெண்கலம் :** தாமிரம், வெள்ளீயம் ஆகியவற்றுடன் சிறிதளவு பாஸ்பரம் கலந்த ஓர் உலோகக் கலவை. இது பெரும்பாலும் தாங்கிகள்செய்யப்பயன்படுகிறது.

**phosphorus :** (வேதி.) **பாஸ்பரஸ் :** இளமஞ்சள் நிறமுள்ள மெழுகு போன்ற திடப்பொருள். ஒப்பு அடர்த்தி 1.83; உருகுநிலை 44.4°C. இது எளிதில் தீப்பிடிக்கக் கூடியது. இதனை எப்போதும் தண்ணீரிலேயே அமிழ்த்து வைத்திருக்கவேண்டும். இது சிறுசிறு குச்சிகளாக விற்பனை செய்யப் படுகிறது.

**photo-chemistry :** (வேதி.) **ஒளிவேதியியல்:** பொருட்களின் மீது ஒளியின் விளைவுகள் குறித்து ஆராயும் வேதியியல் ஒளிப்படக் கலையிலும் ஒளி வேதியியல் மின்கலங்களிலும் இந்த விளைவுகள் ஏற்படுகின்றன.

**photo composing :** (அச்சு.) **ஒளிப்பட அச்சுக்கோப்பு:** ஒளிப்பட முறையில் அச்சுக்கோக்கும் முறை.

**photo-elasticity :** (குழை.) **ஒளி நெகிழ்திறம் :** ஒரு செல்லுலாய்ட் அல்லது கண்ணாடி மாதிரியில் இரட்டை ஒளிக்கோட்டத்தை உண்டாக்குவதற்குப் போதுமான நெகிழ்திறன் இழுவிசை பற்றிய ஆய்வு.

**photo electric cell :** (மின்.) **ஒளி மின்கலம் :** ஒளியாற்றலை மின்னாற்றலாக மாற்றக் கூடிய ஒரு சாதனம். ஒளி ஆதாரத்தின் மூலம் தானாகக் கட்டுப்படுத்துவதற்கு இது முக்கியமாகப் பயன் படுகிறது.

**photo electric effect :** (மின்.) **ஒளிமின் விளைவு :** சில பொருட்களின் மீது ஒளிபடும் போது, எலெக்ட்ரான்களை வெளியிடும் இயல்பு.

**photo electrons** : *(மின்)* **ஒளி எலெக்ட்ரான்கள்:** *ஒளியின் காரண மாக வெளியிடப்படும் எலெக்ட் ரான்கள்.*

**phto-engraving** : *(அச்சு.)* **ஒளிச் செதுக்கு வேலை :** *ஒளிப்பட உத்தி மூலமாக செதுக்கு வேலைப்பாடு கள் செய்யும் முறை.*

**photography** : *(வேதி.)* **ஒளிப் படக்கலை :** *ஒளியுணர்வுடைய தகடு, படச்சுருள், தாள் ஆகிய வற்றில் ஒளி படியச் செய்து, சில வேதியியற் பொருட்களைக் கொண்டு அவற்றைப் பக்குவம் செய்வதன் வாயிலாக உருவங் களைப் பதிவு செய்யும் முறை.*

**photagravure** ; *(அச்சு.)* **ஒளிப் பட மறிபடிவத் தகட்டுச்செதுக்குரு:** *ஒளிப்பட மறிபடிவத்தை உலோ கத் தகட்டில் பதியவைத்துச் செதுக்குவது மூலமாக ஒப்புருவம் எடுத்தல்.*

**photometer** : *(இயற்.)* **ஒளிச் செறிவுமானி:** *ஒளியின் செறிவினை அளவிடுவதற்கு அல்லது பல்வேறு ஒளிகளின் செறிவினை ஒப்பிடுவ தற்குப் பயன்படும் ஒரு கருவி.*

**photomicrograph** : *(உலோ.)* **உருப்பெருக்கு ஒளிப்படம்** : *உருப் பெருக்காடியினால் விரிவாக்கம் செய்யப்பட்ட பொருளின் ஒளிப் படம். உருப் பெருக்காடியையும், ஒளிப்படக் கருவியையும் இணைத்து இந்தப்படம் எடுக்கப் படுகிறது. உலோகப் பொருட் களின் விரிவாக்கம் 100 முதல் 500 மடங்குவரை அமைந்திருக்கும்.*

**photomultiplier** : *(மின்.)* **ஒளி விசைப்பெருக்கி:** *எதிர்முனையை ஒளி தாக்கும் போதும் எலெக்ட் ரான்கள் வெளிப்படுகின்றன. இந்த எலெக்ட்ரான்கள், தொகுப் புத் தகட்டினைத் தாக்குவதற்கு முன்பு, ஒரு துணைத் தகட்டு வரி சையினைத் தாக்கும்படி இயக்கப் படுகிறது. இதன் விளைவாக, துணை உமிழ்வு மூலம் மின் மிகைப்பு ஏற்படுகிறது.*

**photostat** : **ஒளி நகல் படவுருப் படிவம்:** *ஆவணங்கள், வரிவடிவங் கள் முதலியவற்றின் படியுருவங் களை எடுப்பதற்கான ஒளிப்பட அமைவு.*

**photosynthesis:** *(வேதி.)* **ஒளிச் சேர்க்கை:** *தாவரங்களின் இலை களில் சூரிய ஒளிபடும்போது, நீரி லிருந்தும் கார்பன்டையாக்சைடி லிருந்தும் தாவரங்கள் கார்போ ஹைட்ரேட்டுகளைத் தயாரித்துக் கொள்ளும் முறை.*

**photon:** *(மின்.)* **ஃபோட்டோன் :** *மின்காந்த விசையின் ஒரு சிறு கூறு.*

**photosensitive:** *(மின்.)* **ஒளி யுணர்வு:** *ஒளியின் மூலம் ஆற்ற லூட்டப்பட்ட தனது மேற்பரப்பி லிருந்து எலெக்ட்ரான்களை வெளி யிடும் ஒரு பொருளின் இயல்பு.*

**photosphere:** *(விண்.)* **ஒளிக் கோசம்:** *சூரியன், விண்மீன் முத லிய வான்கோளங்களைச் சூழ்ந் துள்ள ஒளிக்கோசம்.*

**photo-transistor** : **ஒளிமின் பெருக்கி:** *ஒரு வகை மின்பெருக்கி. இதில் ஒளிபடும்போது அதன் மின்னோட்டத் தடை வெகுவாகக் குறைக்கப்படுகிறது.*

**phototropic:** **ஒளிமுகச்சாய்வு:** *தாவரங்கள் ஒளியை நோக்கி நகர் தல் அல்லது வளைதல். இவற்றில் தண்டுகள் ஒளியை நோக்கி வளர் கின்றன.*

**photo tube:** *(மின்.)* **ஒளிக்குழல்:** *ஒளியுணர்வுப் பொருளைத் தனது உமிழ்வானாக அல்லது எதிர் முனையாகப் பயன்படுத்தும் ஒரு வெற்றிடக்குழல்.*

**photovoltaic:** *(மின்.)* **ஒளி வேதி யியல் விளைவு** : இரு பொருட்க ளின் இணைப்பில் ஒளிபடும் பொழுது மின்னழுத்தம் உண்டா தல்.

**photo-voltaic cell:** **ஒளி வேதியி யல் மின்கலம்:** இரண்டு வேறு பட்ட பொருட்கள் (தாமிரம், தாமிர ஆக்சைடு) இணையும் போது, ஒளிபடும்போது ஒரு மின் கலம் மின்விசையை உற்பத்தி செய்வது போல், மின்விசையை உற்பத்தி செய்யும் மின்கலம்.

**physical astronomy** : *(இயற்.)* **இயற்பியல் வானியல்** : வான் கோளங்களின் இயற்பியல் நிலை யையும் வேதியியல் நிலையையும் ஆராயும் அறிவியல் துறை.

**physical change** : *(இயற்.)* **இயற் பியல் மாற்றம்** : ஒரு பொருளின் தற்பண்புகள் மாறாத வகையில் ஏற்படும் மாற்றம். எடுத்துக் காட்டு: ஒரு பலகையை ரம்பத் தால் அறுத்துச் சிறுசிறு துண்டு களாக ஆக்குதல்.

**physical chemistry** : **இயற்பியல் வேதியல்** : இயற்பியல் சார்ந்த வேதியியல் கூறுகளையும், வேதி யியல் சார்ந்த இயற்பியல் பண்பு களையும், வேதியியல் இயைபு களோடு உடனடியாக ஏற்படும் இயற்பியல் மாற்றங்களையும் ஆராய்ந்தறியும் துறை.

**physical geography** : *(இயற்.)* **இயற்பியல் நிலவியல்** : இயற்கை அமைப்புகளைப் பற்றிக்கூறும் நில வியல்.

**physical metallurgy** : **இயற்பியல் உலோகவியல்** : உலோகங்களின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகளை ஆராய்ந்தறியும் துறை.

**physics** : **இயற்பியல்** : இயற் பொருள், ஆற்றல் ஆகியவற்றின் இயல்புகளைப் பற்றி ஆராயும் அறிவியல் துறை.

**physiology** : *(உட.)* **உடலியல்** : விலங்குகளும் தாவரங்களும் உள் ளிட்ட உயிரினங்களின் இயற்கைச் செயற்பாடுகளையும் தோற்றங் களையும் பற்றிய ஆய்வியல்.

**physiotherapy** : (நோயி.) **இயற் கை மருத்துவம்** : உடம்பு பிடித்து விடுதல். தூயகாற்று, மின்சாரம் முதலிய இயற்கை முறைகளினால் நோய்களுக்கு மருத்துவம் செய்யும் முறை.

**pi:** *(கணி.)* **பை:** வட்டத்திற்கும் விட்டத்திற்கும் சுற்று வரைக்கும் உள்ள தகவினைக் குறிக்கும் 'பை' என்ற வட்டலகின் அடையாளம். இது 'பை' என்ற ஒலிப்புடைய கிரேக்க எழுத்தினால் குறிக்கப்படு கிறது.

பை ($\pi$) = 3. 1416.

**piano wire:** *(உலோ.)* **பியானோ கம்பி:** மிகவும் வலுவான ஒரு கம்பி. இதன் விறைப்பாக்க வலிமை ஒருசதுர அங்குலத்திற்கு 3, 00,000 முதல் 3,40,000 பவுண்டு ஆகும். இதில் கார்பன் 0.570, சிலிக்கன் 0.090, சல்பர் 0.011, பாஸ்பரம் 0.018, மாங்கனீஷ் 0.425 அடங்கி யுள்ளது.

**pica:** **பிக்கா:** ஓர் அங்குலத்தில் ஆறு வரிகள் அடுக்கக்கூடிய அள வுள்ள அச்சுருவப் படிவம்.

**picket:** *(தச்சு.வே.)* **கட்டுத்தறி:** வேலிகளுக்கான முளை. குதிரை முதலியவற்றைக் கட்டிவைப்பதற் கான முளை.

**pickle:** **வார்ப்படக்கரைசல்:** வார்ப் படங்களைத் தூய்மையாக்குவதற் குப் பயன்படும் கரைசல். இரும்பு வார்ப்படங்களுக்கு நீர்த்த கந்தக அமிலமும், பித்தளைக்கு நைட்ரிக் அமிலமும் பயன்படுகின்றன.

**pickling:** *(வார்.)* **வார்ப்புத் துப்புரவாக்கம்:** வார்ப்படங்களிலிருந்து மணல் போன்ற அயல் பொருள்களை நீக்கித் துப்புரவாக்கும் முறை.

**picric acid:** **பிக்ரிக் அமிலம்:** $(C_6H_2)NO_2)_{3,7}OH)$: ஒரேஉப்புமூலமுடைய அமிலம். பெனால்-சல்போனிக் அமிலத்தை நைட்ரிக் அமிலத்துடன் கலந்து தயாரிக்கப்படுகிறது. இது மஞ்சள் படிக வடிவில் இருக்கும். வெடி பொருட்கள் தயாரிப்பதற்கும், சாயத் தொழிலிலும் பயன்படுகிறது.

**pictorial:** **படமிகு இதழ்:** படங்கள் வாயிலாகத் தெரிவிக்கப்படுகிற செய்திகள் மிகுதியாகக் கொண்ட பத்திரிகை.

**picture element:** *(மின்.)* **படப் புள்ளி:** ஒரு காட்சியின் தோற்றம் பற்றிய தகவலைக் கொண்டுள்ள, கறுப்பு முதல் வெண்மை வரையிலான பல்வேறு செறிவளவுடைய சிறு பகுதிகள் அல்லது புள்ளிகள்.

**picture frequency:** *(மின்.)* **பட அலைவெண்:** தொலைக்காட்சியில் ஒரு வினாடி நேரத்தில் அலகிடப்படும் முழுப்படங்களின் எண்ணிக்கை.

**picture information:** *(மின்.)* **படத்தகவல்:** தொலைக்காட்சி ஒளிப்படக் கருவியினால் பதிவு செய்யப்பட்டு, தொலைக்காட்சி ஒளிபரப்பீட்டுக் கருவியை அலை மாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் படததகவல்.

**picture mould:** *(க.க.)* **படச் சட்டம்:** சுவரில் படங்களைத் தொங்கவிடுவதற்கான ஒரு வார்ப்படச் சட்டம்,

**picture noise:** **படஒலி:** ஒளி வாங்கிப் பெட்டிகளில் படங்கள் தாறுமாறாக ஏற்படவும், ஒளிப் புள்ளிகள் உண்டாகவும் செய்யக் கூடிய சைகைக் குறுக்கீடுகள்.

**picture signal:** **படச் சைகை:** தொலைக்காட்சியில் ஒளிப்படங்களை உருவாக்கும் மின் தூண்டல்கள்.

**picture tube:** **படக் குழல்:** தொலைக்காட்சிப் பெட்டியில். ஒளிக்கற்றைச் செறிவு மாற்றத்தின் மூலம் உருக்காட்சிகளை உண்டாக்கும் எதிர்மின் கதிர்வகைக் குழல்.

**piece work:** *(அச்சு.)* **துண்டு வேலை:** நேரக்கணக்கில் அல்லாமல் அளவுக்கேற்பக் கூலி பெறும் வேலை

**pier:** *(க.க.)* **அலை தாங்கி:** இரேவு; அலை இடைகரை; பாலந்தாங்கி.

**pier glass:** *(க.க.)* **நிலைக் கண்ணாடி:** முற்காலக் கட்டுமானங்களில் பலகணிகளுக்கிடையில் அமைக்கப்பட்டுள்ள நிலைக்கண்ணாடி.

**piezoelectricity:** *(மின்.)* **அழுத்த மின்விசை:** சில படிகங்களின் மீது குறிப்பிட்ட திசைகளில் அழுத்தம் செலுத்துவதன் மூலம் மின்னேற்றம் உண்டாக்குதல்.

**piezometer:** **அழுத்தமானி:** பாய்மங்கள் அல்லது திரவங்கள் மீதான அழுத்தத்தை அளவிடுவதற்கான ஒரு அளவு கருவி.

**pig:** *(உலோ.)* **இரும்புப் பாளம்:** உலையிலிருந்து எடுக்கப்பட்ட நீள் இரும்புப் பாளம்.

**pigeon-hole:** **புறாமாடம்:** கடிதங்கள் முதலியவற்றை பிரித்து அடுக்கி வைப்பதற்கான புறாக் கூட்டறை.

**pig iron:** *(உலோ.)* **தேனிரும்பு:** உருக்கும் உலையிலிருந்து வாணி

கத்திற்கு வரும் வார்ப்பிரும்பு. இது பொதுவாக 45 கி.கி. எடையுள்ள பாளங்களாக இருக்கும்.

**pigment** : *(வேதி;அச்சு.)* **நிறமி** : வண்ணப் பொருளுக்கு அல்லது சாயப்பொருளுக்கு நிறம் சேர்க்கச் சேர்க்கப்படும் பொருள்.

**pigskin : பன்றித் தோல்** : பதனிட்ட பன்றித்தோல். வீட்டில் வளர்க்கப்படும் பன்றியின் தோலிலிருந்து நெடுநாள் உழைக்கக் கூடிய, தரமான தோலினைப் பதனிட்டு, கையுறைகள், சிகரெட் பெட்டிகள், கைப்பைகள் முதலியன தயாரிக்கிறார்கள்.

**pigtail** : *(மின்.)* **புரியிணைவு மின்**



புரியிணைவு மின்கடத்தி

**கடத்தி** : இணை மின்கடத்திகளின் அவிழ்முனைகளை புரியாகத் திரித்துத் தயாரிக்கப்படும் மின் கடத்திகள்.

**pilaster** : *(க.க.)* **சதுரத் தூண்** : அலை இடைகரையில் அல்லது சுவரில் நீட்டிக் கொண்டிருக்கும் சதுரத் தூண்.

**pile driver : பதிகால் எந்திரம்** : கட்டிட அடிப்படை தாங்கும் நீண்ட பதிகால்களை அடித்திறக்குவதற்கான எந்திரம்.

**piling** : *(பொறி.)* **பதிகால்** : ஆற்றின் சேற்று நிலத்தில் அடித்தளத்தை வலுப்படுத்துவதற்காக நிறுத்தி வைக்கப்படும் பாலக்கால்.

**pillar** : *(க.க.)* **தூண்** : கட்டுமானத்தைத் தாங்கி நிற்பதற்கான தூண்.

**pillar** : *(க.க.)* **தூண்** : ஒரு கட்டுமானத்தின் ஆதாரக்கால்.

**pillow block** : *(எந்.)* **முட்டுத் திண்டுக்கட்டை** : ஒரு சுழல் தண்டுக்கு முட்டுக்கொடுப்பதற்கான திண்டுக்கட்டை.

**pilot** : *(வானூ.)* **விமானம் ஓட்டி** : விமானம் பறப்பதைக் கட்டுப்படுத்தி இயக்குபவர்.

**pilot** : *(வானூ.)* **விமானம் ஓட்டி** : விமானப் பயணத்தைக் கட்டுப்படுத்தும் பகுதிகளை இயக்குபவர்.

**pilot balloon** : *(வானூ.)* **திசையறி புகைக் கூண்டு**: காற்றுவீசும் திசையையும் வேகத்தையும் கண்டறிவதற்காக மேலே பறக்கவிடப்படும் சிறு புகைக் கூண்டு.

**pilot drill** : *(கணி.)* **முன்னோடித் துரப்பணம்** : ஒரு பெரிய துரப்பணத்தைச் செலுத்துவதற்கு வசதியாக ஒரு முன்னோடித்துளையிடுவதற்குப் பயன்படும் சிறிய துரப்பணம்.

**pilot hole**: *(உலோ.)* **முன்னோடித் துளை** : ஒருபெரிய துளையிடுவதற்காகத் துரப்பணத்தைச் செலுத்துவதற்குப் பயன்படும் ஒரு சிறிய துளை.

**pilotless aircraft** : *(வண்.)* **ஆளில்லா விமானம்** : செலுத்துவதற்கு ஆளில்லாமல் இயங்கக் கூடிய ஒருவகை விமானம். இது தானியங்கும் சாதனம் அல்லது வானொலி ஆணை மூலம் இயக்கப்படுகிறது.

**pilot light** : *(மின்.)* **வழிகாட்டி விளக்கு** : ஒரு சுவர்ப்பெட்டியில் அல்லது கொள்கலத்தில் கட்டுப்பாட்டு விசையில் அதன் அருகே அமைக்கப்பட்டுள்ள ஒரு சிறு விளக்கு. இது அதனுடன் இணைக்கப்பட்டுள்ள சாதனம் இயங்குகிறதா என்பதைக் காட்டும்.

**pilot parachute** : *(வானூ.)* **முன்னோடி வான்குடை**: முதன்மையான வான்குடையின் நுனியில் இணைக்கப் பட்டுள்ள, திறப்புக் கயிறை

இழுத்ததும் முதன்மை வான்குடையை விரிக்கும்படி செய்யக்கூடிய ஒரு சிறிய துணை வான்குடை.

**pilot plant :** **முன் மாதிரி எந்திரம்.**

**pin :** *(தச்சு.வே.)* **பிணைப்பூசி ;** மரம் அல்லது உலோகத்தினாலான முளை.

**pincers:** **குறடு;** இரு கவர் உள்ள இடுக்குப் பொறி.

**pine :** *(தாவ.)* **தேவதாரு:** பசுமை மாறாத ஊசி இலை மரம். கடினமானது; கனமானது; கனரகக் கட்டுமானத்திற்குப் பயன்படக் கூடியது.

**ping :** *(தானி.)* **விண்ணொலி:** துப்பாக்கிக் குண்டு பாய்தல் அல்லது எஞ்சின் நீள் உருளை வெடித்தல் மூலம் உண்டாகும் விண்ணென்ற ஒலி.

**pinion :** *(பல்.)* **சிறகுப் பல்லிணை:** வடிவளவு எவ்வாறிருப்பினும், சரிவாக்கிய அல்லது குதிமுள்ளுடைய ஒரு சிறிய பல்லிணை.

**pin-knot:** *(மர.வே.)* **ஊசி முடிச்சு:** 1.27செ.மீக்கு மேற்படாத விட்டமுடைய ஒரு வகை முடிச்சு.

**pinnacle :** *(க.க.)* **கோபுர முகடு :** உயர்ந்த அல்லது மிக உயர்ந்த மோட்டு முகடு.

**pin punch ;** *(பொறி.)* **முளைத் தமருசி :** இறுக்கமாகப் பொருத்தியுள்ள முளைகளை வெளியே எடுப்பதற்குப் பயன்படும் ஒரு நீளமான மெல் தமருசி.

**pin spanner :** *(எந்.)* **முளைப்பு முடுக்கி:** சுற்றுப்புறப் பரப்பில் புரிமுடுக்கி முளைகள் நுழைவதற்குள்ள துவாரங்கள் கொண்ட வட்ட மரையாணிகளை முடுக்குவதற்குப் பயன்படும் முனைப்புரி முடுக்கி.

**pin-wheel:** *(பொறி.)* **சிறுசக்கரம்:** கடிகார மணியடிக்கும் நெம்பு கோலை உயர்த்தும் பற்களை விளிம்பில் கொண்ட சிறு சக்கரம்.

**pint :** **பிண்ட் :** நீர் முகத்தளவைச் சிற்றலகு. ஒரு காலனின் எட்டில் ஒரு பகுதி.

**pintle :** *(எந்.)* **தாழ்கட்டை :** சுழலுறுப்புக்கு ஊடச்சாக உதவும் தாழ்கட்டை.

**pipe :** *(உலோ.)* **குழாய் :** திரவங்கள் முதலியவற்றைக் கொண்டு செல்வதற்குப் பயன்படும் உட்புழையுடைய நீண்டகுழாய். குழாய்கள் எஃகு, இரும்பு, செம்பு, பித்தளை, உலோகக் கலவைகள் முதலியவற்றால் செய்யப்படுகிறது.

**pipe coupling :** *(கம்மி.)* **குழாய் இணைப்பி :** இரு குழாய்களை இணைப்பதற்குப் பயன்படும் மரையுள்ள குழல்.

**pipe cutter -** *(கம்மி.)* **குழாய் வெட்டி :** இரும்பு, எஃகுக் குழாய்களை வெட்டுவதற்குப் பயன்படும் கருவி. இதன் வெட்டுமுனை வளைவாக இருக்கும். இந்த முனையைக் குழியில் பதித்துச் சுற்றுவதன் மூலம் குழாய் வெட்டப்படுகிறது.

**pipe die :** *(கம்மி.)* **குழாய் மரை பொறிப்புக் கட்டை :** குழாய்களில் திருகிழைகளைப் பொறிப்பதற்குப் பயன்படும் திருகு தகட்டுக் கருவி.

**pipe thread :** *(எந்.)* **குழாய்த் திருகிழை :** குழாய்களிலும், குழல்களிலும் பயன்படும் 'V' வடிவத்திருகிழை. இது இறுக்கமான இணைப்புகளை அமைக்கப் பயன்படுகிறது.

**pipette** ; *(வேதி.)* **வடிகுழல் :** சிறு அளவான நீர்மங்களை அளவாக ஊற்றப் பயன்படும் ஆய்வுக்கூடக் கூர்முகக் குழாய்க்கலம்.

**pipe vise**: *(கம்மி.)* **குழாய்க்குறடு**: குழாய்க் குறடுகள் இருவகைப் படும். (1) சிறிய குழாய்களுக்கான 'V' வடிவத் தாடைகளுடைய கீல் பக்கமுடைய வகை; (2) பெரிய குழாய்களுக்கான சங்கிலிவகை.

**pipe wrench** : *(கம்மி.)* **குழாய்த் திருகுக் குறடு** : ரம்பப் பல் விளிம் புடைய, தாடைகள் கொண்ட, தக்கவாறு அமைத்துக் கொள்ளக் கூடிய ஒருவகைத் திருகுக்குறடு. இதன் தாடைகள் ரம்பப் பல் விளிம்புடையதாக இருப்பதால் அது குழாயை நன்கு பற்றிக் கொண்டு திரும்புகிறது.

**pique** : *(அ.க.)* **ஊடுதுகில்** : விறைப்பான ஊடு நூலுடைய பருத்தித் துகில்.

**piston** : *(பொறி.)* **உந்து தண்டு** : ஓர் எஞ்சினில் அல்லது இறைப் பானில் உள்ள நீர் உருளைக்குள் இயங்குகின்ற தண்டு. இத்தண்டு சரியாகப் பொருந்தியிருப்பதைப் பொறுத்து அழுத்தத் திறம்பாடு அமையும்.

**piston head** : *(தானி.)* **உந்து தண்டு முனை** : ஓர் உந்து தண் டின் மூடப்பட்ட மேல் முனை.

**piston pin**:*(தானி.)* **உந்து தண்டு முளை**: உந்து தண்டுடன் இணைப் புச் சலாகையை இணைக்கும் மேல் முனையை இணைக்கின்ற ஓர் உட்புழையுள்ள எஃகுச் சுழல் தண்டு. இது கெட்டிப்படுத்தப் பட்டதாகவும் மெருகேற்றப்பட்ட தாகவும் இருக்கும். இதனை "மணிக்கட்டு முளை" என்றும் கூறுவர்.

**piston pin bosses** : *(தானி.)* **உந்து தண்டு முளைக் குமிழ் :** உந்து தண்டு முளைக்குமிழ்: முளைகளைத் தாங்கும் உந்து தண்டின் பகுதிகள்.

**piston ring** : *(எந்.)* **உந்து தண்டு வளையம்** : ஓர் உந்து தண்டுக் குரிய வில்சுருள் பொதிந்த வளையம்.



உந்து தண்டு வளையம்

**piston rod**: *(எந்.)* **உந்து தண்டுச் சலாகை** : உந்து தண்டினை இயக் குகிற ஒரு சலாகை. இது கோட் டச் சுழல் தண்டின் குறுக்கு மேல் முனையுடன் இணைக்கப்பட்டி ருக்கும்.

**piston skirt** : *(தானி.)* **உந்து தண்டு விளிம்பு :** உந்து தண்டு முளைக்குக் கீழேயுள்ள பகுதி.

**piston slap** : *(தானி)* **உந்து தண்டு அதிர்வு** : உந்து தண்டு தனது விசை வீச்சினைத் தொடங் கும்போது திடீரெனச் சாய்தல் அல்லது அதிர்தல்.

**piston stroke** : *(தானி.)* **உந்து தண்டு இயக்கம் :** உந்து தண்டு அதன் நீள் உருளையில் ஒரு முறை முழுமையாக முன் பின் இயங்கு தல்.

**piston valve** : *(பொறி.)* **உந்து தண்டு ஓரதர்** : ஒரு நீள் உருளை இயங்கும் கூண்டினுள் காற்றுப் புழைகள் இருக்கும். இந்தப் புழை கள் உந்து தண்டு இயங்கும் போது திறந்து மூடும்.

**pitch** : *(வேதி;குழை.)* **நிலக்கீல்** கருநிறமான, சூட்டில் களியாக இளகும் தன்மையுடைய பசை போன்ற கட்டிப் பொருள். நீரில் கரையாதது. ஆனால் கார்பன் டை சல்பைடு பென்சோல் முதலி யவற்றில் ஓரளவு கரையக் கூடி யது.
(2) **இடைத் தொலையளவு :** எந்

திரங்களில் சக்கரப் பற்களின் இடைத் தொலையளவு·

**pitchblende :** *(கனிம.)* **பிட்ச் பிளண்டி :** யுரேனிய ஆக்சைடு வகை. கருமைநிறக் கனிமப் பொருள். நிலக்கீல் போல் பளபளப்புடையது;யுரேனியமும் ரேடியமும் அடங்கிய ஒரு தாதுப் பொருள்.

**pitch circle : வீச்செறி வட்டம் :** தூக்கி எறியும் வட்டக் கோட்டின் சுற்றளவு. வலைப் பின்னல் பல்லிணைத் தொடர்பு வட்டம்.

**pitch diameter :** *(பல்லி.)* **வீச்செறி வட்டவிட்டம் :** ஒரு பல்லிணைச் சக்கரத்தின் வீச்செறி வட்டத்தின் விட்டம்.

**pitch indicator :** *(வானூ.)* **வீச்செறி அளவி :** ஒரு விமானத்தில் வீச்செறி விசை வேகம் இருப்பதைச் சுட்டிக் காட்டும் ஒரு கருவி.

**pitch of a roof :** *(க.க.)* **சாய்வளவு :** மோட்டுச் சாய்வின் செவ்வு நிலை அளவு.

**pitch of a screw :** *(எந் )* **திருகு இடைத்தொலையளவு :** ஒரு திருகின் இழையில் ஒரு புள்ளியிலிருந்து அடுத்த சுற்றின் நேரிணையான புள்ளி வரையிலான தொலைவின் அளவு. இதனைத் திருகின் ஒரு சுழற்சிக்கான முன்னேற்ற அளவு என்றும் கூறுவர்.

**pitch of gears:** *(எந்.)* **பல்லிணை இடை வெளியளவு :** சக்கரப் பற்களின் வடிவளவினைக் குறிக்கும் பல்லிணைகளுக்கிடையிலான இடைவெளியளவு,

**pitch ratio :** *(வானூ.)* **வீச்செறி விகிதம் :** விமானச் சுழல் விசிறியின் வீச்செறிவுக்கும் அதன் விட்டத்திற்குமிடையிலான விகிதம்.

**pith knot :** *(மர.)* **உள்ளீட்டு முடிச்சு :** ஓர் உட்துளையுடைய, 1.27செ.மீ.க்கு மேற்படாமல் விட்டம் கொண்ட ஒருவகை முடிச்சு.

**pitman :** *(எந்.)* **இணைப்புக் கரம்:** ஒரு சுழல் எந்திரத்தை அதன் நேரெதிர் உறுப்புடன் இணைக்கும் தண்டு அல்லது கரம்.

**pitot tube :** *(வானூ.)* **நீள் உருளைக் குழாய் :** நீள் உருளை வடிகுழாய். இதன் ஒரு முனை மேல் நோக்கித் திறந்திருக்கும். இதனால் காற்று இதன் வாயை நேரடியாகச் சந்திக்கும்.

**pivoted casement :** *(க.க )* **சுழல் முளைப் பலகணி :** மேல் முனையிலும் கீழ்முனையிலும் சுழல் முளை மீது திருகி இயங்கும் அமைப்புடைய பலகணி.

**pivot pin : திருகு முளை :** திருகிச் சுழலும் ஆதாரமுடைய ஒரு முளை.

**placenta :** *(உட.)* **நச்சுக்கொடி** தாயின் வயிற்றிலுள்ள குழந்தையை தாயுடன் இணைக்கும் கனத்த கடற்பஞ்சு போன்ற கொடி இது. 20 × 2 54செ.மீ. அளவாக இருக்கும் இதன் வழியாகவே குழந்தைக்கு உணவுப் பொருட்கள் கிடைக்கின்றன.



நச்சுக் கொடி

**plages :** *(விண்)* **சூரிய ஒளித் திட்டுகள் :** சூரியனில் கண்ணால் பார்க்கக்கூடிய பரப்பில் பிரகாசமான ஒளித்திட்டுகளாகக் காணப்படும் கால்சியம் அல்லது ஹைட்ரஜன் ஆவிமேகங்கள்.

**plan : வரைபடம் :** நகரம், நகரப் பகுதி, நிலம், கட்டிடம் முதலியவற்றின் நிலவரைப்படிவ உருவ வரை படம்.

**planchet :** *(பட்.வே.)* **உருப் பெறா நாணயம் :** உலோகத் தகட்டிலிருந்து வெட்டப்பட்ட முத்திரைகள் எதுவும் பதிக்கப்படாமலிருக்கும் உருப்பெறாத நாணயம்.

**plane :** *(1)* **சமதளம் :** சரிமட்டமான சமதளப் பரப்பு. இரு புள்ளிகளை இணைக்கும் நேர்கோடு. அதே பரப்பில் அமைந்திருக்குமானால் அது சமதளம் ஆகும்.

**(2) இழைப்புளி :** உலோகம் அல்லது மரத்தை இழைத்துத் தளமட்டப்படுத்தும் கருவி.

**plane trigonometry :** *(கணி.)* **திரி கோண கணிதம்:** முக்கோணத்தின் கோணச் சிறை வீதங்களைக் கணித்து ஆராயும் கணிதவியல் பிரிவு: இதில் கோணங்களையும் பக்கங்களையும் தொடர்புபடுத்தி ஆறு சார்பலன்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவை கணிதத்தில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை:

**plane :** *(1)* **சமதளம் :** சமதளமான பரப்பு.

**(2) இழைப்புகருவி :** இழைத்து வழவழப்பாக்குவதற்கான கருவி.

*(3)* **விமானம் :** வான ஊர்தி

**planer :** *(எந்.)* **இழைப்புளி :** உலோகத்தை இழைத்துத் தளமட்டப்படுத்துவதற்கான இழைப்புக் கருவி.

**planetary electrons :** *(மின்.)* **கருமைய எலெக்ட்ரான் :** ஓர் அணுவின் கருமையத்தைச் சுற்றி வலம் வருவதாகக் கருதப்படும் எலெக்ட்ரான்கள்.

**planetary hour :** **கோளநேரம் :** இயற்பகலின் அல்லது இயலிரவின் பன்னிரண்டில் ஒரு கூறு வேலை.

**planetary influence:** **கோள் விளைவு :** கிரகபலன்.

**planetary system :** **கதிரவன் மண்டலம் :**

**planetesimal :** **கோளணு :** குளிர் நிலையில் கோள்கள் திரண்டு உருவாவதற்குக் காரணமாக இருந்ததாகக் கருதப்படும் கோள் நிலை அணுத் துகள்.

**planetoid :** **குறுங்கோள் :** செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையே கதிரவனைச் சுற்றி வரும் ஆயிரக்கணக்கான சிறு கோளங்களில் ஒன்று.

**planimeter :** *(கணி.)* **தளமட்ட மானி :** சமதளப்பரப்பு எதனின் பரப்பளவையும் அளவிடுவதற்கான ஒரு கருவி. இக்கருவியின் முள்ளை எல்லையோரமாக நகர்த்தி அளவுகோலைப் பார்த்து பரப்பளவை அறியலாம்.

**planish :** *(உலோ.)* **மெருகூட்டுதல் :** உலோகப் பரப்புகளை சுத்தியால் அடித்து அல்லது உருட்டி மெருகூட்டுதல்.

**planishing hammer :** *(உலோ.)* **மெருகூட்டு சுத்தி :** ஒளிரும் முகமுடைய பரப்புகளில் ஒழுங்கற்ற பகுதிகளை நீக்கி மெருகூட்டுவதற்குப் பயன்படும் சுத்தியல். இதன் கொண்டையை வேலைக்குத் தகுந்தவாறு அமைத்துக் கொள்ளலாம்.

**plank :** *(மர.வே.)* **பலகை :** ஓர் அட்டையை விடக் கனமான அகலமான மரப்பலகை. 3.81-15 செ.மீ. கனமாகவும் 15செ.மீ அகலமாகவும் இருக்கும்.

**plankton ;** *(உயி.)* **மிதவை உயிர்கள் :** கடல் முதலியவற்றில் நீர்ப் பரப்பின் மேல்-அடித்தள ஆழங்களில் உள்ள மிதவை நுண்ம உயிரினத் தொகுதி.

**plankton :** *(உயி.)* **மிதவை உயிர்கள் :** கடல் முதலியவற்றில் நீர்ப் பரப்பின் மேல்-அடித்தள ஆழங்களில் உள்ள மிதவை நுண்ம உயிரினத் தொகுதி.

**planometer:** *(எந்.)* **தளப்பரப்புத் தகடு :** தளப்பரப்பு அளக்கப் பயன்படும் வார்ப்பிரும்புத் தகடு.

**plans and specifications:** *(பட்.)* **வரைபடங்களும் தனிக் குறிப்பீடுகளும் :** வரைப்படங்களும் முழு விவர அறிவுறுத்தங்களும்.

**plant engineer :** **எந்திரப் பொறியாளர் :** ஒரு குறிப்பிட்ட தொழிலுக்குரிய எந்திர நுட்பச் செயல் முறைகளைச் செயற்படுத்தும் பொறியாளர். தொழிற்சாலைக்குத் தேவையான எந்திரங்களைத் தயாரிப்பது இவரது பொறுப்பு.

**plaque :** *(க.க.)* **அலங்காரத் தட்டு :** உலோகம், மரம், தந்தம், வெண்களிமண் போன்றவற்றினாலான அலங்காரத் தட்டு.

**plasma :** *(உட.)* **நிணநீர் :** குருதியில் நுண்ணிழைமங்கள் மிதப்பதற்குரிய அடிப்படை ஊனீர்கூறு.

**plaskmodia :** *(நோயி.)* **ஒட்டுயிர் நுண்மம் :** மலேரியா போன்ற முறைக் காய்ச்சலுக்குக் காரணமான ஒட்டுயிர் நுண்மம்.

**plaster :** *(க.க.)* **அரைச்சாந்து :** களிக்கல்லை (ஜிப்சம்) போதிய அளவு சூடாக்கி அதிலுள்ள நீரை வெளியேற்றி, நீரற்ற எஞ்சிய பொருளைத் தூளாக்குவதன் மூலம் இது செய்யப்படுகிறது. இது சுவர்களிலும் முகடுகளிலும் பூசுவதற்குப் பயன்படுகிறது.

**plaster board :** *(க.க.)* **சாந்து அட்டை :** அரைச் சாந்தினால் செய்யப்பட்டு இருபுறம் காகிதம் ஒட்டிய அட்டை.

**plaster cast :** **சாந்து வார்ப்படம்:** வார்ப்புக் குடுவையாகவும் காரை மண்ணாகவும் பயன்படும் களிக்கல் தூளினாலான வார்ப்படம்.

**plastering :** **மருத்துவக் கட்டிடுதல் :** மருத்துவக்கட்டுக் கட்டி மருத்துவம் செய்தல்.

**plastering trowel:** **சாந்துக் கரண்டி:** சாந்து பூசப் பயன்படும் சட்டுவக் கரண்டி. இது எஃகினாலானது. 4"-5" அகலமும், 10"-12" நீளமும் உடையது. அலகுக்கு இணையாகக் கைப்பிடி கொண்டது.

**plaster lath:** *(க.க.)* **சாந்துப் பட்டிகை:** சுவர், தளம், மச்சு ஆகியவற்றில் சாந்து பொருத்துவதற்காக அமைக்கும் மரப்பட்டிகை.

**plaster of paris:** *(வேதி;க.க.)* **பாரிஸ் சாந்து:** வார்ப்புக் குடுவையாகவும் காரை மண்ணாகவும் பயன்படும் களிக்கல் தூள். வார்ப்படங்களும், மாதிரிப் படிவங்களும் செய்யப் பயன்படுகிறது.

**plastic:** *(குழை.)* **பிளாஸ்டிக்:** குழைத்து உருவாக்கத்தக்க வார்ப்புப் பொருள்.

**plastic art:** **குழைமக் கலை:** உருவாக்கம் சார்ந்த சிற்பம், மட்பாண்டத் தொழில் முதலிய கலைகள்.

**plasticine:** **செயற்கைக் களிமண் :** குழைவுருவாக்கத்திற்குரிய களிமண்ணினிடமாகப் பள்ளிகளில் பயன்படுத்தப்படும் செயற்கைக் குழைமப் பொருள்.

**plasticity:** *(இயற்.)* **குழைவியல்பு:** எளிதில் உருமாறுந் தன்மை. வார்ப்பட உருவத்தை ஏற்று இருத்திக் கொள்ளும் திறன்.

**plasticize:** *(குழை.)* **குழைமமாக்குதல்:** குழைபொருள் குழுமத்தை உருவாக்குதல் அல்லது வளமாக்குதல்.

**plasticizers:** *(குழை.)* **குழைமை உருவாக்கப்பொருள்:** குழைபொருள் குழுமத்தை உருவாக்குகிற அல்லது வளமாக்குகிற பொருள்.

**plastics: குழைபொருட் குழுமம்:** நிலக்கீல் முதல் சீமைக்காரை வரையில் பல்வேறு குழைவுப் பொருட்களின் தொகுதி. இவை சில அம்சங்களில் இயற்கையான பிசின்களை ஒத்திருப்பவை. எனினும், வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளில் வேறுபட்டவை. குழைம ஆதாரப் பொருட்களில் பல கூட்டிணைப் பொருட்கள் உள்ளன. எனவே, குழைமப் பொருட்களின் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருக்கிறது. இவற்றின் முக்கிய பிரிவுகளாவன:

1. **வெப்ப உருக்குழைமம் :** வெப்ப மூட்டப் பெற்ற நிலையில் உருக் கொடுக்கப் பெற்ற குழைமம். அமினோ, பாலிஸ்டர், ஆல்க்கிட், பைனோலிக் ஆகியவை இந்த வகையைச் சேர்ந்தவை.

2. **வெப்பியல் குழைமம்;** வெப்பத்தால் இளகிக் குளிரில் இறுகும் தன்மையுடைய குழைமம். ஸ்டைரீன் மீச்சேர்மங்கள், கூட்டு மீச்சேர்மங்கள், செல்லுலோசிக்ஸ். பாலித்திலீன், வினைல், நைலான்கள், பல்வேறு புளோரோ கார்பன்கள் இவ்வகையைச் சேர்ந்தவை.

குழைமப் பொருள் குடும்பத்து ஒவ்வொரு பொருளுக்கும் சில குறிப்பிட்ட பண்புகள் உண்டு. சில கடினப் பரப்புடையவை; சில அரிமான எதிர்ப்புடையவை; சில நெகிழ்திறனுடையவை; சில முரடானவை; சில மின் அழுத்தத்தைத் தாங்கக் கூடியவை.

**plastic surgery: ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை:** உடலில் முகம் போன்ற உறுப்புகளில் இழந்த அல்லது சேதமடைந்த பகுதிகளை அறுவைச் சிகிச்சை மூலம் புதுப்பித்தல் அல்லது புத்துருவாக்கம் செய்தல்.

**plastic wood:** *(மர.வே.)* **குழைம மரக்கூழ்:** காற்றுப்பட்டவுடனேயே கடினமாகிவிடக்கூடிய மரக்கூழ். இது வெடிப்புகளை அடைப்பதற்குப் பயன்படுத்தப் படுகிறது. இதனைப் பூசியவுடனேயே அதில் வண்ணம் பூசலாம்.

**plastisol:** *(குழை.)* **பிளாஸ்டிசோல்:** குழைமையாக்கும் பொருட்களுடன் கலந்து கலவைகளாகத் தயாரிக்கப்படும் எந்திரக் குழைமப் பொருள். இதைக் கொண்டு வார்ப்படம் செய்யலாம்; சுருள்கள் தயாரிக்கலாம். நெகிழ் திறனுடைய வார்ப்படங்கள் தயாரிக்கப் பெரும்பாலும் பயன்படுகிறது.

**plate:** *(மின்.)* **மின் தகடு:** ஒரு வெற்றிடக் குழலின் நேர்முனை. ஒரு குழலில் எலெக்ட்ரான்களை ஈர்க்கக்கூடிய பகுதி.

**plate circuit:** *(இயற்.)* **தகட்டு மின்சுற்றுவழி:** (1) மின்தகட்டிலிருந்து தகட்டு மின்னோட்டம் சுற்றும் ஒரு முழுமையான மின்சுற்று வழி.

(2) ஒரு வெற்றிடச் சூழலில் தகட்டு விசை சிதறுகிற ஒரு மின் சுற்றுவழி. இதில், எதிர்முனை தகடு, மின்சுமைகள், விசை ஆதாரம், இவை தொடர்பான பகுதிகள் ஆகியவை அடங்கும்.

**plate clutch:** *(தானி;எந்.)* **தகட்டு ஊடிணைப்பி:** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தகடுகளின் மூலம் விசையை அனுப்புகிற ஊடிணைப்பி. இத்தகடுகள் விற்சுருள்களின் அழுத்தத்தின் மூலம் பற்றி வைத்துக் கொள்ளப் படுகின்றன.

**plate condenser: தகட்டு மின் விசையேற்றி:** மாற்று உலோகத் தகடுகளை இணைத்து இரு மின் முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ள மின் விசையேற்றி, இத்தகடுகள் அப்பிரகம், மெழுகேற்றிய தாள், போன்றவற்றாலானதாக இருக்கும்.

**plate current: தகட்டு மின்னோட்டம்:** தகட்டு மின்சுற்று வழியில் பாய்கிற அதிர்வு நேர் மின்னோட்டம்.

**plate cylinder:** *(அச்சு.)* **தகட்டு நீள் உருளை:** ஒரு சுழல் அச்சு எந்திரத்தில் சுழல்கின்ற பகுதி. இதனுடன் வளைவுடைய அச்சுத்தகடுகள் இணைக்கப்படும்.

**plated bar;** *(உலோ.)* **தகட்டிரும்பு:** காய்ப்புடைய தகட்டு எஃகு. இது சலாகைகளாக இருக்கும். உலோகத்தைச் சூடாக்கிச் சுத்தியலால் அடித்துக் கடினமாக்கப்படுகிறது.

**plate modulation:** *(மின்.)* **தகட்டு அலைமாற்றம்:** அலைமாற்றச் சைகையானது, அலைமாற்ற நிலையின் தகட்டு மின்சுற்று வழிக்கு ஊட்டப்படுகிற ஓர் அலைமாற்ற மின்சுற்றுவழி.

**platen:** *(எந்.)* **தகட்டுப் பாளம்:** (1) உலோக வேலைப்பாடுகளில் உலோகத்தை அழுத்தித் தகடாக்குவதற்குப் பயன்படும் தகடு.
(2) அச்சகத்தில் அச்சுத்தாள் அழுத்தும் தகட்டுப் பாளம்.

**platen press:** *(அச்சு.)* **தகட்டுப் பாள அச்சு எந்திரம்:** அச்சிடும் போது காகிதமும் அச்சுப் படிவமும் தட்டையாகப் பொருந்தியிருக்கக் கூடிய அச்சு எந்திரம்.

**plate voltage:** *(இயற்.)* **தகட்டு மின்னழுத்தம்:** ஒரு வெற்றிக் குழலின் ஆதாரத்திற்கும் தகட்டுக்குமிடையே மின்விசை மூலம் அழுத்தி வைக்கப்பட்ட நேர் மின்னோட்ட மின்னழுத்தம்.

**platform:** *(க.க.)* **தள மேடை** தரையிலிருந்து உயரமாகக் கிடைமட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மரததினாலான அல்லது கட்டுமானத்திலான ஒரு மேடை.

**plating:** *(உலோ.)* **முலாம் பூசுதல்:** உலோகக் குழம்பில் அமிழ்த்துவதன் மூலம் அல்லது மின் பகுப்பு முறை மூலம் உலோக முலாம் பூசுதல்.

**platinite:** *(உலோ.)* **பிளாட்டினைட்:** 46% நிக்கல் எஃகு அடங்கிய ஓர் உலோகம். இது பிளாட்டினத்தைப் போன்று அதே அளவு வெப்ப விரிவாக்கக் குணகம் உடையது. இதனாலேயே இது மின் விளக்குக் குமிழ்கள் தயாரிப்பதில் பிளாட்டினத்திற்குப் பதிலாகப் பயன்படுகிறது.

**platinoid** *(உலோ.)* **பிளாட்டினாய்டு:** செம்பு, துத்தம், ஜெர்மன் வெள்ளி, டங்ஸ்டன் முதலிய உலோகங்கள் அடங்கிய உலோகக் கலவை. அணிகலன்கள், அறிவியல் கருவிகள் செய்யவும், சில தொழில்துறைச் செயல்முறைகளிலும் பயன்படுகிறது.

**platinum:** *(உலோ.)* **பிளாட்டினம்; விழுப்பொன்:** அணு எடை 78 கொண்ட மதிப்பு மிகுநத ஒண் சாம்பர் நிறமுடைய உலோகத் தனிமம். இதன் ஒப்பு அடர்த்தி 21.5. இது எளிதில் வளையும் தன்மையுடையது; துருப்பிடிக்காதது. அணிகலன் செய்யவும், அறிவியல் சாதனங்கள் செய்யவும் பயன்படுகிறது.

**plenum:** *(குளி;பத)* **பொருள் நிறை இடைவெளி:** பல்வேறு அறைகளுக்குக் காற்றைப் பகிர்ந்தளிப்பதற்கு முன்னர் அழுத்தப்பட்ட காற்றினை ஏற்றுக் கொள்கிற ஓர் அறை.

**pliant: ஒசிவான:** தொய்வான முறியாமல் எளிதில் வளையக் கூடிய.

**pliers:** *(எந்.)* **சாமணம்:** அகலமான, தட்டையான, சொரசொ

ரப்பான தாடைகளுடைய இடுக்கி போன்ற ஒரு கருவி.



சாமணம்

**pliers**: (உலோ.) **சாமணம்** : சிறு பொருள்களை இடுக்கிப் பிடிப்பதற்கான இடுக்குக் குறடு. இது பல்வேறு வகைகளிலும், வடிவளவுகளிலும் தயாரிக்கப்படுகிறது. சிலவற்றில் வெட்டு முனைகளும் உண்டு.


**plinth**. (க.க.) **தூண்பீடம்**: ஒரு தூணை அல்லது பீடத்தை அடிப்பகுதியையொட்டியுள்ள சதுர வடிவப் பகுதி.

**plotting points**: (கணி.) **மனையிட முனைகள்** : ஒரு வரைபடத்தில் மனையிடத்தை வரையறுக்கும் முனைகள்.

**plug**: (மின்.) **மின்செருகி** : மின் கருவிகளுக்கும், மின்வழங்கு ஆதாரங்களுக்குமிடையே இணைப்பு ஏற்படுத்துவதற்கெனச் செருகிப் பொருத்துவதற்குரிய சாதனம்.

**plug fuse**: (மின்.) **செருகு மின் காப்பிழை**: திருகு இழைத் தொடர்பு மூலம் நிலையில் பொருத்தப்படும் மின்காப்பு இழை.

**plug gauge**: (எந்.) **செருகு அளவி**: எந்திர வேலைப் பொருள்களின் உள்விட்டங்களை அளவிடுவதற்குப் பயன்படும் செருகு அளவி.



**plug tap**: (எந்.) **செருகுநாடா**: எந்திரங்கள் மூன்று வரிசைகளி இடையீட்டு நாடா: (1)தொடக்க நாடா; (2) செருகு நாடா; அடி நாடா.

**plug weld**: (பற்.) **செருகு பற்றாசு**: எந்திர உறுப்புகளில் ஒன்றில் அல்லது இரண்டிலும் உள்ள துவாரத்தின் வழியே பற்றாசு பொருத்தி தகடுகளை இணைக்கும் முறை.

**plumb**: (க.க.) **செங்குத்து**: சுவர் போன்று துல்லியமாக நேர் செங்குத்தாக இருக்கும் அமைப்பு.

**pulumbago**: **காரீயம்** : எழுதுகோலுக்காகப் பயன்படுத்தப்படும் ஈயத்தைப் போன்ற கரிவகை. இது மேற்பரப்புகளில் எளிதில் கடத்தாப் பொருளாகப் பூச்சு வேலைக்கும் பயன்படுகிறது.

**plumb and level**: (க.க.) **தூக்கு நூற்குண்டு** : துல்லியமான கிடைமட்டத்தையும், துல்லியமான செங்குத்தையும் அறிவதற்காகப் பயன்படும் உலோக அல்லது மர நூற்குண்டு.

**plumb bob**: (க.க.) **ஈயக்குண்டு**: கட்டிட வேலையில் பயன்படும் தூக்கு நூற்குண்டின் நுனியில் உள்ள ஈயக்குண்டு.

**plumber** : (கம்மி.) **குழாய் செப்பனிடுபவர்** : ஈயம், துத்தநாகம், வெள்ளீயம் முதலியன கொண்டு குழாய், தொட்டி முதலியவற்றைப் பழுதுபார்ப்பவர்.

**plumbing** : **குழாய் வேலை** : ஈயக் குழாய் முதலியவற்றைப் பொருத்துதல், பழுது பார்த்தல் போன்ற வேலை.

**plummet**: **தூக்கு நூல்**: செங்குத்து ஆழம் பார்ப்பதற்கான கருவியின் தூக்கு நூற்குண்டு.

**plutonium** : (உலோ.) **புளூட்டோனியம்/பொன்னாகம்** : யுரேனியத்திலிருந்து உண்டான ஒரு புதிய தனிமம். இதன் அணு எண் 94. யுரேனியம்$_{238}$ (அணு எண் 92) + 1 நியூட்ரான் = யுரேனியம்$_{239}$ — 1 எலெக்ட்ரான் — நெப்டியூனியம் (அணு எண் 95)—ஓர் இரண்டா

வது எலெக்ட்ரான்=புளூட்டோனியம் (அணு எண் 94). இது அணு ஆயுதங்களிலும், சில அணு உலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

**ply : படலம் :** பல அடுக்குகளாக உருவாக்கிய திண்மையின் ஒரு படலம். இத்திண்மையின் ஒவ்வொரு அடையும் ஒரு படலம் ஆகும்.

**plywood** : *(மர.வே.)* **ஒட்டுப் பலகை :** படலங்களின் இழைவரை ஒன்றற்கொன்று குறுக்காக வைத்து ஒட்டிச் செய்யப்படும் மெல்லிய வன் பலகை.

**pneolator** : *(எந்.)* **செயற்கைச் சுவாசக் கருவி:** இடம் விட்டு இடம் கொண்டு செல்லக்கூடிய தானாக இயங்கும் செயற்கைச் சுவாசக் கருவி.

**pneumatic** : *(பொறி.)* **காற்றுப் பட்டை :** காற்றடைத்த குழாய்ப் பட்டை.

**pneumatic brakes** : *(தானி.)* **காற்றுத் தடை :** காற்று அழுத்தம் அல்லது வெற்றிடம் மூலம் இயக்கப்படும் தடை.

**pneumatic dispatch: காற்றழுத்த இயக்க முறை :** காற்றழுத்தத்தினால் அல்லது காற்று வெளியேற்றத்தினால் இயக்கப்பட்டுக் குழாய்கள் வழியாகச் சிப்பங்கள் முதலியவற்றை இடம் பெயர்த்துக் கொண்டு செல்லும் முறை.

**pneumatic tire** : *(தானி.)* **காற்றுக் குழாய்ப் பட்டை :** காற்றடைத்த குழாய்ப் பட்டை.

**pneumatic tools** : *(போறி.)* **காற்றழுத்தக் கருவி:** காற்றழுத்தத்தின் மூலம் இயக்கப்படும் சாதனம்.

**pneumatic trough : வளிக்கொள் கலம் :** நீர் அல்லது பாதரசப் பரப்பின் மேல் ஜாடிகளில் காற்றினைத் திரட்டுவதற்கான கலம்.

**pock marks** : *(வண்.)* **அம்மைத் தழும்பு :** அம்மை நோயினால் உடலில் ஏற்படும் தழும்புகள் போன்ற வண்ணப் பரப்பு.

**point** : *(அச்சு.)* **அச்செழுத்துரு அலகு :** அச்செழுத்துருவின் ஓர் அலகு. ஓர் அலகு=.031837அங்.

**pointing** : *(க.க.)* **இணைப்புக் காரைப்பூச்சு :** கட்டுமானத்தில் இணைப்புக் காரைப்பூச்சு.

**point system** : *(அச்சு.)* **அச்செழுத்து அலகு முறை :** அச்செழுத்துகளை வார்ப்பதற்கான அளவை முறை.

**polar circle : துருவச் சக்கரம் :** நில முனைக்கோடி வட்டம்.

**pointing trowel** : *(க.க.)* **கூர் சட்டுவக் கரண்டி:** சுவர் இணைப்புகளில் கூர்மையாகச் சாந்து பூசவும், எஞ்சிய சாந்தினை அகற்றிச் சுத்தப்படுத்தவும் பயன்படும் சிறிய சட்டுவக்கரண்டி.


கூர் கரண்டி

**polar coordinates** : *(மின்.)* **துருவ ஆயத் தொலைவுகள் :** ஓர் ஏவரையின் பரிமாணத்தினால் வரையப்படும் ஏவரையும், தொடர்புக்கோட்டுடன் அதன் கோணமும் துருவ ஆயத்தொலைவுகள் எனப்படும்.

**polar disfance : துருவ கோணத் தொலைவு :** அண்மையிலுள்ள நில முனைக்கோடியிலிருந்து கோளப் புள்ளிக்குள்ள கோணத்தொலைவு.

**polarimeter : வக்கரிப்பு மானி :** ஒளிக்கதிர் வக்கரிப்புக் கோட்டமானி.

**polarity**: *(மின்.)* **துருவ முனைப்பு:** இருகோடிகளும் நிலவுலக முனைக் கோடிகளை நோக்கி முனைத்து

நிற்கும் காந்தக்கல், காந்த ஊசி முதலியவற்றின் இயல்பு; மின்னூட்டு முனைக்கோடி இயல்பு.

**polarization** : *(மின்.)* **மின் முனைப்பாக்கம்** : *அடிப்படை மின்கலத்தில், நேர்மின் தகட்டில் ஹைட்ரஜன் குமிழ்கள் சேர்தல். இதனால் அகத்தடை அதிகரித்து, மின்னோட்ட வலிமை குறைகிறது.*

**polarized light** : *(குழை.)* **ஒரு முக ஒளிக்கதிர்**: போக்கின் திசை ஒரு முகப்படுத்தப்பட்ட ஒளிக்கதிர்கள்.

**polar molecule** : *(மின்.)* **துருவ மூலக்கூறு** : ஒரு முனை எதிர் மின் முனையாகவும் இன்னொரு முனை நேர்மின் முனையாகவும் செயற்படுகிற ஒரு மூலக்கூறு. எடுத்துக்காட்டு ஹைட்ரஜன் குளோரைடு.

**polaroid** : *(மின்.)* **மின் முனைப் பூட்டி**: ஒளியை மின்முனைப்பாக்க மூட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் அயோடினும் கொய்னாவும் கலந்த ஒரு கூட்டுப் பொருளின் படிகங்களையுடைய தகடு.

**polar vectors**: *(மின்.)* **துருவ நேறியங்கள்** : ஒரு பொதுவான மையத்திலிருந்து அல்லது துருவத்திலிருந்து நீட்சியாகின்ற நேறியங்கள்.

**pole** : *(மின்.)* **(1) மின்முனை** : *மின்கலம் மின்கலத்தொகுதி அல்லது நேர்மின்னாக்கியின் இரு முனையங்களில் ஒன்று.*

**(2) துருவம்** : *ஒரு காந்தத்தின் காந்தமுனைப்புள்ள ஒரு முனை.*

**pole piece** : *(மின்.)* **துருவமுனை முகம்** : *ஒரு மின்னாக்கிப் புலத்தில் தலச்சுருணைகளைச் சுற்றிவைப்பதற்காகவுள்ள இரும்பு மென்தகட்டு உள்ளீடு.*

**pole pitch**: *(மின்.)* **துருவச்சாய் அளவு**: ஒரு மின்னாக்கிப் புலத்தில் இரு அண்டைத் துருவங்களின் மையங்களுக்கிடையிலான புற எல்லைத் தொலைவு.

**poles** : *(மின்.)* **மின் முனைப்புக் கோடிகள்** : *ஒரு மின் சுற்றுவழியின், மின்முனைப்புக் கோடிகள் (துருவங்கள்).*

**pole shoes** : *(மின்.)* **காந்த லாடம்** : *லாடம் போல் வளைந்த துருவ முனைக் காந்தம்.*

**polio** : *(நோயி.)* **இளம்பிள்ளை வாதம்** : குழந்தைகளின் முதுகுத் தண்டின் சாம்பல்நிற உட்பகுதியில் ஏற்படும் அழற்சி. இது ஒரு வகை நோய்க் கிருமியினால் உண்டாகிறது. இந்த நோய்க்கிருமிகள், மலத்தில் காணப்படுகின்றது. உடலுக்குள் இவை எவ்வாறு புகுகின்றன என்பது தெரியவில்லை. இந் நோய் பெரியவர்களையும் பாதிக்கிறது.

**polish** : **மெருகு** : தேய்ப்பதனால் உண்டாகும் மினுமினுப்பு அல்லது பளப்பளப்பு.

**polychrome: பல்வண்ணக்கலை:** *பல வண்ணங்களைக் கொண்டு பூச்சு வேலைப்பாடுகள் செய்தல். இந்தக் கலை எகிப்தில் தோன்றியது. இத்தாலியில் 16ஆம் நூற்றாண்டில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது.*

**polymers**: *(வேதி;குழை)* **மீச்சேர்மம்:** ஒரே வகைப்பட்ட சேர்மங்களின் அணுத்திரள்கள் இணைந்து வேதியியல் முறையில் மாறாமலேயே அணுத்திரள் எடைமானமும் இயற்பியல் பண்பும் மட்டும் மாறுபட்ட பிறிதுருச் சேர்மம்.

**polyester**: *(குழை.)* **பாலியஸ்டர்**: குழைமக் குடும்பத்தைச் சேர்ந்த செயற்கை இழைவகை. இரு நீரக அணு ஆல்கஹால்களையும், இரு

காடி மூலங்களுடைய அமிலங்களையும் எண்முகச் சேர்ம ஸ்டைரீனுடனும் பிறவற்றுடனும் இணையுமாறு செய்து பூரிதமற்ற பாலியஸ்டர் தயாரிக்கப்படுகிறது. திரவ வடிவில் இதனை எளிதில் கையாளலாம். இது வெப்பத்தையும், அரிமானத்தையும் தாங்கக் கூடியது. சிறிய மின்சாரச் சாதனங்கள், கட்டிடச் சேணங்கள் முதலியவை தயாரிக்கப் பயன்படுகிறது.

**polyethylene:** *(குழை.)* **பாலித்திலீன்:** வெப்பத்தால் இளகிக் குளிரில் இறுகும் இயல்புடையது. எத்திலீன் மீச் சேர்மங்களாலானது. கெட்டியான மெழுகு போன்றது. நீரினால் பாதிக்கப்படாதது. நெகிழ்வுடைய புட்டிகள் வெப்பத்தைத் தாங்கும் விரிப்புகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**polygon:** **பலகோணக் கட்டம்:** நான்கிற்கு மேற்பட்ட பக்கங்களையும், கோணங்களையும் உடைய வரைபடிவம்.

**polygon of forces:** **விசைகளின் பலகோணக் கட்டம்:** விசைகளின் முக்கோணங்களின் விரிவாக்கம், ஒரு பல கோணக் கட்டத்தின் பக்கங்களால் வரிசைப்படி அளவிலும் திசையிலும் பல விசைகள் குறிப்பிடப்படுமானால், அவை சம நிலையில் இருக்கும்.

**polymer:** *(குழை.)* **மீச்சேர்மம்:** ஒரே வகைப்பட்ட சேர்மங்களின் அணுத்திரள்கள் இணைந்து வேதியியல் முறையில் மாறாமலே அணுத்திரள் எடைமானமும் இயற்பியல் பண்பும் மட்டும் மாறுபட்டபிறதுருச் சேர்மம்.

**polymerization:** *(வேதி.)* **மீச்சேர்ம இணைவு:** ஒரே வகைப்பட்ட சேர்மங்களின் அணுத்திரள்கள் எடைமானமும் இயற்பியல் பண்பும் மட்டும் மாறுபட்ட பிறிதுருச் சேர்மமாக இணைதல். எடுத்துக்காட்டு: தாவரங்களில் ஒளிச்சேர்க்கையின் 6 பாரமால்டிஹைடு மூலக்கூறுகள் ($CH_2O$) பச்சையம் மூலமாக ஒரு சர்க்கரை ($C_6H_{12}O_6$) கூறாக மாறுதல்.

**polyphase:** *(மின்.)* **பன்னிலை:** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்னோட்ட இயக்கப் படிநிலை அல்லது மின்னியல் முறையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின் சுற்றுவழிகள்.


**polystyrene:** *(வேதி;குழை.)* **பாலிஸ்டைரீன்:** வெப்பத்தால் இளகிக் குளிரில் இறுகும் இயல்புடைய அமிலத்தை எதிர்க்கக்கூடிய ஒரு வகைப்பிசின். அமிலக் கொள்கலங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**polytechnic:** **பல தொழில் நுட்பப் பயிற்சியகம்:** பல தொழில் நுட்பங்கள் பயிற்றுவிப்பதற்கான பள்ளி அல்லது நிறுவனம்.

**polyvinyls:** *(குழை.)* **பாலிவினில்:** பாலிவினில் குளோரைடு. பாலிவினில் அசிட்டால், பாலிவினில் ஆல்கஹால் போன்றவை அடங்கிய ஒரு வேதியியல் பொருள் குடும்பம் முதலாவது, வினில் குளோரைடு மீச்சேர்மங்கள் அடங்கிய ஒரு குழைமப் பொருள். இது நீர், ஆல்கஹால், அமிலங்கள், காரங்கள் ஆகியவற்றை எதிர்க்கக் கூடியது.

**pons:** *(உட.)* **மூளைப் பாலம்:** மூளையின் இரு பாதிகளையும் இணைக்கும் நரம்பிழைப் பட்டை.

**pons varolli** *(உட.)* **மூளை இணைப்பு:** மூளையின் இரு பாதிகளையும் இணைத்து, மூளையின் பல்வேறு பகுதிகளையும் இணைக்கின்ற நரம்பிழைப் பட்டை.




மூளை இணைப்பு

**poplar:** *(மர.வே.)* **நெட்டிலிங்கம்:** ஒருவகை மரம்; மென்மையானது;

எடை குறைந்தது. வெள்ளை அல்லது இளம் பசு மஞ்சள் நிறத்தில் இருக்கும். இதில் எளிதில் வேலைப்பாடுகள் செய்யலாம். கலைப் பொருட்கள் செய்யப் பயன்படுகிறது.

**poppet**: *(எந்.)* **கடைசல் தலை**: கடைசல் எந்திரத்தின் தலைப் பாகம்.

**poppet volves**: *(பொறி.)* **கடைசல் திருகு**: தானியங்கிப் பொறியியலில் பயன்படக் கூடிய வட்டத் தகடு, தண்டோடும் கூடிய கடைசல் திருகுக் கருவி.



கடைசல் திருகு

**poppy heads**: *(க.க.)* **ஒப்பனை முகடு**: திருக்கோயில் இருக்கை முனையின் ஒப்பனை முகடு.

**porcelain**: **பீங்கான்**: சீனாக் களி மண் அல்லது வெண் களிமண் செய்யப்படும் பீங்கான் கலங்கள்.

**porch**: *(க.க.)* **புகுமுக மண்டபம்**: ஒரு கட்டிடத்தின் முகப்பில் தனிக் கூரையுடன் கூடிய மண்டபம்.

**porosity**: **கசிவுத்திறன்**: உலோகம் அல்லது பிற பொருட்களின் வழியாக அழுத்தப்படும் போது காற்று, வாயு அல்லது திரவம் கசியும்படி செய்யும் திறன்.

**porosity**: *(பற்.)* **நுண்துளை**: உலோகத்திலுள்ள வாயுக் குமிழ்கள் அல்லது வெற்றிடங்கள்.

**port**; *(தானி.)* **காற்றுப்புழை**: எஞ்சினின் உள்ளெரி அறைக்குள் எரிபொருள் செல்வதை அனுமதிக்கக் கூடிய அல்லது வாயுக்கள் வெளியேற அனுமதிக்கக்கூடிய ஒரு வழிப்புழை.

**portal**: *(க.க.)* **நுழைவாயில்**: அணிவாயிற்கதவம் அல்லது அணி கெழுவாயில், பொதுவாக பெரிய கட்டிடங்களில் உள்ளது.

**portal vein**: *(உட.)* **கல்லீரல் சிரை**: சீரண உறுப்புகளிலிருந்து கல்லீரலுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் இரத்த நாளம். இது மற்றச் சிரைகளிலிருந்து மாறுபட்டது. ஏனென்றால், இது இதயத்திற்கு நேரடியாக இரத்தத்தைக் கொண்டு செல்வதற்குப் பதிலாகத் தந்துகிகள் என்னும் சிறு இரத்த நாளங்களாகப் பிரிகின்றது.

**portico**: *(க.க.)* **மூடு முன்றில்**: தூண்கள் தாங்கும் கூரையுடைய இடம், பொதுவாக ஒரு கட்டிடத்தில் நுழைவாயிலிலுள்ள புதுமுக மண்டபம்.

**portiere**: *(அ.க.)* **கதவத்திரை**: கதவு நிலையில் பயன்படுத்தப்படும் ஒரு திரை.

**portland cement**: *(க.க.)* **சீமைக்காரை**: சீமைச்சுண்ணாம்பு, களிமண் ஆகியவற்றால் செய்யப்படும் செயற்கைப் பசைமண்.

**positive**; **ஒளிப்பட நேர்படிவம்**: ஒளிப்பட நேர்படிவத்தை ஒத்த உருப்படிவம். இது மறி நிலைப் படிவத்திற்கு எதிர்மாறானது.

**positive carbon**: *(மின்.)* **நேர்மின் கார்பன்**: நேர்மின்னோட்டச் சுடர் விளக்குகளில் ஏற்படும் கார்பன் குழி.

**positive electricity**: *(மின்.)* **நேர்மின்னாற்றல்**: கண்ணாடியைப் பட்டுத் துணியில் தேய்ப்பதால் ஏற்படும் மின்னாற்றல்.

**positive group**: *(மின்.)* **நேர்மின் குழுமம்**: ஒரு பொதுவான மின் முனையத்துடன் இணைக்கப்பட்டுள்ள பல சேமக் கலத்தகடுகளின்

ஒரு தொகுதி. இது ஒரு தனி மின் கலத்திற்கு நேர்மின்முனையாக அமைகிறது.

**positive pole:** (மின்.) **தென் துருவம்:** காந்த வகையில் வடக்கு நோக்கிய முனை; நிலவுலகக் கோளவகையில், தென்முனைக் கோடி.

**positive electricity:** **நேர்மின் ஆற்றல்:** கண்ணாடியைப் பட்டுத் துணியால் தேய்ப்பதனால் ஏற்படும் மின் ஆற்றல்.

**positive plate:** (மின்.) **நேர்மின் தகடு:** ஒரு சேமக்கலத்திலுள்ள தகடு. இது பொதுவாகப் பழுப்பு நிறத்தில் இருக்கும். மின்சுற்றுவழி முற்றுப் பெறும்போது இதிலிருந்துமின்விசை பாய்கிறது.

**positive temperature coefficient:** (மின்.) **நேர்வெப்பக் குணகம்:** வெப்பத்தில் நேரடியாக ஏற்படும் ஒரு மாறுதலின் விளைவாக, அலைவெண், மின்தடை போன்ற பண்புகளில் நேர்படிவ மாற்றம்.

**positive terminal:** (மின்.) **நேர் மின் முனையம்:** ஒரு மின் சுற்றுவழியில் அல்லது மின்கலத்தொகுதியில் இணைப்பு முனை. மின்சுற்று சுற்றுவழி முழுமையடைந்ததும் இதிலிருந்து மின்விசை பாயும்.

**positron:** (மின்.) **நேர்ஆக்கமின்மம்:** மின்மங்களுக்கு ஆற்றலில் இணையாகத் தற்காலிகமாகக் கருவிகளில் உருவாகும் நேர்மின் திரள்.

**post office bridge:** (மின்.) **அஞ்சலகப் பாலம்;** ஒரு பெட்டியில் மின்னோட்டமானியும், தெரிந்த மின்தடையும் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஒருவகை வீட்ஸ்டோன் பாலம். மின்சுற்று வழிக்குள் சில தெரிந்த மின்தடைகளை நுழைக்கின்ற செருகிகளை இணைக்கின்ற பித்தளையை அகற்றுவதன் மூலம் சமநிலை கிடைக்கிறது. பெட்டியின் முகத்தில் செருகப்பட்டுள்ள செருகிகளின் வரிசையைப் பொறுத்து இந்தப் பெயர் ஏற்பட்டது.

**pottassium:** (வேதி.) **பொட்டாசியம்:** வெண்மையான மெழுகு போன்று வெண்மையான உலோகத் தனிமம். இது ஈரக்காற்றில் விரைவாக ஆக்சிஜனுடன் இணைந்து ஆக்சைடாகக் கூடியது. இதன் உருகுநிலை 63.5°C. வீத எடைமானம் 0.8621. இதன் பலவகை உப்புகள் மிகுந்த பயனுடையவை.

**potential:** (மின்.) **மின்னழுத்த நிலை;** மின்னூட்டத்தின் அளவு அல்லது மின் அழுத்தத்தின் அளவு. வேண்டும்போது செயல்திறப்படுத்தப்படும் அடங்கிய மின்னாற்றல் வளம். இது ஓல்ட் என்னும் அலகுகளில் அளவிடப்படுகிறது.

**potential difference:** (மின்.) **மின்னழுத்த நிலைவேறுபாடு:** நிகழக்கூடும் மின்னோட்டத்தின் ஏற்றத்தாழ்வு உச்சநிலைகளின் வேறுபாடு. இது ஓல்ட் அலகுகளில் அளவிடப்படுகிறது.

**potential energy:** (இயற்.) **உள் நிலை ஆற்றல்;** உள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் ஆற்றல்.

**potential gradient:** (மின்.) **மின்னழுத்த நிலைச்சரிவு:** ஒரு நீள அலகின் மின்னழுத்த அளவில் ஏற்படும் வேறுபாடு.

**potential regulator:** (மின்.) **மின்னூட்ட ஒழுங்கமைவு:** ஒரு மின்னாக்கியின் அல்லது மின் சுற்றுவழியின் மின்னழுத்த வழியின் மின்னழுத்த வெளிப்பாட்டு அளவைகட்டுப்படுத்தும் சாதனம்.

**potentiometer:** (மின்.) **மின்னழுத்த ஆற்றல் மானி:** மின்ன

முத்த நிலைகளை ஒரு தர அளவு டன் ஒப்பிட்டு அளவிடுவதற்குப் பயன்படும் ஒரு கருவி.

**pothook :** (கம்மி.) **பானைக் கொக்கி :** உலையிலிருந்து உருகிய ஈயமுள்ள ஒருபானையைத் தூக்கு வதற்குப் பயன்படும் கொக்கி.

**potted circuit :** (மின்.) **கலத் திரட்ட மின் சுற்று வழி :** ஈரப்ப தம், வெப்பம் இவற்றுக்கு எதிரா கப் பாதுகாப்பதற்கு மின்காப்புப் பொருளில் அடைத்துவைக்கப்பட் டுள்ள ஒரு மின்சுற்று வழி.

**potters wheel : வேட்கோத் திகிரி:** குயவர்கள் களிமண்ணுக்கு உருக்கொடுக்கப் பயன்படுத்தும் சக்கரம்.

**pottery : மட்பாண்டத் தொழில் :** சட்டி பானை செய்யும் மட்பாண் டத்தொழில் அல்லது களிமண் பாண்டத் தொழில்.

**pounce:** (வரை.) **வண்ணப்பொடி:** மை உறிஞ்சுவதற்காகப் பதி வெடுப்புத்துணியின் மேற்பரப்பில் தூவப்படும் வண்ணப்பொடி.

**pound : பவுண்ட் :** 12 அவுன்ஸ் கொண்ட எடை அலகு. .454கி.கி.

**pour point depressant:** (தானி.) **பாய்வுச்சேர்மானம் :** தாழ்ந்த வெப் நிலைகளில் எண்ணெய் தங்கு தடையின்றிப் பாயும்படி செய்வ தற்காக சேர்க்கப்படும் சேர்மா னப் பொருள்.

**powder metallurgy :** (உலோ.) **தூள் உலோகக்கலை:** வெப்பமின்றி அழுத்தத்தின் மூலமாக உலோகங் களை ஒருங்கிணைக்கும் ஒரு செய் உலோகத் தூள்களின் ஒரு கல வையை ஓர் ஆழமான வார்ப் படக்குழியில் இட்டு அழுத்தம் செலுத்தி, எளிதில் உடையக் கூடிய வலுவற்ற கட்டிகளாக உரு வாக்குகிறார்கள். இக்கட்டிகளை ஓர் உலையிலிட்டு வெந்நீரருவிப் படிவமாக்கி வலுவான பயனுள்ள பொருளாக ஆக்குகிறார்கள்.

**power :** (மின்.) **மின்விசை :** மின் விசையின் அலகு வாட் மின் விசையினால் இயக்கத்தின்போது செய்யப்படும் வேலையின் விகிதத் தைக் கொண்டு இது அளவிடப் படுகிறது. எந்திரவியலில் விசை=

$$\frac{\text{இயக்குத்திறம்} \times \text{தொலைவு}}{\text{காலம்}}$$

**power amplifier: திறன்மிகைப்பி:** ஒலிபெருக்கிக்குப் பெருமளவு விசையை அளிக்கப் பயன்படுத்தப் படும் ஒரு வகை மின் கருவி.

**power brakes :** (தானி; எந்.) **விசைத் தடை :** மின்னியக்கச் செறிவு முறை மூலம் நீரியல் முறை யில் இயக்கப்படும் தடை.

**power factor :** (மின்.) **திறன் கூறு :** உண்மைத் திறனுக்குமிடை யிலான,தோற்றத் திறனுக்குமிடை யிலான விகிதம்.

$$\text{திறன் கூறு} = \frac{\text{உண்மைத்திறன்}(W)}{\text{தோற்றத்திறன்} \quad (V \times A)}$$

**power factor meter :** (மின்.) **திறன் கூறு மானி :** மின் திறன் கூற்றின் மதிப்பளவைக் காட்டக் கூடிய மின்னோட்ட மானி, மின் னழுத்த மானி, திறனளவி ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்த ஓர் அளவைக் கருவி.

**power feed:** (எந்.) **விசையூட்டம்:** கடைசல் எந்திரம், திருகிழை வெட்டுக்கருவி போன்ற எந்திரங் களுக்குத் தானியக்க முறையில் உட் செலுத்துதல்.

**power hammer: விசைச் சம்மட்டி:** காற்று, நீர் எந்திரவிசை மூலம் இயக்கப்படும் சம்மட்டி கரைசல் பணிகளில் பயன்படுத்தப் படு கிறது.

**power landing:** *(வானூ.)* **விசை இறக்கம் :** விமான எஞ்சினின் நீராவிப் புழையின் வாயடைக்கப் பெற்று மெல்ல இயங்குமாறு செய்து விமானத்தைத் தரை இறங்கச் செய்தல்.

**power loss** : *(மின்.)* **மின் விசை இழப்பு :** மின் கடத்திகளில் ஏற் படும் தடை காரணமாக ஒரு மின் சுற்றுவழியில் உண்டாகும் மின் விசை இழப்பு.

**power pack** : *(மின்.)* **திறன் அடைப்பு :** வானொலிப் பெட்டி, பொது ஒலிபெருக்கி அமைப்பு முதலியவற்றுக்குத் தேவையான மின்னிழையை அல்லது வெப்ப ஆற்றலை வழங்கும்.

**power plant** ; *(தானி.)* **விசை எந்திரம் :** எரிபொருள் கரியச் சேர் மானச்செறிவு, எரியூட்டம், குளிர் விப்பு, மசகிடுதல் போன்றவற்றுக் கான அமைவுகள் அமைந்த எந் திரம்.

எந்திரவியலில் மின்விசையை உற்பத்தி செய்து. வழக்கீடு செய் வதற்கான கொதிகலன்கள், மின் னாக்கிகள் முதலியவை.

**power sensitivity** : *(மின்.)* **மின் னுணர் திறன்:** வலைச்சைகை மின் னழுத்தத்தின் உள்ளபடியான மதிப்பளவின் வர்க்கத்தில் வாட்டு களில் மின்விசை வெளிப்பாட்டு அளவின் விகிதம்.

**power steering :** *(தானி;எந்,)* **விசை இயக்காழி :** எஞ்சின் இயங் கும்போது சுதந்திரமாக இயக்குவ தற்கு அனுமதிக்கும் இயக்காழி. இது இயக்காழி அலகுடன் இணைக்கப்பட்டுள்ள மின்னியக் கச் செறிவின் மூலம் நீரியல் முறை யில் இயக்கப்படுகிறது.

**power transformer :** *(மின்.)* **விசை மின் மாற்றி :** உயர்ந்த மின் னழுத்தத்தையும் குறைந்த மின் னோட்டத்தையும் உயர்ந்த மின் னோட்டத்துடனும், குறைந்த மின்னழுத்தத்துடனும் இணைப்ப தற்கும், குறைந்த மின்னழுத்தத் தையும், உயர்ந்த மின்னோட்டத் தையும் உயர்ந்த மின்னழுத்தத்து டனும், குறைந்த மின்னோட்டத் துடனும் இணைப்பதற்கான ஒரு சாதனம். இவை பொதுவாக 60 சுழற்சி அலைவெண்ணுடன் பயன் படுத்தப்படுகிறது.

**power transistor** : *(மின்.)* **விசை மின் பெருக்கி :** ஒரு குறிப் பிட்ட அளவு மின் விசையினை வெளிப்படுத்தக்கூடியவாறு வடிவ மைக்கப்பட்டுள்ள மின்விசைப் பெருக்குக் கருவி (டிரான்சிஸ்டர்).

**power tube : விசைக் குழல் :** ஒலி அலைவெண் மிகைப்பியல். கடை சிக் கட்டத்தில் பயன்படுத்தப்படும் வெற்றிடக்குழல், ஒலி பெருக்கி இயக்கத்திற்கு இது பெரிய அளவி லான ஒலி அலைவெண் அளிக் கிறது.

**power unit** : *(மின்.)* **மின் விசை அலகு :** மின் சுற்றுவழிகளில் மின் விசையின் அலகு வாட். இது வினாடி ஒன்றுக்கு வேலை ஊக்க ஆற்றலின் ஓர் அலகு செயற்படும் வீதம் ஆகும்.

**practice: தொழில் முறைப் பணி :** வழக்கறிஞர், மருத்துவர் ஆகியோ ரின் தொழில் முறைப்பணி.

**preamplifier:** *(மின்.)* **தாழ்நிலை மின் மிகைப்பி :** தரஅளவு மின் மிகைப்பியை இயக்குவதற்குப் போதுமான அளவு ஆற்றல் வெளிப்படுத்தக்கூடிய மின் உணர் வுள்ள குறைந்த அளவு மின் மிகைப்பி.

**precipitate** : *(குழை.)* **வீழ்படிவு :** வேதியியல் மாற்றம் காரணமாக ஒரு கரைசலில் கரையாத வண்ட லாகப் படியும் மண்டிப்படிவு.

**precision blocks** : *(உலோ.)* **துல்லிய எஃகுப்பாளங்கள்:** தொழில் துறையில் அளவுத்திட்ட முறையில் பயன்படுத்தப்படும் துல்லியமாகச் செய்யப்பட்ட எஃகுப் பாளங்கள். இது, அங்குலத்தில் 20 இலட்சத்தில் ஒரு பகுதி அளவு வரைப் பல்வேறு வடிவளவுகளில் தயாரிக்கப்படுகிறது.

**precision grinding** : *(எந்.)* **துல்லியச் சாணை :** எந்திரக் கூறுகளின் நுண்ணிடை வேறுபாட்டளவு மிகவும் நெருக்கமாக இருக்கக்கூடி எந்திரச் சாணை.

**precision lathe** : *(எந்.)* **துல்லியக் கடைசல் எந்திரம் :** துல்லியமான கடைசல் வேலைப்பாடுகளைச் செய்வதற்கேற்ற சிறிய மேசைக் கடைசல் எந்திரம்.

**recooler** : *(குளி.பத.)* **குளிர்விப்புச் சாதனம் :** கனிகள். காய்கறிகள் போன்றவற்றைக் கப்பலேற்றுவதற்கு முன்பு, அவற்றிலிருந்து உணர் வெப்பத்தை அகற்றுவதற்கான ஒரு குளிர்விப்பு சாதனம்.

**prefabricated** : *(க.க.)* **முன்னிணைப்பு :** கட்டிடங்கள் அல்லது தொழிற்சாலைக்கு வேண்டிய பகுதிகளை அல்லது உறுப்புகளை தனித்தனியாக வேறிடங்களில் முழுமையாக உருவாக்கி, பயன்படுத்த வேண்டிய இடத்திற்குக் கொண்டுவந்து இறுதியாக ஒருங்கிணைத்து அமைத்தல்.

**preforming** · *(குழை)* **முன்னுருவாக்கம் :** பிளாஸ்டிக் தொழிலில் வார்ப்படங்களை விரைவாகவும் மிகக் குறைந்த சேதாரத்துடன் உருவாக்கும் வகையில் வார்ப்படப் பொருட்களை செறிவுடையதாக்கும் முறை.

**preheat** : *(குளி.பத.)* **முன்வெப்பமூட்டுதல் :** (1) பிற செய்முறைகளுக்கு ஆயத்தமாக காற்று, திரவம், உலோகம் போன்றவற்றுக்கு முன்னதாகவே வெப்பமூட்டுதல்.

ஓர் உலோகத்தை ஒரு செய்முறைக்கு உட்படுத்துவதற்கு முன்பு, அந்த உலோகத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வெப்பமூட்டுதல்.

**preignition** : *(தானி.)* **முன்னிடு வெடிப்பு :** உள்வெப்பாலை எரிபொருளின் உரிய நேரத்திற்கு முற்பட்ட வெடிப்பு சூடான கார்பன் படிவுகளாலோ, தவறான எரியூட்டத்தினாலோ இது நிகழலாம்.

**pressed prick** : *(க.க.)* **அழுத்தச் செறிவுச் செங்கல் :** கட்டிடங்களில் வெளியே தெரியும் பரப்புகளுக்குப் பயன்படக்கூடிய நன்கு அழுத்தித் தயாரிக்கப்பட்ட உயர்தரச் செங்கல்.

**pressed steel** : *(உலோ.வே.)* **வடிவமைப்பு எஃகு :** எஃகுத் தகடுகள் அல்லது படிவங்கள் மூலம் அழுத்தங் கொடுத்துப் பளபளப்பாக வடிவமைத்த பல்வேறு பொருட்கள் உருவாக்கப்படுகின்றன. இவை வடிவமைத்த எஃகு எனப்படும்.

**press room** : *(அச்சு.)* **அச்சடிப்பு அறை :** அச்சடிக்கும் பணி நடைபெறும் அறை.

**pressing** : *(மின்.)* **அழுத்தத் தயாரிப்பு :** இசைத் தட்டுகளை அழுத்த வார்ப்படம் தயாப்பதற்குப் பயன்படும் ஒரு தயாரிப்பு முறை.

**pressure :** *(மின்.)* **மின்வலி இயலாற்றல் வேறுபாடு :** மின்னியக்க விசை. இது பொதுவாக மின்னழுத்தம் எனக் கூறப்படும்.

இயற்பியலில் ஓர் அலகு பரப்பளவில் விசையழுத்தம்.

**prssure airship** : *(வானூ.)* **அழுத்த விண்கலம் :** முழுமையாக

வோ பகுதியாகவோ உள்ளழுத்தம் மூலம் தனது வடிவத்தை பேணிக்கொள்ளும் விண்கலம்.

**pressure altitude ;** *(வானூ.)* **அழுத்த உயரம் :** ஒரு தரநிலைப் படுத்திய வாயு மண்டலத்தில் ஒரு குறிப்பிட்ட அழுத்த நிலைக்கு நேரிணையான உயரம்.

ஒரு விண்கலத்தில் வாயுப் பைகள் முழுமையாக நிரம்பியிருக்கக் கூடிய உயரம்.

**pressure, atmospheric :** *(குளி; பத.)* **வாயு மண்டல அழுத்தம் :** பூமியின் மேற்பரப்பில் அதன் வாயுமண்டலம் காரணமாக ஏற்படும் அழுத்தம். இது 32°F வெப்ப நிலையில் பாதரசத்தின் 29.921 அங்குலத்திற்கு 76செ.மீ. சமம்.

**pressure cable :** **அழுத்த வடம்.**

**pressure, critical :** *(குளி.பத)* **முட்டு அழுத்தம்:** முட்டுபதனுக்கு நேரிணையான ஆவி அழுத்தம்.

**pressure, drop :** *(குளி.பத.)* **அழுத்த வீழ்ச்சி :** உராய்வு காரணமாக ஒரு குழாயின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்குச் செல்லும் போது அழுத்தத்தில் இழப்பு ஏற்படுதல்.

**pressure, dynamic :** *(குளி.பத.)* **இயக்க அழுத்தம் :** ஒரு நீர்ம அமைப்பில் ஒரு அளவீட்டு நிலையில் நிலையழுத்தம் வேக வீத அழுத்தம் இரண்டின் கூட்டுத் கதொகை.

**pressure, gauge :** *(குளி.பத.)* **தரமதிப்பு அழுத்தம் :** வாயுமண்டல அழுத்தத்திற்கு அதிகமான அழுத்தம்.

**pressure nozzle:** *(வானூ.)* **அழுத்தக் கூம்பலகு :** காற்றில் விமானத்தின் வேகத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு அளவிடு கருவி.

**pressure reducing : அழுத்தக் குறைப்பு :** விசை நோக்கங்களுக்காக மிக உயர்ந்த அழுத்தத்தில் கொதிகலன்கள் இயக்கப்படும் வெப்பமூட்டும் அமைப்புகளில் நீராவி அழுத்தத்தைக் குறைப்பதற்கான சாதனம்.

**pressure welding : அழுத்தப் பற்றவைப்பு :** அழுத்தத்தின் மூலம் பற்றவைப்பு செய்யக்கூடிய பற்ற வைப்பு முறை.

**pressurized capsule :** *(விண்.)* **அழுத்தக் கூண்டு :** சுற்றியுள்ள காற்றின் அழுத்தத்தைவிட அதிக அழுத்தமுள்ள வாயுவைத் தனக்குள் கொண்டுள்ள ஒரு கூண்டு,

**pressurized suit :** *(விண்.)* **அழுத்தமூட்டும் ஆடை :** உடலின் சுவாசமும். இரத்த ஓட்டமும் இயல்பான முறையில் தொடர்ந்து நடைபெறும் வகையில் உடலின் மீது அழுத்தம் செலுத்தக் கூடிய வாறு வடிவமைக்கப்பட்ட ஆடை.

**pressure-rigid airship:** *(வானூ.)* **அழுத்த - கட்டிறுக்க வான்கலம் :** கட்டிறுக்கமான வான்கலத்திலும் கட்டிறுக்கமற்ற வான்கலத்திலும் பயன்படும் தத்துவங்களை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும் ஒரு வான்கலம். வடிவத்தையும் தோல் விறைப்பையும் பேணுவதற்கு இது உதவுகிறது.

**prick punch ;** *(எந்.)* **ஊசித்துளை:** ஒரு சிறிய மையத் துளை. இதனை 'அமைப்புத் துளை' என்றும் கூறுவர்.



ஊசித்துளை

**primary :** *(மின்.)* **குறைமின் சுற்றுவழி :** குறைந்த அழுத்த (6 ஓல்ட்ஸ்) மின் சுற்றுவழியைக் குறிக்கிறது.

**primary amputation** : *(நோயி)* **முதனிலை உறுப்பு நீக்கம்** : *அழற்சி அல்லது வீக்கம் இடையூறாக நிகழ்வதற்கு முன் செய்யப்படும் உறுப்புத் துண்டிப்பு.*

**primary paltery** : *(மின்.)* **அடிப்படை மின்கலத் தொகுதி** : *மின் விசை உண்டாக்கும் அடிப்படை மின்கல அடுக்கு.*

**primary cell** : *(மின்.)* **அடிப்படை மின்கலம்** : *வேதியியல் ஆற்றலை மின்னியல் ஆற்றலாக மாற்றக் கூடிய மின்கல அடுக்கு. இதில் ஒரு ஜாடியில் மின்பகுப்புக் கரைசலும் இரு மின் வாய்த் தகடுகளும் இருக்கும்.*

**primary coil** : *(மின்.)* **அடிப்படைச் சுருள்** : *இந்தச் சுருளில் மூல ஆற்றல் செலுத்தப்பட்டு, விசையின் காந்தக்கோடுகள் உண்டாக்கப்படுகின்றன. அவை இன்னொரு சுருளுடன் இணைக்கப்படும்போது அதில் ஆற்றல் தூண்டப்படுகிறது.*

**primary colours** : **அடிப்படை வண்ணங்கள்** : *கலவை மூலக் கூறாய் உதவும் சிவப்பு, பச்சை, ஊதா, மஞ்சள் ஆகிய தலையாய வண்ணங்கள்.*

**primery planets** : **அடிப்படைக் கோள்கள்** : *கதிரவனை மையமாகக் கொண்டு சுழலும் நேர் கோள்கள்.*

**primary-type glider** ; *(வானூ.)* **அடிப்படை வகைச்சறுக்கு விமானம்**: *சறுக்கு விமானிகள் அடிப்படைப் பயிற்சி பெறுவதற்காகத் திருத்தமின்றிச் செய்யப்பட்ட சறுக்கு விமானம்.*

**primary winding** : *(மின்.)* **அடிப்படைச் சுருணை** : *மாற்று மின்னோட்ட ஆதாரத்திலிருந்து மின் விசை பெறுகிற ஒரு மின்மாற்றியின் சுருணை.*

**primavera** : *(மர.வே.)* **சீமை நூக்கு** : *மத்திய அமெரிக்க மர வகை. மஞ்சள் நிறமுடையது; நாளடைவில் கருமை நிறம் பெறும் அலங்கார மேலடை மெல்லொட்டுப் பலகைகளுக்கும், சன்னல் கதவுகளுக்கும் அறைகலன்களுக்கும் பயன்படுகிறது.*

**prime** : *(கணி.)* **(1) பகா எண்** : *கணிதத்தில் பகா நிலையான எண்.* **(2) தனி அணு** : *வேதியியலில் இயை நிலையில் அலகான தனி அணு.*

**prime number** : *(கணி.)* **பகா எண்**: *பொதுக் காரணிகள் கொண்டிராமல் ஒருமை அளவுடைய எண்.*

**priming paint** : *(விண்.)* **முற்சாயம்** : *முற்சாயமாகச் சாயக் காரர்கள் பயன்படுத்தும் கலவை. இது மேற் பரப்பிலுள்ள துவாரங்களை அடைப்பதற்கு முதல் சாயமாகப் பூசப்படுகிறது.*

**prime vertical / prime vertical circle** : *(விண்.)* **வான் வட்டம்** : *தொடுவானத்தின் கிழக்கு—மேற்கு மையங்களைக் கடந்து உச்சத்தில் நடுநிரல் வான் கோட்டினை செங்குத்தாக வெட்டிச் செல்லும் வான் வட்டம்.*

**priming** : **வேலை நீர் ஏற்ற இறக்க மாறுவிசை** : *வியன்கால் வேலை ஏற்ற இறக்கத்திலிருந்து சமன் கால் வேலை ஏற்ற இறக்கத்துக்கு இடையே நிகழும் வேலை நீர் ஏற்ற இறக்க விசைவிரைவியக்கம்.*

**preventive leads**: *(மின்.)* **தடுப்பு முனைகள்** : *மாற்று மின்னோட்ட மின்னோடித் தொகுதியில் திசை மாற்றுச் சுடர் பொறியைக் குறைப்பதற்குப் பயன்படும் தடுப்பு முனைகள்.*

**principle of moments**: *(பொறி.)* **நெம்புதிறன் விதி** : *"ஒரு புள்ளி*

யைச் சுற்றிச் சுழலும் பல்வேறு தாக்கு விசைகளின் இயற்கணிதக் கூட்டுத் தொகையானது, அந்தப் புள்ளியில் அவற்றின் கூட்டுவிளை வாக்கத்திற்குச் சமம்'' என்னும் விதி.

**printer's mark** : (அச்சு.) **அச்சக முத்திரை** : அச்சக வாணிக இலச்சினை அல்லது அடையாள முத்திரை.

**printing** : **அச்சிடுதல்** : தாள் முதலியவற்றில் எழுத்துகளையும் படங்களையும் அழுத்திப் பதிய வைத்தல்.

**printing press** : **அச்சு எந்திரம்** : அச்சிடும் எந்திரம். அச்சகம், அச்சிடும் தொழிற்சாலையையும் இது குறிக்கும்,

**prism** : (கணி.) **பட்டகை** ; மூன்று அல்லது மூன்றிற்கு மேற்பட்ட தட்டையான பக்கங்களையுடைய நீள் உருளை உரு.

**prismatic colours** : (வண்.) **பட்டகை வண்ணங்கள்**: கதிரவன் ஒளியில் அடங்கியுள்ள சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், நீலம். பச்சை முதலிய வண்ண நிறங்கள்.

**prismatic compass** : **காட்சிக் கருவி**: காட்சியின்போதே திசைக் குறிப்புத் தரும் நில அளவைக் கருவி.

**prismatic powder** : **கூழாங்கற் பொடி** : அறுகோணப் பிழம்புரு வான வெடி மருந்துப் பொடி.

**prismoid**: **முரண்பட்டகை**: முரண் இணைவகப் பக்கங்களையுடைய பட்டகை.

**process** : (தானி.) **செய்முறை** : விரும்பிய பலனை அல்லது பொருளை உண்டாக்குவதற்கான தொடர் செயல்முறைகள்.

**process annealing** : **பதப்படுத்து முறை** : இரும்பை ஆதாரமாகக் கொண்ட உலோகக் கலவைகளைக் கட்டுப்படுத்தி ஆறவைத்தல் மூலமோ, நன்கு சூடாக்கி மெல்ல ஆற விடுவதன் மூலமோ கடும் பதப் படுத்தும் முறை.

**process or chemical metallurgy** : **செய்முறை அல்லது வேதியியல் உலோகக் கலை** : உலோகங்களை உருகவைத்து சுத்திகரிக்கும் முறை.

**process industries** : (தானி.) **செய்முறைத் தொழில்** ; தொடர்ச்சியான செயல் முறைகளைக் கையாளுகின்ற பெட்ரோலியம் மற்றும் வேதியியல் தொழிலைக் குறிக்கும் பொதுவான பெயர்,

**product** ; (பொறி.) **உற்பத்திப் பொருள்** : தொழில்துறையின் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் அளவு.

**production** : **உற்பத்தி** : (1) உற்பத்தி செய்யும் செயல்முறை.
(2) உற்பத்தி செய்யப்படும் அல்லது தயாரிக்கப்படும் பொருள்.
(3) தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் அளவு.

**productien basis** : **சிக்கன உற்பத்தி** : மிகவும் சிக்கனமான உத்திகளைக் கையாண்டு உறுப்புகளை உற்பத்தி செய்யும் முறை.

**production engineer** : (பொறி.) **உற்பத்திப் பொறியாளர்**: உற்பத்திப் பிரிவினைப் பராமரித்து வருவதற்குப் பொறுப்பாகவுள்ள பொறியாளர். மிகத் திறம்பட்ட உற்பத்தி முறைகளைக் கையாளும் வகையில் கருவிகளை இயக்குவதற்கும் கருவிகளை வடிவமைப்பதற்கும் இவர் பொறுப்பாக இருப்பார்.

**productivity** : **உற்பத்தித் திறன்** : ஆள்பலம், மூலப்பொருள்கள், எந்

திரங்கள் போன்ற பொருளாதார ஆதாரப் பொருள்களையும், ஊழி யங்களையும் மிகத் திறமையோடு பயன்படுத்தும் திறன்,

**profile : உருவரைப் படிவம்** ; பக்க வாட்டான உருவப் படிவம் அல் லது உருவரை.

**profileometer : தளப்பரப்பு அளவு மானி :** ஒரு தளப்பரப்பின் வழ வழப்பினை அல்லது சொரசொரப் பினை அளவிடுவதற்குப் பயன் படும் மிகத் துல்லியமானதொரு கருவி. இதில் வைரமுனையுடைய வரைப்படக்கரம் தளப் பரப்பில் நகரும்போது, அந்தக் கரம் ஒரு மின்னியல் களத்தில் ஒரு சுருளை நகர்த்துவதன் மூலம், தளப் பரப் பின் சொரசொரப்புக்கேற்ப ஒரு மின்னோட்டத்தைக் குறியீட்டு சுட்டிக்காட்டுகிறது.

**profiling machine : (எந்.) உரு வரை வெட்டு எந்திரம் :** உருவரை படிவத்தை வெட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒருவகை எந் திரம். இது சிலவகை வேலைப் பாடுகளுக்கு மிகவும் பயனுள்ள எந்திரம்.

**programme:(விண்.)செயல்முறை:** பறக்கும்போது அல்லது பிற நட வடிக்கைகளின்போது தொடர் நிகழ்வுகளுக்கு வகை செய்வதற்கு ஒரு மின்னணுவியல் தொடர் நிகழ்வுப் பதிவு கருவியில் இயக்கங் களின் வரிசை முறையை அமைத் தல்.

**programme log: (மின்.) நிகழ்ச்சி அட்டவணை :** ஒரு வானொலி நிலையத்தில், நிகழ்ச்சிகள், அவற் றின் விளம்பரதாரர்கள்,நிகழ்ச்சித் தன்மை ஆகியவற்றைக் காட்டும் வகையில் பேணப் பட்டுவரும் ஒரு பதிவேடு.

**programmers : (தானி.) செயல் முறை அமைப்பாளர்கள் :** கணிப் பொறிகளுக்குச் செயல்முறை களைத் தயாரிக்கும் அலுவலர்கள்.

**programming : (தானி.) செயல் முறை அமைப்பு :** தானியங்கிக் கட்டுப்பாட்டுக்குத் தேவையான செயல்களை படிப்படியாக ஓர் எந்திரத்திற்கு அளித்திடும் அறி வுறுத்துங்கள்.

**progression : (கணி.) படிமுறை வரிசை:** கணிதத்தில், கூட்டல் அல் லது கழித்தல் மூலமாக எண்களின் தொடர் வரிசை அதிகமாகிற அல் லது குறைகிற வரிசை முறை. நிலை எண்ணால் பெருக்கி வகுத் துக் கொண்டு வரும் படிமுறைப் பாங்கு.

**progression, arithmetical : (கணி.) அளவு வளர்ச்சி :** கணிதத் தில் கூட்டல் அல்லது கழித்தல் மூலமாக ஒரு எண் வரிசை கூடிக் குறைந்துவரும் பாங்கு.

**progression, geometrical : பெருக்க வளர்ச்சி :** நிலையெண் ணால் பெருக்கி வகுத்துக் கொண்டு போகும்போது பெருக்க ஏற்ற இறக்கத் தொடர்புப் பாங்கு.

**progression, hormonic : இசை இயைபுப் படிமுறை வளர்ச்சி:** கீழ் வாய்ப் படிமுறை வரிசையின் கணக்கியல் மேல்வாய் மானப் பாங்கு.

**projection : எறிவுப்படம்:** தளத்தி லிருந்து தளத்தின்மீது படிவிக்கப் படும் எறிவுப்படம்.

**projection receiver : எறிவுப்பட வாங்கி :** தொலைக்காட்சியில் ஒளி யியல் எறிவுப்படத் தத்துவத்தை உள்ளடக்கிய படம் வாங்கிப் பெட்டி.

**projection welding : எறிவுப் பற்றவைப்பு :** இரு தளப்பரப்பு

களுக்கிடையே வெப்பத்தை ஒரு வரம்புக்குள் ஒருமுகப்படுத்தி எறிவு மூலம் பற்றவைப்பு செய்யும் முறை.

**projector : ஒளி எறிவுக் கருவி :** ஒளி எறிவுக்கருவி அமைவு.

திரைப்பட ஒளியுருப்படிக் கருவி.

**prony brake** : *(மின்.)* **தலைகீழ் தடை :** ஒரு தனிவகைக் கம்பித் தொகுதி, தடை இணைப்பு, ஒரு தராசு ஆகியவை கொண்ட ஒரு எந்திர சாதனம். இது ஒரு மின்னோடியுடன் இணைக்கப்பட்டிருக்கும். பாரம் ஏற்றியிருக்கும்போது இது உண்டாக்கும் குதிரைத் திறனை இது அளவிட்டுக் காட்டுகிறது.

**proof** : *(அச்சு.)* **மெய்ப்பு; அச்சுப் படி :** பிழைதிருத்தம் செய்வதற்கான அச்சுப்படி அல்லது மெய்ப்புப் படி,

**proof plane : ***(மின்.)* **மின்னூட்ட அளவி :** காப்புறையிட்ட கைப்பிடியின்மேல் மின்கடத்திப் பொருளின் மின்னூட்ட அளவு கருவி.

**proof press** : *(அச்சு)* **பார்வைப் படி அச்சு எந்திரம் :** அச்சுப்படிவங்களை ஓர் இரும்புச் சட்டத்தில் வைத்து பூட்டாமல், பார்வைப் படிகள் எடுப்ப[illegible] உதவும் அச்சு எந்திர[illegible]

**proof-reader** : *(அச்சு.)* **பிழை திருத்துபவர்:** அச்சுப் பார்வைப் படி மெய்ப்புத் திருத்துபவர்.

**propellant :** *(விண்)* **முற்செலுத்தம்:** விமானத்தை முன்னோக்கி உந்திச் செலுத்துதல்.

**propeller ; முற்செலுத்தி :** கப்பல்களை முற்செலுத்த உதவும் இயக்குறுப்பு.

விமானத்தின் நீர் அல்லது நீராவியால் சுழலும் பொறி உருளையுடைய சுழல் விசிறி.

**propeller-blade angel**: *(வானூ.)* **முற்செலுத்து அலகு கோணம் :** ஒரு சுழல் விசிறியின நாண்வரைக்கும் சுழல் விசிறிச் சுழற்சி அச்சுக்கும் செங்குத்தாகவுள்ள ஒரு தளப் பரப்புக்குமிடையிலான கூர்ங்கோணம். இதனை "அலகு கோணம்" என்றும் கூறுவர்.

**propeller efficiency** : *(வானூ.)* **முற்செலுத்தித் திறம்பாடு** : உந்து ஆற்றலுக்கும் முற்செலுத்தியின் உட்பாட்டு ஆற்றலுக்குமிடையிலான விகிதம்.

**propellar hub** : *(வானூ.)* **முற்செலுத்திக் குடம் :** விமானச் சுழல் விசிறியின் மையப்பகுதி; இது இடைத்தொலைவு அளவினைமாற்றும் எந்திர அமைப்பு உடையது. இதனுடன் அலகுகளும் இணைக்கப்பட்டிருக்கும்.

**propeller rake** : *(வானூ.)* **முற்செலுத்திச் சாய்வு கோணம் :** விமானத்தில் ஒரு சுழல் விசிறி அலகின் மையப்பகுதியை அச்சுக்குச் செங்குத்தான தளப்பரப்புடன் இணைக்கும் கோட்டின் சராசரிக் கோணம்.

**propeller root** : *(வானூ.)* **முற்செலுத்திக் கொளுவி :** புடைப்புப் பகுதியின் அருகிலுள்ள முற்செலுத்தி அலகின் பகுதி.

**propeller shaft** : *(தானி.)* **முற்செலுத்திச் சுழல் தண்டு** : இதனை "இயக்குச் சுழல் தண்டு" என்றும் கூறுவர். உந்துவிசையை பின்புற இருசுக்கு அனுப்பிவைப்பது இது தான்.


**propeller thrust** : *(வானூ.)* **முற்செலுத்தி உந்துவிசை :** விமானத்தின்முற்செலுத்தியின்முன்னோக்கி உந்தித்தள்ளும் திறன்.

**propeller tipping** : *(வானூ.)* **முற்செலுத்திச் சரிவுக் காப்பு :** முற்

செலுத்தி அலகின் நுனியிலுள்ள சாய்ந்து விழுவதைத் தடுக்கும் பாதுகாப்பு அமைவு.

**propeller turbine** : *(வானூ.)* **முற்செலுத்து உருளை** : *நீர் அல்லது நீராவியால் சுழலும் உருளையுடைய விமான எந்திரம்.*

**proportional dividers** : **வீத**



வீத அளவுக் கவராயம்

**அளவுக் கவராயம்** : *வரைபடங்கள் வரைவதற்குப் பயன்படும் கவராயம். இதில் இரு முனைகளுடைய கால்கள் ஒரு சுழல் முனையுடனும் திருகுடனும் இணைக்கப் பட்டிருக்கும். இந்தச் சுழல் முனையையும் திருகையும் கையாண்டு கவராயத்தை வேண்டிய நிலைக்குக் கொண்டுவந்து அளவிடலாம்.*

**proportional limit** : *(உலோ.)* **வீத அளவு வரம்பு** : *உலோகங்களில் நீட்சியடைவது அல்லது பாரத்தின் வீத அளவில் இருப்பது அற்றுப் போகும் நிலை.*

**proportionately: வீத அளவு:** *வடிவளவு, பெறுமானம், முக்கியத்துவம் ஆகியவற்றுக்கு உரிய சரிசமவீத அளவில் இருத்தல்.*

**propulsion system :** *(விண்.)* **உந்து விசை அமைப்பு :** *ஓர் ஏவுகணையை அல்லது பிற விண்வெளி ஊர்தியை தரையிலிருந்து மேல் நோக்கி உந்தி எறிகிற உந்துவிசை அமைப்பு.*

**propulsive efficiency**: *(வானூ.)* **உந்தெறிவுத் திறன்** : *விமானத்தில் உண்மையான உந்து திறனுக்கும் முற்செலுத்தத்திற்கு மிடையிலான விகிதம்,*

**proscenium** : **அரங்கு முகப்பு** : *நாடக அரங்கின் முன்பகுதி. திரைக்கு முன்புள்ள மேடைக்கு மேலுள்ள கவான்பகுதியையும் இது உள்ளடக்கும்,*

**prostate gland** : *(உட.)* **ஆண் பால் சுரப்பி :** *பால்குடி உயிர்களில் ஆண்பால் உறுப்புக்கு உடனிணைவான சுரப்பித் திரள்களாலான பெருஞ்சுரப்பி.*

**protein** : **புரதம்** : *ஒவ்வொரு உயிருள்ள உயிரணுவிலும் அடங்கியுள்ள வெடியமும் பிற இன்றியமையாதஉயிர்ச்சத்துக்களும் உள்ளடங்கிய உயிர்ப் பொருள். இது, பல அமினோ அமிலங்களை அடிப்படையாகக் கொண்டு உருவான ஒரு சிக்கலான பொருள். புரதங்களில் சுமார் 50% ஆக்சிஜன்; 25% நைட்ரஜன், 15% ஹைட்ரஜன், பாஸ்பரம், கந்தகம் அடங்கியுள்ளன.*

**proton** : *(வேதி.)* **புரோட்டான்** : *அணுவின் கருவினில் உள்ள நேர் மின்மம்.*

**proto-planet: கோளப்பாகு** : *இது ஒரு பாகுபோன்ற பொருள். இந்தப் பாகுப் பொருளிலிருந்துதான் கோளங்கள் உருவாகியதாகத் தற்போதுள்ள கோட்பாடுகள் கூறுகின்றன.*

**protophyte** : *(தாவர.)* **ஓரணுத் தாவரம்** : *ஒரே அணுவுடைய உயிர்த்தாவரம்.*

**protoplasm** : **ஊண்மம்** : *ஒளி ஊடுருவக்கூடிய அரை நீர்ம இயலான ஆக்சிஜன், கார்பன், ஹைட்ரஜன் அடங்கிய உயிர்ச்சத்துப் பொருள்.*

**proto-theria:** : **முன்னோடிப் பாலுண்ணி** : *பால்குடி இனத்தின் மிகத் தாழ்ந்த உட்பிரிவைச் சேர்ந்த முன்னோடி உயிரினம்.*

**prototype :** *(விண்.)* **மூல முன் மாதிரி** : *வடிவம், வடிவமைப்பு, செயல்திறன் ஆகியவற்றை முழு*

மையாக மதிப்பிடுவதற்குப் பயன்படும் ஒரு முன்னோடி மாதிரி.

**protozoa :** *(உயி.)* **ஓரணுவுயிர் :** மிக நுண்ணிய ஓரணுவுயிர்ப் பிரிவைச் சார்ந்த உயிர்கள், அமீபா, பாரமோசியம், மலேரியா ஒட்டுண்ணி போன்றவை இவ்வகையைச் சேர்ந்தவை.

**protractor : கோணமானி :** கோணங்களை அளவிடுவதற்கும், காகிதத்தில் கோணங்களை வரைவதற்கும் பயன்படும் ஒரு கருவி. இது படம் வரைவதில் பயன்படுகிறது.

**proximity effect :** *(மின்.)* **அணிமை விளைவு :** அருகிலுள்ள ஒரு மின்கடத்தியில் ஒரு மாற்று மின்னோட்டத்தின் நடவடிக்கை காரணமாக ஒரு மின்கடத்தியில் மின்னோட்டப் பகிர்மானத்தில் ஏற்படும் மாறுதல்.

**proximity of blood : அணிமை உறவு :** மிக நெருங்கிய உறவு முறை.

**prussian blue :** *(வேதி)* **அடர் நீலம் :** $(Fe_4[Fe(CN)_6]_3$. அய உப்பில் பொட்டாசியம் அய சயனைடு வினைபுரிவதன் மூலம் இது தயாரிக்கப்படுகிறது. அடர்ந்த நீல வண்ண வீழ்படிவாகக் கிடைக்கிறது. சாயப் பொருளாகவும், காகிதத்திற்கு வண்ண மூட்டவும் பயன்படுகிறது.

**psychrometer : ஈர உணக்க வெப்பமானி;** ஈரக்குமிழுடன், ஈரம் நீக்கிய குமிழும் உடைய ஒருவகை வெப்பமானி. ஆவியாகும் வேகத்தை அளவிடுவதற்கு உதவுகிறது.

**puddle:** *(பொறி.)* **கலக்குதல் :** (1) தேனிரும்பாக்குவதற்கு உருகிய இரும்பைக் கலக்குதல்.

(2) களிமண்ணையும் மணலையும் நீரோடு கலந்து பிசைந்து குழைசேறாக்குதல்.

**pugging :** *(க.க.)* **ஒலித்தடுப்பான்:** ஒலி ஊடுருவாகாதவாறு தரைத் தளங்களிடையே வைக்கப்படும் களிமண், வாள்தூள், சாந்து முதலியவற்றின் கலவை.

**puller :** *(தானி.)* **இழுவைக்கருவி;** இறுகப் பொருந்திய பாகங்களைப் பிரித்தெடுப்பதற்குப் பயன்படும் எந்திர அல்லது நீரியல் சாதனம். எடுத்துக்காட்டு: சக்கர இழுவை; பல்லிணை இழுவை.

**pulley :** *(எந்; பொறி.)* **கப்பி :** பாரங்களை இழுப்பதற்குப் பயன்படும் உருளை அல்லதுகப்பித்தொகுதி.



கப்பி

**pulley lathe:** *(எந்.)* **கப்பிக்கடைசல் எந்திரம்:** நேரான அல்லது முனையுள்ள முகப்பினைக் கப்பிகள் மீது திருப்புவதற்குப் பயன்படும் ஒருவகைக் கடைசல் எந்திரம்.

**pulley stile :** *(க.க.)* **கப்பிக் கடவேணி :** கதவு, சுவர், வேலி முதலியவற்றில் எடைகளை ஒருபுறம் ஏற்று மறுபுறம் இறக்குவதற்காகக் கப்பித் தொகுதிகள் பொருத்தப்பட்டுள்ள நிலை வரிச் சட்டம்.

**pulley tap :** *(எந்.)* **கப்பி நாடா :** மிக நீண்ட எந்திரத்தண்டு உடைய ஒரு நாடா. இது கப்பிகளின் குடத்தில் திருகிழைத் துளைகளைப் பொருத்துவதற்குப் பயன்படுகிறது.

**pull-out:** *(வானூ.)* **விளிம்பொட்டு இதழ் :** ஒத்துப் பார்வையிடுவதை எளிதாக்கும் பொருட்டுச் சுவடித் தாள்களின் முகப்பு விளிம்பிலிருந்து விரியும் பக்கம்.

**pulp : காகிதக்கூழ்:** காகிதம் செய்வதற்கு மரத்துண்டுகள், கந்தைகள் முதலியவற்றைக் கொண்டு செய்யப்படும் ஒரு கலவைக் கூழ்.

**pulp board** ; *(தாள்,)* **கூழ் அட்டை** : காகித மரக்கூழ் கலவை யிலான கரடுமுரடான அட்டை.

**pulping** : *(தாள்.)* **கூழாக்குதல்** : மரம், கந்தைத் துணிகள் போன்ற மூலப் பொருட்களைக் காகிதம் செய்வதற்கான கூழாகச் செய்யும் முறை.

**pulpit** : *(க.க.)* **உரை மேடை** : திருக்கோயில் சமய உரை மேடை.

**pulsating current** : *(மின்.)* **துடிப்பு மின்னோட்டம்** : மின் னோட்ட அளவு ஒரே அளவாக இல்லாமல் ஒரே திசையில் மின் னோட்டம் பாயக்கூடிய நேர்மின் னோட்டம்.

**pulsation welding**: *(பற்.)* **துடிப்புப் பற்ற வைப்பு**: அழுத்தம் கொடுக் காமல் அல்லது மின் முனைகளின் இடங்களை மாற்றாமல் பற்ற வைப்பு மின்னோட்டத்தை ஒன்றுக்கு மேற்பட்ட தடவை இடையீடு செய்து தைப்பு முறை பற்றவைப்பு செய்யும் முறை.


**pulse-jet engine** . *(வானூ.)* **துடிப்புத் தாரை எஞ்சின்** : ஒரு வகை அழுத்தத் தாரை எஞ்சின். இதில் உள்ளெரிதல் இடைவிட்டு நடைபெறும். இதனால் தொடர் வெடிப்புகள் மூலம் உந்துகை உண்டாகிறது. இதனை 'துடிப்புத் தாரை' என்றும் கூறுவர்.

**pulsometer** : *(பொறி.)* **வளிநீர் குழல்**: நீராவியைக் கவான் குழாய் வழி கொண்டு செல்வதற்கான வளிநீர் குழாய். இது பெரும்பா லும் நீருக்கடியில் கடைக்கால் போட உதவும் நீர் புகாக்கூண்டு அமைவிலிருந்து நீராவியைக் காலி செய்வதற்குப் பயன்படுகிறது.

**pumice** : **மாக்கல்** : மெருகேற்று வதற்குப் பயன்படும் மாக்கல் வகை. இதனைப் பொடியாக்கிப் பயன்படுத்துவர்.

**pump** : *(எந்.)* **இறைப்பான்** : திர வங்களைக் காற்றழுத்த ஆற்றல் மூலம் மேலெழச் செய்யும் விசைக் குழாய்.

**punch** : *(எந்.)* **தமருசி** : தோல், உலோகம், தாள் முதலியவற்றில் துளை யிடுவதற்கு எஃகினால் செய்த ஒரு கருவி.



தமருசி

**punch card** ; *(தானி.)* **துளை அட்டை**: ஒரு குழூஉக்குறித் தகவல் முறையில் தகவல்களைத் துளை யிட்டுப் பதிவு செய்வதற்கான அட்டை.

**punched** : *(தானி.)* **துளையிட்ட நாடா** : துளையிடுவதன் மூலம் தகவல்கள் பதிவு செய்யப்பட்ட நாடா.

**punching** : **துளையிடுதல்** : தாள் தோல், உலோகம் முதலியவற் றில் தமருசியால் துளையிடுதல்.

**punch press** : **வார்ப்பழுத்துப் பொறி** : வார்ப்புத் தாய்ப் படிவ அழுத்தும் பொறி.

**punctuation** : *(அச்சு.)* **நிறுத்தக் குறியீடு** : வாக்கியங்களைச் சொற் றொடர்களாகப் பகுத்துக்காட்டு வதற்குப் பயன்படும் நிறுத்தக் குறியீடுகள்.

**purlin** : *(க.க.)* **உத்தர நெடுவிட் டம்** : தாங்கணைவுகளுக்கிடையா கவும் கூரை உத்தரங்களுக்கு ஆதாரமாகவும் அமைக்கப்படும் தாக்கமைவுக் கட்டுமானம்.

**push button**: *(மின்.)* **மின்விசைக் குமிழ்** : ஒரு சிறிய பொத்தானை அல்லது குமிழை அழுத்திக்கொண் டிருக்கும் வரை ஒரு மின்சுற்று

வழியை நிறைவு செய்கிற ஒரு சாதனம்.

**push-button starter** : *(தானி.)* **அழுத்து பொத்தான் இயக்கி :** உந்து ஊர்தியை ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் இயக்கத் தொடங்குவதற்குப் பயன்படும் சாதனம். இது காலால் இயக்கும் விசைக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகிறது.

**push-button switch** : *(மின்.)* **அழுத்தப் பொத்தான் விசை:** மின்னியல் இணைப்புகளை ஒரு பொத்தானை அழுத்திதொடர்பேற்படுத்தவும் இன்னொரு பொத்தானை அழுத்தி இயக்கவும் பயன்படும் விசை.

**pusher airplane** : *(வானூ.)* **உந்து விசை விமானம் :** முதன்மை ஆதார மேற்பரப்புகளுக்குப் பின்னால் முற் செலுத்தியை அல்லது முற்செலுத்திகளை உடைய ஒரு வகை விமானம்.


**pusher propeller** : *(வானூ.)* **உந்து விசை முற்செலுத்தி** : விமானத்தில் எஞ்சினின் பிற்பகுதியில் அல்லது முற்செலுத்தி சுழல் தண்டின் பின் நுனியில் பொருத்தப்பட்டுள்ள முற்செலுத்தி அல்லது சுழல் விசிறி.

**putlog** : *(க.க,)* **சாரக்கட்டை ;** சாரப்பலகைகளைத் தாங்குவதற்கான குறுகிய வெட்டுமரத்துண்டு.

**putty** : *(வேதி; க.க.)* **மெருகு சுண்ணத்தாள் :** கண்ணாடியை அல்லது உலோகத்தை மெருகிடுவதற்கான சுண்ணத்தாள் வகை.


**puzzolan or slag cement** : **எரிமலைச் சாம்பற்காரை :** எரிமலைச் சாம்பல் அல்லது கொல்லுலைச் சாம்பற் கட்டி மூலம் தயாரிக்கப்படும் சீமைக்காரை அல்லது சிமென்ட். இது சீமைச் சுண்ணாம்பு, களிமண் ஆகியவற்றால் செய்யப்படும் சீமைக்காரைபோல் அத்துணை வலுவுடையதன்று. இது பெருமளவில் பயன்படுத்தப் படுவதுமில்லை.

**pylorus**: *(உட.)* **சிறுகுடல் வாய்:** இரைப்பையிலிருந்து சிறு குடலுக்குச் செல்லும் பாதையின் சிறு குடல் திறப்புவாய்.



சிறுகுடல் வாய

**pyramid** : *(கணி.)* **கூம்பு வடிவம்:** ஒரு சமதள பல கோண முக்கோணத்தை ஆதாரமாகவும் பொதுவான முகட்டு முனையும் உடைய கூர்ங் கோபுர வடிவம்.



கூம்பு வடிவம்

**pyridine** : *(வேதி.)* **பைரிடின் :** காசநோய் மருந்தாகப் பயன்படும் எலும்பு நெய் வடிம மூலப் பொருள். இது மஞ்சள் நிறமுடையது. இதனை ஆல்கஹாலின் இயல்பு நீக்கியாகவும் பயன்படுத்துகின்றனர்.

**pyrite** : *(வேதி·)* **பைரைட் :** அயச் சல்பைடுகளில் இயற்கையாகக் கிடைக்கும் பித்தளை போன்ற மஞ்சள் நிறப்பொருள். இதனை "முட்டாளின் தங்கம்" என்றும் கூறுவர்.

**pyrographing : செதுக்கு வேலை:** சூடாக்கப்பட்ட கருவியினால் தோல் அல்லது மரத்தின் மீது தீட்டப்பட்ட செதுக்கு வேலை.

**pyrogravure: செதுக்கு வேலைப் பாடு:** சூடாக்கப்பட்ட இரும்புக் கருவியால் செய்யப்படும் செதுக்கு வேலைப்பாடு.

**pyrolusite** : *(உலோ.)* **பைரோலூசைட் :** முக்கிய மாங்கனீஸ் தாதுப்

பொருள். பல நாடுகளில் இரும்பு போன்ற கரு நிறத்தில் கிடைக் கிறது. இது உலோக மாங்கனீஸ் தயாரிக்கப் பயன்படுவதுடன், மின்கலங்கள் வண்ண உலர்த்தி கள் ஆயகிவற்றில் பயன்படுகிறது.

**pyrometer** : **உயர் வெப்பமானி** : உயர்ந்த வெப்பங்களைத் தொலை விலிருந்து அளப்பதற்கான கருவி. இரண்டு உலோகங்கள் இணையும் இடத்தில் மின்னோட்டம் ஏற்படு கிறது என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.

**pyroxylin** : *(வேதி.)* **பைரோக் சிலின்** : வண்ணநெய், செயற் கைத்தோல் ஆகியவற்றிற்கு வெறி யத்தில் தோய்த்துப் பயன்படுத்தப் படும் மரச்சத்து வெடியகிப் பொருள். இது எளிதில் தீப்பற்றக் கூடியது; வெடிக்கத் தக்கது. ஒளிப் படச் சுருள்கள் தயாரிப்பதில் பயன்படுகிறது.

# Q

**Q** : (*மின்.*) **கியூ:** தரம்; தர அளவு காந்தப் புலத்தின்போது ஒரு தூண்டு கருவியில் சேமித்து வைக்கப்படும் ஆற்றலுக்கும் அதே நேரத்தில் ஏற்படும் இழப்பீட்டுக் கிடையிலான விகிதம்.

$$Q = \frac{X_L}{R}$$

**q demodulator** : (*மின்.*) **கியூ எதிர் அலைமாற்றி** : வண்ணத் தொலைக்காட்சியில், சதுரச் சரியீட்டளவு வண்ண ஒளிர்வு ஊடகங்களை மீண்டும் 'கியூ' துணை ஊடகங்களாக மாற்றுகிற எதிர் அலை மாற்றி மின் சுற்றுவழி.

**q factor** : (*மின்.*) **கியூ காரணி** : ஒரு மின் சுற்றுவழியின் போது தூண்டப்பட்ட மின்னழுத்தத்தின் மதிப்பளவினை அதிகரிப்பதற்கான மின் சுற்று வழியின் திறனை இது குறிக்கிறது.

**q-signal**: (*தொ.கா.*) **கியூ சைகை:** வண்ணத் தொலைக்காட்சியில் பச்சை அல்லது கருஞ்சிவப்பு வண்ணத் தகவல்களைக் கொண்டுள்ள தொலைக்காட்சிச் சைகை.

**quad** : (*அச்சு.*) **இட அடைப்பு எழுத்துரு** : அச்சுத் துறையில் இட அடைப்புக் கட்டையாகப் பயன்படும் எழுத்துரு. இது அச்சு எழுத்துருவின் உயரத்தைவிடக் குறைவான உயரத்துடன் இருக்கும். இது அச்சுவரி நீளங்களின் மடங்குகளாக வார்க்கப்படும். பத்திகளில் முடிவில் வரிகளிடையே இடைவெளியை அகலமாக்குவதற்கும், ஓர இடம் விடுவதற்கும் இது பயன்படுகிறது.

**quadrangle** : (*க.க.*) **நாற்கட்ட ரங்கம்**: கல்லூரி விளையாட்டுத்திடல்போன்று நாற்புறமும் கட்டங்கள் சூழ்ந்த சதுரமான அல்லது நாற்கட்டமான இடப்பரப்பு.



நாற்கட்டு அரங்கம்

**quadrant** : (*1*) **கால் வட்டம்** : செங்கோண ஆரங்களுக்குட்பட்ட வட்டப்பகுதி; வட்டக்கால் சுற்றுவரை.

(*2*) **கோண மானி** : உயரங்களை அளவிடப் பயன்படும் கருவி.

**quadratic equations** (*கணி.*) **இருவிசைப்படிச் சமன்பாடு** : அறியப்படாத ஓர் அளவின் இருமடி வர்க்கத்தை மட்டும் கொண்டுள்ள ஒரு சமன்பாடு, உருக்கணக்கியலில் இரு விசைப் படிமை சார்ந்துள்ள சமன்பாடு.

**quadrilateral**: **நாற்கரம்** : நான்கு பக்கங்களையும் நான்கு கோணங்களையும் உடைய வரை வடிவம்.

**quadruplane** : (*வானூ.*) **நாற்சிறகு விமானம்** : ஒன்றன் மேல் ஒன்றாக நான்கு தொகுதி சிறகுகளையுடைய ஒரு வகை விமானம்.

**quadruple-expansion engine** : **நான்மடி விரிவாக்க எஞ்சின்** : நீராவி நான்கு மடங்காக விரிவாக்கமாவதற்கு இடமளிக்கும் ஒரு வகைக்கூட்டு எஞ்சின். முதலில் ஓர் உயர் அழுத்த நீள் உருளையிலும், பின்னர் அடுத்தடுத்து மூன்று குறைந்த அழுத்த நீள் உருளைகளிலும் இந்த விரிவாக்கம் நடைபெறும். இதில் தொடக்கத்தில் நீராவி அழுத்தம் குறைந்தது

.91கிலோ அளவுக்கு இருக்க வேண்டும்.

**quantitative analysis** : *(வேதி.)* **பண்பியல் பகுப்பாய்வு** : வேதியியல் பொருளில் என்னென்ன தனிமங்கள் அல்லது கூறுகள் எந்த அளவுகளில் அடங்கியுள்ளன என்பதை அறிவதற்கான பகுப்பாய்வு.

**quantity** : **தரநிலை** : (1) பண்புத்தரம்.
(2) தனி இயல்பு அல்லது குணம்.

**quanta** : *(மின்.)* **உகைப்பளவு** : ஓர் எலெக்ட்ரானை அதிக அளவு ஆற்றலுக்கு உயர்த்துவதற்குத் தேவைப்படும் ஒரு குறிப்பிட்ட அளவு ஆற்றல்.

**quantitative analysis** : *(வேதி.)* **அளவைப் பகுப்பாய்வு** : ஒவ்வொரு தனிமத்தின் அல்லது கூறின் மொத்த அளவினைக் கண்டறிவதற்கான பகுப்பாய்வு.

**quantity** : **அளவு** : கூடவோ குறையவோ கூடிய பொருண்மை, கன அளவு எண்ணிக்கை போன்ற இயல்பின் அளவீடு.

**quantum** : *(தானி.)* **எண் அலகு**: ஓர் அளவீட்டு முறையில் மிகச் சிறிய அலகினைக் குறிக்கும் எண் மதிப்பளவு.

**quantum** : *(மின்)* **இயற்பியல் அலகு** : இயங்கு விசை, ஆற்றல், பொருண்மை முதலிய இயற்பியல் பண்புகளின் மிகச்சிறிய மதிப்பளவு.

**quantum theory** : *(இயற்.)* **கதிரியக்க அலை வீச்சுக் கோட்பாடு** : ஒரு சூடான பொருளிலிருந்து அல்லது விளக்கிலிருந்து ஒரு சீரான அளவில் பாயாமல், எண் அலகு எனப்படும் ஆற்றல் துளிகளாகக் கதிரியக்கமாக வெளிப்படும் ஆற்றலின் அளவு. இந்த அளவுகள், கதிரியக்கத்தின் அலை வெண்களுக் கேற்ப, பல்வேறு அளவுகளில் அமைந்திருக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு வெப்பு ஒளியின் எண் அலகு, ஓர் ஊதா ஒளியின் எண் அலகைவிடக் குறைவாக இருக்கும்.

**quarantine** : *(நோயி.)* **தொற்றுத் தடைக் காப்பு** : பயணிகள், கப்பல் நோயாளிகள் ஆகியோரைத் தொற்றுத் தடைக்காப்புக்காக ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு தொற்றுத் தடைக்காப்பில் வைத்தல்.

**quarry** : (1) **கற் சுரங்கம்**; உடைத்தல், வெடித்தல் மூலம் கற்கள் எடுக்கப்படும் தொடுகுழி.
2) **சன்னல் கண்ணாடி** : நூல்களை வைப்பதற்கான சன்னல் முகப்புகளையுடைய 18ஆம் நூற்றாண்டு நூல் பேழை.

**quarry-faced masonry** : *(க.க.)* **பாவுகல் முகப்புக் கட்டுமானம்** ; கற்சுரங்கத்திலிருந்து எடுத்து, மெருகேற்றப்படாமல் அப்படியே பதித்த கல் முகப்புடைய கட்டுமானம்.

**quarry tile**: *(க.க.)* **உலா மேடை ஓடு** : எந்திரத்தினால் செய்யப்பட்ட, மெருகிடப்படாத ஓடு. இது ¾' அல்லது அதற்கு மேற் கனமுடையதாக இருக்கும்.

**quart** : **முகத்தலளவை அலகு** : கால் காலன் அல்லது இரண்டு பைண்டு அளவு. கால்காலன் அளவு கலம்.

**quartan malaria**: *(நோயி.)* **நான்கு நாள் முறைக் காய்ச்சல்**: நான்காம் நாள்தோறும் விட்டு விட்டு வரும் மலேரியாக் காய்ச்சல் வகை.

**quarter**: **கால் பங்கு**: ஒரு பொருளின் நான்கு சமமான பகுதிகளில் ஒன்று. கவராயத்தின் நான்கு முக்கிய முனைகளில் ஒன்று.

**quartile**: **கோள் இடைத்தொடர்பு:** ஒன்றுக்கொன்று 90° இடைத் தொலைவுடைய இரு கோளங்களி டையிலான இடைத்தொடர்பு.

**quarto**: *(அச்சு.)* **நான்கு மடித் தாள்:** *நான்கு தாள்களும், எட்டுப் பக்கங்களும் அமையும் வகையில் இரு தடவை மடித்தாளின் அளவு. நான்மடித்தாள் அளவுள்ள ஏடு.*

**quartz**: **படிகக்கல்**: *கன்ம ஆக்சிஜ னுடன் சில சமயம் பொன்னும் கலந்த கனிமப் பொருள்.*

**quartzite**:*(மண்.)* **படிகக்கல் தாது**: *உருத்திரிபடைந்த மணற்பாறை. பெரும்பாலும் படிகக்கல் கொண் அடர்த்தியான குருணை வடிவக் கல்.*

**quaternary steel**: *(உலோ.)* **நாற் தனிம எஃகு**: *இரும்பு, கார் பன், மற்றும் இரு சிறப்புத் தனி மங்கள் அடங்கிய ஒரு வகை எஃகு உலோகக் கலவை.*

**quaternion**: **நான்கன் தொகுதி**: *ஒரு தடவை இரண்டாக மடித்த நான்கு தாள்களின் தொகுதி.*

**quatrefoil**: *(க.க.)* **நாற்கதுப் பணி**; *நான்கு இலை மலர் வடிவத் தில் செய்யப்படும் அணி வேலைப் பாடு.*

**queen closer**: *(க.க.)* **அரைச் செங்கல்**: *(க.க.) செங்கல்லை நீள வாக்கில் இரண்டாக வெட்டிச் செய்த செம்பாதிச் செங்கல்.*

**queen truss**: *(க.க.)* **அரசித் தாங் கணைவு**: *செங்குத்தான இரு கட் டுக் கம்பங்களுடன் கட்டமைப்பு செய்த ஒரு தாங்கணைவு. ஒரே யொரு கட்டுக்கம்பம் உடைய அர சுத் தாங்கணைவிலிருந்து இரு வேறுபட்டது.*

**quenching**: *(எந்.)* **குளிர்விப்பு**: *எஃகைப் போதிய அளவு கெட்டிப் படுத்துவதற்காகச் சூடான எஃகை நீர், எண்ணெய் அல்லது வேறு திரவங்களில் நனைத்துக் குளிர் வித்தல்.*

**quenching oils**: **குளிர்விப்பு எண் ணெய்**: *சூடாக்கிக் குளிர்வித்துக் கெட்டிப்படுத்துவதற்குப் பயன் படுத்தப்படும் எண்ணெய்கள். மீன் எண்ணெய் இதற்குப் பெரி தும் பயன்படுத்தப்படுகிறது. கனிம மீன், தாவர, விலங்கு எண் ணெய்கள் கலவை செய்யப்பட்டு வாணிகப் பெயர்களுடன் விற் பனை செய்யப்படுகின்றன.*

**quick change**: *(எந்.)* **துரித மாற் றம்**: *கடைசல் எந்திரங்களில் பல் லிணைகளை அகற்றி மாற்றுவதற் குப் பதிலாக நெம்பு கோள்களை இடம் பெயரச் செய்வதன் மூலம் ஊட்டத்தை மாற்றுவதற்கு அனு மதிக்கும் வகையில் பல்லிணை களை அமைத்தல்.*

**quick-charge**: *(மின்.)* **வேக மின் னேற்றம்**: *மின்னேற்ற வேகத்தை அதிகரிப்பதன் மூலம் சேமக் கலத் திற்கு மறு மின்னூட்டம் செய் தல்.*

**quicklime**: *(க.க.)* **நீற்றாத சுண் ணாம்பு**: *தூய்மையான சுண்ணாம் புக் கல்லிலிருந்து தயாரிக்கப்பட்ட நீற்றாத சுண்ணாம்பு.*

**quicksand**: **உதிர்மணல்**: *ஒரு கன மான பொருளின் அளவுக்கு நீரு டன் கலந்த உதிரிமணல்.*

**quicksilver**: *(உலோ.)* **பாதரசம்**: *பாதரசம் என்ற திரவ உலோகம். முகம் பார்க்கும் கண்ணாடிகளின் பின்புறம் பூசப்படும் வெள்ளீய ரசக்கலவை.*

**quill**: *(எந்.)* **புழைத்தண்டு**: *உட் புழையுள்ள சுழல்தண்டு கதிர்.*

**quill gear**: *(எந்.)* **புழைப் பல் லிணை**: *ஒரு புழைத்தண்டில் அல்*

லது குழலில் வெட்டப்பட்ட ஒரு பல்லிணை அல்லது துளை நுனி.

**quire**: **இருபது நான்கு மடிதாள்**: இருபத்து நான்கு கொண்ட எழுது தாள்மடி. ஒரு தடவை மடித்து 8 ஆக்கப்பட்ட தாள் நான்கு தாள் தொகுதி.

**guire fold**: **மடிதாள்**; ஒரு தடவை மடித்து 8 ஆக்கப்பட்ட நான்கு தொகுதி.

**quirk**: **கூரகக் குடைவு**: புற வளைவுகளுக்கு இடைப்பட்ட கூரகக் குடைவு.

**quotidian malaria**: (நோயி.) **நாள்முறைக் காய்ச்சல்**: நாள்தோறும் விடாது வரும் மலேரியாக் காய்ச்சல் வகை.

**quoin key**: (அச்சு.) **அச்சுருப் பற்றாப்பு முடுக்கி**: அச்சுருப் படிவத்தல் உள்மூலையை முடுக்குவதற்குப் பயன்படும் 'T' வடிவ முடுக்கி.

**quoins**: (க.க.) **மூலைக்கற்கள்**: கட்டிடங்களின் உள் மூலைகளில் பொருத்தப்படும் மூலைக்கற்கள்.

# R

**rabbet:** *(மர.வே.)* **மூலைப் பொருத்துவாய்:** இசைப்பு வாய் மூலம் இணைப்பதற்கு விளிம்பில் செய்யப்படும் இசைப்பு வாய் வெட்டு.

**rabbet joint:** *(மர.வே.)* **மூலை இணைப்பு:** மூலைப் பொருத்து வாய் மூலம் இணைத்தல்.

**rabbet plane:** *(மர;வே.)* **மூலைப் பொருத்துவாய் இழைப்புளி:** மூலைப் பொருத்துவாய் இழைப்ப தற்கான ஓர் இழைப்புளி.

**race:** *(விண்.)* **வான்கோளப் போக்கு:** வான்கோளங்கள் இயங்கு பாதை.

**race rotation:** *(வானூ.)* **இயங்கு சுழற்சி:** விமானத்தில் முற்செலுத்தி மூலமாக அல்லது அதன் விளை வாகச் செல்லும் காற்றோட்டத் தின் மீது முற்செலுத்தியின் இயக் கத்தினால் உண்டாகும் சுழற்சி.

**raceway:** *(மின்.)* **புழைவழி:** காப் புக்குழாய், வார்ப்படக்குழாய் போன்ற உட்புழையுடைய பொருட்களைக் குறிக்கும் சொல். இவை பெரும்பாலும் மறைவாக இருக்கும். இவற்றின் வழியாக மின்கம்பிகள் ஒரு வெளிச் செல் வழியிலிருந்து இன்னொரு வழிக் குக் கொண்டு செல்லப்படுகின் றன.

**rack and pinion:** *(அ.க.)* **பற்கம் பிச் சுழல் சட்டம்:** பற்கள் பொளிந் துள்ள சட்டம் மூலம் சுழலியக்க, நேர் இயக்க மாறுபாடு செய்யும் அமைவு.

**rack:** **அழிச்சட்டம்:** *(1)* பொருள் களை வைப்பதற்கான கொள்கலச் சட்டம்.

(2) பற்கள் பொளிந்த கம்பி அல் லது சட்டம்.

(3) அச்செழுத்து அடுக்குப் பல கைகளை வைப்பதற்குப் பயன் படும் உலோகத்தாலான அல்லது மரத்தினாலான சட்டம்.

**radar:** **ராடார் (தொலை நிலை) இயக்கம்:** ஆற்றல் வாய்ந்த மின் காந்த அலை அதிர்வியக்க மூலம் தன்னிலையும், விமானங்கள், கப்பல்கள், கடற்கரைகள் முதலிய வற்றின் நிலைகளும் கண்டறி வதற்குரிய கருவி அமைவு.

**radar mile:** *(மின்.)* **ரேடார் மைல்:** ரேடார் துடிப்பு, ஒரு மைல் தூர முள்ள இலக்கிற்குச் சென்று திரும்பு வதற்குப் பயணம் செய்யும் தொ லைவு. ரேடார் துடிப்பானது ஒரு மைல் தூரம் சென்று வர $10.75 \times 10^{-6}$ வினாடி நேரம் தேவை.

**radial:** **மையவிலக்கு:** மையத்திலி ருந்து அல்லது இருசிலிருந்து புற நோக்கி விலகிச் செல்கிற அமைவு.

**radial arm:** *(எந்.)* **ஆரைக்கரம்:** இயங்கும் பிடிமானம் இது ஆரை: துரப்பண எந்திரத்தில் துரப் பணச் சேணத்தைத் தாங்குகிறது.

**radial axle:** *(எந்.)* **ஆரை இருசு:** பாதை வளைவுக்குத் தக்கபடி அமைந்த இருசு.

**radial bar:** **ஆரைச் சலாகை:** இது ஒரு மரச்சலாகை இதன் நுனியில் ஒரு பென்சில் இணைக்கப்பட்டி ருக்கும். இதனைக் கொண்டு பெரிய வளைவுகளை வரையலாம்.

**radial bearing:** *(தானி.)* **ஆரத் தாங்கி:** நீள் உருளைகளுடன் அல்லது பீப்பாய் வடிவ உருளைகளுடன் கூடிய தாங்கி.

**radial drill:** *(உலோ.)* **ஆரத்துரப்பணம்:** ஒரு தூணின் ஆதாரத்தின் மீது ஆரம் போன்ற கரத்தில் ஏற்றப்பட்ட ஒரு துரப்பணம்.

**radiol driling machine:** *(எந்.)* **ஆரைத் துரப்பண எந்திரம்:** ஒரு கனரகத் துரப்பண எந்திரம். துரப்பணம் செய்யப்படும் பொருளை நகர்த்தாமல் துரப்பணத்தின் நிலையைச் சரி செய்யக்கூடிய வகையில் இது அமைக்கப்பட்டிருக்கும்.

**radial engine:** *(வானூ.)* **ஆரை எஞ்சின்:** நிலையான நீள் உருளைகள் ஒரு பொதுவான வளைவுச் சுழல் தண்டினைச் சுற்றி ஆரை வடிவில் அமைக்கப்பட்டிருக்கும்.

**radian:** *(மின்.)* **ஆரைக்கோணம்:** ஆரையின் வட்டச்சுற்று வரை மீது ஆரை நீளக் கூறுகொள்ளும் கோணம். ஒரு வட்டத்தின் சுற்றளவு 2π ஆரைக் கோணங்களுக்குச் சமம். ஒரு ஆரைக்கோணத்தின் அளவு ஏறத்தாழ 57°.

**radiant heat:** *(இயற்.)* **தாவு வெப்பம்:** மையத்தினின்றும் நாற்றிசையிலும் வெப்பம் தாவிச் சென்று பரவுதல்.

**radiating surface: கதிர்வீச்சுப் பரப்பு:** வெப்பக் கதிர்களை வீசிப் பரப்புகிற பரப்பு.

**radiation:** *(எந்;பொறி.)* **வெப்பக் கதிர்வீச்சு:** வெப்பக்கதிர் வீசிப் பரவுதல்.

**அணுக்கதிர்வீச்சு:** அணுத் துகள் அல்லது கதிர்கள் மிக வேகமாக வீசிப் பரவுதல்.

**radiation loss:** *(மின்.)* **கதிர் இழப்பீடு:** மின்னியல் மற்றும் காந்தவியல் புலங்களில் கதிர்வீச்சு காரணமாக அனுப்பு ...பிகளில் இழப்பு ஏற்படுதல்.

**radiation resistance:** *(மின்.)* **கதிர்வீச்சுத் தடை:** ஒரு வானலை வாங்கியிலிருந்து ஆற்றல் கதிர்வீச்சின் விளைவாக, அதில் ஏற்படும் தடை.

**radiator:** *(எந்.பொறி.)* **வெப்பாற்றுப் பொறி:** உந்துவண்டிப் பொறியின் வெப்பாற்றும் அமைவு.

**radiator hose:** *(தானி.)* **வெப்பாற்றுப்பொறி நெழிவுக் குழாய்:** உந்து ஊர்தியில் வெப்பாற்றுப் பொறியினையும், எஞ்சினையும் இணைக்கும் நெளிவுக் குழாய்.

**radical:** *(கணி.)* **விசைமூலஅளவு:** எண்களின் வர்க்கமூலம் தொடர்பான அளவு.

**மூல உறுப்பு:** சேர்மத்தின் அடிப்படைக் கூறாக அமைந்து சேர்மத்தின் இயல்பான வேதியியல் மாற்றங்களின்போது மாறாமலே இருக்கும் தனிமம் அல்லது தனி அணு அல்லது அணுக்களின் கூட்டம்.

**radio:** *(மின்.)* **வானொலி:** கம்பியில்லாச் செய்திப் பரப்பு; கம்பியில்லாச்செய்தி வாங்கும் அமைவு; வானொலிப்பெட்டி; வானொலி ஒலி பரப்பு.

**radioacoustics:** *(மின்.)* **அலை ஒலியியல்:** ஒலி அலைகளை அனுப்புதல், உண்டாக்குதல், பெருக்குதல் பற்றி ஆராய்தல்.

**radioctive:** *(மின்.)* **கதிரியக்கமுடைய:** பொருட்கள் நேர் மின்னேற்றமும், எதிர் மின்னேற்றமும் உடைய துகள்களை வெளியிடுதல்.

**radioctivity:** *(வேதி.)* **கதிரியக்கம்:** ஒருவகை அணு இன்னொரு வகை அணுவாக மாறும்போது ஏற்படும் மாறுதல். இந்த மாற்றத்

தின்போது அணுவின் உட்கருவிலிருந்து எரியாற்றல் வெளிப்படுகிறது.

**radio-astronomy: கதிரியக்க வானியல்:**

**radio broadcasting: வானொலி ஒலிபரப்பு:** செவிப்புலன் ஆற்றலை வானொலி ஆற்றலாக மாற்றி வானொலி அலைகளின் வடிவில் அனுப்புதல்.

**radio channel: வானொலி அலை வரிசை:** வானொலி, தொலைக்காட்சி அலை அடையாளக் குறியீடுகளை இடையீடின்றி அனுப்பித் தரும் அலை இடைப்பகுதி. இன்றையத் தொலைக்காட்சி வரையளவுகளின்படி, ஓர் அலை வரிசை என்பது 6 மெகா சைக்கிள் அகல் விரிவுடையது.

**redio communication, வானொலிச் செய்தித் தொடர்பு:** வானொலி ஆற்றல் மூலமாக வாய்மொழிச் செய்தியை அல்லது குறியீட்டுச் செய்தியை அனுப்புதல்.

**radio compass:** *(வானூ.)* **வானொலித் திசைகாட்டி:** கதிரியக்கத் தத்துவத்தின் மூலம் திசைகளைக் குறித்துக் காட்டும் கருவி. இது வானொலி ஒலிபரப்புப் பெட்டியில் அமைந்திருக்கும். அதை நோக்கியே இதன் முள் திரும்பி இருக்கும். இதன் முள் வடக்குத் திசையை நோக்கி இருக்காது.

**radio direction finder:** *(இயற்.)* **வானொலித் திசைகாட்டி:** வானொலிச் சைகை எந்தத் திசையிலிருந்து அனுப்பப்படுகிறது என்பதை நிருணயிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள வானொலி வாங்கி. இது மீகாமத்தில் பயன்படுகிறது.

**radio frequency:** *(மின்.)* **வானொலி அலைவெண்:** வானொலிச் சைகைகளை அனுப்புவதில் பயன்படுத்தப்படும் மின்னலைகளின் அலைவெண். இது ஏறத்தாழ வினாடிக்கு 40.000-க்கும் 30,000,000-க்கும் இடைப்பட்ட அதிர்வுகளைக் கொண்டிருக்கும்.

**radio meter: சைகை இயக்கமானி:** கப்பல்களிலிருந்தும் விமானங்களிலிருந்தும் அனுப்பப்படும் கம்பியில்லாச் சைகைச் செய்திகளிலிருந்து அவை இருக்கும் திசையைக் கண்டுபிடிக்கும் கருவி.

**radiogram, கம்பியில்லா ஒலிபரப்புச் செய்தி:** வானொலி வாயிலாக அனுப்பப்பட்டு, ஏதோவொரு வழியில் முகவரியாளருக்கு அஞ்சல் செய்யப்படும் செய்தி.

**radiograph: வெயில்மானி:** வெயிலின் செறிவையும் வெயில்காயும் நேரத்தையும் பதிவு செய்வதற்கான கருவி.

**radiography:** *(மின்.)* **ஊடுகதிர்ப் படமெடுப்பு:** ஊடுகதிர்கள் (எக்ஸ்ரே) படும்படி செய்து ஒரு பொருளை ஆராய்வதற்கான ஒளிப்பட அறிவியல்.

**radioisotope:** *(வேதி.)* **கதிரியக்க ஓரகத் தனிமம்:** கதிரியக்கமுடைய ஒரு தனிமத்தின் வடிவம். இது தனிமத்திற்கு இயற்கையாக அமைந்திருக்கலாம் அல்லது அணுப்பிளப்பு போன்ற வேறு அணுவியல் மாறுதல்கள் மூலம் உண்டானதாக இருக்கலாம்.

**radiology:** *(மருத்.)* **ஊடுகதிர்—கதிரியக்க மருத்துவம்:** ஊடுகதிர் (எக்ஸ்ரே) கதிரியக்கம் மூலமாக நோய்களைக் குணப்படுத்துதல்.

**radiometallography:** *(இயற்.)* **ஊடுகதிர் உலோக உள்ளமைப்பு ஆய்வியல்:** உலோகங்களின் உள் கட்டமைப்பினையும் பண்புகளையும் ஊடுகதிர்கள் (எக்ஸ்ரே)மூலம் ஆராயும் முறை.

**radiometer : கதிரியக்கச் செறிவு மானி** : கதிரலை இயக்கம், இயக்க ஆற்றலாக மாறுவதைக் காட்டும் கருவி.

**radio network** : **வானொலி இணைவனம்** : ஒரு பொதுவான நிகழ்ச்சியை ஒலிபரப்பும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டுள்ள பல வானொலி நிலையங்களின் தொகுதி.

**radio phone** : **வானொலித் தொலைபேசி** : வானொலி மூலமாக குரல் செய்தியை அனுப்புவதற்குப் பயன்படும் கருவி.

**radio phony : ஒலி வெப்ப நிலை ஒலியாக்கம்** : ஒலியலை வெப்ப நிலைகளினால் ஒலியுண்டாக்கும் முறை.

**radio receiver** : **வானொலிப் பெட்டி** : வானொலி ஆற்றலை ஏற்று, கேட்பு ஆற்றலாக மாற்றுவதற்குத் தேவையான சாதனம்.

**radioscopy** : **ஊடுகதிர்ஆய்வியல்**.

**radio sonde** ; **மீவளி நிலைமானி** : வளி மண்டலத்தின் பல்வேறு தளங்களின் அழுத்தம், வெப்ப நிலை, ஈர்மை நிலைகளைக் குறித்து ஒலிப்பரப்புவதற்காக விமானங்களிலிருந்து விமானக் குடை மூலம் இறக்கப்படும் சிறு வானொலிப் பரப்புக் கருவி.

**radiosonic** : (மின்) **வானொலியாக்கம்** : ஒலியாக்கத்திற்கு வானொலி அலைகளைப் பயன்படுத்துதல்.

**radio spectrum** : (மின்.) **வானொலி ஊடகம்** : வானொலிக்குப் பயன்படுத்தப்படும் மின்காந்த ஊடகப் பிரிவு.

**radio station** : **வானொலி நிலையம்** : வானொலிச் செய்திகளை அனுப்பவும் பெறவும் பயன்படும் கருவி அமைந்துள்ள இடம்.

**radio-telegram** : **வானொலித் தந்தி** : கம்பியில்லாத் தந்திமூலம் பெறப்படும் செய்தி.

**radio telegraphy** : (மின்.) **வானொலித் தந்திமுறை** : மோர்ஸ் தந்தி முறையில் பயன்படுத்தும் புள்ளிகள், கோடுகள் மூலம் தொடர் அலைகளாகச் செய்திகளை அனுப்பும் முறை.

**radlio telephony** : (மின்.) **வானொலித் தொலைபேசி** : குரல் மூலம் வானொலிச் செய்தித் தொடர்பு கொள்ளுதல்.

**radio telescope**; (மின்.) **வானொலித் தொலை நோக்கி** : புறவெளியிலிருந்தும் வானொலி அலைகளைக் கண்டுபிடிப்பதற்கான மிகவும் கூருணர்வுள்ள வானொலி வாங்கி அமைவு.

**radio-therapy**: (மருத்.) **ஊடுகதிர் மருத்துவம்** : ஊடுகதிர் (எக்ஸ்ரே) கதிரியக்கம் மூலம் நோய்களைக் குணப்படுத்தும் மருத்துவ முறை.

**radio wave** : (மின்.) **வானொலி அலை** : ஓர் அனுப்பீட்டு வானலை வாங்கியிலிருந்து பரப்பப்படும்சிக்கலான மின் நிலையியல் மற்றும் மின்காந்தப்புலம்.

**radium** : (வேதி.) **ரேடியம் (கதிரியம்)** : தார், வண்டல் திரள்களிலிருந்து பெறப்படும் இயற்கையாகக் கதிரியக்கமுள்ள உலோகத் தனிமம். இது யுரேனியத்தை விட அதிகக் கதிரியக்கம் வாய்ந்தது. யுரேனியம் பெறப்படும் அதே தாதுப் பொருட்களிலிருந்து கிடைக்கிறது.

**radium-therapy** : (மருத்.) **ரேடிய மருத்துவம்** : கதிரியக்கத்தையோ, அதன் விளைபொருட்களையோ பயன்படுத்தி நோய் தீர்க்கும் முறை.

**radius** : **ஆரை** : ஒரு கோளம் அல்லது வட்டத்தின் மையத்தில்

ருந்து அதன் சுற்று வரைக்கு அல்லது தளப்பரப்புக்குச் செல்லும் ஒரு நேர்கோடு.

**radius gauge :** *(எந்.)* **ஆரை அளவி :** மேடான இடை விளிம்புகளையும், வளைவு முனைகளையும் அளவிடுவதற்கான ஒரு கருவி.

**radius of gyration :** *(பொறி,)* **சுழல் ஆரம் :** மடிமைத் திரும்புமையை வெட்டுத் தளப்பரப்பினால் வகுப்பதன்மூலம் கிடைக்கும்ஈவின் வர்க்கமூலத்திற்குச் சமமானது.

$$R = \sqrt{\frac{I}{A}} \qquad \frac{I}{A} = R^2$$

R = சுழல் ஆரம்
I : மடிமைத் திருப்புமை
A : பரப்பளவு

**radius planer :** *(எந்.)* **ஆரை இழைப்புளி:** வட்டவரைகள் உந்து ஊர்திகளின் இணைப்புகள் முதலியவற்றில் பயன்படுத்தப்படும் ஒரு தனிவகை இழைப்புளி.

**raffia :** *(க.க.)* **பனைநார்:** பனையின் மரவகையிலிருந்து எடுக்கப்படும் நார்.

**rail :** *(க.க.)* **கம்பியழி :** கம்பித் தடைவேலி; கம்பிக் கைபிடி.

**rail :** **தண்டவாளம் :** இருப்பூர்திகளுக்கான தண்டவாளம்.

**rail way track gauge :** **இருப்பூர்திப் பாதை அகலம் :** அமெரிக்க இருப்பூர்தித் தண்டவாளங்களுக்கிடையிலான அகலம். இது 4" 8½" அளவு இருக்கும்.

**rainbow :** **வானவில் :** வெயில் அடித்துக் கொண்டு மழைத்தூறல் விழும் போது, நீர்த்துளிகளில் ஒளிச்சிதறல் ஏற்படுவதன் காரணமாக சூரியனுக்கு எதிர்த்திசையில் வில் போல் காணப்படும் ஏழு நிறங்களின் தொகுதி. இதில் செங் கருநீலம், நீலம், ஊதா, பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு ஆகிய ஏழு வண்ணங்கள் வரிசையாக அமைந்திருக்கும்.

**rainbow generator :** *(மின்.)* **வண்ணக்கோல உருவாக்கி :** வண்ணத் தொலைக் காட்சியில் படக் குழாயில் வண்ணப்பட்டை முழுவதையும் உண்டாக்குகிற கருவி,

**rainbow, secondary :** **எதிர் வானவில் :** வானவில்லின் உட்புறமோ, வெளிப்புறமோ காணப்படும் தலைகீழான நிறவரிசையுடைய வானவில்.

**raised printing :** *(அச்சு.)* **புடைப்பு அச்சு முறை :** எழுத்துகள் மேல் வந்து முனைப்பாக இருக்கும்படி அச்சிடும் முறை.

**rake :** *(பட்.)* **சம்மட்டம்:** சம மட்டமாக்கப் பயன்படும் கருவி.

**ram** *(எந்.)* **தூலப்பொறி :** மதிற் சுவர்களைத் தகர்ப்பதற்குரிய உலோகப் பூணிட்ட பெருந்தூலம்.

**raman effect :** *(இயற்.)* **இராமன் விளைவு :** ஓர் அலை நீளமுள்ள ஒளியானது (எ-டு: பாதரச விளக்கிலிருந்து வரும் ஒளி) ஒரு திரவத்திற்குள் அல்லது வாயுவிற்குள் பாயும்போது, அந்தத் திரவத்தின் மூலக்கூறு ஒளியை பக்க வாட்டில் சிதறடிக்கிறது. ஊடகம்ஒருவகைப் பிரகாசமான கோட்டினையும், வேறு சில கோடுகளையும் காட்டும். இந்தப் பக்கக்கோடுகள் திரவத்தின் மூலக்கூறுகளுக்கு எதிராக ஒளியின் துகள்கள் தாக்கி அதனால் ஆற்றலை ஈட்டுவதால் அல்லது இழப்பதால்உண்டாகின்றன. இதனைக் கண்டு பிடித்தவர் இந்திய விஞ்ஞானி சர்.சி.வி இராமன் ஆவார். இந்தக் கண்டுபிடிப்புக்காக இவருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

**rammer :** (வார்.) **திமிசுக்**



திமிசுக் கட்டை

**கட்டை :** மண்ணை அடித்து இறுக்கும் கருவி.

**ramp :** (க.க.) **கோட்டைச் சாய்தளம் :** கோட்டை அரணில் இரண்டு தரைமட்டங்களை இணைக்கும் சாய்தளம்.

**random : தொடர்பின்மை :** அங்கொன்றும் இங்கொன்றுமான முறைமை. ஒழுங்கற்ற அளவும் வடிவும் கொண்டிருப்பவை.

**random joints : தொடர்பற்ற இணைப்புகள் :** மேலொட்டுப் பலகையில் அகலம் சமமாக இருக்கிறதா என்பதைக் கவனத்தில் கொள்ளாமல் தொடர்பின்றிச் செய்யப்படும் இணைப்புகள்.

**random work :** (க.க.) **ஒழுங்கற்ற வேலைப்பாடு :** ஒழுங்கற்ற முறையில் அமைக்கப்படும் கல் வேலைப்பாடு. ஒரு சீராக இல்லாத கற்களைக் கொண்டு ஒரு சுவர் கட்டுதல் போன்ற பணி.

**range at economic speed :** (வானூ.) **சிக்கன வேகவீச்சு :** ஒரு விமானம், உயரத்தில் பறக்கும் எல்லா நிலைககளிலும் மிகவும் சிக்கனமான வேகத்தில் பறக்கும் போது மிக அதிக அளவு செல்லக் கூடிய தூரம்.

**range at full speed :** (வானூ.) **முழுவேக வீச்செல்லை :** ஒரு விமானம் மிகச் சிக்கனமான வேகத்திலும் உயரத்திலும் பறக்கும்போது செல்லக்கூடிய உச்ச அளவு தூரம்.


**range at maximum speed :** (வானூ.) **அதிவேக வீச்சு :** ஒரு விமானம், உயரத்தில் குறிப்பிட்ட நிலைகளில் முழுவேகத்தில் பறக்கும்போது செல்லக்கூடிய மிக அதிக அளவு வேகம்.

**rapeseed oil : கடுகு எண்ணெய் :** கடுகிலிருந்து பெறப்படும் கனமான பழுப்பு நிற எண்ணெய். இது மசகெண்ணெயாகவும் எஃகினைப் பதனப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

**rasp :** (எந்.) **முரட்டு அரம் :** கரடு முரடான பரப்புடைய அரம் போன்ற கருவி.

**raster :** (மின்.) **எலெக்ட்ரான் ஒளிர்வு :** படக்குழாய் திரையில் எலெக்ட்ரான் கற்றையை வீசுவதன் மூலம் உண்டாகும் ஒளிர்வு.


**ratchet :** (எந்.) **ஒருவழிப் பற்சக்கரத் தடை:** சலாகை மீது அல்லது சக்கரம் மீது அமைந்த பற்களின்இயக்கத்துடன் ஒருவழி அல்லது மறுவழித் தடுக்கும் தடைக்கோல் அமைவு.



பற்சக்கரத் தடை

**ratchet bar :** (எந்.) **பற் சக்கரத் தடைச் சலாகை :** ஒரு வழித் தடைப் பற்சக்கரத்தில் உள்ளது போன்ற பற்கள் கொண்ட ஒரு நேர்ச் சலாகை. இது எந்திரப் பற்களைத் தடுக்கும் அடை தாழினை ஏற்றுக் கொள்ளும்.


**ratchet bit brace :** (மர.வே.)



பற்சக்கரப் பிணைப்புக் கட்டு

**ratchet drill :** (எந்.) **ஒரு வழித் தடைப் பற்சக்கரத் துரப்பணம்:** இது ஒரு நெம்புகோலுடைய கையால்

இயக்கப்படும் ஒரு துரப்பணம். இதன் ஒரு முனையில் ஒரு துரப்பணப் பிடி அமைந்திருக்கும். இது ஒரு வழித்தடைப் பற்சக்கரம். அடைதாழ் மூலம் சுழலக் கூடியது.



பற்சக்கரத் துரப்பணம்

**ratchet wheel: ஒரு வழித் தடைப் பற்சக்கரம் :** *ஒரு வழிப் பற்சக்கரத் தடை அமைக்கப்பட்ட சக்கரம்.*

**rated horse power of an engine :** *(வானூ.)* **விசை மானம்:** ஒரு குறிப்பிட்ட வகை எஞ்சினின் வேக அளவு கணிக்கப்பட்டிருந்து, அது முழுவேகத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட உயரத்தில் அல்லது பெருகிய அழுத்தத்தில் இயங்கும் போது உண்டாகும் சராசரிக் குதிரை விசை.

**rated revolutions :** *(வானூ.)* **சுழற்சி வேகம் :** விசைமானத்திற்கு இணையான சுழற்சிகளின் எண்ணிக்கை.

**rate of climb :** *(வானூ.) :* **ஏறுமுகவேகம்:** ஒரு விமானம் காற்றை எதிர்த்துச் செங்குத்தாக ஏறும் வேக வீதம்.

**rate - of - climb indicator:** *(வானூ.)* **ஏறுமுக வேகமானி :** ஒரு விமானம் உயரே ஏறுகிற அல்லது உயரத்திலிருந்து இறங்குகிற வேக வீதத்தைக் காட்டும் கருவி.

**rate of speed :** *(எந்.)* **வேக வீதம்:** எந்திர வேலைகளில் வேக வீதம் ஒரு நிமிடத்தில் சுழற்சிகளின் எண்ணிக்கை அல்லது ஒரு நிமிடத்தில் அடி என்ற அளவில் கணக்கிடப்படுகிறது.

**rating of alternators :** *(மின்.)* **மாறு மின்னாக்கி வேகம் :** மாற்று மின்னோட்டம் உற்பத்தி செய்யும் மின்னாக்கிகளின் வேகம் கிலோ வால்ட் ஆம்பியர்களில் (KVA) கணக்கிடப்படுகிறது. இது ஆம்பியர் அளவினை மின்னழுத்தத்தின் மடங்குகளாகப் பெருக்கி ஆயிரத்தால் வகுத்துப் பெறப்படுகிறது.

**ratio : விதத் தொடர்பு:** ஒன்றோடு ஒன்றனுக்குள்ள அளவை யொட்டிய தொடர்பு.

**ratio of compression:** *(குளி.பத.)* **அழுத்த வீதம் :** அழுத்தத்திற்கு முன்பும் பின்பும் அழுத்தங்களிடையிலான வீதம்.

**ratio of transformation : மின் மாற்று வீதம் ;** ஒரு மின்மாற்றியில் முதனிலைச் சுருளிலுள்ள சுழல் எண்ணிக்கைக்குமிடையிலான வீத அளவு.

**rawhide : பதனிடாத் தோல் :** பதனிடப்படாத தோல்.

**rawhide gears :** *(எந்.)* **தோல் பல்லிணை :** இறுக்கமாக அழுத்தப்பட்ட பதனிடப்படாத தோல் வட்டுகளினாலான ஓசை எழுப்பாத பல்லிணை.

**rawhide hammer : தோல் சுத்தி:** பதனிடப்படாத தோல் கொண்டையுடைய கைச்சுத்தி. உலோக உறுப்புகளில் இச் சுத்தியைப் பயன்படுத்தும் போது அந்த உறுப்புகளில் கீறல்கள் ஏற்படாமல் இருக்கும்.

**raw material : மூலப்பொருள்** செய்பொருளுக்குரிய மூல இயற்கைப் பொருள்.

**raynauds disease :** (நோயி.) **ரேனாட்ஸ் நோய் ;** விரல்களுக்கும் சில சமயம் காதுகளுக்கும் கீழ்த் தாடைக்கும் இரத்தம் செல்வதில் ஏற்படும் கோளாறு. பெரும்பாலும் 50 வயதான பெண்களுக்கு இறுதி மாத விடாய் சமயத்தில் இந்நோய் உண்டாகும்.

**rayon: ரேயான் (மரவிழைப்பட்டு)**: மர இழையிலிருந்து உருவாக்கப் படும் செயற்கைப்பட்டு வகை.

**reactance**: (மின்.) **எதிர்வினைப்பு**: ஒரு மாற்று மின்னோட்டச் சுற்று வழியில், மின்னோட்டத்தை எதிர்க்காமல், ஆனால் அதற்கும் அதன் மின்னியக்க விசைக்குமிடை யிலான நிலைவேறுபாட்டினை உண்டாக்குகிற தடையின் உறுப்பு.

**reaction : எதிர்வினை :** வேதியிய லில் புறத்தாக்குதலால் ஏற்படும் இயல்பு மாறுபாடு.

**reaction coil : எதிர் வினைப்புச் சுருள்.**

**reaction engine** : (வானூ.) **எதிர் வினைப்பு எஞ்சின் (எதிர்வினைப்பு விசைப் பொறி)**: ஓர் எஞ்சின் அல் லது விசைப்பொறி வெளியேற் றும் பொருளுக்குத் தனது எதிர் வினைப்பு மூலம் உந்து விசையை உண்டாக்குகிறது. இந்த எஞ்சின் எதிர்வினைப்பு எஞ்சின் எனப் படும்.

**reaction turbine** : (வானூ.) **எதிர்வினைப்பு விசையாழி**: சுழலி அலகுகள் கூம்பலகுகளின் வளைய மாக அமைந்த ஒரு வகை விசை யாழி. இந்த அலகுகளிடையிலி ருந்து வெளியேற்றப்படும் திரவத் தின் எதிர்வினைப்பு மூலம் விசை யாழி சுழல்கிறது.

**reaction turbine**: (மின்.) **எதிரடி விசையாழி** : நீரோட்டம் அல்லது வாயு அல்லது நீராவி பாய்வதால் மின்விசையை நேரடியாக உற் பத்தி செய்யும் பொறி. ஒரு தூண்டு விசையாழியில் ஒரு சக்கரத்தின் அலகில் நீர் (அல்லது நீராவி) தாக்கி சக்கரத்தைச் சுழலச் செய் கிறது. நீர் (நீராவி) முன்னோக்கிப் பாயும்போது சக்கரம் பின்னோக் கிச் சுழல்கிறது.

**reaction voltage: எதிர்வினைப்பு மின்னழுத்தம்.**

**reactor** : (மின்.) **எதிர்வினைப் பான்** : மாற்று மின்னோட்டங் களின் ஓட்டத்திற்கு எதிர்ப்பை அளிக்கும் ஒரு சாதனம். பொது வாக, இரும்பு உள்ளீட்டின் மீதான கம்பிச் சுருள்களைக் கொண்டிருக் கும்.

**reactor** : (இயற்.) **அணு உலை :** யுரேனியம் அல்லது புளூட்டோனி யம் அணுக்களை ஒரு கட்டுப் பாட்டு முறையில் பிளவுபடுமாறு செய்து வெப்பத்தை உண்டாக்கு கிற அல்லது கதிரியக்கத்தில் அணுக்களைப் பிளக்குமாறு செய் கிற ஓர் எந்திரம். ஒரு வேகங் குறைந்த அணுஉலையில், காரீயம், நீர் போன்ற ஓர் இடையீட்டுப் பொருளின் மூலம் அணுக்களின் வேகம் குறைக்கப்படுகிறது. ஒரு வேகம் மிகுந்த அணு உலையில், நியூட்ரான்களின் வேகம் குறைக் கப்படுவதில்லை. ஓர் அணு உலை யிலிருந்து, கார்பன்டையாக்சைடு நீர், உருகிய சோடியம் போன்ற குளிர்விக்கும் பொருள்களின்மூலம் வெப்பம் அப்புறப்படுத்தப்படு கிறது. சில அணு உலைகளில், நியூட்ரான்களை உறிஞ்சிக் கொள் ளும் காட்மியம் அல்லது போ ரோன் போன்ற கட்டுப்பாட்டுச் சலாகைகள் மூலம் வெப்பம் நீக்கப் படுகிறது.

**reactor, saturable** : (மின்.) **பூரித எதிரியக்கி** : நேர் மின்னோட் டம் சுருணைகளின் தொகுதி வழியாகச் செல்லக்கூடிய வகையில் அமைந்த ஒருவகை மின்மாற்றி. காந்த உட்புரியின் அளவினை நேர் மின்னோட்டம் கட்டுப் படுத்துகிறது. அதன்மூலம் மின் மாற்றியின் மாற்று மின்னோட்ட மும் கட்டுப்படுத்தப்படுகிறது.

**reagent : (வேதி.) வினையூக்கி :** எதிர்த்தாக்காற்றல் மூலம் சேர்மத் தின் பொருட்கூறு கண்டுணர உத வும் பொருள். இது பகுப்பாய்வு வேதியியலில் பயன்படும் பொருள்.

**reactive load:** *(மின்.)* **எதிர்வினை மின்சுமை:** *மின்விசை ஆதாரத்தின் மின்னோட்டத்தைச் செலுத்தும் அழுத்தத்திலிருந்து குறையுமாறு செய்கிற மின்சுமை. தூண்டு எதிர் வினைப்பு கொண்ட மின்சுமை.*

**reactive power :** *(மின்.)* **எதிர் வினைப்பு மின்விசை :** *ஒரு மின் சுற்றுவழியின் எதிர்வினைப்பு அமைப்பின் பயன்படுத்திக் கொள் ளும் மின்விசை,*

**ream: ரீம்:** *20 தாள்மடி; 480 தாள்கள் அடங்கிய கட்டு; கழிவுச் சரியீடு சேர்த்து 500 தாள் கள் அடங்கிய கட்டு.*

**reamer :** *(உலோ.)* **துளைப் பெருக்கு கருவி :** *உலோகத்தில் ஏற்கெனவே வெட்டப்பட்டுள்ள துளையைப் பெரிதாக்குவதற்கான ஒரு கருவி.*

**rear axle** : *(தானி.)* **பின் இருசு :** *பல்லிணைகள், இருசுச் சுழல் தண்டுகள், இயங்குபொறி ஆகிய வற்றையும் தாங்கிகள், பட்டை வளையங்கள் போன்ற இயக்கு வதற்குத் தேவையான துணை உறுப்புகளையும் கொண்ட பின் இருசு.*

**Reaumur thermometer:** *(இயற்.)* **ரோமர் வெப்பமானி :** *ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் பயன்படுத்தப் படும். ஒரு வெப்பமானி. இதில் பனிக்கட்டியின் உருகுநிலை 0°; நீரின் கொதிநிலை 80°.*

**receiver :** *(மின்.)* **செவிக்குழல் :** *தொலைபேசிச் செய்தியைக் கேட்*



செவிக் குழல்

*பதற்கு காதருகே வைத்துக் கேட் கப்படும் கருவி.*

*(2)* **ஒலி-ஒலிப்பெட்டி:** *அலை பரப்பு களை ஒலியாகவோ ஒளியாகவோ மாற்றுவதற்கான அமைவு.*

**receptacle :** *(மின்.)* **கொள்கலம் :** *வெண்சுடர் மின் விளக்கினைப் பொருத்துவதற்கான சுவர்க் குதை குழி.*

**reciprocating :** *(எந்.)* **எதிரெதிர் இயக்கம் :** *முன்னும் பின்னும் மாறி மாறி இயங்குதல்.*

**recondition : மறு சீரமைப்பு :** *பயன்படுத்தத் தக்கவாறு பழுது பார்த்துச் சீரமைவு செய்தல்.*

**reconnaissance : முன்னாய்வு :** *நில அளவைப் பணியில் நில அள வைப் பணியைத் தொடங்குவதற்கு முன்பு நடத்தப்படும் முன்னீடான ஆய்வு.*

**recorder :** *(மின்.)* **பதிவு கருவி ;** *மின்னியல் சைகைகளை அல்லது ஒரு கருவியின் அல்லது சாதனத் தின் மாறிவரும் இயற்பியல் அல் லது மின்னியல் நிலைமைகளைப் பதிவு செய்வதற்கான ஒரு கருவி. எடுத்துக்காட்டாக, ஒரு நாடா ஒலிப்பதிவு கருவியானது ஒலி பெருக்கி வழியாக நுழையும் ஒலி யை மின்னியல் சைகைகளாக மாற்றி, ஒரு காந்த நாடாவில் பதிவு செய்து வைக்கிறது.*

**recording thermometer : பதிவு வெப்பமானி:** *வெப்பமாறுதல்களை நிரந்தரமாகப் பதிவு செய்து கொள்ளும் ஒரு வெப்பமானி. இது ஒரு காகிதப் பட்டையில் அல்லது சுருளில் தானாகவே வெப்பநிலை யைப்பதிவு செய்து கொள்ளும்.*

**recrystallization :** *(உலோ.)* **மறு படிகமாக்கல்:** *கெட்டியாக்கப்பட்ட உலோகத்தைக் கட்டுப்படுத்தி ஆற வைத்தல் மூலமாகவோ, நன்கு சூடாக்கி மெல்ல ஆறவிடுவதன்*

மூலமாகவோ பதப்படுத்தி அதன் இயல்பான பண்பியல்புகளுக்கும், கட்டமைப்புக்கும் மீண்டும் கொண்டுவருதல்.

**rectangle** : *(கணி.)* **நாற்கரம் :** நான்கு பக்கங்களைக் கொண்ட நாற்கட்ட வடிவம். இதன் கோணங்கள் செங்கோணமாக இருக்கும்; எதிர்ப்பக்கங்கள் சமமாகவும் இணையாகவும் இருக்கும். அண்டைப் பக்கங்கள் சமமாக இருக்க வேண்டியதில்லை.

**rectangular** : *(கணி.)* **செவ்வக வடிவம் :** ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செங்கோணங்கள் உடைய நாற்கர வடிவம்.

**rectifier** : *(மின்.)* **மின்திருத்தி** : மாற்று மின்னோட்டத்தை நேர் மின்னோட்டமாக மாற்றும் கருவி.

**rectifier tube** : **மின்திருத்திக் குழாய் :** மாற்று மின்னோட்டத்தை நேர்மின்னோட்டமாக மாற்றுவதற்குப் பயன்படும் ஒரு வெற்றிடக் குழாய்.

**red** : **சிவப்பு :** நிறமாலையில் ஆரஞ்சு நிறத்திற்கும் வெங்கரு நீலத்திற்கும் இடைப்பட்ட அடிப்படை வண்ணம்.

**red brass** : *(உலோ.)* **செம்பித்தளை:** சிறந்த வார்ப்பட இயல்பும் எந்திர வினைத்திறனும் உடைய உயர்ந்த செப்புப் பித்தளை. இதில் 85% செம்பும், வெள்ளீயம், ஈயம், துத்தநாகம் வெவ்வேறு அளவுகளிலும் கலந்திருக்கும்.

**red cedar** : *(மர.வே.)* **சிவப்புத் தேவதாரு :** இதனைச் செம்மரம் என்றும் கூறுவர். இது 9 முதல் 12 மீட்டர் உயரம்வரை வளரும். சில வகை மரம் 100 அடி வரைகூட உயர்ந்து வளரும். இதன் வெட்டு மரம் மென்மையானது; எளிமையாக வேலைப்பாடுகள் செய்வதற்கு ஏற்றது. பென்சில் உறைகள், பெட்டிகள் செய்வதற்கு உதவுகிறது. வடமேற்கு அமெரிக்காவிலுள்ள பெரிய செம்மரங்கள் கடைவிளம்பரம் பலகைகள் செய்யப் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

**red lead** : *(வேதி.)* **வங்கச் செந்தூரம் :** ($Pb_3O_4$); ஈய மோனாக்சைடை அல்லது சுாரீயத்தைச் சூடாக்குவதன் மூலம் இது கிடைக்கிறது. கண்ணாடிக்கலம், இரும்பு துருப்பிடிப்பதைத் தடுக்கும் செஞ்சாயம் தயாரிக்கப் பயன்படுகிறது. குழாய் இணைப்புகளைக் கசிவுகளைத் தடுக்கும் பொருளாகவும் பயன்படுகிறது.

**red oak** : *(பட்.)* **செங்கருவாலி :** வெண்கருவாலியை விடக் கருமையாகவும், முரட்டுக் கரணைகளும் உடைய மரம்: எளிதில் உடையக் கூடியது; நுண்துளைகளுடையது. கட்டிடங்களில் உள் அலங்காரத்திற்கும், அறைகலன்கள் தயாரிப்பதற்கும் பயன்படுகிறது.

**red shortness or hot shortness**: *(பொறி.)* **செம்மைக் குறைவு அல்லது வெப்பக் குறைவு :** செந்தழல் நிலையில் உருட்டவோ வேலைப்பாடு செய்யவோ முடியாததாகவுள்ள தேனிரும்பின் அல்லது எஃகின் நிலை, சுந்தகம் அதிக அளவில் இருப்பதே செம்மைக் குறைவுக்குக் காரணம்.

**reducer**:*(கம்.)***செறிவுகுறைப்பான்**: ஒளிப்பட மறிநிலைத் தகட்டின் செறிவினைத் தளர்த்த உதவும் பொருள்.

**reducing agent** : *(வேதி.)* **ஆக்சிஜன் குறைக்கும் பொருள் :** இரண்டாம் பொருளிலிருந்து ஆக்சிஜனை அல்லது வேறு தனிமங்களை நீக்கும் ஒரு பொருள்.

**reducing flame**: *(பற்.)* **ஆக்சிஜன் குறைக்கும் பிழம்பு :** எரிவாயு சற்று

மிகுதியாகவுள்ள ஓர் ஆக்சிஜன் எரிவாயுப் பிழம்பு.

**reducing glass : குறைப்பு ஆடி :** பொருட்களின் வடிவளவினைக் குறைத்துப் பார்க்க உதவும் ஓர் இரட்டைக்குழி ஆடி.

**reduction gears :** *(பொறி.)* **வேகக் குறைப்புப் பல்லிணை:** சுழல் தண்டின் வேகத்தைக் குறைப்பதற்குப் பயன்படும் பல்லிணை.

**redwood : செம்மரம் :** எடை மிகக் குறைவாகவுள்ள ஒருவகை மரம். இதன் ஒரு கன அடி எடை 281 பவுண்டு. இது மென்மையானது. இதன் இழையமைப்பு மிக நேர்த்தியானது; கரணையுள்ளது. இது வெட்டுமரம். செம்பழுப்பு நிறத்தில் இருக்கும். இதில் வேலைப்பாடுகள் செய்வது எளிது. ஆனால் எளிதில் பிளவுபட்டு விடும். நீரையும், ஈரத்தையும் தாங்கி நெடுநாள் உழைக்கக் கூடியது.

**reeding :** *(மர.வே.)* **(1) நாணல் வரி ஒப்பனை :** நாணல் போன்ற வரி ஒப்பனை செய்தல்.

**(2) நாணயச் சூழ்வரி :** நாணயத்தின் விளிம்புச் சூழ்வரி.

**reference marks :** *(அச்சு.)* **சுட்டுக் குறிப்புகள் :** நூல்களில் மேற்கோள்களைச் சுட்டும் குறிப்புகளை அடிக்குறிப்புகளில் காட்டுதல்.

**reflex reflectors ;** *(தானி.எந்.)* **பின்னொளிப் பிரதிபலிப்பான் ;** ஒரு கோணத்திலிருந்து வந்து ஒரு பொருளை ஒளிர்வுடையதாகக் காட்டும் ஒளியைப் பிரதிபலிக்கிற ஓர் ஒளியியல் சாதனம்.

**reflection :** *(மின்.)* **பிரதிபலிப்பு :** ஒளிவகையில், ஓர் ஒளிக்கதிர் எந்த ஊடகத்தின் வழியாகப் பயணம் செய்கிறதோ அந்த ஊடகத்திலிருந்து வேறுபட்ட ஓர் ஊடகத்தைத் தாக்கும்போது பிரதிபலித்தல்.

**reflector:** *(மின்.)* **பிரதிபலிப்பான்:** ஒளிக்கதிரை மீள எறியும் பொருள் அல்லது மேற்பரப்பு. கதிர்வீச்சினை ஒரு குறிப்பிட்ட திசையில் வலுப்படுத்துவதற்காகக் கதிர்வீச்சுக் கம்பிக்குப் பின்புறமாக வைக்கப்படும் வானலை வாங்கிக் கம்பி.

ஏற்கப்பட்ட சைகைகளை வலுப்படுத்தி, பின்புறமிருந்தோ அல்லது தேவையற்ற திசையிலிருந்தோ சைகைகளைப் பற்றி எடுப்பதைத் தடுப்பதற்கான ஒரு வானலை வாங்கிக் கம்பி.

**reflex circuit:** *(மின்.)* **திரும்பு மின்சுற்றுவழி:** இது ஒரு வானொலி ஏற்பு மின்சுற்று வழி. இதில், சைகைகளைக் கண்டறிந்த முன்பும் பின்பும் சைகைகளைப் பெருக்குவதற்கு ஒரே குழல்கள் பயன்படுகின்றன.

**refraction:** *(இயற்.)* **ஒளிக்கோட்டம்:** வெவ்வேறு அடர்த்திகளுடைய ஊடகங்கள் வழியாக ஒளிக் கதிர் செல்லும் போது ஒளிக்கதிர் கோட்டமுறுதல். எடுத்துக்காட்டாக, காற்றிலிருந்து நீருக்குள் ஒளிக்கதிர் செல்லும் போது ஒளிக்கதிர் கோட்டமடைகிறது.

**refraction index:** *(மின்.)* **கோட்ட விகிதம்:** தடையற்ற இடப்பரப்பில் அலைக்கதிர் வீச்சின் வேக வீதத்திற்கும் மற்றப் பொருள்களில் வேகவீதத்திற்குமிடையிலான விகிதம்

**refractory: உருகாப் பொருள்:** உயர்ந்த அளவு வெப்பத்திலும் உருகாமல் வெப்பத்தை ஏற்கக் கூடிய பொருள். எடுத்துக்காட்டாக, சீனக்களிமண் உருகாமல்

வெப்பத்தின் செயலை எதிர்த்து நிற்கக்கூடியது.

**refrigerant:** *(குளிர்.பத.)* **உறை குளிரூட்டி:** ஒரு குளிர்பதன அமைப்பில் பயன்படுத்தப்படும் குளிரால் உறைபதனம் ஊட்டும் பொருள். இது குறைந்த வெப்பநிலையிலும் அழுத்தத்திலும் ஆவியாகி வெப்பத்தை எடுத்துக் கொள்கிறது. உயர்ந்த வெப்ப நிலையிலும் அழுத்தத்திலும் சுருங்குவதன் மூலம் வெப்பத்தை வெளியிடுகிறது.

**refrigerating:** *(எந்.பொறி.)* **குளிர்சேமிப்பு முறை:** உணவுப் பொருள்களைக் குளிர்சேமிப்பு செய்து பாதுகாப்பதற்கான முறை.

**refrigerator: குளிர்காப்புப் பெட்டி:** குளிர்பதனப்படுத்துவதற்கான குளிர்காப்புப் பெட்டி.

**regelation:** *(குளிர்.பத.)* **மறு உறைதல்:** உருகிய அழுத்தத்தில் நீரை மீண்டும் உறையும்படி செய்தல்; பனிக்கட்டித் துண்டுத் துகள் குவியல் வகையில் புறமுருகி இணைந்து உறைதல்.

**register:** *(அச்சு.)* **ஒத்தியைபு நிலை:** (1) அச்சுக்கலையில் தாளின் இரு புற அச்சமைவின் ஒத்தியைவு. வண்ணங்களின் ஒத்தியைவு.

(2) ஒளிப்படக்கலையில், தகடு ஒளிக்கதிர்த் திரைக்குவியம் ஆகியவற்றின் ஒத்தியைபு நிலை.

**regular polygon:** *(கணி.)* **வடிவொழுங்குப் பலகோணக்கட்டம்:** அமைப்பொழுங்குடைய நான்கிற்கு மேற்பட்ட பல பக்கங்களையுடைய வரைப்படிவம்.

**regulation:** *(மின்.)* **சீர்மை:** மின்னாக்கியின் அல்லது மின்வழங்கீட்டின் உற்பத்தியில், மின்சுமையில் மாறுதல் ஏற்படும் போது அழுத்தத்தில் ஏற்படும் மாறுதல்.

**regulation, percentage of:** *(மின்.)* **சீர்மை:** மின்னாக்கியின் அல்லது மின்வழங்கீட்டின் உற்பத்தியில், மின் சுமையில் மாறுதல் ஏற்படும்போது அழுத்தத்தில் ஏற்படும் மாறுதல். சதவீதம் (விழுக்காடு).

$$\frac{\text{மின்சுமையின்மை-முழுமின்சுமை}}{\text{முழு மின்சுமை}} \times 100 = \ldots\%$$

**reinforced concrete:** *(க.•க)* **வலுவாக்கிய வார்ப்புக் காரை:** வலுவை அதிகமாக்குவதற்காக இரும்புக்கட்டை, கம்பிகள் கொண்டு வலுவாக்கிய வார்ப்புக்கரை.

**reinforcement:** *(குழை.)* **வலியூட்டும் பொருள்:** பிளாஸ்டிக் பொருளுக்கு வலிவும், விறைப்பும் அளிக்கக்கூடிய பொருள். இவை பெரும்பாலும் கண்ணாடி இழை உடையதாக இருக்கும். பிசின் இழை, நாரிழை, கல்நார் போன்ற பொருள்களும் இதற்குப் பயன்படுகிறது.

**reinforcing steel:** *(பொறி.)* **வலியூட்டும் எ.கு:** கான்கிரீட் கட்டுமானத்தில் அதிக வலியூட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் எஃகுச் சலாகைகள்.

**reject circuit:** *(மின்.)* **ஏலாச் சுற்றுவழி:** ஒத்திசைவுள்ள இணையாக இசைவிப்பு செய்யப்பட்டுள்ள மின்சுற்றுவழி. இது ஒத்திசைவு அலைவெண்ணில் சைகைகளை விலக்கி விடுகிறது.

**relative conductance:** *(மின்.)* **தொடர்பு மின்கடத்தாற்றல்:** வெள்ளியை அடிப்படையாகக் கொண்டு ஒரு மின்னூடு கடத்தியின் மின் கடத்தாற்றல். வெள்ளியின் மின் கடத்தாற்றல் 100%

**relative humidity: சார்பு ஈரப்பதன்:** ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில், காற்றில் இருத்தி வைத்துக் கொள்ளக்கூடிய மொத்த ஈரப்பதன் அளவுக்குமிடையிலான வீத அளவு.

**relative inclinometer:** *(வானூ.)* **சார்புச் சாய்வுமானி:** விமானம் பறக்கும் உயரத்தை வெளிப் படைப் புவியீர்ப்பு அடிப்படையில் காட்டும் ஒரு சாதனம். விமானத்தின் முடுக்கு விசை, புவியீர்ப்பு விசை இவற்றின் கூட்டு விளைவாக்கம்.

**relative motion:** *(இயற்.)* **சார்பு இயக்கம்:** ஒரு பொருளைச் சார்ந்து இன்னொரு பொருள் இயங்குதல்.

**relative resistance:** *(மின்.)* **தொடர்புத்தடை:** வெள்ளியுடன் ஒப்பிடும் போது ஒரு பொருளின் ஒப்பீட்டுத்தடையின் மதிப்பளவு. வெள்ளிக்கு ஒப்பீட்டுத்தடை மதிப்பளவு 1.0.

**relativistic:** *(விண்.)* **இடையுறவுப் பொருள்:** ஒளியின் வேகத்தில் கணிசமான பின்னப்பகுதி வேகத்தில் இயங்கும் பொருள். அணுவின் உட்கூறமைவுள்ள துகள்கள் இந்த வகையினம்.

**relative wind:** *(வானூ.)* **தொடர்புக் காற்று:** காற்றிலுள்ள ஒரு பொருளைப் பொறுத்து காற்றின் வேக வீதம். காற்றின் மீது பொருளின் இடையீட்டு விளைவு அற்பமாக இருக்கும் அளவுக்கான தூரத்திலிருந்த எடுக்கப்பட்ட அளவீடுகளிலிருந்து இது நிருணயிக்கப்படுகிறது.

**relay:** *(மின்.)* **துணைமின் விசையமைவு:** ஒரு முதன்மை மின்சுற்று வழியில், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஓர் உள் சுற்று வழியை உண்டாக்க அல்லது மூடப் பயன்படும் ஒரு துணைச் சாதனம்.

**relay station: அஞ்சல் நிலையம்:** வானொலி அல்லது தொலைக்காட்சியில், இன்னொரு நிலையத்தின் ஒளி-ஒலி நிகழ்ச்சிகளை வாங்கி அஞ்சல் செய்யும் நிலையம்.

**relaxation oscillator:** *(மின்.)* **தளர்வுறு ஊசல்:** இது ஓர் எதிர் (சைன் வடிவ) ஊசல். இதில், ஒரு தடுப்பான் வாயிலாகக் கொண்மி மின்னூட்டுகிற அல்லது மின்னூட்டத்தைவெளியேற்றுகிற நேரத்தைப் பொறுத்து அலைவெண் அமைகிறது.

**relay rack:** *(மின்.)* **அஞ்சல் சட்டம்:** அடிச்சட்டமும் கருவியும் கொண்ட 48செ.மீ.சட்டங்களைத் தாங்கியுள்ள ஓர் எஃகுச் சட்டம்.

**relief:** *(பொறி.)* **புடைப்பு:** ஒரு மேற்பரப்பிலிருந்து முனைப்பாக எழுந்து நிற்கும் புடைப்பு.

**relief map: புடைப்பியல் நிலப் படம்:** வண்ண வரைக் குறியீடுகள் மூலம் புடைப்பியல் தோற்றம் அளிக்கப்பட்ட நிலப்படம்.

**relief printing:** *(அச்சு.)* **புடைப் பியல் அச்சடிப்பு:** வண்ணவரைக் குறியீடுகளால் அமைக்கப்படும் புடைப்பியல் தோற்ற அமைவுடன் அச்சடித்தல்.

**relieving:** *(உலோ.)* **முனைப் பழிப்பு:** உராய்வையும், வெப்பத்தையும் குறைப்பதற்காக ஒரு கருவியின் வெட்டுமுனையின் பின் பகுதியிலுள்ள பொருளை அகற்றுதல்.

**relieving arch: விடுவிப்பு வில் வளைவு;** சுவரின் அடிப்பகுதிப் பளுக் குறைக்கும்படி உள்வரியாகக் கட்டப்படும் வில் வளைவு.

**relish**: *(தச்சு.)* **தோள் பட்டை**: பொருத்து முளையின் மீதுள்ள தோள்பட்டை.

**reluctance**: *(மின்.)* **காந்தத்தடை**: காந்தமேற்றிய பொருள் காந்தப் பாய்வுக்கு ஏற்படுத்தும் தடையின் அளவு.

**reluctivity**: *(மின்.)* **காந்தத்தடைத் திறன்**: காந்தமூட்டுவதை எதிர்க்கும் திறன். இது காந்தமூட்ட இடமளிக்கும் திறனுக்கு எதிர்மாறானது.

**remote**: *(தொ.கா.)* **தொலை நிகழ்ச்சி**: நிலையங்களுக்கு வெளியே நெடுந்தொலைவிலிருந்து ஒளி பரப்பாகும் நிகழ்ச்சி.

**remote control**: *(தொ. கா.)* **தொலைக் கட்டுப்பாடு**: தொலைக் காட்சி நிகழ்ச்சி போன்றவற்றை தொலைவிலிருந்து கட்டுப்படுத்தும் கருவி.

**remote control**: *(வானூ.)* **தொலைக் கட்டுப்பாடு**: மின்காந்த வியல், நெம்புகோல் போன்ற சாதனங்கள் மூலம் நெடுந்தொலைவிலிருந்து கட்டுப்படுத்தல்.

அஞ்சல் அல்லது பிற மின்காந்தச் சாதனங்கள் மூலம் மின்னியல் கருவிகளை அல்லது எந்திரத்தை இயக்குதல்.

**remote pickup**; *(மின்.)* **தொலை ஒலி-ஒளிப்பதிவு**: தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகளை நிலையத்திற்கு வெளியே நெடுந்தொலைவிலிருந்து தனிவகை ஊர்திச் சாதனங்களின் மூலம் பதிவு செய்தல்.

**remote pickups**: **சேய்மை அஞ்சல்**: தொலைக்காட்சி நிலையத்திற்கு வெளியேயுள்ள ஊர்தி ஒளி பரப்புச் சாதனம் அல்லது தொலைவில் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ள சாதனம் மூலமாக நிகழ்ச்சிகளை ஒளி பரப்புதல்.

**renaissance**; *(க.க)* **மறுமலர்ச்சி**: மத்திய காலத்தைப் பின் பற்றி 14—16ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த கலை, இலக்கிய, கட்டிடக்கலை மறுமலர்ச்சி. இது இத்தாலியில் முதலில் தோன்றியது.

**rendezvous**: *(விண்.)* **விண்கலச் சந்திப்பு**: இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட விண்வெளிக் கலங்கள், முன்னரே குறித்த நேரத்திலும் இடத்திலும் பறக்கும் போதே சந்தித்துக் கொள்ளும் நிகழ்ச்சி.

**renewable fuse**: *(மின்.)* **புதுப்பிக்கத்தக்க உருகி**: உருகும் பொருளை எளிதில் மாற்றக் கூடிய வாறு, பொதிந்து வைக்கப்பட்டுள்ள உருகி.

**repair kit**: **செப்பனிடு கருவிக் கலம்**: ஒரு குறிப்பிட்ட துறையில் பழுதுபார்ப்பதற்குப் பயன்படும் கருவிகளும், உறுப்புகளும் அடங்கிய ஒரு கலம்.

**repeater**: *(மின்.)* **திருப்புக் கருவி**: அனுப்பிய தந்திச் செய்தியைத் தானாகவே திருப்பியனுப்பும் கருவி.

**repetition**: **மீளச் செய்தல்**: ஒரே செயலைத் திரும்பத் திரும்பக் கூறியது கூறல்; மனப்பாடம் செய்தல்; செய்து ஒப்பித்தல்.

**replacing**: **பதிலமர்த்துகை**: பழைய இடத்திலேயே மறுபடியும் வைத்தல்; பதிலாக இடங்கொள்தல்; ஒருவர் இடத்தை மற்றொருவரைக் கொண்டு நிரப்புதல்.

**replica**: **உருவநேர்படி**: ஓர் உற்பத்திப் பொருளின் நேர் பகர்ப்பு.

**repousse** - *(உலோ.)* **புடைப் பகழ்வு**: மெல்லிய உலோகத்தில் புடைப்பகழ்வுச் சித்திரமாக மறுபுறமிருந்து அடித்து உருவாக்கப்பட்ட உலோக ஒப்பனை வேலைப்பாடு.

**representative :** **உருமாதிரி :** *மிகச் சிறந்த வகையின் அல்லது பாணியின் வகைமாதிரி.*

**reprint :** *(அச்சு)* **மறு அச்சுப் பதிப்பு :** *மூல அச்சுப்பதிப்பு காலி யான பிறகு, அதிகத் திருத்தங்கள் இல்லாமல் முன்னையதைப் போல வேறு அச்சுப்பதிப்பாக அச்சிடு தல்.*

**reproducing :** **மறுபடி எடுப்பு :** *மீண்டு படி எடுத்தல். திரும்பப் படியெடுத்து வழங்குதல்.*

**reproduction :** *(அ.க.)* **(1) படி யெடுத்தல் :** *வேறுபடி உருவாக்கி எடுத்தல்; உருவப்படி எடுத்தல்* **(2) இனப்பெருக்கம் :** *இனப் பெருக்கமுறுதல்; இனம் பெருக்கு தல்,*

**reptile press :** **பணிமுறைசாரா செய்தித்தாள் :** *பணிமுறைசாராத அரசுச் சார்புடைய செய்தித்தாள் கள்.*

**repulsion :** *(மின்.)* **புறவிலக்கு விசை :** *ஒரே மாதிரியாக மின் னேற்றஞ் செய்யப்பட்ட இரு பொருட்கள் தம்மிடையே ஒன்றை யொன்று உந்தித்தள்ளும் ஆற்றல்.*

**repulsion motor :** **புறவிலக்க மின்னோடி :**

**reredos :** **பலிபீடத் திரை :** *பலி பீடத்தின் பின்புறச் சுவரை மறைக்கும் வேலைப்பாடுடைய திரை.*

**reserve cell :** *(மின்.)* **சேம மின் கலம் :** *பயன்படுத்த ஆயத்தமாகும் வரையில் மின்வாய் உலரவைத் திருக்கப்படும் ஒரு மின்கலம்.*

**rasidual magnetism :** *(மின்.)* **எஞ்சு காந்தம் :** *ஓர் இரும்புத் துண்டிலிருந்து காந்தவிசை நீக்கப் பட்ட பிறகு அதில் எஞ்சியிருக்கும் சிறிதளவு காந்தவிசை.*

**residue :** *(தானி.)* **எஞ்சுபடிவு :** *எரித்த பிறகு படிந்திருக்கும் எச் சப் பொருள்,*

**resilience :** **எதிர் விசைப்பு :** *வில் போல் நிமிர்ந்து எதிர்த்தடிக்கும் செயல் அல்லது ஆற்றல். ஒரு பொருள் நலிந்து தொய்வுற்ற பின்பு மீட்டெழுந்து முன்னுருப் பெறும் ஆற்றல்.*

**resin :** **பிசின்:** *சிலவகை மரங்களி லிருந்து எடுக்கப்படும் மரப்பிசின். இது நீரில் கரையாமல் ஆல்ககால், ஈதர் முதலியவற்றில் கரையக்கூடி யது.*

**resinoid :** *(குழை.)* **செயற்கைப் பிசின் :** *இயற்கைப் பிசின்களி லிருந்து வேறுபட்ட செயற்கைப் பிசின் பொருட்கள்.*

**resistal :** *(உலோ.)* **ரெசிஸ்டால்:** *மிக உயர்ந்த தரமுடைய துருப் பிடிக்காத எஃகு. இதில் காந்தம் ஏறுவதில்லை; இது அமிலத்தை எதிர்க்கக் கூடியது.*

**resistance :** *(மின்.)* **தடை :** *மின் னோட்டம் பாய்வதைத் தடுக்கக் கூடிய ஒரு பொருளின் பண்பு.*

**resistance coil :** *(மின்.)* **தடைச் சுருள் :** *குறிப்பிட்ட அளவு அதிகத் தடையாற்றல் கொண்ட கம்பிச் சுருள். நைக்ரோம் அல்லது இரும் பினாலான இந்தக் கம்பிச் சுருள் மின்னோட்டத்தைக் குறைப்பதற் காக ஒரு மின் சுற்றில் செருகப் பட்டிருக்கும்.*

**resistance unit :** *(தானி.)* **தடை அலகு :** *எலெக்ட்ரான் பாய்வதை மிகுதியாகத் தடுக்கும் திறன் கொண்ட ஓர் உலோகத்தினா லான ஒரு சிறிய கம்பிச்சுருள் அல் லது ஒரு சிறிய கார்பன் சலாகை. இந்த அலகுகள், உந்து ஊர்தியின் மின்னியல் சுற்றுவழிகளில் மின் னோட்டத்தைக் குறைப்பதற் காகச் செருகப்படுகின்றன.*

**resistance welder : தடைப் பற்ற வைப்பு எந்திரம் :** தடையமைப்பு கொண்ட ஒரு பற்றவைப்பு எந்திரம்.

**resistance welding: தடைப்பற்ற வைப்பு :** மின்னோட்டம் பாய்வதைத் தடுப்பதன் மூலம் உண்டாகும் வெப்பத்தின் வாயிலாக அழுத்தம் ஏற்படுத்திப் பற்றவைக்கும் முறை.

**resistance wire:** (மின்.) **தடைக் கம்பி :** மின் தடையுண்டாக்கும் நிக்கல் - குரோமியம் மின்தடைக் கம்பி.

**resisting moment :** (பொறி.) **சுழற்சித்தடை :** எதிரெதிராக இயங்கும் இரண்டு உள்முக விசைகள் கொண்ட எந்திரத்தின் பகுதியில் விறைப்புச்சூழல் திறன் மூலம் சுழற்சிக்குத் தடைஉண்டாக்குதல்.

**resisting shear :** (பொறி.) **தடைத் துணிப்பு :** ஓர் எந்திரப் பகுதியின் செங்குத்துத் துணிப்புக்குச் சமமான எதிரெதிர் உள்முக விசை.

**resistivity :** (மின்.) **தடைத் திறன் :** ஒரு பொருளின் ஒரு கன செ.மீ. அளவு மின்னோட்டம் பாய்வதற்கு அளிக்கும் உதிர்ப்பாற்றல். இது ஓம் அலகில் குறிக்கப்படுகிறது.

**resistor :** (மின்) **தடுப்பான் :** மின்னோட்டம் பாய்வதைத் தடுக்கும் தடையுள்ள ஓர் உறுப்பு.

**resolution : படத் தெளிவு :** தொலைக்காட்சிப் படத்தின் தெளிவுத் திறன்.

**resolution of forces :** (இயற்.) **விசைப் பிரிவீடு :** இரண்டு அல்லது அவற்றுக் மேற்பட்ட விசைகளின் பிரிவீடு. இவற்றின் கூட்டுவிளைவானது, ஒரு குறிப்பிட்ட விசைக்குச் சமமாக இருக்கும்.

**resonance :** (மின்.) **ஒத்திசைவு :** ஒரு மின்சுற்று வழியில் தூண்டு எதிர் வினையினை மட்டுப்படுத்தி, மின்னோட்டம் பாய்வதற்கு ஓர் தடையை மட்டுமே விட்டுச் செல்லும் நிலை.

**resonant frequancy :** (மின் ) **எதிரொலி அலைவெண் :** இயைவிப்பு செய்யப்பட்ட மின்சுற்று வழி ஊசலாடுகிற அலைவெண்.

**resonant line :** (மின்.) **எதிரொலிப் பாதை :** நிலையான அழுத்த அலைகளையும், மின்னோட்ட அலைகளையும் கொண்டிருக்கிற ஒரு பாதை.

**retard : இயக்கத் தடை :** அலை இயக்கத்திற்குத் தடை ஏற்படுத்துதல்.

**restoration : மீட்டாக்கம் :** ஓவியங்கள், கட்டிடங்கள், மரபு வழியுற்ற உயிர்—தாவரவகை ஆகியவற்றை மூலவடிவுக்கு மறுபுனைவாக்கம் செய்தல்.

**retaining wall:** (க.க.) **அணை சுவர்:** கரை உடைந்து விடாமல் காக்கும் சுவர்.

**retard:** (தானி.) **வேகங்குறை:** அலை இயக்கத்திற்கு தடங்கலாக இருத்தல்; கோள் இயக்கத்தைத் தடுத்து மந்தமாக்குதல்.

**retardation: வேகக்குறைப்பு:** இயல்பான அல்லது கணக்கிட்ட நேரத்திற்குப் பின்பு நிகழ்வு.

**retardation of tide/retardation of high water: நீரேற்ற இடைவெளி:** முழு நிலவுக்கும் கடல் நீரேற்றத்திற்கும் உள்ள இடைவெளி.


**retentivity:** (மின்.) **காந்த இருத்தி வைப்புத் திறன்:** ஒரு பொருளிலிருந்து காந்த ஆற்றல் நீக்கப்பட்ட பின்பு அதில் காந்த

ஆற்றலை இருத்தி வைத்துக் கொள்ளும் திறன்.

**reticule:** **நுண்வலைப் பின்னல்வரி:** *தொலை நோக்காடியிலுள்ள காட்சி வில்லையின் நுண்வலைப் பின்னல் வரி.*

**reticulum:** *(உட.)* **இரண்டாம் இரைப்பை:** *அசைபோடும் விலங்குகளின் இரண்டாவது இரைப்பை.*

**retina:** *(உட.)* **விழித்திரை:** *கண்*




விழித்திரை

*விழியின் பின்புறத் திரை.*

**retort:** **வாலை:** *காய்ச்சி வடித்தலில் பயன்படுத்தப்படும் கீழ் நோக்கி வளைந்த கழுத்துடைய கண்ணாடி வடிகலம்.*

**retrace:** **மீட்சி:** *(மின்.)* *நுண்ணாய்வு செய்யும் மின்கதிர்க்கற்றையானது, ஒரு வரியை நுண்ணாய்வு செய்த பிறகு மீண்டும் தொடக்க நிலைக்கே திரும்புதல்.*

**retractable wheel:** *(வானூ.)* **உள்ளிழுப்புச் சக்கரம்:** *விமானத்தில், உடற்பகுதிக்குள் அல்லது சிறகுகளுக்குள் இழுத்துக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள சக்கரம்.*

**retrograde motion:** *(விண்.)* **பின்னோக்கு இயக்கம்.** *விண்கோள வகையில் கிழக்கு மேற்காகச் செல்லுதல்; கோள் வகையில் சூரியன் நெறியிலே பின்னோக்கிச் செல்வது போல் தோன்றுதல்.*

**retro rocket:** *(விண்)* **பின்னோக்கி உந்து ராக்கெட்:** *ஒரு பொருளின் வேகத்தைக் குறைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு பொருளின் திசைக்கு நேர் எதிர்த் திசையில் உந்தித் தள்ளுகிற ராக்கெட்.*

**return bend:** *(பட்.)* **வளை குழாய்:** *'U' வடிவில் அமைந்த பொருத்தப்பட்டுள்ள வளைவுக் குழாய்.*

**reveal:** *(க.க.)* **பக்கச்சுவர் பரப்பு:** *கதவு, பலகணி ஆகியவற்றின் உட்புறப் பக்கச் சுவர்ப் பரப்பு.*

**reverberation time:** *(மின்.)* **எதிரலை நேரம்:** *ஒரு குறிப்பிட்ட அலைவெண் கொண்ட ஒலியானது, ஒலி நின்ற பின்பு அதன் தொடக்க மதிப்பளவில் 10 இலட்சத்தில் ஒரு பகுதிக்குக் குறைவதற்குப் பிடிக்கும் நேரம்.*

**reverse curve:** **மறுதலை வளைவு:** *"S" வடிவ வளைவு.*

**reverse mould** *(வார்.)* **மறுதலை வார்ப்படம்:** *உள்ளபடியான வார்ப்படத்தைத் திணிப்பதற்குரிய ஒரு மாதிரி வார்ப்படம்.*

**reverse plate:** *(அச்சு.)* **மறுதலை அச்சுத்தகடு:** *கறுப்புப் பின்னணியில் வெள்ளை வடிவங்களைப் பதிவு செய்யும் வகையில் கறுப்பு, வெள்ளை வண்ணங்களை மறுதலையாக அச்சிடக்கூடிய அச்சுத் தகடு.*

**reversed polarity** *(மின்.)* **எதிர்த் துருவ முனைப்பு (மின் நேர்முனை):** *ஆதார உலோகத்திலிருந்து மின்முனைக்கு எலெக்ட்ரான்கள் பாயும்படி செய்கிற நேர் மின்னோட்டம்.*

**reversible propeller;** *(வானூ.)* **மறுதலை முற்செலுத்தி:** *விமானத் தடை உண்டாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் மறுதலை அழுத்தம்*

விளைவிக்கும் வகையில் விசை மாற்றம் செய்யக்கூடிய முற்செலுத்தி அல்லது சுழலி.

**reversing gear:** (எந்.) **மறுதலைப் பல்லிணை:** ஓர் எஞ்சினை அல்லது எந்திரத்தை எதிர்த்திசையில் இயங்குமாறு செய்யக்கூடிய பல்லிணை.

**revolution:** (பட்.) **சுற்றுகை:** ஒரு பொருள் தனது அச்சில் ஒரு முழுமையான சுற்றினைச் சுற்றும் செயல். இது சுழற்சியிலிருந்து வேறுபட்டது. சுழற்சி என்பது ஒரு முழுச்சுற்றினையோ ஒரு சுற்றின் ஒரு பகுதியையோ குறிக்கிறது. சுழல் தண்டின் சுற்றுகை போன்ற ஒரு தொடர்ச்சியான சுழற்சியைச் சுற்று குறிக்கிறது.

**revolution counter:** (எந்.) **சுற்றுகை அளவி:** ஒரு சுழல் தண்டின் சுற்றுகைகளின் எண்ணிக்கையை அளவிடுவதற்கான ஒரு சாதனம். ஒரு சுழல் தண்டின் முனையில் ஒரு முள்ளினை அழுத்துவதன் மூலம் சுற்றுகையின் எண்ணிக்கையான ஓர் எண் வட்டில் பதிவு செய்யப்படுகிறது.


**revolutions per minute:** **சுற்றுகை வேகம்:** ஓர் எந்திரம் ஒரு நிமிடத்திற்குச் சுற்றும் வேகத்தின் வீதம்.

**revolving field:** (மின்.) **சுழல் புலம்:** புலச்சுருள்களும் துருவங்களும் நிலையாக இருக்காமல் சுழன்று கொண்டிருத்தல்.

**rf pickup:** **வானொலி அலைவெண் அனுப்பீடு:** ஒலி, ஒளிச் சைகைகளின் வானொலி அலைவெண்.

**RH.** (உயி.), **ஆர்எச்' காரணி:** 'ரீசஸ்' (Rhesus) என்னும் சிறு குரங்கு வகையிலும், மனித இனத்திலும் குருதியின் செங்குருமத்தில் காணப்படும் உறைமம் ஊக்குவிக்கும் கூறு. இது எதிர்ச்செயல்காட்டாத ஆர்எச் காரணி (RH-negative) என்றும், எதிர்ச்செயல் காட்டுகிற ஆர்எச் காரணி (RH-possitive) என்றும் இரு வகைப்படும். மனிதரிடையே குருதியில் உறைமம் ஊக்குவிக்கும் கூறு செலுத்தப்படும்போது எதிர்ச்செயல் காட்டாமலிருப்பது எதிர்ச்செயல்காட்டாத ஆர் எச் காரணியாகும். எதிர் செயல் காட்டுவது எதிர்ச்செயல் காட்டும் ஆர்எச் காரணியாகும். பிறக்காத குழந்தையிடம் எதிர்செயல்காட்டும் ஆர்.எச். காரணியிலும் தாயிடம் எதிர்ச்செயல்காட்டாத ஆர் எச் காரணியும் இருக்குமானால், தாயின் குருதியில் பாதுகாப்பான ஆர் எச் எதிர்ப்புப் பொருள் உண்டாகிறது. இந்தப் பொருள், இரண்டாவது எதிர்ச்செயல் காட்டும் ஆர் எச் காரணியுடைய குழந்தையின் குருதிக்கு எதிராகச் செயற்பட்டு, அக்குழந்தையின் குருதியில் சிவப்பணுக்களை அழித்துவிடக்கூடும். இதனால் பிறந்த குழந்தைக்கு மஞ்சள் காமாலை நோய் உண்டாகும். தாயிடம் எதிர்ச்செயல் காட்டாத ஆர்எச் காரணி இருந்து, அவருக்கு முன்னர் எதிர்ச்செயல் காட்டும் ஆர்எச் காரணியுடைய குருதி செலுத்தப்பட்டிருக்குமானால், இதே விளைவு ஏற்படும்.

**rheo-stat:** (மின்.) **தடை மாற்றி:**



தடைமாற்றி

உந்துபொறி முடுக்கும் வகையில் மின்வலி இயக்கக் கட்டுப்பாட்டமைவு.

**rheostatic control:** (மின்.) **தடைமுறைக் கட்டுப்பாடு:** ஒரு மின்னகத்தில் வேறுபட்ட மின்

தடையின் அல்லது காந்தத் தடையின் மூலம் கட்டுப்படுத்தும் ஓர் அமைவு.

**rhodium**: *(உலோ.)* **ரோடியம்**: பிளாட்டினம் குழுவைச் சேர்ந்த திண்ணிய வெண்ணிற உலோகத் தனிமம்.

**rhomboid**: *(கணி.)* **செவ்விணையகம்**: எதிரெதிர்ப் பக்கங்களும் கோணங்களும் மட்டுமே சரி சமமாக இருக்கும் இணைவகம்.

**rhombus**: *(கணி.)* **செவ்விணைவகம்**: அண்டைப் பக்கங்கள் சரி சமமாகவும், கோணங்கள் விரி கோணங்களாகவும் உள்ள ஒரு இணைவகம்.

**rib**: *(உட.)* **விலா எலும்பு**: உடலின் கவிமோட்டு உள்ளறைக்கு ஆதாரமாகவுள்ள எலும்புக்கூட்டின் வில்வளைவான சட்டக உறுப்பு.

**riddle**: *(வார்.)* **சல்லடை**: கூலம், சரளைக்கல், கரித்தூள் முதலியன சலிப்பதற்கான பெரும்படி அரி தட்டு.

**ridge**: *(க.க.)* **கூடல் வாய்**: இரு சரிவுகள் கூடும் மேல்வரை: நீண்ட மோட்டின் வரை முகடு.

**ridge pole**: *(க.க.)* **முகட்டு உத்தரம்**: கூரை முகட்டு உத்தரம்.

**ridge roof**: *(க.க.)* **முகட்டுக் கூரை**: மோட்டுக் கூடல் வாயில் உத்தரங்கள் சந்திக்கும் கூரை.

**ridge tiles**: *(க.க.)* **மோட்டு ஓடு**: மோட்டுக் கூடல்வாய் ஓடு.

**riffler**: *(உலோ.)* **தக்கப் பள்ளம்**: அரிகாரர் அரிப்பில் பொன்னைத் தேக்கிக் கொள்ளும் பள்ளம்.

**rigging**: *(வானூ.)* **கம்பிக் கயிற்றமைவு**: விமானத்திலுள்ள கம்பிக் கயிற்றமைவுத் தொகுதி.

**right angle**: **செங்கோணம்/நேர் கோணம்**: ஒன்றுக்கொன்று செங்குத்தாக நிற்கும் கோடுகளினால் உண்டாகும் 90° கோணம்.

**right-hand engine**: *(வானூ.)* **வலம்புரி எஞ்சின்**: விமானத்தில் எதிரே நின்று பார்ப்பவருக்கு வலம்புரியாகச் சுழலும் முற்செலுத்தியினைக் கொண்ட எஞ்சின்.

**right-hand screw**: *(உலோ.)* **வலப்புறத் திருகாணி**: கடிகாரம் சுற்றும் திசையில் (வலப்புறமாக) திருப்பும்போது முன்னேறிச் செல்லும் அமைவுடை திருகாணி.

**right- hand screw** : *(எந்.)* **வலம்புரியாணி** : வலம்புரியாகச் சுழற்றும் போது முன்னேறும் அடைப்புடைய புரியாணி.

**right-hand tools**: *(பட்.)* **வலக்கைக் கருவி** : வலது கையினால் கையாள்வதற்கேற்பச் செய்யப்பட்ட கருவி.

**right line** : **நேர்கோடு** : இரு புள்ளிகளுக்கிடையிலான மிகக் குறுகிய தொலைவு.

**rigidity** : **விறைப்பு** : வளைவு நெளிவுக்கு இடந்தராத கட்டிறுக்கத் தன்மை.

**ring** : *(கணி.)* **வளையம்** : *(1)* ஒரே மையத்தைக் கொண்ட இரு சுற்று வட்டங்களிடையில் அடங்கிய சம தள உருவம்.
*(2)* சனிக்கோளின் தட்டு வளையம்.

**ring bolt** : **வளைய மரையாணி** : கண்வழியே ஒரு வளையம் கொண்ட கண்மரையாணி.

**ring cowling** : *(வானூ.)* **வளைய மேல் மூடி** : வானூர்தியில் வளைய வடிவிலான எந்திர மேல் மூடி. இது காற்றினால் குளிர்விக்

கப்படும் வட்டவடிவ எஞ்சினைச் சுற்றி வைக்கப்பட்டிருக்கும். இழுவையைக் குறைத்து, குளிர்ச்சியை அதிகரிக்கிறது.

**ring gauge :** *(எந்.)* **வளை அளவி :** புற விட்டங்களை அளவிடுவதற்குப் பயன்படும் வளைய வடிவ அளவு கருவி.


**ring gear :** *(தானி.)* **வளையப் பல்லிணை :** குடம் அல்லது மையத் துவாரம் இல்லாத வளைய வடிவப் பல்லிணை.

**ripple factor :** *(மின்.)* **அதிர் வலை விகிதம் :** ஒரு திருத்து பொறியின் உற்பத்தி அளவி அதிர் வலை மின்னழுத்தத்தின் பயன் மதிப்புக்கும் உற்பத்தி மின்னழுத்தத்தின் சராசரி நேர் மின்னோட்ட மதிப்புக்குமிடையிலான விகிதம்.

**ripple voltage :** *(மின்.)* **அதிர் வலை மின்னழுத்தம் :** போதிய அளவு வடிகட்டுதல் இல்லாமையினால் மின் வழங்கீட்டின் நேர் உற்பத்தியில் ஏற்படும் மாற்று மின்னோட்டத்தின் அளவு.

**riprap :** *(பொறி.)* **ஆழ் நீர் அடித் தளம் :** ஆழமான நீரில் அல்லது மென்மையான அடிப்பரப்பில் செறிவில்லாமல் சேர்த்துப்போடப் படும் உடைந்த கல் அடித்தளம்.

**ripsaw :** *(மர.வே.)* **பிளப்பு ரம்**



பிளப்பு ரம்பம்

**பம் :** மரக்கட்டைகளின் நார்வரி அமைப்பின் திசையிலே அவற்றை அனுப்புவதற்கு உதவும் ரம்பம். இதன் பல்லமைப்பு, ஓர் உளியைப் போல் அமைந்திருக்கும்.

**rise :** *(க.க.)* **செங்குத்துத் தொலைவு :** *(1)* ஒரு வில்வளைவின் பக்க உச்சிக்கும் வளைமுகட்டின் கீழ்வளைவுக்குமிடையிலான செங்குத்துத் தொலைவு.

*(2)* ஒரு படியின் நிலைக் குத்துப் பகுதி.

**rise and run ;** *(மர.வே.)* **சரிவு :** செங்குத்தான நிலையினின்றும் சரிந்து செல்லும் கோண அளவைக் குறிக்கும் சொல்.

**riser :** *(க.க.)* **படி நிலைக் குத்து :** *(1)* இரண்டு படிகளின் மேற்பரப்புகளை இணைக்கும் செங்குத்துப் பகுதி.

*(2)* நீராவி, நீர் வாயு முதலியவற்றைச் கொண்டு செல்வதற்கான அமைப்பின் செங்குத்துக் குழாய்.

*(3)* ஒரு கட்டிடத்தின் ஒரு தளத்திலிருந்து இன்னொரு தளத்திற்குச் செல்லும் மின்கம்பிகள் அல்லது மின்கம்பி வடங்கள் அடங்கிய செங்குத்தான காப்புக் குழாய்.

**rivet:** *(உலோ.வே.)* **குடையாணி :** மறுபுறம் தட்டிப் பிணைத்து இறுக்குவதற்கான ஆணி. இவை தட்டையான அல்லது தட்டம் போன்ற அல்லது பொத்தான் போன்ற அல்லது காளான் போன்ற அல்லது வீங்கிய கழுத்துப் போன்ற கொண்டையுடையனவாக இருக்கும்.

**rivet forge : குடையாணி உலை :** குடையாணிகளை அவை தேவைப் படுகிற இடத்தில் சூடாக்குவதற்காகக் கொதிகலன் செய்பவர்களால் அல்லது இரும்பு வேலை செய்பவர்களால் பயன்படுத்தப் படும் கையில் எடுத்துச் செல்லக் கூடிய உலை.

**riveting: குடையாணி அடிப்பு:** குடையாணிகளைக் கொண்டு இறுக இணைத்தல் அல்லது பிணைத்தல்.

**rivet set: குடையாணி பொருத்தி:** குடையாணிகளைப் பொருத்துவதற்குப் பயன்படும் குடைவான அல்லது கிண்ண முகப்புக் கொண்ட எஃகுக் கருவி.

**roach:** *(வானூ.)* **கப்பல் கவிவு:** கப்பலில் சதுரப்பாயின் அடியிலுள்ள கவிவு. இதிலிருந்து கணமான நீர்த்தாரை நீர்ப்பரப்புக்கு மேலே பீச்சி எறியப்படும்.

**road drag; சாலை இழுவை:** சாலையின் மேற்பரப்பினைச் சமப்படுத்துவதற்காக அதன்மேல் இழுக்கப்படும் சாதனம். இது சாலையைச் சுரண்டிச் சமனிடும் எந்திரத்திலிருந்து வேறுபட்டது.

**roaster** *(தானி.)* **தங்குதுறை நாவாய்:** கரையோரம் நங்கூரமிட்டு நிற்கும் கப்பல். இதில் இருவர் இருக்கலாம். பின்புறத்தில் சரக்குகள் வைப்பதற்கான அறை இருக்கும்.

**roadster: நீற்று உலை:** கனியங்கள் அல்லது உலோகங்களிலிருந்து தீங்கு தரும் வாயுக்கள். கார்போனிக் அமிலம், கந்தக டையாக்சைடு ஆகியவற்றை விரைந்து ஆவியாக்கி நீக்குவதற்குப் பயன்படும் நீற்றுவதற்கான உலை.

**roasting:** *(உலோ.)* **நீற்றுதல்:** கனியங்கள் அல்லது உலோகங்களிலிருந்து தீங்கான வாயுக்கள், கார்போனிக் அமிலம், கந்தக டையாக்சைடு ஆகியவற்றை விரைந்து ஆவியாகச் செய்வதற்காகக் கையாளப்படும் செய்முறை.

**robot: எந்திர மனிதன்:** மனிதன் செய்யும் காரியங்களைத் தானியங்கு எந்திர நுட்பங்கள் மூலம் தானே செய்திடும் எந்திரம். இத்தகைய கருவி மூலம் இயக்கப்படும் ஊர்தி அல்லது பொறி.

**rock crystal:** *(கனி.)* **படிகப் பாறை:** நிறமற்ற, ஒளி ஊடுருவக் கூடிய படிகக்கல் வகை.

**rocket :** *(வானூ.)* **உந்து கூண்டு [ராக்கெட்]:** அக எரிபொருளாற்றலால் தொலைவுக்கு அல்லது உயரத்திற்கு உந்தித் தள்ளப்படும் உலோகத்தாலான நீள் வட்டு.

**rocket engine:** *(விண்.)* **ராக்கெட் எஞ்சின்:** ஒருவகை ராக்கெட் செலுத்தும் சாதனம். இது தனது செயல்முறையில் ராக்கெட் மின்னோடியைவிடச் சற்றுச் சிக்கலான அமைப்புடையது.

**rococo :** *(க.க.)* **மிகு ஒப்பனைக் கலைப் பாணி :** மனைப்பொருள், சிற்பம் முதலியவற்றில் 17, 18 ஆம் நூற்றாண்டுப் பாணியை அடியொற்றி மிகையான உருவரை ஒப்பனைகளைச் செய்தல்.

**rod :** *(மர.வே.)* **அளவு கோல் :** செங்குத்துப் படிகளில் செங்குத்து உயரத்தைத் துல்லியமாக அளவிடுவதற்குப் பயன்படும் அளவுகோல். கட்டுமானத்தில் 11 முழம் நீளமுடைய அளவை அலகு.

**rod assembly:** *(தானி.)* **இணைப்புக்கோல் தொகுதி :** இணைப்புக் கோல், உந்து தண்டு, உந்து தண்டு ஊசி, உந்துதண்டு வளையங்கள் போன்றவை அடங்கியது.

**rod cell :** *(உட.)* **கண் நுண்கம்பி:** கண்ணிலுள்ள நரம்பு உயிரணு, இது மங்கலான ஒளியில் தீவிரமாகச் செயற்படுகிறது. பிரகாசமான ஒளியில் கண் கூம்புகள் (கூம்புவடி நரம்பு முனைகள்) தீவிரமாகச் செயற்பட்டு, கண் நுண்கம்பிகள் செயற்படாதிருக்கும்.

**rod ends :** *(பொறி.)* **இணைப்புக் கோல் நுனி :** தாங்கிகளைக் கொண்ட இணைப்புக்கோல்களின் நுனிப்பகுதி. இதில் இணைப்புத் தகடு, திண்ணிய கொண்டை போன்ற வகைகள் உண்டு.

**roentgen** : *(மின்.)* **ராண்ட்ஜென்** : காமா கதிர்வீச்சுக் கதிர் படும் பரப்பினை அளவிடும் அலகு.

**roll** : *(விண்.)* **சுழல் வாட்டம்:** ஒரு விண்வெளிக் கலத்தின் நீளவாக்கு அச்சின் நெடுகே சுழல்தல் அல்லது ஊசலாடி இயங்குதல்.

**roll** : *(தானி.)* **உருள்வு** : சுழலும் பொருளின் சுழல்வான சாய்வாட்டம். நீட்டுப்போக்கான ஓர் அச்சில் ஒரு முழுச் சுழல்வு சுழலுதல்.

**rolled gold**: **பொன் முலாம் உலோகம்** : உலோகத்தின் மேலிடப்பட்ட மெல்லிய தங்கத் தகடு.

**rolled iron** : *(பொறி.)* **உருட்டு இரும்பு** : உருட்டுதல் மூலம் வேண்டிய வடிவத்தில் செய்யப்பட்ட இரும்புத் தகடுகள்.

**rolled iron** : *(பொறி.)* **உருட்டு இரும்பு** : உருட்டு முறையின் மூலம் தேவையான வடிவில் தயாரிக்கப்பட்ட இரும்புத் தகடு.

**roller bearing** : *(பொறி.)* **உருள் தாங்கி** : குண்டு தாங்கிகளில் பயன்படுத்தப்படும் வட்ட எஃகுக் குண்டுகளுக்குப் பதிலாகக் கெட்டிப்படுத்திய எஃகு உருளைகளினாலான தாங்கி.

**roller chain** : **உருளைச் சங்கிலி** : ஓசையையும், உராய்வையும் குறைப்பதற்காக நீள் உருளைகளினால் அல்லது உருளைகளினால் செய்யப்பட்ட கண்ணிகளைக் கொண்ட சங்கிலி.

**rolley** : **பாரப் பொறி வண்டி** : நான்கு தட்டை உருளைப் பொறி வண்டி.

**rolling** : *(வானூ.)* **உருள்வு** : நீள அச்சுவாக்கில் ஒரு கோணத்தில் இயங்குதல்.

**rolling friction** : *(எந்.)* **உருள்வு உராய்வு** : (1) ஒரு கோளவடிவ அல்லது நீள் உருளை வடிவப் பொருள் சமதளப்பரப்பில் உருளும் போது உண்டாகும் தடை. (2) ஓர் ஊர்தி சாலையில் ஓடும்போது, சாலையிலுள்ள மேடுபள்ளம் காரணமாக ஏற்படும் தடை.

**rolling mill** : **உருட்டு ஆலை** : உருட்டுதல் மூலம் இரும்பைத் தகடாக்கு ஆலை.

**rolling-press** : **அழுத்துப் பொறி** :

**rolling stock** : **உருள் ஊர்தி** : இருப்புப் பாதைமேல் உருண்டு செல்லும் இயக்கு பொறிகள், வண்டிகள் முதலியவற்றின் தொகுதி.

**roll titles** : *(தொ.கா )* **சுழல் தலைப்புகள்** ; சுழல் வட்டுருளையிலுள்ள வரிசையான பெயர்ப்பட்டியல், ஒளிப்படக் கருவியின் முன்பு இந்த வட்டுருளை சுழலும்போது இந்தப் பெயர்ப் பட்டியல் தொடர்ச்சியாக நகரும்.

**roman** : *(அச்சு.)* **ரோமன் அச்செழுத்து** : எழுத்துருவில் விளிம்பிற்குக் கட்டுருக் கொடுக்கும் நுண்வரைமான முனைப்பாகவுள்ள அச்செழுத்து வகை.

**roman-esque**: *(க.க.)* **ரோமானிய பாணி** : பண்டைய ரோமானிய ரோமாபுரிப் பாணிக்கும் இடைநிலைக் காலத்திய 'கோதிக்' பாணிக்கும் இடைப்பட்ட நிலையில் வில் வட்ட வளைவுகளும் வளைவுமாடங்களும் நிறைந்த சிற்பப் பாணி.

**roof boards or roofers** : *(க.க.)* **கூரைப் பலகைச் சட்டம்** : கூரை ஓடுகளுக்கு அடியிலுள்ள பலகைச் சட்டம்.

**roof truss** : *(க.க.)* **கூரைத்தாங் கணைவு** : கூரைக்கு ஆதாரமாக ஒன்று சேர்த்துப் பிணைக்கப்பட்டுள்ள மரத்தினாலான அல்லது இரும்பினாலான ஆதாரக்கட்டு.

**root** : *(எந்.)* **வர்க்க மூலம்** : கணிதத்தில் ஓர் எண்ணின் பெருக்க மூலம்.

**root diameter** : *(எந்.)* **ஆதார விட்டம்**: ஒரு திரிகிழையின் ஆதார விட்டம்.

ஒரு பல்லிணைச் சக்கரத்தில் பல்லின் அடிப்புறத்தில் உள்ள விட்டம்.

**rope drilling** : **கயிற்றுத் துரப்பணம்** : கயிற்றினால் இயங்கும் துறப்பணத்தால் துளையிடுதல்.

**rope driving** : *(எந். பொறி.)* **கயிற்று இயக்கம்** : கயிற்றுப் பல்லிணை மூலம் விசையை மாற்றம் செய்தல். இது வார்ப்பட்டை இயக்கத்திலிருந்து வேறுபட்டது.

**rosebit** : *(எந்.)* **துளையிடு கருவி**: துறப்பணத் துவாரங்களுக்கு மெருகேற்றும் திண்மையான நீள் உருளை வடிவ இணைத் துளையிடு கருவி.

**rose cutter** : *(பட்.)* **பட்டை வெட்டு கருவி** : அரை உருள் வடிவில் பன்முகமாகச் செதுக்கப்பட்ட பட்டை வெட்டுகருவி.

**rose-engine** : **கடைசல் பொறி** : ஒரு வகைக் கடைசல் பொறி அமைவு.

**Rosendale cement** : **ரோசண்டேல் சிமெண்ட்** : நியூயார்க் அருகிலுள்ள ரோசண்டேல் அருகில் கிடைக்கும் இயற்கை சிமெண்டுக்கு அளிக்கப்பட்டுள்ள பெயர்.

**rose reamer** : *(எந்.)* **பட்டைத் துளைச் சீர்மி** : உலோகங்களில் துளையிடுவதற்கான பொறியமைவு. இதில் பக்கங்களுக்குப் பதிலாகச் சாய்வாகவுள்ள நுனி மூலம் வெட்டுதல் நடைபெறுகிறது.

**rosette** : *(க.க.)* **ரோசாவடிவ ஒப்பனை** : ரோசா வடிவ ஒப்பனையுள்ள மரபுச்சின்னம்.

**rosette** : *(க.க.)* **ரோசாப் பூவணி**: ரோசா வடிவத்திலான பூவணி வேலைப்பாடு.

**rose window** : *(க.க.)* **ரோசாப் பலகணி** : ரோசாப்பூ வடிவில் அமைந்த பலகணி.

**rose wood** : *(மர.வே.)* **கருங்காலி** : கறுப்பு நிறமுள்ள, கனத்த, கடினமான மேலடை மெல்லொட்டுப் பலகையாகப் பயன்படுத்தப் படுகிறது.

**rosin** : **மண்டித்தைலம்**: தேவதாரு மரங்களிலிருந்து பிசின் வடிவில் கிடைக்கும் பொருள். வெள்ளீய வேலைப்பாடுகளில் பற்ற வைப்பதற்கான உருகுபொருளாகப் பயன்படுகிறது. வண்ணங்கள். சோப்புகள் செய்வதற்கும் பயனாகின்றது.

**roster** ; **வேலை முறையேடு** : ஓர் அட்டவணை அல்லது பெயர்ப் பட்டியல்.

**rostrum** : *(க.க.)* **உரை மேடை** : பொதுவில் உரையாற்றுவதற்குப் பயன்படும் பேச்சு மேடை.

**rotary** : **சுழல் பொறி** : ஒரு சக்கரம் போல் தனது அச்சில் சுழலும் பொறி.

**rotary converter** : *(மின்.)* **சுழல் ஒரு போக்கி** : மாற்று மின்னோட்டச் சுற்று வழியுடன் இணைக்கப் பட்டுள்ள ஒரு தனிப்பொறி. இது நேர் மின்னோட்டத்தை அல்லது மாற்று மின்னோட்டத்தை வழங்கும்.

**rotary cutter** : *(எந்.)* **சுழல் கத்தி** : ஒரு சுழல் முனையுடன் இணைக்கப்பட்டுள்ள, சுழலும் கத்தி. இது சுழலும் போது வேலைப்பாடு செய்யப்படும் பொருள் வெட்டப்படுகிறது.

**rotary engine** : *(வானூ.)* **சுழல் எஞ்சின்** : *ஆரை வடிவில் அமைக்கப்பட்ட நீள் உருளைகள் கொண்ட ஓர் எஞ்சின். இந்த எஞ்சின் ஒரு நிலையான வணரி அச்சுத் தண்டினைச் சுற்றிச் சுழலும்.*

**rotary induction system** : *(வானூ.)* **சுழல் தூண்டல் முறை** : *ஆரை எஞ்சின்கள் மீது பயன்படுத்தப்படும் எரி-வளி கலப்பித் தூண்டல் முறை. இதில் எரிபொருள் செறிவினை நீர் உருளைகளுக்குப் பகிர்மானம் செய்வதில் ஒரு சுழல் விசிறி உதவுகிறது;*

**rotary press** : *(அச்சு.)* **சுழல் அச்சு எந்திரம்** ; *சுழல் முறையில் அச்சுப் பொறி. இதில் அச்சிடும் பரப்பு ஒரு சுழலும் நீள் உருளையுடன் பிணைக்கப்பட்டிருக்கும். ஓர் உருளைச் சுருளிலிருந்து காகிதம் ஊட்டப்படும்.*

**rotary switch** : *(மின்.)* **சுழல் விசை** : *ஒரு சுழல் தண்டின் சுழற்சி மூலம் முனைகளிடையே தொடர்பு உண்டாகும் ஒரு மின் விசை.*

**rotogravure** : *(அச்சு.)* **சுழல் செதுக்குருவ அச்சு வேலை** : *ஒரு செப்பு நீர் உருளையில் செய்யப்பட்ட செதுக்கு வேலைபாட்டிலிருந்து ஒரு சுழல் அச்சு எந்திரத்தின் மீது செதுக்குருவ அச்சு வேலை.*

**rotor** : *(வானூ.)* **சுழலி** : *(1) விமானத்தில் ஒரு சுழல் சிறகு அமைப்பிலுள்ள முழுச் சுழற்சிப் பகுதி.*

*(2) ஒரு மாற்று மின்னோடியின் அல்லது மின்னாக்கியின் ஒரு சுழல் உறுப்பு*

**rotor-craft** : *(வானூ.)* **சுழலி விமானம்** : *எல்லா உயரங்களிலும் சுழலி அல்லது சுழலிகளினால் முழுமையாக அல்லது பகுதியாகத் தாங்கப்படுகிற ஒரு விமானம். இதில் விமானத்தின் காற்றழுத்தத் தளம், ஓர் அச்சினைச் சுற்றிச் சுழல்கிறது.*

**rotten-stone** : **மெருகுச் சுண்ண மணற்கல்** : *நுண்ணிய பொடியாக விற்பனை செய்யப்படும் சிதைந்த சுண்ணாம்புக்கல். இது பரப்புகளை மெருகிடுவதற்குப் பயன்படுகிறது.*

**rottenstone** : *(மர.வே.)* **சுண்ண மணற்கல்** : *சிதைந்து போன சுண்ணாம்புக் கல்லிலிருந்து செய்யும் நுண்ணிய தூள். இது மெருகேற்றுவதற்குப் பயன்படுகிறது.*

**rotunda** : *(க.க.)* **வட்டக் கூடம்** : *வட்ட வடிவ அறை.*

**rouge** : *(வேதி.)* **அய ஆக்சைடு** : ($Fe_2O_3$) *இது அயச் சல்பேட்டைச்* ($FeSO_4$) *சூடாக்குவதன் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. இது வண்ணச் சாயமாகவும், கண்ணாடி, உலோகம், நவமணிகள் ஆகியவற்றில் மெருகேற்றுவதற்கும் பயன்படுகிறது.*

**roughcast** : *(க.க.)* **குத்துச் சாந்து** : *சுவருக்குப் பூசப்பெறும் சரளைச் சுண்ணாம்பு கலந்த குத்துச்சாந்து.*

**rough cut** : *(எந்.)* **அராவுதல்** : *கரடுமுரடான பகுதிகளை அராவி அறைகுறையாக மெருகிடுதல்.*

**roughing tool** : *(எந்.)* **அராவு கருவி** : *சொரசொரப்பான பகுதிகளை நீக்குவதற்கு எந்திரங்களை இயக்குபவர்கள் பயன்படுத்தும் கருவி. பொதுவாக வார்ப்பிரும்பு, தேனிரும்பு, எஃகு போன்றவற்றை வெட்டுவதற்கு இது பயன்படுகிறது.*

**rough lumber** . **முரட்டு வெட்டு மரம்** : *ரம்பத்தினால் வெட்டப்பட்ட சீர்வடிவற்ற வெட்டு மரம்.*

**roundel** : **பதக்கம்** : *வட்டவடிவ*

மான ஒப்பனை வாய்ந்த விருதுப் பதக்கம்.

**round measurements:** (உலோ.) **வட்ட அளவீடுகள்:** ஒரு பொருளின் விட்டம், ஆரம் போன்றவற்றின் அளவீடுகள்

**round nose tool:** (எந்.) **வட்ட முனைக் கருவி:** சொர சொரப்பான பகுதிகளை வெட்டி நீக்குவதற்குப் பயன்படும் ஒரு வகைக் கருவி.

**round-point chisel:** (எந்.) **வட்ட நுனி உளி:** எண்ணெய் வரிப் பள்ளங்களை வெட்டுவதற்குப் பயன்படும் வட்ட நுனி கொண்ட சிற்றுளி.

**round-tube radiator:** (தானி.) **வட்டக்குழாய்க் கதிர்வீசி:** சேமக் கலத்தின் மேற்புறத்திலிருந்து கீழ்ப்பகுதிக்குச் செல்லும் வகையில் மிக நெருக்கமாக அமைக்கப்பட்ட வட்ட வடிவக் குழாய்கள். பயன்படுத்தப்படும் வெப்பம் கதிர்வீசி, வரிசையாக அமைந்த மென்தகடுகள் வழியே இந்தக் குழாய்கள் செல்லும் போதும் அவற்றில் ஆவிக் கசிவு ஏற்பட்டு, குளிர்விக்கும் அமைப்பில் உண்டாகும் வெப்பம் முழுமையான கதிர்வீச்சுக்கு உள்ளாகிறது.

**Roving:** (குழை.) **முதிரா இழை:** இழுத்துச் சற்றே முறுக்கப்படும் பஞ்சு, கம்பளம் முதலியவற்றின் சிம்பு.

**Rowland's law:** (மின்.) **ரோலண்ட் விதி:** காந்தச் சுற்று வழிகளுக்கான ஒருவிதி.'' காந்தப் பாய்வின் கோடுகளின் எண்ணிக்கையானது, மின்காந்த இயக்க விசைக்கு நேர் விகிதத்திலும், மின்சுற்று வழியின் காந்தத் தடைக்கு தலைகீழ்வீதத்திலும் இருக்கும்'' என்பது இந்த விதி.

**rowlock:** (க.க.) **உகை மிண்டு:** படகுத் துடுப்பு உகைப் பாதாரமான அமைவு.

**royal:** **எழுது தாள்:** எழுதுவதற்கான 24" × 19" அளவுள்ள தாள்.

**royal drawing paper:** **படவரைவுத் தாள்:** படம் வரைவதற்கான 61 × 48செ.மீ. அளவுள்ள தாள்.

**rubber:** (வேதி.) **ரப்பர்:** சில வெப்ப மண்டல மரங்களின் பால் போன்ற சாற்றிலிருந்து எடுக்கப்படும் ஹைட்ரோ கார்பன். இது மிகுந்த நெகிழ்திறன் உள்ளது. நீரும் வாயுக்களும் இதில் உட்புகா. எனவே, இது தொழில் துறையில் மிகுதியாகப் பயன்படுகிறது. உந்து ஊர்திகளுக்கான டயர்கள், நீர்காப்பு, மின்காப்பு ஆகியவற்றுக்குப் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

**rubber cement:** **ரப்பர் சிமென்ட்:** பல்வேறு நோக்கங்களுக்காக வெவ்வேறு முறைகளில் ரப்பர் சிமென்ட் செய்யப்படுகிறது கச்சா ரப்பரை சிறுசிறு துண்டுகளாக வெட்டி ஒரு கரைப்பானைச் சேர்ப்பதன் மூலம் சாதாரண ரப்பர் சிமென்ட் செய்யப்படுகிறது. கரைப்பானாகப் பயன்படுத்த கார்பன் டைசல்பைடு மிகச் சிறந்தது. பென்சால் நல்லது; மிகவும் மலிவானது; கேசோலினும் கரைப்பானாகப் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

**rubble:** (க.க.) **கட்டுமானக் கல்:** கொத்தாத கட்டுமானக் கல்.

**rubble masonry:** (க.க.) **கற் கட்டுமான வேலை:** கொத்தாத கட்டுமானக் கல் கொண்டு அடித்தளம் அமைதல் போன்ற நயமற்ற கட்டிட வேலை செய்தல்.

**rubidium:** மென்மையான வெள்ளிய உலோகத் தனிமம்.

**rubrication:** *(க.க.)* **பின்புல வண்ணப்பூச்சு :** *இனாமல் அல்லது வண்ணப்பூச்சு மூலம் ஒரு பின் புலத்திற்கு வண்ணம் பூசுதல்.*

**rub stone: சாணைக்கல்:** *சாணை பிடிப்பதற்குப் பயன்படும் கல்.*

**ruby: கெம்புக்கல்:** *ஆழ்ந்த செந் நிறத்திலிருந்து வெளிறிய ரோசா நிறம் வரை உள்ள மணிக்கல் வகை.*

**rudder:** *(வானூ.)* **சுக்கான்:** *விமானம் இடப்புறமாகவும் வலப்புற மாகவும் பறக்கும் திசையைக் கட்டுப்படுத்துவதற்காக விமானத்தின் பின்புறத்தில் இணைக்கப்பட் டுள்ள உறுப்பு.*

**rudder angle:** *(வானூ.)* **சுக்கான் கோணம் :** *விமானத்தின் சுக்கானுக்கும் அதன் சமதள ஒரு சீர் மைக்குமிடையிலான கூர்ங்கோணம்.*

**rudder pedals:** *(வானூ.)* **சுக்கான் மிதிகட்டை:** *சுக்கானைக் கட்டுப் படுத்தி இயக்குவதற்கான மிதி கட்டைகள்.*

**rudder torque:** *(வானூ.)* **சுக் கான்முறுக்கம்:** *விமானத்தின் மீது சுக்கான் மூலம் செலுத்தப்படும் திரிபு முறுக்கம்.*

**rule:** *(அச்சு.)* **இடைவரித் தகடு:** *அச்சில் வாசக இடைவெட்டுக் குறிப்புக்கோடு.*

**ruling machine:** *(அச்சு.)* **வரி யிடு பொறி:** *அச்சுக்கலையில் தாளில் இணைவரிகள் இடுவதற் கான கருவி.*

**rumen:** *(வில.)* **தீனிப்பை:** *அசை போடும் விலங்கின் முதல் இரைப் பை.*

**rung (wood turns): குறுக்குக் கம்பி:** *குறுக்கு ஆரவரிப் பட்டிகை; ஏணிப்படி.*

**runic:** *(அச்சு.)* **அணிவரி அச்சுரு:** *பண்டைய ஜெர்மானிய இன வரி வடிவ எழுத்துப் பாணியில் அமைந்த திண்ணிய அணிவரி அச்சுரு.*

**runner:** *(குழை.)* **வார்ப்புப் புழை:** *உலோக வார்ப்புச் சட்ட வார்ப் புப் புழை.*

**running head:** *(அச்சு.)* **தொடர் தலைப்பு:** *ஒரு நூலில் பக்கந் தோறும் திரும்பத் திரும்பத் தொடர்ந்து வரும் தலைப்பு.*

**runway:** *(வானூ.)* **ஓடுபாதை:** *விமான நிலையத்திலுள்ள எல் லாப் பருவ நிலைகளிலும் ஏறி இறங்குவதற்கான ஓடுபாதை.*

**runway localizing beacon:** *(வானூ.)* **ஓடுபாதை ஒளிவிளக்கு :** *விமான நிலையத்தில் ஓடுபாதை நெடுகிலும் அல்லது தரையிறங்கு தளத்தில் அதற்குச் சற்றுத் தொலைவிலும் பக்கவாட்டிலும் ஒளி பாய்ச்சி வழிகாட்டுவதற் கான சிறிய ஒளி விளக்கு.*

**rupture:** *(உட.)* **குடற்சரிவு :** *குடற்சரிவினால் உண்டாகும் கோளாறு.*

**rupture member:** *(குளி.பத.)* **முறிவு உறுப்பு:** *முன்னரே தீர்மா னிக்கப்பட்ட அழுத்தத்தை எட்டி யதும் தானாகவே முறிந்துவிடக் கூடிய ஒரு சாதனம்.*

**rush: நாணற்புல்:** *நாற்காலிக்கு அடியிடுவதற்குப் பண்டைக்காலம் முதல் பயன்படும் பிரம்பு வகை நாணற்புல்லின் தண்டு.*

**rust:** *(வேதி.)* **இரும்புத்துரு:** *நீரு டன் இணைந்த அய ஆக்சைடு.*

**rustication:** *(க.க.)* **மேற்பரப்பு அளி:** *கட்டுமான இணைப்புகளில் மேடுபள்ள வரையிட்டுக் கரடு முர டான மேற்பரப்பு அளி.*

**rusting**: *(வேதி.)* **வண்ணச் சாயமிடல்**: *நவச்சாரக் கரைசலில் அல்லது வலுக்குன்றிய ஹைட்ரோகுளோரிக் அமிலக் கரைசலில் பளபளப்பான உலோகத் தோரணிகளை நனைத்து, வண்ணப் பூச்சு உறிந்துவிடாத வகையில் சாயமிடுதல்.*

**rust joint**: *(கம்.)* **துருப்பிணைப்பு**: *கசிவைத் தடுப்பதற்கு அல்லது மிகுதியான அழுத்தத்தைத் தாங்குவதற்கு ஓர் ஆக்சிகரணியைப் பயன்படுத்திச் செய்யப்படும் பிணைப்பு.*

**ruthenium**: *(உலோ.)* **ருதேனியம்**: *விழுப்பொன் வகையைச் சார்ந்த அரிய திண்மத் தனிமம். இது பிளாட்டினத்தைக் கெட்டிப்படுத்துவதற்கும், பேனாமுனை உலோகக் கலவைகள் செய்வதற்கும் பயன்படும் அரிய உலோகம்.*

# S

**sabin**: *(குளி.பத.)* **சபீன்**: ஒலி ஈர்ப்புத் திறனை அளவிடுவதற்கான அலகு. ஒரு பொருளின் மேற்பரப்பின் ஒரு சதுர மீட்டரின் நிகழ்வு ஒலியாற்றல் முழுவதையும் ஈர்த்துக் கொள்வதற்கு இது சமம்.

**sacral**: *(உட.)* **இடுப்படி மூட்டெலும்பு**: இடுப்பு முக்கோண மூட்டெலும்பு.

**saddle**: **சேணம்**: (1) மெருகிட்ட மட்பாண்டங்களைச் சுடும்போது அவற்றைத் தாங்கிக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் களிமண்ணினாலான கோல்.

(2) கடைசல் எந்திரத்தின் படுகையில் அமைந்துள்ள ஒரு சறுக்கு ஆதாரம்.

(3) ஓர் ஆரைத் துறப்பணத்தில் துறப்பணக் கதிரையும், பல்லிணைச் சக்கரங்களையும் கொண்டு செல்லும் சறுக்குத் தகடு.

**saddle-boiler**: **குடுவைக் கொதிகலம்**: கருவி கலங்களைச் சூடாக்குவதற்குப் பயன்படும் மேற் கவிவான கொதிகலம்.

**saddle stitch**: **சேணத் தையல்**: ஒரு துண்டு வெளியீட்டின் தாள்களைச் சேர்த்துத் தைப்பதற்கான ஒரு முறை. இதில் நடு மடிப்பில் நூல் அல்லது கம்பி மூலம் தைக்கப்படும். இவ்வாறு தைப்பதன் மூலம் துண்டு வெளியீட்டினைத் தட்டையாகத் திறந்திட முடியும்.

**S.A.E. formula**: **உந்து ஊர்திப் பொறியாளர் கழகச் சூத்திரம்**: கேசோலின் எஞ்சின்களின் குதிரைத் விசைத் திறனைக் கணக்கிடுவதற்கு உந்து ஊர்திப் பொறியாளர் கழகம் (S.A.E.) வகுத்துள்ள சூத்திரம். அதாவது, ஒரு நிமிட உந்து தண்டின் வேகத்திற்கு 1000 அடி என்ற அடிப்படையில்,

$$\text{குதிரைத்திறன் (H.P.)} = \frac{(D^2XN)}{2.5}$$

D: நீள் உருளையின் துவாரத்தின் விட்டம் (அங்குலத்தில்).

N: நீள் உருளைகளின் எண்ணிக்கை. 2.5 மாறாத எண்.

**S.A.E. or society**: **உந்து ஊர்திப் பொறியாளர் கழகம்**: **(S.A.E)**: S.A.E. என்பது உந்து ஊர்திப் பொறியாளர் கழகம் (Society of automotive engineers) என்பதைக் குறிக்கும். எந்திரவியல் உறுப்புகளில் S.A.E. என்ற சுருக்கெழுத்துகள் இருந்தால், அந்த உறுப்பு இந்தக் கழகம் நிர்ணயித்துள்ள தர அளவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும்.

**S.A.E. steels**: **எஸ்.ஏ.இ. எஃகு**: உந்து ஊர்திப் பொறியாளர் கழகம் (S.A.E.) எஃகினை வகைப்படுத்துவதற்கு ஒரு வகை எண்மான முறையைப் பயன்படுத்தி வருகிறது. இந்த எண்ணின் முதல் இலக்கம், ஓர் எஃகு பொதுவாக கார்பன் எஃகு, நிக்கல் எஃகு, நிக்கல் குரோமியம் முதலியவற்றில் எந்த வகையைச் சேர்ந்தது என்பதைக் குறிக்கும். இரண்டாவது இலக்கம், உலோகக் கலவைத் தனிமம் எது என்பதைக் குறிக்கும். கடைசி இரண்டு அல்லது மூன்று இலக்கங்கள், கார்பனின் அள

வைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, 2345 என்ற எண், 3% நிக்கல், 0.45% கார்பன் கொண்ட நிக்கல் எஃகினைக் குறிக்கும்.

**safe carrying capacity**; *(க க.)* **காப்புச்சுமைத் திறனளவு**: எல்லா வடிவளவுகளிலுமுள்ளசெம்புகம்பிகளுக்கு மின்விசையை பாதுகாப்பாகக் கொண்டு செல்வதற்கான திறனவு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத திறனளவு ஆம்பியர்களில் குறிக்கப்பட்டிருக்கும், மின் கடத்திகளைப் பொருத்தும்போது இந்தத் திறனவுக்கு மேற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**safe edge**: *(பட்.)***காப்பு முனை**:ஓர் அரத்திலுள்ள வெட்டுமுனையல்லாத பகுதி. ஒரு முனைப்பகுதியில் அராவும்போதும் அண்டைப் பரப்பினை அரம் அராவி விடாமல் இந்த முனை காக்கிறது.

**safe load**: *(பொறி.)* **காப்புப்பாரம்**: எந்திரத்தில் செயற்படும் அழுத்தத்திற்கு மேற்படாத வகையில் ஒரு பகுதி தாங்கிக்கொள்ளக்கூடிய பாரத்தின் அளவு.

**safety factors**: *(பொறி.)* **காப்புறுதிக் காரணிகள்**: எதிர்பாராத சூழ்நிலைகளில் எந்திரங்களில் பாரம் சற்று அதிகமாகி விட்டால், அதைத் தாங்கிக்கொள்ளும் வகையில் காப்புறுதியாக அமைக்கப்படும் காரணிகள்.

**safety lamp**:*(கனி.* **காப்புவிளக்கு** சுரங்கத் தொழிலாளர்கள் பயன்படுத்தும் எளிதில் தீப்பற்றாத விளக்கு.

**safety paper**: *(அச்சு,)* **இணை காப்புத் தாள்**: பொருளகக் காசுமுறிக்குரிய போலி செய்ய முடியாத தாள்வகை.

**safety switch**: *(மின்.)* **காப்பு விசை**: ஓர் இரும்புப் பெட்டியில் வைத்து, வெளிப்புறமாக இயக்கப்படும் ஒரு கத்தி முனை மின்விசை.

**safety valve** : *(பொறி.)* **காப்பு ஓரதர்** : கொதிகலனில் அழுத்த எல்லை மிகும்போது தானே திறந்து கொண்டு நீராவி அல்லது நீர் வெளியேற இடமளிக்கும் அமைவு.

**sag** : **புடை சாய்வு** : பளுவினால் அல்லது அழுத்தத்தினால் அமிழ்ந்து தாழ்வுறுதல்.

காற்றோதுக்கப் பக்கமாகச் செல்லும் தன்மை.

**sagger** : **சூளைக்களிமண் உறை** : நுட்பமான களிமண் பொருள்களைச் சூளையில் சுடும் போது அவற்றை வைப்பதற்கான களிமண் உறை.

**sal ammoniac** : *(வேதி.)* **நவச்சாரம்**: அம்மோனியம் குளோரைடு ($NH_4CL$) வாயு உற்பத்தியில் துணைப்பொருளாகக் கிடைக்கிறது. பற்ற வைத்தல், சாயப் பொருட்கள் உற்பத்தி,காலிக்கோ, அச்சு முதலியவற்றில் உருகு பொருளாகப் பயன்படுகிறது.

**salon** : *(க.க.)* **வரவேற்பு அறை** வரவேற்புகள் நடத்தவும் காட்சிப் பொருள்களை வைப்பதற்கும் பயன் படும் ஒரு பெரிய அறை.

**sal soda** : *(வேதி.)* **சலவைச் சோடா** : கண்ணாடி தயாரிப்பு. சோப்பு உற்பத்தி, துணிகளைச் சலவை செய்தல், சாயமிடுதல், காகித உற்பத்தி போன்றவற்றில் பயன்படுத்தப்படும் சலவை சோடா.

**salt** : *(வேதி.)* **உப்பு** ; ஓர் உப்பு மூலத்தினால் ஓர் அமிலத்தைக் காடி-காரச் செயல்கள் இரண்டு மற்றதாகச் செய்யும் போது உண்டாகும் ஒரு பொருள். உலோகத்

தனிமமும், அலோகத் தனிமமும் அடங்கிய ஒரு கூட்டுப் பொருள்.

**salt of tartar :** (வேதி.) **பொட்டாசியம் கார்பனேட்டு :** புடமிடப்பட்ட சாம்பரக் கரியகை ($K_2CO_3H_2O$).

**salt of vitriol : துத்தக் கந்தகி :**

**salt of wisdom : பாதரச நவச்சிய பாசிகை.**

**saltpeter : வெடியுப்பு :** பொட்டாசியம் நைட்ரேட்டு ($KNO_3$) வெடி மருந்திலும் இறைச்சிக் காப்பிலும் மருந்துகளிலும் பயன்படும் வெண் படிக உப்பு.

**samite : பொன்னிழையாடை :** பொன்னிழைகள் இடையிட்டு நெய்யப் பெற்ற இடைக்கால உயர் ஆடை வகை.

**sandal wood : சந்தன மரம் :** நறுமணமுடைய நெருக்கமான அக வரி வண்ண நெருக்கமுடைய கன மான மரம். கிழக்கிந்தியத் தீவுகளில் தோன்றியது.

**sand-bath :** (வேதி.) **மணற்புடம்:** வேதியியல் செய்முறையில் சம வெப்பத்திற்காகப் பயன் படுத்தப் படும் வெம்மணற்கலம்.

**sand-box :** (உலோ.) **ஒத்து மணற்கலம் :** வார்ப்புக்கும் பயன் படுத்தப்படும் மணற்கட்டி வார்ப்பு அச்சுரு.

**sand-glass : மணல் வட்டில் :** மணல் நாழிகை வட்டில்.

**sandiver : கண்ணாடிப்புரை :** கண்ணாடி உருக்கும் போது உண்டாகும் நுரை.

**sand blasting: மணல் ஊதைப் பீற்று:** கண்ணாடி முதலியவற்றின் மேற்பரப்பைத் திண்ணியதாக்க வழங்கப்பெறும் அழுத்த வளியுடன் கூடிய மணல் பீற்று.

**sanding: மணல் மெருகு:** மேற்பரப்புகளுக்கு மணல் மூலம் மெருகூட்டுதல்.

**sand paper: உப்புத் தாள்:** கூர்மையான மணல் பூசிய தாள். இது உராய் பொருளாக, முக்கியமாக மரவேலைப்பாடுகளின் மேற்பரப்புகளுக்கு மெருகிடு பொருளாகப் பயன்படுகிறது. இதனைப் ''பளிங்குத்தாள்'' என்றும் கூறுவர்.

**sand-pump: ஈர மணல் இழுப்புக் குழாய்:** துரப்பணம் முதலிய கருவிகளைத் துப்புரவு செய்யும் கருவி; துப்புரவுக் குழாய்.

**sand-stone: மணற்பாறை:** அழுத்தமுற்ற மணல் அடுக்குக்கல்.

**sandstone: மணற்பாறை:** சிலிக்கா அய ஆக்சைடு, சுண்ணாம்புக் கார்பனேட்டு ஆகியவற்றின்மூலம் பிணைக்கப்பட்டு அழுத்த முற்ற மணல் அடுக்குக்கல் கட்டிடக் கல்லாகப் பயன்படுகிறது. இயற்கை மணற்பாறையினால் சாணைக் கற்கள் செய்யப்படுகின்றன.

**sandwich :** (குழை.) **இடையீட்டுப் பொருள் :** இடையிடை மாற்றுச் செறிவுப் பொருள். உலோகத் தகடுகளை அடுக்கி அல்லது மேலே பரப்பி அடுக்கடுக்காக வைத்து உற்பத்தி செய்வதற்கு இது பயன்படுகிறது. தேவையான நோக்கங்களுக்குப் பயன்படுமாறு உலோக அடுக்குத் தகடுகளைத் தயாரிக்க இது பயன்படுகிறது.

**sanitary ; சுகாதாரம் :** உடல் நல மேம்பாட்டிற்குரிய; சாக்கடைக் கழிவு நீக்கத்திற்குரிய.

**sanitary sewer : சாக்கடை நீர்க் கால் :** கழிவு நீரை வெளியேற்றுவதற்கான குழாய் அல்லது சுரங்க வழி.

**sanitation :** (பொறி.) **சாக்கடை**

**நீக்கம்** : சாக்கடைக் கழிவு நீக்கத் திற்குரிய ஏற்பாடுகள்.

**sans-serif** : *(அச்சு.)* **மொட்டை அச்சுரு** : அச்சுருவகையில் ஓரங் கட்டாத மொட்டை முனை யுடைய அச்சுரு.

**sap**: *(தாவர.)* **தாவர உயிர்ச் சாறு**: தாவரங்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாத சாறு.

**sapling** : *(தாவர.)* நாற்று; கன்று; இளஞ் செடி.

**saponification** : **சவர்க்காரமாக் குதல்** : சவர்க்காரம் போன்று வழுவழுப்பானதாக ஆக்குதல்.

**sap wood** : **மென்மரம்** : புறமரத் தின் மென்மையான உட்பகுதி.

**sash** : *(க.க.)* **பலகணிச் சட்டம்** : பலகணியின் சறுக்குக் கண்ணா டிச் சட்டப் பலகை.

**sash chain** : **பலகணிச் சட்டச் சங்கிலி** : சறுக்குப் பலகணிச் சட்டம் இயக்கும் பளுவேந்திய சங்கிலி.

**sash weight** : **பலகணிச் சட்ட இயக்கு பளு** : சறுக்குப் பலகணிச் சட்டத்தின் இயக்கு பளு.

**sassafras** : *(தாவர.)* **மருந்துப் பட்டை மரம்** : மங்கலான ஆரஞ்சு நிறமுடைய, துளையுடைய, எளி தில் முறியக் கூடிய மென் மரம். இது தென் அமெரிக்காவில் வளர் கிறது.

**satellite** : **துணைக் கோள்** : ஒரு கோளைச் சுற்றிச் சுழலும் சார் புக் கோள்.

**satellite television station** : **செயற்கைக் கோள் தொலைக்காட்சி நிலையம்** : ஒரு தொலைக்காட்சி நிலையத்தில் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒரே இணைவனத்திலிருந்து ஒளிபரப் பப் படுமானல் அதனைச் செயற் கைக் கோள் தொலைக்காட்சி நிலையம் என்பர். இந்த நிலை யம் இணைவன நிகழ்ச்சிகளோடு, உள்ளூர்ச் செய்திப் படங்களையும் ஒளிபரப்பும். இந்நிலையம், ஒரு தலைமை நிலையத்தின் ஒளிப்பரப் புப் பகுதிக்கு வெளியேயுள்ள சமு தாயத்திற்கும் பணிபுரிய முடியும்.

**satelloid** : *(விண்.)* **செயற்கைக் கோள் கலம்** : பூமியைச் சுற்றி விட்டு மீண்டும் பூமிக்குத் திரும்பி வரும் வகையில் பாதி விமானம் போன்றும், இன்னொரு பாதி செயற்கைக்கோள் போன்றும் வடி வமைக்கப்பட்டுள்ள மனிதரால் இயக்கக்கப்படக் கூடிய ஒரு விண் வெளி ஊர்தி.

**satin wood** : **முதிரை மரம்** : ஒரு வகை மென்மரம். முக்கியமாக இலங்கையில் காணப்படுகிறது. கனமானது; வெண்மைகலந்த நிற முடையது; மெல்லிழை போன்ற கோடுகளுடையது. உயர்தரமான அறைகலன்கள் தயாரிக்கப் பயன் பயன்படுகிறது.

**saturated air** : *(குளிர் பத.)* **பூரி தக் காற்று**: ஒரே வெப்ப நிலையில் காற்றும் நீராவியும் கலந்த ஒரு கலவை.

**saturated steam** : **பூரித நீராவி** : ஒரு குறிப்பிட்ட அழுத்த நிலைக்கு நேரிணையான கொதி நிலை வெப் பத்தில் உள்ள நீராவி.

நீராவி எந்த நீரிலிருந்து உண் டாகிறதோ அந்த நீருடன் தொடர்பு கொண்டுள்ள நீராவி.

**saturation** : *(மின்.)* **செறிவு நிலை** : பொருளில் மின்னாற்றல் செறிந்துள்ள நிலை. இந்த நிலையை எட்டியபின் ஆம்பியரை அதிகரித்தாலும் காந்த விசைக் கோடுகளின் எண்ணிக்கை அதி கரிப்பதில்லை.

**saturation current** : *(மின்.)* **பூரித மின்னோட்டம்** : *பூரித மின்னழுத்தம் ஒரு தகட்டில் செலுத்தப்படும் போது எலெக்ட்ரான் குழல் வழியாகச் செல்லும் மின்னோட்டம்.*

**saturation voltage** : *(மின்.)* **பூரித மின்னழுத்தம்** : *ஒரு வெற்றிடக் குழலின் தகடு, வெளிப்படும் எலெக்ட்ரான்கள் அனைத்தும் ஈர்க்கும் வகையில் அந்தத் தகட்டில் செலுத்தப்படும் மின்னழுத்தம்.*


**saturation temperature** : *(மின்.)* **பூரித வெப்பநிலை** : *ஓர் எலெக்ட்ரான் குழலில் வெப்ப நிலை மேலும் உயர்ந்தாலும் தகட்டின் மின்னோட்டம் அதிகரிக்காமலிருக்கும் போதுள்ள எதிர்முனை வெப்ப நிலை.*

**saw** : *(மர.)* **ரம்பம் / ஈர்வாள்**: *பலகைகளை அறுப்பதற்கேற்ப வாள்போல் பற்கள் அமைந்த மெல்லிய தட்டையான உலோக அறுப்புக் கருவி.*

**sawdoctor**: *(பொறி.)* **ரம்பப்பல் எந்திரம்** : *ரம்பத்தின் பற்கள் செய்வதற்கான எந்திரம்.*

**sawhorse** : *(மர.வே.)* **அறுப்பணைப்புச் சட்டம்** . *, தச்சர்கள் பயன்படுத்தும் வழக்கமான சாய்கால். சில சமயம் இது 'X' வடிவ சட்டத்தையும் கொண்டிருக்கும்.*

**saw set** : *(மர.வே.)* **ரம்பநெளிவுக் கருவி** : *ரம்பப் பற்களை இரு பக்கமும் திருப்புவதற்கான கருவி.*



ரம்ப நெளிவுக் கருவி

**sawtooth wave** : *(மின்.)* **ரம்பப்பல் அலை**: *இரம்பத்தின் பற்களைப் போன்று வடிவமுடைய அலை.*

**saw toothed skylight** : *(க.க.)* **ரம்பப் பல் சாளரம்** : *ரம்பப் பற்களின் வடிவத்தில் முகப்புடைய மேல்தளச் சாளரம்.*

**saw trimmer** : *(அச்சு.)* **ரம்பக் கத்திரி**: *அச்செழுத்து வரிப்பாளங்களையும், தகடுகளையும் செம்மையாகக் கத்திரித்து விடுவதற்குப் பயன்படும் ஒருவகை எந்திரம்.*

**sawyer** : *(மர.வே.)* **மரம் அறுப்பவர்** : *ஆலையில் அல்லது களத்தில் ஒரு வட்ட ரம்பத்தை இயக்கி மரம் அறுப்பவர்.*

**saxatile**: *(உயி.)* **பாறை உயிர்கள்**: *பாறைகளிடையே உயிர் வாழ்கிற உயிரினங்கள்.*


**saybolt test** ; *(தானி.)* **பசைச் சோதனை** : *எண்ணெயின் பசைத் தன்மையை அளவிடும் சோதனை.*

**scaffold** : *(க.க.)* **சாரக்கட்டு** : *கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு ஆதாரமாகப் பயன்படும் தற்காலிகக் கட்டமைப்பு.*

**scaffold height** : *(க.க.)* **சாரக் கட்டு உயரம்** : *சாரக்கட்டின் பல் வேறு நிலைகளுக்கிடையிலான இது பொதுவாக 4, அல்லது 5, இருக்கும். இந்த இடைவெளிக்குள் கொத்தனார் நின்று கொண்டு தன் வேலையைச் செய்வார்.*

**scagliola** : *(க.க.)* **செயற்கை ஒப்பனைக்கல்**: *ஒப்பனைக்கல் போலியாகச் செய்யப்படும் பசை நீற்றுக் கலவை வேலைப்பாடு. தளங்கள், தூண்கள் முதலியவற்றை அழகுபடுத்துவதற்கும், பிற உள் அலங்கார வேலைகளுக்கும் பயன்படுகிறது.*

**scale** : **அளவுகோல்** : *(1) சிறு அளவுக் கூறுகள் குறிப் பிடப்பட்ட அளவு கோல்.*



அளவுகோல்

*(2) குறியீட்டு முறையின் அடிப் படையிலான அளவுத் திட்டம்.*


*(3) உலோகக் கலையில் அளவுப் படிநிரை*

*(4) உலோகக் கலையில் ஒரு வார்ப்படத்தின் புறப்பூச்சு.*

**scaled drawing**: **படிவிழுக்காட்டு வரைபடம்** : *ஒரு பணியினை சிறிய அளவு வீதங்களில் வரைந்த வரை படம்.*

**scale height** : *(விண்.)* **நிரை உயரம்** : *வாயு மண்டலத்தில் எந்த ஒரு நிலையிலும் அடர்த்திக்கும் வெப்ப நிலைக்குமிடையிலான தொடர்பினை அளவிடும் அலகு.*

**scalene** : *(கணி.)* **ஒவ்வாச்சிறை முக்கோணம்** : *எந்த இரண்டு பக்கங்களும் சமமாக இல்லாத ஒரு முக்கோணம்.*



**முக்கோணம்**

**scalene cone** : **அடிசாய்வு கூம்பு** : *அச்சு அடியை நோக்கிச் சாய்ந்த துள்ள கூம்பு.*

**scalene cylinder** : **அடிசாய்வு நீள் உருளை**: *அச்சு அடியை நோக்கிச் சாய்ந்துள்ள நீர் உருளை.*

**scalpel**: **அறுவைக்கத்தி**: *(மருந்.) அறுவைச் சிகிச்சையில் பயன்படுத் தப்படும் கத்தி.*

**scalper** : *(மருந்.)* **அறுவை அரம்** : *அறுவை மருத்துவர் பயன்படுத் தும் அரம்.*

**scanmony** - *(மருத்.)* **பேதி மருந் துப்பிசின்** : *கடும் போதி மருந்தா கப் பயன்படும் பிசின்.*

**scan** : *(மின்.)* **நுண்ணாய்வு** : *தொலைக்காட்சியில் தொலைக் கனுப்பும்படி நிழல், ஒளிக் கூறு களை நுண்ணாய்வு செய்து தனித் தனியே பகுத்தல்.*

**scanning** : **தொலை நுண்ணாய்வு**: *தொலைக்காட்சியில் 'தொலைக் கனுப்பும்படி நிழல் - ஒளிக்கூறு களைத் தனித்தனியாகப் பிரித் தெடுத்து, இடமும் வலமும் மேலும் கீழுமாக கடும் வேகத்தில் செலுத்தி உருகாட்சி தோன்றும் படி செய்தல்.*

**scanning line** : **நுண்ணாய்வுக் கோடு** : *தொலைக் காட்சியில் தொலைவுக்கனுப்பப்படும் படத் தின் இடம் வலம் செல்லும் ஒரு கோடு.*

**scantling** : *(க.க)* **மரப்பட்டியல்** : *13செ.மீ.க.'த்திற்குக் குறைவான அகலத்திட்டங்களையுடைய மரப் பட்டியல்.*

**scarehead** : **பரபரப்புத் தலைப்பு** : *செய்தித் தாள்களில் பரபரப்பூட் டக் கூடிய கொட்டை எழுத்துச் செய்தித் தலைப்பு.*

**scarification** : **கிளறல்** : *சாலை யைப் பழுது பார்ப்பதற்காக மேலீடாகக் கிளறிவிடுதல்.*

**scarfing** : **சமநிலைப் பொருத்தீடு** : *மரம், தோல், உலோகம் முதலிய வற்றில் வாய்களைச் சமநிலைப் படுத்தி ஒன்றாக இணைத்துப் பொருத்துதல்.*

**scatter propagation** : *(மின்.)* **பரவல் அனுப்பீடு** : *வானொலி அலைகளை அடிவானத்திற்கு அப் பால் பரவலாக அனுப்பீடு செய் தல்.*

**schematic**: *(மின்.)* **விளக்க வரை படம்** : *மின் இணைப்புகளையும் பல்வேறு உறுப்புகளையும் காட் டும் மின்னியல் அல்லது மின்னணு வியல் சுற்றுவழியின் வரைபடம்.*

**sciagram** : *(இயற்.)* **ஊடுகதிர் ஒளிப்படம்** *உட்புறம் தெரியும்படி எடுக்கப்பட்ட செங்குத்து வெட்டு ஒளிப்படம்.*

**sciagraphy:** *(இயற்.)* **ஊடுகதிர் ஒளிப்படக்கலை:** உட்புறம் தெளிவாகத்தெரியும்படிநேர்குத்து வெட்டாக ஒளிப்படம் எடுக்கும் கலை.

**scientific: அறிவியல் முறை:** அறிவியலுக்குரிய திட்பநுட்பத்திறம் வாய்ந்த முறை.

**scissors truss :** *(க.க.)* **கத்திரித் தாங்கணைவு :** கத்திரி போன்று அமைப்புடைய ஒருவகை கூரைத் தாங்கணைவு. மண்டபங்கள், தேவாலயங்கள் போன்றவற்றின் கூரைகளைத் தாங்குவதற்கு இது பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

**sclerometer:** *(பொறி.)* **உலோகத் திண்மைக் கணிப்புமானி ;** உலோகங்களின் கடினத் தன்மையைக் கணித்தறிவதற்கான ஒரு கருவி. உலோகத்தின் மேற்பரப்பில் இதனை ஒரு முறை முன்னேயும் பின்னேயும் பாய்ச்சிக் கிடைக்கும் சிம்பினை ஒரு தர அளவுடைய சிம்புடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கடினத் தன்மை கணக்கிடப்படுகிறது.

**sclerroscope :** *(உலோ.)* **திண்மை அளவு கருவி :** ஒரு பொருளின் கெட்டித் தன்மையை அளவிடுவதற்கான ஒரு கருவி.

**sconce : மெழுகுத்திரி:** அலங்கார மெழுகுவர்த்தி விளக்கு.

**scored cylinders : உள்வரி நீள் உருளை :** *(தானி. எந்.)* உந்து ஊர்தி போன்றவற்றின் எஞ்சின்களிலுள்ள பளபளப்பான நீர் உருளைகளின் சுவர்களில், நீர் உருளைக்குள் அயல் பொருட்களை உட்செலுத்துவதற்காக உள்வரியிடுதல். இவ்வாறு உள்வரியிட்ட உருளைகள் உள்வரி நீள் உருளைகள் எனப்படும்.

**scoring of pistons and cylinders ;** *(தானி.)* **உள்வரியிடல் :** நீள் உருளைகளுக்கும், சுழல்தண்டுகளுக்கும் முறையாக மசகிடுவதற்காக உள்வரியிடுதல்.

**scotia :** *(க.க.)* **தூண்டிக் குழிவு :** ஒரு தூணின் அடிப்பகுதியில் காணப்படும் குழிவான வார்ப்படம்.

**scrap :** *(வார்.)* **உலோகச் சிம்பு:** இரும்பு வார்ப்படத் தொழிற்சாலை அடுப்பில். பயனற்றதென ஒதுக்கித்தள்ளப்படும் தேனிரும்புத் துண்டுகள். இத்துண்டுகளை மீண்டும் உருக்கலாம்.

**scraping:** *(எந்.)* **சுரண்டு மெருகு:** ஒரு சுரண்டு கருவியைப் பயன்படுத்தி தட்டையான மேற்பரப்புகளையும் தாங்கிகளையும் கையால் சுரண்டி மெருகிடுதல்.

**scrap iron :** *(உலோ.)* **துண்டு இரும்பு :** ஒதுக்கித் தள்ளப்படும் இரும்பு அல்லது எஃகுத் துண்டுகள் அனைத்தையும் இது குறிக்கும். இதனைப் புதிய எஃகு தயாரிக்கப் பயன்படுத்துவார்கள்.

**scraper : செதுக்குக் கருவி :** மரத்தின் பரப்புகளை வழவழப்பாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் எஃகினாலான சுரண்டு கருவி. உலோகத் தொழிலாளர்களும் இதனைப் பயன்படுத்துவர்.

**scraper plane :** *(மர.வே.)* **செதுக்கு இழைப்புளி :** இழைத்து வழவழப்பாக்குவதற்குப் பயன்படும் இழைப்புக் கருவி. தளங்களையும், பெரிய பரப்புகளையும் மட்டப்படுத்துவதற்கும் இது பயன்படுகிறது.

**scratch : கீறல் :** மேற்பரப்பில் ஏற்படும் கீறல், கீறுதடம் அல்லது கீற்றுவரி.

**scratch awl :** *(பட்.)* **கீற்றுத் தமருசி :** உலோகத்தில் குறியிடுவதற்


கீற்றுத் தமரூசி

குப் பயன்படுத்தப்படும் கூர்முனையுடைய எஃகுத் தமரூசி.

**scratch brush : கீற்றுத் தூரிகை :** *உலோகப் பரப்புகளிலிருந்து அயல் பொருட்களை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் கம்பியிலான தூரிகை.*

**scratch coat :** *(க.க.)* **கீற்றுப் பூச்சு :** *அடுத்துவரும் பூச்சுகளுக்குப் பிடிப்பு ஏற்படுத்துவதற்காகக் கீற்றுக் கீற்றாகப் பூசப்படும் முதற்பூச்சு.*

**screen :** *(அச்சு.)* **கண்ணாடித் திரை :** *ஒளி, நிழல் மாறுபாட்டளவைக் காட்டுகின்ற நுண்பதிவுப் படச் செதுக்ககோவிய அச்சடிப்பில் பயன்படுத்தப்படும் வரியிட்ட கண்ணாடித் திரை.*


**screenings : சல்லடைக் கழிப்பு :** *சிப்பங்கட்டவும் அட்டை போடவும் பயன்படும் மலிவான காகிதம்,*

**screen : திரை :** *மறைப்புத் திரை; மின்தடை காப்பு; காட்சிப் படத் திரை; தொலைக்காட்சித் திரை.*

**screen grid :** *(மின்.)* **திரைவலை;** *ஓர் எலெக்ட்ரான் குழலில் கட்டுப்பாட்டு வலைக்கும் இடை மின்முனை கொண்மத்திற்குமிடையிலான இரண்டாவது வலை.*

**screw :** *(எந்.)* **திருகாணி :** *மேல் வரி அல்லது அகல்வரிச்சுற்றுடைய திருகுச் சுரை.*

**screw adjusting caliper:** *(எந்.)* **திருகு விட்டமானி:** *திருகு அமைப்புடையவட்டமானி. இதில் நுட்பமானச் சீரமைவுக்கேற்ற வில்சுருள் அமைந்த திருகாணி அமைப்பு உள்ளது.*


திருகு விட்டமானி

**screw chuck :** *(மர.வே.)* **திருகு கவ்வி :** *ஒரு மரச்சுழற்சிக் கடைசல் கருவிக்கான ஒரு கவ்வி. இதில் நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு திருகு, இயக்க மையமாகச் செயற்படுகிறது.*

**screw cutting lathe :** *(எந்.)* **திருகுவரிக் கடைசல் எந்திரம் :** *திருகாணி வரிகளை வெட்டுவதற்கேற்ற கடைசல் எந்திரம்.*


**screw driver : திருப்புளி :** *திருகாணிகளின் கொண்டையிலுள்ள வரிப்பள்ளத்தில் நுனியை வைத்துத்திருப்புவதற்கான எஃகுக் கருவி.*


திருப்புளி

**screw eye :** *(எந்.)* **திருகு கண் :** *கொண்டை முற்றிலும் அடைப்புடைய ஒரு வளையமாக அல்லது வட்டமாக அமைந்துள்ள ஒரு மரத் திருகு.*

**screw jack :** *(பொறி.)* **திருகு கோல்:** *வண்டிச்சக்கர இருசினைத் தூக்குவதற்கான திருகு நிலை உதை கோலமைவு.*

**screw plate :** *(எந்.)* **திருகு வெட்டுத் தகடு:** *திருகு புரிகளை வெட்டுவதற்கான துளைகளையுடைய எஃகுத் தகடு.*



**screw stock :** *(உலோ.)* **திருகு உலோகம் .** *சிறு திருகுகளும், திருகு எந்திரங்களில் செய்யப்படும் உறுப்புகளுக்கும் பயன்படும் மென்மையான எஃகு.*

**screw threads ;** *(எந்.)* **திருகுபுரி:** *திருகாணிச் சுரையின் உட்சுற்றுத் திருகுபுரி.*

**scribe awl or scriber : வரை**

**கோல்** : மரக்கட்டை, செங்கல் முதலியவற்றில் கோடுகள் வரைவதற்கான கூர்மையான கருவி.

**script :** (அச்சு.) **அச்சுருக் கையெழுத்து** : கையெழுத்து போன்று வடிவமைத்த அச்சுரு.

**scroll** : **சுருள் போதிகை** : சுருள் வடி அணியொப்பனை செய்த போதிகை.

**scroll saw** : (மர.வே.) **மெல்லிழை வாள்** : சித்திர அறுப்பு வேலையில் மெல்லிய பலவகை அட்டைகளை அறுக்கப் பயன் படுத்தப்படும் ஒடுங்கிய இழை வாள்.

**scroll shears** : (உலோ. வே.) **சுருள் கத்திரி** : ஒழுங்கற்ற வடிவுகளை சீராக வெட்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட கையினால் இயக்கக் கூடிய கத்திரி.

**scroll work** : **சுருளொப்பனை** : மென்தோல் சுருளில் செய்யப்படும் ஒப்பனை வேலைப்பாடு.

**scutcheon or es-cutcheon**: **காப்புத் தகடு** : சாவித் துளையில் சுழலும் காப்புத் தகடு.

**sea coal** : (வார்.) **கடல் நிலக்கரி** : நியூகாசில் என்னுமிடத்திலிருந்து கடல் மூலம் முன்பு கொணரப்பட்ட மென்மையான நிலக்கரி.

**sealing compound** ; (மின்.) **காப்புப் பொருள்** : சேம மின்கலங்களில் அமில மின்பகுப்பான்கள் சிந்தாமல் தடுப்பதற்காக மின்முனைகளில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்கினாலான, அமிலத்தை எதிர்க்கக் கூடிய, மின்டகத்தாத கூட்டுப் பொருள்.

**sealing wrappers : காப்பு உறைக் காகிதம்** : சிப்பங் கட்டுவதற்காகவும் காப்பு உறையிடுவதற்காகவும் பயன்படும் பளபளப்பான காகிதம்.

**seam** : **மூட்டுவாய் :** ஓர் உலோகத் தகட்டின் ஒரு முனை இன்னோர் உலோகத் தகட்டின் மடித்த முனையுடன் இணைத்துப் பொருத்திய மூட்டுவாய்.

**seaming iron :** (உலோ. வே.) **மூட்டுவாய் இரும்பு** : உலோகத் தகட்டு வேலையின் வரிப்பள்ளம் வெட்டுவதற்குப் பயன்படும் கருவி.

**seam welding : மூட்டுவாய்ப் பற்றவைப்பு** : ஓர் உலோகத் தகட்டின் ஒரு முனையை இன்னோர் உலோகத் தகட்டின் மடித்த முனையுடன் இணைத்துப் பற்றவைக்கும் முறை.

**seaplane**: (வானூ.) **முந்நீர் விமானம்**: கடலிலிருந்தே ஏறி இறங்கும் அமைப்புடைய வானூர்தி.

**seasoning modeling**: **பதப்படுத்திய உருப்படிவம்**: வார்ப்படங்களுக்கு அரைச்சாந்து உருப்படிவங்களை உருவாக்கும் முறை. இதில் வார்ப்படங்களும், ஊன்பசை வார்ப்படங்களுக்கான கூடுகளும் உறிஞ்சுவதைத் தடுக்கும் ஒரு பொருளினால் செய்யப்படும்.

**seasoning of lumber**: (மர.வே.) **வெட்டுமரப் பதப்பாடு**: மரத்தைச் சூளையில் உலரவைப்பதன் மூலம் பதப்படுத்துதல். இது வெட்டு மரத்தைக் காற்றில் காயவிடுவதன் மூலம் இயற்கையாகப் பதப்படுத்துவதிலிருந்து மாறுபட்டது.

**secant**: (கணி.) **வெட்டுக்கோடு**: செங்கோண முக்கோணத்தின் பிறிது கோண வகையில் சாய் வரை அடி வரைகளின் விகிதம்.

**secondary**: (மின்.) **கிளர்மின் கம்பிச்சுருள்**: கிளர் மின்னோட்டத்தைத் தாங்கிச் செல்லும் கம்பிச் சுருள். இது 'அடிப்படைக்

கம்பிச் சுருள்' எனப்படும் மற்றொரு மின்கம்பிச் சுருளுடன் காந்த முறையில் இணைக்கப்பட்டிருக்கும்.

**secondary cell:** (மின்.) **துணை மின்கலம்:** மின்னோட்டம் மூலம் வேதியியல் செயற்பாட்டினை நேர்மாறாகத் தாக்கக்கூடிய மின் கலம்.

**secondary coil** (மின்.) **துணைக் கம்பிச்சுருள்:** கிளர் மின்னோட்டத்தைத் தாங்கிச் செல்லும் கம்பிச்சுருள்.

**secondary colour:** (அச்சு.) **கலவை நிறம்:** சிவப்பு, மஞ்சள், ஊதா ஆகிய முதன்மை நிறங்களில் இரு நிறங்களைக் கலப்பதால் உண்டாகும் நிறம். மஞ்சளையும், ஊதாவையும் கலப்பதால் பச்சை நிறம் உண்டாகும்.

**secondary emission;** (மின்.) **துணைஉமிழ்வு:** ஓர் எலெக்ட்ரான் குழலின் தகட்டினை எலெக்ட்ரான்கள் தாக்குவதன் விளைவாக எலெக்ட்ரான்கள் வெளிப்படுதல்.

**secondary planet:** (விண்.) **துணைக்கோள்:** ஒரு கோளினைச் ஒரு சுற்றுப்பாதையில் சுற்றிவரும் ஒரு கோள். பூமிக்கோளத்தை சந்திரன் சுற்றி வருவதால் சந்திரன் பூமியின் துணைக்கோள் ஆகும்.

**secondery-type glider:**(வானூ.) **துணைமைச் சறுக்கு விமானம்:** முதனிலைச் சறுக்கு விமானத்தை விட அதிக வானூர்தி இயக்கத் திறனுடையதாக வடிவமைக்கப்பட்ட சறுக்கு விமானம்.

**second-class lever**(எந்.) **இரண்டாம் நிலை நெம்புகோல்:** ஆதாரத்திற்கும் விசைக்குமிடையே எடையை வைப்பதற்குள்ள நெம்பு கோல்.

**secondary winding:** (மின்.) **துணைச் சுருணை:** முதனிலைச் சுருணையிலிருந்து ஒன்றோடொன்று நடைபெறும் தூண்டல் மூலம் ஆற்றலைப் பெற்று மின் சுமைக்கு ஆற்றலை அளிக்கிற சுருணை.

**second harmonic distortion:** (மின்.) **இரண்டாம் கிளையலைத் திரிபு:** ஓர் அலையானது அதன் இரண்டாவது கிளையலையினால் திரிபடைதல்.

**seconds: மட்டச்சரக்குகள்:** முதல் தரமாக அல்லாத சரக்குகள். அச்சுத் தொழிலில் "மட்டச் சரக்குகள்" என்பது காகிதத்தைக் குறிக்கும்.

**section:** (க.க;எந்.) **வெட்டுவாய் வரைபடம்:** ஒரு பொருள் செங்குத்தாக அல்லது கிடைமட்டமாக வெட்டப்பட்டது போன்று, அப்பொருளின் உள்ளுறுப்புகளைக் காட்டும் வரைபடம்.

**sector:** (கணி.) **வட்டகோணப் பகுதி:** இருபுற ஆரை எல்லையுடைய வட்டக்கூறு.

**sedan:** **அடைப்பு வண்டி:** முன்னும் பின்னும் அகலம் முழுவதற்கும் குறுக்காக இருக்கைகள் கொண்ட நான்கு கதவுகள் உள்ள அடைப்புடைய ஒரு வகை வண்டி.

**sediment:** **படிவு:** ஒரு திரவத்தின் அடியில் வண்டலாகப் படியும் மண்டி,

**sediment bowl:** **வண்டல் கலம்:** எரிபொருளிலுள்ள தூசு, நீர் முதலியவற்றைச் சேகரிப்பதற்கு எரிபொருள் அமைப்பிலுள்ள ஒரு கண்ணாடி அல்லது உலோகக் கொள்கலம்.

**sedimentary rock:** (கணி.) **படிவுப்பாறை:** நீருக்கு அடியில்

அழுத்தம் காரணமாக உண்டாகும் படிவியற்படுகைப் பாறை.

**seeback effect:** (*மின்.*) **பின்னோக்கு விளைவு:** வேறுபட்ட இரண்டு உலோகங்களை ஒன்றோடொன்று ஒட்ட வைத்துச் சூடாக்குவதன் மூலம் அனல் மின்விசை உண்டாக்கும் விளைவு.

**seeker:** **ஆய்வுத் தொலைநோக்காடி:** ஆய்வுக்காகப் பயன்படுத்தப்படும் தொலைநோக்காடி.

**segment:** **வெட்டுக்கூறு:** ஒரு வட்டத்தின் நாண் வரைக்கும் அதன் வில்வரைக்கும் உள்ளீடான பகுதி.

**segmental arch:** (*க.க.*) **பிறை வில் வளைவு:** மையம் உள்ளடங்கலாக இல்லாத பிறை வில் வளைவு.

**segmental rack or segmental wheel:** (*எந்.*) **பிறைமச் சக்கரம்:** வில்வரைக் கூறு வடிவமுடைய விசைப் பற்சக்கரம்.

**segregation:** **தனிமையாக்கம்:** மணியுருவாக்க வகையில் பொதுப் பரப்பிலிருந்து பிரிந்து மையங்களில் அல்லது பிளவு வரைகளில் கூடி உருவாக்குதல்.

**seismogram:** (*இயற்.*) **நிலநடுக்கப் பதிவு;** நிலநடுக்கக் கருவி தரும் நிலநடுக்கப் பதிவு.

**seismography:** (*இயற்.*) **நில நடுக்க ஆய்வியல்:** நிலநடுக்கம் பற்றிய ஆய்வியல் துறை.

**seize:** **சிக்குறுதல்:** வழக்கமாக ஒன்றன் மீது ஒன்று தங்கு தடையின்றி உருளும் மேற்பரப்புகள், மசகு போதாமல் உண்டாகும் உராய்வு காரணமாக ஏற்படும் வெப்பத்தினால் ஒன்றோடொன்று ஒட்டி சிக்குறுதல்.

**selective fading:** (*மின்.*) **தெரிவுத் தேய்வுறல்:** வானொலி வாங்கியில், சமநீளமில்லாத பன்முகப் பாதைகளின் வழியாக ஒரு சைகையை வாங்கும் போது, அந்தச் சைகை ஓரளவுக்குக் குறைந்து அல்லது நிலையிழந்து இருக்கும் நிலை.

**selectivity:** **தேர்திறம்;** வானொலிகளின் ஏற்பு அமைவில் குறிப்பிட நீள அலையினை மட்டும் பற்றிச் செயற்படும் திறம்.

**selenium:** (*மின்.*) **செலினியம் (மதிமம்)** இது ஓர் அலோகத் தனிமம். ஒளிக்கற்றைக்கேற்ற மின்னெதிர்ப்பாற்றல் கொள்ளும் திறனுடைய கந்தகக் குழு சார்ந்த கருப்பொருள் தனிமம். இது ஒளிக் கடப்பு மின்கலங்களிலும், உலோகத் திருத்திகளிலும் பயன்படுகிறது.

**seleno centric:** (*விண்.*) **சந்திர மையம்:** சந்திரன் கோளின் மையத்திலிருந்து பார்த்தாற் போன்ற தோற்றம்.

**self acting:** **தற்செயற்பாடு:** புறத் தூண்டுதல் இல்லாமல் தானாகவே செயற்படுதல்.

**self-bias:** (*மின்.*) **தற்சார்பு:** ஒரு வலைத் தடுப்பான் வழியாக எலெக்ட்ரான்கள் பாயும் போது உண்டாகும் தற்சார்பு.

**self excitation :** (*மின்.*) **தற்கிளர்ச்சி :** நேர்மின்னோட்ட மின்னாக்கியின் இணைப்புகளிலிருந்து பெறும் நேர்மின்னோட்டத்தினை, அதன் மின் காந்தப்புலனுக்கு மின்னோட்டம் அளிப்பதற்காகத் அளித்தல்.

**self-excited :** (*மின்.*) **தற்கிளர்ச்சி மின் பொறி :** தனது புலத்திற்கு அளிப்பதற்காக தனது சொந்த மின்னோட்டத்தை உண்டாக்கிக் கொள்ளும் பொறி.

**self excited alternator:** *(மின்.)* **தற்கிளர்ச்சி மாறு மின்னாக்கி:** இது ஒரு மாற்று மின்னோட்டம் உண்டாக்கும் கருவி. இது தனது முதன்மைப் புலங்களுக்கு காந்தமூட்டுவதற்காக, நேர்மின்னோட்டம் உண்டாக்கும் பல வழிமுறைகளில் ஒன்றின் மூலம் நேர்மின்னோட்டத்தை உண்டாக்குகிறது.

**self.hardening steel :** *(உலோ.)* **தானாகக் கெட்டிப்படுத்திய எஃகு :** காற்றில் குளிர்விப்பதன் மூலம் தானாகச் கெட்டிப்படுத்தப்படும் ஒரு கலவை எஃகு. இது கருவிகள் செய்வதற்குப் பயன்படுகிறது.

**self-induced current :** *(மின்.)* **தற்தூண்டல் மின்னோட்டம் :** ஒரு மின்கம்பிச் சுருளில் காந்தப்புலம் திசையில் அல்லது செறிவில் மாற்றமடையும்போது அதே கம்பிச் சுருளில் அமைந்துள்ள தற்தூண்டல் மின்னியக்கு விசையினால் உண்டாகும் மின்னோட்டம்.

**self-inductance :** *(மின்.)* **தற்தூண்டம் :** ஒரு மின் சுற்று வழியில் கம்பிச்சுருளின் திருப்பங்களிடையே நிகழும் மின்காந்தத் தூண்டல் என்னும் நிகழ்வு.

**self-induction :** *(மின்.)* **தற்தூண்டல் :** ஒரு மின் கம்பிச் சுருளின் காந்தப்புலம் அதன் மீதே ஏற்படுத்தும் தூண்டல் விளைவு.

**selvage : ஆடை விளிம்பு :** ஆடை கிழிப்பதற்குரிய திண்ணிய ஊடு விளிம்பு.

**semaphore , விளக்கக் கைகாட்டி:** அசையும் கைகளும் சைகை விளக்கமைப்பும் கொண்ட இருப்புப் பாதைக் கைகாட்டி மரம்.

**semiautomation :** **பகுதித் தானியக்கம் :** எந்திர இயக்கியைத் தடைசெய்யாமல் உற்பத்திக்கு உதவி செய்கிற தானியங்கிக் கருவிகள்.

**semielliptio spring :** *(தானி.)* **அரை நீள் வட்ட விற்சுருள் :** ஏறத்தாழ அரைநீள் வட்ட வடிவில் உள்ள விற்சுருள். உந்து ஊர்திகளில் இது மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது.

**semichord : அரைநாண் :** ஒரு வட்டவரையின் நாணின் நீளத்தில் சரி பாதி.

**semicircle : அரைவட்டம் :** வட்டத்தின் சுற்றுவரைக் கோட்டுக் விட்டத்திற்கும் உள்ளடங்கிய அரைவட்டம்.

**semicircular arch:** *(க.க.)* **அரை வட்டக் கவான் :** வளை முகட்டின் உட்புற வளைவு அரைவட்டமாக வுள்ள கவான்.

**semiconductor :** *(மின்.)* **ஓரளவு மின்கடத்தி :** தாழ்வெப்ப நிலையிலும் தூயநிலையிலும் மின்கடத்தாத திண்மப்பொருள். இதன் தடைத் திறன், மின்கடத்திகளுக்கும் மின்காப்பிகளுக்கும் இடைப்பட்டதாக இருக்கும்.

**semiconductor 'n' type:** *(மின்.)* **'N' வகை ஓரளவு மின்கடத்தி :** எலெக்ட்ரான்களை முக்கிய ஊர்தியாகப் பயன்படுத்தும் ஓரளவு மின் கடத்தி.

**semiconductor 'p' type : 'P' வகை ஓரளவு மின்கடத்தி:** துவாரங்களை முக்கிய ஊர்தியாகப் பயன்படுத்தும் ஓரளவு மின்கடத்தி.

**semi-steel:** *(உலோ.)* **மிகுவலி எஃகு:** உருகிய தேனிரும்புடன் ஒரு பகுதி எஃகுச் சிம்புகளைச் சேர்ப்பதன் மூலம் தயாரிக்க மிகு வலிமை வாய்ந்த வார்ப்பிரும்பு.

**semi-transparent: ஓரளவு ஒளி ஊடுருவும் பொருள்:** ஒளி ஓரளவு ஊடுருவிச் செல்லக்கூடிய பொருள். இதில் பொருள் அரை குறையாகவே தெரியும்.

**sensible atmosphere:** *(விண்.)* **உணர்வு வாயு மண்டலம்:** உணர்ந்தறியக்கூடிய, அதாவது தடையுடைய வாயு மண்டலத்தின் ஒரு பகுதி.

**sensible heat:** *(பொறி.)* **உணர் வெப்பம்:** வெப்பமானி மூலம் அளவிடக்கூடிய வெப்பம். இது உட்செறி வெப்பத்திற்கு மாறானது.

**sensitivity:** *(மின்.)* **கூருணர்வுத் திறம்:** மிகச்சிறிய சைகை மின்னழுத்தங்களுக்கும் உடனடி எதிர் விளைவினைக் காட்டும் ஒரு மின் சுற்று வழியின் திறன்.

**sensitivity of meter:** *(மின்.)* **மானிகூருணர்வுத்திறம்:** ஒரு மானியின் மின்சுமை விளைவின் குறியீடு. முழு அளவுக்கோட்டத்திற்குத் தேவையான மின்னோட்டத்தினால் ஒன்றை வகுப்பதால் கிடைக்கும் ஈவுக்குச் சமமானது கூருணர்வுத் திறம் ஆகும்.

**sensors:** *(தானி).* **நுண்ணலை உணர்விகள்:** இயற்பியல் நிலைமைகளைக்கட்டுப்பாட்டுஅமைப்பு முறை மூலம் அறிந்து கொள்ளத்தக்க தகவல்களாக மாற்றும் சாதனங்கள்.

**separately excited generator:** *(மின்.)* **பிறிதின் கிளர்ச்சி மின்னாக்கி:** தனது காந்தப்புலத்திற்குத் தேவையான மின்னோட்டத்தை அதற்கு வெளியிலுள்ள ஆதாரத்திலிருந்து எடுத்துக் கொள்ளும் ஓர் எந்திரம்.

**separators:** *(தானி;மின்.)* **பிரிப்புக் கருவி:** ஒரு மின் கலத்தின் தகடுகளுக்கிடையே மின்காப்புகளாகப்பயன்படுத்தப்படும் கருவி. இவை மரத்தினாலோ வேறு சிறப்புப் பொருள்களாலோ செய்யப்பட்டதாகவும், மின் பகுப்புப் பொருளின் சுழற்சியை அனுமதிக்கக் கூடிய நுண்துளைகளை உடையதாகவும் இருக்கும்.

**sepia:** *(வண்.)* **பழுப்பு வண்ணம்:** சிவப்பு நிறங்கலந்த பழுப்பு வண்ணம்.

**septic tank:** *(கம்.)* **நச்சுத்தடை மலக்குழி:** திடக்கழிவுப் பொருள்களை மட்கும்படி செய்வதற்கான ஓர் அமைப்பு. இதில் கழிவுப் பொருள்களை இயற்கையான பாக்டீரிய நடவடிக்கை மூலம் திரவமாகவும், வாயுவாகவும் மாற்றி மட்கும்படி செய்யப்படுகிறது. முழுமையாகச் சுகாதார முறைப்படி அமைந்ததாகும்.

**sequence:** **தொடர் நிகழ்வு:** திரைப்படத்தொடர் நிகழ்ச்சிப் பதிவு.

**serial taps:** *(எந்.)* **தொடர் குழாய்கள்:** 1, 2, 3 என்ற வரிசையில் அமைக்கப்பட்ட தொடர்கள். 1ஆம் எண் குழாய் கூம்பு வடிவில் இருக்கும். 2ஆம் எண் குழாய் நுனியில் மட்டும் சற்றுக் கூம்பியிருக்கும். 3ஆம் எண் குழாய் திருகிழை அமைந்ததாக இருக்கும்.

**series:** *(மின்.)* **மின்கல அடுக்கு வரிசை:** ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு வரிசையாக மின்னோட்டம் பாயுமாறு அமைந்த மின்கல அடுக்கு வரிசை.

**serese cells:** *(மின்.)* **தொடர் மின்கலம்:** ஒரு மின்கலத்தின் நேர் முனை, அடுத்துள்ள மின்கலத்தின் எதிர் முனையுடன் இணைந்திருக்குமாறு மின் கலங்களை இணைக்கும் முறை.

**series circuit.** *(மின்.)* **தொடர் மின் சுற்று வழி:** மின் சுற்று வழியே எலெக்ட்ரான்களுக்கு ஒரே பாதையை மட்டுமே கொண்டுள்ள ஒரு மின் சுற்று வழி.

**series coil:** *(மின்.)* **தொடர் கம்பிச்சுருள்:** தொடர் வரிசையில்

இணைக்கப்பட்டுள்ள ஒரு கம்பிச் சுருள்.

**series motor:** *(மின்.)* **தொடர் மின்னோடி:** மின்னகமும் புலமும் தொடர்வரிசையில் இணைக்கப் பட்டுள்ள ஒரு நேர்மின்னாக்கி மின் உயர்த்திகள் போன்ற வெவ் வேறு பாரங்கள் ஏறும் சாதனங் களில் இது பயன்படுத்தப்படுகி றது. பாரத்தின் ஏற்றத் தாழ்வுக் கேற்ப இதன் வேகம் அமையும்.

**series parallel circuit:** *(மின்.)* **தொடர் இணைமின் சுற்றுவழி:** தொடர்மின்கல அடுக்கு வரிசை யில் இணைக்கப்பட்டுள்ள இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட இணை மின்சுற்றுவழிகளைக் கொண்ட ஒரு மின்சுற்றுவழி.

**series resonance:** *(மின்.)* **தொடர் ஒலியலை எதிர்வு:** ஒரு தூண்டுகருவி, ஒரு கொண்மி, ஒரு தடுப்பான் ஆகியவை தொடர் வரிசையில் உள்ள ஒரு தொடர் மின்சுற்றுவழி. இதில், தூண்டு எதிர் வினைப்பும், கொண்ம எதிர் வினைப்பும் சரிசமமாகவும், ஒன் றையொன்று நீக்கும் வகையிலும் அலைவெண் அமைந்திருக்கும்.

**series welding:** **தொடர் பற்ற வைப்பு:** மின் தடையுடைய பற்ற வைப்பு முறை. இதில், தனியொரு பற்றவைப்பு மின்மாற்றி மூலம் இரண்டு அல்லது அவற்றுக்குமேற் பட்ட பற்றவைப்புகளைச் செய்ய லாம். இதில் ஒவ்வொரு பற்றவைப் பின் வழியாகவும் மொத்த மின் னோட்டமும் செல்லும்.

**series wound generator:** **தொடர் சுருணை மின்னாக்கி.**

**serif:** *(அச்சு.)* **முனைக்கட்டு:** எழுத்துருவில் விளிம்பிற்குக் கட்டு ருக் கொடுக்கும் நுண்வரைமானம்.

**serrated pulse:** *(மின்.)* **ரம்பப் பல் துடிப்பு:** தொலைக்காட்சியில் செங்குத்து ஊசலை ஒருங்கிசைவுப் படுத்துவதற்குப் பயன்படும் நீண்ட துடிப்பு. இந்தத் துடிப்பு, கிடை மட்ட ஒருங்கிசைவைப் பேணு வதற்காக குறுகியகால ரம்பப் பல் விளிம்புகளாகப் பகுக்கப் பட்டிருக்கும்.

**serration:** **ரம்பப் பல் விளிம்பு:** ரம்பத்தில் உள்ளது போன்ற பல் விளிம்பு அமைப்பு.

**serum:** **(உட.)** குருதியிலுள்ள தெளிவான ஒளியூடுருவும் தன்மை யுடைய மஞ்சள்நிறத் திரவம். ஒரு வகை நோய்கண்ட குதிரையி லிருந்து எடுக்கப்படும் நிணநீர். நோய் நஞ்சுக்கு எதிராகச் செயற் படும் பொருட்களை உற்பத்தி செய்கிறது. இந்த நிணநீரை நோயை எதிர்ப்பதற்காக நோயாளியின் உடலுக்குள் ஊசி மூலம் செலுத்துகிறார்கள்.

**serum sickness:** *(நோயி.)* **நிண நீர் நோய்:** நிணநீர் ஊசியால் உண் டாகும் கொப்புளங்கள்.

**service area:** *(மின்.)* **வானொலிப் பரப்பெல்லை:** வானொலி நிலை யத்தின் நிகழ்ச்சிகள் போதிய அளவுக்குத் தெளிவாகக் கேட்கக் கூடிய புவியியல் பரப்பெல்லை.

**service main:** **மின் நுகர்வாய்.**

**service pipe:** *(கம்மி.)* **வழங் கீட்டுக் குழாய்:** நீர், வாயு ஆகிய வற்றைத் தலைக் குழாயிலிருந்து கட்டிடத்திற்குக் கொண்டு செல் லும் தனிக்குழாய்.

**servo motor:** *(எந்.)* **பின்னியக் கப் பொறி:** கப்பல் எந்திர இயக் கத்தைப் பின்னோக்குவிக்கும் துணை விசைப்பொறி.

**service switch:** *(மின்.)* **கட்டுப் பாட்டு விசை:** ஒரு கட்டிடத்தின் மின் கருவிகள் முழுவதையும் கட்

டுப்படுத்தும் வகையில் அக்கட்டிடத்தின் மின் கம்பி அமைப்பின் நுழைவாயில் நுனியில் செருகப்பட்டுள்ள இணைப்பு விசை.

**service tank** : *(வானூ.)* **எரிபொருள் கலம்** : ஒவ்வொரு மின் நிலையத்திற்கு அருகிலும் அமைந்துள்ள நிலையான எரிபொருட் கலம். இதனுள் மற்ற கலங்களிலிருந்து எரிபொருள் இறைத்துச் செலுத்தப்படும். இக்கலத்திலிருந்து எஞ்சினுக்கு எரிபொருள் எடுத்துக் கொள்ளப்படும்.

**service wires** : *(மின்)* **மின் வழங்கு கம்பிகள்** : ஒரு கட்டிடத்திலுள்ள மின் சுமையுடன் இணைந்த மின் வழங்கீட்டுக் கம்பிகளை ஒரு மின்மாற்றியிலிருந்து மின் வழங்கீட்டு ஆதாரத்துடன் இணைக்கும் மின்கம்பிகள்.

**servo control** : *(வானூ.)* **பணிப்புக் கட்டுப்பாடு** : வளிவியக்கம் சார்ந்த அல்லது எந்திரவியல் இடைமாற்றீடு மூலம் விமானம் ஓட்டியின் முயற்சிக்கு ஆதாரமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டுச் சாதனம்.

**servo motor**: **பணிப்பு முன்னோடி**:

**sesqui-plane**: *(வானூ.)* **குறையலகுப் பரப்பு விமானம்** : ஒரு சிறகின் பரப்பளவு இன்னொரு சிறகின் பரப்பளவில் பாதிக்கும் குறைவாகவுள்ள ஒருவகை இருதள விமானம்.

**set screw** : *(எந்.)* **சதுரத் திருகு** : சதுர வடிவ அல்லது வேறு வடிவக் கொண்டையுடைய சமதளங் கொண்ட திருகு. இது நகர்த்திச் சரியமைவு செய்யக் கூடிய உறுப்புகளை உரிய நிலையில் நிறுத்தி இறுக்குவதற்குப் பயன்படுகிறது. இது பெரும்பாலும் வெப்பப் பதனாக்கம் மூலம் தயாரிக்கப்படுகிறது.

**set square** : **முக்கவர்** : செங்கோண முக்கோண வடிவ வரைகருவி.

**setting hammer** : *(உலோ.)* **பொருத்துச் சுத்தி** : ஒரு முனை கூரிய முனையுடன் சாய்தளமான கொண்டையுடையதாகவும், இன்னொரு தட்டையான முனையுடையதாகவும் சதுரமான அடிக்கட்டையுடன் செய்த சுத்தி. இது முனைகளில் அல்லது கோணங்களில் வேலைப்பாடு செய்வதற்குப் பயன்படுகிறது.

**settle** : **விசிப்பலகை** : உயர் சாய்மானமும் கைகளும் அடியில் அறைப் பெட்டிகளும் உடைய விசிப்பலகை.

**settlement** : *(மர.வே.)* **அமிழ்வு** : நிலம், கட்டிடம், சுவர் ஆகியவற்றின் அமிழ்வு. பொதுவாக அடித்தளத்தின் வலுக்குறைவு, கட்டுமானப் பொருள்களின் தரக் குறைவு. பதப்படுத்தப்படாத மரம் ஆகியவற்றினால் இது ஏற்படுகிறது.

**severy**: *(க.க.)* **குவிமாடமோடு** : பல்கெழு வளைவுக் குவிமாட மோட்டுப் பகுதி.

**sevres**: **சீனமங்கு** : விலைமிகுந்த சீனக் களிமண்ணினாலான அலங்கார மங்குப்பாண்டவகை.


**sewage** : *(கம்மி.)* **சாக்கடைநீர்** : கட்டிடங்களிலிருந்து வெளியேற்றப்படும் திரவ மற்றும் திடக் கழிவுப் பொருட்கள்.

**sewer** :*(கம்மி.)* **கழிவு நீர்க்கால்** : நகரக் கழிவுநீர்க் குழாய்.

**sextant**: *(கணி.)* **மாலுமிக் கோணமானி** ; மாலுமிகள் பயன்படுத்தும் நிலப்பரப்பாய்வுக் கோணமானி.

**அறுகோண வட்டப்பகுதி** : வட்டத்தின் ஆறில் ஒரு பகுதி.

**shackle:** *(எந்.)* **சங்கிலிக் கொளுவி:** ஓரளவு இயங்குவதற்கு அனுமதிக்கக் கூடிய சங்கிலிப் பூட்டுக் கொளுவி.



கொளுவி

**shackle bolt:** *(எந்.)* **முளையில்லாக் கொண்டி:** முளையில்லாது மாட்டும் தாழ்.

**shade: நிறத் திண்மை :** வண்ணங்களில் செறிவான அல்லது மங்கலான வண்ணப் படிநிலை.

**shadow mask :** *(மின்.)* **நிழல் திரை :** வண்ணத் தொலைக் காட்சியின் படக்குழலில் பொருத்தமான வண்ணத்தைத் தெரிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் துளைகளிட்ட உலோகத் தகடு. இது எலெக்ட்ரான் பீற்று விசைக்கும் பாஸ்போர் திரைக்கும் நடுவில் வைக்கப்படுகிறது. நுண்ணாய்வின்போது எந்தக் கணத்திலும் பொருத்தமான பாஸ்போர் புள்ளிகள் மட்டுமே கிளர்ச்சியடையுமாறு துளைகள் அமைக்கப்பட்டிருக்கும்.

**shaft :** *(எந்.)* **சுழல் தண்டு :** எந்திரங்களில் சுழலும் உறுப்புகளுக்கு ஆதாரமுள்ள சுழல்தண்டு.

**shake : மரவெடிப்பு :** வெட்டு மரத்திலுள்ள ஒரு வெடிப்பு அல்லது முறிவு. இது மரத்தில் ஆண்டு வளையங்களுக்கிடையே ஒரு பிளவை உண்டாக்குகின்றன.

**shakes :** *(க.க.)* **அரை ஆப்பு :** கையினால் செய்த அரை ஆப்பு.

**shank :** *(எந்.)* **எந்திரத் தண்டு :** ஒருகருவியைஅதன் கைப்பிடியுடன் அல்லது குதை குழியுடன் இணைக்கும் உறுப்பு. கருவியின் வெட்டிடைப் பகுதி.

**shaper :** *(எந்.)* **வார்ப்புப் பொறி :** உலோகங்களுக்கு உருவங்கொடுக்கும் கடைசல் வார்ப்புப் பொறி.

**shapes:** *(பொறி.)* **உலோக உருவப் படிவம் :** உலோகத்தில் செய்யப் படும் பொருட்களின் உருமாதிரிப் படிவம்.

**sharp sand :** *(க.க.)* **கூர்மணல் :** கூர்மையான கோணங்களை யுடைய தூய்மையான மணல்.


**shatter-proof glass :** *(தானி.)* **உடையாத கண்ணாடி :** அதிர்ச்சியைத் தாங்கி உடையாமலிருக்கும் ஒருவகைக் கண்ணாடி. இது இப்போது உந்து ஊர்திகளில் பயன் படுத்தப்படுகிறது. இது அதிர்ச்சியைத் தடுப்பதற்காக நடுவில் பிளாஸ்டிக் தகட்டினைக் கொண்ட இரு கண்ணாடித் துண்டுகளினாலானது.

**shear :** *(பொறி.)* **தடைவிசை :** இரு நேரிணையான விசைகள் எதிர்த்திசைகளில் இயங்குவதன் மூலம் ஒரு பொருள் வெட்டப் படுவதை எதிர்க்கும் தடைவிசை.

**கத்திரி :** கத்திரி மூலம் வெட்டுதல்.

**சறுக்குப் பெயர்ச்சி :** அழுத்தங் காரணமாகப் பொருளின் மெல் லடுக்குகளின் ஒத்திணைவான சறுக்குப் பெயர்ச்சி.

**shears : உலோகக் கத்திரி:** உலோ



கத்திரி

கங்களைக் கத்திரிப்பதற்குப் பயன் படும் கருவி.

**shears :** *(எந்.)* **கம்பளிக் கத்திரி :** கம்பளி மயிர் வெட்டுவதற்கான கத்திரிக்கோல்; தழை வெட்டு கருவி.

**shear-steel :** *(உலோ.)* **கத்திரி எஃகு :** கத்திரிக்கோல் செய்வதற் கான எஃகு.

**sheath** : *(மின்.)* **காப்புறை** : மின் கம்பியின் அல்லது வடத்தின் புறப் பாதுகாப்பு உறை.

**sheave** : *(உலோ.)* **ஒடு குழிவு** : கப்பியில் கயிறு ஓடுவதற்கான பள்ளம்.

**sheave wheel** : *(பொறி.)* **கப்பிச் சக்கரம்** : வட்டம் அல்லது சங்கிலி ஓடுவதற்கான பள்ளம் உடைய சக்கரம்.

**shed** : *(க.க.)* **கூடாரம்** : ஒரு கட்டிடத்துடன் இணைந்துள்ள அல்லாது இணையாதிருக்கிற, குறைந்தது ஒரு பக்கம் திறப்புள்ள ஒரு கொட்டாரம்.

**sheeter lines** : *(குழை.)* **நறுக்குக் கோடுகள்** : பிளாஸ்டிக் தகடுகளில் கணிசமான பரப்பளவில் பரவலாகவுள்ள இணைக்கீறல்கள் அல்லது புடைப்பு வரைகள். இவை துண்டுகளாக நறுக்கும்போது ஏற்படும் கோடுகள் போன்று அமைந்திருக்கும்.

**sheet metal gauge** : *(எந்.)* **உலோகத்தகடு கன அளவுமானி** : உலோகத் தகட்டின் கனத்தை அளவிடுவதற்குப் பயன்படும் ஒருவகை மானி.

**sheet metal working** : **உலோகத் தகடு வேலைப்பாடு** : தகட்டு வடிவிலுள்ள உலோகங்களில் செய்யப்படும் வேலைப்பாடுகள்.

**sheet steel** : *(உலோ. வே.)* **தகட்டு எஃகு** : உலோகத் தகட்டு வேலைப்பாடு செய்யும் தொழிலாளர்கள் பயன்படுத்தும் மெல்லிய எஃகுத் தகடுகள். இதன் எண்ணிக்கையைக் கொண்டு இதன் கனம் கணக்கிடப்படும். கனமான தகடுகள் பாளங்கள் எனப்படும்.

**sheet tin** : *(உலோ.வே.)* **வெள்ளீயத் தகடு**: அரிமானத்தைத் தடுப்பதற்காக வெள்ளீய முலாம் பூசப்பட்ட மெல்லிய இரும்பு அல்லது எஃகுத் தகடு.

**shellac** : **அவலரக்கு** : மெருகு எண்ணெய் செய்வதற்குப் பயன்படும் தகட்டு வடிவாக்கப்பட்ட அரக்கு. இது பொதுவாக வெள்ளை நிறத்திலும், ஆரஞ்சு நிறத்திலும் இருக்கும்.

**shellac varnish**: **அவலரக்கு வண்ணம்** : அவலரக்கினை ஆல்கஹாலில் கரைத்துச் செய்யப்படும் வண்ணப்பொருள். இதனை வடிவமைப்பாளர்கள் பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

**shell button**: **குமிழ்மாட்டி** : துணியால் பொதிந்த உலோகத் தட்டை இணைகளாலான குமிழ்மாட்டி.

**shell drill** : *(எந்.)* **உட்புழைத் துரப்பணம்** : சக்கரம் சுழலும் இருசு அல்லது கதிரில் செய்யப்படும் உட்புழையான துரப்பணம் செலுத்தப்படும் துவாரங்களை விரிவாக்கம் செய்வதற்குப் பயன்படுகிறது.

**sherardize** : *(உலோ.)* **நாகமுலாமிடல்** : உலர் வெப்ப முறையில் மின்பகுப்பு மூலம் துத்தநாக முலாம் பூசுதல்.

**sheraton**: *(அ.க.)* **அலங்கார நாற்காலி**: பதினெட்டாம் நூற்றாண்டுப் பாணியிலமைந்த நாற்காலி. இதனை தாமஸ் ஷெராட்டன் *(1751-1806)* உருவாக்கினார்.

**shield** : *(மின்.)* **காப்பு** : ஒரு மின் சுற்றுவழியில் சிதறிப் பரவும் காந்தப்புலங்கள், வானொலி அலைவெள்ள புலங்கள் ஆகியவற்றின் விளைவுகளைக் குறைப்பதற்காக உறுப்புகளைச் சுற்றி அமைக்கப்படும் காப்பு.

**shield** : *(பற்.)* **காப்புக் கேடயம்** : பற்றவைப்பு வேலையின்போது

கண்ணுக்கும் முகத்துக்கும் பாதுகாப்பாகப் பயன்படுத்தப்படும் கேடயம். இதில் ஒரு தனிவகை ஆடி பொருத்தப்பட்டிருக்கும். இதன் வழியாக மின்சுடரை தீங்கின்றி நேரடியாகப் பார்க்கலாம்.

**shielded arc** : *(பற்.)* **காப்புச்சுடர்** *கனமான உருகும் பொருள் பூசப்பட்ட மின்முனை பயன்படுத்தப்படும் ஒரு வகை மின்பற்றவைப்பு முறை.*

**shielded cable** : *(மின்.)* **காப்பிட்ட கம்பிவடம்** : *பின்னல் கம்பி வலையினால் காப்பிடப்பட்டுள்ள மின் கம்பி அல்லது கம்பி வடம்.*

**shifter forks**: *(பட்)* **இடமாற்றுக் கவடு**: *ஒரு வார்ப்பட்டையில் கால்பரப்பி, அதனைக் கப்பியை இறுக்குவதற்கும், இறுக்கமான கப்பியைத் தளர்த்துவதற்கும் பயன்படும் சுரம்.*

**shim**: *(எந்.)* **சிம்பு**: *பொறிப் பகுதிகளைப் பொருத்துவதற்குப் பயன்படும் மெல்லிய துணுக்கு.*

**shimmy**: *(தானி.)* **முன்சக்கர அதிர்வு**: *உந்து ஊர்திகளில் முன் சக்கரங்கள் அதிர்வுறுதல். சீரற்ற கம்பிச்சுருள் அமைப்பு. டயரில் சமனற்ற காற்றழுத்தம், மறையாணிகள் கழன்றிருத்தல் போன்ற பல காரணங்களால் ஏற்படலாம்.*



முன் சக்கர அதிர்வு சிம்பு

**shooting stor**: *(விண்.)* **எரிமீன்**: *விண்ணிலிருந்து எரிந்து வீழ்கின்ற விண்மீன்.*

**shingles**: *(க.க.)* **அரையாப்பு**: *கூரைகளையும், பக்கச் சுவர்களையும் மூடுவதற்குப் பயன்படும் மரத் துண்டுகளிலான அல்லது பிற பொருள்களினாலான சிறிய துண்டு. இதன் கனம் .16செ.மீ. முதல் 1.27செ.மீ. வரை இருக்கும்.*

**shipping measure**: **கப்பல் அளவை**: *ஒரு கப்பலின் உள் கொள்ளளவினை அளவிடுவதற்கான அளவுமுறை.*
*1 பதிவு டன் = 100 கன அடி*
*கப்பல்சரக்குகளை அளவிடுவதற்கு 1 யு.எஸ். கப்பல் டன் = 40 கன அடி = 32.143 யு.எஸ். புஷல்கள்.*

**ship plane**: *(வானூ.)* **கப்பல் விமானம்**: *கப்பலின் மேல் தளத்திலிருந்து ஏறவும், அதில் வந்து இறங்கவும் ஏற்ற வகையில் கட்டப்பட்ட விமானம்.*

**shock**: *(பொறி.)* **அதிர்வு**: *திடீரென விசையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் திடீர் அதிர்ச்சி.*

**shock absorber**: *(வானூ.)* **அதிர்வு தாங்கி**: *விமானம் தரையில் இறங்கும் போதும், தரையிலிருந்து ஏறும்போதும் ஏற்படும் அதிர்ச்சியைத் தாங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள பகுதி.*

**shoe**: *(எந்.)* **உராய்வு தடைக் கட்டை**: *ஊர்திகளின் சக்கர உராய்வு தடைக்கட்டை.*

**shopwork**: **பட்டறைப்பணி**: *பட்டறையில் செய்யப்படும் எந்திரவியல் பணி.*

**shore**: *(க.க.)* **உதைவரிக்கால்**: *கப்பல் கட்டுதளத்தில் கப்பலைத் தாங்கி நிற்க வைப்பதற்காக விலாப்பக்கத்தினைத் தாங்கிச் சாய்த்து நிறுத்தப்படும் வரிக் கட்டைகள்.*

**shoring**: *(க.க.)* **உதை வரிக்காலிடுதல்**: *உதை வரிக்கால் கொடுத்து தாங்கி நிறுத்துதல்.*

**short circuit**: *(மின்.)* **மின்குறுக்குப் பாய்வு** *மின் சுற்றுவழியில் குறுக்கு வெட்டாக நிலம்பாவி மின்னோட்டம் நிமைறுவிடுதல்.*

**short circuit fault**: **மின் முடிப்புப் பிழை**:

**shortline:** குறுமின்வழி.

**short rib:** *(உட.)* **குறுவிலா எலும்பு:** மறுபுறம் மூட்டுச் சேராத விலா எலும்பு.

**short-sight:** *(நோயி.)* **கிட்டப் பார்வை:** அணுக்கப் பார்வைக் கோளாறு.

**short-time duty:** *(மின்.)* **குறுகிய நேரமின்னோட்டப்பணி:** ஒரு குறிப்பிட்ட குறுகிய காலத்திற்கு ஒரே சீரான அளவில் மின்னோட்டம் தேவைப்படும் பணி.

**short ton:** **குறுஎடையளவு:** இரண்டாயிரம் கல் எடை அளவு.

**short waves:** *(மின்.)* **சிற்றலை:** பத்து முதல் நூறு மீட்டர் வரை நீளமுள்ள வானொலிக் குற்றலை.

**short wave radio:** **குற்றலை:** பத்து முதல் நூறு மீட்டர் வரை நீளமுள்ள வானொலிச் சிற்றலை.

**short weight:** **குற்றெடை:** ஒன்றுக்குக் குறைந்த அலகுடைய சில்லறை எடை.

**shot effect:** *(மின்.)* **வெடிப்பு விளைவு:** ஓர் எலெக்ட்ரான் குழலில் எதிர்முனையிலிருந்து வெளிப்படும் எலெக்ட்ரான் வீதங்களில் ஏற்படும் மாறுபாடு காரணமாக உண்டாகும் ஒலி.

**shoulder-blade:** *(உட.)* **தோள் எலும்பு:** தோளிலுள்ள பட்டை எலும்பு.

**shoulder-brace:** *(உட.)* **தோள் மூட்டு:** தோள் எலும்புகளின் மூட்டு.

**shrine:** *(க.க.)* **கோயில்:** புனிதப் பேழை.

**shrinkage:** *(வார்.)* **அளவுக் குறுக்கம்:** வார்ப்படத்தைக் குளிர்விக்கும் போது அதன் வடிவளவையும், எடையையும் உருவத்தையும் துல்லியமாக இருத்தி வைத்துக் கொள்வதற்காகச் சுருங்கும் அளவு.

**shrinkage crack:** *(வார்.)* **சுருங்கு வெடிப்பு:** வார்ப்படத்தின் உறுப்புகளை ஏற்றதாழ்வுடன் குளிர்விக்கும் போது வார்ப்படத்தில் உண்டாகும் வெடிப்பு.

**shrink holes in castings:** *(வார்.)* **வார்ப்படச் சுருங்கு துளைகள்:** ஏற்றத்தாழ்வான குளிர்விப்பு மூலம் வார்ப்பட உறுப்புகளில் ஏற்படும் பள்ளங்கள்.

**shrinking:** *(எந். வார்.)* **சுரிப்பு:** குளிர்விக்கும்போது வார்ப்படத்தில் ஏற்படும் சுருக்கம்.

**shroud:** *(எந்.)* **தட்டை விளிம்பு:** பல்லிணைச் சக்கரத்தின் பற்களின் முனைகளில், அப்பற்களின் வலிமையை அதிகரிக்க அல்லது வழுவழுப்பான இயக்கத்திற்கு வசதி செய்ய இணைக்கப்படும் அல்லது வார்ப்பு செய்யப்படும் தட்டையான விளிம்பு.

**shrouded wheels:** *(தானி.)* **மூடு சக்கரங்கள்:** தொடர் உந்து ஊர்திகளில் தீத்தங்கிகளில் பக்கப்பட்டிகள் மூலம் அடைக்கப்பட்ட சக்கரங்கள்.

**shunt:** *(எந்.)* **இணை:** இரு மின்னோட்டங்களை இடைத் தடுத்திணைக்கும் மின் கடத்து கட்டை.

**shunt for ammeter:** *(மின்.)* **அம்மீட்டர் இணை:** மின்மானி வழியாகச் செல்லும் மின்னோட்டத்தைக் கட்டுப் படுத்துவதற்காக அம்மீட்டருடன் இணையாகப் பொருத்தப்பட்டுள்ள தடை.

**shunt generator:** *(மின்.)* **இணை மின்னாக்கி:** காந்தப்புலம் உண்டாக்குவதற்கான கம்பிச் சுருள் சுழலும் கரத்திற்கு இணையாகச் சுற்றப்பட்டுள்ள மின்னோட்டம் உண்டாக்கும் ஒரு எந்திரம்.

**shunt-wound motor** : *(மின்.)* **இணைச் சுருணை மின்னோடி** : மின் சுமை மாறுபட்டிருப்பினும் மின்னோடியின் வேகம் ஒரே அளவில் இருக்கும் வகையில் பயன்படுத்தப்படும் மின்னோடி.

**shutter** : **ஒளித்தடுப்புத் திரை** : ஒளிப்படக் கருவியில் ஆடிவழியாக ஒளி புகுந்து செல்வதைக் கட்டுப் படுத்துவதற்கான ஒரு சாதனம்.

**sidebands** : *(மின்.)* **சம அதிர்வுப் பட்டிகள்** : அலை மாற்றம் காரணமாக, ஊர்தி அலை வெண்ணுக்கும் மேலும் கீழும் உள்ள அலை வெண்கள்.

**side carrier frequencies** : *(மின்.)* **பக்கஊர்தி அலைவெண்கள்**: ஊர்தி அலை அலைவெண், அலை மாற்றி அலைவெண் இரண்டின் கூட்டுத் தொகைக்கும், அவற்றுக்கிடையிலான வேறுபாட்டுக்கும் சமமான அலைவெண் அலைகள்.

**side head** : *(அச்சு.)* **ஓரத் தலைப்பு** அச்சுப்பக்கங்களில்மையத்தில் அல்லாமல் பக்கத்தின் ஓரத்தில் அச்சடிக்கப்படும் தலைப்பு.

**side milling cutter** : *(எந்.)* **பக்கத்துளை வெட்டு கருவி** : பக்கங்களிலும் சுற்றுக் கோட்டிலும் வெட்டுவதற்குப் பயன்படும் குறுகிய முகப்புக் கொண்ட வெட்டுக் கருவி சுழல் இருசு மீது இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட வெட்டுக் கருவிகளை அமைத்திருந்தால் அவை "கவட்டு வெட்டுக் கருவி" எனப்படும்.

**side rake** : *(எந்.)* **பக்கவெட்டுச் சரிவு** : கடைசல் எந்திரம், இழைப்புளி, வடிவாக்கக் கருவிகள் போன்றவற்றின் மேல் முகப்பின் மீதான வெட்டு முனையிலிருந்து விலகிச் செல்லும் குறுக்குச் சரிவு.

**sidereal day** : *(விண்.)* **மீனாள்** நாள்மீன் இயக்கக்கணிப்புக்காலம். இது சூரியநாள் எனப்படும் நமது நாளைவிட நான்கு நிமிட நேரம் குறைவாகும்.

**sidereal time** : *(விண்.)* **நாள் மீன் காலக் கணிப்பு** : நாள் மீன் சார்ந்த காலக்கணிப்பு முறை.

**sidereal year** : *(விண்.)* **நாள் மீன் ஆண்டு** : நாள் மீன் இயக்கக் கணிப்பு ஆண்டு.

**siderography**: *(உலோ.)* **எஃகுச் செதுக்கு வேலை** : எஃகின் மீது செய்யப்படும் செதுக்கு வேலைப்பாடு.

**side-saddle** : **புடைச் சேணம்** : இரு கால் மிதிகளையும் ஒரு புறமாகக் கொண்ட சேணப் பின்னிருக்கை.

**siderite** : *(உலோ.)* **சைடரைட்** : ($F_3CO_3$) குறைந்த அளவு இரும்பு கொண்ட ஓர் உலோகத் தாதுப் பொருள்.

**sideslipping** : *(வானூ.)* **ஓரச் சாய்வு** : விமானத்தின் ஓரச்சாய்வு இயக்கம், விமானத்தின் பக்க ஊடச்சு சாய்வாக இருந்து, அந்த அச்சின் கீழ்முனையின் திசையில் சறுக்கல் ஏற்படும் போது உண்டாகும் நிலை.

**side-wheel** : **பக்கத் துடுப் பாழி** : நீராவிக் கப்பலின் பக்கத் துடுப் பாழி.

**side stick**: *(அச்சு.)* **பக்க அச்சுக் கோப்புக் கட்டை** : அச்சுப் பணியில் அச்சுப் படிவங்கள், நீர் அச்சுப் படிவங்கள் ஆகியவற்றை இறுக்குவதற்குப் பக்கவாட்டில் அடித்திறுக்கப் பயன்படும் ஆப்பு போன்ற நீண்ட கட்டை.

**side stitch** : *(அச்சு.)* **பக்கத் தைப்பான்** : நூல்களைக் கட்டு

மானம் செய்யும்போது, கட்டு மான முனை நெடுகிலும் எந்திரத்தின் மூலம் பொருத்தப்படும் கம்பி இழைகள்.

**siding :** *(க.க.)* **புடைமரம் :** கட்டிடத்தின் புறச் சுவர்களுக்கு மெருகூட்டுவதற்குப் பயன்படும் வெட்டு மரம்.

**sienna :** *(விண்.)* **சீயெனா மண் :** சாயப்பொருள் தரும் காவிக் களி மண் வகை.

**sieve :** *(க.க.)* **சல்லடை :** மணலிலிருந்து பெரிய கற்களைப் பிரித்தெடுப்பது போன்று, பொருள்களை வடிவளவுக்கேற்பப் பிரித்தெடுப்பதற்குப் பயன்படும் சலித்துப் பிரிக்கும் கருவி.

**sight-feed lubricator :** *(எந்.)* **காட்சியூட்டு மசகுப் பொருள் :** எண்ணெய் பாய்வது அல்லது பாயாமலிருப்பது எப்போதும் கண்ணுக்குப் புலனாகத் தக்கதாக அமைந்துள்ளஒரு மசகுப்பொருள்.

**sight glass :** *(குளி.பத.)* **காட்சிக் கண்ணாடி :** ஒரு திரவத் தொட்டியில் திரவத்தின் வட்டத்தைச் சுட்டிக் காட்டக்கூடிய ஒரு கண்ணாடி.

**signal :** *(மின்.)* **சமிக்ஞை :** ஒரு செய்தித் தொடர்புச் சாதனத்தின் வழியாக அனுப்பப்படும் செய்திக்கு நேரிணையான மின்னியல் அலை.

**signal strength :** *(இயற்.)* **சமிக்ஞை ஆற்றல் :** கம்பியில்லாத் தந்தியின் சுட்டுக்குழிச் செய்தி ஏற்பாற்றல்.

**signal :** **தொலைக்காட்சிச் சைகை:** தொலைக்காட்சிகளை ஒளி பரப்புவதில் இரு வகைச் சைகைகள் உண்டு. ஒன்று பட அல்லது ஒளிச் சைகை; இன்னொன்று ஒலிச் சைகை. ஒவ்வொரு சைகையும் அது ஒலியை அல்லது ஒளியை அனுப்புவதற்கேற்ப மின்னியல் தூண்டல்களைக் கொண்டிருக்கும்.

**signal ganerator :** *(மின்.)* **சமிக்ஞை உருவாக்கி :** ஒரு மாறு வானொலி அலைவெண் தொடர் அலையை அல்லது அலைமாற்றிய தொடர் அலையை உண்டாக்குகிற ஒரு மின்னணுவியல் சோதனைக் கருவி.

**signal to noise ratio :** *(மின்.)* **சமிக்ஞை—ஒலிவீதம் :** வானொலிச் சாதனம் அனுப்பும் சமிக்ஞைக்கும் அந்தச் சாதனத்திற்குள் உண்டாகும் ஓசைக்குமிடையிலான விகிதம்

**signature :** *(அச்சு.)* **அச்சு முழுத்தாள் வரிசைக் குறி :** ஒரு நூலில் பல்வேறு பிரிவுகள் எந்த வரிசையில் தொகுக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டுவதற்காக ஒவ்வொரு பக்கத்திலும் அச்சிடப்படும் எண் குறியீடுகள்.

**signature press :** *(அச்சு.)* **தாள் அழுத்து கருவி :** அச்சு முழுமடித் தாள்களை ஒன்றாக இணைத்து அழுத்துவதற்காகப் புத்தகம் கட்டுமானம் செய்வோர் பயன்படுத்தும் ஒரு சாதனம்.

**silencer :** *(மின்.)* **ஓசையடக்கு கருவி:** சமிக்ஞைகள் எதுவும் வாராதிருக்கும் பாது, ஏற்பியைச் செயலிழக்கச் செய்யும் மின் சுற்றுவழி.

**silica :** **சிலிக்கா** ($SiO_2$) **:** மணலிலும் பளிங்குக் கல் வகைகளிலும் பெருங் கூறாய் அமைந்த மணற்சத்து.

**silicon :** *(சனி.)* **கன்மம்:** உலோகமல்லாத மணற்சத்து பெருமளவாகவுள்ள ஒரு தனிமம். கார்பனையும்,பளிங்குக்கல்லையும் ஒரு மின் உலையில் சூடாக்குவதன்

மூலம் இது கிடைக்கிறது. எஃகுத் தயாரிப்பில் கெட்டியாக்குவதற்கும் ஆக்சிகர நீக்கத்திற்கும் இது பயன் படுகிறது.

**silicon carbide : சிலிக்கன் கார்பைடு :** *மின் உலையில் மணல் கல்கரி, மரத்தூள் ஆகியவற்றை, உப்பை உருக்கு பொருளாகப் பயன்படுத்தி, உருக்குவதன் மூலம் இது பெறப்படுகிறது. இது மின் தடை உண்டாக்கும் ஒரு வகைப் பொருள். இது உயர்வெப்பம் ஏற்கும் பொருளாகவும் உராய்வுப் பொருளாகவும் பயன்படுகிறது. இது கார்போரண்டம் கிறிஸ்டோலான் கார்போஃபிராக்ஸ் கார்போரா, கார்போரைட், கிரிஸ்டோலைட் என்று பல பெயர்களில்விற்பனை செய்யப்படுகிறது.*

**silicon copper :** *(உலோ.)* **சிலிக்கன் செம்பு :** *துவாரங்கள், புடைப்புகள், இல்லாமல் சுத்தமான, திண்மையான வார்ப்படங்கள் தயாரிப்பதற்காக உருகிய செம்புடன் சேர்க்கப்படும் செம்பு மிகுதியாக அடங்கிய ஒரு வகை உலோகக் கலவை.*

**silicon diode:** *(மின்.)* **சிலிக்கன் இரு முனையம் :** *மின்வெப்பம் கடத்தாத இரு முனையம்.*

**silicon resins : சிலிக்கோன் : பிசின் :** சிலிக்காவிலிருந்து பெறப்படும் பிசின் வகை. இது வெப்பக் கடத்தலைத் தடுக்கக் கூடியது; வேதியியல் பொருள்களின் அரிமானத்தையும் தடுக்க வல்லது சிறந்த மின்னியல் பண்புகள் கொண்டது.

**silicon steel :** *(உலோ.)* **சிலிக்கன் எஃகு :** *1% முதல் 2% வரை சிலிக்கான் அடங்கிய எஃகு. இது கம்பிச் சுருள்கள் தயாரிக்கப்பயன்படுகிறது. 3% முதல் 5% வரை சிலிக்கன் அடங்கிய எஃகு காந்த இயல்புகளைக் கொண்டது. இது மின்காந்தங்களில் பயன்படுகிறது.*

**sill :** *(க.க.)* **பலகணிப் படிக் கட்டை :** *கதவு அல்லது சன்னல் அடியிலுள்ள மரத்தினாலான அல்லது கல்லினாலான அடித்தளம்.*

**sill high :** *(க.க.)* **வாயிற்படிக்கல் உயரம் :** *தரை முதல் வாயிற்படிக் கட்டை வரையிலான உயரம்.*

**silo :** *(விண்.)* **ஏவுகணைக் காப்பிடம் :** *ஏவுகணைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கானக் காப்பிடம். இது தரையில் கெட்டியான செங்குத்துத் துவாரமுடையதாகவும், ஏவுகணையைச் செலுத்தும் நிலைக்கு உயர்த்துவதற்கு அல்லது நேரடியாக காப்பிடத்திலிருந்தே செலுத்துவதற்கு ஏற்ற வசதிகளை உடையதாகவும் இருக்கும்.*

**silt : வண்டல் :** *ஓடும் தண்ணீரினால் படியும் நுண்ணிய சேற்றுப் படிவு.*

**silumin :** *(உலோ.)* **சிலுமின் :** *அலுமினியமும், சிலிக்கனும் கலந்த ஒரு வகை ஜெர்மன் உலோகக் கலவை. மிகுந்த நெகிழ்திறனுடையது; குறைவாகச் சுருங்கக் கூடியது. இதனால் நுட்பமான வார்ப்படங்கள் செய்யப் பயன்படுகிறது.*

**silver :** *(கனி.)* **வெள்ளி : (Ag)** *வெள்ளை நிறம் கொண்ட நெகிழ்திறன்கொண்ட, தகடாக்கக்கூடிய ஓர் உலோகம். இதன் உருகு நிலை 1750°F ஒப்பு அடர்த்தி தூய்மைக் கேற்ப 10 முதல் 11.*

**silver solder : வெள்ளிப் பற்றாசு:** *ஒரு பகுதி செம்பும் 2 முதல் 4 பகுதிகள் வரை வெள்ளீயம் கொண்ட சிறு திற உலோகக் கலவை. அணிகலன் தயாரிப்போர் இதனை பற்றவைப்பதற்கான உலோகமாகப் பயன்படுத்துகின்றனர்.*

**silver white** : **வெள்ளிப் பூச்சு** : வெண் ஈயத்தின் தூய்மையான வகை, வெள்ளிப் பூச்சுக் கலவை யாகப் பயன்படுகிறது. தூளாக்கிய நேர்த்தியான சிலிக்கா.

**similar poles** : (மின்.) **ஒத்த துருவங்கள்** : ஒன்றையொன்று எதிர்க்கும் இரு காந்தத் துருவங்கள் ஒத்த துருவங்கள் எனப்படும். இவை காந்த முறையில் ஒத்திருப்பவை.

**simple equation**: (கணி.) **நேர் சமன்பாடு** : கணிதத்தில் விசைப் பெருக்க உரு இல்லா சமன்பாடு.

**simple machine** : (எந்.) **விசை யாக்கமற்ற பொறி** : விசை உற்பத்தி செய்யாமல், நெம்புகோல், புல்லி, சாய்தளம், திருகு, சக்கரம் அச்சு, ஆப்பு போன்றவற்றில் ஒன்றின் செயலினால் இயங்கும் பொறி.

**sinad**: (மின்.) **சினாட்**: ஒரு வானொலி வாங்கியின் கூருணர் திறனை அளவிடுவதற்கான ஒரு திட்ட அளவு முறை, கணிக்கப்பட்ட உற்பத்தி அளவில் 50% வரை சமிக்ஞை உற்பத்தி செய்யும் வகையில் வானொலி வாங்கியில் சீரமைவு செய்யப்படுகிறது. இந்தச் சூழ்நிலைகளில் செலுத்தப்படும் சைகையின் நுண் மின்னழுத்தங்களின் எண்ணிக்கை 12 டிபிசினாட் அல்லது பயனுறு கூருணர்வுத் திறன் எனக் குறிக்கப்படும்.

**sine**: (கணி.) **நிமிர்வீதம்**: செங்கோண முக்கோணத்தின் மீது சிறிதுகோண எதிர் வரை அடி வரை வீத அளவு.

**sine bar**: (கணி.) **நிமிர்வீத அளவு கருவி**: கோணங்களைத் துல்லியமாக அளவிடுவதற்கான ஒரு சாதனம்.

**sine wave**: (மின்.) **எதிர்வ அலை**: ஒரே அலைவெண் மாற்று மின்னோட்டத்தின் அலை வடிவம். ஒரு கோணம் 360° வழியே சுழலும் போது அக்கோணத்தின் எதிர்வம் (சைன் வடிவம்) தொட்டுச் செல்லும் அனைத்துப் புள்ளிகளையும் குறிக்கும் வரைபடம்.

**singing flame**: (இயற்.) **இசையொலி அனற்பிழம்பு**: குழாயினிடமாக இசையொலி எழுப்பும் அனற்பிழப்பு.

**singing sand**: (இயற் ) **ஒலிப்புப் பருமணல்**: நடக்கும்போது பண்ணாரொலி எழுப்பத்தக்க சீரளவுடைய பருமணல்.

**single acting**: (எந்.) **ஒரு திசை இயக்கம்**: நீராவி எந்திர வகையில் உந்து தண்டின் ஒரு பக்கம் மட்டுமே நீராவி ஏற்கிற இயக்கம்.

**single bar current tranefor-mer**: **ஒற்றைச்சலாகை மின்னோட்ட மாற்றி.**

**single contact lamp**: (மின்.) **ஒற்றைத் தொடுமுனை விளக்கு**: உந்து ஊர்திகளில் முக்கியமாகப் பயன்படுத்தப்படும் ஒரு வகை விளக்கு. இதில் அடிப்பகுதியின் முனையில் ஒரு தொடு முனை இருக்கும். அடிப்பகுதியின் பக்கங்களும், குதை குழியும் மின் சுற்று வழியை நிறைவு செய்கின்றன.

**singlecut file**: (உலோ.வே ) **ஒரு திசை வெட்டுவரி அரம்**: ஒரு திசை வெட்டுவரிகளை உடைய அரம். இதில், பற்கள் அரத்தின் முகப்புக்கு மூலைவிட்டமாக 65° கோணத்தில் ஒரே திசையில் இணையாக வெட்டப்பட்டிருக்கும்.

**single ended amplifier**: (மின்.) **ஒற்றைமுனை மின்மிகைப்பி**: தனது இறுதி மின்விசைக் கட்டத்தில் தனியொரு வெற்றிடக்குழலை அல்லது மின்மப் பெருக்கியை

(டிரான்சிஸ்டர்) கொண்டுள்ள ஒரு மின்மிகைப்பி.

**single phase motor:** *(மின்.)* **ஒற்றைநிலை மின்னோடி:** ஒற்றை நிலை மாற்று மின்னோட்டத்தில் இயங்குகிற ஒரு மின்னோடி.

**single layer winding: ஒற்றையடுக்குச் சுருணை:**

**single phase:** *(மின்.)* **ஒரு நிலை மின்சுற்றுவழி:** ஒரு நிலையான மாற்று மின்னோட்டச் சுற்றுவழி.

**single-phase alternating current:** *(மின்.)* **ஒருநிலை மாற்று மின்னோட்டம்:** ஒரு மாற்று மின்னாக்கியிலிருந்து கிடைக்கும் மின்விசை, ஒரு தொடர் சுருள் அல்லது சுருள்களிலிருந்து கிடைக்குமானால், அது ஒரு நிலை மின்னோட்டம் எனப்படும்.

**single phase induction motor:** *(மின்.)* **ஒரு நிலை தூண்டு மின்னோடி:** மின்னகச் சுருணைகளில் எதிர்காந்தப் புலத்தை உண்டாக்கக் கூடிய களக்காந்த முறையைக் கொண்டுள்ள மாற்று மின்னோட்ட மின்னோடி.

**single-pole switch:** *(மின்.)* **ஒரு முனை விசை:** ஒரு மின்சுற்றுவழியில் ஒரு பக்கத்தில் மட்டுமே திறப்பும் அடைப்பும் உடைய விசை.

**single-thread screw:** *(எந்.)* **ஓரிழைத் திருகு:** ஒரே திருகிழையினையுடைய திருகு. இதில் புரியிழை இடைவெளியளவும், முற்செல் தொலைவும் சமமாக இருக்கும்.

**sinkage:** *(அச்சு,)* **தொடக்கக் காலியிடம்:** ஒரு நூலின் ஓர் அத்தியாயத்தின் தொடக்கத்தில் உள்ள காலி இடம்.

**sinking speed:** *(வானூ.)* **இறங்கு வேகம்:** ஒரு குறிப்பிட்ட சமநிலையில் விமானம் உயரத்திலிருந்து சறுக்கிக் கீழே இறங்கும் வேக வீதம்.

**sinter:** **வெங்நீரருவிப் படிவம்:** ஒத்திசைவான திடப்பொருளைத் துகள்களாக மாற்றுவதற்கு, அதனை உருக்காமல் சூடாக்குவதன் மூலம் மாற்றுதல்.

**sinusoidal:** *(மின்.)* **எதிர்வ அலை:** ஒரு கோணத்தின் சைன் வடிவத்தின் வீத அளவில் மாறுபடுகிற அலை.

**siphon:** **தூம்பு குழாய்;** மேல் வளைந்து புறக்கிளை மட்டம் தாழ்ந்த குழாய்.

**siphon:** *(எந்.பொறி.)* **தூம்புகுழாய்:** மேல் வளைந்து புறக்கிளை மட்டம் தாழ்ந்துள்ள குழாய். வாயு மண்டலக் காற்றழுத்தத்தின் உதவியால் திரவங்களை உறிஞ்சி இழுப்பதற்கு இது பயன்படுகிறது.

**siphon barometer: தூம்பு அழுத்தமானி:** அடி சிறிது மேல்வளைந்த அழுத்தமானி.

**siphonage :** *(கம்மி.)* **கவான் குழாய் வழி இயக்கம்:** வாயுமண்டல அழுத்தத்திற்குக் குறைவான அழுத்தம் காரணமாக ஏற்படும் உறிஞ்சுதல் மூலம் உண்டாகும் திரவப் பாய்வு.

**siphon-gauge: நீர்த்தேக்க அழுத்தமானி:** பாதரசம் அடங்கிய கவான் குழாய் மூலம் நீர்த்தேக்க அழுத்தம் காட்டும் அமைவு.

**sisal fiber:** **தாழையிழை:** தாழை இனத்தைச் சேர்ந்த தாவரத்திலிருந்து எடுக்கப்படும் நாரிழை. இது வலிமை வாய்ந்தது; நெடுநாள் உழைக்கக் கூடியது.

**site:** *(க.க.)* **மனை:** ஒரு கட்டிடம் அமைந்துள்ள அல்லது ஒரு கட்டிடம் கட்டப்படவிருக்கிற

எல்லை வரையறுக்கப்பட்டுள்ள இடம்.

**size:** *(1)* **தாள்மெருகு:** காகிதத்திற்கு மெருகுப்பசையிட்டு பளபளப்பாக்குவதற்குப் பயன்படும் பிசின் பொருள்.

**(2) தாள் வடிவளவு:** குறிப்பிட்ட நீள அகல அளவுடைய தாள் வடிவளவு.

**size control: வடிவளவுக் கட்டுப்பாடு:** தொலைக்காட்சியில் கிடைமட்டத்திலும், செங்குத்தாகவும் படத்தின் வடிவளவை அதிகரிக்கவோ குறைக்கவோ அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அமைவு.

**sizing: வகைப்படுத்துதல்:** காகிதத்தை, அதன் நீர் அல்லது மை எதிர்ப்புத் தன்மைக்கேற்ப வகை மாதிரிப்படுத்துதல்.

**skeletonizing:** *(அச்சு.)* **மென்கீற்று அச்சுருவாக்கம்:** ஓர் அச்சுப் படிவத்தில் வண்ணப் பகுதிகளை நீக்கி விட்டு, மென்கீற்று அச்சுருவை மட்டும் பதிவு செய்வதற்காகப் பூட்டி வைத்தல். இதனால் பல்வேறு வண்ணங்களில் அச்சிட இயலும்.

**skelp:** *(உலோ.)* **குழாய்த் தகடு:** குழாய்கள் செய்வதற்கான எஃகு அல்லது இரும்புத் தகடு.

**sketch: திட்ட உருவரை:** முதல் நிலை மாதிரி; புனையா ஓவியம்; நினைவு வரிக்குறிப்பு.

**sketch outline: புனையா ஓவியம்** நுணுக்க விளக்கங்களின்றி மேலோட்டமாக வரைந்த ஒரு ஒரு திட்ட உருவரை.

**skew:** *(எந்.)* **ஓரச்சாய்வு:** செங்கோணத்தில் இல்லாத சாய்வு.

**skew back:** *(க.க.)* **சாய்வுதைவு:** கவானின் இருமுனைகளிலுமுள்ள சாய்வுதைவுப் பரப்பு.

**skew backsaw: சாய்வுதைவு ரம்பம்:** எடை குறைவாக இருக்கும் வகையில் முதுகுப்புறம் வளைந்துள்ள கைரம்பம்.

**skew bridge: சாய்குறுக்குப்பாலம்:** இரு புறப்பக்கங்களிடையே சாய்வாகச் செல்லும் கட்டுமானம்.

**skew chisel: சாய்வுளி:** சாய்வு விளிம்புத் தறிப்புக் கருவி.

**skew curve: முப்படைச் சாய்வு வளைவு:** தன் தளங்கடந்த சாய்வுடைய மூவளவை வளைவு.

**skew gear:** *(பல்லி.)* **சாய்வுப் பல்லிணை:** சுழல் பற்களுடைய பல்லிணை. இவை இன்று பெரும்பாலும் உந்து ஊர்திகளின் பின்புற இருசுகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவை வலிமையை அதிகரித்து, உராய்வற்ற ஓசையற்ற இயக்கத்திற்கு உதவுகின்றன.

**skew wheel: சாய்பற்சரிவுச் சக்கரம்:** ஒன்றையொன்று இயக்கும்படி அமைக்கப்பட்ட வேறு வேறு தளத்தில் சுழலும் சாய் பற் சக்கர அமைவு.

**skid;** *(வானூ.)* **விமானச் சறுக்குச் சக்கரம்:** விமானம் ஓடு பாதையில் ஓடும்போது அல்லது தரையிறங்கும் போது அதற்கு உதவியாக இருக்கும் தரையிறங்கு பல்லிணையின் ஓர் உறுப்பு.

**உந்துவிசைக் கட்டை:** உந்து ஊர்தியில் சக்கரத்தை உந்தித் தள்ளும் சாய்வு உந்துவிசைக்கட்டை.

**skid fan: சக்கரச் சுழற்சித் தடைகாப்பு:**

**skid fin:** *(வானூ.)* **சறுக்கு நிமிர் நேர்விளிம்பு:** விமானத்தில் கிடைமட்ட உறுதிப்பாட்டை அதிகரிப்பதற்காகச் சிறகுக்கு மேலே பொருத்தப்பட்டுள்ள நிமிர் நேர் விளிம்புடை'' ீகடு.

**skidding**: *(வானூ.)* **பக்கச் சறுக்கு**: *விமானம் திரும்பும்போது பக்கவாட்டில் சறுக்குதல்.*

**skimmer**: *(வார்.)* **ஏடு எடுக்கும் கரண்டி**: *வார்ப்பட வேலையில் உருகிய உலோகத்தின் மேற்பரப்பில் படிந்திருக்கும் அழுக்குப் படலத்தை மேலீடாக எடுப்பதற்குப் பயன்படும் கரண்டி.*

**skim milk**: **ஏடு எடுத்த பால்**: *ஆடை அகற்றப்பட்ட பால்.*

**skimming**: *(வார்.)* **ஏடு எடுத்தல்**: *உருகிய உலோகத்தை ஊற்றும்போது படியும் அழுக்குப் படலத்தை மேலீடாக எடுத்தல்.*

**skimming-dish**: **விரை மெல் விசைப்படகு**: *தட்டையான அடிப் பகுதியினையுடைய விரைந்து செல்லும் பந்தய விசைப்படகு.*

**skin**; **மென்தோல்**: *விலங்கிலிருந்து எடுக்கப்பட்ட பதப்படுத்திய அல்லது பதப்படுத்தாத மெல்லிய தோல்.*

**skin-effect**; *(மின்,)* **புறம் பரவு விசை**; *ஒற்றை மாற்று மின் வலி வகையில் மின்கடத்தியின் புற நிலையடுக்குச் சுற்றிச் செல்லும் தன்மை.*

**skin-friction** : **பக்க உராய்வுத் திறம்** : *கப்பல் வகையில் பக்கநீர் உராய்வுத் திறம்.*

**skin-grafting**: *(மருத்.)* **தோல் ஒட்டு மருத்துவம்** : *உயிர்த்தோல் ஒட்டும் அறுவை மருத்துவம்.*

**skinning** : *(மின்.)* **மின் காப்பி உரிப்பு** : *மின்னிணைப்பிகள் கொடுப்பதற்கு முன்பு மின் கடத்திகளிலிருந்து மின்காப்பிகளை உரித்தெடுத்தல்.*

**skip**: **அலைத் தாவல்** : *வானொலி பரப்பில், ஒரு வான் அலையானது பூமியின் பரப்புக்கு மீண்டும் திரும்புவதால் உண்டாகும் விளைவு.*

**skip distance** : *(மின்.)* **தாவல் தொலைவு** : *வானொலி பரப்புக்கும் வான் அலை பூமிக்குத் திரும்புகிற இடத்திற்குமிடையிலான தொலைவு. அலைவெண், நாளின் நேரம், புவியியல் அமைப்பு ஆகிய வற்றைப் பொறுத்து இது மாறுபடும்.*

**sky-rocket** : *(இயற்,)* **வான் ராக்கெட்**: *வானத்தை நோக்கி நேராக உயர்ந்து விசையுடன் பாயும் ராக்கெட்.*

**skirting**: *(க.க.)* **அகச் சுவரோரப் பட்டி** : *சுவரும் தரையும் சந்திக்குமிடத்தில் சுற்று விளிம்பாக அமைக்கப்பட்டுள்ள பட்டை.*

**skiver** : **தோலாடை** : *தோலைச் சீவிப் பெறப்படும் மென்தோல். இது புத்தகக் கட்டுமானத்திற்குப் பயன்படுகிறது.*

**skiver leather** : **சீவிய மென் தோல்** : *தோலைச் சீவிப் பட்டையாக எடுத்த மெல்லிய தோல். அட்டைப்பெட்டிகள், பணப்பை முதலியவற்றில் உள்வரியிடவும், புத்தகக்கட்டுமானத்திலும் பயன்படுகிறது.*

**skylight** : *(க.க.)* **மேல்தளச் சாளரம்** : *கட்டிட மேல் முகட்டில் அல்லது கூரையில் வெளிச்சத்திற்காக அமைக்கப்படும் கண்ணாடிச் சாளரம்.*

**skyscraper** : *(க.க.)* **வானளாவி** : *இன்றுள்ள அலுவலகக் கட்டிடங்களைப் போன்று பல அடுக்கு மாடிகளைக் கொண்ட உயர்ந்த கட்டிடம்.*

**sky sign** : **மீமுகட்டு விளம்பரம்** : *உயர் கட்டிடங்களின் உச்ச உயர்*

இடங்களில் காட்டப்படும் ஒளி விளக்க விளம்பரம்.

**sky wave** : *(மின்.)* **வான் அலை** : ஒரு வானொலியின் வானலை வாங்கியிலிருந்து வானத்தை நோக்கிச் செல்லும் அலை.

**sky writing** : *(வானூ.)* **புகைவரி எழுத்து** : வானூர்தி விளம்பரங்களில் பயன்படுத்தப்படும் புகைக் கோட்டு எழுத்து முறை.

**slab** : **பாளம்** : தட்டையான மேற்பரப்புடைய கல், பளிங்குக் கல், கான்கிரீட் போன்றவற்றினாலான சிலாத்துண்டம்.

**slab-stone** : **பாளக்கல்** : பாளம் பாளமாகப் பிளவுறும் கல்.

**slack** : *(எந்.)* **முனைப்புக் குறைவு**: எந்திரத்தில் நீக்கப்பட வேண்டிய உறுப்புகள் தளர்வுறுதல்.

**slag** : *(வார்.)* **உலோகக் கசடு** : வார்ப்படத் தொழிற்சாலைகளில் உருக்கிய சுரங்க உலோகச் கசடு.

**slag cement** : **சாம்பல் சிமெண்ட்** : ஊதுலைச் சாம்பற் கட்டியினாலான சிமெண்ட்.

**slag wool** : **கனிம இழைக்கம்பிளி**: உலோகக் கிட்டப்பாகூடான நீராவியால் இழைக்கப்படும் செயற்கைக் கம்பளி.

**sledge** : *(உலோ.)* **சம்மட்டி** : கொல்லுலைக் கூடத்தில் கருமான் இரு கையாலும் அடிக்கப் பயன்படும் நீண்ட கைப்பிடியுடைய சம்மட்டி.

**sledge - hammer** : **கொல்லுலைச் சம்மட்டி** : இரு கைகளினாலும் கையாளப்படும் நீண்ட கைப்பிடியுள்ள சம்மட்டி. இது கருமானின் கொல்லுலைக் கூடத்தில் பயன்படுத்தப்படுகிறது.

**sleeker** : *(வார்.)* **மெருகு கருவி** : வார்ப்படங்களில் சொரசொரப்பான பகுதிகளைப் பளபளப்பாக்குவதற்கும், வார்ப்படத்திலிருந்து மணலை அகற்றுவதற்கும் பயன்படும் கருவி.

**sleeper** : *(க.க)* **குறுக்குக் கட்டை**: தண்டவாளக் குறுக்குக் கட்டை; குறுக்கு விட்டம்.

**sleeping-drought**: *(மருந்.)* **தூக்க மருந்து** : உறக்கத்தைத் தூண்டும் குடிநீர்மம்.

**sleeping - sickness** : *(நோயி.)* **உறக்க நோய்**: ஈவகைக் கடியினால் உண்டாகும் கொடிய ஆஃப்ரிக்க நச்சு நோய் வகை.

**sleep-walking** : *(நோயி.)* உறக்கத்தில் நடக்கும் ஒருவகை நோய்.

**sleepy-sickness**: *(நோயி.)* **மூளை வீக்க நோய்** : மயக்கத்தோடு கூடிய ஒருவகை மூளைவீக்க நோய்.

**sleet** : **ஆலங்கட்டி மழை** : ஆலங்கட்டியாக மழை பெய்தல்.

**sleeve** : *(எந்.)* **பெருங்குழல்** : கம்பி உருளையினுள் செருகப்பட்ட குழல்.

**sleeve-coupling** : **மேவு குழல்** : குழாய்கள் இடையிணைப்புக் குழல்; எந்திரத் தண்டச்சுகள் இடையிணைப்புக் குழாய்.

**sleeve - valve** : **இழையுருளைத் தடுக்கிதழ்.**

**sleeve nut** : *(பொறி.)* **இடையிணைப்பு உறழ்சுரை**: இரு சலாகைகளை இணைப்பதற்குப் பயன்படும் வலம்-இடம் புரியிழைகள் உடைய, தக்கவாறு அமைத்துக் கொள்ளக்கூடிய நீண்ட சுரையாணி.

**sleeve valve motor** : *(தானி.)* **இழையுருளைத் தடுக்கிதழ் மின்னோடி**: உறழ்சுரைகளையும் உந்து

தண்டுகளையும் கொண்ட தடுக்கிதழ் அமைவுடைய ஒரு மின்னோடி.

**slice** : *(உலோ.)* **சுரண்டு கோல்** : *உலைகளைத் துப்புரவுக் கரண்டி; தணலிலிருந்து பொருள்களை எடுப்பதற்கான கருவி.*

**slice or slice bar** : *(பொறி.)* **சுரண்டுகோல்** : உலைக்களத்தில் பயன்படுத்தப்படும் துப்புரவுக் கரண்டி.

**slicking** : *(பற்ற.)* **மெருகேற்றுதல்** : வார்ப்படங்களுக்கு மழமழப்பான மெருகுத் தோற்றம் கொடுத்தல்.

**slide** : *(இயற்.)* **காட்சிவில்லை** : ஒரு திரையில் படம் விழுமாறு செய்வதற்காகத் திரைப்பட ஒளியுருப்படிவுக் கருவியில் பயன்படுத்தப்படும் ஆய்வாடிகளின் காட்சி வில்லை.

**slide-caliper** : *(இயற்.)* **நுண் விட்டமானி** : *நழுவு நிண்படிக்கல முடைய விட்டம் அளக்கும் கருவி.*

**slide gear** : *(உலோ.)* **சறுக்குப் பல்லிணை** ; ஒரு சுழல் தண்டுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு பல்லிணை. இது சுழல் தண்டு சுழலும் போது சுழன்று, சுழல் தண்டுடன் சேர்த்து கிடைமட்டத்தில் சறுக்கிச் செல்லும்.

**slide rule** : *(பொறி.)* **உழற்படியளவைக் கோல்** : நுண்ணளவு காட்டும் நழுவுபடியுடைய அளவுகோல்.

**slide valve** : *(பொறி.)* **இழை வடைப்பு** : *நழுவு இயக்கத்துடன் செயற்படக் கூடிய தடுக்கிதழ்.*

**sliding-keel** : **இழை கட்டை** : *படகு பக்கவாட்டில் சாயாமல் தடுக்கும் அடிமட்ட மையப்பலகை.*

**sliding-rule** : **உறழ்படியளவைக் கோல்** : *நுண்ணளவு காட்டும் நழுவுபடியுடைய அளவு கோல்.*

**sliding seat** : **நெகிழ்விருக்கை** : *பந்தயப் படகில் துடுப்பு வலிப்பவரின் உடலசைவுக்கேற்ப நெகிழ்ந்தசைந்து கொடுக்கும் அமர்வு பீடம்.*

**slip** ; **சுழல் வேக வேறுபாடு** : *சுழலும் காந்தப் புலத்திற்கும், அந்தப் புலத்தில் சுழலும் சுழலிக்குமிடையில் வேகத்தில் ஏற்படும் வேறுபாடு.*

**slip rings** . *(மின்.)* **வழுக்கு வளையம்** : *சுழலும் மின் சுற்று வழிக்கு மின்னோட்டத்தைக் கடத்தும் முறை.*

**slip stream** : *(வானூ.)* **பின்கால் விசை** : *வானூர்திச் சுழல் விசிறியின் பின்னுந்து காற்றோட்டம்.*

**slipway** : **கப்பல் துறைச் சாய்தளம்** : *கப்பல்கட்டுந்துறைச் சாய்தளம்; கப்பல் இறங்கு துறைச்சாய் மேடை.*

**slitter** : *(அச்சு.)* **நெக்கு வெட்டுருளை** : *தகடுகளை இடையிட்டு அழுத்திக் கீறும் உருளை இணைக் கருவி.*

**slitting-rollers** : **நெக்கு வெட்டுருளை** : *தகடுகளை இடையிட்டு அழுத்திக் கீறும் உருளை இணைக் கருவி,*

**slitting saw for metal** : *(எந்.)* **உலோக நெக்குவெட்டு ரம்பம்** ; உலோகங்களை வெட்டுவதற்குப் பயன்படும் மெல்லிய வெட்டுக் கருவி.

**slot** ; *(வானூ.)* **இயைவடுப் பள்ளம்** : *எந்திரத்தில் மற்றொரு பகுதியுடன் பொருந்தி இயைவதற்கான துளை அல்லது கீறல் அல்லது பள்ளம்.*

**slot-machine** : **துளை விளிம்பு பொறி** : *துளைவிளிம்பில் காசு*

போடுவதனால் இயங்கும் எந்திரம்.

**slot-meter : காசுவீழ்வு அலகு மானி** : காசு வீழ்வதனால் அலகு குறித்துக் காட்டுகிற கருவி.

**slot screwing : துளை விளிம்பு திருகு** : திருகாணியின் கொண்டை தெரியாதபடி அதைப் பொருத்துவதற்கான ஒரு முறை.

**slow sand filter :** (பொறி.) **சுணக்க வடிகட்டி**: நீரைத் தூய்மையாக்குவதற்கான ஒரு வடிகட்டி. இது விரைவாக வடிகட்டும் பெரிய வடிகட்டிகளிலிருந்து அமைப்பில் வேறுபட்டது.

**sloyd knife :** (மர.வே.) **மரச் செதுக்குக் கத்தி** : மரச்செதுக்கு வேலைப்பாடுகளில் பயன்படுத்தப் படும்கத்தி. அமெரிக்க மரச்செதுக்கற் பயிற்சிக்கு முன்னோடி.

**sludge : குழைசேறு** : கொதிகலனில் படிவது போன்ற கசடு.

**sludge** : (குளி.பத.) **குழைசேறு** : குளிர்பதனச் சாதனத்தில் ஈரம், மசகுப் பொருள்களிலுள்ள மாசுகள் காரணமாகப் படியும் கசடு.

**slug :** (அச்சு.) **உலோக வரிப் பாளம்** : உருக்கச்சு எந்திரத்தில் கோத்த வரிப்பாளம்.

**slug :** (மின்.) **காந்த உள்ளீடு** : ஒரு சிறிய காந்த உள்ளீடு.

**slug casting machine :** (அச்சு.) **வரி உருக்கச்சுப் பொறி** : அச்சுருக் கோப்பு இல்லாமல் எழுத்துக்களை வரிப்பாளங்களாக உருக்கி வார்த்து அடுக்கும் அச்சுப்பொறி.

**slum: மசகுமண்டி**: மசகெண்ணையில் பயன்பாடின்போது உண்டாகும் பிசுக்குள்ள மண்டி.

**slur :** (அச்சு.) **மறைகறை** : தெளிவற்ற மறைப்புத் தன்மை எழுத்தின் மேல் எழுதித் தெளிவற்றதாக்குதல்.

**slurry : மின் உள்வரிச் சாந்து** : மின்னோட்டத்தை மாற்றியமைக்க உதவும் பொறியின் உள்வரியினைச் சீர் செய்யப் பயன்படுத்தப்படும் நுண்மணல், களிமண் கலந்த அரை நீர்மக் கலவை.

**slush : பனிச்சேறு** : அறை குறையாக உருகிய பனிக்கட்டி.

**slushing oil : குழை எண்ணெய்** : உலோகங்கள், எந்திர உறுப்புகள் முதலியவற்றில் அரிமானம் ஏற்படாமல் தடுப்பதற்குப் பயன்படும் எண்ணெய்.

**slush moulding :** (குழை.) **குழை வார்ப்படம்** : வெப்பத்தால் இளகிக் குளிரில் இறுகும் இயல்புடைய பிசினைச் சூடான வார்ப்படமாக வார்ப்பதற்கான ஒரு முறை.

**smock: ஒற்றைப் பாய்மரக் கப்பல்**: மீன் பிடிப்பதற்கான ஒற்றைப் பாய்மரக் கப்பல்.

**small caps :** (அச்சு.) **குறுந் தலைப்பெழுத்துக்கள்** : குறுந்தரத் தலைப்பு வடிவ எழுத்துக்கள்.

**small pica :** (அச்சு.) **அச்செழுத்து வடிவளவு** : புள்ளி அளவுடைய அச்செழுத்து வடிவளவு.

**smalt :** (அச்சு.) **நீலவண்ணப் பொடி** : வண்ணம் பூசுபவர்களும் விளம்பர எழுத்தாளர்களும் அலங்கார வேலைப்பாடுகளுக்காகப் பயன்படுத்தும் நீலவண்ணப் பொடி. வண்ணம் பூசிய பகுதிகளை காற்றும் வெயிலும் அரித்து விடாமல் பாதுகாக்கவும் இது பயன்படுகிறது.

**smashing :** (அச்சு.) **அச்சு வரி அழுத்தம்** : அச்சு முழுமடித் தாள் வரிசை எண் தட்டையாக அமையும்படி அழுத்தி விடுதல்.

**smecktit :** **வெண்களி:** கறை துடைப்புக் களிமண் வகை.

**smelting :** *(உலோ.)* **உருக்குதல்:** சுரங்கப் பொருட்களை உருக்கி அவற்றிலிருந்து உலோகங்களைப் பிரித்தெத்தல்.

**smithery :** **உலோகப் பட்டறை :** உலோகத் தொழில் நடைபெறும் பட்டறை. கொல்லர் பட்டறை.

**smock-mill:** **காற்று விசை ஆலை:** முகட்டுப் பகுதி மட்டும் சுழலும் காற்று விசை ஆலை.


**smoke-ball :** **புகைத் திரை ஏவு குண்டு :** மூடாக்கு புகைப்படமிடப் பயன்படும் விசைக் குண்டு.

**smoke ball:***(மருந்.)* **உறிஞ்சுவளிக் குளிகை :** காச நோய் மருந்தாக ஆவி உள்ளிழுக்கப் பயன்படும் மாத்திரை.

**smoke-stone :** **மது நிறமணி :** மஞ்சள் நிற மணிக்கல் வகை.

**smoking:** **புகைப்பதனம்:** பச்சையான மண்பாண்டங்களிலிருந்து ஈரத்தை அகற்றுவதற்கு முதற்கட்டமாகப் புகையாவி பிடித்தல்.

**smoothing plane:** *(மர.வே.)* **இழைப்புளி:** தச்சர்கள் பயன்படுத்தும் 23செ.மீ. நீளமும் 4.4 முதல் 5.7செ.மீ. அகலமும் உடைய இரும்பினாலான இழைப்புளி.



இழைப்புளி

**smooting trowel:** **பூசுகரண்டி:** சாந்துப் பூச்சுப் பரப்புகளைச் சமப்படுத்துவதற்காகப் பயன்படும் கரண்டி.



பூசு கரண்டி

**snake :** **பாம்பு கம்பி :** ஒரு குழாய் அல்லது ஓர் இடைத்தடுக்கு அல்லது பிற அணுக முடியாத இடங்கள் வழியாக மின்கம்பிகளைச் செலுத்துவதற்கு அல்லது இழுப்பதற்குப் பயன்படும் நெகிழ்திறனுடைய மின்கம்பி.

**snake stone:** **பாம்புக்கடி மருந்துக் கல் :** பாம்புக் கடியைக் குணப்படுத்துவதற்கான ஒரு வகை மருந்துக்கல்,

**snap-blot :** **விற்பூட்டு :** கதவை மூடும் பொழுது தானே பூட்டிக் கொள்ளும் வில்லமைவு தாழ்ப்பாள்.

**snap-hook:** **பற்றிவிடாக்கொளுவி:** விற்சுருள் மூலம் இயங்கும் தானே பூட்டிக்கொள்ளும் கொளுவி.

**snap-lock :** **விற்பூட்டு :** கதவை மூடும் பொழுது தானே பூட்டிக் கொள்ளும் வில் பொருத்திய தாழ்ப்பாள்.

**snap shot :** **நொடிப்பு ஒளிப்படம் :** நொடிப்பு நேரத்தில் எடுக்கப்படும் ஒளிப்படம்.

**snap switch :** *(மின்.)* **விரைவு மின்விசை:** குமிழை அல்லது விரல் கட்டையை வலப்புறமாகத் திருப்புவதன் மூலம் விரைவான இயக்கத்துடன் மின் தொடர்புகளை ஏற்படுத்துகிற அல்லது முடிக்கிற மின்விசை.

**snail-wheel :** **நந்தாழி :** மணிப்பொறியில் மணியடிப்பதை முறைப்படுத்தும் நத்தை வடிவப் பல் வெட்டுச் சக்கரம்.

**snarling iron :** *(உலோ.வே.)* **புடைப்பு இரும்பு :** உலோகக் குடுவையின் உட்புறத்தே கொட்டுவதன் மூலம் புறத்தே புடைப்பு வேலைப்பாடு அமைத்து அழகு செய்வதற்கான இரும்பு.

**snider rifle : பிட்டச் சுழல் துப்பாக்கி :** பின் எழியே மருந்துக் குண்டு அடைக்கப் பெறும் சுழல் துப்பாக்கி வகை.

**snifting-valve : ஏகுழி :** நீராவிப் பொறி உந்து தண்டுக் குழலின் காற்று வெளியிடும் தடுக்கிதழ்.

**snips : (உலோ.வே.) உலோகத் திரி :** உலோக வேலைப்பாட்டுத் தொழிலாளர்கள் பயன்படுத்தும் உலோகத் தகடுகளை வெட்டுவதற்கான கத்திரி.

**snow : வெண்புள்ளி :** தொலைக் காட்சியில் ஓசை அல்லது வலுவற்ற சமிக்ஞை காரணமாக உண்டாகும் இடையீடு. இது படத்தில் வெண் புள்ளிகளாகத் தோன்றும்.

**snow blindnss பனிக் குருடு :** பனிப்பாள ஒளி வீச்சினால் ஏற்படும் பார்வைக்கேடு.

**snow blink : பனிவுரு நிழல் :** வானத்தில் தோன்றும் பனிப் படலத்தின் ஒளி நிழல்,

**snow-guage : பனிவீழ்வு மானி :** பூமியில் பெய்யும் பனியின் அளவைக் கணக்கிடும் அளவு கருவி.

**snow-plough ; பனிவாரி:** பாதைகளிலிருந்து பனி அடைவுகளை அகற்றுவதற்கான கருவி.

**snubber : (தானி.) அதிர்ச்சி தாங்கி :** விற்சுருளின் பின்னதிர்வைக் குறைத்து, ஆட்டத்தைக் குறைப்பதற்காக அச்சுக்கும் சட்டகத்திற்குமிடையில் இணைப்பாகப் பயன் படுத்தப்படும் எந்திர அமைவு. இது ஒரு முரசு விற்சுருள் உராய்வுப்பட்டை ஆகியவற்றைக் கொண்டிருக்கும்

**soaking: (தானி.) தோய்வுறுத்தல்:** எஃகில் முழுமையான ஒரே சீரான ஊடுபரவல் ஏற்படும் வரையில் எஃகை ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் வைத்திருத்தல்.

**soaking pit : (உலோ.) உலோக உருக்கு உலை :** உருட்டுவதற்கு ஆயத்தமாக உலோகப் பாளங்களைச் சூடாக்குவதற்குப் பயன்படும் ஓர் உலை.

**soar : (வானூ.) வானில் வட்டமிடல் :** விமானம் தற்செலுத்தமின்றி உயர் வானவெளியில் மிதந்து தவழ்தல்.

**socket : (மின்.) புதைகுழி :** வெண்சுடர் விளக்கின் அல்லது செருகின் திருகிழைப் பகுதி பொருத்தப்பட்டுள்ள கொள்கலம். இதனைப் பொதுவாக 'ஊர்திக் கொள்கலம்' என்பர்.

**socket chisel : (மர.வே.) குதை குழி உளி:** தச்சர்கள் பொதுவாகப் பயன்படுத்தும் உளி. இதன் மேற்பகுதி ஒரு குதை குழிக்குள் செருகப்பட்டு, அதில் கைப்பிடி பொருத்தப்பட்டிருக்கும்.



குதை குழி உளி

**socketing : (அ.க.) குதை குழியில் பொருத்தல் :** ஒரு மரத் துண்டை இன்னொரு மரத்துண்டின் உட்குழிவுக்குள் செருகுவதன் மூலம் இணைக்கும் ஒரு முறை.

**socle : (க.க.) அடிப்பீடம் :** ஒரு சுவர் அல்லது தூணின் அடிப் பீடப்பகுதி.

**soda ash : சோடாக்காரம் :** ($Na_2CO_3$) தூய்மையான சோடியம் கார்போனேட். இது சலவை நோக்கங்களுக்கும், உராய்வு வெட்டு வேலைகளில் மசகுக் கரைசலாகவும், தூசு தடுப்புப் பொருளாகவும் பயன்படுகிறது.

**soda or sodium carbonate : (வேதி.) உவர்க்காரம் (சோடா) :** இதனை சோடியம் கார்போனேட் என்றும் கூறுவர். இது வீடுகளி

லும் தொழில்களிலும் பயன்படுத்தப்படும் பல்வேறு வேதியியல் கூட்டுப் பொருள்களைக் குறிக்கும். உவர்க்காரம் உப்பிலிருந்து தயாரிக்கப்படுகிறது. கண்ணாடித் தயாரிப்பிலும் தூய்மைப்படுத்தும் பொருளாகவும் சோடியம் கார்போனேட் பயன்படுகிறது.

**soda pulp**: **உவர்க்காரக் கூழ்**: மை ஒட்டுத்தாள், பருமனான புத்தகத் தாள்கள் முதலியவற்றுக்கு உவர்க்கார முறையில் தயாரிக்கப்படும் ஒருவகை மரக்கூழ்.

**soda-water mixture** : *(எந்.)* **உவர்க்கார நீர்க்கலவை** : உப்பு உவர்க்காரமும் நீரும் கலந்த ஒரு கரைசல். இதனுடன் மெல்லிய சோப்பு அல்லது பன்றிக்கொழுப்பு எண்ணெய் கலந்து மசகுத்தன்மை அதிகரிக்கப்படுகிறது. கடைசல், அரவை எந்திரங்களில் குளிர்விக்கும் பொருளாகவும், மசகுப்பொருளாகவும் பயன்படுகிறது.

**sodium chloride**: *(வேதி.)* **சோடியம் குளோரைட் (NaCl)**: சாதாரண உப்பு அல்லது பாறை உப்பு.

**SOF** : **திரைப்பட ஒலி** : திரைப் படத்தில் இணைக்கப்படும் ஒலி.

**soffit** : *(க.க.)* **அடிச்சிற்பம்** : வளைவி. படிக்கட்டு, விட்டம் ஆகியவற்றின் அடியிலுள்ள சிற்பம்.

**soft** ; *(வேதி.)* **மசிவுப்பொருள்** : குறைந்த வெப்பநிலைகளில் உருகி இளகும் தன்மையுள்ள பளிங்குப் பொருள் அல்லது களி மண்.

**soft coal** - **மட்கரி** : நிலக்கீல் தரும் கற்கரி வகை.

**soft brass**: *(உலோ.)* **மென் பித்தளை**: கம்பியாக இழுக்கத்தக்கதாகப் பதப்படுத்தப்பட்ட பித்தளை.

**soft coal**: **மட்கரி**: நிலக்கீல் தரும் கற்கரி வகை.

**soft corn**: தொய்வாணி.

**soft landing**: *(விண்.)* **மெல்லத் தரையிறங்கல்**: சந்திரன் போன்ற பிற கோளங்களில் தரையிறங்கும் ஊர்திகள் மோதி உடைந்து விடாத வகையில் மிகக் குறைந்த வேகத்தில் தரையிறங்குதல்.

**soft solder**: **மென்பற்றாசு**: இளங்கொதி நிலைப்பற்றாசு. வெள்ளீயத் தகடு பிற உலோகத் தகடுகள் போன்ற எளிதில் உருகும் உலோகங்களைப் பற்றவைப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருத்துப் பொருள். இது பாதி வெள்ளீயமும், பாதி ஈயமும் கலந்ததாகவோ 90% வெள்ளீயமும் 10% ஈயமும் கலந்ததாகவோ இருக்கும். இதனுடன் சிறிதளவு ஆன்டிமனியும் சேர்ப்பதுண்டு.

**soft steel**: *(பொறி.)* **மென் எ∴கு**: கார்பன் அளவு குறைவாகக் கலந்துள்ள எஃகு. இது வளைவதில்லை.

**soft stone**: இரும்பு.

**soft tube** : *(மின்.)* **நெகிழ் குழல்** : ஒரு வாயுக்குழல்.

**soft water** : **மென்னீர்**: கார்பொனேட், சுண்ணாம்பு சல்ஃபேட்டு இல்லாத நீர்.

**softwood** : **ஊசியிலை மரம்**: ஊசியிலைக் காட்டு மரங்கள். இவை ஊசி அல்லது செதிர் போன்ற இலைகளை உடையவை. இதனை மென்மரம் என்பர். மென்மரம் என்பது மரத்தின் மென்மையைக் குறிப்பதில்லை.

**soil pipe**: *(கம்மி.)* **கழிநீர்க் குழாய்**: வீடுகளில் கழிநீர் செல்வதற்காகப் பயன்படுத்தப்படும் 1.5 மீட்டர் நீளமுள்ள வார்ப்பு இரும்புக் குழாய்.

**soil stack :** *(கம்மி.)* **கழிநீர்க் குழாய் :** கழிவுநீர்ச் சாக்கடை அமைப்பில் பயன்படுத்தப்படும் செங்குத்தான கழிவுநீர்க் குழாய்.

**sol :** *(குழை.)* **இழுதுப்படலம்:** ஒரு திரவத்தின் கரைசல் அல்லது இழுதுநிலைப் படலம்.

**solar engine:** *(எந்.பொறி.)* **சூரிய ஒளி எந்திரம் :** பெருமளவு கண்ணாடிப் பரப்பில் சூரிய ஒளி படுவதால் உண்டாகும் வெப்பத்தினால் இயங்கும் எந்திரம்.


**solarium :** *(க.க.)* **கதிரொளிக் கண்ணாடி மனை :** மருத்துவ நலம் கருதிய கதிரொளிக் கண்ணாடி மனை.

**solar wind :** *(இயற்.)* **சூரியக் காற்று :** சூரியனிலிருந்து புறமாக இடைவிடாது நகர்ந்து கொண்டிருக்கும் புரோட்டான்களின் தாரை.

**solder :** *(உலோ.)* **பற்றாசு :** உலோகங்களை வெப்பத்தின்மூலம் பற்றவைத்து இணைக்கப் பயன்படும் சிறுதிற உலோகக் கலவை. இது பொதுவாக ஈயமும், வெள்ளீயமும் சம அளவில் கலந்ததாக இருக்கும். இதன் உருகுநிலை சுமார் 188°C (370.4°F)

**soldering:** *(எந்.)* **இடையிணைப்பு:** ஒத்திராத உலோகங்களை அல்லது உலோகக் கலவைகளை உரிய வெப்ப நிலையில் பற்றாசு வைத்து இணைத்தல்.

**soldering copper :** *(எந்.)* **பற்**



பற்றாசுச் செம்பு

**றாசுச் செம்பு:** பற்றாசுவைத்து இணைப்பதில் பற்றாசினை உருகும்படி செய்வதற்குப் பயன்படும் ஒரு கருவி. இதனை 'இடையிணைப்பு இரும்பு' என்றும் அழைப்பர்.

**soldering flux :** *(மின்.)* **பற்றுப் பொருள் :** உலோகங்களைப் பற்ற வைத்திணைக்கப் பயன்படும் சிறு திற உலோகம்.

**soldering furnace :** *(உலோ.)* **பற்றாசு உலை :** பறறவைக்கும் செம்பினைச் சூடாக்குவதற்கான மேசை வடிவ வாயு உலை.

**soldering iron: பற்றாசுச் சூட்டுக் கோல் :** பற்றாசு வைக்கப் பயன்படும் கொதிநிலைச் சூட்டுக்கோல்.

**sole .** *(க.க.)* **அடிக்கட்டுமானம் :** குமிழ் முகப்பினைத் தாங்குவதற்கான அடித்தளத்தின் உச்சியில் அமைக்கப்படும் அடிக்கட்டுமானம்.

**solenoid :** *(மின்.)* **மின்கம்பிச் சுருள் உருளை :** ஒரு மின்காந்தத் திருகுச் சுழல்.ஒருநேரான அல்லது வளைவான அச்சினைச் சுற்றி ஒரே திசையில் சமமான வட்ட மின்னோட்டம் பாயும் ஓர் அமைப்பு.

**solenoid relay :** *(தானி; மின்.)* **மின்உருளை அஞ்சல்:** சேற்றுத் தடைக் கட்டையிலுள்ள 'ஓர் அழுத்து பொத்தான்மூலம் இயக்கப்படும் தொடக்க மின்னோடி மின் சுற்று வழியை முழுமைப் படுத்துவதற்குப் பயன்படும் ஒரு வகை விசை.

**solenoid valve :** *(குளி.பத.)* **கம்பிச் சுருள் தடுக்கிதழ் :** கம்பிச் சுருள் செயற்பாடு அல்லது அழுத்தம் மூலம் அடைத்துக் கொண்டு, மின்னியல் மூலம் இயங்கும் காந்த மின்கம்பிச் சுருளை உருளை வாயிலாகத் திறந்து கொள்ளும் ஒரு தடுக்கிதழ்.

**sole Plate :** *(பொறி.)* **எந்திர அடித்தட்டு :** ஓர் எந்திரத்தை வைத்து பிணைப்பதற்கான ஓர் அடித்தட்டு.

**solid angle : பல்தளக் கோளம் :** ஒரு புள்ளியில் சந்திக்கும் பல்தளக் கோளங்களின் தொகுதி.

**solid bearing:** *(எந்.)* **திடத்தாங்கி:** ஒரே துண்டான கெட்டியான தாங்கி. திடத்தாங்கிகள் பொருத்தப்படும் உறுப்புகளில் திடத் தாங்கிகளை அழுத்திப் பொருத்தியதும் அது இருசு உருளை எனப்படும்.

**solid friction :** *(எந்.)* **திட உராய்வு :** ஒரு திடப்பொருளின் மேற்பரப்பு, இன்னொரு திடப் பொருளின மேற்பரப்பின் குறுக்கே நகரும்போது உண்டாகும் உராய்வு.

**solid propellant :** *(விண்.)* **திட முற்செலுத்து பொருள் :** திடநிலையிலுள்ள ஒரு ராக்கெட் முற்செலுத்து பொருள். இது நிலையான வேதியியல் கனற்சிக்குத் தேவையான அனைத்துக் கூறுகளையும் கொண்டிருக்கும்.

**solo :** *(வானூ.)* **தனிப்பறப்பு :** விமானத்தில் துணையில்லாமல் தனியாகவே பறத்தல்.

**soluble : கரையத்தக்க :** ஒரு திரவத்தில் கரையத்தக்க.

**soluble glass: படிக்ககிக் கலவை:** செயற்கைக் கற்களைக் கடினப் படுத்தத் தயாரிக்கும் வெடியப் படிக்ககிக் கலவை.

**soluble oil :** *(உலோ.)* **கரையும் எண்ணெய் :** தண்ணீரைச் சேர்க்கும்போது எண்ணெயும் நீரும் கலந்த பசைக் குழம்பு.

**sonic barrier :** *(இயற்.)* **ஒலிவிசை எதிர் அழுத்தம் :** ஒலிவிசையடுத்து வரும் வேகங்களுக்குக் காற்று எதிர் வழங்கும் எதிரழுத்த விசை.

**solute :** *(வேதி.)* **கரைவம் :** கரைசலில் கரைந்துள்ள பொருள்.

**solution :** *(வேதி.)* **கரைசல் :** இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட பொருட்கள் பிரிக்க முடியாதவாறு ஒன்றாகக் கலந்து கரைந்த கலவை.

**solvent :** *(வேதி.)* **கரைமம் :** ஒரு பொருளைக் கரைப்பதற்குப் பயன் படும் மற்றொரு பொருள் கரைமம் ஆகும். உப்பை நீர் கரைக்கும். நீர் ஒரு கரைமம்.

**sonic speed :** *(விண்.)* **ஒலி வேகம் :** ஒலி செல்லும் வேகம்.

**soot : புகைக்கரிக் கறை.**

**sorts :** *(அச்சு.)* **தனி எழுத்துரு :** தனி எழுத்துருத் தொகுதி.

**sounder:** *(மின்.)* **கடல் ஆழமானி:** எதிரொலி நேரம் மூலம் கடலின் ஆழத்தை அறியும் கருவி.

**sounder magnet :** *(மின்.)* **ஆழ் தடஆய்வுக் காந்தம் :** ஒரு தந்தி ஆய்தட ஆய்வுக் கருவியிலுள்ள மின்காந்தம்.

**sounding - line (sounding-machine) : கடலாழமானி :** கடலின் ஆழம் காணப் பயன்படும் கருவி.

**sounding balloon :** *(வானூ.)* **மீவிசும்பு ஆய்வுக் கூண்டு :** மீவிசும்பு நிலை ஆய்வுக்காக அனுப்பப் படும் சிறுகூண்டு.

**sounding - board : ஒலித்தடைத் தட்டி:** மேடைமீது ஒலிபரவுதலைத் தடுத்து முன் செலுத்தும் மென் பலகை.

**sounding-lead: அடி ஈயக்குண்டு:** கடல் ஆழமானியின் அடி ஈயக் குண்டு.

**sounding' rocket : வாயுமண்டல ஆய்வு ராக்கெட் :** வாயுமண்டலத்தின் மேற்பகுதியின் நிலைமைகளை ஆராய்வதற்காக அனுப்பப் படும் ராக்கெட்.

**sounding-rod:** **அடித்தேக்கமானி:** கப்பலில் அடித்தேங்கு நீரள வினைக் காணும் கருவி.

**soundings :** **கடலாழ அளவீடு :** கடலின் ஆழத்தைக் காட்டும் அள வீடுகள்.

**sound ranging altimeter :** *(வானூ.)* **ஒலிவீச்சு உயரமானி :** ஒரு விமானத்திலிருந்து ஓர் ஒலி அலை பூமிக்குச் சென்று மீண்டும் விமானத்திற்கு மீள்வதற்குத் தேவையான நேரத்தின் அளவைப் பொறுத்து உயர அளவுகளைக் காட்டும் ஓர் உயரமானி.

**sound track :** **ஒலி வரி :** திரைப் படத் தட்டின் ஒலிவரி.

**sound wave :** *(மின்.)* **ஒலி அலை:** மனிதரிடம் ஒலியுணர்வை உண் டாக்கும் காற்றின் ஒரு மாற்றுச் செறிமானம் என்றும் செறி வின்மை என்றும் கருதப்படும் ஓர் அலை.

**source of supply :** *(மின்.)* **வழங் கீட்டு ஆதாரம் :** மின்னியக்கு விசை யினை உண்டாக்கும் ஒரு மின் சுற்றுவழியின் உட்பாட்டுடன் இணைக்கப்பட்டுள்ள சாதனம். இது ஒரு மின்னாக்கியாகவோ, மின்கலமாகவோ, வேறு கருவி யாகவோ இருக்கலாம்.

**southern moss :** *(தாவர.)* **தென் பாசி :** இதனை லூசியானா பாசி, ஸ்பானியப் பாசி என்றும் கூறு வர். இது மரங்களில் வளர்கிறது. நீண்ட தோரணங்கள் போல் தொங்கும். காற்றிலிருந்து இது தனக்குரிய உணவுப் பொருளை எடுத்துக் கொள்கிறது. இது மெத்தை, திண்டு வேலைப்பாடு களில் பெருமளவில் பயன்படு கிறது.

**southern pine :** *(தாவர.)* **தென் தேவதாரு :** நீண்ட இலைகளும் மஞ்சள் நிறமும் கொண்ட தேவ தாரு மரம். கடினமான கட்டு மானப் பணிகளில் முக்கியமாகப் பயன்படுகிறது.

**soyabean oil :** *(வண்.)* **சோயா மொச்சை எண்ணெய்:** பயறு இனம் சார்ந்த ஆண்டுத் தாவரமாகிய சோயா மொச்சை விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்.

**space :** *(அச்சு.)* **எழுத்திடை வெளி :** அச்சில் எழுத்துக்களுக் கிடையிலான இடைவெளி. தட் டச்சில் சொற்களுக்கிடையிலான இடைவெளி.

**விண்வெளி :** விண்ணிலுள்ள அகன்ற இடப்பரப்பு.

**space age:** *(விண்.)* **விண்வெளிக் காலம்:** விண்வெளிக்கு ஏவுகணை செலுத்தியும், விண்வெளிக் கலங் களைச் செலுத்தியும் மனித அருஞ் சாதனை புரிந்துள்ள வரலாற்றுப் பெருமை வாய்ந்த காலம்.

**space charge:** *(மின்.)* **வெளி மின்னேற்றம்:** ஓர் எலெக்ட்ரான் குழலின் எதிர் முனையைச் சுற்றி யுள்ள எலெக்ட்ரான் மேகக்கூட் டம்.

**space craft:** *(விண்.)* **விண் வெளிக்கலம்:** விண்வெளியில் பறப் பதற்கு ஏற்ற வகையில் வடிவமைக் கப்பட்ட ஓர் ஊர்தி.

**space environment:** *(விண்.)* **விண்வெளிச் சூழல்:** விண்வெளி யில் நுழையும்போது விண்வெளிக் கலங்களும், உயிர்ப் பிராணிகளும் எதிர்நோக்கும் சுற்றுப்புறச்சூழல்.

**space platform:** **விண்வெளி மேடை:** அறிவியல் மற்றும் இரா ணுவ நோக்கங்களுக்குப் பயன் படக்கூடிய பெரிய செயற்கைக் கோள். இது விண்வெளியில் குடி யிருப்பதற்கான ஒரு தளமாக வடி

வமைக்கப்படுகிறது. இந்த விண் வெளி மேடையில், குடியிருப்பு வசதிகள், மின்விசை வழங்கீட்டு அமைப்புகள், மற்ற விண்வெளிக் கலங்களிலிருந்து ஆட்களையும் சரக்குகளையும் மாற்றுவதற்கான வசதிகள், அறிவியல் சாதனங்கள், செய்தித் தொடர்புச் சாதனங்கள் ஆகியவை அமைந்திருக்கும்.

**space probe**: *(விண்.)* **விண்வெளி ஆராய்ச்சி**: *விண்வெளிச்சூழல் பற்றிய புதிய தகவல்களை ஆராய்ந்தறிந்து பூமிக்கு அனுப்பக்கூடிய கருவிகள் அடங்கிய கலங்களைப் பூமியைச் சுற்றி வருவதற்கு அனுப்பி ஆய்வுகள் செய்தல்.*

**space satellite**: *(விண்.)* **விண்வெளிச் செயற்கைக் கோள்**: *பூமி சந்திரன் போன்ற கோளங்களை வட்டப் பாதையில் சுற்றி வருவதற்காக மனிதர் செய்து அனுப்பும் செயற்கைக் கோள்.*

**space ship**: **விண்வெளிக்கலம்**: *விண்வெளிக்குச் செலுத்தப்படும் விசையூர்தி.*

**space station**: *(விண்.)* **விண்வெளி நிலையம்**: *வட்டப்பாதையில் சுற்றி வருவதற்காக விண்வெளிக்கு அனுப்பப்படும் ஒரு நிலையம். இதன் உதவியுடன் விண்வெளியில் பயணம் செய்யவும், விண்வெளியை மேலும் ஆராயவும் முடியும்.*

**space time**: *(விண்.)* **இட-காலத் தொடரளவு**: *இடத்தின் மூல அளவையுடன் காலம் இணைந்த இழை வளவான நாலளவைத் திறம்.*

**space travel**: *(விண்.)* **விண்வெளிப் பயணம்**: *விசையூர்திகளில் விண்வெளியில் பயணம் செய்தல்.*

**spacing**: *(அச்சு.)* **இடையிடம் விடல்**: *அச்சில் அழகான தோற்றப் பொலிவு ஏற்படும் வகையில் சொற்களுக்கும், வரிகளுக்குமிடையில் இடையிடம் விட்டு அமைத்தல்.*

**spacistor**: *(மின்.)* **வெளிமின்மக் பெருக்கி**: *ஒரு மின்மப் பெருக்கியை டிரான்சிஸ்டர் ஒத்த நான்கு கூறுகள் கொண்ட மின்கடத்தாப் பொருள். இது விண்வெளி மின்னேற்ற மண்டலத்தைப் பயன்படுத்திக் கொள்கிறது. இது மிக உயர் அலைவெண்களுக்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்வது. இதனால் உண்டாகும் முக்கிய நன்மையாகும்.*

**spall**: *(க.க.)* **சிம்பு/சிராய்**: *செங்கற்களை அல்லது கற்களை நொறுக்கி ஆக்கிய சிம்பு.*

**span**: *(வானூ.)* **இடையகலம்**: *விமானத்தில் ஒரு இறக்கை முனையிலிருந்து மற்றொரு இறக்கை முனை வரையிலான இடையகல அளவு.*

*கட்டிடக் கலையில் ஆதாரக் கம்பங்களிடையேயுள்ள தனிவளைவு அளவு.*

**spandrel**: *(க.க.)* **கவான் மூக்கு**: *கவான் வளைவுக்கும் அது கவிந்த செங்கோண வட்டத்திற்கும் இடைப்பட்ட மூலையிடம்.*

**spanner**: **புரிமுடுக்கி**: *திருகு முடுக்கும் அல்லது கழற்றும் கருவி.*

**spare**: *(பட்.)* **உதிரி உறுப்பு**: *எந்திரங்கள், பொறிகள், ஊர்திகள் வகையில் வேளைக் காப்பீட்டு உதிரி உறுப்பு.*

**spark**: *(தானி.)* **மின்விசைப்பொறி**: *எஞ்சினில் எரிபொருள் எரிதல் உண்டாக்குவதற்கான மின்விசைப் பொறி.*

**spark arrester**: **மின்பொறிகாப்பமைவு**: *மின்கருவிகளில் தீப்பொறியால் சேதம் உண்டாகாதபடி தடுக்கும் அமைவு.*

**spark coil**: *(மின்.)* **அனற்பொறிச் சுருள்**: *மிகுந்த செறிவான அனற் பொறி உண்டாக்குவதற்கான மின்கம்பிச் சுருள்.*

**spark-gap**: *(மின்.)* **மின்சுடர் இடைவெளி**: *மின்விசைப்பொறி தாவும் மின்முனை இடைவெளி நெறி.*

**spark plug**: **(தானி.) அனற்பொறி அமைவு**: *உந்துபொறி, உள் வெப்பாலைகளில் வெடிக் கலவைக்கு அனற்பொறி யூட்டும் அமைவு.*



அனற் பொறி அமைவு

**spark plug electrodes**: *(தானி.)* **அனற்பொறி மின் வாய்கள்**: *மின் அனற் பொறி தாவிப் பாய்வதற்கான உலோக மின்வாய்கள்.*

**spark test**: *(உலோ.)* **சுடர்ச் சோதனை**: *இரும்பையும், எஃகை யும் சாணை பிடிக்கும்போது ஏற் படும் சுடரினைக் கொண்டு இரும்பு, எஃகு வகைகளைக் கண்டு பிடிக்கும் ஒரு முறை.*

**spectral analysis**: **வண்ணப் பட் டைப் பகுப்பாய்வு**

**spatula**: **தட்டலகுக் கரண்டி**: *வண் ணங்களைக் குழைக்கப் பயன்படும் நெகிழ்வான அலகுடைய கத்தி போன்ற கரண்டி.*

**specification**: **தனிக் குறிப்பீடு**: *தனித்தனி விவரக் குறிப்பீடு.*

**specific gravity**; *(இயற்.)* **ஒப்பு அடர்த்தி**: *ஒரு பொருளின் வீத எடைமானம். திடப்பொருள் களையும், திரவங்களையும், நீருட னும், வாயுக்களைக் காற்றுடனும் ஒப்பிட்டு அடர்த்தி கணக்கிடப் படுகிறது.*

**specific heat**: **வீத வெப்பமானம்**: *குறிப்பிட்ட அளவை ஒரு பாகை வெப்பத்திற்கு உயர்த்துவதற்கான வெப்ப அளவை நீரொப்பீட் டெண்.*

**specimen bar**: *(பொறி.)* **மாதிரி உலோகச் சலாகை**: *சோதனை எந் திரத்தில் சோதனை செய்வதற் காகத் தனியாகத் தயாரிக்கப்பட்ட மாதிரி உலோகச் சலாகை.*

**spectral colours**: *(வண்.)* **வண் ணப்பட்டை வண்ணங்கள்**: *ஒரு கண்ணாடிப் பட்டகை மூலம் சூரிய ஒளிக்கதிர் வளையும்போது உண்டாகும் வண்ணப் பட்டை.*

**spectro photometer**: **வண்ண அளவுமானி**: *வண்ணச் செறிவினை அளவிட்டறிய உதவும் சாதனம்.*

**spectrogram**: **வண்ணப் பட்டைப் பதிவு ஒளிப்படம்.**

**spectrograph**. **வண்ணப்பட்டை ஒளிப்பதிவுக் கருவி.**

**spectrography**: **வண்ணப்பட்டைப் பதிவு ஒலிப்படப்பிடிப்பு.**

**spectroheliograph**: **ஓரலைப் பதிவு ஒளிப்படக்கருவி**: *கதிரவன் ஒளி வண்ணப்பட்டையின் ஓர லைப் பதிவு ஒளிப்படக் கருவி.*

**spectrohelioscope**: **ஓரலை நீர்க் காட்சிக்கருவி**: *கதிர்மண்டல ஓர லை நீளக்காட்சி.*

**spectroscope**: *(வேதி.)* **வண்ணப் பட்டை ஆய்வுக் கருவி**: *வண்ணப் பட்டை அளவாய்வுக்கான கருவி. ஆவியான பொருட்கள் உண்டாக் கும் வண்ணப்பட்டை, அவற்றின் அமைப்பை ஆராய்வதற்குப் பயன் படுகின்றன.*

**spectroscopy**: **வண்ணப்பட்டை ஆய்வியல்.**

**speed indicator**: *(உலோ.)* **வேக அளவுமானி**: *சுழலும் எந்திரங்கள், சக்கரங்கள், சுழல் தண்டுகள் ஒரு நிமிடத்தில் சுழலும் வேகத்தைப் பதிவு செய்யும் அளவீடு கருவி.*

**spectrum:** *(இயற்.)* **நிறமாலை:** சூரிய ஒளியை அதில் அடங்கியுள்ள ஏழுவண்ணங்களாகப் பகுக்கலாம். இந்த ஏழு வண்ணங்களையும் வானவில் வண்ணங்களில் காணலாம். இந்த வண்ணங்களின் தொகுதி நிறமாலை எனப்படும்.

**spectrum analysis:** **நிறமாலைப் பகுப்பு.**

**speculum metal:** *(உலோ.)* **பளிங்கு உலோகம்:** தொலை நோக்காடி உருப்பளிங்கின் உருநிழல் காட்டும் செம்பும் வெள்ளீயமும் கலந்த கலவை.

**speed:** *(இயற்.)* **வேகவீதம்:** ஒரு பொருள் விரைந்து செல்லும் வேகத்தின் வீதம்.

**speed control:** **வேகக் கட்டுப்பாடு:** தொலைக்காட்சிப் பெட்டியில் படங்களை கிடைமட்டத்திலும் செங்குத்தாகவும் நிலைப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கான சாதனம்.

**speed of sound:** *(விண்.)* **ஒலி வேகம்:** ஒலி பயணம் செய்யும் வேகவீதம். சுற்றுப்புற ஊடகங்களின் நிலையான வெப்பநிலையைப் பொறுத்து ஒலியின் வேகம் மாறுபடுகிறது. ஒரு செந்நிற நாளில் ஒலியின் வேகம் வினாடிக்கு 1108 அடி அல்லது மணிக்கு 756 மைல். கடல் மட்டத்தில் 59°F வெப்ப நிலையைக் கொண்டது ஒரு செந்நிற நாளாகும்.

**speedometer:** *(தானி.)* **வேக மானி:** வேகவீதத்தை ஒரு மணிக்கு இத்தனை கி.மீ. என்ற வீதத்தில் பதிவு செய்து காட்டும் ஒரு கருவி.

**speed regulation :** *(மின்.)* **வேக ஒழுங்குமுறை :** ஒரு சுமையை ஏற்றும்போது தனது வேகத்தைப் பேணிக்கொள்வதற்கு ஒரு மின்னோடிக்குள்ள திறன்.

**spelter :** *(உலோ.)* **துத்தநாகம் :** வாணிக வழக்கில் 'ஸ்பெல்ட்டர்' என்று அழைக்கப்படும் உலோகம் துத்தநாகமும் செம்பும் சம அளவில் கலந்த உலோகக் கலவையையும் இது குறிக்கும்'

**sphalerit:** *(கனி.)* **நாகக் கனிமம்:** 'ஸ்பாலிரைட்' எனப்படும் துத்த நாகத்தின் மிக முக்கியமான தாதுப் பொருள்.

**sphere:** **கோளம்:** *(நில.)* பந்து வடிவப் பொருள். இதன் ஒவ்வொரு பகுதியும் அதன் மையத்திலிருந்து சம தூரத்தில் இருக்கும்.
பரப்பு : விட்டத்தின் இருமடி × 3.1416
கன அளவு : விட்டத்தின் மும்மடி × 0.5236

**sphere gap :** *(மின்.)* **கோள இடைவெளி :** கோள வடிவ மின் முனைகளைப் பயன்படுத்தும் மின் சுடர் இடைவெளி.

**spheroid :** **நெட்டுருளை :** நீள் வட்டச் சுழற்சி வடிவம்.

**spheroidzing :** *(உலோ.)* **வெப்பக் குளிர்விப்பு :** இரும்பை ஆதாரமாகக் கொண்ட உலோகக் கலவைகளை மூட்டுபதன் வெப்ப நிலையை விடச் சற்றுக் குறைவான வெப்ப நிலையில் அதிக நேரம் சூடாக்கி, பின்னர் மெதுவாகக் குளிர்ச்சியடையும்படி செய்தல்.

**sphero meter:** நுண்விட்டமானி.

**sphygmogram :** *(மருத்.)* **நாடி அதிர்வுப் பதிவு :** நாடித்துடிப்பினைப் பதிவு செய்தல்.

**sphygmograph :** *(மருத்.)* **நாடிப் பதிவு மானி :** நாடி அதிர் வினைப் பதிவு செய்யும் கருவி.

**sphygmomanometer :** *(மருத்.)*



குருதி அழுத்த மானி

**குருதி அழுத்தமானி:** இரத்த அழுத்தத்தை அளவிடும் கருவி.

**sphygmophone :** *(மருத்.)* **நாடி அதிர் வொலிக் கருவி :** நாடி அதிர் வொலியைக் காட்டும் கருவி.

**sphygmus :** *(உட.)* **நாடித் துடிப்பு:** இதயத்தின் துடிப்பினால் உண்டாகும் துடிப்பு.

**spider gears :** *(தானி.)* **சிலந்திப் பல்லிணை :** சிலந்தி வலைப் பின்னல் போன்று அமைக்கப்பட்ட இரண்டு, மூன்று, நான்கு பல்லிணை அமைப்புகள். இதன் மூலம்: பின் இருசில் வேறுபட்ட செயல் முறைகள் பெறப்படுகின்றன.

**spiegeleisen :** *(வேதி.)* **கன்ம வார்ப்பிரும்பு :** கன்மம் அடங்கிய வார்ப்பிரும்பு. இதில் அதிக அளவு கார்பனும், மாங்கனீசின் அளவு 15-20 சதவீதத்திற்கு மிகைப்படும் போது அது அய மாங்கனீஸ் எனப்படும்.

**spigot :** *(கம்மி.)* **முடுகுமிழ்:** ஒரு குமிழுக்குள் பொருந்தக்கூடிய ஒரு குழாய் முனை.

**spike :** *(க.க.)* **தடியாணி:** தடித்த பெரிய ஆணி.

**spile :** *(பொறி.)* **முளைத்தடி :** நிலத்தில் அடித்திறக்குவதற்கான பெரிய வெட்டு மரம்.

**spin :** *(வானூ.)* **சுழல் இறக்கம் :** விமானம் சுழன்று கொண்டே தலைகீழாக இறங்கும் இறக்கம்.

**spinal anaesthesia :** *(நோயி.)* **முதுகந்தண்டு மயக்கம் :** முதுகந்தண்டு வடத்தைச் சுற்றியுள்ள பகுதிக்குள் ஒரு வகை மருந்தினை ஊசி மூலம் செலுத்தி, உடலின் கீழ்ப்பகுதி உணர்வுகள் மூளையை எட்டாதவாறு தடுத்தல்.

**spindle :** **நூற்புக் கதிர் :** நுனியில் கூம்பிச் செல்லும் கழிசுற்று நூற்கோல்.

**spinet :** 16—18ஆம் நூற்றாண்டுகளிலிருந்து பயன்படுத்தப்படும் விரல் கட்டை உடைய இறகு வடிவ நரம்பிசைக் கருவி.

**spinneret :** *(குழை.)* **இழைபுரி :** சிலந்தி, பட்டுப்பூச்சி முதலியவற்றின் நூலிழை உருவாக்கும் உறுப்பு.

**spinning :** *(எந்.)* **நூற்பு :** பஞ்சைத் திரித்து நூலாக உருவாக்குதல்.


**spinning jinning :** *(எந்.)* **எந்திர நூற்புக் கருவி :** பஞ்சை நூலாக நூற்கும் கருவி.

**spinning-machine :** *(எந்.)* **நூற்பு எந்திரம் :** நூல் நூற்கும் எந்திரம்.

**spinning-wheel :** *(எந்.)* **கைராட்டினம் :** கையால் சுழற்றி நூல் நூற்கும் சக்கரம்.

**spinning lathe :** *(உலோ.வே.)* **சுழல் கடைசல் எந்திரம்:** உலோகத் தகடுகளில் வேலைப்பாடுகள் செய்வதற்குப் பயன்படும் சுழலும் கடைசல் எந்திரம்.

**spiral :** **திருகு சுருள் :** திருகு சுருளாகச் செல்கிற சுருள் வட்ட வளைவு. விமானம் திருகு சுருளாகக் கீழாக இறங்குதல்.



திருகு சுருள்

**spiral balance :** **சுருள் வில்**

**எடைக் கோல் :** சுருள் வில்லின் முறுக்கினால் நிறையளக்கும் துலாக்கோல்.

**spiral coupling :** *(எந்)* **திருகு சுருள் இணைப்பு :** ஒரு திசையில் மட்டுமே சுழற்றும்போது இணைந்து கொள்ளும் அமைப்புடைய தாடை இணைப்பு.

**spiral gear :** *(பல்.)* **திருகு சுருள் பல்லிணை :** திருகு சுழல் வட்டத்தின் ஒரு பகுதியாகப் பல் அமைந்துள்ள பல்லிணை. இதனைத் 'திருகுப் பல்லிணை' என்றும் அழைப்பர்.

**spiral instability ;** *(வானூ.)* **சுழல் உறுதியின்மை :** சில வகை விமானங்களில் வழித் தடுமாற்றம் காரணமாக ஏற்படும் உறுதியின்மை.

**spiral spring :** *(எந்.)* **சுழல் விற்சுருள் :** கடிகாரம் அல்லது கைக்கடிகாரங்களில் உள்ளது போன்ற சுழல் விற்சுருள்.

**spiral wheel :** **சுழல் சக்கரம் :** ஊடச்சுக்குக் குறிப்பிட்ட கோணத்தில் வெட்டப்பட்ட பற்களையுடைய சக்கரம்.

**spire :** *(க.க.)* **தூபி முனை :** கூம்பு வடிவக் கோபுரம்.

**spirit level :** *(க.க.)* **குமிழி மட்டம்:** கிடைமட்டத்தையும், செங்குத்து மட்டத்தையும் துல்லியமாக அளவிடுவதற்குப் பயன்படும் கருவி. இதில் ஒரு மர அல்லது உலோகப் பெட்டியில் வெறியம் ஏறத்தாழ முழுமையாக நிரப்பப்பட்டிருக்கும். குமிழி மையத்தில் நிலை கொண்டு நிற்குமானால், மட்டம் சரியாக இருக்கிறது என்பதைக் குறிக்கும் .



குமிழி மட்டம்

**spirit varnish :** *(மர.வே.)* **வெறிய மெருகெண்ணெய் :** கற்பூரத்தைலம், ஆல்கஹால் போன்ற விரைந்து ஆவியாகக்கூடிய கரைமங்கள் அடங்கிய மெருகெண்ணெய்.

**splash lubrication :** *(தானி.)* **தெறிப்பு மசகு :** மசகுப் பொருளை வாரித் தெறித்து மசகிடும் முறை.

**splay :** *(க.க.)* **தளச் சாய்வுக் கோட்டம் ;** கதவு, பலகணி முதலியவற்றில் விளிம்பு புறக் கோட்டச் சாய்வு.

**splice :** *(மின் )* **புரியிணைவு :** மின் கடத்திகளை முறுக்கிப் புரியிணைவுசெய்து ஒன்றுபடுத்துதல்.

**spline :** **இணையாப்பு :** ஊடச்சுடனும் சக்கரத்துடனும் இழைந்து சென்று அவை தனித்து உருளாது இணைந்து உருளச் செய்யும் ஆப்பமைவு.

**spline :** *(மர.)* **இணையாப்பு :** இரு கட்டைகளை இடையே ஆப்பிட்டு இணைக்கும் சிம்பு.

**split field :** *(மின்.)* **பிளவுப் புலம்:** இரு துருவப் புலம் பொதிவு உடைய மின்னாக்கி. இதில் ஒரு புலம் ஒரு மூன்றாம் தூரிகையுடனும், மற்றொரு புலம் முதன்மைத் தூரிகையுடனும் இணைக்கப்பட்டிருக்கும். இந்த வகை மின்னாக்கியில் மூன்றாம் தூரிகையின் மின்னோட்டக் கட்டுப்பாட்டு அம்சங்கள் நிலைத்திருக்கும்.

**split gear :** *(பல்.)* **பிளவுப் பல்லிணை :** இரு பிளவாகச் செய்யப்பட்ட பற்சக்கரம்.

**split nut :** *(எந்.)* **பிளவு மரையாணி :** நீளவாக்கில் பிளவுடைய ஒரு மரையாணி. இது திருகில் நழுவிச்சென்று விரைவாக நகர்வதற்கு உதவுகிறது. இது பெரும்

பாலும் விற்சுருள் விட்டமானியில் பயன்படுத்தப்படுகிறது.

**split phase** : *(எந்.)* **பிளவு மின்னோட்டப் படிநிலை** : ஒரே மாற்று மின்னோட்டப் படிநிலை மின்னியக்க விசையுடன் இணைக்கப் கப்பட்டுள்ள பல்வேறு மின் சுற்று வழிகளில் வேறுபட்ட மாற்று மின்னோட்ட இயக்கப்படி நிலைகளை உண்டாக்கும் மின்னோட்டங்கள்.

**split - phase motor** : *(மின்.)* **பிளவு நிலை மின்னோடி** : இது ஓர் ஒற்றை நிலை மின்னோடி. இதன் சுருணைகளில் ஒன்றில் மற்றச் சுருணைகளைப் பொறுத்து மின்னோட்டம் பாயுமாறு செய்வதன் மூலம் தூரீன் இயக்குவிக்குமாறு செய்யப்படுகிறது.

**split gear** : *(எந்.)* **பிளவுப் பற்சக்கரம்** : இருபிளவாகச் செய்யப் பட்ட பற்சக்கரம்,

**split pulley**: *(எந்.)* **பிளவுக் கப்பி**: இரு பாதிகளாக அமைக்கப்பட்டு மரையாணியால் பிணைக்கப்பட்டுள்ள கப்பி.

**split ring**: *(எந்.)* **பிளவு வளையம்**: ஓர் உந்து தண்டிலுள்ள பலகூற்று வளையம்.

**split wheel**: **பிளவுச் சக்கரம்**: இரு பிளவாகச் செய்யப்பட்ட சக்கரம்.

**spoke**: *(எந்.)* **ஆரை**: சக்கரத்தின் குருக்குக்கை குடத்துடன் வெளி விளிம்பை இணைக்கும் கரம்.

**spoke shavs**: *(மர.)* **இருபிடி இழைப்புளி**: இருபிடியுள்ள வளை தள இழைப்புளி. முனைகளை வடி வமைப்பதற்கும் வழவழப்பாக்கு வதற்கும் இது பயன்படுகிறது.

**spoking machine**:: **சாய்வு எந்திரம்**: பளுக்களுக்கு ஒத்த சாய்வு வழங்க உதவும் எந்திரம்.

**sponge lead** : *(மின்.)* **கடற்பஞ்சு ஈயம்** : கடற்பஞ்சு போன்று துளை யுடைய ஈயம். இது சேம மின் கலத்தில் எதிர்மின் முனைத் தகடு களாகப் பயன்படுத்தப்படுகிறது.

**sponginess** : **கடற்பஞ்சுப் பண்பு** : கடற்பஞ்சினை ஒத்த பண்பு; உலோகங்களின் செறிவற்ற தன்மை; உறிஞ்சும் இயல்பு.

**sponginess** : *(வார் )* **நிறை உள் துளை உடைமை** : உலோகங்களின் செறிவற்ற தன்மை.

**sponson** : *(வானூ.)* **புற உந்து தளம்**: கப்பலில் தளத்தின் புறத்தே உந்தும் பகுதி.

**spontaneous combustion** : **தன்னக உள்ளெரிதல்** : தன்னிடத்திலே யே எழும் வெப்பத்தினால் தீப் பற்றி கொள்ளும் இயல்பு.

**spoon bit** : **கரண்டித் தமருசி**: கூர் மையான முனைகளுடன் பிறை வடிவத்திலுள்ள துளையிடுவதற் கான தமருசி. இது காகிதம், அட் டைகள் போன்றவற்றில் துளை யிடுவதற்குப் பயன்படுகிறது.

**sport roadstet** : *(தானி.)* **பந்தய ஊர்தி** : இது சாதாரண உந்து ஊர்தி போன்றது. இதன் பின் புறத் தள அடுக்கு மட்டும் சாமான் கள் வைப்பதற்கான இடமாக இல் லாமல், பின் இருக்கையாக அமைந் திருக்கும்.

**spot** : **ஒளிப்புள்ளி** : தொலைக் காட்சியில் ஒளிக் கற்றையானது இடமிருந்து வலமாக ஒரு கோட் டினை அல்லது உருக்காட்சியை அலகிடும்போது, எதிர்மின் கதிர் படக் குழாயின் ஒளியுமிழ் திரை யின்மீது எலெக்ட்ரான் கற்றை யினால் உண்டாக்கப்படும்.

**spotting tool** : *(எந்.)* **குறிகாட்டுக்கருவி** : இதனை 'மையங் காட் டும் மற்றும் முகப்புக் காட்டும்


கருவி' என்றும் கூறுவர். இது எந்திரப் பகுதிகளின் அடிக்கட்டையின் முனையில் மையத்தை அல்லது முகப்பினைக் குறிப்பதற்குப் பயன் படுகிறது.

**spout**: *(வார்.)* **கொண்டிவாய்க் குழாய்**: இரும்பு வார்ப்படத் தொழிற்சாலை அடுப்பிலிருந்து கட்டுவதற்கு திரவ உலோகம் பாய்வதற்கான கொண்டி வாய்க் குழாய்.

**spraying liquid**: *(தானி.)* **தெளிப்புத் திரவம்** : எண்ணெய்கள், துப்புரவுத் திரவங்கள், வண்ணங்கள் உட்பட மெருகேற்றுவதற்குப் பயன் படும் திரவப் பொருட்கள்.

**sprig** : *(மர.வே.)* **எடைக் கருவி**: திருத்தப்பட்டவிறைப்பு விற்சுருள். ஒரு கூட்டில் அடைக்கப்பட்டுள்ள ஓர் எடை பார்க்கும் கருவி. இதில் அளவு குறிக்கப்பட்ட அளவு வில்கோ ஒரு முள் எடையைக் காட்டும்.


**spring balance**: **வில்தராசு**: வில் விசையின் மூலம் எடைகாட்டும் தராசு. இதில் உறையினுள் விற்சுருள் வைக்கப்பட்டிருக்கும். உறையின் மேற்பரப்பில் எடையளவு குறிக்கப்பட்டிருக்கும். விற்சுருளின் கீழ் முனையிலுள்ள கொக்கியில் எடை பார்க்கவேண்டியபொருளை மாட்டித் தராசைத் தூக்கினால், விற்சுருளோடு இணைந்துள்ள முள் நகர்ந்துஎடையளவைக் காட்டும்.



வில் தராசு

**spring chuck or spring collet** : *(எந்.)* **விற்சுருள் கவ்வி** : திருகுப் பொறிகளில் பயன்படுத்தப்படும் ஒருவகைக் கவ்வி. இதில் நீளவாக்குப் பகுதியின் வழியே அகஞ்செருகிய குழல் இருக்கும். இது கூம்பு வடிவக் கொண்டையில் வேலைப்பாடு செய்யப்பட வேண்டிய பொருளில் பொருத்தி அழுத்தி மூடப்படும். அழுத்தம் தளர்த்தப் படும்போது விற்சுருள் போதிய அளவு விரிந்து பொருள் விடுவிக்கப் படுகிறது.

**spring clip** : *(தானி.)* **விற்சுருள் பற்றுக் கருவி** : விற்சுருளை இருசுடன் இணைப்பதற்குப் பயன்படும் U-வடிவ மரையாணி. இருசுடன் விற்சுருளை இணைப்பதற்கு இரு பற்றுக் கருவிகள் பயன்படுத்தப் படும். ஒவ்வொரு விற்சுருளையும் பொருத்துவதற்கு இருபற்று கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.



விற்சுருள் பற்றுக் கருவி

**springer** : *(க.க.)* **கவான் அடிக் கல்**: மஞ்சடைப்பு மேல் முகட்டின் அடிக்கல்.

**spring hangers** : *(தானி.)* **விற்சுருள் கொக்கி** ; உந்து ஊர்தியின் சட்டத்தில் விற்சுருள்கள் இணைக்கப்படுவதற்குப் பொருத்தப்பட்டுள்ள கொக்கி.

**spring hinge** : *(க.க.)* **விற்சுருள் கீல்** : உள்ளே ஒரு விற்சுருள் பொருத்தப்பட்டுள்ள ஒரு கீல். திரைக் கதவுகளைத் தானாகவே மூடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**spring leaf** : *(எந்.)* **விற்சுருள் அலகு** : உந்து ஊர்திகளில் பயன்படும் விற்சுருளின் தட்டை அலகு.

**sprinkler system** : *(தானி.)* **விற்சுருள் இருசு** : விற்சுருள்கள் பொருத்தப்படும் இருசுகளின் தட்டையான மேற்பரப்புகளில் ஒன்று.

**sprinkler system** : *(க.க.)* **தெளிப்புக் குழாய்** : தீப்பிடிக்கும் போது தானாகவே நீரைத் தெளிக்கும் தெளிப்பு முனைகளுடைய குழாய் அமைப்பு.

**sprocket** : *(எந்.)* **கண்ணிப் பல்** : *சங்கிலிச் கண்ணிச் சக்கரப் பல்.*

**sprocket-wheel : சங்கிலிக் கண்ணிப் பற்சக்கரம்.**

**sprue** : *(உலோ.)* **வார்ப்புக் குழி** : *உருகிய உலோக வார்ப்புக் குழி,*

**spur** : *(மர.வே.)* **பலகை வெட்டி** . *நீண்ட மரக்கட்டைகளிலிருந்து பல்வேறு நீளங்களில் மென்வெட்டுப் பலகைகளை வெட்டுவதற்குப் பயன்படும் கூரிய முனையுடைய கருவி.*

**spur center** : *(மர.வே.)* **சுழல் மையம்**: *மரக் கடைசல் எந்திரத்தில் சுழலும் பகுதிகளிலுள்ள உராய்வு தாங்கி உருளைகளின் தொகுதியில் பயன்படுத்தப்படும் மையம்.*



சுழல் மையம்

**spur wheel** : *(பல்.)* **பற்சக்கரம்** : *பற்கள் புறவிட்டத்திலும், சக்கரத்தின் பக்கங்களுக்குச் செங்கோணத்திலும் அமைந்திருக்கும் பற்சக்கரம்.*

**spurling-line : பயின் சுட்டுவரி** : *கப்பலில் பயின்கட்டை திருப்பும் சக்கர நிலையைக் காட்டும் கல இயக்கவழி இணைந்த கம்பி வடம்,*

**sputnik** : **புடவித் துணைக்கோள்** : *பூமியைச் சுற்றும்படி ரஷ்யா 1957-இல் முதன்முதலில் விடுத்த செயற்கைக்கோள்.*

**spy** ; **ஒற்றுத்துளை** : *நுண்தேர்வு நோட்டங்களை நோக்குவதற்குப் பயன்படும் சிறிய துவாரம். இது அடைத்து வைக்கப்பட்டிருக்கும்.*

**spy glass: சிறுதொலை நோக்காடி:** *ஒற்றறிவதற்குப் பயன்படும் சிறு தொலைநோக்காடி.*

**squab : பஞ்சுமெறைப் பீடம்** : *திண்டு போன்ற மெத்தைத் தவிசு,*

**square** : *(கணி.)* **(1) இருமடிப் பெருக்கம்** : *ஓர் எண்ணை அதே எண்ணால் பெருக்குவதால் கிடைக்கும் பெருக்க விளைவு.*
**(2) சதுரம்** : *சரிசம நாற்கர வடிவம். இதில் அனைத்துப் பக்கங்களும் சமம். எதிர்ப்பக்கங்கள் இணையானவை. கோணங்கள் செங்கோணங்களாக இருக்கும். இக்கோணங்களின் கூட்டுத் தொகை 360°.*

**square measure** : **சதுர அளவை** : *மிகைப் பெருக்கக் கணிப்பு.*

**square number** : **மிகைப் பெருக்க எண்** : *எண்ணின் தற்பெருக்க விளைவான தொகை.*

**square root** : *(கணி.)* **மிகைப் பெருக்க மூலம் (வர்க்கமூலம்)** : *எண்ணை மிகைப்பெருக்கமாகக் கொண்ட மூல எண்.*

**square soil** : **உப்பற் பாய்** : *பாய் மரத்திற்குக் குறுக்காகத் தொங்க விடப்படும் நாற்கட்டமான உப்பற் பாய்.*

**square-threaded screw** : *(எந்.)* **சதுரப் புரியிழைத் திருகு** : *புரியிழை நாற்கர வடிவிலுள்ள திருகு.*

**square wave** : *(மின்.)* **சட்ட அலை** : *சம நேர அளவுகளில் இரண்டு நிலையான மதிப்பளவுகளை மாற்றி மாற்றி ஏற்கும் ஓர் அலை.*

**squealing** : *(மின்)* **கீச்சொலி** : *பிற வானொலி நிலையங்களின் இடையீடு காரணமாக வானொலியில் ஏற்படும் கிறீச்சொலி.*

**squeezer** : *(வார்.)* **பிழிவு எந்திரம்**: *ஒரு வகை வார்ப்பட எந்திரம்.*

**squinch** : *(க.க.)* **உள் வளைவுக் கட்டுமானம்** : *மூலை விட்டத்தில்*

அமைந்திருக்குமாறு அமைக்கப் பட்ட சிறிய கவான்.

**squirrel-cage rotor** : (*மின்.*) **அணில் கூட்டுச் சுழலி:** சாதாரணத் தூண்டு மின்னோடி சுழலும் உறுப்பு.

**stability : திடநிலை :** உறுதிப் பாட்டுடன் அல்லது திடத்தன்மை யுடன் இருக்கும் நிலை.

விமானத்தில் சமநிலையூட்டும் மீட்சியாற்றல்.

**stabilizer** : (*வானூ.*) **விமானச் சமநிலையமைவு :** விமானத்தின் சமநிலையூட்டும் மிகைத்தளம். இது விமானத்தின் பின்புறத்தில் அமைக்கப்பட்டிருக்கும். இது விமானம் தலைக் குப்புறக்கவிழா மல் தடுக்கிறது.

**stable equilibrium : உறுதிச் சம நிலை :** பொருட்கள் எளிதில் அசைக்க முடியாமல், உறுதியான பீடத்தில் இருத்தல்.

**stable oscilation** : (*வானூ.*) **உறுதியான ஊசலாட்டம் :** வீச்சளவு அதிகரிக்காமல் இருக்கும் ஊச லாட்டம்.

**stack** : (*க.க.*) **புகைக் கூம்பு :** தொழிற்சாலைகளில் உள்ளது போன்ற புகையை வெளியேற்று வதற்கான பெரிய புகைக்கூம்பு, இது செங்கல், கல் அல்லது உலோ கத் தகட்டினால் அமைக்கப்பட்டி ருக்கும்.

**stage : பார்வைத் தட்டம் :** உருப் பெருக்காடியில் பார்க்கப்படும் பொருள் வைக்கும் தட்டு.

**stage** : (*விண்.*) **உந்து நிலை :** பல அடுக்குகளைக் கொண்ட ஒரு ராக் கெட்டை உந்திச் செலுத்துவதற் கான ஓர் அடுக்கு நிலை.

**staging** : (*க.க.*) **சாரக்கட்டு :** கட்டிடத்திற்கான சாரங்கட்டுதல்.

**staging port: இடைத் தங்குதளம்:** விமானப் பயணத்தில் நிலவர மான இடைத் தங்குதளம்.

**stainless steel** ; (*உலோ.*) **துருப் பிடிக்கா எஃகு :** குரோமியம் அதிக அளவிலும் நிக்கலும், செம்பும் சிறி தளவிலும் அடங்கிய உலோகக் கலவை. இந்த எஃகு கடினமானது; உரமானது; நிலையான மெரு குடையது.

**staircase** : (*க.க.*) **படிக்கட்டு :** திருகு சுழலாகச் செல்லும் ஏணிப் படி.

**stairs**: (*க.க.*) **படிக்கட்டு:** ஏணிப் படிகளின் தொகுதி. ஒரு தளத்தி லிருந்து இன்னொரு தளத்திற்கு வளைவின்றிச் செல்லும் படிக்கட்டு "நேர் படிக்கட்டு" திருகு சுழலா கச் செல்லும் ஏணிப்படி "சுழற் படிக்கட்டு".

**stakes** : (*உலோ.வே.*) **மரமுளை :** உலோகத் தகட்டில் வேலை செய்யும் தொழிலாளர்கள், வளைப்பதற்கும், வடிவமைப்பதற் கும் பலகை மீது பயன்படுத்தும் பல்வேறு வடிவளவுகளிலுள்ள மரமுளை.



மரமுளை

**stake-boat : நெறிகுறிப் படகு :** படகுப் பந்தயப் பாதை குறிப்பிட் டுக் காட்டுவதற்காக நிறுத்தப்பட் டுள்ள படகு.

**staking out** : (*க.க.*) **எல்லை குறித்துக் காட்டுதல் :** கட்டுமானம் கட்டுவதற்கான அடித்தள எல்லை யைக் குறித்துக் காட்டுதல்.

**stalagmite : பொங்கூசிப் பாறை :** கடலோரக் குகைகளில் பாறையின் கரைசல் துளி வீழ்வால் நிலத்தி

னின்றும் மேல்நோக்கி ஊசி வடிவில் வளரும் சுண்ணக் கரியகப் பாறை.

**stall** : *(வானூ.)* **விமான விசை யிழப்பு** : பறப்பதற்குப் போதிய விமான வேகம் குறைபடுதல்.

**stalling speed** : *(வானூ.)* **விசை யிழப்பு வேகம்** ; விமானத்தின் மிக உயர்ந்த செந்தூக்கான குணக உயரத்தில் விமானம் சீராகப் பறக்கும்போது அதன் வேகம்.

**stamping**: *(உலோ.)* **வடிவாக்கம்**: எஃகுத் தகடுகளை அறைவெப்ப நிலையில் படிவ அச்சுகளில் அழுத்தங்களுக்கு உள்ளாக்கிப் பல்வேறு வடிவங்களில் உருவாக்குதல்.

**stamping press** : *(அச்சு.)* **புடைப்பச்சு எந்திரம்** : புடைப்புருப்படச் செதுக்கு அச்சு எந்திரம்.

**stanchion** : **கம்பம்** : பலகணிச் செங்குத்துச் சலாகை.

**standard** : **திட்ட அளவு** : துல்லியமான இலக்களவு; முத்திரை நிறையளவு.

முன்மாதிரி உயர்வு நயம்.

**standard atmosphere**: *(வானூ.)* **திட்ட அளவு வாயு மண்டலம்**: விமானத்தின் செயல்முறையை ஒப்பீடு செய்வதற்குப் பயன்படும் வாயு மண்டலம்.

அமெரிக்காவில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் திட்ட அளவு வாயுமண்டலம் என்பது, 40° உயரத்தில் காணப்படும் சராசரி நிலைமைகள் ஆகும்.

**standard international atmosphere**: *(வானூ.)* **திட்ட அளவு பன்னாட்டு வாயுமண்டலம்** : பன்னாட்டுத் திட்ட அளவு வாயு மண்டலம் எனப் பயன்படுத்தப்படுவது சராசரிக் கடல் மட்டத்தில், 15°C வெப்பநிலையில், 1,013.2 மில்லி பார் அழுத்தத்தில், கடல் மட்டத்திலிருந்து 11கி.மீ. வரையில் கிலோ மீட்டருக்கு 65°C இழப்பு வீதத்தில், அதன்பிறகு-56.5°C வெப்ப நிலையில் நிலவும் காற்றழுத்த நிலை.

**standardized cell** : *(மின்.)* **தர அளவு மின்கலம்** : துல்லியமாகச் சோதனைகள் செய்வதற்கு, மின்னழுத்தம் மாறாமல் நிலையாக இருக்கக் கூடிய மின்கலம் தேவை. நடைமுறையில் இந்த மின்கலத்திலிருந்து குறிப்பிடும்படியான மின்னோட்டம் எதுவும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. கிளார்க் மின்கலத்தை முதலில் தர அளவு மின்கலமாக பயன்படுத்தினார்கள். இப்போது பொதுவாக வெஸ்டன் மின்கலம் பயன்படுத்தப் படுகிறது.

**standard knot** : *(மர.)* **செந்திற முடிச்சு** : 3.8.செ.மீ.க்கு மேற்படாத விட்டமுள்ள ஓர் இறுக்கமான முடிச்சு.

**standard lamp** : **தொலை ஒளி விளக்கு** : தொலை ஒளி நிலைக் கம்ப விளக்கு,

**standing matter** : *(அச்சு.)* **நிலுவை அச்சுரு** : மேற்கொண்டு அச்சடிப்பதற்கு அச்சுக் கோத்து வைக்கப்பட்டுள்ள அச்செழுத்துத் தொகுதி.

**stand pipe** : *(பொறி.)* **நிலை குத்துக் குழாய்**: நீர்த்தேக்கத் தொட்டி போன்று பயன்படுத்தப்படும் செங்குத்தான பெரிய குழாய் அல்லது நீர்க்கோபுரம். குடிநீர் வழங்குவதில் ஒரே சீரான அழுத்தம் கிடைப்பதற்கு இது பயன்படுகிறது.

**standard pressure** : *(கம்.)* **செந்திற அழுத்தம்** : ஒரு சதுர அங்குலத்திற்கு 125 பவுண்டு இயக்க நீராவி அழுத்தத்திற்கு ஏற்புடைய தடுக்கிதழையும் துணைக் கருவிகளையும் குறிக்கும் சொல்.

**standard time** : *(உலோ.)* **செந்திற நேரம்** : *ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிப்பதற்கு ஒரு சராசரித் தொழிலாளிக்குத் தேவைப்படும் நேரம்.*

**standing wave** : *(மின்.)* **நிலைப்பு அலை** : *ஒரு புள்ளியிலுள்ள உடனடி மதிப்பளவுக்கும் ,இன்னொரு புள்ளியிலுள்ள மதிப்பளவுக்குமிடையிலான விகிதமானது நேரத்துடன் மாறாதிருக்கிற ஓர் அலை. மின்வழி முடிவுறுவதிலிருந்து ஏற்படும் பிரதிபலிப்புகளின் விளைவாகச் செலுத்து மின்வழியில் உண்டாகும் அலைகள்.*

**stanniferous** : **வெள்ளீயம் அடங்கிய பொருள்.**

**staphylococus** : *(நோயி.)* **வட்ட பாக்டீரியா** : *காயங்களிலும் கழலைகளிலும் நோய்த் தொற்று உண்டாக்கும் வட்டவடிவ பாக்டீரியாக் குழுமங்கள்.*

**staple** : **தைப்பு முள்** : *மரத்தினுள் செலுத்துவதற்கான கூர்மையான நுனிகளுடைய U-வடிவக் கம்பி அல்லது இரும்புத் துண்டு.*

**star connection** : *(மின் )* **மும்முனை இணைப்பு** : *மூன்று நிலை மின்னாக்கிகளிலும், மின் மாற்றிகளிலும் மூன்று சுருள்கள் உண்டு. இவை முக்கிளை, Y, டெல்ட்டா எனப்படும். ஒவ்வொரு சுருளின் ஒரு முனையானது ஒன்றாக இணைக்கப்பட்டு மற்ற மூன்று முனைகளும் தனித்தனியாகப் பிரிக்கப்படும் போது அது முக்கிளை இணைப்பு அல்லது Y-இணைப்பு எனப்படும்.*

**star drill**: **முக்கிளைத் துரப்பணம்**: *கல்லில் அல்லது கட்டுமானத்தில் துரப்பணம் செய்வதற்குப் பயன்படும் நட்சத்திர வடிவ முனை கொண்ட ஒரு கருவி.*

**starling** : *(க.க)* **திண்டுவரி** : *காலத்தின் திண்டைச் சுற்றிந் பாதுகாப்பிற்காக இடும் பெருந் தூண் தொகுதி.*

**starter**: *(தானி;மின்.)* **தொடக்கி**: *எந்திர இயக்கத்தைத் தொடங்கி வைக்கிற அமைவு.*

**starting box** : *(மின்.)* **முருக்கு பெட்டி**: *தடையினை ஒன்றன் பின் ஒன்றாகத் துண்டித்து விட்டு, மின்னோட்டத்தைப் படிப்படியாக வழங்குவதற்கு ஒரு விசைக்கரமும் தொடுமுனைகளும் அடங்கிய ஒரு தடை மாற்றி.*

**starting circuit** : *(தானி.)* **தொடக்க மின்சுற்று வழி**: *தொடக்க விசையை நிறுத்தியவுடன் நேர் மின் முனையிலிருந்து மின்விசைக்கும் தொடக்க மின்னோடிக் களச் சுருணைக்கும். மின்னகத்திற்கும் மின்தொடு விசைக்கும் பாய்கிறது. அது பின்னர் மின்கலத்தின் எதிர் மின்முனைக்கு வருகிறது.*

**starting motor** : *(தானி.)* **தொடக்க மின்னோடி** : *மின்சுற்று வழியை மூடுவதன் மூலம் எஞ்சினைத் திருப்புவதற்குப் பயன்படும் மின்னோடி.*

**starting newel** : *(க.க.)* **தொடக்க நடுத் தூண்** : *படிக்கட்டின் அடியில் கைப்பிடிச் சுவரைத் தாங்கி நிற்கும் தூண்.*

**starting torque** : *(மின்.)* **தொடக்கு திருக்கை** : *மின்னோட்டத்தின் தொடக்க நிலையில் ஏற்படும் மின்காந்த விளைவின் மூலமாகத் தனது சுழல் தண்டின் மீது ஒரு மின்னோடி உண்டாக்கும் திருப்பு விளைவு.*

**startix** : *(தானி.)* **மின்கம்பிச் சுருள் உருளை**: *சுடர் மூட்ட விசையைப் போட்டதும் தொடக்க மின்னோடி விசையைக் தானாகவே*

மூடிவிடும் மின் கம்பிச் சுருள் உருளை.

**static ataxia : தடுமாறு நிலை :** *விழாமலோ தடுமாறாமலோ நிற்க முடியாத நிலை.*

**static balance நிலைச் சமநிலை:** *ஒரு கப்பித் தொகுதியின் அல்லது சுழல் தண்டின் எடையானது சமச் சீராகப் பரப்பப்பட்டிருக்கும் போது உள்ள சமநிலை.*

**static balanced :** *(வானூ.)* **நிலைச் சமநிலைப் பரப்பு:** *பொருண்மையின் மையமானது நீள் அச்சில் அமைந்துள்ள கட்டுப்பாட்டுப் பரப்பு.*

**star tracker :** *(விண்.)* **விண் மீன் நோக்கி :** *ஒரு விண்மீனின் செல்வழியைக் கூர்ந்து நோக்கி வருவதற்கு ஒரு ஏவுகணையில் அல்லது வேறு பறக்கும் கலத்தில் பொருத்தப்பட்டுள்ள ஒரு தொலை நோக்கிக் கருவி. இது ஒளிசார்ந்ததாகவோ அலை வீச்சு சார்ந்ததாகவோ இருக்கலாம்.*

**static ceiling :** *(வானூ )* **நிலை முகடு :** *திட்ட அளவு வாயு மண்டலத்தில் அகற்றக்கூடிய எடைகள் அனைத்தையும் அகற்றிய பிறகு வான்கலம் நிலைச் சமநிலையில் இருக்கும் உயரம்.*

**static characteristics :** *(மின் )* **நிலையியல் பண்புகள் :** *ஒரு நிலையான தகட்டு மின்னழுத்தங் கொண்ட ஒரு குழலின் பண்பியல்புகள்.*

**static charge :** *(மின்.)* **நிலையியல் மின்னேற்றம்:** *ஒரு பொருளின் மீது எதிர்மின் சார்ந்ததாக அல்லது நேர்மின் சார்ந்ததாக உள்ள மின்னேற்றம்.*

**static electricity :** **நிலையியல் மின்னாற்றல் :** *இயக்காத நிலையிலுள்ள மின்னாற்றல். இது ஓட்ட மின்னாற்றலிலிருந்து வேறுபட்டது. இதுஉராய்வுத்தொடர்பு மூலம் உண்டாக்கப்படுகிறது. பட்டுத் துணியில் அல்லது கம்பளித் துணியில் ஒரு கண்ணாடிக் கோலைத் தேய்ப்பதால் உண்டாகும் மின்னாற்றல் இதற்குச் சான்று.*

**static friction :** **நிலையியல் உராய்வு :** *இரு பொருட்கள் ஒன்றை விட்டு ஒன்று விலகிச் செல்லும் போக்கில் ஆனால் உண்மையில் விலகிச் செல்லாதிருக்கிற நிலையில் அவற்றுக்கிடையிலுள்ள உராய்வு.*

**static load :** **நிலையியல் சுமை:** *அசையா நிலையிலுள்ள சுமை அல்லது எடை.*

**statical electricity :** **நிலையியல் மின்னாற்றல் .**

**statical pressure :** **நிலையியல் அழுத்தம் .**

**statics :** **நிலையியல் :** *இயங்கா நிலையமைதி அல்லது சமநிலையமைதி கொண்ட பொருட்களின் தன்மைகளை ஆராயும் இயற்பியலின் பகுதி.*

**static stability : நிலையியல் உறுதிப்பாடு:** *விமானம் தனது வழக்கமான உயரத்தில் அச்சிலிருந்து தமது ஈர்ப்புமையத்தின் மூலம் சற்றே சாய்ந்திடும்போது, அது முதலிலிருந்த உயரத்திற்குத் திரும்பி வருவதற்குரிய உறுதிப்பாட்டு நிலை.*

**static testing :** *(விண்.)* **நிலையியல் சோதனை :** *ஒரு சாதனத்தின் இயக்க நிலை வினைகளைச் சோதனை செய்து கணிப்பதற்காக அதனைச் செயலற்ற நிலையில் சோதனை செய்தல்.*

**static thrust : நிலையியல் உந்துகை ;** விமானத்தில் ஒரு சுழலி திசையியக்கமின்றிச் சுழலும் போது உண்டாகும் உந்து ஆற்றல்.

**station :** *(தானி.)* **நிற்கு நிலை :** ஓர் எந்திரத்தின் நிற்கு நிலை அல்லது நிற்கும் இடம்.

**stationary engine :** *(பொறி.)* **நிலை எஞ்சின் :** நிலையான அடித்தளத்தின்மீது பொருத்தப்பட்டுள்ள ஓர் எஞ்சின். இது இடம் விட்டு இடம் கொண்டு செல்லும் எஞ்சினிலிருந்து வேறுபட்டது.

**statistics : புள்ளியியல் :** புள்ளி விவரங்களைத் தொகுக்கும் அறிவியல்.

**stator :** *(மின்.)* **நிலைச் சுருள் :** ஒரு மாற்று மின்னோட்ட மின்னாக்கியின் நிலையான கம்பிச் சுருள்கள்.

**stator armature :** *(மின்,)* **உந்து மின்கலம் :** மின்னாற்றல் உண்டாகும் பொறியில் சுழலின்றி அசையாதிருக்கும் உந்து மின் கலம்.

**statoscope : நுண்ணழுத்தமானி :** நுட்ப அழுத்த வேறுபாடு காட்டும் நீரில்லாத காற்றழுத்த மானி.

**statoscope : நீரில்லாத நுண்ணழுத்தமானி:** விமானம் பறக்கும் உயரத்தின் நுட்பவேறுபாடுகளைக் காட்டும் நீரில்லாத காற்றழுத்தமானி:

**stay bolt : அண்டைக்கட்டு :** எந்திரக் அண்டைகட்டு.

**steady rest :** *(எந்.)* **உறுதி ஆதாரம் :** நீண்ட நுண்ணிய பொருட்கள் மீது கடைசல் வேலைப்பாடுகள் செய்யும்போது அதைத் தாங்குவதற்கு இருவழிகளிலும் பொருத்தப்பட்டுள்ள உதைகால்.

**steam : நீராவி:** நீரைக் கொதிக்க வைப்பதால் உண்டாகும் ஆவி.

**steam boat : நீராவிப்படகு :** நீராவியால் இயங்கும் படகு.

**steam boiler : நீராவிக் கொதிகலம் :** எந்திர நீராவிக் கொதிகலம்.

**steam-box : நீராவிக் கொள்கலம் :** கொதிகலத்திலிருந்து இயக்குருளைக்கு நீராவி செல்லும் இடையிலுள்ள கொள்கலம்.

**steam bronze :** *(உலோ.)* **நீராவி வெண்கலம்** ஓரதர்களும்பொருத்து கருவிகளும் தயாரிக்கப் பயன்படும் உலோகக் கலவை. இதில் 85% செம்பு, 5% துத்தநாகம் 5% ஈயம், 5% வெள்ளீயம் அடங்கியுள்ளது.

**steam guage : நீராவி அழுத்தமானி :** நீராவியின் அழுத்த நிலையை அளவிடப் பயன்படும் கருவி.

**steam gun : நீராவித் துப்பாக்கி:** நீராவியால் இயக்கப் பெறும் துப்பாக்கி.

**steam hammer : நீராவிச் சம்மட்டி :** நீராவி அழுத்தத்தினால் மேலும் கீழும் இயங்கும் சம்மட்டி.

**steam cylinder : நீராவி இயக்கு நிலை :** நீராவிப் பொறியின் இயக்குருளை.

**steam engine : நீராவி எந்திரம் :** நீராவி விசையாக்கப் பொறி.

**steamer : நீராவிக் கப்பல்:** நீராவியால் இயங்கும் கப்பல்.

**steam gas : வெப்ப நீராவி :**

பெருமளவு சூடேற்றப்பட்ட நீராவி.

**steam heat : நீராவி ஆக்க வெப்பம் :** வெப்பமூட்டும் பொறியில் நீராவி வெளியிடும் வெப்பத்தின் அளவு.

**steaminess : நீராவி படிவு நிலை :** நீராவி நிரம்பிய நிலை.

**steam jacket : நீராவிச் சட்டை :** நீராவி இடை வழி ஊடு சென்று வெப்ப மூட்டும்படி அமைக்கப் பட்ட எந்திர இயக்குருளையின் புறத்தோடு.

**steam main : நீராவி முதன்மைக் குழாய்:** கொதிகலத்திலிருந்து எஞ்சின்களுக்கு நீராவியைக் கொண்டு செல்லும் கிடைமட்டத்திலுள்ள குழாய்.

**steam packet : நீராவிக் கலம் :** சில துறைமுகங்களிடையே மட்டுமே இயங்கும் நீராவிக் கலம்.

**steam power : நீராவி ஆற்றல்.**

**steam roller : அமைப்புப் பொறி யுருளை.**

**steam table : நீராவி மேசை :** பாள அச்சு அட்டைத் தகட்டு அச்சடிப்பு முறையில் பயன்படுத்தப் படும் அச்சு வார்ப்புரு அட்டைகளை உலர வைப்பதற்கான மேசை.

**steam turbine :** (பொறி.) **நீராவி விசையாழி :** நீராவி ஓர் உந்து தண்டின் மீது செயற்படுவதற்குப் பதிலாக ஒரு சுழலும் விசையாழியின் மீது செயற்படுகிற நீராவி எஞ்சின்.

**steatite:** (மின்.)**சவர்க்காரக் கல்:** மக்னீசியம் சிலிக்கேட் அழுக்குப் போக்க உதவும் நுரைக்கல் வகை.

**steel:** (உலோ.) **எஃகு:** 1.7% வரை கார்பன் கொண்ட இரும்பின் ஒரு வடிவம். இதில் குறைந்த அளவு கார்பன் உள்ள நெகிழ் திறனற்ற எஃகு, அதிக அளவு கார்பன் அடங்கிய நெகிழ் திறன் மிகுந்த எஃகு ஆகியவை அடங்கும்.

**steel alloys:** (பொறி.) **எஃகு உலோகக் கலவைகள்:** சில தனி நோக்கங்களுக்காகத் தயாரிக்கப் படும் சிறப்பு எஃகு வகைகள். இவற்றில் வலிமைக்காக மாங்கனீஸ், விறைப்புத் திறனுக்காக நிக்கல், வெப்பத் தடைக்காக டங்ஸ்டன், அதிர்ச்சியைத் தாங்குவதற்காக குரோமியம், நலிவடையாதிருக்க வனேடியன் போன்ற பொருட்கள் சேர்க்கப்படுகின்றன.

**steel belt:** (எந்) **எஃகுப் பட்டை:** .02 முதல்.08செ.மீ. வரைக் கனமும், 18 20செ.மீ. வரை அகலமும் உடைய மெல்லிய, தட்டையான எஃகுப் பட்டைகள். இந்தப் பட்டைகள் நிமிடத்தில் 3047மீ. வேகத்தில் ஓடக்கூடியவை.

**steel casting:** (பொறி.) **எஃகு வார்ப்படம்:** அதிர்ச்சிக்கு உள்ளாகக்கூடிய எந்திர உறுப்புகள் செய்வதற்கான எஃகு வார்ப்படம்.

**steel converter:** (பொறி.) **எஃகுத் திரிகலம்:** தேனிரும்பை எஃகாக மாற்றுவதற்குப் பயன்படும், உயர் வெப்பம் ஏற்கும் பொருள் பூசிய கொள்கலம்.

**steel engraving.** (அச்சு.) **எஃகுச் செதுக்கு வேலைப்பாடு:** எஃகுத் தகட்டில் கலைச்செதுக்கு வேலைப்பாடுகள் செய்தல்.

எஃகு செதுக்கு வடிவமைப்புகள் செய்தல்.

செதுக்கு எஃகுத் தகட்டிலிருந்து படங்களை அச்சடித்தல்.

**steel girder:** (பொறி.) **எஃகுத் தூலம்:** தூலமாக்கப் பயன்படும் இரும்புப் பாளம்; பாலங்களுக்கும்

மோடுகளுக்கும் ஆதாரமான எஃகுக் கட்டுமானச் சட்டம்.

**steel pulley:** *(எந்.)* **எ.:.குக் கப்பி:** எஃகினாலான கப்பித் தொகுதி. எடை குறைவாக இருப்பதற்காகவும், எளிதாக இயக்குவதற்காகவும் இது பயன்படுத்தப்படுகிறது.

**steel rule:** *(எந்.)* **எ.:.கு வரை கோல்:** நெகிழ்திறனுடைய அல்லது விறைப்பான எஃகுவரைகோல். இதில் பல்வேறு அளவுகள் குறிக்கப்பட்டிருக்கும். இந்த அளவுகள் அங்குலங்களிலும், அங்குலங்களின் பின்னங்களிலும் அமைந்திருக்கும்.

**steel square:** **எ.:.குச் செங்கோண அளவி:** எந்திர நுட்பப் பணியாளர்கள் பயன்படுத்தும் எஃகினாலான மூலை நுட்பப் பலகை.

**steel wool:** *(பட்.)* **எ.:.கு இழை:** பாய் போல் முடையப்பட்ட நுண்ணிய எஃகு இழைகள். இது மர அல்லது உலோகப் பரப்புகளை பளபளப்பாக்குவதற்குப் பயன்படுகிறது.

**steelyard: தராசுப்பொறி:** எடை பார்ப்பதற்குப் பயன்படும் ஒரு வகைத் தராசுப்பொறி. இதில் சமமற்ற நீளமுடைய இரு கரங்கள் ஒரு நீண்ட நெம்புகோலுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

**steeple:** *(க.க.)* **ஊசிக்கோபுரம்:** தேவாலயங்களில் உள்ளது போன்ற கூம்பு வடிவக் கோபுரக் கூம்பு.

**steeple jack:** **தூபி பழுதுபார்ப்பவர்:** தூபி முகடேறிப் பழுது பார்ப்பவர்.

**steering column:** **இயக்குத்தூண்:** உந்துகல இயக்காழி பொருத்தப்பட்டிருக்கும் தூண் அல்லது கம்பம். இது, வழிச்செலுத்து இயக்கத்தை முன் சக்கரங்களுக்குக் கொண்டு செல்லும் பல்வேறு உறுப்புகளுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

**steering gear:** *(தானி.எந்.)* **இயக்கு பல்லிணை:** உந்துகல இயக்காழியை இருசுடன் இணைக்கும் உறுப்புகளின் தொகுதி அனைத்தையும் இது குறிக்கும். இதன் மூலமாகவே உந்து ஊர்தியைச் செலுத்த முடிகிறது.

**steering wheel:** *(தானி.எந்.)* **உந்துகல இயக்காழி:** உந்து ஊர்தியின் முன் சக்கரங்களுடன் பல்வேறு பல்லிணைகள், நெம்புகோல்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ள கையினால் இயக்கக்கூடிய சக்கரம். இதன் மூலமாகவே உந்து ஊர்தியின் இயக்கத்தைக் கட்டுப்படுத்த முடிகிறது.

**stellite:** *(பொறி.)* **ஸ்டெல்லைட்:** குரோமியத்தையும், கோபால்டையும் பெருமளவிலும், சிறிதளவு மாலிப்டினத்தை அல்லது டங்ஸ்டனையும் கொண்ட ஒருவகை உலோகக் கலவை. இது கருவிகளும், வெட்டுக் கருவிகளும் தயாரிக்கப் பயன்படுகிறது. இதனை வார்ப்படமாகச் செய்யலாம்; ஆனால், காய்ச்சி அடித்து உருவாக்க இயலாது. இதனை அராவித் தீட்டலாம்.

**stencil: படியெடு தாள்:** எழுத்துக்களை அல்லது ஒப்பனை உருக்களை உள்வெட்டுத் தகட்டுப் படியெடுத்துப் படியெடுப்பதற்கான உலோகம் அல்லது பிற பொருள்களினாலான மெல்லிய தகடு.

**stepdown:** *(மின்.)* **இறங்குமுக மின்னழுத்தம்:** ஓர் இறங்குமுக மின்மாற்றியில் உள்ளது போன்று அதிக மின்னழுத்தத்திலிருந்து குறைந்த மின்னழுத்தத்திற்குக் குறைத்தல்.

**step down transformer**: (மின்.) **குறைப்பு மின்மாற்றி**: மின்வழி மின்னோட்ட அளவை அல்லது மின்னழுத்த அளவைக் குறைந்த அளவுக்கு மாற்றுகிற மின்மாற்றி.

**stepping round**: (எந்.) **வளைவரைப் பகுப்பு**: வில், வளைகோடு அல்லது வட்டத்தைக் கவராயத்தின் மூலம் பல பகுதிகளாகப் பகுக்கும் முறை. பல்லிணைச் சக்கரத்தை உருவாக்குவதில் இந்த முறை பயன்படுகிறது.

**step up**: (மின்.) **ஏறுமுக மின்னழுத்தம்**: ஓர் ஏறுமுக மின்மாற்றியில் உள்ளது போன்று ஓர் உயர் மின்னழுத்தத்திற்கு அதிகரித்தல்.

**stereo chemistry**: (வேதி.) **சேணிலை வேதியியல்**: விண்வெளியில் உள்ள அணுத்தொடர்பால் பாதிக்கப்பட்ட பொருளியைபு நிலை பற்றி ஆராயும் வேதியியல் பிரிவு.

**stereography**: **திட்பக் காட்சி அமைவு முறை.**

**stereoscope**: **திட்ப காட்சிக்கு அமைவு முறை**: இரு கண்ணாலும் இரு கோண நிலைப்படங்கள் காணப்படுவதன் மூலம் மொத்தத் திட்பக் காட்சி தோற்றுவிக்கும் கருவி.

**stereophonic**: **பலதிசைத் தொனி**: ஒலி வகையில் பல திசைகளிலிருந்து வருவது போலமைந்த தொனியமைப்பு முறை. இந்த முறையில் உண்டாகும் தொனியில் ஆழமும், அழுத்தமும், செழுமையும் ஏற்படுகிறது.

**stereopsis**: **இருவழி இயைகோணக்காட்சி**; இருவிழி இருகோண நிலைப் படக் காட்சியமைவு முறை.


**stereo type**: (அச்சு.) **பாள அச்சு அட்டைத் தகடு**: உருவச்சில் அடித்த பகுதியைப் பாளமாக அட்டை முதலிய படிவுப் பொருள்களில் எடுத்து மறு அச்சிற்குப் பயன்படுத்தப்படும் தகடு.

**stereo typing**: (அச்சு.) **பாள அச்சுப் பதிவுமுறை**: பாள அச்சு முறையில் அச்சடித்தல். இதில் வெப்ப முறை பொதுவாகப் பெருமளவில் பயன்படுகிறது.

**sterling**: **ஸ்டர்லிங் வெள்ளி**: வெள்ளியின் தூய்மைத் தரத்தைக் குறிக்கும் ஓர் அளவுத்திட்டமுறை. 925/1000 பகுதி நேர்த்தியான வெள்ளியும் 75/1000 பகுதி செம்பும் அடங்கியது ஸ்டர்லிங் வெள்ளியாகும். அணிகலனின் ''ஸ்டெர்லிங்'' என்ற முத்திரை இருக்குமாயின் அது அதன் தரத்திற்கு உத்தரவாதமாகும்.

**stet**: (அச்சு.) **மூலப்படி விடுக**: அச்சுப் பணியில் பிழை திருத்துவோர் பயன்படுத்தும் சொல். அச்சுப்படியில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தால், அடித்ததை அடியா நிலையில் ''முன்போல் நிற்க'' 'விட்டு விடுக' என்று பொருள்படும்.

**stethoscope**: (மருத்.) **இதயத்



இதயத் துடிப்பு மானி

துடிப்புமானி**: இதயத்துடிப்பு போன்ற உடலினுள் எழும் ஒலிகளைக் கேட்டறிய உதவும் கருவி.

**stick**: (அச்சு.) **அச்சுக்கோப்புக் கட்டை**: அச்சுக் கோப்பவர்கள் அச்சு எழுத்துகளைக் கோத்து அடுக்குவதற்குப் பயன்படும் சிறிய கைச்சட்டகம்.

**stickful**: (அச்சு.) **அச்சுக்கோப்புக் கட்டைநிறைவு அளவு**: அச்சு எழுத்

துகளை முழுவதுமாகக் கோத்து நிறைவு செய்துள்ள நிலை.


**Sticking of valves:** *(தானி.மின்.)* **ஓரதர் அடைப்பு:** மசகுக் குறைவினாலும் கார்பன் படிவதாலும் ஓரதர்கள் முறையாகத் திறக்கவும் மூடவும் முடியாமல் அடைத்துக் கொள்ளுதல்.

**stick shellac:** *(மர.)* **பசை அவலரக்கு:** அறைகலன்களைப் பழுது பார்ப்பதற்கும், வெடிப்புகளிலும் கீறல்களிலும் பூசுவதற்கும் பயன்படும் பசை வடிவ அவலரக்கு.

**stiffener:** *(பொறி.)* **விறைப்பாக்கும் பொருள்:** விறைப்புத் தன்மையை அதிகரிப்பதற்காக ஓர் உறுப்புடன் பிணைக்கப்படும் கணுக்கால், தகடு அல்லது பிற வடிவப் பொருள்.

**stile ; கடவேணி :** சுவரின் அல்லது வேலியின் மீது ஒரு புறம் ஏறி மறுபுறம் இறங்குவதற்கான படி அல்லது படிக்கட்டுகளின் தொகுதி.

**Stillson wrench :** *(கம்.)* **ஸ்டில்சன் திருக்குக் குறடு :** குழாய்களைத் திருக்குவதற்குச் சாதாரணமாகப் பயன்படும் குறடு. இதனைக் கண்டுபிடித்த ஸ்டில்சன் பெயரால் இது அழைக்கப்படுகிறது.



திருக்குக் குறடு

**stipple :** **புள்ளி ஓவியம் :** கோடுகளுக்குப் பதிலாகப் புள்ளிகளிட்டுப் படம் வரைதல் அல்லது செதுக்கு வேலைப்பாடு செய்தல்,

**stipple-graver:** **செதுக்கோவியர் புள்ளியிடு கருவி:** செதுக்கோவியர்கள் புள்ளிகளிட்ட வேலைப்பாட்டுக்காகப் புள்ளியிடுவதற்குப்பயன்படுத்தும் கருவி.

**stippler:** **புள்ளி முறை ஓவியம்:** புள்ளிகளால் படம் வரையும் முறை.

**stirrup :** *(பொறி)* **அங்கவடி :** உத்திரம், சலாகை, கதிர் போன்றவற்றுக்கு ஆதாரப் பிடிப்பாகவுள்ள ஒரு பட்டை அல்லது வளையம்.

**stirrup-pump : தீயணைப்பு மிதிப் பொறி :**

**stitch-wheel : தைப்புச் சக்கரம் :** துளைபோடுவதற்கான சேணம் தைப்பவரின் வெட்டு வாய்ச் சக்கரம்,

**stoa :** *(க.க.)* **சிற்ப வாயில்:** சிற்ப வேலைப்பாடுடையவாயில் முகப்பு நுழைமாடம், முக மண்டபம்.

**stocks and stones:** **உயிரற்ற** பொருட்கள்.

**stoker:** **உலையூட்டி:** நீராவி எந்திரங்களுக்கு எரி பொருளூட்டும் கருவி.

**stomach-pump : அகற்றுப் பீற்று:** வயிற்றிலிருந்து வெளியேற்றவோ அல்லது வயிற்றுக்குள் செலுத்தவோ பயன்படும் பீற்றுக்குழல்.

**stonatitis :** *(நோயி.)* **வாய்ப்புண் :** வாய் அழற்சி.

**stonotology:** *(நோயி.)* **வாய் நோயியல்:** வாய் நோய்களைக் குணப்படுத்தும் மருத்துவம்.

**stone-blindness:** *(நோயி.)***முழுக் குருடு:** முற்றிலும் பார்வையிழந்த நிலை.

**stone-saw : கல் ரம்பம் ;** மணல் உதவியோடு கல் அறுக்க உதவும் பல் இல்லாத இரும்பு ரம்பம்.

**stop cock :** **நெகிழ்வுக் குழாய் :** மூடவும் திறக்கவும் கூடிய குழாய் அமைவு.

**stop-collar : தடைக்கட்டு வளையம் :** எந்திர உருளையின் இயக்

கத்தை எல்லைப்படுத்திக் காக்கும் தடையமைவு.

**stone : ஸ்டோன் :** 6.350 கி. கி. எடை.

**stone blue : வெளிறு நீலம் :** வெண்மை கலந்த அவுரி நலம்.

**stone butter : படிக்காரம் :** படிக் காரத்தின் ஒருவகை.

**stone-pitch : கெட்டிக் கீல் :** கெட்டியான கீல் வகை.

**stool :** *(க.க.)* **ஓரச்சட்டம் :** பல கணி ஓரச் சட்டம்.

**stoop :** *(க.க.)* **வாயிற் குறடு :** வீட்டின் வாயிலில் உள்ள படிவா யில் அல்லது வாயிற்படி.

**stop :** *(எந்; க.க.)* **தடுப்புக்குமிழ்** ஒரு குறிப்பிட்ட நிலைக்கு அப் பால் செல்லாமல் கட்டுப்படுத்தும் தடுக்கிதழ். ஒரு பட்டறையிலுள்ள எந்திரத்தில் அல்லது ஒரு கட்டி டத்தின் கதவில் உள்ள தடைக் கருவி போன்றது.

**stop-clock : நிறுத்தமைவுக் கடி காரம் :** தேவையானபோது நிறுத்தவும் ஓட்டவும் அமைவு கொண்ட கடிகாரம் விளையாட் டுப் பந்தயங்களில் இது பயன் படுத்தப்படுகிறது.

**stop cock:** *(கம்)* **நெகிழ்வுக்குழாய்** மூடவும் திறக்கவும் வல்ல குழாய்.

**stop-collar :** *(எந்)* **தடைக்கட்டு : வளையம் :** எந்திரம் உருளையின் இயக்கத்தை எல்லைப்படுத்திக் காக்கும் தடையமைவு.

**stop-cylinder :** *(அச்சு.)* **தடை அச்சுப் பொறி :** அச்சுப் பொறி வகை.

**stop-drill : தடுப்புத் துரப்பணம் :** சுழல்வெல்லைத் தடுக்குடைய துளையிடு கருவி.

**stop-plate : இருசு வரைத் தகடு:** உராய்வுத் தடைக் குழைகள் மீது மோதாமல் இருசு தடுக்கும் அமைவு.

**stop-valve; நடுக்கிதழ் அடைப்பு:** நீர்மத் தடுக்கிதழ் அமைப்பு.

**stopwatch : விசையழுத்தப் பொறி :** ஓட்டப் பந்தயங்களில் நினைத்த கணம் துவக்குவதற்கும் நிறுத்தத்திற்கும் உரிய பொறி யமைவுடைய கைக்கடிகாரம்,

**storage:** *(தானி.)* **கணிப்பொறிச் சேமிப்பிடம் :** ஒரு கணிப்பொறி யில், கணிப்புகளில் பயன்படுத்து வதற்காக அறிவுறுத்தங்களும், தகவல்களும் சேமித்து வைக்கப் படும் பகுதி.

**storage battery :** *(மின்.)* **சேம மின்கலத் தொகுதி :** சேம மின் கலங்களின் ஒரு தொகுதி. இக் கலங்கள் ஒவ்வொன்றிலும் நேர் மின் தகடுகளும் நீர்த்த கந்தக அமில மின் பகுப்பானில் மூழ்க வைக்கப்பட்டிருக்கும்.

**storage cell :** *(மின்.)* **சேமமின் கலம் :** ஒரு சேம மின்கலத் தொகுதியின் ஒரு பகுதி.

**storage life :** *(குழை.)* **மசிவுக் காலம் :** ஒரு குறிப்பிட்ட சேம வெப்ப நிலையைப் பொறுத்து ஒரு பிசினை அதன் குண இயல்பு களோ, மசிவுத்தன்மையோ குன் றாமல் சேமித்து வைக்கக் கூடிய கால அளவு.

**stored energy welding : சேம ஆற்றல் பற்றவைப்பு :** ஒரு வகைத் தடைப் பற்றவைப்பு. இதில் பற்ற வைப்பதற்குத் தேவையான மின் னாற்றல் பொருத்தமானதொரு சேமக்கலத்தில் பற்ற வைப்பதற்கு முன்பு குறைந்த வீதத்தில் சேர்த்து வைக்கப்பட்டு பற்ற வைப்பதற்கு அதிக வீதத்தில் சேர்த்து வைக்கப்

பட்டு பற்ற வைப்பதற்கு அதிக வீதத்தில் வழங்கப்படுகிறது.

**stormdoor** : *(க.க.)* **வன்புற மிகைக் கதவு**: புயல் குறிக் கூம்புடன் கடும்புயல் எச்சரிக்கையாக இணைத்துக் காட்டப்படும் வட்டுருளை அடையாளம்.

**storm sash** : *(க.க.)* **புறப் பலகணிச் சட்டம்** : கடுங்குளிர்ப் பருவத்தில் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்படும் மிகையான அல்லது புறப் பலகணிச் சட்டம்.

**storm signal** : **புயல் எச்சரிக்கைச் சைகை** : புயல் வருவதை முன்னரே அறிவிக்கும் அடையாளம்.

**stove bolt** : **கணப்பு மரையாணி** : சுரையில்லாத மரையாணி எந்திரத் திருகாணி எனப்படும் சுரையுடன் கூடிய மரையாணி கணப்பு மரையாணி எனப்படும். கணப்பு மரையாணிகள் பொதுவாக எந்திரத் திருகாணிகளை விடச் சற்று சொர சொரப்பான புரியிழையினைக் கொண்டிருக்கும்.

**stove-pipe** : **கணப்புப் புகைசெல் குழாய்**: கணப்படுப்புப் புகை செல்வதற்குரிய குழாய்.

**straddle milling**: *(எந்.)* **கவட்டுத் துளையிடு கருவி** : உலோகத் தகடுகளில் துளைகளிடுவதற்கும் பள்ளம் வெட்டுவதற்கும் பயன்படும் கவடு போன்ற வெட்டுக்கருவிகள் கொண்ட கருவி.

**straight-edge** : *(எந்.)* **நேர் நுட்பல்கோல்** : ஆய்வியல் முறையில் நேர் நுட்பமான ஒரு புறம் கொண்ட அளவு கோல்.

**straight-eight engine** : *(தானி)* **எட்டுவட்டு உந்துகலம்** : வரிசையாக எட்டு நீள் உருளைகளைக் கொண்ட உந்து ஊர்தி.

**straight jet** : **பீற்று விமானம்** : சுழல் விசிறியற்ற பீற்று விமானம்.

**straight polarity** : *(பற்.)* **நேர்நிலை மின் துருவமுனைப்பு** : மின்முனையிலிருந்து பாயும் எலெக்ட்ரான்களை இழி உலோகத்திற்குப் பாயுமாறு நேர் மின்னோட்டத்தை இணைத்தல்.

**straight-shank drill** : *(பட்.வே.)* **நேர் தண்டுத் துரப்பணம்** : உருண்டையான நேரிணைத் தண்டு கொண்ட ஒரு துரப்பணம். இது தானே மையங்கொள்ளும் ஏந்தமைவுகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் துரப்பணங்கள் பெரும்பாலும் பெரிய வடிவளவுகளில் செய்யப்படுவதில்லை.

**straight turning** : *(உலோ.)* **நேர்நிலைக் கடைசல்** : வேலைப்பாடு செய்யப்படும் பொருளின் விட்டங்கள் எல்லா இடங்களிலும் சமமாக இருக்குமாறு செய்யப்படும் கடைசல் வேலை. செய்யப்பட்ட பொருள் ஒரு நீள் உருளை வடிவில் இருக்கும்.

**strain** : *(பொறி.)* **இழுவிசை** : உரிய வரம்புக்கு அப்பால் நெட்டிழுத்தல் வடிவம் அல்லது கன அளவில் மாறுதல் ஏற்படும் அளவுக்கு எல்லை கடந்து வலிந்து இழுத்தல்.

**strain gauge** : *(மின்)* **இழுவை மானி** : ஒரு சாதனம் இயங்கும் போது அதன் உலோக உறுப்புகளில் ஏற்படும் இழுவிசையை அல்லது திரிபினை அளவிடுவதற்குப் பயன்படும் ஒரு கருவி.

**straining-beam** : **இடைக் கூம்பு விட்டம்** : மோட்டு விட்டக் கூம்பின் இரு நிமிர்கால்களைஇணைக்கின்ற கிடைமட்ட உத்தரம்.


**strain insulator** : *(மின்.)* **இழுவகை மின்காப்பி** : மின் கம்பியின்

அல்லது மின் கம்பிவடத்தின் முழு எடையையும் இழுவிசையையும் தாங்குவதற்கு உயர்ந்த அளவு மின்காப்பும் விறைப்பாற்றலும் கொண்ட ஒரு மின்காப்பி

**strake** : (உலோ:வே) **நீர்வரிப் பட்டி** : கப்பலின் முன் பகுதியிலிருந்து பின் பகுதி வரையுள்ள தொடர்ச்சியான பலகை அல்லது தகட்டு அடைப்பு.

**stranded conductor** : (மின்.) **சர மின்கடத்தி**: கெட்டியான கம்பிகளின் பல சரங்களை ஒன்றாகச் சேர்த்து முறுக்கிய மின்கடத்தி. இது சாதாரணமாக 7, 19, 37 சரங்கள் கொண்டதாக இருக்கும்.

**stranded wires** : (மின்.) **சரக் கம்பி** : பின்னிய அல்லது முறுக்கிய பல சிறு கம்பிகளைக் கொண்ட கம்பிச்சரடு அல்லது கம்பி வடம்.



சரக்கம்பி

**strap work** : **வார் ஒப்பனை** : வார்முடைவுப் போலி அணி ஒப்பனை.

**strata** : **படுகைகள்** : இயற்கையான அல்லது செயற்கையான நில அடுக்குப் படுகைகள்.

**stratification** : **அடுக்கமைவு** : அடுக்கடுக்கான படுகைகளாக அமைத்தல்.

**stratiform** : **அடுக்கியல் வடிவு**: படுகையடுக்குகளாக உருவாகிற வடிவம்.

**stratigraphy**: **அடுக்கியல் ஆய்வு**: அடுக்கியற் படிவாக்கக் கூறுகளின் தொகுதி பற்றிய ஆய்வு.

**stratocruiser** : **மீவளி மண்டல வானூர்தி** : காற்று மண்டலத்தின் மேன்முகட்டுத் தளத்திற்குச் செல்லத்தக்க விமானம்.

**stratosphere** : **மீவளி மண்டலம்** : தட்பவெப்ப நிலை உயரத்திற்கேற்ப மாறாமல் நிலையாக இருக்கும் காற்று மண்டலத்தின் ஏழு கல்லுயரத்திற்கு மேற்பட்ட அடுக்கு.

**strawboard** : **வைக்கோல் அட்டை** : முற்றிலும் வைக்கோல் கூழினாலான அட்டை.

**stray field** . (மின்.) **சிதறல் காந்தப்புலம்**: காந்தப் பாதைக்குப் புறத்தேயுள்ள காந்த விசைக் கோடுகள்.

**strays** : (மின்.) **இடைத் தடங்கலொலி** : வானொலியில் ஒலிபரப்புடன் தொடர்புடையதாக இல்லாத மின்காந்த உலைவுகள்.

**stream-anchor** : **இழுவை நங்கூரம்** : கப்பலை நிலம் நோக்கி இழுக்கும்போது பயன்படும் சிறு நங்கூரம்.

**streamline** : (வானூ.) **இழைவரி**: ஒழுகு நீர்மம் பின்பற்றும் இயல்தளக்கோடு.

**stream line flow** : (வானூ.) **இழைவரிப்பாய்வு** : உடற்பகுதியின் அருகிலுள்ளதும், குறுகிய பின்கல அலைவிலுள்ளதும் நீங்கலாக, இழைவரிகள் நேரத்துடன் மாறாதிருக்கிற திரவப் பாய்வு.

**strength of current** : (மின்,) **மின்னோட்ட வலிமை** : ஒரு மின் சுற்று வழியாகப் பாயும் மின்னோட்டத்தின் ஆம்பியர் எண்ணிக்கை. இது நீர்க் குழாயில் ஒரு நிமிடத்தில் பாயும் நீரின் காலன் அளவு போன்றது.

**strength of materials** : (பொறி) **இயற்பொருள் வலிமை** ; பொருள்களின் வடிவிலும், வடிவளவுகளில் மாறுதல் உண்டாக்குகிற ஆற்றல்

களின் விளைவுகள் குறித்து ஆராயும் அறிவியல்.

**stress** : (மின்.) **இறுக்கவிசை** : ஒரு பொருளின் வடிவத்தை அல்லது வடிவளவை மாற்றுவதைத் தடை செய்கிற அகவிசை.

**stress accelerated corrosion** : (உலோ.) **இறுக்கவிசை முடுக்கு அரிமானம்** : உலோகத்தில் இறுக்கவிசை அதிகரிப்பதால் உலோகத்தின் அரிமானம் முடுக்கி விடப்படுகிறது. இந்த அரிமானம் சில உலோகக் கலவைகளை விட எஃகில் அதிகம்.

**stretch** ; **நீட்சி** ; வினை வேகத்தைக் குறைத்தல்.

**stretcher** ; **கிடைச் செங்கற்சுவர்**: முகப்பு நீளவாட்டுக் கிடைச் செங்கல்.

**stria** : (குழை.) **படுகைவரி**: மேற்பரப்பில் உள்ள படுகைக் கோட்டு வரி அடையாளம்.

**string course or sailing course** : **சுற்றுவரி மேடை** : கட்டிடச் சுற்றுவரி மேடை, செங்கல் அல்லது கல்லினாலான அலங்கார அமைப்பு.

**stringer** : (க.க.) **இடையிணை தளம்** ; படிக்கட்டுகளிலுள்ள இடையிணைதளம்.

**stroboscope** : (மின்.) **சுழற்சி நோக்கி** ; ஒரு சுழலும் எந்திரத்தின் வேகத்தை அளவிடுவதற்கான அல்லது அதன் இயக்கத்தை ஆராய்வதற்கான ஒருகருவி இதில் மாறுகிற வேகமுடைய பொறி விளக்கு இருக்கும். இதனைசுழலும் எந்திரத்திற்கேற்ப ஒருங்கியைபு செய்து கொள்ளலாம். இவ்வாறு ஒருங்கியைபு செய்த வேகத்தில் சுழலும் உறுப்புகள் நிலையாக இருப்பது போலத் தோன்றும்.

**strobotron** : (மின்.) **ஸ்டிரோபோட்ரான்** : சுழற்சி நோக்கியில் பயன்படுத்தப்படும் பிரதிபலிப்பானுடன் கூடிய ஒரு நியான் விளக்கு துல்லியமான நேரத்தில் மின்னழுத்தத் துடிப்புகளினால் ஆற்றலூட்டப்படும் பொழுது இது பிரகாசமான ஒளியை உண்டாக்கும்.

**stroke** , (தானி.பொறி.) **உகைப்பு**: உந்துதண்டு ஒருமுறை உகைத்துச் சுழலும் இயக்கம்.

**strontium** : **ஸ்டிரான்ஷியம்** : மஞ்சள் நிறமுள்ள அரு உலோக வகை.

**structural load** : (பொறி.) **கட்டமைப்புப் பளு** ; எந்திரத்தின் கட்டமைப்பினால் உண்டாகும் பளு. இது ஏற்றிய பளுவிலிருந்து வேறுபட்டது.

**structural steel** : (பொறி.) **கட்டமைப்பு எஃகு** ! பாலங்கள், கட்டிடங் கட்டுவதற்குப் பொறியியல் வல்லுநர்கள் பயன்படுத்தும் பல்வேறு கட்டமைப்புகள் கொண்ட எஃகு வடிவங்கள். இவை I. H. Z முதலிய பல்வேறு வடிவங்களில் அமைந்திருக்கும்.

**strut** ; **விட்டக்காழ்** ; விட்டத்தின் குறுக்காக உறுதி நாடி இடப்படும் இரும்பு அல்லது மர ஆப்பு.

**strut girder**: **விட்டக்காழ் தூலம்** ; குறுக்குச் சட்டத் தூலம். இதன் உச்சி உறுப்பும், அடி உறுப்பும் செங்குத்தான விட்டக்காழ்களால் இணைக்கப்பட்டிருக்கும்.

**strut tenon** : (மர.வே.) **விட்டக் காழ் பொருத்து முளை** ; கனமான வெட்டு மரங்களில் உறுதி நாடி விட்டத்தின் குறுக்காக இடப்படும் பொருத்து முளை.

**stucco** : **குழை காரை** : சுவர்ப்

பூச்சுச் சிற்ப ஒப்பனைக்குரிய அரைச் சாந்து.

**stuck molding**: *(க.க.)* **ஒட்டுவார் படம்** : *தரைத் தளத்திலோ மேசையிலோ ஒட்டிக் கொள்ளக்கூடிய வடிவத்தில் அமைந்த வார்ப்படம்.*

**stud** : *(க.க.)* **குமிழ் முகப்பு** : *ஒப்பனைக் குமிழ் முனைப்புப் பரப்பு.*

**stud bolt**: **மரை திருகாணி** : *திருக்குக் குறடு பற்றிக் கொள்வதற்கு இடமளிக்கும் வகையில் இருமுனைகளிலும் வெற்றிடத்துடன் திருகிழை அமைக்கப்பட்ட மரையாணி.*

**stud gear** : *(எந்.)* **குமிழ்ப் பல்லிணை** : *குமிழ்மீது அமைந்த ஓர் இடைநிலைப் பல்லிணை.*

**stuffing box** : *(எந்.)* **உள் திணிப்புப் பொறியமைவு** : *"காற்று முதலியவை உடபுகாதவாறு இயங்கவல்ல உள் திணிப்புப் பொறியமைவு.*

**stuffing regulator** : **உள்திணிப்பு ஒழுங்கியக்கி**: *மெத்தை திண்டு வேலைப்பாட்டில் உள் திணிப்பில் ஏற்படும் மேடு பள்ளங்களைச் சீராக்கிச் 'சமப்படுத்தப்படும் கருவி. இது 6''முதல்'' 10" நீளத்தில் கூம்பு வடிவில் ஊசி போல் அமைந்திருக்கும்.*

**stunt or dunt**: **திடீர் வெடிப்பு**: *குளிர்விக்கும்போது திடீரென ஏற்படும் வெடிப்பு அல்லது பிளவு.*

**style**: **பாணி**: *ஒரு குறிப்பிட்ட காலத்தில் செல்வாக்குப் பெற்ற ஒப்பனைப் பாணி அல்லது கலைப் பண்பின் மாதிரி.*

**sub-base**: *(க.க.)* **அடித்தள அகடு**: *ஓர் அடித்தளத்தின் அடிப் பகுதி.*

**sub cloud car**: *(வானூ)* **முகிலடி ஆய்வு ஊர்தி** : *விண்கலத்திலிருந்து மேகத்திற்குக் கீழே ஒரு நிலைக்கு இறக்கக்கூடிய ஓர் ஆய்வு ஊர்தி.*

**subhead**: *(அச்சு.)* **துணைத் தலைப்பு**: *அச்சுப் பணியில் உட்தலைப்பு.*

**sublimation**: *(குளி பத.)* **பதங்கமாதல்**: *ஒரு பொருள் திட நிலையிலிருந்து திரவ நிலைக்கு மாறாமலேயே வாயுவாக மாறுதல்.*

**submarine**: **நீர்மூழ்கி**: *கடலில் மேற்பரப்படியே மூழ்கிச் சென்று தாக்க வல்ல போர்க் கப்பல்.*

**subsatellite**: *(விண்.)* **துணை செயற்கைக் கோள்**; *ஒருபூமி செயற்கைக் கோளினுள் சுற்றி வருவதற்காக வடிவமைக்கப்பட்டு, பின்னர் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக வெளியில் அனுப்பப்படும் ஒரு பொருள்.*

**subsoil**: **அடிமண்**: *மண்ணுக்குக் கீழ், ஆனால் கடினமான பாறைக்கு மேல் உள்ள மண்.*

**substation** :*(மின்)* **துணைமின் நிலையம்**: *மின்விசை வசதியாகப் பயன்படுத்தக்கூடிய வடிவத்திற்கு மாற்றப்படுகிற ஒரு மின்நிலையம். இதில் மின்மாற்றிகள், மின்விசைகள், மின்சுற்றுவழி முறிப்பிகள் போன்ற துணைச் சாதனங்கள் அடங்கியிருக்கும்.*

**sub-stratosphere**: **அடிமீவளி மண்டலம்**: *மீவளி மண்டலத்திற்குக் கீழே உள்ள பூமி மண்டலத்தின் படுகை. இதில் மிக உயரப்போக்குவரத்து நடவடிக்கைகள் நடத்தப் பெறுகின்றன.*

**substratum**: **கீழடுக்கு**: *அடித்தள அடுக்கு*

**substructure**: *(க.க.)* **கீழ்க்கட்டுமானம்**: *ஒரு கட்டுமானத்தின் கீழ்ப் பகுதி. இதன் மேல் எதனையும் கட்டுவர்.*

**subtangent: தொடுவரை நீட்டம்:** ஊடுவரையில் தொடுவரை நீட்டம்.

**suction: பற்றீர்ப்பு:** உறிஞ்சி எடுத்தல்.

**suction-fan: பதர் உறிஞ்சி:** தானியத்திலிருந்து பதர் வாங்கி விட உதவும் உறிஞ்சு விசிறி.

**suction stroke: உறிஞ்சு வீச்சு:** நீள் உருளைக்குள் எரிபொருளை உறிஞ்சி இழுக்கும் வீச்சு.

**suede calfskin : வறுதோல் :** கையுறை, காலுறை முதலியவற்றிற்குப் பயன்படுத்தும் பதனிப்படாத வெள்ளாட்டுக் குட்டித் தோல். இது உயர்தரமான தோல். இது நேர்த்தியான உள்வரித் துணியாகப் பயன்படுத்தப்படுகிறது.

**suede lambskin : துறு தோல் :** கையுறை, காலுறை முதலியவற்றிற்குப் பயன்படுத்தும் பதனிடப்படாத வெள்ளாட்டுக் குட்டித் தோல்.

**sugar pine :** (மர.) **சர்க்கரைத் தேவதாரு :** அமெரிக்காவில் கலிஃபோர்னியா, ஆரிகான் மாநிலங்களில் மிகுதியாக வளரும் மிகப் பெரிய தேவதாரு மரவகை. இதன் விட்டம்4.5மீ.வரைஇருக்கும்;30மீ. வரை உயரமாக வளரும். இதன் வெட்டு மரம் இளவண்ணம் கொண்டது. இதில் எளிதாக வேலைப்பாடுகள் செய்யலாம். உள் அலங்கார வேலைகளுக்கு மிகுதியும் பயன்படுகிறது.

**sulphated battery :** (க.க.) **கந்தகி மின்கலத் தொகுதி :** மின்னேற்றக் குறைவு அல்லது குறைந்த நீர் மட்டம் அல்லது இவ்விரண்டும் காரணமாக வெள்ளை நிறக் கந்தகி (சல்பேட்) பூசப்பட்ட தகடுகளுடைய சேம மின்கலத் தொகுதி.

**sulphate paper : கந்தகிக் காகிதம் :** முற்றிலும் கந்தகிக் (சல்பேட்) கூழினால் செய்யப்பட்ட காகிதம். இது சில சமயம் சலவை வெண்மையாகவும், பழுப்பாகவும் சாயமிட்டதாகவும் இருக்கும்.

**sulphite bond : கந்தகியத் தாள் :** உறுதி வாய்ந்த உயர்தரத்தாள். இது நான்கு வகைகளில் கிடைக்கும். முதலிரு உயர்வகைகள் எழுது தாள் உற்பத்தி வாணிக மரபுகளுக்கேற்ப நீர்க் குறியிடப்பட்டிருக்கும்.

**sulphite pulp : கந்தகிகக் கூழ் :** ஊசியிலை மரம் மற்றும் அது போன்ற மரங்களிலிருந்து சல்பைட் செய்முறை மூலம் தயாரிக்கப்படும் மரக்கூழ்.

**sulphur :** (வேதி.) **கந்தகம் (S) :** இரும்பிலும் எஃகிலும் கந்தகம் அடங்கியிருப்பதால் எப்போதும் விரும்பத்தகாத விளைவுகளே ஏற்படுகின்றன. இது வார்ப்பிரும்பை கடினமானதாகவும், வெண்மையானதாகவும் ஆக்கி விடுகிறது. மெல்லிரும்பில் அல்லது எஃகில் கந்தகத்தில் கந்தகம் மிகச் சிறிதளவு இருந்தாலும், அதனால் சிவப்புக் குறைபாடு உண்டாகிறது.

**sulphuric acid :** (வேதி.) **கந்தக அமிலம் : ($H_2SO_4$) :** இது கந்தகத் திராவகம், கந்தகத்தை அளவில் வாட்டி அல்லது அயப்பைரைட்டை அல்லது பிற சல்பைடுகளை அளவில் வாட்டி, அதனால் உண்டாகும் டையாக்சைடன் ஆக்சிஜனைச் சேர்த்து, அந்தக் கலப்புப் பொருளை நீருடன் கலப்பதன்மூலம் இந்த அமிலம் தயாரிக்கப்படுகிறது. கலை வேலைப்பாடுகளிலும், சேம மின்கலத்தில் மின் பகுப்பானாகவும், மசகு எண்ணெயாகவும பயன்படுகிறது.

**sump : கட்டுதொட்டி :** சுரங்கம், எந்திரம் ஆகியவற்றுல் மழை நீர், கழிவுநீர் ஆகியவறறைச் சேகரிப்பதற்கான கட்டுகுழி.

**sun compass** : (*வானூ.*) **சூரியத் திசைகாட்டி** : *காந்த வட, தென் துருவ திசைக்குப் பதிலாக சூரியனின் திசை பயன்படுத்தப்படும் திசைகாட்டி.*

**sun effect** : (*குளி.பத.*) **சூரிய விளைவு** : *சன்னல்கள், கட்டிடச் சுவர்கள் வழியாக அறைகளுக்குள் மாற்றப்பட்ட சூரிய ஆற்றல்.*

**sunspot** : (*விண்.*) **சூரியப் புள்ளி/சூரியக் களங்கம்**: *சூரியனின் மேற்பரப்பில் காணப்படும் கரும்புள்ளிகள்.*

**sunspot cycle** : (*விண்.*) **சூரியப் புள்ளிச் சுழற்சி** : *சூரியனின் மேற்பரப்பில் சூரியப் புள்ளிகளின் எண்ணிக்கையும் பரப்பளவும் சராசரியாக 11.1 ஆண்டுகளுக்கொரு முறை மாற்றமடைதல்.*

**sun-stone** : **சூரிய காந்திக்கல்** : *ஒருவகைப் படிகக்கல்.*

**sun-stroke** : (*நோயி.*) **வெப்பத் தாக்கு நோய்** : *வெயில் கடுமையினால் தாக்குண்டு மயக்கமுறும் நோய்.*

**superbronze** : (*உலோ.*) **மிகு நேர்த்தி வெண்கலம்** : *இது அரிமானத்தை எதிர்க்கக்கூடிய மிகுந்த விறைப்புத் தன்மை வாய்ந்த, அலுமினியமும், மாங்கனீசும் அடங்கிய வலுவான பித்தளை.*

**supercalendered** : (*தாள்.*) **மிகு மெருகு** . *துணி, தாள் ஆகியவற்றை உருளை எந்திரத்தினால் அழுத்துவதன்மூலம் மட்டுமீறு மெருகேற்றி மழமழப்பாக்குதல்.*

**super charge** : (*வானூ.*) **மீவிசையேற்றம்** : *உந்துகலம், விமானம் முதலியவற்றில் நிலவர அழுத்தத்திற்கு அதிகமாக காற்று அல்லது கலவையை அடைத்தல்.*

**supercharged engine**: (*வானூ.*) **மீவிசையேற்ற எஞ்சின்** : *விமானம் மிக உயரத்தில் பறப்பதற்காக எஞ்சினுக்கு மீவிசையேற்றம் செய்தல்.*

**supercharger** : (*தானி.*) **மீவிசைக் காற்றுக் குழாய்**: *உந்துகலம், விமானம் முதலியவற்றில் அளவுக்குமீறி காற்றடைக்கப்பட்ட குழாய்; உள் வெப்பாலையில் மீவிசை அழுத்த மூட்டுவதற்குரிய அமைவு.*

**superconductivity** : (*மின்.*) **மிகை மின்கடத்தல்** : *மின்தடை மறைந்து விடுவதாகத் தோன்றும் முழுப் பூச்சிய வெப்ப நிலைகளில் மின்கடத்தல் நடைபெறும் நிகழ்வு.*

**super control tube** : (*மின்.*) **மிகைக் கட்டுப்பாட்டுக் குழல்** : *கட்டுப்பாட்டு வலைச்சார்புடன் மிகைப்புக் காரணி மாறுபடுகிற ஒரு குழல்.*

**super fines** : (*தாள்.*) **நேர்த்திக் காகிதம்** : *மிக நேர்த்தியான முறையில் நயமாகத் தயாரிக்கப்பட்ட உயர்தரமான எழுதுவதற்குரிய தாள்.*

**super heated steam** : **மிகு வெப்ப நீராவி** : *நீராவி எந்த அழுத்த நிலையில் உண்டாகியதோ அந்த அழுத்தத்திற்கு நேரிணையான வெப்ப நிலையைவிட அதிக வெப்ப நிலையுடைய நீராவி.*

**super heterodyne** : **மிகை அலை மாற்றி** : *உள்வரும் உயர் அலை வெண் அலையின் மீது மாறுபட்ட அலைவெண் கொண்ட அதே போன்ற அலையினை மேன் மேலடுக்கும் தத்துவத்தைப் பொறுத்து அமைந்துள்ள ஒரு வானொலி வாங்கி மின்சுற்றுவழி.*

**super imposition** : **மேற்சுமத்தீடு:** *தொலைக்காட்சியில் ஓர் ஒளிப்படக் கருவியிலிருந்தும் உருக்காட்சியின் மீது இன்னொரு ஒளிப்படக் கருவியிலிருந்து வரும் உருக்*

காட்சி படியச் செய்தல். உருக் காட்சிகளை வேண்டிய அளவுக்கு ஒருங்கிணைத்தல்.

**superior figures or letters :** *(அச்சு.)* **வரிமேல் உருவம் அல்லது எழுத்து :** *அச்சுக்கோப்பில் ஒரு வரிக்கு மேலாக அமைக்கப்படும் சிறிய உருவம் அல்லது எழுத்து.* $B^3;C^n$.

**super sonic :** *(மின்.)* **மிகையொலி அலைவெண் :** *ஒலி அலைவெண்ணீச்சுக்கு மேற்பட்ட அலைவெண்கள்.*

**supersonic :** *(விண்.)* **ஒலியினும் விரைவு விமானம் :** *ஒலியைவிட விரைவாகச் செல்லும் விமானம்.*

**super structure : மேற்கட்டுமானம்:** *ஒரு கட்டிடத்திற்கு மேலே கட்டப்படும் கட்டுமானம்.*

**supplement of an angle : துணைக்கோணம்:** *கோணத்துடன் இணைந்து நேர்க்கோணமாகும் துணைக்கோணம்.*

**suppressor :** *(மின்.)* **அடக்கி :** *தானியக்கச் சுடர்மூட்டு அமைப்புகளிலிருந்து வானொலி இடையீட்டினை நீக்குவதற்குப் பயன்படும் ஒரு சாதனம்.*

**suppressor grid:** *(மின்.)* **அடக்கி மின்வலை :** *ஓர்எலெக்ட்ரான் குழலில், திரைவலைக்கும் தகட்டுக்கு இடையில், தகட்டிலிருந்து இரண்டாம் நிலை எலெக்ட்ரான்களை எதிர்ப்பதற்கு அல்லது அடக்குவதற்குள்ள ஒரு மூன்றாவது மின்கம்பி வலை.*

**surd :** *(கணி.)* **பகுபடா எண் :** *பதின்கூற்றில் தீராக் கீழ்வாய்ப் பின்னம்.*

**surface action :** *(இயற்.)* **மேற்பரப்பு வினை :** *மேற்பரப்பில் விளைவுகளை உண்டாக்கும் வினை. எடுத்துக்காட்டு:வண்ணம் பூசிய பரப்பில், புகை, ஈரம் முதலியவற்றின் வினை.*

**surface alloy transistor:** *(மின்.)* **மேற்பரப்பு உலோகக் கலவை மின் பெருக்கி :** *இது ஒரு சிலிக்கன் இணைப்பு மின்பெருக்கி (டிரான்சிஸ்டர்), இதில் அலுமினிய மின்முனைகள், ஒரு மெல்லிய சிலிக்கன் படிகத்தின் இருபுறங்களிலும் செதுக்கப்பட்டுள்ள குழிகளில் படிகின்றன.*

**surface barrier transistor :** *(மின்.)* **மேற்பரப்புத் தடை மின் பெருக்கி :** *மின் ஊர்திகளின் சேகரிப்பும், வெளிப்பாடும் நடைபெறுகிற்இடைத்தொடர்பு முனைகள், மேற்பரப்பில் அமைந்துள்ளவாறு அமைக்கப்பட்டுள்ள மின்பெருக்கி (டிரான்சிஸ்டர்).*

**surface-craft :** **அலை மேவுகலம்:** *நீர் மூழ்கியல்லாத கப்பல்.*

**surface gauge ; மேற்பரப்பு அளவி ;** *எந்திர நுட்பாளர்கள் உள்வரியிடுவதற்குப் பயன்படுத்தும் கருவி.*

**surface grinding :** *(உலோ.)* **மேற்பரப்புச் சாணை:** *தட்டையான உலோகப் பரப்புகளைச் சாணையிட்டுத் தீட்டுதல்.*

**surface noise :** *(மின்.)* **மேற்பரப்பு ஒலி :** *ஓர் ஒலிப்பதிவில், ஓர் ஒலித்தட்டினை வெட்டியெடுத்த பின்பு அதன் வரிப்பள்ளங்களில் தேங்கியிருக்கும் சொரசொரப்பான துகள்களிலிருந்து அல்லது ஒழுங்கற்ற பரப்புகளிலிருந்து எழும் ஒலி.*

**surface speed :** *(எந்.)* **மேற்பரப்பு வேகம் :** *ஒரு மேற்பரப்பு ஒரு நிமிடத்திற்கு எத்தனை அடி நகர்கிறது என்பதைக் குறிக்கும் இயக்க வீதம். இது ஒரு நேர்கோட்டில்*

இயங்கும் பரப்பையோ, நீள் உருளை வரைகோட்டில் இயங்கும் பரப்பையோ குறிக்கும். எடுத்துக் காட்டாக, ஒரு சக்கரத்தின் மேற் பரப்பு வேகத்தைக் கணக்கிடு வதற்கு அடிக்கணக்கிலான அதன் சுற்றளவை, அது ஒரு நிமிடத்தில் சுழலும் சுழற்சிகளின் எண்ணிக் கையினால் பெருக்குதல் வேண்டும்.

**surface water :** (*கம்மி.*) **மேல் ஓடுநீர் :** *நிலமேற்பரப்பின் மீதாக* ஓடும் நீர் சாக்கடைநீர்.

**surveying :** **நில அளவை :** நிலத்தை அளவிடும் அறிவியல்.

**surveyors compass:** **நில அளவையாளர் திசைகாட்டி :** கிடைமட்டக் கோட்டிற்கும் ஒரு காந்தமுள்ளுக்கு மிடையில் திசை வேறுபாட்டைக் குறிக்கும் கருவி. இதனை அளவையாளர்கள் பயன்படுத்துகிறார் கள்.

**suspension :** (*வேதி.*) **மிதவல்** நீர்மத்தில் ஆழுமில்லாமல் கிழுமில்லாமல் இடைமிதவலாக மிதக்கும் மிதவைப் படலம்.

**swab** (*வார்.*) **ஒத்துப்பட்டை :** வார்ப்படத்தில் ஒரு தோரணியைச் சுற்றியிருக்கும் மணலை ஈரத்தில் ஒற்றியெடுக்கும் துணித்துண்டு அல்லது உறிஞ்சு பஞ்சு.

**swag : தோரணம் :** அறைகலன்களை அலங்காரமாகச் செய்வதற் கான தோரண வடிவமைப்பு.

**swage : பணியிரும்பு :** பதிவச்சுப் பொறியினால் வடிவம் கொடுப் பதற்குப் பயன்படும் பணியிரும்பு.

**swage block : பதிவச்சுருக் கட்டை :** பணியிரும்பை உருவாக்கு வதில் பயன்படும் துளை பள்ளங் களையுடைய கட்டை.

**swages :** (*உலோ.*) **உலோக வடிவாக்கப் பொறிகள் :** நீர் உருளை உறுப்புகளை வடிவமைப்பதற் கான உட்குழிவான முகப்புகளை யுடைய உலோகங்களைக் காய்ச்சி அடித்து உருவாக்கும் கருவிகள்.

**swarf:** (*உலோ.*) **உலோகச் சிம்பு:** சாணைக்கல்லில் உலோகப் பொருட்களைச் சாணை தீட்டும் போது சிதறும் உலோகச் சிம்பு செத்தை.

**sweating sickness:** (*நோயி.*) **வியர்வைக் காய்ச்சல்:** லண்டனில் 15, 16ஆம் நூற்றாண்டுகளில் நில விய கொடிய வியர்வைக் காய்ச் சல் கொள்ளை நோய்.

**swash letters:** (*அச்சு.*) **வளைவுக் கோட்டு எழுத்து:** அச்சுப் பணியில் வளைவு கோடுகளினாலான அலங்கார எழுத்துக்கள்'

**sweating:** (*உலோ.*) **உலோக இணைப்பு:** உலோகப் பகுதிகளைப் பரப்பின் இழைவாய் ஒன்றுபடுத் திப் பொருத்துதல்.

**swedish iron:** (*உலோ.*) **சுவீடிஷ் இரும்பு:** பாஸ்வரம், கந்தகம் சிறிதும் இல்லாத மிக உயர்ந்த தர மான இரும்பு.

**sweet:** **அக வளைவியக்கம்:** ஒரு தொலைக்காட்சிப் பட அல்லது ஒளிப்படக்குழாயில் எலெக்ட்ரான் கற்றையின் இயக்கம்.

**sweet circuit:** (*மின்.*) **வீச்சு மின்சுற்றுவழி:** ஓர் எதிர்மின் முனைக் கதிர்க்குழலில் ஒரே விகித எலெக்ட்ரான் கற்றையை இயக்கு வதற்காக கால இடைவெளிகளில் செலுத்தப்படும் மாறுபடும் மின் னழுத்தம்.

**sweet generator:** (*மின்.*) **வீச்சு மின்னாக்கி:** ஒரு வானொலி அலை வெண் மின்னாக்கியாகப் பயன் படுத்தப்படும் ஒரு சோதனைக் கருவி. இதில் ஒரு சோதனைக் கருவி. ஒரு சராசரி அலை

வெண்ணுக்குக் கூடுதலாக அல்லது குறைவாக அலைவெண் மாறுபடும். இதனை ஓர் அலைவுப் பதிப்பானுடன் சேர்த்துப் பயன் படுத்தினால், ஓர் ஒருங்கிணைபு மின்சுற்றுவழிகளின் மாறுதல் போக்குகளைக் கண்காணிக்க முடியும்.

**sweep oscillator**: (மின்.) **வீச்சு ஊசல்:** ஓர் எதிர்மின் முனைக் குழலில் எலெக்ட்ரான் கற்றையை விலக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் ஊசல்.

**sweet gum**: (மர.) **இனிப்புக் கோந்து**: குங்கிலியப் பிசின். இதனைச் செம்மெழுகு என்றும் கூறுவர். மலைகளில் வளரும் ஒரு வகை மரத்தின் பிசினிலிருந்து இது கிடைக்கிறது.

**sweet oil**: (வேதி.) **ஒலிவ நெய்:** குறைந்த தரமுடைய, கெட்டியான ஒலிவ நெய். இது மருந்துப் பொருளாகவும், சமையலுக்காகவும் மசகுப் பொருளாகவும் பயன்படுகிறது.

**sweet or red gum**: (மர.வே.) **செம்மெழுகு மரம்:** செம்மெழுகு தரும், மலையில் வளரும் மரம். இது பெரிதாக வளரும். இது மென்மையானது; எனினும் வலுவானது. இது அழகான வடிவம் பெறும்; எனினும் உருத்திரிந்து வளரும்.

**swell**: (வார்.) **புடைப்புரு:** வார்ப்படத்தைப் போதிய அளவு அழுத்தம் கொடுக்காததால் ஏற்படும் புடைப்பு.

**swing saw:** (மர.வே.) **ஊசல் ரம்பம்**: மேலிருந்து தொங்கவிடப்பட்டிருக்கும் கீலுள்ள சட்டகத்தில் பொருத்தப்பட்டுள்ள வட்ட வடிவ ரம்பம். வேலைப்பாடு வேண்டிய பொருள் நிலையாக இருக்க, ரம்பத்தை அங்குமிங்கும் அசைத்து இயக்கி அறுப்பு வேலை செய்யப்படுகிறது.

**swinging choke**: (மின்.) **அலையாட்டத் தூண்டுசுருள்**: இது ஒரு வகைத் தூண்டு சுருள். இதில் கம்பிச் சுருளின் வழியே செல்லும் சராசரி மின்னோட்டத்திற்கேற்பத் தூண்டலும், தூண்டமும் மாறுபடுகிறது.

**switch** (மின்.) **மின் விசை**: மின் சுற்றுவழியை இணைக்கவும் முறிக்கவும் பயன்படும் சாதனம்.

**switch board**: (மின்.) **மின்விசைப் பலகை:** பல மின் தொடர்பு இணைப்புகள் கொண்ட பலகை. பதில் மின்மானியும் பொருத்தப்பட்டிருக்கும்.


**switch box**: (மின்.) **மின்விசைப் பெட்டி:** மின்விசை அமைப்பினைப் பாதுகாக்கவும், மின்னோட்டம் செல்லும் உறுப்புகள் ஒன்றையொன்று தொட்டு விடாமல் தடுக்கவும் பயன்படும் இரும்புப் பெட்டி.

**switch rotary**: (மின்.) **விசைச் சுழலி**; சுழல்வினை மூலம் இயக்கப்படும் ஒரு விசை. பல சமயங்களில் பல விசைகள் ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பட்டு ஒற்றைச் சுழல் தண்டு மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

**swivel**: (எந்.) **சுழல் திருகு**: ஒன்றின் மீது ஒன்று சுழலும்படி அமைந்த திருகு அமைப்பு,

**swivel joint**: (கம்மி.) **சுழல் மூட்டு**: ஒன்றன்மீது ஒன்று சுழலும்படி அமைந்த பொருத்து.

**swivel vise**: (பட்.) **சுழல் குறடு**:



இது ஒரு மேசைக் குறடு. இது சுழன்றுதான் பற்றியிருக்கும் பொருளைத் தேவை

யான நிலைக்குக் கொண்டு வரும்.

**S-wrench**: *(எந்.)* **S-திருகுக்குறடு.** "S" என்ற ஆங்கில எழுத்தின் வடிவிலுள்ள திருகுக்குறடு. இது நிலையானதாக அல்லது தக்க வாறு அமைத்துக் கொள்ளத் தக்க தாக அமைந்திருக்கும்

**sycamore**: *(மர.வே.)* **அத்தி மரம்:** 46மீ.உயரம் வளரக்கூடிய மிகப் பெரிய மரம். மிதமான அளவு கன முடையது; இதனைப் பிளப்பது மிகக் கடினம், ஒரு கன அடியின் எடை சுமார் 8 கி.கி. இருக்கும். அழகான வரிகளுடையது, இளம் பழுப்பு நிறமுடையது. அறை கலன்கள் தயாரிக்கப் பெரிதும் பயன்படுகிறது. விமானங்கள் செய்வதிலும் பயன்படுத்தப்படுகி றது.

**symbol**: **சின்னம்**: சுருக்கக் குறியீ டாகப் பயன்படுத்தப்படும் அடை யாளக் குறியீடு.

**symbol**: *(மின்.)* **குறியீடு**: ஓர் அல கினை அல்லது உறுப்பினைக் குறித்துக் காட்டும் எழுத்து அல் லது உறுப்பினைக் குறித்துக் காட் டும் எழுத்து அல்லது குழுஉக் குறி. எடுத்துக்காட்டு: "X" என்ற எழுத்து எதிர்வினைப்பைக் குறிக் கிறது.

**symmetrical**: **செவ்வொழுங்கு**: உறுப்புகள் இருபுடை ஒத்திசை வாக அமைந்திருத்தல்.

**sympathetic nervous system** : *(உட.)* **பரிவு நரம்பு மண்டலம்** : முதுகந்தண்டெலும்பின் மேல், கீழ்ப்பகுதிகளுக்கு முன்புறத்தில் உட்புறமாக நெருக்கமான நரம்பு களின் ஒரு தொகுதியினால் இணைக்கப்பட்டுப் பரவலாக அமைந்திருக்கும்பழுப்புநிற நரம்பு களின் தொகுதி. இது தானியங் கும் நரம்பு மண்டலத்தின் ஒரு பகுதியாகும். சூழ்நிலையின் தேவைகளுக்கேற்ப உடல் உடனடி யாக வலுவான நடவடிக்கை எடுக்க உதவுவது இந்த நரம்பு மண்டலத்தின் முக்கிய பணி. எடுத்துக்காட்டாக, அபாயம் நேரிடும்போதும் மனக்கிளர்ச்சி ஏற்படும் போதும் செயற்படத் தூண்டுவது இந்த நரம்பு மண் டலமே யாகும். தானியங்கும் நரம்பு மண்டலத்தின் இன்னொரு பகுதி துணைப்பரிவு நரம்பு மண் டலமாகும். உடலினைப்பேணிவரு வதற்கும், அதன் எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்வதற் கும் இது உதவுகிறது.

**sympathetic pain** : *(நோயி.)* **பரிவு நோவு:** தொடர்புணர்ச்சியால் ஏற்படும் நோவு.

**sympathetic resonance**: *(இயற்)* **பரிவு ஒலியதிர்வு** : வாயு நிலைத் தொடர்புறவு காரணமாக ஏற் படும் ஒலியதிர்வு.

**sympathetic sound** : *(இயற்)* **பரிவு ஒலி** : வாயு நிலைத் தொடர் புறவு காரணமாக உண்டாகும் ஒலி.

**symphysis** : **கூட்டிணை வளர்ச்சி**: இயற்பண்பு இதழ்களை ஒன்றாக ஒருங்கிணைத்து வளர்த்தல். எடுத் துக் காட்டு : இளமஞ்சள் உருளைக் கிழங்கு.

**symphysis** : *(உட.)* **கூட்டுக்கணு**: எலும்புகளை உடலின் மையக் கோட்டில் ஒன்றாக இணைத்தல்.

**sympiesometer**: *(இயற்.)* **அழுத்த வளியிணைவுப் பாரமானி** : நீர்மத் துடன் இணைவாக அழுத்தமிக்க வாயுவும் அழுத்த அளவையாகப் பயன்படுத்தப்படும் வாயுமண்டல அழுத்த மானி.

**symptom** : *(நோயி)* **நோய்க்குறி:** நோயினை உணர்த்தும் அறி குறிகள். நோயாளி தானே

உணர்ந்து கொள்ளும் நோய்க்குறி தலைவலி. உடல் வெப்ப நிலை, நாடித் துடிப்பு போன்றவை மருத்துவர் கருவிகள் மூலம் கண்டறியும் நோய்க் குறிகள்.

**symptomatology (symptomatics)** : (நோயி.) **நோய்க் குறியியல்** : நோய்க்குறிகள் பற்றி ஆராயும் அறிவியல்.

**synaesthesia**:**பிறிது நுகர்வுணர்வு**: நுகர்ந்தவர் நுகர்வுப் பொருளை மாறுபட உணரும் ஒருவகைக் கோளாறு.

**synchro**: (மின்.) **இணக்கமாற்றுப் பொறி**: ஒரு சுழல் தண்டின் சாய்வு நிலையை எந்திரப் பிணைப்பு எதுவுமின்றி ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றுவதற்குப் பயன்படும் ஒரு மின்னியல் எந்திர சாதனம்.

**synchrotron**: (மின்.) **மின்விசைப் பெருக்கி** : மின்ம விசைப் பெருக்க மூட்டப் பயன்படும் மின்காந்த விசை இணையமைவு.

**synchro-mesh** ; (தானி.) **உந்து விசை மாற்றமைவு** : உந்து ஊர்திகளில் விசை மாற்றுப் பற்சக்கர இடை உராய்வு அமைவு.

**synchronous motor** : (மின்.) **இணக்க மின்னோடி**: மின் வழங்கும் மின்னோடியின் வேகம் நிலையாக இருக்கும் வரையில் தனது வேகத்தை நிலையாகக் கொண்டிருக்கிற ஒரு மின்னோடி,

**synchronous vibrator** ; (மின்.) **இணக்க அதிர்வி** : ஒரு விசை எடுப்பு மின் சுற்றுவழியில் மின் சுமைவழியே ஒரே திசையில் மின்னோட்டம் பராமரிக்கப்படும் வகையில் கூடுதல் தொடுமுனைகளைக்கொண்டுள்ள ஓர் அதிர்வி.

**synchronization** : **ஒருங்கிசைவுறுத்தல்** : தொலைக்காட்சியிலும் திரைப்படக் காட்சியிலும் ஒளியும் ஒலியும் ஒன்றி ஒருங்கிசைந்து இயங்கும்படி செய்தல்.

**synchroreceiver**: (மின்.) **இணக்க அலைவாங்கி** : இது இணக்க மின் செலுத்தியைப் போன்றது. ஆனால், இது சமிக்ஞைகளை எந்திர இயக்கமாக மாற்றுகிறது.

**synchroscope** : (மின்.) **இணக்கங் காட்டி** : விளக்குகளின் மூலமாக இணக்குவிப்பதை அறுதியிடும் ஒரு கருவி. இணக்கச் சமிஞை வந்தால் மட்டுமே உண்டாகக் கூடிய மிகக்குறுகிய கால வீச்சினைக் கொண்ட ஓர் அலைப்புக் கருவி.

**synchro transmitter** : (மின்.) **இணக்க மின் செலுத்தி** : ஒரு சுழலும் மின் கலத்தைக் கொண்ட ஒரு மின்மாற்றி. இது எந்திர உட்பாட்டினை மின்னியல் சமிக்ஞைகளாக மாற்றி அந்தச் சமிக்ஞைகளை அலை வாங்கிக்கு அனுப்புகிறது.

**synchrotron** : **மின்காந்த இணையமைவு** : மின்மவிசைப் பெருக்கமூட்டப் பயன்படும் மின்காந்த விசை இணையமைவு.

**synchronous motor** : (மின்.) **இணக்க மின்னோடி** : மின் வழங்கும் மின்னாக்கியின் வேகம் நிலையாக இருக்கும் வரையில் வேகம் நிலையாக இருக்கும் மின்னோடி.

**syncline** : (மண்.) **மை வரை மடிவுப் படுகை** : பாறை கீழ்முகமாக மடிந்திருத்தல்.

**sync pulse** : (மின் ) **இணக்கத் துடிப்பு** : ஓர் ஊசலியை அல்லது மின்சுற்று வழியை இயங்கத் தூண்டும் இணக்கத் துடிப்பு.

**sync separator** : (மின்.) **இணக்கப் பிரிப்பான்** : தொலைக்காட்சி

சமிக்ஞையில் படத் தகவலிலிருந்து இணக்கத் துடிப்புகளைப் பிரித்தெடுக்கப் பயன்படும் ஒரு குழல்.

**syndrome** : *(நோயி.)* **நோய்க் குறித் தொகுதி** : ஒரு நோயைக் காட்டும் குறிகள், அடையாளங்கள், உணர்வுகள் ஆகியவற்றின் தொகுதி. இவை அனைத்தும ஒன்று சேர்ந்து உடலிலுள்ள ஒரு குறிப்பிட்ட கோளாறைக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, மிகுந்த உடல்வெப்பம், தொண்டை வீக்கம், மெதுவான நாடித்துடிப்பு, அடிக்கடி ஏற்படும் மயக்கம் ஆகியவை இதயத்தின் மேலறைக்கும் கீழறைக்கும் இடையிலான தடுக்கிதழ் அடைப்பட்டிருப்பதைக் குறிக்கிறது:

**synthesis**: **செயற்கைப் பொருளாக்கம்** : தனிமங்களிலிருந்து அல்லது தனிக்கூட்டுப் பொருட்களிலிருந்து ஒரு செயற்கைச் சேர்மப் பொருளை ஆக்குதல்,

**synthetic** :*(குழைம.)* **செயற்கைப் பொருள்** : தனிமங்களிலிருந்து அல்லது எளிய கூட்டுப் பொருள்களிலிருந்து செயற்கையாகச் செய்யப்பட்ட வேதியியல் கூட்டுப் பொருள்.

**synthetic resin** : *(குழை.)* **செயற்கைப் பிசின்** : வேதியியல் வினைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு குழைமக் (பிளாஸ்டிக்) கூட்டுப்பொருள். இது இயற்கைப் பிசின்களைப் போன்று இருப்பினும் வேதியியல் அமைப்பிலும் எதிர் வினைகளிலும் பெரிதும் வேறுபட்டிருக்கும்.

**syphilis** : *(நோயி.)* **கிரந்தி/மேகப் புண்** : திருகு சுருள் வடிவான நுண்ணுயிர் மூலம் உண்டாகும் ஒரு நோய். இது உடலுறவு மூலம் ஆணிடமிருந்து பெண்ணுக்கும், பெண்ணிலிருந்து ஆணுக்கும் பரவுகிறது. தொடக்கத்தில் இதனால் உடலின் மேற்பகுதியில் வீக்கமும், புண்களும் ஏற்படும். ஆனால் பின்னர் இரத்த நாளங்கள், இதயம், மூளை, முதுகந்தண்டு ஆகியவற்றையும் தாக்குகிறது. இது குழந்தைகளையும் பீடிக்கிறது

**syringe** : **பீற்று மருந்தூசி** : உடலில் விசைப் பீற்று மருந்து குத்திச் செலுத்துவதற்கான குழல் ஊசி.

**system** *(தானி.)* **கருவித்தொகுதி**: ஒரே ஆக்கப்பண்புகளுடன் ஒருங்கிணைந்து இயங்கும் கருவிகளின் முழு மொத்தத் தொகுதி.

**systems engineering** : *(தானி.)* **கருவித் தொகுதிப் பொறியியல்** : கருவிகளின் முழுத்தொகுதியில் அடங்கியுள்ள உறுப்புகளுக்கிடையிலான இடைவினைகளையும், ஒவ்வொரு உறுப்பின் தனிப்பண்பியல்புகளையும் கருத்தில் கொண்டு, சிக்கலானதும் முழுமையானதுமான கருவித்தொகுதிகளைவடிவமைக்கும் பொறியியல்.

# T

**T. B.** *(tuberculosis)* : *(நோயி.)* **டி. பி. (காசநோய்)**: எலும்புருக்கி நோய். இது உடம்பிலுள்ள பெரும்பாலான திசுக்களைக் கழலைப்புற்றுப் பாதிப்பதாலும், ஒரு தனிவகை நோய்க் கிருமி உருவாவதாலும் உண்டாகும் நோய்.

**T. N. T** : **டி. என். டி** : பெருவிசை வெடி மருந்து.

**tab** : *(வானூ.)* **கட்டுப்பாட்டுத் துணைப் பகுதி** : கட்டுப்பாட்டு விசையைக் குறைக்க அல்லது விமானத்தைச் சமநிலைப்படுத்துவதற்குக் கட்டுப்பாட்டுப் பரப்புடன் இணைக்கப்பட்ட துணைக் கட்டுப்பாட்டுப் பகுதி.

**tabernacle** : *(க.க.)* **தொழுகைத் தலம்** : கிறிஸ்துவர்களின் சர்ச் அல்லது தொழுகைத் தலம்.

**tabernacle** : *(க,க)* **வழிபடு யறை** : வழிபாட்டுக்கான உருவம் வைக்குமிடம்.

**taboret** : *(மர.வே.)* **சிறுமேசை** : சிறிய முக்காலி அல்லது உயரம் குறைந்த மேஜை. பெரும்பாலும் தாவரங்கள், அலங்காரப் பொருட்கள் முதலியவற்றை வைப்பதற்குப் பயன்படுவது,

**tabular meter** : *(அச்சு.)* **அட்டவணை மானி** : பெரும்பாலும் கோக்கப்பட்ட எண்கள் பத்திகளாக அடுக்கப்பட்டவை.

**tabulate** : **பட்டியலிடு** : பொருட்களை அல்லது தகவல்களை அட்டவணையாக அல்லது பட்டியலாக வகைப்படுத்து.

**tachometer** : *(பொறி.)* **விசை மானி** : தண்டுகளின் வேகத்தை ஒரு நிமிடத்துக்கு எத்தனை சுழற்சிகள் என்று காட்டும் கருவி.

**tackle**: *(எந்.)* **பாரந்தூக்கு கலன்**: பளுமிக்க பொருட்களைக் கட்டித் தூக்குவதற்குப் பயன்படும் சங்கிலிக் கயிறு, கப்பி அல்லது பிளாக்குகள்.


பாரந்தூக்கு கலன்

**tack**: *(அச்சு.)* **பசைப்பு**: அச்சு மையத்தில் அடங்கிய வார்னிஷ் சற்று கெட்டியாவதால் அச்சு மையில் ஏற்படும் பிசு பிசுப்பு.

**tack weld**: *(பற்.)* **பொருத்தாணிப் பற்றாசு** : ஓர் இணைப்புக் கருவியின் உறுப்புகளைத் தற்காலிகமாக ஒன்றாகப் பற்றிவைத்துக் கொள்ளக்கூடிய ஒரு சிறிய பற்றாசு.

**taenia** : *(க.க.)* **தலைப்பட்டி** : கிரேக்க டோரிக் பாணி கட்டடங்களில் தூண்கள் மேல் அமைந்த உத்தரத்துக்கும் அதற்கும் மேலே உள்ள சிறு சுவர்களுக்கும் நடுவில் அமைந்த தட்டையான பட்டை.

**tail** : *(வானூ.)* **விமான வால்** : விமானத்தின் பின்புறப் பகுதி. பொதுவில் நிலைப்படுத்தும் பலகைகள் அல்லது துடுப்புகள் அடங்கியது. இவற்றுடன் விமானத்தின் தூக்கிகள், சுக்கான்கள் ஆகிய கட்டுப் படுத்தி பரப்புகள் இணைக்கப்பட்டிருக்கும்.

**tail beam or tail joist** : *(க.க.)* **வால் உத்தரம்** : தலை உத்தரத்துடன் வந்து சேருகிற உத்தரம்.

**tail boom** : (வானூ.) **வால் தண்டு** : வால் பகுதிகளையும் பிரதான ஆதாரப் பிரிவுகளையும் இணைக்கிற தண்டு.

**tail heavy**: (வானூ ) **வால் இறக்கம்** : (விமானம்) காற்றை விட எடைகூடிய விமானம் பறக்கும் போது நீளவாட்டு கட்டுப்பாடு விடுபடும்போது வால்புறம் கீழ் நிலையில் இருக்கும். அப்போது விமானி குறிப்பிட்ட உயரத்திலேயே இருக்க விரும்பினால் கண்ட்ரோல் தடியை இயக்கியாக வேண்டும்.

**tailing** : (க.க.) **புடைப்புக் கல்** : சுவரில் செருகப்பட்டு வெளியே துருத்தி நிற்கும் செங்கல் அல்லது கல்லின் பகுதி.

**tail joist** : (க.க.) **வால் உத்தரம்** : ஒரு முனை தலை உத்தரத்துடன் வந்து முடிகிற உத்தரம்.

**tailless airplane** : (வானூ.) **வாலில்லா விமானம்**: நிலைப்படுத்த பயன்படுத்தப்படுகிற பகுதிகள் இறக்கைக்குள்ளாகவே அமைக்கப்பட்ட விமானம்.

**tail light** ; (வானூ;பொறி.) **வால் விளக்கு / பின்புற விளக்கு**: ஒவ்வொருமோட்டார்வாகனத்திலும் பின்புறத்தில் சட்டப்படி அமைக்கப்படவேண்டிய இரவில் பூட்டப்படுகையில் எரிய வேண்டிய சைகை விளக்கு.

**tailpiece**: (அச்சு.) **இறுதிப்பகுதி/ முத்தாய்ப்பு** : ஒரு நூலின் ஓர் அத்தியாயத்தின் முடிவில் அல்லது அச்சிடப்படுகிற குறி.

**tailpiece** : (கம்.) **சாக்கடை வடி குழாய்** : கழிவு நீர்த்தொட்டியின் அடிப்பகுதியில் இணைக்கப்படும் 'T' வடிவ படிகுழாய்.

**tail pipe** : உறிஞ்சு குழாய்.

**tail print** : **வால் அச்சு** : அச்சுக் குள்ளிருந்து மாதிரி வடிவத்தை வெளியே எளிதில் எடுப்பதற்கான வகையில் மைய வடிவத்தில் அமைந்த பிடி, உள் அச்சு நன்கு அமைய, அதற்கு வசதி செய்வது.

**tail screw**: **வால் திருகாணி**: கடைசல் (லேத) எந்திரத்தில் நிலைப்பிடிமானத்தின் தண்டை இயக்கச் செய்யும் திருகாணி.

**tail skid**: (வானூ.) **வால் சறுக்குக் கட்டை**: தரையில் நிற்கிற விமானத்தின் வால் பகுதியைத் தாங்கி நிற்கிற சறுக்குக் கட்டை.

**tail slide**: (வானூ.) **வால் சறுக்கு விமானம்**: செங்குத்தாக உயரே ஏறிய பிறகு கீழே சறுக்குகிற நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து விமானத்தின் வால், கீழ்நோக்கியதாக பின்புறம் கீழ்ப்புறமாகச் செயல்படும் நிலை.

**tail spin**: (வானூ.) வானூர்தியின் சுழல் கழுகுப் பாய்ச்சல்.

**tail stock**: (எந்.) **வால் பிடிமானம்**: ஒரு கடைசல் எந்திரத்தில் ஒரு பொருளைப் பொருத்துவதில் ஒரு புறம் நிலையாக இருத்திய தலைப் பிடிமானம் இருக்கும். மற்றொரு புறத்தில் முன்னும் பின்னும் நகர்த் தக்கூடிய வால் பிடிமானம் இருக்கும்.

**tail stock spindle**: (எந்.) **நிலைப்பிடிமானத் தண்டு**: கடைசல் எந்திரக் கடைசல் நிலைப்பிடிமானத்தில் செயலற்ற மையத்தைத் தூக்குகிற செருகு குழல் அல்லது தண்டு.

**tail surface**: (வானூ.) **வால் பரப்பு**: ஒரு விமானத்தின் வால் பகுதியில் உள்ள நிலைப்படுத்துகிற அல்லது கட்டுப்படுத்துகிற பரப்பு.

**tail unit:** *(வானூ.)* **வால் தொகுதி:** விமானத்தை நிலைப் படுத்தவும் கட்டுப்படுத்தவும் உதவ விமானத்தின் பின்புறத்தில் அமைந்த எல்லா பரப்புகளும் அதாவது நிலைப்படுத்தி, துடுப்பு, சுக்கான் தூக்கி, ஆகியவை அடங்கும்.

**tail wheel:** *(வானூ.)* **வால் சக்கரம்:** தரையில் உள்ளபோது ஒரு விமானத்தின் வால் பகுதியைத் தாங்கி நிற்கும் சக்கரம். அது திருப்பத்தக்கதாக அல்லது திருப்ப முடியாததாக, நிலையாக அல்லது சுழலும் வகையில் அமைக்கப்பட்டிருக்கலாம்.

**tain:** **வெண் மெல் தகடு:** முகக் கண்ணாடியின் முகட்டுக் காப்புத் தகரம்.

**take:** *(அச்சு.)* **எழுத்துப் பகுதி:** அச்சுக்கோப்பவர் எந்த ஒரு சமயத்திலும் வைத்திருக்கின்ற ஒரு வாசகத்தின் ஒரு பகுதி.

**take-off distance:** *(வானூ.)* **எழும்பு தொலைவு சுழி:** நிலை வேகத்திலிருந்து கிளம்புகிற ஒரு விமானம், இறுதியாகத் தரையிலிருந்து அல்லது நீரிலிருந்து தொடர்பகன்று மேலே எழும்புவது வரையிலான தொலைவு. மேலெழும்பும் தொலைவு, காற்றமைதி அல்லது குறிப்பிட்ட காற்று வேக அடிப்படையில் கணக்கிடப்படுவது.

**take-off speed** *(வானூ.)* **எழும்பு வேகம்:** ஒரு விமானம் முற்றிலுமாக வானில் எழும்பிய நிலையில் உள்ள காற்று வேகம்.

**take-up:** *(பட்.)* **இறுக்கமைவு:** தேய்மானத்தால் அல்லது வேறு காரணங்களால் பகுதிகளில் ஏற்பட்ட தவிர்வைப் போக்குவதற்கான ஒரு கருவி.

**taking up:** *(பட்.)* **சரிப்படுத்து:** எந்திரம் போன்றவற்றில் தேய்மானத்துக்காகத் தகுந்தபடி பொருத்துதல் சம்பந்தப்பட்டது.

**talc:** **சவர்க்காரக்கல்:** காகிதம், மசகுப்பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள் தயாரிக்கப் பயன் படுத்தப்படும் மாக்கல்.

**talc:** *(வண்.)* **வண்ணச் சுண்ணம்:** வண்ணங்களில் நிமிர்த்து பொருளாகப் பயன்படுத்தப்படும் நீரடங்கிய மக்னீசியம் அலுமினியம் சிலிக்கேட்.

**talo:** **வெளிமக் கன்மகி; மென் கல் பொடி:** காகிதம், உய்வுப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள் முதலியவற்றில் பயன்படுத்தப்படுகிற மென்கல்பொடி.

**tallow:** **கொழுப்பு; விலங்கின் உருக்கிய நிணம்:** விலங்குக் கொழுப்புகளிலிருந்து தயாரிக்கப் படுவது.

**tambour;** *(க.க.)* **கூரையிட்ட பாதை:** கூரையுள்ள சிறிய மூடப் பட்ட நடைபாதை.

**tamo, japanese ash:** *(மர.வே.):* **ஜப்பானி தாமோ சாம்பல்:** தாமோ, ஜப்பானில் சாம்பல் (மரவேலை) ஃபிராக்சிமஸ் மஞ்சூரியா. இப் பொருளானது, நிறத்திலும் தன்மையிலும் பெரும் வித்தியாசம் கொண்டது. இருக்கைச் சாதனங்கள், அறைத் தடுப்பு, அழகுச் சுவர் போன்று பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு நிறையப் பயன் படுத்தப்படுகிறது. தாமோ நேர்த் திப் பூச்சு மூலம் மரத்தின் கீற்றுப் பாணிகள் மிக எடுப்பாகத் தெரியும்.

**tamp:** **கெட்டித்தல்:** வெடிப்பாற்றல் பெருக்கும்படி வெடிச் சுரங்க வாயில் களிமண் திணித்து வைத்தல்.

**tamping:** (*பொறி.*) **கெட்டித்தல்:** சிறு கற்கள் போன்ற பொருள் களைப் பதித்து அடித்து கெட்டித் தல். ஒரு மாதிரிப் பாணியைச் சுற்றி மண்ணை வைத்துத் தட்டு ல்.

**tampion:** (*கம்.*) **கூம்பு அடைப்பான்:** ஓர் ஈயக்குழாயின் வாய் முகப்பை அடைப்பதற்கான கூம்பு வடிவ மரக் கட்டை அடைப்பான்.

**tanbark:** **பதனிடு பட்டை:** ஓக் மரத்தின் பட்டை போன்று டானின் அடங்கிய மரத்தின் பட்டை. தோல் பதனிடப் பயன் படுத்திய பின்னர் ஓரளவில் எரி பொருளாகப் பயன்படுவது.

**tandem airplane:** (*வானூ.*) **அடுக்கு இறக்கை விமானம்:** ஒரே மட்டத்தில் முன்னும் பின்னுமாக அமைந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இறக்கைகளைக் கொண்ட விமானம்.

**tang:** **முனை விளிம்பு:** ஒரு வெட்டுக் கருவியின் கழுத்து அல்லது பிடிக்குள்ளாக செருகப்படும் பகுதி.

**tangent:** **தொடுகோடு:** குறுக்காக வெட்டிச் செல்லாமல் ஒரு கோட்டை அல்லது பரப்பை ஒரு புள்ளியில் தொடுதல்-தொடுகோடு.

**tangent of an angle:** (*கணி.*) **இருக்கை:** ஒரு கோணத்துக்கு எதிரே உள்ள பக்கத்தை அருகில் உள்ள பக்கத்தால் வகுத்து வரும் ஈவு.

**tangible:** **தொட்டுணரத்தக்க:** தெளிவாக உணர முடிகிற, உண்மையான.


**tank:** (*தானி.எந்.*) **தொட்டி:** மோட்டார் வாகனம் ஒன்றில் பெட்ரோல் நிரப்பப்படும் தொட்டி.

**tannin or tannic acid:** (*வேதி.*) **டானின் அல்லது டானிக் அமிலம்:** பளபளப்பான சற்று மங்கலான மஞ்சள் ஒழுங்கற்ற பொடி ($C_{14}H_{10}O_9$) கால்நட், சுமாக், தேயிலை போன்றவற்றிலிருந்து பழுப்பான வெள்ளைப் பளபளப் புள்ள செதில் போன்ற வடிவில் கிடைப்பது. மருத்துவத்தில் இது உடல் திசுக்களை சுருங்க வைக்கும் பொருளாகப் பயன்படுத்தப் படுகிறது.

**tantalum:** (*உலோ.*) **டாண்டாலம் (வெம்மம்):** வெப்பத்தினாலும், திராவகச் செயற்பாட்டினாலும் பாதிக்கப்படாத வெள்ளை உலோகத் தனிமம். இது 'டாண்டாலைட்' என்றும் தாதுவிலிருந்து எடுக்கப்படுகிறது. இது பளபளப்பானது; இதனைக் கம்பியாக நீட்டலாம். மின்விளக்குக் குமிழ்களிலும், வானொலிக் குழல்களிலும் இழைகளாக மிகுதியும் பயன்படுகிறது. இது கம்பியாகவும் சலாகையாகவும் விற்பனை செய்யப் படுகிறது.

**tantanium:** (*உலோ.*) **டான்டானியம்:** டேன்டலைட்டிலிருந்து பெறப்படுகிற, அமிலத்தை எதிர்க்கும் தன்மையுள்ள, கம்பியாக இருக்கத் தக்க பளப்பளப்பான வெள்ளை நிற உலோகம். பெரிதும் மின் பல்புகளிலும் ரேடியோ குழல்களிலும் இழையாகப் பயன்படுவது, கம்பியாக, தண்டாக விற்கப்படுவது.

**tap:** **புரியாணி உள்வரி இழைப்புக் கருவி; புரியிடுதல்:** புரி தண்டு கொண்டு புரிகளை அமைத்தல். (*எந்.*) உள்ளிடைப் புரிகளை அமைப்பதற்கான



புரியாணி

புடைத்த புரிகளைக் கொண்ட கருவி, (கியர் வரை) ஒரு துளை

யிடப்பட வேண்டுமென்பதற்கான குறியீடு.

**tap bolt**: *(எந்.)* **புரியிடப்பட்ட தாழ்துளை**: பொதுவில் முழு நீளத்துக்கும் புரியிடப்பட்ட தாழ், தலையின் அடிப்புறத்திலும் படியும் இடத்திலும் மட்டும் சீர் செய்யப்பட்டது. இந்தத் தாழ்களின் தலை சதுர அல்லது அறுகோண வடிவில் இருக்கும்.

**tape** *(பொறி.)* **அளவிடு பட்டை**: லினன் அல்லது பருத்தி அல்லது மெல்லிய உருக்கினால் செய்யப்பட்ட வளையத்தக்க அளவுச் சாதனம். பொதுவில் வட்ட வடிவ உறைக்குள் இருக்கும். பயன்பாட்டுக்குப்பின் மீண்டும் சுருட்டி உள்ளே அடக்கி விடலாம்.

**taper**: *(எந்.)* **குவிந்தமைதல்**: படிப்படியாக, சீராக அளவு குறுகிக் கொண்டு வருதல். குவிந்த குழிவு. குவிந்த தண்டு, குவிந்த நடுத்தண்டு என்பது போல.

**tape recorder**: *(மின்.)* **நாடா ஒலிப்பதிவுக் கருவி**: இது ஒரு மின்னணுவியல் ஒலிப்பதிவுக் கருவி. இதில் ஒலிச் சமிக்ஞைகள், மின்னியல் சமிக்ஞைகளாக மாற்றப்படுகின்றன. இந்த மின்னியல் சமிக்ஞைகள், ஒரு தனிவகை நாடாவில் ஒரு காந்தத்தோரணியாகப் பதிவாகின்றன.

**taper angle**: *(உலோ.)* **கூர்ங் கோணம்**: நுனிநோக்கிச் சிறுத்துச் செல்கிற பரப்பளவுகளுக்கிடையிலான உள்ளடக்குக் கோணம்.

**taper attachement**: *(எந்.)* **குவிய இணைப்பு**: குவிந்து அமையும் வகையில் கடைவதற்கு ஒரு லேத்தில் பொருத்துவதற்கான சாதனம். அளவுக்குத் தக்கபடி இதில் மாற்றம் செய்ய இயலும்.

**tapered-shank drill**: *(எந்.)* **குவியத் தண்டுக் குடைவி**: குவிந்து செல்லும் நடுத்தாங்கி கொண்ட, சாதாரண குடைவுச் சுழல்வியில் அல்லது குழியில் பயன்படுத்தப்படுகிற, திரும்புகிற அல்லது அப்படி அல்லாத குடைவி.

**tapered spindle**: *(எந்.)* **குவியத் தண்டு**: குவியத்தண்டு வேலைக் கருவி அல்லது தண்டைப் பொருத்தும் வகையில் ஒரு புறத்தில் உள் பகுதியில் குவிந்து அமைந்த துளை உள்ள தண்டு.

**taper gauge**: *(எந்.)* **குவியளவு மானி**: உள்ளே அல்லது வெளியே எந்த அளவுக்கு குவிந்து அமைந்துள்ளது என்பதை துல்லியமாக அளக்கும் கருவி.

**taper per ft**: *(எந்.)* **அடி வீதம் குவிதல்**: குவிந்தமைவது எந்த அளவில் உள்ளதை வெளிப்படுத்தும் முறை. அதாவது ஜார்னோ குவிவு (அல்லது குவியம்) அடிக்கு .6" பிரவுன் மற்றும் ஷார்ப் குவிவு அடிக்கு .5" பத்து மட்டும் வராது.

**taper pin**: *(எந்;பொறி.)* **குவிய ஆணி**: உருண்டையான உலோகக் கம்பிகளிலிருந்து செய்யப்படுவது. ஒரு தண்டுடன் ஒரு உறுப்பைப் பிணைப்பதற்குப் பயன்படுவது. 1 முதல் 10 வரை எண் அடிப்படையில் அளவு வரிசைப்படுத்தப்பட்டது. எண் 1 என்பது அகலப் பகுதியில்396செ.மீ.குறுக்களவும்2முதல் 2.54செ.மீ. நீளமும் கொண்டது. எண் 10 என்பது அகலப்பகுதியில் 1.8செ.மீ. குறுக்களவும் 3.8 முதல் 15செ.மீ. நீளமும் கொண்டது.

**taper-pin drills**: *(உலோ.வே.)* **குவிய ஆணிதுளை கருவி**: 30செ.மீ -க்கு.6செ.மீ. வீதம் குவிந்து அமைந்த, பல் போன்ற கூரான விளிம்புகளைக் கொண்ட துளையிடு கருவி. கட்டி உலோகத்தில்

ருந்தான குவிய ஆணிகளை செருகுவதற்கான துளைகளைப் போட வல்லது.

**taper reamer:** (எந்.) **குவியத் துளை துருவி:** குவிந்து அமையும் துளைகளில் உள்ளே செலுத்தி துளையைத் தேவையான அளவுக்குத் துருவிப் பெரிதாக்குவதற்கான சாதாரண நீண்ட துருவு பள்ளம் கொண்ட துளைத் துருவி. குவிய ஆணியைச் செலுத்துவதற்கு துளை போடப் பயன்படுவது.

**taper tap:** **குவியப் புரியிடு கருவி:** நீளவாட்டில் குவிந்து அமைந்த புரியிடும் கருவி. துளையிடப்பட்ட பின் துளையில் திருகு புரியிடுவதற்கு எளிதில் உதவுவது.

**taper turning:** (எந்.) **குவியக் கடைசல்:** கடைசல் எந்திரத்தில் நிலைப்பிடிமானத்தைப் பொருத்தாமல் அல்லது குவிய இணைப்பைப் பொருத்திக் கடைவது.

**tap drill:** (உலோ.) **துளைத் துரப்பணம்:** உலோகத்தில் துளையிடுவதற்குப் பயன்படும் துரப்பணம்.

**tap, hob, sellers:** (எந்.) **நீண்ட புரியிடு கருவி:** இதில் நீள் வாட்டில் மத்திய பகுதியில் மட்டும் புரி இருக்கும். அத்துடன் பல குழிவுகள் இருக்கும். அச்சுகளில் மற்றும் கடைசல் எந்திர புரியிடு கருவிகளில் புரி போடுவதற்கு அதுபயன்படுகிறது.

**tapestry:** **அலங்கார திரைச் சீலை:** தொங்கவிடுவதற்கும், இருக்கைகளின் பரப்பு மீது பொருத்துவதற்குமான அலங்கார சித்திரவேலைப்பாடு அமைந்த துணி.

**tap hole:** (வார்.) **வடி துளை:** உலோகத்தை உருக்குவதற்குப் பயன்படுத்தப்படும் குழிவு வாணலியின் புடைப்பில் உள்ள துளை. உருகிய உலோகம். இதன் வழியே பெறப்படும்.

**taping:** **நாடாப்பதிவு:** ஒரு காந்த நாடாவின் அல்லது துளையிட்ட நாடாவின் செயல்முறைகளை அல்லது விளைவுகளை பதிவு செய்யும் முறை.

**tapped face plate:** (பட்.) **புரியிட்ட முகத் தகடு:** ஒரு முகப்புத் தகட்டில் துளைகளுக்குப் பதில் அல்லது காற்றுடன் சேர்த்து புரியிட்ட துளைகள் இருக்கும்.

**tapper tap:** (எந்.) **புரி எந்திர புரி தண்டு:** புரியிடும் எந்திரங்களின் நட்டுகளில் புரியிடுவதற்கான விசேஷ புரிதண்டு.

**tappet:** (தானி.) **டாப்பெட்:** புடைச் சக்கரத்துக்கும் வால்வுக்கும் இடையே முன்னும் பின்னுமாக இயங்கும் பகுதி.

**tappet valve:** (தானி.) **தட்டியக்கப் பிதுக்கத் தடுக்கிதழ்:** வட்டுத் தலையுடன் கூடிய தடுக்கிதழிலிருந்து ஒரு தண்டு நீண்டு செயல்வியாக இருக்கும். உள்எரி என்ஜினில் பொதுவில் பயன்படுகிறது.

**tapping:** (உலோ.வே.) **புரியிடுதல்:** கையால் அல்லது எந்திரத்தைப் பயன்படுத்தி ஒரு புரிதண்டு மூலம் ஒரு துளையினுள் புரிகளைப் போடுதல்.

**tapping bar:** (வார்.) **வடிதண்டு:** (வார்ப்பு) 2 முதல்3செ.மீ.அங்குல குறுக்களவும் 1 முதல் 3மீ. நீளமும் உள்ள இரும்புத் தண்டு. உலைத் தொட்டியில் உருகிய நிலையில் உள்ள இரும்புக் குழம்பை வெளியே பாயச் செய்ய அத் தொட்டியின் திறப்பு வாயைத் திறப்பதற்குப் பயன்படுவது.

**tap remover:** (பட்.) **புரிதண்டு அகற்றி:** துளைக்குள் உடைந்த புரிதண்டை வெளியே திருகி எடுப்பதற்கு அதைப் பற்றிக் கொள்வதற்கான கருவி.

**tap splice:** *(மின்.)* **டேப் பிணைப்பு:** காண்க கிளை இணைப்பு.

**tap wrench:** *(எந்.)* **புரிதண்டு பிடி**

புரிதண்டு பிடி கருவி

**கருவி:** துளைகளில் புரியிடு கையில் புரிதண்டை கெட்டியாகப் பற்றிக் கொண்டு இயங்குவதற் கான இரட்டைப்பிடி நெம்பு கோல்.

**tarnish :** **மங்கு :** மினுமினுப்பு இழப்பு மங்கலாகுதல்.

**tar:** *(வண்.)* **கீல் (கரி எண்ணெய்):** மரம், தூள் நிலக்கரி, நிலக்கரி, மென்களிக்கல் போன்ற தாவர அல்லது கனிமப் பொருள்களை வாலை வடித்தல்மூலம் எஞ்சு பொருளாகக் கிடைக்கும் கெட்டி யான, பழுப்பு அல்லது கறுப்புநிற திரவம்.,

**tar-paulin: கருங் கித்தான் :** கான் வாசினால் ஆன நீர் புகாத கெட்டி யான போர்வை.

**tapping machine:** *(பட்.)* **புரியிடு எந்திரம்:** சிறு உறுப்புகளில் உற் பத்திப் பணிகளில் அடிக்கடி பயன் படுத்தப்படுகிற ஒரு எந்திரம். ஒரு துளையில் புரியிட முன்புற இலக்க மும் பின்னர் வெளியே எடுக்க எதிராகச் சுற்றும் இலக்கமும் கொண்டது.

**taste-bud :** *(உட.)* **சுவை அரும்பு** நாக்கிலுள்ள சுவை நரம்பின் நுனியின் தனிவகை உயிரணுக்கள் உள் ளன. இந்தத் தனி வகை உயிரணுக் களும், நரம்பு முனைகளும் ஒன்றாகச் சேர்ந்து சுவை அரும்புகளாக அமைந் துள்ளன.



சுவை அரும்பு

**taut : விறைப்பு :** விறைப்பாக நன்கு இழுக்கப்பட்ட தொய்வு இல்லாமல் ஒரு கயிறு விறைப்பாக இழுக்கப்பட்டது போல்.

**tawing : பதனிடுதல் :** படிக்கா ரம் அல்லது உப்பைக் கொண்டு தோலைப் பதனிடுதல்.

**taxi :** *(வானூ.)* **தரை கடலில் ஓடும் விமானம் :** சொந்த இயங்கு திறன் கொண்டு ஒரு விமானத் தைத் தரையில் ஓடச்செய்தல். கடல் விமானத்தை நீரின் மீது ஓடச் செய்தல்.

**taxi - meter :** *(எந்.)* **உந்து வேகமானி :** ஒரு வாடகை வண்டி ஓடிய தூரத்தை அளவிடும் கருவி. வாடகையைக் கணக்கிடுவதற்கு மான கருவி.

**taxi - way :** *(வானூ.)* **விமான நகரு பாதை :** விமானம் இறங்கு தளத்தில், தரையிறங்கும் வட்டா ரத்திலிருந்து அல்லது அந்த வட் டாரத்துக்கு விமானம் ஓடுவதற் கென சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட தரை.

**T bolt :** *(எந்.)* **'T' வடிவ செருகு ஊசி :** ஆங்கில "T" எழுத்து போன்ற வடிவம் கொண்ட போல்ட். அதன் தலைப்பகுதி யானது கடைசல் எந்திர அல்லது இழைப்பு எந்திர மேடை போன்ற வற்றின் T துளைகளில் படிமான மாகப் பொருத்துவது.

**teak :** *(மர.வே.)* **தேக்கு :** கிழக்கு இந்தியாவில் காணப்படுகிற பெரிய வடிவிலான மரம். இதன் மரக்கட்டை மிக நீடித்து உழைக் கக் கூடியது. கப்பல் கட்டுமானத் துக்கும் இருக்கைச் சாதனங்கள் செய்யவும் மிகவும் விரும்பப்படு வது.

**tears : கிழிதல் :** தொலைக்காட் சித் திரையில் ஓசை காரணமாக

சிடைமட்டமாக ஏற்படுகிற பாதிப்பு, படம் கிழிவது போன்று தோன்றும்.

**technical** : **தொழில் நுட்பம்** : குறிப்பிட்டதொரு கலை அறிவியல் பிரிவு, வேலை, தொழில் போன்றவை தொடர்பான தொழில் நுட்பப்பள்ளி, தொழில் நுட்பச் சொல் போன்றது.

**technical director** : **தொழில் நுட்ப இயக்குநர்** : ஒரு ஸ்டுடியோவில் தொழில் நுட்பக்கருவிகள், ஊழியர்களை மேற்பார்வையிடுவர்.

**technicolour** : **திரைப்பட வண்ணம்**: திரைப்படத் துறையில் வண்ண ஒளிப்பட நுட்பமுறை.

**telekinesis** : **சேய்மை இயக்கு திறம்**: தொடர்பின்றியே தொலைவிலுள்ள பொருளை இயக்கும் அருந்திறம்.

**telemechanics**: **வானிலை இயக்கு திறல்**: தொலைவிலுள்ள எந்திரங்களை வான் அலையாற்றல் மூலம் இயங்கச் செய்யும் கலை.

**technology**: **தொழில் நுட்பவியல்**: தொழில் துறைக் கலைகள் சம்பந்தப்பட்ட அறிவியல் துறை.

**tee** : **இணைப்பி**: (குழாய்.) வெவ்வேறு குறிக்களவுள்ள குழாய்களைப் பொருத்துவதற்கான இணைப்பி அல்லது குழாயின் ஓட்டத் திசையை மாற்றுவதற்கான இணைப்பி. மாட்டுத் தலை இணைப்பியில் நுழைவாயைவிடத் திறப்பு வாய் பெரிதாக இருக்கும். நேர் இணைப்பியல் இரு வாய்களும் சம அளவில் இருக்கும்.

**telecast** : **தொலைக்காட்சி ஒளி பரப்பு** : தொலைக்காட்சி ஒளி பரப்பு.

**telecommunication** : **தொலைத் தொடர்பு** : தொலைப் போக்குவரத்து, தந்தி, கடலடிவடக்கம்பி, கம்பியில்லாத் தந்தி-தொலைபேசி முதலியன வழியாகத் தொலைச் செய்தி அறிவிப்பு முறை.

**telecon** : **வானொலித் தொலை முறை அமைவு** : வானொலி-தந்தி வட இணைப்பு மூலமாகத் தொலைக்காட்சித் திரையில் செய்தி ஒளியிட்டுக் காட்டுவதன் மூலம் பலர் ஒருங்குகூடி கலந்தாய்வு செய்ய வழிகோலும் அமைவு.

**telegraph** : (மின்.) **தந்தி** : கம்பி வழியே செய்திகளை அனுப்புவதற்கும் பெறுவதற்குமான சாதனம். இதன் வழியே எழுத்துகளைக் குறிக்கின்ற வகையிலான மின் சிக்னல்கள் அனுப்பப்படும்.

**telegraph - key** : **தந்தி மின்னோட்ட இயக்கமைவு** : தந்தித் துறையில் மின்னோட்டத்தைப் பாய்ச்சவோ தடுக்கவோ வகை செய்யும் பொறியமைவு.

**telekinema** : **திரைக்காட்சி**: தொலைக்காட்சி மூலம் திரைப் படங்கள் காட்டும் திரைக்காட்சி.

**telemeter** : **தொலைவுமானி** : நில அளவையிலும் பீரங்கி சுடும் பயிற்சியிலும் தொலைவைக்கணிப்பதற்கான கருவி.

**telemeter** : **தொலைக் கணிப்பியல்** :

**telephone** : (மின்) **தொலைபேசி** : குரலை நீண்ட தொலைவுகளுக்கு மின் சிக்னல் வடிவில் அனுப்புவதற்கான சாதனம்.

**telephone drop** : (மின்.) **தொலைபேசி விழுதுண்டு**: தொலைபேசி சுவிட்ச் பலகையில் கவன ஈர்ப்புத் துண்டுகளில் ஒன்று கீழே விழும் போது தொலைபேசி தொடர்பாளியின் கவனம் ஈர்க்கப்

பட்டு ஒருவர் தொடர்பு கோருகிறார் என்பதை அறிந்து கொள்வார்.

**telephone exchange** : *(மின்.)* **தொலைபேசி இணைப்பகம் :** ஒரு பிரிவுக்குள் தொலைபேசி வைத்திருப்போர் இடையிலும், பிற இணைப்பகங்கள் மூலம் தொலைபேசி கட்டமைப்புக்குள்ளான வேறு ஒரு தொலைபேசியுடனும் இணைப்புகளை அளிக்க சுவிட்ச் பலகைகளைக் கொண்ட மத்திய அமைப்பு.

**telephone hook switch** : **தொலைபேசி கொக்கிவிசைக்குமிழ்:** தொலைபேசியில் ரிசீவரின் எடை காரணமாகச் செயல்படுகின்ற பிரிநிலை நெம்புகோலினால் கட்டுப்படுத்தப்படும் சுவிட்ச். தொலைபேசி மணி அடிப்பதுமற்றும் பேசுவதற்கான சர்க்கிலும் செயல்படுவது ஆகியவற்றைக் கட்டுப்படுத்தப் பயன்படுவது.

**telephony : தொலைபேசி இயக்கம் :** ஒரு தொலைபேசி அல்லது தொலைபேசிகள் தொகுப்பின் இயக்கம்.

**telephoto** : *(மின்.)* **தொலை ஒளிப்படம் :** தொலை நோக்காடியுடன் ஒளிப்படக் கருவியை இணைத்து ஒளிப்படம் எடுக்கும் முறை.

**telephoto lens ; தொலைநோக்கி லென்ஸ் :** மிகத் தொலைவில் உள்ள பொருட்களின் மிகப் பெரிய காட்சிகளை அளிப்பதற்காகப் பயன்படும் மிகக் குறுகிய கோணமுள்ள லென்ஸ்.

**teleprinter** : *(அச்சு.)* **தொலை அச்சடிப்பான் :** தொலைபேசி இணைப்பகத்தின் மூலம் தந்தி முறையில்தட்டச்சடிக்கும் பொறி.

**telescope** : *(இயற்.)* **தொலைநோக்கி :** தொலைவில் உள்ள பொருளின் தெளிவான, பெரிய காட்சியைப் பெறுவதற்காகப் பயன் படும் பார்வைக் கருவி.

**telescoping gauge**: *(உலோ.)* **தொலைநோக்கி அளவுக் கருவி:** துளைகளின் உட்புற விட்டத்தை அளவிடுவதற்கான ஒரு கருவி. இதில் அளவிடுகருவி துளையினுள் செருகப்பட்டு இயன்றவரை உச்ச அளவுக்கு விரிவடைய அனுமதிக்கப்படுகிறது. பின்னர் அளவிடு கருவியைப் பூட்டிவெளியேஎடுத்து ஒரு நுண்ணளவைமானி மூலம் விட்டம் அளவிடப்படுகிறது.

**teletherapy**: *(மருந்.)* **கதிரியக்க மருத்துவம் :** புற்று நோய் முதலியவற்றில் உடலில் உள்ளிழைமங்களைக் கதிரியக்கக் கதிர்களால் (x-rays) குணப்படுத்தும் முறை.

**teletype** : *(மின்.)* **தொலைத் தட்டச்சு :** சாதாரண மொழியைக் குழூஉக் குறிகளைச் சாதாரண மொழியாகவும் தட்டச்சு செய்து தரும் ஓர் எந்திரம். இது ஒரு தட்டச்சுப் பொறி போன்றே அமைப்புடையது.

**television : தொலைக்காட்சி :** தொலைவில் நடப்பதைக் காணும் சாதனம். ஒரு காட்சியை வரியீடு முறையின்படி சிறு சிறு துணுக்குகளாகப் பிரித்து எண்ணற்ற நுண்ணிய மின் சைகைகளாக மாற்றி அனுப்பும் ஒரு வகை தகவல் தொடர்புச் சாதனம். பெறப்படும் மின் சைகைகள் மறுபடி ஒளி-நிழல் துணுக்குகளாக மாற்றப்படும் போது தொலைக்காட்சித் திரையில் ஆரம்பத்தில் படமாக்கப்பட அசல் காட்சியாகத் தெரிகிறது.

**television camera tube** : **தொலைக்காட்சி படக் குழாய் :** ஒரு காட்சியில் ஒளி நிழல் பகுதிகளை மின் குறிகளாக மாற்றுவதற்குப்


பயன்படுத்தப்படும் மின்னணுக் குழாய்.

**television channel** : *(மின்.)* **தொலைக்காட்சி அலைவரிசை :** படங்களையும் ஒலித் தகவல்களையும் ஒளிப்பரப்புவதற்காக ஒவ்வொரு தொலைக்காட்சி நிலையத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள அலைவெண் வரிசை.

**telltale** : *(எந்.)* **நிகழ்ச்சிப் பதிவீட்டுக் கருவி** : எந்திரம் அல்லது வேலையின் ஒரு பகுதி மீது இணைக்கப்பட்ட தற்காலிகக் கருவி குறிப்பிட்ட வேலை செய்து முடிக்கப்பட வேண்டும் என்பது போன்ற தகவலை பணியாளருக்குத் தெரிவிக்கும் நோக்கம் கொண்டது.

**tellurium: டெல்லூரியம்(மண்மம்)**: எளிதில் உடைய, அரிய வெண்ணிற உலோகத் தனிமம். துத்தநாகத்தைத் தூய்மைப்படுத்துதற்கும், ஈயத்துடன் சேர்த்து உலோகக்கலவை தயாரிப்பதற்கும் பயன்படுகிறது.

**telpher line**: **தொங்கு இருப்பூர்தி**:



தொங்கு இருப்பூர்தி

இங்கே காணும் ஒற்றைத் தண்டவாளத்தில் ஓடும் சக்கர ஆதாரத்தில் தொங்கியவாறு மின்விசையால் இயங்குகிற சரக்கு இருப்பூர்தி.

**temper** : *(உலோ.)* **செம்பதமாக்கல் :** எஃகு வகையில் அடுத்தடுத்து வெப்பமூட்டிக் குளிரச் செய்வதன் மூலம் சரியான உறுதியும் நீட்டிப்பு ஆற்றலுமுடைய நிலைக்குப் பக்குவப்படுத்துதல்.

**temperament :** *(உள.)* **மனப்பாங்கு** : மனிதனின் உணர்ச்சி, செயல்களுக்கு அடிப்படையாக இயல்பில் அமைந்த உடல்நிலைப் பாங்கு; உளப்பாங்கு. இது அவனது நரம்பு மண்டலம், நாளமில்லாச் சுரப்பிகள் ஆகியவற்றினால் உண்டாகிறது.

**temperature** : *(இயற்.)* **வெப்பநிலை** : ஒரு பொருள் பெற்றுள்ள வெப்பத்தின் அளவு.

**tempering : குழையமாகு :** வேலைக்கு ஏற்ற வகையிலான அளவுக்கு உருக்கிற்குக் கடினத்தன்மையை ஏற்றுவதற்கான பக்குவமுறை. கரிம உருக்குகளைப் பொருத்தவரையில் ஒரு உருக்குத் துண்டை மிகச் சிவந்த நிலைக்குச் சூடேற்றி அதை எண்ணெய் அல்லது நீரில் அமிழ்த்தி எடுத்து நிறத்தைச் சோதித்தபின் இறுதியாக அமிழ்த்துவர். விசேஷ உருக்குகள் வெப்பப் பக்குவ முறையில் கடினமாக்கப்படுகின்றன.

**tempering sand** : *(வார்.)* **மணல் பதமாக்கு** : அச்சுகளைத் தயாரிப்பதற்காக வார்ப்பட மணலுடன் நீரைச் சேர்த்துத் தகுந்த ஈரப்பதத்தை அளித்தல்.

**template** : *(எந்.)* **வடிவத் தகடு** : தற்காலிகமான வடிவக் குறிப்பு அல்லது மாடல். இதைப் பயன்படுத்தி வேலை வடிவம் குறிக்கப்படுகிறது. அல்லது செய்த வேலையின் வடிவம் சரியா என்று இதைப் பயன்படுத்தி சோதிக்கப்படுகிறது.

**temple or tenter hook**: **குறுக்குக் கழி** : கையால் நெசவு செய்யும் துணி ஒரே சீரான அகலத்தில் இருக்கும் வகையில் துணியை விறைப்பாக இழுத்துப் பிடித்து வைத்திருக்கும் சாதனம்.

**tenacity** : **செட்டிமை** : கிழித் தெறிய முற்படுகிற விசைகளை எதிர்த்து நிற்க ஒரு பொருளுக்கு உள்ள தன்மை.

**tenon** : (மர.வே.) **நாக்கு** : ஒரு மரக்கட்டையின் விளிம்பில் தனியே புடைத்து நிற்கும் நாக்கு. இது செதுக்குத் துணையுடன் மிகச் சரியாகப் பொருத்தும். இது செதுக்குத் துளை நாக்கு இணைப்பு எனப்படும்.

**tenon saw** ; (மர.வே.) **முதுகு ரம்பம்** : வேலை மேடைமீது மரத் தொழிலாளர் பயன்படுத்துகிற முதுகுப் புறத்தில் கெட்டிப் பட்டையுள்ள சாதாரண முதுகு ரம்பம்.

**tensile** : (பொறி.) **இழுதன்மையுடைய** : எளிதில் அறுத்துவிடாமல் நீளமாக இழுக்கத்தக்க, நீட்டத்தக்க, இழுதிறன் கொண்டது.

**tensile strain** : (பொறி.) **விறைப் பாற்றல்** : நீளவாட்டில் இழுத்தல் அல்லது நீட்டுதல் நிலையில் ஏற்படும் எதிர்ப்பு, நசுக்குவதற்கு நேர்மாறானது.

**tensile strength** : (பொறி.) **இழுதாங்கு வலிமை** : இழுக்கும் விசையை எதிர்த்து நிற்க ஒரு உலோகக் கட்டை அல்லது பொருளுக்குத் தேவையான வலிமை. (இயற்) பிய்த்துக்கொள்ளும்வரை ஒரு பகுதி தாங்கி நிற்கிற, நேரடியாக செலுத்தப்படுகிற இழுவிசை. இது ஒரு சதுர அங்குல குறுக்குப் பரப்புள்ள தண்டை உடைப்பதற்குத் தேவையான இவ்வளவு பவுண்ட் விசை என எண்களில் அளிக்கப் படுகிறது.

**tensile stress** : (பொறி.) **இழுப்புத் தாங்கு விசை** : ஒரு தண்டு அல்லது ஒரு பொருள் இழுப்புக்குள்ளாகும்போது அதை எதிர்த்துத் தாங்கி நிற்பதற்காகத் தோன்றும் விசை.

**tension** : **இழுவிசை** : இழுக்கின்ற அழுக்தலுக்கு நேர் எதிரானது.

**tension spring**: (எந்.) **இழுப்பு விசை சுருள் வில்**: இழுக்கும் விசையின் கீழ் செயல் படுகின்ற வகையில் வடிவமைக்கப் பட்ட இழுப்பு விசை திருகு சுருள்வில்.



இழுப்புவிசை சுருள்வில்

**terminal** : (க.க.) **முடிவிடம்** : சுழல் படிக்கட்டு தாங்கு தூண் அல்லது தாங்கு தூணின் பூச்சு. (மின்) மின் சாதனம் ஒன்றுக்கும் வெளி சர்க்கியூட்டுக்கும் இடையிலான இணைப்பு நிலை.

**termite**:(உயி.) **கறையான்(செல்)**: இது எறும்புபோல் தோற்றமுடைய "வெள்ளை எறும்பு." இது மரங்களை அழிக்கிறது. இது பெரிய அளவில் கடினமான மண் புற்றுகளை உருவாக்குகிறது.

**term of patent** : **காப்புரிமைக் காலம்** : ஒருவருடைய காப்புரிமைக்கு முழுப் பாதுகாப்புக் காலம். இது நீட்டிப்பு எதுவும் இன்றி பதினேழு ஆண்டுகள் தொடங்கும்.

**ternary alloy** : (உலோ.) **மூவுலோகக் கலவை** : மூன்று வேறுபட்ட உலோகங்கள் அடங்கிய ஒரு சிக்கலான உலோகக் கலவை.

**ternary steel** : (உலோ.) **உருக்கு கலோகம்** : இரும்பு, கார்பன், மற்றும் ஏதேனும் ஒரு விசேஷத் தனிமம் கலந்த எல்லா வகையான கலோக உருக்குகளுக்குமான பொதுப் பெயர்.

**terneplate** : (உலோ.) : **மட்டத் தகரம்** : காரீயம் 80 விழுக்காடும், ஈயம் 20 விழுக்காடும் கலந்த ஒரு கலோகத்தைக் கொண்டு இரு புறமும் பூச்சு அளிக்கப்பட்ட மென்மையான கருப்பு நிற சாதாரண உருக்குத் தகடுகள்.

**terra cotta** : **சுட்ட களி** : கட்டடங்களின் வெளிப்புற அலங்கார வேலைப்பாடுகளுக்குப் பரவலாகப் பயன்படுத்தப்படுகிற சுட்ட களி.

**terrazzo flooring** : **கல்துண்டுத் தரை** : கருங்கல் துண்டுகளும் சிமென்டும் கலந்து பரவியது போன்று மெருகு ஏற்றப்பட்ட தரை, சிமென்டில் பல் வண்ணக் கல் துண்டுகளைப் பதித்து பாவிய தரை,

**tertiary colour** : **மூன்றாம் வகை வண்ணம்**; ஆரஞ்சு, பச்சை, ஊதா போன்ற இரண்டாவது வகை வண்ணங்களை இரண்டிரண்டாகக் கலப்பதன் மூலம் பெறப்படும் ஒரு வண்ணம். இதன்மூலம் ஆலிவ், எலுமிச்சை. சிவந்த பழுப்பு வண்ணங்கள் பெறப்படும்.

**terylene** : (வேதி.) **டெரிலீன்** : ஒருவகைச் செயற்கை நூல்வகை. எத்திலீன் கிளைக்கோல், டெரப்தாலிக் அமிலம் போன்ற வேதியியல் பொருட்களாலானது. இது மிக வலிமை வாய்ந்தது; எளிதில் சலவை செய்யக்கூடியது. வெயிலாலும், வெந்நீராலும் பாதிப்புக்குள்ளாகாதது.

**tessera** : (க.க.) **பல்வண்ணப் பட்டைத் துண்டுப்பாளம்**: மொசைக் தாழ்வாரம், நடைகள் ஆகியவற்றை அமைக்கப் பயன்படுகிற சிறிய சதுர வடிவிலான கல் அல்லது ஓடு.

**test bar** : (வார்.) **சோதனைக் கட்டை**: பழுப்பு வார்ப்பு இரும்புத் துண்டை வைத்து சோதனை. அதன் குறுக்கு வாட்டு வலிமை, உடையும் தன்மை, சுருங்கும் தன்மை, குளிர்வடையும் தன்மை, கெட்டித் தன்மை ஆகியவை சோதிக்கப்படும். சோதனைக்கான அத்துண்டுகள் பொதுவில் 3.8செ. மீ. குறுக்களவும் 38செ.மீ. நீளமும் உடையவை.

**test bench** : (தானி. மின்.) **சோதனை மேடை**: தானியங்கி மின் சாதனங்களை சோதிப்பதற்குப் பல்வேறு கருவிகள் மற்றும் அளவு மானிகள் இணைக்கப்பட்ட ஒரு பெஞ்சு அல்லது மேஜை.

**tester** ; **கட்டில் மேற்கட்டு** : படுக்கைக்கு மேலே படுக்கைக் கால்கள் தாங்கி நிற்கிற விதானம்,

**testing** : (எந்.) **சோதித்தல்** : எந்திரக் கருவிகள் அல்லது மின் சாதனம் வேலைக்கான நிலையில் உள்ளனவா என்று கண்டறிவதற்கான ஒரு முறை.


**testing machine** : (பொறி.) **சோதிப்பு எந்திரம்**: ஒரு பொருளின் உறுதி மற்றும் இழுவைத் தன்மையை சோதிப்பதற்கான ஒரு எந்திரம்.

**testing set** : (மின்.) **சோதனை செட்** : வயரிங் அல்லது ஒரு சாதனம் நல்ல செயல் நிலையில் உள்ளதா என்று நிர்ணயிப்பதற்கான கருவிகள் அல்லது சாதனங்கள்.

**test lamp** : (மின்.) **சோதனை விளக்கு** : நன்கு காப்பிடப்பட்ட பொருத்திக்குள் அமைந்த சாதாரண மின் பல்பு.

**test pattern** : **சோதனைப் பாணி**: பல கோடுகள், வளையங்கள் முதலியவை அடங்கிய ஒரு வரைபடக் கருவியை சோதித்து சரிப்படுத்துவதற்காக அனுப்பப்படுவது. அனுப்பு கருவியை சோதிப்பதற்குப் பயனாவது,

**test-tube** : **சோதனைக் குழாய்** : வேதியியல் ஆய்வுக் கூடங்களில் பயன்படுத்தப்படும் அடிப்பகுதி மூடியுள்ள குழல் வடிவக் கண்ணாடிக் கலம்.



**test-tube baby** : **சோதனைக் குழாய்க் குழந்தை**:

செயற்கைக் கருவூட்டுமுறை மூலம் பிறந்த குழந்தை.

**tetany** : *(நோயி.)* **முறை நரப்பிசிவு நோய்** : உடலின் ஒரு சிறு பகுதியில், அதாவது, கைகள், பாதம், குரல்வளை போன்றவற்றில், இரத்தத்தில் கால்சிய அயனிகள் (அயனியாக்கிய கால்சியம்) இல்லாததன் காரணமாகத் தசைகள் சுருங்கி விடுவதால் உண்டாகும் நோய்.

**tetraethyl lead**: *(வேதி.)* **டெட்ரா எத்தில் காரீயம்** : நச்சுத்தன்மையுள்ள எளிதில்ஆவியாகிற திரவம். என்ஜினில் கோட்ட இலக்கத்தைக் குறைப்பதற்கும் பெட்ரோலுடன் சிறிதளவு சேர்க்கப்படுவது.

**tetrode** : *(மின்.)* **நான் முனையம்** : எதிர்முனை, தகட்டுக் கட்டுப்பாட்டுவலை, திரைவலை உட்பட நான்கு முனையங்களையுடைய ஓர் எலெக்ட்ரான் குழல்.

**tetrode transistor**: *(மின்.)* **நான் முனைய மின் பெருக்கி**: நான் மின் முனையங்களைக் கொண்ட ஒரு மின் பெருக்கி (டிரான்சிஸ்டர்).

**text** : *(அச்சு.)* **வாசகம்** : ஒரு நூலில் அல்லது அச்சிடப்பட்ட வேறு ஏதேனும் ஒன்றில் அடங்கிய வாசகம்.

**taxt type** : *(அச்சு.)* **வாசக எழுத்து அலகு வகை** : அச்சிடப்பட்ட எழுத்துக்களின் வடிவளவைக் குறிக்கின்ற அலகு.

**thawing** : *(குளி.பத.)* **உருகியக்கம்** : பனிக்கட்டியைக் கூடுதலாக வெப்பமூட்டுதல் மூலம் உருகி நீராக மாற்றுதல்.

**T-head engine** : *(தானி.)* **T தலை என்ஜின்** : T என்னும் எழுத்து போன்ற வடிவமைப்பு கொண்ட மோட்டார் பிளாக்கின் குறுக்கு வெட்டுப் பகுதி வால்வுகள் என்ஜினில் இரு புறங்களிலும் அமைந்திருக்கும்.எனவே ஒரு கேம் ஷாப்டுகள் இரு கேம் ஷாப்ட்டிரைவ் கீர்கள் தேவை. விலையுயர்ந்த கட்டுமானம்.

**theorem** : **தேற்றம்** : எண்பிக்கத்தக்க ஓர் உண்மை நிரூபிக்கப்படவேண்டிய ஒரு கூற்று.

**theoretical** : **கொள்கையளவில்**: ஒரு கருத்துக் கோட்பாடு தொடர்பான அல்லது அளவுச் சார்ந்தன; அனுமான; கற்பிதமான.

**theory** : **கோட்பாடு** : ஒன்றுக்கொன்று மிக நெருங்கிய தொடர்புள்ள கவனிப்புகள் அல்லது தோற்றங்கள் பலவற்றை விளக்கும் முயற்சி.

**therapeutic** : *(நோயி.)* **நோய் நீக்க வியல்** ; நோய்களைக் குணப்படுத்துவதற்கான கலை.

**therlo** : *(உலோ.)* **தெர்லோ** : தாமிரம், அலுமினியம், மாங்கனீஸ் ஆகியவை அடங்கிய கலோகம்.

**thermal agitation** : *(மின்.)* **வெப்பக் கிளர்ச்சி** : ஒரு மின்சுற்று வழியில் எலெக்ட்ரான்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அசைவதால் உண்டாகும் ஓசை.

**thermal conductivity** : *(பற்.)* **வெப்பக் கடத்து திறன்**: (பற்றவைப்பு) ஓர் உலோகப் பொருளின் வழியே வெப்பத்தைக் கடத்துவதில் அந்த உலோகத்துக்கு உள்ள திறன். அந்த உலோகம் எவ்வளவு வேகத்தில் வெப்பத்தைக் கடத்துகிறது என்பதைத் தீர்மானிப்பதில், வெப்பம் பெறுவதற்கு முந்தைய நிலை. தேர்ந்தெடுக்கப்பட்ட வெப்ப ஊது குழல் அளவு ஆகியவற்றையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

**thermal efficiency** : *(தானி.)* **வெப்பத் திறம்பாடு:** ஓர் எஞ்சினின் விசை உற்பத்தி அளவுக்கும், விசை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் எரிபொருளிலுள்ள ஆற்றலுக்குமிடையிலான தொடர்பு.

**thermal heating : வெப்பச் சூடாக்கம் :** வாயுமண்டலத்தின் வழியாக ஒலியினும் வேகமாகப் பயணம் செய்யும்போது உண்டாகும் வளி இயக்க வெப்பம்.

**thermal jet engine** : *(வானூ.)* **வெப்ப ஜெட் என்ஜின் :** பின்புறமான பீச்சுக்கு வாயுக்களை விரிவாக்க வெப்பத்தைப் பயன்படுத்தும் ஒரு ஜெட் என்ஜின். இது விமான ஜெட் என்ஜினின் வழக்கமான வடிவம்.

**thermal reaction** : *(குழை.)* **வெப்ப விளைவு :** திடவடிவைப் பெறுகையில் வேதியியல் விளைவால் பிளாஸ்டிக்கில் தோன்றும் வெப்பம்.

**thermal runaway** : *(மின்.)* **மீள்விளைவு வெப்ப உயர்வு** : ஒரு மின் பெருக்கியில் (டிரான்சிஸ்டர்) திரள் மின்னோட்டத்திலும், இணைப்பு வெப்ப நிலையில் ஏற்படும் மீள்விளைவு உயர்வு.

**thermal unit** : *(இயற்.)* **வெப்ப அலகு :** வெப்பத்தைக் கணக்கிட அல்லது ஒப்பிடுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் அலகு. இதர அளவுகளின் ஒப்பிடுவதற்கான நிர்ணய அலகு.

**thermionic emission** : *(மின்.)* **கதிரியக்க வெப்ப உமிழ்வு** : சூடாக்கிய எதிர்மின் முனையிலிருந்து எலெக்ட்ரான்கள் உமிழப்படுதல்.

**thermionics** : *(மின்)* **கதிரியக்க வெப்பவியல் :** வெப்பத்தின் மூலம் எலெக்ட்ரான்கள் உமிழப் படுவதைப் பற்றி ஆராயும் அறிவியல் துறை.

**thermistor** : *(மின்.)* **வெப்பத் தடை மின்கலம் :** எதிர்த்தாக்களவில் வெப்பநிலை பெறத்தக்க தாக்கப்பட்ட, அதனால், வெப்பத் தடையுடையதாக்கப்பட்ட மின் கலம்.

**thermit** : *(பொறி.)* **மீவெப் பூட்டி :** அலுமினியப் பொடியும் இரும்பு, குரோமியம் அல்லது மாங்கனீஸ் ஆக்சைடும் கலந்த பொடி. தெர்மிட் (பொடி வைத்துப் பற்ற வைத்தல்) முறையில் பற்றவைப்பதற்கு இது பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

**thermit (pressure) welding: மீவெப்ப அழுத்தமுறை பற்றவைப்பு:** அழுத்த முறையில் பற்றவைக்கும் இதில் தெர்மிட் விளைவு உண்டாக்கும் திரவப் பொருட்கள் மூலம் வெப்பம் பெறப்படுகிறது.

**thermit welding** : **மீவெப்பூட்டி பற்றவைப்பு** : அழுத்தம் பயன்படுத்தப்படாத (உருகு) பற்றவைப்பு முறை, இதில் தெர்மிட் விளைவினால் உருகும் உருக்கிலிருந்து வெப்பம் பெறப்படுகிறது. மேற்படி விளைவின்போது உருக்கு உருகி அதுவே வெடிப்புகளை, கீறல்களை நிரப்பப் பயன்படுகிறது:

**thermo-couple** : *(மின்.)* **வெப்ப மின்னாக்கி** : இது ஒருவகை மின்னாக்கி. வெவ்வேறான இரு உலோகங்களால் ஆன தண்டுகள் அல்லது வயர்களை ஒன்றாகப் பற்ற வைத்த பின்னர் இவ்விதம் இணைந்த பகுதியைச் சூடேற்றினால் தண்டு அல்லது வயர்களின் மறுமுனையில் மின்சாரம் தோன்றும். மிகுந்த வெப்பத்தை அளிக்கும் அதிவெப்பமானிகளில் இது பயன்படுத்தப்படுகிறது.

**thermocouple meter** : *(மின்.)* **இணை மாழை வெப்ப மானி ;** ஒரே மாதிரியாக இல்லாத இரு உலோ

கங்கள் ஒன்றாகப் பற்றவைக்கப் பட்டு இணைப்பு சூடாக்கப்படும் போது திறந்த முனைகளின் குறுக்கே ஒரு நேர் மின்னோட்ட அழுத்தம் உருவாகிறது என்ற விதியினை அடிப்படையாகக் கொண்ட ஒரு வெப்ப அளவி. வானொலி அலைவெண் மின் னோட்டங்களை அளவிட இது பயன்படுத்தப்படுகிறது:

**thermo dynamics :** *(பொறி.)* **வெப்ப இயக்கவியல் :** வெப்பத்தை ஆற்றலின் வடிவமாக அல்லது வேலைக்கான ஒரு சாதனமாகக் கருதி ஆராய்கிற அறிவியல் பிரிவு.

**thermoelectric metals : வெப்ப மின் உலோகம்:** உயர் வெப்பத்தை அளவிடுவதற்காக வெப்ப இணைப்பிகளில் பயன்படுத்தப் படுகிற உலோகங்கள் அல்லது கலோகங்கள். பிளாட்டினம் நிக் கல், தாமிரம், ரேடியம் போன் றவை அதிகம் பயன்படுத்தப்படு கின்றன.

**thermograph:** *(வானூ.)* **வெப்ப அளவுக் கருவி :** வெப்ப அளவைப் பதிவு செய்யும் கருவி.

**thermometer : வெப்பமானி :** வெப்ப நிலையிலான மாற்றங் களை அளவிடுவதற்கான அளவீட் டுக் கருவி.

**thermonuclear :** *(விண்.)* **அணு வெப்பாற்றல் தொடர்பு சார்ந்த :** அணு எந்திரத் தாக்கு ஆற்றலுக் கும் வெப்ப ஆற்றலுக்குமிடையே யுள்ள தொடர்பு சார்ந்த.

**thermonuclear reaction :** *(வேதி.)* **அணுக்கருப் பிணைப்பு விளைவு :** எடை குறைந்த இரு அணுக்கருக்கள் ஒன்றாக இணைந்து எடை கூடிய அணு வாக மாறும்போது மிதந்த ஆற் றலைவெளிப்படுத்துகிற விளைவு.

**thermopile :** *(மின்.)* **கதிரியக்க வெப்பக் கூற்றுமானி :** வெவ் வேறான பொருட்களை மாற்றி மாற்றி வரிசையாக ஒரு தொகுப் பாக அமைத்து இந்த இணைப்பு களைச் சூடேற்றினால் மின்சாரம் உற்பத்தியாகும்.

**thermoplastic :** *(குழை.)* **உருகு குழைமம் :** குழைமக் (பிளாஸ்டிக்) குடும்பத்தில் ஒரு வகை. இக் குடும் பத்திலான ஒரு வகைப் பிசின் பொருளை மீண்டும் மீண்டும் வெப்பமேற்றி வடிவை மாற்ற லாம். குளிர்ந்தபின் அது உறுதி யாகிவிடும்.

**thermoset :** *(குழை.)* **வெப்ப நிலைப்பி :** ஒரு இரண்டாவது வகை பிளாஸ்டிக் பிரிவு. இந்த வகையின் கீழ்வரும் குடும்பங் களைச் சேர்ந்த பிசின்கள் ஒரு அச் சுக்குள் வைக்கப்பட்டு வெப்பமும், அழுத்தமும்செலுத்தப்படும்போது ஏற்படும் பிணையால் வேதியியல் மாற்றங்களுக்கு உட்பட்டு அச் சுக்கு ஏற்ற வடிவைப்பெற்று மீண் டும் உருக்க முடியாதபடி நிலைத்த நிலையைப் பெறுகிறது.

**thermosiphon system:** *(தானி.)* **வெப்ப வடிகுழாய் ஏற்பாடு :** இவ் விதக் குளிர்விப்பு முறையானது வெப்பநீர் மேலே செல்ல குளிர்ந்த நீர் அடியில் நிற்கும் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டது. என்ஜின் காரண மாக வெப்பமடையும் நீர் ரேடி யேட்டரில் மேலுக்குச் சென்று குளிர்வடைந்து மீண்டும் கீழே வரும்போது ஒப்புநோக்கு கையில் குளிர்ந்து உள்ளது. பிறகு அது வெப்பமடைந்து மேலே செல்கிறது.

**thermostat : வெப்ப நிலைப்பி :** வெப்பஅளவைத் தானாக ஒழுங்கு படுத்திக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு கருவி.

**thermostatic: வெப்பச் சீர்நிலைக் கருவி:** வெப்பச் சீர்நிலை (வெப்ப மேற்று) நீராவி மூலம் வெப்ப மேற்றும் முறைகளில் காற்றையும் படிவுத் திவலைகளையும் நீராவி வெளியேற வாய்ப்பின்றி ரேடி யேட்டரிலிருந்து வெளியேற்றுதல். வெளியேற்று வால்வு எளிதில் ஆவியாகிற திரவம் நிரம்பிய இடைத் திரையினால் இயக்கப்படு கிறது. இது விரைவாக சுருங் கவோ, விரியவோ செய்கிறது.

**thermostatic element : வெப்பச் சீர்நிலைக் கோட்பாடு :** வெப்பச் சீர் நிலை இயக்கி குறிப்பிட்ட வெப்ப நிலையில் செயல்படுவதற் கென்றே உருவாக்கப்பட்ட இயக்கி அல்லது கருவியானது அக்குறிப்பிட்ட வெப்பத்தைப் பெறும்போது வால்வைத் திறக் கும் அல்லது மூடும் சுவிட்ச் அல் லது வேறு உறுப்புகளைஇயக்கும். பொதுவில் இது சுருள் வடிவில் இருக்கும். அல்லது ஈதர் அல்லது வேறு திரவம் நிரப்பப்பட்டு இரு புறங்களிலும் சீலிடப்பட்ட வெற்று உலோகக் குழலாகவும் இருக்கலாம். விரியும்போது அல் லது சுருங்கும்போது ஒரு பட்டாம் பூச்சி வால்வை இயக்கும் இரு உலோகப் புயமாகவும் இருக்க லாம். இது அவ்வளவாகப் பயன் படுத்தப்படுவதல்ல.

**thickness gauge or feeler :** (எந்.) **பருமன் அளவுமானி :** இது பேனாக்கத்தி போன்ற வடிவம் கொண்டது. இதன் விளிம்புகள் ஓர் அங்குலத்தில் ஆயிரத்தில் இவ் வளவு பங்கு என்ற அளவில் பரு மன் வித்தியாசப்படும். மோட் டார் வாகன வால்வுகள் போன்ற உறுப்புகளில் இடைவெளி அளவை சரிப்படுத்தப் பயன்படுத்தப்படும்.



பருமன் அளவு மானி

**thickness ratio : (வானூ.) திண்மை விகிதம்:** விமான இயக்கக் கட்டுப்பாட்டுப் பரப்புகளின் அதிகபட்ச பருமனுக்கும் அவற் றின் குறுக்குக் கோட்டுக்கும் இடையே உள்ள விகிதம்.

**thick space : (அச்சு.) தடிப்பு இடை வெளி :** எந்த ஒரு குறிப் பிட்ட முகப்பிலும் மூன்று முதல் ஒரு 'யெம்' வரையில் அமைக்கப் பட்ட இடைவெளி.

**thimble : விரற்சிமிழ் :** சிறுகுழாய் (1) போல்ட், பின் போன்று ஏதே னும் ஒன்றின் உள்ளே அல்லது அதன் மீது அல்லது அதைச்சுற்றி செருகுவதற்கு பயன்படுத்தப்படு கிற, வழக்கமாக உலோகத்தால் ஆன சிறு குழல்.

(2) கயிறு அல்லது கேபிள் தேயாமல், பிரியாமல் இருப்பதற் காக அதன் நடுவே பொருத்தப்படு கிற குழிவுகள் கொண்ட வளை யம்.

**T hinge: (க.க.) 'T' வடிவ கீல் :** கிட்டத்தட்ட 'T' வடிவிலான கீல் பட்டையான அமைப்புடன் நேர் கோணத்தில் இணைந்த மற் றொரு பட்டையைக் கொண்டது. முக்கியமாக கதவு, கேட் ஆகிய வற்றில் பயன்படுத்தப்படுவது.

**thin space : (அச்சு.) மென் இடைவெளி :** சொற்களிடையே ஐந்து முதல் ஒரு யெம் வரை அமைக்கப்பட்ட இடைவெளி.

**thoriated-tungsten : (மின்.) தோரிய மின்னிழைமம் :** மெல்லிய தோரியம் முலாம் பூசப்பட்ட ஒரு மின்னிழைம (டங்ஸ்டன்) உமிழ்வி.

**thorium : தோரியம் :** (1) சுட ரொளி விளக்குகளின் வலைக்குப் பயன்படும் கதிரியக்க விசை யுடைய உலோகத் தனிமம்.

ஓர் அணு உலையில் நியூட்ரான்களுக்கு ஆதாரமான யுரேனியம்$_{233}$ என்ற தனிமமாக மாற்றலாம். இதன் ஆக்சைடு ($thO_2$) வாயு ஒளித்திரை வலைகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

(2) அணு எண் 90 கொண்ட ஒரு தனிமம். இது எதிர்முனை உமிழ்விப் பொருளாகப் பயன்படுகிறது.

**thixotropic** : (குழை.) **திக்ஸோட்ரோபிக்** : மிக நைசாகப் பொடி செய்த சிலிக்கா போன்ற கரையாத திடப்பொருட்கள் அடங்கிய திரவ பிளாஸ்டிக்குகள். கலத்தில் இருக்கும்போது பாகு போல் இருக்கும். பரப்பில் பூசினால் திரவமாகிவிடும். இவ்வகைப் பிசின் சரிவான பரப்பில் பூசப்பட்டால் வழிந்து இறங்காமல் பரப்பின் மீது நிலையாக இருக்கும்.

**thixotropy** : (வேதி; குழை.) **திக்ஸோட்ரோபி** : சில சேர்மானங்கள் அசையா நிலையில் கூழ்மமாக இருந்து நன்கு கிளரும்போது திரவ நிலைக்கு உள்ளாகும் தன்மை.

**thread** : **நூல்** : பட்டு, பருத்தி அல்லது கம்பளி போன்று வழக்கமாக உலோகமல்லாத பொருளால் ஆன மெல்லிய கயிறு அல்லது இழை.

**thread-cutting screws** : (எந்.) **புரிவெட்டும் திருகு** : வரிவரியாக அமைந்த வெட்டுமுனை கொண்ட ஸ்குரூக்கள் உள்ளே இறங்கும் போது புரிகள் வெட்டப்படும். இது புரி தண்டை தேவையற்றதாக்குகிறது. உலோகத் தகடுகள், மென்மைக் கலோகங்கள் பிளாஸ்டிக் போன்றவற்றில் புரியிட ஏற்றது.

**threaded sleeve** : (பட்.) **புரியிட்ட உறை** : உலோகத்தால் ஆன உள்ளீடற்ற உறைகள். வழக்கமாக உருளை வடிவில் உட்புறம் புரியிடப்பட்டது. இரு தண்டுகள் அல்லது இரு குழாய்களை இணைப்பதற்குப் பயன்படுவது.

**thread gauge** : (உலோ.வே. **புரியளவு மானி** : திருகு புரிகளின் இடைவெளியைச் சோதிப்பதற்கான அளவுமானி.

**threading** : **புரியிடுதல்** : உள்புறத்தில் அல்லது வெளிப்புறத்தில் திருகு புரிகளை அமைத்தல்.

**thread miller** : (எந்.) **புரி கடைசல் எந்திரம்** : புரிகளை இடுவதற்கும், வெட்டி வேலைப்பாடு செய்வதற்குமான கடைசல் எந்திரம்.

**thread plug**: (குழை.) **புரிசெருகு** : உள்ளிடைப்புரிகளை உருவாக்குவதற்காகச் செருகப்படுகிற வார்ப்புஅச்சுப்பகுதி. வேலைக்குப் பிறகு வெளியே திருகி எடுக்கப்பட வேண்டியது.

**thread - rolling** : (எந்.) **புரியமைத்தல்** : ஒரு உலோகக் கட்டியில் உறுதியான உருளை அல்லது அச்சைச் செலுத்தி திருகுபுரிகளை அமைத்தல். அப்போது உள்ளிருந்து உலோகச் சுருள் துணுக்குகள் வெளிப்பட்டு உள்ளே புரிகள் அமையும். இவ்விதப் புரிகள் வலுவானவை; செலவு குறைவு.

**threads per inch**: (எந்.) **அங்குல வாரிப் புரி**: இது புரியின் அளவைக் குறிப்பது. எந்த ஓர் குறுக்களவுக்கும் இவ்வளவு எண்ணிக்கையிலான புரிகள் என்று நடைமுறை அளவு உள்ளது. அதாவது ½ அங்குலக் குறுக்களவு. அங்குலத்துக்கு 13 புரி. ஓர் அங்குலக் குறுக்களவு அங்குலத்துக்கு 8 புரி. இப்படியாக புரிகளின் நோக்கம் (1) ஸ்குரூ போல்ட், நட்டு ஆகியவற்றை ஒன்றாக இருத்தி வைத்தல் (2)

திரவம் அல்லது வாயுக்களின் அழுத்தத்தை அதாவது குழாய் இணைப்புகளின் உறுப்புகளை நன்றாக இறுக்கிப் பொருத்துதல், (3) ஜாக் ஸ்குரு, பல் இணைப்பு செலுத்தி போன்றவை மூலம் விசையை செலுத்துதல், (4) மைக்ரோ மீட்டர், காலிபர் போன்ற கருவிகளின் பகுதிகளைத் துல்லியமாகப் பிரித்துஅமைத்தல்.

**thread tool :** (எந்.) **புரிகருவி :** கடைசல் எந்திரத்தில் பொருத்தும் வேலைக் கருவி. இடப்பட வேண் புரி அளவுக்கு வடிவமைப்புக் கொண்டது.

**three and four fluted drills :** (உலோ. வே.) **மூன்று மற்றும் நான்கு திருகு பள்ள துளையிடுகள் :** சுரண்டு துருவிகளுக்குப் பதில் பல சமயங்களில் பயன்படுவது. புதி தாகத் துவங்கி துளையிட அவை பயனற்றவை. ஆனால் ஏற்கென வே துளையிடப்பட்ட துருவப் பட்ட துளைகளைப் பெரிதாக்க உதவுபவை.

**three phase :** (மின் ) **மூன்று பேஸ் :** மூன்று ஏ. சி. சுற்றுகள் அல்லது 120 மின் பாகைகளில் பேஸ் வித்தியாசப்படும் சர்க்கி யூட்டுகள்.

**three-phase alternating curre -nt :** (மின்.) **மூன்று நிலை மாற்று மின்னோட்டம் :** மூன்று மாற்று மின்னோட்டங்களின் ஓர் இணைப்பு. இதில் இவற்றின் மின் னழுத்தங்கள் 120 அல்லது ஒரு சுழற்சியின் இடம் பெயர்ந்து இருக்கும்.

**three ply :** **மூவடுக்கு ஒட்டுப் பலகை :** தனித்தனியான மூன்று அடுக்குகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட ஒட்டுப் பலகை (பிளைவுட்).

**three-point suspension :** (தானி.) **மும்முனை நிலைப்பு (மோட்டார் வாகன):** மோட்டார் வாகனத்தில் என்ஜினின் எடையை மூன்று நிலைகள் தாங்கி நிற்கும் வகையில் என்ஜினை நிலைப்படுத் தும் முறை.

**three-point perspective :** (வரை.) **மும்முனைத் தொலைவுத் தோற்றம் :** ஒரு பொருளின் படத் தில் அதன் முதன்மை விளிம்பு களில் எதுவும் படப் பரப்புக்கு இணையாக இல்லாதிருக்கும் தோற்றம். ஒவ்வொரு விளிம்பு களின் தொகுதியும் தனி மறைவு முனையைக் கொண்டிருக்கும்.

**three-quarter binding: முக்கால் நூல்கட்டு :** அரைநூல் கட்டுப் (பைண்டிங்) போன்றதே, ஆனால் தோல்பகுதி நிறைய வெளியே தெரியும்.

**three-quarter floating axle:** (தானி.) **முக்கால் மிதப்பு அச்சு :** பின்புற அச்சின் உறைப்பெட்டி சக்கரங்களின் மையத் தண்டுவரை நீண்டிருக்கும். அச்சின் வெளிப்புற முனைகள் சக்கரத்தண்டின் தகட்டு விளிம்புகளுடன் பற்றவைக்கப் பட்டிருக்கும் அல்லது இணைக்கப் பட்டிருக்கும் தகடு சக்கர மையத் தண்டுடன் போல்ட்மூலம் பொருத் தப்பட்டிருக்கும். சக்கரம் ஒவ் வொன்றிலும் ஒரு பேரிங்குதான் இருக்கும். அது அச்சுத் தண்டின் உறைப்பெட்டி மேல் பொருத்தப் பட்டிருக்கும்.

**three-square file :** (தானி.) **முப் பட்டை அரம் :** மூன்று முனை கொண்ட அரம். ரம்பத்தின் பற் களைக் கூராக்குவதற்குப் பயன் படுவது.

**three-square file :** (உலோ.) **முச்சதுர அரம் :** முக்கோண அல் லது மும்முனையுடைய ஓர் அரம். இது இரம்பத்தைக் கூர்மையாக்கப் பயன்படுகிறது.

**three-way switch** : *(மின்.)* **மூன்று வழி மின் விசை:** ஒரு மின் விளக்கு அல்லது பல மின் விளக்கு களை வெவ்வேறான இரு இடங் களிலிருந்து இயக்குவிப்பதற்கான ஒரு சுவிட்ச்.

**three-wire method: மூன்று கம்பி முறை** : அமெரிக்க தர நிர்ணய அமைப்பு சிபாரிசு செய்தபடி திருகுகளில் புரிகள் நடுவில் உள்ள இடைவெளியை அளக்கும் முறை. பயன்வழி கையேட்டைக் காண்க.

**three-wire circuit** : *(மின்.)* **முக் கம்பி மின்சுற்றுவழி** : மூன்று கம்பி கள் கொண்ட மின்சுற்றுவழி அமைப்பு. இது மைய அல்லது நடு நிலைக்கம்பிக்கும், புறக்கம்பிகளில் ஏதேனும் ஒன்றுக்குமிடையிலான மின்னழுத்த வேறுபாட்டினை 120 ஓல்ட்ஸ் அளவுக்கும், இருபுறக் கம்பிகளுக்கிடையிலான மின் னழுத்த வேறுபாட்டினை 250 ஓல்ட்ஸ் அளவுக்கும் வழங்குகிறது இது இரு தொடர் வரிசை தொடுப்பு மின்னாக்கிகளின் தத் துவத்தின்படி அமைக்கப்படுகிறது.

**three wire distribution**: *(மின்.)* **முக்கம்பிப் பகிர்மானம்** : நேர் மின் னோட்ட மின்சுற்று வழிகளில் மூன்று கம்பிகள் வாயிலாக நடை பெறும் மின் வழங்கீடு. இதில் ஒரு கம்பி நேர்மின் கம்பியாகவும், இரண்டாவது எதிர்மின் கம்பி யாகவும், மூன்றாவது நடுநிலைக் கம்பியாகவும் செயற்படுகிறது. மின் விசையை நடுநிலை கம்பியி லிருந்தும், நேர்மின்கம்பி அல்லது எதிர்மின் கம்பியிலிருந்தும் எடுக்க லாம்.

**threshold** : *(க.க.)* **தலைவாயில்** : 1. ஒரு கட்டடத்தின் நுழைவு வாயில் 2. கதவுக்கு அடியில் அமைந்த மரப்பலகை, கல்பலகை, அல்லது உத்தரம்.


**threshold of sound** : *(மின்.)* **குறும ஒலி:** ஒரு குறிப்பிட்ட அலை வெண்ணில், காதால் கேட்கக் கூடிய ஒலியின் மிகக் குறைந்த அளவு.

**third-angle projection : மூன் றாம் கோண எடுப்புத் தோற்றம்** : அமெரிக்காவில் பின்பற்றப்படுகிற எந்திரவியல் வரைபடங்களில் வெவ்வேறு தோற்றங்களை எடுத் துக்காட்டல். பொதுவில் வரைபட அதாவது மேலிருந்து காட்சி, முன் பக்கக் காட்சி, பக்கவாட்டுக் காட்சி, பின்புறக்காட்சி ஆகியவை எடுத்துக்காட்டப்படும். ஒவ்வொரு காட்சியும், எடுத்துக்காட்டப் பட்ட பக்கக் காட்சியின் பின்புல னாக வைத்துக் காட்டப்படும்.

**third brush** : *(தானி.)* **மூன்றாம் பிரஷ்** : புலம்-சுற்று மின் ஓட்டத் தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மின்னாக்கியின் மின் உற்பத்தி அளவைக் கட்டுப்படுத்தும் துணை பிரஷ்.

**third-class lever** : *(எந்.)* **மூன் றாம் வகை நெம்புகோல் :** விசை யானது எடைக்கும் ஆதாரத் தானத்துக்கும் இடையே செலுத் தப்படும் நெம்புகோல்.

**thrips** : *(உயி.)* **செடிப்பூச்சி** : வயல்களிலும் தோட் டங்களிலும் வெங்கா யம், திராட்சை போன்ற செடிகளை அரிக்கும் பூச்சி வகை.




செடிப் பூச்சி

**throat** : *(க.க.)* **கணப்புத் தொண்டை:** கணப்பிலிருந்து புகை அறைக்குச் செல்லும் திறப்பு (எந்திர) துளை வெட்டும் எந்திரத்தில் வெட்டு கருவிக்குப் பின்னால் உள்ள இடைவெளி போடப்படும் துளையின் அளவு இந்த இடைவெளியின் ஆழத்தைப் பொருத்தது.

**throttle** : **திராட்டில்** : *நீராவி போன்றதைக் கட்டுப்படுத்த அல்லது அடைத்து நிறுத்த, இதைச் செய்வதற்கான ஒரு கருவி.*

**throttle valve** : *(எந்.)* **நீராவியைக் கட்டுப்படுத்தும் தடுக்கிதழ்** ; *1. மோட்டார் வாகன என்ஜினில் பெட்ரோலுடன் கலப்பதற்கு காற்று உள் புகுவதைக் கட்டுப் படுத்துவது போன்று, ஒரு குழாயில் அல்லது திறப்பில் முற்றிலுமாக அல்லது ஓரளவு மூடியபடி இருப்பதற்காகப் பொருத்தப்பட்டுள்ள மெல்லிய பட்டையான தகட்டு வால்வு. 2. நீராவிக் குழாயில் நீராவி வருவதைக் கட்டுப்படுத்துவதற்கான வால்வு.*

**through bolt**: *(எந்.)* **திரூபோல்ட்**: *இணைக்கப்பட வேண்டிய பகுதிகளில் உள்ள துளைகளில் உள்ள இடைவெளி வழியே செல்கின்ற போல்ட். இணைப்புப் பகுதிகள் முற்றிலும் நட்டுகளைப் பயன் படுத்தி முடுக்கப்படுகின்றன.*



திரூபோல்ட்

**through shake** : *மர உத்தரத்தில் வருடாந்திர வளர்ச்சி வளையங்கள் இடையே உறுதியின்றி இருக்கின்ற இடைவெளி. உத்திரத்தின் இரு முகப்பகுதிகளிலும் இது நீண்டு அமைந்திருக்கும்.*

**throw** : *(எந்.)* **விரை சூழல் இயக்கப் பொறி** : *ஓர் என்ஜினின் கிராங் ஷாப்டில் உள்ளது போன்று அச்சு மைய வேறுபாட்டு அளவு. இது பிஸ்டனின் அடியின் நீளத்தில் பாதிக்குச் சமம்.*

**throwing** : **வளைதல்** : *மட்பாண்ட வளைவு சக்கரத்தில் ஒரு மண்கலத்துக்கு வடிவம் அளித்தல்.*

**thrust bearing or thrust block** : *(எந்.)* **தள்ளு தாங்குதல் அல்லது குழை முட்டு** : *நீளவாட்டில் தள்ளு விசையைத் தாங்குகின்ற பொறி உறுப்பு.*

**thrust chamber** : *(விண்.)* **உந்து கூண்டு** : *ஒரு ராக்கெட் மின்னோடி அல்லது எஞ்சின்.*

**thrust collar** : *(எந்.)* **தள்ளு வளையம்** : *ஒரு தண்டின் மீது படிகிற அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட வளையம். தண்டு அல்லது அதன்மீது பொருத்தப்பட்ட பகுதிகளின் இயக்க விளைவுகளைக் குறைப்பது அல்லது தாங்கிக்கொள்வது இந்த வளையத்தை அமைப்பதன் நோக்கம்.*

**thumb nut** : *(எந்.)* **திருகுமரை** : *கட்டைவிரலாலும், ஆள்காட்டி விரலாலும் இயக்க முடிகிற திருகுமரை.*

**thumb plane** : *(மர.வே.)* **சிறு இழைப்புளி** : *(இழைப்புளி) 10 அல்லது 13செ.மீ. நீளம் உள்ள சிறிய இழைப்புளி. ஓர் அங்குல அகலமுள்ள இழைப்புத் துண்டு கொண்டது.*

**thumb screw** : *(எந்.)* **நக திருகாணி**: *கட்டைவிரல் நகத்தை பயன்படுத்தி திருகிவிடக் கூடியத் திருகாணி.*




நக திருகாணி

**thumb tack** : **அழுத்து ஆணி** ; *அகன்ற தலை கொண்ட கூரான முனை கொண்ட ஆணி. வரைபடக் காகிதம் நகராமல் இருக்க அதன் ஓரங்களில் பொருத்தி வைக்க வரைபடக்காரர்கள் பயன் படுத்துவது.*

**thurm** : *செங்குத்தான சதுரக் கட்டைகள், பலகைகளில் ரம்பத்தைக் கொண்டு அறுப்பது, கடைசலில் தோன்றுவது போன்ற பாணிகளை உண்டாக்குவது.*

**tick** : *(உயி.)* **உண்ணி** : நாய், ஆடு, மாடுகளைப் பற்றிக் கொண்டு இரதத்தை உறிஞ்சும் சிலந்திக் குடும்பத்தைச் சேர்ந்த நச்சு ஈ வகை.


உண்ணி

**tie** ; *(க.க.)* **செருகு துண்டு** : மற்ற துண்டுகள் விழாமல் அவற்றின் இடத்தில் இருப்பதற்காக ஒரு துண்டைச் செருகுதல் அல்லது சேர்த்தல்,

**tie beam** : *(க.க.)* **வரிக்கை** ; **கட்டு உத்தரம்**: முக்கோண வடிவக் கூரையில் அமையும் சாய்வு உத்தரங்களின் கீழ் துணிகள் விலகி விடாதபடி தடுக்கிற அல்லது நிலையாகச் சேர்த்து வைக்கிற உத்தரம்.

**tie dyeing** : **கட்டுச்சாயம்**: சாயம் ஏற்றும்போது துணியின் சில பகுதிகள் நூலினால் நன்கு கட்டப்பட்டுஅப்பகுதிகளில் சாயம் ஏறாதபடி தடுக்கப்படுகின்றன. நூல் அகற்றப்பட்டதும் தக்க டிசைன்கள் வெளிப்படுகின்றன.

**tie piece** : **கட்டு துண்டு** : விறைப்பேற்றுவதற்கு ஒரு துண்டின் மீது பயன்படுத்தப்படுகிற விறைப்புத் துண்டு. இது வரை படத்தில் காட்டப்படுவதில்லை. வார்ப்படத்தில் இது போன்று தயாரிக்கவும் தேவையில்லை.

**tier** : **அடுக்கு** : பெட்டிகள் அடுக்கப்பட்டது போல ஒன்றன்மீது ஒன்றாக அடுக்குவது.

**tiering machine** : **அடுக்கும் எந்திரம்** : ஆட்களை ஈடுபடுத்த வேண்டிய அவசியமின்றி, பொருட்களை ஒன்றன்மீது ஒன்றாக அல்லது வரிசையாக அடுக்கும் பணியைச் செய்யும் எந்திரம்

**tie rod** : *(தானி.எந்.)* **இணைப்புத் தண்டு** : ஒரு மோட்டார் வாகனத்தில் முன்புறச் சக்கரங்களை இணைக்கும் குறுக்குத் தண்டு. வண்டி திருப்பப்படும்போது சக்கரங்கள் இணைந்து செயல்பட உதவுகிறது.

**tie-up material** : *(அச்சு.)* **கட்டு நிலை** கோக்கப்பட்ட எழுத்துக்களை ஒன்று சேர்த்து கட்டி வைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிற அனைத்துப் பொருட்கள்.

**tight fit** : *(எந்.)* **அழுத்தப் பொருத்தம்** : சிறிதளவு அழுத்தம் மூலம் செய்யப்படுகிற சரிபொருத்தம்.

**tight pulley** ; *(எந்.)* **இறுக்கக் கப்பி** : தண்டுடன் இணைக்கப்பட்ட கப்பி. இதற்கு மாறான அமைப்பில் தண்டுடன் இணையாமல் இருக்கிற கப்பியானது சுலபத்தில் சுழலும்.

**tile** : *(க.க.)* **ஓடு**: மண், சிமென்ட் அல்லது கண்ணாடியால் ஆனவை. கூரையில் அமைக்கப் பயன்படுத்தப்படுபவை. கலையம்சம் பொருந்திய டிசைன், நேர்த்தி ஆகியவற்றுடனும் தயாரிக்கப்பட்டு தரையிலும், சுவரிலும் பதிக்கப் பயன்படுபவை.

**tilt top table**: **சாய்ப்பு மேசை**: பீடம் கொண்ட மேசை, இதன் மேல் பலகை கீல் கொண்டு பொருத்தப்பட்டுள்ளதால் கிடைமட்ட நிலையிலிருந்து செங்குத்து நிலைக்குக் கொண்டு வர இயலும்.

**timber**: **வெட்டுமரம்**: மரம்: பல்வேறான வேலைகளுக்கு ஏற்ற வகையில் நீண்ட கட்டைகளாக சதுரப் பலகைகளாக அறுத்து வைக்கப்பட்டுள்ள மரம். காடுகளில் வெட்டப்பட்ட மரக் கட்டைகளிலிருந்து இவ்விதம் தயாரிக்கப்படுகிறது.

**timber trestle**: *(பொறி.)* **மரக் கட்டுமானம்**; ஒடை அல்லது பள்

ளங்கள் மீது ரயில்பாதை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிற மரக்கட்டுமானங்கள். செங்குத்தாக, கிடைமட்டமாக, குறுக்காக மரக்கட்டைகளை அமைத்துக் கட்டப்படுபவை.

**time measure:** **கால அளவு:**

| | | |
|---|---|---|
| 60 வினாடி | — | 1 நிமிடம் |
| 60 நிமிடம் | — | 1 மணி |
| 24 மணி | — | 1 வாரம் |
| 7 நாள் | — | நாள் |
| 28, 29, 30 அல்லது 31 நாட்கள் | — | 1காலண்டர் மாதம் |
| 30 நாள் | — | 1வட்டிக் கணக்குக்கு ஒரு மாதம் |
| 52 வாரம் | — | 1ஆண்டு |
| 365 நாள் | — | ஆண்டு |
| 366 நாள் | — | 1 லீப் ஆண்டு |

**timer:** *(தானி.)* **முன்னேற்பாட்டுக் கருவி:** மோட்டார் வாகனத்தில் சிலிண்டர்களில் தக்க சமயத்தில் தீப்பொறி தோன்றும் வகையில் முதன்மை தீப்பற்று சர்க்கியூட்டைத் துண்டிப்பதற்குப் பயன்படும் கருவி.

**time switch:** *(மின்.)* **நேர ஒழுங்கு மின்விசை மாற்றுக்குமிழ்:** கடிகாரத்தினால் கட்டுப்படுத்தப் பட்டு குறித்த நேரத்தில் இயங்கும் சுவிட்ச்.

**timing:** *(தானி;எந்.)* **காலத் திட்ட அமைப்பு:** 1. மிகப் பயனுள்ள குதிரை சக்தி கிடைக்கின்ற வகையில் என்ஜின் வால்வுகளையும், கிராங்க்ஷாப்டையும் அவற்றின் உரிய இடத்தில் அமைத்தல்.

2. பிஸ்டனின் முகப்புமீது மிக அதிகபட்ச பயன் பிளவு ஏற்படுகிற வகையில் பிஸ்டனின் மேற்புற செயலுறா நிலைக்கு ஏற்ப எரிதலைத் துண்டிக்கும் உறுப்பைப் பொருத்துகிற நிலை.

**timing gear:** **கால ஒழுங்கு பல்லிணை.** மோட்டார் வாகன என்ஜினில் கேம்ஷாப்டை இயக்கும் பல்லிணைகள். பிஸ்டன்களின் இயக்கத்துக்கு ஏற்ப கால ஒழுங்குடன் வால்வுகள் திறந்து மூட கேம் ஷாப்ட் உதவுகிறது. கிராங்க் ஷாப்ட் இருமுறை சுழன்றால் கேம் ஷாப்ட் ஒரு முறை சுழலும். எனவே இந்த கியர்கள் இயக்கம் 2-க்கு ஒன்று என்ற விகிதத்தில் அமைய வேண்டும்.

**timing marks:** *(தானி.)* **கால ஒழுங்குக் குறியீடு:** எரிதல்; என்ஜின் பிளைவீல் அல்லது இயக்கச் சமநிலை மீதும் முதல் நம்பர் சிலிண்டர் எரிதலுக்குத் தயாராகிற நிலை மிகச் சரியாகப் பொருந்தி நிற்பதைக் காட்டுவதற்காகச் செய்யப்பட்டுள்ள குறியீடுகள்.

வால்வு: மெக்கானிக்குகள் வால்வுகளை பிஸ்டன் நிலைக்கு ஏற்ப கால ஒழுங்கு இருக்கும் வகையில் அமைப்பதற்காக வால்வு மீதுள்ள குறியீடுகள்.

**tin:** *(உலோ.)* **ஈயம்:** வெள்ளி போன்று பளபளப்பான உலோகம். அடர்த்தி எண் 7, 3 தொழில் காரியங்களுக்கு, குறிப்பாக கலோகங்களைத் தயாரிக்க மிக முக்கியத்துவமும், விலை மதிப்பும் கொண்டது.

**tincture:** **சாராயக் கரைசல் மருந்து வகை:** ஒரு பொருளிலிருந்து கரைப்பான் மூலம் பிரித்தெடுக்கப் படுகிற மிக நன்கு கரைகிற, நைசான பகுதிகள்.

**tinder:** **எரி துண்டு:** தீயைக் கொழுந்து விட்டு எரியச் செய்வதற்காகத் தீயில் போடப்படுகிற உலர்ந்த, எளிதில் எரியக்கூடிய பொருள்.


**tinning:** *(உலோ.)* **ஈயம் பூசுதல்:** (1) தகரத் தயாரிப்பில் இரும்புத் தகடுகள் மீது அளிக்கப்படுகிற மெல்லிய பூச்சு.

(2) பற்று வைப்புக்கோல் மீது அதைப் பயன்படுத்தும் முன்னர் பற்று வைப்புப் பொருளைப் பூசுவது.

**tin plate:** **தகரத் தகடு:** ஈயம் பூசப்பட்ட மெல்லிய உருக்குத் தகடு.

**tin smith:** **தகர வேலைக்காரர்:** தகரத் தகடுகளைக் கொண்டு பொருட்களைத் தயாரிப்பவர்,

**tin snips:** *(உலோ;வே.)* **தகர வெட்டுக் கத்திரி:** உலோகத் தகட்டு வேலைக்காரர்கள் வெட்டுவதற்குப் பயன்படுத்தும் கையால் இயக்கும் கத்திரிக்கோல்.



கத்திரி

**tint block:** **செதுக்குருப்பாளம்:** டின்ட் பிளாக் (அச்சு.) ஒரு திட வண்ணத்தை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு தட்டையான உலோகத்தால் ஆன அல்லது பிளாஸ்டிக் முகப்புக் கொண்ட உலோகத் தகடு. பொதுவில் வண்ணம் லேசாக அல்லது அடிப்படை வண்ணத்துக்கு மாறுபாடு காட்டுவதாக இருக்கும்.

**tints:** *(வண்.)* **மென்னிறம்:** லேசான நிறங்கள், குறிப்பாக ஓரளவு வெண்மை கலந்த நிறங்கள்.

**tip radius:** *(வானூ.)* **நுனி ஆரம்:** சுழல் அச்சிலிருந்து சுழலிப் பட்டையின் வெளி விளிம்பு வரையிலான தூரம்.

**tire bolt:** **பட்ட ஆணி:** சக்கரத்தின் வெளிப்புற மரப்பகுதி மீது உலோகப்பட்டை பொருத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் துளையற்ற பட்டையான தலை கொண்ட போல்ட்.

**tire tool:** *(தானி.)* **டயர் மாற்றும் கருவி:** மோட்டார் வாகன டயர்களை அகற்றுவதற்காகப் பயன்படும் இரும்பு அல்லது உருக்குப் பட்டை இவ்விதமான எந்த ஒரு கருவியையும் டயர் மாற்றும் கருவி எனலாம்.

**tissue:** **திசு (இழைமம்):** உடலின் ஒரு பகுதியாக அல்லது படலமாக அமைந்துள்ள உயிரணுக்களின் திரளை. எடுத்துக்காட்டு: தசைத் திசு; தோல் திசு; இணைப்புத் திசு; நரம்புத் திசு.

**tissue manila:** **மெல்லிய மணிலா:** உறுதியான நாரினால் ஆன மணிலா நிறமுள்ள மெல்லிய காகிதம்.

**tissue paper:** **மெல்லிழைத் தாள்:** பல்வேறான தரம் கொண்ட மிக மெல்லிய காகிதத்தைக் குறிப்பதற்குப் பயன்படும் சொல்.

**titanium:** *(உலோ.)* **டைட்டானியம்:** கரிமக் குழுவைச் சேர்ந்த உலோகத் தனிமம். தாமிரம், வெண்கலம் மற்றும் இதர உலோகங்களுடன் சேர்த்து கலோகம் செய்யப் பயன்படுத்தப்படுவது. வெள்ளை வண்ணத்தில் டைட்டானியம்ஆக்சைட் முக்கியப்பொருள். இதைப் பயன்படுத்தும் பெயிண்டுகள் மிக நன்கு உழைக்கின்றன.

**titanium dioxide:** *(வண்.)* **டைட்டானியம் ஆக்சைடு:** ஒரு வெண்ணிற நிறமி. வண்ணங்கள் தயாரிப்பதில் மிகுதியாகப் பயன்படுகிறது. இது வேதியியல் வினைபுரிவதில் செயலற்றது. நீர்த்த அமிலங்கள், வெப்பம், ஒளி இவற்றால் இது பாதிக்கப்படுவதில்லை.

**title block:** **தலைப்பு மூலை:** ஒரு வரைபடத்தில் பொதுவில் வலது புறத்தின் கீழ்மூலையில் அல்லது கீழ்ப்புறம் நெடுக, கம்பெனியின் பெயர். வரைபடத்தின் தலைப்பு, அளவு அலகு, தேதி, மற்றும்

தேவையான தகவல்கள் இடம் பெற்றிருக்கும்.

**title page:** *(அச்சு.)* **தலைப்புப் பக்கம்:** ஒரு புத்தகத்தின் துவக்கத்தில் புத்தகத் தலைப்பு, நூலாசிரியர் பெயர், வெளியிட்டவரின் பெயர் முதலியவை அடங்கிய பக்கம்.

**T joint:** **T இணைப்பு:** ஒன்றுக்கொன்று செங்கோணத்தில் அமையும் வகையில் இரு இரும்புத் துண்டுகளை இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் பற்ற வைக்கப்பட்ட ஒருவகை இணைப்பு (குழாய் வேலை). சாதாரண 3 வழி குழாய் இணைப்பு மேலும் கீழுமாக உள்ள நீண்ட குழாயில் நடுப்புறத்திலிருந்து இந்த இரண்டுக்கும் செங்கோணத்தில் மூன்றாவது குழாய் அமைந்திருக்கும்.

**titration control:** *(மின்.)* **இணைமக்கூறளவுமானி:** வேதியியல் செய்முறைகளில் சரைசல்களின் அமிலத் தன்மையை அல்லது காரத் தன்மையை அளவிடுவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படும் ஒரு வகை மின்னணுவியல் சாதனம்.

**T.N.T. Trinitrotoluol:** *(வேதி.)* **TNT டிரைநைட்ரோடோலுவோல்** ($C_7H_5(NO_2)_3$) நிறமற்ற நீர்மஹைட்ரோ கார்பனான டோலுவோலுடன் நைட்ரேட் சேர்ப்பு மூலம் உருவாக்கப்படும் வெடிப் பொருள். உருகுநிலை 80 டிகிரி சென்டிகிரேட். இந்த வெடிப் பொருள், அதிர்ச்சு மூலம் தீப் பற்றுவதல்ல. எனவே ஒப்புநோக்குகையில் கையாள்வதற்கு ஓரளவுப் பாதுகாப்பானது.

**tobin bronze:** *(உலோ.)* **டோபின் வெண்கலம்:** தாமிரம், துத்தநாகம், ஈயம், இரும்பு, காரீயம் ஆகியவை கலந்த ஒரு கலோகத்தின் வணிகப் பெயர். மிகுந்த இழுவலிமை கொண்டது. உப்பு நீரின் அரிமானத்தை நன்கு தாங்கி நிற்பது. எனவே கப்பலின் இணைப்புப் பகுதிகளைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுவது.

**toe:** *(உலோ;வே.)* **விளிம்போரம்:** ஒரு தண்டின் விளிம்பு ஓரம்.


**toe-in:** *(தானி.)* **முன்புறப் பொருத்து:** மோட்டார் வாகனத்தில் முன்புறச் சக்கரங்களைப் பொருத்துவது தொடர்பானது. பின்புறச் சக்கரங்களைவிட முன்புறச் சக்கரங்கள் 3. முதல் 6 செ.மீ. குல அளவுக்கு நெருக்கமாக இருக்கும். முன் டயர் தேய்மானத்தை குறைந்தபட்ச அளவுக்குக்குறைக்க இது தேவை. தவிர வண்டியை ஓட்டிச்செல்வது இதன்மூலம் சுலபமாகும். கார் வேகமாகச் செல்கையில் சக்கரங்கரங்கள் அகன்று அமைய முற்படும். முன்புறப் பொருத்து இதை சமப்படுத்துவதாக இருக்கும்.

**toeing:** *(மர.வே.)* **ஓரச்செலுத்து:** ஒரு பலகையை மற்றொன்றுடன் இணைப்பதற்காக அப்பலகையின் ஒரு ஓரத்துக்கு அருகே ஆணிகளை சாய்வாக அடித்தல்.

**toenailing:** *(மர வே.)* பலகை மூலைச் சாய்வாணி: **சாய்வு செலுத்து:** ஆணிகளின் தலை வெளியே நீட்டியிராத வகையில் ஆணிகளை சாய்வாக அடித்தல். தரை அமைப்பதற்கு பலகைகளைப் பொருத்துவதற்கு செய்வதைப் போல.

**toe switch:** *(தானி.)* **மிதிமின்விசை** காரின் உட்புறத்தில் தரை போர்டில் அமைக்கப்பட்ட சுவிட்ச், காலால் மிதித்து அமுக்கினால் ஸ்டார்ட்டர் செயல்படும்.

**toggle** : *(எந்.)* **இறுக்கி பிடிப்புப் :** நடுவில் கீல் கொண்ட இரட்டை இணைப்பு.



இறக்கிப் பிடிப்பி

**toggle bolt**: *(மின்.)* **இறுக்கத் தாழ்ப்பாள்**: உள்ளீடற்ற ஓட்டினால் ஆன சுவரில் பொருத்துவதற்கானது. இதில் திருகாணியின் தலைப்புறத்தில் சுழலும் வளையம் இருக்கும். இதைத் திருப்பி நீளவாட்டு நிலைக்குக் கொண்டுவந்துஅதில்தாழ்ப்பாளை மாட்டலாம்.பின்னர் அதைச் செங்குத்து நிலைக்குத் திருப்ப முடியும்.

**toggle switch** : *(மின்.)* **இறுக்க மின்விசை மாற்றுக் குமிழ்** : குமிழ் அல்லது நீட்டிக் கொண்டிருக்கிற புயத்தை மேலும் கீழுமாக அல்லது ஒரு பக்கத்திலிருந்து வேறு பக்கமாக அமுக்கும்போது மின் தொடு முனைகளை மாறி மாறி மூடுகிற அல்லது திறக்கிற மின்விசை மாற்றுக் குமிழ்.

**tolerance** : *(எந் )* ஏற்கைப் பிசகு : தயாரிக்கப்பட்ட எந்திர உறுப்புகளின் அளவுகள் ஏற்கத்தக்க அளவு கூடக் குறைய இருப்பது. ஏற்கத்தக்க அளவுக்கு உள்ள அளவுப் பிசகு. (எந்.) ஏற்கை வரம்பு என்றும் குறிப்பிடப்படும்.

**toluene** : *(வேதி,)* **சாயப் பிசின்** : நிலக்கரித் தாரிலிருந்து தயாரிக்கப்படுவது. இது முக்கியமாக சாயப் பொருட்களையும், T.N.T. தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

**toncan metal** : *(உலோ.)* **டொங்கன் உலோகம்** : மிகவும் நேர்த்தியான கார்பன் மிகக் குறைவான உருக்கு அல்லது இரும்பின் வணிகப் பெயர். அரிமானத்தை நன்கு எதிர்த்து நிற்பதால் உலோகத் தகடுகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுவது.

**tone** : *(வண்.)* **வண்ண நயம்** : வண்ணச் சாயை (நிறம்) ஒரு வண்ணத்தின் தன்மை அல்லது அளவை அது அழுத்தமாக உள்ளதா அல்லது லேசாக உள்ளதா என்று குறிப்பிடுவது.

**tone arm**: *(மின்.)* **ஒலியிணைப்புக் கரம்** : இசைப்பாடற் பெட்டியில் உள்ள ஒலியிணைப்புக் கை,


**tone control** : *(மின் )* **தொனிக் கட்டுப்பாட்டுக் கருவி** : ஒலி மிகைப்பியில் ஒலி அதிர்வலைகளைக் குறைப்பதற்கு அல்லது அதிகரிப்பதற்குப் பயன்படும், தக்கவாறு அமைத்துக் கொள்ளக்கூடிய சாதனம்.

**tongs** : **இடுக்கி**: ஒரு பொருளைப் பிடித்து எடுப்பதற்கு அல்லது ஒரு பொருளை அடித்து, தட்டி வேலை செய்ய அதை நன்கு பற்றிக் கொள்வதற்குப் பயன்படும் இரு புயங்களைக் கொண்ட கருவி,

**tongue** : *(மர.வே.)* **நாக்கு** ; ஒரு சட்டம் அல்லது பலகையின் ஓரத்தில் தக்க வடிவில் வெட்டி உருவாக்கப்பட்டு அளவில் சிறியதாகத் துருத்தி நிற்கிற பகுதி. இது இன்னொரு சட்டம் அல்லது பலகையில் தக்க வடிவில் வெட்டி அகற்றப்பட்ட பள்ளமான பகுதியில் நன்கு பொருத்தி இரண்டையும் நன்கு சேர்க்க உதவுகிறது.

**tonic** : *(மருந்.)* **சத்து மருந்து** : உடலுக்கு அல்லது உடலின் சில உறுப்புகளுக்கு உரமூட்டி, வலிமையூட்டுகிற மருந்து.

**tonsils** : *(உட.)* **அடிநாச்சதை** : உள்வாயில் நாக்கில் அடிப்பிலுள்ள இரு சிறு சுரப்பிகள். இவை நிணநீர் உயிரணுக்களை உற்பத்தி செய்து தொண்டையில் நோய் தொற்றாமல் பாதுகாக்கின்றன.




அடிநாச்சதை

**tonsillitis**:*(நோயி.)* **அடிநாஅழற்சி:** *அடிநாச்சதையில் ஏற்படும் அழற்சி நோய்.*

**tool bit** . *(எந்.)* **வேலைக் கருவித் துண்டு :** *உயர்வேக உருக்கினால் ஆன சிறிய துண்டு. வேலைக் கருவிப் பிடிப்பானில் வைக்கப் பட்டு வெட்டு வேலைக் கருவி யாகப் பயன்படுவது.*

**tool box or tool head** : *(எந்.)* **வேலைக் கருவிப் பெட்டி** : *(மெஷின்) இழைப்பு எந்திரத்தில் வேலைக் கருவி இடம் பெற்றுள்ள குறுக்குப் புறத்துடன் தொகுத்து வைக்கப்பட்டுள்ள உறுப்புகள். கருவிக்கு வேலை அளிக்கின்ற வகையில் கட்டமைக்கப்பட்டுள் ளது.*

**tool holder for lathe or plner :** *(பட்.)* **வேலைக்கருவி பிடிப்பான் :** *தண்டு அல்லது உருக்கினால் ஆன ஒரு துண்டு. வெட்டுவதற் கான வேலைக் கருவியை இத்தண் டுக்குள் செருகமுடியும். மிக விலை உயர்ந்த உருக்கினால் ஆன வேலைக் கருவியையும் இவ்வகை யில் பயன்படுத்த முடியும். இப் பிடிப்பானை நகர்த்த வேண்டிய அவசியமின்றியே வேலைக் கருவியை அப்புறப்படுத்த முடியும்.*




கருவி பிடிப்பான்

**tooling calf**: **கன்றுத் தோற்கருவி:** *பட்டை மூலம் பதனிடப்பட்ட தோல் புத்தக பைண்டிங் செய்யும் போது எழுத்துக்களைப் பதிக்கும் காரியத்துக்கு மிகச் சிறந்தது.*

**tooling sheepskin** : **சிறுபொருள் ஆட்டுத்தோல் :** *விலை மலிவான நிறங்களில் கிடைக்கிற தோல். பர்ஸ், கார் செருகி, சாவி உறை முதலிய சிறுபொருள்களைத் தயா ரிப்பதற்குப் பயன்படுவது.*

**tooling up** : **கருவிகளை ஆயத்த மாக்குதல் :** *ஒரு பொருளை நிறைய அளவில் உற்பத்தி செய்யும் முறைகளைப் பயன்படுத்தும் நோக்கில் உற்பத்திக்குத் தேவை யான சிறப்புக் கருவிகள், கட்டு மானச் சாதனங்கள் ஆகியவற் றைத் தயாரித்து ஆயத்தப்படுத்து தல்.*

**tool, knurling** ; *(பட்.)* **முகட்டுக் கருவி:** *மடிப்பு போன்ற பல முகடுகளைக் கொண்ட கருவியைக் கொண்டு கழலும் உலோகப் பொருள்மீது பல வரிப் பள்ளங் களை உண்டாக்குவது. அழகுக் காகவும், நல்ல பிடிப்புக்காகவும் இப்படிச் செய்யப்படும்.*



முகட்டுக் கருவி

**tool maker** : *(எந்.)* **வேலைக் கருவியாளர் :** *பணிச் சாதனங்கள் பொருத்திகள், அளவு மானிகள் முதலியவற்றைத் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றவர்.*

**tool makers clamp** : **கருவியாளி யின் திருகுபிடி :** *மரத்தச்சர் பயன் படுத்தும் திருகுபிடி போன்ற ஆனால் அதைவிடச் சிறிய வடிவி லான முற்றிலும் உலோகத்தால் ஆன பிடிப்புச் சாதனம்.*

**tool post** : *(எந்.)* **தாங்கு கருவி . பற்றுக்கருவி :** *உச்சியில் வளையத் தைக் கொண்ட தம்பம். கடைசல் எந்திரத்தின் மேற்புரத்தில் அமைந்த மரு. இந்த வளையத்துக் குள் வெட்டுக் கருவி பொருத்தப் படும்.*

**tool room** : *(எந்.)* **கருவி அறை ; வேலைக்கருவி அறை :** *வேலைக் கருவிகள் சேமித்து வைக்கப்பட் டுள்ள அறை. இதிலிருந்துதான் தொழிலாளருக்குக் கருவிகள்வழங் கப்படும். பணிச் சாதனங்கள்*

பொருத்திகள் போன்றவை தயாரிக்கப்பட்டு, பழுதுபார்க்கப்படுகிற இடம்.

**tool steel** : *(உலோ.)* **வெட்டுக் கருவி உருக்கு** : வெட்டுப் பகுதிகளாகப் பயன்படுத்துவதற்குத் தகுந்த ஏதேனும் ஒரு கரிம உருக்கு அல்லது அதிவேக உருக்கு.

**tool tip** : *(எந்.)* **கருவிமுனை** : பருமனான கார்பன் உருக்குத் தண்டின் மீது பற்றவைக்கப்பட்ட அல்லது பித்தளையை உருக்கிச் சேர்க்கப்பட்ட கெட்டித்தகார்பைடினால் ஆன வெட்டும் துண்டு.

**tooth** : **காகித நேர்த்தி** : கிரேயான் அல்லது பென்சிலைக் கொண்டு வரைவதற்கு உகந்த அளவுக்குக் காகிதம் கொண்டுள்ள நேர்த்தியைக் குறிப்பது,

**tooth face** : *(எந்.)* **பல் முகப்பு** : கடைசல்எந்திர வெட்டுக்கருவியின் பரப்பு பணியின்போது துண்டு வெட்டப் படுகையில் இப்பரப்பின் மீது தான் படுகிறது.

**toothing** : *(க.க.)* **சுவரின் பல் விளிம்பு** : சுவர் போன்ற கட்டுமானத்தைக் கட்டுகையில் பின்னால் மேற்கொண்டு சுவரை விரிவுபடுத்துவதானால் புதிதாக வைக்கிற செங்கற்களுக்குப் பிடிமானம் இருக்கவேண்டும் என்பதற்காக, செங்கற்களை மேலிருந்து கீழாக நீட்டியும் உள்ளடக்கியும் அமைப்பது.

**top** : **நீள் கம்பளி இழை** : சிக்கு எடுக்கப்பட்டு கம்பளி நூலாக நூற்பதற்காக உள்ள நீண்ட கம்பள ரோமம்.

**top dead center** : *(தானி.)* **சுழலா மேல் நிலை** : முதல் நம்பர் பிஸ்டனின் சிலிண்டரில் பிஸ்டன் மேல் உச்சிக்கு வரும்போது உள்ள நிலை. இந்த நிலை பிளைவீலில் குறிக்கப்பட்டிருக்கும். என்ஜினின் உச்சபட்ச திறனுக்காக சரிப்பொருத்தம் செய்யும்போது இந்த நிலை கணக்கில் கொள்ளப்படும்.

**topping** : **மேல் வண்ணமூட்டல்** : சாயமேற்றப்பட்ட துணியை இன்னொரு வண்ணம் கலந்த கரைசலில் முக்குவது.

**torque** : *(மின்.)* **திருப்பு விசை** : சுழல் பகுதி திரும்பும் முயற்சி. (பொறி) விசையை அளிக்கையில் தண்டும் சேர்ந்து சுற்ற முற்படுவது.

**torque arm** : **திருப்புத் தடிப்புப் புயங்கள்** : உந்து வண்டியில் பின்புற அச்சுக்கு விசை அளிக்கப்படுகையில் பின்புற அச்சின் உறைப் பெட்டியும் சேர்ந்து சுற்றாமல் தடுப்பதற்கு உள்ள இரு புயங்கள்.

**torque converter** : *(தானி.எந்.)* **திருப்புவிசை மாற்றி** : பின் சக்கரங்களில் திருப்பு விசையை அதிகரிக்கும் பொருட்டு சிறப்பாக அமைக்கப்பட்ட இயங்கு விசை செலுத்தும் முறை. இதன்மூலம் விரைவில் வேகம் எடுக்கும்.

**torque stand** : *(வானூ;தானி.)* **திருப்பு விசை மானி** : ஒரு என்ஜினின் திருப்பு விசையை அளப்பதற்கான சோதனை மேடை.

**torgue wrench** : *(எந்.)* **திருப்புக் குறடு** : திருகு குறட்டைப் பயன்படுத்துகையில் குறிப்பிட்ட நிலைக்கு மேல் திருப்ப முடியாது.

**torr** : *(விண்.)* **டார்** : பாதரசத்தின் மில்லி மீட்டருக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு பன்னாட்டுச் செந்திறச் சொல்.

**torsion** : *(பொறி.)* **முறுக்கு** : ஒரு தண்டைத் திருப்புகையில் உருமாற்றமடைய முற்பட்டு முறுக்கிக் கொள்ளும் போக்கு.

**torsional strength :** (பொறி.) **முறுக்கு திறன் :** முறுக்கு விசையை எதிர்த்து தாங்கி நிற்பதற்கு ஒரு தண்டு போன்றவற்றுக்கு உள்ள திறன். இத்திறன் ஒரு தண்டின் குறுக்களவின் முப்படிக்கு ஏற்ப மாறுபடுகிறது.

**torsion balancer :** (தானி) **திருகு சமனாக்கி :** பிஸ்டனின் உந்தல்களால் ஏற்படும் அதிர்வு களைக் குறைக்கும் பொருட்டு கிராங்க்ஷாப்டின் முனையில் பொருத்தப்பட்ட கருவி.

**torsion spring : திருகு விற்சுருள்:** மேலிலிருந்து கீழாக வளைந்து வளைந்து புரிபோல அமைந்த ஸ்பிரிங். இதன் இரு முனைகளும் நன்கு பொருத்தப்பட்ட நிலையில் அழுத்தப்படும்போது சுருளுவதும், நீளுவதுமாக இருக்கும்.

**torso :** (க.க.) **சிலை முண்டப் பகுதி :** கட்டுமானக் கலையில் உரு மாறிய தூண்களைக் குறிப்பது (2) தலைப்பகுதி இல்லாமல் உடல் மட்டுமே காணப்படுகிற சிலை.

**torus :** (க.க.) **பீடப் புடை வளை யுறுப்பு ;** பெரிய வடிவிலான குவிந்தஅமைப்புக்கொண்ட அரை வட்ட அச்சு, அடித்தளத்தை வடி வமைக்கப் பயன்படுத்தப்படுவது.

**tote boxes or pans :** (பட்.) **உதிரிப் பொருள் கிண்ணம் :** தொழிற்சாலைகளில்சிறிய உறுப்பு களை சேமித்து வைக்க அல்லது எடுத்துச் செல்வதற்குப் பொதுவில் பெட்டிகள் அல்லது உலோகத்தால் ஆன கிண்ணங்கள் பயன்படுத்தப் படுகின்றன. இவை பொதுவில் சற்று சரிவான வடிவில் இருக்கும். ஒன்றுக்குள் ஒன்றாக வைத்து அடுக்குவதற்கு இது வசதியாக இருக்கும்.

**touchdown :** (விண்.) **தரை யிறங்குதல் :** மனிதனால் இயக்கப் படும் அல்லது தானே இயங்கும் ஒரு விண்வெளிக்கலம், சறுக்கு முறையில் அல்லது வேறெந்த முறையிலேனும் பூமியில் தரை யிறங்குதல்.

**toughness :** (பொறி.) **கடினத் துவம் :** நிரந்தர உருமாற்றத்தை எதிர்த்து நிற்பதிலும், அவ்வித நிரந்தர உருமாற்றம் ஏற்பட்ட பின்னர் முறிவை எதிர்த்து நிற்பதி லும் ஓர் உலோகத்துக்குள்ள திறன்.


**touring car:** (தானி.) **உலா கார் :** ஐந்து அல்லது ஏழு பயணிகள் ஏறிச் செல்கின்ற வகையில் அமைந்த திறந்த உடற்பகுதி கொண்ட கார்.

**toxamin : ஊட்ட எதிர்பொருள் :** வைட்டமின் எதிர்ப்புப் பொருள். இது வைட்டமின்கள் செயற்படு வதைத் தடுக்கிறது. எடுத்துக் காட்டாக, முட்டையிலுள்ள வெண்கரு. "B" குழும வைட்ட மின்களுடன் இணைந்து, அவை உடலின்மீது வினைபுரிவதைத் தடுக்கிறது.

**toxicology : நச்சூட்ட ஆய்வியல் :** நஞ்சுகள் பற்றி ஆராயும் அறி வியல் துறை.

**tourmaline :** (மின்.) **டூர்மாலின் :** பலவகை மின்திறமிக்க பல வண்ணக் கனிமப் பொருள் வகை.

**T plate:** (க.க.) **'T'வடிவத் தகடு:** ஆங்கில 'T' வடிவம் கொண்ட ஓர் உலோ கத் தகடு. இரு பரப்பு கள் ஒன்று சேரும் இணைப்புப் பகுதி யை வலுப்படுத்து வதற்காகப் பயன் படுத்தப்படுவது.



**trace : பற்றி வரை (வரைதல்) :** மூலவரைபடம், தேசப்படம்

போன்றவற்றின் மீது மெல்லிய துணி அல்லது காகிதத்தை வைத்து அதன்மீது கோடு வரைந்து பிரதி எடுத்தல்; பென்சில் கொண்டு ஓரப் படம் தயாரித்தல்; தேசப்படம் தயாரித்தல்.

**tracer : பற்றி வரைவாளர் :** வடி வரைவாளர் தயாரித்த வரைபடங்கள் மெல்லிய காகிதங்களை வைத்து பற்றிவரைப்பிரதிகள் பல வற்றை எடுக்கிற உதவியாளர் அல்லது துணை வடிவரையாளர்.

**tracer element : தடங்காண் மெய்யூடகம் :** மனித உடம்பிற்குள் செலுத்தப்பட்டுச் செல்வழிக் காண்பிக்கும் இயல்புடைய செயற்கைக் கதிரியக்க ஓரகத் தனிமம்.

**tracer :** *(க.க.)* **ஊடு சித்திரம் :** வட்ட வடிவ கண்ணாடி பலகணிகள், பலகணிகளுக்கு மேல் அமைந்த கண்ணாடிகள் ஆகிய வற்றின் மீது ஊடுருவுகிற அலங்கார வேலைப்பாடுகளை அமைத்தல்.

**trachelium .** *(க.க.)* **டிராக்கிலியம் :** கிரேக்க டோரிக் பாணித் தூண்.

**tracing : பற்றி வரைதல் :** (வரைபடம்) முதல் நிலை வரை படம், வடிவப்படம், வரைபடம் தயாரித்தல் மெல்லிய துணி, காகிதம் அல்லது ஒளி ஊடுருவுகின்ற விரிப்புப் பொருட்களை வரை படங்கள் மீது வைத்து பிரதிகளை எடுத்தல்.

**tracing a circuit :** *(தானி;மின்)* **மின்சுற்றுவழியைக்கண்டறி:**(மோட்டார்-மின் மூலத்திலிருந்து இயக்க நிலைவரை ஒரு சர்க்கியூட்டை மீட்டரைப் பயன்படுத்தி, மணி அடிக்கி ஜெனரேட்டரைப் பயன் படுத்திகோளாறைக் கண்டுபிடிப்பது அல்லது சர்க்கியூட்டை மேலும் நீட்டிப்பது நூல்களின் நிறத்தை வைத்து அடையாளம் காண்பது.

**tracing cloth :** *(வரை.)* **மெருகச்சுத்துணி :** ஒரு வரைபடத்தை நிரந்தரமாகப் படியெடுப்பதற்குப் பயன்படும் ஒளி ஊடுருவக்கூடிய ஒரு துணி.

**tracing linen : பற்றி வரையும் துணி :** (வரைதல்) துணிமீது தக்க பூச்சு அளித்துப் பிறகு அத்துணியைப் பற்றி வரைதலுக்கு ,பிரதி எடுப்பதற்காக பயன்படுத்துதல்.

**tracing paper : பற்றி வரைதாள் :** (வரைபடம்)ஓரளவு ஒளி ஊடுருவுகின்ற காகிதம். வரைபடம் மீது தாளை வைத்து பிரதி எடுத்து புளூ பிரிண்ட் எடுக்கப் பயன்படுத்துவர். இது பற்றி வரைத் துணியை விட மலிவானது. தவிர பல தடவை பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லாத போது பற்றி வரைத்துணியை விட பற்றி வரை தாள் உகந்தது.

**tracing tool : பற்றி வரைக் கருவி :** தோல் மீது டிசைன்களை எழுதவும், அமைத்து முடிக்கவும் பயன்படுகிற கூரான சிறிய தொரு கருவி.

**track :** *(மின்.)* **ஒலித்தொடர் :** ஒலியைப் பதிவு செய்கிற ஓர் ஒலிப்பதிவு நாடாவின் ஒரு பகுதி.

**tracking :** *(மின்.)* **தடத்தொடர்பு:** வானொலியில் ஒருங்கியைவிப்பு செய்யப்பட்ட மின்சுற்றுவழிகள் அனைத்தும் குறிப்பிட்ட சுழல் அலைவெண்ணைப் பின்பற்றிச் செல்வதை உறுதி செய்யும் வகையில் பயன்படுத்தப்படும் இணைக்கும் முறை.

செயற்கைக்கோளின் தடத்தை வானொலி மூலம் பின்தொடர்தல்.

**traction : டிராக்ஷன்:** சாலை மீது சக்கரங்கள் உருளும்போது

ஏற்படுவது போன்ற உருள் உராய்வு. அல்லது பிடிமான உராய்வு.

**tractor air plane** : (வானூ ) **டிராக்டர் விமானம்** : தாங்கு பரப்புகளுக்கு முன்புறமாக அமைந்த சுழலி அல்லது சுழலி களைக் கொண்ட விமானம்.

**tractor propeller** : (வானூ.) **டிராக்டர் புரொப்பல்லர்**: விமான என்ஜினின் முன்புற முனை மீது அல்லது சுழலித் தண்டுக்கு முன்புறமாக அமைந்த சுழலி.

**trade-union** : **தொழிற் சங்கம்** : உறுப்பினராக அங்கம் வகிக்கும் எல்லா தொழிலாளர்களுக்கும் ஒரே தரமான வசதிகளைப் பெற்றுத்தரும் நோக்குடன் தொழிலாளர் ஒன்று சேர்ந்து ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பு.


**traffic beam** : (தானி. எந்.) **முகப்பொளிக் கற்றை**: மோட்டார் வாகன முகப்பு விளக்கிலிருந்து தரையை நோக்கிப்படுகிற ஒளிக் கற்றை, எதிர்வரும் வாகன ஓட்டியின் கண் கூசாவண்ணம் இருக்க ஓர் ஏற்பாடு. நகரங்களின் சாலைகளில் இது பயன்படுவது ஊருக்கு வெளியே ஓட்டிச் செல்கையில் எதிரே வாகனம் வந்தால் பயன்படுவது.

**traffic control projector** : (வானூ.) **ஒளி சமிக்ஞை காட்டி** : விமான ஓட்டிக்கு ஒளி சமிக்ஞைகள் அளிப்பதற்கான ஒரு புரொஜக்டர்.

**trailing edge** : (வானூ.) **பின்புற முனை**: விமானக் கட்டுப்பாட்டுப் பரப்பு அல்லது சுழலியின் பின்புறமுனை.

**train** : **டிரெயின் (பணிக்கூடம்)** : விசையை செலுத்தவும், வேகத்தை மாற்றவும் ஒன்றோடு ஒன்று பொருத்தப்பட்ட பல்லிணை ஏற்பாடு.

**trammel** **தண்டு வட்ட வரைவி** : பெரிய வட்டங்களைப் போடுவதற்கு உதவும் வட்டவரைவி.



தண்டு வட்டவரைவி

புள்ளியில் கூர்முனையை பெறுவதற்கான தலைப்பகுதி, நீண்ட தண்டு ஒன்றில் முன்னும் பின்னுமாக நகர்த்தும் வகையில் அமைந்துள்ளது. தேவையான ஆரத்துக்கு ஏற்பத் தலைப்பகுதியை அதில் உள்ள ஸ்குரு கொண்டு முடுக்கிப் பயன்படுத்தலாம்.

**tramp** : (தானி ) **மிதிச் சுழற்சி** : சக்கரங்கள் எதிர்த்திசைகளில் மேலும் கீழுமாக இயங்குதல்.

**transceiver** : (மின்.) **வானொலி இருமைக் கருவி** : ஒலிவாங்கவும் அனுப்பவும் பயன்படும் இரு திசைக்கருவி.

**transcription**: (மின்.) **நேரடி நிகழ்ச்சிப் பதிவு**: தொலைக்காட்சியில் பின்னர் ஒளிபரப்புவதற்காக ஒரு நேரடி நிகழ்ச்சியைப் பதிவு செய்தல்.

**transducer**: (மின்.) **இயல்மாற்றி**: ஒருவகை ஆற்றலை, மின்னியல் ஆற்றல், எந்திர ஆற்றல், ஒலியாற்றல் போன்ற வேறு வகை ஆற்றலாக மாற்றுவதற்கான ஒரு சாதனம்.

**transept** : (க.க.) **இரு புறத் தாழ்வாரம்** : சிலுவை வடிவில் அமைந்துள்ள சர்ச்சின் நுழைவாயிலின் மறு கோடியில் இரு புறங்களிலும் நீண்டு அமைந்துள்ள தாழ்வாரங்கள்.

**transfer** : **மாற்று**: ஒன்றை

ஓரிடத்திலிருந்து வேறு இடத்துக்கு அகற்றுதல்.

**transfer calipers** : *(எந்.)* **மாற்றும் காலிபர்:** இடுக்களையும் அதனுடன் அளந்த பின்னர் பணி நிலையிலிருந்து அகற்ற அளவை மாற்றியாக வேண்டியுள்ள இடங்களிலும் அளப்பதற்கான கருவி. பணிநிலையிலிருந்து எடுத்த பின் கால்களை அளக்கப்படும் பகுதியின் மிகச் சரியான அளவுக்கு மாற்றிக் கொள்ள முடியும்.



காலிபர்

**tranfer characteristic**: *(மின்.)* **பண்பு மாற்றம்** : ஒரு சாதனத்தின் உட்பாட்டு, வெளிப்பாட்டுப் பண்புகளுக்கிடையிலான தொடர்பு.

**transfer machine** : *(தானி.)* **இடமாற்று எந்திரம்** : பொருளை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குக் கொண்டு செல்லும் திறனுள்ள ஓர் எந்திரம். அந்தப் பொருள் மீது ஒவ்வொரு இடத்திலும் பல வேலைப்பாடுகள் செய்யப்படும்.

**transfer molding** ; *(குழை.)* **மாற்றிடும் அச்சு:** உள்வீச்சு வார்ப்புக்கு அதாவது வெப்பம் அளிக்கப்பட்டு குளிர்ந்த பின் உறுதியாகிய பொருட்களை வார்ப்பதற்கு மற்றொரு பெயர்.

**transformer**: *(மின்.)* **மின்மாற்றி:** மின்னோட்டத்தில் மின்னழுத்தத்தையும் மின் அளவையும் உயர் நிலையிலிருந்து குறைந்த நிலைக்கு அல்லது குறைந்த நிலையிலிருந்து உயர் நிலைக்கும் மாற்றுவதற்கான சாதனம்.

**transformer current** : *(மின்.)* **மின்னோட்ட மின்மாற்றி** : மின்மானிகளின் இயக்கத்திற்கேற்ப பேரளவு மின்னோட்டங்களை சிற்றளவு மின்னோட்டங்களாகக் குறைப்பதற்குப் பயன்படும் ஒரு மின் மாற்றி.

**transformer potential** : *(மின்.)* **மின்னழுத்த மாற்றி** : அதிக அளவு மினனழுத்தங்களைக் குறைந்த அளவு மின்னழுத்தங்களைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப் படும் மின்மாற்றி.

**transfusion** : **குருதியூட்டுதல்** : நோயுற்ற ஒருவரின் உடலுக்குள் நலமாகவுள்ள ஒருவரின் இரத்தத்தை நாடி நாளங்களில் குத்தி உட்செலுத்துதல். செலுத்தப்படும் இரத்தம், நோயாளியின் இரத்தம் எந்தப்பிரிவைச் சேர்ந்ததோ அதே பிரிவைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும்.

**transient response** : *(மின்.)* **குறுநேர எதிர்வினை** : கணநேரச் சமிக்ஞைக்குரிய அல்லது விசைக்குரிய ஒரு குறுகியநேர எதிர்ச் செயல்.

**transistor** : *(மின்.)* **டிரான்சிஸ்டர்** *(மின்)* மின்னணு மின்னோட்டங்களில் முன்னர் வெற்றிடக் குழல்கள் செய்து வந்த பணிகளைச் செய்கின்ற அடக்கமான சின்னஞ் சிறிய பொருள். வடிவில் சிறியது சூடேறாது. உடனடியாகச் செயல்படுவது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மின் வாய்களைக் கொண்ட தீவிர அரைக் கடத்திக் கருவி.

**transistor radio** : *(வானொ.)* **மின்மப் பெருக்கி வானொலி** : வெற்றிடக் குழல்களுக்குப் பதிலாக மின்மப் பெருக்கிகள் டிரான்சிஸ்டர் பயன்படுத்தப்படும் வானொலி. இவை மின்சுற்றுவழி, விசை வழங்கீடு முழுவதிலும் பயன்படுத்தப்படும் நுண்பதிப்பு

உறுப்பகளாகும். இவை சாதாரணமாக வீட்டு மின்னோட்டத்திற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் சிறிய மின்கலத்தொகுதிகளாக இருக்கும். இந்த வகை வானொலிக்கும் குறைந்த அளவே மின்விசை தேவைப்படுவதால், மின்கலங்கள் நெடுநாட்கள் வேலை செய்யும். இவை அளவில் சிறியதாக இருப்பதால் இந்த வானொலிகளை மிகச் சிறியதாகக் கையடக்க அளவிலும் தயாரிக்க முடிகிறது.

**transit** : **கோண நிலை அளவீட்டுக் கருவி** : இக்கருவியானது (1) பார்ப்பதற்குதொலைநோக்கி, (2) அளவுகள் குறிக்கப்பட்ட வில்கள். கிடை-மட்ட செங்குத்துக் கோணங்களை அளப்பதற்கு ஒரு வெர்னியர், (3) சமநிலை மட்டம் (4) சம நிலைப்படுத்தும் ஸ்குருக்களுடன் ஒரு முக்காலி ஆகியவை அடங்கியது. (சர்வே) கோணங்களை அளக்கவும், பேரிங்குகளை நிர்ணயிக்கவும் சம நிலை காணவும் சர்வேயர்களும் என்ஜினியர்களும் பயன்படுத்தும் கருவி.

**transite** : (உலோ.) **டிரான்சிட்ஸ்** : கல்நார் இழையையும், போட்லண்ட் சிமென்டையும் நன்கு கலந்து மிகுந்த அழுத்தத்தில் செலுத்தி அச்சுகளை உருவாக்குதல். இது வணிகப் பெயர் இவ்விதம் உருவாக்கப்பட்ட பொருள் தீப்பிடிக்காத சுவர்கள் கூரை ஆகியவற்றைத் தயாரிக்கவும் அடுப்பு சூளைக்குள் உள்பரப்புப் பூச்சாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**transit time** : (மின்.) **கடப்பு நேரம்** : ஓர் எலெக்ட்ரான் குழலில் எதிர்முனையிலிருந்து தகட்டுக்குச் செல்வதற்கு எலெக்ட்ரான்கள் எடுத்துக் கொள்ளும் நேரம்.

**transition strip** : (வானூ.) **விமான ஓரப் பாதை** : விமான நிலையத்தில் ஓடு பாதை அல்லது இதர கெட்டிக்கப்பட்ட பரப்புக்கு அருகே உள்ள விமான இறங்கு வட்டாரத்தின் ஒரு பகுதி. இது உடைத்த கற்கள் அல்லது வேறு தகுந்த பொருட்களால் கெட்டிக் கப்பட்டது. விமானம் பத்திரமாக இறங்கவும் ஓடுபாதையில் அல்லது மேற்படி ஓரப்பகுதியில் எந்தத் திசையிலும் தரையில் ஓடவும் இப் பாதை உதவும்.

**transit man** : **டிரான்சிட் உதவியாளர்** : சர்வேயர் அல்லது என்ஜினியர் பயன்படுத்துகிற டிரான்சிட் கருவியைக் கையாளுபவர். அவர் ஒரு பட்டதாரி என்ஜினியராக இருக்கத் தேவையில்லை.

**transitron** : (மின்.) **டிரான்சிட்ரான்** : ஓர் ஊடுரு ஊசலியில் திரைக்கும் அடக்கி வலைகளுக்குமிடையில் வைக்கப்படும் படிகம்.

**translucent**: **ஒளிக்கசிவு** : ஓரளவு ஒளி ஊடுருவுகிற (காகிதத் தாயரிப்பு) பளபளப்பான நேர்த்தி கொண்ட, பூச்சு உள்ள அட்டை.

**translunar space**: (விண்.) **நிலவுக்கு அப்பாற்பட்ட விண்வெளி**: பூமியைச் சுற்றும் சந்திரனின் சுற்றுப்பாதையில் தாழ்ந்த வரம்புத் தொலைவில் பூமியை மையமாகக்கொண்ட ஒரு கோளப் படுகையாக உருவகிக்கப்பட்டுள்ள ஒரு பகுதி. இது சந்திரனுக்கு அப்பால் பல்லாயிரம் மைல்கள் பரப்புள்ளது.

**transmission**: (தானி.) **செலுத்தீடு**: மோட்டார் வாகனத்தின் பின் பகுதியில் உறுப்புப் பெட்டிக்குள் கியர்கள் அமைந்துள்ள ஏற்பாட்டைக் குறிப்பது. இதில் ஏற்படுகிற மாறுதல்களின் விளைவாக வேக விகிதத்தில் மாற்றம், முன்புறத்தை நோக்கி இயக்கம் ஆகியவை சாத்தியமாகின்றன

**transmission line:** *(மின்.)* **மின் அனுப்பீட்டுக் கம்பி:** முன்விசையைச் செலுத்துவதற்கு அல்லது கொண்டு செல்வதற்குப் பயன்படும் கம்பி அல்லது கம்பிகள்.

**transmitter:** *(மின்.)* **ஒலிப்பரப் பனுப்பீட்டுக் கருவி:** தொலைபேசிக் கருவியில் பேசுகின்ற முனையைக் குறிக்கும். இது இரு தட்டையான கரிம மின்வாய்கள் உள்ளன. இவற்றில் ஒன்று அசையும்.

**transmitting set:** **அனுப்பு சாதனம்:** குறிப்பிட்ட அதிர்வெண்களைக் கொண்ட மாறலை அல்லது தொடர்ச்சியான ஊர்தி அலையைத் தோற்றுவிப்பதற்குப் பயன்படும் சாதனம்.

**transmutation:** *(மின்.)* **தனிம மாற்றம்:** ஒரு தனிமத்தை வேறு தனிமமாக மாற்றுதல் கதிரியக்கத் தன்மை கொண்ட ரேடியத் தயாரிப்புகளிலிருந்து வெளிப்படும் துகள்களைக் கொண்டு தாக்குவதன் மூலம் சமீப ஆண்டுகளில் தனிமங்களை வேறு ஒன்றாக மாற்றுவது சாதிக்கப்பட்டுள்ளது. சைக்ளோட்ரானைப் பயன்படுத்தி இதைச் சாதிப்பது மற்றொரு முறை.

**transom:** *(க.க.)* **சிறு சாளரம்** *(கட்டட)* ஒரு கதவு அல்லது ஜன்னலுக்கு மேலாக உள்ள சிறு கதவு.

**transom:** *(க.க.)* **குறுக்குக் கட்டை:** வாசற்படிநிலைக் குறுக் கட்டை.

**transombar:** *(க.க.)* **நடுச்சட்டம்:** கதவை, ஜன்னலை இரண்டாகப் பிரிக்கிற கிடைமட்டமாக அமைந்த நடுச்சட்டம். இதன் பலகை மேல் பகுதியை மட்டும் தனியே திறக்க முடியும்.

**transparency:** **ஊடுருவு ஒளிப் படம்:** இதுவும் ஒரு ஒளிப்படமே எனினும் இது ஒளி ஊடுருவுகின்ற பிலிம் வடிவில் அமைந்த படம். ஒளியில் காட்டுவதன் மூலமே படத்தைக் காண இயலும்.

**transparent:** **ஒளி ஊடுருவுகிற:** பொருட்களைத் தெளிவாகக் காண்கிற வகையில் ஒளி ஊடுருவும் தன்மை கொண்டது.

**transportation:** *(தானி )* **சரக்குப் போக்குவரத்து:** சரக்குகளை உற்பத்திச் சாலைகளிலிருந்து பிற இடங்களுக்குக் கொண்டு செல்லுதலும், உற்பத்திச் சாலைகளுக்கும் பொருள்களைக் கொண்டு வருதலும்.

**tıanspose:** **மாற்றிப்போடு:** ஒரு சமன்பாட்டில் ஒரு புறத்திலிருந்து மறுபுறத்துக்கு உறுப்புகளின் சமத்துவ நிலை மாறாமல் இருக்க மாறிய அடையாளக் குறியுடன் மாற்றிப் போடுதல்.

**trap:** **நீராவி பொறியமைவு:** நீராவியால் வெப்பமேற்றும் முறைகளில் நீர் படிதலையும், காற்றையும் ரேடியேட்டர் குழாய் முதலியவற்றிலிருந்து நீராவியைச் செலுத்தாமல் வெளியேற்றுதல்.

**trap door:** *(க.க.)* **கள்ளக் கதவு:** தரையில், மச்சுப்புறத்தில் அல்லது கூரையில் அமைந்த திறப்பை மூடுவதற்கான கதவு அல்லது மூடி.

**trapezium:** **நாற்கரம்:** எந்த இரு பக்கங்களும் இணையாக இல்லாத நான்கு புறங்களைக் கொண்ட வடிவம்.

**trapezoid:** **கோடகம்:** நாற்கரம் கொண்ட உருவம். இதில் இரு புயங்கள் இணையானவை(கணித) பரப்பு = இணையாக உள்ள பக்கங்களின் கூட்டுத் தொகையில் பாதி X செங்குத்துக் கோட்டின் நீளம்.

**trap rock**: **இடைப்பாறை**: மிக உறுதியான, உழைக்கக் கூடிய பாறை: வெட்டி எடுப்பது கடினம். சாலைகள் அமைக்கவும், ரயில் தண்டவாளங்களுக்குத் தளமாகவும் பயன்படுவது.

**trass**: **பூச்சுக்கலவை**: (குழை.) ஒரு வகையான சாம்பல், மஞ்சள் அல்லது வெண்மை நிறமண், எரிமலைகள் உள்ள பகுதிகளில் சாதாரணமாகக் காணப்படுவது. நீருக்கடியில் நன்கு கெட்டிப்படுகிற சிமெண்ட் தயாரிப்புக்குப் பயன்படுவது.

**traveling crane**: (வார்.) **நகரும் பளுத்தூக்கி**: நீராவி அல்லது மின் சாரத்தால் இயங்கும் பளுத்தூக்கி. இது நெடுக்காகவும் குறுக்காகவும் செல்லக் கூடியது. பொதுவில் மேலிருந்து தூக்குகின்ற வகையைச் சேர்ந்தது. இதன் அடிப்பகுதி குறுக்குத் தண்டு மீது அமைந்தது. இத்தண்டின் முனைகள் இணை அமைந்த தண்டவாளங்கள் மீது உட்கார்ந்திருக்கும்.

**treacle stage**: **டிரேசில் ஸ்டேஜ்**: (குழை.) வெப்பமாக்கப்பட்ட பின் குளிர்ந்ததும் கெட்டியாகின்ற பிசின் திரவ நிலையில் இருப்பது.

**tread**: **படித்தரை**: கட்டுமானபடியின் சமதரையான பகுதி. படியேறுகையில் பாதங்களை வைக்கும் பகுதி.

**treadle**: (எந்.) மிதித்தியக்கும் காலால் இயக்குகின்ற எந்திரத்தின் பகுதி.

**trefoil**: **மூமட்ட**: (க.க.) ஒன்றிணைந்த மூவட்ட அலங்காரப் பகுதி.

**treillage**: (க.க.) **பந்தல்**: கொடிகள் படர்ந்து அமைவதற்காகப் போடப்படும் பந்தல்.

**trellis**: (க.க.) **பின்னல் தட்டி**: குறுக்குக் கம்பிப் பின்னல் அமைவு. தாவரங்களுக்கும் மலர்களுக்கும் ஆதாரமாக இது பயன்படுத்தப்படுகிறது.

**trench**: **நெடும்பள்ளம்**: (பல நெடும் பள்ளம்) குழாய்களைப் புதைப்பது போன்று தரையில் அமைக்கப்படுகிற நீண்ட குறுகிய பள்ளம்.

**trend**: **நிலவரம்**: பொதுவான போக்கு.

**tre-pan**: (எந்.) ஒரு துளையைச் சுற்றி வட்டமான குழிவை வெட்டுதல்.

**T rest**: **டி.ரெஸ்ட்**: மரவேலை லேத் எந்திரத்தில் வேலைக் கருவிக்கான தாங்கு நிலை. பணி செய்ய வேண்டிய பொருளை தேய்ப்புச் சக்கரம் கொண்டு வேலை செய்வதற்கும் தாங்கு நிலை.

**trestle**: **நாற்கால் தாங்கி**: கீழ் நோக்கி சரிவாக அமைந்த நான்கு கால்கள் மீது அமைந்த உத்தரம். இவ்விதமான இரண்டைப் பக்கம் பக்கமாக வைத்து அவற்றின் மீது ஒரு பலகை அமைக்கலாம். பள்ளம் அல்லது குழிவின் மீது இவ்விதக் கட்டுமானத்தை அமைத்து அதன் மீது சாலை அல்லது ரயில் பாதை போடலாம். (இருக்கை) இவ்விதக் கட்டடத்தின்மீது பலகை அமைத்து மேசையாக்கலாம். (மெத்தை) அகன்ற மேல் பகுதியைக் கொண்ட அறுப்பதற்கான தாங்கு தூண். வெளி முனைகளில் திண்டு வைக்கப்பட்டது.

**trest'e table**: (வரை.) **நாற்கால் தாங்கி மேசை**: நாற்கால் தாங்கி மீது வரைவதற்காக அமைக்கப் பட்ட பெரிய பலகை.

**triangle**: **முக்கோணம்**: மூன்று புறங்களையும் மூன்று உள் கோணங்களையும் கொண்ட வடிவம். செங்கோணத்தில் ஒரு

கோணம் நேர் கோணமாக இருக்கும்.

**triangular scale**: *(வரை.)* **முக்கோண அளவுகோல்**: *பல்வேறு அளவீடுகளை ஒரே கோலில் ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டுள்ள ஒரு முக்கோண வடிவ அளவுகோல்.*

**triangular truss: முக்கோணந் தாங்கி**: *குறுகிய விரிபரப்புக்கான குறிப்பாக கூரைகளை அமைப்பதற்கான தாங்கி.*

**triangulation**: **முக்கோணமாக்கு முறை:** *நிலம் மற்றும் நீர் மீதான பரப்புகளையும் இவற்றின் மீதுள்ள குறிப்பிட்ட நிலைகள் எவ்வளவு தொலைவில் உள்ளன என்பதையும் அளவிட இந்த நிலைகளைச் சேர்த்து பல கோணங்களை உருவாக்கிக் கொண்டு அடித்தளம், கோணம் ஆகியவற்றைக் கணக்கிடும் முறை.*

**trickle charge: துளி மின்னேற்றி**: *இரு திசை மின்சாரத்தை நேர்மின் சாரமாக மாற்றுகிற திருத்தி. தேங்கு மின்கலத்துக்கு தினமும் 24 மணி நேரம், பொதுவில் மிகக் குறைவான விகிதத்தில் நேர் மின் சாரத்தை அளிப்பது.*

**trifiorium**: **ரி:பியோரியம்**: *ஒரு சர்ச்சின் உள்ளே பிரதான நடுப் பாதைக்கு மேலாக உள்ள சரிந்த கூரைக்கும் நடைபாதை விதானத்துக்கும் இடையே உள்ள வெளி.*

**trigonometry:** *(கணி.)* **திரிகோணமிதி**: *ஒரு முக்கோணத்தின் புறங்கள், கோணங்கள் ஆகியவற்றை அளக்கும் அறிவியல்.*

**trim**: *(க.க.)* **டிரிம்:** *ஒரு கதவு அல்லது பலகணியின் நிலைத் தண்டுக்கும் பிளாஸ்டருக்கும் இடையில் உள்ள இணைப்புகளை மறைப்பதற்கு மரம் அல்லது உலோகத்தால் ஆன பகுதிகள். காகிதத் தயாரிப்பு எந்திரத்தில் தயாரித்து முடிக்கப்பட்ட காகிதத்தின் ஓரம் வெட்டுவதற்கு முன் மிக அதிகபட்ச அகலம்.*

**trim: டிரிம்**: *ஒரு விமானம் திருப்பாமல், ஏறி இறங்காமல் பறக்கிற நிலையில் காற்று வீசும் அச்சுக்கும் விமான அச்சுக்கும் இடையிலான கோணம். (கட்டிட) கதவு, பலகணி ஆகியவற்றைச் சுற்றிலும் உள்ளே அல்லது வெளியே அமைந்த வடிப்பு வேலை அல்லது இதர நேர்த்தி வேலை.*

**trim angle டிரிம் கோணம்**: *கடல் விமானத்தின் மிதவைப் பகுதி, பறக்கும் படகின் உடல் பகுதி. இவற்றின் கிடைமட்டக் கோட்டுக்கும், நீளவாட்டுக் கோட்டுக்கும் இடையிலான கோணம். மேற்கூறியவற்றின் முன்புறப் பகுதி, பின்புறப்பகுதியை விடத் தூக்கலாக இருந்தால் கோணம் நேர் மறையானது.*

**trimmer arch** : *(க.க.)* **நீள் வளைவு** : *கணப்பு மேலுள்ளது போன்று சற்று தட்டையான வளைவு.*

**trimmers** : *(க.க.)* **டிரிம்மர்** : *மரப்பலகைகள், உத்தரங்கள் கொண்டு தரைத்தளம் அமைக்கும் போது பயன்படும் தாங்கு உத்தரம்.*

**trimming dies** : **(எந்.) பிசுறுநீக்கு அச்சுகள்** : *நீட்டப்பட்ட அல்லது வேறு வகையில் உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்களின் ஓரங்களில் உள்ள பிசுறுகளை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் அச்சுகள்.*

**trimming joist** : *(க.க.)* **டிரிம்மிங் உத்தரம்** : *சுவர் பிதுக்கங்கள் மேல் அமைந்த உத்தரத்தைத் தாங்கும் உத்தரம்.*

**trim size :** **ஓரம் வெட்டிய அளவு :** ஓரங்கள் வெட்டப்பட்ட பின் பைண்ட் செய்யப்பட்ட பின்னர் உள்ள பக்கத்தின் அளவு.

**triode :** (மின்.) **மும்முனையம் :** எதிர்முனை: வலை; தகடு ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய ஒரு வெற்றிடக் குழல்.

**trip hammer :** (எந்.) **விழு சம்மட்டி :** விசைமூலம் இயங்கும் சம்மட்டி. இந்த வகை சம்மட்டியில் சம்மட்டி உயரே சென்ற பின் அது தானாகக் கீழே விழுகின்ற மாதிரியில் ஏற்பாடு இருக்கும்.

**triphibian :** (வானூ.) **முத்திற விமானம் :** நிலம், நீர், விழுபனி. அல்லது ஐஸ் கட்டித் தரையிலிருந்து கிளம்புவதற்கு அல்லது இறங்குவதற்கு வசதியான அடிப்புற சாதனம் கொண்ட விமானம்.

**triplane :** (வானூ.) **மூவிறக்கை விமானம் :** ஒன்றுக்கு மேல் ஒன்றாக மூன்று இறக்கைகள் அமைந்த விமானம்.

**triple case :** (அச்சு.) **மூன்று கேஸ் :** வெவ்வேறான மூன்று வடிவங்களில் உள்ள எழுத்துகளைப் போட்டு வைப்பதற்கான பல அறைச் சட்டம்.

**triple point :** (குளி.பத.) **மும்மடி நிலை :** வாயு, திரவ, திடநிலையிலுள்ள மூன்று பொருட்கள் சம நிலையில் இருக்கக்கூடிய நிலையான மையம்.

**triplex steel :** (உலோ.) **முப்படி உருக்கு :** பெஸ்ஸிமர் முறை, திறந்தஉலைமுறை, மின்சாரமுறை ஆகிய மூன்றையும் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட உருக்கு.

**tripoli :** **திரிபோலி :** பொடிப் பொடியாக உதிர்ந்து போகிற அளவுக்குத் தரம் கெட்டுப்போன சுண்ணாம்புக்கல், பாலிஷ் போடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**tripper :** (பட்.) **விடுவை :** எந்திரத்தில் ஓர் உறுப்பு திடீரென மற்றோர் உறுப்பை விடுவிக்கிற ஏற்பாடு அல்லது அவ்விதம் விடுவிக்கிற உறுப்பு. இந்த ஏற்பாடு கையால் இயங்குவதாக அல்லது விசையால் இயங்குவதாக இருக்கும்.

**tri-sect :** **மூவெட்டு :** மூன்று சம பகுதிகளாகப் பிரித்தல்.

**tristimulus values :** (மின்.) **முத்தூண்டல் மதிப்பளவுகள் :** வண்ணத் தொலைக்காட்சியில், ஒரு மாதிரி வண்ணத்திற்கு இணையாக இணைய வேண்டிய ஒவ்வொரு அடிப்படை வண்ணத்தின் அளவு.

**triton :** (மின்:) **டிரைட்டான் :** ஒரு புரோட்டானும் இரு நியூட்ரான்களும் அடங்கிய உமிழ்வுத் துகள்.

**trivalent :** (மின்.) **மூவணு இணைவுத் திறன் :** மூன்று அணுக்களுடன் இணையும் எலெக்ட்ரான்களின் திறன்,

**trochanter, (great trochanter:)** (உட.) **பெருங்கால் எலும்பு:** காலின் உச்சிப்பகுதியின் புறத்தே தொட்டு உணரக்கூடிய எடுப்பான எலும்பின் பகுதி. காலை வெளிப்புறமாகத் திருப்புவதற்கும் காலைப் பக்கவாட்டில் திருப்புவதற்கும் பயன்படும் தசைகளில் சில இதனுடன் பொருத்தப்பட்டுள்ளன. சிறு கால் எலும்புத் தசைகள், முழங்காலை மேல்நோக்கித் தூக்க உதவுகின்றன.



பெருங்கால் எலும்பு

**trolley :** (மின்.) **தொடு சக்கரம் :** ஒரு சாதனத்தை இயக்க அல்லது சாலையில் ஓடும் வாகனம் இயங்குவதற்கு தலைக்குமேலே உள்ள

மின் கம்பியிலிருந்து மின்சாரம் பெறுவதற்கு ஒரு தண்டின் மேல் நுனியில் மின் கம்பிமீது உட்காரும் வகையில் சிறு சக்கரம் இருக்கும் அல்லது வழுக்கிச் செல்லும் தொடு சாதனம் இருக்கும். (எந்திர) சங்கிலியைப் பயன்படுத்தி பாரத்தைத் தூக்குவதற்கான சக்கர வடிவிலான தாங்கு பகுதி. இது ஒரு நீண்ட உலோகத் தண்டுமீது நகர்ந்து செல்லக்கூடியது.

**troostite :** *(உலோ.)* **டிரூஸ்டைட்டு:** *மார்ட்டென்சைட் என்ற எஃகின் கடினத் தன்மைக்குக் குறைவான கடினத் தன்மையுள்ள எஃகின் இடைமாறு நிலைக் கட்டமைப்புத் தனிமம்.*

**troposphere :** *(மின்.)* **அடிவளி மண்டலம் :** பூமியின் வாயுமண்டலத்தின் அடிப்பகுதி. இதில் மேகங்கள் உருவாகின்றன. உயரே செல்லச் செல்ல வெப்ப நிலை குறைகிறது,

**trouble lamp :** *(மின்.)* **சங்கட விளக்கு :** மிக நீண்ட மின் கம்பியின் நுனியில் பல்பு பொருத்தப்பட்ட விளக்கு. பழுது பார்க்கும் போது அவ்விடத்துக்கு ஒளி கிடைக்க உதவுவது.

**trowel :** *(வார்ப்.)* **கரணை :** வார்ப்பட ஆலைக் கரணைகள் சிறியவை; குறுகலானவை. பொதுவில் இவை சுமார் 3.8 செ.மீ. அகலமும் 12 அல்லது 15 செ.மீ. நீளமும் உள்ளவை.



கரணை

**troy weight : டிராய் எடை:** இந்த அளவு முறைப்படி ஒரு ராத்தல் என்பது 12 அவுன்ஸ். பொற்கொல்லர்களும், நகைக் கடைக்காரர்களும் பயன்படுத்தும் எடைமுறை.

24 கிரெய்ன் = 1 பென்னி வெயிட்
20 பென்னி வெய்ட்
வெயிட் = 1 அவுன்ஸ்
12 அவுன்ஸ் = 1 பவுண்டு

**true power :** *(மின்.)* **மெய்விசை:** ஒரு மின்சுற்றுவழியில் உள்ள படிக்கு ஈர்த்துக் கொள்ளப்படும் மின்விசையின் அளவு.

**true air speed meter :** *(வானூ.)* **விமான அசல் வேகமானி :** இது ஒரு வகையான காற்று வேகமானி, இது காற்றின் வேகத்தையும் கணக்கில் கொண்டு விமானத்தின் உண்மையான வேகத்தையும் கண்டறிந்து கூறுவது.

**trunk :** *(மின்.)* **மைய ஊடுருளை :** மின்விசைப் பலகைகளுக்கும் தொலைபேசித் தொடர்பகங்களுக்குமிடையில் கம்பிகளையும் கம்பிவடங்களையும் இடையிணைப்பு செய்யும் ஊடுருளை.

**trunnion : சாய்வு புயங்கள் :** நீண்ட குழல் அல்லது தண்டின் நடுப்பகுதியில் இரு புறங்களிலும் நீட்டிக் கொண்டிருக்கிற புயங்கள். இவற்றைத் தாங்குதூண்கள் மீது அமைத்தால் குழலை அல்லது தண்டை மேலும் கீழுமாகத் தக்கபடி சாய்த்து அமைக்க முடியும்.

**truss :** *(க.க.)* **முட்டு** ; கட்டடத்தில் நீண்ட இடைவெளிகளுக்கு நடுவே பாரத்தைத் தாங்குவதற்காக அமைக்கப்படுகிற முன்கூட்டி இணைக்கப்பட்ட முக்கோண வடிவ கட்டுமானப் பகுதிகள். இருக்கைகளில் இரு ஓரங்களைத் தாங்குவதற்குப் பயன்படுத்தப்படும் உறுதியான சட்டங்கள். பொதுவில் இவை ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டிருக்கும்.

**trussed axle :** *(தானி.)* **முட்டுத் தண்டு :** முட்டுத் தண்டு மூலம் உறுதியேற்றப்பட்ட அச்சு.

**trussed beam :** *(க.க.)* **முட்டுக்** கம்பி மூலம் வலுவேற்றப்பட்ட நீண்ட தண்டு.

**truss rod :** முட்டுக் மூலம் வலு வேற்றப்பட்ட தண்டின் இரு முனைகளிலும் பிணைக்கப்பட்ட கம்பி.

**try square :** *(எந்.)* **அளவுச் சதுரம் :** தாங்கள் கையாளும் பொருள் உண்மையில் சதுரமான தானதா என்று சோதிக்க மெக் கானிக்குகள் பயன்படுத்தும் ஒரு சிறு சதுரம், செங்கோணத்தைக் குறிக்கவும் இது பயன்படும்.

**T slot:** *(எந்.)* **T-குழி:** கடைதல், இழைத்தல், மற்றும் வேறு பணிக் கான எந்திரத்தின் மேடையில் உள் வெட்டு மூலம் டி. போல்ட் டின் தலை உட்காருகிற அளவுக்கு ஏற்படுத்தப்பட்ட குழிவு. இக்குழி வானது டி. போல்ட்டை தக்க நிலைக்கு சரிபொருத்தம் செய்ய உதவும்.

**T slot cutter :** *(எந்)* **T குழிவெட் டுக் கருவி :** T. குழிகளின் அகன்ற பகுதிக்கு நேர்த்தி அளிப்பதற் காகப் பயன்படுகிற கடைசல் வெட்டுக் கருவி.

**T sqaure :** *(க.க.)* **T. சதுரம் :** வடி வரைவாளர் பயன்படுத்தும் கருவி. இரண்டு முதல் மூன்று அங்குல அகலம் கொண்ட ஒன்று முதல் ஐந்து அடி நீளம் கொண்ட பட்டை. இதன் தலைப்புறத்தில் செங்கோணமாக அமையும் வகை யில் இப்படை பொருத்தப்பட்டுள் ளது. தலைப்புறப் பட்டை குறைந் தது இரு மடங்கு பருமன் கொண் டது. டி. சதுரமானது இணை கோடுகளையும் வரையப் பயன் படுவது.

**tube :** *(மின்.)* **குழாய் :** ரேடியோ கலைகளைக் கண்டுபிடித்து பெருக்குவதற்கான கருவி, மற்றும் சிறு அளவு மின்சாரங்களைக் கண்டறியவும், இருதிசை மின் சாரத்தை நேர்திசை மின்சார மாகத் திருத்துவதற்கும் பயன்படு கிற சாதனங்களின் ஒரு பகுதியா கப் பயன்படுகிற கருவிகள் உட் பட பொதுப்படையான சொல்.

**tube punch :** *(தோல்.)* **குழல் துளைக்கருவி :** கட்டிங் பிளையர்



குழல் துளைக் கருவி

போன்று கையால் இயக்கித் துளை யிடும் கருவி. துளையிடுவதற்கென குழிவான சிறு குழல் அல்லது குழல்கள் உள்ளன. பொத்தான் பொருத்துவதற்கு அல்லது கண் அமைக்க இவ்விதம் துளையிடப் படும்.

**tub-sizing :** *(அச்சு.)* **தொட்டி முக்கு :** காகிதத்தின் மேற்பரப் புக்கு நேர்த்தி அளிப்பதற்காகக் கூழ் பூச்சு அளிக்க பெரிய காகிதச் சுருளை கூழ் தொட்டியில் முக்கு தல்.

**tubular axle :** *(தானி.)* **குழல் அச்சு :** உருக்கினால் ஆன குழலி னால் செய்யப்பட்ட அச்சு.

**tubular radiator :** *(தானி.)* **குழாய்முறை வெப்பமகற்றி :** வெப் பம் அகற்றும் சாதனம், பல சிறிய குழாய்களைக் கொண்டது. இவற் றின் வழியேநீர் பாய்ந்துசெல்லும் போது வெப்பத்தை எடுத்துக் கொண்டு குளிர்விப்பு நடைபெறு கிறது.

**tudor style :** *(க.க.)* **டியூடர் பாணி :** டியூடர் வம்ச அரசர்கள் இங்கிலாந்தை ஆண்ட காலத் தைச் சேர்ந்த கட்டிடக் கலைப் பாணி. பொதுவில் எட்டாம் ஹென்றி மன்னர் காலத்தைக் குறிப்பது.

**tufting : குஞ்சத்தையல் :** மெத்தை பதித்த இருக்கைகளில் உள்ளே இருக்கிற மென்பொருள் இடம் நகராமல் இருக்க அதை யும் போர்த்து துணியையும் சேர்த்துத் தைத்தல். குஞ்சத்தையல் போட்ட இடத்தில் போர்த்துத் துணியை கெட்டி நூல் அறுத்து விடாமல் இருக்க ஒரு பொத்தான் அமைக்கப்படும், அது பார்வை யையும் அளிக்கும்.

**tulip tree :** *(மரம்.)* **துலிப் மரம் :** போப்லார் அல்லது துலிப்போப் லார் எனப்படும் மரம். லேசான மஞ்சள் நிறம் கொண்டது. மென் மையானது. வேலைப்பாடுக்கு எளியது. வெள்ளை ஊசியிலை மரம் போல இதைப் பலவகைக் காரியங்களுக்குப் பயன்படுத்த முடியும்.

**tumble : பிசிறு உருட்டு :** வார்ப் படப் பொருட்கள், அடித்து உரு வாக்கப்பட்ட பொருட்கள் ஆகிய வற்றை அவை தயாரிக்கப்பட்ட உடன் ஒரு பெரிய பீப்பாயில் போட்டு உருட்டுதல். ஒன்றோடு ஒன்று நன்கு உராயும் போது பிசிறுகள் அகன்று இப்பொருட் கள் சுத்தமாகி விடும்.

**tumbling :** *(உலோ.)* **உருட்டுச் சுத்திகரிப்பு :** சிறு உலோகப் பகுதி களைத் தனிவகை உராய்பொருள் களைக் கொண்ட சுழலும் பீப் பாய் வடிவ எந்திரத்தில் இட்டு உருட்டுவதன் மூலமாகத் துப்புரவு செய்து வடிவமைத்தல்.

**tumbled :** *(அச்சு.)* **புரண்டு போதல் :** அச்சிடப்பட்ட தாளை மேலிருந்து கீழாகப் புரட்டிப் பார்ப்பது. இது தவிர்க்கப்பட வேண்டும். வலமிருந்து இடமாகத் தான் புரட்ட வேண்டும்.

**tumbler gear : புரட்டு கியர் :** வரிசையான பல கியர்களில் நடு வில் அமைந்த கியர். இயக்கப்பட்ட கியரின் திசையை பின்புறமாக மாற்றுவதற்கு இது உதவும்.

**tumour, tumor :** *(நோயி.)* **கழலை :** உடலின் உயிரணுக்கள் அடங்கிய நோயுற்ற வீக்கம். 'புற்றுக்கழலை' என்பதை மீண்டும் தோன்றி மரணம்விளைவிக்கக்கூடியதாகும். 'வெற்றுக்கழலை' என்பது சாக டிக்கும் தன்மையில்லாத கழலை யாகும்.

**tuned amplifier :** *(மின்)* **இசை விப்பு மின் மிகைப்பி :** உட்பாட்டுப் பிணைப்புக்காவும், வெளிப்பாட் டுப் பிணைப்புக்காகவும் இசை விப்பு செய்த மின்சுற்று வழியைப் பயன்படுத்தும் ஒரு மின்மிகைப்பி.

**tuned circuit :** *(மின்.)* **இசைவிப்பு மின்சுற்றுவழி :** கொண் மம், தூண்டம், தடை இம் மூன்றையும் வரிசையாக அல்லது இணையாகக் கொள்ள ஒரு மின் சுற்று வழி. இதற்கு ஒரு குறிப் பிட்ட அலைவெண்ணில் விசை யூட்டும்போது, அதன் மின்கம்பிச் சுருளுக்கும் கொண்மிக்குமிடை யில் ஆற்றல் பரிமாற்றம் நடை பெறுகிறது.

**tuner : அலைத்தேர்வி :** தேவை யான குறிப்பிட்ட ரேடியோ அலைகளை மட்டும் தேர்ந் தெடுத்து மற்ற அலைகளை நிராகரிக்கும் வகையில் சரியமைக் கப்படுகிற கன்டென்சர்சர்க்கியூட்.

**tung oil :** *(வண்.)* **டங் ஆயில் :** சீனாவிலும், ஜப்பானிலும் காணப்படும் டங் மரத்தின் விதை யிலிருந்து எடுக்கப்படும் எண் ணெய், வார்னிஷ் உலர்விகள் ஆகியவற்றைத் தயாரிக்கப் பயன் படுவது. சீன மர எண்ணெய் என்றும் இதற்கு ஒரு பெயர் உண்டு.

**tungsten :** *(வேதி.)* **டங்ஸ்டன் :** சில கனிமங்களில் குறிப்பாக

வோல்ஃப்ரமைட்டிலிருந்து பெறப்படும் உலோகம். இது உலோக வடிவில் இரும்புடன் சேர்த்துப் பயன்படுத்தப்படுகிறது. சூழ்ம வடிவில் இது மின்பல்புக்கு இழை தயாரிக்கப் பயன்படுகிறது. சோடியம் டங்ஸ்டேட ($Na_2WO_4$) வடிவில் மரம், துணிகளின் மீது தீப்பிடிக்காத தன்மை அளிக்கப் பயன்படுகிறது.


**tungsten carbide : டங்ஸ்டன் கார்பைட்** : மீதேன் அல்லது ஹைட்ரோ கார்பன் வாயுவில் வைத்து பழுக்கக் காய்ச்சிய டங்ஸ்டனை கரிம முறையில் தயாரிக்கப்பட்ட இரும்புப் பழுப்புப் பவுடர். இது தேய்ப்புப் பொருளாகப் பயன் படுத்தப்படுகிறது. அல்லது இது கோபால்ட் அல்லது வேறு கெட்டிப்படுத்தும் பொருளுடன் சேர்க்கப்பட்டு கட்டியாக்கப்பட்டு அதைக் கொண்டு உயர்வேக வெட்டு உலோகம் தயாரிக்கப்பட்டு அதன் மூலம் வேலைக் கருவிகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த உலோகப் பொருள் விடியாமெட்டல், கார்போலாய், போரான் என்ற வணிகப் பெயர்களில் விற்கப்படுகிறது. இதன்மூலம் தயாரிக்கப்பட்ட வெட்டுக் கருவிகள் முன்னர் இருந்தவற்றை விட 3 முதல் 5 மடங்குவேகத்தில் வெட்டுபவை. இது விலை உயர்ந்தது என்றாலும் பல அமைப்புகள், செலவுக்கு ஏற்ப இது உழைக்கிறது என்று கருதுகின்றனர்.

**tungsten lamp** : (மின்.) **டங்ஸ்டன் பல்பு** : டங்ஸ்டன் உலோகத்தால் ஆன மெல்லிய கம்பியை இழையாகக் கொண்ட மின்சார பல்பு.

**tungten steel** : (உலோ.) **டங்ஸ்டன் உருக்கு** : வெட்டு வேலைக் கருவிகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் கலோக உருக்கு.

**tuning** : (மின்.) **இயைவிப்பு** : ரேடியோ அலைகளைப் பெறும் சர்க்கியூட்டின் மின் பண்புகளை மாற்றி, நாம் விரும்புகிற குறிப்பிட்ட சிக்னல்கள் நன்கு தெளிவாகவும், வலுவாகவும் பெறும் படி செய்தல்.

**tuning fork** : (மின்.) **இசைக்**



இசைக் கவடு

**கவடு** : ஈரலகு வில்லமைவுடைய நிலையான சுர அதிர்வு அமைவு வாய்ந்த இசை ஒலிக் கருவி.

**tunel engineer** : (பொறி.) **சுரங்கப் பொறியர்** : போக்கு வரத்து வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு மலைகள் ஊடாகவும் ஆறுகளுக்கு அடியிலும் சுரங்கப் பாதை அமைக்க அளவீடுகள் டிசைன்கள் ஆகியவற்றை மேற்பார்வையிடுபவர்.

**turbidity** : **கலங்கல்** : தெளிவான நீருடன் ஒப்பிடுகையில் வண்டல் போன்றவற்றால் நீர் கலங்கி இருக்கும் அளவு.

**turbine : டர்பைன்** ; ஒரு வகை நீராவி என்ஜின். இதில் இயக்குவிக்கும் உறுப்புகள் அனைத்தும் சுழல்கின்றன.

**turbojet** : (விண்.) **பீற்றுவளி விசைப்பொறி உருளை**: பீற்று துளியால் இயக்கப்படும் விசையாழி. மின்னோடியின் பீற்று வாயுக்கள் மூலம் விசையாழி இயக்கப்படுகிறது.

**turbo - propeller engine** : (வானூ.) **டர்போ கழலி என்ஜின்** : வாயு டர்பைன் மாதிரியிலான விமான என்ஜின். இதில் டர்பைன் மாதிரியிலான விமான என்ஜின். இதில் டர்பைன் விசையானது கம்

பிரசரையும் அத்துடன் சுழலியை யும் இயக்கப் பயன்படுகிறது. அநேக சமயங்களில் இது 'டர்போ புரோப்' என்றும் குறிப்பிடப் படுகிறது.

**turbulent flow** : *(வானூ.)* **கொந்தளிப்பான ஓட்டம்** : நீர்ம ஓட்டத்தில் எந்த குறிப்பிட்ட இடத்திலும் வேகத்தின் அளவும், திசையும் நேரத்துக்கு நேரம் விரைவாக மாறிக்கொண்டே இருக்கின்ற நிலை.

**turf or peat: டர்ப் அல்லது பீட்**:

**turn - and - bank Indicator** : *(வானூ.)* **திருப்பு சாய்வுமானி** : விமானம் எந்த அளவுக்குத் திரும்பு கிறது என்பதையும் எந்த அளவுக் குத் சாய்ந்து செல்கிறது என்பதை யும் காட்டுவதற்கு ஒரே உறைக் குள் அமைந்துள்ள கருவி.

**turn buckle** : *(எந்.)* **திருப்பு பிணைப்பு** : இரு தண்டுகளை ஒன் றோடு ஒன்று திருகி இணைப்ப தற்கு புரி கொண்ட இணைப்பு.

**turned sort** : *(அச்சு.)* **திரும்பிய எழுத்து** : அச்சுக் கோக்கும்போது வேண்டுமென்றே மேல் பகுதி அல் லது முகப்புப்பகுதி கீழ் நோக்கி இருக்கும் வகையில் அமைக்கப்படு வது. இதனால் பிரதி எடுக்கும் போது அடிப்பகுதி மேல் நோக்கி இருப்பதால் கருப்பாக விழும். உரிய எழுத்து இல்லாத நிலையில் அந்த இடத்தில் உரிய எழுத்தைப் பின்னர் அமைக்க வேண்டும் என்று குறிப்பதற்காக இவ்விதம் தலைகுப்புற வேறு எழுத்து வைக் கப்படுகிறது.

**turning gouge** : *(மர.வே.)* **திருப்பு செதுக்குளி**: கடைசல் எந்தி ரத்தில் மரக்கட்டைகளை சாய் வான முனை கொண்ட செதுக் குளியைப் பயன்படுத்தி மரத்தைச் செலுத்தி எடுப்பது. இவ்வித செதுக்குளி முனையின் அகலம். .6 முதல் 3 8செ.மீ. வரை இருக் கும்,

**turning machine** : **வளைப்பு எந் திரம்** ; ஒரு உருளையின் விளிம்பை வெளிப்புறமாக உள்ளே கம்பி அமைக்கிற வளையம் வளைத்து மடிக்கும் எந்திரம். வாளி அல்லது புனலின் விளிம்பு போன்று அமைக்க வல்லது.

**turn meter** ; *(வானூ.)* **திரும்பு மீட்டர்** ; விமானம் ஏதாவது ஒரு பக்கம் திரும்புகையில் அவ்விதம் திரும்புகிற விகிதம் நிர்ணயிக்கப் பட்ட அச்சிலிருந்து எந்த அளவில் உள்ளது என்பதைக் காட்டுகிற கருவி.

**turmeric**: *(வேதி.)* **மஞ்சள்**: சீனா, கிழக்கிந்தியா மற்றும் பல வெப்ப மண்டல நாடுகளில் விளையும் பயிரிலிருந்து பெறப்படுவது. மஞ்சள் தாள் தயாரிப்புக்கு இது மஞ்சள் சாயப்பொருளாகப் பயன் படுகிறது. காரப்பொருள்களை சோதிப்பதற்கு இத்தாளைப் பயன் படுத்தும்போது மஞ்சள் தாள் பழுப்பு நிறமாக மாறும். மருத்து வம், உணவுப் பொருட்களுக்கு நிறம் ஏற்றவும், துணிகளுக்குச் சாயமேற்றவும் மஞ்சள் பயன் படுத்தப்படுகிறது.

**turns ratio** *(மின்)* **சுழற்சி விகி தம்**: ஒரு மின்மாற்றியின் அடிப் படைச் சுருணையின் சுழற்சிகளின் எண்ணிக்கைக்கும், துணைச் சுருணையின் சுழற்சிகளின் எண் ணிக்கைக்குமிடையிலான விகிதம்.

**turpentine**: *(வண்.)* **கற்பூரத் தைலம்**: விரைந்து ஆவியாகக் கூடிய நிறமற்ற திரவம். ஒரு வகைத் தனி நெடியும் சுவையும் உடையது. தேவதாரு மரங்களி லிருந்து கிடைக்கும் பிசினரக்கு

நெய்மப் பொருளிலிருந்து வாலை வடித்தல் மூலம் எடுக்கப்படுகிறது.

**turret**: *(க.க.)* **துருத்து**: பெரிய கட்டடத்தில் பொதுவில் ஒரு மூலையில் சில சமயங்களில் பிதுக்கத் தூண்களிலிருந்து மேலெழும்பி நிற்கும் சிறு கோபுரம். காமிராவில் பல லென்சுகள் அமைக்கப்பட்ட ஓர் ஏற்பாடு. நான்கு லென்சுகளில் எதை வேண்டுமானாலும் முன்னே வரும்படி செய்து கொள்ள முடியும்.

**turret lathe: சுழல் கோபுர கடைசல் எந்திரம்**: கடைசல் எந்திரத்தில் வெவ்வேறான வேலைக்கருவிகள் ஒரு சுழல் உருளையில் கீழ்நோக்கி செங்குத்தாகப் பொருத்தப்பட்டிருக்கும். எதையும் கழற்றி பொருத்த வேண்டிய அவசியம் இன்றி தேவையான வேலைக் கருவியை முன் கொண்டு வந்து நிறுத்தி இயக்கலாம்.

**tuscan: டஸ்கன்**: *(க.க.)* புராதன கட்டடக் கலையின் ஐந்து வகையில் நுணுக்க வேலைப்பாடுகள் மிகவும் குறைவாக உள்ள கட்டடக் கலை வகை.

**tueyre: காற்றுத் திறப்பு**: இரும்புக் குழம்பு உள்ள தொட்டிக்குள் ''காற்றுப் பெட்டி'' மூலம் காற்றைச் செலுத்துவதற்காக தொட்டியினுள் அமைந்த திறப்பு.

**tweezers**: *(அச்சு.)* **சிறு சாமணம்**: சாமணம் போன்றவை. ஆனால் வடிவில் சிறியவை. அச்சுக் கோக்கும்போது நடுவே தவறான எழுத்துகள் இருக்குமானால், அக்குறிப்பிட்ட எழுத்தை மட்டும் அகற்றுவதற்குப் பயன்படுவது.

**twill: சாய்வரித் துளி**: நெசவுப் பாலை காரணமாக துணியின் மேற்பரப்பில் சற்று மேடான குறுக்காகச் செல்வது போன்ற கோடுகள் காணப்படும்.

**twin ignition**: *(தானி.)* **இரட்டைத் தீ பற்றுகை**: இரு பற்ற வைப்பு உள் எரி என்ஜினில் ஒரே சமயத்தில் அல்லது மாறி மாறி வாயுக்கலவை தீப்பற்றும்வகையில் அமைக்கப்பட்ட இரட்டைப்பிரிப்பு முனைகளைக் கொண்ட ஏற்பாடு.

**twin-six engine**: *(தானி.)* **இரட்டை ஆறு எஞ்சின்**: 6 சிலிண்டர்களைக் கொண்ட இரு ஜோடி, 60 டிகிரி கோணத்தில் பொருத்தப்பட்டிருக்கும்.

**twist bits**: *(மர.வே.)* **திருகு துண்டுகள்**: உலோகத்தில் துளை



திருகு துண்டு

யிடப் பயன்படுத்தப்படும் திருகு துளைக் கருவிகள் போன்றவை. ஆனால் இவை சிறிய துண்டுகள். கருவியைப் பொருத்தப் பயன்படுபவை. இவற்றில் திருகு வரிப்பள்ளங்கள் பக்கம் பக்கமாக இருக்கும். மரத்தில் ஸ்குரூக்களை இறக்குவதற்கான துளைகள் போடப் பயன்படுபவை.

**twist drill**: *(எந்.)* **திருகுதுளைக் கருவி**: உலோக உருளைத் தண்



திருகு துளைக் கருவி

டில் இரு புரிகள் பக்கம் பக்கமாக அமைந்து மேலிருந்து கீழாக நுனி வரை இறங்கும். உலோகம், மரம் இரண்டிலும் பயன்படுத்த இவை தயாரிக்கப்படுகின்றன துளைத் தண்டு ஒரே சீராக இருக்கலாம். அல்லது கீழ்ப்புறத்தில் குவிந்தும் இருக்கலாம்.

**two-filament bulbs**: *(காண்க.)* **இரு இழை பல்புகள்** : இரட்டை இழை பல்பு.

**two-line letter**: *(அச்சு.)* **இரு வரி எழுத்து**: ஒரு வாசகத்தின்

முதல் எழுத்து; பெரிய அளவிலான து. இதன் உயரம் இரு வரிகள் அளவுக்கு உள்ளது.

**two-on:** *(அச்சு.)* **டு ஆன்:** ஒரே சமயத்தில் அதிகப் பிரதிகளை அச்சிட இரண்டு அல்லது அதற்கு மேலான "பாரங்களை" அமைத்தல்

**two-phase:** *(மின்.)* **இரு ஃபேஸ்:** இதை கால் ஃபேஸ் எனலாம். 90 டிகிரி இடமாற்றம் இருக்கிற அளவிலான இரு சுற்றுகள் அல்லது சர்க்கியூட்டுகள்.


**two-phase alternator:** *(மின்.)* **இரு ஃபேஸ் மின்னாக்கி:** பல ஃபேஸ் நேர் திசை மின்சார மின்னாக்கி. ஃபேஸ் 90 டிகிரி இடமாற்றம் இருக்கிற வகையில் இரு வகை மின்னோட்டங்களை அளிக்கும் சுற்றுகளைக் கொண்டது.

**two-speed rear axle:** *(தானி.) எந்.)* **இரு வேக பின் அச்சு:** இந்த ஏற்பாட்டில் பின்புற அச்சில் இரு வேகச்சுற்றுக்கு அதாவது ஒற்றை வேக அச்சில் கிடைப்பதைப் போல இரு மடங்கு வேகத்துக்கு வழி செய்யப்படுகிறது, குறிப்பாக லாரிகளில் இவ்விதம் செய்யப்படும். இதனால் என்ஜின் தேய்மானம் குறையும். பெட்ரோல் உபயோகம் குறையும்.

**two-tone steerhide:** **இரு வழி தோல் பயன்:** விலை குறைந்த தோல் பொருள் புத்தகங்களை பைண்ட் செய்கையில் மேற்புறத்தில் அமைக்கவும், உறைப்பெட்டிகளின் மேற்புறத்தில் அமைக்கவும் பயன்படுவது. இயற்கை நிலையில் அல்லது பல வண்ணப் புள்ளிகளுடன் கிடைக்கப்பெறுவது.

**two way radio:** **இரு வழி வானொலி தொடர்புக் கருவி:** பல்வேறு இடங்கள் இடையே ரேடியோ தொடர்பு கொள்வதற்கு உதவும் சாதனம். எங்கும் எடுத்துச் செல்லத்தக்கது. ரேடியோ அலைகளைப் பெறுவதற்கும் அனுப்புவதற்குமான கருவிகள் அடங்கியது.

**T wrench:** **'T' வடிவ திருப்பு கருவி:** 'T' வடிவில் உள்ள திருப்பு கருவி. பற்றிக் கொள்வதற்குக் குழிவு இருக்கும்.



திருப்பு கருவி

**tympan:** *(அச்சு.)* **அழுத்துப் படலம்:** அச்சிடும்போது காகிதம் மீது எழுத்துக்கள் நன்குபதிந்து அச்சிடுவதற்கான வகையில் தகுந்த அழுத்தத்தைக் கொடுப்பதற்காக அச்சு எந்திரத்தில் ஒன்று அல்லது அதற்கு மேலாக வைக்கப்படும் காகிதங்கள்.

**tympanum:** *(க.க.)* **முகட்டுக் குமிழ்:** கட்டடத்தின் மேற்புறத்தில் அலங்காரமாக முக்கோண வடிவில் அமைக்கப்படுகிற இடம்.

**type:** *(அச்சு.)* **அச்சு எழுத்து:** உலோகத்தால் ஆன எழுத்து. அச்சிடுவதற்குப் பயன்படுவது. இதன் உயரம். 0.918 அங்குலம்.

**type caster:** *(அச்சு.)* **அச்சு வார்ப்பு எந்திரம்:** அச்சு எழுத்துக்களை வார்க்கும் எந்திரம்.

**type gauge:** *(அச்சு.)* **எழுத்து அளவி:** அச்சுக் கோக்கப்பட்ட வாசகத்தில் எவ்வளவு வரிசைகள் உள்ளன என்று அளவிடுவதற்கு குறியீடு செய்யப்பட்ட மரத்தால் அல்லது உலோகத்தால் ஆன அளவி.

**type high:** *(அச்சு.)* **அச்சு உயரம்:** அச்சு எழுத்தின் உயரம் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. அமெரிக்காவில் இதன் உயரம். 0.918 அங்குலம்.

**type metal:** *(அச்சு.)* **அச்சு உலோகம்:** *ஒரு பங்கு ஈயம், இரு பங்கு ஆண்டிமணி, ஐந்து பங்கு காரீயம் ஆகியவற்றால் ஆன அலோகம்.*

**type planer:** *(அச்சு.)* **எழுத்து சமன்படுத்தி:** *நல்ல கெட்டியான மரக்கட்டை சேரில் எழுத்துக்களை கலங்களாக அடுக்கிய பின்னர் எழுத்துக்களின் தலைகள் சமச்சீராக ஒரே மட்டத்தில் அமைய இக்கட்டை கொண்டு தட்டி விட்டுப் பிறகு கேஸை முடுக்குவர்.*

**typhoid fever:** *(நோயி.)* **குடற் காய்ச்சல் (டைஃபாய்டு):** *செம்பழுப்புப் பொட்டுகளுடன் மயக்கமும், வயிற்று வீக்கமும், பெருத்த வலிவுக்கேடும், நீண்ட நாள் காய்ச்சலும் உண்டு பண்ணுகிற ஒருவகை நச்சுக்காய்ச்சல். (படத்தில்) காணப்படும் ஒரு சிவப்பணுவின் பகுதியைக் காட்டுகிறது. இது 1000 மடங்கு பெரிது படுத்தப்பட்டதாகும்.*




**typographer:** *(அச்சு.)* **அச்செழுத்தாளர்:** *தலைமை அச்சாளர் அல்லது அச்சு எழுத்துக்களை வடிவமைப்பவர்.*

**typographic:** *(அச்சு.)* **அச்சுக் கலை:** *அச்சுக்கலை தொடர்பாக.*

**typography:** *(அச்சு.)* **அச்செழுத்தியல்:** *1. அச்சுக்கோத்தல் அல்லது எழுத்துக்களை தக்கவாறு அடுக்குதல். 2. அச்சுக்கலை.*

# U

**U-bolt :** *(எந்.)* **U-மரையாணி :** 'U' என்ற ஆங்கில எழுத்தின் வடிவில் அமைந்த மரையாணி. இதன் இரு முனைகளிலும் திருகிழை அமைக்கப்பட்டிருக்கும். இதனை உந்து ஊர்தியில் உள்ளது போன்ற விற்சுருளைப் போல் "பிடிப்பு ஊக்கு" என்றும் கூறுவர்.



மரையாணி

**U clamp :** *(எந்.பட்.)* **U-பற்றுக் கருவி :** 'U' என்ற ஆங்கில எழுத்தின் வடிவில் அமைந்த பற்றுக் கட்டை. சமதளப் படுகைகளில் வேலைப்பாடு செய்ய வேண்டிய இறுக்கிப் பொருத்துவதற்கு இது பயன்படுகிறது.

**U-dometer :** *(இயற்.)* **U-மழை மானி :** ஒருவகை மழை மானி.

**ulcer :** *(நோயி.)* **சீழ்ப்புண் :** தோலில் அல்லது வயிற்றிலோ வாயினுள்ளே இருக்கும் ஒரு சவ்வில் ஏற்பட்டுள்ள, விரைவில் ஆறாதிருக்கிற சீழ்ப்புண்.

**ullage :** *(விண்.)* **ஆவிச் சேதாரம் :** ஆவியாய்ப் போனதால் ஏற்படும் குறைவிழப்பு.

**ulna :** *(உட.)* **அடி முழ எலும்பு :** முன் கையின் இரு எலும்புகளில் அடியிலுள்ள பேரெலும்பு. இது கையின் புறப் பகுதியுடன் கட்டை விரல் அருகில் இணைகிறது.



**ultimate strength:** *(பொறி.)* **இறுதி வலிமை :** எந்திரத்தில் மிக அதிக அளவில் நிலைப்படுத்தக்கூடிய பாரவிசை.

**ultramarine blue :** *(வண்.)* **கடல் நீலம்:** சீனாக் களிமண் சோடியம் கார்பனேட்டு, கார்பன், கந்தகம் ஆகியவை கலந்த ஒரு கலவையைச் சூடாக்குவதால் உண்டாகும் நீல நிறமி.

**ultra micro meter :** *(வண்.)* **உறுதுண்ணளவை மானி:** அங்குலத்தின் பத்து லட்சத்தில் ஒரு கூறினையும் துள்ளியமாகக் கணிக்கும் அளவை மானி.

**ultra microscope: புடையொளி நுண்ணோக்காடி:** நுண்ணோக்காடி கொண்டும் காணமுடியாத அளவில் மிகச் சிறியதான துகள்களைப் பார்ப்பதற்குப் பயன்படும் நுண்ணோக்காடி.

**ultrasonic:** *(விண்.)* **ஒலி கடந்த வேகம்:** ஒலியைவிட விரைந்து செல்லும் வேகம்.

**ultra sonics;** *(இயற்.)* **கதழ் ஒலியலையியல்:** ஒலியலை வகையில் அதிர்வுகளை ஆராய்தல்.

**ultra speed welding: கடும் வேகப் பற்றவைப்பு:** இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட பற்றவைப்பு மின் முனைகளைக் கொண்டு, பற்றவைக்க வேண்டிய பொருளை ஒரே சமயத்தில் தொட்டுச் செய்யப்படும் மிக வேகப் பற்றவைப்பு முறை.

**ultra-violet: புற ஊதாப்பகுதி:** கண்ணுக்குப் புலனாகாத நிறப் பட்டையின் ஏழு நிறங்களில்

ஊதாக் கதிர்களுக்கு அப்பாற் பட்ட மண்டலம்.

**umber:** *(வண்.)* **செங்காவி:** மங் கனீஸ் ஆக்சைடும், களிமண்ணும் அடங்கிய பழுப்புச் செங்காவி வண் ணம். இது நிறமியாகப் பயன் படுத்தப்படுகிறது.

**umbra:** *(விண்.)* **உருநிழல்/கரு மையம்:** கதிரவன் கறைப் பொட் டின் கருமையம்;

கோள் மறைப்பில் செறிநிழல் கூறு.

**unbalanced load:** *(மின்.)* **சம நிலையற்ற மின்சுமை:** ஒரு மின்வழி யில் ஒரு புறத்தைவிட மறுபுறத் தில் மின்சுமை அதிகமாக இருத் தல்.

**uncontrolled spin:** *(வானூ.)* **கட்டற்ற சுழற்சி:** விமானத்தில் கட்டுங்கடங்காமல் சென்று விடும் சுழற்சி.

**undamped wave:** *(மின்.)* **ஒடுக்க மிலா அலை:** ஒரே அளவுடைய அலைவெண்ணும் வீச்சளவும் கொண்ட ஒரு தொடர்ச்சியான அலை.

**undercompounded :** *(மின்.)* **கூட்டுச் சுருணை மின்னாக்கி :** மின் சுமை அதிகமாக அதிகமாக முடிவு மின்னழுத்தம் குறைகிற வகையில் அமைந்துள்ள ஒரு கூட்டுச்சுருணை மின்னாக்கி.

**under-ground cable :** *(மின்.)* **தரையடிக் கம்பி வடம் :** ஈயல் அல் லது பிற நீர்புகாப் பொருட்களில் பொதிந்து வைக்கப்பட்டுள்ள மின் கடத்து கம்பி வடம். இது தரை யடியில் மின் கம்பிவடக் குழாய் களினுள் செலுத்திப் புதைக்கப்பட் டிருக்கும்.

**underlay:** *(வண்.)* **அடித்தாங்கல்:** அச்செழுத்து உருக்களின் அடியில் அடிக்கிடைத்தாள்களைத் தாங்க லாக வைத்து உறுதி செய்தல்.

**underload relay :** *(மின்.)* **மின் சுமைக்குறைவஞ்சல் :** மின்சுமை முன்னரே தீர்மானித்த ஓர் அளவுக் குக் குறையும்போது, மற்றொரு மின்சுற்றுவழியை இயக்குவிக்கிற ஒரு அஞ்சல் சுற்றுவழி.

**under pinning :** *(பொறி.)* **அடை யுதைவுக் கட்டுமானம் :** சுவர்க் கட்டுமானங்களில் கீழ்க்கட்டுமான ஆதரவு அமைத்துத் தாங்குதல் அமைத்தல்.

**under shot wheel :** *(பொறி.)* **நீர்விசைச் சக்கரம் :** அடியில் நீரோடல் மூலமாக இயக்கப் பெறு கிற சக்கரம்.

**undertone :** *(வண்.)* **மங்கிய வண்ணம் :** மேற்பூச்சாக வேறு வண்ணங்கள் பூசப்பட்ட ஒரு வண் ணம். ஒளியில் பார்க்கும்போது மற்ற வண்ணங்களுடன் மங்க லாகத் தோன்றும்.

**under writer:** *(மின்.)* **மின்சாதன ஆய்வாளர்.** மின் சாதனங்கள் நீண்ட நாட்கள் உழைக்கக் கூடி யனவா, எளிதில் தீப்பிடிக்காமல் காப்புடையனவா என்பதைச் சோதனை செய்து ஆராய்ந்தறிய வல்ல நிறுவன ஆய்வாளர்.

**undulatory movement:** *(வானூ.)* **அலையூசல் இயக்கம் :** அலைகளைப் போல் ஏற்ற இறக் கத்துடன் இயங்குதல்.

**uniconductor :** *(மின்.)* **ஒற்றை மின்கடத்தி :** மின்காப்பிடப்படாத ஒற்றை மின்கம்பி அல்லது மின் கம்பித் தொகுதி. இது மின் கடத்தலுக்கு ஒற்றைப் பாதையாக அமையும்.

**unidirectional :** *(மின்.)* **ஒற்றை வழி :** மின்விசை ஒரே திசையில் மட்டும் பாய்தல்.

**uniform load** : (பொறி.) **மாறா நிலைச் சுமை** : வேறுபாடின்றி மாறாத நிலையிலுள்ள சுமையளவு. இதில் எஞ்சினின் கட்டமைப்புச் சுமையும், அதில் ஒரு சீராகப் பரப்பி வைக்கப்பட்டுள்ள பாரத்தின் சுமையும் உள்ளடங்கும்.

**unilateral conductor** : (மின்.) **ஒருபக்க மின்கடத்தி** : ஒரே திசையில் மட்டுமே மின்னோட்டத்தைக் கடத்தக்கூடிய ஒரு சாதனம்.

**unilatral tolerance** : **ஒரு பக்கத் திறம்** : அடிப்படைப் பரிமாணத்திலிருந்து ஒரு பக்கம் கூடுதலாகவோ குறைவாகவோ வேறுபடுவதற்கு இடங்கொடுக்கும் அமைவு. எடுத்துக்காட்டு: 13.36–5.06செ.மீ.

**union** : (கம்.) **கூட்டிணைப்பு** : குழாய்களை இணைத்தல் அல்லது பொருத்துதல்.

**uniphase** : (மின்.) **ஒற்றை நிலை மின்னோட்டம்** : ஒரே நிலையுடைய மின்னோட்டம் அல்லது மின்னழுத்தம்.

**unit charge** : (மின்.) **அலகு மின்னேற்றம்** : சமஅளவு மின்விசையின் மீது ஒரு டைன் விசையைச் செலுத்தி ஒரு சென்டிமீட்டர் தூரம் நகர்த்தக் கூடிய மின்விசையின் அளவு

**unit magnetic pole** : (மின்.) **அலகு காந்தத் துருவம்** : ஒரு செ.மீ. தூரத்திலுள்ள சம அளவு ஆற்றல் வாய்ந்த ஒரே துருவத்தை ஒரு டைன் (நொடி விசையழுத்தம்) ஆற்றலுடன் விலக்குகிற காந்தத் துருவம். ஒரு கிராம் எடைமானத்தை ஒரு நொடியில் நொடிக்கு ஒரு செ மீ. விழுக்காடு செலுத்த வல்ல அளவுடைய விசை ஆற்றல் அலகு ஆகும்.

**unit measurement** : (மின்.) **அலகு அளவு** : மற்ற அளவுகளுடன் ஒப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் செந்திற உயர்வு அளவுகள்.

**unit of Illumination** : (மின்.) **ஒளியடர்த்தி அலகு** : மெழுகு விளக்கொளி.ஒரு விளக்கின் ஒளிர்திறன். சராசரி கோள மெழுகு விளக்கொளி என்பது, விளக்கின் மையத்திலிருந்து எல்லாத் திசைகளில் சராசரியாக பரவும் ஒளியின் திறன் ஆகும். சராசரி கிடைமட்ட விளக்கொளி என்பது, விளக்கின் ஒளிமையத்திலிருந்து கிடைமட்டத் தளத்தில் பரவும் சராசரி ஒளித் திறன் ஆகும்.

**unit of magnetic flux** : (மின்.) **காந்தப்பாய்வு அலகு** : ஒரு காந்தப் பொருளில் இணைக்கப்பட்டுள்ள காந்த விசை வழிகளின் மொத்த எண்ணிக்கை. இது, ஒரு காந்தச் சுற்று வழியில் பாயும் காந்த ஓட்டமாகக் கருதப்படுகிறது.

**unit of magnetic intensity** : (மின்.) **காந்த அடர்த்தி அலகு** : காந்த இயக்க விசையின் அலகு. காந்தச் சுற்று வழியின் மூலமாக காந்தவிசை வழிகளைச் செலுத்தும் காந்த அழுத்த விசை.

**unit of magnetic reluctance** : (மின்.) **காந்தத் தடை அலகு** : காந்த மூட்டிய பொருளினால் காந்தப் பாய்வுக்கு ஏற்படும் தடையின் அளவு.

**unit power plant** : (தானி.) **மின்னாக்கி அலகு** : உந்து ஊர்தியில் மின்னாக்கம் செய்வதற்கான எந்திரப் பகுதிகளின் முழுத் தொகுதி. இதில் மின்னோடி, மின் செலுத்தி, மின்னோடி மின் துணைக் கருவிகள் அனைத்தும் அடங்கும்.

**unit stress** : (பொறி.) **அழுத்த விசை அலகு** : ஓர் அலகு பரப்புப்

பகுதியின்மீது ஏற்படும் அழுத்த விசையின் அலகு. இது பெரும்பாலும் ஒரு சதுர அங்குலத்திற்கு இத்தனை பவுண்டு என்ற கணக்கில் குறிப்பிடப்படும்.

**universal : இன முழுதளாவிய :** இயல்பாகப் பல பொருட்களுக்கும் உரித்தாகக் கொள்ளத்தக்க பொது மூல அடிப்படைக் கருத்துப் படிவம்.

**universal grinding machine :** *(பட்.)* **பொது சாணை எந்திரம் :** சுழல் மேசை, சுழல் உருளை, சுழல் சக்கர முனை பொருத்தப்பட்டுள்ள ஒரு சாணை எந்திரம். இது நீள் உருளைச் சாணை, மேற்பரப்புச் சாணை, முகப்புச்சாணை முதலிய உள்முக, புறமுகச் சாணை தீட்டுதலுக்குப் பயன்படுகிறது.

**universal joint** *: (எந்.)* **பொது இணைப்பு :** ஊடு அச்சுகள் நேர் கோட்டில் இல்லாத இரு சுழல் தண்டுகள் தங்கு தடையின்றிச் சுழல்வதற்கு இடமளிக்கிற ஒரு வகை இணைவமைவு.

**universal milling machine :** *(எந்.)* **பொது வெட்டு எந்திரம் :** ஊடுவெட்டாகவும், நீளவெட்டாகவும் உலோகங்களில் பள்ளங்கள் வெட்டுவதற்கான ஓர் எந்திரம். இதில் சுழலும் வெட்டுக் கருவிக்கு எதிராக வெட்ட வேண்டிய உலோகத் தகட்டினைச் செலுத்துவர். இந்தச் சுழல் வெட்டுக்கருவி ஒரு சுழல் மேசையுடன் பொருத்தப்பட்டிருக்கும்.

**universal saw table** ; *(மர.வே.)* **பொது ரம்ப மேசை :** சாய்தளத்தில் ரம்ப மேசை சுழல்வதற்கு இடமளிக்கிற ஒரு ரம்ப மேசை.

**unlimited ceiling** *: (வானூ.)* **வரம்பற்ற உயர எல்லை :** மேக மட்டம்2742மீட்டருக்குமேற்பட்ட நிலையில் விமானம் தங்கு தடையின்றிப் பறப்பதற்கான உயரத்தின் எல்லை.

**unshielded carbon arc welding : காப்பற்ற கார்பன் வில் பற்றவைப்பு :** காப்புக்கருவி எதுவுமின்றி கார்பன் வில் பற்றவைப்பு முறை.

**unshielded metal arc welding : காப்பற்ற உலோக வில் பற்றவைப்பு:** வெற்று நிலையில் அல்லது இலேசாக முலாமிட்ட கம்பி அல்லது சலாகை மின்முனையாகப் பயன்படுத்தப்படும் உலோக வில் பற்றவைப்பு முறை.

**up-holsterry:** *(மர.வே.)* **மெத்தை வேலைப்பாடு :** அறை கலன்கள் முதலியவற்றுக்கு மெத்தை, திண்டு பொருத்தும் வேலைப்பாடு.

**up keep** *: (தானி.)* **பேணுகைச் செலவு :** உந்து ஊர்திகளைப் பேணிக் காப்பதற்கான செலவு.

**upper air : (விண்.) மேல் வளி மண்டலம் :** மீவளி மண்டலத்திற்கும் புறவளி மண்டலத்திற்கும் மிடையிலான வாயு மண்டலம்.

**upper cass :** *(அச்சு.).* **மேலின எழுத்து :** அச்சுக்கலையில் சிறிய எழுத்துக்களிலிருந்து வேறுபட்ட தலைப்பு எழுத்துக்களைக் குறிக்கும் மேலின எழுத்துக்கள்.

**upper stage** *: (விண்.)* **இரண்டாம் கட்டம் :** பலகட்டங்களுடைய ஒரு ராக்கெட்டில் இரண்டாவது அல்லது பிந்திய கட்டம்.

**up right** ; *(க.க.)* **பாரந்தாங்கி :** கட்டிடத்திற்குத் தாங்கலாக அமையும் தூண் அல்லது கம்பு.

**upset** *:* **நிலை மாற்றுதல் :** சுத்தியால் அடித்தல் அல்லது அழுத்தம் கொடுத்தல் மூலம் உலோகத்தைக் குறுக்குதல் அல்லது கனமாக்குதல்.

**upset** : (உலோ.) **உலோக நிலை மாற்றம்** : ஓர் உலோகத் துண்டின் நீளத்தைக் குறைப்பதன் மூலம் அதன் குறுக்கு வெட்டுப் பரப்பினை அதிகரிக்கும் முறை.

**uranium** : (உலோ.) **யுரேனியம் (விண்மம்)** : அணு ஆற்றலுக்குப் பயன்படும் தனிமம், கடினமான, தகடாக நீட்டக்கூடிய உலோகம். மிகு வேக எஃகுகளின் வலிமையினையும், விறைப்புத் தன்மையினையும் அதிகரிப்பதற்கு இது பயன்படுகிறது. இயற்கையான யுரேனியத்தில் U-235, U-238 என்ற இரு முக்கிய ஓரகத் தனிமங்கள் உள்ளன. இயற்கை யுரேனியத்தின் 140 பகுதியில் ஒரு பகுதி U-235 என்பதாகும்.

**urea** : (குழை.) **யூரியா** : பால் உணி விலங்குகளின் சிறு நீரில் அடங்கியுள்ள சேர்மப் பொருள். இது யூரியா ஃபார்பால் டி ஹைறடு ரெசினாய்டுகளுக்கான ஆதாரப் பொருளாகவும் பயன்படுகிறது. இது செயற்கையாகவும் தயாரிக்கப்படுகிறது.

**urea resin** : (குழை.) **யூரியா பிசின்** : பிளாஸ்டிக் குடும்பத்தில் ஒருவகை இது யூரியாவும் மெலாமினும் கலந்த அமினோ குடும்பத்தைச் சேர்ந்தது. ஃபார்மால்டிஹைறடு அல்லது அதன் மீச் சேர்மப் பொருள்களுடன் வினை புரிவதன் மூலம் இது பெறப்படுகிறது. இது பதங்கெடுவதைத் தடுக்கக் கூடியது; எண்ணெய்ப் பசையைத் தடுக்க வல்லது; மேற்பரப்பு கடினத்தன்மை கொண்டது. இதனால், இது மின் பொருள்கள், பொத்தான்கள் முதலியவை தயாரிக்கப் பயன்படுகிறது.

**ureter** : (நோயி.) **மூத்திரக் கசிவு நாளம்** : குண்டிக்காயிலிருந்து மூத்திரக் கசிவை மூத்திரப் பைக்குக் கொண்டு செல்லும் நாளம்.

**useful load** : (வானூ.) **இன்றியமையாச் சுமை** : விமானத்தில் இன்றியமையாது தேவைப்படும் சுமை விமான ஊழியர்கள், பயணிகள், எரிபொருள் இதில் அடங்கும்.

**uterus** : (உட.) **கருப்பை** : பெண்ணிடம் குழந்தை உருவாகும் உறுப்பு.



கருப்பை

**utility**: **பயனோக்கப் பண்பு**: நடைமுறைப் பயனுடைய பண்பு அல்லது நிலை. நடைமுறைப் பயன்பாடுள்ள பொருள்.

# V

**'V's** : *(எந்;பட்;)* **'V' வழிகள் :** மேசை அல்லது பொருட்கள் நிறைந்த கலங்கள் நகர்ந்து செல்வதற்கென சற்று உயரமான அல்லது குழிவான வகையில் அமைந்த 'V' வடிவப் பாதைகள்.

**vaccine** : *(நோயி.)* **அம்மைப் பால் :** 1. பசுவிற்கு வரும் அம்மைக் கொப்புளங்களிலிருந்து எடுக்கப்படும் சீநீர். இந்த காப்புச் சீநீர் பசுவிலிருந்து எடுக்கப்பட்டு, மனிதருக்கு வரும் அம்மை நோய்க்கு எதிராகப் பாதுகாப்பதற்கு அம்மை குத்துவதற்குப்பயன் படுத்தப்படுகிறது.

2. ஒரு நோயின் இறந்து போன அல்லது வலுவிழந்து போன பாக்டீரியாவில் அடங்கியுள்ள திரவம். இந்தத் திரவம், அதே நோய்க்கு எதிரான பொருட்களை உடலில் உற்பத்தி செய்வதற்காக ஊசி மூலம் உடலுக்குள் செலுத்தப்படுகிறது.

**vaccum** : *(இயற்.)* **வெற்றிடம் :** காற்று அல்லது வேறு ஏதேனும் ஒன்று வெளியேற்றப்பட்ட கொள்கலம். (நீராவி, வெப்பம்):

**vaccum brake** : *(தானி.)* **வெற்றிடமுறை தடை:** கன ரகப் பயணி வாகனங்களுக்கு மிகவும் உகந்த ஏற்பாடு. தடை இயக்கு முறையானது உள் வாங்கு பல முனைக் குழாய், அல்லது கார்ப்புரேட்டரிலிருந்து திராட்டிலுக்கு சற்று மேலே வெற்றிடத்தை பெற்றுக் கொண்டு இயங்குகிறது.

**vaccum cantrol :** *(தானி.)* **வெற்றிடக் கட்டுப்படுத்தி** : பல முனைக்குழாய் வெற்றிடத்தினால் கட்டுப்படுத்தப்படுகிற பிரேக், கிளட்ச் போன்று மோட்டார் வாகனத்தின் எந்த ஓர் உறுப்புக்கும் பொருந்தும்.

**vaccum cleaner** : **வெற்றிட முறை துப்புரவி** : கம்பள விரிப்பு, போன்றவற்றிலிருந்து குப்பை, தூசு ஆகியவற்றை வெற்றிட முறை மூலம் உறிஞ்சும் மோட்டாரால் இயங்கும் மின்விசிறிக் கருவி.

**vaccum forming** : *(குழை.)* **வெற்றிட முறையில் உருவாக்கம் :** ஷீட் உருவாக்கம் வெப்ப முறை உருவாக்கம் ஏற்றும் பெயர் உண்டு. முக்கியமான ஒரு முறையில் வெப்ப பிளாஸ்டிக். குழைமம் ஆகிற அளவுக்கு சூடேற்றப்பட்டு பிறகு வெற்றிட முறை மூலம் ஒரு அச்சில் வந்துபடியும்படி செய்யப் படுகிறது. இதில் பல மாறுபாட்டு முறைகள் உள்ளன. காற்றைக் கீழ்நோக்கிச் செலுத்தி குழைமம் ஷீட்டுகளாக உருவாகும்படி செய்யலாம். அல்லது காற்றை மேல் நோக்கிச் செலுத்தியும் ஷீட்டுகளை உருவாக்கலாம். இந்த முறையைப் படிமான முறை என்றும் கூறலாம். விளம்பர அடையாளங்கள், விமான உறை போன்றவற்றைச் செய்யப் படிமான முறை பயன்படுத்தப்படுகிறது.

**vaccum fuel supply** : *(தானி.)* **வெற்றிடமுறை எரிபொருள் அளிப்பு:** பிரதான எரிபொருள் தொட்டியிலிருந்து உயர்ந்த மட்டத்தில் உள்ள என்ஜினுக்கு வெற்றிட முறை மூலம் தான் பெட்ரோல் கிடைக்கிறது. வெற்றிடத் தொட்டி இதற்கு உதவுகிறது.

என்ஜின் ஓடும்போது கார்புரேட்டரில் தோற்றுவிக்கப்படும் வெற்றிடத்தின் பலனாக வெற்றிடத் தொட்டியில் ஓரளவு வெற்றிடம் பராமரிக்கப்படுகிறது.

**vaccum gauge :** *(தானி.)* **வெற்றிட அளவுமானி :** ஓர் என்ஜினின் உள் வாங்கி பல முனைக்குழாயில் அல்லது எரிபொருள் குழாயில் உள்ள வெற்றிடத்தை அளந்து கூறுவதற்கு காற்று மண்டல அழுத்த அடிப்படையில் குறியீடுகள் செய்யப்பட்ட அளவுமானி.

**vaccum metalizing :** *(குழை.)* **வெற்றிட உலோகப் பூச்சு :** ஆவியாக்கப்பட்ட அதாவது மின் நுண் திவலைகள் வடிவிலாக்கப்பட்ட உலோகத்தை (அலுமினியம்) கொண்டு பிளாஸ்டிக் உறுப்புகள் மீது மெல்லிய பூச்சு அளித்தல். இது வெற்றிடத் தொட்டியில் நிகழ்த்தப்படுகிறது. மின்சார இழை மூலம் ஆவியாக்தப்படுதல் நிகழ்த்தப்படுகிறது. உலோகக் குழம்பில் நிறம் சேர்க்கப்பட்டுத் தங்க, பித்தளை, அல்லது தாமிர நிறம் இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்படுகிறது. இறுதி தயாரிப்பு ளின் மேற்புறம் ஓரளவு உலோகத்தன்மை பெற்றிருக்கும்.

**vacuum plating :** *(உலோ.)* **வெற்றிட முலாம்பூச்சு ;** காற்று வெளியேற்றப்பட்ட ஓர் அறையில் வைத்து உலோக உறுப்புகளுக்கு முலாம் பூசுதல்.

**vacuum system :** *(குளி.பத.)* **வெற்றிடச் சாதனம் :** நீரை ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் கொதிக்க வைப்பதற்கு வெற்றிடத்தைப் பயன்படுத்தும் ஒரு குளிர்பதனச் சாதனம்.

**vaccum tube :** *(மின்.)* **வெற்றிடக் குழாய் :** உள்ளிருந்து வாயு அல்லது ஆவி அகற்றப்பட்ட — மிச்ச மீதியாக சிறு அளவுக்கு இருக்குமானால் அதனால் மின தன்மைகள் பாதிக்கப்படாத அளவுக்கு வெற்றிடமாக்கப்பட்ட மின்னனுக்குழாய்.

**vagina :** *(உட.)* **யோனிக் குழாய் :** பெண்ணின் கருப்பை வாய்க் குழாய். பிறக்கும் குழந்தை இதன் வழியாகவே வெளியே வருகிறது.

**vagus nerve :** *(உட.)* **மூளை நரம்பு :** மூளையின் கீழ்ப்பகுதியிலிருந்து தொண்டை, நுரையீரல்கள், இதயம், இரைப்பை ஆகிய உறுப்புகளுக்குச் செல்லும் நரமபு. துணைப்பரிவு நரம்பாகிய இது, சுவாசத்தையும், இதயத் துடிப்பையும் மெதுவாக நடைபெறச் செய்கிறது.

**valence :** *(மின்.)* **இணைதிறன் :** ஹைட்ரஜன் அணுவுடன் ஒப்பிட்ட அளவில் பொருளணுவின் பிற அணு நீக்கி இணைவுறும் ஆற்ற வீத அலகு.

**valence :** *(வேதி.)* **வேதியியல் இணைவு :** மூல அணுக்களின் தனிமங்கள், ஒரு குறிப்பிட்ட நிலையான வீத அளவில் மற்றத் தனிமங்களுடன் அல்லது மூல அணுக்களுடன் இணையும் பண்பு.


**valley :** *(க.க.)* **கூரைப்பள்ளம் :** இரு கூரைகளின் சரிவுகள் சந்திப்பதால் ஏற்படும் கோணம். அல்லது அந்தச் சந்திப்பில் உள்ள வடிநீர்ப் பாதை.

**valley rafter :** *(க.க.)* **கூரைப் பள்ளச் சட்டம் :** இரு கூரைகளின் சரிவு சநதிக்கின்ற பள்ளத்துக்கு அடியில் நெடுக அமைந்த சட்டம்.

**value :** *(வண்.)* **உயர் தகவு :** ஒரு வண்ணத்தின் அழுத்தம் அல்லது மென்மையைக் குறிக்கும் தன்மை.

**valve :** **தடுக்கிதழ் :** குழாய்களின் வழியே நீர்மம் அல்லது வாயுவின் ஓட்டத்தை ஒழுங்குபடுத்தும் சாதனம்.

**valve action :** *(தானி.)* **தடுக்கிதழ் செயல்பாடு:** டைமிங் கியர்கள், செயின் கேம் ஷாப்ட் லிப்டர்கள், வால்வு தொகுப்பு ஆகிய வால்வுகள் திறந்து மூடுவதைக் கட்டுப்படுத்தும் பகுதிகள்.



தடுக்கிதழ்

**valves :** *(தானி.)* **தடுக்கிதழ்கள் :** என்ஜின் சிலிண்டர்களுக்குள் அல்லது அவற்றிலிருந்து வாயுக்கள் வெளியே செல்வதை மற்றும் உள்ளே செல்வதைக் கட்டுப்படுத்தும் கருவிகள். மோட்டார் என்ஜின்களில் அவை போப்பெட் வால்வுகள் என்று குறிப்பிடப்படுகின்றன.

**valve spring :** *(தானி.)* **தடுக்கிதழ் திருகு சுருள் விசைவில் :** தடுக்கிதழ் மூடிய நிலையில் இருக்கும் பொருட்டு 18 முதல் 41கி.கி. தல் அழுத்தத்தை ஏற்படுத்துகிற அழுத்து வகை திருகு சுருள் விசைவில்.

**valve stem ;** *(தானி.)* **தடுக்கிதழ் தண்டு :** போப்பெட் வகை தடுக்கிதழ் தண்டு.

**valve timing :** *(தானி.)* **தடுக்கிதழ் காலத் திட்டம் :** பிஸ்டனின் நிலையைப் பொருத்து தடுக்கிதழின் செயல்பாட்டைத் தக்கபடி பொருத்துதல்.

**vanadium :** *(உலோ.)* **வெண்ணாகம்:** வெள்ளி போன்று வெண்மையாகக் காட்சியளிக்கிற அரிய தனிமம். கலோகை உருக்குத் தயாரிப்புக்கு மிகவும் பயன்படுவது மோட்டார் வாகன அச்சு போன்று கடும் அதிர்ச்சிக்குள்ளாகிற பகுதிகளைத் தயாரிக்க வனாடிய வெண்ணாக உருக்குப் பயன்படுகிறது.

**vanadium steel:** *(உலோ.)* **வண்ணாக உருக்கு :** 0. 10 முதல் 0.15 சதம் வரையில் வனாடியம் கலந்த உருக்கு. இதை அடித்து உருவாக்க முடியும். எனினும் இந்த உருக்கை படிப்படியாகத்தான் சூடேற்ற வேண்டும். சாதாரண வனாடியம் உருக்கைவிட குரோம்-வனாடியம் நிக்கல்-வனாடியம் உருக்குகளே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

**vandyke brown :** *(வண்.)* **வான்படைப் பழுப்பு நிற :** பழுப்பு நிறக் கலவைப் பொருள் கலந்த இயற்கையில் கிடைக்கிற களிமண் ஆழ்ந்த நிறம் காரணமாக கலவை பெயிண்டுகளைத் தயாரிக்கப் பயன்படுவது.

**vane :** *(க.க.)* **காற்று திசைகாட்டி** காற்று எந்தத் திசையை நோக்கி வீசுகிறது என்பதைக் காட்டும் சாதனம்.

**vanishing point: மறையும் புள்ளி:** பின்னணி காட்சியை குறிப்பிடுகையில் பயன்படும் சொல். படம் வரையும்போது பின்னோக்கிச் செல்கின்ற இணைகோடுகள் ஒரு புள்ளியில் போய்ச் சேரும். இப்புள்ளியே மறையும் புள்ளியாகும்.

**vapor :** *(தானி.)* **ஆவி :** வாயு நீராவி, பெட்ரோலும் காற்றும் சேர்ந்த கலவை.

**vaporize :** *(வேதி.)* **ஆவியாக்கு :** ஆவி அல்லது வாயு நிலைக்கு மாற்றுதல்.

**voporizer : ஆவியாக்கி :** ஆரம்ப காலத்து கார்புரேட்டர்.

**vapor lock** : **ஆவித் தடை** : எரி பொருள் ஆவி சேர்ந்து விடுவதன் காரணமாக என்ஜினுக்கு எரி பொருள் வருவது தடைப்படுதல் அல்லது குறைதல்.

**vapor rectifier** : (மின்.) **ஆவித் திருத்தி** : பாதரச ஆவியை அயனியாக்கம் செய்வதன் மூலம் மின் கடத்தல் நடைபெறும் திருத்திக் குழல்.

**variable** : (கணி.) **மாறி** : மதிப்பு மாறக்கூடிய அளவு அப்படி மாறும்போது மற்றவற்றின் மதிப்பு மாறாதிருக்கும்.

**variable condenser** : (மின்) **மாறு மின்தேக்கி** : சில வரம்புகளுக்கு உட்பட்ட மின்தேக்கி சில வரம்புகளுக்கு உட்பட்டு இதன் திறனை மாற்ற முடியும்.

**variable motion** : (பொறி.) **மாறுபடு இயக்கம்** : ஒரு பொருள் சரி சமமான தூரங்களை வெவ்வேறு கால அளவுகளில் கடக்குமானால் அது மாறுபடுத்தும் இயக்கம் எனப்படுகிறது.

**variometer** : (மின்.) **கிளர்மின் மாற்றி** : மின்னோட்டத்தில் கிளர் மின்னோட்டம் மாறுபடுத்தும் அமைவு.

**varnish** : (வண்.) **வார்னிஷ்** : ஆல்கஹால் அல்லது எண்ணெயில் சில வகைப் பிசின்கள் கலந்த நீர்த்த கலவை ஒரு பரப்பின் மீது உறுதியான நேர்த்தியான மண் பூச்சை அளிக்கப் பயன்படுவது. வார்னிஷ் தெளிவாக அல்லது நிறத்துடன் இருக்கலாம்:

**varnish cambric** : (மின்.) **மெருகுத் துணி** : மின்காப்பு மெருகு பூசப்பட்ட பருத்தித் துணி.


**varying speed motor** : (மின்.) **வேகம் மாறுபடும் மோட்டார்** : செய் சுமைக்கு ஏற்ப வேகம் மாறுகின்ற மோட்டார். பொதுவில் செய் சுமை அதிகரிக்கும்போது வேகம் குறையும். எனினும் விரும்பியபடி வேகத்தை மாற்றத்தக்க மோட்டாரிலிருந்து இது வேறுபட்டது.

**vascular** : (உட.) **குருதி நாளம் சார்ந்த** : குருதி நாளங்கள், உடலெங்கும் திரவங்களைக் கொண்டு செல்லும் பிற நாளங்கள் தொடர்பானவை. தாவரங்களில் குழல் திசு, வேர்த்திசு ஆகியவற்றின் மூலம் தாவரத்தின் ஒரு பகுதியிலிருந்து இன்னொருபகுதிக்கு திரவங்கள் செல்கின்றன.

**vault** : (க.க.) **வளைந்த கூரை** : அடுத்தடுத்து அமைந்த வளைவுகளால் இணைக்கப்பட்டு உட்புறமானது வளைவாக அமைந்த கூரை. வளைவான கூரை கொண்ட அறை அல்லது இடம்.

**V belt**: **V வார்ப்பட்டை**: விளிம்புள்ள உருளையில் மாட்டப்படுகிற ஆங்கில V போன்று தோற்றமளிக்கும் வார்ப்பட்டை. பட்டையான பெல்டுடன் ஒப்பிடுகையில் V வார்ப்பட்டை, உருளையிலிருந்து நழுவ அல்லது சுழலுவதற்கு வாய்ப்புக் குறைவு.

**V blocks**: (எந்.) **V, பிளாக்குகள்**:



உருளை வடிவிலான உலோகப் பொருட்களைச் சோதிக்கும்போது அல்லது உருக் கொடுக்கும்போது நகராமல் இருப்பதற்காக ஒரு புறத்தில் V வடிவில் செதுக்குதல்.

**vector**: (மின்.) **வெக்டார்**: மாறு திசை மின்சாரத்தில் ஒன்றிணைந்து செயல்படுகிற பகுதிகளை விளக்கிக் காட்டுகிற படம்.

**vee radiator**: (தானி.) **V ரேடியேட்டர்**: இரு பகுதிகளாகத் தயா

ரிக்கப்பட்டு நடுவில் 180 டிகிரிக்கும் குறைவான கோணத்தில் இணைக்கப்பட்டது.

**vegetable tannage:** **தாவரப் பதனம்:** டான்னிக் அமிலம் கலந்த தாவரப் பொருட்களைக் கொண்டு தோலைப் பதப்படுத்துதல்.

**vehicle:** *(வேதி.)* **பூச்சு சாதனம்:** வார்னிஷ் அல்லது அரக்குச் சாயப் பொருளை கரைத்துப் பூசுவதற்கான திரவப் பொருள்.

**veins:** *(உட.)* **சிரைகள்:** உடலிலிருந்து அல்லது நுரையீரல்களிலிருந்து இதயத்திற்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் குழாய். ஆனால், கல்லீரல் சிரையானது குடலிலிருந்து நுரையீரலுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்கிறது. அது மற்ற சீரண உறுப்புகளுடன் சிரைகள் மூலம் இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே, சீரணிக்கப்பட்ட பொருட்களை நுரையீரலுக்குக் கொண்டு செல்கிறது. நுரையீரல் சிரையானது, நுரையீரல்களிலிருந்து ஆக்சிஜனேற்றப்பட்ட இரத்தத்தை இதயத்திற்கு எடுத்துச் செல்கிறது.
2. தாவரங்களில் இலைகளில் உள்ள இலை வரிநரம்பு.

**vellum:** **வரைநயத் தோல்:** தோலினால் ஆன ஆவணம் போன்று தோன்றும் காகிதம்.

**velocity:** *(எந்.)* **திசை வேகம்:** கடக்கும் தொலைவை நேரத்தால் வகுத்து ஒரு விநாடிக்கு அல்லது ஒரு நிமிடத்துக்கு இவ்வளவு அடி என்று கூறுதல் *(இயற்.)* ஒரு பொருள் செல்லும் விகிதம்.

**velocity modulation:** *(மின்.)* **வேக அலைமாற்றம்:** ஓர் எலெக்ட்ரான் குழலில் எலெக்ட்ரான் வேக வீதத்தில் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்கள்.

**velocity of light:** *(மின்.)* **ஒளி வேக வீதம்:** ஒளி மற்றும் மின்காந்த அலைகளின் வேகவீதம். இது வினாடி 1,86,000 மைல் அல்லது வினாடிக்கு 3,00,000,000 மீட்டர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**velox paper:** **வெலாக்ஸ் காகிதம்:** குறிப்பிட்ட வகைப் புகைப்படத் தாளின் வணிகப் பெயர்.

**veneer:** *(க.க; மர.வே.)* **நேர்த்தி முகப்பு:** (தொல்—மர நேர்த்தி) சாதாரண மேற்பரப்புக்கு நேர்த்தியான உயர்ந்த பார்வை அளிக்க அல்லது செலவைக் குறைக்க மரம் அல்லது வேறு பொருள் மீது மெல்லிய படலத்தைப் படிய வைத்தல்.

**veneer press:** *(மர.வே.)* **மேலொட்டு அழுத்தப்பொறி:** ஒட்டுப் பலகை அல்லது நீள் சதுரப் பலகைத் துண்டுகளைப் பசையிட்டு ஒட்டுவதற்கான பெரிய, கனமான அழுத்தப் பொறி.

**veneer saw:** *(மர.வே.)* **மேலொட்டு ரம்பம்:** மெல்லொட்டுப் பலகைகளை வெட்டுவதற்குப் பயன்படும் தனி வகை வட்ட வடிவ ரம்பம்.

**venetian blind:** *(க.க.)* **பலகணித் திரை:** மடக்கு வரிச்சட்டம் பலகணித் திரை.

**venetian red:** *(வண்.)* **இரும்பு ஆக்சைடு ($Fe_2O_3$):** சிவப்பு வண்ணப் பொடியாகப் பயன்படும் இரும்பு ஆக்சைடுக் கலவை. இது இரும்பு ஆக்சைடுக் கலவை. இது இரும்பு சல்பேட்டை சுண்ணாம்புடன் சூடாக்குவதன் மூலம் கிடைக்கிறது.

**vent:** *(வார்.)* **வாயுத் துளை:** வார்ப்பட வேலையில் வாயுக்கள்

வெளியேற இடமளிப்பதற்காக அமைக்கப்படும் ஒரு சிறிய துளை.

**venthole:** *(உலோ.)* **காற்றுப் புழைவாய்:** ஒரு மணல் வார்ப்படத்தில் வாயுக்கள் வெளியேறுவதற்குள்ள துவாரங்கள்.

**ventilation:** *(க.க.)* **காற்றோட்டம்:** அறையில் காற்றோட்டம் ஏற்படுமாறு செய்யும் முறை.

**ventilator:** *(க.க.)* **பலகணி:** வெளிச்சமும், காற்றும் வருவதற்காக அமைக்கப்பட்டுள்ள சாதனம்.

அசுத்தக் காற்றை வெளியேற்றுவதற்கான புழை.

**venti pipe:** *(க.க.)* **காற்றுக் குழாய்:** பல்வேறு குழாய் அமைப்புகளிலிருந்து புகைக்கூம்பு வழியே காற்று வெளிச் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறிய குழாய்.

**ventricle:** *(உட.)* 1. **குழிவுக் கண்ணறை:** உடலின் உட்குழிந்த பகுதி.
2. **இதயக் கீழறை:** சுருக்காற்றலையுடைய இதயத்தின் கீழறை. வலது கீழறையிலிருந்து இரத்தம் நுரையீரல்களுக்குச் செல்கிறது. கீழறையிலிருந்து இரத்தம் உடல் முழுவதும் செல்கிறது.
3. **மூளைஉட்குழி:** மூளையின் உட்குழிவுப் பள்ளம்.

**vent stack:** *(க.க.)* **புகைக் கூம்பு:** காற்றுக் குழாய்களுடன் இணைக்கப்பட்டுக் கூரைக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் செங்குத்தான குழாய். இதன் வழியாக வாயுக்களும் புகையும் வெளியேறுகின்றன,

**vent wire:** *(வார்.)* **வாயுக் கம்பி:** வார்ப்பட வேலையில் நீராவியும், வாயுவும் வெளியேறுவதற்காக, வார்ப்பிலிருந்து தோரணியை அகற்றுவதற்கு முன்பு ஒரு கம்பி மூலமாகத் துளைகள் உண்டாக்கப்படுகின்றன.

**veranda:** *(க.க.)* **தாழ்வாரம்:** கட்டிடத்திற்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்குமாறு அமைக்கப்படும் திறந்த நிலை ஒட்டுத் திண்ணை.

**veverdigris:** *(வேதி.)* **தாமிரத் துரு:** இது தாமிரத்தின் மேற்பரப்பில் ஆக்சிகரணம் ஏற்படுவதால் உண்டாகிறது. தாமிரத்தை அசெட்டிக் அமிலத்துடன் கலப்பதாலும் தாமிரத்துரு உருவாகிறது. இது முக்கியமாக நிறமியாகவும், சாயப் பொருளாகவும் பயன்படுகிறது.

**verge :** *(க:க.)* **மோட்டு விளிம்பு:** முக்குட்டுச் சுவர் கடந்த மோட்டு விளிம்பு. இது கூரையின் மஞ்சடைப்புக்கு மேல் நீட்டிக் கொண்டிருக்கும்.

**vermiculation:** *(க.க.)* **புழு அரிப்புத் தடம்:** புழு அரிப்பு போன்ற வரிப்பள்ளங்களுடைய தடம்.

**vermilion:** *(வண்.)* **இரசக் கந்தகை:** செந்நிறமான இரசக் கந்தகை. இது நிறமியாகப் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. பாதரசச் சல்பைடிலிருந்து ($HgS$) பெறப்படுகிறது.

**Vernier:** *(விண்.)* **வெர்னியர்:** ஒரு ஏவுகணையின் வெளிப்புறத்தில் ஏற்றப்பட்டுள்ள சிறிய ராக்கெட் எஞ்சின் இதனைக் கட்டுப்படுத்தும் கருவி மூலம் திருப்பலாம். இதனைக் கண்டுபிடித்தவர் பியர் வெர்னியர் (1580—1637) என்ற ஃபிரெஞ்சுக் கணித மேதை. அவர் பெயரே இதற்குச் சூட்டப்பட்டுள்ளது.

**vernier:** *(எந்.)* **வெர்னியர்:** ஒரு நிலையான அளவு கோலின் உட்பிரிவுகளின் பின்னப் பகுதிகளைக் கணக்கிட்டு அறிவதற்குப் பயன்படும் ஒரு சிறிய நகரக்கூடிய துணை அளவுகோல்.

**vernier depth gauge:** *(எந்.)* **வெர்னியர் ஆழ அளவி:** வெர்னியருடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு வகைச் சலாகை வடிவ அளவு கருவி. இது குறுகலான ஆழப் பகுதிகளின் ஆழத்தை அளந்தறியப் பயன்படுகிறது.

**vernier caliper:** *(உலோ.)* **வெர்னியர் திட்பமானி:** திட்பமானியில் விட்டம், திட்பம், ஆகியவற்றை அளக்கும் இடுக்கி விரல்களை யுடைய அளவு கருவி.

**vertical:** *(கம்.)* **செங்குத்து நிலை:** செங்கோட்டு நிலை; வான விளிம்புக்குச் செங்கோணத்தி லுள்ள நிலை.

**vertical boring mill:** *(எந்.)* **செங்குத்துத் துளைக்கருவி:** கடைசல் எந்திரத்தில் ஒரு சுழல் மேசையில், இழைப்புளியை செங்குத்தாகவும், கிடைமட்டமாகவும் நகர்த்தி கடைசல் வேலை செய்வதற்கான கருவி.

**vertical centering:** **நிலை குத்து மையம்:** தொலைக் காட்சிப் பெட்டியின் திரையில் படத்தை செங்குத்தாக நிலைப்படுத்துவதற்கு உதவும் கட்டுப்பாட்டு அமைவு.

**vertical lathe** *(எந்.)* **செங்குத்துக் கடைசல் எந்திரம்:** பக்கவாட்டில் தலைப்பக்கம் உடைய ஒரு செங்குத்துத் துளைக்கருவி.

**vertical polarization** *(மின்.)* **செங்குத்துத் துருவ முனைப்பாக்கம்:** வானலை வங்கியின் மின்தலம், பூமியின் மேற்பரப்புக்குச் செங்குத்தாக இருக்கும் வகையில் அமைக்கப்பட்ட வானலை வாங்கி.

**vertical tall area :** *(வானூ.)* **செங்குத்து வால் பகுதி :** விமானத்தில், சுக்கானின் உள்ளபடியான புறக்கோட்டுக்கும், செங்குத்துத் தளத்தில் நீட்டிக் கொண்டிருக்கும் நிமிர் நேர் விளிம்புக் குட்டையிலான பகுதி.

**vertimeter :** *(வானூ.)* **செங்குத்துமானி :** வான்கூண்டின் ஏற்ற இறக்க வீதத்தைக் காட்டும் சாதனம். இது ஒரு தனி வகை நீரில்லா நுண்ணழுத்த மானியாகும். ஏற்ற வீதமானி ஏற்ற இறக்கத்தைக் காட்டுகிறது.

**vestibule :** *(க.க.)* **முன் கூடம் :** வீட்டின் முன் அறை; திருக்கோயில் முக மண்டபம்.

**viaduct :** *(பொறி.)* **மேம்பாலப் பாதை :** இருப்புப் பாதை சாலை போன்றவற்றுக்கு மேலே கட்டப்பட்டுள்ள மேம்பாலம்.

**viaduct :** *(க.க.)* **மேம்பாலம்:** மலை இடுக்கின் அல்லது பள்ளத் தாக்கின் மேலாக சாலைக்காக அல்லது இருப்பூர்திக்காக அமைக்கப்பட்டுள்ள மேம்பாலப் பாதை.

**vibrating bell:** *(மின்.)* **அதிர்வு மணி:** மணியடிக்கும் நா அல்லது சுத்திய உடைய ஒரு மின்சாதனம். இதன் வழியே மின்னோட்டம் பாயும்போது நா அல்லது சுத்தி ஒரு மணியைத் தட்டி ஒலி எழுப்பும். இது மின்காந்த ஈர்ப்புத் தத்துவத்தின்படி இயங்குகிறது.

**vibrating reed: meter** *(மின்.)* **அதிர்வுக்கோல் மானி:** இயற்கையான அதிர்வு அலைவெண்களுடைய கோல்களைப் பயன்படுத்தும் ஒரு வகை அலைவெண் அளவுமானி.

**vibration dampeners :** *(தானி.)* **அதிர்வுத் தளர்வுறுத்தி :** ஒரு கோட்

டச் சுழல் தண்டின் அதிர்வினைக் குறைப்பதற்காகப் பயன்படுத்தப் படும் எதிர்எடை அல்லது சம நிலைப்படுத்தும் கருவி.

**vibrator** : *(மின்.)* **அதிர்ப்பி** : சீரானநிலையிலுள்ள நேர்மின்னோட்டமாக மாற்றுவதற்குப் பயன்படும் காந்தத்தினால் இயங்கும். அழைப்புமானி அலலது மின்சார அழைப்புக் கருவி போன்ற ஒரு சாதனம்.

**vibrator coil** : *(மின்.)* **அதிர்வுச் சுருள்** : ஒருவகை தூண்டுச் சுருள். உள்ளீட்டின் காந்தத் தன்மையானது, அடிப்படைச் சுற்று வழியினை முறிக்கும் வகையில் இயங்குமாறு இது அமைக்கப்படடிருக்கும்.

**vibrios**: *(நோயி.)* **வளைவுக் கிருமிகள்** : நீந்துவதற்கான ஒரு வாலையுடைய, சலாகைபோல்வளைந்த உருவமுடைய பாக்டீரியா. காலரா நோய்உண்டாக்கும் பாக்டீரியா இவ்வகையைச் சேர்ந்தது (1000 மடங்கு பெருக்கிக் காட்டப்பட்டுள்ள ஓர் இரத்த உயிரணுவை இந்த வட்டம் காட்டுகிறது).



**video** : **ஒளிக்காட்சி** : படம் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ள தொலைக்காட்சிச் சைகையின் பகுதி. அமெரிக்காவில் தொலைக் காட்சியையும் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

**video signal** : *(மின்.)* **ஒளிச் சமிக்ஞை** : தொலைக்காட்சிச் செலுத்தியில் அலைமாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒளிப் படக்கருவியிலிருந்து வரும் மின்னியல் சமிக்ஞை.

**viewing miror** : **காட்சிக் கண்ணாடி**: தொலைக்காட்சியில், படக் குழாயில் உருவாகும் உருக்காட்சியை, பார்வையாளர்கள் பார்ப்பதற்கு வசதியான கோணத்தில் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி.

**vignette** : *(க.க.)* **சித்திர வேலைப் பாடு** : தளிர்க்கொடி ஒப்பனை வேலைப்பாடு; முகப்பெழுத்துச் சித்திர வேலைப்பாடு; முற்காலக் கையெழுத்துப் படிகளுக்குரிய தலைப்பெழுத்துப் பூவேலை ஒப்பனைக் கோலம்; பெயர்ப்பக்க முகட்டுப் பூவேலைப்பாடு;பெயர்ப் பக்க அடிவரிப் பூ வேலைப்பாடு.

**vinyl acetal resins** : *(வேதி; குழை.)* **வினில் அசிட்டால் பிசின்** : பாலிவினில் அசிட்டேட்டிலிருநது தயாரிக்கப்படுவது. காப்புக் கண்ணாடிகளில்இடைப்படலமாகவும், ஒட்டுப் பசையாகவும் பயன்படுகிறது. இது விறைப்புடையது; ஒட்டுத் தன்மை கொண்டது; ஈரம் புக இடமளிக்காதது; ஒளியாலும் வெப்பத்தாலும் நிலை குலையாதது.

**vinylidene chloride resins** : *(வேதி.)* **வினிலிடின் குளோரைடுப் பிசின்** : கச்சா எண்ணெய், கடல் நீர் இவற்றிலிருந்து பெறப்படும் ஒருவகைப் பிசின். இது மிகுந்த விறைப்பு வலிமையுடையது; உராய்வைத் தடுக்கக் கூடியது; எளிதில் தீப்பற்றாதது. பல வண்ணங்களில் கிடைக்கிறது. உந்து ஊர்திகளில் இருக்கைகள் தயாரிக்கப் பயன்படுகிறது. உராய்வுச் சக்கரங்களுக்குப் பிணைப்புப் பொருளாகப் பயன்படுகிறது.

**vinyl resin** : *(குழை.)* **வினில் பிசின்** : பிசின் குடும்பத்தில் ஒரு முக்கியமான வகை.

**virus** : *(நோயி.)* **நோய்க் கிருமி (நோய் நுண்மம்)** : மிகமிகச் சிறியதான பாக்டீரியாவைவிடவும் சிறியதான, நோய் உண்டாக்கும் நுண்துகள் உரிய உணவுப் பொருளின்மீது பாக்டீரியாவை உண்

டாக்கலாம். ஆனால், உயிருள்ள பொருள்களில் (எ-டு: உயிருள்ள முட்டையின் உள்ளிருக்கும சவ்வு) மட்டுமே நோய்க் கிருமி உண் டாகும்.சன்னிக்காய்ச்சல், அம்மை, நாய்வெறி நோய், இளம்பிள்ளை வாதம், நச்சுக் காய்ச்சல் (இன்ஃப்ளுயென்சா) போன்ற நோய்கள் நோய்க்கிருமிகளினால் உண்டா கின்றன.

**viscid**: *(இயற்.)* **நெய்ப்புத் தன்மை**: நெய்ப்புத் தன்மை; ஒட்டும் இயல்பு.


**viscosity** : *(குழை.)* **குழைம நிலை**: பிசைவுப் பொருளின் திட்ட ஆற்றல், பிசைவுப் பொருளின் தன் ஈர்ப்பு ஆற்றல்.

**viscous** : *(வேதி.)* **பசைத் தன்மை**: மெதுவாகப் பாயும் திரவங்களின் ஒட்டுத் தன்மை.

**viscosimeter** : *(குளி.பத.)* **பிசை வுப் பொருள் திட்டமானி** : ஒரு திர வத்தின் பசைத்தன்மையை அள விடும் கருவி.

**viscous friction** : *(தானி.)* **பசை உராய்வுத் திறன்** : எண்ணெயின் அல்லது திரவத்தின் பாய்வுத் தடுப் புத்திறன். எண்ணெய்ப் படுகை களுக்கிடையிலான உராய்வு.

**vise** : *(பட்.)* **பட்டறைப் பற்றுக் குறடு**: பிடித்து நிறுத்துவதற் குரிய மரம் அல் லது உலோகத் தினாலான பற் றுக்குறடு.இதில் இரண்டு தடை கள், ஒன்று நிலையாகவும், இன் னொன்று நகரக்கூடியதாகவும் அமைந்திருக்கும்.



பற்றுக்குறடு

**visibility** : *(வானூ.)* **காண்பு நிலை** : சுற்றுப்புறத்திலுள்ள பொருட்களை எவ்வளவு தூரத்தி லிருந்து தெளிவாகக் காணலாம் என்பதைக் குறிக்கும் ஒளியளவு நிலை.

**vista** : *(க.க.)* **காட்சி வரிசை** : சாலை மர அணிவரிசை.

**visual attral range** : **வானூர்தி நெறிமுறை** : வானொலி உதவி யால் இயக்கப்படும் வானூர்தி நெறிமுறை.

**visualize** : **உருவாக்கிக் காண்** : அகக் காட்சியாக உருவாக்கிக் காண்; கற்பனை செய்து காண்.

**vital glass**: **புறஊதாக் கண்ணாடி**: கட்புலனுக்கு அப்பாற்பட்ட ஊதாக்கதிர்களையும் ஊடுருவ விடும் கண்ணாடி.

**vitamins** : **ஊட்டச் சத்துக்கள் (வைட்டமின்கள்)** : உயிருள்ள பிராணிகளின் வளர்ச்சிக்கும் உடல் நலத்திற்கும் மிகச் சிறிதளவுகளில் தேவைப்படும் கரிமப் பொருட்கள்.

**vitreosity**: *(வேதி.)* **பளிங்கியல்பு**: கண்ணாடி போன்று எளிதில் நொறுங்கும் தன்மையும், பளிங் கின் திண்மையும், கண்ணாடி போலப் படிக உருவமற்ற இயல் பும் உடைய பண்பியல்பு.

**vitreous enamel** : *(உலோ.)* **கண்ணாடி எனாமல்**: உலோகத்தில் பூசக்கூடிய குறைந்த நுண்துளை யுடைய, கண்ணாடி போன்ற பள பளப்பான பூச்சுப் பொருள். இதனைப் பீங்கான் எனாமல் என் றும் கூறுவர்.

**vitreous electricity** : *(மின்.)* **பளிக்கு மின்வலி** : கண்ணாடியில் பட்டினைத் தேய்ப்பதால் ஏற்படும் மின்னாற்றல்.

**vitreous body / vitreous humour** : *(உட.)* **கண்விழி நீர்மம்** : கண் விழிக் குழியிலுள்ள பளிங்கு போன்ற திண்நீர்மம்.

**vitreousness** : *(வேதி.)* **கண்ணாடித் தன்மை** : கண்ணாடி போன்று எளிதில் நொறுங்கக் கூடிய தன்மை; பளிங்கின் தன்மை.

**vitrescibility** : **கண்ணாடியாகுந் திறன்** : கண்ணாடியாக மாறக் கூடியதன்மை.

**vitreum** : *(உட.)* **கண்விழித் திண்ணீர்மம்** : கண்விழிக் குழியிலுள்ள திண்நீர்மம்.

**vitrifiability** : **கண்ணாடியாக்கத் திறன்** : கண்ணாடியாக மாறத்தக்க தன்மை; கண்ணாடி போன்ற பொருளாக மாறும் நிலை.

**vitrification** : **பளிங்காக்கம்** : கண்ணாடியாக மாற்றுதல்.

**vitriol** : **கந்தகத் திராவகம்** : உலோகங் கலந்த நீர்மக் கந்தகி வகைகளில் ஒன்று.

**voice coil** : *(மின்.)* **குரல் சுருள்** : ஒலி பெருக்கிக் கூம்புடன் இணைக்கப்படும் சிறிய கம்பிச் சுருள். குரல் சுருளின் புலத்திற்கும் நிலையான காந்தப் புலத்திற்குமிடையிலான எதிர் விளைவினால் கூம்பின் அசைவு உண்டாகிறது.

**volatile** : *(வேதி.)* **விரைந்து ஆவியாதல்** : விரைவாக ஆவியாகும் தன்மை.

**volatile liquid** : *(குளி.பத.)* **ஆவியாகும் திரவம்** : அறை வெப்ப நிலையிலும் வாயுமண்டல அழுத்தத்திலும் விரைந்து ஆவியாகக் கூடிய ஒரு திரவம்.

**volatile oil** : **நறுமண நெய்மம்** : தாவரங்களுக்கு மணம் தரும் எண்ணெய்ப் பொருள்.

**volatility** : *(தானி.)* **ஆவியாகும் தன்மை** : ஒரு திரவம் அல்லது எரி பொருள் திரவ நிலையிலிருந்து விரைவாக ஆவியாகும் தன்மை.

**volt** ; *(மின்.)* **மின் அலகு (ஓல்ட்)**: ஒரு 'ஓம்' தடைக்கு எதிராக ஒரு ஆம்பியர் மின்னோட்டத்தைக் கொண்டு செல்லக்கூடிய மின்னியக்கு விசை ஒரு "ஓல்ட்" எனப்படும்.

**volta, Alessandro (174-51827)**; *(மின்.)* **ஓல்ட்டா, அலசாண்ட்ரோ (1745-1827)** : புகழ்பெற்ற இத்தாலிய விஞ்ஞானி. கால்வானிஸ் விலங்கு மின்விசை, வேதியியல் மின்கலம், வேதிமின்கலத் தகட்டடுக்கு போன்ற முக்கிய அறிவியல் கண்டுபிடிப்புகளைச் செய்தவர். அணுக்கத்தால் நிலை மின்னாற்றல் உண்டு பண்ணும் பொறியமைவையும் இவர் கண்டுபிடித்தார்.

**voltage** : *(மின்.)* **மின் வலியளவு** : மின் வலி அலகு எண்ணிக்கை அளவு.

**voltage multiplier** : *(மின்.)* **மின்னழுத்தப் பெருக்கி** : மின்னழுத்தத்தை இரண்டு, மூன்று, நான்கு மடங்குகளாகப் பெருக்கக்கூடிய திருத்திமின் சுற்றுவழி.

**volt-ampere** : *(மின்.)* **ஓல்ட்-ஆம்பியர்** : மேலீடாகத் தோன்றுகிற மின்விசை அளவீட்டு அலகு.

**volta's law** : *(மின்.)* **ஓல்ட்டா விதி** : "எந்த இரு உலோகங்களுக்குமிடையிலான மின்னழுத்த நிலை வேறுபாடானது. தொடர் வரிசையிலுள்ள எடை உலோகங்களுக்கிடையிலான மின்னழுத்த நிலை வேறுபாடுகளின் கூட்டுத் தொகைக்குச் சமமானதாக இருக்கும்" என்பது இந்த விதி.

**voltage amplification** ; *(மின்.)* **மின்னழுத்த விரிவாக்கம்** : வானொலி அலைவெண் விரிவாக்க நிலைகளில் உண்டாகும் வானொலிச் சைகைகளைப் பெருக்கிக் காட்டுவதற்கான ஒரு வகை.

**voltaic }cell** : *(மின்.)* **ஒல்ட்டா மின்கலம்** : ஒரு வகை அடிப்படை மின்கலம். இதனை முதலில் கண்டு பிடித்தவர் ஒல்ட்டா. அதனால் இதற்கு அவர் பெயர் சூட்டப்பட்டது. இது இரு முரண்பட்ட உலோகங்கள் ஒரு கரைசலில் அமிழ்த்தி வைக்கப்பட்டிருக்கும். அந்தக் கரைசல், ஓர் உலோகத்தை இன்னொரு உலோகத்தின் மீது அதிக அளவில் வேதியியல் வினைபுரியும். இதனால் இரு உலோகங்களுக்குமிடையே மின்னழுத்த நிலை வேறுபாடு உண்டாகிறது.

**voltmeter** ; *(மின்.)* **மின்னழுத்த மானி** : மின்வலி அலகீட்டுக் கருவி.

**volume** ; *(மின்.)* **ஒலியளவு** , **ஒலி**யின் செறிவளவு.

**volumenometer** : **போக்களவு மானி** : நீக்கும் நீர்ம அளவால் திடப்பொருட்களின் பொருண்மையை அளக்கும் கருவி.

**volumenometry** : **போக்களவு மானம்** : நீக்கும் நீர்ம அளவால் திடப் பொருளின் பரும அளவு காணும் முறை.

**volumeter** : *(மின்.)* **வளிப்பிழம் பளவுமானி** : காற்றின் பொருண்மையை அளக்கும் கருவி.

**V-thread** : *(எந்;பட்.)* **V-திரு கிழை** : 'V' என்ற ஆங்கில எழுத்தின் வடிவில் அமைந்துள்ள திருகிழை 60° கோணத்தில் அமைந்த திருகிழையையும் இது உள்ளடக்கும்.

**V-type engine**: *(தானி.)* **V-வடிவ எஞ்சின்** : 'V' என்ற ஆங்கில எழுத்தின் வடிவத்தில் அடுக்கப்பட்ட நீள் உருளைத் தொகுதிகளைக் கொண்ட ஓர் எஞ்சின்.

**vulcanite** , *(வேதி.)* **கந்தக ரப்பர்.** கந்தகம் கலந்து கடுமையூட்டப்பட்ட ரப்பர். இந்திய ரப்பரும் கந்தகமும் கலந்த ஒரு கூட்டுப் பொருள். இது நெகிழ் திறம் இல்லாத கடினமான ரப்பர்.

**vulcanizing** : *(வேதி.)* **கந்தக வலி யூட்டம்** : இந்திய ரப்பருக்குக் கந்தகம் கலந்து வலியூட்டுதல் ரப்பருக்கும் வலிமையும் நெகிழ் திறனும் ஊட்டுவதற்கு மிக உயர்ந்த வெப்ப நிலையில் இவ்வாறு செய்யப்படுகிறது.

# W

**wainscot:** *(க.க.)* **சுவர்ப் பலகை:** உட்புறச் சுவர்களில் நேர்த்தி செய்யப்பட்ட பலகைகளைப் பதித்து அழகுபடுத்துதல்.

**wainscoting:** *(க.க.)* **சுவர்ப் பலகையிடு:** உட்புறச் சுவர்களில் நேர்த்தி செய்யப்பட்ட பலகைகளை அமை.

**wainscoting cap:** *(க.க.)* **சுவர்ப் பலகைத் தொப்பி:** சுவர்ப் பலகைகளின் உச்சியில் வார்ப்புகளை அமைத்தல்.

**walke-talkie:** *(மின்.)* **சிறு சேணி:** செய்தி கேட்கவும் அனுப்பவும் வாய்ப்புள்ள கையடக்க வானொலிப் பெட்டி. இது நடுத்தரத் தொலைவுகளில் களச்செய்தித் தொடர்புக்குப் பயன்படுகிறது.

**wall box:** *(மின்.)* **சுவர்ப்பெட்டி** வீடுகளில் மின்கம்பி இணைப்புகள் அமைப்பதில் மின்விசைக்கு அல்லது கொள்கலனுக்குப் பயன்படுத்தப்படும் ஓர் உலோகப் பெட்டி.

**wallbed:** *(க.க.)* **சுவர்ப் படுக்கை:** சுவரில் பொருத்தப்பட்ட படுக்கை பயன்படுத்தப்படாதபோது இப்படுக்கை சுவருக்குள் அமைந்த உள்ளிடத்துக்குள் அல்லது சுவரை ஒட்டியபடி படிந்து கொள்ளும். இதன் மூலம் இடம் மிச்சப்படும். பல வகைகளிலான இவ்விதப் படுக்கைகள் சிறிய இல்லங்களில் பொதுவில் பயன்படுத்தப்படுகின்றன.

**wall board:** *(க.க.)* **சுவர் போர்டு:** கட்டடத்துக்குள்ளாக உள்புறச் சுவர்களிலும் கிடைமட்டக் கூரைகளிலும் பிளாஸ்டர் பூச்சுக்குப் பதில் ஒட்டி நிற்கும் வகையில் பயன்படுத்தப்படுவது.

**wall bracket.** *(எந்.)* **சுவர் பிராக்கெட்:** செங்கோண வடிவிலான தண்டு இரு புயங்களில் ஒன்றைச் சுவர்மீது அல்லது கம்பம் மீது பொருத்தலாம். எதையேனும் தாங்கி நிற்க மற்றொரு புயம் உதவும்.

**wall plate:** *(க.க.)* **சுவர் பிளேட்:** வேலை பளு பரவலாக அமையும் பொருட்டு உத்தரம், இரும்பு கர்டர் ஆகியவற்றை இரு ஓரங்களிலும் தாங்கி நிற்க சுவரில் பிதுக்கமாக அமைந்துள்ள மரத் தண்டு.

**wall section:** *(வரை.)* **குறுக்கு வெட்டுச் சுவர்:** சுவரின் உயரங்களையும், சுவரைக் கட்டும் முறைகளையும் காட்டும் சுவரின் குறுக்கு வெட்டுச் சுவரின் வரைபடம்.

**wall socket:** *(மின்.)* **சுவர் துளையம்:** மின்சாரம் பெறுவதற்கென சுவருக்குள் அல்லது சுவர் மேல் அமைந்த மின்னோட்ட முனை.

**walnut, black:** *(தாவ.)* **கரும் வாதுமை மரம்:** அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட அழகிய கடின மரங்களில் ஒன்று. இது சாக்கலேட் பழுப்பு நிறத்தில் அமைந்திருக்கும். இது நேர் கரணைகளையுடையது; நீண்ட காலம் உழைக்க வல்லது. இதில் எளிதாக வேலைப்பாடுகள் செய்யலாம். பீரங்கிக்குழல் மரச்சட்டம், மேலடை மெல்லொட்டுப் பலகை,

நிலைப்பெட்டி ஆகியவை தயாரிக்க இது பயன்படுகிறது.

**wane:** *(மர.வே.)* **கோட்டம்:** உத்திரம் அல்லது பலகை ஒரு நுனியிலிருந்து மறுநுனி வரை ஒரே சமமாக இல்லாமல் ஏதாவது ஒரு புறம் சற்று கோணலாக இருத்தல்.

**warding file:** *(எந்.)* **பட்டை அரம்:** மெல்லிய தட்டையான அரம். குறிப்பாக பூட்டுத் தயாரிப்பாளர்கள் பயன்படுத்துவது.

**warm-blooded:** *(உயி.)* **வெப்பக் குருதிப் பிராணிகள்:** உயிரினங்களில் பாரன்ஹீட் 98° முதல் 112° வரை வெப்பநிலையுடைய பிராணிகள். இவை சூழ்நிலையை விட மிகுதியான சூழ்வெப்ப நிலை கொண்டவை.

**warp:** *(வானூ.)* **பாவு நூல்:** விமான இறக்கையின் வடிவம் மாறும் வகையில் அதை வளைத்தல் (துணி) தறியில் நீளவாட்டில் அமைந்த பாவுநூல். *(மர.வே.)* ஈரப்பசை அல்லது வெப்பம் காரணமாக மரம் நெளிந்து போதல்.

**warping:** *(வார்.)* **நெளிசல்:** ஒரு வார்ப்படம் ஆறும்போது ஏற்படுகிற சீரற்ற நிர்ப்பந்தங்கள் காரணமாக வார்ப்படத்தில் ஏற்படுகிற கோணல் அல்லது நெளிசல்.

**wash:** *(வானூ.)* **குலைவு:** வானில் பறக்கும்போது ஒரு விமானத்தின் இறக்கைகளும், சுழலியும் காற்றில் ஏற்படுத்தும் குலைவு.


**washer:** *(எந்.)* **வாஷர்:** ஓர் இணைப்பு அல்லது ஸ்குரு போன்றவை சிறிதும் இடைவெளியின்றி நன்கு பொருந்தி உட்காருவதற்காகப் பயன்படுத்தப்படுகிற நடுவே துளையுள்ள ஒரு தட்டையான சிறிய வட்டு.



வாஷர்

**washer:** *(எந்.)* **பட்டை வளையம்:** சுரியாணி மரைக்குக் கீழே இடும் பட்டை வளையம்.

**washer cutter:** **வாஷர் வெட்டர்:** தோல், ரப்பர் போன்றவற்றைக் கொண்டு வாஷர் தயாரிக்கின்ற கருவி நிலையான நடுவெட்டுப் பகுதியையும், மாற்றியமைக்கத்தக்க இரு வெட்டுமுனைகளையும் கொண்டது.



வாஷர் வெட்டர்

**washin** *(வானூ.)* **வாஷின்:** விமானத்தின் இறக்கை நுனியில் தாக்கு கோணம் அதிகரிக்கின்ற அளவுக்கு இறக்கையை வளைத்துவிடல்.

**wash out:** *(வானூ.)* **வாஷவுட்:** விமான இறக்கையின் நுனியில் தாக்கு கோணம் குறைகின்ற வகையில் இறக்கையை வளைத்துவிடல்.

**wassermann reaction** *(நோயி.)* **மேகக்கிரந்தி நோய்ச் சோதனை:** ஒருவர் கிரந்தி என்னும் மேகப்புண் நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறாரா என்பதைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் ஒரு வகை இரத்தச் சோதனை. ஒவ்வொருவரின் குருதியிலும் எதிர்ப்புப் பொருளுக்கு உதவி செய்யக்கூடிய 'இணைப்பான்' என்னும் பொருள் அடங்கியுள்ளது. ஒரு நச்சுப் பொருள், அதாவது, 'ஆ' என்ற வேறொரு பிராணியின் இரத்தம், 'அ' என்ற பிராணியின் இரத்தத்தில் செலுத்தப்படும் போது, அந்த நச்சுப் பொருள் ('ஆ' இரத்தம்), தாக்குவதற்கு முன்பு இந்த இணைப்பானுடன் கலக்க வேண்டும். இணைப்பானுடன் நச்சுப் பொருள் கலந்திருந்தால், நச்சு 'அ'வின் இரத்தத்தில் கலந்து விட்டது என்று பொருள். 'அ'வின் குருதியை மேகக்கிரந்தி பீடித்திருக்குமானால், 'ஆ' நச்சு கலப்

பதற்கு முன்பு 'அ' இரத்தம் இணைப்பானுடன் இணைந்து விடும். அப்போது, 'ஆ' நச்சு கலப் பதற்கு இணைப்பான் எதுவும் எஞ்சியிருக்காது. அதனால் 'ஆ' நச்சு 'அ' குருதியைத் தாக்க இய லாது. 'அ' குருதியின் உயிரணுக் கள் சேதமடையாமல் இருக்கும். இதனை இச்சோதனை மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**waste:** *(உலோ.)* **கழிவுப்பஞ்சு** பஞ்சாலைகளில் கழிக்கப்படும். மெல்லிய பருத்தி இழைகள். இது எந்திரங்களைத் துப்புரவு செய் யப் பயன்படுகிறது.

**wastes:** *(பட்.)* **கழிவுப் பருத்தி:** பருத்தி மில்களில் கழிவுப் பொரு ளாக மிஞ்சுவது. ஆலைக்கூடங் களில் எந்திரங்களைத் துடைக்கப் பயன்படுவது. இது மெல்லிய, மிருதுவான பருத்தி இழைகள் ஒன்றோடு ஒன்று மொத்தையா கச் சேர்ந்த வடிவில் இருக்கும்.

**waste lubrication:** *(எந்.)* **கழிவு மசகு:** அச்சுமுனை அமைந்த பெட் டிக்குள்ளாக எண்ணெய் தோய்ந்த கழிவுப் பொருளை அடைத்து வைத்தல். ரயில் பெட்டிகளில் இவ் விதம் மசகிடும் முறை கையாளப் படுகிறது.

**water bar:** *(க.க.)* **நீர்த் தடுப்புத் தண்டு:** நீர், குறிப்பாக மழை நீர் உள்ளே நுழையாமல் இருப்பதற் காக ஜன்னலின் அடிப்புறத்தில் மரக்கட்டைக்கும், கல்லுக்கும் இடையிலும் செருகப்படுகிற தண்டு அல்லது பட்டை.

**water cooling:** *(பொறி.)* **நீர் வழி குளிர்விப்பு:** உள்ளெரி என்ஜி னில் தோன்றும் வெப்பத்தை நீர் ஜாக்கெட், ரேடியேட்டர் ஆகிய வற்றின் வழியே நீரைச் செலுத்தி அகற்றும் முறை.

**water gas:** *(வேதி.)* **நீர் வாயு:** ஒரு வித வாயு. மிகச் சூடான நிலக்கரி அல்லது கோக் மீதாக நீராவியைச் செலுத்தும்போது உண்டாவது. இந்த வாயு திரவ ஹைட்ரோ கார்பன்களைக் கொண்டது. சில சமயங்களில் எரிபொருளாக அல் லது வெளிச்சம் தருவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**water glass:** *(வேதி.)* **நீர்க் கண்ணாடி:** குவார்ட்ஸ் மணலை, பொட்டாஷ் அல்லது சோடியம் ஹைட்ரேட்டுடன் சேர்த்து தயா ரிக்கப்படுகிற சோடியம் அல்லது பொட்டாசியம் சிலிக்கேட் கரை சல். இது எண்ணெய் கலந்தது போலக் குழம்பாக இருக்கும். ஒட்டுவதற்கும், காப்புப் பூச்சாக வும், தீக்காப்புப் பொருளாகவும் பயன்படுவது.

**water hammer:** **நீர் அறைவு.** ஒரு குழாயின் வழியே செல்லும் நீரைத் திடீரென்று தடுத்து நிறுத் தினால் சம்மட்டி அறைவது போன்று எழும் ஒலி.

**water jacket:** *(பொறி.)* **நீர்ப் போர்வை:** மோட்டார் பிளாக் மற் றும் ஹெட்டின் வெளிப்புற மூடு உறையானது அதற்கும் சிலிண்டர் சுவர்களுக்கும் இடையே நீர் பாய்ந்து செல்லும் வகையில் வடி வமைக்கப்பட்டிருக்கும். மோட் டார் இயங்கும்போது தோன்றும் வெப்பத்தைத் தொடர்ந்து அகற் றுவது இந்த ஏற்பாட்டின் நோக்கம்.

**water main:** *(கம்.)* **பெருங் குழாய்:** சீர் வழங்கும் திட்டத்தின் அடித்தளப் பெருங்குழால்.

**water mark:** **நீரோட்டம்:** காகிதம் தயாரிக்கப்படுகையில் புடைப் பான டிசைன் கொண்ட ஒரு சிலிண்டர் ஏற்படுத்தும் அழுத்தம் காரணமாக காகிதத்தில் ஏற்படும் குறியீடு. பின்னர் காகிதத்தில்

வெளிச்சம் ஊடுருவும் வகையில் வைத்துப் பார்த்தால் அந்த டிசைன் தெரியும். அது நீரோட்டம் எனப்படும்.

**water proofing walls:** *(க.க.)* **நீர் புகாப் பூச்சு:** சுவருக்குள் நீர் அல்லது ஈரம் பாயாமல் தடுப்பதற்காக கான்கிரீட்டுடன் ஒரு கலவையைக் கலத்தல். அல்லது அந்தக் கலவையைச் சுவர் மீதே பூசுதல்.

**water pump:** *(தானி.)* **நீர் பம்ப்:** மோட்டார் என்ஜினைக் குளிர்விப்பதற்கான முறையில் நீரோட்டம் நடைபெறுவதற்குப் பயன்படும் பம்ப். இந்த பம்புகள் பொதுவில் சிலிண்டர் பிளக் முன்பாக அமைந்திருக்கும். விசிறி இயக்கத்துடன் அல்லது ஜெனரேட்டர் மூலம் பம்ப் இயக்கப்படுகிறது.

**water putty:** *(மர.வே.)* **அடைப்புப் பொடி:** இப்பொடியை நீருடன் கலந்து மரப்பொருட்களில் உள்ள மெல்லிய வெடிப்புகள், ஆணித் துவாரங்கள், முதலியவற்றை அளப்பதற்குப் பயன்படுத்தலாம். எனினும், பளபளப்பூட்டுவதற்கு உகந்ததல்ல.

**water recovery apparatus:** *(வானூ.)* **நீர் சேகரிப்புச் சாதனம்:** வான் கப்பலில் உள் எரி என்ஜின்களிலிருந்து வெளிப்படுகிற வாயுக்களைச் சேகரித்து குளிர்வித்து அவற்றில் அடங்கிய நீரைப் பிரித்தெடுக்கிற சாதனம்.

**water softener:** *(கம்.)* **நீர் மென்னாக்கி:** வீடுகளில் கிடைக்கும் நீரில் கால்சியம், மக்னீசியம், சல்பேட், பைகார்பனேட் அடங்கியிருந்தால் சோப்பிலிருந்து நுரை வராது. நீரிலிருந்து உட்பொருட்களை அகற்றும் கருவி. இந்த நோக்கில் பயன்படுத்துகிற வேதிப்பொருள்.

**water spots:** *(வண்.அர.)* **பூச்சுத் திட்டு:** ஒரு பொருளுக்கு வார்னிஷ் பூச்சு அளிக்கும்போது மாறுபட்ட நிறத்துடன் சிறு திட்டுகள் காணப்படும். சில சமயங்களில் சற்று ஆழமாகவும் காணப்படும். ஈரப்பசை உள்ளே அமைந்த காரணத்தால் ஏற்படுவது.

**water table:** *(க.க.)* **நீர் வடிகை:** ஒரு கட்டடத்தைச் சுற்றி சற்று நீட்டிக் கொண்டிருக்கிற சரிவான பலகை. மழைநீர் சுவர் மீது விழாமல் இருப்பதற்கான ஏற்பாடு.

**water vapor:** *(குளி.பத.)* **நீராவி** வாயுமண்டலத்திலுள்ள நீராவி.

**watt, James (1736-1819):** **வாட், ஜேம்ஸ் (1736-1819):** நீராவி எஞ்சினைச் சீர்திருத்தி முதலாவது செறிமான நீராவி எஞ்சினைக் கண்டுபிடித்த ஸ்காத்லாந்து விஞ்ஞானி. நீராவி எஞ்சினின் வேகத்தை முறைப்படுத்துவதற்கான சாதனத்தையும் இவர் கண்டுபிடித்தார். 1874இல் நீராவி இருப்பூர்தி எஞ்சினுக்குப் புனைவுரிமை பெற்றார்.

**watt:** *(மின்.)* **வாட்:** மின்சக்தி மின் அலகு. இது வோல்ட்டை ஆம்பியரால் பெருக்கினால் கிடைக்கும் தொகைக்குச் சமம்.

**watt hour:** *(மின்.)* **வாட் மணி:** மின்சக்தியின் பணியை அளக்கும் அலகு. இது ஒரு மணிநேரம் ஒரு வாட்டைச் செலவழித்தால் ஆகும் மின்சக்தியின் அளவு.

**wattless current:** *(மின்.)* **வாட் இல்லா மின்சாரம்:** மாறுமின்னோட்டத்தில் விசையை உற்பத்தி செய்ய வோல்டேஜுடன் சேராத பகுதி. செயலற்ற பகுதி. செயல் பகுதிக்கு மாறானது.

**wattmeter:** *(மின்.)* **வாட்மானி:** மின்சக்தியை வாட் கணக்கில் அளப்பதற்கான கருவி; அதாவது

வோல்ட்டை ஆம்பியரால் பெருக்கி வரும் கணக்கில் காட்டுவது. அந்த வகையில் வோல்ட் மீட்டர், அம் மீட்டர் ஆகிய இரண்டின் பணி யைச் செய்வது.

**watt second :** (*மின்.*) **வாட் விநாடி :** மின் சக்தியை அளக்கும் அலகு. இது ஒரு விநாடி நேரத் துக்கு ஒரு வாட் செலவழித்தால் ஆகும் மின் சக்திக்குச் சமம்.

**watts per candle :** (*மின்.*) **கேண்டில் அளவில் வாட் :** ஒரு மின் பல்பு. எவ்வளவு மின்சாரத்தை பயன்படுத்துகிறது என்பதை இடை மட்டமாக சராசரியாக உற்பத்தியாகிற கேண்டில் பவர் அளவில் வாட் கணக்கில் கூறுவது.

**wave form :** (*மின்.*) **அலை வடி வம் :** காலத்திற்கு எதிரான ஒரு சுழற்சியின்போது ஓர் அலையின் உடனடி மதிப்பளவுகளை வரை வதன் மூலம் கிடைக்கும் ஓர் அலையின் வடிவம்

**wave front :** (*மின்.*) **அலை முனை :** மிகவும் முன்னேறிய ஓர் அலையின் மிக முந்திய முனை.

**wave meter :** (*மின்.*) **அலை மானி :** ஓர் அலையின் அலை வெண்ணை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் அளவு கருவி.

**wave train :** (*மின்.*) **தொடர் அலை :** ஒரு குறுகியகாலத்திற்கு ஏற்படும் அலைச் சுழற்சிகளின் தொடர் வரிசை.

**wave length :** (*மின்.*) **அலை நீளம் :** இரு திசை மின்சாரத்தின் ஒரு முழு சைன் அலையின் மீட்டர் அளவிலான நீளம். வானொலி யைப் பொருத்தவரையில்டிரான்ஸ் மீட்டர் கருவியால் வெளியிடப்படு கிற அடுத்தடுத்த இரு மின்சார அலைகளின் உயர் பட்சப் புள்ளி கள் இடையிலான தொலைவு.

**wave :** (*மின்.*) **அதிர்வலை :** ஓர் ஊடகத்தில் ஏற்படும் அதிர்வலை அலைகள் மூலம் ஆற்றலை அனுப்பலாம். எடுத்துக்காட்டு : ஒலி, ஒளி அலைகள்.

**wave, electromagnetic:** (*மின்.*) **மின்காந்த அலை :** ஒரு மின்னியல் புலமும், ஒரு காந்தப்புலமும் உடைய ஓர் அலை. எடுத்துக் காட்டு: வானொலி அலை.

**waviness :** (*குழை.*) **அலைவம் :** மேற்பரப்பு அலை மாதிரியில் வளைந்து அமைதல்.

**wax :** (*வேதி.*) **மெழுகு :** உயர் ஒற்றை அணு ஆல்கஹாலின் கரிம உப்பும், மிகுந்த கொழுப்பு அமில மும் கலந்தது. உதாரணம்: தேன் மெழுகு.

**wax engraving:** (*அச்சு.*) **மெழுகி உருமானம் :** மெழுகு அளிக்கப் பட்ட தாமிரத் தகடுகளின் மீது தக்கபடி வடிவம் கொடுத்து பின் னணியை தயார்படுத்தி அதி லிருந்து எலெக்ட்ரோ பிளேட் வகை பிளேட்டைத் தயாரித்து அச்சிடுதல்.

**wax finish :** (*மர.வே.*) **மெழுகு நேர்த்தி :** மரத்தால் ஆன பொருட் கள் மீது இதற்கென்று தயாரிக்கப் பட்ட மெழுகைப் பூசித் தேய்ப் பதன் மூலம் மிக நைசான நேர்த்தி யைப் பெற முடியும்.

**ways :** (*பட்.* **சறுக்குப் பள்ளம் :** நெடுக அமைந்த சிறுபள்ளம். வேலை செய்யப்படுகின்ற பொருள் அல்லது அதைத் தாங்கிய பொருள் இப்பள்ளங்களின் மீது அமைந்த படி சறுக்கிச் செல்லும்.

**weak sand:** (*வார்.*) **சேரா மணல்:** வார்ப்பட வேலைக்கான மணலில் சிறு சத அளவுக்குக் களிமண் இருப் பதன் விளைவாக ஒன்று கூடிச் சேராத மணல்.

**wear and tear : தேய்ந்தழிதல் :** பயன் காரணமாக மதிப்பில் ஏற்படும் குறைவு.

**weather : பருவ நிலை :** மரம், கல் அல்லது வேறு ஏதேனும் ஒரு பொருள், பருவ நிலையின் விளைவாக காய்ந்து, உலர்ந்து, உருமாறி, சிதைந்து போகும் நிலைமை.

**weather boards :** (க.க.) **மழைப் பலகை :** கதவு, பலகணி போன்றவற்றில் மேலிருந்து கீழாக ஒன்றன் நுனியின் ஒன்றாக அடுக்கி அமைந்த பலகைகள், மழை நீர் உள்ளே புகாமல் வடிவதற்கு ஏற்பாடு,

**weathering :** (க.க.) **கட்டுமான முகட்டுத் தளச் சாய்வு :** சுவரின் மேற்புறத்தில் அமைந்த மடிப்புகள், விளிம்பு, உதை சுவர் ஆகிய வற்றில் மழைநீர் தேங்காமல் இருக்க அளிக்கப்படும் சரிவு. (மரம்) காற்று, மழை, வெயில் போன்றவற்றினால் மரத்தின் மேற்புறத்தில் ஏற்படும் பாதிப்பு.

**weather strip :** (க.க.) **கசிவுத் தடுப்பான் :** சன்னல், மற்றும் கதவுகளின் வெளிப்புறத்தின் கீழ்ப் பகுதியில் உலோகம், மரம் அல்லது வேறு பொருளில் செய்யப்பட்ட பட்டையை அமைத்தல். கதவு மீது படும் நீர் கீழிறங்கும் போது உள்ளே வராமல் தடுக்கும் ஏற்பாடு.

**web :** (எந்.) **வெப் :** வார்ப்படங்கள், அடித்து உருவாக்கப்பட்ட பொருட்கள் ஆகியவற்றின் இரு பகுதிகளை இணைக்கும் மெல்லிய தகடு அல்லது பகுதி. (காகிதத் தயாரிப்பு) காகிதத் தயாரிப்பு எந்திரத்தில் தயாரிப்பு நிலையில் உள்ள அல்லது தயாரிக்கப்பட்ட காகிதம்.

**webbing : சாக்குப் பட்டை :** சணல் இழையைக் கொண்டு 3,3½ மற்றும் 4 அங்குல அகலத்தில் 72 கெஜ நீளத்துக்குத் தயாரிக்கப்படுகிற சாக்குப்பட்டை மர இருக்கை பிரேம்களில் ஸ்பிரிங்குகளுக்குக் கீழே அமைக்கப்படுவது.

**webbing stretcher : விறைப்புக் கட்டை :** மர இருக்கைச் சாதனங்களில் திறப்புக்களின் மீதாக போர்த்து துணியை விறைப்பாக இழுத்துக் கட்ட உதவும் சிறிய கட்டை. தட்டையான இக்கட்டையின் ஒருபுறத்தில் இறுகப் பிடித்துக் கொள்ள வட்டமாக ஏதாவது பொருள் சுற்றப்பட்டிருக்கும். மறுபுறத்தில் செருகுவதற்கு வசதியாக கூரான உருக்கு முனைகள் இருக்கும்.

**web-calendered : சுருள் நேர்த்தி:** காகித உற்பத்தியின்போது காகிதம் நீண்ட சுருளாக இருக்கும் போதே சுழல் உருளைகள் இடையே செலுத்தப்பட்டு மழமழப்பாக்கப்படுதல்.

**weber's law:** (மின்.) **வெபர் விதி:** "துலங்கலில் கணிசமான ஒரு மாறுதலை உண்டாக்குவதற்குத் தேவைப்படும் குறைந்த அளவுத் தூண்டல் மாற்றமானது, ஏற்கெனவே உள்ள தூண்டலுக்குவீத அளவில் இருக்கும்" என்பது வெபர் விதியாகும்.

**weber, wilhelm Eduard (1024-1891) : வெபர், வில்ஹெல்ம் எட்வர்ட் (1804-1891) :** மின்னியலில் முக்கியமான கண்டுபிடிப்புகளைச் செய்த ஒரு ஜெர்மன் இறைமையியலாளர்; விஞ்ஞானி.

**web of drill :** (எந்.) **குடைவி முனை :** ஒரு குடைவு கருவியில் சுழன்று இறங்கும் வெட்டுக் குழிவுகளின் அடிப்புறத்தில் குடைவியின் பருமன்.

**wedge :** *(தாவ.)* **ஆப்பு :** மரத்தைப் பிளத்தல் போன்ற பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் மரம் அல்லது உலோகத்தாலான செருகு தண்டு.

**wedge :** *(எந்.)* **ஆப்பு :** ஆங்கில 'V' வடிவில் மரம் அல்லது உலோகத்தால் ஆன துண்டு. ஒரு பொருளில் வலுவான அழுத்தத்தை ஏற்படுத்த அல்லது இரண்டாகப் பிளக்கப் பயன்படுவது.

**wedging : பதமாக்கம் :** களிமண்ணைப் பொருளாக உருவாக்கும் நோக்கில் அதை நன்கு பிசைந்து பதப்படுத்துவது.

**weft or woof : ஊடு :** தறியில் குறுக்காக அமையும் நூல்கள்.

**weight : காகித எடை :** ஒரு ரீம் காகித்தின் அல்லது 1000 ஷீட் காகிதத்தின் எடையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சொல்.

**weight font :** *(அச்சு.)* **பாண்ட் எடை :** இன்ன எழுத்து இன்ன விலை என்பதற்கு மாறாக எடைக் கணக்கில் விற்கப்படும் அச்சு எழுத்துக்கள்.

**weighting : துணி எடைமானம் :** பட்டுடன் கனிம உப்புகள் அல்லது வேறு பொருட்களைச் சேர்த்து பட்டுக்கு கனம் சேர்த்தல்.

**weightlessness :** *(விண்.)* **எடையற்ற நிலை :** ஒரு பொருளின்மீது ஈர்ப்பாற்றல் இயங்காமலிருப்பதால் உண்டாகும் நிலை. ஒரு வெற்றிடத்தில், ஆதாரமின்றி எளிதில் விழுந்து விடக்கூடியதாகவுள்ள ஒரு பொருள் எடையற்றது எனப்படும்.

விண்வெளிக்கு அனுப்பப்படும் மனிதன் அல்லது விலங்கின்மீது ஈர்ப்பாற்றல் இயங்காமற்போவதால், எடையின்மை நிலை உண்டாகிறது.

**weir .** *(பொறி.)* **தூம்பு :** ஆறு, அல்லது ஓடையின் குறுக்கே எழுப்பப்படும் சுவர் அல்லது அணை மின் உற்பத்திக் காரியங்களுக்கு, போதுமான சீர் கிடைக்கச் செய்வதற்காக நீர்மட்டத்தை உயர்த்தும் நோக்கில் கட்டப்படுவது.

**welding :** *(எந்.)* **பற்றவைப்பு :** இரும்பு அல்லது உருக்குத் தகடு போன்றவற்றின் ஓரங்களை இணைக்கும் முறை. ஆக்சி ஆசிடிலீன், மின்சாரம் அல்லது அடிப்பதன் மூலம் சேர்ப்பது.

**welding flux :** *(பற்ற.)* **பற்றவைப்புப் பொருள் :** பற்றவைக்கும்போது துப்புரவு செய்யவும், ஆக்சிகரணமாவதைத் தடுக்கவும், இணைப்புகளை எளிதாகக் கூட்டிணைப்பு செய்யவும் பயன்படுத்தப்படும் ஒரு கூட்டுப் பொருள்.

**welding rod :** *(பற்ற.)* **பற்றவைப்புத் தண்டு :** பொதுவில் 24 அங்குல நீளமும், ¼, 3/8, அல்லது ½ அங்குலக் குறுக்களவும் கொண்டது. தீப்பீச்சு மூலம் பற்றவைக்கையில் இணைக்க வேண்டிய இடத்தில் இத்தண்டுகள் உருகி இணைக்கும். பற்றவைப்புத்தண்டுகள் செய்ய வேண்டிய வேலையின் தரத்தைப் பொருத்து வெவ்வேறு வகைப் பொருட்களால் ஆனது.

**welding sequence :** *(பற்ற.)* **பற்றவைப்பு வரிசை :** உறுப்புகளை எந்த வரிசையில் பற்றவைக்க வேண்டுமோ அந்த வரிசை.

**welding transformer :** *(மின்.)* **பற்றுவைப்பு மின்மாற்றி :** ஒன்றோடு ஒன்று பொருத்தப்படுகிற உலோகப் பகுதிகளை இணைப்பதற்கு வெப்பம் பெறப் போதுமான மின்சாரத்தைஉடனே தரும் இறக்கு மின்மாற்றி.

**weld-mark :** *(குழை.)* **இணைப்பு அடையாளம் :** பிளாஸ்டிக் பொரு

ளின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தாரைகள் முற்றிலு மாக ஒன்று சேராத காரணத்தால் ஏற்படும் அடையாளம்.

**weldment:** *(பற்ற.)* **பற்றாக:** பற்றவைத்தல் மூலம் ஒன்றாக இணைக்கப்பட்ட உறுப்புகளின் தொகுதி.

**weld metal:** *(பற்ற.)* **பற்றவைப்பு உலோகம்:** பற்றவைப்பின்போது உருகி ஒட்டிக்கொள்ளும் உலோ கம்.

**weld period : பற்ற வைப்புக் காலம் ;** பற்ற வைப்பதை ஒரு தடவை முற்றிலுமாகச் செய்து முடிப்பதற்கு ஆகும் காலம்.

**weld time : பற்றவைப்பு நேரம் :** ஒரு தடவை பற்று வைக்கும் போது மின்சாரம் பாய்வதற்கு அனுமதிக்கப்படுகிற நேரம், துடிப்பு-பற்ற வைப்பில் பற்ற வைப்பு நேரத்தில் சூடாறும் நேரமும் அடங்கும்.

**weld hole :** *(க.க.)* **மாடிப் படிக் குழி :** படிக்கட்டும் தொகுதிகள் அடுத்தடுத்து 3 திசைகளில் திரும்பி அமையும்போது அவற்றின் நடுவே செங்குத்தாக அமைந்த இடைவெளி.

**welted edge : தடித்த விளிம்பு :** இருக்கைச் சாதனங்களில் போர்த்து துணிகளின் விளிம்பு களைச் சேர்த்துத் தைக்கையில் உட்புறமாக துணி போர்த்திய ஒரு கயிற்றைக் கொடுத்துத் தைத் தல். இதன் மூலம் இணைப்புகள் புடைப்பாக இருக்கும்.

**weston cell :** *(மின்)* **வெஸ்டான் மின்கலம் :** ஒரு வெந்நிற உலர் மின்கலம்.

**wet end : ஈர முனை :** காகிதத் தயாரிப்பு எந்திரத்தில் காகிதம் உருப்பெற்று முதலாவது ஈரம் போக்கும் உருளை வரையிலான பகுதி.

**wet rot : ஈர உருத்து :** ஈரப்பசை உகந்த வெப்பம் காரணமாக மரக் கட்டை உளுத்துப் போதல்.

**wet steam : ஈர நீராவி :** ஈரப் பசை அடங்கிய தெவிட்டியநீராவி

**wheatstone's bridge :** *(மின்.)* **மின் தடைவுமானி :** மின் தடையை அளவிடும் ஒரு முறை சீரமைவு செய்துகொள்ளத்தக்க, அறியப் பட்டுள்ள மூன்று மின்தடை களுக்கும், கண்டறியக்கூடிய மின் தடைக்கு மிடையிலான வீத அளவு.

**wheel and axle : சக்கரமும் அச் சும் :** பளுவைத் தூக்குவதற்குத் மிக எளிய எந்திர விதி. அச்சில் அமைந்த சக்கரத்தின் வெளிச் சுற்று மீது விசை செலுத்தப்படு கிறது. சங்கிலி அல்லது கயிறு மூலம் எடையானது அச்சுடன் இணைக்கப்படுகிறது.

**wheel base : சக்கர அடிமானம் :** கார் அல்லது வாகினில் உள்ளது போன்று முன் சக்கர மையத்தி லிருந்து பின் சக்கர மையம் வரை உள்ள தூரம்.

**wheel balance :** *(தானி.)* **சக் கரச் சமநிலை :** ஒரு சக்கரத்தில் ஏற்றத்தாழ்வான விசைகளைச் சமநிலைக்குக் கொண்டு வரு வதற்கு எதிரெதிர் எடைகளைச் சேர்த்தல்.

**wheel dresser :** *(எந்.)* **சக்கரத் தீட்டுக் கருவி :** அரைப்பு சக்கரங்களின் வெட்டு முகங் களை மறுபடி கூராக்கவும், சுத்தப்படுத்தவும் பயன்படும் கருவி.



சக்கரத் தீட்டு கருவி

**wheel hub : சக்கரக் குடம் :** ஒரு சக்கரத்தில் ஆரைக் கால்கள் அனைத்தும் வந்து சேருகின்ற மையப்பகுதி. இப்பகுதியில் தான் அச்சுக்கான துளை அமைந்திருக்கும்.

**wheel lathe : சக்கரக் கடைசல் : எந்திரம் :** குறுகிய மேடையும் ஆழமான இடைவெளியும் கொண்ட விசேஷ கடைசல் எந்திரம். சக்கரங்களைக் கடைவதற்குப் பயன்படுவது.

**wheel puller :** *(தானி.)* **சக்கர இழுவி :** மோட்டார் வாகனச் சக்கரங்களை அச்சிலிருந்து விடுவித்து வெளியே இழுப்பதற்கான கருவி.

**wheel truing :** *(எந்.)* **சக்கர வடிவச் சீரமைவு :** ஒரு சாணைச் சக்கரத்தைச் சமநிலைக்கு கொண்டு வருவதற்கு அல்லது சாணைத் திறனைமேம்படுத்துவதற்கு அதன் உறுப்பு எதனையும் சீரமைவு செய்யும் முறை.

**wheel window:** *(க.க.)* **சக்கரப் பலகணி :** சக்கரத்தில் உள்ளது போன்று ஆரைகள் அமைந்த வட்டவடிவச் சாளரம்.

**wheel wright : சக்கரப் பணியாளர் :** வாகின்கள் அல்லது அலை போன்றவற்றைத் தயாரிக்கிற அல்லது பழுது பார்க்கிற பணியாளர்.

**whetting :** *(எந்.)* **தீட்டுதல் :** வெட்டு முனையைக் கூறாக்குவதற்காக சிறு துளி எண்ணெய் சேர்க்கப்பட்ட தீட்டுக் கல்லில் தீட்டுவது.

**whirler: சுழல்வி :** மண்பாண்டங்களுக்கு பட்டையிடும் போது அல்லது அலங்கார வேலைப்பாடு செய்யும் போது பயன்படுத்தப் படும் சுழல் கருவி.

**white antimony :** *(வண்; அர.)* **வெள்ளை ஆன்டிமனி :** பெயின்ட் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிற நச்சற்ற வெள்ளை நிறப்பொருள் டைட்டானியம் ஆச்சைட் பெயின்ட் போன்று மெல்ல உலரும் தன்மையை அளிப்பது.

**white cedar :** *(மர. வே.)* **வெள்ளை செடார் :** - முதல் 15 மீ. உயரம் வளரும் மரம். குறுக்களவு ஒன்று முதல் •6 மீ.. இருக்கும். லேசான மரம். மென்மையானது. நீடித்து உழைப்பது. கூரை அமைக்கவும் படகு கட்டவும் வேலிக் கம்பமாக நடவும், மரச்சாமான்கள் தயாரிக்கவும் பயன்படுவது.

**white coat : வெள்ளைப் பூச்சு:** சிமென்ட் போன்ற பூச்சு அளிக்கப்பட்ட சுவர் மீது உறுதியான வெள்ளைப் பூச்சு அளித்தல். இப பூச்சுப் பொருளானது பிளாஸ்டர் ஆஃப் பாரிசும், சுண்ணாம்புக் குழைவும் அடங்கியது. இதனுடன் சில சமயம் பொடியாக்கப்பட்ட சலவைக் கல்லும் சேர்க்கப்படும். மேல் பூச்சுக்கு ஜிப்சம் குழைவும் பயன்படுத்தப்படலாம்.

**white iron :** *(உலோ.)* **வெள்ளை இரும்பு :** மிகவும் உறுதியான வார்ப்பு இரும்பு, தயாரிப்பின் போது வார்ப்பானது உலோக அச்சில் குளிர்விக்கப்படுகிறது.

**white lead:** *(வேதி;வண்.)* **ஒயிட் லெட் :** காரீயத்தின் ஹைட்ரேட் கார்பனேட் பெயின்ட் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது.

**white light :** *(மின்)* **வெண்ணொளி :** சிவப்பு, பச்சை, ஊதா வண்ணங்கள் உரிய வீத அளவுகளில் கலந்த கலவை.

**white-metal alloys :** *(உலோ.)* **வெள்ளை உலோகக் கலோகங்கள் :** துத்தம், ஈயம், தாமிரம் ஆகிய

வற்றைச்சேமித்துத் தயாரிக்கப்படுகிற அலோகம். மோட்டார் வாகனத்தில் கடினமான உறுப்புகளை அச்சு வார்ப்பு மூலம் தயாரிக்கப் பயன்படுவது.

**white oak** : *(தாவ.)* **வெண் கருவாலி** : *மிகுந்த வலிமையும் நீண்ட காலம் உழைக்கும் திறனும் உடைய நெருக்கமான கரண்கள் உள்ள கனமான மரம். அமெரிக்காவிலுள்ள கருவாலி மரங்களில் மிகவும் கனமானது.*

**white peak** : *தொலைக்காட்சியில் வெண்மைத் திரையில் வெண்ணிறப்படச்சமிக்ஞைகளின் உச்ச அளவு முனைப்பு.*

**white pine** : *(மர. வே.)* **வெள்ளை பைன்** : *நீளவாட்டில் உள்ளோட்டம் அமைந்த மென் மரம்; வெளிறிய நிறம்; வடிவமைப்புப் பணிகளுக்கும் இணைப்புப் பணிக்கும் விரிவாகப் பயன்படுவது.*

**white space** : *(அச்சு.)* **வெள்ளிடம்.** *ஒரு ஷீட்டில் அச்சிடப் படாத பகுதி.*

**white spots** : *(வண்; அர.)* **வெள்ளைத் தட்டு** : *இறுதிப் பூச்சு அடித்த பின்னர் காணப்படும் சிறு சிறு வெள்ளை நிறப்புள்ளிகள் அல்லது திட்டுகள். அவசரமாகச் செய்த வேலை காரணமாக உள்ளே ஈரப்பசை சிக்குவதால் ஏற்படுவது. சரியாகத் தயாரிக்கப் படாத மட்டமான கரைப்பானை பயன்படுத்துவதாலும் ஏற்படுவது.*

**white spruce** : *(மர.வே.)* **விலை குறைவான சாதாரண மரம்** : *பெரிதும் பிரேம்களைச் செய்யவும், தரைகளை அமைக்கவும் மற்றும் அது போன்ற பணிகளுக்கும் பயன்படுவது.*

**white wash** : *(க.க.)* **வெள்ளையடி** : *நீரில் கரைத்த சுண்ணாம்பை பிரஷ் கொண்டு பூசுதல் அல்லது ஸ்பிரே கருவி மூலம் ஸ்பிரே செய்தல். சுண்ணாம்பு நன்கு ஒட்டிக் கொள்ள சில சமயங்களில் உப்பு சேர்ப்பது உண்டு. நீலத்தைச் சேர்த்தால் நல்ல வெண்மை கிடைக்கும்.*

**whithing** ; *(வேதி.)* **வெள்ளைப் பசை** : *நன்கு பொடி செய்த சாக்கட்டி எண்ணெயுடன் நன்கு கலந்தால் பசை போலாகும். துளைகளை சந்துகளை அடைப்பதற்குப் பயன்படுவது.*

**whitney keys** : *(எந்.)* **விட்னி கீ**: *சதுர தண்டு சாவிகள். இருமுனைகளிலும் நுனிகள் மழுங்கலாக இருக்கும்.*

**whitworth thread** : *(எந்.)* **விட்வர்த் திருகு** : *தர நிர்ணயப் படுத்தப்பட்ட இங்கிலாந்தின் திருகுபுரி தலைப்பகுதியும் நுனியும் மழுங்கலாக இருக்கும். புரியின் கோணம் 55 டிகிரி.*

**whole depth** : *(பல்லி.)* **மொத்த ஆழம்** : *ஒரு சக்கரத்தின் பல் பற்றிய அளவு. மேல் விளிம்புக் கோட்டிலிருந்து பற்களுக்கு இடையே உள்ள பள்ளத்தின் அடி மட்டம் வரையிலான மொத்த ஆழம்.*

**whorl** : *(மர.வே.)* **சுருள் பாணி**: *நெருக்கமாக இல்லாத சுருள் வடிவப் பாணி.*

**wicket** ; *(க.க.)* **உள் கதவு** : *பெரிய கதவுக்குள்ளாக அதன் பகுதியாக அமைந்த சிறுகதவு.*

**wick - feed oilers** : *(எந்.)* **திரி மசகு** : *தேக்கி வைக்கப்பட்ட எண்ணெயிலிருந்து வெளிப்படும் திரி மூலம் மசகிடுதல். எண்ணெயில் மூழ்கியுள்ள முனையிலிருந்து*

எண்ணெயானது திரி வழியே மசகிட வேண்டிய பகுதிக்குச் செல்லும் ஏற்பாடு.

**wiggler** : *(எந்.)* **மையக் குறியிடு கருவி :** துளையிடப்பட வேண்டிய பொருளின் நடுமையத்தை மிகத் துல்லியமாகக் கண்டறிந்து, துளைத்தண்டின் நுனிக்கு நேர் செங்குத்தாக அந்த மையம் அமையும் படி செய்ய உதவும் கருவி.

**wild black cherry** : *(மர.வே.)* **காட்டு கருப்புச் செர்ரி மரம்** : பொதுவில் 6 முதல் .9மீ. குறுக்களவுடன் 15 முதல் 1.5மீ. உயரம் வரை வளரும் மரம். இந்த மரம் சிவந்த பழுப்பு நிறம் கொண்டது. கணிசமான அளவுக்கு கெட்டியானது; உறுதியானது. பருவ நிலைகளால் பாதிக்கப்பட்டு வெடிப்பு விடாதது; வளையாதது. இருக்கைகள், நுண்ணிய வேலைப்பாடுள்ள பலகைகள் முதலியவற்றைத் தயாரிக்கப் பயன்படுவது

**winch** : *(எந்.)* **விஞ்ச்** : பாரம் தூக்கும் திருகு உருளை ஏற்றப் பொறி.

**wind** : **நெளிசல்** : ஒரு மரத்தில் இருக்கின்ற நெளிசல் அல்லது கோணல்.

**wind cone**: *(வானூ.)* **காற்று திசைகாட்டி**: விமான நிலையத்தில் காற்று வீசும் திசையைக் காட்டுவதற்காக உள்ளது. குறுகிக் கொண்டே வரும் நீண்ட துணி ஒரு தண்டின்மீது கட்டி வைக்கப்படும்.

**winders**: *(க.க.)* **விரியும்படி**: மாடிப்படிகளில் சில படிகள் மட்டும் ஒரு புறம் அகன்றும் மறு புறத்தில் குறுகியும் அமைந்திருப்பது. மாடிப்படிகளில் வளைவிலும், திருப்பங்களிலும் இவ்விதமாக அமைந்துள்ள படிகள்.

**wind indicator**: *(க க.)* **காற்றுக் காட்டி**: தரைமட்டக் காற்றின் வேகம், வீசும் திசை ஆகியவற்றைக் காட்டுகிற கருவி.

**winding stair**: **சுழல் படி**: தொடர்ந்து திசை மாறியபடி உயரே செல்லும் படிகள். படிகள் வளைந்து செல்லலாம். அல்லது நடுவில் திட்டுகளுடன் வளைந்து செல்லலாம். படிகளின் நடுவே உள்ள கிட்டத்தட்ட வட்டவடிவ இடைவெளியானது படிக்கிணறு எனப்படும். இது அகன்று இருக்கும். படிகளின் கைப்பிடியும் சுழன்று மேலே செல்லும்.

**windlass**: **பாரம் தூக்கும் பொறி**: "வண்டி லாசு" என்றும் கூறுவது உண்டு.

**wind load**: *(பொறி.)* **காற்று விளைவு**: ஒரு கட்டுமானம் மீது வீசும் காற்றினால் ஏற்படுகின்ற பாரம்.

**window**: *(க.க.)* **பலகணி**: ஒரு கட்டடத்தில் அமைந்த பல திறப்புகள். உள்ளே வெளிச்சமும், காற்றும் கிடைப்பதற்காக அமைக்கப்படுவது. வேண்டும்போது மூடிக் கொள்ள சட்டங்களுக்குள்ளாக ஒளி ஊடுருவும் பொருள் இணைக்கப்பட்ட ஏற்பாடு கொண்டது.

**window head**: *(க.க.)* **பலகணித் தலை**: பலகணிச் சட்டத்தின் மேல் பகுதி.

**window jack**: **பலகணிச் சாரம்**: பலகணி அடிச்சட்டத்துடன் பொருந்துகிற, அத்துடன் வெளியே நன்கு நீட்டிக்கொண்டிருக்கிற சிறிய வலுவான மேடை. பொதுவில் பெயின்ட் அடிப்பவர்கள் பயன்படுத்துவது.

**window seat**: *(க.க )* **பலகணி இருக்கை**: பலகணிக்குக் கீழே அல்லது பலகணியின் உள் அமைந்த

இடத்தில் பொருந்துகிற இருக்கை.

**wind shake: காற்று வெடிப்பு:** மரத்தை வெட்டுவதற்கு முன்னதாக மரத்தின் தண்டுகளில் காற்று காரணமாக ஏற்படும் வெடிப்பு.

**windshield wiper:** *(தானி.)* **கார் கண்ணாடித் துடைப்பான்:** காரின் முன்புறத்தில் உள்ள கண்ணாடியில் மழைநீர், அல்லது விழுபனி படியும்போது அதைத் தொடர்ந்து அகற்றி ஓட்டுபவருக்கு எல்லாம் தெளிவாகத் தெரிய உதவும் கருவி. எந்திர முறை மூலம் பல வெற்றிட ஏற்பாட்டின் கீழ் மின்சார மூலம் அல்லது கையால் இயக்கப்படுவது. மழைநீரை, விழுபனியை அகற்ற உறுதியான நீண்ட தண்டின் முன்புறத்தில் ரப்பர் பட்டை அமைந்தது.

**wind tee:** *(வானூ.)* **காற்று திசை காட்டி:** காற்று எத்திசையை நோக்கி வீசுகிறது என்று காட்டுவதற்கு விமானம் தரை இறங்கும் பகுதியில் அல்லது அருகே உள்ள கட்டுமானத்தின் உச்சியில் ''T'' வடிவில் அமைந்த பெரிய காற்று திசைக்காட்டி.

**wind tunnel:** *(வானூ.)* **காற்றுச் சுரங்கம்/காற்றுப் புழைவழி:** செயற்கையாக வேண்டிய அளவில் காற்று வீசும்படி செய்வதற்கான சாதனம் அடங்கிய கூடம்: விமான மாடல் போன்றவை வைக்கப்பட்டு காற்று வீசுவதால், காற்று இயக்க விசைகள் சோதனைப் பொருள் மீது ஏற்படுத்தும் விளைவுகளை ஆராய காற்றுச் சுரங்கம் உதவுகிறது.

**wing:** *(வானூ.)* **இறக்கை:** விமானத்தின் முக்கிய தாங்கு பரப்புகள். இடது இறக்கை, வலது இறக்கை, மேல் இறக்கை ஆகியன அடங்கும். (கட்டிட) முதன்மை கட்டிடத்திலிருந்து பிரிந்து நீண்டு அமைந்த கட்டிடப் பகுதி.

**wing axis:** *(வானூ.)* **இறக்கை அச்சு:** இறக்கையின் எல்லாப் பகுதிகளின் வான் இயக்க மையங்களின் குவியம்.

**winged dividers: இறக்கையுள்ள பகிர்வி:** நீளமான கோடுகளைப் பகிர்ந்து, பிரித்துப் பிரித்து அளப்பதற்காக இறக்கையுள்ள கருவி. கூரான இரு கால்களில் ஒன்றின் மேற்புறத்தில் இணைக்கப்பட்ட மெல்லிய தகடு மற்றதன் ஊடாகவும் சென்று அமைந்திருக்கும். துளையுள்ள காலில் பொருத்தப்பட்ட நிலைப்பு ஸ்குரூவை முடுக்கினால் இக்கருவி அளவு மாறாமல் அப்படியே இருக்கும். குறுகாது; விரியாது

**wing heavy:** *(வானூ.)* **இறக்கை இறக்கம்:** விமானம் குறிப்பிட்டதொரு போக்கில் சாதாரணமாகப் பறக்கும்போது கிடைநிலைக் கட்டுப்பாடுகள் இயக்கப்படாத நிலையில் விமானத்தின் வலது அல்லது இடது இறக்கை கீழ்நோக்கிச் சாய்ந்த நிலை.

**wing loading:** *(வானூ.)* **இறக்கை எடைமானம்:** முற்றிலுமாக பளு ஏற்றப்பட்ட நிலையில் மொத்த எடையை, தாங்கு பரப்பினால் வகுத்து வரும் எண்.

**wing nut:** *(எந்.)* **இறக்கை நட்டு:** நட்டுகளில் ஒரு வகை. இந்த வகை நட்டில் அதன் இரு புறங்களிலும் இறக்கைபோல இரு மெல்லிய பகுதிகள் நீட்டிக்கொண்டிருக்கும். இறக்கைகளைப் பற்றி நட்டு முடுக்கப்படும் அல்லது வெளியே எடுக்கப்படும்.

**wing profile:** *(வானூ.)* **இறக்கை விளிம்புரு:** ஒரு விமானத்தின் இறக்கையின் ஓரங்களை மட்டும் காட்டும் படம்.

**wing rib**; *(வானூ.)* **இறக்கை முதுகு:** விமான இறக்கையின் உள் கட்டுமானத்தில் விமான வயிற்றுப் புறப் பகுதியிலிருந்து இறக்கையின் ஊடே அதன் வெளி விளிம்புவரை அமைந்த தண்டு. அதுவே இறக்கைக்கு வடிவத்தை அளிக்கும் அடிப்படைத் தண்டு.

**wing section**; *(வானூ.)* **இறக்கைக் குறுக்கு வெட்டு:** விமான இறக்கையின் நீளவாட்டு அல்லது வேறு கோணத்திலான குறுக்கு வெட்டுத் தோற்றம்.

**wing skid**: *(வானூ.)* **இறக்கை முட்டு:** விமான இறக்கை சாய்ந்து தரையைத் தொடாதபடி தடுக்க இறக்கையின் நுனியின் கீழ் நிறுத்தப்படுகிற முட்டு.

**wing spar**: *(வானூ.)* **இறக்கைத் தண்டு:** விமானத்தின் இறக்கையின் உட்புறக் கட்டுமானத்தால் நீளவாட்டில் அமைந்த பிரதான தண்டு.

**wing tip**: *(வானூ.)* **இறக்கை முனை:** விமானத்தின் இறக்கையின் வெளிக்கோடி முனை.

**wing tip flare**: *(வானூ.)* **இறக்கை முனை வானூர்தி:** விமானம் கீழிறங்குகையில் வெளிச்சம் தேவைப்படுமானால் இயக்குவிப்பதற்கான வாகனம். இது இறக்கையின் நுனிகளில் பொருத்தப்பட்டிருக்கும்.

**wing truss**: *(வானூ.)* **இறக்கைக் கூடு:** விமான இறக்கையின் உட்புறக் கட்டுமான பிரேம்களின் கூடு. இணைப்புத் தண்டுகள், கம்பிகள், கேபிள்கள் ஆகியவற்றை உள்ளடக்கியவை. இதன் வடிவமைப்பின் விளைவாக இறக்கையின் எடை விமானத்தின் உடலுக்கு மாற்றப்படுகிறது.

**wiped joint**: *(கம்மி.)* **துடைப்பு ஒட்டு:** இரு துண்டுகளை ஒன்றாக ஒட்ட வைக்கும்போது இரண்டையும் சூடேற்றி தக்க சூடு வந்ததும் வேண்டிய ஓரங்களைச் சேர்த்து வைத்து அவற்றின் மீது உருகிய ஒட்டு உலோகத்தை ஊற்றுதல், பிறகு ஓரளவுக்குச் சேர்ந்ததும், குழம்பு நிறையில் ஒட்டுக்கு மேலுள்ள எஞ்சிய உலோகத்தை துடைப்புத் துணி கொண்டு துடைத்து அகற்றுதல்.

**wiper**: *(எந்.)* **துடைப்பி:** கோண வட்ட இயக்கியின் ஒரு வடிவம். சரிந்து ஏறுகிற அல்லது துடைக்கிற பணியைச் செய்வது.

**wire bar**: *(உலோ.)* **கம்பிப் பாளம்:** உருளைகளில் கொடுத்து தண்டுகளாக மாற்றுவதற்கான தாமிரப் பாளம். உருளைக்குள் எளிதில் செருக சரிவான விளிம்பு இருக்கும்.

**wire brush**: **கம்பி பிரஷ்:** தூரிகைக்குப் பதில் உருக்கினால் ஆன மெல்லிய துண்டுகள் அல்லது கம்பிகளைக் கொண்ட பிரஷ். ஒரு பரப்பின் மீதுள்ள துருசு. அழுக்கு அல்லது வேறு பொருட்களை அகற்றப் பயன்படுவது.

**wire cloth** *(உலோ.)* **கம்பித் துணி:** நெசவு செய்த கம்பியினாலான ஒரு வகைத் துணி.

**wired edge**: *(உலோ.)* **கம்பி விளிம்பு:** ஒரு கம்பியில் அமைக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்ட உலோகத் தகட்டின் விளிம்பு.

**wire drawing**: **கம்பி இழுத்தல்:** கம்பி தயாரிக்கும் முறை. உலோகத் தண்டு தக்க உலோகத் தட்டின் நடுவே உள்ள ஓட்டை வழியே இழுக்கப்படும்.

**wire gauge**: *(எந்.)* **உயர் அளவு மானி:** தயாரிக்கப்படுகிற கம்பி மற்றும் தகடுகளின் குறுக்கு அறை

களைக் கண்டறிவதற்கென குறியீடுகளையும், அளவு எண்களையும், கம்பி, தகடு ஆகியவற்றை வைத்து அளவு பார்க்க வெவ்வேறு அளவுகளில் குழிவுகளையும் கொண்ட தகடு. அமெரிக்காவில் பயன்படுத்தப்படுகிற அமெரிக்கா தர நிர்ணய உருக்கு கம்பி அளவு மானி அதிகார முறையில் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் சட்ட மதிப்பு இல்லாதது. வரி விதிப்புப் பணிகளுக்கு பிர்மிங்ஹாம் அளவு மானி அமெரிக்க சட்ட மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது ஆகும். அமெரிக்கன் பிரவுன் அண்ட் ஷார்ப் காஜ், தாமிரக் கம்பிகளையும், இரும்பல்லாத உலோகங்களால் ஆன கம்பிகளையும் அளக்கப் பயன்படுகின்றன.

**wire glass:** *(க.க.)* **கம்பி பதித்த கண்ணாடி :** அகன்ற இடைவெளி கொண்ட கம்பி வலை உள்ளே பதிக்கப்பட்ட கண்ணாடி. தற்செயலாகக் கண்ணாடி உடைந்தாலும் துண்டுகள் சிதறாமல் தடுக்க இந்த ஏற்பாடு உதவும்.

**wire mark: கம்பிக் குறி :** காகிதம் மீது ஃபோர்ட்ரீனியர் எந்திரத்தின் கம்பி அல்லது உருளை எந்திரத்தின் உறை ஏற்படுத்தும் அடையாளக்குறி.

**wire nails: கம்பி ஆணிகள்:** கம்பிகளிலிருந்து செய்யப்படுகிற ஆணிகள் பல்வேறு காரியங்களுக்கு ஏற்ப, பல அளவுகளில் பல விதமான தலைகளுடன் தயாரிக்கப்படுபவை. முன்னர் இருந்த வெட்டு ஆணிகளுக்குப் பதில் இவை பரவலாகப் பயன்படுபவை.

**wirh recorder** *(மின்.)* **கம்பி ஒலிப்பதிவுக் கருவி:** ஓர் ஒலிப்பதிவு சாதனமாக ஒரு காந்தக் கம்பியைப் பயன்படுத்தும் ஓர் ஒலிப்பதிவுக் கருவி.

**wire worm** *(உயி.)* **கம்பிப் புழு:** புல்லுக்கு அடியில் வாழும் ஒரு வண்டின் முட்டைப்புழு. புல் நிலத்தை உழும் பொழுது இந்தக் கம்பிப்புழுக்கள் வெளியே வந்து பயிர்களுக்குப் பெருஞ்சேதம் விளைவிக்கிறது.

**wiring diagram :** *(மின்.)* **கம்பித் தொடர் வரைபடம் :** மின் தொடர்புச் சாதனங்களையும், அவற்றுக்கிடையிலான இணைப்புகளையும் குறியீடுகள் மூலம் காட்டுகிற வரைபடம்.

**withe :** *(க.க.)* **வித் :** அதே புகைக் குழாயில் புகை வழிகளுக்கு இடையில் அமைந்த பகுதி.

**wolframite :** *(உலோ.)* **வோல்ஃப்ராமைட்:** அலுமினியம், டங்ஸ்டன், மற்றும் சிறு அளவில் தாமிரம், துத்தம் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படுகிற ஜெர்மன் அலோகம். இது டுராலுமினியத்தின் பல பண்புகளைப் பெற்றுள்ளது.

**wood alcohol :** *(வேதி.)* **மர ஆல்கஹால் :** காண்க மெதனால்.

**woodcut :** *(அச்சு.)* **மரச் செதுக்கு அச்சு :** அச்சடிப்பதற்கு மரக் கட்டையால் செய்யப்படுகிற பிளேட். இதில் தேவையில்லாத பின்னணி செதுக்கி அகற்றப்படும். அச்சிடப்பட வேண்டியவை புடைப்பாக நிற்கும்.

**wood engraving :** *(அச்சு.)* **மரச் செதுக்கு வேலை :** மரச்செதுக்கு அச்சுகளைத் தயாரிக்கும் அலை.

**wood finishing :** *(மர.வே.)* **மர நேர்த்தி :** மரப்பொருட்களுக்கு இறுதி நேர்த்தி அளிக்க அவற்றைத் தயார்படுத்துவது, பின்னர் பெயின்ட் அல்லது வார்னிஷ் கொடுப்பது; குறிப்பிட்ட நேர்த்தி தேவைப்பட்டால் பாலிஷ் அளிப்பது.

**wood flour ; மர மாவு** : மிக நைசாகப் பொடி செய்யப்பட்ட மரம். பொதுவில் ஒயிட் பைன் மரத்திலிருந்து தயாரிக்கப்படுவது. லினோலியம் தரை, ரப்பர் ஆகிய வற்றில் உள்ள சிறு ஓட்டைகளை அடைப்பதற்குப் பயன்படுவது.

**wood pattern making : மரத் தால் ஆன வடிவங்கள்** : மரத்தைக் கொண்டு மாடல்கள் அல்லது பிளான்களைத் தயாரிப்பது.

**wood pulley** : (எந்.) **மர உருளை** : இது வார்ப்பு இரும்பினால் ஆன உருளை (ஜகடை)யை விட லேசா னது. எனினும் அதே அளவிலான பெல்ட் இறுக்கத்தில் 25 சதம் கூடுதலாக விசையைச் செலுத்தி யது. மிகுந்த ஈரம் பாய்ந்த வேலை களுக்கு உகந்தது அல்ல.

**wood screws** : (பட்.) **மர வேலை திருகாணிகள்** : மரவேலைகளுக்குப் பயன்படும் திருகாணிகள் நீள் வட்ட, வட்ட, மழுங்கலான தலை என பலவகையான தலைகளுடன் தயாரிக்கப்படுகின்றன. ஆணியின் அளவுதலை அதிகபட்சமாகப்பிடிக் கின்ற நிலையிலிருந்து முனைவரை கணக்கிடப்படுகிறது. ஜிம்லெட் கூர்முனை அளவுகள் தரப்படுத்தப் பட்டவை. திருகாணிகள் பிரகாச மாக அளவில் கால்வனைஸ் செய் யப்பட்டவை. நீல நிறம் அளிக்கப் பட்டவை. பலவகையான திரு காணிகள் ஒரு சைஸ் ஆணிக்கும் அடுத்த சைஸ் ஆணிக்கும் உள்ள வித்தியாசம் 0.013 அங்குலம், ஆணிகளின் நம்பர்கள் 1 முதல் 30 வரை உள்ளன. $\frac{1}{4}$ அங்குலம் முதல் 6 அங்குலம் வரை பல நீளங்களில் உள்ளன. ஆணியில் புரிகள் மட் டும் அமைந்த பகுதி மொத்த நீளத் தில் 10இல் 7 பங்கு அளவுக்கு உள் ளது. புரிகள் கோணம் 82 டிகிரி.

**wood turning : மரக்கடைசல்** : மரக்கட்டைகளை கடைசல் எந்தி ரத்தில் கொடுத்துக் கடைவது.

**wood work: மர வேலைப்பொருள்**: மரத்தால் ஆன பொருட்கள்.

**woof : குறுக்கு இழை** : நெசவில் அகலவாட்டில் அதாவது குறுக் காக அமைந்த இழை நீளவாட்டி லான பாவு நூலுக்கு நேர்மாறா னது.

**woofer** : (மின்.) **மூவொலிப் பெருக்கி** : குறைந்த அலைவெண் கொண்ட ஒலிகளைப் பெருக்கு வதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு பெரிய ஒலி பெருக்கி. இது உயர் திறன்; ஒலி பெருக்கிகளில் இது பயன்படுத்தப்படுகிறது.

**work ; வேலை** : வேலை என்பது நேரக் கணக்கில் அன்றி அடி/ராத் தல். அங்குலம்/ராத்தல், கணக்கில் கூறப்படுகிறது. (இயற்) விசையை தொலைவினால் பெருக்கி வரும் தொகையானது வேலைக்குச் சமம்.

**working depth** : (பல்லி.) **செயல் ஆழம்** : பல் சக்கரத்தில் மேல் விளிம்புக் கோட்டிலிருந்து கிளி யரன்ஸ் அதாவது இடைவெளிக் கோட்டு வரையிலான ஆழம். அதாவது மொத்த ஆழத்திலிருந்து இடைவெளியைக் கழித்து வரும் ஆழம்.

**working drawing**: (க.க.) **செயல் வரைபடம்** : எல்லா அளவுகளும், தேவையான பணிக் குறிப்புகளும் கொண்ட பணியை வெற்றிகர மாகச் செய்து முடிப்பதற்கு உதவு கிற வரைபடம்.

**working gauges** : (எந்.) **செயல் அளவு மானிகள்** : உற்பத்திக்குப் பயன்படுத்துகிற அளவுமானி களைக் குறிக்கும் சொல்.

**working load** : (பொறி.) **பணி நிலை பாரம்** : ஒரு கட்டுமானம் சாதாரணமாக உள்ளாகிற பாரம். அது அதிகபட்ச பாரம் அல்ல. மாறாக சராசரி பாரம்.

**working sketch**: *(வரை.)* **செயல் முறை புனையா வரைபடம்** : இறுதி யான வரைபடத்தை வரைவதற்குத் தேவையான பரிமாணங்களையும் பிற விவரங்களையும் காட்டும் முதல் நிலை மாதிரி வரைபடம்.

**working unit stress** : *(பொறி.)* **செயல் யூனிட் அழுத்தம்** : இறுதியான அழுத்தத்தை பாதுகாப்பு அலை எண்ணால் வகுத்து வருவது.

**working voltage** : *(மின்.)* **பயன் மின்னழுத்தம்** : சுடர் பாய்வு அபாயம் இல்லாமல் ஒரு கொண்மியில் சீராகச் செலுத்தப்படும் உச்ச அளவு மின்னழுத்தம்.

**work life**: *(குழை.)* **பசைக் காலம்**: ஒரு செயலூக்கியுடன் அல்லது பிற பொருளுடன் கலந்த பின்னர் ஒரு பசைப் பொருள் உபயோகிக்கத் தக்க நிலையில் உள்ள நேரம்.

**works manager** : **பணி மேலாளர்**: ஒரு தொழிற்சாலையின் ஜெனரல் சூபரின்டெண்ட். பல தொழிற்சாலைகளில் பிரதம என்ஜினியர் போன்றவர்.

**worm-and-gear steering** : *(தானி.)* **நெளிதண்டு மற்றும் கியர் ஸ்டியரிங்** : ஸ்டியரிங் கியர் தண்டின் கீழ்முனையில் அமைந்த நெளி தண்டுடன் கூடிய ஏற்பாடு. நெளி கியர் குறுக்குத் தண்டுடன் இணைக்கப்பட்டிருக்கும். தகுந்தபடி பொருத்தியுள்ளதா என்று சரி பார்த்து அமைக்க இயலும்.

**worm drive** : *(தானி.)* **நெளி தண்டு இயக்கம்** : பெவல் பல்லிணை பினியன் அல்லது செயின் மூலமாக இல்லாமல் நெளிதண்டும் சக்கரமும் இணைந்த செயல்மூலம் இயங்குவது.

**worm gearing** : *(பல்லி.)* **நெளி பல்லிணை** : திருகுபுரி பல்லிணையும், பல்சக்கர பல்லிணையும் இணைந்த பல்லிணை.

**worm threads** : *(எந்.)* **நெளிபுரி** : இப்புரிகள் ஆக்மி வகையைச் சேர்ந்தவை. 29 டிகிரி கோணத்தில் அமைந்தவை. எனினும் தரப்படுத்தப்பட்ட ஆக்மி புரியைவிட ஆழமானவை.

**wove paper** : **வலைச்சட்டக் காகிதம்** : நெருக்கமான வலையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட காகிதம். இதில் நீரோட்டம் இராது.

**wreath** : *(க.க.)* **படிகளின் வளை கைப்பிடி** . மாடிப்படியின் கைப்பிடியில் செங்குத்தாகவும், கிடைமட்டமாகவும் வளைந்த பகுதி. மாடிப்படியின் துவக்கத்தில் கீழே உள்ள தாங்கு தூணுடன் பக்கவாட்டில் இணைக்கப்படுவது.

**wreath piece** : *(க.க.)* **மாடிப் படி வளை கைப்பிடித் துண்டு** : சுழன்று செல்லும் மாடிப்படிகளின் வளைந்து வளைந்து செல்லும் கைப்பிடியின் ஒரு பகுதி.

**wrecking bar** : *(எந்.)* **பாடழிவுக் கைப்பிடி** : பொதுவில் ஒன்று முதல் இரண்டு அடி நீளமுள்ள உருக்குத் தண்டு. ஒரு முனையில் மெல்லிய விளிம்பு இருக்கும். மறுமுனை வளைந்து பிடிமானத்துக்கு உகந்தபடி குழிவுடன் கூடிய பல் இருக்கும்.

**wrench**: *(எந்.)* **திருகுக் குறடு** : சாதாரண வகைகள் நட்டுகளுக்கு ஏற்ப எளிதில் மாற்றிக் கொள்ளத் தக்கவை. மங்கி குறடு, இரட்டை முனை குறடு, 'எங்' குறடு, பாக்ஸ் குறடு, டி குறடு, துளைக்குறடு முதலியவை (எந்திர) போல்ட் அல்லது நட்டுகளைத் திருப்புவதற்கு விசையைச் செலுத்துவதற்கான இசைக் கருவி.

**wrinkling** : *(வண்;அர.)* **திரளுதல்**: பெயின்ட் அல்லது வார்னிஷ்

அடக்கம் போதிய அளவுக்கு அதிகமாகக் கனமாக பூசினால். வெப்பம் அதிகமாக இருந்தால், காற்றில் ஈரப்பசை மிகுதியாக இருந்தால் அல்லது பரப்பின்மீது நீட்சித் தன்மை கொண்ட பிலிமை பரப்பினால் சுருக்கம் விழும் அல்லது பெயின்ட், வார்னிஷ் திரண்டு நிற்கும்.

**wrist pin** *: (எந்.)* **இருசுக் கடையாணி** *:* ஓர் இணைப்புச சலாகையை ஏற்கும் ஒரு பிணைப்பூசி அல்லது உந்துமுனைப் பிணைப்பூசி. பொதுவாக ஒரு கேசோலின் எஞ்சினில் உந்து தண்டுடன் சலாகையை இணைக்கும் பிணைப் பூசி.

**wrong font :** *(அச்சு.)* **தவறான பான்ட்** *:* அச்சுக்கோக்கப்பட்ட வாசகத்தால் இதர எழுத்துகளிலிருந்து வித்தியாசமாக உள்ள வேறு அளவிலான எழுத்து.

**wrong side** *:* **தவறான பக்கம்** *:* கம்பி வலை கொண்டு தயாரிக்கப்பட்ட காகிதத்தில் கம்பி வலைமீது அமைந்த புறத்தில் அடையாளம் இருக்கும். இது தவறான பக்கமாகும்.

**wrought iron** *: (உலோ.)* **தேனிரும்பு** *:* இரும்பிலுள்ள கார்பனும் மாசுப் பொருட்களும் முற்றிலுமாக அகற்றப்பட்ட தூய்மையான இரும்பு.

# X

**X-axis :** *(மின்.)* **எக்ஸ்-அச்சு :** ஓர் அறுகோணப் படிகத்தின் மூலைகளின் வழியாக வரையப் பட்ட அச்சு.

**X-braced chair : எக்ஸ் இருக்கை நாற்காலி :** நாற்காலியில் அமரும் பகுதியானது **X** வடிவில் அமைந் தது.


**X-cut crystal :** *(மின்.)* **எக்ஸ்-வெட்டுப் படிகம்:** எக்ஸ்-அச்சுக்குச் செங்குத்தாக வெட்டப்பட்ட ஒரு படிகம்.

**xerography :** *(மின்.)* **மின்துகள் ஒளிப்படமுறை:** வேதியியல் மாற்ற மின்றி மின்னூட்டப்பட்ட தூசித் துகள் மூலம் ஒளிப்படம் ஆக்கப் படும் முறை.

**X-ray member :** *(தானி.)* **எக்ஸ் உறுப்பு :** அழுத்து உருவாக்கப் பட்ட 'ப' வடிவ குறுக்குத் தண்டுகள் ஆங்கில **X** வடிவில் அமைக்கப்பட்டது. மோட்டார் வாகன கட்டுமானத்தின்போது பிரதான பிரேமில் வைக்கப்படு வது.

**x-ray : எக்ஸ் கதிர் :** காமா கதிர் கள் போன்றவை மிகவும் ஊடுரு வும் திறன் கொண்டவை. எக்ஸ் கதிர்கள் அணுக்கருவிலிருந்து வரு பவை அல்ல. மாறாக அதைச் சுற்றியமைந்த எலெக்ட்ரான்களி லிருந்து வருபவை. எலெக்ட்ரான் தாக்குதல் மூலம் இவை உண்டா கின்றன. எக்ஸ் கதிர்கள் பெரும் பாலான பொருட்களை ஊடுரு விச் செல்கின்றன. இக்கதிர் கள் மூலம் எலும்புகளின் உள் உறுப்புகளின் நிழல்களைப் பார்க் கவும், படம் பிடிக்கவும் முடியும். (இயற்) ராண்ட்ஜன் கதிர்களின் ஜன ரஞ்சகப் பெயர். குரூக்ஸ் குழாயில் கேதோட் கதிர்கள் எதிர்ப்புறம் உள்ள சுவரில் அல் லது குழாயில் உள்ள ஒரு பொருளைத் தாக்கும்போது தோன்றும் ஆற்றல் வடிவிலான கதிர்கள்.

**X-ray tube : எக்ஸ் கதிர்குழாய் :** எக்ஸ் கதிர்களைத் தோற்றுவிப்ப தற்கான வெற்றிடக்குழாய். இதன் உள்ளே நிலை மின்புலத்தின் மூலம் எலெக்ட்ரான்கள் மிக வேகத் தில் செல்லும்படி செய்யப்படுகின் றன, இவற்றைத் திடீரென நிறுத்தி இலக்கைத் தாக்கும்படி செய்கின்றனர்



எக்ஸ் கதிர் குழாய்

**X-shaped chair:** *(மர.வே.)* **எக்ஸ் வடிவ நாற்காலி :** பழங்காலப் பாணியிலான நாற்காலி. இதில் கீழ்ப்புறம் உள்ள தாங்கும் பகுதி **X** வடிவில் இருக்கும். பல சமயங் களிலும் அழகிய வேலைப்பாடு இருக்கும். தவிர இது பெரும் பாலான சமயங்களில் மடிக்கத் தக்கதாக இருக்கும்.

# Y

**yagiantenna** : *(மின்.)* **யாகியான் அலைவாங்கி** : இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட இயக்கு கம்பிகள் உடைய மின்அலை வாங்கிகளின் தொகுதி.

**yard** : *(க.க.)* **முற்றம்** : ஒரு கட்டிடத்தில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள சுற்று வட்டகை வெளி.

**yardage** : *(பொறி.)* **யார்டேஜ்** : எவ்வளவு மண்தோண்டப்பட்டது என்பதை கன கெஜத்தில் குறிப்பிடுவதற்குப் பயன்படும் சொல்.

**yard stick** : **கெஜக்கோல்** : 91 செ.மீ. நீளம் கொண்ட, அளவுகள் குறிக்கப்பட்ட நீண்ட மெல்லிய மரச்சட்டம், உலோகத்தில் செய்யப்பட்ட அவ்வித அளவு கோல் 36 அங்குல அளவுகோல் எனப்படுகிறது.

**yaw** : *(வானூ.)* **திருக்கை** : பறக்கும் பாதைக் கோட்டிலிருந்து கோண இயக்கத்தால் விமான அச்சிலிருந்து வலது புறம் அல்லது இடம் புறம் திரும்பும் போக்கு.

**yaw meter** : *(வானூ.)* **திருக்கை அளவுமானி** : ஒரு விமானத்தின் திருக்கையின் கோணம் எவ்வளவு என்று அளந்து கூறும் கருவி.

**Y-axis** : *(மின்.)* **ஒய்-அச்சு** : ஓர் அறுகோணப் படிவத்தின் முகங்களுக்குச் செங்கோணமாக வரையப்பட்டுள்ள அச்சு.

**Y connection** : *(மின்.)* **ஒய் இணைப்பு** : மூன்று பேஸ் சர்க்கியூட்டில் பயன்படுகிற கிளை இணைப்பு.

**y-cut crystal** : *(மின்.)* **ஒய் வெட்டுப் படிகம்** : ஒய்-அச்சுக்குச் செங்குத்தாக வெட்டப்பட்ட ஒரு படிகம்.

**year ring** : *(மர.வே.)* **ஆண்டு வளையம்**: இது வளர்ச்சி வளையம் வருடாந்திர வளையம் என்றும் குறிப்பிடப்படும். மரத்தின் குறுக்கு வெட்டில் இந்த வளையங்கள் காணப்படும். குறுக்கு வெட்டில் குழல்களைச் செருகியது போன்று தோன்றும். ஒவ்வோர் வளையமும் ஓர் ஆண்டைக் குறிக்கும். மரம் வளருகையில் சாறு இவற்றின் வழியே தான் உயரே செல்கிறது.

**yeast** : **நொதி (ஈஸ்ட்)** சாராயம் முதலியவற்றைப் புளிக்கச் செய்யப் பயன்படும் பொருள். இது உயிருள்ள பூஞ்சணம் போன்ற ஒரு பொருள். சர்க்கரையை ஆல்ககலாக மாற்றும் பொருளும் இது தான். நொதியானது, புரதங்களை உற்பத்தி செய்கிறது. சிறிதளவிலான இந்தப் புரதங்கள், தாங்கள் மாறாமல் பெருமளவு வேதியியல் மாற்றங்களை உண்டாக்குகிறது. இந்தப் புரதங்கள்தாம் சர்க்கரையிலும் வேதியியல் மாற்றங்களையும் உண்டாக்குகிறது.

**yellow** : *(வண்.)* **மஞ்சள்** : அடிப்படை நிறம். நிறமாலையில் சிவப்புக்கும், பச்சைக்கும் இடையே அமைந்துள்ளது.

**yellow brass**: *(உலோ.)* **செம்பித்தளை**: 70% செம்பும் 30% துத்தநாகமும் கலந்த ஓர் உலோகக் கலவை. இது ஒரு மட்டரக உலோகக் கலவை. வலிமை இன்றியமையாததாக இல்லா திருக்கும்

போது இது பயன்படுத்தப்படுகிறது.


**yellow fever (yellow jack):** *(நோயி.)* **மஞ்சள் காய்ச்சல்:** மஞ்சள் காமாலையும் கருநிற வாந்தியுமுடைய மஞ்சள் காய்ச்சல் நோய். ஒரு வகைக் கொசுவினால் உண்டாகும். இந்நோயின் விளைவாக, சிறுநீரகங்களும் நுரையீரலும் வயிறும் வீக்கமடையும். தோல் மஞ்சள் நிறமாகும். கருநிறத்தில் வாந்தி ஏற்படும்.

**yellow ocher:** *(உலோ.)* **மஞ்சள் பித்தளை:** 70 பங்கு தாமிரமும், 30 பங்கு துத்த நாகமும் கலந்த கலோகம். இது மட்ட ரகக் கலோகம். உறுதி தேவையற்ற கனிமங்களுக்குப் பயன்படுவது.

**yellow ocher:** *(வண்.)* **மஞ்சள் காவி:** மண் போன்ற இரும்புக் கனியிலிருந்து பெறப்படும் நிறம். பெயின்டுகளில் சாயம் அளிக்கப் பயன்படுவது.

**yellow pine:** *(மர.வே.)* **மஞ்சள் ஊசியிலை:** என்றும் பசுமை மாறாத மரம் இரு வகைப்பட்டது. ஒன்று நீண்ட இலை. மற்றொன்று குட்டை இலை நீண்ட இலை ஊசியிலை வகையின் மரம் அடர்த்தியாக இருக்கும். கனமாகவும், உறுதியாகவும் இருக்கும். பெரும்பாலும் கனத்த உத்திரங்களாகப் பயன்படுத்தப்படும். குட்டை இலை வகை எளிதில் முறியும். அவ்வளவு உறுதியற்றது. விலையும் குறைவு. செலவு குறைந்த தரைத் தளமாகவும், இதர வகைகளிலும் பயன்படுவது.

**yellow spot:** *(நோயி.)* **மஞ்சள் புள்ளி:** கண்விழிப் புறத்திரைக் கூர் நோக்கிடப் புள்ளி.



**yew:** *(மர.வே.)* **யூ மரம்:** மெதுவாக வளருகின்ற நடுத்தர அளவுள்ள பசுமை மாறாத மரம். மரத்தின் உள்ளே துணுக்குகள் அடர்ந்து கெட்டியாக இருக்கும். சற்று நெகிழும் தன்மை கொண்டது. ஆரஞ்சு சிவப்பு முதல் பழுப்பு வரையிலான நிறம் கொண்டது.

**yield point:** *(எந்.)* **முறி நிலை:** மாதிரி உலோகத் துண்டு மீது கூடுதல் பளுவைச் சேர்க்காத நிலையில் அது விரிந்து கொடுக்கத் தொடங்கும்போது உள்ள நிர்ப்பந்தத்தின் அளவு.

**yield strength:** *(பொறி.)* **வலிமை இழப்பு நிலை:** ஒரு உலோகப் பொருள் நிரந்தரமாக நீண்டு போகின்ற நிலையை ஏற்படுத்துவதற்குத் தேவைப்படும் பளு.

**yield value:** *(குழை.)* **இளகு நிலை:** பிளாஸ்டிக் திரவம் போன்று பாய்வதற்கு மிகக் குறைந்தபட்ச அழுத்த நிலை. இதற்கும் குறைவான அழுத்தத்தில் பிளாஸ்டிக் நெகிழும் தன்மை கொண்ட திட வடிவில் இருக்கும். இந்த நிலைக்கும் அதிகமான அழுத்தத்தில் பிசுபிசுப்பான திரவமாக இருக்கும்.

**yoke:** *(க.க.)* **மேல் குறுக்கு:** பல கணிச் சட்டத்தில் மேற்புற குறுக்குச் சட்டம். (தொலை) மின்னணுக் கற்றையை கிடைமட்டமாகவும், செங்குத்தாகவும் திருப்பிவிட மின்னணு காமிரா அல்லது படக் குழாயின் கழுத்துப் பகுதியில் அமைந்த சுருள்கள்.

**yolk:** *(உயி.)* **மஞ்சள் கரு:** முட்டையிலுள்ள மஞ்சள் கரு.

**yolk-sac (yolk-bag):** *(உயி.)* **மஞ்சள் கருப்பை:** முட்டை மஞ்சள் கருப்பொதிவு இழைப்பை.

**Y-signal:** *(மின்.)* **ஒய்-சமிக்ஞை:** தொலைக்காட்சியில் ஒளிரும் சமிக்ஞை.

# Z

**Z-axis:** *(மின்.)* **இசட்-அச்சு:** ஒரு படிகத்தின் விழிக்காட்சி அச்சு.

**zebrano:** *(மர.வே.)* **ஜீப்ரானோ:** ஆஃப்ரிக்காவின் மேற்குக் கரையைச் சேர்ந்த மிகப்பெரிய மரம். மரம் மிகக் கெட்டியானது. எடை மிக்கது. வலிமை கொண்டது. இதன் சற்று மங்கலான பின்னணி நிறம், கரும் பழுப்பான இணை கோடுகள் காரணமாக இது பார்வைக்கு மிக எடுப்பானது. மிக நளினமான மரவேலைப் பொருட்கள், சுவர் மறைப்புப் பலகைகள் ஆகியவற்றுக்கு மிக அரிய மரமாகக் கருதப்படுகிறது.

**zee bar:** *(பொறி.)* **ஜீ பார்:** கட்டுமான உருக்குத் தண்டு. அதன் குறுக்கு வெட்டு ஆங்கில 'Z' வடிவில் அமைந்து மேற்புறத்தையும் கீழ்ப்புறத்தையும் இணைப்பது. பெரும்பாலும் கப்பல் கட்டுமானத்துக்கும், இதர கட்டுமானங்களுக்கும் பயன்படுவது.

**zeolite** : *(கம்.)* **ஜியோலைட்:** ஒரு வகைக் கனிமம். இது ஒரு வேதியியல் கூட்டுப் பொருள். இது கரைசலில் இதனுடன் கலந்திருக்கும் பிற வேதியியற் பொருள்களின் கட்டமைப்பைப் பொறுத்துத் தனது கட்டமைப்பை மாற்றிக் கொள்ளக்கூடியது.

**zero:** **பூச்சியம்:** எண்களில் சூன்யத்தைக் குறிப்பது. மதிப்பில் மிகத் தாழ்ந்தது.

**zero ceiling:** *(வானூ.)* **பூச்சிய வரம்பு:** 30மீட்டருக்குக் கீழான மேகக்கூட்டம். விமானம் பறப்பதற்குத் தகுதியற்ற வானிலை.

**zero gravity:** *(விண்.)* **ஈர்ப்பின்மை:** ஈர்ப்பு விளைவு முற்றிலும் இல்லாத நிலை.

**zerone:** **துருத்தடை:** குளிர் உறைவுத் துருத்தடை அமைவு.

**zig zag rule; மடியும் அளவு கோல்:** அளவு கோலானது மடிக்கும் வசதி கொண்டது. மடித்து விரிக்கும் போது உள்ள நிலையைக் குறிப்பது. மொத்தம் ·6 முதல் 2.4மீ. நீளம் இருக்கும். என்னும் இது தனித்தனியே 5செ.மீ. பகுதிகள் கொண்டது. இவை ஒன்றோடு ஒன்று இணைந்தவை.

**zinc** : *(உலோ.)* **துத்தநாகம்:** நிலம் பாய்ந்த வெண்மை நிற உலோகம். கால்வனைசிங் செய்வதற்கும் கலோகங்களைத் தயாரிப்பதற்கும் பயன்படுவது.

**zinc chloride** : *(வேதி.)* **துத்த குளோரைடு:** வெள்ளை நிறமுள்ளது. நீர்த்துப் போகிற உப்பு. ஹைட்ரோ குளோரிக் அமிலத்தில் துத்தத்தை அல்லது துத்த ஆக்சைடை சேர்ப்பதன் மூலம் அல்லது துத்தத்தை குளோரினில் எரிப்பதன் மூலம் பெறப்படுவது. பற்ற வைப்புக் காரியங்களுக்கு எளிதில் உலோகத்தை உருக்கத் துணைப் பொருளாகப் பயன்படுவது.

**zinc engraving or etching:** *(அச்சு.)* **துத்தச் செதுக்கு:** துத்த நாகத்தினால் ஆன அச்சுத் தகடு. அச்சிடப்பட வேண்டிய பகுதியை மட்டும் விட்டு விட்டு மீதிப் பகுதியை மட்டும் செதுக்கி அகற்றி விடுதல்.

**zinc chromate** : **துத்தநாகக் குரோமேட் (துத்தநாக மஞ்சள்):** துருப்பிடிக்காத முக்கியமான பண்புகளையுடைய உலோக நிறமி.

**zing oxide**: *(வேதி.)* **துத்த நாக ஆக்சைட்:** துத்த நாக கார்பனேட்டை சூடுபடுத்துவதன் மூலம் பெறப்படும் துத்தநாகப் பவுடர். பெயின்ட் தயாரிக்கவும், மருந்தாகவும், துத்தநாக உப்பாகவும் பயன்படுவது.

**zinc sulphate**: *(வேதி.)* **துத்தநாக சல்பேட்:** கழிவு துத்தத் துண்டுகளை சல்பியூரிக் (கந்தக) அமிலத்தில் போட்டுக் கரைந்துத் தயாரிக்கப்படுவது. காலிகோ அச்சு, சாயமிடல் ஆகியவற்றுக்கும், வைத்தியத் துறையிலும், ஆளிவிதை எண்ணெயை உறைய வைக்கவும், மரம் மற்றும் தோல்களை கெடாமல் காக்கவும் பயன்படுவது.

**zing white** : *(வண்.)* **துத்த வெள்ளை:** பெயின்ட் தயாரிப்புக்கு நிறமியாகப் பயன்படும் துத்த நாகப் பவுடர்.

**zinox** : *(வண்.)* **ஜினோக்ஸ்:** எனாமல் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் துத்த நாக ஹைட்ரேட் ஆக்ஸைட்.

**zoom:** *(வானூ.)* **செங்குத்தான ஏற்றம்:** விமானம் செங்குத்தாக உயரே ஏறுவது. அப்போது உயரே ஏறுகின்ற விகிதமானது. சீராகப் பறக்கும்போது கிடைப்பதை விட அதிக அளவில் இருக்கும்.

**zoom lens (zoomar): அணுக்க நிரலீட்டுக் கண்ணாடி:** தொலைக் காட்சிப் பட எடுப்பில் படக்கருவியைப் புடை பெயர்க்காமலே தொலை அணிமையாக்கும் திறமுடைய கண்ணாடியமைவு.

**zoonosis** : **தாவு நோய்:** விலங்கிடமிருந்து மனிதருக்குத் தாவக்கூடிய நோய்.

**zyglo** : *(உலோ)* **சைக்ளோ:** காந்தத் திறனில்லாத உலோகங்களிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிவதற்குப் பயன்படும் ஒளிர்ந்து ஊடுருவும் ஆய்வுச் சோதனை.

**zyme** : *(நோயி.)* **புளிமா:** நோய்க் கிருமி.

**zymosis** : *(நோயி.)* **புளிப்பூட்டம்:** நுண்ம நுழைவுப் பெருக்கக் கோளாறு.

**zymurgy:** *(வேதி.)* **புளிக்காடியியல்:** மதுப்புளிக்காடி பற்றிய வேதியியல்.

# Arivial Thozhilnutpak Kalaichol Kalangiya Agarathi

Manavai Mustafa

*Published By*
**Manavai Publication**
AE5, (103) Annanagar
Chennai - 600 040.

